வெளியீடு—20-12-1977] [Issued—20-12-1977

தமிழ் நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

16, 17 & 19

சனிக்கிழமை 1977 ஆகஸ்ட் 13—Saturday 13th August 1977

தொகுதி VII—எண் 1—Volume VII—No. 1-4

©

தமிழ் நாடு அரசு — GOVERNMENT OF TAMIL NADU
1977

சட்டமன்றப் பேரவைத் துறை, சென்னை-600 009
Legislative Assembly Department, Fort. St. George, Madras-600 009

விலை 1-50 காசுகள்] [Price 1-50 Paise

Y2:1,31 N77
N78.7ப்
122094

உள்ளடக்கம்.

பக்கங்கள்.

1. இரங்கல் தீர்மானம்—

முன்னாள் அமைச்சர் திரு. வி. ராமையா அவர்கள் மறைவு குறித்து .. .. 1—9

2. வினாக்கள்—விடைகள் .. .. .. 10—16

3. ஒழுங்குப் பிரச்சினை—

ஆங்கிலத்தில் பேச அனுமதிப்பது குறித்து 17

4. உரிமைப் பிரச்சினைகள்—

(அ) அண்ணா பத்திரிகையில் ஓர் உறுப்பினர் பேசியதாக செய்தியைப் போட்டு, இன்னோர் உறுப்பினர் படத்தைப் போட்டிருப்பது குறித்து .. 17—20

(ஆ) 'அலை ஓசை' பத்திரிகை, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கூறியதை திரித்து வெளியிட்டிருப்பது குறித்து .. .. 20—22

5. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்—

(அ) விவசாயிகள் போராட்டம் குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் .. .. 23—28

(ஆ) சென்னை மத்திய சிறைக் கைதிகள், நீதிபதி திரு. இஸ்மாயிலிடம் சில விவரங்களைச் சொன்னார்கள் என்பதற்காக கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதும், அவர்களில் சிலர் உண்ணா நோன்பு இருப்பதன் நிலை குறித்தும் 28—34

6. கவன ஈர்ப்பு—

பாபநாசம் அணைக்கட்டில் இருந்து கால்வாய்களில் தண்ணீர் விடாததால் சுமார் இருபதாயிரம் ஏக்கராவுக்கு மேல் பயிர்கள் வாடிக்கொண்டிருப்பது குறித்து .. .. 34—36

7. தகவல் கோரல்.—

கவன ஈர்ப்பு அறிவிப்புகள் குறித்து 36—37

8. 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி)—

(அ) கோரிக்கை எண் 18—மருத்துவம்
(ஆ) கோரிக்கை எண் 19—பொது சுகாதாரம். } 37—136

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 136—238

பக்கங்கள்.

உள்ளடக்கம்.

1. வினாக்கள்-விடைகள் 239-254

2. அரசினர் தீர்மானம்—

விதி 41(3)-ஐத் தளர்த்தல் 254

3. கவன ஈர்ப்பு—

(அ) காவிரிப் பாசனப் பகுதிகளில் பல ஆறுகளில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து .. 254-263

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உய்யக்கொண்டான் கால்வாயில் தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டிருப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து .. 263-265

(இ) முகவை மாவட்டம் கமுதி கல்லூரி மூடப்பட்டிருப்பதும், அதன் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததும் குறித்து .. 265-269

(ஈ) நாகர்கோவில் ஸ்காட் கிருத்துவக் கல்லூரி மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து .. 269-270

(உ) ஆம்பூர், வாணியம்பாடி நகராட்சிகளின் சுகாதாரப் பணி சீர்குலைந்துள்ள நிலை குறித்து .. 271-272

(ஊ) வானூர் தொகுதி 'ஆரோஃபுட்' நிறுவனத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துவருவது குறித்து 272-274

பக்கங்கள்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்—

இராமநாதபுரம் வந்திராயிருப்பு என்னுமிடத்தில் காட்டாற்றில் வெள்ளம் வந்த காரணத்தினுல் திருவிழாவுக்கு வந்திருந்த மக்கள் பலர் உயிரிழக்கவும், காயமடையவும் நேர்ந்துள்ளது குறித்து .. 274-279

5. மருத்துவத்துறை மானியக் கோரிக்கைக்கு முதலமைச்சர் அளிக்க வேண்டிய பதிலுரை பிற்பகலில் எடுத்துக் கொள்வது குறித்து .. 279

6. 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்

(ஆ) கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள். 280-352

(இ) கோரிக்கை எண் 25—சின்கோனு

(ஈ) கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை. 352-413

(உ) கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு.

7. மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை 413-439

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 440-514

பக்கம்.

1. வினாக்கள்—விடைகள் 515—532

2. ஒத்திவைப்புத் தீர்மானம்—

சைதாப்பேட்டை எம். சி. ராஜா அரிசன மாணவர்கள் விடுதியில் நடந்த சம்பவம் குறித்து. .. .. 532—542

3. அரசினர் தீர்மானம்—

விதி 41(3)-ஐத் தளர்த்தல்— 543

4. கவன ஈர்ப்பு—

(அ) திருத்தணி வட்டம், அகூர் அரிசன காலனியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும், மக்களுக்கு உதவி அளிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும். .. .. 543—546

(ஆ) திருச்சி ஆர். சி. டிவிஷன் நிர்வாகத்திலுள்ள புதிய கட்டளை மேட்டுக் கால்வாயில் உடனடியாகத் தண்ணீர் விடவேண்டிய அவசியம் குறித்து .. 546—548

(இ) ஜவ்வாது மலையிலிருந்து சந்தனக் கட்டைகள், திருடு போவதாலும், கள்ளக்கடத்தல் செய்யப்படுவதாலும் அரசுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நஷ்டம் குறித்து.. .. 548—550

(ஈ) சென்னையில் 'கல்கி' பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளமை குறித்து. 550—553

5. மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்கான தேர்வு பற்றிய விளக்கம் .. .. 554—556

8. மாண்புமிகு திரு. கா. காளிமுத்து (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி, சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள், கிராமவாசிகள் கடன் பட்டிருத்தல்.

9. மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : தொழிலாளர் நலன், வீட்டு வசதி, குடிசை மாற்று வாரியம், புள்ளி விவரம், குடி நீர் வடிகால் வாரியம், நகர அமைப்பு.

10. மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : அரிசன நலன், பிற்பட்ட வகுப்பினர், எழுது பொருள்-அச்சுத் துறை, அரசு அச்சகம், மலை வாழ் பழங்குடி மக்கள்.

11. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : போக்கு வரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள்.

12. மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், கால்நடை வளர்ப்பு, இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், கண்காணிப்புப் பணிகள், வெளி நாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

13. மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி உதவி, வேளாண்மை பொறியியல் பிரிவு, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், பால், பால்வள நிறுவனம், பால்வள முனைப்புத் திட்டங்கள்.

14. மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது (கைத்தறி-ஆலைத் துணிகள் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : இட வசதிக் கட்டுப்பாடு, பத்திரிகை காகிதக் கட்டுப்பாடு, வேளாண்மைப் பணி சம்பந்தமான வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள், முகமதியர் அறக் கட்டளைகள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, கதர்.

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

GOVERNOR OF TAMIL NADU

THIRU PRABHUDAS PATWARI

MEMBERS OF THE COUNCIAL OF MINISTERS

1. THE HON. THIRU M. G. RAMACHANDRAN (*Chief Minister*)—Minister in-charge of Public, General Administration, Matters relating to Indian Civil Service and Indian Administrative Service Officers, District Revenue Officers, Deputy Collectors, Police, Elections, Passport, Prohibition, Health, Medicine, Religious Endowments, Prevention of Corruption, Industries, Mines and Minerals, Village Industries and Rural Industries Project, Bhoodan and Gramdan and Ex-service-men.

2. THE HON. THIRU K. MANOHARAN (*Minister for Finance*)—Minister in-charge of Finance, Planning, Commercial Taxes and Excise, Revenue and Legislature.

3. THE HON. THIRU S. RAMACHANDRAN (*Minister for Public Works*)—Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme, Works, Iron and Steel Control and Electricity.

4. THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR (*Minister for Law*)—Minister in-charge of Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Legislation on Money Lending, Legislation on Chits and Registration of Companies.

5. THE HON. THIRU G. R. EDMUND (*Minister for Food*)—Minister in-charge of Food, Food Production, Co-operation and Fisheries, Registration, Forest including Cinchona and Youth Service Corps.

6. THE HON. THIRU R. M. VEERAPPAN (*Minister for Information and Publicity*)—Minister in-charge of Information and Publicity, Film Technology, Tourism and Tourism Development Corporation and Cinematograph Act.

7. THE HON. THIRU C. ARANGANAYAGAM (*Minister for Edu-tion*)—Minister in-charge of Education including Technical Educati Official Language, Employment and Training.

8. THE HON. THIRU K. KALIMUTHU (*Minister for Local Admi tration*)—Minister in-charge of Municipal Administration, Commu Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedn

9. THE HON. THIRU S. RAGHAVANANDHAM (*Minister Labour*)—Minister in-charge of Labour, Housing, Slum Cleara Board, Statistics, Tamil Nadu Water Supply and Drainage Board Town Planning.

10. THE HON. THIRU P. SOUNDARAPANDIAN (*Minister Harijan Welfare*)—Minister in-charge of Harijan Welfare, Backw Classes, Stationery and Printing, Government Press and Hill Tribes.

11. THE HON. THIRU C. PONNAIYAN (*Minister for Transpor*) Minister in-charge of Transport, Nationalised Transports, M Vehicles Act, Highways and Ports.

12. THE HON. SELVI P. T. SARASWATHI (*Minister for So Welfare*)—Minister in-charge of Social Welfare including Women Children Welfare, Animal Husbandry, Beggars Home, Orphana Indians Overseas and Refugees and Evacuees and Correcti Administration (Approved Schools and Vigilance Service).

13. THE HON. THIRU P. KOLANDAIVELU (*Minister for Agricultur*) Minister in-charge of Agriculture, Agricultural Refinance, A cultural Engineering Wing, Agro-Engineering Wing, Milk, Dairy D lopment Corporation and Operation Flood Project.

14. THE HON. THIRU K. RAJA MOHAMMED (*Minister for H looms and Textiles*)—Minister in-charge of Accommodation Con Newsprint Control, Agro-Service Co-operative Societies at Bl District and Apex Level including Federation, Waqfs, Textiles, Y Handlooms and Khadi.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்.

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. முனு ஆதி.

பேரவைத் துணைத் தலைவர்

திரு. எஸ். திருநாவுக்கரசு, பி.ஏ., பி.எல்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. கே. பண்ணை சேதுராம்
2. திரு. ஆர். முத்தையா
3. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா
4. திரு. கே. கே. முத்தையா

சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. கி. மு. அழகர்சாமி, பி.ஏ., பி. எல்.

துணைச் செயலாளர்

திரு. த. இராதாகிருஷ்ணன்

குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

சார்புச் செயலாளர்கள்

திரு. கே. பாலகுரு, பி.ஏ.

திரு. பி. எம். பத்மனுபன் நம்பியார், பி. ஏ.

திரு. பெ. பள்ளிகொண்டபெருமாள், பி.ஏ., பி.எல்.

விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்

தலைமை நிருபர்

திரு. பி. கே. இலக்குமிநாராயணன்

எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன், பி.காம்.

தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பெயர்ப் பட்டியல்.

	தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்	தொகுதியின் பெயர்.
	(1)	(2)
1	அண்ணாமலை, திரு. எம். ..	ஹரூர் (செ.வ.).
2	அப்துல் ரஜாக், திரு. கே. எம்.	ஆலந்தூர்.
3	அப்துல் லத்தீப், திரு. கி. ..	கடலூர்.
4	அப்புனு கவுண்டர், திரு. கா. ..	பெண்ணாகரம்.
5	அமிர்த ராஜ், திரு. இரா. ..	திருச்செந்தூர்.
6	அம்பிகாபதி, திரு. மு.	மன்னார்குடி.
7	அய்யாசாமி, திரு. ரா. ..	தாராபுரம் (செ.வ.).
8	அரங்கசாமி, திரு. க.	குன்னூர் (செ.வ.).
9	அரங்கநாதன், திரு. அ. க. ..	வேலூர்.
10	அரங்கநாதன், திரு. மு. ..	திருவல்லிக்கேணி.
11	அரங்கநாயகம், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்) ..	கோயம்புத்தூர் (மேற்கு).
12	அருணாசலம் திரு. இரா. ..	நாமக்கல் (செ.வ.).
13	அர்சுனன், திரு. வீ.	ஆரணி.
14	அழகர்சாமி, திரு. சோ. ..	கோவில்பட்டி.
15	அன்பழகன் திரு. க.	புரசவாக்கம்.
16	அன்பழகன், திரு. தி.	நாட்ராம்பள்ளி.
17	ஆண்டி அம்பலம், திரு. மெ. ..	நத்தம்.
18	ஆதிசுவாமி, திரு. இரா. ..	குளச்சல்.
19	ஆறுமுகம், திரு. சி.	மதுராந்தகம்.
20	ஆறுமுகம், திரு. எச். ஜி. ..	பர்கூர்.
21	ஆறுமுகம், திரு. இல.	திருநாவலூர்.
22	ஆறுமுகம், திரு. மு.	சேலம்-2.
23	ஆறுமுகம், திரு. த.	அரியலூர்.
24	இராசமாணிக்கம், திரு. இரெ.	குத்தாலம்.
25	இராஜாராம் ரெட்டி, திரு. டி. ஆர்.	திண்டிவனம்.
	இராசரத்தினம், திரு. நு. ..	பூந்தமல்லி.
	இராதா, திரு. எஸ். ஆர். ..	கும்பகோணம்.

பக்கங்கள்

6. ஒழுங்குப் பிரச்சினை—

கவன ஈர்ப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லையென்றாலும், மற்றொருவர் வேண்டுகோள் மீது எடுத்துக் கொள்வது குறித்து .. .. 553—560

7. 1977-78ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும்—வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.
(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன் .. } 560—606

(இ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும். } 607—627
(ஈ) கோரிக்கை எண் 27—கதர் .. .. } 630—668

8. அறிக்கை அளித்தல்—

பாடி தொழில் நிறுவனங்கள் தகராறு குறித்து அவை முன்னவர் அளித்த அறிக்கை .. .. .. 628—630

9. அறிவிப்பு—

பேரவையில் அமரர் கு. காமராஜ் அவர்களது படம் திறந்து வைக்கப் பெறும் நிகழ்ச்சி குறித்து.. .. .. 668—669

10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. 669—670

11. இணைப்புகள் .. .. 671—775

தமிழ்நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

தமிழ் நாடு ஆளுநர்

திரு. பிரபுதாஸ் பட்வாரி.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்) ழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் றை, பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி .சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) திகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், மாவட்டத் ணை ஆட்சித் தலைவர்கள், காவல் துறை, தேர்தல்கள், பயண னுமதிச் சீட்டுகள், மது விலக்கு, சுகாதாரம், மருத்துவம், அறக் ட்டளைகள், லஞ்ச ஒழிப்பு, தொழில்கள், சுரங்கங்கள் கனிப் பாருள்கள், கிராமத்தொழில்கள், ஊரகத் தொழில்கள் திட்டம், தான கிராமதான இயக்கங்கள் மற்றும் முன்னாள் இராணுவ ரர்கள்.

2. மாண்புமிகு திரு. கி. மனோகரன் (நிதித் துறை அமைச்சர்) ழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் : நிதி, திட்டம், ணிக வரிகள், ஆயத் தீர்வை, வருவாய், சட்ட மன்றம்.

3. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (பொதுப் பணித் றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப் பார் : பொதுப் பணிகள், சிறுபாசன சிறப்புத் திட்டங்கள் ட்பட சிறுபாசனம், இரும்புஉருக்கு கட்டுப்பாடு, மின்சாரம்.

4. மாண்புமிகு திரு கே. நாராயணசாமி முதலியார் (சட்டத் றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப் பார் :—சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் ளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம், ட்டுகள் குறித்த சட்டம், கம்பெனிகளை பதிவு செய்தல்.

5. மாண்புமிகு திரு. கு. உரோ. எட்மண்ட் (உணவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார் : ணவு, உணவு உற்பத்தி, கூட்டுறவு, மீனளம், பத்திரப்பதிவு, ங்கோனா உட்பட காடுகள், இளைஞர் அணி.

6. மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் (செய்தி விளம்பரத் றை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப் பார் : செய்தி, விளம்பரம், படச் சுருள் தொழில் நுட்பம், ற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம், திரைப்படச் சட்டம்.

7. மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் (கல்வித் துறை மைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்கு பொறுப்பு வகிப்பார்: தாழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, வேலை ாய்ப்பும் பயிற்சி அளித்தலும்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
28 இராமசாமி, திரு. க.ந.க.	கோபிச்செட்டிபாளையம்.
29 இராமசாமி, திரு. எஸ். ஜே.	சோளிங்கர்.
30 இராமசாமி, திரு. எஸ். வி.	பெரம்பலூர் (செ.வ.).
31 இராமசாமி. திரு. டி.	இராமநாதபுரம்.
32 இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர்.	சாத்தூர்.
33 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. எம். ஜி. (முதலமைச்சர்)	அருப்புக்கோட்டை.
34 இராமச்சந்திரன், திரு. என்.	செஞ்சி.
35 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்)	பண்ருட்டி.
36 இராமச்சந்திரா ரெட்டி, திரு. என்.	ஹோசூர்.
37 இராமலிங்கம், திரு. செ.	திருவிடைமருதூர்.
38 இராஜாராம் நாயுடு, திரு. தே. இரா.	தல்லி.
39 இளங்கோவன், திரு. கோ.	திருவையாறு.
40 ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், திரு. பி.	அம்பாசமுத்திரம்.
41 உக்கிரபாண்டியன், திரு. க.	பரமக்குடி (செ.வ.).
42 உச்சி, திரு. கே.	கூடலூர்.
43 உத்திராபதி, திரு. பொ.	திருத்துறைப்பூண்டி (செ.வ.).
44 உமாநாத், திரு. ரா.	நாகப்பட்டிணம்.
45 உய்யக்கொண்டான், திரு. கே. ஜே.	ஆற்காடு.
46 எட்மண்ட், மாண்புமிகு திரு. க. உறொ. (அமைச்சர்)	திருநெல்வேலி.
47 எத்ராஜ், திரு. கி.	அச்சரப்பாக்கம் (செ.வ.)
48 ஏகாம்பர ரெட்டி, திரு.	பள்ளிப்பேட்.
49 ஐசரி வேலன், திரு.	டாக்டர் இராதா கிருஷ்ணன் நகர்.
50 கணேசன், திரு. இ.	எடப்பாடி.
51 கணேசன், திரு. எஸ்.	பூம்புகார்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
52 கண்ணன், திரு. ம.	கண்டமங்கலம் (செ.வ.)
53 கந்தசாமி, திரு. கே.	ஆண்டிப்பட்டி.
54 கந்தசாமி, திரு. கா. வே.	கிணத்துக்கடவு.
55 கபாலி, திரு. டி. கே.	மயிலாப்பூர்.
56 கரியமாணிக்கம் அம்பலம், திரு. கரு. ராம.	திருவாடானை.
57 கருணகிரி முத்தையா, திரு. க.	மருங்காபுரி.
58 கருணாநிதி, திரு. மு.	அண்ணாநகர், சென்னை.
59 கருணாநிதி, திரு. தாழை மு.	திருவாரூர் (செ.வ.).
60 கருணாமூர்த்தி, திரு. வெ.	ஜெயங்கொண்டான்.
61 கருப்பசாமி பாண்டியன், திரு. வீ.	ஆலங்குளம்.
62 கலியமூர்த்தி, திரு. துரை	சிதம்பரம்.
63 காத்தமுத்து, திரு. கி. பெ.	தொட்டியம்.
64 காளிமுத்து, மாண்புமிகு திரு. கா. (அமைச்சர்)	திருப்பரங்குன்றம்.
65 காளியப்பன், திரு. பொ.	காரைக்குடி.
66 காளியப்பன், திரு. இரா.	ஏற்காடு (ஆ. வா.).
67 கிட்டப்பா, திரு. என்.	மாயூரம்.
68 கிட்டு, திரு. ப. கோ.	பல்லடம்.
69 கிருஷ்ணன், திரு. பி. எம்.	பாலக்கோடு.
70 கிருஷ்ணன், திரு. செ.	கன்னியாகுமரி.
71 கிருஷ்ணன், திரு. நா.	ஸ்ரீ பெரும்புதூர் (செ.வ.).
72 கிருஷ்ணன், திரு. பி.	விழுப்புரம்.
73 கிருஷ்ணன், திரு. ரா.	வாசுதேவநல்லூர் (செ.வ.).
74 குப்புசாமி, திரு. என்.	மொரப்பூர்.
75 குருசாமி, திரு. ப.	ஆண்டியூர் (செ. வ.).
76 குழந்தைவேலு, மாண்புமிகு திரு. ப. (அமைச்சர்)	உடுமலைப்பேட்டை.
77 கோதண்டராமன், திரு. வி. கே.	குடியாத்தம்
78 கோதண்டராமன் என்கிற முசிறி புத்தன் பி.	முசிறி.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
79	கோபாலன், திரு. போ. ..	உதகமண்டலம்.
80	கோவிந்தராசன், திரு.சி. ..	நெல்லிக்குப்பம்.
81	கோவிந்தன், புலவர் கா. ..	செய்யாறு.
82	கோவேந்தன், திரு. மு. ரெ. ..	பேராவூரணி.
83	சங்கரய்யா, திரு. என்.	லால்குடி.
84	சண்முகம், திரு. கா. ந. ..	திருவண்ணாமலை
85	சண்முகம். திரு. ப.உ. ..	[illegible]
86	சண்முகம், திரு. ஆர். ..	[illegible]
87	சண்முகம். திரு. ச.	கூத்தகுடி, திருப்பத்தூர்
88	சதாசிவம், திரு. செ. ..	அரவக்குறிச்சி.
89	சந்திரசேகரன், திரு. ஆர். ..	கம்பம்.
90	சந்திரன், திரு. ப.	பெரனமல்லூர்.
91	சந்திரன் ஜெயபால், திரு. இரா. எ. ..	தியாகராயநகர், சென்னை
92	சமரசம், டாக்டர் கே. ..	காவேரிப்பட்டிணம்.
93	சரஸ்வதி, மாண்புமிகு செல்வி பி. டி. (அமைச்சர்) ..	திருமங்கலம்.
94	சவுந்திரராஜன், திரு. ரெ. வீ.	பாபனாசம்.
95	சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே.	ஆயிரம்விளக்கு சென்னை.
96	சாது செல்வராஜ், திரு. கோ.	ஸ்ரீவைகுண்டம்.
97	சாமிக்கண்ணு, திரு. தா. ..	செங்கம் (செ. வ.).
98	சிகாமணி, திரு. பொ. ..	திருவொற்றியூர்.
99	சிவசாமி, திரு. செ.	இளையாங்குடி.
100	சிவபெருமாள், திரு. மு. ..	ஓமலூர்.
101	சின்னசாமி, திரு. வ. ..	சேந்தமங்கலம் (ஆ. வா.,
102	சின்னசாமி, திரு. வி. கொ. ..	பவானிசாகர்.
103	சின்னய்யா, திரு. வீ. ..	குளத்தூர் (செ.வ.).
104	சின்னராசு, திரு. க. இரா. ..	கிருஷ்ணகிரி.
105	சீனிவாச ரெட்டியார், திரு. போ. எ.	குளித்தலை.
106	சுந்தரம், திரு. ப.	திருப்பத்தூர்.
107	சுந்தரம், திரு. மு.	ரிஷிவந்தியம்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.		தொகுதியின் பெயர்.
	(1)	(2)
108	சுந்தரராஜன், திரு. மு. ...	விருதுநகர்.
109	சுந்தரராஜ், திரு. நா. ..	திருமயம்.
110	சுப்பராயன், திரு. என். ..	பனைமரத்துப்பட்டி.
111	சுப்பிரமணியம், பாக்கூர், திரு. சு.	உத்திரமேரூர்.
112	சுப்பிரமணியம், திரு. கே. ஜே.	போளூர்.
113	சுப்பிரமணியன், திரு. [illegible] ..	சின்னசேலம்.
114	சுப்பிரமணியன், திரு. [illegible] ..	சிவகங்கை.
115	சுப்பிரமணியம், திரு. ஆர். சி.	கடலாடி.
116	சுப்பிரமணியம், திரு. [illegible] ..	ஆண்டிமடம்.
117	சுப்பிரமணியன், திரு. வ. மு. ..	மானாமதுரை (செ. வ.).
118	சுப்பிரவேலு, திரு. கா. ..	சீர்காழி (செ.வ.).
119	சுப்பு, திரு. க.	வில்லிவாக்கம்.
120	சுப்புலட்சுமி, திருமதி ..	மொடக்குறிச்சி.
121	சுப்பையா, திரு. ச. ..	சங்கரநாயினார் கோவில் (செ. வ.).
122	சுவாமிதாஸ், திரு. எ. ..	பத்மநாபபுரம்.
123	செங்கோடன், திரு. கா. ..	கபிலமலை.
124	செங்கோட்டையன், திரு. கு. அ.	சத்தியமங்கலம்.
125	செல்லப்பா, திரு. அ. ..	வலங்கைமான் (செ.வ.).
126	செல்வராசன், திரு. அ. ..	துறைமுகம், சென்னை.
127	செல்வராஜ், திரு. சீனி. ..	சமயநல்லூர் (செ.வ.).
128	செல்வராஜ், திரு. மு. ..	குறிஞ்சிப்பாடி.
129	சொக்கலிங்கம், திரு. கெ. ..	திருப்போரூர் (செ.வ.).
130	சோமசுந்தரம், திரு. ஓ. ப. ..	பொள்ளாச்சி.
131	சௌந்தரபாண்டியன், மாண்புமிகு திரு. பெ. (அமைச்சர்).	கிருஷ்ணராயபுரம் (செ. வ.).
132	சௌந்திரராசன், திரு. கே. ..	திருச்சிராப்பள்ளி-2.
133	சௌந்திரராஜன், திரு. மு. ரா.	பவானி
134	சௌந்திரராஜன், திரு. ஆர்.	ஸ்ரீரங்கம்.
135	ஞானசிகாமணி, திரு. தே. ..	விளவங்கோடு.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
136 தங்கவேலு கவுண்டர், திரு. பொ.	மேலமலையனூர்.
137 தங்கவேலு, திரு. ர. ச.	வால்பாறை (செ. வ.).
138 தண்டபாணி, திரு. ரா. க. சு.	காங்கேயம்.
139 தமிழரசன், திரு. இ.	பேரணாம்பட்டு (செ.வ.)
140 தனசேகரன், திரு. ந.	தூத்துக்குடி.
141 தனபால், திரு. ப.	சங்கரி (செ. வ.)
142 தனுஷ்கோடி, திரு. கோ.	ராஜபாளையம் (செ.வ.)
143 தாமரைக்கனி, திரு. இரா.	ஸ்ரீவில்லிபுத்தூர்.
144 திருநாவுக்கரசு, மாண்புமிகு திரு. எஸ். (பேரவைத் துணைத்தலைவர்.)	அறந்தாங்கி.
145 திருவேங்கடம், திரு. பெ. சு.	கலசப்பாக்கம்.
146 துரை கோவிந்தராசன், திரு. அரசாங்க தலைமைக்கொறடா	திருவோணம்.
147 துரைசாமி, திரு. ப.	ராசிபுரம்.
148 துரை முத்துசாமி, திரு.	சங்கராபுரம்.
149 துரை முருகன், திரு.	இராணிப்பேட்டை.
150 துரைராஜ், திரு. சு. ம.	பொன்னேரி (செ.வ.)
151 துலுக்காணம், திரு. வ.	உளுந்தூர்பேட்டை (செ.வ.).
152 தைலப்பன், திரு. டி. எம்.	ஒரத்தநாடு.
153 நடராசன், திரு. அ.	பேரூர்.
154 நடராசன், திரு. எஸ்.	தஞ்சாவூர்.
155 நல்லதம்பி, திரு. தி. சு.	பார்க்டவுன், சென்னை
156 நாச்சிமுத்து, திரு. க.	பொங்கலூர்.
157 நாச்சிமுத்து கவுண்டர், திரு. கொ. பொ.	மேட்டூர்.
158 நாராயணன், திரு. ரா.	தாரமங்கலம்.
159 பட்டாபிராமன், திரு. செ.	திருவள்ளூர்.
160 பண்ணை சேதுராமன், திரு. கே.	பெரியகுளம்.
161 பரமசிவம், திரு. அ. மா.	மேலூர்.
162 பரமசிவம் திரு. மொ.	வானூர் (செ. வ.).

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும். (1)	தொகுதியின் பெயர். (2)
163 பழனிசாமி, திரு. சு.	மேட்டுப்பாளையம்.
164 பழனிசாமி, திரு. சொ. ந.	அவினாசி (செ. வ.).
165 பழனிமுத்து, திரு. சி.	ஆத்தூர்.
166 பழனியப்பன், திரு. அ. ப.	ஒட்டன்சத்திரம்.
167 பழனிவேல், திரு. என்.	பழனி (செ. வ.).
168 பாண்டியன், திரு.	சேரன்மாதேவி
169 பாலகிருஷ்ணன், திரு. சோ.	முதுகுளத்தூர்.
170 பாலகுருவா ரெட்டியார், திரு. வெ.	சோழவந்தான்.
171 பாலன், திரு. சு.	பெரம்பூர் (செ. வ.).
172 பாலாஜி, திரு. க.	காஞ்சீபுரம்.
173 பானுசாமி, திரு. அ.	நிலக்கோட்டை (செ. வ.).
174 புருஷோத்தமன், திரு. து.	சைதாப்பேட்டை, சென்னை.
175 புஸ்பராஜு, திரு. த.	ஆலங்குடி.
176 பெரியசாமி, திரு. மொ.	மங்களூர் (செ. வ.).
177 பெரியசாமி, திரு. ரா.	உப்பிலியாபுரம்.
178 பெரியசாமி, திரு. டி. பி. மு.	மதுரை மேற்கு.
179 பெருமாள், திரு. என்.	வரகூர் (செ. வ.).
180 பெருமாள், திரு. ரா. கு.	விளாத்திகுளம்
181 பொன்னுசாமி, டாக்டர், ஏ.	பெருந்துறை.
182 பொன்னுரங்கம், திரு. ப.	இராயபுரம்.
183 பொன்னையன், மாண்புமிகு திரு. சி. (அமைச்சர்)	திருச்செங்கோடு.
184 மணிமாறன், திரு. மா.	நன்னிலம் (செ.வ.).
185 மணிமாறன், திரு. ஆர்.	திருப்பூர்.
186 மணிமுடி, திரு. எஸ்.	எழும்பூர், சென்னை (செ.வ.).
187 மருதாசலம், திரு. க.	தொண்டாமுத்தூர்.
188 மனோகரன், திரு. கி. மாண்புமிகு (அமைச்சர்)	பாளையங்கோட்டை.
189 மாணிக்கம், திரு. சி.	திருச்சிராப்பள்ளி-1.
190 மார்கரெட் எலிசபெத் பிலிக்ஸ்	(நியமன உறுப்பினர்).
191 மார்க்கபந்து, திரு. ரா.	அணைக்கட்டு.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
192 மாரிமுத்து, திரு. ஏ. ஆர். ..	பட்டுக்கோட்டை.
193 மீனாட்சிசுந்தரம், திரு. மா. ..	வேதாரண்யம்.
194 முத்துசாமி, திரு. பா. க. சி.	தர்மபுரி.
195 முத்துசாமி, திரு. சு. ..	ஈரோடு.
196 முத்துசாமிகரையாளர், திரு. சு.	தென்காசி.
197 முத்தையா, திரு. இரா. ..	சேடப்பட்டி.
198 முருகேசன், திரு. கூ. ச. ..	திருவரம்பூர்.
199 முனிசாமி, திரு. பொ. ...	வந்தவாசி, (செ.வ.).
200 முனிரத்தினம், திரு. எஸ். ..	கும்மிடிபூண்டி.
201 முனு ஆதி, மாண்புமிகு திரு... (பேரவைத் தலைவர்)	தாம்பரம், சென்னை.
202 மூக்கையா தேவர், திரு. பி. கே.	உசிலம்பட்டி.
203 யூசப், திரு. யா. சை. மு. ..	ராதாபுரம்.
204 ரகுமான்கான், திரு. ஏ. ..	சேப்பாக்கம், சென்னை.
205 ரகுராமன், திரு. வி. ..	புவனகிரி.
206 ரகோத்துமன், திரு. கோ. ..	முகையூர்.
207 ரமணி, திரு. கு. ..	கோயம்புத்தூர் கிழக்கு.
208 ரசாக், திரு. எம். எம். ஏ.	கடையநல்லூர்.
209 ராமசாமி, திரு. கோ. ..	சிவகாசி.
210 ராமசாமி, திரு. து. .	வெள்ளக்கோயில்.
211 ராமதாஸ், திரு. பி. ..	போடிநாயக்கனூர்.
212 ராமநாதன், திரு. சி. ..	விருத்தாசலம்.
213 ராமலிங்கம், திரு. இ. ..	காட்டுமன்னார்கோவில் (செ. வ.).
214 ராஜ்குமார் விஜயரெகுநாத தொண்டமான், திரு.	புதுக்கோட்டை.
215 ராஜு, திரு. செ. மெ. ..	தலைவாசல் (செ. வ.).
216 ராஜு, திரு. வி. கே. ..	அரக்கோணம் (செ. வ.).
217 லட்சுமிநாராயணன், திரு. என்.	மதுரை மத்திய தொகுதி
218 லத்தீப், திரு. எம். ஏ. ..	வாணியம்பாடி.
219 வடிவேலு, திரு. கே. ..	கரூர்.

தொடர் எண்ணும், உறுப்பினர்களின் பெயரும்.	தொகுதியின் பெயர்.
(1)	(2)
220 வரதராஜன், திரு. என். ..	திண்டுக்கல்.
221 வரதராஜன், திரு. சௌ. வே.	சேலம்-1.
222 வாசன், திரு. சீ. மு. ..	வேடசந்தூர்.
223 வின்சென்ட், திரு. மி. ..	நாகர்கோவில்.
224 விஜயராகவன், திரு. பொ.	கிள்ளியூர்.
225 வேங்கா கவுண்டர், திரு. பி.	வீரபாண்டி.
226 வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு, திரு. ரா.	சிங்காநல்லூர்.
227 வெள்ளைச்சாமி, திரு. ஆ. ..	ஆத்தூர்.
228 வேணுகோபால், திரு. த. ..	தண்டராம்பட்டு.
229 வேலுச்சாமி, திரு. ஒ. சோ.	ஒட்டபிடாரம் (செ. வ.)
230 ஜகதீசன், திரு ஆனூர் ...	செங்கல்பட்டு
231 ஜான் வின்சென்ட், திரு. மு.	நாங்குனேரி.
232 ஜெபமணி, திரு. ர.	சாத்தான்குளம்.
233 ஜெயராமன், திரு. வே. இரா.	தேனி.
234 ஜெயவேலு, திரு. எம்.ஏ. ..	காட்பாடி.
235 ஜேம்ஸ், திரு. ஜே.	திருவட்டார்.

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்.

1 மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் — அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்— அமைச்சர்.

3 மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்— அமைச்சர்.

4 மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது—அமைச்சர்.

5 திரு. வி.பி. இராமன்— தலைமை வழக்கறிஞர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1977 ஆகஸ்ட் 13.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. இரங்கல் தீர்மானம்.

முன்னாள் அமைச்சர் திரு. வி. ராமையா அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மாநிலத்தில் அமைச்சராக இருந்த திரு. வி. ராமையா அவர்கள் நேற்று 12—8—1977 ஆம் நாளன்று மறைந்து விட்டதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்: ''1957ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டுவரை திருமயம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு இப்பேரவையின் உறுப்பினராகவும், அமைச்சராகவும் இருந்த திரு. வி. ராமையா அவர்கள் 12—8—1977ஆம் தேதியன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தையும், இரங்கலையும் அவரது மறைவினால் வருந்தும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கிறது.''

மறைந்த திரு. ராமையா அவர்கள் 1957ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை மின்சாரத்துறை அமைச்சராகவும், 1962ஆம் ஆண்டிலிருந்து 1967ஆம் ஆண்டு வரை பொதுப்பணி-உணவுத் துறைக்கு அமைச்சராகவும் பதவி வகித்து நமது மாநிலத்தில் ஒரு நல்ல அமைச்சராக விளங்கினார் என்பது இந்த அவைக்கும் தெரியும், தமிழகத்திற்கும் தெரியும். அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே படித்த நேரத்திலேயும், லயோலா கல்லூரியிலே பயின்றபோதும் மாணவர் இயக்கத்திலே கலந்துகொண்ட காரணத்தினாலே அவர்கள் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். 1948ஆம் ஆண்டு நவம்பர் மாதம் அரசியல் நிர்ணய சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதற்குப்பிறகு அவரது கட்சியில் பல்வேறுபட்ட பணிகளை, பொறுப்புகளை மேற்கொண்டு ஒரு நல்ல தேசியவாதியாக விளங்கினார் என்பதும் தமிழகத்திற்குத் தெரியும்.

அவர் பழகுவதற்கு இனியவராகவும், ஒரு பண்புள்ள அரசியல்வாதியாகவும், நல்லவராகவும், அனைவரோடும் பழகுபவராகவும் இருந்திருக்கிறார் என்பதை அதிகமாக நேரில் எனக்கு அவரிடம் பழக்கம் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட சில நாட்களில் அவர் தங்குகின்ற அறைக்கு அடுத்த அறையிலே நானும்

தங்க வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில் அவரோடு பழக நேரிட்டது. அப்படிப்பட்டவருடைய இழப்பை ஒரு பேரிழப் பாக இந்த அவை கருதுகிறது.

அதுமட்டுமல்ல, இந்த அவையில் வேதனைக்குரிய முறையில் இப்படிப்பட்ட அனுதாபத் தீர்மானங்களை அடிக்கடி கொண்டு வருகின்ற ஒரு துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டமைக்காக நான் வருந்துகிறேன் என்பதோடு, அந்த நிலை இனிமேல் வராமல் இருக்கட்டும் என்ற எனது ஆசையைத் தெரிவித்து அவரது மறைவால் வாடுகின்ற குடும்பத்தினருக்கு இந்த அவையின் சார்பாகவும், அரசின் சார்பாகவும் நமது ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்து நான் அமர்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, மறைந்த முன்னாள் அமைச்சர் இராமையா அவர்கள் இந்த மாமன்றத்தில் பத்தாண்டு காலம் ஆட்சிப்பொறுப்பை காங்கிரஸ் ஏற்றிருந்தபொழுது மிகத் திறம்பட தன்னுடைய அமைச்சர் பணியை ஆற்றிய ஒரு பெருந் தகை ஆவார்கள். 1957முதல் 1967 வரையில் அவர்கள் இங்கே அமைச்சராகப் பணியாற்றியபொழுது எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற வாய்ப்பினை நான் பெற்றிருந்திருக்கிறேன். அவர்கள் இந்திய நாட்டு விடுதலைப் போராட்டத்திலே மாணவர் பருவத்திலேயே பங்குபெற்றவர் என்பதை நம்முடைய அவை யின் முன்னவர் அவர்கள் இங்கே எடுத்துக் கூறினார்கள். பங்கு பெற்றது மட்டுமல்லாமல் பல்வேறு அடக்குமுறைகளுக்கு ஆளான நேரத்திலேயும் மனந்தளராமல் தியாகச் சுடர்களில் ஒருவராக அவர்கள் விளங்கினார்கள் என்பதையும் தமிழகம் நன்கறியும்.

1967க்குப் பிறகு அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்காக தொடர்ந்து பாடுபட்டார். தமிழகத்தினுடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைமைப் பொறுப்பையும் ஏற்றி ருந்தார். அதன் பின்னர் குடியரசுத் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் மாநில திட்டக் குழுவினுடைய துணைத் தலைவர் பொறுப்பும் அவருக்கு அளிக்கப்பட்டது. அந்தப் பொறுப் பினையும் அவர் ஒழுங்குற நிறைவேற்றினார். அமைச்சராக இருந்த அந்தக் காலத்திலேயே எதிர் தரப்பிலே இருந்து எவ் வளவு ஆத்திரம் ஊட்டத்தக்க சொற்கள் அவரை நோக்கிப் பாய்ந்தாலும் மிகப் பொறுமையோடு பதில் கூறக்கூடிய ஒரு மனப்பக்குவத்தை அவர் பெற்றிருந்தார் என்பது அவரோடு பழகியவருக்கும் இந்த அவையில் அவர் இருந்த நேரத்தில் இருந்த வருக்கும் மிக நன்றாகத் தெரியும் என்று நான் நம்புகிறேன். அதிலும் குறிப்பாக மானியக் கோரிக்கைகளில் பதில் சொல்லு கிற நேரத்தில் அவரும் திரு. கக்கன் அவர்களும் எல்லோருடைய பெயர்களையும் குறித்து வைத்துக்கொண்டு அவரவர்களுக்கு திருப்தி ஏற்படுத்த வேண்டுமென்பதற்காக எல்லோருடைய பெயர்களையும் ஒரு முறை சொல்லி, அவரவர்கள் எழுப்பிய பிரச்சனைகளுக்குப் பதில் அளித்தால் அந்தக் கேள்விகளை எழுப்பிய வருக்கு திருப்தி அளிக்கிறதோ இல்லையோ அந்தப் பதில் அளிப்பதால் தங்களுக்கு ஒரு மன ஆறுதல் ஏற்படுகிறது என்ற

அளவில் இங்கே நடந்து கொண்ட அமைச்சர்களில் ஒருவராக மறைந்த இராமையா அவர்கள் திகழ்ந்தார்கள். அப்படிப்பட்ட வரை இன்று நாம் இழந்திருக்கிறோம்.

நேற்று காலையிலே அவர் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையிலே சேர்க்கப்பட்டிருக்கிறார் என்ற செய்தி கிடைத்தது. மாலையிலே சென்று காணலாம் என்று எண்ணி இருந்தபொழுது அவர் மறைந்து விட்டார் என்ற நெஞ்சைக் குலுக்கும் செய்தி எனக்குக் கிடைத்தது. ஆனால் இங்கே ஒன் றைச் சொல்லாமலிருக்க முடியாது. அவர் மறைந்த செய்தி அவருடைய கட்சியின் சார்பாகவாவது எங்களுக்கெல்லாம் தெரி விக்கப்பட்டிருக்குமானால் அனைவரும் அங்கே சென்று அவருடைய புகழுடலுக்கு மலர் வளையம் வைக்கின்ற வாய்ப்பினை பெற்றிருக்க லாம். அந்த வாய்ப்பினை அளிக்காதது, இங்கே அவரோடு பழகினோம் என்ற அளவில் மாத்திரமல்ல, அவருடைய உற்ற நண்பர்களில் ஒருவர் என்ற முறையிலே—அவருடைய பிரிவானது —உள்ளபடியே மிகவும் வருந்தத்தக்கது. எனினும் மறைந் தவர் என்றென்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்திருக்கக்கூடியவர் என்ற முறையிலே அவருடைய குடும்பத்திற்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரி வித்து, அமர்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, மறைந்த மதிப்பிற்குரிய இராமையா அவர்கள் நீண்ட நாட் களாக பொது வாழ்க்கையிலே ஈடுபட்டிருந்தவர்கள். தன் னுடைய கல்லூரிப் பருவத்திலேயே சுதந்திரப் போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள். அதன் பிறகு தொடர்ந்து அவர்கள் பல்வேறு பொறுப்புகளில் இருந்து எல்லோருக்கும் நிறைவு ஏற் படக்கூடிய வகையிலே செயலாற்றி வந்தார்கள் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அவர்கள் 10 ஆண்டுகள் அமைச்ச ரவையிலே இருந்து பல்வேறு பெரும் பொறுப்புகளை எல்லாம் நிர்வகித்துத் திறம்பட நடத்தியவர்கள். அவர்கள் இந்த அவை யிலே அமைச்சராக இருந்தபொழுது நானும் எதிர் தரப்பிலே உறுப்பினராக இருந்தவன். அவர்கள் எல்லோரிடத்திலும் இனிமை யாகப் பழகக் கூடிய பண்புடையவர்கள். அதிகமாக கோபப்படா மல் பிரச்சனைகளை அணுகக்கூடிய பண்பு அவரிடத்திலே இருந்தது. அவர் 10 ஆண்டுக்காலம் அமைச்சராக இருந்தாலும்கூட அமைச்சராக இருந்த காலத்திலே தனக்கென, தன்னுடைய உறவினர்களுக்கென எதையும் அவர் செய்து மேம்பாடடையச் செய்தது கிடையாது என்பது பாராட்டுக்குரிய ஒன்று. இன் றைக்கு அவர் மறைந்திருக்கிறார் என்றால், அவர் பின்னாலே சொத் துக்களையும் சுகங்களையும் விட்டுச் செல்லவில்லை. மிகச் சாதாரண மான நிலைமையிலேதான் மறைந்திருக்கிறார்கள். அமைச்சர் பொறுப்பு போனபிறகு காங்கிரஸ் கட்சியிலே தலைவராக இருந்து காங்கிரஸ் கட்சியினுடைய வளர்ச்சிக்குத் தீவிரமாக பணி யாற்றினார்கள்.

[முற்பகல் 9.10]

அவர்கள் அதிகமாக படபடப்பாக பேசவில்லை என்றாலும் கூட, செயல்படுவதிலே ஊக்கம் காண்பார்கள். செயல்படுவதிலே அதிகக் கவனம் செலுத்தி, நேர்மை, நாணயமாக இருப்பதிலே கண்டிப்பாக இருப்பார்கள். அம்மாதிரி செயல்பட்டு வந்தவர்கள் மாநில திட்டக்கமிஷனிலே துணைத் தலைவராக நியமிக்கப்பட்ட பிறகு தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு என்னென்ன காரியங்கள் எப்படிச் செயல்படுத்துவது என்பதை நல்ல முறையில் பகுத்தறிந்து ஒரு அறிக்கையை மத்திய அரசுக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு தமிழகத்தின் வளர்ச்சியிலே ஆக்கமும் ஊக்கமும் காட்டியவர். அவருடைய மறைவு நமக்கெல்லாம் பெரிய துயரத்தைத் தரக்கூடியது. அந்தப் பெரியவர் மறைவுக்கு காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அவையின் முன்னவர் கொண்டு வந்திருக்கிற இரங்கல் தீர்மானத்தையொட்டி மறைந்த இராமையா அவர்கள் குடும்பத்தாருக்கு ஜனதா கட்சியின் சார்பில் என் இரங்கலைத் தெரிவித்து, அன்னாரைப் பற்றி எனக்கு முன்னதாக பேசிய தலைவர்கள் எடுத்துக் கூறியதைப் போல அவர் சிறந்த பண்பாடு உள்ளவராக, வாழ்க்கையில் அடக்கம் உள்ளவராக இருந்தது மட்டுமல்லாமல், தனது இளமைப் பருவத்திலே ஒரு தேசியவாதியாகவும், காங்கிரஸ் கட்சியில் ஒரு தொண்டனாகவும் உழைத்து தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய செயலாளராக பதவி வகித்து, அதற்குப் பின்பு அரசில் அமைச்சராக 10 ஆண்டுகள் சிறந்த சேவை செய்கிற போது இந்த மாநிலத்தில் இடையூறு விளைவிக்கக்கூடிய அளவுக்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அத்தனையையும் சமாளித்து செயலாற்றினார் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கட்சிப் பற்று உடையவர் என்பதை கூறுகின்றபோது, அமைச்சர் பதவியை விட்டபோது கட்சியிலே சேர்ந்து சேவை செய்து கொண்டிருந்தார், கடைசிநாள் வரையிலும், ஆரம்பம் முதல் தலைவர் காமராஜ் அவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு ஈடுபாடு உள்ளவராக இருந்தார். கட்சியில் பிளவு ஏற்பட்ட போதும் கூட, அவர் கொண்ட நம்பிக்கைக்கு இணங்க காங்கிரசில் அயராது உழைத்தார் என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அன்னாரை இழந்து இருக்கிற குடும்பத்தாருக்கு ஜனதா கட்சியின் சார்பாக அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் நமது மதிப்பிற்குரிய நண்பர் வி. இராமையா அவர்கள், நம்மைவிட்டுப் பிரிந்தமைக்காக வேண்டி இங்கே அவருக்கு வருத்தம் தெரிவிக்கக்கூடிய நிலையிலே நானும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே இரண்டொரு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1957-1962 ஆண்டிலே அவர்

அமைச்சராக இருந்த காலத்திலே நானும் இங்கே சட்டசபை அங்கத்தினராக இருந்து அவரிடத்திலே மிகவும் நெருங்கிப் பழகியவன் என்கிற அடிப்படையில், அவரைப்பற்றி சொல்லவேண்டுமானால் அவரை ஆத்திரமூட்டத்தக்கக் கேள்வியைக் கேட்டாலும் சரி, அல்லது பேசினாலும் சரி, அவர் மிகவும் பொறுமையாக இருந்து நல்ல முறையில் பதில் அளிப்பார் என்பது மட்டுமல்ல, அவர் அவையிலே பதில் அளிக்கவில்லை என்று சொன்னாலும் கூட தனியாக அழைத்துக்கூட சில விஷயங்களைப் பற்றி அவையிலே நான் சொல்லவில்லை, சொல்லக்கூடிய விஷயங்களைத்தான் சொல்லலாம், சொல்ல முடியாத விஷயங்களுக்கு அதற்கான காரணம் உங்களுக்கே தெரியும் என்று சொல்லிவிடுவார். அவர் கல்லூரியிலே படிக்கக்கூடிய காலத்திலே பொதுவுடைமையை ஆதரித்து பொதுவுடைமை தலைமையின்கீழ் இருந்த மாணவ இயக்கத்தைச் சேர்ந்த ஒருவர் என்ற காரணத்திற்காகவே கல்லூரியிலிருந்து அவர் அப்புறப்படுத்தப்பட்டார் என்று அவரே என்னிடத்தில் கூறியிருக்கிறார். அதுபோன்று பல விஷயங்களில் அவர் மிகவும் எளிய முறையில் வாழ்க்கை நடத்தியது மட்டுமல்ல, எதிர்கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களானாலும் சரி, அவர்களோடு நல்ல தன்மையில் பழகக்கூடிய அளவுக்கு பண்போடு நடந்துகொண்டவர் தான் அமைச்சர் பதவியில் இருந்த காலத்தில். அவருக்கு வயது ஒன்றும் அதிகம் ஆகிவிடவில்லை. 57 வயது தான் ஆகியிருக்கிறது. இந்த வயதில் அவர் விட்டுப் பிரிந்தது இந்த நாட்டுக்கு ஒரு இழப்பாகும் என்ற தன்மையில் அவருடைய குடும்பத்தாருக்கு எங்களுடைய கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து அமருகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது அவையின் முன்னவர் முன்மொழிந்த அஞ்சலித் தீர்மானத்தில் என்னுடைய இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபத்தையும் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்வதோடு மறைந்த காங்கிரஸ் தலைவர் ராமையா தான் அமைச்சர் பதவி வகித்த காலத்திலேயும் மற்ற நேரங்களிலும் தன்னுடைய கடமைகளை எவ்வாறு ஆற்றினார் என்பதை எனக்கு முன்னால் பேசிய பல தலைவர்கள் குறிப்பிட்டார்கள். நானும் 1966ஆம் ஆண்டு தமிழகம் பூராவிலும் விவசாயிகள் மத்தியில் வரிகொடா இயக்கம் போன்ற ஒரு போராட்டத்தை எங்கள் தாலூகாவில் நடத்திய காலத்தில் அப்போது அவர் அமைச்சராக இருந்தார்கள். பல இடங்களில் பல பொருள்களும் மாடுகளும் ஜப்தி செய்து வைக்கப்பட்ட நேரத்தில் அவரை நேரில் பார்க்கக்கூடிய வாய்ப்பு எனக்கு கிடைத்தது. நானும் மற்ற விவசாயச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் அவரைக் காண வருகிற காலத்தில் அவர் அவருடைய கிராமத்தில் இருந்தார். அவருடைய கிராமத்திற்குச் சென்று பார்த்து இந்த விவரங்களைச் சொன்னவுடன்

ஐப்தி செய்த அத்தனை பொருள்களையும் மாடுகளையும் பவுண்டிலிருந்து எந்தவிதமான பணமும் அதற்காகப் பெறாமல் திரும்பிக் கொடுக்கும் அளவுக்கு, இந்த விவசாயிகள் போராட்டத்தை நடத்தியவர்கள் வேறு கட்சிக்காரர்கள் என்று பாராமல் மனிதத் தன்மை என்ற கண்ணோட்டத்தோடு நல்ல முறையில் அந்தப் போராட்டத்தை நிறுத்தியது மட்டுமல்ல, நல்ல பண்புடன் நடந்து கொண்டார் என்று நினைக்கும்பொழுது, உண்மையிலேயே அவர் மீது அதிகமான மதிப்பும் மரியாதையும் வைக்கவேண்டியவனாக இருக்கிறேன். அது மட்டுமல்ல. அவர் பல ஆண்டுகள் அமைச்சராக இருந்தாலும் கூட ஆரம்பத்தில் அவர் மிகவும் செல்வாக்கோடு இருந்தாலும் கூட, அவர் பொது வாழ்க்கைக்கு வந்த பின்பு அவருடைய ஆஸ்தி பொருள்களை இழந்து, ஒரு வசதி குறைந்த நிலையில் இருக்கிறதாக கேள்விபட்டபோது நம்மைப் போன்ற பொது வாழ்க்கையில் இருக்கக்கூடியவர்கள் முன்னுதாரணமாகக் கொண்டு பொது வாழ்க்கையில் தியாக மனப்பான்மையோடு, இருப்பதற்கு இந்த நேரத்தில் உணர்வும் உணர்ச்சியும் பெறுவதற்கு இந்த அஞ்சலி உதவியாக இருக்குமென்று நம்புகிறேன். அந்த முறையில் அமைச்சர் ராமையா அவர்களுடைய இழப்பு தமிழ் நாட்டிற்கு பெரிய நஷ்டமாகும். அவருடைய இழப்புக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் அஞ்சலி செலுத்துவதோடு அன்னாரை இழந்து துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொண்டு அமருகிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் முன்பு மறைந்த மரியாதைக்குரிய ராமய்யா அவர்களின் மறைவிற்கு அஞ்சலி தெரிவிக்கின்ற அளவில் அவை முன்னவர் அவர்கள் கொண்டுவந்திருக்கிற தீர்மானத்தை இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் ஆதரித்து என்னுடைய சில கருத்துக்களை நான் சொல்லுகிறேன். மறைந்த திரு ராமய்யா அவர்கள் தேச விடுதலை போராட்டப் காலத்தில் தேசத்திற்கு தான் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து பதவியை தான் எதிர்பாராமல் தகுதியுடையவராக வாழ்ந்து, பதவி அவரைத் தேடி வந்து அந்தப் பதவியில் இருந்த காலத்தில் செம்மை வந்தபொழுதும் மிக எளிய வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய முன்னுதாரண புருஷராக விளங்கினார்.

[முற்பகல் 9.20]

பதவி போன பின்னாலும் இல்லையே என்ற ஏக்கமோ அல்லது Inferiority Complex இல்லாமல் தேச சேவை மக்கள் சேவை இதுதான் பெரிதெனக் கருதி சேவையில் ஈடுபட்டு இயக்கரீதியாகப் பாடுபட்டார்கள். அதற்குப் பின்னால் ஜனாதிபதி ஆட்சிக் காலத்தில் மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்த காலத்தில் மதுரை மாவட்டத்திற்கு வந்தபோது அத்தனை கட்சித் தலைவர்களையும் அழைத்து, விவசாயிகளை

அழைத்து என் காலத்தில் செய்த திட்டங்களைத் தவிர என்னென்ன நடந்திருக்கின்றன, என்னென்ன வேண்டும் என்ற விவரங்களை எல்லாம் தெரிந்துகொண்டு செயலாற்ற முற்பட்டார்கள் என்பதை நினைக்கும்போது அவர்களுக்கு மக்கள்பால் இருந்த அன்பும் சேவா மனப்பான்மையும் கண்டு வியந்து அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த அளவிற்கு அடக்கத்தின் சின்னமாகவும் எளிமையின் சிகரமாகவும் வாழ்ந்த அவர்களது வாழ்வு நம் போன்றவர்களுக்கு ஒரு முன் உதாரணமாக அமையும் என்பதில் ஐயமில்லை. குறிப்பாக பத்தாண்டு காலம் அவர்கள் அமைச்சர் பதவியில் இருந்தும்கூட கடந்த தேர்தல் நேரத்தில் வருகிறபோது அவர்கள் சாதாரணமாக வெளி ஊர் பஸ்ஸுக்கு நின்று அதற்காக டிக்கட் எடுக்கவேண்டும் என்று வந்தார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். ஆரம்பத்தில் நல்லதொரு குடும்பத்தில் பிறந்து தேச சேவை செய்வதற்கு வந்ததற்குப்பின்னால் அவர்கள் சுகங்களை எல்லாம் இழந்து ஒரு முன் உதாரணமாக விளங்கிய குடும்பத்தைச் சார்ந்தவர் அவர்கள்.

'Those who give something to the Nation are Statesmen, those who expect something from the Country are politicians.

என்று தேவர் திருமகன் அவர்கள் சொன்ன இலக்கணத்தின்படி அவர்கள் ஒரு முன் உதாரணமாக விளங்கினார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். அன்னாரை இழந்து தவிக்கிற அந்தக் குடும்பத்தாருக்கும் இன்னும் உற்றார் உறவினர்களுக்கும் இந்திய தேசீய பார்வேர்ட் ப்ளாக் கட்சியின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து: தலைவர் அவர்களே, மறைந்த ராமையா அவர்களுடைய மறைவிற்காக உழைப்பாளர் முன்னேற்றக்கட்சி சார்பில் எனது இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவராக பணியாற்றிய போது ஒருமுறை அவர்களைச் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றிருக்கிறவன் நான். அன்று அவர்களைச் சந்தித்தபோது ஒரு கட்சியின் தலைவராக இருந்தும் ஒரு தொண்டன் ஆற்றுகிற பணியினை அவர்கள் செய்தார்கள். அதைப் பார்த்தபோது உண்மையிலேயே நான் வியப்படைந்தேன். ஒரு பெரிய கட்சியினுடைய தலைவர் இந்த அளவிற்கு இறங்கி வந்து ஒரு தொண்டனைப் போல் பணியாற்றுகிறார்களே என்று நினைக்கிறபோது அவர்களது எளிமையான தோற்றமும் அவருடைய அமைதியான பேச்சுகளும் அவர்களை ஒரு சிறந்த அரசியல்வாதியாகவும், ஒரு அரசியல்வாதிக்கு இருக்கக்கூடிய லட்சியம், இலட்சணங்கள் அத்தனையும் பொருந்திய ஒரு சிறந்த தேசபக்தரை நாம் இன்று இழந்திருக்கிறோம் என்ற அந்த நினைப்பு நம்மை விட்டு நீங்காமல் இருக்கிறது. மறைந்த அன்னாரின் குடும்பத்தாருக்கு உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியின் சார்பாக என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. எம். ஏ. லத்தீப்</u> : பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த சுதந்திர வீரராகவும், காங்கிரஸ் பேரியக்கத்தின் செயலாளர்களில் ஒருவராகவும், சுமார் பத்தாண்டுக் காலம் அமைச்சராகவும் பதவி வகித்து இந்த மாநிலத்திற்கு நல்ல சேவை செய்துள்ள ஒரு சிறந்த சேவா மனப்பான்மை உடையவராக விளங்கிய ராமையா அவர்களை இன்று நாம் பிரிந்திருப்பது நமக்கெல்லாம் ஆற்றொணா துயரத்தைத் தருகிறது. திரு. ராமைய்யா அவர்கள் ஒரு சிறந்த செயல் வீரராக விளங்கினார்கள். சொல்வன்மை இல்லாவிட்டாலும் செயல் திறமை அவர்களிடம் நிரம்ப இருந்தது என்று அவர்களோடு இங்கே பணியாற்றியுள்ள பெரியவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பல்வேறு துறைகளை வகித்து, அவர்கள் வகித்த துறைகளுக்கு எல்லாம் நல்ல சிறப்பைத் தேடித் தந்திருக்கிறார்கள் என்பது நாடு அறிந்த உண்மையாகும். குறிப்பாக அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது அவர்கள் இந்த மாநிலத்தில் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றித் தந்திருக்கிறார்கள். எங்கள் மாவட்டத்தில் இருக்கிற சாத்தனூர் அணைக்கட்டுத் திட்டம் அவர்களது காலத்தில்தான் திறந்து வைக்கப்பட்டது என்பதை எல்லோரும் அறிவோம். பல பாலங்கள், அணைக்கட்டுக்கள் அவர்களது பெயரால் நம் மாநிலத்தில் அவர்களது நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட ஒரு பெரியவர் சிறந்த உழைப்பாளர், நிதானமும் விவேகமும் உடையவர், சிறந்த தேச பக்தி உடையவர், பெரும் தலைவர் காமராஜ் அவர்களுடைய தொண்டராக விளங்கியவர். காங்கிரஸ் இயக்கத்தில் பணியாற்றியவர். அண்மையில் சிறந்த முறையில் மாநில திட்டக் குழுவின் துணைத் தலைவராக இருந்து பணியாற்றி இருக்கிறார்கள். அளப்பரிய சேவை செய்து மக்களுடைய ஒருமித்த நன்நம்பிக்கையைப் பெற்றிருந்த சிறந்த தலைவராகவும் தொண்டராகவும் விளங்கிய அந்தப் பெருமகனுருடைய மறைவு நமக்கு துன்பத்தையும் துயரத்தையும் தருகிறது. அவர்களுடைய மறைவுக்காக இந்திய யூனியன் முஸ்லீம் லீக் சார்பாக எங்கள் மரியாதையையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : இந்த இரங்கல் தீர்மானத்தையொட்டி பேரவை முன்னவர் அவர்களும் மற்ற எதிர்க்கட்சித் தலைவர்களும் தெரிவித்த கருத்துக்களையொட்டி என்னுடைய கருத்துக்களையும் இணைத்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். 1962 முதல் 1967 வரை இங்கே எதிர்கட்சி வரிசையில் உறுப்பினராக நான் இருந்தபோது மறைந்த அமைச்சர் இராமையா அவர்கள் இருந்தார்கள். எல்லோரிடமும் மிகவும் தன்மையோடும், பெருமையோடும், எல்லோரும் சொல்லுகின்ற நியாயமான கோரிக்கைகளை இனிய முகத்தோடு கேட்டு அவற்றை உடனடியாகச் செய்கிறேன் என்று நல்ல வாக்குறுதிகளைத் தருவார். அவர் ஒரு நல்ல தேசபக்தர். அவர் மிக அமைதியாகவும், பெருமையின் சின்னமாகவும், எல்லோரும் பயமின்றி குறைகளைச் சொல்லலாம் என்ற அளவில், நல்ல உள்ளம் படைத்தவராகவும்

இருந்தவர். ஐந்தாண்டு காலம் அமைச்சராக அதாவது நான் உறுப்பினராக இருந்த காலத்தில் அவர் அமைச்சராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார். அவருடைய மறைவுக்கு நானும் உங்களோடு இணைந்து எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அவருடைய குடும்பத்தினருக்கும் எதிர்க்கட்சித் தலைவர்களும், முன்னவர் அவர்களும் தெரிவித்த இரங்கலை நானும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சொல்லி, இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் எழுந்து நின்று அஞ்சலி செலுத்துமாறு கோருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிட நேரம் மவுனமாக எழுந்து நிற்க, இரங்கல் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

ஏழைகளுக்கு சட்ட உதவி.

*51 வின.—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு சட்ட அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

ஏழை எளியவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : ஆம், ஏழை எளியவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்கும் செயற் குறிப்பு இருக்கின்றது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ''சட்டம் ஒரு இருட்டறை, அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு, ஏழையால் அந்தப்பிரகாசமான விளக்கைப் பெற முடிவதில்லை'' என்று அறிஞர் அண்ணு அவர்கள் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அப்படிப்பட்ட பிரகாசமான ஒளி விளக்கை ஏழை மக்கள் பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : Government gives the fullest assurance of expediting every step towards this noble objective.

திரு. ரா. மார்க்கபந்து : ஏழை எளியவர்கள் எல்லோருக்கும் சட்ட உதவி வழங்குவதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். அதே நேரத்தில் அரசாங்கத்தால் சமீப காலத்தில் ஏற்படுத்தப்படும் சட்டங்களின் காரணமாக பல வழக்கறிஞர்கள் ஏழைகளாகியிருக்கிறுர்கள். அந்த ஏழைகளுக்கும் அரசு உதவி செய்வார்களா, அதற்கு அரசாங்கத்தினிடத்தில் ஏதாவது குறிப்பு இருக்கிறதா ? அதே நேரத்தில் சுப்ரீம் கோர்டு நீதிபதி திரு. வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள் தலைமையில் ஏழைகளுக்கு சட்ட உதவி கொடுப்பது பற்றி ஒரு கமிஷன் அமைக்கப்பட்டது. அக்குழு ஏதாவது பரிந்துரை தந்திருக்கிறதா ? எல்லோரும் சட்ட உதவி பெறுவதற்காக கோர்ட்டு கட்டணங்களில் ஏதாவது குறைப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

(முற்பகல் 9-30)

The HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : Mr. Speaker, Sir, so far as the loss of suits are concerned, they have never resulted in lowering the standards of affluence of the lawyers. It is not the fault of the State laws.

So far as Thiru Krishna Aiyar's Report is concerned, two eminent Judges of the Supreme Court—Justice Thiru Krishna Aiyer and Justice Thiru Bhagavathi—who are heading the Legal Aid Committee are at it. They are hoping to issue a Report as early as possible. No Report has yet been forth-coming. Their labours are continuing towards that direction.

So far as the third point is concerned, I am afraid, that is Court fees are concerned, this matter came up sometime back before the Supreme Court stating that the fee should be proportionate to the services rendered by the Department of Justice. I think that has been settled. The suggestion made by the Hon. Member Thiru Margabandhu will be considered in all aspects by the Departmen.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இன்றைக்கு இருக்கிற சட்டத்தைப் பயன்படுத்தி வழக்கறிஞர்களை நியமித்துக் கொண்டிருக்கிறேம். கிரிமினல் வழக்குகளுக்கு மட்டும் இப்படி இலவசமாக வழக்கறிஞர்கள் அமர்த்தப்படுகிறுர்களா அல்லது சிவில் வழக்குகளுக்கும் அமர்த்தப்படுகிறுர்களா ? அமைச்சர் அவர்கள் தமிழில் பதில் சொல்வார்களா ?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வினவிற்கு நான் பதில் அளிப்பதற்கு முன்னால் அவருடைய வின என்ன என்பதே எனக்குப் புரியவில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி : கிரிமினல் வழக்குகளில் மாத்திரம் இன்றைக்கு வழக்கறிஞர்கள் அமர்த்தப்பட்டு அவர்கள் வாதாடுகிறுர்கள். சிவில் வழக்கு மன்றங்களில் வாதாடுவதற்கும், இலவசமாக வாதாடுவதற்கு வழக்கறிஞர்களை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன் வருவாரா ?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-30 இல் சில பகுதிகள் அகற்றப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : சிவில் வழக்குகளில் வாதாட "அமிகஸ்குரி" ஏற்பாடு செய்கிறோம். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒரு பேனலைத் தயார் செய்து வைத்திருக்கிறோம். அவர்கள் சிவில் வழக்குகளில் ஏழை எளியவர்களுக்காக வாதாட அமர்த்தப்படுகிறார்கள் என்று நம்புகிறேன். டிஸ்டிரிக் கோர்ட் ஜட்ஜ், சபார்டினேட் கோர்ட் ஜட்ஜ் ஆகியவர்களை இப்படிப்பட்ட ஒரு "பேனலை" தயார் செய்யச் சொல்லி நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

* திரு. வி. கே. கோதண்டராமன் : இலவச சட்ட உதவிக்கு ஏற்பாடு செய்து இருப்பதாக கனம் அமைச்சரவர்கள் கூறினார்கள். இப்படி இலவச சட்ட உதவி என்று சொன்னால் குறிப்பிட்ட ஒரு வழக்கறிஞரை ஏற்பாடு செய்து அவர் மூலமாகவா? அப்படி என்று சொன்னால், சில நேரங்களில் சில தவறுகள் ஏற்படுகிறது என்ற காரணத்தில் அந்த ஏழை எளியவர்களுக்கு விரோதமாக வழக்கறிஞர்கள் நடந்து கொள்கிறார்கள். எனவே அவர்கள் விரும்பும் வழக்கறிஞர்களுக்கு குறிப்பிட்ட தொகை இவ்வளவு என்று கொடுக்க ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : இது வரையிலே நாங்கள் எடுத்துக் கொண்டுள்ள, அந்த லீகல் கமிட்டியின் ஸ்டெப்ஸ், முயற்சிகள் இவ்வளவுதான். இன்னும் அவர்கள் வழக்கறிஞர்களை என்கேஜ் பண்ணி, பணம் கொடுக்கிற ஸ்டேஜுக்கு போகவில்லை. ஆனால் இதுவரையிலே நான்கு கேசுகளை அவர்கள் நடத்தியிருக்கிறார்கள். ஒரு வழக்கில் ஒருவருடைய மனைவியார் "மெயின்டனென்ஸ்" கேட்டு வாங்கியிருக்கிறார்கள். ஒரு 11 வயது பையன் அவனுடைய தகப்பனார் மேலே வழக்குப் போட்டு "மெயின்டனென்ஸ்" வாங்கியிருக்கிறான். இப்படி நான்கு கேசுகள் நடந்து இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்படி இலவசமாக வழக்கறிஞர்களை அமர்த்தினால் அவர்கள் சரியாக நடந்து கொள்வதில்லை சில நேரங்களில் என்று குறிப்பிட்டார்கள். பணம் கொடுத்து அமர்த்துகிற வழக்கறிஞர்கள் கூட சில நேரங்களில் இந்த 'லாயர்ஸ்' நடத்துகிற வழக்குகளில் சரியாக நடந்து கொள்வதில்லை.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இப்படி வழக்கறிஞர்கள் நடந்துகொள்வதாக யாரும் புகார் செய்ததில்லை.

The HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIAR : Please hear me. One or two Advocates are not hoping to meet the expectations of the litigants. That is the complaint of the litigants. It is one side of the complaint of the litigants. The other side of the complaint has not been heard by us. There may be justification in their request. Steps have to be taken in this regard.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு சொன்ன 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்பதைப் போல, தமிழகத்தில் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்ற கொள்கை திட்டத்திலே, எந்தக் கொள்கையை அமரர் அண்ணா அவர்கள் வேண்டுமென்றார்களோ, அதையே இந்த அரசும் பின்பற்றி வருகிறது என்பதை நான் சொல்வதற்குக் காரணம், சட்ட அமைச்சர் அவர்கள் வேடிக்கையாக * * * என்ற வாசகத்தை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கி, அப்பேர்ப்பட்ட ஒரு மரபு இல்லாமல் போவதற்கு நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட தாங்கள் உத்தரவிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட அமைச்சர் அவர்கள் சொன்ன * * * என்ற வாசகத்தை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : கர்நாடக மாநிலத்திலே மாவட்டத்திற்கு ஒரு வழக்கறிஞர் நியமிக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். அந்த அடிப்படையில் நமது மாநிலத்தில் ஏற்பாடு உண்டா? இரண்டாவது, மாவட்ட ரீதியாகவும், தாலூகா ரீதியாகவும் சட்ட உதவி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தலைமை நீதிபதி வானொலியில் பேசியதாகக் கேள்விப்பட்டேன். இதனால் ஏழை எளிய மக்கள் பயனடைவார்கள். இதைப்பற்றி........

மாண்புமிகு பேரவைத்தலைவர் : ஒவ்வொன்றாகக் கேளுங்கள். 5, 6 கூட கேட்கலாம். ஆனால், நேரத்தையும், மற்ற உறுப்பினர்களுக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்பதையும் கருத்தில் கொள்ளவேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : அதோடு, திருநெல்வேலி மாவட்டத்திலே 8 வழக்கறிஞர்கள் தாழ்த்தப்பட்ட மக்களின் வழக்குகளுக்கு இலவசமாக உதவி செய்யவேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், அப்படி இலவசமாக வாதாடப்படும் என்கிற தகவல் எதுவும் அவர்களுக்கு கிடையாது. இதைப்பற்றி விளம்பரம் செய்வதற்கு இந்த அரசு தயாரா என்று கேட்டுக் கொள்கிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 9-35 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

<u>மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :</u> டிஸ்ட்ரிக்ட் கமிட்டீஸ் என்று கான்ஸ்டிட்யூட் பண்ணியிருக்கிறோம். இது எல்லா டிஸ்ட்ரிக்டுகளிலும் செயல்படுவதற்கு இன்னும் 6 மாத காலம் ஆகும். கவுன்சிலிங் கமிட்டீஸ் என்று இங்கு ஏற்படுத்தி செயல்பட ஒரு முடிவு இருக்கிறது. அதற்கு இப்போது பேனல் ஆப் லாயர்ஸ் தயார் பண்ணி, அவர்கள் லீகல் அட்வைஸ் கொடுப்பார்கள். இந்த இரண்டு முறைகளையும் கையாளப் போவதாக லீகல் எய்ட் கமிட்டி முடிவு செய்திருக்கிறது. இதை இம்பிளிமெண்ட் செய்வதற்கு 5, 6 மாதங்கள் ஆகும். எனக்கு இதுவரை வந்த தகவலிலே, இந்த என்டயர் ஓர்க்ஸுக்கும் ஒரு லட்ச ரூபாய்தான் அலாட்மெண்ட் செய்திருக்கிறார்கள். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு, வேரியஸ் டிஸ்டிரிக்ட் கமிட்டீஸ், கவுன்சிலிங் கமிட்டீஸ் நிர்மாணம் செய்ய வேண்டியிருக்கிறது.

<u>திரு. ஜெ. ஜேம்ஸ் :</u> தலைவர் அவர்களே, பேனல் ஆப் கமிட்டி அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்த பானலிலே உள்ள வழக்கறிஞர்கள், கேஸ்கள் ஹெவியாகவும், காம்ப்ளிகேட்டட்டாகவும் இருப்பதால் அதற்குத் தகுதியான வழக்கறிஞர்கள் அதிலே இல்லை. இப்படிப்பட்ட நிலைமையில், இந்த பானலிலே லீடிங் அட்வகேட்டுகளை சேர்ப்பார்களா ? அவர்கள் அதற்கு விரும்பவில்லை என்று சொன்னால், அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9-40]

<u>மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் :</u> லீடிங் அட்வகேட்ஸுக்கு டைம் இருக்குமோ இருக்காதோ அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்ற நம்பிக்கை இல்லை. காம்ப்ளெக்ஸ் பிராப்ளம்ஸ் இருக்கும் கேஸ்களில் கூட லீடிங் லாயர்சாக இல்லாதவர்கள் கூட வீட்டில் உட்கார்ந்து ஹோம் ஒர்க் செய்ய முயற்சி செய்தால் எந்த காம்ப்ளெக்ஸ் பிராப்ளத்தையும் அந்த லாயர்கள் வாதாட முடியும். The only pre-requisite condition is that he must do his home work thoroughly and completely with a sense of responsibility அதுதான் நான் சொல்ல முடியும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> கேள்வி நேரம் முடிவுற்றது.

<u>திரு. எம். ஏ. லத்தீப் :</u> முக்கியமான கேள்வி, ஒரு துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஏற்கனவே 10, 15 நிமிஷம் இந்தக் கேள்விக்கு நேரம் கொடுத்திருக்கிறேன்.

(பல உறுப்பினர்கள் எழுந்தார்கள்)

(திரு. எம். ஏ. லத்தீப் துணைக் கேள்வி கேட்க அனுமதிக்கப் பட்டார்)

(திரு. சி. ஆறுமுகம் உட்கார்ந்தபடி பேசிக்கொண்டிருந்தார்)

திரு. லத்தீப் அவர்கள் கொஞ்சம் பொறுக்கவேண்டும். திரு. ஆறுமுகம் உட்கார்ந்தபடி பேசிக்கொண்டே இருக்கிறார். அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> உங்களைப் பேச நான் அனுமதிக்கவில்லை. திரு. லத்தீப் துணைக் கேள்வி கேட்பார்.

THIRU M.A. LATHEEF: Sir, will the Hon. Ministe for Law be pleased to state whether the legal aid that will be made available to the poor in this State will be made available to all the stages of litigation and what wolud be the mode of legal aid that would be given to the poor and in what stages the legal aid will be made available to the poor and whether district-wise panels will be constituted and if so, whether civil and criminal panels will also be constituted ?

THE HON THIRU K. NARAYANASWAMY MUDALIAR : As I have already indicated, district committees will be constituted. Once the district committees are constituted there will be panels for attending to both civil and criminal litigation and there would be no difficulty about it.

As regards the point raised by the honourable Member whether legal aid will be given in all the stages of litigation, from the counselling stage to perhaps the High Court stage, there will be a hierarchy of officials who will be quite useful to give the necessary legal aid to the poor and indigent litigants.

So far as the Supreme Court is concerned, I am not in a position to state anything because legal aid panel or committee must be constituted at the Delhi level.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> இலவச சட்ட உதவி ஹைகோர்ட்டில் இருந்து கீழே இருக்கக்கூடிய கோர்ட்டுகள் வரை அளிக்கப்படுமா ? அதற்கு ஏதாவது சொத்து வரம்புகள் உண்டா ? இலவச மருத்துவ உதவி கொடுக்கும்போது பணம் கொடுத்தால் தான் பெட் கிடைப்பது மாதிரி இதிலும் ஏதாவது பணம் கொடுக்கிற நிலைமைகள் வருமா ? அது வராமல் தடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : There is no question of any decent lawyer of that committee accepting any money from any litigant and that, I think, will be a professional misconduct. If a person offers voluntary service and then starts exacting fees from his client, I do not think that is expected of any Honourable Member of this noble profession, and to that extent I assure the Honourable Member. As regards the question of giving free legal counselling or legal advice to the indigent poor, right upto the High Court efforts are being made to constitute counselling committees and necessary steps would be taken to give the best possible legal attention and advice to the indigent poor from the stage of counsel to the stage of litigation in the High Court.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்த ஏழைகளுக்காக வாதாடுகிற வழக்கறிஞர் பட்டியல், அதாவது பேனலில் நியமிக்கப்படக்கூடிய வழக்கறிஞர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதில், தங்களுக்காக வாதாட ஒரு வழக்கறிஞரை தாங்கள்? தேர்ந்தெடுக்க அந்த ஏழைகளுக்கு உரிமை இருக்கிறதா? அல்லது அந்த நீதிபதி நியமிக்கிறாரா ? அல்லது அந்த நியமனத்தில் அரசு பங்கு பெறுகிறதா ?

மாண்புமிகு திரு. கே. நாராயணசாமி முதலியார் : அந்த செலக்‌ஷன்பேனலிலே எந்த பேஸிஸிலே செய்கிறார்கள் என்றால் எனக்கு வந்த தகவல்

Most probably the presiding judge will select the person and he will nominate X or Y or Z to do the work. The whole thing is still in, what I call, rudimentary stage, in the stage of preparation, experimentation, trial and error. It is in that stage we are now probing.

திரு. ஓ. சுப்பிரமணியன் : ஏழைகளுக்கு இந்தச் சட்ட உதவி கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த உதவியைப் பெறக்கூடிய ஏழை என்று நிர்ணயம் செய்ய என்ன அளவுகோல் வகுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : The Means test has not yet been determined. The question of ascertaining whether a litigent is poor and indigent and cannot afford the services of a paid-lawyer, will be decided by either a panel of lawyers or counselling committees. I think in due course certain norms and guidelines will be formulated for deciding that.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக்குறிக்கும்.)

3. ஒழுங்குப் பிரச்சினை.

ஆங்கிலத்தில் பேச அனுமதிப்பது குறித்து.

திரு. நா. பழனிவேல் : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புகிறேன். தாங்கள் கேள்வி நேரம் முடிந்தது என்று சொன்னதற்குப் பின்னர் திரு. லத்தீப் அவர்களுக்கு கேள்வி கேட்க சந்தர்ப்பம் கொடுத்தீர்கள். அவர் கேள்வி கேட்கக் கூடிய நேரத்திலே ஆங்கிலத்திலே கேட்டார்கள். அதற்கு சட்ட அமைச்சர் அவர்கள் ஆங்கிலத்திலே பதில் சொன்னார்கள். இதுபோன்று ஆங்கிலத்திலேயே கேள்விகேட்டு ஆங்கிலத்திலேயே பதில் சொன்னால் ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு எதுவும் தெரியவில்லை. நாங்கள் புரிந்துகொள்ளக் கூடிய முறையிலே தமிழிலே கேள்வியும் பதிலும் சொல்வதற்கு தாங்கள் ஏற்பாடு செய்வீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் கேள்வி நியாயமானதாக இருந்தாலும் கூட நம்முடைய விதிமுறைகளிலே ஆங்கிலத்திலே பேசுவதற்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். ஆனால் உறுப்பினர் அவர்கள் ஆங்கிலத்திலே பேசாமல் தமிழிலே பேசவேண்டுமென்று நான் ஏற்கனவே கேட்டுக் கொண்டிருக்கிறேன். ஆங்கிலத்திலே பேசலாம் என்று நம்முடைய விதிமுறைகளிலே அனுமதி கொடுக்கப் பட்டிருக்கிறபோது ஆங்கிலத்திலே பேசக்கூடாது என்று சொல்லமுடியாது. ஆகவே இதில் ஒழுங்குப் பிரச்சினை எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆறுமுகம் : தமிழ் எழுதப் படிக்க, பேசத் தெரிந்தும் கூட இப்படி ஆங்கிலத்திலே பேசுவது முறையா ? எங்களுக்குத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதிகளிலே ஆங்கிலத்திலே பேசலாம் என்று இருக்கிறது. நம்முடைய அவையினுடைய உறுப்பினர்கள் அத்தனை பேர்களும் தமிழிலே பேசவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்.

4. உரிமைப் பிரச்சினைகள்.

(அ) 'அண்ணா' பத்திரிகையில் ஓர் உறுப்பினர் பேசியதாக செய்தியைப் போட்டு, இன்னோர் உறுப்பினர் படத்தைப் போட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. சுப்பு அவர்கள் 'அண்ணா' நாளிதழ் மீது ஒரு அவை உரிமை மீறல் குறித்த பிரச்சினைக்கு அறிவிப்புக் கொடுத்துள்ளார்.

[பேரவைத் தலைவர்] [1977 ஆகஸ்ட் 13

10—8—1977 தேதி 'அண்ணா' நாளிதழில் ''கலப்பட உணவு பரிமாறும் ஓட்டல்காரர்களுக்குச் 'சிறை' தண்டனை மட்டுமே தரவேண்டும் திரு. உமாநாத் யோசனை'' என்ற தலைப்பில் வெளியிட்ட செய்தியில், திரு. உமாநாத் படத்திற்குப் பதிலாக திரு. சங்கரய்யா படத்தைப் போட்டு பிரசுரித்திருப்பதாகவும், சட்டமன்றப் பேரவையில் இதே போல பிரச்சினை 10—8—77 அன்று எழுப்பப்பட்டபோது பேரவைத் தலைவர் எல்லாப் பத்திரிகைகளுக்கும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்ற தீர்ப்பளித்ததும் 'அண்ணா' நாளிதழ் இப்படிப் பிரசுரித்திருப்பதாகவும் இது அவை உரிமை மீறிய செயல் என்றும் உறுப்பினர் கூறியுள்ளார். இதில் விளக்கம் பெறுவதற்கு அவசியம் இல்லாத காரணத்தால் எனது தீர்ப்பை இப்போது வழங்குகிறேன்.

[திரு. சுப்பு அவர்கள் எழுந்தார்.]
[முற்பகல் 9-50]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சொல்ல வேண்டியது எல்லாம் இதில் அடங்கிவிட்டது.

திரு. க. சுப்பு : இதே மாதிரி முன்பு வந்து பேச அனுமதித்திருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உங்களைப் பேச அனுமதியில்லை என்று ஊகித்துக் கொண்டு பேசுகிறீர்கள். நீங்கள் சொல்ல வேண்டிய சிலபிரச்சினைகள், கருத்துக்கள் இதில் அடங்கிவிட்டன என்பதால் நேரத்தை வீணாக்க வேண்டாமென்று கருதித்தான் சொல்கிறேன்.

திரு. க. சுப்பு : விளக்கினால்தான் நன்கு புரியும்.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, உரிமைப் பிரச்சினை கொடுக்கப்பட்டு அதைக் கொடுத்தவர்கள் அவையிலே அதுபற்றி விளக்கம் சொல்ல முன் வருகிற நேரத்தில், அதற்கு ஒன்றிரண்டு நிமிடங்கள் கொடுத்து விளக்கம் சொல்ல அனுமதி கொடுத்தால் அந்த உறுப்பினருக்கு உரிமைப் பிரச்னை கொடுத்த காரணத்தால் அவருக்கு அந்த உரிமை மறுக்கப்பட்டது என்ற எண்ணம் ஏற்படாமல் இருக்க உதவும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேராசிரியர் சொன்ன கருத்தை நான் ஏற்றுக் கொள்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அவர் ஒன்றிரண்டு நிமிடங்களில் முடிக்க மாட்டார். அது எனக்குத் தெரிந்துதான் நான் சொல்கிறேன். அவர் எல்லாவற்றையும் இழுத்து, இணைத்து ஐந்து நிமிடங்கள் பேசுவார். இப்பொழுது அப்படியே திரு. சுப்பு அவர்களை ஒன்றிரண்டு நிமிடங்களில் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

1977 ஆகஸ்ட் 13]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டுமென்றுதான் பேச விரும்பினேனே தவிர வேறொன்றுமில்லை. நல்ல மரபுகளை உருவாக்க வேண்டு மென்றுதான் பேச விரும்பினேனே தவிர நேரத்தை வீணாக்க வேண்டுமென்று நான் நினைக்கவில்லை. நான் பேரவைத் தலைவரவர்களுக்கும், அவை முன்னவரவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நேற்று தவறுதலாகத் தள்ளப்பட்டு விட்டது. பிறகு முன்னவரவர்கள் சொன்னதைப் பேரவைத் தலைவரவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தள்ளுபடி செய்ததை இன்றைக்கு எடுத்துக்கொண்டமைக்காக நன்றி தெரிவிக்க வேண்டுமென்று நினைத்துத்தான் முதலில் பேச நினைத்தேன். இப்பொழுது இரண்டாவதாக நினைத்தது என்னவென்றால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் இதற்காகத்தான் பேராசிரியர் சொன்னபொழுதே சொன்னேன். தள்ளியது தவறு என்று உணர்ந்து கொண்டு வந்தார்கள் என்று இப்படிப்பட்ட பிரச்சனைகள் வரும் என்றுதான் நான் அவர்களைப் பேசவிடவில்லை. இந்நேரத்திற்கு அவர்கள் பிரச்னைக்கு வந்திருக்கவேண்டும். அவைத் தலைவரவர்கள் தள்ளியதே தவறு என்று உணர்ந்து இதையெல்லாம் கேட்பார்கள் என்று தெரிந்துதான், ''சுப்பு, நீங்கள் பேசவேண்டாம், கருத்து இதில் அடங்கிவிட்டது, நானே தீர்ப்பு தருகிறேன்'' என்று சொன்னேன்.

திரு. க. சுப்பு : நான் இந்தப் பத்திரிகை மீது உரிமைப் பிரச்னை கொண்டு வந்தது கொஞ்சம் விளக்கம் சொல்ல வேண்டும் என்பதற்காகத்தான். 'அண்ணா' பெயரைத் தாங்கியிருக்கும் பத்திரிகையின் மீது அடிக்கடி அதன் மீது உரிமைப் பிரச்னை கொண்டுவந்தால் அது தவறான கருத்தை ஏற்படுத்திவிடும் என்பதால்தான் முன்பு தாங்கள் அறையிலேயே சொல்லி அதை நிறுத்திவிட்டேன். முதலமைச்சரை ஆசிரியராகக் கொண்டுள்ள 'அண்ணா' பத்திரிகையின் மீது நாம் அடிக்கடி பிரச்னைகளைக் கிளப்ப வேண்டாம் என்று..........

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் இப்பொழுது ஆசிரியர் அல்ல. ஆனாலும் தலைவரவர்களுக்கு ஒரு வேண்டுகோள் விடுக்கின்றேன். இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பினால் நல்லது என்று கருதுகிறேன். மற்றவர்களுக்கு எச்சரிக்கையாக இருப்பதற்கும் (குறுக்கீடு) வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுப்பு அவர்களைத் தயவுசெய்து சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பொதுவாக நான் சொல்ல வந்ததே, அன்றைக்கே திரு. பண்ணை சேதுராம் அவர்கள் இதுபோன்ற ஒரு பிரச்னையைக் கொண்டு வந்தார்கள். அதை ரொம்பச் சாதாரணமாக நினைத்ததால் இப்படிப் போய்விட்டது. இந்தப் பிரச்னை என்னவென்றால், ''சிறைத் தண்டனை மட்டுமே

தரவேண்டும்'' என்று திரு. உமாநாத் பேசியதாகக் குறிப்பிட்டு திரு. சங்கரய்யா படத்தைப் போட்டிருக்கிறார்கள். அது பரவாயில்லை. ஆனால் இப்படி இதற்குப் பதிலாக வேறொரு கட்சிக்காரரின் படத்தைப் போட்டுவிட்டால் வெளியே போக முடியாது. இப்படிப்பட்ட அபாயகரம் இதில் இருக்கிறது.

பொதுவாக இந்தப் பத்திரிகையிலே செய்தி வரும்பொழுது உரிமைப் பிரச்னையை ஏன் கொண்டு வருகிறேன் என்றால், சமுதாயத்திற்கு பொதுவாக உள்ள ஒருவரின் பெயரில், எப்படி நாம் ''காந்திஜி கள்ளுக்கடை'' என்பது மாதிரி அனுமதிக்க மாட்டோமோ அதைப் போல '' அண்ணா '' என்ற பெயரில் பத்திரிகையில் வரும்பொழுது தவறாக நினைக்கக்கூடும். ஆகவே, இந்தப் பெயரையே பொதுச் சொத்தாக ஆக்கவேண்டும், தனிப்பட்ட கட்சிக்காரர்கள் இப்படி வைத்துக் கொள்வதால்தான் விவகாரமே வருகிறது..............

<u>மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :</u> தலைவரவர்களே, பிரச்னை எங்கோ செல்கிறது. பதில்களை நண்பர்கள் திரும்பப் பேச ஆரம்பித்துவிட்டால் மற்றப் பிரச்னைகள் நடைபெறாமல் போய்விடும். நீங்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஒரு உறுப்பினர் பேச்சைப் பிரசுரித்துவிட்டு, வேறு ஒரு உறுப்பினரின் படத்தைப் போடுவது உண்மையிலேயே ஒரு தவறான செயலாகும். ஏற்கனவே 'மாலைமுரசு' பத்திரிகைக்கு இவ்விதத் தவறான செயல்கள் நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கூறியபோது, எல்லாப் பத்திரிகைகளுக்கும் அந்த எச்சரிக்கை பொருந்துவதாக இருக்க வேண்டும் என்று பொதுவாகக் கூறினேன்.

'' அண்ணா '' நாளிதழ், சென்னை பதிப்பு மட்டுமே இந்தத் தவறான படத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. வெளி ஊர்களுக்கு அனுப்பப்படும் பதிப்புகளில் இத்தவறு திருத்தப்பட்டு அந்தப் படம் இல்லாமலே அவை வெளியிடப்பட்டுள்ளன. மேலும், 12—8—1977 தேதி ''அண்ணா'' இதழில் இதற்கான ஒரு திருத்தம் வெளியிடப்பட்டு, தவறுக்கு வருத்தமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்தப் பிரச்னை குறித்து மேல் நடவடிக்கை தேவை இல்லை என்று தீர்ப்பளிக்கிறேன்.

<u>(ஆ) ''அலை ஓசை''ப் பத்திரிகை, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கூறியதை திரித்து வெளியிட்டிருப்பது குறித்து :</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவையின் 184-வது விதியின்கீழ் கொடுத்துள்ளார்.

''10—8—1977 தேதியிட்ட 'அலை ஓசை' பத்திரிகையில் அன்று மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் எழுப்பிய ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது கொடுத்த அறிக்கையில் ஒரு பகுதியைக் கீழ்க்கண்டவாறு பிரசுரித்து உள்ளார்கள்.

'வாடகை பாக்கி உள்ளவர்களைக் காலி செய்யுமாறும் உத்திரவு இடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அதிகாரிகள் செயல்படுகிறார்கள். இவ்வாறு இராகவானந்தம் கூறினார்.

இதையே 11—8—1977 தேதியிட்ட ' இந்து ' ஆங்கிலப் பத்திரிகை கீழ்க்கண்டவாறு வெளியிட்டுள்ளது:

MR. S. RAGAVANANDAM, Labour Minister, denied in the Assembly to-day that coercive steps had been initiated to evict those in arrears of rent in Slum Board 'tenaments'

பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில் கீழ்க்கண்டவாறு உள்ளது :—

' Whenever such occupants are in arrears, including some in THIRU-Vi-Ka Kudiyiruppu, the Slum Clearance Board has been periodically issuing notices for collection of arrears but has not resorted to coercive steps for eviction of such persons since 30th June 1977.

பேரவையில் அமைச்சர் அவர்கள் but has not resorted to coericive steps for eviction of such persons since 30th June 1977 என்று தெளிவாகக் கூறியுள்ளார்.

ஆனால் 'அலை ஓசை' பத்திரிகை 'வாடகை பாக்கியுள்ளவர்களை காலி செய்யுமாறும் உத்திரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் அதிகாரிகள் செயல்படுகிறார்கள். இவ்வாறு ராகவானந்தம் கூறினார்' என்று வேண்டுமென்றே அவையின் நடவடிக்கைகளைத் திரித்துக் கூறி, பொதுமக்களிடத்தில் ஒரு தப்பான அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்பட்டதாகும். எனவே, இது அவையின் உரிமையை மீறிய செயல் ஆகும். எனவே, இப்பிரச்னையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன்.''

இதைப் பற்றிய விளக்கங்களை ஏதாவது தெரிவிக்க வேண்டுமானால், தெரிவிக்குமாறு திரு. எஸ். ஆர். இராதா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பத்திரிகையின் மீது நான் இதற்கு முன்னால் ஒரு உரிமை மீறல் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இந்தப் பத்திரிகை அடிக்கடி, திட்டமிட்டு அரசுக்கு இப்படிப்பட்ட ஒரு அவப் பெயரை உண்டாக்க வேண்டுமென்று திட்டமிட்டு காரியம் செய்கின்ற காரணத்தால், இப்படிப்பட்ட செய்திகளைத் தொடர்ந்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறது. செய்திகள் எவ்வளவு மோசமாக இருந்தாலும், அவையினுடைய நடவடிக்கைகள் என்று வருகின்ற நேரத்தில், குறிப்பிட்ட மூலக் கருத்தை வெளியிட வேண்டுமென்பது பத்திரிகைகளுக்கு இருக்கிற ஒரு முக்கியமான தர்மமாகும். ஆனால், இந்தப் பத்திரிகை மட்டும் வேண்டுமென்றே திட்டமிட்டு இந்த அமைச்சரவைக்கும், அமைச்சர்களுக்கும் களங்கம் உண்டாக்க வேண்டுமென்ற வகையில் இப்படிப்பட்ட செய்திகள் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் இந்த உரிமைப் பிரச்னையை நான் கொண்டு வந்திருக்கிறேன். எனவே, இந்த உரிமை மீறல் பிரச்னையை, அவை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பிரச்சினை குறித்து ''அலை ஓசை'' நாளிதழின் ஆசிரியருக்கு எழுதிக் கேட்கப்பட்டது. அவரிடமிருந்து வந்த பதிலைப் படிக்கிறேன்.

''தங்கள் 11—8—77 தேதியிட்ட கடிதம் கிடைக்கப் பெற்றேன். 10—8—77 தேதி 'அலை ஓசை'யில் நீங்கள் குறிப்பிட்டபடி செய்தி தவறாக வெளியிடப்பட்டுள்ளது.

தவறுக்கு வருந்துகிறேன். இன்றைய (12—8—77) 'அலை ஓசை' யில் முதல் பக்கத்தில் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது''.

கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது போல, 12—8—77 தேதியிட்ட ''அலைஓசை'' பத்திரிக்கையில் திருத்தமும், வருத்தமும் வெளியிடப்பட்டுள்ளது.

பத்திரிகையின் மீது, இவ்விதம் தவறாகச் செய்தி வெளியிடப்படுமானால் அவை உரிமை மீறல் பிரச்சனை எழுப்புவதும், அப்பத்திரிகை திருத்தமும், வருத்தமும் வெளியிட்டு விட்டால் மேல் நடவடிக்கை எடுக்காமல் விட்டுவிடுவதும் மரபாக இருந்து வருகிறது. சமீப காலமாக இவ்விதம் அடிக்கடி நிகழ்ந்து வருவது வருந்தத் தக்கதாகும். பத்திரிகைகள் சிறிது கவனத்துடன் நடந்துகொண்டால், இவ்விதத் தவறுகள் தவிர்க்கப்படலாம்.

அவை நிகழ்ச்சிகளை வெளியிடும்போது மிகுந்த கவனத்துடன் இருக்கவேண்டுமென்று ''அலை ஓசை'' பத்திரிகைக்கு எச்சரிக்கை செய்வதுடன், மற்ற பத்திரிகைகளுக்கும் மீண்டும் தெரிவித்துக் கொண்டு இப்பிரச்சினையை இத்துடன் முடிக்கிறேன்.

5. ஒத்தி வைப்புத் தீர்மானங்கள்.

(அ) விவசாயிகள் போராட்டம் குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, விவசாயிகள் போராட்டம் குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று திரு. கே. கந்தசாமி, திரு. சோ. அழகர்சாமி, திரு. மு. அம்பிகாபதி, திரு. எம். ஏ. லத்தீப் ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டிய அவசியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்க வேண்டுகிறேன்.

[முற்பகல் 10-00]

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்திலே இருக்கக்கூடிய விவசாயிகள், கோவையில் இருக்கக்கூடிய........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு வேண்டுகோள். தயவு செய்து இந்தப் பிரச்னையை சுருக்கமாக அரசுத் தரப்பிடம் இருந்து தகவல் தெரிந்து கொள்ளக் கூடிய அளவுக்கு பேசுங்கள். பிரச்னையைப் பெரியதாக ஆக்குகிற அளவுக்கு விவாதத்திலே போக வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: (மாநில அளவில் சங்கம் அமைத்து விவசாயிகளுடைய குறைகளை நீக்குவதற்கு, ஏறத்தாழ 9 கோரிக்கைகளை வைத்து, இந்தக் கோரிக்கையில் மின்சாரக் கட்டணம் குறைப்பதை பிரதானமாக வைத்து,) உடனடியாகக் குறைக்க வேண்டும், இல்லையேல் போராட்டம் நடத்துவோம் என்று அறிக்கைக் கொடுத்து, வாகனங்கள் நாட்டில் நடமாட முடியாமல் மறியல் செய்வோம் என்ற அறிக்கை விட்டதோடு மட்டுமல்லாமல், நேற்று அரசுத் தரப்பில் போராட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்ளுங்கள் பேச்சு வார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ளலாம் என்று அறிக்கை விட்டும் கூட, அறிக்கையை ஏற்றுக் கொள்ளாமல், போராட்டம் நடத்துவதிலே ஈடுபட்டு, கோவை, சேலம் இன்னும் இப்படிப்பட்ட நகரங்களில் இருந்த விவசாயிகள், செல்லக்கூடிய வாகனங்களை விரைவு ஊர்திகளை எல்லாம் தடுத்து நிறுத்தியிருக்கிறார்கள்.

(பாறாங்கற்களை, ரோடுகளில் வைத்து மறித்திருக்கிறார்கள். மாட்டு வண்டிகளை நடுரோட்டிலே அவிழ்த்து போட்டு பஸ், மனிதர்களை நடமாட கூடாது என்று தடுத்து இருக்கிறார்கள்). அதிர்ஷ்டவசமாக எந்த உயிருக்கும் சேதம் இல்லை என்பது மகிழ்ச்சிக்குரியது என்றாலும் கூட, இந்த அவையை ஒத்தி வைத்து மாண்புமிகு உறுப்பினர்களுடைய மேலான கருத்துக்களை அமைச்சரவை கேட்டு உடனடியாக இதற்குத் தீர்வு காண்பது மூலம்தான் இப்பிரச்னையை வளர விடாமல் தடுப்பதற்கு உகந்ததாகவும

விவசாயிகள் நாடு தழுவிய அளவிலே போராட்டம் நடத்துகிற காரணத்தினால் அதை முளையிலே கிள்ளி எறிவது சிறந்தது என்ற கருத்தை ஏற்று, மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் இந்தச் சபையின் மற்ற அலுவல்களை ஒத்திவைத்து இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டுமென்று கூறி அமர்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: நேற்று நடந்த அந்த அர்த்தாலில் சில நகரங்களுக்கு வெளியிலே இருந்து வரக்கூடிய காய்கறிகள் மற்றும் பால் போன்ற பொருள்கள் எல்லாம் வராமல் நகரத்து மக்களுக்கு மிகப் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. அது மட்டுமல்ல இந்தப் போராட்டம் கடந்த அரசாங்கம் இருந்த போது அவர்களுடைய கோரிக்கைகளை வைத்துப் போராட்டம் நடத்த அந்தப் போராட்டத்திலே இருந்த தலைவர்களை எல்லாம் அப்போதிருந்த அரசு முதலிலே பேச தயக்கம் காட்டிய காரணத்தாலே வேண்டாத துப்பாக்கிப் பிரயோகம் வரைக்கும் போய் மிகப் பெரிய அளவிலே இழப்பு ஏற்பட்டு, 20 விவசாயிகள் உயிரிழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. ஆரம்பத்திலேயே இந்தப் போராட்டம் துவங்கும் முன் அவர்களுடைய கோரிக்கை சம்பந்தமாக—இந்த அரசு—நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் இந்த விவசாயச் சங்கங்களைச் சார்ந்த தலைவர்களை அழைத்து கோரிக்கை சம்பந்தமாக விரைவாகப் பேசி திருப்தி அளிக்கக் கூடிய முறையில் தீர்வு கண்டிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காது.

நேற்று நடந்த அர்த்தால் பற்றி பத்திரிகைகள் கூட, இது மாதிரி நடக்கப் போகிறது என்று எந்த செய்தியையும் சொல்லாமலேயே வேண்டுமென்றே, பத்திரிகைகள் மறைத்திருக்கின்றன. ஆனால் நேற்றுத் தான் தெரிந்தது, பல ஊர்களிலும் பேருந்துகள் எல்லாம் இல்லை, 200, 300 லாரிகள் செல்லவில்லை என்று ஒவ்வொன்றாக பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆகவே, பிரதானமாக விவசாயிகள் கடந்த காலத்திலே போராடியதன் காரணமாக மின்சாரக் கட்டணத்தை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லா உறுப்பினர்களும் பேசவேண்டுமென்று வேண்டுகோள் விடுகிறீர்கள். அதே நேரத்தில் ஒத்திவைத்தது போல் கருதிக்கொண்டு பேசுகிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி: இது முக்கியமான பிரச்சனை. விவசாயிகள் தாங்கமுடியாத பெரிய நெருக்கடி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. கஷ்டங்கள் காரணமாக வாங்கிய கடன்களைச் செலுத்த முடியாத நேரத்தில் ஜப்தி போன்ற தொந்தரவுகள் ஏற்படுகிற காரணத்தினாலே மின்சாரக் கட்டணம் அதிகமாக உயர்ந்து இருக்கிற காரணத்தாலே இப்போது அளிக்கப்பட்டிருக்கிறது, எந்த அளவுக்குப் பிரயோசனம் இல்லாத காரணத்

தாலே, அவர்களைக் கூப்பிட்டுப் பேசி பூரணமாக இந்தப் பிரச்னையைப் பற்றி விவாதிக்க வேண்டும். இந்தப் பிரச்னை சம்பந்தமாக தீர்வு காணமுடியும். நேற்று நடந்த கிளர்ச்சி தொடர்ந்து நடந்து கொண்டு போனால் எல்லா மக்களும் வாழ்க்கை எல்லாம் தொடர்ந்து கஷ்டங்கள் ஏற்படுகிற நிலையில், மிக மிக அவசியமாக இருக்கிற இந்தப் பிரச்னையில் சம்பந்தப்பட்ட காரணத்தை ஆராய்ந்து சரியான தீர்வு கண்டால் அவர்கள் கஷ்டம் தீரும் என்பதுதான் மக்கள் பிரச்னையைப் போக்கும் என்று கருதி, இதை விவாதிப்பதற்காக இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, விவசாயிகளுடைய பிரச்னை. ஆகையினால் இது மிகவும் பொது முக்கியத்துவம் வாய்ந்த அவசரமான பிரச்னை என்பதிலே ஐயம் இல்லை. மின் கட்டணம் மிக அதிமாக இருக்கிறது. அதைத் தளர்த்த வேண்டும், குறைக்கவேண்டுமென்பதற்காகவும், மற்ற குறைகளை வைத்தும் போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். இன்றைக்கு மாநிலம் முழுவதும் ஒரு பெருத்த போராட்டம்—போக்குவரத்துக்குக் கூட இடைஞ்சல் ஏற்படுகிற வகையில்—நடக்கிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில், கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், அம்பத்தூர், பள்ளிகொண்டா, வேலூர் வரையிலே கூட, நூற்றுக் கணக்கான லாரிகளும் பஸ்களும், இதர வண்டிகளும் கூட நிறுத்தப்பட்டு விட்டன. சென்னைக்கு வருகிற பால், காய்கறி கூடச் சேதம் அடையக் கூடிய வகையில் அங்கே நிறுத்தப்பட்டிருக்கிறது.

எங்களுக்கும் கூட உறுப்பினர்கள் விடுதியிலே பால் தரப்படவில்லை. ஆகவே அந்த அளவிற்குச் சென்னையிலே பால் தட்டுப்பாடு, காய்கறி தட்டுப் பாடு ஏற்பட்டு விலைகள் ஏறிவிட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையை நாம் விரிவாக விவாதித்தால்தான் இந்தப்பிரச்னைக்கு ஒரு தீர்வு கிடைக்கும் என்ற காரணத்தினால் இந்தச் சபையின் இதர அலுவல்களை, நடவடிக்கைகளை ஒதுக்கி வைக்க வேண்டுமென்று இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன் மொழிந்து அமருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே! மின் கட்டணத்தைக் குறைக்கவேண்டும் என்பது மட்டுமல்ல சில குறைகளை நிவர்த்திக்கக் கோரி 10—8—77-ல் தமிழகம் எங்கும் உள்ள விவசாயிகள் லாரிகளில் சென்னைக்கு வந்து ஊர்வலம் நடத்துவது என்று திட்டமிட்டு இருந்தனர். ஆனால் லாரிகளில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அரசு அனுமதி அளிக்கவில்லை. இதன் காரணமாக லாரிகளில் ஆட்களை ஏற்றிச் செல்வதற்கு விதித்துள்ள தடையை நீக்க வேண்டுமென்று கோரிக்கையை முதலாவதாக வைத்து 12—8—1977-ம் நாள் மாநில

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 13

மெங்கும் மறியல் போராட்டத்தில் ஈடுபடுவது என கடந்த புதன் கிழமையன்று சேலத்தில் நடந்த விவசாயிகள் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது. சேலம், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில், குறிப்பாக (திருச்செங்கோடு, பெரியநாயக்கன்பாளையம், காரமடை, கரூர், தொட்டியம், வேடசந்தூர், கள்ளக்குறிச்சி ஆகிய விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள்) லாரிகள், பஸ்கள் ஆகியவற்றை நிறுத்துதல், சாலைகளின் குறுக்கே மரங்களைப் போட்டு தடைகள் அல்லது போக்குவரத்திற்கு இடையூறு செய்தல், பஸ், கார்களை விடாது மறித்தல், சில இடங்களில் லாரிகளின் சக்கரங்களில் உள்ள காற்றைப் பிடுங்கி விடுதல் ஆகிய செயல்களில் ஈடுபட்டனர். யாரும் கைது செய்யப்படவில்லை.

மதுரை, திருமங்கலம் ஆகிய இடங்களில் 20 பேர்கள் மட்டும் மறியல் செய்த இடத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு மாலையில் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். அமைதிக்குப் பங்கம் நேரா வண்ணம் தக்க நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் போராட்டம் நடந்தாலும் நிலைமைகள் கட்டுக்கடங்கி உள்ளன. அமைதிக்குக் குந்தகம் நேரா வண்ணம், எந்தச் சொத்திற்கும் சேதம் ஏற்படாவண்ணம் இருப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக் கொண்டிருக்கிறது. லாரிகளில் பயணிகள் எடுத்துச் செல்லப்படுவதால் விபத்துக்கள் அடிக்கடி நிகழ்கின்றன. இத்தகைய விபத்துக்களில் உயிர் சேதங்கள் ஏற்படுகின்றன. இவ்வாறு லாரிகளில் பயணம் செய்வதால் ஏற்படும் உயிர் சேதங்களைத் தவிர்க்கும் பொருட்டு அரசு லாரிகளில் பயணிகளை ஏற்றிச் செல்வதைத் தடுத்து உத்திரவு பிறப்பித்துள்ளது. இது பொதுவான ஏற்பாடாகும்.

எனவே மேற்கண்ட பொருள் குறித்து விவாதிக்கப் பேரவையின் அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

அதைத் தொடர்ந்து ஒரு சில வார்த்தைகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை வைத்து, அந்தக் கோரிக்கைகளில் அவர்கள் வெற்றி காண வேண்டும் என்பதற்காகவே இப்படி போராட்டம் நடத்துவது என்று முடிவு எடுத்ததாகப் பத்திரிகையில் செய்தி பார்த்தேன். ஏற்கெனவே உங்களுக்குத் தெரியும், பட்ஜெட்டை, நிதிநிலை அறிக்கையை சமர்ப்பிக்கும்போது, அந்த அறிக்கையில் ஏழை விவசாயிகளுக்கு ''டாரிப்''பில் 16 நயா பைசாவிலிருந்து 14 பைசாவாகக் குறைக்கப்பட்டதை நிச்சயம் அறிவார்கள். விவசாயிகள் பிரச்னையில், மின்சாரம் வழங்குவதில் இந்த அரசு எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்பவில்லை.

1977 ஆகஸ்ட் 13] [திரு. கி. மனோகரன்]

ஆனாலும் விவசாய சங்கத்தைச் சேர்ந்தவர்கள் இப்படி ஒரு போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிறார்கள். அதன் தலைவர்களுக்கு நான் பணிவன்போடு இந்த அவையின் மூலம் தெரிவிக்க விரும்புகிறேன். முதலமைச்சரைப் பேட்டி கண்டோ, அல்லது சர்வ கட்சிக் கூட்டத்தைக் கூட்டியோ, இந்தப் பிரச்னைக்குப் பரிகாரம் காணவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அவர்கள் இப்படிப்பட்ட முயற்சிகளில் ஈடுபடுவதை விட்டு விட்டு, பிரச்னைகளை விட்டு விட்டு, லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு வரக்கூடாது என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10-10]

நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புவது, லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு வரக்கூடாதென்று அனுமதி மறுத்ததற்குக் காரணம் உளுந்தூர்பேட்டை நிகழ்ச்சியை இந்த அவை நன்கறியும். கிட்டத்தட்ட 10 பேர்கள் அந்த இடத்தில் மாண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, முதல்வர் அவர்கள் நேற்றைக்கு ஆஸ்பத்திரிக்கு சென்று பாதிக்கப்பட்டவர்களில் ஒருவரைப் பார்த்தபோது அவருக்கு வயது 26. இரண்டு கால்களும் எடுக்கப்பட்டிருக்கின்றன. அந்தக் குடும்பம் கண்ணீரும் கம்பலையுமாக தெரு வீதியில் நின்று கொண்டிருக்கிறது.

இந்தக் காரணத்திற்காகத்தான் லாரிகளில் ஆட்களை ஏற்றிக்கொண்டு வரக்கூடாதென்று அரசு முடிவு எடுத்ததே தவிர விவசாயிகள் ஏராளமான ஆட்களை ஏற்றிக்கொண்டு இங்கே சென்னைக்கு வந்து ஒரு பெரிய போராட்டத்திலே அவர்கள் ஈடுபட்டு அதன் மூலம் அரசையே ஸ்தம்பிக்க வைத்து விடுவார்கள் என்று நம்பி இந்தக் காரியத்தில் ஈடுபடவில்லை என்பதை முதலில் நான் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் போராட்டத்திலே ஈடுபட்டிருப்பதன் மூலம் என்ன நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை இந்த அவை உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பல இடங்களில் பாருங்கற்களை வைத்திருக்கிறார்கள். பஸ்கள் ஓடவில்லை. பொதுமக்களுக்கு எந்த அளவுக்கு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன, யாருக்காக அவர்கள் வாதாடுகிறார்களோ போராடுகிறார்களோ, அவர்களுக்கு எந்த அளவிற்கு சிரமங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் இந்த விவசாயிகள் சங்கத்தை நடத்திச் செல்கிற பொறுப்புணர்ச்சியுள்ள தலைவர்கள் உணர்ந்து பார்த்து இதை நீடித்துக் கொண்டிராமல் உடனடியாக இதற்கு பரிகாரம் காண்பதற்கு ஏற்ற வழிமுறைகளை தேடுவதற்கு அவர்கள் தங்களது சிந்தனையை செலுத்தவேண்டுமென்று நான் மெத்த பணிவன்புடன் இங்கே கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. லாரிகள் தான் தேவை என்று எப்படி விவசாயிகள் வாதாடுகிருர்கள் என்றே எனக்குப் புரியவில்லை. பஸ்களில் வரலாம் என்று இருக்கிறது. அவர்கள் பஸ் ஸிலே சென்னைக்கு வரலாம். ஆனுல் அவர்கள் சொல்லிக் கொண்டிருப்பது எங்களுக்கு லாரிகள் தேவை, லாரிகளில் வரவேண்டும் என்பதற்காக ஒரு போராட்டம் தேவைதானு என்று பெருமதிப்புக்குரிய அழகர்சாமி போன்ற பொறுப்புள்ள உறுப்பினர்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று பணிவன் புடன் கேட்டுக்கொள்வதோடு, விவசாயிகள் விஷயத்தில் இந்த அரசு மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ளும் என்பதையும் எடுத்துக் கொள்ளுகிற அக்கறை எந்த அளவுக்கு அமையப் போகிறது என்பது காலப்போக்கில் நீங்கள் தெரிந்து கொள்வீர் கள் என்பதையும் எந்தக் காரணத்தைக் கொண்டும் அரசை, சர்க்காரை, நீங்கள் சந்தேகிக்க வேண்டாம் என்றும் விவசாயி கள் பிரச்சனை நம்முடைய சொந்த பிரச்னை, அவர்கள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று உணர்ந்திருக்கிற அரசின் சார் பாக நான் உறுதி அளித்து மதிப்புக்குரிய அழகர்சாமி போன் றவர்கள் விவசாய சங்கத் தலைவர்களுக்கு யோசனை சொல்லி இந்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு பணிவன்புடன் கேட் டுக் கொள்ளுகிறேன்.

[திரு. சோ. அழகர்சாமி எழுந்திருந்தார்.]

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> நீங்கள் விளக்கம் கேட்பது கவன ஈர்ப்பு தீர்மானத்தில்தான் உண்டு. ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு அமைச்சர் விளக்கம் கொடுத்த பிறகு ஒன்றும் வேண்டாம். அந்த மரபைக் கெடுக்கக்கூடாது.

அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவையில்லையென்ற காரணத் தினுல் இதற்கு இசைவு தர மறுக்கப்படுகிறது.

<u>(ஆ) சென்னை மத்திய சிறைக் கைதிகள், நீதிபதி திரு. இஸ் மாயிலிடம் சில விவரங்களைச் சொன்னுர்கள் என்பதற்காக கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதும், அவர்களில் சிலர் உண்ணு நோன்பு இருப்பதன் நிலை குறித்தும்.</u>

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ''நீதிபதி திரு. இஸ்மாயில் முன்பாகச் சென்னை மத்திய சிறைக் கைதிகள் சில விவரங்களை எடுத்துக் சொன்னதன் விளைவாக அவர்கள் பல்வேறு கொடுமை களுக்கு ஆளாக்கப்பட்டதும், அதனுல் 29 பேர் உண்ணு நோன்பு இருப்பதும், அதனுல் ஏற்பட்டுள்ள நிலை குறித்தும்'' விவாதிக்க அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டு மென்று மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா, திரு. சுப்பு மற்றும் திரு. மு. அம்பிகாபதி, தீர் மானங்கள் கொடுத்திருக்கிருர்கள். இது எப்படி அவையை

ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியமானது என்பதைக் குறித்து சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :</u> தலைவர் அவர்களே, மிக முக்கியமான சென்னை மத்திய சிறையைப் பொறுத்தவரை யில் அன்றாட நிகழ்ச்சியாக மாறி வருகிற வேதனை தருகிற ஒரு நிகழ்ச்சிபற்றி இந்த மன்றத்தில் வைத்து விவாதித்து பொறுப்போடு நடந்து கொள்ளவேண்டிய அதிகாரிகள் பொறுப் பற்ற முறையில் நடந்துகொள்கிருர்கள் என்பதை எடுத்துக்காட் டும் வகையில் அதுபற்றி விவாதிக்க இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கோருகிறேன். சென்னை மத்திய சிறையைப் பொறுத்தவரையில் ஏற்கனவே இது ஒரு சரித்திரப் புகழ்பெற்ற ஒரு சிறையாக மாறிவிட்டது. நாட் டிலே உள்ள ஒரு torture cell ஆக சித்திரவதைக் கூடமாக இன்று மத்திய சிறை ஆகிவிட்டது.

சென்னை மத்திய சிறையில், நம் மாநிலத்தில் அவசரகால நிலை இருந்தபோது நடைபெற்ற அக்கிரமங்கள்பற்றி விசாரிப்பதற்கு நீதிபதி இஸ்மாயில் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. நீதிபதி இஸ்மாயில் அவர்கள் நிலைமையை நேரில் அறிந்து கொள்வதற் காக சென்னை மத்திய சிறைக்கு நேரில் சென்று பார்வையிட் டார்கள். அப்படி பார்வையிட்ட காலத்தில் சில கைதி கள் சிட்டிபாபு கொலை பற்றிய விஷயங்களையும், அங்கு நடந்த கொடுமைகள் பற்றியும் நீதிபதி இஸ் மாயில் அவர்களிடம் குரல் எழுப்பியிருக்கிருர்கள். நீதிபதி அவர்கள் திரும்பிய பிறகு அங்குள்ள அதிகாரிகள் அப்படி குரல் எழுப்பிய கைதிகளைத் தண்டிக்கிற வகையில் அவர்களைத் தனிமைச் சிறையில் போட்டும், தடியால் அடித்தும் இன்னும் பல கொடுமைகளுக்கும் ஆளாக்கி இருக்கிருர்கள்.

இந்த விவரங்கள் எல்லாம் எனக்கு எப்படித் தெரியும் என் ருல் நான் ஒரு பொதுக்கூட்டத்திற்குப் போனபோது திரு. தாமோதரன் என்பவர் தன் சகோதரர் எட்டியப்பன் என்ற Life convict ஐப் பார்க்க சென்றபோது அவர்களைப் பார்க்க அனுமதி தரவில்லை என்று சொல்லி இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னுர்கள். நான் சட்ட அமைச் சர் அவர்களிடம் அந்தக் கடிதத்தைக் கொடுத்தேன். கடிதம் கொடுத்த பிறகுதான் பல விவரங்கள் தெரிய வந்தன.

அந்தச் சிறையில் இருக்கிற ஏ. எம். கோதண்டராமன் என்ற நக்ஸலைட் பர்ஸ்ட் அஸிஸ்டெண்ட் செஷன்ஸ் கோர்ட்டுக்கு கொண்டு போகப்பட்டார். கோதண்டராமன் அவர்கள் நீதி மன்றத்தில் புகார் செய்திருக்கிருர்கள். இப்படி இப்படி எல்லாம் நடைபெற்றிருக்கின்றன.

அங்கே ஒரு பதட்ட நிலை உருவாகியது. நிலைமை கட்டுக்கடங்காமல் செல்வதை கண்ணுற்ற பிளாக் 3-ன் வார்டர் அபாய மணியை ஒலிக்கச் செய்தார்.

இந்த நிகழ்ச்சி மத்தியசிறை கண்காணிப்பாளருக்கு ஏறக்குறைய 7-20 மணிக்கு தெரிவிக்கப்பட்டது. இதைக் கேட்டு அவர் 7-30 மணிக்கு சிறைக்கு வந்தார். பிளாக்குகளின் நிலைமை பதட்டமாகவே இருந்ததால், எட்டு பிளாக்குகளிலும் உள்ள கைதிகளில் தொந்தரவு தரக்கூடியவர்கள் என்று சந்தேகிக்கப்பட்ட 79 கைதிகளைத் தனியாகப் பிரித்து அவர்களை விசாரணைக்காக இரண்டாவது சோதனைக் கூடத்தில் இருத்தி வைத்தார். அவர்களுள் 23 கைதிகளை அவர்களுடைய பிளாக்குகளுக்கு உடனடியாக அனுப்பி வைத்து எஞ்சியிருந்த 56 கைதிகளை அங்கேயே வைத்திருந்தார். அவர்களுள் 18 கைதிகள் தங்கள் பிளாக்குகளுக்கு திருப்பி அனுப்ப வேண்டி கோரி 8-8-1977-லிருந்து உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். 9-8-1977 அன்று மேலும் 26 கைதிகள் அவர்களுடைய பிளாக்குகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டனர். நக்ஸலைட் கைதி ஏ. எம். கோதண்டராமனும் 9-8-1977 காலையிலிருந்து உண்ணாவிரதத்தில் கலந்து கொண்டார்.

அன்று மாலை மேலும் 11 கைதிகள் தங்களை தங்களுடைய பிளாக்குகளுக்கு அனுப்ப வேண்டும் என்று கோரி உணவு உண்ண மறுத்தனர். சந்தியபால் என்ற நக்ஸலைட்டும் 10-8-1977 மாலையிலிருந்து உணவு உண்ண மறுத்தார். ஆனால் 11-8-1977 அன்று 16 கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிட்டு உணவு உண்டனர். எனவே, கோதண்டராமனையும் சேர்த்து 14 கைதிகளே உண்ணாவிரதம் இருந்தனர். 12-8-1977 பிற்பகலிலிருந்து கோதண்டராமனை தவிர்த்து மற்ற கைதிகள் உண்ணாவிரதத்தை முடித்து உணவு உண்டனர் என்று தெரியவருகிறது.

மேற்கூறிய நிகழ்ச்சியில் ஈடுபட்ட கைதிகளை இரண்டாவது சோதனைக் கூடத்தில் தான் வைத்திருந்ததே தவிர அவர்களை தனிமைச் சிறையில் வைத்தோ அல்லது துன்புறுத்தியோ அவர்களுக்கு எந்தவித அநீதியும் இழைக்கப்படவில்லை. அவர்கள் தனி அறைகளில் தான் வைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் தங்களுக்குள் பேச்சுத் தொடர்பு கொள்ளவும் வசதி இருந்தது.

மேற்கூறிய நிகழ்ச்சி 11-7-1977 அன்று நடைபெற்ற நிகழ்ச்சிக்கும் 3-8-1977 அன்று நீதிபதி இஸ்மாயில் பார்வையிட வந்த போது நிகழ்ந்த நிகழ்ச்சிக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது என்று வெளிப்படையாக தெரிகிறது. சிறையில்

உள்ள கைதிகளுக்கு இடையே ஒழுங்கை நிலை நாட்டுவதற்காக சிறை கண்காணிப்பாளர் எடுத்துக் கொண்ட பரிகார நடவடிக்கை நியாயமானதேயாகும்.

Therefore there is no need to adjourn the business of the House to discuss the matter.

*திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் முதல் அமைச்சர் அவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன், இது சம்பந்தமாக. ஏற்கனவே அவசர காலச் சட்டம் இருந்தபோது, சிறையிலே நடைபெற்ற கொடுமைகளை வெளியிலே எடுத்துச் சொல்லப்பட்ட நேரத்திலே, அப்போது அரசு அந்த சிறை அதிகாரிகள் அளித்த அறிக்கையை ஒரு சமாதான அறிக்கையாகக் கொடுத்தார்கள். அதன் பிறகு உள்துறை அதிகாரி சிறைக்கு நேரிலே சென்று விசாரித்தபோது, அங்கேயிருந்த மிஸா கைதிகளின் பிரதிநிதிகள் என்ன நடைபெற்றது என்று சொன்னவுடன், அந்த உண்மைகளையெல்லாம் தெரிந்த பிறகு தான், இப்போது இஸ்மாயில் கமிஷன் போடப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று கொண்டிருக்கிறது. அதைப்போல், இப்போது சிறை அதிகாரிகள் தந்த அறிக்கையை சட்ட அமைச்சர் அவர்கள் இங்கே படித்துக் காட்டியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் யாரையாவது ஒரு அமைச்சரை சிறைச்சாலைக்கு அனுப்பினால் .... (சிரிப்பு) சிறைச்சாலைக்குப் பார்வையாளராக, அங்கிருந்து திரும்பி வந்து விடுவார், பார்வையாளராக விசாரிப்பதற்குத்தான்....

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இந்தப் பிரச்னைக்கு பரிகாரம் காண்பதற்கு அரசு எதிர்க் கட்சித் தலைவர் அவர்களையே சிறைச்சாலைக்கு அனுப்பத் தயாராக இருக்கிறது.

திரு. மு. கருணாநிதி: அவை முன்னவரைவிட அதிக நாட்கள் நான் சிறையிலே இருந்தவன் என்கின்ற முறையிலே, அதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இருக்கிறேன். முதல் அமைச்சர் அவர்கள் அங்கு விசாரிப்பதற்கு ஒரு அமைச்சரையோ, ஒரு பெரிய அதிகாரியையோ அனுப்பி, அதைப்பற்றி விசாரிப்பது நலமாக இருக்கும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசைப் பொறுத்தவரையில் காரணமின்றி யாரையும் சிறைக்கு அனுப்ப விரும்பவில்லை என்றும், அரசாங்கம் அதற்கு குறுக்கே தடையாக நிற்கும்

என்பதையும் நான் சொல்லிக்கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் விரும்புகிறபடி, நமது சட்ட அமைச்சர் நீதிபதிதான், விவரம் தெரியாதவர் அல்ல —அவருடைய பதிலுக்குப் பிறகு இந்தக் கேள்வி எழுப்பப் பட்டிருப்பதால், வேறு ஒருவரை ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரை அனுப்ப நாங்கள் முயற்சிப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால் இதற்கு இசைவுதர மறுக்கப்படுகிறது.

(6) கவன ஈர்ப்பு.

பாபநாசம் அணைக்கட்டில் இருந்து கால்வாய்களில் தண்ணீர் விடாததால் சுமார் இருபதாயிரம் ஏக்கராவுக்கு மேல் பயிர்கள் வாடிக்கொண்டிருப்பது குறித்து.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, ''அம்பாசமுத்திரம் பகுதியிலுள்ள பாபநாசம் அணைக்கட்டில் தண்ணீர் இருந்தும், வடக்கு, தெற்கு கோடைமேல் அலகியான் கால்வாயிலும் நதியுண்ணி கன்னடியன் கால்வாய்களிலும் பல நாட்களாக பாசனத்திற்கு தண்ணீர் விடாததால் சுமார் 20,000 ஏக்கருக்கு மேல் பயிர்கள் வாடிக் கொண்டிருப்பதைப் பற்றிய''

அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, ''அம்பா சமுத்திரம் பகுதியிலுள்ள பாபநாசம் அணைக் கட்டில் தண்ணீர் இருந்தும் வடக்கு, தெற்கு கோடை மேல் அலகியான் கால்வாயிலும், நதியுண்ணி கன்னடியன் கால்வாய்களிலும் பல நாட்களாக பாசனத்திற்கு தண்ணீர் விடாததால் சுமார் 20,000 ஏக்கருக்கு மேல் பயிர்கள் வாடிக் கொண்டிருப்பதைப் பற்றிய''

அவசரப் பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கார் சாகுபடிக்காக, வடக்கு, தெற்கு கோடைமேல் அலகியான் கால்வாயிலும், நதியுண்ணிக் கால்வாயிலும் ஜூன் மாதம முதல் தேதியிலிருந்து தண்ணீர் விடுவது வழக்கம். பாபநாசம் அணைக்கட்டிலும் மணிமுத்தாறு அணைக்கடடிலும் நீர் மடடம் போதிய அளவு இருந்ததால் ஜூன் மாதம் முதல் தேதியில் மேற்கண்ட கால்வாய்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால் பருவகால தொடக்கத்திலிருந்து அணைக்கட்டுக்கு வரவேண்டிய தண்ணீர்

அளவு குறைந்திருந்தது. குறைந்த இருப்பையே வைத்து பாசனத்திற்கு வேண்டிய தண்ணீர் மேற்கண்ட மூன்று கால்வாய்களில் 6—7—1977 வரை தொடர்ந்து விடப்பட்டது. பிறகு அணைக்கட்டுகளில் உள்ள நீர் மட்டம் மிகவும் குறைந்தளவில் இருந்ததாலும், கீழ்பகுதியில் இருக்கும் கால்வாய்களின் பாசனத்தில் இருந்த கார் பயிர்களின் முதிய நிலையை முன்னிட்டும் கால்வாய்களுக்கு இடையே முறை வைத்து தண்ணீர்விட தீர்மானிக்கப்பட்டது. இம்முறையினால் மூன்று கால்வாய்களும் 7—7—1977 முதல் 9—7—1977 வரையிலும் 14—7—1977 முதல் 19—7—1977 வரையிலும் அடைக்கப்பட்டன.

பாபநாசத்தின் நீர்த் தேக்கத்தின் கொள்ளளவு 148 அடி. 18—7—1977ஆம் தேதியில் தண்ணீர் 33 அடி அளவாக இருந்தது. முழு கொள்ளளவு 5,500 மில்லியன் கன அடி. தண்ணீருக்குப் பதிலாக உபயோகிக்கக்கூடியதாக 100 மெட்ரிக் கன அடி தண்ணீர்தான் இருந்தது. நீர் பிடிப்புப் பகுதியில் மழை பெய்ததால் நீர்த்தேக்க அளவில் ஏற்றம் அடைந்ததை முன்னிட்டு 20—7—1977 முதல் 1—8—1977 வரை முழுஅளவு தண்ணீர் திறந்து விடப்பட்டது. மீண்டும் நீர் மட்டம் மிகவும் மோசமான நிலை அடைந்தவுடன் 1—8—1977 முதல், முறை வைத்து தண்ணீர் விடப்பட்டது. மேற்கண்ட 'முறையின்படி.' மூன்று கால்வாய்கள் மூன்று நாளைக்குத் திறக்கப்படும், மீண்டும் மூன்று நாளைக்கு அடைக்கப்படும். எல்லா கால்வாய்களுக்கும் தண்ணீர் விடுவதை சமாளிக்க, இப்போதுள்ள இக்கட்டான நிலையில், இந்த 'முறை' தவிர்க்க முடியாதது. பருவ மழை வலுத்து அதிக தண்ணீர் அணைக்கு வரும் வரை இந்த முறை தொடர்ந்து இருக்க வேண்டிய நிலைமை உள்ளது. மணிமுத்தார் நீர்தேக்கத்தில் இருந்து தாமிரபரணி பாசனத்திற்கு உபரித் தண்ணீர் விடப்பட்டது. தற்பொழுது மணிமுத்தார் நீர்த்தேக்கத்திலும் நீர் மட்டம் மிகமிக குறைந்து காணப்படுவதால் உபரித் தண்ணீர் உடனடியாக திறந்து விட முடியாத நிலையில் உள்ளது. மேற்கண்ட மூன்று கால்வாய்கள்

பாசனத்தில் உள்ள பயிர்கள் இதுவரை வாடவில்லை. 9—8—77 நாளன்று பாபநாசம் நீர்த்தேக்கத்தில் 34.60 அடி அல்லது 306 மில்லியன் கன அடி அளவு தண்ணீர் உள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : தலைவர் அவர்களே, பாபநாசம் அணைக்கட்டுப் பகுதியில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. மின்சார உற்பத்திக்குத் தினசரி மோட்டார் ஓட்ட தண்ணீர் திறந்துவிடப்படுகிறது, 400 கியூசெக்ஸ் தண்ணீர் விடப்படுகிறது. இந்த மூன்று கால்வாய்களிலும் தண்ணீர் செல்ல 185 கியூசெக்ஸ் போதுமானது. ஆகவே, தொடர்ந்து தண்ணீர் கொடுக்க மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தண்ணீர் அங்கே குறைவாக இருப்பதாகத்தான் தகவல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசனை பரிசீலிக்கப்படும்.

(7) தகவல் கோரல்.

கவன ஈர்ப்பு அறிவிப்புகள் குறித்து.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தஞ்சை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் சரியாகத் தண்ணீர் வரவில்லை என்பது பற்றி ரூல் 41 நோட்டீஸ் கொடுத்து பல நாட்கள் ஆகியும் இதுவரை எடுத்துக்கொள்ளப்படவில்லை. அந்தப் பிரச்சினை எப்போது எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை கடைமடைப் பகுதிகளுக்கு சில இடங்களில் தண்ணீர் வரவில்லை என்ற குற்றச்சாட்டு கூறி நிறைய தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் ஒரேயடியாக எடுத்துக்கொள்ள அரசு தயாராக இருக்கிறது.

திரு. செ. இராமலிங்கம் : 4 ஆம் தேதியன்று விதி 41-ன் கீழ் காவிரி தண்ணீர் சம்பந்தமாக நோட்டீஸ் கொடுத்திருக்கிறோம்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். இந்தப் பிரச்சினையைப் பற்றி மொத்தமாக எடுத்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் தயாராக இருப்பதாகக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்த தீர்மானங்களை ஒட்டுமொத்தமாக செவ்வாய்க்கிழமையன்று எடுத்துக்கொள்ளலாம் என்று எதிர்கட்சியைச் சேர்ந்தவர்களும் தெரிவிக்கிறார்கள். ஆகவே செவ்வாய்க்கிழமையன்று எடுத்துக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள சாரத்தில் நூற்பாலை இருக்கிறது, அங்கே தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள், அதைப் பற்றி நான் 41-வது விதியிலே ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அனுமதிக்கப்பட்டதா இல்லையா என்பதை என்னுடைய அறையிலே வந்து கேட்க வேண்டும், உட்காருங்கள்.

(8) 1977-78ஆம் ஆண்டுக்கான மானியக்கோரிக்கைகள் மீது விவாதமும்-வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி).

(அ) மானியக் கோரிக்கை எண் 18—மருத்துவம்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

> ''நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 44,69,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மருத்துவ மனையில் இட நெருக்கடியை தவிர்ப்பதுபற்றி விவாதிக்க,

> ''நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 44,69,94,000,இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத்தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை தாலூகா அரசு மருத்துவ மனைக்கு மேலும் வார்டுகள் கட்டப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு விவாதிக்க,

''நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 44,69,94,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்த்தைமானமுன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் தொழிலாளர்களுக்காக இயங்கும் மருத்துவ மனைகளில் தேவையான மருந்துகள் பல இல்லையென்று கூறுவதும் நோயாளிகளை சரியாகக் கவனிக்காமல் அபாயங்கள் நேருவதும், லஞ்ச ஊழல் நடந்து வருவது தடுக்கப்படாமலிருப்பதும் குறித்து விவாதிக்க,

''நிதிக் கோரிக்கை எண். 18—மருத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 44,69,94,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

Thiru J. JAMES: Mr. Speaker, Sir to discuss the necessity to publish the marks obtained by the selected candidates for the medical Colleges (M.B.B.S.) Course. I Move—

"That the allotment of Rs. 44,69,94,000 under Demand 18—Medical be reduced by Rs.100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து திரு. மு.. அம்பிகாபதி, திரு. மு. அம்பிகாபதி அவர்கள் இருக்கையில் இல்லை, ஆகவே அவரது வெட்டுத் தீர்மானம் தள்ளப்பட்டதாகக் கருதப்படுகிறது.

Thir uR. MARGABANDHU: To discuss about the admissions in M.B.B.S. Course and the percentage allotted to each community, Sir I move—

"That the allotment of Rs. 44,69.94,000 under Demand No. 18—Medical be reduced by Rs. 100".

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னை, திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா அவர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருப்பதில் வெட்டுத் தீர்மானம் எண் 675 இல் 'மருத்துவ மனையில் இட நெருக்கடியைத் தவிர்ப்பது பற்றி விவாதிக்க' நெருக்கடி, கடியைத் தவிர்ப்பது பற்றி என்று கொடுக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது அச்சுப் பிழை.

(ஆ) மானியக் கோரிக்கை எண் : 19—பொதுச் சுகாதாரம்

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்:—

''நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 26,66,65,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

திரு. மு. அரங்கநாதன் : தலைவர் அவர்களே, சென்னை நகரப் பகுதிகளில் கடந்த 4 ஆண்டுக்காலமாக கொசு, ஈ ஒழிப்புத் திட்டம் சரியாக செயல்படாதது குறித்து விவாதிக்க,

''நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 26,66,65,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru O. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, to discuss the need to provide good sanitary facilities in all the bus stands in the State, I move—

That the allotment of Rs. 26,66,65,000 under Demand No. 19 Public Health be reduced by Rs. 100/-.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, நகரசுத்தி தொழிலாளர்களின் சம்பள உயர்வு கோரிக்கைகளையும் பென்ஷன் கோரிக்கைகளையும் வாழ்க்கை நிலைமைகளையும் பரிசீலித்து உதவி செய்யும் ஆய்வுக் குழு ஒன்று அமைப்பது பற்றி விவாதிக்க,

''நிதிக் கோரிக்கை எண் 19.—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 26,66,65,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

[முற்பகல் 10.40]

திரு. பொ. விஜயராகவன் : தலைவரவர்களே, குமரி மாவட்டம் புதுக்கடை நகரப் பேரூராட்சியிலுட்பட்ட பகுதிகளில் யானைக்கால் வியாதி வேகமாகப் பரவி வருவதைப் பலமுறை அரசுக்கு உணர்த்தியும், அந்தத் தடை செய்கின்ற முயற்சியில் ஈடுபடாமலிருப்பதை பற்றி விவாதிக்க,

''நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச்சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,66,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கிராமங்களில் வடிகால் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கு விசேட நிதி ஒதுக்க வேண்டுமென்று விவாதிக்க,

> ''நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 26,66,65,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஒழுங்குப் பிரச்னை என்ற முறையில் ஒரு விலக்கத்தை நான் பெற விரும்புகிறேன். நம்முடைய அலுவலைத் தீர்மானிக்கின்ற அந்தக் குழுக் கூட்டத்தில் பேசப்படுகிற பொழுது மக்கள் நல்வாழ்வுத் துறை என்ற 'பப்ளிக் ஹெல்த் மானியம்', 'மெடிகல்' என்னும் ''மருத்துவத் துறை'' மானியம் ஆகிய இவை இரண்டும்தான் இந்தக் கோரிக்கையில் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், 'கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல் என்று ஏறத்தாழ 400 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள துறை இந்த மானியக் கோரிக்கையில் இத்துடன் எடுத்துக்கொள்ளப்பட இயலாது, அது பொருந்தாது அல்லது வேறு துறையிலே உள்ளவர்களால் கவனிக்கப்படுவது' என்றும் அலுவல் ஆய்வுக் குழுவிலே தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்றைய தினம் ''கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல்'' என்னும் ஒரு துணைக் குறிப்பு ஒன்று, அது தனிக் கோரிக்கை என்று ஒதுக்கப்படாமல் ஒரு துணைக்குறிப்பு என்று அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்களின் கையொப்பத்தோடு இங்கே தரப்பட்டிருக்கிறது. எனவே இந்தக் கழிவுநீர்போக்கு மற்றும் குடிநீர் வழங்கல் என்ற தலைப்பானது இதிலே உள்ளடங்கி வருகிறதா? அப்படியென்றால் இது பப்ளிக் ஹெல்த்தில் சேர்கிறதா? அல்லது இணைக்கப்படாமல் வருகிறதா? இதற்குப் பேரவைத் தலைவரவர்கள் விளக்கம் தருவார்களா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அந்தத் தலைப்பிலேதான் இது சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைத் தலைவரவர்களே, இரண்டு மானியக் கோரிக்கைகளின் மீதான விளக்கக் குறிப்புகள்* அச்சிடப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகளைப் படித்ததாக எடுத்துக்கொண்டு, அவைக் குறிப்பில் இடம்

* 137-239-ம் பக்கங்களில் இணைப்புகள் I, II, III, IV ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

பெறச் செய்ய வேண்டுகிறேன். உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை மாமன்றத்தில் கூறியதற்குப் பிறகு என்னுடைய பதிலைத் தெரிவிக்க விரும்புகிறேன். உறுப்பினர்கள் தற்பொழுது அவர்களுடைய விவாதத்தைத் தொடங்குமாறு கேட்டுக்கொள்ளக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் பேசுவார்கள். உங்களுக்கு 15 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பேரவையின் காலை நிகழ்ச்சி 1½ மணிக்கு முடிந்து, இதே கோரிக்கையின்மீது விவாதம் மாலை 3 மணிக்கு தொடங்கி 4½ மணிக்கு முடிவடையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. கே. கபாலி : தலைவரவர்களே, என்மீது கொடுக்கப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானத்தில் எழுத்துப் பிழை ஏற்பட்டிருக்கிறது, டி. கபாலி என்று இருக்கிறது, 'கே' யைச் சாப்பிட்டுவிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் பெயரிலுள்ள வெட்டுத் தீர்மானத்தை அவையிலே எடுத்துக்கொள்ளவில்லை. அச்சுப் பிழையைத் திருத்தச் சொல்லி நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த அவையிலே 71 கோடி ரூபாய்க்கும் அதிகமான ஒரு கோரிக்கையை வைத்துள்ளார்கள். மருத்துவத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது மிக முக்கியமான, மக்களுடைய வாழ்வை வளமாக்கக் கூடிய ஒரு துறை. இந்தத் துறை சரியான முறையிலே ஒழுங்கான முறையிலே செயல்பட்டால்தான் நாட்டிலே ஏழை எளிய மக்களுக்குச் சரியான மருத்துவ வசதி கிடைத்து அவர்கள் வாழ்க்கை நலம் பெற வாழ முடியும் என்பதை நாம் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஏழை எளிய மக்களுடைய நலனுக்காகச் சமுதாயத்திலே இருக்கின்ற, அடிநிலையிலே இருக்கின்ற மக்களுடைய நலனுக்காக நாம் எத்தனையோ பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. நாட்டிலே உள்ள எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச் செய்து விட்டோமா என்று பார்க்கும்பொழுது, எவ்வளவு ஏற்பாடுகளைச் செய்தாலும்கூட இன்னும் எத்தனையோ கிராம உட்புறங்களில் மருத்துவ வசதி இல்லாமல் சங்கடங்களுக்குள்ளே ஆழ்ந்திருக்கிறார்கள் என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். இப்படி பல்வேறு சங்கடங்களுக்கு இடையிலே மக்கள் கஷ்டப்படும் பொழுது இந்தத் துறைக்கு நாம் ஒதுக்கிய தொகை சரியான முறையிலே செலவழிக்கப்பட்டு மக்களுடைய நலன் பாதுகாக்கப்படுகிறதா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

ஒட்டுமொத்தமாக இந்தத் துறை மோசமானது என்று நான் சொல்லவில்லை என்றாலும் ஒரு சில இடங்களிலே மிகுந்த குறைபாடுகள் இருக்கின்றன. அந்தக் குறைபாடுகளைச் சரியான முறையிலே களைவது கிடையாது, அதற்காக அதிகக் கவனம் செலுத்துவது கிடையாது என்பதை மட்டும் நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சில மருத்துவ மனைகளிலே இருக்கிற மருத்துவ அதிகாரிகள் சரியாக நடக்கவில்லை. சில மருத்துவ மனைகளிலே மருந்துகள் சரியாக வழங்கப்படுவதில்லை, தவறுகள் நடைபெறுகின்றன என்று அப்போதைக்கப்போது, அப்பகுதியிலே இருக்கிற மக்களால் கொடுக்கப்படுகிற புகார்கள் ஒழுங்கான முறையிலே விசாரிக்கப்படுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்துக்கொள்ள வேண்டும். இதற்கு, மருத்துவ அதிகாரிகள், டி.எம். எஸ். இருக்கிறார்கள். அவர்கள்தான் இந்த மருத்துவ மனைகளை எல்லாம் பரிசோதிக்க வேண்டும், புகார்களைப் பரிசீலிக்க வேண்டுமென்ற காரணத்தாலே, அவர்கள் இதைத் துரிதமாகப் பார்த்து வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதற்கான சூழ்நிலை இல்லை. அவர்களுக்கு மருத்துவ மனைகளிலே பொறுப்பு இருக்கிற காரணத்தாலே, மருத்துவ அதிகாரிகள் என்ற முறையிலே, அவரைச் சார்ந்திருக்கிற மருத்துவமனைப் பொறுப்பும், அவர்களுக்கு இருக்கிற காரணத்தாலே, இம்மாதிரி வருகின்ற புகார்கள், குற்றச்சாட்டுகளைப்பற்றி, துரிதமாக விசாரித்து நடவடிக்கை எடுப்பது கிடையாது, எடுக்கவும் முடியாது.

ஆகையினாலே, இம்மாதிரி வருகின்ற புகார்களை உடனுக்குடன் பார்த்து பரிசீலித்து, இந்தப் புகார்களில் உள்ள உண்மைகளை உணர்ந்து, இந்தப் புகார்கள் நியாயமானவைகளா என்று பார்த்து, நடவடிக்கைகள் எடுப்பதற்கு, கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கு வேறு ஏதாவது வழி செய்ய வேண்டும். அதாவது தனியாக கண்காணிப்பு அதிகாரிகள் போட்டு, தனி ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இம்மாதிரி உடனுக்குடன் கவனிக்கப்படுமானால், உடனுக்குடன் இருக்கிற குறைபாடுகள் சீராக்கப்படுமானால், அங்கங்கு நிலைகள் மோசமாகாமல் இருக்க ஏதுவாக இருக்கும்.

என்னுடைய தொகுதியிலே அதிராமப்பட்டினம் என்ற ஊரில் ஒரு மருத்துவ மனை இருக்கிறது. அங்கிருக்கிற மருத்துவ அதிகாரிகள் சரியாகச் செயல்படவில்லை, ஒழுங்கான முறையில் மருத்துவ மனை நடக்கவில்லையென்ற புகார்கள் அங்கிருந்து அரசுக்கு அனுப்பப்படுகின்றன என்றாலும் புகார்கள் விசாரிக்கப்பட்டு சீர்படுத்தப்படவில்லை.

அடுத்து, இந்த மருத்துவ அதிகாரிகள்—டாக்டர்கள்—மாற்றப்படுவதற்கு குறிப்பிட்ட விதிமுறைகள் இல்லாத காரணத்தாலே இஷ்டப்படி மாற்றுகிறார்கள், அல்லது மாறுதல் கிடைக்க முடியாமல் பலபேர்கள் கஷ்டப்படுகிறார்கள். அது சம்பந்தமாக இயக்குநர் அலுவலகத்திலேயே குறைபாடுகள் இருப்பதாக சொல்லப்படுகிறது. இந்த மாநிலத்திலே இருக்கிற மருத்துவ மனைகள் அத்தனையும் மேம்படுத்தி, சீர்படுத்த வேண்டிய இயக்குநர் அலுவலகத்திலேயே தவறுகள் இருக்கிற மாதிரி வெளியிலே பேசப்படுகிறது என்றால், கீழ் மட்டத்திலே இருக்கிற தவறுகளை எப்படி சீர்படுத்தமுடியும் என்பதை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

பட்டுக்கோட்டையிலே ஒரு குழந்தை மருத்துவர் வந்து ஓராண்டுகாலம் தான் ஆகிறது. அதற்குள்ளே இரண்டு தடவை மாற்றியிருக்கிறார்கள். அவர் பேரில் புகார் இருக்கிறதா என்றால், அதுவும் இல்லை. புகார் கொடுக்கப்படுவதே கவனிக்கப்பட்டு மாற்றப்படாமல் இருக்கும் போது, நல்லமுறையிலே நடந்து கொண்டிருக்கின்ற வைத்தியரை ஏன் மாற்ற வேண்டுமென்பது தெரியவில்லை. இவ்வாறு தேவையற்ற நிலைமையிலே மாறுதல்கள் செய்யப்படுகின்றன. இதுபற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் விசாரிக்கவேண்டும். இம்மாதிரி தவறுகள் நடக்கிற காரணத்தாலே அங்கே ஊழல் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகையால் அதற்கு ஒரு விதிமுறை வேண்டும். எப்படி மாறுதல்கள் செய்ய வேண்டும் என்பதற்கெல்லாம் விதிமுறைகள் வகுத்துவிட வேண்டும். இல்லையென்றால், பல தவறுகள் நடக்க ஏது ஏற்படும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

மருத்துவக் கல்லூரி தேர்வைப் பொறுத்தவரையிலும் புகார்கள் எதுவும் இல்லாமல், அதிலே தலையீடுகள் இல்லாமல் நடைபெற்றிருக்கிறது என்பது என்னுடைய முழுமையான அபிப்பிராயம். ஆக இந்த ஆண்டு நடந்த இந்தத் தேர்வு முறை தலையீடு இல்லாமலேயே நடந்தது போல, வரும் ஆண்டுகளிலும் நீடிக்க வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள். அதிலுள்ள குறைபாடு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வேன்.

[முற்பகல் 10.50]

இந்தத் தேர்விலே கிராமப்புறங்களில் இருந்து வருகிறவர்களுக்கு 40 சதவீதம் இடம் கிடைத்து இருப்பதாக அரசு அறிக்கையில் இருந்து உணர்கிறோம். நகர்ப் புறங்களில் உள்ளவர்களுக்கு 60 சதவீதம் இடம் கிடைத்திருப்பதாக அறிகிறேன்

என்ன காரணம்? நகர்ப் புறங்களில் உள்ளவர்கள் அதிக மார்க்கு வாங்கிய காரணத்தாலே அதிகத் தகுதி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. கிராமப் புறங்களில் படிக்கிற பிள்ளைகள், எல்லா வசதிகளும் பெற்று படிக்க முடியாத காரணத்தாலே அவர்களுடைய தகுதி குறைவாகத்தான் இருக்க முடியும். எனவே, கிராமப் புறங்களிலே இருந்து வருகிறவர்களுக்கு 60 சதவீதம் இடம் கிடைக்கிற வகையிலே தேர்வு விதிகளை மாற்றவேண்டும். தள்ளப்பட்ட, ஒதுக்கப்பட்ட, பின் தங்கிய மாணவர்களுக்கு அதிக இடம் ஒதுக்கித் தரப்பட வேண்டும். அதற்காகத் தேர்வு விதி முறைகளை மாற்றவேண்டும்.

பல்வேறு மருத்துவ மனைகளில் போதிய மருந்துகள் இருப்பதில்லை. நாம் மருத்துவ அதிகாரிகளைப் போடுகிறோம். டாக்டர்கள் போதுமான அளவில் இருக்கிறார்கள் என்றாலும், போதிய அளவு மருந்துகள் இல்லை. டாக்டர்கள் மருத்துவ மனைகளில் உட்கார்ந்து கொண்டு சீட்டு எழுதிக் கொடுக்கிறார். அங்கிருப்பவர் பாட்டிலில் ஏதோ தண்ணீரை ஊற்றிக் கொடுக்கிறார். என்ன தண்ணீர் என்பது தெரியாது. நாம் மருந்துகளுக்காக அதிகப் பணம் செலவழிக்கிறோம். தனியார் துறையிலே தயாரிக்கப்படும் மருந்துகளை நாம் வாங்குகிறோம். ஆனால் அரசே இந்த அரசு மருத்துவ மனைகளுக்கு மருந்துகளை தயாரிக்க முற்படலாம். அரசு மருத்துவ மனைகளுக்குத் தேவையான மருந்துகளை செய்வதற்கு ஒரு திட்டத்தை ஏன் போடக்கூடாது? தனியார் சப்ளை செய்யும் மருந்துகளுக்கு 50 சதவீதம் குறைந்த லாபம் வைத்து விற்பார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்காக ஒரு கோடி 2 கோடி மூலதனத்திலே அரசு மருத்துவமனைகளுக்குத் தேவையான மருந்துகளை நாமே ஏன் தயாரிக்கக்கூடாது. அப்படி செய்தால் இதே செலவில் எல்லா மருத்துவ மனைகளுக்கும் தேவையான மருந்துகளை கொடுக்க முடியும். இந்த செலவைக் கொண்டே தரமுடியும். அதைப் பற்றி அரசு தீவிரமாக சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாலூகா மட்டத்திலே இருக்கிற மருத்துவமனைகளில் எல்லா வசதிகளும் இன்னும் பொறுத்தப்படாமல் இருக்கிறது. எக்ஸ்ரே மிஷின்கள் இல்லை. மொத்தமுள்ள 105 மருத்துவமனைகளில் 75 மருத்துவ மனைகளில் தான் எக்ஸ்ரே யூனிட் இருப்பதாகச் சொல்கிறார்கள். மீதியுள்ள 30 மருத்துவ மனைகளில் இல்லை. அந்த அளவில் எக்ஸ்ரே வசதி இல்லை என்று சொன்னால், கிராமத்திலே இருக்கிற ஏழை எளிய மக்கள், கை முறிவு போன்ற காரியங்களுக்கு 20 மைல் 30 மைல் சென்று, நீண்ட தூரம் பஸ்களிலும், வேறு வாகனங்களில் போய் வருகிற நிலை இருக்கிறது. ஆகவே இந்த 30 மருத்துவ மனைகளிலும் எக்ஸ்ரே பிரிவு, பரிசோதனைக் கூடங்கள் (லேபரட்டரி) போன்ற வசதிகளை எல்லா இடங்களிலும் வைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யவேண்டும்.

இன்னும் இந்த அரசு மருத்துவ மனைகளுக்கு உணவு சப்ளை செய்வது சாமான்கள் சப்ளை செய்வது. போன்றவைகளுக்கு காண்டிராக்ட் கொடுத்திருப்பதாக நான் உணர்கிறேன். ஒருவர் காண்டிராக்ட் எடுத்தார் என்றால் எவ்வளவு லாபம் கிடைக்கும் என்பதைப் பார்த்து அதன்பிறகுதான் எடுப்பாரே தவிர ஏதோ மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்று நல்ல எண்ணத்தோடு முன் வந்து காண்ட்ராக்ட் எடுப்பது இல்லை. ஆகையினால் இந்த காண்ட்ராக்ட் முறையை மாற்றவேண்டும். இப்போது கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ் வைத்திருக்கிறார்கள். சூப்பர் மார்க்கெட்டுகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் நல்ல தரமான சாமான்களை நியாயமான விலைக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலே மருத்துவ மனைகளுக்குத் தேவையான சாமான்களை சப்ளை செய்ய ஏற்பாடுகளை அரசு செய்தால் சாமான்கள் தரமாக இருக்கும். தப்பு நடக்க வாய்ப்பில்லை. அதற்கான ஏற்பாடுகளை டெண்டர் மூலம் இல்லாமல் கோவாப்ரேடிவ் ஸ்டோர்ஸ் மூலம் நல்ல சாமான்களை வாங்க முடியுமா என்பதை அரசு சிந்திக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மாநிலத்தில் எல்லா இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. ஒரு சில வட்டாரங்களில் 2 ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. 383 ஆரம்ப சுகாதார நிலையங்களும் நடைபெற்று வருகின்றன.

இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ள இடங்களிலேயே ''பேபலி பிளாலிங் செண்ட்டர்''-ஐயும் வைத்து இரண்டு பேர்களை, ஒரு லேடி டாக்டரையும், ஒரு ''மேல்'' (Male) டாக்டரையும் போட்டிருக்கிறார்கள். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களை இரண்டாகப் பிரித்து அந்த வட்டாரத்தில் வேறு ஒரு இடத்தில் ஒரு செண்ட்டரை வைத்து ஒரு டாக்டரைப் போட்டு நோயாளிக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ஒரு வருடத்திற்கு 10 ஆயிரம் ரூபாய்க்கு மருந்து கொடுத்துக் கொண்டிருந்ததை, மாற்றி பின்வர் ரூபாய் 12 ஆயிரத்திற்கு மருந்து கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். இப்போது இந்தப் 12 ஆயிரம் என்பதை 14 ஆயிரம் என்று மாற்றலாமா என்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் முடிவு செய்யப்படவில்லை. இந்த 12 ஆயிரம் ரூபாய் மருந்தை வைத்துக் கொண்டு இரண்டு டாக்டர்கள் செயல்படும்போது எந்த அளவுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க முடியும் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

பல இடங்களில் இம்மாதிரி மருந்துகள் போதிய அளவு இல்லா
ததினால், அவர்களைக் குறை சொல்லக்கூடாது, இருக்கிற மருந்து
களை வைத்துக் கொண்டு அவ்வளவு தான் செய்ய முடியும், அவர்
கள் தனியார் மருத்துவ மனைகளுக்குச் சென்று வைத்தியம் செய்து
கொள்ளும்படி நோயாளிகளிடம் தெரிவிக்கிறார்கள். ஊரை
விட்டுப் போய் இப்படி பணம் செலவு செய்து வைத்தியம் செய்து
கொள்ள ஏழை எளியவர்களால் முடியவில்லை. எனவே இன்னும்
கொஞ்சம் அதிகம் செலவு செய்து புதிய ஏற்பாடுகளைச் செய்து
ஆரம்ப சுகாதார நிலையங்களை வெறும் நோய் தடுப்புப் பிரிவு
என்ற முறையில் இல்லாமல் நோயைத் தீர்க்கக் கூடியதாகவும்
செயல்பட வேண்டும். ஆகையினாலே இந்த ஆரம்ப சுகாதார
நிலையங்களுக்கு வேண்டிய போதிய மருந்துகளை நாம் கொடுத்
தாக வேண்டும். ஆரம்ப சுகாதார நிலையங்களை அதை ஒரு
ரெகுலர் மருத்துவமனையாகச் செய்ய வேண்டும் என்பது என்
னுடைய கருத்து. இப்படி ஒரு மருத்துவ மனையாக மாற்
வேண்டுமென்றால், நோயாளிகளுக்குப் படுக்கை வசதிகள்
செய்யவேண்டும். நமக்கு லட்சக் கணக்கான ரூபாய் செ
வாகும் என்ற கருத்து இருக்கிறது. ஒரு 4 படுக்கை போ
கின்ற மருத்துவமனை கட்ட வேண்டுமென்றாலும் 50 ஆயிரம்,
60 ஆயிரம் ரூபாய் ஒதுக்க வேண்டியிருக்கிறது. அது தேவை
யில்லை.

இந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் டெம்பரரி ஷெ
போட்டு 20 படுக்கைகள் கொண்ட வசதிகள் உள்ளதாக எல்
ஆரம்ப சுகாதார நிலையங்களையும் அமைக்க வேண்டும். இ
படிச் செய்வதன் மூலம் உடனடியாக 8 ஆயிரம் படுக்கைக
அமைக்க முடியும். இதனால் சாதாரண மக்களுக்கு கிராமத்தி
இருக்கிற சாதாரண மக்களுக்கு அவசர வைத்திய வசதிக
கிடைக்கச் செய்ய முடியும். இதற்காகப் பெருந்தொ
செலவு செய்ய வேண்டிய அவசியமில்லை. அங்கே தங்கும் வச
மட்டும் செய்து கொடுத்தால் போதும். உணவு வசதிக
செய்து தர வேண்டியதில்லை. அவரவர்களே செய்து கொள்வ
கள். அந்த அளவிற்கு பெரும் செலவை அரசு ஏற்றுக் கொள்ள
மல் இந்த அளவிற்கு வசதிகள் செய்து அந்த மருத்துவர்களை
கொண்டே மருத்துவ வசதியும், மருந்து வசதியும் செய்து
முடியும். இப்படி இல்லாத காரணத்தினால் கிராமப்புற
மக்கள் நகரப்புறத்திற்கு, பெரும் செலவு செய்து கொண்
சென்று மருத்துவம் செய்து கொள்ள வேண்டியிருக்கிறது.

இப்படிச் செலவு செய்வதற்கு கிராமப்புறத்து மக்களா
முடியவில்லை. அவர்களுக்குப் போதிய வருமானம் இல்ல
காரணத்தினால் அவர்கள் நகரப் புறத்திற்குச் சென்
வைத்தியம் செய்து கொள்ளாமலேயே நோயைத் தாங்

கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஒவ்வொரு பிரைமரி ஹெல்த் சென்டருக்கு ரூபாய் 25 ஆயிரத்திற்குக் குறைவில்லாமல் மருந்துச் செலவுக்கு ஒதுக்கினால் இந்தக் குறைந்தபட்ச வசதியை அவர்களுக்குச் செய்து கொடுக்க முடியும் என்று கூறிக் கொள்கிறேன். இப்போது ரூபாய் 14 ஆயிரம் ஒதுக்குவது என்ற ஆலோசனையை மாற்றி ரூபாய் 25 ஆயிரம் ஒதுக்க அரசு முன் வர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஊராட்சி ஒன்றியங்களுக்கு மருந்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களுக்கு மருந்து வேண்டுமானால் மேல் அதிகாரிகளுக்கு, ''டி. எம். ஓ.''-விற்கு எழுத வேண்டியிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களில் மருந்து இல்லையானால் அவர்கள் டி. எம். ஓ. விற்கு அனுமதி கேட்டு, அவர்களின் அனுமதியைப் பெற்றுத்தான் மருந்துகளை வாங்க வேண்டியிருக்கிறது. இப்படி அனுமதி கேட்டுக் கடிதம் எழுதினால் நீண்ட காலமானாலும் பதில் வருவதில்லை. மருந்து இல்லாக் காரணத்தினால் மருத்துவர்கள் ஒன்றும் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. இப்படி அனுமதி கேட்டு வருகின்ற போது அப்போதைக்கப்போது வருகின்ற கடிதங்களுக்கு உடனடியாகப் பதில் அளித்து, அவர்கள் தங்களுக்கு வேண்டிய மருந்துகளை வெளியில் வாங்கிக் கொள்வதற்கு உடனுக்குடன் அனுமதி அளிக்க ஏற்பாடுகளை அரசு செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதிலே ஒன்றை நான் குறிப்பிட கடமைப் பட்டிருக்கிறேன். ஊராட்சி ஒன்றியங்களின் மருந்தகங்கள், 5 ஆயிரம், 10 ஆயிரம் பேர் இருக்கின்ற பெரிய ஊர்களிலே இருக்கின்றது. அந்த மருந்தகங்களை அரசே நேரிடையாக எடுத்துக் கொண்டு அரசு மருந்தகங்களாக மாற்ற வேண்டும். என்று கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-00]

அப்படிப்பட்ட ஒரு முயற்சியை அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய தொகுதியில் மதுக்கூர் என்ற ஊரிலே ஒரு ஊராட்சி ஒன்றிய மருந்தகம் இருக்கிறது. நீண்ட நாட்களாகவே இதை அரசு ஏற்று எம். பி. பி. எஸ். டாக்டர் ஒருவரை வைத்து நடத்தவேண்டுமென்ற முயற்சி ஓரளவுக்கு ஒத்துக் கொள்ளப்பட்டு, ஐந்து ஆண்டுகள் ஆகியும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அந்த மருந்தகத்தை அரசு ஏற்று நடத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழு நோய் சம்பந்தமாக பல முயற்சிகள் அரசு எடுத்துக் கொண்டாலும் கூட தொழு நோய் அடியோடு ஒழிக்கப்படவில்லை. மாறாக பரவிக் கொண்டு தான் இருக்கிறது. குறிப்பாக ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, மன்னார்குடி தாலூகா போன்ற பகுதி

களில் இது கொஞ்சம் அதிகமாக இருக்கிறது என்பது என்னு
டைய கருத்து. இந்நோய் உண்மையிலேயே வயதானவர்க
பற்றுவதில்லை என்று சொல்கிறார்கள். இளம் பிள்ளைகள் அதாவ
எட்டு முதல் பன்னிரண்டு வயதுள்ளவர்களை துரிதமாக பற்
கிறது என்று சொல்லப்படுகிறது. அந்தப் பிள்ளைகள் பள்
களில் படிக்கும்போதே மருத்துவ பரிசோதனை செய்து ஆர
பத்திலேயே வியாதி பரவாமல் தடுக்க வேண்டும். எல்லா
குழந்தைகளையும் மருத்துவ பரிசோதனைக்குட்படுத்தி இந்
வியாதி தோன்றுவண்ணம் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சித்த வைத்தியப் பிரிவை விரிவுபடுத்த வேண்டு
பல, மாவட்ட மருத்துவ மனைகளில் சித்த பிரிவு ஆரம்பிக்க
பட்டுள்ளது. சாதாரண மக்களிடத்தில் தாங்கள் சி
வைத்தியம் செய்து கொள்ளவேண்டுமென்ற ஒரு புது போ
ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அதற்கு வேண்டிய மருந்து
அவர்களுக்கு கொடுக்கப்படாத காரணத்தால் வருகிற நோயா
களுக்கு சித்த பிரிவிலிருந்து மருந்து கொடுக்கப்பட முடிவதில்
மேலும் அவர்களுக்கு போதிய இடவசதி இல்லை. பட்டுக்கோ
டையில் மருத்துவ மனையில் சித்த பிரிவு இருக்கிறது. அங்
டாக்டருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற இடம் குறுகிய இட
படுக்கை வசதிக்கு கொடுக்கப்பட்ட இடமும் மிகக் குறுகிய
இதை விரிவுபடுத்தி இந்த சித்த முறையை பரவலாக்கும் மு
யில் அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்
கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்னும் யோக சிகிச்சை முறை மூ
வைத்தியம் செய்வது என்று பேசப்பட்டு வருகிறது. யோக சி
சையின் மூலம் பல நோய்களை குணப்படுத்த முடியும், என்
அனுபவபூர்வமாகக் கண்ட உண்மை. நமது மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்தில் இருந்தவர்
அதிகப்படியாக யோக சிகிச்சை சம்பந்தமாக அவருக்கு தெ
யும் என்று கருதுகிறேன். இந்த யோக சிகிச்சையை அர
துறையிலே செய்வதற்கு தாமதமாகும் என்றாலும் தனி
களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு உதவித் தொகை வழ
வதன் மூலம் எல்லாப் பகுதிகளிலும் ஆரம்பிக்க அரசு ஏற்
களைச் செய்யலாம். இதற்கு முழுப் பொறுப்பை அரசு ஏற்
கொள்ளாவிட்டாலும் கூட தனியார் யோக சிகிச்சை செய்
கூடியவர்களுக்கு பயிற்சி கொடுத்து சொந்த முறையில் நட
வதற்கு அரசு உதவி அளித்து செய்யலாம். அப்படிச் செய்வத
பல்வேறு நன்மைகள் மக்களுக்குக் கிடைக்கும் என்று தெரிவித்
கொள்கிறேன்.

அடுத்து இயற்கை வைத்தியம். ரொம்ப பழங்கால வைத்
முறைகளில் ஒன்று இயற்கை வைத்தியம். இயற்

வைத்தியம் சென்னையில் இருந்தது. அதை நடத்தி வந்
தவர்கள் இறந்து போனதால் நல்லமுறையில் நடத்த முடிய
வில்லை. இந்த இயற்கை வைத்தியத்தில் அரசு கவனம்
செலுத்த வேண்டும். இதில் செலவே கிடையாது. வெறும்
தண்ணீர் தான் மருந்து, களிமண், தண்ணீர் இவைகளால் வைத்
தியம் பண்ணுகிறார்கள். இந்த முறையிலும் பயிற்சி கொடுத்து பல
இடங்களில் இந்த முறையையும் ஆரம்பிக்க வேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். இதற்கு ஒன்றும் டிகிரி அல்லது 5
அல்லது 6 வருஷம் படிக்க வேண்டியது இல்லை. சாதாரணமாக
ஒரு ஆண்டு பயிற்சி கொடுத்து இயற்கை வைத்தியத்தின்
மூலம் சிகிச்சை செய்வதற்கான முயற்சிகளை அரசு செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து பப்ளிக் ஹெல்த் என்று வருவதால் குடிநீர் பிரச்னை
யைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி என் உரையை முடிக்
கிறேன். வறட்சி நிவாரணத்தின் போது வறட்சிப் பகுதிகளில்
நிறைய போர் வெல் போடப்பட்டது, குடிநீர் வடிகால் வாரி
யத்தின் மூலம். அவைகள் பல பஞ்சாயத்துகளுக்கு பம்பு
செட்டை பொருத்தி ஒழுங்காக ஒப்படைக்கப்படவில்லை என்ற
புகார் இருக்கிறது. அதை பரிசீலித்து, இவ்வளவு ரூபாய்
செலவுகளைச் செய்து பயன் இல்லாமல் போனால் நம் பணம் விர
யம் ஆகிவிட்டது என்று தான் பொருள். அதை உடனடியாக
கவனித்து பஞ்சாயத்துகளிடம் ஒப்படைத்து அவைகள் செயல்
படுவதற்கு ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். அதிராமபட்டினம் பேரூராட்சி கடற்கரையோ
ரமாக உள்ள பகுதி. அங்கு உப்புத் தண்ணீர் தான். நல்ல
தண்ணீர் கிடையாது. அது 25,000 ஜனத்தொகை உள்ள பேரூ
ராட்சி. குடி தண்ணீர் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.
அதை நிறைவேற்றித் தர அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த
வேண்டும் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன்.

*<u>டாக்டர் ஏ. பொன்னுசாமி:</u> பெருமைக்குரிய பேரவைத்
தலைவர் அவர்களே, பெருமதிப்பிற்குரிய தமிழக முதல்வரின்
1977-78-ம் ஆண்டுக்கான மருத்துவத் துறை—மக்கள் நல்
வாழ்வுத் துறை மானியக் கோரிக்கைகள் . பற்றிய விவாதத்
திலே எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு பெருந்துறை மக்களின்
சார்பிலும் நான் சார்ந்துள்ள மருத்துவத் துறையின் சார்பிலும்
நன்றி கலந்த வணக்கம்.

விளையும் பயிர் முளையிலே தெரியும் என்று சொல்வார்கள்
அல்லவா? அதுபோல நமது தமிழ் நாடு நாளை பூத்துக்குலுங்கும்
பஞ்சோலையாக, பார்த்துப் பரவசமடையும் பசுஞ்சோலையாக

இருக்க இருக்கின்றது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டுதான் இந்த அறிக்கை. ''ஆடிப் பட்டம் தேடி விதை'' என்பர் ஆன்றோர். ஆம். இது ஆடிப்பட்டம்தான். நல்லதோர் விதைதனை விதைத்து விட்டார் நமது தமிழக முதல்வர். இன்று இரு இலைகளாகத் துளிர்விட்டிருக்கின்றது. கருக்கி விடலாம் என்று சிலர் கருவிக் கொண்டிருக்கலாம். அவர்களுக்கு ஒன்று கூறிக்கொள்கிறேன். பிஞ்சு நெஞ்சிலே நஞ்சை வளர்க்கும் நயவஞ்சகர்கள் அல்ல, அஞ்சா நெஞ்சர்கள்—நல்லவர்கள்—நலம் நாடுபவர்கள் எனும் மழைமேகம் மழை கொட்டத்தான் போகின்றது. நாடு இந்நாள் வரை கண்டிராத நல்ல காலம். குப்தர்களின் காலத்தைத் தான் ''பொற்காலம்'' என்றனர் சரித்திரச் சான்றோர். ஆனால் இக்சணம் முதல் தமிழக முதல்வர், தனிப்பெரும் தலைவர், தன்னலமில்லான் என்று தரணி எல்லாம் பாடப்படும் தன்னிகரில்லான், புரட்சித் தலைவரின், பொன்மனச் செம்மலின் காலத்தைத்தான் பொற்காலம் என எதிர்காலம் கூறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. மக்களுக்கு நாம் பொன்னைத் தர வேண்டாம், பொருளைத் தரவேண்டாம், நோயற்ற வாழ்வைத் தந்தாலே போதும், அவர்கள் செல்வர்கள் ஆகிவிடுவார்கள். ''நோயற்ற வாழவே குறைவற்ற செல்வமல்லவா''? இதற்காக நமது அரசு ஏறத்தாழ 71 கோடி ரூபாயை ஒதுக்கி இருப்பது பாராட்டுக்குரியது.

மருத்துவக் கல்வியை எடுத்துக்கொள்வோம். நம் மாநிலத்தில் இபபோது எட்டு மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. இப்போது நம் மருத்துவக கல்லூரிகளில் ஆண்டுதோறும் 1,015 மாணவர்களைச் சேர்க்கின்றனர். இப்படி ஆண்டுதோறும் நாம் 1,015 மாணவர்களைச் சேர்த்து வருவது என்றால் நம் நாட்டின் டாக்டர்களை நாம் உற்பத்தி செய்கிறோமே தவிர அவர்களுக்கு வேலைவாய்ப்பு வசதிகளை நாம் செய்து கொடுக்க முடியாது. ஆகவே அப்படி சேர்க்கப்படும் எண்ணிக்கை கட்டாயம் குறைக்கப்பட வேண்டும். அப்போதுதான் நம் நாட்டிலுள்ள டாக்டர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று மருத்துவக் கல்லூரிகளில் உள்ள பயிற்சி முறையை எடுத்துக்கொண்டால், அங்குள்ள மாணவர்கள் மனப்பாடம் செய்வதைத்தான் குறிக்கோளாக கொண்டுள்ளனர். அதனால் அவர்களுக்கு போர் அடித்துவிடுகிறது. ஆகவே மாணவர்கள்—ஆசிரியர்கள் கொண்ட குழு ஒன்றை ஏற்படுத்த வேண்டும். அந்தக் குழு நல்லமுறையில் ஆராய்ந்து தக்க மாறுதல்களை ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான் நல்ல மருத்துவர்களாக மாணவர்கள் பிற்காலத்தில் விளங்க முடியும்.

இன்று நம் சென்னை பொது மருத்துவ மனையை எடுத்துக் கொண்டால் அது 1835-ம் ஆண்டிலிருந்து தொடர்ந்து பணி புரிந்து கொண்டுவருகிறது. இது உலகிலேயே உள்ள பழம் பெரும் மருத்துவமனைகளில் ஒன்றாகும். நமது சென்னை மருத்துவ மனையிலேதான் உலகம் புகழ்பெற்ற டாக்டர் எலியட் இருந்தார்கள். அவர்கள் கண்டுபிடித்த கண் அழுத்த நோய்க்கான அறுவை சிகிச்சை உலகப் புகழ்ப் பெற்றதாகும். Dr. டொஞேவாலன்யை எடுத்துக் கொள்வோம். உலகப் புகழ் பெற்றவர் அவர். இவர்களைப் போன்ற ஏராளமான பேர்கள் இம் மருத்துவ மனையில் உள்ளனர். மாபெரும் சாகசங்களைச் செய்துள்ள இந்த மருத்துவக் கல்லூரி இன்னும் போஸ்ட் க்ராஜுவேட் இன்ஸ்டிட்யூட்டாக இல்லாமல் இருப்பது தமிழகத்தின் பெரும் குறை. இக்குறையைப் போக்க ஆவன செய்ய அரசை வேண்டுகிறேன்.

(முற்பகல் 10-10)

அறிஞர் அண்ணா அவர்கள் மறைவுக்கு காரணமாக இருந்தது புற்றுநோய். இதைக் களைவதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் மருத்துவ மனையைப் பற்றி சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். மனித இனத்தில்—அறியாமையும் கல்லாமையும் புரையோடிக் கிடந்த சமூகத்தில் அந்த புற்றை களைந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அதே புற்றுநோய்க்கு ஆளாக வேண்டிய நிலை வந்ததை நினைத்து காஞ்சிபுரத்தில் புற்றுநோய் மருத்துவ மனை ஏற்பட்டிருப்பது நமக்கெல்லாம் பெருமை தரும் விஷயமாகும். அதற்காக நம்முடைய அரசுக்கு நன்றி செலுத்திக்கொள்கிறேன். அதேபோல் மருத்துவ ஆராய்ச்சிக்கும் மான்யம் ஒதுக்கியிருப்பதை பார்த்து நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

அடுத்ததாக கிங் இன்ஸ்டிட்யூட்டில் எல்லாவிதமான வேக்ஸின் மருந்துகளும்—என்ன வளம் இல்லை இந்த திரு நாட்டிலே, ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டிலே'' என்று நமது தலைவர் அவர்கள் சொன்னது மாதிரி, நமது நாட்டிலேயே நமக்கு முக்கியமாக தேவைப்படுகின்ற தடுப்பு ஊசிக்கு தேவைபான அம்மைப்பால் போன்றவை இங்கேயே கிடைக்கிறது. அந்த அளவுக்கு நமது மருத்துவத்துறை வளர்ந்திருக்கிறது என்பதைப் பார்த்து மகிழ்ச்சி அடைகிறேன்.

மருத்துவக் கல்வியைப் பொறுத்தவரையில், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி 30 ஆண்டுகளுக்கு முன்னால் எப்படியிருந்ததோ அப்படியே தான் இன்றும் இருக்கிறது. இந்த நிலையை மாற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே குறிப்பாகக் கல்லூரியையும் ஆஸ்பத்திரியையும் இணைக்கும் ரோட்டை சேர்த்து கல்லூரியை இன்னும் நல்ல முறையில் விரிவுபடுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இதய நோய் என்பது நகர்ப்புறங்களில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல, கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கும் வரும். இதற்கு முக்கியமாக 'கார்டியாக் கேர் யூனிட்' முக்கியமாக சென்னை நகரத்தில் தான் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே எல்லா இடங்களிலும் உள்ளவர்களுக்கு பயன்படுகின்ற அளவில், எல்லா, ஹெட் குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிகளிலும் ஏற்படுத்தினால், மக்களுடைய இதய நோயும் நீங்கும், மனமும் மகிழ்வு அடையும் என்பதைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். முக்கியமாக மருத்துவமனைகளுக்கு எல்லாம் தேவைப்படுகிற மருந்துகளையும் கொடுத்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்களில் மூன்று பேர்களில் இரண்டு பேர் தமிழகத்தில் கிராமங்களில் இருக்கிறார்கள். ஆனால் அந்த அளவுக்கு மருத்துவ வசதியில்லை. அங்கங்கு இருக்கின்ற ஆரம்ப சுகாதார நிலையங்களில் போதுமான அளவுக்கு மருந்துகள் கிடையாது. மருந்துகள் வாங்குவதற்கு ஆண்டு ஒன்றுக்கு 12 ஆயிரம் ரூபாய் தான் கொடுக்கிறார்கள். இது போதாது, ஆண்டு ஒன்றுக்கு குறைந்தது ஒரு லட்சம் ரூபாய் அளவுக்காவது மருந்துகள் வாங்குவதற்குத் தரவேண்டும். இப்படிப்பட்ட சுகாதார நிலையங்களில் இப்போது வேலையும் அதிகம், ஆகவே ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வேண்டிய உதவி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, Post Graduate அதாவது பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் கொடுக்கப்படுகிறது. ஆனால் இது எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. ஆனால் இதில் படிக்கின்ற மாணவர்கள் எல்லாம் மற்ற மாணவர்களைப் போல் காலை முதல் மாலை வரை மருத்துவமனைகளில் வேலை செய்கின்றார்கள். ஆகவே மேற்பட்டப் படிப்பு படிக்கின்ற எல்லா மாணவர்களுக்கும் ஸ்டைபண்ட் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஈ. எஸ். ஐ. மருத்துவமனையைப்பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அங்கு நோயாளிகளுக்கும் மருத்துவர்களுக்கும் சுமுகமான உறவு இருந்தது கிடையாது. அங்கே கொடுக்கப்படுகின்ற மருந்துகள் சரியான முறையில் உபயோகிப்பதில்லை என்றும், மருந்துகள் எல்லாம் வேஸ்ட் செய்யப்படுகிறது என்றும் தெரிகிறது. இப்படி மருந்துகளை வேஸ்ட் செய்யாமல் அவற்றையெல்லாம் ப்ரைமரி ஹெல்த் சென்டர்களுக்கு கொடுத்தால் நன்றாக இருக்கும் என்பதை நினைவுபடுத்திக் கொள்கிறேன். வழங்கி வழங்கி சிவந்த கரங்கள், நமது தலைவருடைய கரங்கள், அவைகள் மேலும் வழங்குகின்ற வகையில், இந்த மருத்துவத் துறைக்குவாரி வாரி வழங்கி இந்த நாட்டிலுள்ள ஏழை மக்களை வாழவைக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. டி. பி. மு. பெரியசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1977-78ஆம் ஆண்டிற்கான மருத்துவத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறைக்கான மானிய நிதிக் கோரிக்கையின் மீது இந்திய தேசீய பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். 1977-78 ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையிலே, குறிப்பாக நமது முதல் அமைச்சர் அவர்கள் மதுரை எர்ஸ்கின் ஆஸ்பத்திரியிலே, தனிப்பட்ட பல் நோய் சிகிச்சைப் பிரிவையும், முட நோய் சிகிச்சைப் பிரிவையும் கட்டுதல், மற்றும் சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவிற்காக கருவிகள் வாங்குதல் போன்ற திட்டங்களை அறிவித்திருப்பதற்கு, மதுரை மக்கள் சார்பாக அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத்தெரிவித்துக்கொள்ள நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

மருத்துவத் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறையை எடுத்துக் கொண்டால் மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்குத் தேவையான, அடிப்படையான அம்சங்களை ஆராய வேண்டியவர்களாக இருக்கிறோம். மக்கள் நல்வாழ்வு நடத்த வேண்டுமானால், அவர்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர், சத்துள்ள உணவு, நல்ல காற்றோட்டமான வீட்டு வசதி ஆகியவைகளை செய்து கொடுத்தால்தான் இந்த மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு செலவழிக்கின்ற பணமும், மருத்துவத் துறைக்கு செலவழிக்கின்ற பணமும் உபயோகமான முறையில் செலவழிக்கப்பட்டது என்ற நிம்மதி நமக்கு ஏற்படும் என்பதை நான் சொல்லிக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

1977-78ஆம் ஆண்டிற்கான இந்த மானிய கோரிக்கையில், 23 மருத்துவ மனைகளிலும் இணைத்து கொடுக்கப்பட்டுள்ள படுக்கை வசதிகளில், சென்னையிலே மட்டும் 8,498 படுக்கைகள் இருப்பதாகவும், மொத்தம் 13,294 படுக்கைகள் இருப்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது. இப்படி சென்னையிலே மட்டும், 8,498 படுக்கைகள் இருப்பதால், மற்ற இடங்கள் அதாவது எந்த அளவுக்கு இதர மாவட்டங்கள்,கிராமப்புறங்கள் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன என்பதை இந்தஅறிக்கை தெளிவாக உணர்த்தியிருக்கிறது. எனவே, அதிகப்படியான படுக்கை வசதிகளை இதர மாவட்டங்களிலும், கிராமப்புறங்களிலும் ஏற்படுத்த தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இப்போது இதிலே வித்தியாசம் காட்டப்படுகிறது. அப்படிக் காட்டாமல், படுக்கைகளை அதிகப்படுத்துமாறு, அதற்கான நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மாநில தலைநகரிலே உள்ள மருத்துவ மனைகளுக்கும், கல்லூரிகளுக்கும் இருக்கக்கூடிய வசதியும், வாய்ப்பும், அவைகளுக்காக ஒதுக்கப்படுகின்ற மற்ற நிதி வசதிகளுக்கும்,

மற்ற மாவட்டங்களிலே உள்ள ஆஸ்பத்திரிகளுக்கும், கல்லூரிகளுக்கும் கிடைப்பதில்லை, ஒதுக்கப்படுவதில்லை, என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல் கிராமங்களிலே பணிபுரியும் டாக்டர்களுக்கு சீக்கிரம் பதவி உயர்வு கிடைப்பதில்லை. அவர்களுக்கு பதவி உயர்வு கிடைப்பது அரிதாக இருக்கிறது. ஆனால் நகரங்களிலே பணிபுரியும் டாக்டர்களுக்கு வெகு சீக்கிரம் பதவி உயர்வு கிடைத்து விடுகிறது. நகரங்களிலே பணி புரிகின்றவர்களுக்கு இதற்கான வசதியும், வாய்ப்பும் அதிகமாகக் காணப்படுகிறது. இந்த குறைபாடு காணப்படுவதால், கிராமங்களிலே பணிபுரியக்கூடியவர்களுக்கு சிறப்பு ஊதியம் கொடுப்பதோடு, அவர்களுக்கும் பதவி உயர்வு கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

குறிப்பாக, நாம் எல்லாம் சொல்றோம். எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி கிராமங்களுக்குச் சென்று பணியாற்றக்கூடிய டாக்டர்களுக்கு சில சிரமங்கள் இருக்கின்றன. எனவே, கிராமங்களுக்குச் சென்று பணியாற்றக் கூடிய எம். பி. பி. எஸ். டாக்டர்களுக்கு நிறைய வசதிகள் செய்துகொடுப்பதற்கான வழிவகைகளை நாம் செய்யவேண்டும். அப்படி செய்துகொடுத்தால் டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்ற உண்மையிலேயே தயாராக இருப்பார்கள். அப்படி அவர்களை ஊக்குவிக்கவில்லையானால், உண்மையிலேயே டாக்டர்கள் கிராமங்களுக்குச் செல்லத் தயங்குவார்கள் என்ற உண்மையை நாம் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இன்றைய தினம் கூட, ஒரு சிறந்த வைத்திய நிபுணர் சொல்லியிருக்கிறார். யாரும் கிராமப்புறங்களுக்குச் செல்ல மறுக்கவில்லை. குறிப்பாக, தமிழ்நாட்டில் வைத்திய நிலைய வசதி பெற 5 மைல்களுக்கு மேல் ஒருவர் செல்ல வேண்டிய ஊரே கிடையாது. வைத்திய துறையில் முன்னேற்றமும், போக்குவரத்து வசதியும் உள்ள தமிழ்நாட்டில் கிராமங்களில் உள்ளவர்களுக்கு வைத்திய வசதி கிடைக்குமா என்ற சந்தேகத்திற்கு இடமேயில்லை என்று பேசியிருக்கிறார். இன்றைய தினம் தினமணி பத்திரிகையிலே வந்திருக்கிறது. ஆனால், இன்றைய குறிப்புகளிலிருந்து பார்த்தால், 12 மைல் சுற்றளவுக்கு மருத்துவ நிலையம் இல்லையென்பதைச் சுட்டிக் காட்டி, மாநிலத் தலைநகரிலே உள்ள அனைத்து வசதிகளையும் இங்கே ஏற்படுத்தித்தர வேண்டும்.

குறிப்பாக இதய நோய் நரம்பு நோய் பிரிவுகள் அனைத்தும் மாநில தலைநகரிலேயே இருக்கின்றன. அந்த வசதிகளை மாவட்டத்

[முற்பகல் 11-20]

லைநகரங்களிலும் உண்டாக்கி மாவட்டத்தைச் சுற்றியுள்ள ராமங்களுக்கு அந்த வசதியை அனுபவிக்க வாய்ப்பை ஏற்டுத்தித் தரவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கட்டுக்கொள்கிறேன்.

சிறப்பு மருத்துவ வல்லுநர்களின் சேவையும் எல்லா மாவட்டத் லைநகரிலும் கிடைக்கச் செய்யவேண்டும். எம். பி. பி. எஸ். டித்தவர்களைக் கிராமப் புறங்களுக்குப் பணியாற்றப் போகச் சால்லுகிறோம். அதே போன்று சிறப்புப் பட்டம் பெற்றவர்கள் ந்தாண்டுகள் பத்தாண்டுகள் தலைநகரிலேயே இருந்து பணி ாற்றிக் கொண்டிருக்கிறார்களே தவிர, மாவட்டங்களுக்குச் செல் க்கூடிய வாய்ப்பு இல்லை. அவர்களுடைய சேவையும் மாவட்டத் லைநகரங்களுக்கு கிடைக்கக்கூடிய வகையில் வழி செய்ய வேண்டு மன்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்களை இந்தச் சந்தர்ப் த்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, மருத்துவக் கல்லூரிகளில் டீன் பதவி இருக்கிறது. ப்போது பார்த்தாலும் காலியாக இருக்கிறது. டீன் பதவியில் ருப்பவர்கள் சில கல்லூரிகளில் முதல்வர்களாகவும், சிலர் கண் ாணிப்பாளர்களாகவும் போடப்பட்டு பிறகு அது என்னவாயிற்று ன்றால் தனியாகத் தொழில் நடத்தவேண்டுமென்ற காரணத் ால் அந்தப் பொறுப்பு இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ன் பதவியை நிரந்தரமாக்கி அதிகமான வசதிகளைச் செய்து காடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு மேல் ஒரே இடத்தில் ணி புரியக் கூடாது. ஐந்து ஆண்டுகளுக்கு மேல் அவர்களை ாற்றி மாவட்டத் தலைநகரங்களில் பணியாற்றச் செய்வதன் லம் அந்தப் பகுதிகளுக்கு அவர்களுடைய சேவை பயன்படச் சய்ய வேண்டும்.

திருநெல்வேலியிலுள்ள இந்திய மருத்துவக் கல்லூரியின் அங் காரத்தைத் திரும்பப் பெறும் நிலைமை இருக்கிறது. அப்படிப் ட்ட நிலைமையை ஏற்றுக் கொள்ளாமல் மாவட்ட மருத்துவக் ல்லூரி வளர்ச்சியில் மிகுந்த அக்கறை காட்டவேண்டும்.

மருத்துவத் துறையில் பணிபுரியும் டாக்டர்கள் பதவி உயர்வு பறுவதில் காலதாமதம் ஆகிறது. ஆனால் மருத்துவக் கல்லூரி ில் கல்வித்துறையில் பணியாற்றுகின்ற டாக்டர்களுக்கு விரை ில் பதவி உயர்வு கிடைக்கிறது. இந்த வேறுபாட்டைப் போக்கி குதி, திறமை அடிப்படையில் சீனியாரிட்டியைக் கணக்கிட்டு ம வாய்ப்பு அளித்து இருதுறைச் சேவையும் நாட்டு மக்களுக்கு ல்ல முறையில் பயன்படவேண்டும்.

மதுரையில் ஆஸ்டின் பட்டி டி. பி. சானடோரியத்தில் படுக்கை எண்ணிக்கை மிக மிகக் குறைவு. படுக்கை எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டும். டி. பி. நோயால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகமாக தஞ்சை, மதுரை, சென்னை போன்ற நகரங்களுக்குச் செல்லுவதைத் தடுத்து கிராமப்புற மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் வகையில் ஆங்காங்கு அதற்கு வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாநகரத்தில் குழந்தைகள் மருத்துவமனை இருக்கிறது. அதேபோன்று மாவட்டத் தலைநகர்களிலும் வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். ஆண்டிப்பட்டி காட்டுமலைக்குண்டு பகுதியில் 60,000 மக்கள் வசித்து வருகிறார்கள். அங்கு எந்த விதமான வைத்திய வசதியும் இல்லை. அங்கு அரசு மருத்துவமனை ஒன்று தொடங்கப்படவேண்டும்.

ஆண்டிப்பட்டியில் பிரைமரி ஹெல்த் சென்டர்தான் இருக்கிறது. அரசு மருத்துவமனை இல்லை. அவர்களுக்குத் தகுந்த ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த முறை மருத்துவத் துறைத் தேர்வு நல்ல முறையில் நடைபெற்றிருக்கிறது. நம்மை யார் யார் எதிர்ப்பார்கள், தூற்றுவார்கள் என்று எதிர்பார்த்தோமோ அவர்களிடமிருந்தே பாராட்டுதலைப் பெறுகின்ற அளவுக்கு நடைபெற்றிருக்கிறது என்ற காரணத்தால் மதிப்பிற்குரிய புரட்சித் தலைவர் அவர்களுக்கு இந்திய தேசிய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் வாழ்த்தையும் வணக்கத்தையும் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன்: பெருமதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவத்துறை மானியக் கோரிக்கையின் மீது எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு முன்னால் என்னுடைய தொகுதியிலே இருக்கிற ஆயிரம் குடும்பங்கள் பசியால் பட்டினியால் வாடிக்கொண்டிருக்கின்ற நிலையைப் போக்குகின்ற மருந்தாக அந்த லோட்டஸ் மில்லை அரசுடைமையாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற வாக்குப்படி வாழ்வை உயர்த்துவதற்கு திட்டமிடுகின்ற துறை இந்த மருத்துவத் துறையாகும். இந்த மருத்துவ மனைகளிலே படுக்கைகள் கிடைப்பது மிக அரிதாக இருக்கிறது. ஏழை எளிய மக்கள் தொல்லைப்படுகிறார்கள். அதைப் போலவே ஆஸ்பத்திரியிலே போய் நம்முடைய மக்கள் போகிற நேரத்திலே அங்கே வருகிற மணம் அந்த மருத்துவ மனைகளிலே மக்கள் இருப்பதற்கான வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே எனக்கு முன்னாலே மதிப்பிற்குரிய பெருந்துறை சட்டமன்ற உறுப்பினர் குறிப்பிட்டார்கள். இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளிலே கொடுக்கப்படுகிற மருந்துகள் வீணாக்கப்படுவதாகச் சொன்னார்கள். நான் அறிந்த வரையில் அந்த இ.எஸ்.ஐ. தொழிலாளர்களுக்கு மருந்து கொடுப்பது உண்மைதான். ஆனால் அந்த மருந்துகள் எந்த நோய்க்காகவும் போய்க் கேட்டாலும் ஒரே கலரிலே இருக்கக்கூடிய வில்லைகளாகத்தான் இருக்கின்றன. தரமான மருந்துகள் அங்கே கிடைப்பதில்லை என்பதும் இ. எஸ். ஐ. மருத்துவ மனைகளிலே விடுமுறைக்காகச் செல்கின்ற தொழிலாளர்கள் லஞ்சத்தைக் கொடுத்துத்தான் விடுமுறை பெறக்கூடிய சிக்கலிலே இருக்கிறார்கள். இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும்.

மருத்துவ அதிகாரிகளை அடிக்கடி மாற்றுவது என்பது அதிகமாக இருக்கிறது. இதை காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தலைவர் பேசும்போதும் குறிப்பிட்டார்கள், டாக்டர்கள் மட்டுமல்ல, அங்கே பணியாற்றுகிறவர்களும் கூட காரணம் இல்லாமல் எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் இல்லாமல் மாற்றப்படுகிறார்கள், இந்த நிலைமை மாற்றப்படவேண்டும். இந்த மாநிலத்திலே உள்ள 4,500 செவிலியப் பணியாளர்கள் கடந்த மாதம் முதலமைச்சர் அவர்களிடத்திலே ஒரு கோரிக்கை மனுவைக் கொடுத்து இருக்கிறார்கள். நீண்டகாலமாக அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படாத காரணத்தால் இதை இப்போது நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே ஸ்பெஷலிஸ்ட்ஸ் டாக்டர்கள் பதவி உயர்வு பெற்றும் கூட சம்பள உயர்வு அவர்கள் பெறவில்லை. தஞ்சாவூரிலே இருக்கிற மருத்துவ மனைக்கும் ராஜா மிராசுதார் மருத்துவமனைக்கும் ஒரே கண்காணிப்பாளரைப் போட்டிருக்கிறார்கள். ஆனால் இதற்கு முன்னாலே இரண்டு கண்காணிப்பாளர்கள் இருந்து வந்தார்கள். இரண்டு பேர்கள் இருந்தால்தான் அந்த மருத்துவ மனைகளின் நிர்வாகம் சரியாக இருக்கும்.

இந்த மானியக் கோரிக்கையிலே கண்ணொளி வழங்குகிற திட்டத்திற்காக 22 இலட்சம் ரூபாய் வழங்கப்பெற்றிருக்கிறது. இந்தத் திட்டத்தை நல்ல கண்ணைக் கெடுப்பதற்குக் கொண்டு வந்த திட்டம் என்ற குற்றச் சாட்டைப் பொய்யாக்குகிற வகையில் இந்தத் திட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் இதைப் பாராட்டுகிறேன்.

குடும்ப நல திட்டக் குறியீட்டை அடைவதற்காக பல மருத்துவ மனைகளிலே தவறான அறுவைச் சிகிச்சைகளைச் செய்கிறார்கள். வயோதிகர்களைக் கூட அறுவைச் சிகிச்சை செய்யவேண்டிய நிலைமை இருக்கிறது. அரசு ஊழியர்களும், இந்த கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களும் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களும்

இந்தப் பணியிலே ஈடுபடுத்தப்பட்டு அவர்கள் குறியீட்டை அடையவேண்டுமென்று பணிகளிலே ஈடுபட்டதாலே அவர்களுடைய அலுவல்களைச் சரிவர செய்யாத நிலைமை இருக்கிறது. பலர் குறியீடுகளை அடையாத காரணத்தால் அந்த ஆசிரியர்கள் மீது கடந்த அவசர நிலை காலத்தில் ஜனாதிபதி ஆட்சி இருந்த காலத்திலே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய தொகுதியிலே இரண்டு ஆசிரியர்கள் மீது அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் குடும்ப நலத் திட்டத்திற்கு எதிரான பிரச்சாரத்தைச் செய்தார்கள் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்த நடவடிக்கையை ரத்து செய்யவேண்டுமென்று நான்கேட்டுக் கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய உரையிலே

> "வலுக்கட்டாய முறையில் அல்லது கட்டாய முறையில் மேற்கொள்ளாமல் நயந்து கேட்பதன் மூலமும் ஊக்குவிப்பதன் மூலமும் இந்த இலக்கினை எய்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்."

என்று குறிப்பிட்டுள்ளார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆனால் அதே நேரத்திலே அப்படிப்பட்ட நிலைமையில் நடப்பதில்லை என்பதை நான் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இந்த நிலையை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற வேண்டுமென்ற பரிசீலனை இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மதுக்கரையிலே இரண்டு மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஆனால் அவைகளை நடத்துவதற்கு அந்த ஒன்றியத்திலே நிதிவசதி இல்லாத காரணத்தாலே அந்த இரண்டு மருத்துவ மனைகளையும் அரசு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் அல்லது அங்கே ஆரம்பச் சுகாதார நிலையங்கள் மூலமாக அல்லது மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மூலமாக மருந்துகளைக் கொடுக்கவேண்டும்.

இப்போது அந்த மருத்துவ மனைகள் எல்லாம் சென்னையில் இருக்கிற அதிகாரியின் அனுமதியைப் பெற்று மருந்து பெற வேண்டிய சங்கடம் இருக்கிறது. ஆகவே ஒரு ஒன்றியத்திலே உள்ள ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற நிலைமையை மாற்றி இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

அந்த மதுக்கரை ஒன்றியத்திலே ஒரு சுகாதார நிலையம் இருக்கிறது. மேலும் ஒரு சுகாதார நிலையத்தை எட்டிமடை பேரு

ாட்சியிலும், பேரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேடபடி பேரூராட்சியிலும் ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

130 ஆரம்ப சுகாதார நிலையங்களில் 3 டாக்டர்கள் போடப்பட்டிருக்கின்றனர் என்று தெரிவித்திருக்கிறார்கள். உள்ளபடியே ஆரம்ப சுகாதார நிலையங்களில் 10,000 ரூபாய் மருந்துக்காகத் தரப்படுகிறது. ஆண்டுக் கடைசியிலே 3 மாதங்களுக்கு மருந்து இல்லாத நிலைமை இருப்பதால் அங்கே 3 டாக்டர்களுடைய ம்பளத்தையும் கணக்கிட்டுப் பார்த்தால் அதோடு, அலுவலர்களுடைய கணக்கையும் போட்டுப்பார்த்தால் மருந்துக்குமேல் பல ஆயிரம் ரூபாய் வருகிறது என்பதைக் கவனிக்க வேண்டுமென்று ணிவோடு கேட்டுக் கொள்கிறேன். எனவே 3 டாக்டர்கள் ன்கின்ற நிலைமையை மாற்றி ஏற்கனவே இருந்தபடி 2 டாக்டர்கள் ன்கிற அளவிலே வைக்கலாம் என்று பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதைப் போலவே துணை நிலையங்களுக்கு ஆண்டுக்கு 800 ரூபாய் மருந்துக்காகச் செலவிடப்படுகிறது. அதைக் குறைந்த ட்சம் ஆயிரம் ரூபாயாகத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1—6—1977 லிருந்து 34 சிறிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதாவது மினி ஹெல்த் சென்டர்ஸ் துவங்கி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை டத்த வேறு சில தொண்டு நிறுவனங்களும் முன் வந்துள்ளன ன்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிலே ஒன்றை என்னுடைய தொகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இச்சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள், சாதி மத பேதமில்லாமல், சமயச் சார்பற்ற அடிப்படையில், 1,000 குடும்பங்களுக்கு அல்லது 5,000 பேருக்கு சுகாதார நல அடங்கல் பணிகளை ல்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சிறிய ஆரம்ப சுகாதார நிலையங்களில் சமய சாதிப் பிரச்சினைகளெல்லாம் என்ன இருக்கிறது ன்பது எனக்குப் புரியவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நிலையங்களுக்கு 18,000 ரூபாய் வழங்குவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது மிகக் குறைந்த தொகை ன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உணவுக் கலப்படத்தைத் தடுக்கும் சட்டம் பல ஆண்டுகாலமாக நடைமுறையிலே இருந்து வருகிறது. அதற்கான பகுப்பாய்வுக் கூடங்களுக்கு அனுப்பப்படும் மாதிரிகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை மாதத்திற்கு இரண்டோ அல்லது ஆண்டுக்கு இரண்டோ வழக்குகளைப் போட்டு விட்டு, மற்றக் காலங்களில் இலஞ்சம் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பிரச்னை மக்கள் உடல் நலம்

சம்பந்தப்பட்ட பிரச்னை என்பதால் மிகவும் கண்டிப்பாக இருந்து அபராதங்களையும், தண்டனைகளையும் அதிகமாக அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போலவே சுற்றுப் புற சுகாதாரத்துறையை எடுத்துக் கொண்டால் அதற்கென்று ஒரு குழு 1972ஆம் ஆண்டிலேயிருந்து இருப்பதாகவும், அதற்கு அதிகாரம் இல்லை என்று அதிலே போடப்பட்டிருப்பதையும் பார்த்தோம். அப்படி அதிகாரமற்ற அந்தக் குழு தேவையில்லை. என்னுடைய தொகுதியில் ஏ. சி. சி. சிமிண்ட் ஆலையிலிருந்து ஏராளமான புகை வந்து, தூசிகளின் காரணத்தால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வீணுக்குகிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். அதற்கான நடவடிக்கைகளை கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னே கோவை மாவட்ட மருத்துவ அதிகாரி எடுத்திருந்தும், இன்னும் அதற்கான இயந்திரங்களை அவர்கள் நிறுவாமல் இருக்கிறார்கள். சுற்றுப்புற சுகாதாரத் துறையை ஒரு அதிகாரமுள்ள குழுவாக ஆக்கி ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வீணுவதையும், நூற்றுக்கணக்கான கிராமங்களில் மக்கள் சுகாதாரம் இல்லாமல் தொல்லைப்படுவதையும் மாற்ற வேண்டுமென்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

மானியக்கோரிக்கை 19-இல் குடிநீர் வழங்கல் சம்மந்தமாகக் கூறப்பட்டுள்ளதில், இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து நிதி உதவி பெற்று சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு 2½ கோடி ரூபாய் அதிகமாகச் செலவழிக்கப்பட இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. அதில் என்னுடைய பகுதியிலுள்ள குறிச்சி பேரூராட்சியைப் பற்றிய தகவல் இல்லை. குறிச்சி பேரூராட்சியில் இருக்கின்றவர்களுக்கு வெளியூர்களிலே இருப்பவர்கள் பெண் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள். பொள்ளாச்சிக்குப் போகிற வழியில் பார்த்தால் ஆயிரக்கணக்கான பெண்கள் தலையிலே இரண்டு குடங்களைத் தூக்கிக் கொண்டு தொல்லைப்பட்டுக் கொண்டிருப்பதை அமைச்சர்களும் அறிவார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே அந்தப் பேரூராட்சி மன்றத்திற்குச் சிறப்பான வகையிலே திட்டத்தை அமைத்து பணத்தை ஒதுக்கி குடிநீர்ப் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறுவாணி திட்டம் முடிந்தால் கோவை நகராட்சிக்கும், நீர் வரும் வழியில் உள்ள கிராமங்களுக்கும் தினசரி 22.3 மில்லியன் கேலன்கள் நீர் கிடைக்கும் என்ற குறிப்பு இருக்கிறது. ஆனல் இந்தத் திட்டத்தை வருகிற வழியில் என்று மட்டுமல்லாமல் எவ்வளவு நகர்ப்புறங்கள் இருக்கின்றதோ அவைகளுக்கு குறிப்பாக என்னுடைய தொகுதிக்கும் துவக்கப்படுமா என்று கேட்க விரும்புகிறேன். பேரூராட்சி மன்றமும் ஏராளமான நிதி ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இரண்டாயிரம் மருத்துவப் பட்டப்படிப்பு பெற்றவர்கள் இன்றைய தினம் வேலை வாய்ப்பில்லாமல் மிகுந்த சிரமத்திலே இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்களுக்குப் போக மறுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லி, அவர்களுக்கு வேலை வாய்ப்பில்லாமல் செய்கிறார்கள். எனவே, 2,000 பட்டதாரிகளுக்கும் வேலை வாய்ப்பு தரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

* * * * * * *

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் * * என்று சொன்ன விஷயங்களை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

<u>திரு. ஆ. நடராசன்</u>: துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

<u>* திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்</u>: தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையைத் தெளிவுபடுத்த நிற்கிறேன். ஏற்கெனவே இந்த மானியக் கோரிக்கைப் பற்றி நேற்றைய தினம் விவரங்கள் அடங்கிய புத்தகங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாநிலத்தில் மருத்துவக் கல்லூரிகள் 8 இருக்கின்றன என்று இருக்கிறது. போதுமான ஆசிரியர்கள் இல்லை என்ற முறையிலே விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், இருக்கிற ஆசிரியர்களை ஏற்கெனவே அந்தப் பகுதியிலே திறமையான முறையிலே சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்த ஆசிரியர்கள் தங்களுக்குப் பிடிக்காதவர்கள் என்ற ஒரே காரணத்தால், பல வருடங்கள் அவர்களுக்கு சர்வீஸ் இருந்தாலும் கூட அந்த லெக்சரர்களை அந்தப் போஸ்டில் இருந்து, அரசியல் குரோதத்தோடு எடுத்ததை இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். சட்டசபையின் மரபுப்படி அந்தப் பெயர்களை வெளியிடக்கூடாத நிலை காரணமாக வெளியிட விரும்பவில்லை. முதலமைச்சரோ அல்லது சபாநாயகரோ வேண்டும் என்று கேட்டால் பெயர்களை நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். இப்படிப்பட்ட பல்வேறு அரசியல் வேறுபாடு காரணமாக பழிவாங்கப்பட்ட பல லெக்சரர்கள் இருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

இப்போது புதிதாக பதவி ஏற்றிருக்கிற இந்த அரசு இப்படிப் பழிவாங்கப்பட்ட ஆசிரியர்களை மீண்டும் அதே

**மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-36—11-42 வரையிலான பகுதிகள் அகற்றப்பெற்றன.

இடத்தில் நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக போதுமான டாக்டர்கள் போடப்படவில்லை. அதன் காரணமாக ஹெல்த் சென்டர்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால், ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு 383 டாக்டர்கள் தேவை. அதற்கு 133 பேர்களைத்தான் இப்போது போட்டிருக்கிறார்கள். போதிய வாய்ப்பு வசதி இல்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அவர்களை முழுமையான அளவில் போட முயற்சி எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவதாக இந்த ஆண்டு நடைபெற்ற மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்விலே சென்ற ஆண்டுகளைப் போல அல்லாமல், இந்த ஆண்டு ஓரளவு நியாயமான முறையிலே தேர்வு நடைபெற்றிருக்கிறது என்று பல அங்கத்தினர்கள் சுட்டிக் காட்டினர். அதிலே நாங்கள் உடன்படுகிறோம். சென்ற ஆண்டிலே மருத்துவக் கல்லூரியில் ஒரு மாணவர் சேர வேண்டுமென்று சொன்னால் 4 ஆயிரம், 5 ஆயிரம் கொடுத்துச் சேர வேண்டுமென்ற நிலை இருந்தது. இந்தத் தடவை அது நடக்கவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். முன்பு இப்படி நடந்த ஊழலில் சம்பந்தப்பட்டவர்களின் பெயரை, பல அதிகாரிகளின் பெயரை நான் சொல்ல விரும்பாததற்குக் காரணம், சட்ட மன்ற மரபு அடிப்படையில் தான். சபாநாயகர் அவர்கள் எனக்கு அனுமதி அளித்தால் அதை நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். அதற்கான அனுமதியை சபாநாயகர் அவர்கள் அளிப்பார் என்று நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வேண்டாம். பெயரைச் சொல்ல வேண்டாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: ஆகவே இப்படிப்பட்ட நபர்கள் இன்று......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பெயரைச் சொல்ல வேண்டாம். தனிப்பட்ட முறையிலே சபாநாயகரிடத்திலோ, அல்லது முதலமைச்சரின் கவனத்திற்கோ கொண்டு வரும்படி தெரிவித்துக் கொள்கிறேன். தயவு செய்து முதலமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவரிடத்திலே கொடுங்கள். இங்கே பெயரைச் சொல்ல வேண்டாம். மற்றபடி பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : அவர்களுடைய பெயரைத் தனிப்பட்ட முறையிலே சபாநாயகரிடத்திலும், முதலமைச்சரிடத்திலும் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நபர்கள் இன்றைக்கு பணத் திமிங்கலங்களாகக் கொழித்து பல எஸ்டேட்டுகளை வாங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் மீது ஒரு நியாயமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென்று இந்த மாமன்றத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூன்றாவதாக 8 மருத்துவக் கல்லூரிகள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன. பல்வேறு மாவட்டத் தலைநகர்களிலே மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருத்துவமனைகளிலே இன்னும் போதிய அளவிற்கு மருத்துவம் செய்வதற்குப் போதுமானதாக இல்லை. அது இந்த அறிக்கையிலே கூடச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில் பார்த்தால் சென்ற ஆண்டிலே 12,638 படுக்கைகள் இருந்திருக்கின்றன. இந்த ஆண்டிலே இன்னும் 556 படுக்கைகள் அதிகப்படுத்தப்பட்டு, 13,294 படுக்கைகள் கொண்டதாக உள்ளன. ஆனாலும் இவைகள் போதாது. காரணம் ஆண்டுக்காண்டு நோயாளிகள் அதிகரித்துக் கொண்டு வருகின்றனர். எனவே நல்ல மருத்துவ வசதிகள் கிடைப்பதற்கு ஆஸ்பத்திரிகளில் உள்ள நிலைமைகளை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு இன்று மாவட்டத் தலைநகர்களிலே பல ஸ்பெஷலிஸ்ட்கள் இருக்கிறார்கள். சில வட்டாரத் தலைநகர்களிலே உள்ள ஆஸ்பத்திரிகளில் ஏதோ ஒன்றிரண்டு டாக்டர்கள் இருந்து கொண்டிருக்கிறார்களே தவிர ஸ்பெஷலிஸ்ட்கள் இல்லை. கண் சம்பந்தமாகவும், காது, தொண்டை சம்பந்தமாகவும் வேறு சிகிச்சைகளுக்கும் விசேஷமான சிகிச்சை செய்து கொள்ள வேண்டுமென்றால் மாவட்டத் தலைநகர்களுக்கோ அல்லது வேறு மாவட்டத் தலைநகர்களுக்கோ செல்ல வேண்டிய நிலை இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே அரசின் கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனவே எல்லாத் தாலூகா தலைநகரங்களிலும் ஸ்பெஷலிஸ்ட்களைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மருத்துவமனைகளில் எக்ஸ்ரே, பரிசோதனைகளுக்கு வசதி செய்து தரப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மாணவர்கள் எண்ணிக்கை தற்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக்கப்பட வேண்டும். இந்த அறிக்கையில் போதுமான டாக்டர்கள் கிராமப்புறங்களில் இல்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே இருக்கக்கூடிய கல்லூரிகளில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கையை இன்னும் இரண்டு மடங்காக்க வேண்டுமென்றும் பெண்களுக்கு பாதி

யிடங்கள் ஒதுக்கவேண்டுமெனவும் இந்த மாமன்றத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதோடு இந்திய மருத்துவ முறை என்ற முறை இருக்கிறது. இந்திய மருத்துவ முறையைப் பொறுத்த மட்டில் பாளையங் கோட்டையில் ஒரு கல்லூரி இருக்கிறது.

[முற்பகல் 11-50]

அதிலே 40 மாணவர்கள் தான் சேர்க்கப்படுகிறார்கள். அதனுடைய எண்ணிக்கை 100 ஆக மாற்றப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் முதலமைச்சர் அவர்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அதே போல் சென்னையிலும் கூட அப்படிப்பட்ட வாய்ப்பு இருப்பதால் இங்கேயும் ஒரு இந்திய மருத்துவ முறை கல்லூரி ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் அதற்கு ஏற்பாடு செய்கிற இடைக்காலத்தில், அந்த மாணவர்களை இந்த ஆண்டு மாத்திரம் பாளையங்கோட்டையில் சேர்ப்பதற்கான, அடுத்தக் கல்வி ஆண்டிலாவது சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதே போல் இவர்களுடைய மாணவர்களுக்கு உதவித் தொகையும் போதாது என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுடைய உதவித் தொகையையும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக ஹோமியோபதி மருத்துவம் சம்பந்தமாக இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. மொத்தம் உள்ள தேர்வுகளில் 2,050 பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் பதிவு செய்யப்பட்டவர்கள் 1,290. மேலும் இவர்களுக்கு உதவி செய்கிற முறையில் ஹோமியோபதி டாக்டர்களுக்கு சென்னையில் ஒரு கல்லூரி ஏற்படுத்தியது போல் வேறு பல இடங்களிலும் ஹோமியோபதி டாக்டர்களை உருவாக்குவதற்கு கல்லூரிகளைத் திறக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

அடுத்தது, ஆஸ்பத்திரிகள் சம்பந்தமாக எங்களது தோழர்களின் வெட்டுப் பிரேரணையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். எந்த ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டாலும் குறிப்பாக கோயம்புத்தூரை எடுத்துக் கொண்டாலும் அங்கே ஆஸ்பத்திரியைச் சுற்றி சுகாதாரக் கேடு ஏற்பட்டு அங்கே நோய் ஏற்படுவதற்கான ஏதுக்கள் இருக்கின்றன என்பதை அரசு கவனத்திற்கு கொண்டுவந்து வேறு ஒரு கட்டிடம் நல்ல முறையில் கட்டப்பட வேண்டுமென்று முயற்சித்தும் இதுவரையில் அது செயல்படாமல் இருக்கிறது என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல் திண்டுக்கல், பழனி, கடலூர் முதலிய ஊர்களில் உள்ள ஆஸ்பத்திரிகளிலும் நிலைமைகள் உள்ளன. இன்னும் சொல்லப் போனால் பல மாவட்ட மருத்துவ மனைகள் இருக்கிற இடங்களில் இப்படிப்பட்ட சுகாதாரக் கேடுகள் அதிகமாக இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதைச் சொல்லும் பொழுது இ. எஸ். ஐ. ஆஸ்பத்திரிகளைப் பற்றியும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏற்கெனவே தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை மானிய கோரிக்கையின்மீது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் அறிக்கை சமர்ப்பித்த போது தொழிலாளர் நலக்காப்புறுதி திட்டம், தர்மபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக மற்ற மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களுக்கு கவனப்படுத்துகிறேன். பல இடங்களில் பல தொழிற்சாலைகளில் இவை இன்னும் அமல் படுத்தப்படவில்லை.

உதாரணமாக, அம்பாசமுத்திரம் தாலுகா வீரவநல்லூரில் கோமதி மில் இருக்கிறது. அங்கே ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். அந்த மில் 20 ஆண்டுகளுக்கு மேலாக இயங்கி வருகிறது. 'ஏ' மில்லாக இருந்து, 'பி' மில்லாக இருந்து இப்போது வேறு பல மாநிலங்களில் மூலதனம் போட்டு மில் ஆரம்பிக்கும் முறையில் அது வளர்ந்திருந்தும் கூட அங்கே உள்ள ஆயிரம் தொழிலாளர்களுக்கு இ. எஸ். ஐ. திட்டம் இன்னும் அமல்படுத்தப்படவில்லை, என்பதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அதே போன்று இ. எஸ். ஐ. மருத்துவமனைகளில் கொடுக்கிற மருந்துகளும்கூட போதுமானவையாக இருக்கவில்லை. உதாரணமாக செங்கோட்டையில் இருக்கக்கூடிய இ.எஸ்.ஐ, ஆஸ்பத்திரியில் அதனுடைய மெம்பர்கள் 650 பேர். இவர்களுக்குக் கொடுக்கக் கூடிய மருந்தின் அளவு எவ்வளவோ அதே அளவு தான் விக்கிரமசிங்க புறத்தில் உள்ள 6,500 உறுப்பினர்கள் கொண்ட இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிக்கும் கொடுக்கப்படுகிறது. இது மாதிரி மிகக் குறைந்த அளவில் மருந்துகள் கொடுக்கப்படக்கூடிய ஆஸ்பத்திரிகள் பல இருக்கின்றன.

இன்று இ.எஸ்.ஐ. ஆஸ்பத்திரிகளில் தொழிலாளர்களிடமிருந்து பணம் வசூலிக்கிறார்கள். நம் அரசும் பணம் கொடுக்கிறது. மத்திய அரசும் பணம் கொடுக்கிறது. இ.எஸ்.ஐ திட்டத்திலிருந்தும் ஒரு பகுதி பணம் கிடைக்கிறது. இவ்வளவு பணம் கொடுக்கப்பட்டும்கூட தொழிலாளர்களுக்கு போதிய அளவிற்கு மருத்துவ வசதி கிடைக்கவில்லை. அந்த ஆஸ்பத்திரி ஆம்புலன்ஸ் ரிப்பேருக்கு போய் படுத்து இரண்டு ஆண்டுகளாகியும் அது வேலை செய்யவில்லை.

உதாரணமாக, விக்கிரமசிங்கபுரம் ஆஸ்பத்திரியை எடுத்துக் கொண்டால் அங்குள்ள ஆம்புலன்ஸ் ரிப்பேருக்குப் போய் இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. இன்னும் அந்த டிஸ்பன்ஸரிக்குப் பக்கத்திலேயே அந்த ஆம்புலன்ஸ் வரவில்லை. (மணி அடிக்கப்பட்டது).

அடுத்தபடியாக, ஆஸ்பத்திரிகளில் சத்தான உணவு கொடுக்கவேண்டும். அதை கான்ட்ராக்ட்க்கு விட வேண்டாம். உறுப்பினர் ஒருவர் கூறியது போல் சாமான்களை வாங்கி நாமே சமைத்து ஆஸ்பத்திரிகள் மூலம் விநியோகிக்கும் முறையை கடைப் பிடிக்க வேண்டும்.

அடுத்தபடியாக, ஆஸ்பத்திரிகளில் உள்ள டாக்டர்களை எடுத்துக் கொண்டால், யாராவது தற்செயலாக மரணம் அடைந்து போஸ்ட்மார்டம் செய்யவேண்டும் என்றால் உடனடியாக அது செய்யப்படுவது கிடையாது.............அவர்களுக்கு கொடுக்கவேண்டிய மாமூலை கொடுத்த பிறகுதான் போஸ்ட் மார்டம் நடைபெறுகிறது. சொல்லப்போனால் செத்த பிணத்திடம் கூட பணம் வாங்கக்கூடிய அளவிற்கு, இத்துறையில் இதற்கு முன் ஊழல் நடந்தது என்றால் அதை அகற்றுவதற்கு கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இம்மன்றத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, மருந்து தயாரிக்கும் தொழிலை தேசியமாக்க வேண்டும். ஆஸ்பிரோவின் அடக்க விலை 3 பைசா என்ற அரசாங்க புள்ளிவிவரம் சொல்கிறது. ஆனால் ஆஸ்பிரோ இன்று 15 காசுக்கு விற்கப்படுகிற நிலை இருப்பதால் மருந்து தொழிலை, மருந்து தயாரிக்கும் தொழிலை தேசியமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆஸ்பத்திரிகளில் மருந்துகள் எழுதிக் கொடுக்கும்போது இன்ன கடையில் வாங்கவேண்டும் என்று டாக்டர்கள் சொல்லும் முறை ஒழிக்கப்பட வேண்டும். மருத்துவ சுகாதாரத் துறை நல்லமுறையில் செயல்பட வேண்டுமென்றால் நான் முதலமைச்சர் அவர்களை பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். மாவட்ட தலைமை மருத்துவ மனைகளை பார்க்க வேண்டுமென்றும் முன் அறிவிப்பு இல்லாமல் அந்த ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று இந்தக் குறைபாடுகளைக் களைய முயற்சிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு இந்தப் பிரச்னையை முடித்துக் கொள்கிறேன். அடுத்தபடியாக...............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடித்துக்கொள்ளுங்கள். இன்னும் பேசுவதற்கு 23 பேர்கள் இருக்கிறார்கள்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : குடிநீர் வடிகால் வாரியம் சமீப காலத்தில் வேறு ஒரு கட்டடத்தில் குடியேறி

யிருக்கிறது. முன்பு அது குடியிருந்த கட்டடத்திற்குக் கொடுக்கப்பட்ட வாடகை எவ்வளவு என்று கேட்டிருந்தேன். சரியான பதில் கிடைக்கவில்லை.

ஆகவே எனக்கு கிடைத்திருக்கிற தகவலை வைத்துக் கொண்டு சொல்கிறேன். அந்தத் தகவல் தவறாக இருந்தால் திருத்திக் கொள்கிறேன். முன்பு மாதம் ஒன்றுக்கு கொடுக்கப்பட்டு வந்த வாடகை ரூ. 6,000; ஆனால் இப்போது குடியேறி யிருக்கிற கட்டடத்திற்கு வாடகை ரூ. 60,000 பத்து மடங்கு அதிகமாக இருக்கிறது. இதை மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களும், பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களும் மூன்று பேர்களும் சேர்ந்து என்ன ஊழல் இதில் ஏற்பட்டிருக்கிறது என்பதை விசாரிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : எப்போது இந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது! மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற வாடகை மாதத்திற்கா, வருடத்திற்கா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : இது இந்த ஆட்சி ஏற்படுவதற்கு முன்னதாக. இன்னும் சொல்லப்போனால் ராஷ்ட்ரபதி ஆட்சி இருந்த காலத்தில், இருபது அம்சத் திட்டம் என்ற பெயரால் அறிவிக்கப்பட்ட தொல்லை ஆட்சி நடத்திய காலத்தில் என்று நான் வேதனையோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே இந்த ஆட்சியை நான் குறை சொல்ல விரும்பவில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : கொள்ளை ஆட்சி என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள்.......................

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : நான் தொல்லை ஆட்சி என்று தான் கூறினேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொல்லை ஆட்சி என்று கூறியிருந்தால் பரவாயில்லை.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : ராஷ்ட்ரபதி ஆட்சிக் காலத்தில் அது நடைபெற்றது. வாடகை மாதத்திற்கே தவிர வருடத்திற்கல்ல. ஊழல் நடந்திருக்கிறது. அதைப் பற்றி விசாரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

[திரு பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்] [1977 ஆகஸ்ட் 13

[நண்பகல் 12-00]

<u>திரு. மி. ஜான் வின்சென்ட்:</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு மருத்துவ மானியத் துறை மான்யக் கோரிக்கை மீது எனது கருத்துக்களைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன். நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி தொகுதியில் களக்காட்டு பெல்சியம் பாதிரியால் கொடுக்கப்பட்ட 'டொமினிக் பைர்', என்ற மருத்துவமனை இப்போது அரசால் எடுக்கப்பட்டு நடந்து வருகிறது. ஆனல் இங்கு நல்ல முறையில் மருந்துகள் வழங்கப் படாத நிலையில் ஏழை மக்கள் மிகவும் கஷ்டப் படுகிறார்கள். இங்கு மருந்து வாங்கிக் கொள்ளலாம் என்று நம்பி பார்த்துவிட்டு மருந்துகள் இல்லாத காரணத்தால் மிகவும் கஷ்டத்தோடு பல மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற பாளையங்கோட்டைக்கு செல்லவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. பெல்ஜியம் பாதிரி அவர்களால் இலவசமாக அளிக்கப்பட்ட இந்த மருத்துவ மனை பின்தங்கிய நிலையில் இருப்பதால் அரசு இதில் தலையிட்டு, அங்கு மக்களுக்கு தேவைப்படும் எல்லாவிதமான மருந்துகளையும் வழங்கி செவ்வனே நல்ல முறையில் நடைபெறுவதற்கு அரசு தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இது டவுன் பஞ்சாயத்தில் இருப்பதால் பல ஊர்களிலிருந்தும் மக்கள் இந்த ஆஸ்பத்திரியை நம்பித்தான் வருகிறார்கள். இல்லையென்றால் அவர்கள் பாளையங்கோட்டைக்குச் செல்ல வேண்டிய நிலைமை தான் ஏற்படுகிறது. பாளையங்கோட்டைக்கு செல்ல வேண்டுமென்றால், அதற்குரிய பணவசதி அங்குள்ள மக்களிடம் கிடையாது. அதோடு பஸ் போக்குவரத்து வசதியும் கிடையாது. இந்த மருத்துவ மனைக்கு அடுத்தபடியாக அவர்கள் செல்லவேண்டுமென்றால் களக்காடு மருத்துவமனைக்குத்தான் செல்லவேண்டும். மேலும் இங்கு நோயாளிகளின் கூட்டம் அதிகம் இருப்பதால் அங்கு ஒரு ஆண் டாக்டர் தேவை என்று பலமுறை ஆஸ்பத்திரியிலிருந்து அரசுக்கு தெரிவித்திருந்தும் அங்கு ஆண் டாக்டர் நியமிக்கப்படவில்லை. ஆகவே, உடனடியாக களக்காடு மருத்துவ மனைக்கு ஒரு ஆண் டாக்டர் அப்பாயின்ட்மென்ட் செய்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் பெல்ஜியம் பாதிரியார் ஆஸ்பத்திரியில் வேலை செய்த ஊழியர்கள் இன்றைக்கு அரசு ஏற்றுக் கொண்டதின் காரணமாக நல்லமுறையில் ஆஸ்பத்திரிக்கு வரமுடியாத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் அங்கு அவர்களுக்கு போய்வர வசதியாக பஸ்போக்குவரத்து இல்லாத காரணத்தால் ஊழியர்களும் பாதிக்கப்படுகிறார்கள், அதே நேரத்தில் மக்களும் பாதிக்கப் படக்கூடிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே இதில் அரசு தலையிட்டு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

1977 ஆகஸ்ட் 13] [திரு. மி. ஜான் வின்சென்ட்]

மேலும் தாலூகாவிலுள்ள மருத்துவ மனைகளிலும், கிராமங்களிலுள்ள மருத்துவமனைகளிலும், மாநகரங்களில் இருக்கின்ற மருத்துவமனைகளில் இருக்கின்ற ஷிப்ட் முறையில் வேலை செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும். குறிப்பாக களக்காடு நாங்குநேரி இந்த இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளையும் ஷிப்ட் முறையை கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் களக்காடு ப்ரிடா மோனியர் அரசு மருத்துவமனையில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு இது வரை அப்ஸார்ப்ஷன் ஆர்டர் கொடுக்காத நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்த ஊழியர்களுக்கு அப்ஸார்ப்ஷன் ஆர்டர் வழங்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் நாங்குநேரியை சுற்றியுள்ள இடத்திலிருந்தும், அதன் சுற்றுவட்டாரத்திலிருந்தும் கொலைகேஸ்கள் வரும்போது, இந்த நாங்குநேரி ஆஸ்பத்திரியில் உடலை கொண்டு வந்துதான் போஸ்ட் மார்ட்டம் செய்கிறார்கள். மேலும் இப்படிப்பட்ட கேஸ்கள் நான்கைந்து நாட்கள் கழித்து இங்கு கொண்டு வருவதால், ஊரின் மத்தியில் இருக்கின்ற இந்த மருத்துவ மனையில் கொண்டு வந்து போஸ்ட்மார்ட்டம் செய்யும்போது, ஏற்படுகின்ற துர் நாற்றம் மக்களால் தாங்கமுடியாத அளவுக்கு இருக்கிறது. ஆகவே போஸ்ட்மார்ட்டம் செய்வதற்கு என்று தனியாக புறப்பகுதியில் கட்டிடம் கட்டி, அங்கு இப்படிப்பட்ட போஸ்ட்மார்ட்டம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இந்த நான்குநேரி ஆஸ்பத்திரிக்கு குறிப்பிட்ட இடங்களிலிருந்துதான் வியாதியஸ்தர்கள் வருகிறார்கள். நாங்குநேரி, களக்காடு, மூலக்கருப்பட்டி போன்ற இடங்களிலிருந்து இந்த ஆஸ்பத்திரிக்குத்தான் வர வேண்டியிருக்கிறது. இவர்களுக்கு, வருவதற்கு முதலில் பணவசதியும் கிடையாது, அடுத்தது பஸ் வசதியும் கிடையாது. ஆகவே இந்த மூன்று இடங்களிலிருந்தும் பஸ்போக்குவரத்து வசதி செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நாங்குநேரி டவுனிலிருந்து தாலூகா அலுவலகத்திற்குப் பக்கத்தில் இருக்கும் மருத்துவமனைக்குச் செல்வதற்காக, தினமும் பல நோயாளிகள் காத்துக்கொண்டு இருக்கிறார்கள், அவர்கள் இன்றைக்கு மருத்துவ மனைக்குச் செல்லவேண்டுமானல், நடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, நாங்குநேரி டவுனிலிருந்து, தாலூகா அலுவலகம் வரை டவுன்பஸ் வசதி ஏற்படுத்தித் தந்தால், நிச்சயம் அதனல் ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு மிகவும் வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஓமியோபதி டாக்டர்கள் என்று சொல்லிக்கொண்டு கிராமங்களிலே சில பேர் ஊசி போடுகிறார்கள். அப்படி ஊசி போட்டதன் காரணமாக எனது தொகுதியில் பெருமாள்குளம்

கிராமத்தில் 12 வயதுள்ள இரு சிறுவர்கள் கை விளங்காமல் போய் விட்டது. எப்படியோ அவர்கள் ஓமியோபதி டாக்டருக்கான லைசென்ஸ் வாங்கி விடுகிறார்கள். ஆனால் நல்ல முறையிலே பிராக்டிஸ் செய்வது கிடையாது. எனவே, இதை நல்ல முறையிலே ஆராய வேண்டிய விஷயமாக இருக்கின்ற காரணத்தால் அப்படி பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு ஊசிபோட்ட அந்த டாக்டர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் ஏராளமான குழந்தைகளுடைய வாழ்வு நாசமாகக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும், நெல்லையிலே பாளையங்கோட்டையிலே, குறிப்பாக பெரிய ஆஸ்பத்திரியிலே ஏழை எளிய மக்கள் அங்கு சென்று வைத்திய வசதி பெற வேண்டுமானால், முடிவதில்லை என்ற புகார் வந்திருக்கிறது. வசதி படைத்தவர்கள் தான் இன்-பேஷன்டாக சேரமுடியும், நல்ல முறையிலே வைத்திய வசதி பெறமுடியும், ஆனால் கஷ்ட நிலைமையிலே உள்ளவர்கள், லஞ்சம் கொடுத்தால் தான் உள்ளே அனுமதிக்கப்படுவார்கள், நல்லமுறையிலே கவனிக்கப்படுவார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, இந்த ஆஸ்பத்திரியிலே ஏழை எளிய மக்கள் அனுமதிப்பதுடன், லஞ்சம் வாங்காமல் அவர்களுக்கு வைத்திய வசதி கிடைக்கவும், அவர்களைகவனிக்கவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சில சந்தர்ப்பங்களிலே, எங்கேயாவது கலவரத்திலே, குழப்பத்திலே வெட்டுக்காயம், அல்லது குத்துக்காயம் ஏற்பட்டால், போலீசார் முதலில் அவர்களை விசாரணை செய்கிறார்களே தவிர அவர்களை உடனடியாக டாக்டர்களிடமோ அல்லது ஆஸ்பத்திரிக்கோ எடுத்துச் செல்வதில்லை. எனவே, அப்படிப்பட்டவர்களை உடனடியாக ஆஸ்பத்திரிக்கு அனுப்பி சம்பந்தப்பட்ட டாக்டரிடம் காட்டி, பின்னர் அவர்களிடம் விசாரணை நடத்துவது, போலீஸ் நடவடிக்கை எடுப்பது போன்று ஏற்பாடு செய்தால் கிராமங்களிலே உள்ளவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மேலும், நெல்லை மாவட்டத்திலே, பாளையங்கோட்டையிலே, இந்திய மருத்துவமனையிலே இன்-பேஷண்டுகளை அனுமதிப்பது கிடையாது. ஆனால், இறுதி ஆண்டு கல்லூரிப் படிப்பு படிக்கும் மாணவர்களுக்கு, அவர்களது திறமை வளர்வதற்கு, இந்த இன்-பேஷண்டுகள் அனுமதி செய்தால்தான் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். எனவே அதையும் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால், மாணவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் ஒரு பிரச்சினை, நிதி வசதி இல்லாமல், பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும் மருத்துவ மனைகள் கட்டமுடியாத நிலைமைகள் இருக்கின்றன. உதாரணமாக, சிவகாசி ஒன்றியத்தில் திருத்தங்கல் நகரத்திலே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆரம்ப காலத்திலே அங்கே ஒரு ஆரம்ப சுகாதார மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டு, இப்போது நல்லமுறையில் நடக்கவில்லை. அங்கே ஒரு மருத்துவமனை கட்டுவதற்கான ஒரு திட்டம் இருந்தும், நாளதுவரை அது நிறைவேற்றப் படவில்லை. ஆகவே, அங்கே மருத்துவமனை திறக்கப்பட்டு நல்லதொரு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கிராமங்களிலே தாய் சேய் நல விடுதிகள் பல இருக்கின்றன. குறிப்பாக, நாங்குநேரி ஒன்றியத்திலே அப்படி ஒன்று இருந்தும், போதுமான அளவுக்கு மருந்தில்லை. இப்படி பல இடங்களிலே மருத்துவமனைகள் ஏற்படுத்துவதோடு நிற்காமல், ஓரளவுக்கு முதல் உதவி அளிக்கக்கூடிய வகையிலே அங்கே மருந்து வசதிகள் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

[பிற்பகல் 12.10]

திரு. எஸ். ஆர். இராதா: துணைத் தலைவர் அவர்களே: மருத்துவத் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, சமூகநலத் துறை ஆகிய மானியங்களை வரவேற்றுப் பேசுகிற நேரத்தில், இன்றைக்கு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டது பற்றி பல்வேறு கருத்துக்கள் நாட்டில் இருந்தாலும் தமிழ்நாட்டைப் பொறுத்தவரை இந்த மருத்துவக் கல்லூரித் தேர்வைப் பொறுத்தவரையிலே இதுவரையில் இருந்து வந்த சூழல் நிலைமையை மாற்றி, இதிலே ஏதோ பேரம் பேசுகின்ற முறை இருந்ததை மாற்றி நல்லமுறையில் அந்த மாணவர்கள் தேர்வு நடைபெற்றிருக்கிறது என்பதைத் தமிழ்நாட்டு மக்கள் வெகுவாகப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய நினைவில் இன்னும் இருக்கிறது—மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்க்கிற நேரத்தில் வெளிநாடுகளில் இருந்தெல்லாம் பணம் வாங்கிய கதைகள் எல்லாம் இருந்ததை மறக்கவில்லை என்று தெரிவித்து இன்றைக்குப் பணம் கொடுத்தால்தான் இடம் கிடைக்கும் என்ற நிலைக்கு மாறாக மார்க்குகள் வாங்கினால்தான் இடம் கிடைக்கும் என்ற நிலைமையை உருவாக்கிய நம்முடைய முதலமைச்சரைத் தமிழ்ச் சமுதாயத்தின் சார்பில் பாராட்டியாக வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இன்றைக்கு எந்த அளவுக்கு இருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கிற நேரத்தில் நம்முடைய மருத்துவக் கல்லூரிகள் அனைத்தும் நகரப் பகுதிகளிலே இருக்கும் காரணத்தால் நகரத்தில் வந்து படிக்கின்ற மாணவர்கள் நகரத்தில் இருக்கும் எல்லாவிதமான உல்லாச வாழ்க்கை

யையும் அனுபவிக்கின்ற நிலை ஏற்பட்டு பிறகு டாக்டரான பிறகு கிராமங்களுக்குச் செல்லவேண்டுமென்று சொல்லுகிற நேரத்தில் நிச்சயமாக அவர்களால் செல்ல முடியவில்லை. எனவே நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்—அரசு ஆரம்பிக்கின்ற புதிய மருத்துவக் கல்லூரிகளை நிசசயமாக கிராமப் பகுதி களிலே, நகரமே இல்லாத கிராமப் பகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன். இன்று கிராமங்கள் தான் டாக்டர்களைத் தேடிக் கொண்டிருக்கின்றனவே தவிர, டாக்டர்கள் கிராமங்களைத் தேடுவதில்லை. அதனால் ஏற்படு கிற விளைவுகள் என்ன ? டாக்டர்களை மாற்றுகிற நேரத்தில்—என்னுடைய நினைவு சரியாக இருக்கிறது—திராவிட முன்னேற்ற கழகத்தில் நான் செயலாளராக இருந்த நேரத்தில் கும்பகோணத்தில் டாக்டரை மாற்றவேண்டுமென்று அதிகாரிகளை கேட்ட நேரத்தில் மாற்ற மறுத்துவிட்டார்கள். ஆனால் அதே நேரத்தில் திருப்பனந்தாளில் இருப்பவர் மூவாயிரம் ரூபாய் கொடுத்து மாற்றுதல் உத்தரவை வாங்கினர். இன்னொருவரும் அதேபோன்று மூவாயிரம் ரூபாய் கொடுத்து மாற்றுதல் உத்தரவை ரத்து செய்தார். அதை முதலில் ஒழித்துக் கட்ட அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதை ஒழித்துக் கட்டினால்தான் டாக்டர்களைப் போடுகிற இடத்தில் போகச் சொல்ல முடியும். கிராமங்களுக்குப் போகக்கூடிய நிலைமை உண் டாகும்.

பெரிய மருத்துவ மனைகளில் டாக்டர்களுக்கு என்று பெட்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அப்படி ஒதுக்கப்பட் டிருக்கின்ற பெட்களில் உள்ள நோயாளிகளை மற்ற டாக்டர்கள் கவனிப்பதில்லை. அவர்களுக்கு மேல் இருக்கிற டாக்டர்கள் யாராவது வந்தாலும் பார்ப்பதில்லை. அது அந்த டாக்டர் பெட், நான் பார்க்கமாட்டேன் என்று ஏதோ அரசியல் பேசுவது போன்று இருக்கிறது. ஆர். எம். ஓ., சி. எம். ஓ. எல்லாம் அந்த டாக்டர் பெட், நான் பார்க்கமாட்டேன் என்று சொல் கிற நிலைமையைப் போக்க இந்த அரசு கவனித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைக்கு டாக்டர்கள் என்ன மருத்துவம் கொடுக் கிறார்கள் என்று யாராலும் கண்டு பிடிக்கமுடியாது. போலிஸ் துறையில் ஒரு வழக்குப் போட்டால் எந்த முறையில் வழக்கு போடப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடித்து விட முடியும்.
* * மருத்துவ மனைகளில் முறை யாக மருத்துவம் செய்கிறார்களா என்பதைக் கண்காணிக்க திடீர் திடீரென்று போய்க் கண்காணிக்க வேண்டுமென்ற நிலைமை இருக்கவேண்டும்.

இன்றைக்கு மாவட்டத்திலிருக்கிற மருத்துவ மனைகளைப் பார்க்கின்ற நேரத்தில் டி. எம். ஓ. டி. எம். எஸ். என்று இருவரை வைத்துக் கொண்டு மூன்று இலாக்காக்களை மருத்துவத்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.14இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

துறையில் வைத்திருக்கிறார்கள். இந்த இலாகாவிலே இருப்பவரை இன்னொரு இலாகாவுக்கு மாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. இந்நிலைமையை மாற்றி எல்லா இலாக்காக்களுக்கும் தேவையான நிலைமையில் டாக்டர்களை மாற்றும் நிலைமையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்டங்களிலே இருக்கின்ற மருத்துவ மனைகளிலே அதி காரியாக இருக்கிற டி. எம். ஓ. அங்கே நிர்வாக அதிகாரி யாகத்தான் இருக்கிறாரே தவிர அந்த மருத்துவ மனைகளைக் கண்காணிப்பவராக இருக்கிறாரா என்றால் இல்லை. அவர் எப்படி இந்த மருத்துவமனைகள் செயல்படுகின்றன என்பதைப் பார்க்கிற நிலைமை இல்லை. இந்த நிலைமை மாற்றப்பட வேண்டும்.

இந்த மருத்துவமனைகளின் நிர்வாகங்களைப் பார்க்கிற நேரத்திலே அங்கே நிர்வாகத்தைக் கவனிக்கிற அதிகாரிகள் ஏதோ சாதாரண கிளார்க்குகள் போல்தான் இருக்கிறார்கள், அவர்கள் கிளார்க்கு என்ன செய்வார்களோ அதைத்தான் செய் கிறார்களே தவிர மருத்துவத் துறையிலே எந்தவிதமான பணியும் செய்வதில்லை, அவர்களுக்கு மருத்துவப் பயிற்சி இல்லை என்ற நிலைமை இருக்கிறது. நான் புத்தகங்களிலே படித்திருக்கிறேன், மேல்நாடுகளிலே அமெரிக்கா போன்ற நாடுகளிலே ஆஸ்பத்திரி அட்மினிஸ்ட்ரேஷனைப்பற்றி தனியாகப் படித்து பயிற்சி பெற்ற வர்கள்தான் நிர்வாகத்தைக் கவனிக்கிறார்கள், அப்படிப்பட்ட பயிற்சிமுறை இங்கே இல்லை, ஆகவே அந்த முறையை அம லாக்கக்கூடிய முறையிலே தமிழ்நாட்டிலே அப்படிப்பட்ட பயிற்சியை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் நிர்வாகத்திலே உள்ள முறைகேடு களைச் சீர்திருத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இந்த மருத்துவமனைகளிலே உள்ள சீர்கேடுகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் ஒரே ஒரு உதாரணத்தை மட்டும் சொல்லலாம் என்று நினைக்கிறேன். நேற்றைய தினம் சென்னை பொது மருத்துவ மனைக்குச் செல்லவேண்டிய அவசியம் ஏற் பட்டது. அங்கே இருக்கின்ற கக்கூஸ் குழாயைத் திறந்தால் வருகின்ற தண்ணீர் அந்த கக்கூஸ் நாற்றத்தை விட அதிகமாக நாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. மனிதனைச் சாகடிக் கிற நாற்றத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. . . . . . .

திரு. மு. அரங்கநாதன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் திரு. இராதா அவர்கள் பேசகின்றபோது * * * * என்று சொன்னார்கள்.

* * ஆகவே குறிப்பிலே இருக்கலாமா என்பதை அருள்கூர்ந்து கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.17 இல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * * என்று தெரியவில்லை என்று சொன்ன அதே வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட ஆணையிடுகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, * * * சென்னை பொது மருத்துவ மனையிலே குழாயிலே வருகிற தண்ணீர் அந்த அளவிற்கு நாற்றமடிக்கிறது. கூவம் ஆற்று தண்ணீர் நாற்றம் அங்கே வந்துக் கொண்டிருக்கிறது. கூவத்தை சீரமைக்கவேண்டுமென்று கோடிக்கணக்கான ரூபாய்கள் கொட்டியபிறகும் கூட அந்தத் தண்ணீர் நாற்றமாகத்தான் இருக்கிறது என்றால் அதை உடனடியாகப் போக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொன்று எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. 1974 ஆம் ஆண்டு மத்திய அரசிடமிருந்து நீர் மாசு தடுப்பு வாரியம் ஆரம்பிப்பது பற்றி மாநில சர்க்காருக்கு ஒரு யோசனை தெரிவிக்கப்பட்டது. அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இதை இந்த அரசு பரிசிலித்து அந்தத் திட்டத்தை நிறைவேற்றி நல்ல நீரை வழங்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மருத்துவத் துறையிலே ஓ. பி. என்று வைத்திருக்கிறார்கள். அங்கே பார்த்தால் பெரிய சந்தைக் கூட்டத்தைப்போல மக்கள் வரிசை வரிசையாக நின்றுகொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரி ஜிப்மர் ஆஸ்பத்திரியிலே ஒரு முறை இருக்கிறது. ஒரு நோயாளி வருகிறார் என்றால் அவர் அதற்குப் பிறகு என்றைக்கு வந்தாலும் முன்னாலே வந்த தேதியைக் கண்டுபிடித்து இன்றைக்கு என்ன செய்யவேண்டுமென்று அறிவதற்காக ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய பைலையே வைத்திருக்கிறார்கள். நம்முடைய மருத்துவமனைகளிலேயும்—இங்கே பார்த்தால் ஏதோ பஜனை மடத்திலே சுண்டல் வாங்குவதைப்போல் நின்றுகொண்டிருக்கிறார்கள்—அந்த முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமங்களுக்கு அதிகமாகப் பணம் ஒதுக்கப்படுகிறது என்ற நிலைமை இல்லாததால் நகர்ப்புறங்களிலே உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு வந்தால்தான் நோய் தீரும் என்ற நிலைமை மாற்றப்படவேண்டும். கிராமப் பகுதிகளுக்கு இன்னும் அதிகமான பணத்தை ஒதுக்கி அங்கேயுள்ள மக்கள் உடனடியாக நல்ல

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 12.17 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

மருத்துவ வசதிகளைப் பெறுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குடும்ப நலத் திட்டத்தின் அடிப்படையில் 1-4-1976 க்குப் பிறகு அரசு ஊழியர்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு அட்வான்ஸ் இன்க்ரிமெண்ட் என்று கொடுக்கிறார்கள்.

[பிற்பகல் 12.20]

அதை 1—4—1976·க்கு முன்னாலே செய்திருப்பவர்களுக்குக் கூட சேர்த்து அவர்களுக்கும் அந்த நல்ல வாய்ப்பைத் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்வேன்.

மருத்துவ மனைகளிலே இன்றைக்குத் தரப்படும் உணவு காண்ட்ராக்ட் முறையிலேயிருந்து தரப்படுகிறது. பலபேருக்கு இன்றைக்கு உணவு வழங்கும் முறையில் சரியில்லாத நிலை இருப்பதை மாற்றியமைக்க வேண்டும். சிலருக்கு உணவே தர வேண்டாத மருத்துவ நிலைகூட இருக்கிறது. அவர்களுக்கு உணவு தருகின்ற நிலையை மாற்றி வெறும் மருந்து மட்டும் தருகின்ற முறைகளை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மருந்து தருகின்ற நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மருந்து வாங்குகின்ற டிரக் மருத்துவமனைகள் எந்த அளவிற்கு இருக்கின்றது என்பது நமக்குத் தெரியும். என்றாலும் இந்த டிரக் மருந்தகங்கள் இன்றைக்கு இந்த இலாக்காவில் இருப்பதால் சொல்கிறேன். ஒரு மருந்துக்கடை வைக்க வேண்டுமென்கிற பொழுது அங்குள்ள டிரக் இன்ஸ்பெக்டர் பார்த்துவிட்டு, இன்றைக்குச் சென்னையிலே இருப்பவர்கள்தான் அதற்கு அனுமதி தருபவர்களாக இருக்கிறார்கள். அந்த நிலைமையை மாற்றி டிரக் இன்ஸ்பெக்டர் பார்த்துவிட்டாலே போதும், அந்த மருந்து விற்பனை நிலையத்தைத் துவங்குவதற்கான அனுமதியைத் தரும் நிலைமையை உண்டாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்வேன்.

நான் இந்த நேரத்திலே மற்றொன்றையும் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைக்கு மருந்து விற்பனை நிலையங்களிலே மருந்து கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. குழந்தைகளுக்குத் தேவையான குளுகோஸ், அமுல், அமுல் ஸ்பிரே போன்ற குழந்தைகள் உணவுகூடப் பல நாட்களாகக் கிடைக்காமல் அநேக கடைகளில் இல்லை இல்லை என்று கையை விரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. எஸ். ஆர். இராதா] [1977 ஆகஸ்ட் 13

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

இது எதனால் ஏற்பட்டது என்பதை அதிகாரிகள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன் (மணி அடிக்கப் பட்டது).

முதல் மணி அடிக்கப்பட்டதால் நான் விரைவாகச் சொல் கிறேன். இந்தக் குடிநீர் வழங்கு வாரியத்தைப்பற்றி ஒன்றைச் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தக் குடிநீர் வழங்குவாரியம் சிறப் பாகப் பயன்படும் இந்த நேரத்தில், நகராட்சிகளிலே குடி நீர் வழங்கும் நேரத்தில் கட்டணங்களை விதிக்கும் நேரத்தில் வியாபார முறையிலே கட்டணத்தை வசூலிக்க வேண்டுமென்று உத்தரவு போடுகிறார்கள். அந்த உத்தரவு குடிநீர் வழங்குவதை ஆதாரமாகக் கொண்டு இருக்கக்கூடாது என்பதை நான் தெரி வித்துக் கொண்டு என்னுடைய தொகுதியைப் பற்றி இரண் டாவது மணி அடிப்பதற்கு முன்னால் சொல்லிவிடுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே உள்ள ஆஸ்பத்திரியிலே குடந்தை மருத்துவமனைகளுக்காக 5,000 ரூபாய், பல்நோய்ப் பிரிவு ஆரம்பிக்கத் தரப்பட்டிருப்பதற்காக நன்றி தெரி வித்துக் கொள்கிறேன். அப்படி நன்றியைத் தெரிவிக்கின்ற அதே நேரத்தில் என்னுடைய தொகுதியான கும்பகோணத்தில் இருக்கின்ற ஆஸ்பத்திரியானது நூற்றாண்டு கால ஆஸ்பத்திரி, பழைய கால கட்டிடத்திலேயே இருந்து கொண்டிருக்கிறது. நான் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். நம் முடைய முதலமைச்சரவர்கள் எங்கள் ஊரிலே இருந்தவர்கள். எங்கள் ஊர் மருத்துவ மனைக்குச் சென்றவர்கள் என்ற முறையில் அந்த மருத்துவ மனையை ஒரு மாவட்ட அளவிற்கு உயர்த்தி வசதி வாய்ப்புகளை ஏற்படுத்தி, கண், காது, மூக்கு, தொண்டை போன்ற பிரிவுகளுக்கெல்லாம் அங்கே டாக்டர்களைப் போட வேண்டு மென்று நான்கேட்டுக் கொள்கிறேன். அருகிலே உள்ள எங்கள் மாவட்டத் தலைநகரான தஞ்சையிலே இரண்டு பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. ஒரு ஆஸ்பத்திரியைப் பார்த்தால் உள்ளே போய் வரலாம் என்று இருக்கும், இன்னொரு ஆஸ் பத்திரிக்குப் போனால் ஏன் போனோம் என்று ஆகிவிடும். அந்த நிலைமை இன்றைக்கிருப்பதை மாற்ற வேண்டுமென்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தஞ்சையிலே இருக்கின்ற அந்த மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன். தஞ்சை மருத்துவ மனையிலே, மெடிகல் காலேஜில் எக்ஸ்ரே எடுக்கும் நிலைமையும், அறுவை சிகிச்சை செய்வதற்கும், ஊசி போடுவதற்கும் ஒரு நிலைமை இன்றைக்கு இல்லாமல் அதற்காகத் தஞ்சையிலே இருக்கின்ற இராஜா மிராசுதார் ஆஸ்பத்திரிக்கு வர வேண்டியிருக்கின்ற நிலைமையை மாற்றி அந்த மருத்துவக் கல்லூரியிலே இந்தப் பிரிவுகளையும் உண்டாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டு, தலைவரவர்கள் இவ்வளவு நேரம் அனுமதி தந்ததற் காக என்னுடைய நன்றியைத் தெரிவித்து முடிக்கிறேன்.

1977 ஆகஸ்ட் 13]

*திரு. பொ. உத்திராபதி : பேரவைத் தலைவரவர்களே, மருத்துவத் துறைபற்றிய மானியக் கோரிக்கையின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என் கருத்துக்களைக் கூறிக்கொள் கின்றேன். தமிழ் நாட்டில், $4\frac{1}{2}$ கோடி மக்களுக்கு அவருடைய உயிர்களை நீண்டகால ஆயுளாக்குவதற்கும் நல்வாழ்வுத் திட் டத்தைக் கொடுப்பதற்கும் நமது முதலமைச்சரவர்கள் ரூ. 70 கோடிக்கு மேல் மானியம் கேட்டு இன்றைக்குச் சட்டமன்றத்தில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ரூ. 70 கோடி அந்தத் திட்டத்திற்கு போதாது என்று சொல்லி, அந்தத் திட்டத்திற்கு இன்னும் கூட அதிகமாக நிதி ஒதுக்கீடு செய்யலாம் என்று சொல்கிறேன். ஏனென்று சொன்னால், தமிழ் நாட்டில் அதிக மான நோயாளிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அந்த நோய்களை எல்லாம் தீர்த்து, அந்த உயிர்களையெல்லாம் பாதுகாத்தால்தான் தமிழகத்தை ஒரு வளமிக்க தமிழகமாக உருவாக்க முடியும். அந்த அடிப்படையிலே வந்திருக்கக் கூடிய இந்தத் திட்டத்தினை நல்ல திட்டமாகக் கருதுகிறேன். ஆனால், இந்த திட்டத்தில் இதற்கு முன்னதாக நடந்திருக்கக்கூடிய விவரங் களையெல்லாம் பார்ப்போமானால் இந்தத் திட்டங்கள் மட்டும் போதாது.

மருத்துவமனை என்று சொல்லக்கூடிய நேரங்களில் இன்றைக்கு அரசு மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த அரசு மருத்துவ மனைகளைப் பற்றி எனக்கு முன்னால் பல உறுப்பினர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால், அரசு மருத்துவ மனைக்குச் செல்லக் கூடிய நேரங்களில் எல்லோருக்கும் ஒன்று ஞாபகம் இருக்கும். தஞ்சையிலே இருக்கக்கூடிய நாகூர் ஆண்டவன் கோயிலுக்குச் சென்றால், அங்கே நொய் இருக்கும். அந்த நொய்யை வாங்கி புறாக்களுக்குத் தர்மம் செய்கின்ற முறையில் தருவார்கள். ஆனால், தமிழ் நாட்டிலுள்ள மருத்துவ மனைகளுக்குச் செல்ல வேண்டு மென்றால், சில்லறையாக மாற்றி வைத்துக் கொள்ளவேண்டும். நோட்டுக்களாக மாற்றி வைத்துக் கொள்ள வேண்டும். முதல் படியில் அடி எடுத்து வைத்தால் சில்லறை கொடுக்கவேண்டும். அடுத்த படிக்குச் செல்வோமானால் நோட்டுக்களாகக் கொடுக்க வேண்டும். அதுவும் சிறு நோட்டாக இருக்கவேண்டும். அடுத்து, நோயாளிகளை பெட்டில் சேர்த்தால், அங்கே ஒரு கம்பவுண்டர் இருப்பார். இரண்டு நாட்களுக்கு பார்க்க மாட்டார்கள். ஏன் பார்க்கமாட்டார் என்றால் வீட்டுக்குப் போங்கள் என்பார். டாக்டர் வீட்டுக்குச் சென்றால், நோட்டை கவரிலே கூட வைத்துக் கொடுக்கக் கூடாது. ஏனென்றால், எண்ணிக் கொடுக்க வேண்டும். அப்படி எண்ணிக் கொடுத்த பிறகுதான் நோயாளிக்கு ஊசி போடுவார், மருந்து கொடுப்பார். அந்த நிலை தமிழகத்திலே இருக்கிறது. அதுவும் தஞ்சையிலே சொல்லிமுடியாது.

குறிப்பாக, திருத்துறைப் பூண்டியில் 20 தினங்களுக்கு முன்னால் சண்டை ஒன்று நடந்தது. அந்தச் சம்பவம் பற்றி திருத்துறைப் பூண்டியிலே இருக்கக்கூடிய காவல் துறையினரைக் கேட்டால் தெரியும். அந்தச் சண்டையில் கழுத்திலே பலவெட்டு விழுந்தது. கழுத்திலே வெட்டு விழுந்தவரை, காவல் துறையினர் திருத்துறைப் பூண்டி மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். மருத்துவ மனையில் 24 மணி நேரமும் கவனிக்கவில்லை. முதல் சிகிச்சை அளிக்கவில்லை. அதே காவல் துறையினர் நாகப்பட்டினம் மருத்துவ மனைக்கு எடுத்துச் செல்கிறார்கள். அங்கே சரியாகக் கவனிக்காமல், தஞ்சையிலே இருக்கிற மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றதற்குப் பிறகு, 24 மணி நேரமும் கவனிக்காததற்குப் பிறகு, வெட்டுப்பட்டவருடைய மனைவியை அழைத்து, அந்த டாக்டர் சில்லறையைக் கொடுத்தால்தான் பார்ப்பேன் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வெட்டுப்பட்டவருடைய மனைவி—தஞ்சைக்கும் திருத்துறைப் பூண்டிக்கும் வரவேண்டுமென்றால் 40 மைல் தூரம் திருத்துறைப்பூண்டிக்கு வந்து, கோழிக்குஞ்சு, செப்புக்குடங்கள் ஆகியவற்றை விற்று, அந்தப் பணத்தைக் கொடுத்ததற்குப் பிறகு, இன்றைக்குச் சௌகரியம் பெற்று அவர் வந்திருக்கிறார். இன்றைக்கு, அந்தச் சண்டை வழக்கில் இருக்கிறது. தேவைப்பட்டால், திருத்துறைப்பூண்டி காவல் துறையினரைக் கேட்டால் முதலமைச்சரவர்கள் அந்தப் பொறுப்பை வகிப்பதால், விவரம் தெரிந்து கொள்ளலாம் என்பதற்காக ஒரு சான்றாகச் சொல்லுகிறேன்.

இதேபோல், சென்னைத் தலைமை மருத்துவ மனையில் கடந்த மாதத்தில் எங்களது நாகை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் காத்தமுத்து அவர்கள் இருந்தார். நானும் உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்களும் அவரைப் பார்க்கச் சென்றோம். தஞ்சையிலே எப்படி இருக்கிறது என்று சொல்கிறோமோ அதேபோல் இங்கும் சுகாதாரம் இல்லை. நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்கிறோம், கேட்கக்கூடிய நேரத்தில் சரியான பதில் இல்லை என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். ஆகவே, இந்த முறையில் இருக்கக் கூடிய இந்த இலஞ்சத்தை எல்லாம் போக்கிட வேண்டும். ஏழை எளியவர்கள்தான் அதிகமாக அரசாங்க மருத்துவ மனைகளுக்கு செல்கிறார்கள். பணக்காரர்கள் தனியார் மருத்துவ மனைகளுக்குச் செல்கிறார்கள்.

[பிற்பகல் 12.30]

இந்த ஏழை எளிய மக்களை பாதுகாக்க வேண்டுமென்றால் மருத்துவமனைகளை சீராக்க வேண்டும். டாக்டர்களை சுத்தப் படுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு கொள்கிறேன். அதேபோல டாக்டர்கள் மாற்றங்கள் பற்றி எனக்கு

முன்னால் சொன்னார்கள். டாக்டர்களை மாற்றுவதிலே அதிகமாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டு மாற்றுவதும், பணம் கொடுக்காவிட்டால் மாற்றம் செய்யாத முறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அதற்கு போதிய பல ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன என்று சொல்லிக் கொண்டு இந்த முறையையும் சீர்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மருந்துகளை டாக்டர்கள் கொண்டு வீட்டிலே இருக்கிற மருத்துவமனையிலே வைத்துக் கொள்கிறார்கள். சர்க்கார் மருத்துவமனையிலும் வந்து பார்த்துக் கொள்வார்கள். அதனால் வீட்டிலே வந்து பார்க்கிற முறையை இந்த அரசு நீக்கி டாக்டர்கள் உத்தரவாதமான அரசாங்க மருத்துவமனையில் தான் நோயாளிகளைப் பார்க்கவேண்டும் என்று, இந்த சர்க்கார் யோசிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் மன்னார்குடி மருத்துவமனையிலே தண்ணீர் ஏற்றும் ராக்கட் மோட்டார் பழுதடைந்தது. அதைக் குறித்து சட்டமன்ற உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரியிடத்தில் சொல்லியும், அங்கு நோயாளிகளுக்கு சரியானபடி தண்ணீர் கொடுக்கப்படவில்லை. அதே போல் அரசு மருத்துவ மனையிலே பணியாற்றும் செவிலியர்கள் உதவியாளர்கள் சுப்பீரியர் சர்வீஸ் அளிக்கப்பட்டும், அதற்கான ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படவில்லை. அவர்களை துணி துடைக்கின்ற துறையில், சுத்தம் செய்கின்ற பணியில் பழைய அரசு ஈடுபடுத்தியதன் காரணமாக, போராட்டமே நடந்தது. இந்த அரசு அதை ரத்து செய்வதுடன், அவர்களுக்கு உரிய ஊதியவிகிதத்தை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீராணம் திட்டத்திற்கு 21 கோடி ரூபாய்க்கு ஒதுக்கப்பட்டு 22 கோடி செலவு செய்து, மேலும் 30 கோடி இருந்தால்தான் இத்திட்டம் நிறைவேறும். இந்தத் திட்டம் அந்த காண்டிராக்ட் எடுத்த சத்தியநாராயணாவையே விழுங்கிவிட்டது. மேலும் இந்தத் திட்டம் தமிழ்நாட்டையே விழுங்கக்கூடிய அளவுக்கு வந்திருக்கிறது. இந்தத் திட்டத்திலே ஏற்பட்டிருக்கக் கூடிய ஊழலை இந்த அரசு வெகு சீக்கிரத்திலே கண்டு பிடித்துவிடுவீர்கள் என்று தமிழ்நாட்டு மக்கள் ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஊழலைக் கண்டு பிடித்து மக்கள்

முன்னுள் அம்பலப் படுத்தவேண்டுமென்று இந்த அரசை பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். சென்னைக்குக் கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கிடைக்க இருக்கிறது. அதை உடன் சென்னை மக்களுக்கு கிடைக்கச் செய்யவும், கோவைக்கு சிறுவாணியிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது. கோவில்பட்டிக்கு தாமிரபரணியிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது, அருப்புக் கோட்டைக்கு வைகையிலிருந்து தண்ணீர் கிடைக்கிறது, அந்தத் தண்ணீரை இடையிலே இருக்கிற கிராமங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு சந்தர்ப்பம் அளித்த தலைவருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு முடிக்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : மாண்புமிகு தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுகின்ற பொழுது, தமிழ்நாட்டினுடைய ஒதுக்கப்பட்ட மக்களுடைய தானைத் தலைவராக இருந்த தந்தை பெரியார் அவர்களை நினைத்துக்கொண்டு பேச ஆரம்பிக்கிறேன். இந்த அரசு தந்தை பெரியார் அவர்களுடைய கொள்கையையும் அவர் கொண்டிருந்த கோட்பாடுகளையும் அமுல் படுத்துவதிலே அக்கறை கொண்டிருக்கிறது என்பதிலே நிறைய நம்பிக்கைக் கொண்டிருக்கிறவன் நான். அந்தப் பெரியார் அவர்கள் 1950-வது ஆண்டிலே, கம்யூனல் ஜி. ஓ. என்பதை இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தி, ஜனத்தொகை, விகிதாச்சார அடிப்படையிலே அரசாங்கத்தாலே தரப்படுகிற சலுகைகள், அந்தந்தப் பகுதி மக்களுக்குத் தந்தாக வேண்டுமென்று போராட்டம் நடத்தினார்கள். அந்தப் போராட்டம் வலுப் பெற்று, வேகம் அடைந்து வந்தது. ஆனால் இடைக்காலத்திலே என்ன காரணத்தாலோ அவைகளெல்லாம் மறந்து விடப்பட்டன. ஆகையினாலே, பெரியாரவர்கள் கொண்டிருந்த கொள்கைகளை இந்த அரசு ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற வகையிலே ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

இன்று மருத்துவத்திலே நான் பேசுகிறபொழுது, இதற்கு அடிப்படையான மருத்துவக் கல்லூரிக்குச் சேர்க்கப்படுவது மாணவர்களைப் பொறுத்தது. அந்த மாணவர்களை எப்படி சேர்க்கப்படுகிறார்கள், எந்த அடிப்படையிலே சேர்க்கப்படுகிறார்கள். எப்படி அவர்கள் சேர்க்கப்பட வேண்டுமென்பதை இந்த அரசு உன்னிப்பாக கவனித்து, செம்மைப்படுத்தி, இருந்த நிலைமைகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாம் தகுதி, திறமை அடிப்படையிலே மருத்துவக் கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தெரிந்து எடுக்கின்ற முறையை மேற்கொண்டிருக்கிறோம். இப்படித் தகுதி, திறமை என்ற முறையை

வைத்துக்கொண்டிருப்பதால், நாட்டிலே ஒடுக்கப்பட்ட சமுதாயங்களுக்கு இடம் இல்லாத நிலைமை ஏற்படும் என்கிற பயம் இங்கே இருக்கிறது. எனவே இந்த அரசு குறிப்பாக ஒரு சர்வே எடுக்கவேண்டும். அந்தச் சமுதாய மக்களுக்கு இது வரைக்கும் எத்தனை சதவிகித இடங்கள் கிடைத்திருக்கிறது. அதே நேரத்தில் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த இடங்கள் தரப்பட்டிருக்கின்றனவா எந்தக் குடும்பத்திற்கு அந்த இடங்களிலே வசதி செய்து தரப்பட்டிருக்கின்றது என்பதை ஒரு சர்வே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக கிராமப் பகுதிகளிலிருந்து வருகின்றவர்கள் அட்மிஷனுக்குச் செல்கின்றபோது பலவிதமான சங்கடங்கள் உள்ளன. They are placed under several handicaps. educational handicaps, extra curricular activities, expression, physical fitness.

அவர்கள் கிராமப்புறப் பகுதிகளிலிருந்து படித்து வருகிறவர்கள் என்ற காரணத்தினால் இந்தக் குறைகளை வைத்துக்கொண்டு அட்மிஷனுக்குச் செல்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு அட்மிஷன் தரப்படுவதில்லை. கிராமப்புறப் பகுதிகளிலிருந்து வருகின்ற காரணத்தினால் கல்வியின் நிலைமைகள் அவர்களுக்குச் சரிவர இல்லாத நிலையில் he lacks in expression. அதற்காக அவனுக்குக் கிடைக்க வேண்டிய தனி மார்க்குகள் கிடைப்பதில்லை. Extra-curricular activities. Social Service போன்றவைகளிலே அவனுக்கு சர்ட்டிபிகேட் கிடைப்பதில்லை. இவை நகர்ப்புறப் பகுதிகளிலிருந்து படிக்கின்ற மாணவர்களுக்கு கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. கிராமப் புறங்களிலிருந்து படித்து வருகிற மாணவர்களுக்கு இவற்றில் இப்படிப்பட்ட சர்ட்டிபிகேட்டுகள் கிடைக்கின்ற வாய்ப்புகள் இன்றைக்கு இல்லாத நிலைமை இருக்கிறது. அதே நேரத்தில் பிசிகல் பிட்னஸ் என்று சொல்கிறபோது கிராமப் புறங்களில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கு சத்து உணவு கிடைக்காத காரணத்தினால் அவர்களுக்கு போதிய உடல் வலிவில்லாத நிலையில் அவர்களுக்கு அட்மிஷன் மறுக்கப்படுகிறது. ஆகையினாலே வசதி படைத்த குடும்பங்கள், படித்த குடும்பங்கள், நகர்ப்புறங்களிலிருந்து வருகின்ற, சௌகரியங்களை அனுபவித்து விட்டு வருகின்ற குடும்பங்கள், ஏற்கெனவே ஒரு குடும்பத்தில் 4 டாக்டர்கள், 5 டாக்டர்கள் இருக்கின்ற குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களே தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள். கிராமப்புறத்திலே இருந்து வருகின்ற மாணவர்களை அதிகமாக எடுப்பதற்கு வகுக்கின்ற முறையிலே நேர்வு முறை அமுல்படுத்தப்படவில்லை.

ஆகவே குறிப்பாக ஒரு ஏரியாவை சர்வேக்குத் தேர்ந்து எடுத்துக் கொள்ளவேண்டும். குறிப்பாக ஒரு பகுதியைத் தேர்ந்து எடுத்து எந்தச் சமுதாய மக்கள் வாழ்கிறார்கள், அந்தப் பகுதியில்

[திரு. ரா. மார்க்கபந்து] [1977 ஆகஸ்ட் 13

வாழ்கிற மக்கள், ஜனத்தொகை எவ்வளவு, அந்தப் பகுதியில் இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு வசதிகள் எப்படி இருக்கின்றன என்பதை நாம் பார்த்துக் கொள்ளவேண்டும். அப்படிப் பார்த்துக் கொள்வதன் மூலம் தான், மற்றவர்களுக்கு வாய்ப்புத் தருவது போல, கிராமப்புறத்திலிருந்து வருகின்றவர்களுக்கும் வாய்ப்புத் தருகின்ற நிலைமைகளை நாம் ஏற்படுத்த முடியுமென்று கூறிக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இங்கே ஒரு உறுப்பினர் சொன்னார் ஆஸ்பத்திரிகளில் வேலை செய்கின்ற டாக்டர்கள் தனிப்பட்ட முறையிலே ''பிராக்டிஸ்'' செய்வது காரணமாக ஆஸ்பத்திரிகளில் இருக்கின்ற மருந்துகள், டாக்டர்களின் வீடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன. ஆஸ்பத்திரிகளில் சரியான சிகிச்சை அளிக்கப்படாத, அந்த டாக்டர்கள் அந்த நோயாளிகளைத் தங்கள் வீடுகளுக்கு வரச் சொல்லி அங்கே சிகிச்சை அளிப்பதன் மூலம் நாட்டுக்கும், நமக்கும், நிர்வாகத்திற்கும் நஷ்டம் ஏற்படுகிறது. நம்மை நாமே இழிவு படுத்திக் கொள்கிற தன்மையை தேர்ந்து எடுத்துக் கொள்கிறோம். எனவே அந்த டாக்டர்கள் வீடுகளிலே மருத்துவம் செய்கின்ற முறையை பிராக்டிஸ் செய்கின்ற முறையை சஸ்பெண்ட் செய்கின்ற முறையிலே அரசாங்கம் உத்திரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்றுகேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் பிரைமரி ஹெல்த் சென்டர்கள் ஒவ்வொரு யூனியனிலும் இருக்கிறது என்று சொன்னால் அங்கே வசதி இல்லாத நிலைமைகள் இருக்கின்றன. அங்கே போய் நோயாளிகள் நோயைப் போகக, உடலைத் தேர்த்துக்கொள்கிறோம் என்ற எண்ணம் இல்லாது நாம் சுடுகாட்டுக்குச் செல்கிறோம் என்ற எண்ணத்தோடு மக்கள் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட பொதுவான நிலைமை பிரைமரி ஹெல்த் சென்டர்களில் இருக்கிறது. ஆகவே கிராமப் புறங்களில் இருக்கின்ற டாக்டர்கள் சீரிய முறையிலே பணியாற்றவேண்டும். கிராமப் புறங்களில் உள்ள மக்களுக்கு இன்னும் அதிகப்படியான வைத்திய வசதி கிடைக்க வேண்டுமென்றால் கல்லூரிகளில் படித்துவிட்டு அவுஸ் சர்ஜன் கோர்ஸ் முடிப்பதற்கு ஆஸ்பத்திரிகளில் பணியாற்றுகிறவர்கள் குறைந்தது 5 ஆண்டுகளாவது கிராமப் புறங்களில் ஆஸ்பத்திரிகளில் பணியாற்றும்படி கட்டாயப்படுத்தப்படவேண்டும். அதற்கான உத்தரவுகளை அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

கிராமப் புறங்களில் பணியாற்றவேண்டுமென்கிற நியதியை உருவாக்கவேண்டும். அதே நேரத்தில் இந்த கிராமத்திற்கு இந்த நேரத்தில் மொபைல் வேன் அந்தப் பகுதிக்குச் செல்லும் என்பதற்கான உத்தரவாதத்தை கிராம மக்களுக்குத் தந்தாக வேண்டும்.

1977 ஆகஸ்ட் 13] [திரு. ரா. மார்க்கபந்து]

இன்னொன்று, வட ஆற்காடு மாவட்டத்தில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள் அதிகமாக உள்ளன. அங்கிருந்து வெளிப்படுகிற கழிவு நீரை ஒரு இடத்தில் தேக்கி வைக்கிறார்கள். அந்த கழிவுநீர் நீர் ஊற்றுடன் சேர்ந்து ஒன்றிரண்டு மைல் தொலைவு வரை உள்ள தண்ணீரின் தன்மையை கெடுத்துவிடுகிற நிலைமை இருக்கிறது. ஆம்பூரிலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகள் பத்தாண்டு காலத்தில் 15 மைல் தொலைவிலுள்ள தண்ணீரின் நிலைமையை மாற்றியிருக்கிறது. இதனால் அப்பகுதியில் அந்த தண்ணீரை உட்கொள்ளும் மக்களுக்கு சொரி, சிரங்கு போன்ற வியாதிகள் உண்டாகியிருக்கின்றன தண்ணீர் கெட்டு விடுவதால். எனவே இந்த ''வாட்டர்பொலூஷன்'' பிரச்னையில் அரசு சிறப்பான கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. தி. சு. நல்லதம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மக்கள் நல்வாழ்வுத் துறை என்ற தலைப்பில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏறத்தாழ ரூ. 71 கோடிக்கு மானியக் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மக்கள் நல்வாழ்வுத் துறை என்பது குழந்தை தாயின் வயிற்றில் என்று கருவுற்றதோ அன்றிலிருந்து அது பிறந்துவளர்ந்து ஆடாத ஆட்டங்கள் எல்லாம் ஆடி மண்ணுக்குப் போகிற வரையில் வீழ்ந்திருக்கிறது மக்கள் நல்வாழ்வுத்துறை. அப்பேர்ப்பட்ட துறையை ஏற்றிருக்கிற முதலமைச்சர் அவர்கள் நல்ல பல திட்டங்கள் வைத்ததற்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் சில பல குறைபாடுகளையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இன்றையதினம் இடைக்காலத்தில் கவர்னர் ஆட்சி நடந்த நேரத்தில் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்ப்பதில் பல குறைகள் நேர்ந்திருக்கின்றன. அந்தக் குறைகள் தன்மானப் பிரச்னை. நமது உரிமைப் பிரச்னை. இது நமது என்று சொல்வதற்குக் காரணம்,நாம் ஒரு பாரம்பரியத்தில் வந்தவர்கள் இரு இயக்கத்தில் இருந்தவர்கள். அதை எனக்கு முன் பேசிய மாண்புமிகு உறுப்பினர் தந்தை பெரியாரைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். தந்தை பெரியார், அதற்கு முன்பு டாக்டர் நாயர், சி. ஆர். ரெட்டி அதற்கு முன் பன்னீர்செல்வம், சர் பி. டி. தியாகராச செட்டியார் போன்றவர்கள் எல்லாம் இப்படி வீதாச்சாரம் வேண்டுமென்று பாடுபட்டு, அதை உருவாக்கித் தந்தவர் தந்தை பெரியார். அது நேற்றுவரையில் நடைமுறைப்படுத்தப்பட்டு டாக்டர் கலைஞர் ஆட்சி பொறுப்பில் இருந்தவரை நடைமுறையில் இருந்து வந்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசு இறக்கப்பட்டவுடன் கவர்னர் ஆலோசகர் ஒரு புண்ணிய சீலர், தான் எந்த வகுப்பைச் சேர்ந்தவரோ அந்த வகுப்பினருக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமென்று கம்யூனல் ஜி. ஓ. வை ஏழை மக்களுக்கு, பிற்பட்ட மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு உருவாக்கப்பட்ட அந்தப் புனிதமான கொள்கையை சுக்கு நூறாக

உடைத்துவிட்டு இதை செய்வதற்காகவே வந்திருக்கிறேன் என்று ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லிவந்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதைச்சரிக்கட்ட முடியாது தான் என்றாலும் கூட இந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு அதனுடைய முதல்வர் அவர்கள் சற்று சிந்தித்து இதற்கு வழி வகுத்து இடைக்காலத்தில்(மணியடிக்கப்பட்டது). பேரவைத் தலைவர் மன்னிக்க வேண்டும். இந்த மக்கள் நல்வாழ்வுத் துறை பிரச்னை சாதாரண பிரச்னை அல்ல. இதில் சாக்கடைத் திட்டம், குடி நீர் திட்டம் எல்லாம் வருகிறது. சென்னை நகரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன் என்ற முறையில் எனக்கு அதிக நேரம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இது நமது உரிமைப் பிரச்னை. மக்களுடைய உரிமைப் பிரச்னை. தன்மான உரிமை பறிக்கப்பட்டுவிட்டது. எந்த மக்கள் உரிமையையும் நாம் பறிக்கவில்லை. எங்கள் உரிமையை மற்றவர்கள் பறிக்கக்கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சற்று கண்ணும் கருத்துமாக இருந்து தாழ்த்தப்பட்ட பிற்பட்ட மக்கள் ஹரிஜனமக்கள் இவர்களுக்குள்ள விதாச்சாரத்தை நிச்சயமாகத் தந்தாக வேண்டும் என்று விரும்பிக்கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில், இன்றைய தினம் 70 சத விகிதம் மக்கள் கிராமப் புறங்களில் இருக்கிறவர்கள். மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டால் அவர்களுக்கு சற்று சலுகைகள் காட்ட வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் கிராமப்புற மாணவர்களை அதிகமாகச் சேர்த்தால்தான் டாக்டர் ஆனபிறகு கிராமங்களில் பணியாற்ற விரும்புவார்கள். நகர்ப்புறத்தில் உள்ளவர்களைத் தேர்ந்தெடுத்தால் அவர்கள் படித்து விட்டு பிறகு மேல்நாடு செல்லலாமா என்ற எண்ணத்தில் இருக்கிறார்கள்.

ஆகவே அதற்கு ஒரு வழிவகை காணவேண்டும். கிராமங்களில் இருந்து வருகிற மாணவர்களுக்கு சற்றுக் கருணை காட்ட வேண்டும்.

அடுத்து, இன்றைக்கு மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதில் திறமை உள்ள ஆசிரியர்கள் மிகக் குறைவாக இருப்பதை முதல் அமைச்சர் அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் இந்தக் குறிப்பிலே. நமது மருத்துவக் கல்லூரி புகழ் பெற்ற மேதைகளை பெரிய அறிஞர்களை உருவாக்கியிருக்கிறது. அப்படிப்பட்ட மேதைகள் உருவாக்கப்பட்டு, இந்த மருத்துவக் கல்லூரியில் படித்தவர்கள் ஏன் இங்கு பணியாற்றாமல் வேறு மாநிலங்களுக்கு அல்லது

வேறு நாடுகளுக்குச் செல்கிறார்கள் என்றால் நாம் அவர்களுக்கு சரியான கௌரவத்தை அளிக்கவில்லை. அவர்களுக்கு வேண்டிய வசதிகளை நாம் செய்து தரவில்லை.

உதாரணத்திற்கு சொல்லவேண்டுமென்றால். இரண்டாவது சுதந்திரப் போராட்டத்திற்கு தலைமை தாங்கிய நமது மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்களை நன்கு பாதுகாத்து நல்ல முறையில் அவர்களுக்கு சிகிச்சை அளிப்பவர் டாக்டர் மணி என்பவர். அவர் சென்னையைச் சேர்ந்தவர் என்பது பேரவைத் தலைவர் அவர்களுக்குத் தெரியும். அந்த மேதைகளை எல்லாம் நாம் சரிவர கவனிப்பதில்லை. அவர்களுக்கு வேண்டிய வசதிவாய்ப்புகளைசெய்து கொடுப்பதில்லை.

ஆகவேதான் அந்த மேதைகள் எல்லாம் மற்ற நாடுகளுக்குச் சென்றுவிடுகின்றனர். இதை முதல் அமைச்சர் அவர்கள் சற்று கவனித்து அதற்கு ஆக்கமும் ஊக்கமும் தர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன் (மணியடிக்கப்பட்டது).

சென்னை பொது மருத்துவமனையில் எந்தவிதமான சுகாதார வசதியும் இல்லாதவொரு நிலை இருக்கிறது. அங்கு குடிநீர் வசதி குறைவு. பொதுவாக நோயாளிகளுக்கு சமையல் செய்கிற இடத்தில் தண்ணீர் இல்லை. அங்குள்ள கடைநிலை ஊழியர்கள் துணி தோய்க்கிற இடத்திற்குசென்று தண்ணீர் பிடித்து சமையல் செய்து வருகிறார்கள். இந்த நிலையைப் போக்கி குடிநீர் வசதி செய்து தர வேண்டும். அங்குள்ள கடைநிலை ஊழியர்கள்பால் கருணை காட்டி அவர்கள் சம்பளத்தை அதிகப்படுத்திக் கொடுக்க கொஞ்சம், கருணை காட்ட வேண்டும். கொஞ்சம் கூடுதல் சம்பளம் அவர்களுக்குக் கிடைக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும்.

நோயாளிகளை கவனிப்பதில் டாக்டர்கள் சற்று கவனக்குறைவாக இருக்கிறார்கள். அந்தக் கவனக்குறைவைப் போக்க அரசு முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும். நான்கு நாட்களுக்கு முன்னதாக என் தொகுதிப் பகுதியில் ஒரு அம்மையார் பிரசவ வேதனையோடு மருத்துவ மனைக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கு உதிரம் கொட்டியிருக்கிறது. ஆனால் அந்த வார்டில் உள்ள டாக்டர் அதைக் கவனிக்கவில்லை. ஏறக்குறைய எட்டு மணி நேரத்திற்குப் பிறகு என்னிடம் வந்து சொல்லி நான் முன்னாள் அமைச்சர் அண்ணன் சாதிக்கிடம் சொல்லி இதே மன்றத்திலிருந்து தொலைபேசி மூலம் தெரிவித்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. டாக்டர்கள் கவனக் குறைவாக நடந்து கொள்கிறார்கள். டாக்டர்

மருத்துவமனை மூலம் நோயாளிகளுக்கு பயன்படுவதில்லை என்றும் அவற்றில் உயர் ரக மருந்து மாத்திரைகளையும், ஊசிகளையும் சில இடங்களில் டாக்டர் தவறான முறையில் தாங்கள் சொந்தமாக நடத்தும் டிஸ்பென்சரியில் பயன்படுத்தி வருவதாக கேள்விப் படுகிறேன். இம்முறைகேடுகள் தொடர்ந்து நம் கழக ஆட்சியிலும் நடைபெறுவண்ணம் கண்காணித்து அவ்வித தவறு செய்கிற வர்களை தயவு தாட்சண்யம்இன்றி நமது மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தண்டிப்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து முந்தைய அரசால் தாய்-சேய் நல விடுதிகளையும் நன்கு பராமரிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. அம்மருத்துவ மனைகளுக்கு போதிய மருந்துவகைகள், கருவிகள் வழங்குவதில்லை. இதனால் தாய்மார்கள் ரொம்பவும் அவதிப்படுகிறார்கள். காரணம் பிரசவத்திற்காக இதுபோன்ற சிறிய மருத்துவ மனைக்கு வரும் தாய்மார்கள் கொஞ்சம் சிரமமான கேஸ்களாக இருந்தால், அங் குள்ள மருத்துவர்கள் கருவிகள் இல்லை என்ற காரணத்தைக் காட்டி, பிரசவ வேதனையால் துடிக்கும் தாய்மார்களை நகரத்தி லுள்ள பெரிய மருத்துவ மனைகளுக்கு செல்லுமாறு கூறி தட்டிக் கழித்துவிடுகிறார்கள்.

ஆனால் இது போன்றவர்களை எவ்வளவு சீக்கிரத்தில் அழைத்து சென்றாலும், சில நேரங்களில் துரதிருஷ்டவசமாகதாய்க்கும், குழந்தைக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. இவ்வித கஷ்டங்களை அனு பவிக்கும் அருமை தாய்மார்களையும், அதுவும் நம்மை ஆட்சியில் அமர செய்வதற்கு முக்கிய காரணமாய் இருந்த அந்த பெண் தெய்வங்களை காப்பாற்ற வேண்டியது நமது கடமை. ஆகவே இவ்வித இடர்பாடுகளை நீக்கும் பொருட்டு ஒவ்வொரு தாலூக்கா வின் மத்தியிலும் ஓர் பிரசவ மருத்துவ மனை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய கும்மிடிப்பூண்டி தொகுதியில் 3 ஆரம்ப சுகாதார நிலையங்கள்தான் உள்ளன என் றும், இன்னும் பல மருத்துவமனைகளை திறப்பதற்கும், இருக்கும் மருத்துவ மனைகளை விரிவுபடுத்துவதற்கு, வெங்கல் போன்ற கிராமங்களில் அரைகுறையாக உள்ளதை பூர்த்தி செய்வதற்கும் ஆவன செய்ய இப்பேரவை மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

பள்ளிக் குழந்தைகளின் உடல் நலத்தில் அக்கறை கொண்ட நம் கழக அரசு. இளம் வயதில் ஏற்படும் நோய்களை கண்டறிய மருத்துவ பரிசோதனை செய்யவும் அந்நோய்களுக்கு தகுந்த பரா மரிப்பு அளிக்கவும் மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்க உள்ள திட்டத்தை வரவேற்கிறேன். அதே நேரத்தில் சில குறிப் பிட்ட நோய்கள் வராமல் முன் கூட்டியே தடுப்பதற்கு அம்மைப் பால், தடுப்பு ஊசிகள் போன்றவற்றை அவ்வப்போது பள்ளி சிறார்களுக்கு செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இதே துறையின் கீழ்வரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப் பற்றியும் ஒரு சில கருத்துக்களை கூற விழைகிறேன். முந்தைய இந்திரா அம்மையாரின் ஆட்சியை வட மாநில மக்கள் ஒதுக்கியதற்குக் காரணம் இந்தக் குடும்பக்கட்டுப்பாடு திட்டமும் ஒன்று எனக் கூறப்படுகிறது. ஆகவே கட்டாய முறையில்லாமல் மக்களே முன் வந்து செய்து கொள்வதற்கான வழிமுறைகளை கையாள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலும் குறிப்பாக அரசாங்க ஊழியர்கள் இத்திட்டத்தை பயன்படுத்திக் கொள்ள நம் கழக அரசு அவர்களுக்கு விடுமுறை போன்ற சலுகைகளை அறிவித்தமைக்கு நன்றி கூற கடமைப்பட் டிருக்கிறேன். அதே சமயத்தில் இத்திட்டத்திற்கு ஆள் சேகரிக் கும் பொருட்டு ஆசிரியர்களையும், அரசாங்க ஊழியர்களையும் பயன்படுத்தாமல் சமூக நல ஊழியர்கள் மூலம் அதற்கென்று உள்ள சுகாதார ஊழியர்களை மட்டும் பயன்படுத்த வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக நோய் தடுப்பு, மருத்துவம், சத்துணவு, குழந்தை கள் நலம் போன்ற திட்டங்களுக்கு முந்தைய அரசு ஒதுக்கிய தொகையைவிட கூடுதலாக ஒதுக்கியமைக்கும் அதே நேரத்தில் நிர்வாக செலவினங்களை முந்தைய ஆண்டுகளைக் காட்டிலும் குறைக்கப்பட்டுள்ளதை மனதார வரவேற்று, பேசுவதற்கு வாய்ப்பு தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி செலுத்தி முடித்துக் கொள்கிறேன்.

*__திரு ஓ. சுப்பிரமணியம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே இப்போது பெரிய நகரங்களிலே வைத்திய வசதி அதிகமாக இருக்கிறது. அதேபோல் கிராமங்களிலேயும் அதிகப் படியான அளவுக்கு அந்த வசதிகள் விஸ்தரிக்கப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலும் குறிப்பாக, நிபுணர்கள், ஸ்பெஷலிஸ்டுகள் என்று சொல்கிறோமே, அவர்கள் சென்னை போன்ற நகரங்களிலே இருப்பதால், கிராமங்களிலே இருந்து இங்கு மக்கள் வருவது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எப்படி வேலை யில்லாமல் கிராமங்களிலே இருப்பவர்கள் வேலை தேடுவதற்காக நகரத்திற்கு வருகிறார்களோ, அதேபோல் கிராமங்களிலே இந்த நிபுணர்களும், ஸ்பெஷலிஸ்டுகளும் இல்லாத காரணத்தால், அங்கிருப்பவர்கள் நகரத்திற்கு வரவேண்டிய அவசியமிருக்கிற காரணத்தால், இந்த வசதிகளை அங்கும் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது பல ஊர்களிலே டாக்டர்கள் இல்லை. அப்படி டாக்டர்கள் இருந்தாலும், மருந்து இல்லை. ஏன் மருந்து இல்லை இல்லை என்று கேட்டால், இண்டெண்ட் போடப்பட்டிருக்கிறது, ஆனால் இன்னும் மருந்து வரவில்லை என்று சொல்கிறார்கள். இந்த நிலைமையிலேதான் இன்று பல மருத்துவ மனைகள் இருக்கின்றன.

இந்த முறையில் ஒருவருக்கு ஒருவர் ஏதாவது சாரணம் சொல்லி காலம் தாழ்த்தக்கூடிய காரணத்தால், பல ஆயிரக்கணக்கான மக்கள் உயிரைப் பணயமாக வைக்கப்படுகின்ற காரணத்தால், இந்த ஒரு துறையிலேயாவது Red Tape முறையைக் கண்டிப்பாக கொண்டு வராமல், உடனடியாக மக்களுக்குத்தேவையான மருந்துகளைச் சப்ளை செய்வதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு ஒரு முக்கியமான பிரச்னையாக இருப்பது, கிராமங்களுக்கு டாக்டர்கள் வருவதில்லை என்பதாகும். இது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இது சம்பந்தமாக ஒரே ஒரு விஷயத்தைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். எங்கள் பகுதியிலே, பஞ்சாயத்து யூனியனின் பெரிய கிராமமாக நாட்டரசங்கோட்டை இருக்கிறது. அதற்கு ஒரு டாக்டர் தேவையென்று கவர்ச்சிகரமாக பத்திரிகைகளிலே விளம்பரங்கள் எல்லாம் செய்து பார்த்தோம். அப்போதும் டாக்டர் கிடைக்கவில்லை. கடைசியாக, அங்கிருந்த ஒரு பையனையே வைத்தியப் படிப்பு எம்.பி.பி.எஸ். படிக்கச் சொல்லி, அவரையே டாக்டராகப் போட்டுள்ளோம். அவர் வெளியூர் போகமாட்டார் என்று நம்புகிறோம். எனவே, கிராமங்களில் டாக்டர்கள் வேலை செய்வதைப் பொறுத்த வரையில், இந்தச் சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, நாட்டிலே பெரிய மருத்துவ மனைகள் இருக்கின்றன. ஆனால், அவைகள் எவ்வாறு செயல்படுகின்றன என்று கண்காணிக்க வேண்டும். உதாரணமாக, தஞ்சை மாவட்டத்திலே, சிங்கிப்பட்டியில் ஒரு டி.பி. ஆஸ்பத்திரி இருக்கிறது. ஆனால், அது நல்ல முறையிலே செயல்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதன் காரணமாக, அங்கு செல்லக்கூடிய மக்களுக்கு சரியான முறையிலே வைத்திய வசதி கிடைக்கவில்லை என்று தெரிகிறது. ஆனால், அந்த மருத்துவ மனைக்குச் சொந்தமாக சுமார் 640 ஏக்கர் நஞ்சை, புஞ்சை நிலமிருக்கிறது. அதன் மூலம் வருமானம் வருகிறது. வருடத்திற்கு 6,000 மூட்டை நெல் வருமானம் வருகிறது. இருந்தாலும் சரியாக நிர்வகிக்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. அதற்கு ஜில்லா கலெக்டர் அவர்கள்தான் தலைவராக இருந்தாலும் கூட, அதற்கு டிரஸ்ட் போர்டு ஒன்றிருக்கிறது. அது இன்னும் அமைக்கப்படாமல் இருக்கிறது. அதன் காரணமாக அங்குள்ள மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு வருகிறவர்களுக்கு விருப்பு வெறுப்பு இல்லாமல் சிகிச்சை அளிக்கும் நிலை இல்லாமல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. டி.பி. ஆஸ்பத்திரி என்று சொன்னாலுங்கூட, அந்த ஆஸ்பத்திரியில் டி.பி. நிபுணர் ஸ்பெஷலிஸ்ட் போடப்படவில்லை. டி.பி. இல்லாத நோயாளிகள்தான் அதிகமாக அங்கு சேர்க்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அதற்குக் காரணம் என்ன? ஒரு மாதத்திற்கு

குறைவாக தங்கும் நோயாளிகளிடம் நன்கொடை வசூலிக்கப்படுகிறது என்றும் தெரிகிறது. அதற்கான கணக்குகள் ஆடிட் செய்யப்படுகிறதா? அந்தப் பணம் எங்கே போகிறது என்று தெரியவில்லை. அப்படி அவர்கள் வாங்குகின்ற பணத்திற்குக் கொடுக்கும் ரசீதுகளில் அவர்கள் என்ன எழுதியிருக்கிறார்கள் என்பதும் புரியவில்லை. கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது. எதற்கு வாங்கப்பட்டது என்ற விவரம் கூட சரியில்லாமல், ஊழல் புரிகின்ற அளவிலே ரசீதுகள் கொடுக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, என்னிடம் சில ரசீதுகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த, சரிப்படுத்த வேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பாகுனேரியில் உள்ள மருத்துவ மனைக்கு ஒரு பெண் டாக்டர் அமர்த்தப்பட்டு, 9 மாதங்கள் ஆகியும் இன்னும் அவருக்கு சம்பளம் வரவில்லை. அதற்கு முன்னிருந்த டாக்டருக்கும், இவர் சேர்ந்ததற்கும் சற்று இடைவெளி இருப்பதாகச் சொல்லி, அதனால் கடந்த 9 மாதங்களாக அவருக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை. இப்படி சம்பளம் கொடுக்காமல் இருந்தால், எப்படி அவர்கள் கிராமங்களிலே சேவை செய்வார்கள் என்பதை உணர்ந்து, இப்படிப்பட்ட தவறுகளையெல்லாம் நீக்குவதற்கு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிராமங்களுக்குச் செல்லும் டாக்டர்களுக்கு அவர்கள் அங்கு வசதியாகக் குடியிருக்க, வீட்டு வசதி செய்து கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரித் தேர்வு அண்மையில் செம்மையாக நடைபெற்றது என்று சொன்னார்கள். சென்ற ஆண்டும் மிகச் சிறந்த முறையில் கவனம் செலுத்தப்பட்டது என்ற உண்மையையும் புரிந்துகொள்ள வேண்டும். பல ஆண்டுகளுக்கு அப்பாலே, இம்மாதிரி கோர்ட்டுக்குச் செல்லாதது சென்ற ஆண்டு தான் என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுச் சுகாதாரத்தைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். அதிகமாகப் புழங்கக்கூடிய இந்த பஸ் ஸ்டாண்டுகளில், இந்த பொதுச் சுகாதார வசதி மிகவும் பயங்கரமாக இருக்கிறது. சிறையில் நடந்த சில நிகழ்ச்சிகளையெல்லாம், அமைச்சர் அவர்களை சிறைக்குச் சென்று பார்க்க வேண்டுமென்று சொன்னார்கள்.

[பிற்பகல் 1.00]

அதைவிட ஒரு நரகம் பூலோகத்திலே இருக்கிறது என்று சொல்லமுடியாது பஸ் ஸ்டாண்டில் மிகக் கேவலமான முறையில் கக்கூஸ் வசதி இருக்கிறது. இந்த நேரத்திலே கட்டணம் வேறு

வசூலிக்கிறார்கள். அந்தக் கக்கூஸ்களை நாகரிகமான நிலையில் வைக்க போக்குவரத்துத் துறையும், சுகாதாரத் துறையும் கவனித்து சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுச் சுகாதாரத்தைப் பற்றி நாட்டில் எவ்வளவோ பண்பாடு, நாகரிகம் என்று பேசினாலும் மக்கள் சுகாதார வசதிகளைச் சரியாகக் கடைப்பிடிப்பதில்லை. வெளிநாட்டவர்கள் ரயில், பஸ்களில் செல்லும்போது நம் நாட்டு மக்கள் தங்கள் இயற்கைக் கழிப்பிற்காக பல இடங்களுக்கு மக்கள் செல்வதைப் பார்க்கும்போது அவர்கள் மிக அருவருப்பாக நினைப்பார்கள். நாம் என்னதான் தாஜ்மகாலைக் காட்டினாலும், மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைக் காட்டினாலும் இந்த நிலைமையைப் போக்க கவனம் செலுத்த வேண்டும். பொது இடங்களை அசுத்தம் செய்யாதவாறு பார்த்துக்கொள்ள அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம், பொதுச்சுகாதாரம் ஆகிய இந்த மானியங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். மருத்துவத்திற்கும் பொதுச்சுகாதாரத்திற்கும் எவ்வளவு செலவு செய்தாலும் பயனுடையதாக மக்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய செலவினங்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. இந்த மானியக் கோரிக்கைகளில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொதுச் சுகாதாரத்திற்கும், மருத்துவத்திற்கும் வேண்டிய வழிவகைகளைக் கண்டிருப்பது பாராட்டுக்கு உரியதாகும். ஆகையால் இந்த மானியங்களை வரவேற்கிறேன்.

இன்றைக்கு மருத்துவ மனைகளில் அதிகமான நோயாளிகள் ஒரே இடத்தில் குவிக்கப்பட்ட நிலையில் இருப்பதைப் பார்க்கிறோம். மருத்துவர்களுடைய எண்ணிக்கையை நாம் அதிகமாக்கவேண்டுமென்பதில் அக்கறை இருக்கிறது. உண்மைதான். ஆனால் ஸ்டாப் நர்சுகளின் எண்ணிக்கை மருத்துவர்களின் எண்ணிக்கைக்கு ஒப்பவும், நோயாளிகளுடைய எண்ணிக்கைக்கு ஒப்பவும் அதிகமாக்க வேண்டும். இன்றைக்கு மருத்துவர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக்க வழிவகை கண்டிருந்தாலும், ஸ்டாப் நர்சுகளின் எண்ணிக்கை அதிகமாக்கப்படவில்லை. 50, 60 பேருக்கு என்று டிரெய்னிங் கொடுப்பதற்குப் பதிலாக 500 பேருக்கு ட்ரெய்னிங் கொடுக்கக்கூடிய அளவுக்கு அதனை அதிகமாக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால் வார்டுகளில் இருக்கும் நெரிசலைச் சமாளிக்க முடியும். ஒரு வார்டில் 40 பேர் நோயாளிகள் இருக்கலாம் என்றால் இன்றைக்குள்ள நெருக்கடி காரணமாக 120 முதல் 140 வரை நோயாளிகள் ஒரு வார்டில் இருக்கிறார்கள். 40 நோயாளி

களுக்கு ஐந்து நர்சுகள் என்று இருப்பார்களானால் அதே ஐந்து நர்சுகள்தான் 140 நோயாளிகளையும் கவனித்துக் கொள்ள வேண்டிய நிலைமை இருக்கிறது. அப்படி இருக்கக்கூடாது. ப்ரொபோர்ஷனேட் இன்க்ரீஸ் வேண்டும். இன்று நர்சுகள் அதிகமாக கிளரிகல் ஜாப்தான் செய்கிறார்கள். எழுதுகிற வேலை அதிகமாக இருக்கிறது. நோயாளிகளைக் கவனிக்க நேரம் குறைவாக இருக்கிறது. எழுதுவதற்கு தனி எழுத்தரைப் போட வேண்டும். நர்சுகள் கிளரிகல் ஜாப் செய்வதைத் தவிர்க்க வேண்டும். அந்த வகையில் திட்டங்களை மாற்றியமைக்க வேண்டும்.

மருந்து கிடைப்பதில் ஏற்கனவே சொன்ன மாதிரி ரெட்டேபிசம் (Red tapism)—சிகப்பு நாடா முறை இருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். 50 பைசா மருந்து வேண்டுமென்று சொன்னாலும் அங்கு இருக்கிற டாக்டர் அனுமதி கொடுத்துவிட முடியாது. சூப்பரின்டெண்டுக்குப் போக வேண்டும். ஆர்.எம்.ஓ.-வுக்குப் போகவேண்டும். அவர் அதை டீனுக்கு refer செய்கிறார். '' டீன் '' பாஸ் செய்து ' இன்டெண்ட் '' வரவேண்டும். அதுவரை அந்த நோயாளி இருக்கிறாரோ, வார்டிலிருந்து போய்விடுகிறாரோ என்ற நிலைமை இருக்கிறது. இந்த இன்டெண்ட் முறையில் வார்டு பிசிஷியன் சொன்னால் போதும் என்ற நிலைமை இருக்கவேண்டும். உடனடியாக மருந்து கிடைக்கவேண்டும்.

' கான்சன்ட்ரேஷன் ஆப் ஸ்பெஷாலிடிஸ் '—நியூரோ சர்ஜரி போன்ற சில துறைகளில் அதிகமான ஸ்பெஷாலிடி இருக்கும் அத்தனை முறைகளும் சென்னையில் தான் இருக்கின்றது. அவ்வாறு உள்ள ஸ்பெஷலிஸ்ட்சும், அந்த வசதிகளும் பரவலாக தஞ்சை, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் உள்ள இடங்களில் ஏற்படுத்தப்படுவதோடு கூட டிஸ்ட்ரிக்ட் ஹெட்குவார்ட்டர்ஸ் ஹாஸ்பிடல்களிலும் அந்த நிலைமைகளை உருவாக்க வேண்டும். இன்று எல்லாத் துறையிலும் கான்சன்ட்ரேஷன் சென்னையில்தான் இருக்கிறது என்பது அரசுக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது.

அந்த 13,294 படுக்கைகளிலே சென்னை நகரத்திலே மட்டும் சுமார் 6 ஆயிரம் படுக்கைகளுக்கு மேல் இருக்கிறது. இந்த 13 ஆயிரம் படுக்கைகளிலே 750 படுக்கைகள் தாம்பரத்திலே இருக்கின்றன. சென்னையிலே மட்டும் 7 ஆயிரம் 8 ஆயிரம் படுக்கைகள் இருக்கிறபோது மற்ற மாவட்டங்கள் எல்லாம் சேர்ந்து 5 ஆயிரம் படுக்கைகள் தான் இருக்குமானால் எந்த அளவிற்குக் கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு நோயாளிகளுக்கு நாம் வசதியைப் பெருக்கியிருக்கிறோம் என்பதைப் பார்க்க முடியும். இப்படிப்பட்ட குறைக்குக் காரணம் ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட் அவ்வளவும் சென்னையிலேதான் கான்சென்ட்ரேட் செய்யப்பட்டிருக்கிறது. அதனால்தான் இந்தக் குறைபாடு ஏற்பட்டிருக்கிறது, ஆகவே இந்த ஸ்பெஷல் ட்ரீட்மெண்ட்களையெல்லாம் மாவட்டங்களிலே உள்ள இடங்களுக்கு மாற்றினால் இந்தக் குறைபாட்டைப் போக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கள் (மணியடிக்கப்பட்டது) தொழில் புனிதமான தொழில் என்று ஆன்றோர்களும் சான்றோர்களும் சொல்கிறார்கள். எனவே, டாக்டர்கள் இனிமேலாவது திருந்திக் கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : நான் மணி அடிக்க அடிக்க நீங்கள் பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். மற்ற உறுப்பினர்கள் பேச வேண்டியிருக்கிறது.

(மணி அடிக்கப்பட்டு அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு அழைக்கப்பட்டார்.)

திரு. என். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவம் மற்றும் பொதுசுகாதார மானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களை தெரிவிக்க கும்மிடிபூண்டி சட்ட மன்ற உறுப்பினராகிய எனக்கு வாய்ப்பளித்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என் முதற்கண் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'' நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் ''

என்ற வள்ளுவரின் கூற்றுப்படி நோயின் தன்மையையும், அது தீரும் வழியையும் அறிந்து, அதற்கு செய்வதை பிழை இல்லாமல் செய்தல் வேண்டும் என்பது கருத்து. ஆனால் முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மேற்கூறப்பட்ட கருத்துக்கு நேர் மாறான முறையில் நடந்ததை நாட்டு மக்கள் அறிவர்.

நடந்து முடிந்த மருத்துவ பட்ட மேல் படிப்பிற்கு மாணவர்களை ஒழுங்கான முறையிலும் தகுதியின் அடிப்படையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு முந்தைய ஆட்சியில் நடைபெற்று வந்த லஞ்ச லாவண்யத்தை ஒழித்த நம் கழக அரசை வெகுவாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதை மக்களும் பாராட்டுகின்றனர். ஊழலையே உற்ற நண்பனாகக் கொண்ட சில திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் மெடிக்கல் சீட்டு வழங்கியதிலே முறைகேடுகள் நடந்துள்ளதாகக் கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது

என்றும் அவர்கள் அதை நிரூபிப்பதாய் கூறுவது நமது முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவரிடத்தில் மண்ணைக் கவ்வுவது நிச்சயம் என்று இப்பேரவையில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

மேலும் குடிசை வாழ் மக்களுக்கு அவர்களது வாயிற்படியிலேயே மருத்துவ வசதி கிடைக்கச் செய்யும் திட்டம் ஒன்றை தீட்டியதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் கிராமப்புறங்களிலே நடமாடும் மருந்தகங்கள் ஏற்படுத்த இருப்பதையும் பாராட்டுகிறேன். இங்கு ஒன்றை குறிப்பிட ஆசைப்படுகிறேன். அதாவது காச நோயை கண்டறிய பல கிராமங்களில் வேன்களுடன் முகாமிட்டு மக்களை பரிசோதிப்பது போன்று புற்றுநோய், தொழுநோய், நீரழிவுநோய், யானைக்கால், வாதங்கள் இது போன்ற மற்ற நோய்களை சோதனை மூலம் கண்டறிய வழிவகை செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கிராமப்புறங்கள் மருத்துவத் துறையில் தன்னிறைவு அடைய வேண்டுமானால், மருத்துவ பட்ட மேற்படிப்பு முடிந்து ஓரிரு வருடங்கள் '' ஹவுஸ் சர்ஜன்களாக '' பணியாற்றிய பின் கண்டிப்பாக ஐந்து ஆண்டு காலத்திற்கு கிராமங்களில் பணிபுரிய வேண்டும் என்ற ஒப்பந்த அடிப்படையில் இடங்களை ஒதுக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். மேலும் 3,000 ஜனத்தொகை யுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் அல்லது துணை நிலையமாவது அமைக்க வழிவகை செய்யவேண்டும். காரணம் இப்பொழுது இருந்து வருகின்ற சுகாதார நிலையங்களுக்கு 10, 15 மைல்களுக்கு அப்பால் இருந்து பொதுமக்கள் வந்து சிகிச்சை பெற வேண்டியுள்ளது. ஆகவே இன்னும் கூடுதல் மருத்துவ மனைகளை கிராமங்களிலே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் கிராமப் புறங்களில் மருத்துவமனை நடைபெறும் நேரம் காலை 7-30 மணி முதல் 10-30 வரை என்றிருப்பதை மாற்றியும் கூடுதல் நேரம் பணிபுரிய ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். நம் நாட்டில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணைநிலையங்கள் போன்றவற்றுக்கு, ஏற்கனவே முந்தைய அரசால் ஒதுக்கப்பட்டு வந்த தொகையை தற்போது நம் கழக அரசு கூடுதல் நிதி ஒதுக்கும் திட்டம் செயற்குறிப்பில் உள்ளதை வரவேற்கிறேன். அதே சமயத்தில் ஒதுக்கப்படும் நிதியைக் கொண்டு வாங்கப்படும் மருந்துகளை செம்மையான முறையில், முறைகேடுகள் இல்லாமல் பொதுமக்களுக்கு பயன் படுத்தப்படுகிறதா என்பதையும் சண்காணிக்க வேண்டும். ஏன் என்றால் இவ்விதம் அளிக்கப்படும் மருந்து வகைகளை அரசு

அதே நேரத்திலே இந்த அரசாங்கம் பெரிபெரல் ஆஸ்பத்திரிகள் அதாவது புறநகர் ஆஸ்பத்திரிகள் கொண்டுவரவேண்டுமென்று குறிப்பு வைத்து இருந்தது. அந்த பெரிபெரல் ஆஸ்பத்திரிகள் இப்படிப்பட்ட குறைகளைப் போக்கக்கூடிய முறையிலே அமைந்திருக்கிறதா என்றால் இல்லை. அந்த ஆஸ்பத்திரிகளை எங்கே துவக்கப் போகிறார்கள் என்றால் 5 இடங்களிலே அண்ணா நகரிலேயும், கருணாநிதி நகரிலேயும் தேனாம்பேட்டையிலேயும், தண்டையார்பேட்டையிலேயும் தான் வைத்திருக்கிறார்கள். இந்த 5 ஆஸ்பத்திரிகளுக்கு ஒன்றரை கோடி ரூபாய் தொகை ஒதுக்கியிருக்கிறார்கள். ஏற்கனவே சென்னையிலேதான் கான்சன்ட்ரேஷன் அதிகமாக இருக்கிறது. அந்த நிலையில் இந்த ஐந்து ஆஸ்பத்திரிகளுக்காக என்று ஒன்றரை கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது. ஏன் இந்த ஆஸ்பத்திரிகளை செங்கற்பட்டிலே ஏற்படுத்தக் கூடாதா! பக்கத்திலே உள்ள வேளச்சேரியிலே ஏற்படுத்தக் கூடாதா! திருவான்மியூரிலே ஏற்படுத்தக் கூடாதா! இப்படிப் பரவலாக ஏற்படுத்தினால்தான் நெரிசல் குறையும். நமக்கு இருக்கிற மற்ற மற்றப் பிரச்னைகளும் குறையும். ஆகவே முதலமைச்சர் அவர்கள் இதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பிரைவேட் ஆஸ்பத்திரிகள் ஆரம்பிப்பதற்காக இந்த அரசாங்கம் போதுமான முறையிலே ஊக்கம் கொடுக்க திட்டமிட வேண்டும். தனியார் ஆஸ்பத்திரிகளுக்கு 50 per cent of deficit என்ற முறையிலே தான் இப்போது கொடுக்கப்படுகிறது. எவ்வளவு குறை இருக்கிறதோ அந்தக் குறையிலே தான் 50 சதவீதம் கொடுக்கப்படுகிறது. அப்படியில்லாமல் முழு அளவும் கொடுத்தால் பிரைவேட் ஆஸ்பத்திரிகள் சேவை செய்வதற்கும் நெரிசல்களை நாம் குறைப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே இந்த பிரைவேட் இன்ஸ்டிட்யூஷன்ஸ் மூலமாக மெடிக்கல் காலேஜ் ஏற்படுவதற்கு அரசு அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்தால் ஏதோ டாக்டர்கள் எண்ணிக்கை அதிகமாகி அப்படி அதிகமானால் எல்லோரும் அரசாங்க ஆஸ்பத்திரிகளிலேதான் டாக்டர்களாக வேலை பார்க்க வேண்டும் என்று நினைக்காமல் அந்த நிலைமையை மாற்றி வர டாக்டர்கள் கிராமங்களுக்குச் சென்று தனியாக பிராக்டிஸ் செய்யக்கூடிய முறையிலே அதைச் செய்ய முடியும். ஆகவே மருத்துவக் கல்லூரிகளை அதிகப்படுத்தி டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக வாணியம்பாடி எவ்வளவு பெரிய பிரதானமான இடம். இங்கே 200 டேனரிஸ் சுற்றுப்புறங்களிலே இருப்பதாகச் சொல்கிறார்கள். அங்கே இதுவரை 100 பெட் கொண்ட ஆஸ்பத்திரி ஏற்படுத்தப்படவில்லை. எத்தனையோ முறைகள் நான் இதைப்பற்றி இந்த மன்றத்திலே சொல்லி இருக்கிறேன். அங்கே இதுவரையிலும் 50 பெட்களுக்கு மேலே ஏற்படுத்தப்படவில்லை.

அது தாலூகா ஹெட்குவார்ட்டர்ஸ், ஆம்பூர், வாணியம்பாடி ஆகிய இடங்கள் எல்லாம் டேனரிஸ் இருக்கக்கூடிய இடங்களாக இருப்பதால் அங்கே அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பொதுச் சுகாதாரத்தை எடுத்துக் கொண்டால் மலேரியா அகற்றப்பட்டு விட்டது என்று சொல்லப்பட்டது. ஆனால் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சொல்லப்பட்ட நிலைமை இல்லாமல் இன்றைக்கு 99 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மலேரியா கேஸ்கள் ரிஜிஸ்டர் செய்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இந்த நிலைமையைப் பார்க்கிறபோது எந்த அளவிற்கு இந்தத் துறை வேலை செய்கிறது என்பதைத்தான் இது எடுத்துக்காட்டுகிறது. அந்த கிருமி கொல்லி மருந்துகளை—Insecticides (D.D.T.) அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்தவில்லை என்ற நிலைமைதான் காரணமாகச் சொல்லப்படுகிறது. innoculation, mass immunisation programme இவையெல்லாம் சரிவரச் செய்யப்படவில்லை. ஆகவே இந்த malaria, filaria இவைகளையெல்லாம் ஒழிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு Kalazaar என்ற நோய் நம்முடைய வட்டாரங்களிலே அதிகமாக இருப்பதாகக் குறிப்பிடப்படுகிறது, அதைத் தடுப்பதற்கும் நம்முடைய அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

[பிற்பகல் 1-10]

குடும்ப நலத்தைப்பற்றி இன்றைக்குப் பிரமாதமாகப் பேசுகிறார்கள். இதற்காகப் பல தவறான முறைகளையும், சட்டத்திற்குப் புறம்பான முறைகளையும் நம்முடைய துறையினர் பயன்படுத்தி வருகிறார்கள். ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன், குடும்ப நல முறைக்காக இன்றைக்கு வகுக்கப்படும் முறைகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாக இல்லை, மக்கள் அதை எதிர்க்கிறார்கள், இதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி மாண்புமிகு முதலமைச்சரவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சொல்லுகிறேன். ஒரு அறிஞன் சொன்னான், Every child that is born is not only born with a mouth to eat but also with a pair of hands to பிறக்கின்ற குழந்தைகளெல்லாம் சாப்பிட ஒரு வாயோடு மட்டும் பிறப்பது இல்லை, வேலை செய்வதற்கு இரண்டு கைகளோடும் பிறக்கின்றன, நீங்கள் ஒரு வாயைத் தடுத்தால் வேலை செய்கின்ற இரண்டு கைகளும் போய் விடும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று அந்த அறிஞன் சொன்னான். அதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

வேண்டுமென்ற எண்ணம் ஓங்கியிருக்கிறது. ஆனால், தாலுகா மருத்துவ மனையிலே ஆர்த்தோ சிகிச்சைக்கு வசதி கிடையாது. ஐ ஸ்பெஷலிஸ்ட்ஸ் கிடையாது. இதய நோய் பரிசோதிக்க கார்டியாலஜிஸ்ட்ஸ கிடையாது. தோல் நோயைப் பரிசோதிக்கக்கூடிய டாக்டர்கள் கிடையாது. இப்படிப்பட்ட நல்ல அறிஞர்கள், ஸ்பெஷலிஸ்ட்ஸ் டாக்டர்கள் மாவட்ட மருத்துவமனைகளிலும் தாலுகா மருத்துவமனைகளிலும் இருக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான் அங்குள்ள மக்களுக்கு அது பயன்படும்.

தக்கலைத் தாலூக்கா மருத்துவ மனையிலே தண்ணீர் வசதி கிடையாது. இது நீண்ட காலப் பிரச்னை. கன்னியாகுமரி 1957-லே தமிழகத்தோடு சேர்ந்தது. அன்றிலிருந்து இன்றுவரை நாங்கள் கத்திக் கேட்டுக் கொண்டிருக்கிறோம், சட்டமன்றத்திலே. அங்குள்ள மக்கள் நாள்தோறும் குறைகளைச் சொல்லி விண்ணப்பம் அனுப்புகிறார்கள். எந்த அரசாங்கமும் அந்த வசதியைச் செய்து தந்ததாகத் தெரியவில்லை. இந்த அரசாவது கொஞ்சம் கருணை கூர்ந்து தக்கலை மருத்துவ மனைக்கு இந்த வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும். அங்கு படுக்கை வசதியும் கிடையாது. இருந்தும் டாக்டர்கள் அன்போடு பணியாற்றுகிறார்கள். அவர்கள் சொந்தச் செலவிலே, பாய் வாங்கி, வரண்டாவிலே நோயாளிகளைப் படுக்க வைத்திருக்கிறார்கள். தக்கலை மருத்துவமனையில் தண்ணீர் வசதியும் இல்லை, இட வசதியும் இல்லை. இதற்கான திட்டங்களை அங்குள்ள டாக்டர்கள் மேலிடத்திற்கு அனுப்புகிறார்கள். மேலேயிருக்கிற அதிகாரிகள் என்ன செய்கிறார்களோ தெரியவில்லை. கன்னியாகுமரியிலும் ஒரு அரசு மருத்துவமனை இருக்கிறது, குலசேகரத்தில் ஒரு மருத்துவமனை இருக்கிறது, குழித்துறையில் ஒரு மருத்துவமனை இருக்கிறது. அங்கெல்லாம் இதே நிலைமைதான். இதையெல்லாம் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றே ஒன்று. சித்த மருத்துவம். முன்னாலிருந்த அரசு இந்த சித்த மருத்துவத்திற்கு நல்ல மதிப்பளித்து, ஊக்குவிக்க நல்ல திட்டங்களைப் போட்டார்கள். அதை வரவேற்கிறேன். இதை இன்னும் விரிவுபடுத்தவேண்டும். சிறந்த சித்த மருத்துவர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். ஒவ்வொருவரிடமும் குறிப்பிட்ட வியாதிகளுக்குச் சிறந்த மருந்துகள் இருக்கின்றன. அந்த மருந்துக்களை விஞ்ஞான முறையிலே உற்பத்தி செய்து மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே அளிக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயுர்வேத மருத்துவம் அகில இந்திய அடிப்படையிலே இருக்கிற காரணத்தாலே, அது வளர்ந்து விட்டது. ஆனால் சித்த மருத்துவம் தமிழ் நாட்டிலேதான் இருக்கிறது. ஆகவே, இதில் இன்னும் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1-20]

*திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தில் வைக்கப்பட்டுள்ள மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது தொகுதியான திருப்பத்தூர் நகரத்தில் ஒரு அரசாங்க மருத்துவமனை உள்ளது. அதில் மொத்த படுக்கைகள் 120 உள்ளன. இது வேலூர்க்கு அடுத்த பெரிய அரசாங்க மருத்துவ மனை ஆகும். இந்த மருத்துவமனைக்கு ஒரு நாளைக்கு வெளியூர்களிலிருந்து வரும் நோயாளிகள் மட்டும் 1,200 பேரும், உள்ளூர் நோயாளிகள் சுமார் 125 பேரும் ஆகும். இவ்வளவு பெரிய மருத்துவ மனையில் சரியான வசதிகள் இல்லாத காரணத்தால் சரியானபடி மருத்துவம் செய்ய முடிவதில்லை. இந்த மருத்துவ மனையில் மருத்துவர்கள் ஆறு பேரும், பல் மருத்துவர் ஒருவரும், மருந்தாளர் நான்கு பேரும் உள்ளனர். அன்றாட மருத்துவ மனைக்கு சிகிச்சை பெற வரும் நோயாளிகள் எண்ணிக்கை கூடுதல் ஆகிக் கொண்டே போவதால் இன்னும் கூடுதல் உதவி மருத்துவர்கள் 3 அல்லது 4 பேர் தேவைப்படுகின்றது. அதே போல் மருந்தாளர்களும் 4 அல்லது 5 பேர் தேவைப்படுகிறது என்பதை இந்த மன்றத்தில் தெரியப்படுத்திக் கொள்வதுடன் உடனடியாக ஆவன செய்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று விரும்பிக் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து இந்த மருத்துவமனையில் குடி தண்ணீர் வசதி சரியான முறையில் இல்லாதால், சுமார் 1,500 நோயாளிகள் தினசரி வருவதால், குடிக்கத் தண்ணீர் இல்லாமல், வெளியில் உள்ள ஓட்டல்களில் போய் குடிக்க வேண்டியுள்ளது. ஆதலால் குடிநீர்த் திட்டம் ஒன்று போட்டு உடனே குடிநீர் வசதி செய்துத் தரும்படி கேட்டுக் கொள்கிறேன். இதில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களுக்கு, குடியிருப்புப் பகுதி ஒன்று புதியதாகக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மருத்துவ மனைக்குச் சொந்தமான காலி இடங்கள் உள்ளன என்பதையும் இந்த மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு வருகின்றேன்.

அடுத்து இந்த மருத்துவமனைக்கு, இரத்த சேமிப்பு நிலையம் ஒன்றும், வெளி நோயாளர் பிரிவு ஒன்றும், நிர்வாகப் பிரிவு ஒன்றும் தேவைப்படுகின்றது என்பதை இந்த மன்றத்தின் மூலம் தெரியப்படுத்துகிறேன். காரணம் வெளியூரில் இருந்து வரும்

நோயாளிகளுக்கு, சரியான முறையில் இடம் இல்லாத காரணத்தால், வெய்யிலிலும், மழை வந்தால் மழையிலும் நிற்க வேண்டி இருப்பதால், இந்தத் திட்டத்தினையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து என்னுடைய தொகுதியில் உள்ள ஊராட்சி ஒன்றியம், மிகப் பெரிய ஒன்றியம் ஆகும். இந்த ஒன்றியம் சுமார் இரண்டு லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள ஒன்றியமாகும் இந்த ஒன்றியத்தில் ஒரே ஆரம்ப சுகாதார நிலையம்தான் உள்ளது. இன்னும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தை, புதுப்பேட்டை அல்லது மாடப்பள்ளி என்னும் கிராமத்தில் அமைக்கலாம் என்பதை இந்த மன்றத்தின் மூலம் தெரியப்படுத்திக் கொள்கின்றேன்.

அடுத்து எனது தொகுதியில் உள்ள ஜோலார்பேட்டை ரயில்வே தொழிலாளர்கள் நிறைந்த இடம். ஜோலார்பேட்டையில் சுமார் 20,000 ஜனத்தொகை உள்ளது. இந்த இடத்தில் குடிநீர் வசதி இல்லை. இதற்கு ஒரு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத்தை போட்டு நிறைவேற்றித் தரும்படி கேட்டுக் கொள்வதுடன் அங்குள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகத்தை மாற்றி அரசாங்க மருத்துவ மனையாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கந்திலி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கந்திலி, விசமங்கலம் ஆகிய இரண்டு யூனியன் மருத்துவ மனைகளை அரசாங்க மருத்துவமனையாக மாற்ற திட்டம் அரசாங்கத்தின் முடிவுக்கு அனுப்பப்பட்டு இன்னும் எடுத்துக் கொள்ளவில்லை. உடன் எடுக்க ஆவன செய்யவேண்டும் எனறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். கந்திலி யூனியனில் பல கிராமங்களில் குடி தண்ணீர் இல்லாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும். கந்திலி யூனியன் குரும்பேரி கிராமத்தில் ஒரு வித கொசுக்கடித்து சுமார் 40 நபர்களுக்கு யானைக்கால் வியாதி வந்திருப்பதாகத் தெரிகிறது. அரசுக்கு தெரியப்படுத்தியும் நடவடிக்கை எடுக்க வில்லை. உடன் அரசு கவனிக்க வேண்டும். நாட்டறும்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள அம்பலூர் கிராம மக்கள் பாலாற்றின் கரையில் இருந்தும் அந்த மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் இதுவரையிலும் வழங்கவில்லை. பல ஆண்டுகளாக அரசுக்கு கோரிக்கைகள் கொடுத்து இன்னும் அந்தக் குறை தீரவில்லை. அரசு அந்த மக்களுக்குக் குடி தண்ணீர் வசதி உடனே செய்து தர வேண்டும்.

திருப்பத்தூர் நகரத்திலுள்ள தாழ்த்தப்பட்டோர் வசிக்கும் இடங்களில் எந்தவித பொது சுகாதார வசதியும் கிடையாது. குறிப்பாக, அண்ணா நகர், பெரியார் நகர், கலைஞர் நகர், சி.கே.சி.

நகர் போன்ற இடங்களில் குடிநீர் வசதி, மின்சார வசதி, கழிவு அறைகள், போன்ற வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து பெரியம்மை. பெரிய அம்மை அறவே தமிழ் நாட்டில் அகற்றப்பட்டு விட்டதாகச் சொல்லப்பட்டுள்ளது. அகற்றப் பாடுபட்ட அந்தப் பணியாளர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படவில்லை. பணி நிரந்தரமாக்கப்படவில்லை பயணப்படி வழங்கப் படுவதில்லை. உடனடியாகப் பயணப்படியையாவது வழங்க அரசு முன் வர வேண்டும் எனறு கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கின்றேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத்துறை மக்கள் நல்வாழ்வுத்துறை மானியத்தின் மீது மருத்துக்களைக் கூற வாய்ப்புதந்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பொதுவாக, மருத்துவக் கல்லூரியிலே மாணவர்களைச் சேர்ப்பதில் லஞ்சம் வாங்காமல் நேர்மையான முறையில் மெக்கின் அடிப்படையில் வைத்து ஏழை எளிய மக்களுக்கு உதவுகின்ற வகையில் தேர்வு நடந்திருக்கிறது என்றால், அந்தப்பெருமை இந்திய நாட்டிலேயே நம்முடைய புரட்சித் தலைவ அவர்களைத்தான் சாரும் என்று கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன். அதோடு மட்டுமின்றி கிராமங்களிலே ஏழை மக்களுக்கு பின்தங்கிய மக்களுக்கு சிறந்த முறையில் மருத்துவ வசதி அளிக்கும் நோக்கத்துடன் பல ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற மருத்துவமனைகளை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படி ஏற்றுக் கொள்கிற நிலையிலே எலத்தூர் செட்டிபாளையத்திலே ஒரு ஊராட்சி ஒன்றிய மருந்தகம் உள்ளது. அதை அரசு ஏற்றுக் கொள்ளும் வகையிலே பொதுமக்கள் நிதியாக ரூபாய் 50 ஆயிரம், ஊராட்சி ஒன்றியத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரம், இரண்டு ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளாகியும், ஏற்றுக் கொள்ளப்படாமல் அது குறித்து முடிவு ஆகாமல் இருக்கிறது. இதை உடனடியாக நமது முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி நிறைவேற்றித் தர வேண்டுமென்று கூறிக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமின்றி நம்பியூரிலே ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று சுமார் ஐந்து ஆண்டுகளாகியும் கட்டடம் கட்டப்படாமலே வாடகைக் கட்டடத்தில் நடந்துக்கொண்டிருக்கிறது. அது பொதுமக்க

களுக்கு வசதிக்குறைவானதாக இருக்கிறது. அதற்கான மக்கள் பங்குத் தொகையாக ரூபாய் 10 ஆயிரம் 5 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டுள்ளது. இருந்தும் 1972-லே இருந்து அந்த வேலை செய்யப்படாமல் இருந்து வருகிறது என்பதையும் இங்கு நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

நம்பியூர் பொது மக்கள் முதலமைச்சரை மிகுந்த நம்பிக்கையோடு பார்க்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நம்பிக்கை வீண் போகாமல் இந்த மக்களுக்கு இந்தக் கட்டடத்தை கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பெருந்துறையிலுள்ள டி. பி. காச நோய் மருத்துவமனை, தமிழகத்திலுள்ள அந்த மருத்துவமனை பெரும் புகழ் வாய்ந்த ஒரு மருத்துவ மனையாக உள்ளது. அதிலே நிதிப் பற்றாக் குறை காரணமாக அங்கு டாக்டர்களுக்கும், நர்ஸ்களுக்கும் தட்டுப்பாடு இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது. அந்த மருத்துவ மனை பேரறிஞர் அண்ணா காலத்திலிருந்து, அரசு பொறுப்பு ஏற்ற காலத்திலிருந்து நகராட்சி, யூனியன், அறநிலையங்கள் ஆகியவைகளிலிருந்து குறிப்பிட்ட தொகை வழங்கப்பட்டு பெற்றுக் கொண்டு வந்தது. ஆனால் கருணாநிதி அவர்கள் காலத்தில் அதற்கு அளிக்கப்பட்டு வந்த தொகை நிறுத்தப்பட்டதாகத் தகவல் வந்துள்ளது. அந்த ஆஸ்பத்திரி இன்று பல லட்சக் கணக்கான ரூபாய் கடனில் மூழ்கி இருப்பதாகத் தெரிகிறது. அந்த ஆஸ்பத்திரிக்கு வெளி மாநிலங்களிலிருந்தும் நிறைய நோயாளிகள் வந்து கொண்டிருக்கிறார்கள் என்று அறியப்படுகிறது. இப்படிப் புகழ் வாய்ந்த அந்த ஆஸ்பத்திரியின் இன்றைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமின்றி பெரும்பாலான டாக்டர்கள் ஒரே இடத்திலிருந்து கொண்டிருக்கிறார்கள். 4, 5 ஆண்டுகளானாலும் அவர்கள் ஒரே இடத்தில் இருக்கிறார்கள். மாண்புமிகு ''டாக்டர்'' முன்னால் முதலமைச்சர் அவர்கள் இடம் மாறி உள்ள இந்த நல்ல நேரத்தில் இந்த டாக்டர்கள் மட்டும் வேறு இடங்களுக்கு மாற்றல் இல்லாமல் ஒரே இடத்தில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இது வேதனைக்குரிய ஒன்றாகும்.

டாக்டர்கள் பொதுவாக அரசாங்கத்தில் வேலை செய்கிறவர்கள் தனிப்பட்ட இடத்திலே வைத்து வைத்தியம் பார்ப்பதால் ஆஸ்பத்திரியில் இருக்கக் கூடிய நோயாளிகள் கூட அவருடைய வீடுகளுக்குச் சென்று வைத்தியம் பார்த்துக்கொள்ள

வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இப்படி அரசாங்க டாக்டர்கள் தனிப்பட கேசுகளைப் பார்க்கக் கூடாது என்பது பொது மக்களின் அபிப்பிராயமாகும் என்பதை நான் இங்கு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி அவர்கள் தங்களுடைய வீடுகளிலே வைத்து வைத்தியம் செய்வதால் ஆஸ்பத்திரிகளில் உள்ள மருந்துகள் அவர்களின் வீடுகளுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றன. ஆகவே அரசாங்க ஊழியத்தில் உள்ள டாக்டர்கள் கட்டாயமாக வெளியில் வைத்தியம் செய்வதோ, டிஸ்பென்சரி வைப்பதோ கூடாது என்று அரசாங்கம் உத்திரவிட வேண்டுமென்று கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதோடு கிராமப்புறங்களில் உள்ள குடிசை வாழ் மக்கள் பல மைல் தூரம் சென்று ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை செய்து கொள்ள வேண்டிய துர்ப்பாக்கியமான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு நல்ல மருத்துவ வசதிகள் கிடைப்பதற்கும், அவர்கள் இப்படிப் பல மைல் தூரம் நடந்துசென்று வைத்தியம் செய்து கொள்கிற அவல நிலைமையிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கும், நடமாடும் ஆஸ்பத்திரிகளை, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் மூலம் வைத்து, இந்த நடமாடும் மருத்துவ மனைகள் வாரத்திற்கு ஒரு முறையோ அல்லது இரண்டு முறையோ கிராமங்களுக்குச்சென்று இந்த ஏழை எளிய மக்களுக்கு மருத்துவம் பார்க்க உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[பிற்பகல் 1-30]

குடும்பக் கட்டுப்பாடு பற்றி ஒரு சில வார்த்தைகளை இங்கு கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு என்பது ஏழை எளிய மக்களுக்காகவே இந்த அரசாங்கத்தால் நடத்தப்படுகிறது என்ற தவறான எண்ணம் பொது மக்கள் மத்தியிலே இருந்து வருகிறது. ஆனால் இந்தக் குடும்பக் கட்டுப்பாடு திட்டம், அரசாங்க உத்யோகஸ்தர்களுக்கும் ஏன், குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கூட திருமணம் ஆகி இரண்டு குழந்தைகள் பெற்றவர்களாக இருந்தால், அவர்கள் கூட முன்னோடியாக விளங்கி கருத்தடை செய்து கொள்ள தயாராக இருப்பார்களேயானால் இந்தத் திட்டம் நாட்டில் முழுமையாக செயல்படும் என்று கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த மருத்துவத் துறை மானிய கோரிக்கையின் மீதும் மக்கள் நல்வாழ்வுத் துறை மானிய கோரிக்கையின் மீதும் பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

முதலமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன். பாராட்ட வேண்டிய நேரத்தில் நான் பாராட்டுகிறேன். அவர்கள் மிகச் சிறந்த முதலமைச்சராக இன்றைக்கு முதன்முதலாக மானியத்தைச் சபை முன் வைத்திருக்கிறார்கள். நான் எதிர்பாராத அளவிற்கு இன்றைக்கு மிகச்சிறப்பான முறையில், திறமையுள்ளவராக, விவேகம் உள்ளவராக, அதேநேரத்தில் பிரச்னைகளை நன்றாகத் தெரிந்திருப்பவராக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கிறார்கள். நான் யாரையும் சாதாரணமாகப் பாரட்டுவதில்லை. முதலமைச்சரவர்களை இன்றைக்குப் பாராட்டுகிறேன் என்று சொல்லி அமர்கிறேன்.

* <u>திரு. எ. சுவாமிதாஸ்</u> : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சரவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கின்ற மானியக்கோரிக்கையின் மேல் ஒரு சில கருத்துகளைச் சொல்ல நான் விழைகிறேன். அண்மையிலே மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு நடைபெற்றது. தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்கள் பத்திரிகையிலே வந்த அதிலே ஏதோ குழப்படிகள் ஏற்பட்டு, பல பத்திரிகைகளிலேயெல்லாம் ஊழல் நடந்தது என்று சொல்லி, பிறகு அரசுத் தரப்பில் ஊழல் நடக்கவில்லை, ஒழுங்காக நடந்தது என்று சொல்லி இப்படிப்பட்ட சில குழப்படிகள் ஏற்பட்டன. எனவே, இனிமேல் இப்படிப்பட்ட குழப்படிகள் நடக்காமல் தடுக்க வேண்டும். தேர்வு நடைபெறுவதற்கு முன்னர் இன்னார் இன்னார் இன்டர்வியூ செய்வார்கள் என்ற அடிப்படையிலே அறிக்கை கொடுத்தவர்கள் மேதகு ஆளுநர் அவர்கள். அப்பொழுது அமைச்சரவை ஏற்படவில்லை. அந்த அறிக்கையில் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்வு நடந்ததும் மருத்துவக் கல்லூரிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், எடுத்துள்ள தகுதி எண்கள், இன்டர்வியூ மார்க்குகள், அவர்களின் பெயர்களெல்லாம் வெளியிடப்படும் என்ற அறிக்கையை ஆளுநர் அவர்கள் கொடுத்திருந்தார்கள். அந்த அறிக்கைக்கிணங்க இந்த அரசு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுடைய பெயர்களையும், அவர்கள் எடுத்த மார்க்குகளையும் வெளியிட்டிருந்தால் இப்படிப்பட்ட குழப்படிகள் ஏற்படக் காரணமே இருக்காது. கேரளாவில் இந்த முறை கையாளப்பட்டு, மாணவர்களின் மார்க்குகளை வெளியிடுகிறார்கள். அதைப்போல வருங்காலத்திலேயாவது இந்த அரசு அதற்குரிய முறையைக் கையாள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பொதுவாக நமது மாநிலத்திலே, (Prevention is better than cure) என்ற அடிப்படையிலே இந்த மருத்துவத்துறை அல்லது சுகாதாரத்துறை மாற்றியமைக்கப்பட வேண்டும். நோய் வராமல் தடுப்பதற்கான ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் நல்ல குடி தண்ணீரை மக்களுக்குக் கொடுத்தால் பல நோய்கள் வராமல் தடுக்க நம்மால் முடியும். எனவே முதலில் அதிலே கவனம் செலுத்த வேண்டும். நல்ல சுத்தமான குடிநீரைப் பல பகுதிகளுக்கும் கொடுக்க முற்பட்டால் நோய்கள் குறையும். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் மாவட்டத்தில் இர்ணியல், புதுக்கடை போன்ற பகுதிகளில் யானைக்கால் நோய் பரவுவதற்குக் காரணம் அந்தப் பகுதிகளில் நல்ல குடிதண்ணீர் இல்லை. ஆகவே, இப்படிப்பட்ட நோய்கள் வராமல் தடுக்க நல்ல குடிநீரைக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதைப்போல, இன்றைக்கு அரசு மருத்துவ பணிக்கென 45 கோடி செலவழிக்கிறோம். ஆனால் அரசு மருத்துவமனைகள் பொதுவாகச் சுத்தமாக வைக்கப்படவில்லை என்ற குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே போனால் துர்வாடை வீசுகிறது. காரணம், நம்முடைய மக்கள்தொகைக்கு ஏற்றாற்போல் மருத்துவ வசதி செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, மருத்துவ மனைகளுக்கு மக்கள் எல்லோரும் படையெடுத்து மிகுதியாகச் செல்வதால் கூட்டம் பெருகிக்கொண்டிருக்கிறது. நாகர்கோயில் அரசாங்கத் தலைமை மருத்துவமனையில் தினசரி இரண்டாயிரம் பேர் என்று கும்பலாக வருகிறார்கள். ஆனால் அங்கு அவர்களுக்குப் போதிய வசதியில்லை. இரண்டாயிரம் பேர்களுக்கு மருந்து கொடுக்கும் வசதியோ, கழிவிடமோ, நல்ல தண்ணீர் வசதியோ இல்லை. ஆகவே, அங்கு வசதிகளைப் பெருக்க வேண்டும். நாகர்கோயில் மருத்துவமனையிருக்கும் இடம் மிக நெருக்கடியான இடம். சுருங்கிய பரப்பளவில் உள்ள இடத்தில் அமைந்திருக்கிறது. பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் புதிய கட்டிடத்தை அங்கு திறந்துவைக்கும்பொழுது ஒரு கருத்தைச் சொன்னார்கள். இந்த மருத்துவமனையை இந்த இடத்திலே கட்டி இருக்கக்கூடாது. 50 ஏக்கர் நிலத்தை வேறு இடத்திலே ஆர்ஜிதம் செய்து, அங்கு கட்டி இருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று அன்றைக்கே குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே, மருத்துவ வசதியை விரிவுபடுத்த வேண்டுமென்று சொன்னால், அந்த மருத்துவ மனையை வேறிடத்திற்கு மாற்றியமைக்கத் தகுந்த நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், தாலூகா மருத்துவ மனைகளும் அப்படித்தான் இருக்கின்றன. இந்த மருத்துவமனைகளிலே, எலும்பு முறிவு யாருக்காவது ஏற்பட்டால், சிகிச்சை அளிக்க வசதி இல்லை. முன்னால் எல்லாம் எலும்பு முறிந்தால் நாட்டு மருத்துவர்யாரிடத்திலாவது கொண்டு சென்று காட்டுவார்கள். இப்பொழுது எல்லோரும் அரசாங்க மருத்துவ மனைக்குப் போக

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவையின் காலை நிகழ்ச்சி இத்துடன் முடிவு பெற்று, அவை மீண்டும் பிற்பகல் 3 மணிக்குக் கூடும்.

(பேரவை மீண்டும் பிற்பகல 3-00 மணிக்கு மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் கூடியது.)

<u>திரு. பி. எச். பாண்டியன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவத் துறை மானியக் கோரிக்கையின் மீது என்னைப் பேச அழைத்ததற்காக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சுகாதாரத் துறை மக்களுக்கு ஒரு முக்கிய துறையாக திகழ்ந்தாக வேண்டும். அவ்வாறு திகழ்வதற்கு மூல காரணமாக இருக்கிற மருத்துவர்கள் பற்றி இந்த மானியக் கோரிக்கையில் ஆராய வேண்டும் என்ற காரணத்தால் முதலில் நம் நாட்டில் எந்தச் சூழ்நிலையில் மருத்துவக் கல்லூரித் தேர்வுகள் நடைபெறுகின்றன, எந்தச் சூழ்நிலையில் மருத்துவர்கள் மக்களுக்காகச் செயல்படுகிறார்கள், எந்த நிலையில் ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெறுவதற்கு பாடுபடுகிறார்கள் என்பதைப்பற்றியெல்லாம் நாம் ஆராய வேண்டும்.

உதாரணமாக, நம் அரசுக் கணக்குப்படி ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனுக்கு ஐந்தாண்டுக் கால கல்லூரி வாழ்க்கையில் அரசு சார்பில் ரூ. 1,25,000 செலவிடுவதாக அரசு கணக்கு காட்டுகிறது. அவ்வாறு ரூ. 1,25,000 ஒரு மருத்துவக் கல்லூரி மாணவனுக்கு, ஒரு டாக்டரை உருவாக்குவதற்கு அரசு செலவழிக்கிறது என்றால் எந்தச் சூழ்நிலையில் எந்தப் பலனை எதிர்பார்த்து ஒரு மாணவனுக்கு ரூ. 1,25,000 செலவிடுகிறது என்பதை ஆராய வேண்டும். ரூ. 1,25,000 அரசுச் செலவில் ஒரு மருத்துவக் கல்லூரி மாணவன் டாக்டராக மாறி படித்து முடித்தவுடனே வெளிநாட்டுக்குச் சென்று மேல்படிப்புக்குச் சென்று அங்கே குடியேறிவிட்டால் இந்த அரசு செலவழித்த ரூ. 1,25,000 பொது மக்களின் வரிப் பணத்திலிருந்து செலவழிக்கிற காரணத்தால் அப்பணம் மக்களுக்கு என்ன நன்மையைப் பயக்கிறது என்பதை நாம் ஆராயவேண்டும்.

உதாரணமாக, வேலூரில் இருக்கிற கிருத்துவ மருத்துவக் கல்லூரியில் யாராவது மருத்துவப் படிப்பிற்குச் சேர்ந்தால் அவரிடம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு பாண்ட் பத்திரம்

வாங்கிக் கொள்கிறார்கள். எதற்காக அப்படி வாங்குகிறார்கள் என்றால் அப்படி படித்து முடித்தவுடனே அந்த கிருத்துவ மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரியில் அவர் செயலாற்ற வேண்டும், பணியாற்றவேண்டும் என்ற காரணத்திற்காக அவர்களுக்கு அந்த ஒரு உணர்வு இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அவ்வாறு பாண்ட் பத்திரங்களை வாங்குகிறார்கள். இங்கே அரசுக் கல்லூரியில் பயில்கிறவர்கள், உதாரணத்திற்காக, கிராமப்புறங்களில் பணியாற்றுவதாக உறுதி கூறி மருத்துவக் கல்லூரியில் இடத்தை அவர்களுக்குக் கொடுத்தாலும் எந்தச் சூழ்நிலையில் அவர்கள் செயலாற்றுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

கிராமப்புறங்களில் செயலாற்ற வேண்டும் என்ற ஒரு அரசு ஆணை இருந்தாலும் சிலபேர்கள் அதிலிருந்து எக்ஸம்ஷன் வாங்கி கிராமப்புறங்களுக்கு அனுப்பப்படாமல் படிப்புக் காரணமாக அல்லது வேறு காரணங்களுக்காக அவர்கள் நகர்ப்புறங்களிலேயே இருந்து விடுகிறார்கள். இந்தச் சூழ்நிலையை நாம் மாற்றியாக வேண்டும். ஏழை எளிய மக்கள் எந்தச் சூழ்நிலையில் இலவச மருத்துவ உதவிக்காக அரசு ஆஸ்பத்திரிகளில் கஷ்டப்படுகிறார்கள் என்பதை எடுத்துச் சொல்லத் தேவை இல்லை.

அரசாங்க ஆஸ்பத்திரிகளில் சேர்ந்தால் அவர்களுக்கு ஸ்பெஷலிஸ்ட்ஸ் மூலம் சிகிச்சை அளிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு அங்கே உள்ள மிக்சரைத்தான் கொடுக்கிறார்கள். உதாரணமாக, ஒரு மிக்சர் கொக்கோ கோலா போல் இருக்கும். ஒரு மிக்சர் ஃபாண்டா போல் இருக்கும். ஒரு மிக்சர் லிம்கா போலிருக்கும்.

காய்ச்சல் என்று சொன்னால், ஃபாண்டா போன்றதையும் லிம்கா போன்றதையும் சேர்த்துக் கலக்கி கொடுத்துவிடுகிறார்கள். தலைவலியும் காய்ச்சலும் என்று சொன்னால் மூன்றையும் கலந்து கொடுத்து அனுப்பிவிடுகிறார்கள். ஏழை மக்களும் இதை நல்ல மருந்து என்று நம்பிக்கொண்டு வாங்கிக் கொண்டு போய்க் கொண்டிருக்கிறார்கள். இதே டாக்டர்கள் மாலை நேரத்தில் தனியார் ஆஸ்பத்திரிகளில் இருந்து கொண்டு லேட்டஸ்ட் டிரக்ஸ் மார்க்கட்டில் கிடைக்கின்ற சிறந்த மருந்துகளை சிகிச்சை பெற வருகிறவர்களிடம் கொடுக்கிறார்கள். இப்படிப்பட்ட லேட்டஸ்ட் டிரக்ஸ்களை ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக கொடுக்க முடியாது என்ற நிலை இருந்தாலும், இதற்கென்று தங்களை ஆட்படுத்திக் கொள்கின்றவர்கள் இப்படிப்பட்ட மருந்துகளை பெற்றுக் கொள்வதற்கும் வழிவகை காணவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இங்கு பெரிய பெரிய மருத்துவர்கள், லண்டனில் ஹார்லி Street இருப்பதைப்போல் தங்களுக்கென்று பெரிய பெரிய நர்சிங் ஹோம்களை வைத்திருக்கிறார்கள். பூந்தமல்லி நெடுஞ்சாலையில் சென்றால், இப்படிப்பட்ட தனியார் மருத்துவ மனைகள் பல நடத்தப்பட்டு வருவதைப் பார்க்கலாம். இப்படிப்பட்டவர்கள் காலை நேரத்தில் அரசாங்க ஆசுபத்திரிகளில் பணியாற்றுகின்றார்கள். ஏன் பணியாற்றுகின்றார்கள் என்றால், இப்படி பணியாற்றுகின்ற நேரத்தில், அரசாங்கத்தின் மூலமாக லேட்டஸ்ட் டிரக்ஸ்களைப்பற்றி நன்கு தெரிந்து கொள்கிறார்கள். அரசாங்க ஆசுபத்திரியிலிருந்து இப்படிப்பட்ட டிரக்ஸ்களை எடுத்துச் சென்றுகொண்டிருக்கிறார்கள் என்ற குற்றசாட்டை நான் சொல்ல விரும்பவில்லை. அரசாங்க ஆசுபத்திரியின் மூலமாக இப்படிப்பட்ட லேட்டஸ்ட் டிரக்ஸ்களைப்பற்றி தங்கள் அறிவை வளர்த்து கொள்கிறார்கள். இவர்கள் மாலை நேரத்தில் தங்கள் நர்சிங் ஹோம்களுக்கு வந்து நோயளிகளைப் பார்க்கிறார்கள். தனியார் நர்சிங் ஹோம் மூலமாக அட்டை உறிஞ்சுவது போல் பணத்தை உறிஞ்சி விடுகிறார்கள். தனியார் ஆசுபத்திரிகளில் நோயாளிகளைப் பார்ப்பதற்கு மட்டும் கன்ஸல்டிங் ஃபீஸ் என்ற முறையில் வாங்கிக் கொள்கிறார்கள். அவர்களுக்கு நோய் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, எக்ஸாமின் செய்வதற்கு என்று மட்டும் கன்ஸல்டிங் ஃபீஸ் என்று வாங்கிக் கொள்கிறார்கள். இந்த நிலையில் இப்படிப்பட்ட மருத்துவர்கள் தாங்கள் இந்த நாட்டின் மக்களுக்காக, இந்த நாட்டின் வளர்ச்சிக்காக, பாடுபடுவதாக எண்ணிச் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும், லெப்ரஸி கன்ட்ரோல் என்ற இனத்தில் 406 இலட்சம் அரசாங்கத்தின் மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், ஒரு பைசா மதிப்புள்ள டி.பி.எஸ்., டி. டி. எஸ். என்கின்ற மாத்திரைகள் (டாபிலட்ஸ்) கிடைப்பதில்லை. இந்த ஒரு பைசா மதிப்புள்ள மாத்திரைகள் போதுமான அளவுக்கு கிடைத்தால் லெப்ரஸியை அடியோடு ஒழித்துவிட முடியும். இந்த நிலையில் 406 லட்சம் கொடுத்திருக்கிறோம், ஆகவே, அரசாங்கக் கிடங்கிலேயே, அரசாங்க மருந்தகத்திலேயே இந்த மாத்திரைகளை ஏன் தயார் செய்யக்கூடாது என்பதை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

இன்னொன்று, ஹவுஸ் சர்ஜன் என்று பலர் இருக்கிறார்கள். நான் முன்னால் சொன்னது போல் காலை நேரத்தில் அரசாங்க அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறார்கள். வேண்டியவர்களுக்கெல்லாம் சர்டிபிகேட் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். சிலர் ஆத்தரைஸ்டு மெடிக்கல் அட்டன்ட் என்று அதிகாரம் பெற்றவர்கள் அரசாங்க ஊழியர்கள் தங்களுக்குள்ள மெடிக்கல்

பில்களுக்கு சர்டிபிகேட் வாங்குகிறார்கள். இதன் மூலமாக அரசாங்க ஊழியர்கள் ரீஇம்பர்ஸ்மெண்ட் அதாவது செலவு செய்த பணத்தை திருப்பிப் பெற்றுக் கொள்வதாகச் சொல்லி வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். இதில் நான் குறிப்பாகச் சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லுகின்றேன்; கேள்விப்பட்டதைச் சொல்லுகின்றேன். அரசாங்க ஊழியர்கள் பலர், இதை மிஸ்-யூஸ் செய்கிறார்கள் என்று தெரிகிறது. சீப்பு, சோப்பு என்று வாங்கிக் கொண்டு அதையும் மெடிக்கல் பில் என்று கணக்குப் போட்டு பணத்தைப் பெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இதைப்பற்றி அரசாங்கம் பரிசீலித்துப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 3-10]

இந்தச் சூழ்நிலையில் நாம் இந்த மருத்துவத் துறையை நாட்டிற்குரிய துறையாக கருதுகிற காரணத்தால், நான் இதை ஒரு புரட்சிகரமான திட்டம் என்று சொல்லவில்லை. மெடிக்கல் புரொஃபஷனை நாம் நேஷனலைஸ் செய்தால்கூட மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கும் என்று மக்கள் கருதுவார்கள். ஏனென்றால், இது மற்றத் துறைகளைப் போல் அல்ல. வியாதி எப்போது வரும், யாரிடமும் சொல்லிக்கொண்டு வராது, யாருக்கும் கர்மவினையாலும் வராது, ஏதோ தற்செயலாக வந்து விடுகிறது. அவ்வாறு வருகிறபோது, அதை சொஸ்தம் செய்வது மிகவும் அவசியமாகிறதால் இந்தத் துறையை அரசு நேஷனலைஸ் செய்தால் நிச்சயமாக மக்கள் இதை வரவேற்பார்கள்.

அதைப்போலவே, இந்த பிரைவேட் பிராக்டிஸ் செய்வதையும் ரத்து செய்தால், அதற்கும் மக்கள் ஆதரவு தருவார்கள். இதற்கு முன்னாலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்திலே இருந்த அமைச்சர் அன்பழகன் அவர்கள் ஒரு சூழ்நிலையில் பிரைவேட் பிராக்டிசை ''பான்'' செய்வதாக ஒரு நேரம் அறிவித்தார்கள். மறுநாள் காலையிலே, அவ்வாறு இல்லை என்று சொல்லி அது பின் வாங்கப்பட்டது. அவ்வாறு அந்த நேரத்தில் ஏன் பின் வாங்கப்பட்டது, அதற்கான சூழ்நிலை என்ன என்பதை ஆராய்ந்து, இப்போது மக்கள் ஏற்றிருக்கிற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு ஏழை எளிய மக்களுக்கு நன்மை நிச்சயம் ஏற்படும் என்ற காரணத்தால் இந்த பிரைவேட் பிராக்டிசை ''பான்'' செய்ய வேண்டுமென்று இந்த அரசுக்கு வேண்டுகோள் விடுத்து, என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. மி. வின்சென்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மருத்துவத்துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பு பெற்றமைக்கு நான் பெருமைப்

படுகிறேன். சில மணித் துளிகளுக்குள், உயிரைப் பிரித்துச் செல்லும் இதய நோயிலிருந்து, மனித உயிரைக் காப்பாற்றத் தீவிர சிகிச்சை அளிக்கும் ஒரு பிரிவை அரசு மருத்துவமனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் ஏற்படுத்த வேண்டுமென்ற முடிவு, மக்கள் உயிரைக் காக்கும் உணர்ச்சிகளில் முதல்வர் அக்கறை செலுத்தியிருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. அதற்காக புரட்சித் தலைவர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

குடிசைவாசிகளுக்கு அவர்களது வாயிலிலேயே மருத்துவ வசதி கிடைக்கும் திட்டம் ஒன்றை அரசு வகுத்திருப்பதற்கு நான் மகிழ்ச்சி அடைகிறேன். பார்வை அற்றவர்களுக்கு பார்வை வழங்குவதற்காக கண்சிகிச்சை மருத்துவ முகாம்களை ஏற்படுத்தியதற்காக முந்திய அரசைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படி ஒரு நல்லெண்ணத்தோடு இத்திட்டம் 1972-ம் ஆண்டு அமுலுக்கு வந்தது. அதிலே சுமார் 1,39,749 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டதாக நான் அறிகிறேன். ஆனால் அந்தக் கண்ணாடிகள் எல்லாம் தேவையுள்ளவர்களுக்கு, சோதனையிடப்பட்டு வழங்கப்பட்டதா என்றால், இல்லை என்ற செய்தியை நான் இந்த அவைக்கு வைக்கிறேன். ஏனென்றால், ஒரேவகையான யூனிஃபார்ம் கிளாசஸ் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆதலால், கண் ஒளி கிடைக்கும் என்று சென்றவர்கள் எல்லாம், இன்று கண் வலியால் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்தச் சபைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில், பொது மருத்துவ மனையில் சூபரின்டென்டென்டாக 1973-ல் இருந்து 76 வரையில் ஒருவர் இருந்திருக்கிறார். ஓய்வு பெற்ற அவர் அன்றைக்கு இரண்டு முறை எக்ஸ்டென்ஷன் வாங்கியிருக்கிறார். அவர் காலத்தில் மருத்துவ மனையில் வாங்கிய மருந்துகள் வகையில் மட்டும் சுமார் 2 லட்சம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த சபைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் காலத்தில் 30,000 ரூபாய் பெறுமான ஒரு கார்டியாலஜி எக்யுப்மெண்ட் 1,40,000 ரூபாய் கொடுத்து வாங்கி இருக்கிறார்கள்.

30,000 ரூபாய் விலை மதிப்புள்ள ஒரு எக்யுப்மென்ட் 1,10,000 ரூபாய் லாபம் கிடைக்கின்ற அளவுக்கு மக்கள் உயிர் காப்பதற்காக, மருத்துவத்திற்காக ஒதுக்கப்பட்ட பணம் சூறையாடப் பட்டிருக்கிறது என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். சாதாரண பி.டி.ஓ. வாக இருந்த ஒருவர் அதன்பிறகு பி.ஏ. ஆனார். அவர் வெளிநாடு சென்று வந்து உடனே கைது செய்யப்பட்டார். ஆனால் அவர் பல லட்சத்திற்கு அதிபதியாக இருக்கிறார் என்ற செய்தியை இன்று மக்கள் அறிந்திருக்கிறார்கள்.

சாதாரணமாக, மூன்று வருஷங்கள், ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை டாக்டர்களை மாற்றுவது வழக்கமாக இருந்திருக்கிறது. ஆனால் அவருடைய காலத்தில் 10 ஆண்டு, 12 ஆண்டுகளாக சில டாக்டர்கள் சிட்டியிலேயே இருந்திருக்கிறார்கள் என்ற சேதியும், அந்தச் சேதி எப்படி வந்தது என்பதை ஆராய்கின்ற நேரத்தில் கேள்விக்குறி எங்கோ இழுத்துச் செல்கிறது என்பதையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேதனையான செய்தி ஒன்றை இந்தச் சபைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையை விட்டுவிட்டு தொடர்ந்து பேசுங்கள்.

* * * *

திரு. கோ. இளங்கோவன் : பாயின்ட் ஆப் ஆர்டர். தாங்கள் ஒரு உத்தரவைப் போடுகிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் தொடர்ந்து அதைப் பற்றிப் பேசுகிறார்.

திரு. மி. வின்சென்ட் : நான் அந்தப் பொருள் பற்றிப் பேசவில்லை.

* * * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதைப்பற்றிப் பேசாமல் பொதுவான கருத்தைத் தொடர்ந்து கூறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட் : அடுத்து, குடிநீர் வழங்குதலைப்பற்றிப் பேசக் கடமைப்பட்டுள்ளேன். குடிநீர் வழங்கலில் வாடிக்கைக்காரர்களைப் பற்றிக் கூறி முடித்துக் கொள்கிறேன். 1975 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 500 பேரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 3-20]

ஆனால் அதற்குச் சொன்ன காரணம் பண நெருக்கடி தான். ஆனால் அடுத்த மாதமே நவம்பர் 1975-லியே 500 பேர்களைப் புதிதாக நியமித்து இருக்கிறார்கள். . இந்த 500 பேர்களில் 70 சதவீதத்தினர் சேலத்தை சேர்ந்தவர்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பிரசிடென்ட் ரூல் வந்தவுடன் எம்ப்ளாய்மென்ட் எக்சேஞ்ச் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்ற காரணத்தால் அட்வைசர் அவர்கள் அனைவரையும் டிஸ்சார்ஜ் செய்திருக்கிறார்கள். அவர்கள்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 3-16—3-19 வரையில் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

எல்லாம் நாங்கள் கொடுத்த பணத்தைக்கூட சம்பளமாகப் பெறுவதற்கு முன்னாலேயே வேலையை இழந்துவிட்டோமே என்று அலுவலகத்திற்கு முன்னாலே கொதித்த நெஞ்சத்தோடு குரல் எழுப்பி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட துரோகங்களை செய்தவர்களை அரசு யார் என்று கண்டுபிடித்து அவர்களைக் கைவிலங்கின் கைதிஆக்கி அவர்களைச் சிறைக் கம்பிக்குள் வைக்கவேண்டுமென்பதை நான் இந்த அரசுக்கு வேண்டுகோளாக விடுக்கிறேன்.

புராணத்திலே கண்ணப்ப நாயனாருக்கு சிவலிகங்ம் கண்ணளித்ததாகக் கூறுவார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே லிங்கனார் ஒருவர் படுத்தியிருக்கிற பாடு தாங்கவே தாங்கவில்லை. வேலை மாற்றம் செய்வது அவருடைய வேலை. அதற்காக வழங்கப்படுகிற கூலி 5 ஆயிரம் ரூபாய். அதன் பிறகு வேலை மாற்றம்....

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். எந்த அதிகாரியின் பெயரையும் குறிப்பிட்டுப் பேசவேண்டாம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மி. வின்சென்ட்: நான் சிவலிங்கம் கண் அளித்ததைத் தான் சொன்னேன். பெயர் குறிப்பிடவில்லை. அதற்குப் பிறகு ரீபோஸ்ட் பண்ணுவதற்கு அதே நிலைமைதான் இருந்தது. அதிகாரிகள் மீண்டும் இப்படிப்பட்ட தவறுகளைச் செய்யாமல் இந்த அரசுக் கண்காணித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேடுக் கொள்கிறேன்.

நான் என் தொகுதியைப் பற்றிப் பேசக் கடமைப்பட்டுள்ளேன். நாகர்கோவிலில் குறைவான இடத்தில் அரசாங்க மருத்துவமனை அமைக்கப்பட்ட காரணத்தால் ஆயிரக்கணக்கான நோயாளிகள் மருத்துவம் பார்க்கமுடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே புதிதாக கட்டடங்களைக் கட்டிப் போதிய வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நாகர்கோவில் தொகுதியில் பட்டசாலியன் விளையில் மருத்துவ மனைக்காக அந்த இடத்திலே அதற்காக 60 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டிருக்கிறது. அதிலே முழு வசதிகளையும் கொண்ட ஒரு ஆஸ்பத்திரியைக் கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. நாகர்கோவில் அரசாங்க மருத்துவ மனையிலே டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸர் இல்லாத நிலைமை இருக்கிறது. இந்த போஸ்ட் வேக்கண்ட் ஆக இருக்கிற காரணத்தால் அந்தப் பணிக்கு வருகிற ஒருவரை பதவி உயர்வு கொடுக்க வேண்டும் அல்லது ஒருவரைப் புதிதாக நியமித்து இந்தக் குறையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கே படுக்கை வசதிகள் இல்லாமல் நோயாளிகள் அல்லலுறுகிறார்கள். அங்கே படுக்கை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகர்கோவில் அரசு மருத்துவ மனையிலே ரேடியாலாஜிஸ்ட் இல்லை. ஆர்தோபீடிக் சர்ஜன் இல்லை. அங்கே இதய நோய் யாருக்காவது வந்தால் திருவனந்தபுரத்திற்குப் போகவேண்டியிருக்கிறது. இவைகளை யெல்லாம் அரசு மாற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக நன்றி தெரிவித்து உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. ஆர். மணிமாறன்; மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, 1977-78 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அளித்ததற்குப் பின்னால் நம்முடைய முதலமைச்சரவர்களுடைய சார்பாக மருத்துவத் துறைபற்றிய மானியக் கோரிக்கையும் மக்கள் நல் வாழ்வுத் துறைபற்றிய மானியக் கோரிக்கையும் கழிவு நீர்ப்போக்கு மற்றும் குடிநீர் வழங்குதல் துறை மானியக் கோரிக்கையும் முதலமைச்சர் அவர்களால் இந்தச் சபையின் முன்னால் வைக்கப் பட்டிருக்கிறது. பொதுவாக, மருத்துவத்தைப்பற்றி நாம் எடுத்துக்கொள்ளும் நேரத்தில் மருத்துவம் என்பது மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகும் என்பதையும், அது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதையும் நாட்டு மக்கள் புரிந்து வைத்திருக்கிறார்கள். குறிப்பாக இந்த மருத்துவத் துறையைக் கொஞ்சம் ஆழமாக உற்று நோக்கி ஆராய்ந்து பார்க்கின்ற நேரத்தில் "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று ஆன்றோர்கள் சொல்வார்கள். நோயற்ற வாழ்விற்கு வழி காட்டும் மருத்துவத் துறையை. நோய் மிகுந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் பலர் சென்ற கால கட்டங்களில் இருந்திருக்கிறார்கள் என்பதை நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதன் மூலமாகக் குறைவற்ற செல்வத்திற்கு வழிகாட்டும் துறையாக இந்த மருத்துவத்துறையை ஆக்கிக் காட்டிய புண்ணியவான்கள் பழைய ஆட்சி காலத்திலே இருந்திருக்கிறார்கள். இன்றும் இங்கு இருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒட்டுமொத்தமாக இந்த மருத்துவத்துறையை எடுத்துப் பார்க்கின்ற நேரத்திலே மிக ஆழமாகப் புரையோடிவிட்ட அந்த நோயைக் குணப்படுத்தும் டாக்டராக நம்முடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் இன்றைக்கு அந்தப் பொறுப்பினை ஏற்றிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். இங்கே இருக்கின்றவர்கள் கேட்கக்கூடும். முதலமைச்சரவர்கள் எங்கே போய் டாக்டர் பட்டம் பெற்று வந்தார்கள் என்று கேட்கக்கூடும். அவர்கள் டாக்டர் பட்டம் பெறுவதற்காகப் பல்கலைக்கழகத்திற்குப் போக வேண்டியதில்லை. பல மக்களுடைய மனக் கழகத்தை நோக்கிப் போனாலே போதும்.

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 3-30—3-31ல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

[திரு. மி. வின்சென்ட்] [1977 ஆகஸ்ட் 13

[பிற்பகல் 3-30]

அதுவே சிறந்த பட்டமாகும். ஆகவே, டாக்டர் என்பதை உதாரணமாகத்தான் வைத்தேன் என்பதைப் பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, மருத்துவத்துறையில் மிக ஆழமாகப் பரவியிருக்கும் அந்த விஷக் கிருமிகளை அழித்தாக வேண்டியது இந்தச் சபையின் பொறுப்பு, இந்தச் சபையின் கடமை. நான் பகிரங்கமாகவே சொல்கிறேன், இதில் தொல்லைப்படுவதற்கு ஒன்றுமில்லை, வேதனைப்படுவதற்கு எதுவுமே கிடையாது. * * *

[பிற்பகல் 3-30]

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, தயவு செய்து சிறிது நேரத்திற்கு முன்பாக வின்சென்ட் அவர்களும் *இப்பொழுது பேசுகின்ற மணிமாறன் அவர்களும் *பிரச்னைகளைப் பற்றி பேசிய விஷயங்களை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட நீங்கள் அனுமதி அளிக்க வேண்டுமென்றும் பேசுகின்றவர்கள் தயவு செய்து வீண் பிரச்னைகளை உருவாக்காமல் என்னென்ன யோசனைகளை, என்னென்ன வழிமுறைகளை, எந்தெந்த வகையில் செயல்படலாம் என்கிற நல்ல திறமையான அறிவுரைகளைக் கூற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் வின்சென்ட், மணிமாறன், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஆகியோர் சொல்லிய *சம்பந்தப்பட்ட விஷயங்களை, அதையொட்டிய பிரச்னையை மட்டும் அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு உத்தரவிடுகிறேன். முதலமைச்சரவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல் விவாதங்களைத் தொடர்ந்து இதிலே செலுத்தாமல், பயனுள்ள விஷயங்களைப் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆர். மணிமாறன் : மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவரவர்களே, ஒட்டுமொத்தமாக நம்முடைய தமிழகத்திலே இருக்கிற மருத்துவ மனைகளை எடுத்துப் பார்க்கிற நேரத்தில், ஆங்காங்கே பல்வேறு விதமான கோளாறுகள் இருப்பதை நாட்டு மக்கள் இன்றைக்குப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இருக்கிற மருத்துவ அதிகாரிகள் செய்கின்ற சில அனுவசியமான, பக்குவம் அற்ற, ஆர்வம் அற்ற செய்கைகள். . . . . . .

திரு. கே. ஜே. உய்யக்கொண்டான்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அரங்கநாதன் பேசியதையும் இந்த அவைக் குறிப்பிலிருந்து நீக்கி விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பிற்பகல் 3-27—3-30 வரையில் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

1977 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தப்பட்ட அத்தனையையும் நீக்கும்படி குறிப்பிட்டேன். நீங்கள் தனித்தனியாகப் பெயரைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

திரு. ஆர். மணிமாறன்: ஆகவே, பொதுமக்களுக்கு இடையூறுகளை விளைவிக்கின்ற ஒரு நிலைமையிலேதான் பல்வேறு மருத்துவ மனைகள் இன்றைய தினம் இயங்கி வருகின்றன என்று இந்தச் சபையின் முன்னால் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளேன். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் நமது சென்னையிலே இருக்கிற 3 மருத்துவ மனைகளில் ஏறத்தாழ 200-க்கு மேற்பட்ட மருத்துவர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்கள் ஏறத்தாழ 20, 25 ஆண்டுகள் அங்கே இருந்து வருவதையும், இங்கே சென்னையிலே இருக்கிற மக்கள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஓய்வு பெற்று ஒரு சில மாதம் பலர் மீண்டும் வேலை பார்க்கிற நிலை வந்தாலும் அவர்கள் மீண்டும் அந்தப் பதவியிலேயே நிலைத்திருக்கும் சூழ்நிலையை இங்கே இருக்கின்றவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள். அதே அடிப்படையில் அவர்கள் அதே மருத்துவ மனைகளில் பணியாற்றி வருகிறார்கள். இவைகளெல்லாம் கவனிக்கப்பட வேண்டியவைகள். ஏதோ எதை அரசாங்கம் வந்தாலும் அந்த அரசாங்கத்தைக் கண் ஜாடையிலே வைத்துக் கொண்டு அவர்களைத் தங்கள்பால் ஈர்த்துக் கொண்டு தங்களுக்கென்று ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டு, வசதி வாய்ப்புகளை உருவாக்கி, ஒரு நிலைமையை உருவாக்கி வளர்த்து வருகிறார்கள். இது மெத்தத் தவறு என்று நான் பணிவோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நான் தேர்ந்தெடுக்கப்பட்ட திருப்பூர் தொகுதியில் நகரத்தின் மையத்திலே ஒரு மருத்துவமனை இருந்தது. அந்த மருத்துவ மனை நகரத்திலிருந்து 2 மைல், 3 மைல் தள்ளிப் புதிதாகக் கட்டப்பட்ட கட்டிடத்தில் இப்பொழுது இயங்கி வருகிறது. நகரத்தின் மையத்திலே அந்த மருத்துவ மனை இருந்தபொழுது ஆயிரக்கணக்கான மக்கள் அம் மருத்துவ மனைக்குத் திரண்டு வந்தார்கள். ஆனால், இப்பொழுதுள்ள புதிய கட்டிடத்திற்கு அப்பகுதி மக்களில் பாதி பேர் கூட வருவது கிடையாது. எதனால் அது மாற்றப்பட்டது? திடீரென்று இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த இடத்திலே ரூ. 50 இலட்சம் என்ற கணக்கினைச் சொன்னார்கள். அந்தப் புதிய இடத்தில் மருத்துவ மனை நிறுவியிருக்கிறார்கள். இதில் ஏதோ ஒரு எதிர்பாராத கோளாறு நடந்திருப்பதாகத் தொகுதியிலே இருக்கிற மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு இதையும் நிச்சயமாகப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, எந்தக் காரணத்தை அடிப்படையாக வைத்து, எதனுடைய அடிப்படையில். நகரத்தின் மையத்தில் உள்ள மருத்துவ மனையை நகரத்திற்கு அப்பால்

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 3.30—3.31-ல் ஒரு சில சொற்கள் அகற்றப்பெற்றது.

[திரு. ஆர். மணிமாறன்] [1977 ஆகஸ்ட் 13

எடுத்துச் சென்றார்கள், அப்படி எடுத்துச் செல்ல வேண்டிய அவசியம் என்ன என்பதை நம்முடைய அரசு தகுந்த முறையிலே பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிநீர் வடிகால் வாரியத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கான மானியத்தை இன்றைய தினம் அமைச்சரவர்கள் கேட்டார்கள். இந்தக் குடிநீர் வாரியம் அமைக்கப்பட்டும், பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் இந்த நாட்டு மக்கள்—கிராமத்திலே இருக்கிற மக்கள் எப்படிக் குடிநீருக்கு அலைமோதிக் கொண்டிருந்தார்களோ, அதே நிலையில்தான் இன்றையதினம் கிராம மக்கள் அலைமோதிக் கொண்டிருக்கிறார்கள். பழைய அரசைச் சேர்ந்தவர்கள், குழாய்களைப் பொருத்தி இருக்கிறோம் என்று சொல்லக் கூடும். ஆனால் பொருத்தி இருக்கிற அந்தக் குழாய்கள், பொருத்தப்பட்ட உடனேயே ஒரு வாரத்தில், ஒரு மாதத்தில் அதிலே ரிப்பேராகி விடுகிறது. அந்தக் குழாய்களைப் பார்க்கிற நேரத்தில் அவைகள் குடிநீர்க் குழாயா அல்லது வெடிநீர்க் குழாயா என்று நமக்குப் புரியவில்லை. எல்லா கிராமத்திலும் இந்தக் கூச்சல்தான் இருந்து வருகிறது. சென்னைக்குத் தண்ணீர் வருகிறது என்று சொல்லி வீராணம் திட்டம் போட்டு ஏமாந்ததை நாம் மறந்திருக்க முடியாது. ஏறக்குறைய 22 கோடியே 64 லட்சம் ரூபாய்கள் தீர்ந்து ஏப்பம் இட்ட கதை இன்றைய தினம் நாடறிந்த ஒன்றாகும். மேலும் இந்தத் திட்டத்தை எடுத்து நடத்த வேண்டுமென்றால் இன்னும் கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்ட வேண்டிய சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே 22 கோடி பணம் போட்டோம், இந்தப் பணம் எங்கிருந்து வந்தது? உழைக்கின்ற மக்கள் தன் உழைப்பின் பிரதிபலிப்பின் அடிப்படையிலே தந்தப் பணம்தான் 22 கோடி ரூபாய். அந்த ரூபாய், ஆகாத திட்டத்திற்காக, தேவை இல்லை என்று சொல்லி ஒதுக்கப்பட்ட திட்டத்திற்காக, வீணான வீராணம் திட்டத்திற்காக,கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டி வைத்திருக்கிறார்கள். இன்றைக்கு அமைந்திருக்கிற புதிய அரசு தயவுசெய்து அதைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

* திரு. மு. அரங்கநாதன்: பாயின்ட் ஆப் ஆர்டர்

* * *

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவுசெய்து உட்காருங்கள். என்னை எதுவும் கேட்காமல் நீங்கள் பதில் சொல்லிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம். ஏதாவது கேட்க வேண்டுமென்றால், பாயின்ட் ஆப் ஆர்டர் என்றால், என்னுடைய பர்மிஷன் வாங்கிய பிறகு கேளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க பிற்பகல் 3.37-3.38ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

1977 ஆகஸ்ட் 13] [பேரவைத் துணைத்தலைவர்]

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அரங்கநாதன் பேசிய அந்தப் பேச்சினை சபைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி உத்தரவிடுகிறேன். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். இரண்டு நிமிடத்தில் தயவு செய்து முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. ஆர். மணிமாறன் : * என்பது பழைய அரசைச் சார்ந்தவர்களுக்கு நிச்சயமாக தெரியும், விளக்க வேண்டியது இல்லை. அதேபோல சென்னைக்கு அருகே ஆலந்தூரில் ஏறக்குறைய 2 கோடி ரூபாயில் ஒரு திட்டம். இந்தத் திட்டத்திற்கான தொகையும் விழுங்கி ஏப்பம் விடப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை 'கான்ட்ராக்ட்' எடுத்தவர் யார்? எப்படிப்பட்ட பைப்புகளைப் போட்டார்கள். ''கண்டம்டு'' பைப்புகளைப் போட்டதன் விளைவாக அங்கே தண்ணீர் வருமா என்று எதிர்பார்த்து ஏமாந்து, மக்கள் கண்ணீர் வடிக்கிறார்கள். அந்தப் பகுதி மக்களுக்கு தண்ணீர் வராமல் கண்ணீர் வடிக்கிற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமையை வைத்துப் பார்த்தால் வீராணம் தாத்தா, ஆலந்தூர் பேரன் ஆக இருக்கிறது, அந்தத் திட்டத்தையும் நம்முடைய பழைய அரசைச் சேர்ந்தவர்கள்தான் போட்டிருக்கிறார்கள். இதையும் நம்முடைய புதிய அரசு உற்று நோக்கி கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலந்தூர் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது போலீஸ் இன்வஸ்டிகேஷனில் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இதையும் புலன் விசாரணை செய்து ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல்வேறு கிராமங்களில் இருக்கக் கூடியவர்கள் இன்றைக்குத் தண்ணீர் இல்லாமல் கஷ்டப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கண்களிலே கண்ணீரைச் சிந்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் குடிநீர் தருவது நம்முடைய பொறுப்பு என்ற முறையிலே நமது முதலமைச்சர் அவர்கள் கிராமப்புறங்களிலே குடிநீர் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே முனைப்போடு எழுந்திருக்கிறார்கள். எனவே அப்படிப்பட்ட நிலையிலே இந்த அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி செம்மையாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே பேசிய எதிர்க்கட்சி வரிசையிலே உள்ளவர்கள் பல்வேறு குறுக்கீடுகளைச் செய்தார்கள். நான் ஒன்றை மாத்திரம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாணவர்களைத் தேர்ந்தெடுத்ததில் தகுதியின் அடிப்படையில், திறமையின் அடிப்படையில் இந்த அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது என்பது நாட்டுக்குத் தெரியும், ஊருக்குத் தெரியும், உலகத்துக்குத் தெரியும். நம்முடைய எதிர்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்—பேராசிரியரவர்கள் ஒரு அருமையான வார்த்தையைக் குறிப்பிட்டார்கள். மீனவர்களுக்கு வசதி செய்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க பிற்பகல் 3.3-83.59 இல் சில பகுதிகள் அகற்றப் பெற்றன.

திருக்கிற நமது மீனவ நண்பன் என்று நமது முதலமைச்சரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு மருத்துவக் கல்லூரிகளிலும், இன்ஜினியரிங் கல்லூரியிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், முதலமைச்சரை வாயார வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் எந்த முறைகேடும் நடக்கவில்லை என்று சொல்லி. ஆகவே பேராசிரியர் கூற்றுப்படி முதலமைச்சர் அவர்கள் மீனவ நண்பன் மாத்திரம் அல்ல நல்லதொரு மாணவ நண்பன் என்பதை நிரூபித்து காட்டி விட்டார்கள். ஆகவே இந்த மானியக் கோரிக்கையை நான் ஆதரித்து விடைபெறுகிறேன், வணக்கம். நன்றி.

[பிற்பகல் 3.40]

* திரு. க. அன்பழகன்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மருத்துவ-மக்கள் நல்வாழ்வுத் துறை மானியங்கள் மீது பேசிய ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் மீனவ நண்பன் மட்டுமல்ல, மாணவ நண்பன் என்றார். திரு. மணிமாறன் அவர்கள் அவ்வாறு குறிப்பிட்டார்கள். அதனை வரவேற்கிறேன். தேர்ந்து எடுக்கப்பட்ட மாணவர்களுக்கு அவர் உண்மையிலேயே நண்பனாக இருப்பதற்காக நான் மகிழ்கிறேன். கல்லூரியில் சேரத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் ஆட்சியிலே உள்ளவர்களை வாழ்த்திக் கொண்டுதான் இருப்பார்கள். தேர்ந்து எடுக்கப்படாத மாணவர்களுக்குத்தான் குறை இருக்கும். நான் அமைச்சராக இருந்த போதும், அந்த நிலைதான். வேறு யார் அமைச்சராக வந்தாலும் அந்த நிலைதான். தேர்ந்து எடுக்கப்பட்ட மாணவர்கள் வாழ்த்துகிறார்கள் என்ற காரணத்தினாலேயே யாருக்கும் குறை இல்லை என்று கருதக்கூடாது.

ஆனால் குறை என்பது தனிப்பட்டவர்கள் யாராகிலும் செய்திடக்கூடிய குறையை, அமைச்சர் செய்த குறையாக, முதலமைச்சர் செய்த குறையாக எண்ணிவிடக் கூடாது. தனிப்பட்டவர்கள் பல்வேறு முறைகளிலே தங்கள் வாய்ப்பு வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்காக எந்த ஒரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். எவ்வளவுதான் கட்டு திட்டங்களை அமைத்தாலும், அந்தக் கட்டுதிட்டத்திலும் சில குறைகள் ஏற்படும்.

ஏதோ மருத்துவத் துறை என்பதை மிகவும் அதிகமான அளவிற்குக் குறை உள்ள துறையாக இங்கு குறிப்பிட்டார்கள். விஷப்பூச்சிகள் என்பது எல்லா இடங்களிலும், உடம்பிலே கூட இருக்கும். உயிர்ப் போக்கும் விஷப் பூச்சிகளை அழிப்பதற்காகத்தான் இந்தத் துறையே இருக்கிறது. அதற்குத் தேவையான மருந்துகளைத் தயாரிக்கும் துறை மருத்துவத் துறை. அந்த விஷப் பூச்சிகளை அழிக்கின்ற மருந்துகளில்கூட சில நேரங்களில் குறை ஏற்பட்டு பூசணம் பூத்துவிடும். எனவே குறைகள் இருக்கிறது என்ற காரணத்தினாலேயே மருத்துவத் துறை

மிகவும் கெட்டுவிட்டது, குறைகள் வளர்ந்து விட்டன என்று கூறுவார்களானால், இந்த ஓராண்டுக் காலத்திலே, உடனடியாகத் தீர்ந்து விடப்போவதில்லை. 15, 20 ஆண்டுக் காலத்தில் இந்தத் துறை வளர்ந்த காலத்தில், அதோடு சேர்ந்து குறைகளும் வளர்ந்திடுவது இயற்கை. இவற்றை அவ்வப்போது மறு பரிசீலனை செய்து சீர்திருத்த வேண்டியது அவசியம் என்று அரசாங்கத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கனவே இந்தத் துறை இரண்டு இயக்குநர்களிடம் இருந்தது பொதுச்சுகாதாரத் துறைக்கு நல்வாழ்வுத் துறை என்ற பெயர் கொடுக்கப்பட்டு ஐந்து ஆண்டாக இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு வரை, நல்வாழ்வுத் துறை—குடும்ப நலத் திட்ட இயக்குநரிடமே மருத்துவமும் சுகாதாரமும் இணைக்கப்பட்டிருந் பட்டிருந்தது. இன்று மருத்துவப் பணிக்கும் குடும்ப நலப் பணிகட்கும் ஒரு இயக்குநரும், நல்வாழ்வுத் துறைக்கு—மருந்துக் கட்டுப்பாட்டுப் பணியும் சேர்ந்து கவனிக்க ஒரு இயக்குநரும், மருத்துவக் கல்வித் துறைக்கு ஒரு இயக்குநரும் ஏற்படுத்தப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. ஏற்கனவே, முன்னர், மருந்துக் கட்டுப்பாடு, நல்வாழ்வுத் துறை இயக்குநரிடத்திலே ''டி. எச். எஸ்.'', டைரக்டர் ஆப் ஹெல்த் சர்வீசஸ் என்ற அலுவலரிடத்திலே இணைக்கப்பட்டிருந்தது. அது நல்வாழ்வுத் துறையோடு இணைந்து இருப்பதுதான் பொருத்தமுடையது என்று இன்று நல்வாழ்வுத் துறை இயக்குநரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதைப்போல பேரறிஞர் அண்ணாவின் பெயரால் காஞ்சிபுரத்திலே புற்று நோய் ஆராய்ச்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அது ஏறத்தாழ இது வரையில் 50 இலட்சம் ரூபாய்க்கு மேல் ஒதுக்கப்பட்டு உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 100 படுக்கைகள் கொண்ட ஒரு கட்டடம் உருவாகி இருந்தது. அதற்குப் பின்னர் 250 படுக்கைகள் கொண்டதாக அது உருவாக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

புற்று நோய்த் தடுப்புக்கும் சிகிச்சைக்கும் அது ஒரு ஆராய்ச்சி நிலையமாக அமைவதால், உலக சுகாதார நிறுவனம் ஒப்புக் கொள்ளும் நிலையில், அவர்களின் ஒப்புதல் பெறத்தக்க ஒரு சூழ்நிலை உருவாகிட எவ்வளவோ முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நிறுவனம் இன்றைக்கு மருத்துவக் கல்வித் துறை இயக்குநருடைய மேற்பார்வையில் மருத்துவக் கல்லூரிகளோடு தொடர்புடையதாகச் செயல்படுத்தப்பட வேண்டுமென்ற ஆலோசனை உருவாகி இருப்பதற்காக நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் அவ்வப்போது தேவைப்படும். இப்படிப்பட்ட சீர்திருத்தங்கள் மூலம்தான் பயன் உள்ள பணிகளைச் செய்ய முடியும். முன்பு இருந்த கழக

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 13

அரசால் சுகாதாரத் துறை நல்வாழ்வுத் துறை என்று பெயரிடப் பட்டது. அதற்கு முன்னர் பொது நலத்துறை என்றே அழைக்கப் பட்டு வந்தது. ''பப்ளிக் ஹெல்த்'', என்பதற்கு மக்கள் நல்வாழ்வுத் துறை என்று பெயர் அமைக்கப்பட்டது. மக்கள் நல்வாழ்வு என்பது பொருள் விளக்கம் உடையதாக இருக்கும் என்று இந்தப் பெயர் மாற்றம் மேற்கொள்ளப்பட்டது. அகில இந்திய அளவில் குடும்பக் கட்டுப்பாட்டுத் துறை என்ற பொருள் பட ''ஃபேமிலி பிளானிங்'' என்று இருந்த பெயர் அண்மைக் காலத்தில் ஜனதா ஆட்சி ஏற்பட்டதற்குப் பின்னர், ''ஃபேமிலி வெல்பேர்'' என்று மாற்றப்பட்டிருக்கிறது. அது குடும்ப நல்வாழ்வு என்று பொருள்பட அமைந்திருப்பது, தமிழக அரசு 5 ஆண்டுக் காலத்திற்கு முன் எண்ணிய கருத்திற்கு ஏற்ப இருக் கின்றது என்பதால் மகிழ்ச்சி கொள்கிறேன். இந்தப் பெயர் மாற்றத்தை வரவேற்கிறேன்.

பல்வேறு தலைப்புகளின்கீழே வரும் விவரங்களில் சிறு சிறு தவறுகள் ஏற்பட்டுள்ளன என்று பல திருத்தங்கள் துறையினரால் அனுப்பப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளைப் பற்றிய குறிப்பு களில் உள்ள குறைகள் பற்றி நான் விரிவாகச் சொல்ல முடியாத கால கட்டத்தில், சுருக்கமாகச் சொல்ல விரும்புகிறேன்.

சென்னையில் உள்ள மருந்துவக் கல்லூரி, பொது மருத்துவ மனையுடன் இணைந்து செயல்படும் நிலையில், அதனை மருத்துவ மேற்பட்டப்படிப்பும், ஆராய்ச்சியும் வளரத் துணையாக போஸ்ட் கிராஜுவேட் இன்ஸ்டிடியூஷன் ஆப் மெடிசின் அண்ட் ரிசர்ச் என்ற முறையிலே அது உயர்த்தப்பட வேண்டும் என்பதற்காக 5, 6 ஆண்டுக் காலமாக ஒரு முயற்சி இருக்கிறது.

இந்த முயற்சி வளருவதற்கு அவ்வப்போது சில பெரிய சிறப்புத் துறைகள் அந்த மருத்துவ மனையில் இடம் பெற வேண்டு மென்று விரும்பி, கார்டியாலஜி, நியூராலஜி போன்ற பல பிரிவுகள் சில ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டு வந்துள்ளன. இந்தச் சென்னை மருத்துவக் கல்லூரியைக் குறித்து தமிழ் அறிக்கை யில் பட்ட மேற்படிப்பு கல்வி ஆராய்ச்சி நிலையம் ஆக மாற்றுதல் என்று குறிப்பு இருக்கிறது.

மானியக் கோரிக்கை பற்றிய ஆங்கில அறிக்கையிலும், பெர்ஃபார்மன் ஸ்பட்ஜெட்டிலும் Institute of Post Graduate Medical-Education and Research என்று இருக்கிறது. ஆனால் டிடெய்ல்டு பட்ஜெட்டில் 682-ஆம் பக்கத்தில் upgrading of Madras Medical College as Institute of Medical Education and Community Health. என்று இருக்கிறது. விவரமான பட்ஜெட்டில் விளக்க ஏட்டில் அது மருத்துவமும் சமுதாய நலமும் பற்றிய நிலையம் என்ற பெயருள்ள மருத்துவக் கல்வி நிலையமாக உயர்த்தப்படும் என்ற கருத்து

1977 ஆகஸ்ட் 13] [திரு. க. அன்பழகன்]

தரப்பட்டிருக்கிறது. இவ்வாறு அறிக்கைகளில் பெயரிலேயே மாற்றம் இருப்பது அவ்வளவு நல்லதல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரியிலுள்ள மருத்துவ ஆக்க இயல் பட்டப் படிப்பு, நான்கு ஆண்டுகளுக்கு முன்பாகவே சென்னை மருத்துவக் கல்லூரியில் இருந்து செங்கற்பட்டுக் கல்லூரிக்கு மாற்றப்பட்டது மேற்பட்டப் படிப்புக் கல்லூரியாக உயர்த்தப்படுவதற்குத் தேவை யாகும் இட வசதிக்காக சென்னை மருத்துவக் கல்லூரி போஸ்ட் கிராஜுவேட் கல்லூரி ஆக வேண்டுமென்ற நேரத்தில், வெறும் பட்டப் படிப்புகளுக்கு அதிக இடம் இங்கு இருக்கக் கூடாது என்ற ஆலோசனையின் பேரில் மருத்துவ ஆக்க இயல் பட்டப் படிப்பு செங்கற்பட்டுக்கு மாற்றப்பட்டது. 1976-ல் அது திரும்பவும் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டிருக்கிறது செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி அதற்கு தகுந்த இடம் என்று கருதப்பட்டு, சில வகையான பட்ட முன் படிப்புப் பாடங்கள் தனித் தனிக் கல்லூரிகளில் இருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. இப்போது யாரோ சில ஆசிரியர்கள் வசதிக் காக இங்கேயே கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

சென்னை பொது மருத்துவமனையில் Intesive Coronary Care Unit, Cardilogy, ஆறு, ஏழு ஆண்டுகளாகவே இயங்கி வருகிறது. இந்த Intensive Coronary Care Unit. தனிப்பட்ட சிகிச்சைப் பகுதியை நவீன கருவிகளுடன் பொது மருத்துவமனையிலும், ஸ்டான்லி மருத்துவ மனையிலும் ஏற்படுத்துவதற்கு அரசு முடிவு செய்துள்ளது என்று, 6, 7 ஆண்டுகளாக உள்ள அதே பகுதியை இப்போதுதான் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது என்று இந்த அறிக்கையில் சொல்லப் பட்டிருக்கிறது. இராயப்பேட்டை மருத்துவ மனையில் ஏற்கனவே இருக்கிறது என்று நல்ல வேளையாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக் கிறது. இவற்றை எல்லாம் Intensiue Coronary Care Unit என்று நல்ல முறையில் செய்யப்பட மொபைல் வேன் ஒன்று அதற்காகவே ஒரு நிறுவனத்தார் நன்கொடையாகத் தந்து உரிய கருவிகளும் அமைக்கப்பட அனுமதிக்கப்பட்டு மூன்று நான்கு ஆண்டுகளுக்கு முன் தொடங்கி வைக்கப்பட்டது. அதற்கான நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து, இந்த ஆண்டில் துவக்க வேண்டுமென்று அறிக்கையில் வருவது முறை அல்ல. மற்றும் ஏழு மாடிக் கட்டிடம் கார்டியாலஜி பிரிவுக்கு இருக்கிறது. அங்கு ஏற்கனவே பணி ஆரம்பித்தாகிவிட்டது. இரண்டு மூன்று மாடிகளில் இடம் ஒழுங்கு செய்யப்படவில்லை. அதனால் அந்தப் பகுதி பணிக்குரியதாக இல்லை. அப்படி நடைபெற்றுவரும் நிலையில், தமிழ் அறிக்கையில் ஏழு மாடிக் கட்டிடம் இருதய பிரிவுக்கு திறந்து வைக்கப்பட்டிருக்கிறது என்று, ஏதோ முன்பு இல்லாதது போலவும், மூடி வைக்கப்பட்டிருந்த மாதிரியும் இப்போதுதான் அது திறந்துவைக்கப்பட்டது போல் அறிக்கையில் காணப் படுகிறது.

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 13

ஆங்கிலத்தில் உள்ள அறிக்கையில் It is re-opened என்று கூறப்படுகிறது. Cardio vascular surgery பகுதி செயல்பட இடம் அமைக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் உண்மை. ஒரு பெரிய துறை, திரு. வி. வி. கிரி அவர்கள் துவக்கி வைத்த துறை இன்றைக்கு மறுபடியும் துவக்கப்படுகிறது.

அதேபோல் மருத்துவ மானிய கோரிக்கையின் விவரங்களைப் பார்த்தால் பக்கம் 20-ல் மாவட்ட மருத்துவ மனைகளில் 1976-77ல் கீழ்க்கண்ட நான்கு சிறப்புப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கூறப்பட்டிருக்கிறது.

[முற்பகல் 3-50]

''ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் துறை, தூத்துக்குடி, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு, புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் சிறுநீர் மருத்துவப் பிரிவு, ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு'' என்றிருக்கிறது. மேலும், அதே கருத்து 27-வது பக்கத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே மேலும், 1976-77ல், கீழ்க்கண்ட சிறப்புத் துறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கூறி ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் துறை, தூத்துக்குடி, மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவு, புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் குழந்தை நோய் சிகிச்சைப் பிரிவு, ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு, அந்தச் செய்திகளே திரும்பவும் இரண்டாவதாக ஏதோ புதிதாக ஏற்படுத்தப்பட்டிருப்பது போல் சொல்லப்பட்டிருக்கிறது. 28-வது பக்கத்தில் நான்காவது பாராவில் உள்ள செய்தி இன்னும் ஆச்சரியமாக இருக்கும். அங்கு கூறப்படுவது, ஈரோடு மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் பிரிவு ஒன்றையும், கண்நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தக் கருதப்பட்டது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது. இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. ஒரே அறிக்கையில் மூன்று இடங்களில் ஒரே கருத்து திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது என்பதுடன், ஏற்படுத்தப்பட்டுவிட்டன என்று இரண்டு இடங்களில் கூறி மூன்றாவது இடத்தில் ஏற்படுத்த அரசு ஆலோசிக்கிறது என்று கூறுவது எவ்வளவு தெளிவற்ற நிலை என்பதைக் காட்டும். இந்தக் கருத்தை இணைத்துப் பார்க்கிற ஒரு முறை இல்லாத காரணத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

1977 ஆகஸ்ட் 13] [திரு. க. அன்பழகன்]

அஸிஸ்டெண்ட் சர்ஜன்ஸ் என்பவர்களை அறுவை சிகிச்சை உதவி மருத்துவர்கள் என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. '' கல்ராயன் மலைப்பகுதியில் பழங்குடி மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் இருவருடன் இயங்கும் மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்'' என்றிருக்கிறது.

ஊர்தியில் பணியாற்றும் உதவி மருத்துவர்கள் மருந்து கொடுக்கிற முறையில் பணியாற்ற முடியுமே தவிர அறுவை சிகிச்சை நடத்த முடியாது. ஆங்கிலச் சொல்லுக்கு மொழி பெயர்ப்பாகுமே தவிர பொருள் உடையதாகாது. பலயிடங்களில் டிஸ்பென்ஸரீஸ் என்றால் மருந்தகங்கள் என்று வழங்கப்படுகிறது. பார்மஸி என்றாலும், அதையும் மருந்தகம் என்று சொல்லப்படுகிறது. டிஸ்பென்ஸரி என்பது மக்களுக்கு நேரடியாகச் சிகிச்சை செய்யுமிடம். பார்மஸி என்பது மருந்தாக்க நிலையம் அதாவது மருந்தை உற்பத்தி செய்கிற இடம். பார்மஸி என்பதையும் மருந்தகம் என்று மொழி பெயர்த்திருக்கிறார்கள். தமது வெறுப்பின் காரணமாக சிலருக்கு கருணாநிதி என்ற பெயர் கசப்பாக இருந்தாலும்—சிலருக்குச் சில கசப்பாக இருக்கும், சிலருக்குச் சில இனிப்பாக இருக்கும்—ஆனால் அப்படி கசப்பாக இருந்தாலும் அதற்காக டாக்டர் பட்டம் பெற்றது குறித்துக் கூறியது—இளைஞர்களின் தாங்கிக் கொள்ள முடியாத ஆத்திர உணர்ச்சியின் விளைவாகும் என்று கருதுகிறேன். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் எம். ஜி. ஆர். அவர்கள் கூட பொதுமக்களிடம் போய் கேட்டு பட்டம் வாங்கவேண்டும் என்று ஆலோசனையும் சொன்னார்கள். ஒரு டாக்டராக மதிப்பளிக்கப்பட்டவர் எதற்கும் தகுதி அற்றவராக ஆகிவிட மாட்டார்கள். தகுதி இருந்த காரணத்தினால்தான் அவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் தந்திருக்கிறார்கள். எவ்வளவோ பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கெல்லாம் டாக்டர் பட்டம் கொடுத்து விட்டார்களா? அப்படி டாக்டர் பட்டம் கொடுக்க எந்தப் பல்கலைக்கழகமும் முன் வரவில்லை. எனக்குக் கூட அந்தப் பட்டத்தை யாரும் தரவில்லை. மனோகரன் அவர்களுக்குக் கூட யாரும் தரவில்லை. ஆக நாங்கள் எல்லாம் டாக்டர் பட்டம் தரப்படாத நிலையில்தான் இருக்கிறோம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஒருவர் மீது பழி சுமத்த நாமே இடம் கொடுக்கக்கூடாது. கலைஞரது பிறந்த நாளைக் கொண்டாடுவது தவறு என்று மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் கருதுவது இயற்கை என்றாலும் அப்படி நடந்தபோது தொடங்கப்பெற்றதுதான் கண் அறுவை சிகிச்சை முகாம்கள். அப்படித் துவக்கப்பட்ட முகாம்கள் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு இது வரை 404 முகாம்கள் நடைபெற்றுள்ளன. கலைஞரின் பெயரை வேண்டுமானால் எடுத்து விடலாம். ஆனால், மக்கள் மறந்து விட மாட்டார்கள். மொத்தத்தில் புரையோடிய கண் அறுவை சிகிச்சைகள் 1,39,747 பேர்களுக்கு நடைபெற்றிருக்கிறது. கண் அறுவை சிகிச்சைக்குப் பின்னால் கொடுக்கப்படுகிற கண்ணாடிகள்

எது என்று தெரியாமல் எல்லாம் ஒரேமாதிரியாக இருந்தது என்று சொன்னார்கள். காட்டராக்ட் ஆபரேஷனுக்குப் பிறகு தரப்படுகிற கண்ணாடிகளில் அதிக தர வேற்றுமை இருக்க முடியாது. ஒரே மாதிரியாகத்தான் இருக்கும். கண்ணாடிக்காக ஆகும் செலவு ரூ. 3, ரூ. 4 தான். இடவசதிக்கும், உணவு வழங்குவதற்கும் ஒருவருக்கு ரூ. 45 செலவாகிறது, ரூ. 21 மருத்துவச் செலவிற்காக ஆகிறது. இது தெரியாமல் எதிர்க்கட்சி தலைவர் அவர்கள் நடத்துகிற கடையிலிருந்து கண்ணாடிகளை விலைக்கு வாங்கிக் கொடுத்து விட்டது போல் பேசப்பட்டது. சில விளக்கங்கள் இத்துறையில் பணியாற்றுபவர்கட்கே தெரியாமலிருக்கிறது. ஒரே துறையில் பல்வேறு பிரிவில் பணியாற்றுபவர்கள் இருப்பார்கள். அனைத்தும் எல்லோருக்கும் தெரியும் என்று கூறிவிட முடியாது. எனவேதான் மொழி பெயர்ப்புக் கூட தவறுகிறது. மாலைக்கண் அறுவைச் சிகிச்சை 1,04,100 பேர்களுக்கு நடத்தப்பட்டிருக்கிறது என்று கூறப்பட்டுள்ளது. ரிப்ராக்ஷன் என்றால், கண்ணாடி போட விரும்புகிறவர்கள் கண் பார்வையை அளந்து பார்த்து இந்த அளவுள்ள கண்ணாடி போட வேண்டும் என்று எழுதித் தருவது. ஆங்கிலத்தில் செய்யப்பட்ட ரிப்ராக்ஷன்ஸ் 1,04,100 என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் ஏட்டிலோ மாலைக் கண் அறுவை சிகிச்சை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 1,04,100 என்று தவறான விளக்கந்தரப்பட்டுள்ளது. அறிக்கையிலேயே இப்படியிருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர்கள் இதில் தவறுதலாக கருத்தறிவிப்பது பற்றி நான் வருத்தப்பட்டுக் கொள்ள இயலாது. நான் ஐந்தாண்டு காலமாக இந்தத் துறையில் அமைச்சராக இருந்த காலத்தில் ஒரு மாணவரைப் போன்று தெரிந்து கொள்ள முடிந்தவற்றையெல்லாம் எல்லோரும் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்காது என்பதால் அறிக்கைகள் தெளிவாக இருக்க வேண்டும் என்ற என் விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

தொழுநோய்க்கு சிகிச்சை அளிக்கும் திட்டத்தில் ஓரளவு நல்ல பலனை நாம் கண்டிருக்கிறோம். இதில் முக்கியமானது, தமிழ்நாட்டில் உள்ள 450 லட்சம் மக்களில் 385 லட்சம் மக்கள் தொழுநோய் சிகிச்சை பெறுகிறார்கள் என்று எண்ணக்கூடிய விதத்தில், தமிழ் அறிக்கை தெரிவிக்கிறது. நூறு பேர்களில் இரண்டு மூன்று பேருக்கு ஒரு லட்சம் மக்களில் ஆயிரம் பேருக்கு தொழுநோய்க்கு சிகிச்சை செய்ய வேண்டும். இதைப்பற்றி தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிற விளக்கத்தைப் பார்த்தால், பக்கம் 37-ல் "இதுவரை அரசு மருத்துவ மனைகளிலும் தனியார் மருத்துவ மனைகளிலும், 386 இலட்சம் தொழு நோயாளிகளுக்கு மும்முர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது...." என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதன் அடிப்படையில் பார்த்தால், 450 லட்சம் மக்கள் உள்ள தமிழ்நாட்டில் 386

லட்சம் தொழு நோயாளிகள் என்றால், இந்த அவையில் கூட பல தொழுநோயாளிகள் இருக்கக் கூடிய நிலையில் அமையும். இந்த நிலையில் 386 லட்சம் தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது என்று சொல்லப்பட்டிருப்பது தவறு, ஆங்கிலத்தில் உள்ள அறிக்கையில் சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது, Till now 386 lakhs have been brought under intensive coverage both by Government as well as voluntory agencies. இதில் 386 லட்சம் மக்கள் கொண்ட பகுதி இந்த சிகிச்சையினால் கவரப்பட்டுள்ளது. 450 லட்சம் மக்கள் வாழ்கிற தமிழ்நாட்டில், 386 லட்சம் மக்கள் கொண்ட பகுதியில் தனியார் வாலண்டரி ஏஜென்ஸி மூலமாகவும், அரசாங்கத்துறை மூலமாகவும் தொழுநோய்க்கான சிகிச்சைகள் செய்வதில் வெற்றி பெற்றிருக்கிறோம் என்கின்ற நிலையைக் கூறுகின்ற அளவில்தான் ஆங்கிலத்தில் இருக்கிறது. தமிழில் வருகிற பொழுது, தமிழுக்கு முக்கியத்துவம் இருக்கக் கூடாது, ஆங்கிலத்தில்தான் கருத்திற்கு முக்கியத்துவம் இருக்கவேண்டும் என்ற நினைப்பு இருக்கிறதோ என்று ஐயப்படக்கூடிய அளவுக்குத் தமிழ் மொழி பெயர்ப்பு இருக்கிறது......

மாண்புமிரு திரு. சி. மனோகரன் : இப்போது மொழி பெயர்க்கின்ற மொழிபெயர்ப்பாளர்கள் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னால் நியமிக்கப்பட்டவர்கள் அல்ல......

* திரு. க. அன்பழகன் : நான் அவ்வளவு அவசரக்காரனும் அல்ல, ஆத்திரக்காரனும் அல்ல. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு இதில் அரிச்சுவடியில் கூட இன்னும் இறங்கவில்லை என்பதும் எனக்குத் தெரியும். இதிலுள்ள எல்லாச் சிக்கல்களையும், மற்ற எல்லாவற்றையும் எண்ணிப் பார்க்கின்ற வாய்ப்பும் சூழ்நிலையும் இன்னும் ஏற்படவில்லை என்பதும் எனக்குத் தெரியும். பொதுவாக அதிகாரிகள் தங்கள் அன்றாட வேலைகளைக் கவனித்துக் கொள்ளும் அளவிலே இருக்கின்ற நிலையைத்தான் காண முடிகிறது. நான் இதில் 'டோட்டல் பெர்ஸ்பெக்டீவ்' அதாவது துறையை முழுதாகப் பார்ப்பது என்ற நிலையில் இல்லை என்ற நிலைமையைத்தான் சொல்லுகிறேன். இதனைப் படிக்கின்றவர்கள் எந்த அளவுக்குத் தவறான எண்ணத்திற்கு ஆளாவார்கள் என்பதற்காகத்தான் இதை எடுத்துக் காட்டினேன். மாணவர்களில் தொழு நோய் கண்டிருப்பவர்கள் 100-க்கு இரண்டு பேர்களிலிருந்து 7 பேர்கள் வரை, அதாவது 2 சதவீதம் முதல் 7 சதவீதம் வரை கண்டிருப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த நிலையைக் கொண்டு பார்க்கின்றபோது இப்போது பெரியவர்களுக்கும் சரி, இளைஞர்களுக்கும் சரி இப்போது தருகின்ற

சிகிச்சை போதாது, பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத் துறையிலேயே மெடிக்கல் எக்ஸாமினேஷன் நடத்துவதற்கு, தொடக்கப்பள்ளிகளிலும், பால்வாடி போன்ற இடங்களிலும் இதற்கான சோதனைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குறைந்தது 45 லட்சம் பேர்களுக்காவது இத்தகைய சோதனை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் குறைந்தது 45 லட்சம் பேர்களையும் சோதித்து யாருக்கு தொழு நோய் இருப்பதாக காணப்படினும் சிகிச்சை அளிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் இந்த 45 லட்சம் பேர்களிலும் மூன்று நான்கு லட்சம் பேருக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. ஆனால் இதற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 28,800 என்று காணப்படுகிறது. சோதனை பெற வேண்டியவர்களுடைய எண்ணிக்கைக்கும் இந்தத் தொகைக்கும் சிறிதும் தொடர்பில்லை. இதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில், பள்ளிக் குழந்தைகளைப் பரிசோதித்து உடல் நலம் பாதுகாக்கும் திட்டத்தை 48 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தி வருவதாகவும், மொத்தம் உள்ள 374 சுகாதார நிலையங்களில் 48 நிலையங்களில் இது நடைபெறுகிறது என்றும் மேலும் ஐந்து நகராட்சிகளிலும், ஆண்டுதோறும் 2,000 குழந்தைகளுக்கு மருத்துவ சோதனை செய்யப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் அடிப்படையில், 1976-77ஆம் ஆண்டில் மொத்தத்தில் 1,20,480 பள்ளிக் குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதில் நான் அரசாங்கத்திற்குக் கூறும் ஆலோசனை இந்தத் துறையில் எவ்வாறு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றியே.

[பிற்பகல் 4-00]

மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே சென்னை நகரில் தாழ்த்தப்பட்ட மக்கள், குடிசைவாழ் மக்கள் குழந்தைகட்கு, பள்ளிச் சிறார் ஆகியோருக்குத் தொழுநோய் பரிசோதனைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அரசின் குழந்தைகள் நல மருத்துவ மனையின் இயக்குநரும் இணைந்து இயங்கக் கூடிய வகையிலே ஒரு திட்டம் ஏற்பாடு செய்து, இரண்டு ஆண்டுக் காலமாக நடைபெற்றது. அப்படி நடைபெற்றபோது 60, 70 ஆயிரம் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டனர். ஆனால் அதைப் பற்றிய குறிப்பு எதுவும் அறிக்கையில் இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் இவர்களுடைய நல்வாழ்வைப் பெரிதும் விரும்புகின்றவர். எனவே, நான் சொல்லிக் கொள்ள விரும்பு

கின்றேன், இப்படி தாழ்த்தப்பட்ட பள்ளிக் குழந்தைகளும், குடிசைவாழ் பகுதியிலே உள்ள குழந்தைகளும் பரிசோதிக்கப்படுகின்ற முறை இருந்தால், பள்ளிப் பிள்ளைகள் அனைவரையும் சோதிக்க இதை ஒரு இன்டக்ரேடிட் ஸ்கீமாக இணைத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் செய்த பணிக்கு 5 லட்சம் ரூபாய் செலவாகிறது. அதற்கே ஆண்டுக்கு 5 லட்சம் செலவானால், 45 லட்சம் குழந்தைகளை 5, 6 ஆண்டுக் காலத்திலே பரிசோதிக்க வேண்டுமானால், ஒரு ஆண்டிற்கு 8, 9 லட்சம் குழந்தைகளைப் பரிசோதிக்க வேண்டும். சென்னை போன்ற பெரிய நகரங்களிலே, மிகப் பெரிய டாக்டர்களைக் கொண்டும்; கிராமங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே உள்ள டாக்டர்களைக் கொண்டும் செய்தால் 53 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செய்யப்படுவதுபோல் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாணவர்கள் பரிசோதனை செய்யப்படுவார்களானால், 5 ஆண்டுக் காலத்தில் ஓரளவுக்கு சிறு வயதிலேயே தொழுநோயைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்ததாகும். 73-லே ஆரம்பிக்கப்பட்ட சென்னை நகர மாணவர் பரிசோதனைத்திட்டம் பற்றி இந்த அறிக்கையிலே விவரங்கள் தரப்படவில்லை.

தொழுநோய் மருத்துவமனைகளை நடத்தும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கு மானியம் என்ற பெயராலே அத்தகைய நிறுவனங்களுக்கு 'காபிடேஷன் கிராண்ட்ஸ்' என்று கொடுக்கப்படுகிறது. அது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். சிறிது உயர்த்தி—ஒருநோயாளிக்கு மாதம் 25 ரூபாய் என்று அளிக்க வழி செய்யப்பட்டது. இன்னும் அதே நிலையில் தான் இருக்கிறது. கிறித்துவ மிஷனரிகள் இதைச் செம்மையாக நிர்வகிக்கிறார்கள். அங்கே தலைக்கு ஒரு மாதத்திற்கு 25 ரூபாய் என்று சொன்னால், அந்த நிதி உதவி காணாது. எனவே, இதைச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, அவர்களோடு இருக்கும் குழந்தைகளுக்கு ஒருமாதத்திற்கு 12 ரூபாய் தரப்படுகிறது. இந்தத் தொகையையும் உயர்த்துவது அவசியம். அவர்கள் தொண்டு உணர்வோடு எந்தவிதமான அருவருப்பும் இல்லாமல், இந்தச் சிகிச்சைத் துறையிலே பணியாற்றுகின்ற காரணத்தால், இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய அம்மையைப் பொறுத்த வரையில், கடந்த ஏப்ரல் மாதம் உலக சுகாதார நிறுவனம் இந்தியாவிலேயே இது ஒதுக்கப்பட்டுவிட்டது என்று பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் உள்ளபடியே மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால், தொடர்ந்து பெரிய அம்மை வராமல் இருப்பதற்கு கண்காணிப்பு அவசியம் தேவைப்படுகிறது.

சிகிச்சை போதாது, பள்ளி மாணவர்களைப் பொறுத்த வரையில், அரசாங்கத் துறையிலேயே மெடிக்கல் எக்ஸாமினேஷன் நடத்துவதற்கு, தொடக்கப்பள்ளிகளிலும், பால்வாடி போன்ற இடங்களிலும் இதற்கான சோதனைகளை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. குறைந்தது 45 லட்சம் பேர்களுக்காவது இத்தகைய சோதனை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால் குறைந்தது 45 லட்சம் பேர்களையும் சோதித்து யாருக்கு தொழு நோய் இருப்பதாக காணப்படினும் சிகிச்சை அளிப்பதாக எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படியானால் இந்த 45 லட்சம் பேர்களிலும் மூன்று நான்கு லட்சம் பேருக்கு சிகிச்சை அளிக்க வேண்டிய கடமை நமக்கிருக்கிறது. ஆனால் இதற்கு ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 28,800 என்று காணப்படுகிறது. சோதனை பெற வேண்டியவர்களுடைய எண்ணிக்கைக்கும் இந்தத் தொகைக்கும் சிறிதும் தொடர்பில்லை. இதையும் அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மக்கள் நல்வாழ்வுத் துறையில், பள்ளிக் குழந்தைகளைப் பரிசோதித்து உடல் நலம் பாதுகாக்கும் திட்டத்தை 48 ஆரம்ப சுகாதார நிலையங்களில் செயல்படுத்தி வருவதாகவும், மொத்தம் உள்ள 374 சுகாதார நிலையங்களில் 48 நிலையங்களில் இது நடைபெறுகிறது என்றும் மேலும் ஐந்து நகராட்சிகளிலும், ஆண்டுதோறும் 2,000 குழந்தைகளுக்கு மருத்துவ சோதனை செய்யப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் அடிப்படையில், 1976-77ஆம் ஆண்டில் மொத்தத்தில் 1,20,480 பள்ளிக் குழந்தைகளுக்குப் பரிசோதனை செய்யப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதில் நான் அரசாங்கத்திற்குக் கூறும் ஆலோசனை இந்தத் துறையில் எவ்வாறு இத்திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றியே.

[பிற்பகல் 4-00]

மூன்று ஆண்டுகளுக்கு முன்னாலே சென்னை நகரில் தாழ்த்தப்பட்ட மக்கள், குடிசைவாழ் மக்கள் குழந்தைகட்கு, பள்ளிச் சிறார் ஆகியோருக்குத் தொழுநோய் பரிசோதனைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. அதற்கு அரசின் குழந்தைகள் நல மருத்துவ மனையின் இயக்குநரும் இணைந்து இயங்கக் கூடிய வகையிலே ஒரு திட்டம் ஏற்பாடு செய்து, இரண்டு ஆண்டுக் காலமாக நடைபெற்றது. அப்படி நடைபெற்றபோது 60, 70 ஆயிரம் குழந்தைகள் பரிசோதனை செய்யப்பட்டனர். ஆனால் அதைப் பற்றிய குறிப்பு எதுவும் அறிக்கையில் இல்லை. முதல் அமைச்சர் அவர்கள் இவர்களுடைய நல்வாழ்வைப் பெரிதும் விரும்புகின்றவர். எனவே, நான் சொல்லிக் கொள்ள விரும்பு

கின்றேன், இப்படி தாழ்த்தப்பட்ட பள்ளிக் குழந்தைகளும், குடிசைவாழ் பகுதியிலே உள்ள குழந்தைகளும் பரிசோதிக்கப் படுகின்ற முறை இருந்தால், பள்ளிப் பிள்ளைகள் அனைவரையும் சோதிக்க இதை ஒரு இன்டக்ரேடிட் ஸ்கீமாக இணைத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆரம்ப சுகாதார நிலையங்களில் செய்த பணிக்கு 5 லட்சம் ரூபாய் செலவாகிறது. அதற்கே ஆண்டுக்கு 5 லட்சம் செலவானால், 45 லட்சம் குழந்தைகளை 5, 6 ஆண்டுக் காலத்திலே பரிசோதிக்க வேண்டுமானால், ஒரு ஆண்டிற்கு 8, 9 லட்சம் குழந்தைகளைப் பரிசோதிக்க வேண்டும். சென்னை போன்ற பெரிய நகரங்களிலே, மிகப் பெரிய டாக்டர்களைக் கொண்டும்; கிராமங்களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே உள்ள டாக்டர்களைக் கொண்டும் செய்தால் 53 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் செய்யப்படுவதுபோல் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் மாணவர்கள் பரிசோதனை செய்யப்படுவார்களானால், 5 ஆண்டுக் காலத்தில் ஓரளவுக்கு சிறு வயதிலேயே தொழுநோயைத் தடுப்பதற்கு முயற்சி எடுத்ததாகும். 73-லே ஆரம்பிக்கப்பட்ட சென்னை நகர மாணவர் பரிசோதனைத்திட்டம் பற்றி இந்த அறிக்கையிலே விவரங்கள் தரப்படவில்லை.

தொழுநோய் மருத்துவமனைகளை நடத்தும் தனிப்பட்ட நிறுவனங்களுக்கு மானியம் என்ற பெயராலே அத்தகைய நிறுவனங்களுக்கு 'காபிடேஷன் கிராண்ட்ஸ்' என்று கொடுக்கப்படுகிறது. அது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். சிறிது உயர்த்தி—ஒருநோயாளிக்கு மாதம் 25 ரூபாய் என்று அளிக்க வழி செய்யப்பட்டது. இன்னும் அதே நிலையில் தான் இருக்கிறது. கிறித்துவ மிஷனரிகள் இதைச் செம்மையாக நிர்வகிக்கிறார்கள். அங்கே தலைக்கு ஒரு மாதத்திற்கு 25 ரூபாய் என்று சொன்னால், அந்த நிதி உதவி காணாது. எனவே, இதைச் சற்று அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, அவர்களோடு இருக்கும் குழந்தைகளுக்கு ஒருமாதத்திற்கு 12 ரூபாய் தரப்படுகிறது. இந்தத் தொகையையும் உயர்த்துவது அவசியம். அவர்கள் தொண்டு உணர்வோடு எந்தவிதமான அருவருப்பும் இல்லாமல், இந்தச் சிகிச்சைத் துறையிலே பணியாற்றுகின்ற காரணத்தால், இந்தத் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பெரிய அம்மையைப் பொறுத்த வரையில், கடந்த ஏப்ரல் மாதம் உலக சுகாதார நிறுவனம் இந்தியாவிலேயே இது ஒதுக்கப்பட்டுவிட்டது என்று பாராட்டு தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் உள்ளபடியே மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். ஆனால், தொடர்ந்து பெரிய அம்மை வராமல் இருப்பதற்கு கண்காணிப்பு அவசியம் தேவைப்படுகிறது.

அதைப் போலவே, காச நோயாளிகட்குச் சிகிச்சை தர இரண்டு நிறுவனங்கள் பெருந்துறையிலும், மற்றொன்று செங்கிப் பட்டியிலும் இருக்கின்றன. அவைகளுக்குப் போதிய பொருளாதார வசதியில்லாமையால் கடந்த 2 ஆண்டுகளாக சிரமப்படுகிறது என்று அவற்றை நடத்துவதிலிருந்து தெரிகிறது. அதையும் கவனித்தால், சிகிச்சை பெருக வசதியாக இருக்கும்.

கொசு ஒழிப்பின் மூலம், பைலேரியா வியாதியாக இருந்தாலும் மலேரியா வியாதியாக இருந்தாலும் பெருமளவுக்குத் தடுக்க முடியும். பைலேரியா ஏற்படுத்துகிற கொசு வேறு; மலேரியா ஏற்படுத்துகிற கொசுவேறு. எனவே, அது அதற்கான தேர்ந்தெடுக்கப்படுகின்ற இடங்களும் வேறு. இது தனித்தனி திட்டமாக நடைபெறுகின்றது. இப்படிச் செய்வதற்குப் பதில், அடிமட்டத்திலேயே மல்டி-பர்பஸ் பணியாளரைக் கொண்டு 3,000 மக்களுக்கு ஒருவர், அல்லது 5,000 மக்களுக்கு ஒருவர் என்று ஏற்படுத்தி மக்களுக்குத் தலைவலி, வயிற்றுவலி, காய்ச்சல் போன்ற நோய்கட்கு மருந்து கொடுக்கக்கூடிய முறையினைக் கொண்டுவர எண்ணும் முறையில் இந்தக் கொசு ஒழிப்புத் திட்டத்தில் பைலேரியா, மலேரியா ஆகிய இரண்டு துறையையும் இணைத்துச் செயல்படுத்தினால், இந்தப் பணி இன்னும் சற்று சிறப்பாக நடைபெறும் என்று கருதுகிறேன்.

கழக அரசு எவ்வளவோ சீர்கேடுகளைச் செய்தது என்று ஆளும் கட்சியிலே உள்ளவர்கள் பேசினாலுங்கூட, கழக அரசு மக்கள் பாராட்டக் கூடிய முறையில் செயல்பட்ட திட்டங்கள் பல. அது குடும்ப நலத் திட்டமானாலும் சரி, காச நோய் முத்திரை விற்பனையானாலும் சரி, தொழு நோய் ஒழிப்புப் பணி என்றாலும் சரி எல்லாவற்றிற்கும் தகுந்த முயற்சிகள் எடுக்கப்பட்டன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். காலரா பெருமளவுக்கு அந்தக் காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. டி. பி. சீல்ஸ் முத்திரை விற்பனையில், அகில இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் தொடர்ந்து ஆறு, ஏழு ஆண்டுக் காலம் முதல் பரிசு பெற்றது. கடந்த ஆண்டைப் பற்றிய செய்தி எனக்குத் தெரியவில்லை. அப்படிப் பெற்றிருக்குமானால் மகிழ்ச்சி அடைவேன்.

இங்கே தரப்பட்டிருக்கும் வெட்டுத் தீர்மானங்களைப் பார்த்தால், எல்லா இடங்களிலும் மருத்துவ மனை தேவை, படுக்கை வசதி தேவை, கட்டிடம், மாடிக் கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டும், நவீன கருவிகள் தேவை, நோயாளிகள் சரிவரக் கவனிக்கப்பட வழி முறைகள் வேண்டும், மருத்துவ மனையில் உணவுப் பற்றாக்குறையைப் போக்க வேண்டும், முறையாக உணவு வழங்கப்பட வேண்டும், மருந்துகளிலும் பற்றாக்குறை ஏற்படுவதைத் தடுக்க வேண்டும், தங்கள் தங்கள் ஊரில் மருத்துவ மனை தேவை என்றெல்லாம் தெரிவித்திருக்கிறார்கள்.

நகரங்களிலும், ஒன்றியங்களிலும் உள்ள எல்லா மருந்தகங்களையும் அரசே ஏற்று நடத்த வேண்டுமென்று ஒரு திட்டம் இருந்தது. ஐந்தாண்டுக் காலத்தில், ஆண்டுக்கு 30 அல்லது 40 வீதம் 200 மருந்தகங்களை எடுத்துக் கொள்ள வேண்டும். இங்குள்ள புள்ளி விவரத்தைப் பார்த்தால் அப்படிக் கடந்த ஆண்டு எடுக்கப்படவில்லை. புள்ளி விவரங்களுக்குள் இப்போது புக விரும்பவில்லை, நேரம் இல்லை. ஒரு அரசாங்கம் எவ்வளவுதான் அக்கறையோடு கவனித்தாலும் கூட, திரும்பத் திரும்ப குறைபாடுகள் வந்து கொண்டுதான் இருக்கும். தினம் தினம் வீட்டைச் சுத்தப்படுத்துகிறோம், பெருக்குகிறோம், மெழுகுகிறோம். மறுநாளும் கூட சுத்தப்படுத்த வேண்டும், மெழுக வேண்டும். அதைப் போன்று இது தொடர்ந்து ஆற்றப்பட வேண்டிய பணி என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மல்டி பர்பஸ் ஒர்க்கர்ஸ் என்பது—சில இடத்தில் தொழிலாளர் என்றும், சில இடத்தில் ஊழியர் என்றும், சில இடத்தில் பணியாளர் என்றும் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. நான் விரும்புவது 'பலநோக்கப் பணியாளர்' என்று அழைக்கப்பட வேண்டுமென்பது. ஊழியர் என்று வழங்க விரும்பினால் சுகாதார நல ஊழியர் என்று வழங்கலாம். தொழிலாளர் என்று வழங்குவது பொருந்தி வராது.

அந்த வகைப் பணி ஒரு பகுதியில் ஐந்து மாவட்டங்களில் தொடங்குவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாநிலம் முழுவதும் தொடங்க யாருக்கும் சக்தி கிடையாது. பயிற்சி பெற்றவர்கள் கிடையாது. 300 பேர்தான் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஐந்து மாவட்டங்களில் தொடங்குகிறோம் என்று சொன்னால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நாலைந்து ஒன்றியங்கள் அளவுதான் இருக்க முடியும். அவற்றைக் குறிப்பிடாதது தவறான எண்ணத்தை உருவாக்குவதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மல்டி பர்பஸ் ஒர்க்கர்ஸ் ஸ்கீம் அகில இந்திய அரசின் திட்டம். டாக்டர்கள் கிடைக்காத மாநிலத்திற்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம். அதனால் ஏற்படும் விளைவுகள் என்னவென்று ஐந்து ஆண்டுகள் கழித்துத்தான் தெரியும். இந்த அறிக்கையில் ஆல்டர்நேட்டிவ் ஸ்கீம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் நல்ல அளவில் சாலை வசதி இருக்கிறது. கிராமங்களுக்குப் போய்வர முடியும். தமிழ்நாட்டில் மேலும் இரண்டு இரண்டு மருத்துவர்களை ஒவ்வொரு ஒன்றியத்திலும் நியமிக்கும் முறை மூலமாக மக்களுக்கு சிகிச்சை வழங்குகின்ற முறையைப் பரவலாக்க முடியும் என்று நம்புகிறேன். கல்ராயன் மலைப் பகுதிக்கே டாக்டர்கள் போக முடியும் என்று சொன்னால் மற்றப் பகுதிகளுக்குப் போவதில் அதிகச் சிரமம் இருக்காது. மாறாகத் தமிழ் நாட்டில் மக்கள் பல நோக்குப் பணியாளர் மருத்துவத்த எப்படி ஏற்றுக் கொள்வார்கள்

என்பது ஐயப்பாட்டிற்குரியது. உத்தரப் பிரதேசம், ஒரிஸ்ஸாவில் ஏற்றுக் கொண்டிருக்கலாம். தமிழ்நாடு அல்லது கேரளம் அல்லது ஆந்திரம் கூட எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளும் என்று இனிதான் பார்க்க வேண்டும். ஆனால், இது அகில இந்தியத் திட்டம். நல்ல வேளையாக மாற்று யோசனையையும் இந்த அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள்.

அகில இந்தியாவிலும் 18,000 டாக்டர்கள் வேலை இல்லாலாமல் இருக்கிறார்கள்; தமிழ்நாட்டில் 1,500 முதல் 2,000 எம்.பி.பி.எஸ்., பயிற்சி பெற்ற டாக்டர்கள் வேலை இல்லாமல் இருப்பார்கள் என்று கருதுகிறேன். அவர்களுக்கெல்லாம் வேலை கொடுக்க குறிப்பாக பொருளாதார வசதி இல்லையென்று சொன்னால் அவர்களை ஆனரரி ஊதியம் வழங்குவது என்ற முறையில் ஈடுபடுத்த முடியுமா என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். தமிழ்நாட்டு மக்கள் மல்டி பர்ப்பஸ் ஓர்க்கர்ஸ் சிகிச்சை அளிப்பதை ஏற்றுக் கொள்ளுவார்கள் என்று நான் நம்பவில்லை.

மருத்துவக் கல்லூரியில் மாணவர்களைச் சேர்ப்பது பற்றித் தனிப்பட்ட முறையில் குறை பேசுவது யாருக்கும் எளிது. நானும் அப்படிப் பேச விரும்பவில்லை. முறைகளை வைத்துப் பார்த்தால் சில முறைகளின் அடிப்படையில்—சமுதாயத்தின் அடித்தட்டில் இருக்கும் மக்களுக்கு, பின்தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வாய்ப்பளிக்க இயலாது. தகுதி எண்களை உயர்த்தும் முறைகளில் பின்தங்கிய வட்டாரங்கள் ஓரளவு முக்கியத்துவம் தரப்பட்டு இடம் பெறும் நிலைமை இருக்காது. அரசாங்கத்தால் தரப்பட்டிருக்கும் அறிக்கையில் மாவட்ட வாரியாக மாணவர்கள் இடம் பெற்றுள்ள விவரத்தை முதலமைச்சர் அவர்கள் பார்ப்பார்களானால் இது விளங்கும். சென்ற ஆண்டைப் பற்றி எனக்குத் தெரியாது. அதற்கு முன்னர் இந்த நிலை இல்லை.

[பிற்பகல் 4.10]

மாவட்டங்களுக்கு இடையே—அதிக அளவில் ஏற்றத் தாழ்வு ஏற்படாத வகையில், இன்டர்வியூ, அந்தந்த வட்டாரத்தில் நேர்முகத் தேர்வு நடத்தி, பிறந்த ஊர், கிராமம், மாவட்டம் எல்லாம் அறிந்து பரவலாக இடம் கொடுக்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கியிருந்தோம். ஓரளவு நிறைவேற்றினோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இப்போது வழங்கப்பட்டிருக்கும் இடங்கள் எத்தனை தெரியுமா? மதுரையில் 125; நெல்லையில் 110; இராமநாதபுரத்தில் 62 இடம். இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 62 இடங்கள்தான். பரப்பளவிலே அந்த இரண்டு மாவட்டங்களையும் விட இந்த மாவட்டம் குறைந்ததல்ல. இதைவிட வேடிக்கை என்ன வென்றால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 71 இடங்கள், அந்த மாவட்டம் எனக்குப் பிடித்தமான மாவட்டம் தான். அது வேறு, ஆனால் இடங்கள்

வழங்குகின்ற போது இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 62 இடங்கள், கன்னியாகுமரி மாவட்டதற்கு 71 இடங்கள் என்று தரப்பட்டிருக்கிறது. ஐந்து தாலுக்காக்களை கொண்ட கன்னியாகுமரிக்கு அதிக எண்ணிக்கை, ஆனால் பரப்பளவிலே மிகப் பெரிய மாவட்டமாக இருக்கிற, பிற்பட்டவர்கள் அதிகமாக இருக்கிற இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 62 பேர்தான். கோவை மாவட்டத்திற்கு 97 இடங்கள், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 33 இடங்கள்—தஞ்சை மாவட்டம் என்ன பாவம் செய்ததோ தெரியவில்லை, என்ன பாவம் என்பதை அவரவர்கள் எண்ணிப் பார்த்துக் கொள்ளலாம்—தென் ஆற்காடு மாவட்டத்திற்கு 41 இடங்கள், செங்கை மாவட்டத்திற்கு 17 இடங்கள், வட ஆற்காடு மாவட்டத்திற்கு 33 இடங்கள். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 71 என்று தரப்பட்டு இருக்கிறது. இதை நான் சொல்வதற்குக் காரணம்—நான் மற்ற விவரங்களையும் படித்துக் காட்ட, அது அல்ல முக்கியம். இப்படிப்பட்ட நிலை ஏற்படாமல் இருக்க வேண்டுமென்ற முறையிலேதான் இன்டர்வியூ வைத்து இந்தத் தேர்வு நடைபெறுகிறது. மாணவர்கள் தேர்வில் எடுக்கிற மார்க்குகளையே முதன்மையாக வைத்துக் கொண்டு எடுப்பதாக இருந்தால் சென்னை நகரத்திலேயே 1,000 மாணவர்களில் 500 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து விடமுடியும். சென்னை நகரத்திலே, மதுரை, கோவை, திருநெல்வேலி போன்ற நகரங்களிலே உள்ளவர்களையே தேர்ந்தெடுத்து விடலாம். இடம் பெற்றுத் தருவதற்கு யார் பணம் வாங்கினார்கள் என்பதை ஆற்றலுள்ளவர்கள் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்குவார்களானால் அதை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் சமூக நீதிக்கு வழி செய்யத்தான் மருத்துவக் கல்வியைப் பொறுத்த வரையிலும், பொறியியல் கல்வியைப் பொறுத்த வரையிலும் பிற்பட்ட வட்டாரத்தினர் அதிகமான இடங்களைப் பெறத் தக்க வகையிலே மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். பிற்பட்ட வகுப்பினர் மட்டுமின்றி பிற்பட்ட வட்டாரத்தில் உள்ள குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டுமென்பதே என் கருத்து. என்னுடைய 22-வது வயதிலேயிருந்து நான் பெற்ற உணர்வினாலும், வகுப்புரிமைப் போராட்டம் என்ற நூலை எழுதுகிறபோது பெரியார் அவர்களிடத்திலேயும் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலேயும் உரையாடியபோது அறிந்த அடிப்படை உண்மைகளைக் கொண்டும் இதைச் சொல்கிறேன். ஒரு சமுதாயத்தில் ஒரு மனிதன் முன்னேறி விடலாம், அதனால் அவனைச் சேர்ந்தவர்கள் சிலர் முன்னேறி விடலாம். ஆனால், அதனால் அந்தச் சமுதாயமே முன்னேறிவிட்டதாகச் சொல்லிவிட முடியாது. அந்த அடிப்படையிலேதான் அது ஆதி திராவிடராக இருந்தாலும் சரி, முதலியாராகட்டும், செட்டியார் ஆகட்டும், வேறு எந்தச் சமூகமாக இருந்தாலும் நிலைமை அமைகிறது. அதனால்தான் பிற்பட்ட வட்டாரம்

வாய்ப்புப்பெற மாவட்டத்திற்கு மாவட்டம் ஒரு பேலன்ஸ்டு நம்பர் என்ற முறையிலே இந்தத் தேர்வு முடிவுகள் இருந்திருக்க வேண்டும். சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பைச் சொன்னார்கள். மாவட்ட வாரியாகத் தனித்தனி தகுதிகளுடன் தேர்ந்தெடுக்கக் கூடாது என்பது அது. அது எதற்காகச் சொன்னார்கள் என்றால் இன்டர்வியூ கமிட்டி எடுக்கும் முடிவுகள் ஒரே வகையாக இருப்பதற்காக. இந்தப் பட்டியல் இன்றைக்கு வெளியாகி இருக்கிறது. முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனையைக் கேட்டு இதை வெளியிட்டார்களா என்பது தெரியவில்லை. இதை வெளியிடாமல் இருந்திருந்தால் கூட நல்லது. அடுத்த ஆண்டிலே, அடுத்த ஆண்டிலே இந்த ஆட்சி நடக்கும் என்ற நம்பிக்கையோடுதான் சொல்கிறேன். அடுத்த ஆண்டு நீங்கள் வந்து ஆட்சி நடத்தப் போகிறீர்களா என்று கேட்கலாம், நான் அதற்கு இடம் கொடுக்கவில்லை. சமூக நீதி வழங்குவதற்கு ஒரு முறை வகுத்துத் தர வேண்டும். ரூரல் பேக்ரவுண்ட்—கிராமப் பின்னணி—என்பதற்கு முக்கியத்துவம் தருவீர்களானால்........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியல் சட்டத்தில் ஆறு ஆண்டுக் காலம் நடக்கலாம் என்று இருப்பதாக தெரிகிறது.

திரு. க. அன்பழகன் : மன்னித்துக் கொள்ள வேண்டும். அது ஒரு வேளை மாற்றப்படுமோ என்ற சந்தேகம் எனக்கு. சமூக நீதி என்பது கல்வித் துறையிலே மாணவர்கள் இடம் பெறுவதில் மிக முக்கியமான இடத்தைப் பெற வேண்டுமென்பதே என் வேண்டுகோள்.

இவ்வளவு பெரிய மருத்துவத் துறையாக இது இருந்தாலும் சித்த மருத்துவம் முக்கியத்துவம் பெற முடியாத நிலை, இயல்பாகவே ஏற்பட்டிருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் சித்த மருத்துவத் துறைக்கென்று தனியாக ஒரு இயக்குநர் இருந்தாலுங் கூட அவர்கள் இதை வலியுறுத்தி அதிகமான வாய்ப்பையும் பெற முடியாத நிலைமை இருக்கிறது. பாளையங்கோட்டையிலே மாணவர்கள் பல கோரிக்கைகளைத் திரும்பத் திரும்ப எழுப்பியும் கடந்த ஓர் ஆண்டுக் காலமாகக் கவனிக்கப்படவில்லை என்ற முறையிலே இந்த ஆண்டுத் துவக்கத்தில் வேலை நிறுத்தம் செய்யத் தலைப்பட்டு வேண்டுகோளை அனுப்பியிருக்கிறார்கள். டாக்டர்களுடைய சம்பளத்தை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஹவுஸ் சர்ஜன்ஸ்க்குத் தரப்படுகிற உதவித் தொகையை அதிகமாக்கித்தர வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

திரு. பி. எம். கிருஷ்ணன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாணவர்கள் படிப்பு நிறுத்தம் என்றுதானே சொல்ல வேண்டும். வேலை நிறுத்தம் என்று, சொல்லலாமா ! படிப்பு நிறுத்தம் என்று சொல்வதுதானே முறை.

திரு. க. அன்பழகன் : இரண்டும் நான் விரும்பாததுதான். அதை நான் ஆதரிப்பவன் அல்ல. ஆனால் நிலைமைகளுக்காக மட்டும் தான் சொல்கிறேன். இப்பொழுது அவர்கள் கல்லூரிக்குச் செல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. கல்லூரி மருத்துவமனையில் போதிய மருந்துகள் இல்லை. ஹாஸ்டலில் இடவசதி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். சித்த மருத்துவ டாக்டர்களுக்கு ஆண்டுக்கு 30 பேருக்கு வேலை தரக் கேட்டிருக்கிறார்கள். இன்னும் அவர்கள் பட்டியல் போட்டுப் பல குறைகளைச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் எல்லாவற்றையும் உடனடியாக நிறைவேற்ற முடியும் என்று நான் எதிர்பார்ப்பதாகவோ அல்லது, அப்படியே நிறைவேற்றுங்கள் என்று கேட்டுக்கொள்வதாகவோ நீங்கள் கருதத் தேவையில்லை. ஹவுஸ் சர்ஜன்களாக இருப்பவர்களுக்குத் தற்பொழுது 175 ரூபாய் தரப்படுகிறது. ஆகவே எங்களுக்கு உயர்வு வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். சித்த மருத்துவர்கட்கு சம்பளம் 425 ரூபாய் என்று இருப்பதை 525 ரூபாயாக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அவைகளை எந்த அளவிற்கு முடியும் என்பதைப் பரிசீலித்து, மாணவர்கள் பிரதிநிதிகளை அழைத்து அவர்களிடத்தில் பேசினால் நல்லது. நான் அவர்களிடத்தில் சொல்லியிருப்பது, போராட்டத்தை நீடிக்க வேண்டாம், போராட்டத்தை நீடிப்பதன் மூலமாக சித்த மருத்துவ கல்லூரியே இயங்காமல்செய்து விடாதீர்கள். போராட்டத்தின் காரணமாக சித்த மருத்துவத்தையேவளர்க்காமல்இழந்து விடக்கூடாது. எனவே, தயவு செய்து இயக்குநரிடத்தில் குறைகளைச் சொல்லி எப்படியாவது கல்லூரி நடக்கின்ற வழியில் முயற்சி செய்யுங்கள். கல்லூரியை மூடிவிட்டால் அதைப்பற்றிக் கேட்பதற்குப் பலர் முன்வர மாட்டார்கள். அந்தத் தொகுதியிலிருந்து வந்திருக்கின்ற நாஞ்சில் மனோகரன் அவர்கள் கேட்டால்தான் உண்டு என்று அவர்களிடம் கூறியுள்ளேன். எனவே, அப்படி ஒரு நிலைமை இருப்பதால் அந்தக் கல்லூரி மாணவர்களுக்கு எந்த வகையிலேயாவது மன நிறைவு ஏற்படச் செய்து அந்தக் கல்லூரியைத் தொடர்ந்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மூடப்பட்டிருப்பது வருந்தத்தக்க ஒரு நிகழ்ச்சி என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து ஹோமியோபதி வைத்திய முறையை ஒழுங்குபடுத்துவதை [illegible] முன் அதற்காகச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அந்த மருத்துவர்கள் பதிவு செய்யும் முறைஉண்டாக்கப்பட்டது. மதுரையிலே தனியார் நடத்தியஒரு கல்லூரி செம்மையாக நடைபெறாததன் காரணமாக அரசாங்கமே நடத்த வேண்டுமென்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது. அன்றைக்கு கவர்னராக இருந்தவரின் துணைவியார் மிஸஸ். ஷா அவர்களைக் கொண்டு சென்னையில் அந்தக் கல்லூரி தொடங்கி வைக்கப்பட்டது. அதற்காக ஹோமியோபதி கவுன்சில் 1 லட்சம் ரூபாய் பணத்தை நன்கொடை கொடுப்பதற்கும் முன் வந்தது. அத்துடன் 40,000

[திரு. க. அன்பழகன்] [1977 ஆகஸ்ட் 13

ரூபாய், ஒரு நன்கொடையும் பெயர் வைப்பதற்காகத் தரப் பட்டது. குடியரசு தலைவர் ஆட்சியில் அரசாங்கத்தின் கண்டிப் பான போக்கின் காரணமாகத் திருப்பி அனுப்பியதுடன் வைக்கப் பட்ட பெயரைக்கூட மாற்றினர்கள். எப்படியாவது கல்லூரி வளர்ந்தால் போதும். பெயர் மாற்றப்பட்டதைப் பற்றிக்கூட வருத்தப்பட எனக்கு உரிமையில்லை. அப்படிக் கல்லூரியின் பெயர் மாற்றப்பட்டது. அதற்குக் கட்டிடம் இல்லை, நோயாளிகளைத் தங்க வைத்து சிகிச்சை வழங்கவும் வசதி ஏற்படுத்தப்படவில்லை. நோயாளிகட்கு உணவு வழங்கப்படவில்லை என்று ஏராளமான குறைகள் இருக்கின்றன. தொடங்கியது முதல் அங்கே குறைகள் இருப்பதால் அந்தக் குறைகளைப் போக்க வேண்டுமென்று திரும்பத் திரும்ப அந்த மாணவர்கள் மிகவும் வலியுறுத்திக் கேட்டிருக்கிறர் கள். அதையும் முதலமைச்சரவர்கள், கவனிக்க வேண்டும். மக்கள் நல்வாழ்வுத் துறையையும் முதலமைச்சரே பொறுப்பேற் றிருக்கிறர். நல்வாழ்வுத் துறைக்கு முதலமைச்சரே பொறுப்பு வகிப்பது என்பது இன்றைக்குத்தான் முதல் தடவை என்று கருதி அதற்காக மகிழ்கிறேன். எனவே, இவைகளைப்பற்றி அவர்கள் கவனித்து குறை நீக்க கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இந்த ஹோமியோபதி மருத்துவம் சிக்கனமான முறையில், மிகவும் குறைந்த செலவில் பெறக்கூடிய மருத்துவ வசதியாகும். ஹோமியோபதி மருத்துவம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் யாரோ ஒருவர் குழந்தைகளுக்கு ஏற்பட்ட நோய்க்கு ஹோமியோபதி முறையில் அது தீராமல் ஹோமியோபதியால் தொல்லை ஏற்பட்டது என்றெல்லாம் குறிப்பிட்டார்கள். அந்த மருத்துவம் உலகெங்கும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஜெர்மனி யிலே பிறந்த ஹானிமன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. நல்ல முறையில் தேர்ச்சி கிடைத்தால் ஹோமியோபதி மருத்துவம் நாட்டுக்குப் பயன்படக் கூடிய ஒரு மருத்துவம். எனவே அது கவனிக்கப்பட வேண்டும். அந்தக் கல்லூரி அண்மையில் துவங்கிய வரலாற்றை முதலமைச்சரவர்கள் கேட்டறிந்து என்னென்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சித்த மருத்துவ வளர்ச்சிக்காகப் பழைய ஏடுகளைத் தேடித் தொகுத்து ஓலைச் சுவடிகளில் இருப்பவற்றை எடுத்து எழுதச் செய்து, அவைகளை எப்படியாவது நூலாக வெளியிட வேண்டு மென்று கடந்த ஆட்சிக் காலத்தில் முயன்றபோது அரசாங்கம் ஒதுக்கிய 50,000 ரூபாய் நிதி போதவில்லை என்ற காரணத்தினல், வேறு பல ஆராய்ச்சி பணிகட்கும் செலவாகும் என்பது கருதி, இரண்டு இலட்சம் ரூபாய் அளவு நன்கொடை பழனி அறங்காவலர் [illegible]த்தில் கேட்டு [illegible] 25,000 ரூபாயாகக் [illegible]

1977 ஆகஸ்ட் 13] [திரு க. அன்பழகன்]

என்று அவர்கள் முன் வந்ததால் ஏறத்தாழ 35 நூல்கள், ஓலைச் சுவடிகளில் இருந்து எழுதியவற்றிற்குப் பொருள் விளக்கமும் எழுதி நூலாக அச்சிட்டு சென்னையிலுள்ள இந்திய மருத்துவத் துறையைச் சேர்ந்த, அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சித்த மருத்துவப் புலவர் குழுவால் வெளியிடப்பட்டது. 35 நூல்கள் அறங்காவலர் குழுவின் நன்கொடை ரூபாய் ஒரு லட்சத்து எழுபத் தையாயிரம் மூலம் அந்த நூல்கள் அச்சிடப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஏட்டிலும் 250 படிகள் அந்த அறங்காவல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. மிச்சம் இருக்கின்ற நூல் படிகள் இந்திய மருத்துவத் துறையினரிடத்திலே இருக்கின்றன. கடந்த ஓராண்டு காலமாக அந்த அறங்காவல் குழு நன்கொடை அளித்ததே தவருன பணி என்று கருதப்பட்டு அந்த நிதி கொடுப்பதே நிறுத்தப்பட்டது அந்த ரூ. 1,75,000-த்தில் 30, 35 புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு, மேலும் பல புத்தகங்கள், அச்சுக்குப் போவதற்கு வழியின்றி, அந்த புத்தகங்கள் அச்சடிப்பது நிறுத்தப்பட்டு, இப்பொழுது அந்தப் பணி தொடராமல் இருக்கிறது. அந்த ரூ. 1,75,000-ஐ அமைச்சர் பெற்றுக் கொண்டு மோசடி செய்தார் என்ற பிரச்சார மும் நடைபெற்றது. பிரச்சாரத்தாலேயே நேர்மையான செயலை அழிக்க முடியும் என்றால், அதனல் பொது எதிரிகளுக்குத்தான் நன்மையே தவிர, சமுதாயத்திற்கு நன்மை கிடையாது. சி.பி.ஐ. கூட அது பற்றிய விவரங்களையெல்லாம் விசாரித்துப் பார்த்தார் கள் என்று கேள்விப்பட்டேன். ஆகவே, அறங்காவல் நன்கொடை மூலமாக இல்லாவிட்டாலும், இனி எதிர்காலத்தில் அரசாங்கத்தின் மூலமாக அந்தப் பணி தொடர்ந்து நடைபெற வேண்டும். அதற் கான முயற்சிகளை அரசாங்கம் எடுக்க வேண்டும்.

[பிற்பகல் 4-20]

அதேபோல், மிகப் பெரிய புலவர், இலக்கண, இலக்கிய மொழிப் புலவர், ஆங்கிலம், தமிழ், பிரெஞ்சு, சமஸ்கிருதம் ஆகிய 4 மொழிகளிலும் புலமை வாய்ந்த அறிஞர் கந்தசாமிப் பிள்ளை என்பவர், இந்த சித்த மருத்துவ நோக்கத்தை அறிந்த வல்லுநர், 70 வயதான மூதறிஞர். சித்த மருத்துவத்தைப் பற்றி விளக்கமான நூல் ஒன்று எழுதக் கேட்டுக் கொள்ளப்பட்டு எழுதி யுள்ளார். நான் டெல்லிக்குப் போன போது, டெல்லி அமைச்சர் கரன்சிங்கோ, அதற்கு முன்னலே இருந்த அமைச்சர்களோ, சித்த மருத்துவத்தைப் பற்றிய விளக்கமான நூல் ஆங்கிலத்தில் இருக் கிறதா என்று கேட்டார்கள். கேட்டபொழுது இல்லையென்று சொல்ல வேண்டியதாயிருந்தது. உடனே கொடுக்க முடியவில்லை. ஆகவே, ஒரு நூல் தயாரித்துக் கொடுங்கள் என்று அவரை அரசின் சார்பில் கேட்டுக் கொண்டதன் பேரில். 1½ ஆண்டு, கடுமையான உழைப்புக்குப் பிறகு தயாரித்து, ஆட்சி கலைக்கப்படுவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் அவர் விரைவில் முடித்துக் கொடுப்பதாகச் சொல்லி, ஆட்சி கலைந்த உடனே, பிப்ரவரி திங்களிலே அவர்கள் அந்த நூலை தலைமைச் செயலாளரிடத்திலே ஒப்படைத்து விட்டார்கள். இந்தத் துறை அதைக் கவனித்து வெளியிட ஏற்பாடு செய்யாத காரணத்தால், அது அப்படியே நின்றுவிட்டது.

அது அச்சடிக்கப்பட்டிருக்குமானால் 6 மாத காலத்திற்கு முன்னால் வெளி வந்திருக்க வேண்டும். அந்தப் புத்தகத்தை எழுதியவர் கூட அண்மையில் இறந்து விட்டார். இனிமேல் அவரைப்போல், ஒரு வல்லுநர் இப்படி ஒரு நூல் எழுத வேண்டுமென்றால் தமிழ் நாட்டிலே கிடைப்பாரா என்றால், எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. மிகப் பழையதாக உலகத்திலே விளங்கிய மருத்துவ முறைகளோடு ஒப்பு நோக்கி தொடர்பு கொள்ளக் கூடியவகையில் உள்ளது சித்த மருத்துவம் என்று அவர் ஆராய்ச்சி கருத்துக்களை திரட்டி எழுதியுள்ளார். உலக மருந்துகளோடு சித்த மருத்துவத்தைத் தொடர்புபடுத்தக்கூடிய அளவுக்கு அவர் ஒரு வரலாற்றுப் பின்னணியையே விளக்கியுள்ளார்.

ஆயுர்வேதத்தை விட சித்த மருத்துவம் தொன்மை வாய்ந்தது என்று அவர் குறிப்பிட்டிருக்கிறார். எனவே, நான் குறிப்பிட்டுக் கேட்டுக்கொள்வது, உலக மருத்துவங்களோடு தொடர்பு படுத்தக் கூடிய முறையில் அமைந்துள்ள சித்த மருத்துவத்தைப் பற்றிய அரிய நூல் விரைவில் வெளிவர ஏற்பாடு செய்ய வேண்டும்.

அறிஞர் அண்ணா மருத்துவ மனையில் ஒரு ஃபார்மஸி இருக்கிறது. அதை, மெக்கனைஸ்ட் ஃபார்மஸி என்ற அளவுக்கு மாற்ற வேண்டுமென்று 5 ஆண்டுகளுக்கு முன்னரே ஒரு குறிப்பு இருந்தது. அப்படி செய்வதன்மூலம்தான் ஏராளமான மருந்துகளை உற்பத்தி செய்யமுடியும். ஆனால், இந்த ஆண்டு பட்ஜெட் விவரங்களின் அறிக்கையிலே பார்த்தால் கட்டிடம் இருக்கிறது. மெக்கனைஸ்ட் ஃபார்மஸி ஏற்படுத்த, கருவிகளுக்கு நிதி எதுவும் இந்த ஆண்டு ஒதுக்கப்படவில்லையென்பது தெரிகிறது. நவீன கருவிகள் அமைத்து மருந்துகள் உற்பத்தி செய்வதன் மூலம் ஏராளமாக உற்பத்தி செய்ய முடியுமென்ற வகையில், அது தொடர்ந்து செய்யப்பட வேண்டிய காரியமாகும்.

அதைப்போலவே, கன்னியாகுமரி மாவட்டத்தில், வீரப்புலியிலே ஒரு பெரிய மூலிகைப் பண்ணை இருக்கிறது. அந்த மூலிகைப் பண்ணையை நன்கு கவனித்து, வளர்ப்பதன் மூலம், தமிழ்நாட்டில் சித்த மருந்துக்குத் தேவையான மூலிகைகள் பலவும் அங்கு உற்பத்தி செய்யலாம் என்று 5 ஆண்டுகளுக்கு முன்னாலே திட்டம் தீட்டப்பட்டு, அந்தத் திட்டம் போக்குவரத்து, குடியிருப்பு வசதிகள் தேவையென்ற காரணத்தால் உடனடியாகச் செயற்படுத்த இயலாது என்று இந்த அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், நல்லவேளை ரூ. 1 இலட்சம் ஒதுக்கி இருக்கிறார்கள். அதை, ரூ. 3 இலட்சமாக ஒதுக்கி, 5 ஆண்டிலே என்பதை 2 ஆண்டிலே முடித்து விட்டால் நல்ல பயன் இருக்கும். ஒரு பணியை மெல்ல நடத்திக் கொண்டே போகலாம், சில பணிகளை ஒரு குறிப்பிட்ட கால கட்டத்திலே முடிக்க வேண்டும். இந்தப் பணியும் அதே மாதிரி குறைந்த கால கட்டத்திலே முடிக்க வேண்டிய பணி.

எனவே, நான் வலியுறுத்துவது, இந்த திட்டத்தை விரைவில் முடிக்க, ஏதாவது வழி செய்ய வேண்டும். அதே போன்று ஓலைச் சுவடிகளைச் சேகரிப்பதும் தாமதமாகி 5 ஆண்டு, 10 ஆண்டு என்றால், அதிலே தொகுக்கப்பட வேண்டிய எத்தனையோ ஏடுகளும்—அதிலே கூறப்படும் மருந்துகளும் தொகுக்கப்படாமல் போகும். ஆகவே, தொகுக்கப்பட வேண்டிய ஏடுகளையெல்லாம் தொகுத்து, எடுத்து எழுதி மருந்து முறைகளை எல்லாம் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து, நாகர்கோவில் பகுதியிலும், இன்னும் கேரளாவிலேயும், நிலவுகின்ற வர்மக் கலை சித்த மருத்துவத்தோடு தொடர்புடைய கலை. 3 ஆண்டுகளுக்கு முன்னர், இந்த வர்மக் கலையைப் பற்றி அறிய, பயிற்சி பெற, பாளையங்கோட்டையிலே உள்ள கல்லூரியிலே பயில்கின்ற பி.ஐ.எம். மாணவர் ஒருவர் ஒரு வருமக் கலை வல்லுநரிடம் நேரடியாகப் பயிற்சி பெற்று, அறிந்து, அந்த வர்மக் கலையைப்பற்றி ஒரு புத்தகத்தை எழுதி என்னிடத்திலே காண்பித்தார். அதன் மூலம், சித்தக் கலையை வளர்க்கமுடியும் என்ற வகையிலே, அந்த வர்மக்கலையை சித்த மருத்துவத் துறையிலே பாடமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்று கூட அத்துறையினரிடம் கூறினேன். அதுபற்றி நூல் இல்லாத ஒரு நிலை—பயிற்சி பெறாத ஒரு நிலை—எதிர்காலத்தில் ஏற்படுமானால், ஒரு பெரிய இழப்பு ஏற்படும். ஆகவே, அந்த வர்மக் கலையையும் வளர்க்க தக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

அதேபோல், நாச்சுரோபதி, யோகா பற்றியும் தெரிவித்து இருக்கிறார்கள். அவற்றையெல்லாம் பற்றி விளக்கமாகப் பேச இப்பொழுது நேரமில்லை. ஆனால், அவைகளையும் முறைப்படி பயன்படுத்த சித்த, ஆயுர்வேதம், யுனானி நாச்சுரோபதி, யோகா ஆகியவற்றிற்காக ஒரு தனி இயக்குநர் போடலாம். அப்படி தனி இயக்குநரிடத்திலே அவை ஐந்தும் இருக்குமானால் சிறந்த முறையிலே கவனிக்கப்படும். அதற்குரிய இயக்குநரை வேண்டுமானால் இவைகளில் ஆர்வமுள்ள ஒரு ஐ.ஏ.எஸ்.-ஆக கூட ஏற்படுத்தலாம். ஆனால், இவைகளிலே ஆர்வம் உள்ளவரைத்தான் இயக்குநராக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியையும், ஹோமியோபதி மருத்துவக் கல்லூரியையும் சிறந்த முறையிலே உருவாக்கவும் வளர்க்கவும் வழிவகை காண வேண்டுமென்று கேட்டு, எனது உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. <u>எஸ். ஜே. சாதிக்பாட்சா</u> : ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர். மாலை நேரத்தில் அவை நடந்தால் காபி கொடுப்பது வழக்கம். சபாநாயகரே கொடுக்கலாம். அல்லது அரசாங்கம் கொடுத்தாலும், நாங்கள் ஏற்றுக் கொள்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது பற்றி அமைச்சர் அவர்களைத் தான் கேட்க வேண்டும்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பதிலுரை ஆற்ற ஏறத்தாழ 1½ மணி நேரத்திற்கு மேல் ஆகும் என்று கூறுகிறார்கள். ஆகவே அதுவரையில் தொடர்ந்து இந்த அவையை நீடிக்கலாமா அல்லது இத்தோடு முடித்துவிட்டு, செவ்வாய்க் கிழமை அன்று மாண்புமிகு முதலமைச்சரை விவாதத்திற்கு பதிலளிக்கச் சொல்லலாமா என்பதைப் பற்றி சபையினுடைய அனுமதியைக் கேட்க விரும்புகிறேன்.

பெரும்பாலான உறுப்பினர்களின் விருப்பத்திற்கிணங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் செவ்வாய்க் கிழமை அன்று விவாதத்திற்குப் பதிலளிப்பார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 16—8—1977 செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 4-27-க்கு ஒத்திவைக்கப் பெற்றது.

(9) பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and other papers.

@60. Two Decades of Service of the Tamil Nadu Co-operative Marketing Federation Limited (English only).

@61. Note on the working of Tamil Nadu Co-opertive State Land Development Bank Limited (English only).

@62. Performance Budget of Public Health and preventive Medicine 1977-78 (English).

@63. Performance Budget of Medical Education, 1977-78 (English).

@64. Performanee Budget of Medical Service and Family welfare, 1977-78 (English).

---

*Cut Motions circulate separately.
@Despatched to Members on 11-8-1977.

இணைப்பு I.

[40-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை 18—மருத்துவம்.

பேரவைத் தலைவர் அவர்களே,

கோரிக்கை எண் 18—மருத்துவம் என்பதன்கீழ் ரூபாய் 44,69,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்று முன் மொழிகிறேன்.

கொள்கை விளக்கம்.—வளமான ஒரு மாநிலத்திற்கு அடிப்படை நோக்கங்கள் பல உண்டு. அவற்றுள் ஒன்று மக்களுக்குப் போதுமான மருத்துவ வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதாகும். நாடு நலம் பெற மக்கள் வாழ்வு வளம் பெறவேண்டும். நகர்புறம், கிராமப்புற பகுதிகளில் உள்ள மக்களுக்கு இப்போது உள்ள மருத்துவ வசதிகளை பெருக்கி, நவீன மயமாக்கி, அவற்றை மேலும் செவ்வியமுறையில் எளிதில் கிடைக்க செய்வதே நமது நோக்கமாக இருந்துவந்துள்ளது. அடுத்து அடுத்து வந்த திட்டக் காலங்களில் மருத்துவம்—மக்கள் நல்வாழ்வுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கங்களை கீழ்க்காணும் விவர அறிக்கையில் காணலாம் :—

மருத்துவம், நீர் வழங்கல், உள்பட மக்கள் நல்வாழ்வு.

	மூலதனம்.	செலவு.
	[ரூபாய் இலட்சத்தில்]	
முதலாவது திட்டம்	..	642
இரண்டாவது திட்டம்	1,435	1,442
மூன்றாவது திட்டம்	2,150	2,617

மருத்துவம்—மக்கள் நல்வாழ்வு மட்டும்.

நான்காம் திட்டம்	1,610	1,497
ஐந்தாம் திட்டம்	2,963	..

மருத்துவ வசதிகளை படிப்படியாக விரிவுபடுத்தும் கொள்கை தொடர்ந்து 1977-78 ஆம் ஆண்டிலும் நமது நாட்டத்தை ஈர்த்து வந்துள்ளது.

மருத்துவக் கல்வித்துறை செயலாற்றுவதில் காணப்படும் முக்கிய கூறுகள் பின்வருமாறு :—

I. மருத்துவக்கல்வி.

இம்மாநிலத்தில் 8 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இவற்றைத் தமிழக அரசு நடத்தி வருகிறது. இம்மருத்துவக் கல்லூரிகளில் ஆண்டுதோறும் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மதுரை மருத்துவக் கல்லூரியில் மருந்தாக்கியலில் பட்டப்படிப்பு வகுப்பு நடத்தப்படுகிறது. இதற்கு ஆண்டுதோறும் 20 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் 1974 ஆம் ஆண்டு 20 இடங்களுடன் தொடங்கப்பட்ட மருந்தாக்கியல் பட்டப்படிப்பு 1976ஆம் கல்வி ஆண்டிலிருந்து மீண்டும் சென்னை மருத்துவக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவப் பிரிவில், பல் மருத்துவ சிகிச்சையில் பட்டப்படிப்பு வகுப்பு நடத்தப்படுகிறது. இதற்கு ஆண்டுதோறும் 35 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்துள்ள செவிலியர் கல்லூரியில் செவிலியலில் பட்டப்படிப்பு வகுப்பு நடத்தப்படுகிறது. இதில் ஆண்டுதோறும், செவிலியர் பணியிலிருந்து 10 பேரும் வெளியிலிருந்து 10 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்படிப்பில் இரு முக்கிய அம்சங்கள் உள்ளன. அவை, மருத்துவம், அறுவை சிகிச்சை ஆகியவற்றில் செவிலிப்பணி, பொதுச் சுகாதாரத்தில் செவிலிப்பணி, ஆகியவையாகும். இப்படிப்பு 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் இதுவரை இதில் 62 பேர் பட்டம் பெற்றுள்ளனர்.

II. மருத்துவக்கல்வியில் பட்ட மேற்படிப்பு.

மருத்துவப் பட்ட மேற்படிப்புப் பிரிவில் போதுமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள், வல்லுநர்கள் இல்லை. இப்பெருங் குறையைச் சரிசெய்ய பட்டமேற்படிப்பும் தகுதிப்பட்டயப் படிப்பும் தொடங்கப்பட்டன.

பட்டமேற்படிப்பு, தகுதிப்பட்டயப்படிப்பு பற்றிய விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள 1-வது விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது விவர அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 1977-78 ஆம் கல்வி ஆண்டில் பட்டமேற்படிப்பு, தகுதிப்பட்டயப் படிப்பு ஆகியவற்றைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. இதற்கான செயற்குறிப்பு அந்தந்த பல்கலைக்கழகங்களுடன் கலந்தாலோசித்து பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

III. புதிய மருத்துவக் கல்லூரிகளை இந்திய மருத்துவ மன்றம் ஏற்பளித்தல்.

இம்மாநிலத்திலுள்ள 8 மருத்துவக் கல்லூரிகளில் செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேல்லி ஆகிய இடங்களிலுள்ள மருத்துவக் கல்லூரிகள் புதிதாகத் தொடங்கப்பட்டவையாகும். இம்மாநிலத்தில் திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி நீங்கலாக, ஏனைய மருத்துவக் கல்லூரிகள் யாவும் இந்திய மருத்துவ மன்றத்தால் ஏற்பளிக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிக்கும், இந்திய மருத்துவ மன்றம் இசைவளித்தவுடன் ஏற்பளிக்கப்படும்.

IV. சென்னை மருத்துவக் கல்லூரி—அரசு பொது மருத்துவமனையை பட்டமேற்படிப்புக் கல்வி—ஆராய்ச்சி நிலையமாக மாற்றுதல்.

சென்னை மருத்துவக் கல்லூரியைப் பட்டமேற்படிப்பு ஆராய்ச்சி நிலையமாக மாற்றும், செயற்குறிப்பு சிறிது காலமாக அரசின் நாட்டத்தை ஈர்த்து வந்திருக்கிறது. சென்னை மருத்துவக்கல்லூரி—அரசுப் பொது மருத்துவமனையை பட்டமேற்படிப்பு மருத்துவக்கல்வி—ஆராய்ச்சி நிலையமாக மாற்றக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1977-78 இல் ரூபாய் 32 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

V. அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவநிலையம், காஞ்சிபுரம்.

புற்றுநோயைக் கண்டுபிடித்து அதற்குச் சிகிச்சையளிக்கும் திட்டம் முதலியவற்றைச் செயற்படுத்தும் பொருட்டு தமிழ்நாடு அரசு உலக சுகாதார நிறுவனத்தின் உதவியோடு காஞ்சிபுரத்தில் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை 1969 மார்ச் திங்களில் தொடங்கியது. வளர்ந்துவரும் ஒரு நாட்டில் இந்த ஆராய்ச்சித் திட்டத்தைத் தொடங்கி குறுகிய காலத்திற்குள் புற்றுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் சிகிச்சைமுறை புதிய வடிவம் பெற்று விளங்கியது குறிப்பிடத்தக்கதாகும். ஆகவே, காஞ்சிபுரத்தில் 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவமனை ஒன்று கட்ட 1973 ஆகஸ்ட் திங்களில் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது, பின்னர் இப்படுக்கைகளின் எண்ணிக்கை 250 ஆக உயர்த்தப்பட்டது.

காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணா நினைவு புற்றுநோய் மருத்துவநிலையம், மருத்துவப் பணிகள்—குடும்பநல இயக்குநரின் மேற்பார்வையில் இருந்தது. இந்த நிலையத்தை இவரது மேற்பார்வையிலிருந்து மருத்துவக்கல்வி இயக்குநரின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவந்தால், கல்வி, ஆராய்ச்சி, சிகிச்சை ஆகிய

வற்றைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டில் காஞ்சிபுரத்திலுள்ள அறிஞர் அண்ணு நினைவு புற்றுநோய் நிலையமும் ஏனைய மருத்துவக் கல்லூரிகளும் நல்ல முறையில் ஒருங்கிணைந்து செயலாற்ற முடியும் என்று அரசு அறிந்தது. இது ஒரு ஆராய்ச்சி நிலையமாக இருப்பதால், சிலவகை புற்றுநோயைத் தொடக்கத்திலேயே கண்டுபிடித்து, நோயின் தன்மையை அறிந்து அவற்றை மேலும் பரவாவண்ணம் தடுப்பதிலும், புற்றுநோய் பரவுதல், புற்றுநோய்க் கட்டுப்பாடு ஆகியவற்றிலும் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்குப் பயிற்சியளிக்க வேண்டி ஒரு மருத்துவக் கல்வி நிலையத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்று உலக சுகாதார நிறுவன ஆலோசகர்கள் பரிவுரை செய்திருந்தனர். அதன் அடிப்படையிலேயேயும் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதைக் கருத்திற்கொண்டு, காஞ்சிபுரம், அறிஞர் அண்ணு நினைவு புற்றுநோய் மருத்துவ நிலையத்தின் நிர்வாகம், வரவு-செலவு குறித்த பொறுப்பு மருத்துவப் பணிகள்—குடும்பநல இயக்குநரிடமிருந்து மருத்துவக்கல்வி இயக்குநருக்கு மாற்றப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. மேற்படி மருத்துவ நிலையம் இப்போது 21—1—1977 முதல் மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகப் பொறுப்பில் உள்ளது.

VI. மருத்துவ ஆராய்ச்சி.

நமது மாநிலத்திலுள்ள மருத்துவ நிலையங்கள் அனைத்திலும் எல்லா பிரிவுகளிலும் ஆராய்ச்சி நடத்தப்படுகிறது. மருத்துவக் கல்வியை உயர்த்தும் ஒரு திட்டத்தின் ஒருங்கிணைந்த பாகமாக மருத்துவ ஆராய்ச்சி விளங்குகிறது. மருத்துவ அறிவியலை கற்றுத் தேர்வதிலும், மக்களுக்குப் பெருமளவில் மருத்துவப் பயனை அளிப்பதிலும் தொடர்ந்து நல்ல முன்னேற்றம் பெற எல்லா பிரிவுகளிலும் பலவகைப் பணியாளர்கள் ஆராய்ச்சிப் பணியில் ஈடுபடுவது மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்திற்கொண்டு ஆராய்ச்சிப் பணிகளுக்கு மாநில அரசு ஊக்கமளித்து வருகிறது.

ஆராய்ச்சி இரு வகைப்படும். ஒன்று செயல்முறை ஆராய்ச்சி அல்லது சிகிச்சை ஆராய்ச்சி. இரண்டாவது அடிப்படை ஆராய்ச்சி அல்லது கல்வி ஆராய்ச்சி ஆராய்ச்சிப் பணிக்கு நிதி உதவி செய்யும் முக்கிய முகவாமைப்புகள் வருமாறு :—

(i) மாநில அரசு ;

(ii) இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் போன்ற தேசிய முகவரமைப்புகள் ;

(iii) உலக சுகாதார நிறுவனம், யூனிசெப் நிறுவனம் முதலியன.

(i) தமிழ்நாடு மாநில ஆராய்ச்சி குழு.

தமிழ்நாட்டில் அறிவியல் மற்றும் மருத்துவத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு 1944 ஆம் ஆண்டில் மாநில மருத்துவ ஆராய்ச்சிக்குழு அமைக்கப்பட்டது. ஆராய்ச்சி பணிக்கு மானியம் கேட்டு வரும் வேண்டுகோள்களை இக்குழு பரிசீலிப்பதோடு தகுதியுடைய திட்டங்களுக்கு நல்ல பல உதவியையும் நல்குகிறது. தற்போது ஆண்டுதோறும் வட்டார மானியமாக ரூபாய் 1 இலட்சம் கொடுப்பதற்கேற்ற வகையில் குழுவிடம் நிதி வழங்கப்பட்டு இருக்கிறது.

(ii) ஆராய்ச்சித் திட்டங்கள்.

இம்மாநிலத்திலுள்ள மருத்துவ நிலையங்களில் 1976-77 இல் நடத்தப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களின் எண்ணிக்கையும் அவற்றிற்காகச் செலவிடப்பட்ட தொகையும் பின்வருமாறு :—

1976-77-ல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை.	1976-77-ல் திட்டங்களின் எண்ணிக்கை.	1976-77-ல் அனுமதிக்கப் பட்ட தொகை.
(1)	(2)	(3)
		(ரூபாய்.)
புதுடில்லி, இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் ஆதரவின் கீழ் மேற்கொள்ளப்பட்டவை—		
(1) முந்திய திட்டங்கள் ..	12	84,445.19
(2) புதிய திட்டங்கள் ..	44	1,55,749.81
பெருமொத்தம் ..	56	2,40,195·00

1976-77-ல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. (1)		1976-77-ல் திட்டங்களின் எண்ணிக்கை. (2)	1976-77-ல் அனுமதிக்கப் பட்ட தொகை (3) (ரூபாய்)
தமிழ்நாடு மாநில ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவின் கீழ் மேற் கொள்ளப்பட்டவை—			
(1) முந்திய திட்டங்கள்	..	29	51,230.00
(2) புதிய திட்டங்கள்	..	63	89,970.00
மொத்தம்	..	92	1,41,200·00

இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் ஆதரவின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் (III-வது விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன) மாநில மருத்துவக் கல்லூரிகளில் இவ்வாண்டு நடந்தேறி வருகின்றன.

(iii) உலக சுகாதார நிறுவனத் திட்டம்.

(a) வாய் புற்று நோய்:—சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் வாய்புற்று நோய் அறுவை சிகிச்சைக் குறித்து ஆராய்ச்சி நடத்த உலக சுகாதார நிறுவனம் 2,000 டாலர் வழங்கியுள்ளது. "கல்வி மூலம் மேக நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆய்வு" நடத்தவும் மேற்படி றுவனம் 2,000 டாலர் வழங்கியுள்ளது.

வாய் புற்றுநோய் கண்டுள்ள நோயாளிகளுக்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சையில் புதிய உத்தி (முறை) சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனை உலக முழுவதும் பாராட்டியுள்ளது இப்புதிய முறையினால் புற்றுநோயாளிகளுக்குக் குறிப்பிடத் தக்க நிவாரணம் கிடைக்கிறது. இந்த அறுவை சிகிச்சை முறை ஒரு நல்ல [illegible] உத்தியென்று மேலை நாட்டினர் ஏற்பளித்துள்ளனர். மேலும், கடந்த நான்காண்டு காலத்தில் அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் தொழு நோயாளிகளுக்கான அறுவைச் சிகிச்சையிலும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பணிக்கு ஊக்கமளிக்கும் வகையில் புற்றுநோய்ச் சிகிச்சைக்காக ரூபாய் 2.5 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(b) பெல்ஜியம் நாடு வழங்கும் மானியம்.—சென்னை அரசு கண்நோய் மருத்துவமனையில் காளான் கிருமியினால் ஏற்படும் நோயைக்கண்டுபிடிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க பெல்ஜியம் நிறுவனம் வழங்க முனவந்துள்ள உதவியை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ரூபாய் 7 இலட்சம் மதிப்பில் அறிவியல் கருவி களையும் ஆண்டுதோறும் தொடரினச் செலவாக ரூபாய் 30,000-மும் பெல்ஜியம் நிறுவனம் வழங்கும்.

(c) காசநோய் குறித்து ஆராய்ச்சி.—தற்போது காசநோய் கட்டுப்பாட்டு சிகிச்சை நிலையம் அமைந்துள்ள (அரசு மார்பு நோய் சிகிச்சை நிலையம், சேத்துப்பட்டு) இடத்தையும் கட்டிடங்களையும் ஒட்டுமொத்தமாக நன்கொடையாகவோ, ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 இயல்பான வாடகைக்கோ வழங்கு மாறு இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இது குறித்து மேற்படி மன்றத்தின் பிரதிநிதிகளும், நமது அதிகாரிகளுடன் விரிவாக விவாதம் நடத்தியுள்ளனர். காசநோய் கட்டுப்பாட்டு சிகிச்சை நிலையம் ஆற்றிவரும் பணியின் முக்கியத்துவத்தையும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் உதவியுடன் நடத்தத் திட்டமிட்டுள்ள ஆராய்ச்சித் திட்டங்களையும் கருதிப்பார்த்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 வாடகைக்கு மேற்படி இடத்தையும், கட்டிடங்களையும் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றமும் அதன் தென் பிராந்திய வட்டாரத் தலைமை யிடத்தை சென்னையில் அமைக்கக் கருதியுள்ளது.

VII. கிங் நிறுவனம், கிண்டி.

பொதுச் சுகாதாரம், போதனை, ஆராய்ச்சி ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கிண்டியிலுள்ள கிங் நிறுவனம் பெரும் நிலையமாக விளங்குவதோடு அம்மைப்பால், மயக்கத் தடுப்பு மருந்து முதலியவற்றைத் தயாரித்தும் வருகிறது. இந்த நிறு வனம் இந்நாட்டிலுள்ள நான்கு நிலையங்களுள் ஒன்றாக விளங்கு வதால், உறைய வைத்து, உலர வைக்கும் அம்மைப்பால், உற்பத்தியை நாட்டின் தேவைக்கேற்ப பெருக்க முடியும் என்று மத்திய அரசு உணர்ந்தது. அவ்வாறே, உலக சுகாதார நிறுவனம் யூனிசெப் நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு மேற்சொன்ன அம்மைப்பால் உற்பத்தி 24 மில்லியன் அளவாக உயர்த்தப் பட்டுள்ளது.

1976-77-ல் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை. (1)		1976-77-ல் திட்டங்களின் எண்ணிக்கை. (2)	1976-77-ல் அனுமதிக்கப் பட்ட தொகை (3) (ரூபாய்)
தமிழ்நாடு மாநில ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவின் கீழ் மேற் கொள்ளப்பட்டவை—			
(1) முந்திய திட்டங்கள்	..	29	51,230.00
(2) புதிய திட்டங்கள்	..	63	89,970.00
மொத்தம்	..	92	1,41,200·00

இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் ஆதரவின்கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் (III-வது விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன) மாநில மருத்துவக் கல்லூரிகளில் இவ்வாண்டு நடந்தேறி வருகின்றன.

(iii) உலக சுகாதார நிறுவனத் திட்டம்.

(a) வாய் புற்று நோய்:—சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் வாய்புற்று நோய் அறுவை சிகிச்சைக் குறித்து ஆராய்ச்சி நடத்த உலக சுகாதார நிறுவனம் 2,000 டாலர் வழங்கியுள்ளது. "கல்வி மூலம் மேக நோயைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆய்வு" நடத்தவும் மேற்படி றுவனம் 2,000 டாலர் வழங்கியுள்ளது.

வாய் புற்றுநோய் கண்டுள்ள நோயாளிகளுக்கு நோயை கட்டுப்படுத்துவதற்கான சிகிச்சையில் புதிய உத்தி (முறை) சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனை உலக முழுவதும் பாராட்டியுள்ளது இப்புதிய முறையினால் புற்றுநோயாளிகளுக்குக் குறிப்பிடத் தக்க நிவாரணம் கிடைக்கிறது. இந்த அறுவை சிகிச்சை முறை ஒரு நல்ல முறையான உத்தியென்று மேலை நாட்டினர் ஏற்பளித்துள்ளனர். மேலும், கடந்த நான்காண்டு காலத்தில் அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் தொழு நோயாளிகளுக்கான அறுவைச் சிகிச்சையிலும் விரைவான முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இப்பணிக்கு ஊக்கமளிக்கும் வகையில் புற்றுநோய்ச் சிகிச்சைக்காக ரூபாய் 2.5 இலட்சம் செலவில் கட்டிடம் கட்டும் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(b) பெல்ஜியம் நாடு வழங்கும் மானியம்.—சென்னை அரசு கண்நோய் மருத்துவமனையில் காளான் கிருமியினால் ஏற்படும் நோயைக்கண்டுபிடிக்கும் நிலையம் ஒன்றை அமைக்க பெல்ஜியம் நிறுவனம் வழங்க முனவந்துள்ள உதவியை அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. ரூபாய் 7 இலட்சம் மதிப்பில் அறிவியல் கருவி களையும் ஆண்டுதோறும் தொடரினச் செலவாக ரூபாய் 30,000-மும் பெல்ஜியம் நிறுவனம் வழங்கும்.

(c) காசநோய் குறித்து ஆராய்ச்சி.—தற்போது காசநோய் கட்டுப்பாட்டு சிகிச்சை நிலையம் அமைந்துள்ள (அரசு மார்பு நோய் சிகிச்சை நிலையம், சேத்துப்பட்டு) இடத்தையும் கட்டிடங்களையும் ஒட்டுமொத்தமாக நன்கொடையாகவோ, ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 இயல்பான வாடகைக்கோ வழங்கு மாறு இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றம் மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இது குறித்து மேற்படி மன்றத்தின் பிரதிநிதிகளும், நமது அதிகாரிகளுடன் விரிவாக விவாதம் நடத்தியுள்ளனர். காசநோய் கட்டுப்பாட்டு சிகிச்சை நிலையம் ஆற்றிவரும் பணியின் முக்கியத்துவத்தையும், இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றத்தின் உதவியுடன் நடத்தத் திட்டமிட்டுள்ள ஆராய்ச்சித் திட்டங்களையும் கருதிப்பார்த்து ஆண்டொன்றுக்கு ரூபாய் 1 வாடகைக்கு மேற்படி இடத்தையும், கட்டிடங்களையும் கொடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய மருத்துவ ஆராய்ச்சி மன்றமும் அதன் தென் பிராந்திய வட்டாரத் தலைமை யிடத்தை சென்னையில் அமைக்கக் கருதியுள்ளது.

VII. கிங் நிறுவனம், கிண்டி.

பொதுச் சுகாதாரம, போதனை, ஆராய்ச்சி ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கிண்டியிலுள்ள கிங் நிறுவனம் பெரும் நிலையமாக விளங்குவதோடு அம்மைப்பால், மயக்கத் தடுப்பு மருந்து முதலியவற்றைத் தயாரித்தும் வருகிறது. இந்த நிறு வனம் இந்நாட்டிலுள்ள நான்கு நிலையங்களுள் ஒன்றாக விளங்கு வதால், உறைய வைத்து, உலர வைக்கும் அம்மைப்பால், உற்பத்தியை நாட்டின் தேவைக்கேற்ப பெருக்க முடியும் என்று மத்திய அரசு உணர்ந்தது. அவ்வாறே, உலக சுகாதார நிறுவனம் யூனிசெப் நிறுவனம் ஆகியவற்றின் உதவியோடு மேற்சொன்ன அம்மைப்பால் உற்பத்தி 24 மில்லியன் அளவாக உயர்த்தப் பட்டுள்ளது.

மூத்தடுப்பு ஊசி மருந்து, தொண்டை அழற்சி நோய்த்தடுப்பு மருந்து, நோய்த்தடுப்பு மருந்துகள், நச்சுநோய்க் தடுப்பு மருந்துகள் தயாரித்தல்.

நச்சு நோய்தடுப்பு மருந்துகள், அம்மைப்பால் உற்பத்தியில் தன்னிறைவு அடையும் பொருட்டு, கிண்டி, கிங் நிறுவனத்தில் நச்சு நோய்த்தடுப்பு மருந்துகள், தொண்டை அழற்சி நோய்த் தடுப்பு மருந்து, நோய்த்தடுப்பு மருந்துகள், முத்தடுப்பு ஊசி மருந்து ஆகியவற்றைத் தயாரிப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காகக் கட்டிடம் கட்டவும், பணியாளர்களை நியமிக்கவும், கருவிகள் வாங்கவும் ரூபாய் 3,11,400 அனுமதிக்கப் பட்டுள்ளது.

நாய்க்கடி தடுப்பு மருந்தை உற்பத்தி செய்தல்.

தமிழ்நாட்டில் நாய்க்கடி தடுப்பு மருந்திற்கான தேவை நாளுக்கு நாள் பெருகி வருவதாலும், குன்னூரிலுள்ள பாஸ்டர் நிறுவனம் வழங்கும் தடுப்பு மருந்து போதுமானதாக இராததாலும் இந்த நிறுவனத்தில் இத்தடுப்பு மருந்தைத் தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, கிண்டி கிங் நிறுவனத்திலிருந்து ஓர் உதவி இயக்குநரும் தொழில்நுட்ப வல்லுநர் ஒருவரும் நாய்க்கடி தடுப்பு மருந்தைத் தயாரித்தல், தரப்படுத்துதலின் உள்ள தொழில்நுட்ப உத்திகளை கன்சாலியிலுள்ள மத்திய ஆராய்ச்சி நிலையத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுள்ளனர். கிண்டி, கிங் நிறுவனத்தை மேம்படுத்துவதற்காக 1977-78 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 4·30 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

VIII. மருத்துவக் கல்வி கற்பிக்கும் மருத்துவ மனைகள் :

இம்மாநிலத்திலுள்ள பல் வேறு மருத்துவக்கல்லூரிகளுடன் இணைந்துள்ள மருத்துவமனைகள் 19 இருக்கின்றன. இவை IV-வது விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன.

(a) மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.—1975-76, 1976-77 முதல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலுள்ள படுக்கைகளின் எண்ணிக்கைV-வது விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளன. இம்மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 1975-76 ஆம் ஆண்டில் 12,638 ஆக இருந்தது. 1976-77 இல் 13,294 ஆக உயர்த்தப்பட்டுள்ளதை மேற்படி விவர அறிக்கையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

(b) தொற்றுநோய் சிகிச்சை மருத்துவமனை, தண்டையார் பேட்டை.—தண்டையார்பேட்டை, தொற்றுநோய் சிகிச்சை மருத்துவமனையை, சென்னை மாநகராட்சியிடமிருந்து எடுத்துக் கொண்டு அதனை மருத்துவக்கல்வி கற்பிக்கும் நிலையமாக மாற்றும் செயற்குறிப்பு முனைப்பாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

(c) ஏழை மக்களுக்கு மருத்துவ வசதிகள்.—மருத்துவக் கல்வி இயக்குநர் (பணி அளவில் அல்லது புற நோயாளி துறையளவில்) நடத்திய ஆய்வின் அடிப்படையில், நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் தொடர்ந்து கவனம் செலுத்துவதற்கேற்றவாறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஒன்றுக்கு இருவர் என்ற வீதத்தில் 16 அறுவை சிகிச்சை உதவி மருத்துவர் பதவிகளுக்கு அரசு அனுமதி வழங்கியது. நோயாளிகளை மருத்துவமனையில் சேர்த்துக் கொள்ள அனுமதிக்கும் சிகிச்சை பிரிவுகள் புற நோயாளித் துறையில் ஒரு நாளைக்கு ஒரு பிரிவு என்ற முறையில் அமர்ந்து நோயாளிகளைக் கவனிப்பதால் முந்திய நாள் ஒரு நோயாளிக்குச் சிகிச்சையளித்த அதே பிரிவு அடுத்த நாள் அந்த நோயாளிக்குச் சிகிச்சையளிக்க அங்கு இருப்பதில்லை. இதன் விளைவாக பொதுவான அறுவை சிகிச்சைக்கும், பொதுவாக மருத்துவச் சிகிச்சை பெற புற நோயாளி துறைக்கும் வருகின்ற நோயாளிகள் தொடர்ந்து ஒரே மருத்துவரிடம் அறுவை சிகிச்சை மருத்துவரிடம் சிகிச்சை பெற முடிவதில்லை என்று மேற்படி ஆய்விலிருந்து நன்கு தெரிய வந்தது. இந்த ஆய்வின் பயனாக, மாநகரிலுள்ள மருந்துவ நிலையங்களில் இருக்கும் பல்வேறு பிரிவுகளில் பணியாளர் எண்ணிக்கை தகுந்தவாறு உயர்த்தப்பட்டுள்ளது.

(d) பாலரங்கபுரம் மருத்துவமனை.—மதுரை, எர்ஸ்கின் மருத்துவமனை இம்மாநிலத்திலேயே இரண்டாவது பெரிய மருத்துவமனையாகும். இங்கு 1,400 படுக்கைகள் உள்ளன. நாள் ஒன்றுக்கு சுமார் 7,000 புற நோயாளிகளுக்கு இங்கு சிகிச்சையளிக்கப் படுகிறது. மதுரை, இராமநாதபுரம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உள்ள மக்களின் மருத்துவத் தேவையை இந்த மருத்துவமனை கவனிக்கிறது. எனவே, இம் மருத்துவமனைக்கு ஏராளமான நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதனால் மதுரை வாசிகளுக்குப் போதுமான மருத்துவ வசதி கிடைக்காமற்போயிற்று.

எர்ஸ்கின் மருத்துவமனையில் நோயாளிகள் அதிகமாக வருவதனால் ஏற்பட்டுள்ள நெருக்கடியை ஓரளவிற்குப் குறைக்கவும் குடிசைப் பகுதிகளில் உள்ள மக்களுக்கு போதிய மருத்துவ வசதி அளிக்கவும் வேண்டி நகருக்குப் புறத்தே, தென் மதுரை, பாலரங்கபுரத்தில் 40 படுக்கைகள் கொண்ட மருததுவமனை ஒன்று ரூ. 14.2 இலட்சம் செலவில் கட்டப்பட்டு அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

பாலரங்கபுரம் மருத்துவமனையில் புற நோயாளிகளுக்குக் கீழ்க் காணும் வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன :—

வெளியிலிருந்து வரும் நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுப்பதற்காக பொதுவான மருந்து பிரிவு, அறுவை சிகிச்சைப் பிரிவு குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு, மகப்பேறு—பெண் நோயியல் பிரிவு பிற சாதாரண நோய்களைக் கவனிக்கும் பிரிவு ஆகியவை உள்ளன.

[1977 ஆகஸ்ட் 13

காது, மூக்கு, தொண்டை நோய், கண்நோய், மனநோய் போன்ற சிறப்பான சிகிச்சை பெற வேண்டியிருக்கும் நோய்கள் குறித்து நோயாளிகள் மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனைக்கு அனுப்பப்படுவர். அறுவை சிகிச்சை செய்வதற்கான கூடம் அமைக்கப்பட்டுள்ளது. உடனடியாக அறுவை சிகிச்சை செய்வதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இயல்பான மகப்பேறு, காலம் கடந்த மகப்பேறு ஆகியவற்றைக் கவனிப்பதற்கு மகப்பேறு அறை ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

(e) கடுமையான நோயாலும் அதிர்ச்சியாலும் நினைவிழந்தவர்களை மீண்டும் நினைவுபெறச் செய்து முனைப்பாக மருத்துவச் சிகிச்சையளித்தல், இடைநிலை மருத்துவச் சிகிச்சையளித்தல் பிரிவு :

புற நோயாளிகளுக்குச் சிறந்த முறையில் நல்ல பல மருத்துவ வசதிகளை செய்து கொடுக்க வேண்டி, நடக்கும் நோயாளிகள், ஆபத்தான நிலையிலிருக்கும் நோயாளிகள், அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டிருக்கும் நோயாளிகள் என வகைப்படுத்தி அவற்றின் அடிப்படையில், சிறப்புப் பேராசிரியர் நால்வர் (மருந்து), 8 உதவிப் பேராசிரியர்கள் -(மருந்து) ஆகிய பதவிகளுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதிர்ச்சியுற்று அதன் விளைவாக சிறப்பான முறையில் முனைப்புடன் மருத்துவச் சிகிச்சை தேவைப்படுகிற நோயாளிகளைக் கவனிப்பதற்காகச் சிறப்புப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பிரிவு, மீண்டும் புத்துயிரூட்டி முனைப்புடன் மருத்துவச் சிகிச்சை, இடைநிலை மருத்துவச் சிகிச்சையளிக்கும் பிரிவு என அழைக்கப்படுகிறது. சென்னை அரசு பொது மருத்துவமனை, சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவமனை, மதுரை அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் இப்பிரிவிற்காக மேற்படி பணியாளர்களை நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

(f) இதயநோய் தீவிர சிகிச்சைப் பிரிவை அமைத்தல்.—நோயாளிகளுக்கு இதயத்தில் உள்ள ரத்த நாளத்தில் ரத்தம் உறைந்து விடும் ஒருவகை நோய் இப்போது அதிகமாக ஏற்படுகின்றது. இதனால் இதய நோய் (இதயத் துடிப்பு அதிகமாதல்) வந்த சில மணி நேரத்திற்குள் பெரும்பாலான நோயாளிகள் இறந்து விடுகின்றனர். பொன் போன்ற இந்த மனித உயிரை காக்க வேண்டி இத்தகைய நோயாளிகளுக்குத் தீவிர சிகிச்சையளிக்க வேண்டியது அவசியமாயுள்ளது. இதைக் கருத்திற்

1977 ஆகஸ்ட் 13]

கொண்டு, நவீன கருவிகளுடன் இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்றை அரசுப் பொது மருத்துவமனையிலும், அரசு ஸ்டான்லி மருத்துவ மனையிலும் ஏற்படுத்த வேண்டுமென்று அரசு முடிவு செய்துள்ளது. இதய இரத்த நாளத்தில் ரத்தம் உறைந்து விடக்கூடிய நோயினால் அவதியுறும் நோயாளிகளுக்கு இப்பிரிவில் சிகிச்சையளிக்கப்படும்.

இதய நோய் தீவிர சிகிச்சைப் பிரிவு ஒன்று அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டு தேவையான பணியாளருடனும் கருவிகளுடனும் செயல்பட்டு வருகிறது.

(g) நகரின் புறப்பகுதியில் மருத்துவமனை கட்டுதல்.—சென்னை மாநகரின் இப்போதிருக்கும் மருத்துவமனைகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள நோயாளிகள் நெருக்கடியை ஓரளவிற்குக் குறைக்கவும், மாநகரப் பகுதியில் மருத்துவ வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் வேண்டி, சென்னை மாநகரில் உள்ள மருத்துவக் கல்லூரிகளுடன் இணைந்திருக்கும் வகையில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகள் ஐந்தினை புறநகர்ப் பகுதிகளில் அமைப்பதென்ற கொள்கை முடிவினை அரசு எடுத்துள்ளது.

1. கலைஞர் கருணாநிதி நகர்.
2. தண்டையார்பேட்டை.
3. அறிஞர் அண்ணா நகர்.
4. பெரம்பூர்.
5. தேனாம்பேட்டை.

அதன்படி, கலைஞர் கருணாநிதி நகரில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையை ரூ. 30 இலட்சம் செலவிலும், தண்டையார்பேட்டை, அறிஞர் அண்ணா நகர் ஆகிய இடங்களில் முறையே ரூ. 32.32 இலட்சம், ரூ. 28.02 இலட்சம் செலவில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளையும் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. தண்டையார்பேட்டை, பெரம்பூர் ஆகிய இடங்களில் கட்டப்படும் மருத்துவமனைகள் வட சென்னைப் பகுதியில் உள்ளவர்களுக்கு மருத்துவ வசதி அளிக்கும். தண்டையார்பேட்டை, அறிஞர் அண்ணா நகர் ஆகிய இடங்களில் மருத்துவமனைகள் விரைந்து கட்டப்பட்டு வருகிறது. இவை கூடிய சீக்கிரத்தில் கட்டிமுடிக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றன. கலைஞர்-கருணாநிதி நகரில் கட்டப்பட்டு உள்ள புதிய மருத்துவமனை கூடிய விரைவில் செயல்படத் தொடங்கும். புறநகர்ப் பகுதியில் இந்த மருத்துவமனைகளைக் கட்டுவதினால் மாநகரில் தற்போது உள்ள மருத்துவமனைகளில் நோயாளிகள் நெருக்கடி குறையும். நகருக்குப் புறத்தே தேனாம்பேட்டை, பெரம்பூர்

ஆகிய இடங்களில் மருத்துவமனை கட்டுவதற்கான நிலம் கையகப் படுத்தப்பட்டு அதன்பின்னர் கட்டிடப் பணி தொடங்கப்படும். இப்புறநகர் மருத்துவமனைகளை, அந்தந்த மருத்துவமனைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள கண்காணிப்பாளரின்/தலைவரின் நிர்வாகப் பொறுப்பின் கீழ் கொண்டுவரக் கருதப் பட்டுள்ளது.

(1) கலைஞர் கருணாநிதி நகர்	..	கண்காணிப்பாளர், அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.
(2) தண்டையார்பேட்டை	..	தலைவர், அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
(3) அறிஞர் அண்ணா நகர்	..	தலைவர், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.
(4) பெரம்பூர்	..	கண்காணிப்பாளர், அரசுப் பொது மருத்துவமனை, சென்னை.
(5) தேனாம்பேட்டை	..	கண்காணிப்பாளர், அரசு கஸ்தூரிபாய் காந்தி மகளிர் — குழந்தைகள் நல மருத்துவமனை, சென்னை.

சென்னை மாநகரிலுள்ள அரசு மருத்துவமனைகளில் கிணறு வெட்டியும், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி கட்டியும் போதுமான அளவிற்கு நீர் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவை தவிர, சென்னை, அரசுப் பொது மருத்துவமனை, சென்னை மகளிர் சிசு நல மருத்துவமனை, சென்னை ஸ்டான்லி மருத்துவமனை சென்னை; கண் சிகிச்சை மருத்துவமனை, சென்னை; கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை; மனநோய் மருத்துவமனை, சென்னை, ஆர். எஸ். ஆர்.எம். மகப்பேறு மருத்துவமனை, ஒட்டேரி காசநோய் மருத்துவமனை, சென்னை; காசநோய் சிகிச்சை நிலையம் ஆகியவற்றில் கழிவுநீர் அகற்றவும், நீரை விசையேற்றவும் அறை கட்டுதல், குழாய்கள் இணைத்தல் முதலிய பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன.

IX. மருத்துவமனைகளுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுத்தல்:

மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் கருவிகளையும் சாதனங்களையும் வாங்க அனுமதி அளித்து அதன் மூலம் சிறப்பான சிகிச்சைக்கு அதிக வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது:—

(i) சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்வதற்கான ஐந்து மேஜைகள், அறுவை சிகிச்சைக் கூடத்திற்குள் மேற்பகுதியில் பொருத்தப்படும

ஆறு ஒளிஉமிழ் விளக்குகள், புதிய அறுவை சிகிச்சைக் கூடத்திற்கு எளிதில் எடுத்துச் செல்லக்கூடிய, விளக்கு மறைப்புகளில்லாத மூன்று விளக்குகள் ஆகியவற்றை வாங்க ரூ. 1,83,687-க்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

(ii) சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மகளிர்-சிசு நல மருத்துவமனையில், படுகை வாட்டத்தில் அமைந்த உயரழுத்த நீராவி தூய்மைப்படுத்து கருவி ஒன்றை ரூ. 26,515-க்கு வாங்க அனுமதி வழங்கப்பட்டது.

(iii) சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் கதிரியக் கயியல்-புற்றுநோய் பொர்னார்டு நிலையத்தில் உள்ள 500 M.A. யூனிட் உயரழுத்த மின் மாற்றுக் கட்டுப்பாட்டுக் கருவிக்குப் பதிலாகப் புதிதாக ஒன்றை வாங்க ரூ. 77,000 அனுமதிக்கப் பட்டது. இந்த நிலையத்தில் 92,684 ரூபாய் செலவில் 700 M.A. பிரிவின் குழாய்களும், உயர் அழுத்த மின்கம்பிச் சுருள்களும் புதுப்பிக்கப்பட்டன.

(iv) சென்னை, அரசினர் ஸ்டான்லி மருத்துவமனையில் பயன்படுத்துவதற்காக, 1,25,000 ரூபாய் செலவில் பென்னட் (Bennet) ரெஸ்பிரேட்டர் கருவியும், "ஹிமோடையலைசர்" கருவியும் (Haemodialyser) வாங்க அனுமதி வழங்கப் பட்டது.

(v) மதுரை, அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையின் நரம்பு நோய் சிகிச்சைப் பிரிவில் 47,765 ரூபாய் செலவில் 'எலக்ட்ரோமைகிராம்' (Electromygram) கருவி வாங்க அனுமதி வழங்கப்பட்டது.

(vi) தஞ்சாவூர், ராஜா மிராசுதார் அரசினர் மருத்துவமனையில் பயன்படுத்துவதற்காக 300/500 M.A. எக்ஸ் கதிர் கருவி ஒன்று வாங்க ரூ. 2.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டது.

(vii) களக்காடு, பிரிதாமின்னியார் மருத்துவமனையில் பயன்படுத்த ஒன்றும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பயன்படுத்த ஒன்றுமாக இரண்டு இயங்கும். M.A. எக்ஸ் கதிர் கருவிகள் வாங்க அனுமதி அளிக்கப்பட்டது.

X. கல்லூரி இணைந்த மருத்துவமனைகள், மாநகர மருத்துவமனைகள், புதிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றிற்கு மேம்பாடுகள் செய்ய, 1977-78 வரவு-செலவுத் திட்டமதிப்பீட்டில் 142.21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் நிறைவேற்றுவதற்காக எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் சில முக்கியமான திட்டங்கள் பின்வருமாறு :—

(1) ஒட்டேரி, திருவட்டீசுவரர் காசநோய் மருத்துவமனை— முன்னரே அழுத்தப்பெற்ற கான்கிரீட் கலவையினைக் கொண்டு ஊதுஉலை எண்ணெய் சேமிப்புத் தொட்டி கட்டுதல்.

(2) ஒட்டேரி, திருவட்டீசுவரர் காசநோய் மருத்துவ மனையில் குளிர்பதன கருவியுடன் கூடிய சவப் பரிசோதனை அறைகட்டுதல்.

(3) சென்னை, அரசு கண்நோய் சிகிச்சை மருத்துவமனைக்காக கருவிகள் வாங்குதல்.

(4) மதுரை, எர்ஸ்கின் மருத்துவமனையில் தனிப்பட்ட பல் நோய் சிகிச்சைப் பிரிவையும், முடநோய் சிகிச்சைப் பிரிவையும் கட்டுதல்.

(5) மதுரை, அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் உள்ள சிறுநீரக நோய் சிகிச்சைப் பிரிவிற்காக கருவி வாங்குதல்.

(6) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் கால்நடைக் கொட்டகைக் கட்டுதல்.

(7) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் அரசினர் மருத்துவ மனையில் அறுவைச் சிகிச்சை கூடத் தொகுதி ஒன்றைக் கட்டுதல்.

(8) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 28 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.

(9) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆண், பெண் அறுவைச் சிகிச்சை வார்டுகளுக்கான சுழல் படிக்கட்டு கட்டுதல்.

(10) கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரிக்காக நுண் நோக்காடி ஒன்று வாங்குதல்.

XI. கல்லூரி இணைந்த மருத்துவமனைகளுடன் இணைந்த மருத்துவமனைக் கட்டிடங்களுக்கு சிறப்பு மேம்பாடுகள்.

நோயாளிகளின் சுகாதாரம், உடல் நலம் கருதியும், மருத்துவ மனைக் கட்டிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவும் 1976-77இல் மாநகர மருத்துவமனைகள் அனைத்திற்கும் சிறப்பான, சாதாரண பழுதுபார்த்தல் பணிகளை மேற்கொள்ள அரசு 16.05 இலட்சம் ரூபாய் வழங்கியது. இப்பணி நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளது; இப்பணி முடிவடைந்தவுடன் இந்த மருத்துவ மனைகள் புத்தம் புதிய பொலிவினைத் தரும்.

தொடர்ந்து பிராணவாயு தேவைப்படுகிற அறுவைச் சிகிச்சைக் கூடங்கள், தீவிர மருத்துவக் கண்காணிப்பு வார்டு போன்ற ஏனைய வார்டுகள் அனைத்திற்கும் பிராணவாயு வழங்கும் பொருட்டு, சென்னை பொது மருத்துவமனை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை, சென்னை, தஞ்சாவூர் தீவிர மருத்துவக் கண்காணிப்புப் பிரிவு, தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை ஆகியவற்றில் மருத்துவ சிகிச்சைக்கு தேவைப்படும் வாயுக்களை ஒரே மையத்திலிருந்து வழங்கும் முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. சென்னை மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மாணவர் விடுதிக்கு போதிய நீர் வழங்க கூடுதல் குழாய்கள் போடும் பணியும். சென்னை பொது மருத்துவமனைக்கு வழங்கப்படும் மாநகராட்சி தண்ணீரைச் சேமிக்க கூடுதலாக தொட்டிகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சென்னை, அரசினர் பொது மருத்துவமனையில் ஏழு மாடிக் கட்டிடத்தில் செயல்பட்டு வரும் இதய நோய் சிகிச்சைப் பிரிவு திறந்து வைக்கப்பட்டுள்ளது. இதயத்திற்கு இரத்தம் எடுத்துச் செல்லும் நாள அறுவைச் சிகிச்சைப் புதிய பிரிவு இக் கட்டிடத்தின் ஐந்தாவது, ஏழாவது மாடிகளில் அமைந்துள்ளது. இதற்கு, 20.58 இலட்சம் ரூபாய் தொடரா இனச் செலவும், 4.46 இலட்சம் ரூபாய் தொடர் செலவும் ஆயிற்று.

XII. மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள்.

இம்மாநிலத்தில் 14 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் உள்ளன. இவற்றில் மொத்தம் 4,273 படுக்கைகள் உள்ளன. மாநிலத் திட்டக் குழு செய்த பரிவுரையின் பேரில், மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளின் தரத்தை படிப் படியாக உயர்த்தவும், படுக்கைகளின் எண்ணிக்கையை 400-க் குக் குறையாமல் 650 வரையில் உயர்த்தவும் அரசு முடிவு செய்துள்ளது. 1976-77-ல், திண்டுக்கல் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் 66 படுக்கைகளும், தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் 78 படுக்கைகளும் அதிகரிக்கப் பட்டன. சிதம்பரத்தில் ரூபாய் 20 இலட்சம் செலவில் கட்டப் பட்ட வட்டத் தலைமையிட மருத்துவமனை (70 படுக்கைகள் கொண்டது) 1976-ல் செயல்படத் தொடங்கியது. 18 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பூரில் கட்டப்பட்ட மருத்துவமனையும் தொடங்கி வைக்கப்பட்டது. வேலூர் மக்களுக்காக, வேலூர் அரசினர் பென்ட்லண்ட் மருத்துவமனையில் ரூபாய் 5.50 இலட்சம் செலவில் கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன.

[1977 ஆகஸ்ட் 13

1976-77-ல், கீழ்க்கண்ட மருத்துவமனையில் நான்கு சிறப்புப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

1. ஈரோடு, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முட நீக்கியல் துறை.

2. தூத்துக்குடி, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைப் பிரிவு.

3. புதுக்கோட்டை, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் சிறார் மருத்துவப் பிரிவு.

4. ஈரோடு, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு.

1977-78-ல், இராமநாதபுரம், அரசினர் தலைமையிட மருத்துவமனையில் 1.04 இலட்சம் ரூபாய் செலவில் படுக்கைகளின் எண்ணிக்கையை 125-லிருந்து 155 ஆக உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட இனங்களுக்கு செலவு செய்யவும் அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

(அ) நாகப்பட்டினம், மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் நோயாளிகள் இருக்கைக் கொட்டகை ஒன்று கட்டுதல்.

(ஆ) வேலூர், மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் ரூபாய் 22,575 செலவில் 20'' x 48'' அளவுள்ள படுகை நிலை உயர் அழுத்த கிருமி நீக்கக் கருவி ஒன்றிற்கு வகை செய்தல்.

XIII. வட்டத் தலைமையிட மருத்துவமனைகள்.

இம்மாநிலத்தில் 106 வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில் உள்ள மொத்த படுக்கைகளின் எண்ணிக்கை 5,596 ஆகும். வட்டத் தலைமையிட மருத்துவமனைகளின் மேம்பாடு குறித்து கீழே காட்டப்பட்டுள்ளவாறு சில முக்கியத் திட்டங்களுக்கு அரசு 1976-77-ல் அனுமதி வழங்கியுள்ளது :—

	செலவு (ரூபாய் இலட்சத்தில்).
1. ஒரத்தநாடு, அரசு மருத்துவமனையில் 8 படுக்கைகள் கொண்ட கூடுதல் வார்டு கட்டுதல்.	0.062

1977 ஆகஸ்ட் 13]

XIII. வட்டத் தலைமையிட மருத்துவமனைகள்—தொடர்ச்சி

	செலவு (ரூபாய் இலட்சத்தில்).
2. மணப்பாறை, அரசு மருத்துவமனையில் 12 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.	1.10
3. மன்னார்குடி, அரசு மருத்துவமனையில் குளிர் பதன வசதியுடன் கூடிய பிண அறுவைச் சிகிச்சை கூடம் கட்டுதல்.	0.70
4. தொட்டியம், முசிறி ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட நல வளர்ச்சிக் குழு ஆகியவை அளித்த தொகை மூலம் தொட்டியத்திலும் முசிறியிலும் எக்ஸ் கதிர்பிரிவு கட்டுதல்.	0.30
5. மகாத்மா காந்தி நூற்றாண்டு நினைவு மருத்துவமனை அளித்த தொகை மூலம் கம்பம், அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்.	1.50
6. தென்னார்க்காடு மாவட்டம், திருக்கோயிலூர் அரசு மருத்துவமனை; தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடி அரசு மருத்துவமனை; மதுரை மாவட்டம், பழனி அரசு மருத்துவமனை ஆகியவற்றில் நவீன சமையல் கூடம் கட்டுதல்.	1.79
7. திருப்பூர், அரசு மருத்துவமனைப் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.	3.50
8. உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் 15 படுக்கைகள் கொண்ட காச நோய் சிகிச்சை வார்டு கட்டுதல்.	1.15

1977-78 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம்.

மருத்துவமனையுடன் இணைந்த சமையல்கூடங்களில் பெரும்பாலனவை பழையனவாக இருப்பதால் அவற்றை காலத்திற்கேற்ப மாற்றி அமைக்க வேண்டும் என்று மதிப்பீட்டுக்குழு பரிவுரை செய்துள்ளது. இக்கருத்துரை படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. நடப்பாண்டுத் திட்டக் கால

அளவில், தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை அரசு மருத்துவமனை, சேலம் மாவட்டம், ராசிபுரம் அரசு மருத்துவமனை, கோயம்புத்தூர் மாவட்டம், தாராபுரம் அரசு மருத்துவமனை; ஆகியவற்றில் ரூபாய் 1.43 இலட்சம் செலவில் நவீன சமையற் கூடங்கள் கட்டப்படும். தென்னாற்காடு மாவட்டம், செஞ்சி அரசு மருத்துவமனையிலும், திருநெல்வேலி மாவட்டம், சங்கரன் கோவில் அரசு மருத்துவமனையிலும் போதிய நீர் வழங்குவதற்காக 0.48 இலட்சம் செலவில் குழாயுடன் கூடிய மேல்நிலை நீர்த் தொட்டி கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது; 0.31 இலட்சம் ரூபாய் செலவில் மதுரை மாவட்டம், மேலூர் அரசு மருத்துவமனையில் நீரடிக் கழிப்பிடம் கட்டும் பணியும், திருமங்கலம் அரசு மருத்துவமனையில் கழிப்பிடத் தொட்டி கட்டும் பணியும் 1977-78-ல் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

XIV. வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள்.

இம்மாநிலத்தில் 110 வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள் உள்ளன; அவற்றில் மொத்தம் 2,302 படுக்கைகள் உள்ளன. 1976-77-ல் இவைகளுக்காக கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற அரசு அனுமதித்துள்ளது :—

	செலவு (ரூபாய் இலட்சத்தில்).
1. ஆடுதுறை, அரசு மருந்தகத்தில் 8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு வார்டு கட்டுதல்.	0.97
2. கோயம்புத்தூர் மாவட்டம், கொடுமுடி, அரசு மருந்தகத்தில் பிணக் கிடங்கு கட்டுதல்.	0.30
3. தென்னாற்காடு மாவட்டம், வளவனூர், அரசு மருத்துவமனையில் துளைக் கிணற்றுடன் மேல் நிலை நீர்த் தொட்டி கட்டுதல்.	0.35
4. திரு. முத்தையா செட்டியார் அளித்த தொகை மூலம் உடையார்பாளையம் அரசு மருந்தகத்தில் மகப்பேறு வார்டு கட்டுதல்.	0.97

XIV. வட்டத் தலைமையிடமல்லாத மருத்துவமனைகள்—தொடர்ச்சி

	செலவு (ரூபாய் இலட்சத்தில்.)
5. தஞ்சாவூர் மாவட்டம், திருக்குவளை அரசு மருந்தகத்தில் 4 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.	0.53
6. செட்டியூர், அரசு மருந்தகத்தில் 20 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்.	2.15
7. கோயம்புத்தூர் மாவட்டம், கொடுமுடியில் பொதுமக்கள் அளித்த தொகை மூலம் அங்குள்ள அரசு மருந்தகத்தில் 20 படுக்கைகள் கொண்ட வார்டு, மேல்நிலை நீர்த் தொட்டியும் கட்டுதல்.	1.20
8. பாண்டிச்சேரி, இந்து அறநிலையப் பொறுப்புக் கழகம் அளித்த நன்கொடை மூலம் கண்டமங்கலத்தில் 7 படுக்கைகள் கொண்ட அரசு மருந்தகம் கட்டுதல் (இதை அரசே நடத்தும்).	0.90

இராமநாதபுரம் மாவட்டம், பெருநாழியில் 0.45 இலட்சம் செலவில் 4 படுக்கைகள் கொண்ட மகப்பேறு மருத்துவமனை ஒன்றை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கமுதி ஊராட்சி ஒன்றியம் அளிக்கும் வாடகையில்லாத கட்டிடத்தில் இந்த மருந்தகம் முதலில் திறக்கப்படும். 1977-78-ல் தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் தற்போதுள்ள அரசு மருந்தகத்தில் 0.26 இலட்சம் ரூபாய் செலவில் கூடுதல் பணியாளர்களையும், கருவிகளையும் அளிப்பதன் மூலம் 8 படுக்கைகள் கொண்ட மருந்தகமாக மாற்றக் கருதப்பட்டுள்ளது.

புரவலர்கள், ரயில்வே செஸ் நிதி, காசநோய் நலம் பேணு சங்கம் போன்ற அரசு நிறுவனங்கள் அளித்த உதவித் தொகையை பயன்படுத்தி படுக்கைகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்த கூடுதல் கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதித்துள்ளது. முக்கியமாக அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:—

(i) சுப்பிரமணியபுரத்தில் ரூ. 4.50 இலட்சம் செலவில் 24 படுக்கைகள் கொண்ட அரசு மருந்தகம் கட்டுதல்.

(ii) திருவாடானையில் ரூ. 6.73 இலட்சம் செலவில் 20 படுக்கைகள் கொண்ட புதிய அரசு மருத்துவமனையை கட்டுதல்,

(iii) முசிரி, அரசு மருத்துவமனையில் காசநோய் நலம்பேண் சங்கம் அளித்த 60,000 ரூபாய் நன்கொடையைக் கொண்டு எக்ஸ்-ரே கூடம் கட்டுதல்.

இயங்கும் மருத்துவ நிலையங்கள்.

மாவட்டங்களில் உள்ள கிராமப் பகுதி மக்களுக்கு 10 பிரிவுகள் பணியாற்றுகின்றன. அதன் விவரம் பின்வருமாறு:—

	பிரிவுகளின் எண்ணிக்கை.
(1) தருமபுரி	3
(2) திருநெல்வேலி	1
(3) மதுரை	2
(4) நீலகிரி	3
(5) வடார்க்காடு	1

எக்ஸ்-ரே கருவி வசதிகள் :

இம்மாநிலத்தில் உள்ள 105 வட்ட மருத்துவமனைகளில் 75 மருத்துவமனைகளில் எக்ஸ்-ரே கருவி வசதிகள் தற்போது அளிக்கப்பட்டுள்ளன.

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அரசு மருத்துவமனை 90 படுக்கைகள் கொண்ட முக்கிய வட்ட மருத்துவ மனையாகும்; அங்கு தற்போது எல்லா வகையிலும் நிறைவு பெற்ற எக்ஸ்-ரே கருவி வசதிகள் இல்லை. நடப்பு திட்டக் காலத்தில், தற்போதுள்ள 30 M.A. எக்ஸ்-ரே கருவிக்குப் பதிலாக 100 M.A. எக்ஸ்-ரே கருவி ஒன்றை 1.10 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவக் கருதப்பட்டுள்ளது.

பல்நோய் சிகிச்சை பிரிவுகள்.—மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் பல் நோய் சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன. ஆனால், பல் நோய் சிகிச்சைக் கருவிகளுக்கு உரிய துணைப் பாகங்கள் கிடைக்காததால் இந்த மருத்துவமனைகளில் பெரும்பாலான பல் நோயாளிகள் அனைவருக்கும் சிகிச்சை அளிக்க முடியவில்லை.

1976-77-ல், கீழ்க்காணும் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பிரிவு ஒன்றுக்கு 10,000 ரூபாய்க்கு மேற்படாத செலவில் பல் நோய் சிகிச்சை பெறும் பிரிவுகளை ஏற்படுத்த அரசு அனுமதி வழங்கியுள்ளது :—

1. மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, நாகப்பட்டினம்.
2. மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, தருமபுரி.
3. மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, ஈரோடு.
4. மாவட்டத் தலைமையிட மருத்துவமனை, திண்டுக்கல்.

கீழ்க்காணும் அரசு மருத்துவமனைகளில் பிரிவு ஒன்றுக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாத செலவில் பல்நோய் சிகிச்சை சிறு பிரிவுகளை ஏற்படுத்தவும் அரசு அனுமதித்துள்ளது :—

பொள்ளாச்சி

பழனி

திருவண்ணாமலை.

திருமங்கலம்.

உடுமலைப்பேட்டை.

தாம்பரம்.

அருப்புக்கோட்டை.

நாமக்கல்.

பட்டுக்கோட்டை.

கும்பகோணம்.

மன்னார்குடி.

வாலாஜாபேட்டை, சங்கரன்கோவில், அரியலூர் ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனைகளில் பல் நோய் சிகிச்சைப் பிரிவுகளை ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78-ல், கடலூர், தூத்துக்குடி, சேலம், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் இணைந்துள்ள பல் நோய் சிகிச்சைப் பிரிவுகளில் 0.40 இலட்சம் ரூபாய் செலவில் பல் நோய் சிகிச்சை தலைமைப் பிரிவுகள் என்றமைக்கப்படும் பிரிவுகளைச் சேர்க்கக் கருதப்பட்டுள்ளது.

தனித்துறைகளை ஏற்படுத்தல்.—கிராமப் பகுதிகளில் வல்லுநர்களின் சேவை பற்றி ஆராய நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு அறிக்கையின் அடிப்படையில் கிராமப் பகுதிகளில் வல்லுநர்களின் பணிகளை திரட்டுவதற்காக, கல்லூரி இணைந்திராத மருத்துவமனைகளில், கண்நோய் சிகிச்சைப் பிரிவுகள், பால்வினை நோய் சிகிச்சை பிரிவுகள், பல் நோய் சிகிச்சை பிரிவுகள், முடநீக்கியல், காது, மூக்கு, தொண்டைப் பிரிவுகள், குழந்தை நோய் சிகிச்சைப் பிரிவுகள், குருதி சேமிப்பு நிலையங்கள் போன்ற தனித் துறைகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மேலும், 1976-77-ல், கீழ்க்கண்ட சிறப்புத் துறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன :—

ஈரோடு, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் துறை.

தூத்துக்குடி, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவு.

புதுக்கோட்டை மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் குழந்தை நோய் சிகிச்சைப் பிரிவு.

ஈரோடு, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் கண் நோய் சிகிச்சைப் பிரிவு.

கொடைக்கானல், திருமங்கலம், விழுப்புரம், குடியாத்தம், கடலூர், பவானி, திருப்பூர் ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்த 1976-77-ல் அரசு அனுமதி வழங்கியுள்ளது. தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை, இராமநாதபுரம் மாவட்டம், அருப்புக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் 1977-78-ல் குருதி சேமிப்பு நிலையங்களை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

தருமபுரி தவிர மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அனைத்திலும் பால்வினை நோய் சிகிச்சைப் பிரிவுகள் செயல்படுகின்றன. எனவே, தருமபுரி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் 1977-78-ல் பால்வினை நோய் சிகிச்சை மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது.

ஈரோடு, மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் முடநீக்கியல் பிரிவு ஒன்றையும், கண்நோய் சிகிச்சை பிரிவு ஒன்றையும் ஏற்படுத்தக் கருதப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. திருநெல்வேலி மாவட்டம், தூத்துக்குடி மாவட்டத் தலைமையிட மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

XV. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மலைப் பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் திட்டங்கள் நிறைவேற்ற அரசு அனுமதித்துள்ளது :—

(1) உதகமண்டலம், அரசுத் தலைமையிட மருத்துவமனையிலும் கடலூர் அரசு மருத்துவமனையிலும் 40 படுக்கைகள் கொண்ட வார்டு கட்டுதல்,

(2) மசினகுடி, அரசு மருத்துவமனையில் பணியாளர் குடியிருப்புகளுடன் அரசு மருந்தகம் கட்டுதல்.

(3) கடலூரில் பஜாரில் அரசு மருந்தகம் ஏற்படுத்தல்.

(4) கடலூரில் ஆம்புலன்ஸ் வண்டி அளித்தல்.

(5) களஹட்டி, மஞ்சூர் ஆகிய இடங்களில் பணியாளர் குடியிருப்புகளையும், அரசு மருந்தகத்தையும் கட்டுதல்.

(6) உதகமண்டலத்தில் இயங்கும் மருத்துவ பிரிவு ஒன்றை கூடுதலாக ஏற்படுத்தல்,

(7) தூனேரியில் இரண்டாவது ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குதல்.

XVI. பழங்குடி மக்கள் நலத் திட்டம்.

சமூகத்திலும், பொருளாதாரத்திலும் மிகவும் பின்தங்கியவர்களாக உள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றம் அரசின் நாட்டத்தை ஈர்த்துள்ளது. பழங்குடி மக்களில் பெரும்பாலானவர்கள் மகப்பேறு வசதிகள் உட்பட அடிப்படை வசதிகளே இல்லாதவர்களாக உள்ளனர். இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் மாவட்டச் சிறப்பு துணை ஆட்சித் தலைவர் மேற்பார்வையின்கீழ் மருத்துவர் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. பழங்குடி மக்கள் நலத் திட்டங்களின்கீழ் கீழ்க்காணும் திட்டங்களை நிறைவேற்ற அரசு 1976-77-ல் அனுமதி வழங்கியது:—

(1) பழங்குடி மக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிக்க தென்னாற்காடு மாவட்டம், கல்ராயன் மலைப் பகுதியில் அரசு மருந்தகம் தொடங்குதல். இந்த மருந்தகம் 24—8—1976 முதல் செயல்படுகிறது.

[1977 ஆகஸ்ட் 13

(2) மருத்துவ வசதிகள் அளிக்க வட ஆற்காடு மாவட்டம், ஜம்னுமருதூரில் அரசு மருந்தகம் தொடங்குதல்.

(3) மருத்துவத் தேவைகளை நிறைவு செய்ய திருச்சிராப் பள்ளி மாவட்டம், பச்சமலைப் பகுதியில் உள்ள செங்காட்டுப் பட்டியில் அரசு மருந்தகம் தொடங்குதல்.

(4) மருத்துவ வசதிகள் அளிக்க சேலம் மாவட்டம், கருமான் துறையில் அரசு மருந்தகம் தொடங்குதல்.

கல்ராயன் மலைப் பகுதியில் மருத்துவ வசதிகள்:

கல்ராயன் மலைப்பகுதியில் உள்ள பழங்குடி மக்களிடையே பால்வினை நோய், பிற தொற்று நோய்கள் ஆகியவை எந்த அளவுக்குப் பரவியுள்ளது என்பதை கண்டறிந்து அதைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க மேக நோயியல் நிலைய இயக்குநர் தலைமையின் கீழ் ஒரு குழுவையும், பொதுச் சுகாதாரம் நோய்த் தடுப்பு மருந்து உதவி இயக்குநர் தலைமையின்கீழ் ஒரு குழுவையும் அரசு அனுப்பியது. ஆய்வு அறிக்கை வரப்பெற்றதன் மேல், கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதித்துள்ளது:—

1. பழங்குடி மக்களுக்கு மருத்துவ வசதி அளிக்க அறுவைச் சிகிச்சை உதவி மருத்துவர்கள் இருவருடன் இயங்கும் மருத்துவப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தல்.

2. பழங்குடி மக்களுக்கு மருத்துவப் பரிசோதனை வசதிகளை அளிக்க, ஹரூர், கள்ளக்குறிச்சி, ஆத்தூர் ஆகிய இடங்களில் உள்ள வட்ட மருத்துவ மனைகளில் கூடுதலாக ஆய்வுக் கூட வசதி கள் ஏற்படுத்தல்.

3. இப்பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு ஊசி குத்தவும், இப்பகுதிகளில் சுகாதார வசதிகள், சுற்றுப்புற சுகாதார வசதிகள் ஆகியவற்றைக் கவனிக்கவும் சுகாதார ஆய்வாளர்கள் மூவரை நியமித்தல்.

சிறுவர்களுக்கு பெரியம்மை நோய், பிற தொற்று நோய்கள் வராமல் தடுக்க தடுப்பு ஊசி போடும் பணியை, சுகாதார ஆய்வாளர்கள் கவனிக்கின்றனர். கல்ராயன் மலைப் பகுதிகளில் நோயால் பாதிக்கப்படும் பள்ளி செல்லும் வயதடையாத சிறுவர் களுக்கும், மகப்பேற்றுக்கு முந்தைய, மகப் பேற்றுக்குப் பிந்திய தாய்மார்களுக்கு 'கேர்' பொருள்களையும் (குழந்தை உணவு) அவர்கள் வழங்குகின்றனர். ஊட்டச் சத்தின்மையைத் தடுக்க வைட்டமின் 'A' மாத்திரைகள், இரும்புச் சத்து மாத்திரைகள், பிற வைட்டமின் மாத்திரைகள் வழங்குவதையும் அவர்கள் மேற் கொண்டுள்ளனர். பழங்குடி மக்களிடையே சுற்றுப்புற சுகா தாரத்தை மேம்படுத்தும் பொருட்டு, ஆராய்ச்சி-செயல் திட்ட (R. C. A. P.) வகை கழிப்பிடங்களை இலவசமாக நிறுவி அதை அந்த மக்களிடையே பிரபலப்படுத்தும் பணியை சுகாதார ஆய்வாளர்கள் மேற்கொண்டுள்ளனர்.

1977 ஆகஸ்ட் 13]

XVII. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்றுதல்.

கிராம மக்களுக்கு சிறந்த மருத்துவ வசதிகளை அளிக்கும் நோக்கத்துடன், இம்மாநிலத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அனைத்தையும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத் தின் கீழ் அரசு மருந்தகங்களாக மாற்றக் கொள்கை அளவில் அரசு முடிவு எடுத்துள்ளது. இந்நாள்வரை நகராட்சி, ஊராட்சி ஒன்றிய, ஏனைய மருந்தகங்கள் உள்ளிட்ட 112 மருந்தகங்கள் அரசு மருந்தகங்களாக மாற்றப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு மருந்தகங்களாக மாற்ற கோரி வரப் பெறும் வேண்டுகோள்களை கருதிப் பார்ப்பதற்கு 1975 ஆம் ஆண்டில் அரசு சில விதிமுறைகளை வகுத்துள்ளது. மேற்சொன்ன விதிமுறைகளை அனுசரித்து, ஆண்டுதோறும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் சில அரசு மருந்தகங்களாக மாற்றப்படுகின்றன. ஆயினும் 1977-78-ல் 20 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை ரூ. 7.21 இலட்சம் மதிப்பீட்டுச் செலவில் அரசு மருந்தகங்களாக மாற்றுவதென கருதப்பட்டுள்ளது. இதைத் தவிர, தங்கள் மருந்தகங்களை எடுத்துக் கொள்ளுமாறு தனியார் அமைப்புகளி லிருந்து வரப்பெற்ற வேண்டுகோள்களை, ஒவ்வொன்றின் தகுதி அடிப்படையில் அரசு பரிசீலித்து வருகிறது.

XVIII. குடிசைப் பகுதிகளில் மருத்துவ வசதி.

சென்னை மாநகரின் மொத்த மக்கட் தொகையில் 30 சதவீத மக்கள் அதாவது 7.5 லட்சம் மக்கள் 1,200 குடிசைப்பகுதிகளில் வசிக்கின்றனர். இதில் 1.2 லட்சம் மக்கள், குடிசை மாற்று வாரியம் கட்டிக் கொடுத்துள்ள குடியிருப்புகளில் ஏற்கெனவே இடம் பெற்றுள்ளனர். எஞ்சியுள்ள 6.3 லட்சம் மக்கள், துப்புரவு வசதிகளற்ற சேரும் சகதியுமான இடங்களில், குடிசை வாசி களின் ஆரோக்கியத்திற்கு மட்டும் ஊறு விளைவிப்பதோடு அன்றி, சுற்றுப்புறப் பகுதி வாசிகளின் ஆரோக்கிய வாழ்விற்கும் ஊறு விளைவிக்கக் கூடிய நிலையில் வசிக்கின்றனர்.

இத்தகைய குடிசை வாசிகளின் பணக்கட்டுப்பாடு, ஏனைய வசதிக் குறைவுகள் ஒருபுறமிருப்பின், பொதுவாக அவர்கள் முறை யான மருத்துவ பராமரிப்பை வெறுக்கவோ அல்லது ஏற்பதற்கு கூச்சப்படவோ செய்கின்றனர். உண்மையில், அரசு மருத்துவ மனைகள், மருந்தகங்கள் குடிசைப் பகுதிகளிலிருந்து வெகு தொலைவில் அமைந்துள்ளன; கிடைக்கக் கூடிய இடங்களில் எல்லாம், இடுகாடுகள், குப்பை கொட்டப்படுகிற இடங்கள் இவற்றுக்கு அருகிலேயும் கூட இவர்கள் [illegible] டுக் கொண்டுள்ளனர். இதனால், மருத்துவமனைகளுக்கும், மருந்த கங்களுக்கும் போக சிலவேளைகளில் தங்கள் நாட் கூலியையும் செலவழிக்கும் வகையில் இந்த ஏழை மக்கள் தங்கள் நேரத்தையும்

பணத்தையும் கணிசமான அளவுக்குச் செலவிடுகின்றனர். குடிசைவாசிகளுக்கு அவர்களது வாயிலிலேயே மருத்துவ வசதி கிடைக்கச் செய்யும் திட்டம் ஒன்றை, அரசு வகுத்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் மாநகரில் மூன்று மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த 102 மருத்துவப் பிரிவுகள் சென்னை மாநகரில் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவிலும், பேராசிரியர் தலைமையில், டாக்டர்கள், மனையிட அறுவை மருத்துவர்கள், மனையிட மருத்துவர்கள் முதலியோர் உள்ளனர். ஒவ்வொரு பிரிவும் வசதிகள், தன்னிறைவுடன் இயங்கும் பிரிவாகும். இப் பிரிவு சுமார் 2,500 குடிசைவாசிகளுக்கு மருத்துவ வசதி அளிக்கிறது. குடும்பத்தில் ஒவ்வொருவரையும் மருத்துவக் குழு சோதித்துப் பார்த்து நோயாளிகளுக்குச் சிறப்பாகக் கவனிக்கப்பட்டு மருத்துவம் அளிக்கப்படுகிறது. இத்தகைய நோயாளிகளை குழுப் பேராசிரியர் மருத்துவமனையில் சேர்ப்பித்து தனி பராமரிப்பு அளிக்கப்படுகிறது. மருத்துவமனைகளில் இதற்காக விலையுயர்ந்த மருத்துவச் சாதனங்கள் உள்ளன. மருத்துவக் கல்லூரி மாணவர்களும் இதில் ஈடுபட்டுள்ளனர். இம்மாணவர்கள், குடிசைவாசிகளின் வாயிலிலேயே அளிக்கும் இம் மருத்துவ வசதியை நோயாளிகள் ஏற்குமாறு அவர்களைப் பணிய வைப்பதில் சமுதாயத் தலைவர்களாகவும் செயல் படுகின்றனர். குடிசைப் பகுதிகளில் உள்ள சாக்கடை வடிகால்களை ஒழுங்குபடுத்தி துப்புரவு நிலையை வைத்து வருவதற்கு அப்பகுதிகளுக்கு துப்புரவு ஊழியர்களை அனுப்பி வைக்குமாறு மாநகராட்சி அதிகாரிகளுக்கும் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

XIX. அரசு இலவச கண் மருத்துவ முகாம்கள்.

தமிழ்நாட்டில் இருவிழிகளும் பார்வையற்ற 6 லட்சம் மக்களும், புரையோடியதால் ஒரு கண் மட்டும் பார்வையற்ற 4 லட்சம் மக்களும் உள்ளனர். இவர்களில் அதிக அளவு பார்வையற்றோர் சதவீதம் 50 வயதிற்கு மேற்பட்டவராவர். அவர்களுக்குப் பார்வைபெற்றுத் தரப்படுமாகில், சற்றேறப்ப 60 சதவீத மக்கள் வேலை செய்து பொருளீட்டித் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற முடியும். பார்வையற்றோருக்குப் பார்வை அளித்து, அவர்களுக்கு உவகை அளிக்கும்பொருட்டு, 1972 ஜூன் திங்களில் அரசு இலவச கண் மருத்துவத் திட்டம் ஒன்றைத் தொடங்கியது. இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, ஐந்து கண் மருத்துவ இயலூர்திப் பிரிவுகளை ஐந்து மண்டலங்களில் அதாவது சென்னையில் 2 பிரிவுகள், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றையும் ஒரு பிரிவாக ஐந்து பிரிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

மருத்துவப் பணிகள்.—குடும்ப நலத்துறை இயக்குநர் இலவச கண் மருத்துவப் பிரிவுகளுக்கு முழுப் பொறுப்பு உடையவராவார். இதற்காக அவசியமான உதவியை மருத்துவக் கல்வி

இயக்குநர் வழங்குகிறார். மாவட்டங்களில், வருவாய்த்துறை, வளர்ச்சி வட்டாரப் பணியாளர் உதவியுடனும், பிரிவு மருத்துவ அதிகாரிகளைக் கலந்துக்கொண்டு, இலவச கண் மருத்துவப் பிரிவுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நடத்துகின்றனர். ஐந்து பிரிவுகளில் ஒவ்வொன்றும், சிவில் சர்ஜன் ஒருவரது பொறுப்பில் உள்ளது. இவருக்கு உதவியாக, 3 உதவி அறுவை மருத்துவர்கள் (கண் அறுவை மருத்துவர்கள்), 12 செவிலியர்கள், ஏனைய மருத்துவ உதவியாட்கள் உள்ளனர். நல்லுறவுப் பணிக்கும், முகாம்களை நடத்திக் கணக்குகள் வைத்து வருவதற்கும், மருத்துவப் பணி, குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் மாவட்டத் துணை ஆட்சித் தலைவர் பதவி ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்தக் கண் முகாம்களில், புரையோடிய கண் அறுவை மருத்துவமும், ஏனைய அறுவை மருத்துவமும் செய்யப்படுகின்றன. இதைத் தவிர, கிளாக்கோமா, டிராக்கோமா, மாலைக்கண் போன்ற நோய்களுக்கும், இந்த முகாம்களில் சிகிச்சை அளிக்கப்படுகின்றன. இங்கு தங்கும் நாட்களில் நோயாளிகளுக்கு இலவச உணவும் இடவசதியும் அளிக்கப்படுகின்றன. நோயாளிகளுக்கு மூக்குக் கண்ணாடிகள் இலவசமாகக் கொடுக்கப்படுகின்றன. புரைக் கண் அறுவை மருத்துவம் ஒவ்வொன்றுக்கு அரசு ரூ. 65 வழங்க அனுமதித்துள்ளது. இந்த ரூபாய் 65-ல் ரூ. 44, உணவு முதலிய ஏற்பாட்டுச் செலவுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர் பொறுப்பில் விடப்பட்டும், ரூ. 21 மருந்துச் செலவுக்காக மருத்துவ அதிகாரியின் பொறுப்பிலும் விடப்பட்டுள்ளது.

இலவச கண் அறுவை மருத்துவப் பிரிவுகளில் நடைபெறும் பணியை மதிப்பிடுவதற்காக இம் மாநிலத்தில் சிறந்த மருத்துவர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் 25,000 புரைக் கண் அறுவை மருத்துவம் செய்ய மருத்துவப் பிரிவுகளை நடத்துவதற்காக அரசு, ரூ. 22 லட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

1976-77 ஆம் ஆண்டுக்கு முடிவு செய்துள்ளவையும், 1977-78 ஆம் ஆண்டில் செய்யக் கருதியுள்ளவையுமான புரைக் கண் அறுவை மருத்துவர்களுக்குக் குறிப்பிட்ட இலக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

	1976-77.	1977-78.
புரைக்கண் அறுவை மருத்துவம்.	25,000	25,000

128-128—11A

1977 ஆகஸ்ட் 13]

இதுவரையில் 404 முகாம்கள் நடைபெற்றுள்ளன. 1972 ஜூன் திங்களிலிருந்து 28-2-1977 வரையில் நடைபெற்ற கண் மருத்துவ முகாம்களில் புரைக்கண் அறுவை மருத்துவம் (cataract refraction), சிறு அறுவை, மருத்துவங்கள் செய்து கொண்ட புற நோயாளிகளின் எண்ணிக்கை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

1.	பரிசோதனை செய்யப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை.	9,39,197
2.	புரையோடிய கண் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.	1,39,747
3.	மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	1,39,747
4.	மாலைக்கண் அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.	1,04,100
5.	சிறிய அறுவை சிகிச்சைகளின் எண்ணிக்கை.	1,238
6.	செய்யப்பட்ட செலவு .. .. ரூ.	1,27,42,623

அரசின் இலவச கண்சிகிச்சை முகாமை, 1977-78 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்வதற்காக, 1978-79 ஆம் ஆண்டிற்கு புரையோடிய கண் அறுவை சிகிச்சை 25,000 பேருக்கு அளிக்கப்பட வேண்டுமென்ற திட்ட இலக்கை நிர்ணயித்து, ரூ. 22 இலட்சத்திற்கு அனுமதி வழங்க அரசு திட்டமிட்டுள்ளது.

XX. தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்.

இந்தியாவில் 3.2 மில்லியன் பேர்களுக்கு இந்நோய் உள்ளதென்றும், அதில் இம்மாநிலத்தில் 7.5 இலட்சம் பேர் உள்ளனர். அவர்களில் 5.42 இலட்சம் பேர், தமிழ்நாட்டில் உள்ளரெனப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்கீழ் 1976-77 ஆம் ஆண்டில் கீழ்க்கண்டவைகளுக்கு அரசு அனுமதி வழங்கயுள்ளது:—

1.	தொழுநோய்க் கட்டுப்பாடுப் பிரிவு	10
2.	ஏற்கெனவேயுள்ள பழைய பிரிவுகளைத் தர முயர்த்துதல். ..	4
3.	நகர்ப்புற தொழுநோய் நிலையங்கள்	23
4.	நகர்ப்புற தொழுநோய் அறுவை சிகிச்சைப் பிரிவுகள். ..	6
5.	தற்காலிக சிகிச்சைப் பிரிவுகள்	15
6.	மாவட்ட தொழுநோய் அதிகாரிகள்	4

1977 ஆகஸ்ட் 13]

திட்டகால அளவின் மூன்றாவது ஆண்டு இறுதியில் 59 தொழுநோய்க் கட்டுபாட்டுப் பிரிவுகள், 40 நகர்ப்புற தொழுநோய் சிகிச்சை நிலையங்கள், 132 எஸ். ஈ. டி. பிரிவுகள், 10 அறுவை சிகிச்சைப் பிரிவுகள் ஆகியவை உள்ளன. இவற்றைச் செவ்விய வகையில் மேற்பார்வையிடுவதற்கு, இதுவரை 12 மாவட்ட தொழுநோய் அதிகாரிகள் பதவிகளுக்கும் அனுமதி வழுங்கப்பட்டுள்ளது.

நான்காவது திட்ட காலத்தில் தொற்று நோய்க் கிருமிகள் பரவக்கூடிய நிலையை அடைந்த முற்றிய தொழு நோயாளிகள், எதிர் விளைவுகள், புண் முதலியன போன்ற சிக்கலான நோயாளிகளுக்குத் தலைமையிட மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், சென்னை அரசு மருத்துவமனை ஆகியவற்றில் சிகிச்சை அளிப்பதற்காக, 25 மருத்துவ சிகிச்சைப் பிரிவுகளுக்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதுவரை, அரசு மருத்துவ மனைகளிலும், தனியார் மருத்துவமனைகளிலும், 386 இலட்சம் தொழு நோயாளிகளுக்கு முழுமுர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. முழுமுர தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம், தமிழ்நாடு முழுவதிலுமுள்ள பகுதிகள் அனைத்திலும் ஐந்தாவது திட்ட இறுதிக்குள் செயல்படுத்தப்படும்.

தொழுநோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகளில் பணியாற்றும் உதவி மருத்துவர்கள் அனைவரும், முழுகவனத்தையும் செலுத்தும்படிச் செய்யவும், அந்நோய்க்குப் புதிய முறையில் சிறப்பு சிகிச்சை [illegible] செய்யவும், அரசு, தொழுநோய் மருத்துவ நிலையங்களில் பணியாற்றும் மருத்துவ [illegible] வீதங்களை மாற்றியமைக்க அண்மையில் ஆணைகள் பிறப்பித்துள்ளது: தற்போதுள்ள சம்பள வீதம் ரூ. 525—25—600—30—690—35—900 என்பதற்குப் பதிலாக ரூ. 575—25—600—40—1,000 என்றும், வரையறுக்கப்பட்ட பணிக்கு தற்போது வழங்கப்படும் ஈடுசெய்படி ரூ. 75-க்குப் பதிலாக மாதம் ஒன்றுக்கு ரூ. 100 பயிற்சியிலர் பணிப்படி ஒன்றுக்கும், சிறப்பு தொழு நோய்ப்படி திங்களுக்கு ரூ. 125 என்றிருந்ததிலிருந்து ரூ. 200 ஆக உயர்த்தியும் உள்ளது.

தமிழ்நாட்டில் தொழுநோய் மிக அதிகமாகப் பரவியுள்ளது, ஆனால், இவர்களுக்குச் சிகிச்சை அளிக்க, மிகச்சில மருத்துவ பட்டதாரிகளே உண்மையான ஆர்வம் அல்லது முயற்சி எடுக்கின்றனர். மருத்துவப் பட்டதாரிகள் தொழுநோய் சிகிச்சை பணி முக்கியத்துவத்தை நன்குணரச் செய்யும்பொருட்டு, 25 தொழுநோய்கள மருத்துவர்கள் பதவிகளை ஏற்படுத்தக்கருதப்பட்டுள்ளது. இந்த மருத்துவர்களுக்கு பல்வேறு தோல் சம்பந்தப்பட்ட நோய்களைக் கண்டறிவதற்கு, கல்லூரி மருத்துவ மனைகளிலுள்ள தோல்நோய்த்துறையில் ஒருமாத தொடக்கப் பயிற்சியும் அடுத்த மாதத்தில் திருமணி, கரிகிரியில் தொழுநோய் குறித்த பல்வேறு கூறுகள் குறித்து அறிந்துகொள்ள பயிற்சியும் அளிக்கப்படும்.

பள்ளிக் குழந்தைகளுக்கிடையே. 2 முதல் 7 சதவீதம் வரை தொழுநோய் கண்டிருப்பது அறியப்பட்டதால், குழந்தைகளுக்கு தொழுநோய் இருப்பதைக் கண்டுபிடிக்கும் முக்கிய நோக்கத்துடன் பால்வாடிகளுக்குச் செல்லும் பள்ளி செல்லும் வயதடையா பாலர்களுக்கும், கிராம, நகர்ப் பகுதியில், 11 வயது வரையிலுள்ள தொடக்கப் பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுக்கு, மருத்துவப் பரிசோதனை நடத்த அரசு திட்டமிட்டுள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கானிகள் என்றழைக்கப்படும் மலைச்சாதியினருக்குப் பெரும்பான்மையாகத் தொழுநோய் கண்டுள்ளதெனத் தெரிவிக்கப்பட்டதால், கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மலைச் சாதியினர் எவ்வளவு பேருக்கு தொழுநோய் கண்டுள்ளதெனக் கண்டறிய, மருத்துவத் துறையால் ஆய்வு ஒன்று மேற்கொள்ளப் பட்டது. பேச்சிப்பாறையில், தினமும், தனி மருத்துவமனை ஒன்று செயல்படுகிறது. தொழுநோயாளிகள், சிகிச்சைக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது கூலிகளை (சம்பளத்தை) விட்டுவிட்டு மருத்துவ மனைகளுக்கு நீண்ட தொலைவு பயணத்தை மேற்கொண்டு இடர்ப்பாடுகளை அடைவதைத் தவிர்ப் பதற்காக அவர்களுக்கு மாதத்திற்கு ஒருமுறை மருந்துகொடுக்கப் ப்பட்டுள்ளன. இந்நோய், மிக எளிதில் பரவ வாய்ப்புள்ள செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சேலம், தரும புரி ஆகிய மாவட்டங்களிலும், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களிலும், தஞ்சாவூர், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் இந்நோய் பரவ வாய்ப்புள்ள பகுதிகளிலும், இத்திட்டத்தை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. இத் திட்டத்தின் கீழ் ரூ. 28,800 மதிப்பீட்டுச் செலவில், சுமார் 45 இலட்சம் குழந்தைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படும்.

XXI. காச நோய்த் தடுப்புத் திட்டம்.

தமிழ்நாட்டில் சுமார் 8 இலட்சம் பேர் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில், 2 இலட்சம் பேருக்குப் பரவியுள்ள நோய் தொற்று நோய்த்தன்மை வாய்ந்தவையாகும். இவர்கள், கிராமப் பகுதிகளிலும், நகர்ப் பகுதிகளிலும் கலந்து காணப்படுகின்றனர்.

காசநோய்த் தடுப்புத் தேசியத் திட்டம், தற்போதுள்ள சுகாதாரப் பணிகளுடன் முழுவதும் ஒருங்கிணைந்த ஒரு திட்ட மாகும். காச நோய்த் தடுப்புத் திட்டம், சென்னை மாநகரிலும், தமிழ்நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் செயல்படுத்தப் பட்டுள்ளது. மாவட்டக் காச நோய்த் தடுப்பு நிலையம் ஒவ்வொன் றிலும் மாவட்டக் காசநோய்த் தடுப்பு அதிகாரி ஒருவர் தலைவராய் உள்ளார். பெங்களூர், காசநோய்த் தடுப்புத் தேசிய நிறுவனத் தில் பயிற்சி பெற்ற முக்கியப் பணியாளர் தொகுதி ஒன்று உள்ளது. மாவட்டக் காசநோய்த் தடுப்பு அதிகாரி, மாவட்டக் காசநோய்த் தடுப்பு நிலையத்தில், மாவட்டக் காசநோய்த் தடுப்புத் திட்டத்தை அமைத்து, மாவட்டத்திலுள்ள சுகாதார நிறுவனங்கள் அனைத்தி லும் மாவட்டக் காசநோய்த் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்.

தற்போது, 14 மாவட்டக் காசநோய்த் தடுப்பு நிலையங்கள் உள்ளன. காசநோய்க் கட்புல விளக்கப் பயிற்சி நிலையம் ஒன்றும் தற்போது தமிழ்நாட்டில் உள்ளது.

காசநோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்காகத் தற்போது தமிழ்நாட்டில் 3,477 படுக்கைகள் உள்ளன. இவைகளில், 2,488 படுக்கைகள் அரசு காசநோய் நலம் பேண் மருத்துவமனையிலும், அரசு மருத்துவமனைகளிலும் உள்ளன. எஞ்சிய 939 படுக்கைகள், தனியார் காசநோய் நலம்பேண் மருத்துவ மனைகளிலும், தனியார் மருத்துவ மனைகளிலும் உள்ளன.

காசநோய் நலம் பேணும் மருத்துவ நிலையங்கள் சிலவற்றில் முன்னாள் இராணுவ வீரர்களுக்காகப் படுக்கைகளை ஒதுக்கித்தருவ தற்காகவும் அரசு அண்மையில் ஆணையிட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் 20 படுக்கைகளுடன் காச நோய் ஒதுக்கிட வார்டுகளை (Tuberculosis Isolation Wards) நிறுவக் கருதப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளியிலுள்ள இராஜாஜி காசநோய் நலம்பேணும் நிலையத்தை அரசு மேற்கொண்டுள்ளது; திருச்சிராப்பள்ளி தலைமையிட மருத்துவமனையில் உள்ள 30 படுக்கைகள் கொண்ட காசநோய் வார்டை, கட்டிடங்கள், சாதனங்களுடன் பணியாளர் களையும் சேர்த்து மாற்றித்தந்ததன் மூலம், இந்த நலம்பேணும் நிலையத்தை காச நோய் மருத்துவமனையாக 5—1—1977 ல் அரசு மாற்றியமைத்துள்ளது. இதன் மூலம், அரசு மேற்கொண் [illegible] மருத்துவமனையில் பெரும்பான்மைக் கையிலான காசநோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்க முடியும். மாவட்ட காசநோய் நிலையம் ஒவ்வொன்றிலும் பி.சி.ஜி. தடுப்பூசி போடும் பணியைக் கவனிக்கின்ற தொழில் நுட்பப் பணியாளர்கள் 7 பேரும் ஒரு தலைவரும் கொண்ட பி.சி.ஜி. தடுப்பூசிப் பணிக்குழு ஒன்று நிறுவப்பட்டுள்ளது. சேலம், திருநெல்வேலி, இராமநாத புரம், கோயம்புத்தூர் ஆகிய நான்கு மாவட்டங்களுக்கு மேலும் நான்கு குழுக்களுக்கு இந்த ஆண்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பி.சி.ஜி. தடுப்பு ஊசி குத்தும் திட்டத்தின் கீழ் இதுவரை 1,01,33,385 பேருக்கு பி.சி.ஜி. தடுப்பு ஊசி போடப் பட்டுள்ளது. ஐந்து மருத்துவ நிறுவனங்களில் காச நோய்க்கு இலவச சிகிச்சையளிக்கப்படுகிறது என்பது பற்றிய விவரங்களைக் காட்டுகின்ற விளம்பரப் பலகைகளை நிறுவுவதற்காக அரசு ரூ. 6,000 அனுமதித்துள்ளது.

இப்போது காச நோயைத் தீர்க்கும் பல மருந்துகள் கண்டு பிடிக்கப்பட்டு, வெளிவந்துள்ளன. எனவே, காச நோயாளிகள், தங்கள் வீடுகளில் இருந்தவாறே செம்மையான முறையில் சிகிச்சை யைப்பெற இயலும். தாம்பரத்திலுள்ள காச நோய் நலம் பேணும் நிலையத்தில் மருத்துவ ஊர்திப்பிரிவு ஒன்று அண்மையில்

தொடங்கப்பட்டுள்ளது. இப்பிரிவு வாரமிருமுறை தாம்பரத்திலும் அதைச் சுற்றி அமைந்துள்ள பகுதிகளிலும் வலம் வந்து காச நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கிறது.

பட்டம் பெற்று பயிற்சியையும் முடித்து வேலைக்குச் செல்ல இருக்கும் மருத்துவப் பட்டதாரிகள் காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவில் சேர்ந்து சமுதாயத்தின் நலிந்த பிரிவினரிடையே பணி புரிய இயலும் வகையில், களப்பணிப் பயிற்சி நிலை மருத்துவர் (Field House Surgeons) பதவி 25-க்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளது. தொழுநோய் குறித்த மாநில அதிகாரி, 18-11-1976 முதல் [illegible] வரையிலான மூன்று நாட்களில் மருத்துவப் பணியாளர்களைக் கொண்ட இரண்டு குழுவினருடன் சென்று நீலகிரி மாவட்டத்தில் உள்ள ஏழு கிராமங்களில் முகாமிட்டு அங்கு வாழும் ''கோட்டா'' பழங்குடியினரிடையே ஆய்வு ஒன்றை நடத்தினர். காசநோய் கண்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் நோக்குடன் 1,146 பேர்கள் தொடர்பாக இவ்வாய்வு நடத்தப்பட்டது. நுரையீரல் காச நோய்க்கு ஆளானவர்கள் எவரும் இல்லை எனவும், அதைத் தவிர மற்றவகைக் காசநோய்க்கு ஆளானவர்கள் 10 பேர் இருப்பதாகவும் (0.1 சதவிகிதம்) ஆய்விலிருந்து தெரிய வந்தது. அந்த 10 பேருக்கும் சிகிச்சையளிக்கப்பட்டது. கோட்டா இனத்து மக்களுக்குக் காசநோய் வராதிருக்க பி.சி.ஜி. தடுப்பு ஊசியும் போடப்பட்டது. இம்மக்களுக்குக் காசநோய் வந்தால் அதைக்கண்டறியவும், சிகிச்சையளிக்கவும் நீலகிரி மாவட்டக்கைச் சேர்ந்த [illegible] மருத்துவ நிலையங்கள் அனைத்திலும் போதிய வசதிகள் செய்து தரப் பட்டுள்ளன.

XXII. தனியார் மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவி.

தனிப்பட்ட மன்றங்கள், சங்கங்கள், கழகங்கள், சமயத் தொண்டு (மிஷினரி) மன்றங்கள் போன்றவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள மருத்துவ நிறுவனங்களுக்கு மானிய உதவிகள் வழங்கப் படுகின்றன. பின்வரும் பல்வகைப்பட்ட மானியங்களும் இம் மாநிலத்தில் வழங்கப்படுகின்றன :—

(i) தனியார் தொழுநோய் மருத்துவ நிறுவனங்களுக்கு தலைவீத மானியங்கள் (Capitation grants) அளித்தல்.

தொழு நோயாளி ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 25 வீதமும், தொழு நோயாளியைச் சார்ந்துள்ள உடல்நல முள்ள குழந்தை ஒவ்வொன்றுக்கும் திங்களொன்றுக்கு ரூ. 12 வீதமும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. தொற்றும் தன்மையுடைய தொழு நோயுற்ற நோயாளிகளுக்கும் தொழுநோய் குணமாகி உறுப்புகளைச் செவ்வையான வடிவம் பெறுவதற்காக அறுவைச் சிகிச்சை பெற்றுவரும் தொழுநோயாளிகளுக்கும்

மற்றும் வெப்ப மண்டல நாடுகளில் கால்விரல்களில் காணப்படுகின்ற புண்ணோயால் (Tropicular) துன்புற்றுச் சிகிச்சை பெற அனுமதிக்கப்பட்டிருக்கும் தொழு நோய்த்தொற்றமுடைய ஆனால் தொழுநோய்ச் சார்பிலாத நோயாளிகளுக்கும் (Non Lepromatous Patients) சிகிச்சை வழங்குவதன் பொருட்டு தொழுநோய் மருத்துவ தனித்தொண்டு நிறுவனங்களுக்கு இம்மானியம் வழங்கப்படத் தக்கதாகும். இவ்வாறு, தமிழ்நாடு அரசிடமிருந்து தலைவீத மானியங்கள் பெறும் தொழுநோய் மருத்துவத் தனித்தொண்டு நிறுவனங்கள் மொத்தம் 12 உள்ளன. அவற்றுக்கு சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 5 இலட்சம் தலைவீத மானியமாக வழங்கப் பட்டு வருகிறது. இதற்காக 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 1.54 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

(ii) தனியார் மருத்துவ நிறுவனங்களுக்குப் பேணுதல் மானியங்கள்.

தகுதியுள்ள நிறுவனங்களுக்குப் பேணுதல் மானியங்கள் வழங்கப்படுகின்றன. தணிக்கை செய்யப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை அளிப்பதன் பேரிலும், இம்மானியங்கள் வழங்கப் படுவதற்காக விதிக்கப்படும் நிபந்தனைகளை நிறைவு செய்துள்ளதாக நேரிற் பார்வையிடும் அதிகாரிகள் கண்டறிந்த பின்னருமே இந்த மானியங்கள் விடுவிக்கப்படுகின்றன. தமிழ்நாடு அரசிட மிருந்து பேணுதல் மானியங்களை மொத்தம் 36 நிறுவனங்கள் பெற்று வருகின்றன. 1975-76 ஆம் ஆண்டில் மானிய உதவியாக ரூ. 23.99 இலட்சம் வழங்கப்பட்டது.

(iii) கட்டிட மானியங்கள்.

மருத்துவக் காரியங்களுக்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்கு ஒவ்வொரு பணிக்கும் ஆகின்ற மொத்த மதிப்பீட்டுச் செலவில் பாதியளவுக்குத் தனியார் நிறுவனங்களுக்கு மானியங்கள் வழங்கப் படுகின்றன. ஆனால், ஒவ்வொரு நேர்விலும் அரசு இதற்கென வரையறுக்கும் குறிப்பிட்ட உயர் அளவிற்கு உட்பட்டே இம் மானியத்தொகை வழங்கப்படும்.

1975-76ஆம் ஆண்டில் கீழ்க்காணும் இரண்டு நிறுவனங்களுக்குக் கட்டிட மானியங்கள் வழங்கப்பெற்றன.

1. வாலண்டரி ஹெல்த் சர்வீஸ் நிறுவனம், அடையாறு, சென்னை.	ரூ.	2,405.75
2. கிரசண்ட் மருத்துவமனை, சென்னை	ரூ.	45,000.00

[1977 ஆகஸ்ட் 13

1976-77 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் மூன்று நிறுவனங்களுக்குக் கட்டிட மானியங்கள் வழங்கப்பெற்றன :—

1. ஜி. குப்புசாமி நாயுடு நினைவு பெண்கள்-குழந்தைகள் மருத்துவமனை, கோயம்புத்தூர்.	ரூ. 4,90,355.00
2. வாலண்டரி ஹெல்த் சர்விஸ் நிறுவனம், அடையாறு, சென்னை.	ரூ. 2,405.50
3. குழந்தைகள் முடநீக்கு மருத்துவமனை—உடல் ஊனமுற்ற குழந்தைகள் மறுவாழ்வு நிலையம், கோயம்புத்தூர் (முன்மானியம்).	ரூ. 1,22,500.00

(iv) கருவிகள் மானியம்.

தனியார் மருத்துவ நிறுவனங்கள் கருவிகளை வாங்குவதற்கு ஆகும் செலவில் பாதி, அவற்றிற்குக் கருவிகள் மானியமாக வழங்கப்படுகிறது. நிறுவனங்கள், கருவிகளை வாங்கிய பின்னர், அவற்றை வாங்கியது தொடர்பான தணிக்கையிடப்பெற்ற கணக்கு விவர அறிக்கையை அளித்த பின்னர் அவற்றுக்கு இந்த மானியங்கள் வழங்கப்படுகின்றன. 1975-76, 1976-77 ஆம் ஆண்டுகளில், கருவிகள் மானியம் பெறுவதற்குத் தனியார் மருத்துவ நிறுவனம் எவையும் முன்வரவில்லை.

XXIII. ஹோமியோபதி.

தமிழ்நாடு 1971ஆம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவமுறை—ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டம் இம்மாநிலத்தில் 1972, மே 5 ஆம் நாளிலிருந்து செயலில் உள்ளது.

தமிழ்நாடு ஹோமியோபதி மருத்துவமுறை-ஹோமியோபதி மருத்துவர்கள் சட்டத்தின் கீழ் 'A' வகுப்பு மருத்துவர்கள் 29 பேரும், 'B' வகுப்பு மருத்துவர்கள் 11,000 பேரும் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 'C' பகுதியின் கீழ் பதிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பித்துள்ளவர்களைப் பொறுத்தமட்டில், அதாவது 4 ஆண்டுகளுக்கு மேற்பட்டும் ஆனல் 10 ஆண்டுகளுக்குக் குறைவாகவும் மருத்துவத் தொழிலை மேற்கொண்டுள்ளவர்களுக்கு ஹோமியோபதி குழு, தேர்வு ஒன்றை நடத்தியது. அதில், 2,080 பேர்கள் தகுதிபெற்றனர். அவர்களுள் 1,290 பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பிரிவின் கீழ் இன்னும் 790 பேர் பதிவு செய்யப்பட வேண்டியுள்ளனர்.

1977 ஆகஸ்ட் 13]

சென்னை மாநகரில் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி—மருத்துவமனை ஒன்று 15-9-1975-லிருந்து செயல்படத் தொடங்கியது. ஹோமியோபதி மருத்துவ முறையில் தமிழ்நாட்டில் உள்ள முதலாவது அரசினர் கல்லூரி—மருத்துவமனை இதுவேயாகும்.

1975-ல் தான் இக்கல்லூரி செயல்படத் தொடங்கியபோதிலும் 1, 2, 3, 4-வது ஆண்டு வகுப்புகள் இக்கல்லூரியில் நடத்தப்பட்டு வருகின்றன. 1975-76-ல் மாணவர்களின் எண்ணிக்கை 88 ஆகும். 1976-77 ஆம் ஆண்டில் இக்கல்லூரியில் 109 மாணவர்கள் படித்து வருகின்றனர்.

1976-77 ஆம் ஆண்டில் திண்டுக்கல்லில் ஹோமியோபதி மருந்தகம் ஒன்றைத் திறப்பதற்கும் அரசு அனுமதித்துள்ளது. இது விரைவில் செயல்படத் தொடங்கும்.

XXIV. இந்திய மருத்துவ முறை.

இந்திய மருத்துவ முறையின், குறிப்பாக தமிழ்நாடு தென் மாநிலங்களின் நாட்டு மருந்தாகிய சித்த மருத்துவ முறையின் புகழையும் பாரம்பரியத்தையும் மீண்டும் கொண்டு வருவதற்கும், ஆயுர்வேதம், யுனனி மருத்துவ முறைகளை ஊக்கப்படுத்துவதற்கும் அரசு ஆர்வம் காட்டி வருகிறது. 1970 ஆம் ஆண்டில் சென்னை அறிஞர் அண்ணா இந்திய முறை மருத்துவமனை 100 படுக்கை வசதிகளுடன் தொடங்கப்பட்டது. இம்மருத்துவமனை ஒரே வளாகத்திற்குள் சித்த, ஆயுர்வேத, யுனனி மருத்துவமுறைகளில் புறநோயாளிகளுக்கும் அகநோயாளிகளுக்கும் மருத்துவச் சிகிச்சை வசதிகளை நல்கும் சிறப்புத் தன்மை வாய்ந்ததாகும். இம்மருத்துவ மனையில் 1976, செப்டம்பரில் புதிதாக கட்டப்பட்ட வார்டில் 1976-77-ல் இன்னும் 50 படுக்கை வசதிகள் சேர்க்கப்பட்டன. 150 படுக்கைகளில், 24 படுக்கைகள், இரசாயன ஆராய்ச்சிக்காக நவீன மருத்துவ நிபுணர்களின் ஒத்துழைப்புடன் சித்த மருத்துவ முறையில் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்வதற்காகவென்றே ஒதுக்கப்பட்டுள்ளன. இம்மருத்துவ மனையுடன் மருந்தகம் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. இது, ஆயுர்வேதம், சித்த, யுனனி ஆகிய மூன்று மருத்துவ முறைகளில் மருத்துவமனையிலுள்ள 150 படுக்கைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. சித்த மருந்தகங்களும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன. இம்மருந்தகத்தின் ஆண்டு உற்பத்தி சுமார் ரூபாய் 5.00 இலட்சமாகும்.

100 படுக்கை வசதிகளைக் கொண்ட மருத்துவமனை ஒன்று, பாளையங்கோட்டை தரம் உயர்த்தப்பட்ட இந்திய மருத்துவ முறைக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இங்கு இந்திய மருத்துவத் துறையின்கீழ் சித்த மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

[1977 ஆகஸ்ட் 13

இக்கல்லூரியில் சித்த மருத்துவ முறையில் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் பட்டமேற்படிப்பு மாணவர்களுக்கும் போதனை வசதிகளுக்கு வகைசெய்யப்பட்டுள்ளது. கூடுதலாக 100 படுக்கைகளுக்கேற்ற இடவசதியைக் கொண்டுள்ள கட்டிடம் ஒன்றும் ரூபாய் 5.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. கூடுதலாக 100 படுக்கை வசதிகளைக் கொண்ட தொகுதி, தோக்கானம் (இயற்கை முறை மருத்துவம்), வர்மம், யோகா, இயற்கை முறையில் சிகிச்சை அளித்தல் ஆகிய சிறப்புப் பிரிவுகளுடன் விரைவில் செயல்படத் தொடங்கும். இம்மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ள மருந்தகம், மருத்துவ மனைக்கு வருகின்ற நோயாளிகளின் தேவையை நிறைவு செய்வதற்காகவும், இந்திய மருத்துவ முறை அரசினர் கல்லூரி மாணவர்கள், மருந்துகளைத் தயாரிக்கும் நடைமுறைப் பயிற்சிக்கு வசதிகளைச் செய்து தருவதற்காகவும் சித்த முறை மருந்துகளைத் தயாரிக்கிறது.

(i) சித்த மருத்துவப் பிரிவுகள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் பொதுமக்களிடையே சிறப்பாக கிராம மக்களிடையே இந்திய மருத்துவ முறையைப் பிரபலப்படுத்தும் நோக்கத்துடன், 13 மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், 10 வட்டத் தலைமையிட மருத்துவமனைகள், வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அல்லாத மருத்துவமனைகளிலும் சித்த மருத்துவப் பிரிவுகளை அரசு ஏற்படுத்தியது. ஐந்தாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், கீழ்க்காணும் எண்ணிக்கையுள்ள சித்தப் பிரிவுகள், வட்ட மருந்துவ மனைகளிலும், வட்ட மருத்துவமனை அல்லாத மருத்துவமனைகளிலும் செயல்பட்டு வருகின்றன :—

1974–75 ..	..	16 சித்த மருத்துவப் பிரிவுகள்.
1975–76 ..	..	15 சித்த மருத்துவப் பிரிவுகள்.
1976–77 ..	..	5 சித்த மருத்துவப் பிரிவுகள்.

1977–78-ல் இன்னும் 4 சித்த மருத்துவப் பிரிவுகள் அமைக்கக் கருதப்பட்டுள்ளன. இம்மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் சித்த மருத்துவ முறையில் நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க 5 அல்லது 10 படுக்கை வசதிகள் செய்து தரப்பட வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது.

(ii) அரசு மருந்தகங்கள்.

இம்மாநிலத்தில் இந்திய மருத்துவ முறையில் கீழ்க்காணும் அரசு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன :—

சென்னை மாநகரம்	..	சித்தமருத்துவம்	..	4
மாவட்டங்கள்	..	சித்தமருத்துவம்	..	3
		ஆயுர்வேதம்	..	5
				12

1977 ஆகஸ்ட் 13]

மேற்சொன்னவற்றைத் தவிர, நகராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் இந்திய மருத்துவமுறை மருந்தகங்களை நடத்துகின்றன. சென்னை, இந்திய மருத்துவ மத்தியக் குழுவில் பதிவு செய்யப்பட்ட பாரம்பரியப்படியும், மரபியல்படியும், பாரம்பரிய/மரபியல் பயிற்சி பெற்ற மருத்துவர்களால் இம்மருந்தகங்களில் பெரும்பாலானவை நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இந்த மருத்துவர்கள் கிராம வைத்தியர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். உதவித் தொகை பெறும் மருந்தகங்களின் நிர்வாகச் செலவில் பாதித் தொகையை ஏற்பதற்காக அந்த மருந்தகங்களைப் பொறுத்த மட்டில் மருத்துவர்களுக்கு தமிழ்நாடு அரசு உதவித் தொகைகளை வழங்குகிறது. இந்திய மருத்துவமுறை மருத்துவமனைகள், மருந்தகங்களின் எண்ணிக்கை VI விவர அட்டவணையில் தொகுக்கப்பட்டுள்ளது.

(iii) மூலிகைச் செடிப் பண்ணை.

சென்னையிலும் பாளையங்கோட்டையிலும் ஒவ்வொரு மருத்துவமனையுடனும் மூலிகைச் செடிப் பண்ணை ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

ஐந்தாவது திட்டக் காலத்தின் முதலாவது ஆண்டில் மூலிகைச் செடிகளைப் பயிரிடுவதற்காக, கன்னியாகுமரி மாவட்டம், மஹேந்தரகிரி குன்றுகளின் உயரமான பகுதியிலுள்ள வீரப்புலி சேமக் காப்பு வனத்தில் 5 ஹெக்டேர் பரப்பில் மூலிகைச் செடி பண்ணை ஒன்றை அமைக்க தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது. தொழிலாளர் குடியிருப்புகள் தேவைப்படுவதாலும், போக்குவரத்து வசதிகள் முதலியவற்றுக்கு வகை செய்யப்பட வேண்டியிருப்பதாலும் இத்திட்டத்தை உடனடியாகச் செயற்படுத்த இயலாது.

(iv) மருந்தகங்கள்.

சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் வளாகத்தில் இதுவரையில் செயல்பட்டு வந்த சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை அரசினர் மருத்துவ மனையுடன் இணைந்த இந்த மருந்தகம் அவ்விடத்திலிருந்து மாற்றப்பட்டு, சென்னை அறிஞர் அண்ணா இந்தியமுறை மருத்துவமனையின் வளாகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட மருந்தகக் கட்டிடத்தில் இடம் அளிக்கப்பட்டது. ஆயுர்வேத, சித்த, யூனானி ஆகிய மூன்று முறை மருத்துவத்தில் 150 படுக்கை வசதிகளைக் கொண்ட மருத்துவமனைத் தேவைகளையும், அதனுடன் இணைக்கப்பட்ட சித்த முறை மருந்தகங்களின் தேவைகளையும் பூர்த்தி செய்ய இந்த மருந்தகம் வழி வகை செய்கிறது. இந்த மருந்தகத்திற்காகும் ஆண்டுச் செலவு

சுமார் ரூபாய் 5.00 இலட்சம் ஆகிறது. மத்திய நிதியுதவியுடனும் நவீன இயந்திரங்கள் மற்றும் சாதனங்களைக் கொண்டும் இந்த மருந்தகத்தை இயந்திரமயமாக்குவதன் மூலம் அதிகரித்து வருகின்ற மருந்துத் தேவைகளை படிப்படியாக பூர்த்தி செய்யும் பொருட்டு, மருந்துகளை விரைவில் தயாரிக்கும் முறைகள் குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

(v) மருத்துவக் கல்லூரி.

பாளையங்கோட்டை, இந்திய முறை அரசினர் மருத்துவக் கல்லூரி 1964-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இக்கல்லூரியில், மதுரை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஐந்து ஆண்டு B.I.M. (சித்தா) பட்டப் பாடமுறை கற்பிக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு இப்பாட முறையில் 40 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் படுகின்றனர். (அவர்களில், பயிற்சி உதவி தொகையை பெறுபவர்கள் 30 பேர் ஆவர்; பயிற்சி உதவித் தொகையைப் பெறுதவர்கள் 10 பேர் ஆவர்.) மாணவர்களுக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 75 படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்தொகை, கல்வியாண்டின் 9 திங்களுக்கு அளிக்கப்படுகிறது.

சித்தர் மருத்துவம் (மருந்து), சித்த குணபாடம் (மெட்பீரியா மெடிகா) ஆகிய இந்திய முறை அரசினர் மருத்துவக் கல்லூரியுடன் சேர்ந்த இரண்டு பட்டப்படிப்புத் துறைகளை, பட்ட மேற்படிப்பு கல்வி கற்பிக்கின்ற துறையாகவும், ஆராய்ச்சி நடத்தும் துறையாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன; இவை, இந்திய அரசு முழு நிதியுதவிப் பெற்று செயல்படுகின்ற மத்திய அரசு ஆதரவுப் பெற்றத் திட்டமாகும். ஒவ்வொரு துறையிலும் 10 மாணவர்கள் என்ற வீதத்தில் ஆண்டொன்றுக்கு 20 மாணவர்கள் மூன்றாண்டு பட்ட மேற்படிப்பு M.D. சித்த முறை மருத்துவப் பாடமுறையில் இடம் பெறுகின்றனர். இந்த பட்ட மேற்படிப்பு படிக்கின்ற மாணவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 200 படிப்புதவித் தொகை பெறுகின்றனர்.

ஆயுர்வேத, யூனானி முறைகளைப் பொறுத்தவரையில், யூனானி முறை அரசினர் மருத்துவக் கல்லூரி ஒன்றினையும் ஆயுர்வேதமுறை அரசினர் மருத்துவக் கல்லூரி ஒன்றினையும் அமைக்க தேவையான தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதன் தொடர்பில், பாடத் திட்டங்கள், பாடமுறை முதலியனவற்றைக் குறித்து பரிசீலனை செய்ய சென்னை பல்கலைக் கழகம் ஆய்வுக் குழு ஒன்றினையும் அமைத்துள்ளது; இந்த மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்குவதற்குத் தேவையான தொடக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. தென்னிந்திய யூனானி சங்கம், வேங்கடரமணா ஆயுர்வேத டிரஸ்ட் ஆகியவை இதற்குத்தேவையான நன்கொடை நிலம் முதலியவற்றை வழங்க முன் வந்துள்ளன.

ஆயுர்வேத, சித்த, யூனானி ஆகிய மூன்று முறை மருத்துவத்திலுள்ள மருந்தகங்களில் இரண்டாண்டு பட்டய பாடமுறை, 1974—75ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. பாளையங்கோட்டை, இந்திய முறை அரசினர் சித்தமுறை மருத்துவக் கல்லூரியில் 8 மாணவர்கள், சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை அரசினர் மருத்துவமனையில், சித்தமுறை மருத்துவத்திற்காக 7 மாணவர்கள், ஆயுர்வேத முறை மருத்துவத்திற்காக 5 மாணவர்கள், யூனானி முறை மருத்துவத்திற்காக 5 மாணவர்கள், ஆக ஒவ்வொரு ஆண்டும் வழக்கமாக 25 மாணவர்கள் இப்பாட முறையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். 1975—76, 1976—77 ஆகிய ஆண்டுகளில், ஒவ்வொரு ஆண்டிலும் மேலும் 15 மாணவர்கள் சித்தமுறை மருத்துவப் பாடமுறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர்; இம்மாணவர்கள் பயிற்சி உதவித் தொகையைப் பெறுதவர்களாவர். இப்பாட முறையைப் மேற்கொண்டு படிப்பதற்காக இப்பாட முறையில் சேர்ந்துள்ள மாணவர்கள், திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 30 படிப்புதவித் தொகையைப் பெறுவர். பாளையங்கோட்டை, இந்திய முறை அரசினர் மருத்துவக் கல்லூரியிலும், சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறை அரசினர் மருத்துவ மனையிலும் நடத்தப்பட்டு வருகின்ற பாடமுறைகளின் விவரங்கள், விவர அறிக்கை vii-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

(vi) ஆராய்ச்சி.

புது டில்லியிலுள்ள இந்திய முறை மருத்துவ ஆராய்ச்சிக்குழு, சென்னை மாநகரில் கீழ்க்காணப்பெறும் ஆராய்ச்சிப் பிரிவுகளை அமைத்துள்ளது. இந்திய ஆராய்ச்சி பிரிவுகளில், இடவசதி, படுக்கை வசதி முதலியவற்றை மாநில அரசு செய்து கொடுத்துள்ளது. ஆராய்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான ஏனைய செலவுகள் அனைத்தையும், இந்திய முறை மருத்துவம்—ஹோமியோபதி ஆராய்ச்சிக்கான மத்தியக் குழு ஏற்கிறது.

(i) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவ மனையில் ஆயுர்வேத, சித்த, யூனானி ஆகிய மருத்துவ முறைகளிலுள்ள மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவுகள்;

(ii) சென்னை, அறிஞர் அண்ணா அரசினர் மருத்துவமனையில் உள்ள மத்திய ஆராய்ச்சி சித்த முறை மருத்துவ நிறுவனம்;

(iii) கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆராய்ச்சி நிலையம்;

(iv) புதுடில்லியிலுள்ள இந்திய முறை மருத்துவம்—ஹோமியோபதி ஆராய்ச்சிக்கான மத்திய குழுவின்கீழ் உள்ள மூலிகைச் செடி பிரிவு (சித்தா) குறித்த ஆய்வு, சித்த மருத்துவ நூல்கள் ஆராய்ச்சிப் பிரிவு குறித்த ஆய்வு ஆகிய இரண்டு ஆராய்ச்சிப் பிரிவுகள், பாளையங்கோட்டையிலுள்ள இந்திய முறை அரசினர் மருத்துவக் கல்லூரியில் செயல்பட்டு வருகின்றன.

[1976 ஆகஸ்ட் 13

(vii) சித்த அறிவியல் மேம்பாட்டுக் குழு.

சித்த அறிவியல் மேம்பாட்டுக்குழு 1973ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. பனை ஓலைச் சுவடிகள், கையேட்டுப் பிரதிகள், மிக அரிதாக அச்சிடப்பட்ட புத்தகங்கள் ஆகியவற்றைத் திரட்டுதல், மற்றும் சித்த மருத்துவ நூல்கள் B.I.M. & M.D. (சித்தா) பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்பிற்குரிய சித்த பாடப் புத்தகங்களை அச்சிட்டு வெளியிடுதல் ஆகியவை இக்குழுவின் பொறுப்பாகிறது. இந்திய முறை மருத்துவ இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள இக்குழு, தனி அதிகாரி நிர்வாகத்தின் கீழ் செயல்படுகிறது. அண்மையில், இக்குழு மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

(viii) இயற்கை முறை மருத்துவம் (நாசுகோபதி).

இயற்கை முறை மருத்துவம் நோய் சிகிச்சைக்கென ஏற்பளிக்கப்பட்டிருந்ததொரு மருத்துவ முறையாகும். இயற்கைமுறை மருத்துவம் மக்களிடையே பரவச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு ஆலோசனை நல்க, கீழ்க்காணப்பெறும் நபர்கள் அடங்கிய ஆலோசனைக் குழு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

திரு. கே. அருணாசலம்	..	..	..	தலைவர்.
திரு. கணேச ஷர்மா	..	..	..	உறுப்பினர்.
டாக்டர் (திருமதி) இராஜலட்சுமி			..	உறுப்பினர் செயலாளர்.

ஆலோசனைக் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இக்குழு பரிந்துரைகளைப் பெறுவதன் பேரில், இயற்கை முறை மருத்துவம் மக்களிடையே பரவச் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மீண்டும் மேற்கொள்ள வேண்டும்.

"யோகா' முறை".

யோகா முறை மருத்துவம், நோய் சிகிச்சைக்கென ஏற்பளிக்கப்பட்டதொரு மருத்துவ முறையாகும். கீழே கொடுக்கப்பட்டுள்ள கருத்துக்களைக் குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க, யோகா தொடக்கக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது.

1. யோகா முறை ஒரு சிகிச்சை முறையாக அங்கீகரிக்கப்படலாமா ;

2. அந்த சிகிச்சை முறையின் நோக்கங்களையும் கருத்துக்களையும் விவரித்தல் ;

3. தனியார் யோகா பயிற்சி நிறுவனத்திற்கு கொடுக்கப்படுகின்ற அரசு மானியத்திற்கான நிபந்தனைகளை வரையறுத்தல்;

யோகா முறை, நோய் சிகிச்சைக்கென ஏற்பளிக்கப்பட்டதொரு மருத்துவ முறை என்ற பிரச்னைக் குறித்த அறிக்கையைப் பெறுவதன்மேல், அப்பிரச்னை மேற்கொள்ளப்படும். அதற்கிடையில் மேற்கூறிய நிறுவனங்களை நடத்துவதில் ஏற்படுகின்ற பற்றுக்

1977 ஆகஸ்ட் 13]

குறையை, அதில் பங்குக் கொள்ளும் ஏனைய மாநில அரசுகளுடன் சரிசம அடிப்படையில் இந்த அரசு ஏற்குமென்ற உடன்பாட்டின் மேல், திருப்பதியிலுள்ள இந்திய யோகா—துணை அறிவியல்கள் குறித்த ஆராய்ச்சி நிறுவனத்திற்கு உதவி மானியம் வழங்க இம் மாநில அரசு ஒத்துக்கொண்டுள்ளது. எனினும், முதற்கண் சிகிச்சைக்காகும் செலவினை சரிக்கட்டும்பொருட்டு, 1976–77 ஆம் ஆண்டிற்கு முன் மானிய உதவியாகிய ரூபாய் 3 இலட்சம் ஒதுக்க இந்த அரசு அனுமதி வழங்கியுள்ளது.

XXV. குடும்ப நலத் திட்டம்.

1967 ஆம் ஆண்டிலிருந்து படிப்படியாக குடும்ப நலத் திட்டத்தை தமிழ்நாடு செயல்படுத்தி வருகிறது. இம் மாநிலம் ஒவ்வொரு ஆண்டும் தன்னுடைய திட்ட இலக்கை எய்தியுள்ளது. இம்மாநிலம் அடுத்தடுத்த ஆண்டுகளில் பல பரிசுகளையும் வென்றுள்ளது. கடந்த இரண்டு பத்தாண்டுகளில் அதாவது 1951 முதல் 1961 வரையிலும் மற்றும் 1961 முதல் 1971 வரையிலும் இந்தியா முழுவதும் காணப்படுகின்ற மக்கள் தொகை அதிகரிப்பைக் காட்டிலும் தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு வீதம் குறைவாகவுள்ளது. தமிழ்நாட்டில் மக்கள் தொகை அதிகரிப்பு குறைவாக இருந்ததற்கு முக்கிய காரணங்களில் ஒன்று குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டதன் விளைவேயாகும். கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் 25 இலட்சம் கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டுள்ளன. அனைத்திந்திய பிறப்பு வீதம் ஆயிரத்துக்கு 37 என்றிருக்க, தமிழ்நாடு அரசின் தீவிர முயற்சியின் காரணமாக 1975–76 ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, தமிழ்நாட்டின் பிறப்பு வீதம் ஆயிரத்துக்கு 29 என்ற அளவுக்கு சற்று குறைந்துள்ளது.

ஐந்து லட்சம் கருத்தடை அறுவை சிகிச்சை என்னும் இலக்குக்கெதிராக 1976-77ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 5,69,756 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் (3,80,429 வாசக்டமி, 1,89,327 டியூபெக்டமி) செய்யப்பட்டுள்ளன. 1977–78-ஆம் ஆண்டில் 3,50,000 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் என்னும் இலக்கை இந்திய அரசு வரையறுத்துள்ளது.

(I.U.D.) கருத்தடை வளையங்கள்.

(Conventional Contraceptive Users.)

கடந்த ஆண்டில் 35,500 என்னும் இலக்குக்கெதிராக, 1977–78 ஆம் ஆண்டில், 71,100 கருத்தடை வளையங்கள் பொருத்துதல் என்னும் இலக்கை இந்திய அரசு வரையறுத்துள்ளது.

[1977 ஆகஸ்ட் 13

கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்தியவர்கள்.

கடந்த ஆண்டில் 1,47,500 பேர் என்னும் இலக்குக்கெதிராக, 1977–78 ஆம் ஆண்டில் வழக்கமான கருத்தடைச் சாதனங்களை பயன்படுத்துபவர்கள் 2,21,800 பேர் என்ற இலக்கை இந்திய அரசு வரையறுத்துள்ளது.

குடும்ப நலத் திட்டத்தின் பல்வேறு முறைகளின் கீழுள்ள இலக்கு, மாவட்ட இலக்குகளாகப் பிரிக்கப்பட்டு, இது குறித்து, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. வலுக்கட்டாய முறையில் அல்லது கட்டாய முறையில் மேற்கொள்ளாமல் நயந்து கேட்பதன் மூலமும், ஊக்குவிப்பதன் மூலமும் இந்த இலக்கினை எய்துமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

உயிருடன் இருக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை என்னவாகயிருப்பினும், டியூபெக்டமி அறுவைச் சிகிச்சைக்காக 120 ரூபாய், வாசக்டமி அறுவைச் சிகிச்சைக்காக 100 ரூபாய் என்ற ஒரே மாதிரியான இழப்பீட்டுத் தொகையை வழங்க, இந்திய அரசு, 1977-78 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கியுள்ளது. எனினும் மாநில அரசு ஒவ்வொரு டியூபெக்டமி வாசக்டமி அறுவைச் சிகிச்சைக்கும் முறையே ரூ. 10, ரூ.5 என்ற கூடுதல் இழப்பீட்டுத் தொகையை வழங்கக் கருதியுள்ளது. இதன் காரணமாக, மாநில அரசுக்கு ரூ. 53 இலட்சம் கூடுதல் செலவாகும்.

கருத்தடை அறுவை சிகிச்சையை மேற்கொள்கின்ற மாநில அரசு ஊழியர்கள், உள்ளாட்சி மன்ற ஊழியர்கள் ஆகியோர்களுக்கு இந்த இழப்பீட்டுத் தொகையுடன் சேர்க்காலும் சில ஊக்கத் திட்டங்களை இம்மாநில அரசு வழங்குகிறது :—

(1) கருத்தடை அறுவைச் சிகிச்சையை மேற்கொள்கின்ற அரசு ஆண் ஊழியர்களுக்கு 8 நாட்களுக்கு மேற்படாத சிறப்பு தற்செயல் விடுப்பு ;

(2) கருத்தடை அறுவைச் சிகிச்சையை மேற்கொள்கின்ற (Non-puerpheral sterilisation) அரசு பெண் ஊழியர்களுக்கு (மணமானவர்) 20 நாட்களுக்கு மேற்படாமல் சிறப்பு தற்செயல் விடுப்பு ;

(3) அரசு ஊழியர் ஒருவருக்கு, அவர் மனைவி கருத்தடை அறுவைச் சிகிச்சையை (Non-puerpheral Puerpheral sterilisation) மேற்கொண்டு அந்த அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் குணமாகும் காலங்களில் அவரைக் கவனிக்கும் பொருட்டு. 7 நாட்களுக்கு மேற்படாமல் சிறப்பு தற்செயல் விடுப்பு ;

(4) கருத்தடை வளையம் பொருத்திக் கொள்ளும் நாளில் அரசு பெண் ஊழியர்களுக்கு ஒருநாள் சிறப்பு தற்செயல் விடுப்பு;

(5) இரண்டாவது முறையாக வாசக்டமி அறுவைச் சிகிச்சையை மேற்கொள்கின்றவர்களுக்கு [illegible] நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு ;

1977 ஆகஸ்ட் 13]

(6) இரண்டாவது முறையாக டியூபெக்டமி அறுவைச் சிகிச்சையை மேற்கொள்கின்றவர்களுக்கு 14 நாட்கள் சிறப்பு தற்செயல் விடுப்பு ;

(7) உயிருடன் மூன்று குழந்தைகள் அல்லது அதற்குக் குறைவாகவுள்ளவர்கள் கருத்தடை அறுவைச் சிகிச்சையை மேற்கொண்டால் அவருக்கு முன்கூட்டியே ஒரு உயர்வுப்படி அளித்தல். இது 1—4—1976 ஆம் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

பேறு காலத்திற்குப் பின் செய்யும் கருத்தடை அறுவை சிகிச்சைத் திட்டம் (Post-partum Programme).

பெரிய மகப்பேறு மருத்துவ மனைகளில் மகப்பேற்றுக்காக பெண்கள் சேர்த்துக் கொள்ளப்படும்போது, குடும்பநலத் திட்ட நடவடிக்கைகளைத் தொடங்கித் தீவிரப்படுத்துவது இத்திட்டத்தின் நோக்கமாகும். மகப்பேறு காலத்திலும் மகப்பேறுக்குப்பின் 4 முதல் 6 வாரங்கள் வரையிலும் அறிவுரைத்து, கருத்தடை அறுவை சிகிச்சை செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். இம்மாநிலத்தில் 24 மருத்துவமனைகளில் (22 அரசு மருத்துவ மனைகள், 2 தனியார் மருத்துவமனைகள்) பேறுகாலத்திற்குப் பின் செய்யும் கருத்தடை அறுவைச் சிகிச்சைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பயிற்சி.

தமிழ் நாட்டில் மூன்று சுகாதார-குடும்ப நலப் பயிற்சி நிலையங்கள் உள்ளன. (அரசின் கீழ் இரண்டு பயிற்சி நிலையங்களும், தனியார் நிர்வாகத்தின்கீழ் அரசின் மானிய உதவியுடன் மதுரை மாவட்டம், காந்தி கிராமத்தில் ஒரு பயிற்சி நிலையமும் உள்ளன.)

தமிழ் நாட்டிலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் மறு பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டன.

கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைத்தல்.

கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைத்தல் அண்மையில் சட்டம் இயற்றப்பட்டதாகும். கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைத்தல் சட்டம் செயலுக்கு வந்ததற்கு முன்னர் அதாவது 1—4—1972 ஆம் நாளுக்கு முன்னர் தமிழ்நாட்டிலும் ஏனைய மாநிலங்களிலும் சட்ட சம்பந்தமில்லாமல் ஆயிரக்கணக்கான கருக் கலைப்புகள் நடத்தப்பட்டன. தற்போது கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைப்பது இம்மாநிலத்தில் 84 மருத்துவ நிலையங்களில் நடத்தப்பட்டு வருகிறது. இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து (அதாவது 1972–73) 1977 மே மாத இறுதிவரை 84,446 கருக் கலைப்புகள் நடத்தப்பட்டுள்ளன.

விந்து குழாய் இணைப்பு அறுவை சிகிச்சை (Recanalisation Operation).

இம்மாநிலத்தில் ஒருசில மருத்துவ மனைகளில் ஏற்கெனவே, அறுவை சிகிச்சை செய்துகொண்ட தந்தைமார்களுக்கு விந்து குழாய் இணைப்பு சிகிச்சை செய்யும் வசதிகள் கிடைக்கின்றன. அரசு மருத்துவ மனைகளில் விந்து குழாய் இணைப்பு அறுவை சிகிச்சையை மேற்கொள்ள விழையும் தந்தைமார்களுக்கு இது தொடர்பான செலவுகள், பயணப்படி போன்றவைகளுக்காக ரூ. 100 வழங்கப்படுகிறது. 31—5—1977 ஆம் நாள் வரை அறுவை சிகிச்சை செய்துகொண்ட தந்தைமார்களுக்கு செய்யப்பட்ட விந்து குழாய் இணைப்பு அறுவை சிகிச்சையின் எண்ணிக்கை 319 (தற்காலிகமாக) ஆகும்.

பெருவாரியான மக்களுக்கு குடும்பநலத் திட்டம் அறிவுறுத்துதல்.

மாநில குடும்ப நலக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவப் பணிகள்—குடும்ப நலத் துறைத் துணை இயக்குநர், பெருவாரியான மக்களுக்கு குடும்ப நலத் திட்டம் பற்றி அறிவுறுத்தல், தகவல் அளித்தல் ஆகிய பணிகளுக்கு பொறுப்பு வகிக்கிறார்; அவருக்கு பிரச்சாரப் பணியாளர்கள், ஏனையோர் உதவி புரிகின்றனர்.

பொது மக்களுக்கு குடும்ப நலத் திட்டம் பற்றிய, கல்வி புகட்டி, தகுதியுடைய தம்பதியர்களை குடும்ப நல முறைகளில் ஒன்றைக் கடைப்பிடிக்குமாறு முறைப்படுத்துவது அலுவலர்களது கடமையாகும். குடும்ப நலத் திட்டம் பல்வேறு வாயில்கள் மூலமாக விளம்பரம் செய்யப்படுகின்றது. கூட்டங்கள், சுவரொட்டிகள், நாடகங்கள், பாடல்கள், வில்லுப்பாட்டு, விளம்பரத் தகடுகள், பேருந்து விளம்பரப் பலகைகள், திரைப்படங்கள், ஆல்-இந்தியா ரேடியோவின் ஒலிபரப்பு, செய்தித்தாள்களிலுள்ள விளம்பரங்கள், பத்திரிகைகள், பொருட்காட்சி, திரைப்பட ஸ்லைடுகள் முதலியவையாகும். 1973–74 முதல் 1976–77 வரையிலான ஆண்டுகளில் ஏற்பட்ட நிதித் தட்டுப்பாட்டின் காரணமாக பொது மக்கள் குடும்ப நலத் திட்டத் தொடர்பான நிகழ்ச்சிகள் ஓரளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டன.

குடும்ப நல அறுவை சிகிச்சை முறைகளை விளம்பரப்படுத்துவதற்கான மும்முரத் திட்டங்கள்

மேற்கூறிய திட்டத்தின்கீழ், சில ஒரேமாதிரியான, தரத்தின்படி ஒத்தியல்கின்ற, தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற சில தனிப்பட்ட, குடும்ப நல அறுவை சிகிச்சைகள் மருத்துவப் பணிகள்—குடும்ப நல இயக்குநரின் ஒப்புதலைப் பெற்றுள்ளது. குடும்ப நல அறுவை சிகிச்சை செய்துகொண்ட தந்தையர்க்கும், அன்னையர்க்கும் ஈட்டுப்படி கொடுக்கப்படுகின்றது. தனியார்

நிறுவனங்களின் மூலம், களப்பணியாளர்களுக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட ஊதிய அளவில் மதிப்பூதியமும், மாநில நிதியிலிருந்து வழங்கப்படுகின்றது.

உள்ளாட்சி மன்றங்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் மானியம்

நகர்ப்புற நிலையங்கள், கிராமப்புற நிலையங்கள், மாநகரக் குடும்ப நலக் கழகம், மாவட்டக் குடும்ப நலக் கழகம், பிராந்திய குடும்ப நலப் பயிற்சிநிலையம், பேறு காலத்திற்குப் பின் செய்யும் கருத்தடை அறுவை சிகிச்சை செய்யும் நிலையங்கள், கருத்தடை செய்து கொள்வதற்கென்று அமைக்கப்பட்ட படுக்கைகள் முதலியவற்றைப் பராமரிக்கும் பொருட்டு, இந்திய அரசு கொடுத்துள்ள முறைப்படி உள்ளாட்சி மன்றங்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் மானியம் வழங்கப்படுகின்றது. 1974–75, 1975–76, 1976–77 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 23 லட்சம், ரூ. 18.42 லட்சம், ரூ. 41.05 லட்சம் மதிப்புள்ள மானியத் தொகை உள்ளாட்சி மன்றங்களுக்கும், தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. 1977–78ஆம் ஆண்டிற்காக ரூ. 23.44 லட்சம், பல்வேறு திட்டங்களுக்கான உதவி மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கட்டிடங்கள்.—374 கிராமப்புற குடும்ப நலத் திட்ட நிலையங்களுக்காகக் குடும்ப நலக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், செவிலியர் குடியிருப்புகள் அமைப்பதற்கும், மொத்தச் செலவாக ரூ. 344.83 லட்சத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 1,395 துணை நிலையங்களுக்கும் மொத்தச் செலவாக ரூ.1,74.69 லட்சத்திற்கு ஒப்பளிப்புக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், நிதிப் பற்றாக்குறையின் காரணமாக, வழங்கப்படுகின்ற நிதியின் அளவைப் பொறுத்து பணிகள் குறைத்துக் கொள்ளப்பட்டு அவை மெதுவாகச் செயலாக்கப்படுகின்றன.

வரவு-செலவுத் திட்டமும் செலவும்.—ஐந்தாவது திட்ட மூலதனத்தில், குடும்ப நலத் திட்டத்திற்கென்று, தற்காலிகமாகத் தமிழக அரசினால் நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 37,00.00 லட்சமாகும். இதுவரையில், இந்திய அரசு, குடும்ப நலத் திட்ட செலவிற்காக ரூ. 10,07.66 லட்சம் அளிப்பதற்கு இசைவாணை பிறப்பித்துள்ளது. இவையன்றி, மகப்பேறு-குழந்தை நலனுக்காக அளிக்கப்பட்ட மருத்துவ வசதிகளுக்காகவும், 1976–77 ஆம் ஆண்டில் ரூ. 42.20 லட்சம் மதிப்புள்ள கருத்தடைச் சாதனங்கள் தயாரிக்கப்பட்டதற்காகவும், இந்திய அரசினால் இசைவாணை அளிக்கப்பட்டுள்ளது. இம்மாநிலத்தில், குடும்ப நலத் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, இந்திய அரசு, 1977–78 ஆம் ஆண்டிற்காக, மொத்தத் தொகையாக ரூ. 5,78.87 லட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. 1977–78 ஆம் ஆண்டிற்கான மாநில வரவு-செலவுத் திட்டத்தில் குடும்ப நலத் திட்டத்திற்காக, ரூ. 10,55.42 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1977–78 ஆம் ஆண்டிற்கான பல செயற் திட்டங்களை வகுத்துள்ளது. அவையாவன :—

(1) சுகாதார-குடும்ப நலப் பயிற்சி நிலையத்தில் பலதிறப் பணியாளர்கள் பயிற்சிப் படிப்பைத் தொடருவதற்குத் திட்டமிட்டுள்ளது.

(2) எஞ்சியுள்ள கிராமக் குடும்ப நல நிலையங்களுக்கும் துணை நிலையங்களுக்கும் (நான்காவது திட்டக் காலத்தில் ஏற்கனவே மேற் கொள்ளப்பட்டது) கட்டிடங்கள் கட்டும் பணியை முடித்தல்.

(3) தாய்மை-குழந்தை நலத் திட்டத்தின் கீழ் தொற்று நோய் விலக்கத் திட்டத்தையும், நோய் தடுப்புத் திட்டத்தையும் மும்முரமாக்குதல்.

(4) மேலும் சில, தொடக்க நிலைக் குடும்ப நல நிலையங்களிலும், தொண்டு நிறுவனங்களிலும் கருத்தடை வளையங்கள் (I.U.D.) திட்டத்தை விரிவாக்குதல்.

(5) மேலும் பல நிலையங்களில், கருத்தடை மாத்திரைகள் வழங்கும் திட்டத்தையும் கருவுற்றிருத்தலை மருத்துவ ரீதியில் சிதைப்பதற்கான பயிற்சியையும் மீண்டும் தொடங்குதல்.

(6) தனிப்பட்ட தாய்களுக்குப் பயிற்சியளித்தல்—6,000.

(7) சில வட்ட (Taluk) நிலையில் அமைந்த மருத்துவ மனைகளில் மகப்பேறு நிகழ்ந்தபின் அறுவை சிகிச்சை செய்யும் திட்டத்தைச் செயற்படுத்துதல்.

(8) மாவட்டக் குடும்ப நலக் கழகம், கிராமப்புற குடும்ப நல நிலையங்கள், துணை நிலையங்கள், நகர்ப்புற குடும்ப நலப் பயிற்சி நிலையங்கள், பொது மக்கள் மருத்துவக் கல்வி, பயிற்சித் திட்டங்கள்—உள்ளாட்சி மன்றங்கள், தொண்டு நிறுவனங்களுக்கு மானிய உதவித் தொகை வழங்குதல் முதலிய தற்போதுள்ள குடும்ப நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயலாக்குதல்.

விவர அறிக்கை—I

மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்படும் பட்ட மேற்படிப்பு பாடப் பிரிவுகள், தகுதிப் பட்டியல், பாடப் பிரிவுகள் ஆகியன குறித்த பட்டியல்.

பாடப் பிரிவின் பெயர்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. சென்னை மருத்துவக் கல்லூரி.	ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி.	மதுரை மருத்துவக் கல்லூரி.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.
(1)	(2)	(3)	(4)	(5)
எம்.டி. பொது மருந்தியல் ..	21	20	18	5
எம்.எஸ். (பொது அறுவை சிகிச்சை.) ..	21	20	18	3
எம்.டி. (நோய் அறிவியல்) ..	4	..	2	..
எம்.டி. (நுண் உயிரியல்) ..	6	..	2	..
எம்.டி. (மகப்பேறு மருந்துவயியல்)	8	4	5	..
எம்.டி. (உடல் அமைப்பியல்) ..	4	4	4	..
எம்.டி. (சமூக தடுப்பு மருத்துவம்)	1	..	..	..
எம்.டி. (மருந்தாக்கி இயல்) ..	4	4	4	..
எம்.டி. (குற்றம் சார்ந்த மருந்தியல்). ..	2	..	2	..
எம்.டி. (குழந்தை நோய் மருந்தியல்.) ..	17	..	4	..
எம்.டி. (உளநோய் மருந்தியல்) ..	2 (அக்டோபர் தோ[illegible]			

[1977 ஆகஸ்ட் 13

பாடப் பிரிவின் பெயர்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. சென்னை மருத்துவக் கல்லூரி.	ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரி.	மதுரை மருத்துவக் கல்லூரி.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.
(1)	(2)	(3)	(4)	(5)
எம்.டி. (மயக்க மருந்தியல்). ..	3	2	3	..
எம்.டி. (எக்ஸ் கதிர்முறை நோய் அறியியல்).	4	..	..	..
எம்.டி. (எக்ஸ் கதிர்முறை நோய் சிகிச்சையியல்).	4	..	..	..
எம்.டி. (மேக நோயியல்) ..	4	..	..	..
எம்.டி. (தோல் நோயியல்) ..	4	..	..	..
எம்.டி. (உயிர் வேதியல்) ..	4	..	..	..
பிச்.டி. (உடற்கூறு ஆய்வியல்)	2	2	2	..
எம்.எஸ். (உடற்கூறு ஆய்வியல்)	2	4	2	..
எம்.எஸ். (கண் நோயியல்) ..	6	..	6	..
எம்.எஸ். (காது, மூக்குத் தொண்டையியல்).	6	..	5	..
எம்.எஸ். (முடநீக்கியியல்) ..	4	..	2	..
எம்.எஸ். (நரம்பியல் அறுவை சிகிச்சை).	4	..	..	..
எம்.டி. எஸ். (பல்வலியால் ஏற்பட்டுள்ள வீக்கம்).	3	..	..	..

1977 ஆகஸ்ட் 13]

பாடப் பிரிவின் பெயர்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. சென்னை மருத்துவக் கல்லூரி.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	மதுரை மருத்துவக் கல்லூரி.	தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி.
(1)	(2)	(3)	(4)	(5)
(பல் மருத்துவப் பிரிவு) (ஒவ்வொரு ஜூலையிலும்)				
எம்.டி.எஸ். (பல் மருத்துவ அறுவை சிகிச்சை).	3	..	..	..
(பல் மருத்துவப் பிரிவு) (ஒவ்வொரு ஜூலையிலும்)				
எம்.டி.எஸ். (பல் மருத்துவ அறுவை சிகிச்சையியல்.	2	..	..	..
(ஒவ்வொரு ஜூலையிலும்)				
எம்.டி.எஸ். (பல் நோயியல்) ..	3	..	..	..
(ஒவ்வொரு ஜூலையிலும்)				

தகுதிப் பட்டியல் பாடப்பிரிவுகள்.

பாடப் பிரிவின் பெயர்.	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. சென்னை மருத்துவக் கல்லூரி.	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி.	மதுரை மருத்துவக் கல்லூரி.
(1)	(2)	(3)	(4)
டி.ஜி.ஓ. (ஏப்ரல் அண்டு அக்டோபர்).	18	6	8
டி.சி.எச்.	36	6	6
டி. எம். ஆர். டி. (D.M. R.D.) ..	4	4	6

[1977 ஆகஸ்ட் 13

பாடப் பிரிவின் பெயர். (1)	சென்னை மருத்துவக் கல்லூரி. (2)	ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி. (3)	மதுரை மருத்துவக் கல்லூரி. (4)
	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை.		
டி.எம்.ஆர்.ட்டி. (D.M.R.T.) (ஏப்ரல் அண்டு அக்டோபர்).	4	..	..
டி.எல்.ஓ.	12	..	6
டி.ஏ. (ஏப்ரல் அண்டு அக்டோபர்).	4	4	6
டி.ஆர்த்தோ ,, ..	4	2	2
டி.ஓ. ,, ..	6	..	10
டி.வி. ,, ..	8	..	..
டி.சி.பி. ,, ..	9	..	..
டி.ட்டி.சி.டி. ,, ..	12	..	..
டி.டி. (D.D.) ,, ..	6	..	..
டி.பி.எம். ,, ..	8	..	3
	(ஓராண்டுக்கு)		
டி.சி.அண்டு எப்.எஸ். ..	20	..	..
	(ஒவ்வொரு அக்டோபரிலும்)		
டி.பி.எம்.பி. ,, ..	4	..	..
	(ஆண்டொன்றுக்கு)		
உள்ளூர் வாரிய மருத்துவ அதிகாரிகளுக்காக—			
டி.எம். அண்டு எம்.சி.எச். ..	10	..	..
	(ஒவ்வோராண்டும் ஜூலை)		
உடல்நல அதிகாரிகளுக்காக—			
பி.எஸ்.எஸ்ஸி	10	..	..
	(ஜூலை.............)		

1977 ஆகஸ்ட் 13]

உயர்நிலைச் சிறப்பறிவுத் துறைகள்—

பாடப் பிரிவின் பெயர். (1)	ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை. (2)
எம். சி. எச். (குழந்தை நோய் அறுவை சிகிச்சை இயல்).	2
எம். சி. எச். (உறுப்பு ஒட்டு அறுவை சிகிச்சையியல்).	2
எம். சி. எச். (சிறுநீரக அறுவை சிகிச்சை இயல்.)	4
எம். சி. எச். (மார்பு அறுவை சிகிச்சை இயல்).	2
டி. எம். (இருதய நோயியல்)	2
டி. எம். (நரம்பியல்)	2
டி. எம். (குடல் நோயியல்)	1
மதுரை மருத்துவக் கல்லூரி—	
எம்.சி.எச். (நரம்பு நோய் அறுவை சிகிச்சையியல்).	2
எம்.சி.எச். (குழந்தை நோய் அறுவை சிகிச்சை இயல்).	2
எம். பார்மசி	2

[1977 ஆகஸ்ட் 13

விவர அறிக்கை—II.

1977–78 ஆம் ஆண்டிற்காகத் தீர்மானிக்கப்பட்ட பட்ட மேற்படிப்பு, பாடப்பிரிவு, தகுதிப் பட்டியல் பாடப் பிரிவு ஆகியன குறித்த விவரப் பட்டியல்.

சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை—

டி. எம். (குடல் நோயியல்).
டி. எம். (சிறுநீரகவியல்).
எம் டி. (இருதய மருந்தியல்)
உள இயல் மருத்துவப் பாடப்பிரிவில் பட்டயத்தகுதி.

ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, சென்னை—

எம். டி. (குழந்தை நோய் மருந்தியல்).
டி.எல்.ஒ.

மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை—

எம். டி. (உளநோயியல்).
எம். சி. எச். (உறுப்பு ஒட்டு அறுவை சிகிச்சை இயல்).
எம். டி. (மேக நோயியல்).
டி.வி. (D.V.)

தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி, தஞ்சாவூர்—

டி.ஜி.ஒ.
டி.ஒ.
டி.எல்.ஒ.
டி.சி.எச்.

கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, சென்னை—

எம். டி. (பொது மருந்தியல்).
எம். எஸ். (பொது அறுவை சிகிச்சை இயல்).
டி.ஜி.ஒ.
டி.சி.எச்.
டி. எல். ஒ.
டி.ஆர்த்தோ.

1977 ஆகஸ்ட் 13]

கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி, கோயம்புத்தூர்—

எம். டி. (பொது மருந்தியல்).
எம். எஸ். (பொது அறுவை சிகிச்சை இயல்).
டி.ஜி.ஒ.
டி. சி. எச்.
டி. ஏ. (D.A.).

விவர அறிக்கை III.

1977-78ஆம் ஆண்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆராய்ச்சித் திட்டங்களின் பட்டியல்.

1. கடுகு எண்ணெய், நல்லெண்ணெ ஆகிய தொடர்பில் இருதயம், இரத்தக் குழாய்கள் தொடர்பான ஆய்வுகள்.

2. நோய் அறி இயல்—நரம்பு நோய் அறி இயல் குறித்த இந்தியப் பதிவு—எல்லைப் பகுதிக்குழு.

3. கணையத்தில் கல் உருவாதலை சோதனை முறையில் ஆக்குதல்.

4. கழுத்துச் சுரப்பிகளுக்கும் பேலி சைட்டுகளுக்கும் இடையேயுள்ள தொடர்புகளைக் குறித்து ஆய்தல்.

5. சென்னை மாநகரில் உள்ள செவிட்டுமையர்—குருடர் கல்விப்பயிற்சி நிறுவனங்களில் வசிக்கின்றவர்களுக்கு மருத்துவ மனையில் நிண நீரியல் ஆய்வு நடத்துதல்.

6. (சிஃபில்லிஸ்) மேக நோய் காரணமாக இரத்தம் கட்டுதல் (THHa) குறித்த சோதனைக்கு மருந்து தயாரித்தல்.

7. கிரந்தி நோய்த் தடுப்பு மருந்து தயாரித்தல்.

8. சென்னை மாநகரில் வாழும் மக்களுக்கு சுவாச உறுப்புப் பகுதிகளில் ஏற்படும் தொற்றுக் கிருமிகள் பற்றிய ஆய்வு.

9. சென்னையிலுள்ள பொது மருத்துவ மனையில் இரத்தச் சேமிப்பு நிலையத்தில் சேமிக்கப்பட்டுள்ள இரத்த மாதிரிகளில் ஆஸ்திரேலிய மருந்துகளின் விளைவு பற்றிய ஆய்வு—மற்றும், மிக நெடு நாட்களாக, மிகக் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருந்த பல வயது தொகுதியைச் சேர்ந்தவர்களின் கல்லீரலிலிருந்து திசுக்களின் மாதிரிகளை எடுத்து அவற்றையும் அவற்றுக்கு நிகரான கட்டுப்பாட்டு மருந்துகளையும் குறித்து ஆய்வு செய்தல்.

[1977 ஆகஸ்ட் 13

10. மூட்டு வலிகள் தொடர்பாக குடும்ப ஆய்வு.

11. வலிப்பு நோயும் கதிரவன் கதிர்கள் இயக்கமும்.

12. தாவரங்களிலிருந்து கிடைக்கும் இயற்கை உற்பத்திப் பொருட்கள் குறித்த இரசாயன ஆய்வும் மருந்தாக்கவியல் ஆய்வும்.

13. தென்னிந்திய மக்களிடையே செவிட்டுத்தன்மை ஏற்படுவதற்கான கூறுகள் (Actiological Factors) பற்றிய ஆய்வு.

14. தமிழ்நாட்டில் உயிர்வேதியல்—ஹார்மோன்கள் குறித்த ஆய்வறிக்கை.

15. தமிழ்நாட்டில், நீரிழிவு நோய்ச் சிக்கல்கள், மண்ணீரலில் கல் உருவாதல் தொடர்பாக பிளாஸ்மா இன்சுலின் மருந்துகள் பற்றிய ஆய்வுகள்.

16. ஒளிரும் தன்மை பெற்ற பொருட்கூறுகளை உடலுட் செலுத்தும் உத்தியைக் கையாண்டு, கிரந்தி நோய் தொடர்பாக, உடலுக்கு ஊறு செய்யும் ஐசிஜி, ஐஜிஎம் கூறுகளைப் பற்றி ஆய்வு செய்தல்.

17. சென்னை மாநகரில் மேக நோய் பற்றி மக்கள் அறிந்திருத்தலைக் குறித்த ஆய்வும் மேகநோய்க்கு ஆளான நோயாளிகள் சிகிச்சைக்கு வருமிடங்களில், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவத் துறைத் துணைப்பணியாளர்கள், மருத்துவ மாணவர்கள் ஆகியோர் அவர்களிடம் நடந்து கொள்ளுதல் பற்றிய ஆய்வும்.

18. இந்தியாவில் வலிப்பு நோய் காணப்படுகின்ற பகுதிகள், மக்களைக் குறித்து, வெளிநாட்டு நிறுவனங்களின் உதவியுடன் நடத்தப்படும் ஆய்வு.

19. ஊட்டக் குறைவு உடைய குழந்தைகள் பி.சி.ஜி. தடுப்பு ஊசி குத்தப்படுகையில் செல்கள் மூலமாகப் பெறும் நோய்த் தடுப்புத் திறனும், பின்னர் அவர்கள் காசநோய்க்கு ஆளாகாமல் பெறுகின்ற நோய்த்தடுப்பு ஆற்றலும்.

20. மருத்துவமனைகளில் நோயாளிகள் நோய்த் தடுப்பு ஆற்றலைப் பெருதிருத்தலும் இறத்தலும் பற்றிய ஆய்வு.

21. மூச்சுக் குழாயின் மெல்லிய சவ்வுகளில் வளரும் சதைகள் பற்றி (Rhinosporidiosis) மின்னணுவியல் நுண்ணோக்காடியின் துணையால் ஆய்வுகள் நடத்துதல்.

1977 ஆகஸ்ட் 13]

22. தலையோட்டின் உட்புற அழுத்தத்தைத் தொடர்ந்து அளத்தல்.

23. மருந்துப் பழக்கத்தில் உயிர்க்கூறுள்ள அமினஸ்களின் (Amines) பங்கு.

24. தென்னிந்தியாவிலுள்ள காடர்கள், இருளர்கள், வேடர்கள் போன்ற குறிப்பிட்ட சில பழங்குடி மக்களைப் பற்றி ஆராய்தல்.

25. தென்னிந்திய மக்களின் தொடை எலும்பின் சில இயக்கவியல் இயல்புகளில் வயது காரணமாக ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய ஆய்வு.

26. கருத்தடைச் சாதனங்கள் சோதனைப் பிரிவு.

27. கருச்சிதைவுக்குப் பின் ஏற்படும் தற்காலிக நலிவு நிலை ஒட்டிய ஆய்வு.

28. கருத்தடை வளையம் பொருத்தப்பட்டபின் 5 ஆண்டுகளில் ஏற்படும் நீண்டகால விளைவுகள் ஒட்டிய ஆய்வு.

29. காயமுற்ற தோலில், புதிதாக வளர்ந்த அடர்த்தியான தோலில் உள்ள புரதச் சத்து பற்றிய ஆய்வு.

30. தீப்புண் பட்ட நோயாளிகளின் நோயை மின்பகுப்பியல் முறை மூலம் மதிப்பிடுதல் அவர்களுக்கு கட்டு கட்டாமல் புண்ணின் மேல் மருந்து பூசி நோயைக் குணப்படுத்துதல். வீடுகளில் தற்செயலாகத் தீயில் சிக்கிக் கொள்வதைத் தவிர்ப்பதற்கான வழிகளைப் பற்றி நேரில் சென்று பிரசாரம் செய்தல்.

31. தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தல்; மருத்துவப் பிரிவில் இவர்களுக்குச் சிகிச்சை அளிக்கும் முறை.

32. இரத்த நாளத்தில் இரத்தம் உறைந்து விடுவதைத் தடுப்பதற்கான மருத்துவச் சிகிச்சை—இதய நோய் மறுவாழ்வு சிகிச்சை நிலையம்.

33. சுவாசக் குழாயிலும், நுரையீரலிலும் கொப்புள முடிச்சுகள் தோன்றி அதனால் ஏற்படும் நச்சு நோய்.

34. கருப்பையினுள் கருத்தடைக்கான கருவிகளைப் பொருத்துதல்.

35. ஹார்மோன்கள் அடங்கிய கருத்தடை மாத்திரைகள்.

[1977 ஆகஸ்ட் 13

36. தென்னிந்திய மக்களின் தொடை எலும்பின் சில இயக்கவியல் இயல்புகளில் வயது காரணமாக ஏற்படும் மாற்றங்களைப் பற்றிய ஆய்வு.

37. போல் நியூரோபதி—மனிதர்களிடத்திலும். சோதனை முறையில் குரங்கிடத்திலும் நரம்பு மண்டல ஆய்வு—இதனை வெளி நாட்டு பல்துறை சார்ந்த உடனுழைப்புடன் நடத்தப்படும்.

38. ஓர் உறுப்பு சார்ந்த நோய்த் தடுப்பு மருந்துகளையும் தீப்புண் காயங்களுக்குத் தடவப்படும் களிம்புகளையும் ஒப்புமை நோக்கில் ஆய்வு செய்தல்.

39. மருந்துகள் எந்தெந்த வகையில் தவருகப் பயன்படுத்தப் படுகிறது என்பது பற்றி ஆய்வு செய்தல்.

40. மூளையின் உட்பகுதியிலுள்ள அணுக்கள் குறித்து நரம்பியல் சார்ந்த உடற் கூறு இயல் ஆய்வு.

41. மூளை வளர்ச்சி பெருதிருத்தல் பற்றிய பல் துறைகளின் உடனுழைப்போடு செய்யப்படும் ஆய்வில் பயன்படுத்துவதற்காக பல மொழி அகராதி தயாரிக்கும் முன்னேடித் திட்டம்.

42. உடல் நலம் சார்ந்த நோய் நுரையீரலில் ஏற்பட்டுள்ள கடுமையான நோய் கண்டிருக்கும்போது சுவாசக் குழாயில் மூச்சு எந்த அளவிற்கு சென்று வருகின்றது என்பது பற்றி ஆய்வு.

43. ஒய்வு நாள் குறித்த ஆய்வு.

44. உடைந்தும் சிதைந்தும் உள்ள பற்களை எடுப்பதற்கு முன்பு மேல் பகுதியிலுள்ள ஈறுகள், தசை நார்கள் எவ்வாறு இருக்கின்றன என்பது பற்றி ஆய்வு செய்வதனுல் ஏற்படும் பயன்.

விவர அறிக்கை IV.

பயிற்றுவிக்கும் மருத்துவமனைகளின் பட்டியல்.

1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.

2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.

3. கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னை.

1977 ஆகஸ்ட் 13]

4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

5. அரசு கண் மருத்துவமனை, சென்னை.

6. பெண்கள், குழந்தைகளுக்கான கே.ஜி. மருத்துவமனை, சென்னை.

7. மகப்பேறு, மகளிர் நோய் இயல் நிறுவனம்—பெண்கள், குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனை, சென்னை.

8. இராஜா சர். இராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை,

9. குழந்தை நல நிறுவனம்—குழந்தைகள் மருத்துவமனை, சென்னை.

10. அரசு திருவொற்றீஸ்வரர் காசநோய் மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.

11. அரசு மனநோய் மருத்துவமனை, சென்னை.

12. அரசு காச நோய் நலம்பேண் மருத்துவமனை, சென்னை.

13. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.

14. அரசு இராஜா மிராஸ்தார் மருத்துவமனை, தஞ்சாவூர்.

15. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்

16. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு.

17. கோயம்பத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.

18. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.

19. அறிஞர் அண்ணு நினைவு புற்று நோய் நிலையம், காஞ்சிபுரம்.

விவர அறிக்கை V.

மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் எண்ணிக்கை.

	1975-1976.	1-4-1976-ம் நாளன்றுள்ள நிலவரப் படி.
1. அரசு பொது மருத்துவமனை, சென்னை.	1,537	1,572
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.	1,011	1,011
3. அரசு கீழ்ப்பாக்கம் மருத்துவமனை, சென்னை.	300	420
4. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.	526	526
5. அரசு கண் மருத்துவமனை, சென்னை.	328	328
6. பெண்கள், குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் அரசு மருத்துவமனை, சென்னை.	635	675
7. மகப்பேறு மகளிர் நோயியல் மகளிர்-சிறுர் நல மருத்துவ நிலையம், சென்னை.	528	534
8. ராஜா சர். ராமசாமி முதலியார் மகப்பேறு மருத்துவமனை, சென்னை.	426	426
7. தாய்-சேய் நல மருத்துவ நிலையம், சென்னை.	250	250
10. திருவொற்றீஸ்வரர் காச நோய் அரசு மருத்துவமனை, ஓட்டேரி, சென்னை.	222	272
11. அரசு மன இயல் மருத்துவமனை, சென்னை.	1,800	1,800
12. அரசு காச நோய் நலம் பேண் மருத்துவமனை, தாம்பரம்.	726	750
13. அரசு எர்ஸ்கின் மருத்துவமனை, மதுரை.	1,394	1,394
14. அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனை, தஞ்சாவூர்.	662	662
15. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, தஞ்சாவூர்.	538	538
16. செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, செங்கற்பட்டு.	416	416
17. கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, கோயம்புத்தூர்.	805	805
18. திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, திருநெல்வேலி.	554	663
19. அரசு பிரிடா மன்னியர் மருத்துவமனை, களக்காடு.	..	30
20. அரசு மருத்துவமனை, சைதாப்பேட்டை.	..	32
21. அரசு காச நோய் மருத்துவமனை, தோப்பூர்.	..	162
22. அரசு தொற்றுநோய் மருத்துவமனை, மதுரை.	..	50
23. அரசு காலரா சேகரிப்பு நிலையம், மதுரை.	..	28
மொத்தம் ..	12,638	13,204

விவர அறிக்கை VI.

தமிழ்நாடு மாநிலத்தில், இந்திய மருத்துவ முறை மருத்துவ மனைகள், மருந்தகங்கள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் காட்டும் பட்டியல்.

	தனித்த இந்திய மருந்து மருத்துவ மனைகள்.	அரசு சித்த மருத்துவப் பிரிவுகள் (படுக்கைகளுடன்).	கிராமபுற மருந்தகங்கள், சித்த, ஆயுர்வேத யுனானி மருத்துவ முறை.			நிலையான மருந்தகங்கள். சித்த.	ஆயுர் வேத.	யுனானி.
(1)	(2)	(3)	(4)			(5)	(6)	(7)
1. அறிஞர் அண்ணா அரசு இந்திய மருந்து மருத்துவமனை, சென்னை.	150 படுக்கைகள் (சித்தா 53, ஆயுர்வேதா 51, யுனானி 46).	..	..			..	..	..
2. இந்திய மருந்து அரசுக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ மனை, பாளையம் கோட்டை.	208 படுக்கைகள். (எல்லாம் சித்தா).	..	.			..	..	..
3. மாவட்டத் தலைமை அலுவலக மருத்துவ மனைகள்.	(14 மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் 10 படுக்கைகள்)	..	...			..	..	..
4. வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள், வட்டத்தலைமையிடத்திலில்லாத பிற மருத்துவ மனைகள்.	(45 மருத்துவ மனைகள் ஒவ்வொன்றிலும் 5 முதல் 10 வரை படுக்கைகள்.	..	..			..	..	..
5. அரசு மருந்தகங்கள் ..	..	..	..	..	..	7	5	..
6. ஊராட்சி ஒன்றியங்கள்	..	..	295	60	8	36	14	1
7. நகராட்சிகள் ..	..	..	..	..	..	38	20	5
8. கோயில்கள் ..	..	..	..	..	..	23	..	..
9. சென்னை மாநகராட்சி ..	..	..	..	..	..	5	1	2
10. மதுரை மாநகராட்சி	..	...	..	..	..	4	3	..

விவர அட்டவணை VII.

பாளையங்கோட்டை, இந்திய முறைகள் மருத்துவ அரசுக் கல்லூரி, சென்னை, அறிஞர் அண்ணா இந்திய முறைகள் மருத்துவ அரசு மருத்துவமனை —இவைகளால் நடத்தப்படும் பாடங்களின் பிரிவுகள்.

படிப்பின் பெயர்.	கால அளவு.	இடங்களின் எண்ணிக்கை.	உதவித் தொகை.
(1)	(2)	(3)	(4)
1. இந்திய மருத்துவப் பட்டம் (சித்த மருத்துவம்).	5 ஆண்டுகள்.	40 (உதவித் தொகை 30, உதவியில்லாத் தொகை 10).	மாதம் ஒன்றுக்கு ரூ. 75.
2. மருத்துவத்தில் டாக்டர் பட்டம் (சித்த மருத்துவம்) மருத்துவம் (மருந்து) குணபத்தாறு (மெட்டீரியா மெடிக்கா).	ஐந்து ஆண்டுகள்.	10 (உதவித் தொகை).	மாதம் ஒன்றுக்கு ரூ. 200.
3. பார்மஸி பிரிவில் பட்டயம். சித்த மருத்துவம்.	இரண்டு ஆண்டுகள்.	15 உதவித் தொகை (பாளையம் கோட்டை ஐ.எஸ்.எம். அரசு கல்லூரியில் 8 இடங்கள், சென்னை, அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ அரசு மருத்துவ மனையில் 7 இடங்கள்).	மாதம் ஒன்றுக்கு ரூ. 30.

விவர அட்டவணை- VII—தொடர்ச்சி.

படிப்பின் பெயர்.	கால அளவு.	இடங்களின் எண்ணிக்கை.	உதவித் தொகை.
(1)	(2)	(3)	(4)
4. ஆயுர்வேத மருத்துவம்	இரண்டு ஆண்டுகள்.	15 உதவித் தொகை இல்லை. (பாளையங் கோட்டை. ஜி.சி.ஐ.எஸ். எம்-ல் 8 இடங்கள், சென்னை ஏ.ஏ.ஜி.எச். ஐ.எம்.-ல் 7 இடங்கள்) 5 உதவித் தொகையுடன் (இவை சென்னை ஏ.ஏ.ஜி.எச். ஐ.எம்.-ல் உள்ளது).	மாதம் ஒன்றுக்கு ரூ. 30.
5. யுனானி மருத்துவம்	இரண்டு ஆண்டுகள்.	5 உதவித் தொகையுடன் (சென்னை ஏ.ஏ.ஜி.எச். ஐ.எம்.-ல்),	மாதம் ஒன்றுக்கு ரூ. 30.

விவர அட்டவணை VIII.

கட்டிடத் திட்டங்கள்.

I. 1976-77-ல் கீழ்க்கண்ட கட்டிடங்கள் கட்டப்பட்டன:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. பாளையங்கோட்டை, இந்திய மருத்துவ முறைகள் அரசு கல்லூரியில் 100 கூடுதல் படுக்கைகள்.	5.95
2. ராமநாதபுரம், அரசு மருத்துவமனை தலைமையிடத்தில் சித்த மருத்துவப் பிரிவு இடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.	1.00
3. சென்னை, அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ அரசு மருத்துவ மனையில், மத்திய ஆராய்ச்சி நிலைய (சித்த மருத்துவ) கட்டிடத்திற்கு மேல், புதிய II, III-ஆவது மாடிகள் கட்டுதல்.	3.90

II. கீழ்க்காணும் கட்டிடங்கள் கட்டுமானப் பணியின்கீழ் உள்ளன—

1. பாளையங்கோட்டை இந்திய முறை மருத்துவ அரசு கல்லூரியின் இணைக்கப்பட்ட பார்மஸி வட்டார வீடுகளுக்கு கட்டிடம் கட்டுதல்.	3.80

III. 1976-77ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கட்டிடங்கள் கட்டும் திட்டத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது—

1. சென்னை, இந்திய மருத்துவ அறிஞர் அண்ணா அரசு மருத்துவமனை கட்டிடத்திற்குள் இருக்கும் டி. பார்மஸி (D. Pharmacy), நூலகம்(Library), மிருகக் காட்சி சாலை (Museum) முதலிய நிலையங்களுக்குக் கட்டிடம் கட்டுதல்.	3.20
2. பாளையங்கோட்டை, இந்திய முறைகள் மருத்துவ அரசுக் கல்லூரியில், புல் பூண்டு வகை தாவரவியல் தட்பவெட்பக் கட்டுப்பாடுடன் கூடிய பசுமை நிலையம் (Green House) அமைத்தல்.	0.99
3. பாளையங்கோட்டை, இந்திய முறைகள் மருத்துவ அரசு கல்லூரியில் புற நோயாளிகள் கட்டிடம் கட்டுதல்.	1.80

விவர அட்டவணை VIII—தொடர்ச்சி.

கட்டிடத் திட்டங்கள்—தொடர்ச்சி.

IV. கீழ்க்காணும் கட்டிடத் திட்டங்கள் ஆய்வில் உள்ளன—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1. சென்னை, அறிஞர் அண்ணா இந்திய மருத்துவ அரசு மருத்துவமனையில் சைக்கிள் நிறுத்துமிடம் கட்டுதல் (கண்டிப்பாக சைக்கிள் நிறுத்துமிடத்திற்கு மட்டும்).	0.20
2. மத்திய ஆராய்ச்சி நிலையத்திற்கு (சித்தா) 30 கூடுதல் படுக்கைகளுக்கான கட்டிடம் கட்டுதல்.	0.50
3. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள விரபுலி சேமக்காப்பு வனத்தில் மருந்து தயாரிக்கும் பண்ணைக்காக தொழிலாளர் காலனிகள் முதலியவை கட்டுதல்.	0.50

இணைப்பு II.

[38-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 19—மக்கள் நல்வாழ்வுத் துறை

கொள்கை.

மக்களின் சிறந்த உடல் நலமே, எல்லா பொதுச் சுகாதாரத் திட்டங்களின் நோக்கமாகும். இந்த திட்டங்களைச் செவ்வனே செயற்படுத்துவதற்கு, சமுதாயத்தில் எந்த அளவுக்கு நோய்கள் பரவியுள்ளன என்கிற தகவல் மிகவும் இன்றியமையாததாகும். மரணம், நோய்ப் பரவும் நிலை குறித்து மட்டுமே அறிவது போதுமானதல்ல. உடல் நலத்திற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள பற்பல திட்டங்களின் மூலம் எந்த அளவுக்கு மக்கள் பயனடைந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். மேலும், மக்கள் தொகையில் 70 சதவீதம் கிராமமக்கள் என்பதால் அவர்கள் சிறந்த முறையில் கவனிக்கப்பட வேண்டும். இந்நோக்கத்தை எய்தும் பொருட்டு, அரசு பல ஆண்டுகளாகவே வெவ்வேறு மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டுள்ளது. தொற்றுநோய்த் தடுப்பு, கட்டுப்பாடு, தாய்-சேய் நலன், மக்கள் ஊட்டச் சத்துத் தரத்தை மேம்படுத்தல் ஆகியவை உட்பட சமூகச் சுகாதார நலனுக்கு வகை செய்தல், போதுமான அளவுக்குச் சுகாதாரக் கல்விப் பணிக்கு வகை செய்தல். உணவுக் கலப்படத்தைத் தடுத்தல், பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்களைச் சேகரிப்பதை மேம்படுத்தல், ஆகியவை இத் திட்டத்தின் முக்கியக் கூறுகளாகும். மாநிலம் முழுவதும் பரந்து அமைந்துள்ள ஆரம்பச் சுகர்தார நிலையங்கள், துணை நிலையங்கள் மூலம் சுகாதார நலப் பணிகள் அளிக்கப்படுகின்றன.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள்.

ஆரம்பச் சுகாதார நிலையம் கிராமக் குடும்ப நலப் பிரிவு, கிராமப் பகுதிகளில் அடிப்படை மருத்துவப் பணியை மேற்கொள்ளும் முக்கியமான பயனுள்ள அமைப்பு ஆகும். சுமார் 130 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மூன்று மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். எஞ்சிய ஆரம்பச் சுகாதார நிலையங்களில் இரண்டு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். அடிப்படை மருத்துவ வசதிகளை அளிப்பதற்காக மருத்துவ அதிகாரிகளின் இயங்கும் குழு இரண்டு குறைந்தது வாரத்திற்கொரு முறையாவது கிராமங்களுக்குச் செல்வது இயலும் பொருட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் சிலவற்றில் மூன்ருவது மருத்துவ அதிகாரி ஒருவரது பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது. 383 ஆரம்பச் சுகாதார நிலையங்களுள் 192 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு மருந்தகக் கட்டிடங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. மற்றுமொரு ஆரம்பச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 190 தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு ரூ. 4.37 கோடி செலவாகும். அதிகச் செலவை முன்னிட்டு, கட்டிடங்கள் கட்டும் பணி படிப்படியான திட்டம் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஆரம்பச் சுகாதார நிலையங்கள், துணை நிலையங்கள் ஆகியவற்றுக்கு மருந்துகள்.

அவசியமான, உயிரைக் காப்பாற்றக் கூடிய மருந்துகளைப் போதுமான அளவு வைத்து வரும் பொருட்டு, ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கும் மருந்துகள் வாங்குவதற்காக ஏற்கெனவே கிடைத்து வரும் ஆண்டு நிதி ஒதுக்கம் ரூ. 10,000 ஆகும். இது ரூ. 12,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. கிராம மக்களின் மருத்துவத் தேவைகளை உரிய நேரத்தில் நிறைவு செய்வதுதான் இதன் நோக்கம். கூடுதல் நிதி ஒதுக்கமான ரூ. 2,000 எல்லா ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கும் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகை 1974-75ஆம் ஆண்டிலிருந்து கிடைத்து வருகிறது. 1977-78 ஆம் ஆண்டில் வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்துடன் இத் தொகையும் ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குக் கிடைக்கும். 1977-78-ல் இந்த நிதி ஒதுக்கத்தை ரூ. 12,000-திலிருந்து ரூ. 14,000-க்கு உயர்த்துவது என்ற ஒரு செயற் குறிப்பும் உள்ளது.

துணை நிலையங்களுக்கு மருந்துகள் வாங்குவதற்காக ரூ. 600 ஏற்கெனவே கிடைத்து வருகிறது. தற்போதுள்ள எல்லாத் துணை நிலையங்களுக்கும் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின்கீழ் ஆண்டு ஒன்றுக்கு துணை நிலையம் ஒன்றுக்கு ரூ. 200 கூடுதல் நிதி ஒதுக்கமும் அனுமதிக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்து வரும் இக்கூடுதல் நிதி ஒதுக்கம் 1977-78 ஆம் ஆண்டிலும் கிடைக்கும். மேலும், பல நோக்கு சுகாதார ஊழியர்கள் திட்டம் செயலிலுள்ள தென் ஆற்காடு, மதுரை, கன்னியாகுமரி, சேலம், செங்கல்பட்டு ஆகிய ஐந்து மாவட்டங்களில் செயல்படும் துணை நிலையங்களுக்கு, மருந்துகளை வாங்குவதற்கு ரூ. 2,000 நிதி ஒதுக்கம் செய்ய அரசு அனுமதியளித்துள்ளது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

நீலகிரி மாவட்ட ஒருங்கிணைந்த மேம்பாட்டின்கீழ் மருத்துவ நலனுக்கு வகை செய்வதற்காக இத்திட்டத்தின் கீழ் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. உதகமண்டலம் வட்டாரத்திற்காக தூனேரியில் 1976-ல் கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றும், கூடலூர் வட்டாரத்திற்காக 1977-ல் நிலக்கோட்டையில் மற்ருெரு கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையமும் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரு கூடுதல் ஆரம்பச் சுகாதார நிலையங்களும் தேவையான பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றன. இது, மத்தியத்துறைத் திட்டமாகும்.

[1977 ஆகஸ்ட் 13

பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் சேலம், வட ஆற்காடு, தென் ஆற்காடு (கல்ராயன் குன்றுகள்), தருமபுரி, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகளில் வசித்துவரும் பழங்குடியினரது சுகாதார நிலையை உயர்த்தும்பொருட்டு, 1977-78 ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்காக ரூ. 20.26 இலட்சம் செலவில் சுகாதார நல அடங்கல் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரில் யார் யாருக்கு மேகநோய் கண்டுள்ளதென்பதைக் கண்டுபிடிப்பதற்காக, சேலம் மாவட்டம், கொல்லிமலை வட்டாரத்திலுள்ள வாழவந்த நாடு ஆரம்பச் சுகாதார நிலையத்திற்கு பரிசோதனைக் கூடம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சிறிய சுகாதார நிலையங்கள் (Mini Health Centres).

இது, மத்திய அரசு, மாநில அரசு, தொண்டு நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து 1 : 1 : 1 என்ற விகிதாச்சாரத்தில் பெறும் நிதியுதவியுடன், தொண்டு நிறுவனங்கள் கிராமங்களில் நோய்த் தடுப்பு, நோய்த் தீர்ப்பு, நோய்க்குப் பின்னர் உடல் நலம் பேணுதல் ஆகியவை அடங்கிய சுகாதார நல அடங்கல் பணிகளை வழங்கும் ஒரு திட்டமாகும்.

தமது உடல்நலனைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பும் எவரும் சிறிய ஆரம்பச் சுகாதார நிலையத்தில் சிகிச்சைப் பெறுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இச் சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்கள், சாதி, மத பேதமில்லாமல் (சமயச் சார்பற்ற அடிப்படையில்) 1,000 குடும்பங்களுக்கு அல்லது 5,000 பேருக்கு சுகாதார நல அடங்கல் பணிகளை நல்கும். சிறிய ஆரம்பச் சுகாதார நிலையம் அருகாமையிலுள்ள வங்கியில் ரூ. 3,000 வைப்பீடு செய்ய வேண்டும். இதற்குச் சமமான தொகையை மாநில, மத்திய அரசுகள் வழங்கும்.

மொத்தச் செலவில் 1/3 பாகத்தை ஏற்பதற்கு இந்திய அரசு இசைவு அளிக்கும் வரையில், சிறிய ஆரம்பச் சுகாதார நிலையம் ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கான மொத்தச் செலவு ரூ. 18,000-ல் பாதியை ஏற்க இவ்வரசு ஒப்புக் கொண்டுள்ளது. அத்தகைய சிறிய சுகாதார நிலையங்கள் 34-க்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இந்நிலையங்கள் 1—6—1977-லிருந்து செயல்படத் தொடங்கியுள்ளன. இது தவிர, முதல் தொகுதியான 34 சிறிய ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்குப் பொருந்தும் வரையறைகள், நிபந்தனைகளின் அடிப்படையில் மேலும் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களை நடத்த வேறு சில தொண்டு நிறுவனங்களும் முன் வந்துள்ளன. இது குறித்து அரசுக்காகும் கூடுதல் செலவு (அதாவது மொத்தச் செலவில் 50 சத வீதம்) ரூ. 1.80 இலட்சமாகும்.

1977 ஆகஸ்ட் 13]

மாவட்ட மேம்பாட்டுச் செய்முறை விளக்கத் திட்டம்.

மதுரை மாவட்டம் திண்டுக்கல் கோட்டத்தில் (பத்து வட்டாரங்கள் அடங்கியது) ஒருங்கிணைந்த அடங்கல் முனைப்புச் சுகாதாரப் பணிகளை நல்குவதற்காக மாவட்ட மேம்பாட்டுச் செய்முறை விளக்கத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு அனுமதித்துள்ளது. காந்தி கிராமத்திலுள்ள கிராம மருத்துவ வசதி நல நிலையம் இத்திட்டத்தை செயலாற்ற எடுத்துக் கொண்டுள்ளது.

சுகாதாரப் பணியாளர் பல்நோக்குத் திட்டம்.

செங்கற்பட்டு, தென் ஆற்காடு, மதுரை, சேலம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் சுகாதாரப் பணியாளர் பல்நோக்குத் திட்டத்தைச் செயற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டம், கிராமப் பகுதிகளில் நோய்த் தடுப்பு, நோய்த் தீர்வு, சுகாதாரப் பணிகளைச் செயற்படுத்துவது சம்பந்தப்பட்டதாகும். சாதாரண நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பது உட்பட, சுகாதார நல அடங்கல் பணிகளை நல்கி ஒவ்வொரு 5,000 பேருக்கும் இரண்டு பேர் (ஆடவர் ஒருவர், மகளிர் ஒருவர்) நியமிக்கப்படுவர். பயிற்சி முடிந்து பணியாளர்கள் திரும்பிய பின்னர், இத்திட்டம் முனைப்பாகச் செயற்படுத்தப்படும்.

தாய்-சேய் நலப் பணிகள்.

தாய்-சேய் நலப் பணிகள், கிராமப் பகுதிகளில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், ஊராட்சி ஒன்றியத் துணை நிலையங்கள், பின்தங்கியப் பகுதித் திட்ட நிலையங்கள் ஆகியவை மூலமும் நகர்ப் பகுதிகளில் நகராட்சிகள் மூலமும் அளிக்கப்படுகின்றன. குழந்தை பெற்றெடுக்கையில் திறம்பட கவனம் செலுத்துவதும் அதன் பின்னர் தாய்-சேய் ஆகிய இருவரது நலனில் கவனம் செலுத்துவதும் அவர்களது நலனைப் பேணுவதுமே இதன் முதன்மையான நோக்கமாகும். அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியத்தைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் தற்போது 2,831 தாய்-சேய் நல நிலையங்களை நடத்தி வருகின்றன. இம் மாநில நகராட்சிகளில் 128 மகப்பேறு இல்லங்களும், 372 மகப்பேறு நிலையங்களும் அரசு மானியத்துடன் செயல்பட்டு வருகின்றன.

மேலும், இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் 95 மிகத் தொலைவிலுள்ள, பின்தங்கிய கிராமங்களில் தாய்-சேய் நல நிலையங்களை அரசு அமைத்துள்ளது. இப் பின்தங்கிய பகுதிகளிலுள்ள மக்களுக்கு இவை தொடர்ந்து சேவை செய்யும்.

[1977 ஆகஸ்ட் 13

தொண்டை அழற்சி நோய்/கக்குவான்/இசிவு நோய்த் தடுப்புத் திட்டம்.

கிராமப் பகுதிகள் பயனடையும் வகையில், இத்திட்டம் ஆரம்பச் சுகாதார நிலையங்கள. துணை நிலையங்கள் மூலமாக 1964-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் 0—5 வயது குழந்தைகளின் நலனுக்காக மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும், இரண்டு முறை தடுப்பு ஊசி போட வேண்டும். அதாவது, ஒவ்வொரு தடவைக்கும் 8 முதல் 12 வார கால அளவு இடைவெளி இருக்க வேண்டும்.

இதைத் தவிர, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், 1974-75ஆம் ஆண்டில் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் மூன்று நோய்த் தடுப்புச் சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு அனுமதித்துள்ளது. மாவட்டங்களில் மூன்று நோய் தடுப்புத் திட்டத்தை முழுமுரப்படுத்துவதற்காக, இந்த ஆரம்பச் சுகாதார நிலையங்கள் ஒவ்வொன்றிலும் கூடுதல் சுகாதாரப் பார்வையாளர் ஒருவரும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒருவர் விதம் மாவட்டப் பொதுச் சுகாதாரச் செவிலியர் 13 பேரும் ஆகிய பணியாளர்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

1975-76ஆம் ஆண்டில் மேலும் ஒரு சுகாதாரப் பார்வையாளருடன் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு இச் சிறப்புத் திட்டம் நீட்டிக்கப்பட்டது. 1976-77ஆம் ஆண்டில் மேலும் 20 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு நீட்டிக்கப் பட்டுள்ளது. தற்போது மூன்று நோய்த் தடுப்புச் சிறப்புத் திட்டம், 60 ஆரம்பச் சுகாதார நிலையங்களில் செயற்பட்டு வருகின்றது. 1974-75, 1975-76, 1976-77 ஆகிய ஆண்டுகளில் மூன்று நோய்த் தடுப்பு ஊசி போடப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை வருமாறு :—

ஆண்டு.		தடுப்பு ஊசி போடப் பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.
(1)		(2)
1974-75	..	1,18,528
1975-76	..	1,86,528
1976-77	..	2,48,000

1977 ஆகஸ்ட் 13]

தொற்று நோய்க் கட்டுப்பாடு.

(அ) காலரா.—திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர். வட ஆற்காடு, தென் ஆற்காடு ஆகிய நான்கு மாவட்டங்கள் காலரா தோன்றிப் பரவுகின்ற இடங்களாகும். காலரா தடுப்பு நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதன் விளைவாக, இந்த நான்கு மாவட்டங்களிலும் பொதுவாக தமிழ்நாடு முழுவதிலும் காலரா நோய் குறைந்து வருகிறது. 1976ஆம் ஆண்டில், 853 பேருக்கு இந்நோய் கண்டதாகவும் 47 பேர் இந்நோயினுல் இறந்ததாகவும் தெரிவிக்கப் பட்டது. ஆனுல், 1975-ல் 2,358 பேருக்கு நோய்க் கண்டிருந்தது; 65 பேர் மாண்டனர்.

சென்னை மாநகரில் 23—11—1976 முதல் 26—11—1976 வரை புயலுடன் கூடிய கடுமையான பருவமழை பெய்ததன் காரணமாக இதுவரை ஏற்பட்டிராத அளவுக்கு வெள்ளம் ஏற்பட்டது. உடனடியாகத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலன்றி மற்றப்படி வெள்ளத்திற்குப்பின் பெரும் அளவில் காலரா நோய்ப் பரவ வாய்ப்புள்ளது. முதல்படியாக, வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்ட குடிசைப் பகுதியிலுள்ள தற்காலிக முகாம்களில் இடமளிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு காலரா ஊசி போடப்பட்டது. சுகாதாரக் கல்விப் பணியாளர்கள் மூலம் மாநகரில் அவசியமான சுகாதாரக் கல்விக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஒலிபெருக்கி ஏற்பாடுகளுடன் கூடிய பிரச்சார வண்டிகள் நான்கு மூலம் மக்கள் பின்பற்ற வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெரிவித்துச் சென்றன. சுகாதாரக் கல்வி சம்பந்தப்பட்ட காரியங்களுக்காக வானெலி, தொலைக்காட்சி, செய்தித்தாள்கள் ஆகியனவும் பயன்படுத்திக் கொள்ளப்பட்டன. மாநகரில் பல்வேறு பகுதிகளில் சுவரொட்டிகளும் ஒட்டி வைக்கப்பட்டன. மாநகரில் கையேடுகளும் வழங்கப்பட்டன. மருத்துவக் கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, மாநகராட்சி ஆகியவற்றில் மருத்துவப் பணியாளர்கள் அனைவரும் காலரா பரவுவதைத் தடுப்பதற்காக பெருமளவில் காலரா ஊசிபோடும் பணிக்குப் பயன்படுத்தப் பட்டனர். இத்தகைய உரிய நேர நடவடிக்கைகளினுல் மாநகரம் காலரா நோயிலிருந்து காக்கப்பட்டுள்ளது.

(ஆ) பிளேக்.—1976 ஆம் ஆண்டில் இம் மாநிலத்தில் பிளேக் நோய் காணப்படவில்லை. ஆயினும், பிளேக் பரவ வாய்ப்புள்ள பகுதிகளில் வழக்கமான பிளேக் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

(இ) பெரியம்மை.—நம் மாநிலத்தில் பெரியம்மை ஒழிப்புத் திட்டம் 1963-64 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. தொடர்ந்த திறம்பட்ட பணியின் விளைவாக நமது மாநிலம் 1969ன்

ஜூன் திங்களிலிருந்து பெரியம்மை நோயினின்றும் விடுபட்டது. இந்தியா பெரியம்மை நோயினின்றும் விடுபட்டது என்று உலக சுகாதார நிறுவனம் 23—4—1977 ஆம் நாளன்று அறிவித்துள்ளது. எனினும் 1977-78 ஆம் ஆண்டில் முதல்நிலை அம்மைப் பால் குத்துவது தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு நோய் பரவாமல் தடுப்பதற்குரிய கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடரப்படும். பெரியம்மை நோய் கண்டுள்ளதாகச் சந்தேகிக்கப்படும் நேர்வுகள் ஆய்வு செய்யப்பட்டு, அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஈ) யானைக்கால் நோய்.—இது கொசுக்கள் மூலம் பரவும் நோயாகும். நமது மாநிலத்தில் யானைக்கால் நோய் பரவ வாய்ப்புள்ள பகுதிகளில் 1.3 கோடி மக்கள் வசித்து வருகின்றார்கள். யானைக்கால் நோயைக் கட்டுப்படுத்துவதற்காக, செங்கல்பட்டு, வேலூர், சிதம்பரம், கும்பகோணம் ஆகிய இடங்களில் தலைமை அலுவலகங்களைக் கொண்ட நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்குடன் 1957-58 ஆம் ஆண்டில் யானைக்கால் நோய்த் தடுப்பு தேசியத் திட்டம் நம் மாநிலத்தில் கொண்டு வரப்பட்டது. 15 இலட்சம் மக்கள் மட்டும் இப்பிரிவுகளினால் பயனடைவர். நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மேலும் எட்டு புதிய நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் அமைக்கப்பட்டன. காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, ஸ்ரீரங்கம், சென்னை மாநகரம் ஆகிய இடங்களில் உள்ள 30 இலட்சம் மக்கள் இப்பிரிவுகளினால் பயனடைவர். இவை தவிர ஆய்வுப் பிரிவு ஒன்று, நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு ஒன்று, யானைக்கால் நோய் கட்டுப்பாட்டு மருந்தகங்கள் மூன்று ஆகியவை 1976-ம் ஆண்டில் அமைக்கப்பட்டன. மாநிலத்தில் ஆய்வு செய்யப்படாத பகுதிகளில் தற்போது எந்த அளவிற்கு நோய் பரவியுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும். நோய் பரவ வாய்ப்புள்ள பகுதிகளை வரையறுக்கவும், ஆய்வுப் பிரிவு யானைக்கால் நோய் சம்பந்தமான ஆய்வைச் செய்து வருகிறது. யானைக்கால் நோய்க் கிருமிகள் இங்கு வசிக்கும் மக்களிடம் தொற்றியுள்ளனவா என்பதைக் கண்டறிவதற்காக யானைக்கால் நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் இரவு நேர மருந்தகங்களை நடத்தி அவைகளுக்கான சிகிச்சை அளித்துக்கொண்டு வருகின்றன.

யானைக்கால் நோய்க் கட்டுப்பாடு தேசிய திட்டத்தைத் தவிர யானைக்கால் நோய் ஒழிப்பு, மலேரியா ஒழிப்புத் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களும் பொறுப்பு ஏற்றுள்ளன. இத்திட்டங்களுக்காகும் செலவில் ஒரு பகுதியை மாநில அரசு மானியமாகக் கொடுக்கிறது. 169 உள்ளாட்சி மன்றங்கள் இத்திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றன.

(உ) மலேரியா.—நமது மாநிலம் 1958—59 ஆம் ஆண்டிலிருந்து, மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இம்மாநிலத்தில் நிறுவப்பட்ட 31—45 பிரிவுகளில் 28—40 பிரிவுகள் பராமரிப்பு நிலையிலும் எஞ்சிய 3.05 பகுதிகள் ஒருங்கிணைப்பு நிலையிலும் செயல்பட்டு வருகின்றன. இப்பிரிவுகள் முனைப்பான தங்களது நடவடிக்கைகளினால் மாநிலத்தில் பெரும்பாலான பகுதிகளில் மலேரியா பரவுவதைத் நல்முறையில் ஒழிப்பதற்கு உதவி செய்தன. ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளில் மலேரியா நோய் கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. 1976—77 ஆம் ஆண்டில் 98,749 பேர்களுக்கு மலேரியா நோய் கண்டிருப்பதாக பதிவு ஆகியிருந்தது.

நகர்ப்புற மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டம்.—1972 ஆம் ஆண்டிலிருந்து இந்திய அரசின் நகர்ப்புற மலேரியாத் திட்டத்தின் கீழ் ஐந்து நகரங்கள்/மாநகரங்கள் சேர்க்கப்பட்டன. அவை யாவன: சென்னை மாநகரம், சேலம், ராசிபுரம், தூத்துக்குடி, எலம்பள்ளி, 1977—78 ஆம் ஆண்டில் இத் திட்டத்தின் கீழ் மேலும் இரண்டு நகரங்கள் எடுத்துக்கொள்ளப்படும், அவை யாவன ; வேலூர், ஈரோடு. கிராமப்புற மலேரியா கட்டுப்பாட்டுத் திட்டத்திற்காக கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

1. மலேரியா தொற்றியுள்ள பகுதிகளில் டி.டி.டி. (D.D.T.). என்ற பூச்சிக்கொல்லி மருந்தை இரண்டு முறை தெளித்தல் ;

2. மலேரியா தொற்றியுள்ள பகுதிகளில் கண்காணிப்பு தீவிரமாக்கப்பட்டது. மலேரியா நோய் கண்டவர்களுக்கு மருந்துகளுடன் போதுமான சிகிச்சை அளிக்கப்பட்டது.

3. மலேரியா பரவுவதைத் தடுக்க எடுத்துக்கொண்ட முயற்சியில் டி.டி.டி. (D.D.T.) என்ற பூச்சிக்கொல்லி மருந்தை தெளித்தலை அதிகப்படுத்த இராமநாதபுரம் கரையோரப்பகுதி, தருமபுரி, வட ஆற்காடு ஆகிய பகுதிகளில் கொசுப் புழுக்களை ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

4. கிராமப்புறப் பகுதிகளில் மலேரியா நோய் சம்பந்தமாக ஆய்வுகள் செய்வதற்காக பூச்சி நூல் வல்லுநர் குழு ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் கீழ் செயல்படும் திருத்தத் திட்டம் 1—4—1977 ஆம் நாளிலிருந்து இம் மாநிலத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. மலேரியாவினால் ஏற்படும் ஆரோக்கியம் குன்றிய நிலை, இறப்பு ஆகியவற்றை மலேரியா தடுப்பு நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குறைப்பதும், அறவே நீக்குவதும் இத்திருத்த திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தை நிறைவேற்றக் கூடுதல் நிதியுதவி வழங்குமாறு இந்திய அரசிடம்

கேட்டுக் கொள்ளப்பட்டது. மலேரியா நோய் பரவுவது குறித்து மூன்று திங்களுக்கொரு முறை உயர் மட்டக்குழு மறு ஆய்வு செய்கிறது. உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதனுல், மலேரியா நோய் பரவுவது குறைந்துள்ளது. 1977 முதல் அரை ஆண்டில், அதாவது 30—6—1977 ஆம் நாள் வரை 34,678 பேர்கள் மட்டும் மலேரியாவினுல் பாதிக்கப்பட்டனர் என்றும், இந்நோய் காரணமாக எவரும் மரணமடையவில்லை என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சரும நோய்.—இந்நோய் ''ட்ரபோனிமா'' என்னும் ஒரு வகை நுண்கிருமியினுல் ஏற்படுகிற மேக நோயில்லாத ஒரு வகைக் கடுமையான தொற்று நோயாகும். இச் சரும நோய் சமூகப் பொருளாதார வகையில் பிற்பட்ட மக்களிடையே பெரிதும் பரவலாகக் காணப்படுகிறது. சரும நோய் ஒழிப்புப் பிரிவுகள் ஆறு, இம் மாநிலத்தில் செயல்படுகின்றன. 1976-77 ஆம் ஆண்டில் 1,330 கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டன. 330 பேர் சரும நோய் கண்டுள்ளனர் என்று பதிவு செய்யப்பட்டது. 122 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

நரம்புச் சிலந்தி நோய் (Guinea Worm).—நடைக்கிணறுகள், குளங்கள் ஆகியவற்றின் தண்ணீரையே நம்பியிருக்கும் மக்களிடத்தில் இந்நோய் எளிதாகப் பரவுகிறது. இந்நோய் வராமல் கட்டுப்படுத்துவதற்காக நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களில் செயல்பட்டு வருகிறது.

கருங்காய்ச்சல் (Kala Azar).—இராமநாதபுரத்தில் கருங்காய்ச்சல் நோய் கண்டுள்ள பகுதிகளில் ஆய்வு நடத்துவதும் நுண்மங்கடத்தி இனங்கள் எந்த அளவுக்குப் பரவியுள்ளன என்பதைக் கண்டறிய மணல் ஈக்கிருமிகளைச் சேகரிப்பதும் முக்கியப் பணியாகும். கருங்காய்ச்சல் தொற்றியுள்ள நோயாளிகள் அருகேயுள்ள அரசு மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சிகிச்சைக்காக அனுப்பப்படுகின்றனர். 1976-77 ஆம் ஆண்டில் 2,119 கிராமங்களில் ஆய்வுகள் செய்யப்பட்டன. 3,388 பூச்சிக்கிருமிகள் சேகரிக்கப்பட்டன. 20 பேருக்கு நோய் கண்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

பள்ளிக் குழந்தைகளின் உடல்நலம்.

1965 ஆம் ஆண்டில் பள்ளிக் குழந்தைகளின் உடல் நலப் பணிகள் திட்டம் தொடங்கப்பட்டது. தற்போது இத்திட்டம் 48 ஆரம்பச் சுகாதார நிலையங்களிலும், ஐந்து நகராட்சிகளிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்புற பகுதிகளில், ஆண்டொன்றுக்கு 10,000 பள்ளிக் குழந்தைகளுக்கு

மருத்துவப் பரிசோதனை செய்ய வேண்டும் என்று இலக்கிடப்
பட்டிருக்க, கிராமப்புறப் பகுதிகளில் ஆண்டுதோறும் 2,000
குழந்தைகளுக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படுகிறது.
உடல் நலம் குன்றியிருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் மாணவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு துணைச்சத்துணவு வழங்கப்
படுகிறது. சிறப்பாகச் சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம்
எனக் கருதப்படுகிற குழந்தைகள், சிகிச்சைக்காக அருகிலுள்ள
மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். 1976-77 ஆம்
ஆண்டில் மொத்தத்தில் 1,20,480 பள்ளிக் குழந்தைகளுக்கு
மருத்துவப் பரிசோதனை நடத்தப்பட்டது. 1977-78 ஆம் ஆண்
டில் இத்திட்டத்தை மேலும் 5 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு
விரிவுபடுத்த கருதப்பட்டுள்ளது.

உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்.

தற்போது, அனைத்து மாநகராட்சிகள், ஒரு சில ஊராட்சி
ஒன்றியங்கள், ஊராட்சிகள், நகரியங்கள் ஆகியவற்றில் இச்
சட்டம் செயலில் உள்ளது. மொத்தமாக 335 உள்ளாட்சி
மன்றங்கள் இதன்கீழ் வருகின்றன. இச்சட்டத்தின்கீழ் எடுத்
துக் கொள்ளப்பட்ட மாதிரிகளைக் கீழ்க் கண்ட ஆய்வுக்கூடங்கள்
பகுப்பாய்வு செய்கின்றன:—

1. சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் உணவுப் பகுப்பாய்வுக்கூடம்.

2. கிண்டி கிங் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள உணவுப் பகுப்பாய்வுக்கூடம்.

3. கோயம்புத்தூரில் உள்ள உணவுப் பகுப்பாய்வுக் கூடம்.

1976-77 ஆம் ஆண்டில், 21,777 உணவு மாதிரிகள் பகுப்
பாய்வு செய்யப்பட்டன. அவற்றில், 5,432 மாதிரிகள்
(24.9 சதவீதம்) கலப்படம் செய்யப்பட்டவையெனத் தெரிய
வந்தது. அபராதமாக விதிக்கப்பட்ட தொகை ரூ. 12.61
இலட்சமாகும். ஆய்வுக் கூடப் பணிகளை விரிவுபடுத்தும் நோக்
கத்துடன் மேலும் நான்கு ஆய்வுக் கூடங்களை மதுரை, தஞ்சாவூர்,
சேலம், பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் ஏற்படுத்த
அனுமதி வழங்கப்பட்டது. இந்த நான்கில், மதுரை, தஞ்சாவூர்
ஆகிய இடங்களில் இரண்டு ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டன.
மற்ற இரண்டு ஆய்வுக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

சுகாதாரக் கல்வி.

மக்களுக்கு சுகாதாரக் கல்வி அளிப்பது இத் துறையின் முக்கிய பணியாகும். மக்களின் முழு ஆதரவின்றி, நமது சுகாதாரம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு நிலையான, சிறந்த வழிகளைக் காணுவது கடினமாகும். கீழ்க் கண்டவை சுகாதாரக் கல்விக் கழகத்தின் குறிக்கோள்களாகும்:—

1. தங்களுடைய நடவடிக்கை முயற்சிகள் வாயிலாகச் சிறந்த ஆரோக்கியமுள்ள வாழ்க்கை நிலைகளை அடைய மக்களுக்கு உதவி செய்வது.

2. மக்கள் தங்களது சுகாதாரப் பிரச்சனைகளை புரிந்து கொள்ளவும் ஆரோக்கிய வாழ்வுக்குரிய பொறுப்பை ஏற்கவும் உதவுவது.

3. சுகாதாரக் கொள்கைகள், திட்டங்கள் ஆகியவற்றில் மக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் திரட்டுதல்.

4. சுகாதார நலப் பணியாளர்த் தொகுதியினருக்கு சுகாதாரக் கல்வி முறைகளிலும் உத்திகளிலும் பயிற்சி அளித்தல்.

முக்கியமாக மக்கள் கொண்டுள்ள சுகாதார அறிவு, மனப்பான்மை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றையொட்டி சுகாதாரப் பிரச்சனைகளின் பல்வேறு கூறுகளைக் கண்டறிவதற்கான தெரிந்தெடுத்த பிரச்சனைகளை ஆய்வுப் பிரிவு எடுத்துக் கொள்கிறது. அதன் பிறகு விரும்பத்தக்க புதிய சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றுமாறு மக்களை ஊக்குவிப்பதற்கான புதிய கருத்துக்களையும் தகவல்களையும் அவர்களுக்கு வழங்கும் பொருட்டு, வழி முறைகளையும், உத்திகளையும் இப்பிரிவு ஆய்வு செய்கிறது.

1976 ஆம் ஆண்டில் ''ஆரம்பச் சுகாதார நிலையப் பணியாளர்கள் ஆற்றிய சுகாதாரப் பணிகள்'' குறித்த ஆய்வு முடிக்கப்பட்டது. மேக நோய்களைக் குறித்த சமூகக் கூறுகள் தொடர்பான ஆய்வு ஒன்றை மேற்கொள்ளும் திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. சுகாதாரக் கல்விக் கழகத்தின் பிற முறை நடவடிக்கைகள் அனைத்திலும் இப்பிரிவு பங்கு கொண்டது. சுகாதார ஆய்வு செய்முறை விளக்க நிலையம், எந்தப் பகுதிகளில் பல்வேறு சுகாதாரக் கல்வி நடவடிக்கைகளை சுகாதாரக் கல்வி பயிற்சியாளருக்கு (பணிக்கு முன்பும் பணியின் போதும்) செயல்முறையில் விளக்க இயலுமோ அந்தப் பகுதிகளில், தனது களப்பணிகளை மேம்படுத்தும். இப் பிரிவு, வேளச்சேரி ஆரம்பச் சுகாதார நிலையத்தை சுகாதாரக் கல்வி செயல் விளக்கப்பகுதியாக வளர்ச்சி அடையச் செய்துள்ளது.

திரைப்படங்கள், துண்டுப்படங்கள், திரைப்பட சிலைடுகள், சுவரொட்டிகள், வெளியீடுகள், கையேடுகள் போன்ற பல்வேறு சுகாதாரக் கல்விச் சாதனங்களை பிரசாரப் பிரிவு தயாரிக்கிறது, பெற்றுக் கொள்கிறது, சேமித்து வைக்கிறது, அவற்றை வழங்கி வருகிறது. சுகாதாரக் கல்விச் சாதனங்களை தயாரிப்பதில் சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சியும் அளிக்கிறது.

1976-77 ஆம் ஆண்டில், பிரசாரப் பிரிவுடன் இணைக்கப்பட்டுள்ள அச்சகம் 117 வெளியீடுகளை வெளியிட்டது. பொது மக்கள், கல்வி நிலையங்கள், மருத்துவமனை முதலியனவற்றில் திரையிடுவதற்காக பல்வேறு அரசு, தொண்டு நிறுவனங்களுக்கு 1,030 திரைப்படங்களைப் பிரச்சாரப் பிரிவின் திரைப்படத் தொகுதி அனுப்பி வைத்தது. மாநிலம் முழுவதிலும் 139 திரைப்படக்காட்சிகளை இப்பிரிவு நடத்தியது.

பிரசார பிரிவைச் சேர்ந்த பொம்மலாட்டப் பிரிவு, ஊட்டச் சத்துணவு, காலரா, பெரியம்மை, மலேரியா கட்டுப்பாடு தொடர்பான 52 பொம்மலாட்டக் காட்சிகளுக்கு ஏற்பாடு செய்தது. சென்னை மாநகரிலும் சென்னை மாநகரைச் சுற்றிலும் சுகாதார பொருட்காட்சிகள் நடத்த வலம்வரும் பொருட்காட்சிப் பிரிவு ஒன்று அனுப்பப்பட்டது. 20 பெரிய சிறிய பொருட்காட்சிகள் நடத்தப்பட்டன. சுகாதாரம் சம்பந்தப்பட்ட ஐந்து சிறு திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிரசாரப் பணியை மேற்கொள்ள பிரசாரப் பிரிவின் பணியாளர்கள் அனைவரும் முழு அளவில் ஈடுபடுத்தப்பட்டனர்.

பொதுச் சுகாதார நிறுவனம், பூவிருந்தவல்லி.

(அ) சுகாதாரப் பிரிவு, பூவிருந்தவல்லி.—இந்தச் சுகாதாரப் பிரிவில் பொதுச் சுகாதாரத் திட்டங்கள் அனைத்தும் 1976-77 ஆம் ஆண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. பேறு காலத்தின்போது எத்தனைபேர் இரத்தசோகை நோயினால் பாதிக்கப்பட்டனர் என்பது குறித்தும் வி.டி.ஆர். எல். ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. குழந்தைகளுக்கான அட்டைகள், குழந்தைகள் சுகாதாரம், எடை அட்டைகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டது. இந்தக் காலத்தில், இப்பிரிவு அம்மைநோய் கண்டவர்கள் உள்ளனரா என்று தீவிரமாகத் தேடிக்கண்டுபிடிக்கும் பணித் திட்டத்தை மூன்று முறை மேற்கொண்டது. இத்திட்டம் வெற்றியடையச் செய்வதற்கு பொதுச் சுகாதாரப் பணியாளர்கள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளனர். ஆய்வுத் திட்டங்களை

நடத்தியதன் மூலம், பொதுமக்களும் பயனடைந்துள்ளனர். மருத்துவ, மருத்துவ துணைப்பணியாளர்களுக்கு வழக்கமான பயிற்சித்திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டன.

(ஆ) மறுபயிற்சி நிலையம், பூவிருந்தவல்லி.—1976-77 ஆம் ஆண்டில் ஐந்து பயிற்சித் திட்டங்கள் நடத்தப்பட்டன. இதில், 32 மருத்துவ அதிகாரிகளும், 16 சுகாதார ஆய்வாளர்களும், 18 சுகாதாரப் பார்வையாளர்களும் இருந்தனர். இந்தப் பயிற்சியில் நேரிடை பயணங்களும் அடங்கும். இந்தப் பயிற்சியின் ஒரு பகுதியாக பயிற்சி பெறுபவர்கள் பல்வேறு நிறுவனங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சுகாதார அதிகாரிகளுக்கு குறுகிய காலப் பயிற்சி வகுப்புகள் நான்கு பிரிவுகளாக நடத்தப்பட்டன. இந்தப் பயிற்சி வகுப்பில் பதினெட்டு சுகாதார அதிகாரிகள் கலந்து கொண்டனர். மேற்சொன்ன இரண்டு பயிற்சிகளைத் தவிர, மருத்துவ மாணவர்களுக்கும், சமூகப்பணி தேசிய பள்ளி மாணவர்களுக்கும் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

(இ) ஆராய்ச்சி—செயல் திட்டம்.—இந்த ஆண்டு நீரடி வசதியில்லாத கழிப்பிடங்களை இத்திட்டத்தின்கீழ் உள்ள கழிப்பிடங்களாக மாற்றும் திட்டத்திற்கான தொடக்கப்பணி 1976-77 ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் தொடங்கப்பட்டது. இதில் தொடக்க நடவடிக்கையாக, ஆராய்ச்சி—செயல் திட்டக் கழிப்பிடங்கள் (RCAP latrines) கட்டுவதற்கேற்ற வீடுகளைக் கணக்கெடுக்கும் பணியை மேற்கொள்ளும்படி சுகாதார ஆய்வாளர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர். எந்த இடங்கள் தகுந்தவைகளாக இருக்கின்றனவோ அந்த இடங்களில் தேர்விற்கேற்ப அவ்வகைக் கழிப்பிடங்களாக மாற்றுவது அல்லது அவற்றை கட்ட நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது. இத்திட்டத்திற்காக ஆலந்தூர், பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், திருவள்ளூர் ஆகிய இடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் மேற்சொன்ன இடங்களில் 727 வீடுகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 3,256 வீடுகளில் நீரடி வசதியில்லாத கழிப்பிடங்கள் இருந்தன. இந்த ஆண்டுத் திட்டத்தின்படி, புதிதாகக் கழிப்பிடங்கள் கட்டிக்கொடுப்பதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, 728 புதிய வீடுகளுக்கு சென்று விரிவான சுகாதாரக் கல்வி போதிக்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் கழிப்பிடம் கட்டும் பணி நடந்தேறி வருகிறது.

வளர்புரத்தில் சத்துணவுஅளிக்கும் திட்டம், ஐந்தாண்டுக்கான செயல்முறை ஆராய்ச்சித் திட்டத்தில் ஒன்றாகும். இது ஆராய்ச்சித் துறையில் இரண்டாவது செயல் பணியாகும்.

டிசம்பர் திங்கள் முடிந்து இந்த ஆண்டுத் தொடக்கத்தில் உணவு முறைகளில் மாறுதல்களுக்கான வழிவகைகளை கண்டறிவதற்கான பலன் தரும் சத்துணவு முறைகளைப் பயன்படுத்த தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அவர்களது உணவு முறைகள், உணவுச் சேமிப்பு தயாரிப்பு, பயன்பாடு ஆகியவற்றை ஆய்ந்து நிச்சயித்து அறிந்து, உள்ளூரில் கிடைக்கக்கூடிய ஆதாரங்களின் அடிப்படையில் அவர்களது வருமானத்திற்குள் மேற்கொள்ளக்கூடிய மேம்பட்ட உணவு முறைகளைத் தெரிவித்தல்.

(ஆ) சரிவிகித உணவின் முக்கியத்துவத்தை வலியுறுத்தல்.

(இ) சமூகப் பொருளாதார நிலைகள், சத்துணவு குறைந்த நிலை ஆகியவற்றின் அடிப்படையில் சத்துணவு அதிகமாக தேவைப்படுவோர்க்கு இந்த சரிவிகித உணவுத்திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

(ஈ) குழந்தைகளின் ஊட்டச் சத்துப் புள்ளி விவரங்களைத் தாய்மார்களது கருவளத்துடன் தொடர்பு படுத்துவதற்கான சோதனைகள் நடந்தேறி வருகின்றன. அதன் மூலம், குழந்தையின் உடல் நலன் குடும்பத்தின் உடல் நலத்திற்கு அறிகுறியாகும் என்று குறிப்பிடுவது இயலும்.

குடும்பத்தினர் உணவைச் சேமிக்கும் முறை, தயாரிக்கும் முறை, உண்ணும் முறை ஆகியவற்றைப் பொறுத்த மட்டில், மக்களில் ஒரு பகுதியினர் உணவு உண்ணும் வழக்கங்கள் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. எஸ்.ஐ.இ.டி. கல்லூரியின் என். எஸ். எஸ். (N.S.S.) பிரிவைச் சார்ந்த 50 மாணவியர்களுக்கு, பல்வேறு பொதுச்சுகாதார நடவடிக்கைகள் பற்றி 10 நாட்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களுடைய பணி முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

சத்துணவுத் திட்டத்தில் முன்னேற்றம்.

துணை உணவளிப்புத் திட்டம்.—இம்மாநிலத்தில் கூடுதல் உணவளிப்புத் திட்டம் ‘கேர்’ நிறுவன உதவியுடன் 1970 ஆம் ஆண்டிலிருந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. மக்கட் தொகையில் பெரும் பிரிவினராக, பள்ளி செல்லும் வயதடையாத சிறார், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடம் காணப்படும் ஊட்ட சத்துக் குறைபாட்டைப் போக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். கேர் நிறுவனம், சோளம், சோயா, பால், சாலட், எண்ணெய்,

பாலாஹார் ஆகிய உணவுப் பொருட்களைத் தேவைப்படும் அளவு நன்கொடையாக அளிக்கின்றது. 3,052 நிலையங்கள் மூலமாக, தேவைப்படுவோருக்கு இந்த நன்கொடை உணவுப் பொருள்கள் பங்கீடு செய்யப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் அன்றாடம் சுமார் 1,10,000 பேர் பயனடைகின்றனர். 1976-77 ஆம் ஆண்டில் ஐந்தாவது முறையாக ஐம்பத்தி ஐந்து இலட்சம் பவுண்டு நன்கொடை உணவுப்பொருள்கள் வந்துள்ளன.

வரும் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படும்.

நமது மக்களின் சத்துணவு நிலையினை மேம்படுத்துவது சுகாதார வளர்ச்சி நடவடிக்கைகளில் மிக முக்கியமான ஒன்றாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து, மகப்பேறு-குழந்தை சுகாதார நிலையங்கள் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு பற்றிய கல்வி போதிக்கப்படுகிறது. மாநிலச் சத்துணவுக் கழகம், மலிவான, அதே நேரத்தில் சத்துள்ள, பல உணவுப் பொருள்களை கண்டுபிடித்து, அவற்றை விளக்குவதன் மூலம் மக்களிடையே பிரபலப்படுத்துகிறது. 21 செயல்முறை சத்துணவுத் திட்ட வட்டாரங்களிலும், சென்னைத் துறைமுக பொறுப்புக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள தண்டையார்பேட்டை வீட்டுவசதிக் காலனியிலும், மூலச்சத்துணவு ஊட்டமுறை ஆய்வுகள் செய்யப்பட்டன. பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள், கருத்தரித்துள்ள, பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோர் இந்த ஆய்வில் அடங்குவர். இத்திட்டம் 1977-78 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படும். தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டையிலும், செங்கற்பட்டு மாவட்டம் போரூரிலும், சிறார்களுக்கும், வயது வந்தவர்களுக்கும் ரிபாப்ளாவின் (Riboblavin) சத்துக்குறைபாடு காரணமாக ஏற்படும் ஆங்குலர் ஸ்டாமா டெட்டிஸ் (வாய் அழற்சியும், உடல் நலிவும்) என்னும் வியாதி வருவதற்கான காரணங்கள் குறித்து ஆய்வுகள் நடத்தப்பட்டன. பள்ளி செல்லும் வயதடையாச் சிறார்களுக்கும், பேறு காலத்தை எதிர் நோக்கியுள்ள தாய்மார்களுக்கும், பிரசவித்த தாய்மார்களுக்கும் ஹெமோகுளோபின், வைட்டமின் குறைபாடு குறித்த பரிசோதனைகளும் நடத்தப்பட்டன. அறிவியல், ஆராய்ச்சி, பகுப்பாய்வுப் பணிகளை மேற்கொள்வதற்காக நுண்ணியிரியல்-உயிர் வேதியியல் ஆய்வுகூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. விப்பி பாராஹேமோ லைட்டியன்ஸின்

(Vibbie Parahapmolytiens) தொற்றுநோய் தனித்தன்மையையும், அந்த நோய்கண்டிருப்பது குறித்தும் ஆய்வுகளை மேற்கொள்ளவும் இந்தப் பரிசோதனைக்கூடம் கருதியுள்ளது. (1) மதுரை மாநகர், (2) தருமபுரி மாவட்டத்தில் தல்லி வட்டாரம், (3) மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை ஆகிய மூன்று இடங்களில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணித் திட்டம் செயலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மருத்துவச் சோதனை, பேறுகால மகளிருக்கு ஏற்படும் இசிவு நோய் வராமல் தடுத்தல், கூடுதல், உணவு, சத்துணவுக் கல்வி ஆகியவை இந்தப் பணியில் அடங்கும். மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதியாக, கல்ராயன் மலைப்பகுதிகளில் உள்ள மலைஜாதியினரிடையே, சத்துணவுக் கழகப் பணியாளர்கள் ஊட்டமுறை, சத்துணவு பற்றிய ஆய்வுகளை நடத்தி வருகின்றனர்.

செய்முறைச் சத்துணவுத் திட்டம் அமுலில் இல்லாத இடங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் வட்டாரம் ஒன்றில், குழந்தைகளிடையே கண்பார்வை இழப்பைக் கட்டுப்படுத்துவதற்கும், தடுப்பதற்குமான ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

சமூக நல இயக்குநர், சென்னை, மகளிர் குழந்தைகள் மருத்துவ மனையிலுள்ள குழந்தை நல நிலைய இயக்குநர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பிறப்பு இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.

பிறப்பு, இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள், சமுதாய நல்வாழ்வு நிலையைக் காட்டும் ஆதாரங்களாகும், நீண்ட காலத் திட்டங்களைத் திட்டுவதற்கும் பல்வேறு பொதுச்சுகாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கும், முறையாகவும், உரிய நேரத்திலும் பிறப்பு இறப்பு முதலியவை குறித்த புள்ளி விவரங்களைச் சேகரிப்பது இன்றியமையாததாகும். திட்ட வளர்ச்சிக்கு பிறப்பு, இறப்பு பற்றிய சரியான புள்ளி விவரங்கள் இன்றியமையாதவையாகும். இவற்றை நோக்கங்களாகக் கொண்டு, பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்கள் சேகரிப்பதை மேம்படுத்துவதற்கு நிர்வாக ஆலோசனைகள் நல்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படுகின்றன.

நம் மாநிலத்தில், 1975 ஆம் ஆண்டில் குடிமக்கள் பதிவு திட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பிறப்பு வீதம் 22.9 ஆகும். நம் மாநிலத்தில் 1975 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட இறப்பு விகிதம் 8.3 ஆகும். குழந்தை

இறப்பு விகிதம் 46.6 ஆக பதிவு செய்யப்பட்டது. மாதிரிப் பதிவுத் திட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட பிறப்பு, இறப்பு விகிதங்கள் முறையே 32.8, 17.7, 128.9 ஆகும்.

மாதிரிப் பதிவுத் திட்டம்.— எல்லா சுகாதார திட்டங்களின் பயனையும் ஆய்வு செய்வதற்கு, பிறப்பு, இறப்பு விகிதங்களையும் மக்கள் தொகை வளர்ச்சி விகிதங்களையும் கண்டறிவது அவசியமானதாகும். குடிமக்கள் பதிவு முறை போதுமான அளவில் இல்லை. அதனால், நம்பகமான, பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கு மாதிரிப் பதிவுத் திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் மூலம் சேகரிக்கப் பட்டுள்ள பிறப்பு, இறப்பு விகிதங்கள், குடும்பநலத் திட்டத்தின் பயனை ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

முன் மாதிரிப் பதிவு திட்டம்.—இறப்புக்கான உண்மைக் காரணத்தின் புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதே இத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்திற்கான களப் பணியாளர் ஆரம்பச் சுகாதார நிலையத்தின் சுகாதார ஆய்வாளராவார். இத்திட்டத்தின் கீழ் 34 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. 1—1—1977-லிருந்து இத்திட்டத்தின் கீழ், மேலும் எட்டு ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. மருத்துவ அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் இறப்பின் சூழ்நிலைகளை விசாரணை செய்து, பிரேதப் பரிசோதனையின் மூலம் இறப்பின் உண்மைக் காரணங்கள் குறித்த விவரங்களை முகவர்கள் சேகரிக்கின்றனர்.

மருந்துப் பொருள் கட்டுப்பாடு.

இம்மாநிலத்தில் 1976ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் வரை, சுகாதாரப் பணிகள், குடும்ப நலத் திட்ட இயக்குநர் மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருந்தார். சுகாதாரப் பணிகள் குடும்ப நலத் திட்ட துறைகளைச் சீரமைத்ததின் விளைவாக, பொதுச் சுகாதாரம்-நோய்த் தடுப்பு மருந்து இயக்குநர் மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு அதிகாரியாக இருக்கிறார். மாநில மருந்துப் பொருள் இணைக் கட்டுப்பாட்டு அதிகாரி ஒருவரும், மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு உதவியாளர்கள் இருவரும் மற்றும் ஏனைய பணியாளர்களும் இவருக்கு உதவி புரிகின்றனர்.

இதன் முக்கிய பணிகளாவன:

1. மருந்துப் பொருள்கள்-ஒப்பனைப் பொருள்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதையும் விற்பனை செய்வதையும், பங்கிடுவதையும் முறைப்படுத்துவதன் மூலம், மருந்துப் பொருள்கள் ஒப்பனைப் பொருள்கள் சட்டத்தைச் செயல்படுத்துதல்.

2. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ்ப் பிறப்பிக்கப்பட்ட 1970 ஆம் ஆண்டு மருந்துப் பொருள் விலைக் கட்டுப்பாட்டு ஆணையின் விதித் துறைகளைச் செயல்படுத்துதல்.

3. 1954 ஆம் ஆண்டு மருந்துப் பொருள்கள், மந்திர ஜாலங்களின் மூலம் நோயைக் குணப்படுத்தும் சட்டத்தின் விதித் துறைகளைச் செயல்படுத்துதல் (ஆட்சேபனைக்குரிய விளம்பரங்கள்).

4. அபாயகரமான மருந்துப் பொருள்கள் சட்டத்தின் கீழ் அபாயகரமான மருந்துப் பொருள்களை வைத்திருப்பதும், தயாரிப்பதும், விற்பனை செய்வதும் முறைப்படுத்தப்படுகிறது.

5. மருந்துப் பொருள்கள் இறக்குமதிக்கு ஏற்பாடு செய்யும் அதிகாரி, மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

மருந்துப் பொருள் ஆய்வாளர்களால் எடுக்கப்பட்ட மருந்துப் பொருள்கள் அலங்காரப் பொருள்களின் மாதிரிகள், கிண்டி, கிங் நிறுவனத்தில் அரசு பகுப்பாய்வாளர்களால் பரிசோதனை செய்யப்படுகின்றன.

தலைமையிடத்தில் எல்லா வசதிகளும் கொண்ட மருந்துப் பொருள்கள் சோதனைக்கூடம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற் குறிப்புகள் வகுக்கப்பட்டு வருகின்றன.

பல்வேறு சட்டங்களின்கீழ் வழக்குகள் தொடர்தல் தவறு செய்யும் உரிமைதாரர்கள், நபர்கள் மீது நிர்வாக நடவடிக்கைகள் எடுத்தல் ஆகியவை தவிர போதையூட்டும் மருந்துப் பொருள்கள், சாராவி கலந்த தயாரிப்புகள், உள மயக்கம் தரும் பொருள்கள் ஆகியவற்றைத் தவறான முறையில் பயன்படுத்துவதைத் தவிர்க்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு போதைப் பொருள் புலனாய்வுக் கழகத்துடன் இணைந்து இத்துறை செயல்படுகிறது. இன்றியமையாத மருந்துப் பொருள்கள், போதிய அளவில் தேவையான தரத்துடன் உரிய காலத்தில் பொதுமக்களுக்குக் கிடைப்பதை உறுதிப் படுத்தும் பொருட்டு, அவை உரிய அளவுக்குக் கிடைக்கின்றனவா என்பது குறித்து உன்னிப்பாகக் கவனிக்கப்படுகிறது. மருந்துப் பொருள் பற்றுக்குறை காணப்படும்போது பரிகார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கிராம மக்கள் நல்வாழ்வு திட்டம்.

சமுதாய மக்கள் நல்வாழ்வு தொழிலாளர்கள் திட்டத்தின் மூலம் கிராம மக்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. அவர்கள் சிறு நோய்களுக்கு மருத்துவ வசதிகளையும், தடுப்பு வசதிகளையும், சுகாதார கல்வியினையும் முதலுதவியினையும் அளிப்பார்கள். அவர்கள் சமுதாயத்திற்கும் சுகாதார மருத்துவ வசதிகள் அளிப்பவர்களுக்கும் ஓர் பிணைப்பாக இருப்பார்கள். ஆயிரம் மக்களுக்கு ஒருவர் என தமிழ்நாட்டில் 30,000 சமுதாய மக்கள் நல்வாழ்வு தொழிலாளர்கள் இருப்பார்கள்.

தமிழ்நாட்டில் படித்தவர்கள் அதிகமாக இருப்பதினாலும் ஒருங்கமைந்த சிறந்த சாலை வசதிகள் இருப்பதினாலும், தமிழக அரசு முறையான மருத்துவர்களின் மூலம் நடமாடும் மருத்துவ நிலையங்களைக் கொண்டு கிராம மக்களுக்கு சிறந்த மருத்துவ வசதிகளைச் செய்ய ஓர் மாற்றுத் திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளது.

சுகாதார கல்வித் திட்டம் (யுனிசெப் உதவி பெறுவது), திருநெல்வேலி மாவட்டம்.

சுகாதாரக் கல்வியின் முக்கியத்துவத்தை மக்கள், நன்குணரச் செய்து, நல்ல பலனை எய்துவதற்காகவே இத்திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இப்புதிய திட்டம், கிராமச் சுகாதார தொண்டர்கள் மூலம் பொதுமக்களுக்குச் சுகாதாரக் கல்வியைக் கற்பிக்கக் கருதியுள்ளது. இந்தக் கிராமச் சுகாதார தொண்டர்கள் கிராமங்களிலிருந்து தெரிந்தெடுக்கப்படுகின்றனர். இவர்களுக்கு உரிய பயிற்சியும், தேவையான செய்தித் தொடர்பு வசதிகளும் செய்து கொடுக்கப்படும். இதன் மூலம், மக்கள் சுகாதாரத்தில் கவனம் செலுத்துவர்; இதனால், ஏற்கனவேயுள்ள சுகாதாரப் பணிகள் முழுமையாகப் பயன்படுத்தப்படும்.

இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு :—

(1) மாவட்டத்திலுள்ள சுகாதாரப் பணிகள் அனைத்திற்கும் செய்தித் தொடர்பு வசதி செய்து கொடுத்தல்.

(2) மாவட்டத்திற்கு ஏற்படக்கூடிய சிறப்புச் சுகாதார தேவைகளையும் சிக்கல்களையும் தீர்க்கும் வகையில் செய்தித் தொடர்பு வசதிகளைச் செய்துகொடுத்தல்.

(3) கிராமத்தினர் பிறரின் உதவியை நாடாது தங்களின் சொந்த முயற்சிகளைக் கொண்டே, நோயிலிருந்து தங்களைக் காத்துக்கொண்டு, தங்கள் உடல் நலனை மேம்படுத்திக்கொள்வது எவ்வாறு என்பதை அவர்களிடையே அறியச் செய்தல்.

(4) மாவட்டத்தில் உள்ள பல்வேறு சுகாதாரப் பணிகள் குறித்த தகவலை அவர்களுக்குத் தெரிவித்தல்.

(5) பிற மாவட்டங்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற ஒரு முன் மாதிரி திட்டமாக அமையும்படி ஒரு திட்டத்தை உருவாக்குதல்.

வளர்ச்சி வட்டார அளவில் வளர்ச்சி வட்டார அதிகாரியைத் தலைவராகவும், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரியைச் செயலாளராகவும் கொண்ட சுகாதாரக் கல்விக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இதைப்போலவே, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகவும், மாவட்டச் சுகாதார அதிகாரியைச் செயலாளராகவும் பல்வேறு மாவட்ட அதிகாரிகளை உறுப்பினர்களாகவும் கொண்டு சுகாதாரக் கல்விக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழு மூன்று திங்களுக்கு ஒருமுறை கூடி மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு சுகாதாரத் திட்டங்கள் குறித்து விவாதிக்கிறது. இத்திட்டங்களை நிறைவேற்றுகையில் சுகாதாரக் கல்வி வாய்ப்புகள் கண்டறியப்பட்டு; பல்வேறு துறைத் தலைவர்களின் கருத்துகள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

சுகாதாரக் கல்வித் திட்டம், தற்போது, மலேரியா ஒழிப்பு, குடிநீர் வழங்கள், சுற்றுப்புற சுகாதாரம், குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடுதல் ஆகிய பணிகளைக் கொண்டுள்ளது.

நாங்குனேரி வளர்ச்சி வட்டாரம் முன்னோடி ஆய்வுக்காகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து கிடைக்கும் அனுபவத்தின் அடிப்படையில், பிற வளர்ச்சி வட்டாரங்களுக்கும் நீட்டிக்கப்படும், வளர்ச்சி வட்டாரத்தில் ஒவ்வொரு முக்கிய கிராமத்திற்கும், ஒருவராக, மொத்தம் 28 சுகாதாரப் பணியாளர்கள் ஏற்கனவே தெரிந்தெடுக்கப்பட்டுள்ளனர். இந்தப் பணியாளர்களைத் தெரிந்தெடுப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இத்தொண்டர்களை கிராமத்திலுள்ள மக்கள் ஏற்கும் வகையில், சுகாதாரத் துறை, ஊராட்சி ஒன்றிய எல்லைச் சுகாதாரப் பணியாளர்கள் அவர்களைத் தெரிந்தெடுத்துள்ளனர்.

திரைப்பட சாதனங்கள்.—கிராமத்ினருடன் களப் பணியாளர்கள் கலந்துரையாடுகையில், அவர்களின் பயனுக்காக, சுகாதாரப் பணியாளர்கள், கிராமத் தொண்டர்களின் உதவியுடன், திரைப் படங்களைத் தயாரிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

கண்காணிப்பும் மதிப்பீடும்.—தனிப்பட்ட ஒரு மதிப்பீட்டு முகவரைக்கொண்டு இத்திட்டத்தைக் கண்காணிக்கவும், மதிப்பிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட வகையில் மதிப்பீடுகள் செய்யப்படும் :—

(1) இத்திட்டத்தை சமுதாயத்தினர் ஏற்றுக்கொள்வது, அது குறித்து அவர்கள் தொடர்ந்து காட்டும் அக்கறை ஆகியவற்றைப் பொறுத்தவரையில் கிராமச் சுகாதாரப் பணியாளர்களுக்குள்ள தனித் திறமையை மதிப்பிடுதல்.

(2) பயன்படுத்தும் செய்தித் தொடர்பு வசதிகளின் பலனளிக்கும் தன்மையை மதிப்பிடுதல்.

(3) தொண்டர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சியின் பலனளிக்கும் தன்மையை மதிப்பிடுதல்.

(4) பாடமுறை மூலம் கிடைத்த பயிற்சியின் பயன், திருத்தங்கள், மேம்பாடுகள்.

(5) தற்போதைய அறிக்கை முறையில் மேம்பாடு.

(6) இந்த முன்னோடித் திட்டங்கள் வாயிலாக, சிறப்பு நிலைமைகள் ஏதும் பெறப்படின் அவற்றைக் கவனமாக மதிப்பிடுவது உட்பட திட்டங்களின் ஒப்புமை.

(7) திட்ட நோக்கங்கள் தொடர்பாக அறிந்திருத்தல், அதுகுறித்த மனப்பான்மை, செயல்முறைகள் பற்றி இத்திட்டங்கள் ஏற்படுத்தியுள்ள பொதுவான விளைவு.

சிறிய அளவிலான நோய்களுக்கு சிகிச்சையளிப்பதிலும், தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் சத்துணவு பற்றுக்குறையைக் கண்டுபிடிப்பதிலும், இரத்த சோகை, காசநோய், தொழுநோய், மலேரியா ஆகியவற்றிற்கு சிகிச்சையளிப்பதிலும், மருந்துகள் வழங்குவதிலும் தொற்றுநோய்கள் பரவியுள்ள பகுதிகளைக் கண்டறிந்து சுகாதார நிலையத்திற்கு உடனடியாக அறிவிப்பதிலும், கிராமச் சுகாதாரப் பணியாளர்களுக்குப் பயிற்சியளிக்கத் தற்போது திட்டமிடப்பட்டுள்ளது.

சுற்றுப்புற சுகாதாரத் துறை.

விரைவான தொழில் வளர்ச்சியினாலும், அதனால் ஏற்படும் நகரப் பெருக்கத்தினாலும் நீர், நிலம், காற்று மாசுபடுவது மிகவும் கவலைக்குரியது. இந்தப் பிரச்சனையின் முக்கியத்துவத்தை உணர்ந்து, தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவுப்

பொருட்களாலும், பூச்சிக்கொல்லி மருந்துகள், ரசாயன உரங்கள் இவற்றின் உபயோகத்தாலும், மனித சமுதாயத்தின் அலட்சியப் போக்கினாலும் நீர், நிலம், காற்று நச்சுப்படுவதை ஆராய்வதற்காக, தமிழக அரசு 1972 ஆம் ஆண்டு சுற்றுப்புற சுகாதாரத் துறையை நிறுவியுள்ளது. தற்சமயம் இத்துறையின் தலைமைப் பொறியாளர் நிலையில் ஒரு தனி அலுவலரும், இரண்டு உதவி நிர்வாகப் பொறியாளர்களும் உள்ளனர். இத்துறை சட்ட பூர்வமான அதிகாரங்களோ அல்லது செயல்படுத்தும் அதிகாரமே இல்லாது ஆலோசனை கூறும் அமைப்பாக இருக்கிறது.

அரசினாலோ அல்லது மற்றவர்களினாலோ அனுப்பப்படும் சூழ்நிலை மாசுபடுவது சம்பந்தமான பிரச்சனைகளை இத்துறை ஆராய்ந்து அவைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை கூறுகிறது. நமது மாநிலத்தில் சூழ்நிலை மாசுபடுவதின் தன்மையை உணர, தொழிற்சாலைகள் உபயோகிக்கும் மூலப்பொருட்கள், உற்பத்திப்பொருட்கள், உபயோகிக்கும் நீரின் அளவு, வெளியிடும் கழிவுப் பொருட்கள், மாசு தடுப்பு முறைகள் போன்ற சேகரிக்கப்பட்ட விபரங்கள் இத்துறையிலுள்ளன. குறைந்த அலுவலர்களைக் கொண்டுள்ள இத்துறை மாநிலத்தில் உள்ள சில தொழிலகங்களைப் பார்வையிட்டு, அங்குள்ள மாசு தடுப்பு முறைகளை ஆராய்ந்து அவற்றிற்கான ஆலோசனை வழங்குகிறது. தனி அலுவலரை அமைப்பாளராகக் கொண்ட நகரத் துப்புரவு துணைக்குழு ஒன்று சென்னையிலுள்ள குடிசைப் பகுதிகளின் சுகாதாரக் குறைவு, கால்நடைகளின் தொல்லைகள், மரங்களை அழித்தல், பேரிரைச்சல் முதலியவற்றை ஆராய்ந்து, சென்னை நகரின் சுற்றுப்புற சூழ்நிலையை மேம்படுத்துவதற்காக அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

நீர் மாசுபடும் சிக்கலைக் கருத்தில்கொண்டு மத்திய அரசு 1974 ஆம் ஆண்டு நீர்மாசு தடுப்புச் சட்டம் ஒன்றை நிறைவேற்றி மத்திய நீர்மாசு தடுப்பு வாரியம் ஒன்றை அமைத்துள்ளது. அநேக மாநிலங்கள் இந்த சட்டத்திற்கான ஒப்புதல் அளித்து மாநில நீர் மாசுதடுப்பு வாரியங்களை அமைத்துள்ளன. நமது மாநிலம் இன்னும் இதற்கு ஒப்புதல் தரவேண்டியுள்ளது. நீர் மாசு தடுப்புப்பற்றி மசோதா ஒன்று தயாரிக்கப்பட்டு மாநில அரசிடம் உள்ளது. மத்திய அரசின் மசோதாவையே அங்கீகரிப்பதா அல்லது மாநில மசோதாவை ஏற்பதா என்பது பற்றி தமிழக சட்ட மன்றம் முடிவுசெய்த பிறகு மாநில நீர் மாசு தடுப்பு வாரியம் அமைக்கப்பட வேண்டியிருக்கிறது.

தமிழக அரசு, ஆளுநரின் தலைமையில் சுற்றுப்புற சூழ்நிலை சம்பந்தமான கொள்கைகளையும், வளர்ச்சிப் பணிகளையும் கவனித்து ஆலோசனை கூறும் சுற்றுப்புற சூழல்காப்பு கழகம் ஒன்றை 1976-ல் அமைத்துள்ளது. இக்கழகம் 1976—77-ல்

நான்கு முறை கூடியது. புதிய தொழில்களுக்கு சுற்றுப்புற சூழல் குறித்து அனுமதி வழங்குவதற்கு இக்கழகம் வழிவகைகளை அங்கீகரித்துள்ளது. சுற்றுப்புற சுகாதாரத்துறை தனி அலுவலர் இக்கழகத்தின் செயலாளர். இத்துறை இக்கழகத்தின் அலுவலகமாக பணிபுரிகிறது. மேலும் அவர்கள் கீழ்க்கண்ட துணைக் கமிட்டிகளை நிறுவியுள்ளனர் :—

(1) நீர்வளம்.

(2) வீடு, நகரமைப்பு மற்றும் போக்குவரத்து.

(3) மக்கள் நல்வாழ்வு மற்றும் விளம்பரம்.

(4) தொழில்.

இணைப்பு III.

[38—ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கழிவுநீர் போக்கு மற்றும் குடிநீர் வழங்கல்.

அறிமுகம்.

தமிழ் நாட்டிலுள்ள நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறப் பகுதி
நுக்கான குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வடிகால் திட்டங்
ள வகுத்து, அமைத்துச் செயற்படுத்தும் பணிகளைக் கவனிக்க
ட்டபூர்வமாக அமைக்கப்பட்டுள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால்
ரியம் பொறுப்பாக்கப்பட்டுள்ளது. 14—4—1971இல் உரு
ாக்கப்பட்ட இவ்வாரியம் நகர்ப்புற, கிராமப்புறப் பகுதி
நுக்குப் பாதுகாக்கப்பட்ட நீர் வழங்கும் திட்டங்களைச் செயற்
டுத்தியதில் மகத்தான சாதனை புரிந்துள்ளது. 1976-77இல்
தன் சாதனைகளும் 1977-78இல் அதன் திட்டங்களும் வருமாறு:-

கர்ப்புறக் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்த் திட்டங்கள்:

தமிழ்நாட்டில் மதுரை, சென்னை எனும் இரு மாநகராட்சி
ளும், 93 நகராட்சிகளும், 8 நகராட்சி நகரியங்களும், 13 பேரூ
ாட்சி நகரியங்களும், 624 பேரூராட்சிகளும் உள்ளன. 1971
க்கள் தொகைக் கணக்கின்படி, இந்த நகர்ப்புற பகுதிகளில்
5·5 மில்லியன் மக்கள் இப்பகுதியில் வாழ்கின்றார்கள், இவற்
ள் சென்னை, மதுரை ஆகிய 2 மாநகராட்சிகள், 84 நகராட்சி
ள், 5 நகராட்சி நகரியங்கள், 8 பேரூராட்சி நகரியங்கள்,
) பேரூராட்சிகள் ஆகியவற்றில் இப்போது பாதுகாக்கப்பட்ட
டிநீர்த் திட்டங்கள் இருக்கின்றன. இத்திட்டங்களின் பயனை
மார் 10.37 மில்லியன் மக்கள் அதாவது நகர்ப்புற மக்கள்
தாகையின் 67 விழுக்காடு அனுபவிக்கின்றனர். எனினும் அவர்
ள் அனைவருக்கும் தேவைக்கேற்ப போதுமான குடிநீர் வழங்கப்
டுகின்றதெனக் கூறிவிட முடியாது. எத்தனையோ ஊராட்சி
ளுக்கு இன்னும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படாமல்
ள்ளது. அவர்கள் வறட்சிநிலை ஏற்படும்போதும் கோடை
ாட்களிலும் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக அதிக கஷ்டத்
க்கு உள்ளாகின்றனர். எனவே தற்போது பாதுகாக்கப்பட்ட
டிநீர்த் திட்டமே இல்லாமல் கஷ்டப்படும் இடங்களுக்குக்
டிநீர் அளிப்பதும், எஞ்சிய ஊராட்சி அமைப்புகளில்
ற்கனவே இருக்கும் குடிநீர்த் திட்டங்களை விரிவுபடுத்துவதும்
ாரியத்தின் கொள்கையாக உள்ளது. இந்த அடிப்படையில்
ாரியம் இப்போது புதுத் திட்டங்களையும், 154 நகரங்களில்
ட்ட விரிவாக்க வேலைகளையும் மேற்கொண்டுள்ளது. 1976-
7இல் 19 ஊராட்சி அமைப்புகளில் 19 திட்டங்கள் முடிக்கப்
ட்டன. மேலும் 19 புதிய திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்
ட்டன. மொத்தம் ரூ. 23.65 இலட்சம் செலவிடப்பட்டது.

1977-78 இல் 23 புதிய குடிநீர்த் திட்டங்களையும், 15 விரிவாக்கத் திட்டங்களையும் 2 வடிகால் திட்டங்களையும் வாரியம் முடித்திடத் திட்டமிட்டுள்ளது. அத்துடன் 1977-78இல், ஜூன் 1977 முடிய அரசு ஒப்பளிப்புச் செய்துள்ள 9 புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து உதவி :

கடந்த சில ஆண்டுகளில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் மிகக் கணிசமான உதவியைச் செய்துள்ளது. இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் 154 திட்டங்களில் 124 திட்டங்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவிபெற்று நடைபெறுகின்றன. அரசாங்கமும் ஆயுள் காப்பீட்டுக் கழகமும் 1:2 என்னும் விகிதத்தில், அதாவது ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து திட்ட செலவில் 2/3 பாகம் உதவித் தொகையாகப் பெறப்படுகின்றது. மீதி 1/3 பாகம் அரசாங்கம் உதவுகின்றது. 1976-77இல் தமிழ்நாட்டில் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கென தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 8.30 கோடி உதவியாகப் பெற்றுள்ளது. இதில் ரூ. 535 இலட்சம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும் ரூ. 295.49 இலட்சம் மாநில அரசிடமிருந்தும் பெறப்பட்டது.

1977-78இல் சென்னை நகர் நீங்கலான எல்லா நகர்ப் புறப் பகுதிகளுக்கும் குடிநீர் வடிகால் திட்டங்களுக்கென ரூ. 10.83 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து ரூபாய் 6 கோடி கடன் உதவி பெறவும் மாநில அரசிடமிருந்து ரூபாய் 4.83 கோடி கடன் உதவி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இருபது மில்லியன் கேலன்கள் நீரளிக்கும் திட்டம் :

இத்திட்டம் கிட்டத்தட்ட நிறைவேற்றப்பட்டு பயனளிக்கும் வகைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாகிய, மின்திட்டம் மற்றும் தூத்துக்குடி ஆல்கலிகெமிகல்சுக்கும், பிளாஸ்டிக்ரெசின் கெமிகல்ஸ் இல்லுமினேட் தொழிற்சாலைக்கும் இணைப்புக் குழாய்போடும் இரண்டு பணிகளும் நடந்தேறி வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற 1976-77இல் அரசு ஒதுக்கீடு செய்த ரூ. 26.50 இலட்சத்திற்கும் கூடுதலாக 1977-78இல் ரூ. 38.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவாணி குடிநீர்த் திட்டம் :

இத்திட்டம் கோயம்பத்தூர் நகராட்சிக்கும் அதன் அருகிலுள்ள இடங்களுக்கும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும். 36 கிலோ மீட்டர் தூரத்தில் கேரள மாநிலத்தில் சிறுவாணி

ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்து தினமும் குழாய் மூலம் 22.3 மில்லியன் கேலன்கள் நீரைக் கொண்டு வருவதன் மூலம் இது சாத்தியமாகும். இதன் மதிப்பீடு ரூ. 16.16 கோடி ஆகும். இதற்கான பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. இத்திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் (L.I.C.) ரூ. 5.16 கோடிக்கான கடன் வழங்க முன்வந்துள்ளது. அதில் ரூ. 100.00 இலட்சம் 1976-77 ஆம் ஆண்டில் அளித்துள்ளது. இத்திட்டம் முடிவடைந்தால் கோவை நகராட்சிக்கும், நீர்க் குழாய் வரும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் தினமும் தற்போது பெற்றுவரும் 4.5 மில்லியன் காலன்களுக்குப் பதில் 22.3 மில்லியன் காலன்கள் தண்ணீர் கிடைக்கும். இத்திட்டத்திற்கு இந்த ஆண்டில் (1977-78) ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்படும் ரூ. 150 இலட்சத்தையும் சேர்த்து ரூ. 404.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல நகர்ப்புறப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை வகுக்க தனி அமைப்பு ஒன்றை வாரியம் ஏற்படுத்தியுள்ளது. பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன. 83 திட்டங்களின் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. 29 திட்டங்களின் ஆய்வு முன்னேறி வருகிறது.

சிற்றூர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டம் :

சிற்றூர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்தை பெருத்த அளவில் செயல்படுத்துவதே கடந்த நான்கு ஆண்டுகளில் மிக முக்கிய திட்டமாக இருந்தது.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 25.6 மில்லியன் மக்கள் கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர். இவர்கள் 374 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 58,595 சிற்றூர்களிலும் கிராமங்களிலும் பரந்து கிடக்கின்றனர். தற்போதைய நிலைமையில் 4,916 சிற்றூர்கள் குடிநீர் வழங்குவதற்கு வசதியின்றி உள்ளன ; 2,230 சிற்றூர்களில் குடிநீர் வசதி இருந்தும் அவை தொற்று நோய்கள் பரவாதிருக்கும் முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீராக இல்லை. 11,814 சிற்றூர்களில் குடிநீர் போதிய அளவில் இல்லை ; இன்னும் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள ஏறக்குறைய 1,500 சிற்றூர்களில் உள்ள குடிநீர் மிகுந்த குளோரைடு உப்பு நிறைந்துள்ளதாய் இருக்கிறது. சிற்றூர்ப்பகுதிகளில் உள்ள மக்கள் அனைவருக்கும் போதுமான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று பெரிய அளவில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்படி 1971-72 முதல் 1975-76 வரையிலான நான்கு ஆண்டுகளில் 1332.27 இலட்சம் ரூபாய் செலவில் 7,597 கிராமங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட்டன.

1977-78 இல் 23 புதிய குடிநீர்த் திட்டங்களையும், 15 விரிவாக்கத் திட்டங்களையும் 2 வடிகால் திட்டங்களையும் வாரியம் முடித்திடத் திட்டமிட்டுள்ளது. அத்துடன் 1977-78இல், ஜூன் 1977 முடிய அரசு ஒப்பளிப்புச் செய்துள்ள 9 புதிய திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து உதவி :

கடந்த சில ஆண்டுகளில் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் மிகக் கணிசமான உதவியைச் செய்துள்ளது. இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் 154 திட்டங்களில் 124 திட்டங்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் உதவிபெற்று நடைபெறுகின்றன. அரசாங்கமும் ஆயுள் காப்பீட்டுக் கழகமும் 1:2 என்னும் விகிதத்தில், அதாவது ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து திட்ட செலவில் 2/3 பாகம் உதவித் தொகையாகப் பெறப்படுகின்றது. மீதி 1/3 பாகம் அரசாங்கம் உதவுகின்றது. 1976-77இல் தமிழ்நாட்டில் குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கென தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ. 8.30 கோடி உதவியாகப் பெற்றுள்ளது. இதில் ரூ. 535 இலட்சம் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்தும் ரூ. 295.49 இலட்சம் மாநில அரசிடமிருந்தும் பெறப்பட்டது.

1977-78இல் சென்னை நகர் நீங்கலான எல்லா நகர்ப் புறப் பகுதிகளுக்கும் குடிநீர் வடிகால் திட்டங்களுக்கென ரூ. 10.83 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடம் இருந்து ரூபாய் 6 கோடி கடன் உதவி பெறவும் மாநில அரசிடமிருந்து ரூபாய் 4.83 கோடி கடன் உதவி பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இருபது மில்லியன் கேலன்கள் நீரளிக்கும் திட்டம் :

இத்திட்டம் கிட்டத்தட்ட நிறைவேற்றப்பட்டு பயனளிக்கும் வகைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாகிய, மின்திட்டம் மற்றும் தூத்துக்குடி ஆல்கலிகெமிகல்சுக்கும், பிளாஸ்டிக்ரெசின் கெமிகல்ஸ் இல்லுமினேட் தொழிற்சாலைக்கும் இணைப்புக் குழாய்போடும் இரண்டு பணிகளும் நடந்தேறி வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்ற 1976-77இல் அரசு ஒதுக்கீடு செய்த ரூ. 26.50 இலட்சத்திற்கும் கூடுதலாக 1977-78இல் ரூ. 38.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சிறுவாணி குடிநீர்த் திட்டம் :

இத்திட்டம் கோயம்பத்தூர் நகராட்சிக்கும் அதன் அருகிலுள்ள இடங்களுக்கும் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும். 36 கிலோ மீட்டர் தூரத்தில் கேரள மாநிலத்தில் சிறுவாணி

ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்து தினமும் குழாய் மூலம் 22.3 மில்லியன் கேலன்கள் நீரைக் கொண்டு வருவதன் மூலம் இது சாத்தியமாகும். இதன் மதிப்பீடு ரூ. 16.16 கோடி ஆகும். இதற்கான பணிகள் வேகமாக நடைபெறுகின்றன. இத்திட்டத்திற்கு ஆயுள் காப்பீட்டுக் கழகம் (L.I.C.) ரூ. 5.16 கோடிக்கான கடன் வழங்க முன்வந்துள்ளது. அதில் ரூ. 100.00 இலட்சம் 1976-77 ஆம் ஆண்டில் அளித்துள்ளது. இத்திட்டம் முடிவடைந்தால் கோவை நகராட்சிக்கும், நீர்க் குழாய் வரும் வழியிலுள்ள கிராமங்களுக்கும் தினமும் தற்போது பெற்றுவரும் 4.5 மில்லியன் காலன்களுக்குப் பதில் 22.3 மில்லியன் காலன்கள் தண்ணீர் கிடைக்கும். இத்திட்டத்திற்கு இந்த ஆண்டில் (1977-78) ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து பெறப்படும் ரூ. 150 இலட்சத்தையும் சேர்த்து ரூ. 404.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பல நகர்ப்புறப் பகுதிகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துவதற்கான திட்டங்களை வகுக்க தனி அமைப்பு ஒன்றை வாரியம் ஏற்படுத்தியுள்ளது. பல திட்டங்கள் ஆய்வில் உள்ளன. 83 திட்டங்களின் ஆய்வு முடிக்கப்பட்டுள்ளது. 29 திட்டங்களின் ஆய்வு முன்னேறி வருகிறது.

சிற்றூர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டம் :

சிற்றூர்ப் பகுதிகளில் குடிநீர் வழங்கும் திட்டத்தை பெருத்த அளவில் செயல்படுத்துவதே கடந்த நான்கு ஆண்டுகளில் மிக முக்கிய திட்டமாக இருந்தது.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்குப்படி 25.6 மில்லியன் மக்கள் கிராமப் புறங்களிலேயே வாழ்கின்றனர். இவர்கள் 374 ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 58,595 சிற்றூர்களிலும் கிராமங்களிலும் பரந்து கிடக்கின்றனர். தற்போதைய நிலைமையில் 4,916 சிற்றூர்கள் குடிநீர் வழங்குவதற்கு வசதியின்றி உள்ளன ; 2,230 சிற்றூர்களில் குடிநீர் வசதி இருந்தும் அவை தொற்று நோய்கள் பரவாதிருக்கும் முறையில் பாதுகாக்கப்பட்ட குடிநீராக இல்லை. 11,814 சிற்றூர்களில் குடிநீர் போதிய அளவில் இல்லை ; இன்னும் கடலோரப்பகுதிகளில் அமைந்துள்ள ஏறக்குறைய 1,500 சிற்றூர்களில் உள்ள குடிநீர் மிகுந்த குளோரைடு உப்பு நிறைந்துள்ளதாய் இருக்கிறது. சிற்றூர்ப்பகுதிகளில் உள்ள மக்கள் அனைவருக்கும் போதுமான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று பெரிய அளவில் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின்படி 1971-72 முதல் 1975-76 வரையிலான நான்கு ஆண்டுகளில் 1332.27 இலட்சம் ரூபாய் செலவில் 7,597 கிராமங்களுக்கு குடிநீர் வசதிகள் செய்யப்பட்டன.

[1977 ஆகஸ்ட் 13

1976-77 ஆம் ஆண்டில் கைப்பம்புகளுடன் 8,200 துளைக் கிணறுகளும், மின்பம்புகளுடன் 150 துளைக்கிணறுகளும் போட்டு முடிக்கும் பணியைத் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டது. 31-3-1977 இல் 7,908 துளைக் கிணறுகளின் வேலைகள் முடிவடைந்துள்ளன. 1976-77 இல் புதிய நீர்மண்டலங்களிலிருந்து குடிநீர் பெற பத்து திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டன. 280.06 இலட்சம் ரூபாய் செலவிடப் பட்டுள்ள அத்திட்டங்கள் முடியும் தறுவாயில் உள்ளன.

குறைந்தபட்ச தேவைத் திட்டத்தின்கீழும் ஐ. நா. சபை (குழந்தைகள் நல நிதி) உதவித் திட்டத்தின் கீழும் 1977-78 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை மதிப்பீட்டில் 4 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதன்கீழ் கைப்பம்புகளுடன் 2,840 துளைக் கிணறுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

பராமரிக்கும் திட்டம் :

சிற்றூர்ப்புறங்களில் குடிநீர் வழங்கும் இத்திட்டத்தின் பெரும் பகுதி ஆழ்கிணறு கைப்பம்புகள் கொண்ட ஆழ் துளைக்கிணறுகளால் நிறைவடைந்தது. இவற்றின் பராமரிப்புப் பணி உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந் நிறுவனங்களில் பணவசதிக் குறைவாலும் திறமையான பொருத்துநர்கள் இல்லாததாலும் பராமரிக்கும் பணியை செம்மையுறச் செய்ய இயலவில்லை. இப்பணியையும் அரசு வடிகால் வாரியத்திடமே ஒப்படைத்தது. இதன்படி கைப்பம்புகளுடன் கூடிய 14,300 ஆழ்கிணறுகள், 27,000 ஆழமற்ற கிணறுகள் ஆகியவற்றின் பராமரிப்புப் பணியை வாரியம் மேற்கொண்டது. சிறு பழுதுகளை நிறைவேற்ற ஒவ்வொரு 100 ஆழ்கிணறுகளுக்கும் ஒவ்வொரு 500 ஆழமற்ற கிணறுகளுக்கும் கம்மியரும் பொருத்துநருமான ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். பெரிய பழுதுகளைக் கவனிக்க ஒரு ஜீப் வண்டியுடன் ஒரு இளம்பொறியாளர், ஒரு கம்மியர், ஒரு உதவுநர் அடங்கிய இயங்கும் குழு ஒன்று ஒவ்வொரு 1,000 கைப்பம்புகளுக்கும் அமைக்கப்படும். இதுவரை 250 கம்மியர்-பொருத்துநர் அமர்த்தப்பட்டிருக்கின்றனர். தமிழ்நாட்டிலுள்ள கைப்பம்புகளை எல்லாம் பழுது பார்க்க 15 இயங்கும் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பம்புகளில் உண்டாகும் பழுதுகளை அவ்வப்பொழுது இயங்கும் குழுவினருக்குத் தெரிவிக்க ஆங்காங்கு உள்ள மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் கோரப்பட்டுள்ளது. இதற்கு, குறைபாடுகளையும் பம்புகளின் பழுதுகளையும் தெரிவித்து குறைகளைக் களையவும் குழுவோடு தொடர்பு கொள்ளவும் அங்குள்ள மக்களுக்கு அச்சடிக்கப்பட்ட அஞ்சல் அட்டைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

1977 ஆகஸ்ட் 13]

நீர் வழங்கும் தகவல் பற்றிய ஆய்வு :

தேவையுள்ள பகுதிகளுக்கெல்லாம் நீர்வழங்க நீருள்ள இடங்கள் பற்றிய ஆய்வு அரசு டேட்டா நிலையத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டது. எடுக்கப்பட்ட புள்ளி விவரங்கள் கம்யூட்டர் உதவியால் பகுப்பாய்வு செய்யப் பட்டது. சிற்றூர்க் குடியிருப்புகள் ஆறு வெவ்வேறு பிரிவுகளில் வகைப்படுத்தப்பட்டன. பகுப்பாய்வு செய்யப் பட்ட குறிப்புகளிலிருந்து 16,557 குடியிருப்புகளுக்குக் குடிநீர் உற்பத்திநிலை உருவாக்கப்பட வேண்டும் அல்லது அவற்றை செம்மைப்படுத்தப்படவேண்டும் என்றும் 38,450 இடங்களில் நீர் வழங்குவதில் முன்னேற்றம் தேவை என்றும் தெரியவருகிறது. இவை இரண்டிற்கும் முறையே 44.21 கோடி ரூபாயும் 25.16 கோடி ரூபாயும் தேவைப்படும் எனத் தோராயமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் சரியான செலவை மதிப்பிட ஒரு விரிவான ஆய்வு தேவைப்படுகிறது. மத்திய அரசின் உதவியுடனும் நிதி நிலை அறிக்கையில் ஒதுக்கப் பட்டுள்ள நிதியைக் கொண்டும் தேவையான சிற்றூர்களுக்கு முதன்மை முறையின் (Priority) அடிப்படையில் இத்திட்டத்தை நிறைவேற்ற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

வீராணம் திட்டம் :

சென்னை மாநகராட்சிக்கு தினமும் 40 மில்லியன் காலன்கள் நீர் வீராணம் திட்டத்தின் மூலம் அளிக்க ரூ. 21.30 கோடி மதிப்பீட்டில் திட்டம் ஒன்றுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இத்திட்டம் வீராணம் ஏரியிலிருந்து 40 மில்லியன் கேலன்கள் நீர் சுத்தப்படுத்தி சென்னைக்கு 218.6 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து குழாய் மூலம் கொண்டுவரப்படும். சுத்தப்படுத்துதல், தேக்கி வைத்தல். பெரிய ஆறுகளின் மீது நீர் கொண்டு வரும் குழாய்கள், பாலங்கள் அமைக்கும் பணி ஆகியவைகள் முடிவு பெற்றுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான சாமான்கள் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்தக்காரர்கள் ஜூலை 1975ஆம் ஆண்டு முதல் இத்திட்டத்திற்குத் தேவையான 30 சதம் சிமெண்டு குழாய்களைத் தயாரித்துவிட்டு பணியை நிறுத்திவிட்டனர்.

அரசு, ஒரு தனிக் குழு, இத்திட்டம் பற்றி ஆராய அமைத்து உள்ளது. இத்திட்டத்திற்கான குழாய்கள் உடனே தயாரித்து நிறைவேற்றுதல் சம்பந்தமாக இக்குழு அறிக்கை ஒன்றை அளித்துள்ளது. அரசு, ஐக்கிய நாட்டு சுகாதார நிறுவனம், ஐக்கிய நாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் சென்னை நகருக்குக் குடிநீர் மற்றும் கழிவு நீர் பற்றிய ஆய்வு நடத்தும் இயக்கத்துடன் இணைக்கப்

பட்டுள்ள பொறியியல் விஞ்ஞான நிபுணர்களிடமிருந்து ஒரு மாற்றுத்திட்டம் பெற்றுள்ளது. இந்தியாவிலுள்ள வேறு ஒரு நிறுவனத்திடமிருந்தும் இத்திட்டம் முடிப்பது பற்றிய குறிப்புகள் பெறப்பட்டுள்ளது. சத்திய நாராயணா பிரதர்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தம் பற்றியும் மற்ற மாற்று நடவடிக்கைகள் பற்றியும் குறிப்புகள் அரசின் ஆய்வில் உள்ளன. இத்திட்டம், 1976ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டின்படி ரூ. 52.00 கோடியாகும். இத்திட்டத்திற்கு 1976-77ஆம் ஆண்டுவரை அரசு செலவழித்துள்ள தொகை ரூ. 2,264.00 இலட்சங்களாகும். குழாய் அமைக்கும் பணி ஜூன் 1977ஆம் ஆண்டு தொடங்கும் என்ற உத்தேசத்தில் இவ்வாண்டில் (1977-78இல்) ரூ. 400·00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன் முதலீட்டு ஆய்வு :

அரசு, ஜனவரி 1976இல் ஐக்கிய நாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் உதவியுடன் சென்னை நகர குடிநீர் மற்றும் கழிவு நீர் முன் முதலீட்டு ஆய்வு செய்ய அனுமதித்தது. அரசு, ரூ. 43·60 இலட்சங்கள் 1975-76ஆம் ஆண்டு ஆரம்பித்து மூன்று நிதி ஆண்டுகளில் செலவு செய்ய அனுமதியும் வழங்கியுள்ளது. அவசர வேலைகள் மேற்கொள்வது பற்றிய அறிக்கை அரசிற்கு வரப்பெற்று ஆய்வில் உள்ளது.

இப்பணியினை நிறைவேற்றிட ரூ. 9.60 இலட்சங்கள் 1976-77ஆம் ஆண்டின் திருத்திய மதிப்பீட்டிலும் ரூ. 15.00 இலட்சங்கள் 1977-78ஆம் ஆண்டின் மதிப்பீட்டிலும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாட்டு சுகாதார நிறுவனம்/ஐக்கிய நாட்டு அபிவிருத்தி நிறுவனத்தின் ஆலோசகர்கள் தங்களுடைய இடைக்கால அறிக்கையில் சென்னை பெரு நகருக்கு குடிநீர் மற்றும் கழிவு நீர் வழிமுறைகளைக் கவனிக்க ஒரு தனி நிறுவனம், தனிப்பட்டதாகவும், சென்னை மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், சென்னை பெருநகர் அபிவிருத்திக் குழு மற்ற சென்னை பெரு நகரிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அப்பாற்பட்டதாகவும் குடிநீர் மற்றும் கழிவுநீர் ஆகியவற்றைப் பற்றி சட்டம் இயற்றல், தனித்தன்மை, நிதி ஆகியவற்றில் இப்பகுதிக்குத் தனிப்பட்டதாகவும் ஒரு மாபெரும் நிறுவனமாகவும் இயங்கவேண்டுமென பரிந்துரை செய்தது. இப்பரிந்துரையை ஏற்றுக்கொண்டு, 'சென்னை பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவுநீர் வாரியம்' என்ற அமைப்பை ஏற்படுத்த அரசு ஆணையிட்டுள்ளது. ஒரு தனி அலுவலர், ஒரு பொறியியல் இயக்குநர், ஒரு நிதி இயக்குநர் மற்றும் அவர்களைச் சார்ந்த பணியாளர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்

டுள்ளனர். தேவையான சட்டம் இயற்றுதலுக்கு சென்னை பெருநகர் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் வாரியத்தின் வரைவுப் பட்டியும் கவனிப்பில் உள்ளது.

முடிவுரை :

சிறந்த பணிகளைச் செய்ய தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் அதனுடைய நடவடிக்கைகளைத் தொடர்ந்து பரிசீலித்து வருகிறது. ஆய்வு நோக்கில் பணியாற்ற இவ்வாரியம் ஒரு பிரிவையும் தன்னகத்தே கொண்டு உள்ளது. அது நீர்த் தன்மை, நீர் மேலாண்மை, கழிவுநீர் துப்புரவு, முன்னோடித் திட்ட உருவாக்கம் போன்றவற்றிற்குத் தொடர்பான சிக்கல்களை, தம் பணியின் ஒரு பகுதியாகக்கொண்டு ஆராய்ந்து வருகிறது. அதிகத் திறனை அடையும் பொருட்டு வாரியம் தனது மாவட்ட அளவிலான அமைப்புகளைத் திருத்தி அமைத்துள்ளது. தேவையுள்ள பகுதிகளில் மாநிலம் முழுவதிலும் சிற்றூர்ப் பகுதிகளில் குடிநீர்க் கோட்டங்களை அமைத்துள்ளது. தமிழ்நாடு வேளாண் தொழிற்கழகம், புதுக்கோட்டை, தமிழ்நாடு ரப்பர் தொழிற்சாலை, காரையூர், பால்வள திட்டம், மதுரை மற்றும் ஈரோடு ஆகிய தொழிற்துறை நிறுவனங்களுக்கும் நீர் வழங்குவதற்கான திட்டங்களையும், அமைப்புகளையும் உருவாக்க இவ்வாரியம் முடிவு செய்துள்ளது. சென்னை மாநகராட்சியின் நீர் வழங்கும் பணி மற்றும் கழிவு நீர்ப் பணி ஆகியவற்றை மேற்பார்வையிடுவதோடு இவ்வாரியம் தொழில் நுணுக்க அறிவுரைகளையும் அளித்து வருகிறது. இவ்வாறாக வாரியத்தின் பணிகள் நகர்ப்புறம் மற்றும் சிற்றூர்ப் பகுதிகள் எல்லாவற்றையும் உள்ளடக்கி நாடு முழுவதும் பரவிக்கிடக்கிறது. ஒரு குடிமகனின் இன்றியமையாத் தேவை சுத்தமான குடிநீர் ஆகும். இப்பணியைச் செவ்வனே செய்கின்ற வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சமுதாயத்திற்கு வாழ்வளிக்கும் ஒரு சிறந்த இன்றியமையாத பணியைச் செய்து வருகிறது எனலாம்.

இணைப்பு IV.

[40ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டம்—கொள்கை விளக்கம்.

பிச்சை எடுத்தலை அறவே நீக்கும் நோக்குடன் மேற்கொள்ளும் முதல் நடவடிக்கையாகக் கீழ்க்காணும் இடங்களில் பத்து மறு வாழ்வு இல்லங்களை அரசு அமைத்துள்ளது.

இடம்.	மாவட்டம்.
1. பரனூர்	செங்கற்பட்டு மாவட்டம்.
2. உளுந்தூர்பேட்டை	தென் ஆற்காடு மாவட்டம்.
3. பர்கூர்	தருமபுரி மாவட்டம்.
4. புதுக்கோட்டை	புதுக்கோட்டை மாவட்டம்.
5. மணியேரிப்பட்டி	தஞ்சாவூர் மாவட்டம்.
6. புதுப்பட்டி	மதுரை மாவட்டம்.
7. மல்லவாடி	வட ஆற்காடு மாவட்டம்.
8. விண்ணபள்ளி	கோயம்புத்தூர் மாவட்டம்.
9. தேவியாகுறிச்சி	சேலம் மாவட்டம்.
10. செல்லியம்பட்டி	தருமபுரி மாவட்டம்.

தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் குணப்படுத்தி அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதே இந்த இல்லங்களை அமைப்பதன் தலையாய நோக்கமாகும். அவர்கள் இந்த இல்லங்களை விட்டு வெளியேறும்போது, சமூகத்திற்கோ அல்லது அவர்களது குடும்பத்திற்கோ சுமையாக இராமல், கவுரவமாகவும், சுயமாகவும் தங்களது வாழ்வை அமைத்துக்கொள்ள வகை செய்வதுதான் இதன் குறிக்கோள்.

இல்லங்களில் சேர்த்துக் கொள்ளுதல்.

2. தாமே விரும்பி முன்வரும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை இந்த இல்லங்களில் சேர்த்துக்கொள்வதே இதுவரை அரசின் கொள்கையாக இருந்து வந்துள்ளது. எனினும் சட்டத்தின் கீழ், பிச்சை எடுப்பது ஒரு குற்றமாகும். எனவே, பிச்சை எடுத்தலுக்காகத் தண்டிக்கப்படும் தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு இந்த இல்லங்கள் அனைத்தும், "காப்பு இல்லங்கள்" என்று அறிவிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக இவ்வில்லங்களுக்கு வர விரும்பாத தொழுநோய்ப் பிச்சைக்காரர்களைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்கிய பின்னர் இந்த இல்லங்களில் காலவரம்பின்றி நிறுத்தி வைப்பதற்கு விதித்துறை உள்ளது.

இல்லங்களிலுள்ள வசதிகள்.

3. ஒவ்வொரு இல்லத்திலும் பெரியவர்கள் 400 பேரும், சிறுர் 25 பேரும் தங்குவதற்கு இடவசதி உள்ளது. தம்பதிகளாகயிருந்து ஒருவர் தொழுநோயால் பீடிக்கப்பட்டு பிச்சை எடுத்துக் கொண்டிருந்தால் தம்பதிகள் இருவரும் இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். அத்தகைய நேர்வுகளில், அவர்களது சிறுர்களை அருகிலுள்ள விடுதிகளிலும், பள்ளிகளிலும் சேர்ப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்காக அரசு ஒவ்வொரு பிள்ளைக்கும் உடை, பள்ளிப்பெட்டி முதலியவைகளுக்காக ரூபாய் 75 அளிக்க அனுமதித்திருக்கிறது. வயது வந்த ஒருவருக்கு அன்ருடம் வழங்கப்படும் உணவுக்காக செலவு ரூபாய் 2.30, சிறுவருக்கு ரூபாய் 1.15 ஆகும். இல்லத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் இலவச உணவு, இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுவதுடன் அவர்களுக்கு இலவச உடை, எண்ணெய், சோப்பு, பல்துலக்கும் பிரஷ் முதலியவைகளும் அளிக்கப்படுகின்றன.

இவ்வில்லங்களில் பொழுதுபோக்கிற்குப் போதிய வசதிகள் உள்ளன. விளையாட்டுகள், விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்காக ஒவ்வொரு இல்லத்திற்கும் தொடரினச் செலவாக ரூபாய் 200 ஒப்பளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இல்லத்திற்கும் இரு நாளிதழ்களும் ரூபாய் 250 பெறுமானமுள்ள புத்தகங்களும் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இல்லத்திலுள்ளவர்களின் இசைக்கலைத்திறனை வளர்க்கும் பொருட்டு, ரூபாய் 400 மதிப்புள்ள இன்னிசைக் கருவிகள் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இல்லத்திலுள்ளவர்களுக்கு, அவர்களுடைய கல்வி அறிவையும் பொது அறிவையும் வளர்க்கும் பொருட்டு, முதியோர் கல்வியறிவை வளர்க்கும் நூல்களும் வழங்கப்படுகின்றன. பரனூரிலுள்ள இல்லத்தில் ஒழுக்க நெறி பற்றிய சொற்பொழிவுகள் வழங்குதவற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

முக்கியத்துவம் வாய்ந்த தேசிய விழாக்களின் போது இல்லத்தில் உள்ளவர்களுக்கு இனிப்புகளுடன், சிறப்பு உணவும் வழங்கப்படுகின்றது. ஆண்டு விழாக்களின் போது இல்ல உறுப்பினர்கள் நாடகங்களும் கதம்பக் கலை நிகழ்ச்சிகளும் நிகழ்த்துகின்றனர்.

மருத்துவ வசதிகள்.

4. இல்லத்தில் உள்ளவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இல்லத்தில் உள்ளவர்களின் மருத்துவத் தேவைக்காக, ஒவ்வொரு இல்லத்திலும் மருத்துவ அதிகாரிகள் இருவர், பயிற்சி முடித்த செவிலியர் இருவர், துணை மருத்துவச்

தில்லை. குணமடைந்த தொழுநோய்ப் பிச்சைக்காரர்களை அவர்களது குடும்பங்களிடம் திரும்பச் சேர்ப்பதற்கு சமூகப் பணியில் கல்வித் தகுதி பெற்ற சமூகப் பணியாளர் ஒருவர் ஒவ்வொரு இல்லத்திலும் இருக்கிறார். குணமடைந்த பிச்சைக்காரர்களை அவர்கள் குடும்பத்தினர் திரும்ப சேர்த்துக்கொள்ளும் பொருட்டு சமூகப் பணியாளர் அக்குடும்பங்களுடன் தொடர்பு கொள்வர்.

பணியாளர் அமைப்பு முறையும், நிர்வாகமும்.

7. தொழுநோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்கள். சுகாதாரப் பணிகள்—குடும்ப நல்வாழ்வுத் திட்டத்துறை இயக்குநரின் நிர்வாகப் பொறுப்பின்கீழ் உள்ளன. அவருக்கு மறுவாழ்வு இல்லத் தனி அதிகாரி ஒருவரும் உதவித் தனி அதிகாரி ஒருவரும் இளநிலை கணக்கு அலுவலர் ஒருவரும் உதவி செய்வார்கள்.

ஒவ்வொரு இல்லத்திற்கும் கண்காணிப்பாளர் ஒருவர் உள்ளார் ஒவ்வொரு இல்லத்தின் நிர்வாகத்திற்கும் பொறுப்பாக உள்ள, பலதிறப்பட்ட பணியாளர்களின் விவரம் பின்வருமாறு :—

1. இல்லக் கண்காணிப்பாளர்.
2. மருத்துவ அலுவலர்.
3. பயிற்சி முடித்த செவிலியர்.
4. துணை மருத்துவச் செவிலியர்.
5. மருந்தாக்குனர்.
6. செவிலிப்பணி உதவியாளர் (ஆண்).
7. செவிலிப் பணி உதவியாளர் (பெண்).
8. துப்புரவுத் தொழிலாளர் (ஆண், பெண்).
9. ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர்—நிலை 1.
10. சமூகப் பணியாளர்.
11. உடற்கூறு பயிற்சியாளர்.
12. சமையற்காரர்.
13. சமையல் உதவியாளர்.
14. அலுவலகக் கண்காணிப்பாளர்.
15. பண்டகசாலை காப்பாளர்—கணக்காளர்.
16. இளநிலை உதவியாளர்—தட்டெழுத்தர்.
17. ஓட்டுநர்—துப்புரவாளர்.
18. தலைமைக்காவலர்.
19. காவலர்கள்.
20. மின் பணியாளர் 2-ஆம் நிலை.
21. தொழிற் சார்ந்த மருத்துவர் (மூன்று இல்லங்களில் மட்டும்).

இல்லங்கள் கட்டுதலும் பராமரித்தலும்.

8. பர்கூர் இல்லத்தைத்தவிர மற்ற இல்லங்கள் தொகுதிகள் தொகுதிகளாகக் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு இல்லமும் 16 ஏக்கர் முதல் 77 ஏக்கர் வரை பரப்பளவு உள்ளதாக இருக்கிறது. ஒவ்வொரு இல்லத்திலுமுள்ள எஞ்சிய நிலங்கள் காய்கறித் தோட்டங்கள் போடுவதற்கும் பிற நுகர்பொருட்களைப் பயிரிடுவதற்கும் பயன்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு முதன் முதலில் முதலமைச்சர் 'பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு நிதியிலிருந்து' நிதி உதவி அளிக்கப்பட்டது. இந்த இல்லங்கள் ஒவ்வொன்றையும் நடத்துவதற்கு, ஆண்டொன்றுக்குத் தொடரினச் செலவாக, ரூ. 6 லட்சம் செலவாகின்றது.

சாதனைகள் குறித்த விவரம்.—ஒவ்வொரு இல்லத்திலும் உள்ள பிச்சைக்காரர்களின் எண்ணிக்கையையும், அந்த இல்லங்களில் நடைபெற்ற பணி முன்னேற்றத்தையும் கீழே உள்ள விவர அட்டவணையில் காணலாம்.

இல்லங்கள் அனைத்திலும் ஆற்றியுள்ள பணி முன்னேற்றம்.

இல்லத்தின் பெயரும், மாவட்டத்தின் பெயரும்.	18—6—77 அன்றுள்ளவாறு இல்லத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கை.			
	ஆண்.	பெண்.	சிறார்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. பரனூர் (செங்கற்பட்டு) ..	223	119	60	402
2. உளுந்தூர்பேட்டை (தென் ஆற்காடு.)	221	72	13	306
3. பர்கூர் (தர்மபுரி) ..	238	111	35	384
4. புதுக்கோட்டை (புதுக்கோட்டை).	282	109	55	446
5. மனையேறிப்பட்டி (தஞ்சாவூர்).	297	90	35	422
6. புதுப்பட்டி (மதுரை) ..	279	104	56	439
7. மல்லவாடி (வடஆற்காடு)..	266	97	40	403
8. தேவியாகுறிச்சி (சேலம்)	293	139	32	464
9. விண்ணபள்ளி (கோயம்புத்தூர்).	171	38	12	221
10. செல்லியம்பட்டி (தருமபுரி)	193	76	13	287
மொத்தம் ..	2,468	955	351	3,774

[1977 ஆகஸ்ட் 13

1976 ஏப்ரல் திங்கள் முதல் 1977 மார்ச் திங்கள் வரை உற்பத்தி செய்யப்பட்டவை.

முடையப்பட்ட பாய்களின் எண்ணிக்கை. ..	9,186
தைத்த ஆடைகளின் எண்ணிக்கை. ..	7,973
காய்கறித் தோட்டங்களில் பயிரிடப்பட்ட காய்கறிகள் எண்ணிக்கை. ..	24,789 கிலோ
தைக்கப்பட்ட பாத அணிகளின் எண்ணிக்கை. ..	2,131
உற்பத்தி செய்யப்பட்ட புடவைகள், வேஷ்டிகள், துண்டுகளின் எண்ணிக்கை. ..	4,582
உற்பத்தி செய்யப்பட்ட கட்டுப் போடும் துணிகளின் அளவு. ..	39,705 மீட்டர்கள்.
உற்பத்தி செய்யப்பட்ட காடா துணியின் அளவு. ..	5,765 மீட்டர்கள்.
கிராமப்புற நூற்பு ஆலை நெய்த சிட்டங்களின் எண்ணிக்கை. ..	1,58,053

பல்வேறு வாழ்க்கைத் தொழில் திட்டங்களில் வேலைக்கமர்த்தப் பட்டுள்ள பிச்சைக்காரர்கள்.

1. மருத்துவத் துணைப்பணி	63
2. வேளாண்மையும் தோட்டங்கள் வைத்தலும்	269
3. தையல் வேலை	39
4. பாத அணி தயாரித்தல்	26
5. பாய் முடைதல்	42
6. தச்சு வேலை	12
7. கைத்தறித் துணி நெய்தல்	75
8. சமையல் உதவியாளர்கள்	91
9. அலுவலக உதவியாளர்கள்	14
10. முறையான பராமரிப்பு, பெருக்குதல், நாவிதன், வண்ணான். ..	150
11. ஆசிரியர்கள்	15
12. இல்லப் பணியாளர்கள்	77
13. கட்டுமானப்பணி	15
14. கதர் கிராமத் தொழில்களும், பிற வர்த்தக தொழில்களும்.	61

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

செவ்வாய்க்கிழமை, 1977 ஆகஸ்டு 16

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

கலைவாணர் அரங்கம்.

*52 வினா— திரு. டி. கே. கபாலி : மாண்புமிகு செய்தி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள கலைவாணர் அரங்கின் பெயரை மாற்றுவதற்கு குடியரசு தலைவர் ஆட்சியின் போது முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டனவா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ & இ) கலைவாணர் அரங்கம் என்ற பெயர் மாற்றப்பட வேண்டுமென்று நாளிதழ் ஒன்றில் வெளியிடப் பட்டிருந்த யோசனை, பரிசீலிக்கப்பட்டு, பெயர் மாற்றம் தேவையில்லை என்று முடிவு செய்யப்பட்டது.

திரு. டி. கே. கபாலி: மாற்றப்பட வேண்டிய அவசியம், அது பற்றி யோசிக்க வேண்டிய நிலை ஏன் வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : அதைத்தான் நான் என் பதிலில் குறிப்பிட்டேன். ஒரு நாளேடு—அதாவது நவசக்தி—அந்தப் பெயரை மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டது. அதன்மீதுதான் அந்தப் பரிசீலனை எழுந்தது.

திரு. மு. கருணாநிதி : குடியரசுத் தலைவர் ஆட்சியில் ''கலைவாணர் அரங்கம்'' என்ற பெயரை திரும்ப ''பாலர் அரங்கம்'' என்றே மாற்ற வேண்டுமென்று, அதனோடு தொடர்புடைய அதிகாரி பரிசீலனைக்கு ஒரு கோப்பு அனுப்பினார் என்கிற தகவல் கிடைத்தது, அது உண்மையா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன்: அந்தத் தகவல் சரியான தகவல் இல்லை. நவசக்தி நாளேட்டில் தான், கலைவாணர் அரங்கத்திற்கு, மறைந்த பண்டித நேரு அவர்களுடைய நினைவாக பாலர் அரங்கம் என்ற பெயர் வைக்கப்பட்டது. ஆங்கிலத்தில் (Children Theatre) என்ற அந்த பெயர்—பாலர் அரங்கம் என்பது. பின்னால் 1968 ஆம் ஆண்டில்—அண்ணா அவர்களுடைய ஆட்சியிலே —சிறுவர் அரங்கம் என்று மாற்றப்பட்டு, 1971ஆம் ஆண்டிலே கலைவாணர் அரங்கம் என்றாயிற்று. திரும்பவும் நேருவினுடைய நினைவாக அதை சில்டிரன்ஸ் தியேட்டர் என்றே மாற்ற வேண்டுமென்று அந்தப் பத்திரிகை எழுதியதை யொட்டி, அந்த விவாதம் தொடங்கியதே தவிர வேறு இல்லை.

திரு ப. உ. சண்முகம்: பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு முன்னால் ஆட்சியில் இருந்த அரசு எடுத்த முடிவை மாற்ற பரிசீலிப்பதற்கு என்ன காரணம்? இனி மேலாவது ஒரு ஆட்சியில் வைக்கப்பட்ட பெயரை, பின்னால் மாற்றாமல் இருக்க அரசாங்கம் ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: ஒரு முடிவு ஏற்பட்டால் அதுவே முடிவான முடிவு என்பது, எப்போதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. நல்ல முடிவுகள் எடுக்கப்படுகிறபோது, அதை மாற்ற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒன்றை இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அரசியல் மாற்றங்கள் அவ்வப்போது ஏற்படும்போது, அதிகாரிகள் சில நேரங்களில் தங்களுடைய கடமைகளைச் செய்ய முடியாத அவசியத்திற்கு ஆளாகி, சில வற்புறுத்தல்களுக்கு உட்பட்டு செயல் படுகிறார்கள், அதனால் இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை இங்கே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மறைந்த கலைவாணர் என்.எஸ்.கே. பெயரில் ஒரு நினைவாலயத்தை உருவாக்க அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: இதற்குத் தனிக் கேள்வி வேண்டும். ஆனால் முன்பிருந்த அரசு இதை ஆலோசித்ததா என்று தெரியவில்லை. தனிக் கேள்வி போட்டால் ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து விட்டார்கள். ஒரு அரசு சிறுவர் அரங்கம் என்று முடிவு எடுத்ததை இன்னொரு அரசு வேறு பெயராக மாற்றியிருக்கிறது என்பதால் ஒரு அரசு ஒரு முடிவு எடுத்தால் அதை வேறொரு அரசு மாற்றலாமா என்ற கேள்வியை ப. உ. சண்முகம் அவர்கள் கேட்டார்கள். அக்கேள்விக்கு விளக்கம் தேவை.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: நான் மீண்டும் சொல்கிறேன். அரசு மாற்றவில்லை என்பதை கூத்தகுடி திரு. சண்முகம் அவர்கள் நிச்சயமாக புரிந்து கொள்ளக் கூடியவர்கள் என்று கருதிச் சொல்கிறேன். அதிகாரிகள் எவ்வளவுதான் திறமைசாலிகளாக இருந்தாலும் ஆட்சிக்கு வருகிறவர்கள் அவர்களுடைய கொள்கைகளை சரியான முறையில் மக்களிடம் எடுத்துச் சொல்லவும் நியாயமான காரணத்தின் அடிப்படையில் சில மாற்றங்களைச் செய்யவும், இப்படி ஒரு நிலை ஏற்படுகிறது என்பதால் சிறுவர் அரங்கம் என்பது கலைவாணர் அரங்கம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. காரணம் என்ன என்பதை எண்ணிப் பார்த்தால் கலைவாணர் அவர்கள் ஒரு சகாப்தமாக இருந்தார்கள் என்பதை அமரர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் செய்துள்ள கலைத் தொண்டுக்காக மட்டுமல்லாமல், அவர்கள் சமுதாய சீர்திருத்தத்திற்காக செய்த தொண்டின் விளைவாகவும் அந்தப் பெயர் வைக்கப்பட்டது என்பதையும் அதை தமிழ் உலகம் பாராட்டியது என்பதையும் நான் இங்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: கலைவாணர் அரங்கில் இன்று படங்கள் ஓடுகின்றன, நாடகங்கள் நடத்துகிறார்கள். அதற்காக பொதுமக்களிடம், அதாவது பார்ப்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கிறார்கள், கொட்டகைக்கு யாராவது அரசுக்குப் பணம் கொடுக்கிறார்களா? அதற்கு வாடகை எவ்வளவு!

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன கேட்கிறார்கள் என்று தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் வாடகை வசூலிக்கப்படுகிறது. யார் அந்த நிகழ்ச்சிகளை நடத்துகிறார்களோ அவர்களிடம் இருந்து வாடகை வசூலிக்கப்படுகிறது. ஆனால் நியாயமான வாடகை வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு உயர்நிலைப் பள்ளிகள்.

*வினு 29—

திரு. டி. இராமசாமி,
திரு. என். கிட்டப்பா,
திரு. அ. நடராசன்,
திரு. ரா. கிருஷ்ணன்,

மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு உயர்நிலைப் பள்ளிகளில் 'ஏ' விங் 'பி' விங் என்ற பிரிவுகள் இணைப்புக்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ? எந்த அடிப்படையில் அமுல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இச்செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் ஓர் முடிவு எடுக்கப் படும்.

திரு. என். கிட்டப்பா : இந்த 'ஏ' பிரிவு, 'பி' பிரிவு பள்ளிக்கூடங்களில் பணியாற்றுகிறவர்களுக்கு ஊதிய விகிதங் களில் வேறுபாடுகள் இருப்பதாகத் தெரியவில்லை. எனவே அரசாங்கம் இந்த முடிவை எடுப்பதற்கு முன்னாலே 'ஏ' பிரிவு பள்ளிக்கூட ஆசிரியர்களை அவர்கள் விரும்பினால் 'பி' பிரிவு பள்ளிக்கூடங்களுக்கும் 'பி' பிரிவு ஆசிரியர்கள் விரும்பினால் அவர்களை 'ஏ' பிரிவு பள்ளிக்கூடங்களுக்கும் மாற்றம் செய்வதற்கு ஆணை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : பள்ளிக்கூடங்களில் 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என்று கிடையாது, வேலை செய்கிற ஆசிரியர்களிடையேதான் 'ஏ' பிரிவு 'பி' பிரிவு என்று இருக்கிறது. இதற்கு முன்னால் இருந்த மாவட்ட கழக உயர்நிலைப் பள்ளிகளில் வேலை செய்து வந்த ஆசிரியர்களை 'பி' பிரிவாக வைத்து இன்றைக்கு அவர்கள் தனியாக நடத்தப்பட்டு வருகின்றனர். பள்ளிக்கூடங்களை ஒன்றாக இணைத்துவிட்டார்கள். ஆசிரியர்களை இன்னும் இணைக்கவில்லை. அவர்களை இணைக்கவேண்டும் என்ற ஆலோசனை விரைவுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : 'ஏ' பிரிவு 'பி' பிரிவுப் பள்ளிக்கூட ஆசிரியர்களை இணைக்கும்போது எந்த அடிப்படையில் அவர்களை ஒருங்கிணைப்பார்கள் ? சர்வீஸ் அடிப்படையில் அந்த இணைப்பை ஏற்படுத்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அவைதான் பரி சீலனையில் இருக்கின்றன.

திரு. வி. கே. கோதண்டராமன் : இந்த ஏ விங்க், பி விங்க் இவற்றை ஒன்றாக இணைப்பதில் இருக்கும் சிக்கலான விஷயம் என்ன என்பதை விளக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 'ஏ' பிரிவில் வேலை செய்கிற ஆசிரியர்களுக்கும் 'பி' பிரிவில் வேலை செய்கிற ஆசிரி யர்களுக்கும் பதவி உயர்வு கிடைக்கக் கூடிய வாய்ப்புகளில்தான் சிக்கல் இருக்கிறது. அதைத் தீர்ப்பதற்கான பரிசீலனைதான் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. கே. கந்தசாமி : 'ஏ' பிரிவு 'பி' பிரிவு ஆசிரியர் களுக்கிடையே பதவி உயர்வில் மட்டும் வேறுபாடு இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதுமட்டு மல்ல. அவர்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றம் செய்வதில் கூட, 'ஏ' விங்கில் உள்ளவர்களை மாநிலம் முழுவதற்கும் மாற்றுவதற்கும், 'பி' விங்கில் இருப்பவர்களை மாவட்டத்திற்குள்ளேதான் மாற்றுவதற்கும் வசதிவாய்ப்பு இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்னும் பல்வேறு வேறுபாடுகள் இருப்பதால் அத்தனை வேறுபாடுகளையும் தீர ஆலோசித்து, கருத்து வேறுபாடு இல்லாமல் அரசு ஒருமித்த ஒரு முடிவிற்கு வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : முடிவிற்கு வரும்.

திரு. மா. சுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டக்கில் எல்லா பள்ளிகளையும் அரசே எற் றெடுத்து நடத்துவது போல், மற்ற மாவட்டங்களிலும் எல்லா பள்ளிகளையும் அரசே ஏற்றெடுத்து நடத்துவதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : எல்லாப் பள்ளி களையும் அரசே ஏற்றெடுத்து நடத்துவதற்கான ஆலோசனை தற்போது இல்லை.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, மாவட்டக் கழ கத்தின் கீழ், வேலை செய்து கொண்டிருந்த ஆசிரியர்களை இணைத் ததின் காரணமாக இப்படிப்பட்ட பிரிவுகள் ஏற்பட்டதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்த விடையிலிருந்து தெரிகிறது. ஒரே தரமான, ஒரே தன்மையான, ஒரே ரகமான வேலையில் ஈடுபட்டிருப்பவர்கள், ஒரே அந்தஸ்தில் இருப்பவர்கள், இவர் களை இரண்டு பிரிவுகளாக வைத்துப் பார்க்கும் போது அவர்கள் பாதிக்கப்படுகிறார்களா இல்லையா, அப்படிப் பாதிக்கப்படுவதாக இருந்தால், இதில் அவர்களுக்கு நியாயம் கிடைக்கும் அளவில் 'நேச்சுரல் ஜஸ்டிஸ்'—இயற்கையான நீதி—என்ற அளவில் அவர் களுடைய கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு என்ன நட வடிக்கை எடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : கடந்த பத்து ஆண்டு காலமாக இருந்து வரும் இந்த அநியாயத்தை போக்கத் தான் அரசு தீவிரமாக பரிசீலனை செய்து கொண்டு வருகிறது.

திரு. ஆ. நடராசன் : 'ஏ', 'பி' பிரிவு ஆசிரியர்களை ஒன்றாக இணைக்க வேண்டாம் என்று ஆசிரியர்களிடமிருந்து கோரிக்கை ஏதாவது வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 'ஏ' பிரிவு ஆசிரியர்களிடமிருந்து அத்தகைய ஒரு கோரிக்கை வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, கேள்வி எண் 30, கேள்வி எண் 53 இரண்டையும் ஒன்றாக சேர்த்து எடுத்துக்கொள்ளலாம்.

தஞ்சை மாவட்டத்தில் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்.

*30. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1977 ஜூன் முடிய வேலை தேடித்தரும் நிறுவனத்தில் பதிவு செய்து கொண்டு இது வரை வேலை கிடைக்கப் பெருமலிருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(ஆ) அதில் பட்டதாரிகள் எத்தனை பேர் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) 30—6—77 நிலவரப்படி அறுபத்து நான்காயிரத்து மூந்நூற்று பதினெட்டு பேர்கள்.

(ஆ) நான்காயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று பேர்கள்.

வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து கொண்டுள்ளவர்கள்.

*53. வினா—திரு. ஏ. சுவாமிதாஸ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்ட வேலை தேடித் தரும் அலுவலகத்திலும் (Employment Exchange) 1977-ல் பதிவு செய்த பட்டதாரிகள் எத்தனை பேர் ? பட்டதாரி அல்லாதவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) வேலைத்தகுதிக்கான வயது வரம்பைத் தளர்த்தும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இதற்கான விவர அறிக்கை@ ஒன்று பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

(ஆ) இல்லை.

திரு. என். கிட்டப்பா : வேலைத் தேடித்தரும் நிறுவனத்தில் நான்கைந்து ஆண்டுகளாக தங்கள் பெயர்களைப் பதிவு செய்து வைத்திருந்தாலும், வேலை கிடைக்காத நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. எனவே நீண்ட காலமாக, வேலை கிடைக்க தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களுக்கு வேலை கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : ஆவன செய்யும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, இந்த வேலை வாய்ப்பு நிறுவனத்தில் பதிவு செய்து கொள்பவர்கள் நீண்ட காலமாக வேலை வாய்ப்புக் கிடைக்காமல் காத்திருக்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்போது குறிப்பிட்ட வயது போன உடன் வேலை கிடைக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே எப்படியாவது வயது வரம்பைத் தளர்த்தி, 30 என்றிருந்தால் அதை 35 என்று உயர்த்தி அப்படிப்பட்டவர்களுக்கும் வேலை வாய்ப்புக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. சோ. அழகர்சாமி : துணைத் தலைவர் அவர்களே, வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் பதிவு செய்து கொண்டவர்கள் காத்திருக்கும்போது, வேலை தேவைப்படுகிற இடங்களுக்கு நம்பர்கள் அனுப்பப்படும்பொழுது, முன்னால் பதிவு செய்து கொண்டிருப்பவர்களை விட்டு விட்டு, பின்னால் பதிவு செய்து கொண்டவர்களின் நம்பர்கள் அனுப்பப்படுவதாகச் சொல்லப்படுகிறது. அது மட்டுமல்ல, முன்னால் பதிவு செய்து கொண்டவர்களைத்தான் முறையாக அனுப்பவேண்டும் என்று ஒரு கராரான உத்தரவு பிறப்பித்து, முன்னதாக பதிவு செய்து கொண்டவர்களுக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : இப்படிப்பட்ட புகார்கள் நிறைய வந்திருக்கின்றன. இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

@202-203 ஆம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[1977 ஆகஸ்டு 16

புலவர் கா. கோவிந்தன் : 1—1—77 முதல் 30—6—77 வரை பதிவு செய்து கொண்டவர்களின் பட்டியல் மாவட்ட வாரியாக கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் எவ்வளவு பேர்களுக்குப் பதவிகள் கொடுக்கப்பட்டது என்ற தகவலை மாவட்ட வாரியாக அமைச்சர் அவர்கள் தருவார்களா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : 1976-ல் தமிழ் நாடு முழுவதும் 14,828 பேர்கள் வேலையில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதிலே தஞ்சை மாவட்டம் 1,246 என்று இங்கு தரப்பட்டிருக்கிறது.

திரு. சௌ. வே. வரதராஜன் : தலைவர் அவர்களே, இந்த வேலையில்லாதவர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஆண்டு பெருகிக் கொண்டே இருக்கிறது. பல மாநில அரசுகள் மத்திய அரசு இடத்திலே இவர்களுக்கு ஏதாவது நிவாரணத் தொகை கொடுக்க வேண்டுமென்று சட்ட மன்றத்திலே தீர்மானங்கள் நிறைவேற்றி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முயற்சியை இந்த மாநில அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. மு. ஆறுமுகம் : வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தில் தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டிருப்பவர்களுக்கு, அரசு உத்தியோகம் கொடுக்கும்போது, அதிலே வயது வரம்பைத் தாண்டுகிறவர்களுக்கு முன்னுரிமை அளித்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்படுமா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: அதை ஆலோசிக்கலாம்.

54 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) 1970 முதல் 1977 ஜுன் மாதம் வரையில் தமிழ் நாட்டில் பி.டி. பட்டம் பெற்ற ஆசிரியர்களின் எத்தனை பேர் வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து உள்ளனர் ?

(இ) அவர்களுள் எத்தனை பேர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது ?

(உ) இன்னும் எத்தனை பேர்கள் வேலை வாய்ப்பு பெறுமல் உள்ளனர் ?

1977 ஆகஸ்டு 16]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) இருபத்திரண்டாயிரத்து அறுநூற்று நாற்பத்தைந்து பேர்கள்.

(ஆ) மூவாயிரத்து எழுநூற்று நாற்பத்திரண்டு பேர்கள்.

(இ) 30—6—77 அன்றைய நாளில் எட்டாயிரத்து எழு நூற்று அறுபத்தொன்று பேர்கள்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, பி.டி. பட்டம் பெற்றவர்கள் இன்றைக்கு வேலையில்லாமல் நிறையபேர்கள் சும்மாயிருக்கிறார்கள். வீட்டிலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கக் கூடிய வகையிலே அவர்களுக்கு உயர்நிலைப் பள்ளிகளிலும், மற்ற இடங்களிலும் வேலை தருவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இந்த ஆண்டு இருக்கிற சிக்கல், இப்போது இருக்கிற ஆசிரியர்களுக்கு வேலை போகாமல் இருக்கவேண்டுமென்பதிலே நாங்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம்.

திரு. துரை முத்துசாமி: துணைத் தலைவர் அவர்களே, இவ்வாறு வேலை இல்லாமல் இருக்கும் பி.டி. பயின்றவர்களை ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் உள்ள ஹையர் எலிமெண்டரி பள்ளிகளில் நியமிக்கும் நோக்கம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி ஒரு முறை இருக்கிறது. பல்வேறு வேலைகளில் இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் போட்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, இப்போது பல உயர் ஆரம்பப் பள்ளிகளில் பி.டி.ஆசிரியர்கள் போடப்பட்டிருக்கிறார்கள். ஆனால், தனியார் பாடசாலைகளில் அப்படி பி.டி. ஆசிரியர்கள் போடுவது கிடையாது. உயர் ஆரம்பப் பாடசாலைகளில், தனியார் பள்ளிகளிலும் அப்படிப் போடுவதற்கு இந்த அரசு உத்தரவிட வேண்டும். அதோடு இப்போது புதிய முறைக் கல்விப்படி இந்த இண்டரீம் கல்வியை, உயர்நிலைக் கல்வியோடு சேர்த்தால் அதிலே இந்த பி.டி. ஆசிரியர்களை நிறைய பேர்களை நியமிக்கலாம். இதை நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படிப்பட்ட ஒரு கருத்து இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, 1971-ல் படித்துப் பட்டம் பெற்றவர்கள் நிறையப் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தருவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா என்பதை பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அப்படி தனித் திட்டம் எதுவும் இல்லை.

சென்னை—படவேடு பேருந்துப் பணி.

*55 வினா—திரு. கே. ஜே. சுப்பிரமணியம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் படவேடு கிராமத்தில் இருந்து சென்னைக்குச் சென்று வந்துக்கொண்டு இருந்த தந்தை பெரியார் பேருந்து வண்டி தற்சமயம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதற்கான காரணம் யாது?

(ஆ) மீண்டும் பழையபடி இந்த வழித்தடத்திற்கு பேருந்துகள் விட எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) சென்னையிலிருந்து ஆரணிக்கு விடப்பட்ட பேருந்துகள் தற்காலிக அனுமதிச் சீட்டின் பேரில் படவேடு வரை நீடிக்கப்பட்டன. 1976-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னைக்கும் ஆரணிக்கும் இடையே உள்ள அங்கீகரிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் நிரந்தர அனுமதி உரிமம் சென்னையிலிருந்து ஆரணி செல்வதற்கு மட்டும் வழங்கப்பட்டது. எனவே பேருந்துகளை சென்னையிலிருந்து நேரடியாக படவேடு வரை விட வகையில்லை.

(ஆ) படவேட்டிலிருந்து நேரடியாக சென்னை செல்லும் பயணிகளின் எண்ணிக்கையை கணக்கிட்டு, தேவையெனில், அங்கீகரிக்கப்பட்ட வழித்திட்டத்தை நீட்டி, சென்னையிலிருந்து படவேடு வரை அங்கீகரிக்கப்பட்ட தடமாக ஆக்கி நேரடிப் பேருந்துகளை விடுவது பற்றி பரிசீலிக்கப்படும்.

எனினும் தற்போது படவேட்டிற்கு போக்குவரத்து வசதியளிக்கும் வகையில் ஆரணியிலிருந்து படவேட்டிற்கு தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து ஒன்று மார்ச் 1977 முதல் விடப்பட்டுள்ளது.

திரு. என். இராமசந்திரன்: பேரவை துணைத்தலைவரவர்களே, அவசர காலத்தில் பஸ்கள் எல்லாம் குறிப்பிட்ட தூரம் போய்க் கொண்டிருந்தது. அதைக் குறிப்பாக செஞ்சி பகுதியில் 4, 5 இடங்களில் குறைத்திருக்கிறார்கள். அதை முன்பிருந்த மாதிரி விடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவை துணைத் தலைவரவர்களே, எந்த வழியில், எந்தத் தடத்தில் அப்படி குறைகள் ஏற்பட்டுள்ளன என்பது பற்றி குறிப்புகளை உறுப்பினர் அவர்கள் அரசிற்கு தருவார்களேயானால், அதைப் பரிசீலித்து தேவையெனில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். இராமசந்திரன்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, சென்னை—மேல்மலையனூர், சென்னை—மேல் ஒலக்கூர் ஆகிய வண்டிகள் முறையே இன்றைக்கு சென்னை—வளத்தி என்றும் சென்னை—அவியூர் என்றும் குறைத்திருக்கிறார்கள். அதுபற்றி பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி பரிசீலிக்கப்படும்.

பயிர் காப்புறுதித் திட்டம்.

*56 வினா—திரு. அ. நடராசன்,
திரு. என். கிட்டப்பா:

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விவசாயிகளுக்கு பயிர் இன்சூரன்ஸ் கொண்டுவரும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன!

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:

(அ) ஆம்.

(ஆ) நிபுணர் குழு செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் பயிர் காப்புறுதித் திட்டம் ஒன்றை மத்திய அரசு வகுத்து வருகிறது. இத்திட்டத்தை விரைவில் கொண்டு வருமாறும் தமிழ்நாட்டில் இத்திட்டத்தை பரவலாகச் செயல்படுத்துமாறும் மத்திய அரசை வேண்டியுள்ளோம்.

திரு. என். கிட்டப்பா: துணைத் தலைவர் அவர்களே, இந்த பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து விரைவில் செயல்படுத்தவிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இடைக்காலத்தில், பயிர் இன்சூரன்ஸ் வருகிற வரையில், பயிர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் அடிப்படையில், பாதிக்கப்படுகின்ற விவசாயிகளுக்கு நமது மாநில அரசே உதவி அளிக்க வழிவகை காணுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: மாண்புமிகு உறுப்பினரின் யோசனை, ஆலோசிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, பயிர் இன்சூரன்ஸ் திட்டத்துக்காக, அது செயல்படுத்தப்படும் என்று ஏற்கனவே இன்றைய அரசு அறிவித்ததற்கு இணங்க, மத்திய அரசிடம் எந்த வகையில் தொடர்பு கொள்ளப்பட்டிருக்கிறது? கடிதம் ஏதேனும் எழுதப்பட்டிருக்கிறதா! அதற்கு மத்திய அரசிடமிருந்து கடிதக் குறிப்பு பதிலாக வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: துணைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின்போது, இதுபற்றி நான் பேசிய நேரத்தில், தண்டேகர் தலைமையில் ஒரு குழுவிடம் இந்தப் பொறுப்பை மத்திய அரசு ஒப்படைத்திருக்கிறது என்றும், அந்த அறிக்கை வந்தவுடன் எப்படி செயல்படுத்துவது என்பது பற்றி மத்திய அரசு தீவிரமாக ஆலோசிக்கும் என்றும், அதையொட்டி மாநிலத்திற்கு அதை எப்படி பயன்படுத்துவது என்பது பற்றி நாம் முடிவு எடுப்போம் என்றும் தெரிவித்தது எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நினைவிருக்கும் என்று நம்புகின்றேன். ஆகையினால், அந்த அறிக்கையை மத்திய அரசு எதிர்நோக்கிக் கொண்டிருப்பதை நாமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் போடுவது ஒருபுறம் இருக்க, மாநில அரசே தனியாக இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியும் என்று கூறினார்களே, அப்படி நடைமுறைப்படுத்த இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் அறிக்கை வந்த பின் தான், அதுபற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, எல்லாப் பயிர்களுக்கும் இந்த இன்சூரன்ஸ் திட்டம் கொண்டுவருவது இருந்தபோதிலும் கூட, வீரிய வித்துக்கள் பயிரிட்டு அதிகமாக செலவு செய்யக்கூடிய சில விவசாயிகள் சில நேரங்களில் ஏதாவது பூச்சி போன்றவற்றால் எவ்வளவு நஷ்டத்திற்கு ஆளாகிறார்கள் என்பதைத் தெரிந்து, நமது மாநில சர்க்கார், இம்மாதிரி வீரிய வித்துக்கள், வரலட்சுமி, கே-2, கே-1 கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு உடனடியாக இன்சூரன்ஸ் கொண்டுவருவதற்கு மாநில அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: உறுப்பினர் அவர்களின் யோசனை, ஆலோசிக்கப்பட்டு பரிசீலிக்கப்படும்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, நான் கேட்ட வினா ஒன்றிற்கு அவை முன்னவர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தைப் பற்றி குறிப்பிட்டதைப் பற்றி விளக்கிச் சொன்னார்கள். நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நான் தெரிந்து கொள்ள விரும்புவது அது பற்றி மத்திய அரசுக்கு மாநில அரசின் சார்பாக கடிதம் ஏதாவது எழுதப்பட்டு இருக்கிறதா? அதற்கு மத்திய அரசு அந்த விவரங்களைக் கூறி அது கவனிக்கப்படும் என்று மாநில அரசுக்கு பதில் அனுப்பி இருக்கிறதா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஏற்கனவே அந்தக் குழு அந்தப் பிரச்சினையில் முழு மூச்சாக இறங்கி அறிக்கை தயாரித்துக் கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் மத்திய சர்க்காருக்கு இப்போதைய சூழ்நிலையில் கடிதம் எழுதத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

திரு. தி. சு. நல்லதம்பி: பேரவைத் துணைத் தலைவரவர்களே நமது அமைச்சர் அவர்கள் பதிலில் தெரிவித்த கருத்து, மத்திய அரசாங்கத்திலிருந்து வந்தால்தான் அது கவனிக்கப்படும் என்று சொன்னதாகத் தெரிகிறது. அப்படி மத்திய சர்க்காரிடமிருந்து அறிக்கை வருவதற்கு காலதாமதம் ஓரிரு ஆண்டுகள் ஆகலாம். ஆகவே, தமிழக சர்க்கார் அந்தப் பயிர் பாதுகாப்புத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்; அறிக்கை வருவதற்கு ஓரிரு ஆண்டுகள் ஆகலாம் என்ற எண்ணத்தில் நாம் இருப்பதை விட, அந்த அறிக்கை தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு, சீக்கிரமாக வரும் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது. இன்றைய தினம் மத்தியிலே இருக்கிற அரசு விரைவாக அந்த வேலையைத் துரிதப்படுத்துகிற முயற்சியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையில் இந்த அரசு இருக்கிறது என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: தலைவரவர்களே, அதுபற்றி வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் விடை அளித்தபோது பயிர் இன்சூரன்ஸ் திட்டம் குறித்து மத்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்து இருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். அந்த வேண்டுகோள் கடித வடிவத்திலா அல்லது இங்கே படிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை வடிவத்திலா?

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : அந்த வேண்டுகோள் புரட்சித் தலைவர் டெல்லி சென்று இருந்தபோது நேரடியாக விடுக்கப்பட்ட வேண்டுகோள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : அவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் பயிர் பாதுகாப்புத் திட்டம் மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டது என்று சொல்கிறார். தேர்தல் நேரத்தில் அவர்கள் வாக்குறுதி தந்து இருக்கிறார்களே, ஆளும் கட்சியாக அவர்கள் வந்த பின்புதான் அது மத்திய சர்க்காரின் அதிகாரத்திற்குட்பட்டது என்று தெரிந்து கொண்டார்களா, அல்லது அது தெரிந்தேதான் சொன்னார்களா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, தேர்தல் நேரத்தில் தரப்பட்ட வாக்குறுதி பற்றி இதற்கு முன்பு அவையிலே எதிர்க்கட்சித் தலைவரவர்களே அவருடைய பட்ஜெட் பேச்சிலே குறிப்பிட்டார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த இன்ஷூரன்ஸ் ஸ்கீம் கொண்டு வருவோம் என்று உறுதியாகத் தெரிவித்து இருக்கிறோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டதற்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த இன்ஷூரன்ஸ் திட்டம் கொண்டு வருவது பற்றி நிச்சயமாக நாங்கள் பரிசீலிப்போம் என்றும், அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறதே தவிர நாங்கள் வந்தால் கொண்டு வருவோம் என்று குறிப்பிடவில்லை என்பதைத் தேர்தல் அறிக்கையை அவர்களுக்குச் சுட்டிக் காட்டி நான் சொன்னதை அவையின் கவனத்திற்கு இப்போது கொண்டு

வருகிறேன். நாங்களாகவே அதைக் கொண்டு வருவோம் என்று தேர்தல் அறிக்கையில் எந்தப் பகுதியிலும் இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் பற்றி புரட்சித் தலைவர் அவர்கள் டெல்லியில் அமைச்சர்களிடம் சொன்னதாகச் சொன்னார்கள். சொல்லிய பிறகு அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் மட்டத்தில் உள்ளவர்கள் எழுத்து மூலமாக எழுதி, நேரிலே சொல்லியதை உறுதிப்படுத்தி இருக்கிறார்களா, அதுதான் மரபு. ஏனென்றால் நமக்கும் ஞாபக மறதி இருக்கலாம். அவர்களுக்கும் ஞாபக மறதி இருக்கலாம். நாளைக்கு அப்படிச் சொல்லவில்லை என்று மறுத்து விடலாம். ஆகவே, அவர் எந்தத் தேதியில் அப்படிச் சொன்னார் என்பதைக் குறிப்பிட்டு, கடிதம் மூலம் அதை எழுதி உறுதி செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : உறுப்பினர் கந்தசாமி அவர்கள் ஒரே நேரத்தில் மாநில சர்க்காருக்கும் பொறுப்பு இல்லை மத்திய சர்க்காருக்கும் பொறுப்பு இல்லை, நமக்கும் பொறுப்பு இல்லை என்று பேசியது வருந்தத் தக்கது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் நமக்கும் ஞாபக மறதி; மத்திய அரசுக்கும் ஞாபக மறதி என்று கூறியிருக்கிறார். ஆகவே தயவு செய்து அப்படிச் சொல்லாதீர்கள். நேரடியாக வேண்டுகோள் விடப்பட்டு இருக்கிறது. அவர்கள் குழு அமைத்து இருக்கிறார்கள். விரைவு படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார்கள். வேண்டுமானால் அதை விரைவு படுத்துங்கள் என்று அரசு கடிதம் எழுதுவதற்கு தயாராக இருக்கிறது.

திரு. கே.கந்தசாமி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை வேறுவிதமாக புரிந்து கொண்டார்கள். பொறுப்பற்ற தன்மையில் உள்ளது என்று எந்த அரசையும் குறிப்பிடவில்லை. தொடர் நடவடிக்கைக்கு உதவிகரமாக இருக்கும் என்பதற்காக தபால் எழுத வேண்டுமென்று சொன்னேனே தவிர, வேறு ஒன்றுமல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன் : இந்தப் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் என்பது கடந்த பத்தாண்டுக் காலமாகப் பேசப்பட்டு வருகிறது. பெரிய உண்மை—ஏற்கனவே இருந்த திராவிட முன்னேற்ற கழக அரசு காலத்தில் பயிர் இன்ஷூரன்ஸ் திட்டம் சம்பந்தமாக ஏதாவது செயற்குறிப்பு வைத்திருந்தார்களா ? அதற்குப் பின் குடியரசு தலைவர் ஆட்சிக் காலத்திலாவது ஏதாவது செயற்குறிப்பு வைத்திருந்தார்களா?

இப்போதாவது நம்முடைய அதிகாரிகள் ஏதாவது குறிப்பு வைத்திருக்கிருர்களா? அதை அமல் நடத்த மாநில அரசுக்கு எவ்வளவு ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று தெரிவிக்க முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் இதற்குத் தகுந்த பதில் சொல்ல முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆ. நடராசன் : மத்திய அரசு இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை என்றுல் தமிழக அரசு மாற்றுத் திட்டம் நிறைவேற்றுமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : மாண்புமிகு உறுப்பினா அவர்கள் இதற்கும் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினு-விடை நேரம் முடிவுற்றது.

2. அரசினர் தீர்மானம்.

விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனேகரன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3)-இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக் கூடாது என்ற விதியைத் தளர்த்தவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, ஒரு மனதாக நிறைவேற்றப்பெற்றது.

3. கவன ஈர்ப்பு.

(அ) காவிரிப் பாசனப் பகுதிகளில் பல ஆறுகளில் தண்ணீர்ப் பற்ருக் குறை இருப்பதனுல் விவசாயம் பாதிக்கப் பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தஞ்சை மாவட்டக் காவிரிப் பாசனம் பற்றி 12 உறுப்பினர்கள் தீர்மானம்

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

கொடுக்கிருக்கிருர்கள். அந்தத் தீர்மானத்தை நானே படித்து விடுகிறேன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கையைப் படித்தவுடன் தீர்மானத்தைக் கொடுத்த உறுப்பினர்கள் ஏதாவது விளக்கம் கேட்க வேண்டுமென்றுல் கேட்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் செ. இராமலிங்கம், மு. அம்பிகாபதி, தாழை மு. கருணாநிதி, மா. மீனுட்சிசுந்தரம், இரா. இராசமாணிக்கம், ஆர். வி. சௌந்திரராஜன், என். கிட்டப்பா, ஆர். உமாநாத், எஸ். கணேசன், கா. சுப்ரவேலு, ஏ. ஆர். மாரிமுத்து, கு. ரமணி ஆகியோர் கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள் :—

"தஞ்சை மாவட்டத்தில் காவேரி பாசனத்தில் கடைமடைப் பகுதியிலுள்ள கீழ்க்கண்ட சில கிராமங்களுக்கும், மற்றும் சில பகுதிகளுக்கும் போதுமான தண்ணீர் வராததினுல் விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளதால் அதற்குண்டான உடனடி நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய அவசியம் குறித்து ;

நன்னிலம் துணைக் கோட்டத்திற்கு உட்பட்ட அரசலாறு நாட்டார் கீர்த்திமனுர் ஆகிய ஆறுகளில் பிரியும் வாய்க்கால் தலைப்புகள் மூடப்பட்டுள்ளதினுல் பாதிப்பு ;

மன்னுர்குடி தாலூக்காவில் உள்ள பாமினி ஆறு பிரிவில் பாசனம் பெறும் பெருகவாழ்ந்தான், சித்தமல்லி, சிறுகளத்தூர், நொச்சியூர், புத்தகரம் ஆகிய பகுதிகள் ;

வெண்ணுறு கோட்ட கடைமடை பகுதியான வெண்ணுறு பாண்டையாறு, பாமினியாறு, முன்னியாறு அடப்பாறு, அரிச்சந்திராநதிப் பகுதிகள்; தண்ணீர் முறை வைத்து விடப்படுவதால் காவேரி, வீர சோழன், மகிமாலையார், மஞ்சளார் பகுதிகள் ; பாபநாசம் ஒன்றியத்தில் காவிரி ஆற்றின் வடகரையிலிருந்து பிரிந்து செல்லும் கொங்கன் வாய்க்காலில் சரிவர தண்ணீர் இல்லாததைப் பற்றி;

மனனுாகுடி பட்டுக்கோட்டை தாலுகாவின் பகுதிகளான உலையக்குண்டம் வாலாஜிக்கோட்டை, கன்னியாகுறிச்சி, எளவனூர், திருமக்கோட்டை, தென்பரை, களிச்சாங்கோட்டை, ராதா நரசிம்மபுரம், வள்ளூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 15 ஆயிரம் ஏக்கர் நிலம் தண்ணீர் இன்மை;

வெண்ணுற்றுப் பாசனம் கோரையார் பகுதிக்கு ஏர்வக்காடு ஷட்டர்கள் மூலமாக எப்பொழுதும் விடப்பட்டு வந்த அளவு தண்ணீர் விடாததின் காரணமாக திருப்பண்டி பிரதாபராமபுரம், சிந்தாமணி, காரப்பிடாகை, கருங்கண்ணி கிராமங்களில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ள நிலை;

மாயூரம், சீர்காழி வட்டங்களில் காவிரி டெல்டா பகுதியில் கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாடு;

கல்லணைக்கால்வாய்ப் பகுதியில் கல்யாணஓடை, வடகாடு ராஜாமடம் வடவார் விஸ்தரிப்பு வாய்க்கால் பாசனத்தின் கடைமடை பகுதிகளில் தண்ணீர்ப் பற்றுக்குறை;

நாகபட்டினம், திருத்துறைப்பூண்டி, நன்னிலம் ஆகிய பகுதிகளுக்குக் குறைவான அளவு தண்ணீர் விடுவதாலும், குறிப்பாக புதுச்சேரி கிராமங்களுக்கு இதுவரை தண்ணீர் விடாததின் நிலை:

மன்னர்குடி தாலுக்கா கல்லணைக் கால்வாய்ப் பிரிவு 2, மூவநல்லூர் வாய்க்காலில் தண்ணீர் போகாததாலும் அன்னவாசல் கிராமத்திலுள்ள வலாம்பிரான் ஏரி தண்ணீர் போகாத நிலை".

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத்தலைவர் அவர்களே, மேட்டூர் நீர்தேக்கம் 15—7—1977 அன்று பாசனத்திற்கு திறக்கப்பட்டு 19—7—1977 முதல் கல்லணையிலிருந்து எல்லா முக்கியமான ஆறுகளிலும் தண்ணீர் தடையின்றி, தொடர்ச்சியாக விடப்படுகிறது. மேட்டூர் நீர்த் தேக்கத்திலிருந்து விடப்படும் நீரின் அளவு 31—7—1977 முதல் விநாடிக்கு 21,000 கன அடியிலிருந்து 25,000 கன அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, குறுவை பாசனத்துக்குத் தேவையான தண்ணீர் விடுவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இருந்தாலும் தண்ணீர் உபயோகத்தில் சிக்கனமும், கட்டுப்பாடும் தேவை.

இதுவரை முறைத்திட்டம் எந்த ஆற்றிலும் புகுத்தப்படவில்லை. காவேரியிலும், வெண்ணுற்றிலும் மற்றும் கல்லணைக் கால்வாயிலும் தண்ணீர் தொடர்ந்து விடப்படுகிறது. விதி முறைகளில் குறிப்பிட்டுள்ளபடி தண்ணீரின் அளவு கல்லணையில் இருந்து பிரித்து விடப்படுகிறது. குடமுருட்டி, அரசலாறு, வீரசோழன், வெட்டாறு, வடவாறு ஆகிய ஆறுகளின் முக்கிய கால்வாய்கள் எதிலும் முறைத்திட்டம் செயல்படவில்லை.

ஆனுல் சில வாய்க்கால்களில், தலைப்புப் பகுதிகளில் போதுமான தண்ணீர் வரத்து இல்லாத காரணத்தால் $3\frac{1}{2}$ நாட்களுக்கு ஒருமுறை மாறி மாறி தண்ணீர் அதிக அளவிலும் குறைந்த அளவிலும் விடப்படுகிறது. அதாவது மாறி மாறி சில கால்வாய்களில் அதிகத் தண்ணீரும் மற்றும் சில கால்வாய்களில் குறைந்த தண்ணீரும் விடப்படுகிறது. எந்தக் கால்வாயும் முழுமையாக மூடப்படவில்லை.

கால்வாய்களின் கடைமடைப் பகுதியில் மட்டும் சுமார் 15 மைல் அகலத்தில், சிறு கால்வாய்களின் தலைப்பில் போதுமான அளவு தண்ணீர் வராததால் சில கால்வாய்கள் மூடப்பட்டும், மற்றவைகளுக்கு $3\frac{1}{2}$ நாட்கள் தண்ணீர் விடப்பட்டும் வருகிறது. $3\frac{1}{2}$ நாட்களுக்கு ஒருமுறை இந்த முறை மாற்றப்படுகிறது.

தஞ்சை மாவட்ட விவசாயிகளின் தேவைகளை அரசு நன்கு உணர்ந்துள்ளது. கை இருப்பு நீரைக் கொண்டு, விவசாயிகளின் தேவைகளைப் பெருமளவு பூர்த்தி செய்யும் வகையில் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேட்டூரிலிருந்து 25 ஆயிரம் கியூசெக்ஸ் வரையிலும் தண்ணீர் எடுப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். 25 ஆயிரம் கியூசெக்ஸ் தண்ணீர் எடுத்தால் சாதாரணமாக எல்லா வாய்க்கால்களிலும் போய் கடைமடைப் பகுதிகளிலே கூடத் தண்ணீர் கொடுத்துவிட முடியும். ஆனுல் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் போகவில்லை. மேலே உள்ளவர்கள் எல்லாம் அதிகமான அளவில் தண்ணீரை எடுத்துக்கொண்ட காரணத்தால் கீழே உள்ளவர்களுக்குப் போகாமல் அங்கே தண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிருர்கள். கல்லணையிலிருந்து 25 ஆயிரம் கியூசெக்ஸ் தண்ணீர் எடுப்பதை 28 ஆயிரம் கியூசெக்ஸாக எடுத்தால் காவிரியில் 11 ஆயிரமும், வெண்ணுற்றில் 9 ஆயிரமும் ஜி. ஏ. கெனுலுக்கு 4,200 தண்ணீர் கொடுக்கப்பட்டு, கீழே உள்ள இடங்களுக்கும் தண்ணீர் கிடைக்கும். அதற்குப் பிறகு கீழே திருச்சி மாவட்டத்திற்கு 4 ஆயிரம் கியூசெக்ஸ் தண்ணீர் கொடுக்கவேண்டும். ஆகவே மழை இல்லாத நேரத்திலே 28 ஆயிரம் கியூசெக்ஸ் தண்ணீர் தற்காலிகமாவது எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இதுவரையிலும் 25 ஆயிரம் கன அடி தண்ணீர்தான் கொடுக்கப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு, அதற்கு முந்தைய ஆண்டுகளில் கூட காவிரி நீர்ப் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. ஆனுல் இந்தத் தடவை கடைமடைப் பகுதிகளில் சில இடங்களில் தண்ணீர் வரவில்லை என்று குறைப்பட்டுக் கொள்கிருர்கள். சாதாரணமாக இந்தக் காலங்களில் ஒன்றிரண்டு மழை பெய்து விடும்.

[முற்பகல் 9.40]

ஆகவே, அந்த மழையை 25,000 கன அடி ஓரளவு நிறைவு செய்யும். ஆனுல் மழை இந்த ஆண்டு இல்லை. மழை வரும் என்று எதிர்பார்த்தோம், ஆனுல் மழை இல்லை. 28,000 கன அடி நேற்றிலிருந்து விடப்படுகிறது.

திரு. செ. ராமலிங்கம் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் குறிப்பிடும்பொழுது முறை வைத்து விடவில்லை என்று கூறினார்கள். ஆனால் நேற்றுவரையில் எங்கள் கடைமடைப் பகுதி மட்டுமல்ல, தலைமடைப் பகுதியிலும் முறை வைத்துத்தான் விடுகிறார்கள். வாரத்தில் 3 நாட்கள்தான் தண்ணீர் வருகிறது. இதர நான்கு நாட்களுக்குச் சுத்தமாகத தண்ணீரே வருவதில்லை. முறைவைத்து விடுகிறார்கள். அங்கே உள்ள விவசாயிகள் நாற்று விட்டதை மாடுகளை வைத்து மேய்க்கச் செய்ய வேண்டிய அவல நிலை ஏற்பட்டிருப்பதால் விவசாயிகள் பெரிய அவதிக்குள்ளாகியிருக்கிறார்கள். மன்னியாற்றிலிருந்து வாரத்தில் 2 நாட்களுக்கு 1,200 கியூசெக்ஸ் தண்ணீர் விடப்பட்டு மீதி நாட்களுக்கு விடப்படுவதில்லை. அதனால் அங்கேயுள்ள விவசாயிகள் மத்தியில் பெரிய கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. இதனை இந்த அரசு உணர்ந்து உடனடியாக அந்த முறைத் திட்டத்தை நீக்க வேண்டுமென்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் முன்பே குறிப்பிட்டதைப்போல சென்ற சில ஆண்டுகளாக கடைமடைப் பகுதியிலும் அதையொட்டிய பகுதியிலும் இந்த முறைத் திட்டத்தை அமல்படுத்தித் தண்ணீரைச் சிக்கனப்படுத்தும் முறையில் செய்யப்பட்டது. முறை வைப்பது இரண்டு வகையில் செய்யப்படுகிறது. கடைமடைப் பகுதிகளில் சில கால்வாய்களில் முழுவதும் $3\frac{1}{2}$ நாட்கள் மூடப்பட்டு இன்னும் சில கால்வாய்களுக்குத் தண்ணீர் விடப்படுகிறது. ஆனால் இன்னும் சில கால்வாய்களில் தண்ணீர், ஹைலெவல் லோ லெவல் என்று சொல்லி, ஓரளவு தேக்கி, மாறி மாறி சில கால்வாய்களில் $3\frac{1}{2}$ நாட்களுக்கு அதிகத் தண்ணீரும் மீதியுள்ள கால்வாய்களுக்கு $3\frac{1}{2}$ நாட்களுக்குக் குறைந்த அளவில் தண்ணீரும் விடுகிறார்கள். மன்னியாறு பற்றிக் குறிப்பிட்டார்கள், அரசு ஆவன செய்யும்.

*திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் சில வாய்க்கால்களில் $3\frac{1}{2}$ நாட்களும், பிறிதொரு பகுதிகளில் மற்ற $3\frac{1}{2}$ நாட்களிலும் தண்ணீர் விடப்படுவதாகக் கூறினார்கள். குறிப்பாக மன்னார்குடி பகுதியில் பாமினியாற்றில் சித்தமல்லி, திருவிடைமருதூர், நொச்சியூர், சித்தமல்லி, பட்டவளி, சேரங்குளம், மூவரும் சேத்தி போன்ற பகுதிகளில் தண்ணீர் வரவில்லை. அதனால் அங்குள்ளவர்கள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். நான் அமைச்சரவர்களிடம் விவரம் கொடுத்திருக்கிறேன். கல்லணைக் கால்வாயிலிருந்து திருமக்கோட்டை, எழனூர், வரவாஜிக் கோட்டை, பாளையங்கோட்டை, ராதாநரசிம்மபுரம் முதலிய

பகுதிகளில் தண்ணீர் வரவில்லை என்று விவசாயிகள் தகவல் கொடுத்திருக்கிறார்கள். கடந்த ஆண்டும் அந்தத் தண்ணீர் விடப்படாததால் விவசாயத் தொழிலாளர்கள் வேலையின்றி இருந்தார்கள். இந்த ஆண்டும் கடைமடைப் பகுதிகளில் சுமார் 2 இலட்சம் விவசாயத் தொழிலாளர்கள் வேலையிழந்து பிச்சை எடுக்கும் நிலைக்கு வருவதற்கான சூழ்நிலை இருக்கிறது. ஏனென்றால் கடந்த ஆண்டும் வேலையில்லை. இப்படி விவசாயத் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள், விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். மன்னார்குடி ஆர். டீ. ஓ. ஆபீசுக்கு முன்னால் உண்ணாவிரதம் நடந்திருக்கிறது. எனவே, அரசு இதைக் கருத்திற்கொண்டு கல்லணைப் பகுதியிலும், பாமினியாற்றுக் கடைப்பகுதியிலும் விசேஷ கவனம் செலுத்தித் துரிதமாகத் தண்ணீர் கொடுக்க பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் முயற்சிகளை மேற்கொள்வார்களா என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கிழக்குத் தஞ்சையைப் பொறுத்தவரையில் நான் ஏற்கனவே சொன்னேன். கல்லணைக் கால்வாயைப் பொறுத்தவரையில் அங்கே முழு அளவிற்குத் தண்ணீர் விடப்படுகிறது. அதில் எந்தவிதமான ஐயத்திற்கும் இடமேயில்லை. ஆனால் சென்ற ஆண்டும் தண்ணீர் விடப்படாததினால் 'சிப்பேஜ் லாஸ்' அதிகமாக இருக்கிறது. எவ்வளவு தண்ணீர் விட்டாலும் இறங்கி விடும் என்று குறிப்பிட்டார்கள். அதையும் கவனத்தில் கொண்டு எல்லாப் பகுதிகளுக்கும் தண்ணீர் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிச்சை எடுக்கிறார்கள், உண்ணாவிரதம் இருக்கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். உண்ணாவிரதம் இருந்தால் தண்ணீர் கிடைக்கும் என்பது புதிய கண்டுபிடிப்புதான்.

திரு. தாழை. மு. கருணாநிதி : பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்ட மக்களெல்லாம் தண்ணீர் இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். குறிப்பாக பொதுப்பணித்துறை அமைச்சராக டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபொழுது தஞ்சை மாவட்ட விவசாய மக்களுடைய உணர்வுகளை மதித்துக் கடைமடைப் பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று தண்ணீர் இல்லாத இடங்களுக்குத் தண்ணீர் விட வேண்டுமென்ற உணர்வோடு அதிகாரிகளுக்கெல்லாம் கட்டளையிட்டார்கள். இப்படிப்பட்ட திட்டத்தின் அடிப்படையில் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு நேரடியாகச் சென்று அந்தக் காரியங்களைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கு இருந்ததைவிட அதிகம் இல்லை என்றாலும், அவர்களுக்கு இருந்த அதே அளவிற்கு உணர்வு இந்த அரசுக்கு நிச்சயமாக இருக்கிறது. அதனுல்தான் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடனே கர்நாடக மாநில முதலமைச்சரவர்களை, தஞ்சை மாவட்டத்திற்குக் குறுவை சாகுபடி பாதிக்காத அளவிற்குத் தண்ணீர் கிடைக்க வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சரவர்கள் சென்று சந்தித்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். கடைமடைப் பகுதிகள் கவனத்தில் கொள்ளப்படும்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவேரி, வீரசோழன், மகிமாலையார், மஞ்சளார் பகுதிகளில் முறை வைத்துத்தான் தண்ணீர் விடப்படுகிறது என்பதை 4—8—1977-ம் தேதி அன்று கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொடுத்திருக்கிறேன். அதற்குமுன்னுல், 3—8—1977 ஆம் தேதியன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரைச் சந்தித்து, முறை வைத்துத் தண்ணீர் விடப்படுவதால் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கிற நிலைமைகளைச் சொல்லி, 20 நாளாவது முறை வைக்காமல் தண்ணீர் விட வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். நான் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்து, 12 நாட்களுக்குப் பிறகு இந்த அவையிலே தீர்மானம் வந்திருக்கிறது. ஆனுல், அமைச்சரவர்கள் முறை வைக்கவில்லை, காவேரி, வீரசோழன் பகுதிகளில் முறையில்லாமல் தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது என்று சொல்கிருர்கள். நேற்றைய முன்தினம் நான் அந்தப் பகுதிக்குச் சென்று பார்க்கும்போது, வீரசோழன் பகுதியில் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட இல்லாமல் மணல்தான் இருக்கிறது; தண்ணீரே செல்லவில்லையென்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதைப் போல் மகிமாலையார், மஞ்சளார் பகுதிகளில்தண்ணீர் இல்லாத நிலையில் நடுவதற்குத் தயாராக வைத்து இருந்த நாற்றுக்களையெல்லாம் 40 நாட்களுக்கு மேல் நடமுடியாத அளவுக்கு அவையெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன, விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிருர்கள். ஆகவே, பொதுப்பணித் துறை, முறை அளவு வைக்காமல், முறையில்லாத அளவுக்குத் தண்ணீர் விட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்: முறையில்லாமல் தான் தண்ணீர் விடப்படுகிறது என்று அதிகாரிகள்தான் உண்மைக்குப்புறம்பான தகவலைத் தருகிருர்களா, என்ன என்பதை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை. ஆகவே, தயவு செய்து பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் மிகுந்த கவனம் செலுத்தி, ஆவன செய்ய வேண்டுமென்று பணிவன்போடு இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

காவிரிப் பாசனப் பகுதிகளில் பல ஆறுகளில் தண்ணீர்ப் பற்றுக்குறை
இருப்பதனுல் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல், வீரசோழன் ஆற்றில் முறை வைப்பு இல்லை என்ற தகவல்தான் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆனுல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தண்ணீரையே நான் பார்க்கவில்லையென்று குறிப்பிடுகிருர்கள். அதுபற்றி சர்க்கார் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கடைமடைப் பகுதிகளில் இருக்கிற முறை வைப்பு இப்பொழுது ஏற்பட்டதல்ல; கடந்த சில ஆண்டுகளாக தண்ணீரைச் சிக்கனப்படுத்த கையாளப்பட்டு வருகிற முறை. அது வழிவழி வந்த முறையே தவிர, புதிதாக புகுத்தப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாயூரம் வட்டத்தில், குறிப்பாக மன்னியாற்று கடைமடைப் பாசனப் பகுதிகளில் போதுமான தண்ணீர் வராத காரணத்தினுல், மிகவும் அவதிப்படுகிருர்கள் என்பதனை இங்கே பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அங்கே மணல்மேடு, கடலங்குடி, ஆத்தூர் மற்றும் கேசிங்கன் போன்ற பஞ்சாயத்துப் பகுதிகளைப் பார்வையிட வரும்போது, எங்களுடைய கட்சியைச் சேர்ந்த தாழை மு. கருணநிதி அவர்கள் கேட்டுக் கொண்டதைப் போல், நானும் எனது அண்டை மாவட்டத்திலிருக்கிற மதிப்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் [illegible], அங்கே [illegible], அதிகாரிகள் சொல்வதில் எந்த அளவுக்குப் பொருத்தம் இருக்கிறது, உண்மை இருக்கிறது என்பதைக் கண்டறிய முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு எதிர்க்கட்சி அங்கத்தினர்களுக்கு என்மீது இருக்கிற நம்பிக்கைக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த மன்னியாறு பகுதியில் போதுமான அளவு நீர் கிடைக்கவில்லையென்பதை ஏற்கனவே உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிருர்கள். அதுபற்றி அரசு ஆலோசிக்கும்.

திரு. கா. சுப்ரவேலு : துணைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருப்பது சீர்காழி பொறுத்த கடைமடைப் பகுதியாகும். அந்தப் பகுதியைப் [illegible]. [illegible] தண்ணீர் 3 நாள் அமைச்சரவர்கள் சொன்னதைப் போல் தண்ணீர் வந்த உடனே, வாய்க்கால் திறந்து விடப்படுகிறது. தண்ணீர் வந்த உடனே, பாயமுடியாமல் காலிலேயே காய்ந்து விடுகிறது. வயல்களுக்குப் பாயமுடியாமல் அந்தப் பகுதி கடைமடையாக முடிகிறது. இது முதடியிலே வழிவழி வந்த முறை என்று அமைச்சரவர்கள் சொன்னீர்கள்.

காவிரிப் பாசனப் பகுதிகளில் பல ஆறுகளில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருப்பதனால் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து

[திரு. கா. சுப்ரவேலு] [1977 ஆகஸ்டு 16

ஆனால், முதலிலே அப்படி வழிவழியாக வரவில்லை. முதலிலே, ஆரம்பத்திலே எல்லா வயல்களுக்கும் தண்ணீர் கொடுத்து விட்டு, அதற்குப் பிறகு, முறை வைப்பதுதான் வழிவழி வந்த முறை. ஆனால், இப்பொழுது ஆரம்பத்திலேயே முறை என்ற காரணத்தால், கொடுக்கப்படுகிற தண்ணீர் வயல்களுக்குப் பாய முடியாமல், சீர்காழி மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே, புது மன்னியார் தலைப்பு—மணஞ்சேரியில் 350 கன அடி தண்ணீர் முன்னால் தரப்பட்டது என்று சொல்கிறார்கள். ஆனால், இப்பொழுது 250 கன அடி தண்ணீர் கான் திறந்து விடப்படுகிறது. அதிலே, முறை வைத்து தரப்படுகிற காரணத்தால், குறைவாக வருகிற தண்ணீர் வயல்களுக்குப் பாயவில்லை. அனுபவமுள்ள விவசாயிகள், முதலிலே தண்ணீர் கொடுத்தால் அதை வைத்து விதை தெளித்து விடுவோம், அதற்குப் பிறகு முறை வைத்தால் வசதியாக இருக்கும் என்று சொல்கிறார்கள். முதலிலேயே முறை வைப்பதால் சீர்காழி அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, அமைச்சரவர்கள், எனக்கு முன்னால், திரு. தாழை மு. கருணாநிதி அவர்களும், திரு. கிட்டப்பா அவர்களும் சொன்னதைப் போல், நீங்கள் நேரடியாக ஒரு முறை நாளையோ நாளை மறுதினமோ, அங்கு சென்று பார்த்து, பிரச்னைக்கு முடிவு கட்டுவீர்களா என்று அமைச்சரவர்களைக் கேட்கிறேன்.

[முற்பகல் 9-50]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துக் [illegible] யிலே தான் 25 ஆயிரம் கியூசெக்ஸ் என்பதை 28 ஆயிரம் கியூசெக்ஸாக ஆக்கியிருக்கிறேன். [illegible] இந்தக் குறைபாடுகள் தீரும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். நான் வருவதற்கு இந்த இன்விடேஷனை நிரந்தரமாக வைத்துக்கொள்கிறேன். எப்போது வர முடியுமோ அப்போது வருகிறேன்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது பொதுவாக தண்ணீர் குறைவாக உள்ளது பற்றியும், மழையை நம்பி அதில் ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது பற்றியும் குறிப்பிட்ட போது, ஒரு கவலையான நிலைமை தஞ்சை மாவட்டத்தில் உள்ளது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் காட்டியதிலிருந்து தெளிவாகிறது. ஆனால் இங்கே கொடுக்கப்பட்டுள்ள கேள்வி, காவிரிப் பாசனத்தில் கடைமடைப் பகுதிகளில் போதுமான தண்ணீர் வராததாலும் தண்ணீரை அப்படி ரெகுலேட் பண்ணி அனுப்பாததாலும் குறைவாகக் கிடைக்கும்படி இருப்பதால், விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதாகும். ஒரு பக்கத்தில் ஓரளவுக்குக் கிடைக்கிறது மறுபக்கத்தில் தண்ணீரே கிடைப்பதில்லை என்ற நிலைமை, இதிலிருந்து தெளிவாகிறது. அப்படியானால் இதற்கு என்ன காரணம் என்பதை ஆழமாகப்

1977 ஆகஸ்டு 16] [திரு. கு. ரமணி]

பரிசீலிப்பார்களா! இந்த வட்டாரத்தில் இருக்கிற பெரும் நிலச்சுவான்தாரர்கள் இந்தத் தண்ணீரைத் தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்த, அங்கிருக்கிற அதிகாரிகள் மூலமாக தலையிட்டு காரியங்களைச் செய்கிறார்களா, என்ற சந்தேகம் பலமாக இருக்கிறது. அதைப்பற்றி ஆழமாக அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து ரெகுலேட் பண்ணி கொடுக்கிற தண்ணீர் எல்லோருக்கும் ரெகுலேட்டாக கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நான் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். காவேரியில் தண்ணீர் விடுகிறபோது நான் ஏற்கனவே சொன்னதைப் போல இந்த Seepage loss அதிகமாக இருக்கிறது. ஆகவே பெரிய வாய்க்காலில்—கால்வாயிலே பாய்ச்சுகிறபோது போதுமான அளவு தண்ணீர் விடப்படுகிறது. ஆனால் இதிலிருந்து பிரிந்து சிறு வாய்க்காலில் செல்கிறபோது அந்தத் தண்ணீர் குறைகிறது. ஆனால் சில இடங்களில் அந்தத் தண்ணீர் குறைகிற காரணத்தாலே பாசனத்திற்குப் போதுமான அளவு இல்லை, ஆகையினால் வாய்க்காலிலே ரெகுலேட் செய்கிறபோது சில வாய்க்கால்களிலே குறைவான தண்ணீரை விட்டு, அந்தத் தண்ணீரை மிச்சப்படுத்தி. இன்னொரு வாய்க்காலில் 3½ நாளைக்கு விடுகிறார்கள். 3½ நாள் கழித்து இந்த வாய்க்கால் தண்ணீரை மிச்சப்படுத்தி ஏற்கனவே குறைவாக இருக்கிற கால்வாய்களில் [illegible] அதைப்பயன்படுத்தி அதன் மூலம் விவசாயிகளுக்கு விடுகிறார்கள். அப்படி செய்கிறார்களே தவிர, நிலச்சுவான்தாரர்கள் பிரச்னை இதிலே இல்லை.

(ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் உய்யக்கொண்டான் கால்வாயில் தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டிருப்பதால் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து திருவாளர்கள் மு. அம்பிகாபதி, செ. சதாசிவம் ஆகியோர் உய்யக்கொண்டான் கால்வாய் பற்றி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். தீர்மானத்தை யாராவது ஒருவர் படித்தால் போதும்.

*திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, ''திருச்சிராப்பள்ளி மாவட்டம் உய்யக்கொண்டான் கால்வாயில் மராமத்துக்காகத் தண்ணீர் விடுவது நிறுத்தப்பட்டிருப்பதால் அப்பகுதியில் விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பது பற்றிய''

நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, உய்யக்கொண்டான் கால்வாய் வழக்கமாக ஜூன் 1-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை மூடப்படுகிறது. இக்கால்வாயின் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தி அடைப்புக் காலத்தை 2½ மாதங்களாக நிர்ணயித்து 1975ஆம் ஆண்டிலிருந்து இம்முறை அமுல் படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி இவ்வாண்டின் அடைப்புக் காலம் 1—6—1977 முதல் 15—8—1977 வரை என அரசினால் உத்தர விடப்பட்டது. ஆனால் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், உய்யக்கொண்டான் கால்வாயில் தண்ணீர் விடப் படுவதின் அவசியம் குறித்து நிர்வாகப் பொறியாளர், வேளாண்மைத் துறை துணை இயக்குநர் மற்றும் மாவட்ட வருவாய் அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துள்ளார். அதன்படி 5—8—1977ஆம் தேதியிலிருந்து கால்வாய் திறக்கப்பட்டுள்ளது.

திரு. செ. சதாசிவம்: அந்தக் கால்வாயை அதிகமாகக் கரும்பு வாழை போன்ற பணப்பயிர்கள் பயிரிடுபவர்கள்தான் உபயோகிக்கிறார்கள். நீண்ட நாட்களாக தண்ணீர் விடாத தால் அந்தப் பயிர்கள் அழுகுகிற நிலையில் இருப்பதால்—நான் 2-ம் தேதியே அந்தத் தீர்மானத்தைக் கொடுத்தேன்—இடையில் தண்ணீர் விடுவது நல்லது. 5-ம் தேதி தண்ணீர் விட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இந்த இரண்டு மாதகாலத்தை கொஞ்சம் குறைத்து, இடையில் தண்ணீர் விட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் 2-ம் தேதி தீர்மானம் கொடுத்தார்கள், 5-ம் தேதி தண்ணீர் விடப்பட்டு இருக்கிறது. அதனால் திருப்திப் படுவார்கள் என்று நம்புகிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: துணைத் தலைவர் அவர்களே, குறிப்பாக அந்தக் கால்வாயில் Maintenance என்று சொல்லி இவ்வளவு காலம் தாழ்த்தி தண்ணீர் விட்டு இருப்பதால் முதல் போக பயிர்கள் பாதிக்கப்பட்டு, அதனால் பயிர்கள் பாழானதோடு மட்டுமல்லாமல், அரசுக்கு வரவேண்டிய முதல் போக பயிருக்கான கிஸ்தியும் வராது போய்விட்டது. இப்படிப் பட்ட மராமத்து வேலைகளைத் தண்ணீர் விடுவதற்கு முன்னாலேயே செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதற்கு விவசாயிகளோடு ஏற்கனவே கலந்து ஆலோசித்துதான் முடிவு எடுக்கப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) முகவை மாவட்டம் கமுதி கல்லூரி மூடப்பட்டிருப்பதும், அதன் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாததும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, திரு. செ. சிவசாமி, திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. மு. அம்பிகாபதி ஆகியோர் கமுதி கல்லூரி குறித்து, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். தீர்மானத்தை யாராவது ஒருவர் படித்தால் போதும்.

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே,

> ''முகவை மாவட்டம் கமுதி கல்லூரி பல மாதங்களாக மூடப்பட்டு அதில் வேலை செய்யும் பல ஊழியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் சம்பளம் வழங்காதது குறித்து''

மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பசும்பொன்
திரு. முத்துராமலிங்கத் தேவர் நினைவுக் கல்லூரி 1970-ல்
துவக்கப்பெற்றது. ஜூன் 1975-ல் கல்லூரி ஆசிரியர்,
ஊழியர்களுக்கு மூன்று மாதச் சம்பளம் நிலுவையிலிருந்தது.
சம்பளம் கோரி வேலை நிறுத்தம் துவங்கப்பட்டு பின்னர் 1975-76
கல்வி ஆண்டு முழுவதும் கல்லூரி மூடப்பட்டிருந்தது. அதனால்
அந்தக் கல்லூரிக்கு அந்த ஆண்டிற்கு அரசிடமிருந்து மானியத்
தொகை பெறும் தகுதி இல்லை. மேலும் கல்லூரி தாளாளர்
திரு. வி. எல். சுப்ரமணிய பாண்டியன் ஜூலை 1975ஆம் ஆண்
டிற்கு பின் கல்லூரிக்குச் சென்றதாகத் தெரியவில்லை. அதனால்
கல்லூரி நிர்வாகம் சீராக நடைபெறவில்லை. அவரிடமிருந்து
1975ஆம் ஆண்டிற்கு பிறகு எந்தவித கடிதமும் கல்லூரிக் கல்வி
இயக்குநருக்கு வரவில்லை. இதற்கு முக்கிய காரணம் கல்லூரி
முதல்வர் விஜயபாண்டியனுக்கும் தாளாளர் திரு. வி. எல். சுப்ர
மணிய பாண்டியனுக்கும் பிளவு ஏற்பட்டு, சுமுக உறவு இல்லா
ததே ஆகும். 1975-76 ஆம் [illegible]க்குப்
பிறகு அந்தக் கல்லூரிக்கு மானியமாக ரூ. 45,430 பெற தகுதி
யிருந்தது. ஆனால் மதுரையிலுள்ள யுனைடெட் சைன்டிபிக்
கம்பெனி (United Scientific Company) விஞ்ஞான
பரிசோதனைக் கூடத்திற்கு வேண்டிய உபகரணங்களை கொடுத்
ததற்காக ரூ. 40,000 நிறுத்தி வைக்குமாறு மதுரை கீழ் நீதி

மன்றத்திலிருந்து கட்டளை வந்துள்ளது. அதனால் அந்தக் கல்லூரிக்கு அந்தப் பணத்தைத் தருவதில் சட்டப் பிரச்சினை உள்ளது. இதற்கிடையில் மதுரைப் பல்கலைக் கழகம் அந்தக் கல்லூரியின் தற்போதைய நிலையைக் கண்டறிய ஒரு குழு (Commission) அமைத்துள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைகளின்பேரில் பல்கலைக்கழகச் சட்டப்படி என்ன மேல் நடவடிக்கை எடுப்பது என்பது பற்றிப்பல்கலைக்கழகம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. 1976-77 ஆம் ஆண்டு அந்தக் கல்லூரியின் மாணவர்களின் எண்ணிக்கை 143 ஆகும். அது மேலும் இந்தக் கல்வி ஆண்டு குறையக்கூடும். மேலும் கல்லூரியின் நிதிக் கணக்குகள் (Financial Statements) 1975-76 மற்றும் 1976-77 ஆண்டுகளுக்கு கல்லூரிக் கல்வி இயக்குனரகத்துக்கு இதுவரையில் அனுப்பப்படவில்லை. அதனால் அரசு தணிக்கை செய்து அதனால் ஏதாவது அக்கல்லூரிக்கு மானியம் பெறத் தகுதியுண்டா என்றறிய வாய்ப்பில்லை. கல்லூரியின் நிர்வாகம் சீராக நடைபெறாததாலும், அக்கல்லூரி தாளாளர் திரு. வி.எஸ். சுப்ரமணிய பாண்டியன் கல்லூரி நிர்வாகத்தில் அக்கறை காட்டாததாலும் புதிய திருத்தப்பட்ட விதிகளின்படி அக்கல்லூரிக்கு மானியம் எதுவும் இப்போதைக்கு வழங்குவது உசிதமில்லை என்று அரசுக்கு கல்லூரிக் கல்வி இயக்குநர் கருத்து தெரிவித்துள்ளார். இது பரிசீலனையில் உள்ளது. சென்ற ஆண்டு அரசு ஆணையின்படி உதவிக் கல்லூரிக் கல்வி இயக்குநர் மூலம் கல்லூரியில் ஆசிரியர்களுக்கும், அலுவலர்களுக்கும் நேரடியாகச் சென்று 1976 ஆம் ஆண்டு ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களுக்கு உரிய சம்பளத் தொகை ரூ 37,000 சென்ற மார்ச் திங்களில் பட்டுவாடா செய்யப்பட்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக கல்லூரியை நடத்த நிர்வாகக் குழு என்ற அமைப்பு ஏதுமில்லாமல் ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. கல்லூரியின் எதிர்காலம் பற்றி பல்கலைக்கழகம் முடிவு மேற்கொள்ளவேண்டும்.

[முற்பகல் 10.00]

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முகவை மாவட்டத்தில் உள்ள இந்தக் கல்லூரி கமுதி பகுதியில் இருக்கிறது. இந்த மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டம். இந்தக் கல்லூரி சரியாக நடைபெறவில்லை என்று அமைச்சர் குறிப்பில் இருக்கிறது. இந்தக் கல்லூரி காலஞ்சென்ற விடுதலை வீரரும் முக்குலத்தோரின் இதய தெய்வமுமாக விளங்கிய தேவர் அவர்களின் பெயரால் இருக்கிறது. முத்துராமலிங்க தேவர் அவர்களின் பெயரில் இருக்கக்கூடிய கல்லூரி இப்படிப்பட்ட ஒரு அவலமான நிர்வாகத்தின் கீழ் இருப்பதைத் தவிர்க்க உடனடியாக இந்தக் கல்லூரியை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டும். அதற்கு எந்தச் சட்ட சிக்கல் இருந்தாலும்

பார்க்கக்கூடாது. அந்தக் கல்லூரியிலே வேலை பார்க்கும் ஆசிரியர்கள் சம்பளமே வேண்டாம் என்று தாங்களே நடத்திக் கொண்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்ட நிலையில் உள்ள இந்தக் கல்லூரியை பின்தங்கிய மாவட்டத்தின் கல்வி வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பெயருக்கு மாசு ஏற்படாமல் காப்பாற்ற, உடனடியாக அரசாங்கமே எடுத்து நடத்த முன்வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரியை அரசாங்கமே உடனடியாக எடுத்துக் கொள்கின்ற வாய்ப்பு இருக்கின்றதா என்று பரிசீலிக்கப்படும்.

(உறுப்பினர் திரு. கே. கந்தசாமி எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சட்டப் பேரவை விதிகள்படி நீங்கள் பேச முடியாது. கவன ஈர்ப்புத் தீர்மானம் யார் கொடுத்தார்களோ, அவர்தான் விளக்கம் கேட்கவேண்டும். உங்களுக்குப் பேச வாய்ப்பு வரும்போது, கேளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சபையின் மரபுகளை மதித்து நடக்க வேண்டுமென்று விரும்புகின்றவர்களில் ஒருவன் என்பதை முதலில் தங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். என்னைப் பேச அனுமதித்ததற்கு பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இது ஒரு முக்கியமான பிரச்னை என்ற காரணத்துக்காகத்தான் எழுந்திருந்தேன்.

இந்தக் கல்லூரியை ஆரம்பித்தது, சமுதாயத்தில் பிற்படுத்தப்பட்ட, பல கஷ்டநஷ்டங்களுக்கு ஆளாகிய மக்கள் அந்தப் பகுதியில் அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் நன்மை பெற வேண்டும் என்பதற்காகத்தான். அந்த மக்களின் குல தெய்வமாக இருந்த, நாட்டுக்காகத் தியாகம் செய்த மாவீரர் தேவர் அவர்களின் பெயர் விளங்க வேண்டும் என்பதற்காகவும், அவர் செய்த தியாகத்தின் வழியாக, அந்தப் பகுதியில் பல தியாகிகள் உருவாக வேண்டும் என்ற நல்ல நோக்கத்திற்காகவும் தான் முன்னாலிருந்த அரசாங்கமும், பல தலைவர்களும் சேர்ந்து ஆரம்பித்தார்கள்.

எதிர்பாராத நிலையில் அந்தக் கல்லூரியின் நிர்வாகத்தில் குழப்பம் ஏற்பட்டிருப்பது வருந்தத்தக்கது என்பதை ஒத்துக் கொள்கிறேன். அந்தக் குழப்பங்களும், சிக்கல்களும் நீங்க அங்கிருக்கும் தாளாளர் அவர்களையும், ஏனையோரையும் சந்தித்து பல முயற்சிகளும் செய்தோம். இன்னும் அது இறுதி கட்டத்தை அடையவில்லை. அதற்கிடையில் மாண்புமிகு

ராமனுதபுரம் ராஜா அவர்களை அணுகி, அவர்கள் பொறுப்பேற்று ஒரு குழுவினை அமைத்து, தற்போதுள்ள அமைப்புகளை மாற்றியமைப்பதாக ஆலோசனை இருந்து வருகிறது. அதற்கு இந்த அரசாங்கம் காலம் கொடுக்க வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அதையும் கருத்தில் கொண்டு முடிவெடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(திரு. ஓ. சுப்பிரமணியம் எழுந்து நின்றார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் பேரில் அந்த மாவட்டத்தில் இருக்கின்ற அத்தனை பேரும் பேச வேண்டியதில்லை. கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்தவர் கிளாரிபிகேஷன் கேட்டார். அதற்கு அமைச்சர் பதில் அளித்துவிட்டார். இந்த மாதிரி ஒவ்வொருவரும் தொடர்ந்துகொண்டே போனால், அடுத்த நிகழ்ச்சி தடைபடும்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: தலைவர் அவர்களே.....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்று நடக்கிற நிகழ்ச்சி இனி தொடர்ந்து நடைமுறையில் நடத்தப்படமாட்டாது. சம்பந்தப்பட்ட உறுப்பினர் இல்லாததால் உங்களைப் போன்ற உறுப்பினர்கள் பேச அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் தொடர்ந்து இனி வரும் நாட்களில் இப்படி நடந்து கொள்ள வேண்டாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, கமுதிக் கல்லூரி பற்றி கல்வி அமைச்சர் அவர்கள் விரிவாகச் சொன்னார்கள். நாட்டில் சரிவர இயங்காத மில்களை—ஸிக் மில்களை—சர்க்காரே எடுத்து நடத்த முன்வரும்போது மனித தெய்வங்களாக வரக்கூடிய சின்னஞ்சிறுவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கக்கூடிய பெரிய நிகழ்ச்சியாகக் கருதி "ஸிக் காலேஜஸ்" என்ற முறையில் இந்த காலேஜை மட்டுமல்ல, இன்னும் மாவட்டத்தில் உள்ள அநேகக் கல்லூரிகளை, தவறான நிர்வாகம் காரணமாக அல்லது வேறு காரணங்களுக்காக காலேஜஸ் சரியாக நடைபெறவில்லை என்றால் அரசு கவனம் செலுத்தி அவற்றை ஏற்று நடத்த முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதுபோன்ற நிலைமைகளில் எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதற்கு விதி முறைகள், நடைமுறைகள் இருக்கின்றன. அதற்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஈ) நாகர்கோவில் ஸ்காட் கிருத்துவக் கல்லூரி மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, நாகர்கோவிலில் உள்ள ஸ்காட் கிருத்துவக் கல்லூரி குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஏ. சுவாமிதாஸ், திரு. பொ. விஜயராகவன் ஆகியோர் தீர்மானம் கொடுத்துள்ளனர். ஒருவர் மட்டும் படித்தால் போதும்.

*திரு. ஏ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலிலுள்ள ஸ்காட் கிருத்துவக் கல்லூரி 20—7—1977 ஆம் தேதி முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளதால், மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஏற்பட்டுள்ள கஷ்ட நிலை பற்றி" மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலுள்ள ஸ்காட் கிருத்துவக் கல்லூரி 20—7—1977 முதல் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. கல்லூரி மூடப்பட்டதற்கான காரணங்கள் கீழே விவரிக்கப்படுகின்றன.

ஸ்காட் கிறித்துவக் கல்லூரியில் 1976-77ஆம் ஆண்டில் முதல் பட்ட வகுப்பு (B.A. and B.Sc.) படித்துக்கொண்டிருந்த மூன்று மாணவர்கள் மார்ட்டின் சர்குனகுமார், ஆஸ்டின் சாம் ஜாய், விஜய்ம் ஆகிய மூவரும், கல்லூரி முதல்வர், மற்ற ஆசிரியர்கள், ஆகியோரை இழிவுபடுத்தும் வகையிலும் ஆபாசமான வார்த்தைகளைக் கொண்டும் கல்லூரி வட்டாரத்திற்குள் உள்ள தாரிட்ட சாலையில் எழுதி வைத்திருந்தனர். பாரபட்சமற்ற விசாரணை செய்ததில் மேற்சொன்ன மூன்று மாணவர்கள் தான் இதைச் செய்தனர் என தெரிய வந்தது. இதற்கு முன்பும் அந்த மாணவர்கள் தவறான செயல்களை செய்து வந்ததினால், தொடர்ந்து இம்மாதிரி செய்கைகளை அனுமதித்தால், கல்லூரியில் நிலவி வரும், ஒழுங்கு கட்டுப்பாட்டிற்கு குந்தகம் ஏற்படுமெனக் கருதி மேற்கண்ட மாணவர்களுடைய பெற் [illegible] ற் கண்ட மாணவர்களுக்கு டிரான்ஸ்பர் சர்டிபிகேட் வழங்கப்பட்டது. 15-7-1977 அன்று இந்த மூன்று மாணவர்களும் உண்ணா

நாகர்கோவில் ஸ்காட் கிருத்துவக் கல்லூரி மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து

விரதம் மேற்கொள்ள உத்தேசித்துள்ளதாக கல்லூரி முதல்வரிடம் துண்டு பிரசுரங்களை கொடுத்தனர். கல்லூரி முதல்வர் எந்த வித அசம்பாவிதமும் நேராமல் தடுக்க காவல் துறையினரின் உதவி கோரினார். 18—7—1977 அன்று இரண்டு மாணவர்கள் மார்ட்டின் சர்குன குமார், ஆஸ்டின் சாம் ஜாய் கல்லூரி வாயில் முன் நின்றுகொண்டு கலவரம் செய்து கொண்டிருந்தனர். கல்லூரி முதல்வர் கல்லூரியை உடனே மூடிவிட்டார். 20—7—1977 அன்று கல்லூரியிலுள்ள மாணவர்கள் வெளியாட்கள் அடங்கிய கூட்டம் ஒன்று இருந்தது. அக்கூட்டத்தினர் வன்முறை செயலில் ஈடுபட்டனர். முதல்வர் காவல் துறையினருக்கு வன்முறை சம்பவம் பற்றி தெரிவித்தார். காவல் துறையினர் வந்தவுடன் கூட்டம் கல்லூரியை விட்டு கலைந்து சென்றது.

கல்லூரி முதல்வர் இன்னும் கல்லூரி திறக்கப்படவில்லை யென தெரிவித்துள்ளார். வெளியேற்றப்பட்ட மூன்று மாணவர்கள் மீண்டும் கல்லூரியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டுமென கோரி வருகின்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் மாணவர்களை சந்தித்துப் பேசினார். கல்லூரி ஆட்சி மன்றக் குழுவின் முடிவை ஏற்றுக்கொள்வதாக கல்லூரி மாணவர்கள் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

அதற்குப் பிறகு மூன்று மாணவர்களை கல்லூரியில் சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். கல்லூரியில் தற்போது அந்தப் பதட்ட நிலை இல்லை என்பதும், கல்லூரி இன்றைக்கு திறக்கப் பட்டதாக செய்தி வந்திருக்கிறது.

திரு. ஏ. சுவாமிதாஸ் : இந்தக் கல்லூரி ஏறத்தாழ ஒரு மாதம் மூடப்பட்டிருந்தது. இதிலே கல்வி அமைச்சர் அவர்கள் முக்கியமான கவனம் எடுத்துக்கொண்டு இதை இன்றைக்கு திறப்பதற்கு ஏற்பாடு செய்ததற்காக நான் அந்த மாவட்ட மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் விரைவாக நடவடிக்கை எடுத்து கொஞ்சம் முன்பே திறந்திருந்தால் இன்னும் நன்றாகயிருந்திருக்கும். இப்படிப்பட்ட சிக்கல்கள் வரும்போது அதிகாரிகள் மேல் மட்டத்தில் இருந்து உடனடியாக அங்கு வந்து விரைவாக நடவடிக்கைஎடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 10.10]

(உ) ஆம்பூர், வாணியம்பாடி நகராட்சிகளின் சுகாதாரப்பணி சீர்குலைந்துள்ள நிலை குறித்து.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவர் அவர்களே, "ஆம்பூர், வாணியம்பாடி நகராட்சிகளின் சுகாதாரப் பணி நிர்வாகம் தொடர்ந்து சீர்குலைந்துள்ளதால், தூய்மைக் குறைவான சூழ்நிலையே மிகுந்து, அப்பகுதிகளில் மக்கள் உடல் நலத்திற்குப் பெரிதும் ஊறு விளையும் அபாயம் நேர்ந்துள்ளது குறித்து" மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கா. காளிமுத்து : துணைத் தலைவர் அவர்களே, இந்நகராட்சிகள் தங்களின் நிதிநிலைக்குத் தகுந்தவாறு பொது மக்களுக்குத் தேவையான எல்லா சுகாதார வசதிகளையும் செய்து கொண்டு வருகின்றன.

வாணியம்பாடி நகராட்சி.—இந்நகராட்சியில் சுகாதாரப் பணிக்காக 3 சுகாதார ஆய்வாளர்களும் 146 குற்றேவலர்களும் உள்ளனர். 2 இழுவை பொருத்திய டிராக்டர்களும், 12 எருது வண்டிகளும் குப்பைகளை அகற்றும் பணியில் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. லாரிகள் பழுதுபட்ட சமயத்தில் மட்டுமே, குப்பைகளை அகற்றும் பணியில் சிறிது தடை ஏற்படுகிறது.

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட (குழாய்) குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ரூ. 46.43 இலட்சம் செலவிடப் பட்டுள்ளது. மக்களுக்குத் தேவையான குடிநீரானது வழங்கப் பட்டு வருகின்றது. மொத்தம் 649 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன.

சுகாதார வசதி அளிப்பதில் ஏதாவது நிறைவின்மை இருந்தால் அது நகராட்சியின் நிதிநிலைமையின் காரணமாக மட்டுமேயாகும். குடிநீர் வழங்கும் திட்டத்திற்காகப் பெற்ற தொகைக்குக் கட்ட வேண்டிய ஆண்டு கடன் தொகை இந்நகராட்சிக்கு மிகப் பெரிய சுமையாக உள்ளது.

ஆம்பூர் நகராட்சி.—இந்நகராட்சியில் சுகாதாரப் பணிக்காக 4 சுகாதார ஆய்வாளர்களும், 134 குற்றேவலர்களும் உள்ளனர். ஒரு இழுவை கொண்ட டிராக்டரும், 9 எருது பூட்டிய வண்டிகளும் நகரத்திலுள்ள குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபடுகின்றன. இப்பணி, லாரிகள் பழுதுபட்ட நேரங்களைத் தவிர, மற்ற நாட்களில் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டமானது ரூ. 47.28 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்குத் தேவையான குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. 1,000 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கப் பட்டுள்ளன.

சுகாதார வசதி அளிப்பதில் ஏதாவது நிறைவின்மை இருந்தால் அது நகராட்சியின் நிதிநிலைமை காரணமாக மட்டுமேயாகும். குடிநீர் வழங்கும் திட்டத்திற்காகப் பெற்ற தொகைக்குக் கட்ட வேண்டிய ஆண்டு கடன் தொகை இந்நகராட்சிக்கு மிகப் பெரிய சுமையாக உள்ளது.

இவ்வாறு இவ்விரு நகராட்சிகளிலும் பொது மக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள் அவைகளின் நிதிநிலைமைக்கு ஏற்ப அளிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக ஏதாவது சுகாதார குறைபாடுகள் பார்வைக்குக் கொண்டு வரப்பட்டால் அதன் தீர்வுக்கான முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப்: நிதிநிலை பற்றுக்குறை காரணமாக சுகாதார சீர்கேடுகளை சரிசெய்ய முடியவில்லை என்று அமைச்சர் அவர்களின் பதிலிலிருந்து தெரிகிறது. இதில் முக்கியமாக நிதி பற்றுக்குறை மட்டுமலல. நிர்வாகத்தின் பற்றுக்குறையின் காரணமாக அங்கே குப்பை கூளங்கள் எல்லாம் 15 நாட்களுக்கு ஒரு தடவை தான் எடுக்கப்படுகிறது, தெருக்களில் எல்லாம் மலைமலையாக குப்பைகள் குவிந்து கிடக்கின்றன. அங்கங்கே மலங்கள் எடுக்கப்படவில்லை. இதன் காரணமாக கொசுக்கள் பெருகிக் கொண்டு வருகின்றன. இதன் காரணமாக மலேரியா போன்ற நோய்கள் பெருகிவிடுமோ என்ற அச்சம் இருந்து கொண்டு இருப்பதால், அங்குள்ள மக்கள், மிகவும் கொதிப் படைந்து இருக்கிறார்கள், இதற்கெல்லாம் முக்கியமாக அங்கே நிர்வாகத்தில் ஏற்பட்டிருக்கின்ற சீர்கேட்டை களைவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் குறிப்பிட்ட இப்படிப்பட்ட குறைபாடு பற்றி பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஊ) வானூர் தொகுதி 'ஆரோஃபுட்' நிறுவனத்தின் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவது குறித்து.

திரு. என். இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, ''தென்னாற்காடு மாவட்டம் வானூர் தொகுதியில் 'ஆரோஃபுட்' நிறுவனத்தின் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் சில கோரிக்கைகளுக்காக வேலை நிறுத்தம் செய்வது குறித்து'' மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரோவில், ஆரோஃபுட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தில் 220 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். நிர்வாகம் இரண்டு தொழிலாளர்களுக்கு ஊக்கப் பூரிப்பு ஊதியம் (Incentive Bonus) வழங்கியதாகவும், இது 18—12—1976 அன்று நிர்வாகமும் தொழிலாளரும் செய்துகொண்ட உடன்பாட்டை மீறிய செய்கையாகும் என்றும் கூறி 25—7—1977க்குள் சுமுகமான சமரசம் ஏற்படாவிட்டால் அந்தத் தேதியிலிருந்து வேலைநிறுத்தம் செய்யப்படும் என்று ஆரோஃபுட் தொழிலாளர்கள் சங்கம் (சி.ஐ.டி.யூ.) 18—7—1977 அன்று நிர்வாகத்திற்கு ஓர் அறிவிப்பு அனுப்பியது. உடன்பாட்டுக்கு எந்தவிதத்திலும் எதிராகச் செயல்படவில்லையென்றும், இரண்டு தொழிலாளர்களின் பணியைப் பாராட்டுவதன் அடையாளமாக ரொக்கப் பரிசு மட்டுமே வழங்கப்பட்டது என்றும் நிர்வாகம் தங்களுடைய 20—7—1977ந் தேதி அனுப்பிய கடிதத்தில் பதில் அளித்தது. கடலூர் தொழிலாளர் நல அலுவலர் வேலைநிறுத்தம் வேண்டாம் என அறிவுரை வழங்கியும் தொழிலாளர்கள் 25—7—1977 தேதியிலிருந்து வேலை நிறுத்தத்தை மேற்கொண்டனர்.

தொழிற் தகராறு சட்டம் பிரிவு 18(1)ன் கீழ் ஊதியம் மற்றும் அகவிலைப்படி பற்றி 18—12—1976ந் தேதியன்றைய உடன்பாடு ஒன்று தற்போது உள்ளது. இந்த உடன்பாடு 30—9—1977 வரை அமுலில் இருக்கும். இரண்டு தொழிலாளர்களுக்கு ரொக்கப் பரிசு வழங்கியது ஆட்சேபனைக்குரியது என்றும், அப்படி வழங்கியதால் ஏற்கனவேயுள்ள உடன்பாட்டை மாற்றியமைக்க வேண்டும் என்றும் சங்கம் கோருகிறது. ஏற்கனவேயுள்ள உடன்பாட்டை மாற்றியமைப்பதில் சங்கம் முனைந்திருக்கிறது என்றும் நடைமுறை உடன்பாட்டை மாற்றுவதற்காக வேலை நிறுத்தம் செய்வது நியாயமற்றது, சட்டத்திற்கு புறம்பானது என்றும் நிர்வாகம் கருதுகிறது. கடலூர் தொழிலாளர் துறை அலுவலர் 26—7—1977, 28—7—1977 தேதிகளில் இரு தரப்பினரிடமும் பேச்சு வார்த்தைகள் நடத்தினார். சென்னை இரண்டாவது பிராந்திய தொழிலாளர் துறை துணை ஆணையாளர் தொழிற்சங்க பிரதிநிதிகளுடனும் நிர்வாகத்துடனும் மேற் கொண்டு பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டு வருகிறார்.

திரு. என். இராமச்சந்திரன்: மேற்கொண்டு பேச்சுவார்த்தைகள் நடப்பதாகச் சொல்கிறார்கள். எனவே, எப்போது அந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1977 ஆகஸ்டு 16

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரு தரப்பிலும் ஒரு சமரசம் ஏற்படும்வரை பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறும்.

திரு. என். இராமச்சந்திரன்: தற்போது அங்கு தொழிலாளர்கள் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அதைத் தீர்க்கும் வகையிலே பேச்சு வார்த்தைகளை சீக்கிரமாக முடித்துக் கொண்டு, இதற்கு ஒரு தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இந்த ஒப்பந்தம் 18(1) ன் கீழ் செய்யப்பட்டது. இதிலே மூன்று சங்கங்கள் இருக்கின்றன. யார் ஒப்பந்தம் செய்துகொண்டார்களோ, அவர்களை இந்த ஒப்பந்தம் கட்டுப்படுத்தும். இந்த ஒப்பந்தம் 30-9-1977 வரை அமுலில் உள்ளது. அதற்குள்ளாகவே இவர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருக்கிறார்கள். இதிலுள்ள சிக்கலை நீங்கள் புரிந்து கொள்வீர்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, இதைப்பற்றி தந்திரமாக பேச்சு வார்த்தைகள் நடத்தி, அவர்கள் கூடிய சீக்கிரம் வேலைக்குச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபடுவோம் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

(4) ஒத்தி வைப்புத் தீர்மானம்.

இராமநாதபுரம் வத்திராயிருப்பு என்னுமிடத்தில் காட்டாற்றில் வெள்ளம் வந்த காரணத்தினால் திருவிழாவுக்கு வந்திருந்த மக்கள் பலர் உயிரிழக்கவும், காயமடையவும் நேர்ந்துள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையின் அனுமதியோடு, ''இராமநாதபுரம் மாவட்டம், வத்திராயிருப்பு எனுமிடத்தில், சுந்தரமகாலிங்கம் கோயில் திருவிழாவிற்குச் சென்ற பொது மக்கள், திடீரென்று வெள்ளம் வந்த காரணத்தால் பலர் உயிர் இழந்ததாகவும், 46 பேர்களின் சடலம் மீட்கப்பட்டதாகவும், 10 பேர்கள் காயமடைந்ததாகவும், இன்னும் பல பேர்கள் காணவில்லை என்றும் கிடைத்திருக்கிற அவசரமும், பொது முக்கியத்துவமும் வாய்ந்த இந்தப் பிரச்சனை குறித்து விவாதிக்கச் சட்ட மன்ற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவரும், மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. அழகர்சாமி, திரு. கூத்தகுடி ச. சண்முகம், திரு. ஓ. சுப்பிரமணியம், திரு. ஏ. ஆர். மாரிமுத்து, திரு. கே. கந்தசாமி ஆகியவர்களும் கொடுத்திருக்கக்கூடிய ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு

1977 ஆகஸ்டு 16] [பேரவைத் துணைத் தலைவர்]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இது எவ்வாறு அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைக் குறித்து சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 10.20]

திரு. மு. கருணாநிதி : பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்தி வைப்புத் திர்மானம் அரசினுடைய கவனத்தை மேலும் தூண்டுவதற்கும், சம்பவம் நடைபெற்ற இடங்களில் இன்னும் அவசரமாக செய்ய வேண்டிய ஆக்கப் பணிகளை மேற்கொள்வதற்கும் உறுதுணையாக இருக்குமென்ற வகையிலேதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னால் இங்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது. சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைத்து இதுபற்றி நீண்ட விவாதங்களை நடத்த வேண்டுமென்றால் நேரம் குறைவாக இருக்கும் நேரத்தில் நான் வற்புறுத்தமாட்டேன் என்பதையும் அவை முன்னவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்பு அருகாமையில் சுந்தரமகாலிங்கம் கோயில் திருவிழாவுக்குச் சென்ற பக்தர்கள் பல பேர் விழா முடிந்து அல்லது விழாவிற்கு செல்கிற வழியில் ஆற்றுப்படுகை ஓரத்திலுள்ள மண்டபங்களிலும், ஆற்று மணலிலும் ஓய்வு பெறுவதற்காக அல்லது உறங்குவதற்காகத் தங்கியிருந்த நேரத்தில் திடீரென்று வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதன் காரணமாகப் பலர் உயிரிழந்திருக்கிறார்கள். தேடிய அளவில் 46 சடலங்கள் அகப்பட்டிருக்கின்றன, ஏறத்தாழ 10 பேர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறார்கள். திடீரென்று மின்னல் வேகத்தில் நடைபெறுகிற இப்படிப்பட்ட நிகழ்ச்சிக்கு அரசு பொறுப்பு என்று நான் நிச்சயமாகக் கூற மாட்டேன். ஆனாலும் இப்படி நடைபெற்றுவிட்ட நிகழ்ச்சிகளுக்குப் பிறகு தக்க பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுப்பதும், இனி இவ்வாறு நடைபெறாது தடுக்கவும் ஏற்ற யோசனைகளைச் செய்வது ஒரு அரசுக்குள்ள கடமை என்ற வகையிலே இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தின்மூலம் அரசுக்குக் கவனமூட்ட விரும்புகிறேனே அல்லாமல் வேறல்ல.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மழை பொழிவது என்பதே மிக அரிதான ஒன்று. மழை பொழிந்து ஆற்றிலே வெள்ளம் வரும் என்று அதிகாரிகள் எதிர்பார்த்திருக்க முடியாது. என்றாலும், ஆறு உற்பத்தியாகிற இடத்தில் பெருமழை பெய்து கொண்டிருந்த நேரத்தில் அதிகாரிகள் கொஞ்சம் எச்சரிக்கையோடு இருந்திருந்தால் இந்த பக்தர்களை ஆண்டவன் காப்பாற்றவில்லை என்றாலும் ஆண்டு கொண்டிருக்கும் அரசு அதிகாரிகள் ஓரளவு காப்பாற்றியிருக்க முடியும். அந்த வகையில் இந்த அவையின் கவனத்தையும், அரசு கவனத்தையும் ஈர்க்கின்ற முறையில் உடனடியாக உயிரிழந்த குடும்பத்தாருக்கு நிவாரணம்

அளித்திட வேண்டுமென்று சுட்டிக்காட்டி அவையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைக்கவேண்டுமென்று சம்பிரதாயத்திற்காகச் சொல்லி அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். அழகர்சாமி, திரு. கூத்தகுடி சண்முகம் ஆகிய இருவரும் ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் யாராவது ஒருவர் திரு. கூத்தகுடி சண்முகம் மட்டும் அதைப் பற்றிச் சுருக்கமாக விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, இந்த அவசரமான பிரச்சினைபற்றி நாங்கள் முதலிலே தீர்மானத்தைக் கொடுத்தோம். முன்னுரிமையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு வழங்கியதில் ஆட்சேபணை கிடையாது. இருந்தாலும் கூட நாங்கள் கொடுக்கிறபோது, அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற முறையில் சுந்தரமகாலிங்கம் கோயில் உள்ள அந்த மலையில் எட்டு மாதக்காலம் தலைமறைவாக இருந்தவன் என்ற முறையிலே சில விவரங்கள் தெரியும். இந்த விஷயத்தைச் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது. அங்கிருந்து தந்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பல்லாயிரக் கணக்கான பேர்கள் நேற்று பூராவும் அங்கே ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய கூக்குரல் அந்த வட்டாரம் பூராவும் எழும்பிக்கொண்டிருக்கிறது. 46 பேர் உயிரிழந்திருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே நூற்றுக்கும் அதிகமாக இறந்திருக்கிறார்கள். யார் யார் செத்துப் போனார்கள் என்று தெரியாது. தங்களுடைய சொந்தக்காரர்கள் யார் யார் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியாமல் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஓடிக்கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய கதறல் காட்சி அந்த வட்டாரம் பூராவும் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு தலைவர் இறந்துவிட்டால் சட்டமன்றத்தில் இரங்கல் தீர்மானம் போட்டுப் பேசுகிறோம். இன்று நூற்றுக்கணக்கான சாதாரண மக்கள் இறந்திருக்கிறபோது அவர்களுடைய குடும்பங்களுக்கு என்ன செய்யப் போகிறோம் என்பது பற்றி அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும். இறந்தவர்களுடைய குடும்பங்களுக்கு ஐயாயிரம் ரூபாய் வீதம் முதல்வர் அவர்கள் நிதியிலிருந்து கட்டாயம் கொடுக்கவேண்டும். அந்த முறையில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மாதிரி திடீரென்று ஏற்பட்டாலும்கூட இந்தத் திருவிழா ஆடி அமாவாசையை ஒட்டி நடந்திருக்கிறது—இனிமேல் வருகிற விழாக்காலங்களிலே இம்மாதிரி நிலையில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்காக அரசாங்

கம் நடவடிக்கை எடுக்க இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்தச் சபையின் மற்ற நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஓ. சோ. வேலுச்சாமி, திரு ஏ. ஆர். மாரிமுத்து ஆகிய இருவரும் ஒரே இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ற காரணத்தால் யாராவது ஒருவர்—திரு. ஓ. சோ. வேலுச்சாமி அவர்கள் மட்டும் சுருக்கமாக இதைப்பற்றி விளக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. ஓ. சோ. வேலுச்சாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் அவர்களும் விரிவாக இதைப் பற்றிச் சொல்லிவிட்டார்கள். இது இயற்கையின் காரணமாக ஏற்பட்டாலும் கூட இதேமாதிரி காட்டாறு இருக்கிற இடங்களிலே பொதுமக்கள் அதிகமாகக் கூடுகிற நேரங்களிலே அதிகாரிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும், ஆற்றுப் படுகைகளில் அந்த மாதிரி நேரங்களிலே இருக்கக்கூடாது என்ற முறையில் எச்சரிக்கை செய்ய வேண்டும். அது மட்டுமல்ல, கூத்தகுடி சண்முகம் அவர்கள் சொன்னதுபோல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அந்தக் குடும்பங்களுக்கு பொருளுதவி செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் சொல்லி, அதைப்பற்றி விவாதிக்க இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது முன்னாலே பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் விளக்கிச் சொல்லி விட்டார்கள். இந்தத் துயரமான நிகழ்ச்சி எதிர்காலத்திலே நடக்காதவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டுமென்ற முறையிலே இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன, அது எவ்வளவு எண்ணிக்கை என்று சரியாகத் தெரியவில்லை, அரசுத் தரப்பிலே வந்த தகவல்படி 50,60 பேர்கள் இருக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே 100க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்திருப்பார்கள் என்று சொல்கிறார்கள். அது எவ்வளவு எண்ணிக்கை என்று பார்ப்பதோடு இந்தத் திருவிழாக் காலங்களிலேஇது போன்ற நிலைமைகள் ஏற்படாத முறையிலே அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்வதோடு, இந்த உயிர்ச்சேதங்களினால் எத்தனை குடும்பங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் அரசாங்கம் பார்த்து அந்தக் குடும்பங்

களுக்கு எல்லாம் முதலமைச்சர் அவர்கள் நஷ்ட ஈடு கொடுக்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எதிர்காலத்திலே இம்மாதிரி நடக்காமல் இருக்கக்கூடிய வகையிலே அதைப்பற்றி விவாதிக்க இந்த சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, 14—8—1977 அன்று மாலை இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்பு அருகில் நிகழ்ந்துள்ள இதயத்தைப் பிளக்கச் செய்யும் ஒரு சோக நிகழ்ச்சி பற்றி இப்பேரவைக்கு மெத்த வேதனையுடன் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இராமநாதபுரம் மாவட்டம் சிவகாசி உட்கோட்டத்தைச் சேர்ந்த வத்திராயிருப்பு அருகில் மலைப்பகுதியில் உள்ள காட்டாற்றில் கனத்த மழைகாரணமாக பொங்கிய திடீர்வெள்ளத்தினால், 14—8—1977 அன்று மாலை நேர்ந்த விபத்தில் 46 பேர் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தார்கள் என்று அரசுக்கு தகவல் வந்துள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பயணிகள் மதுரை மாவட்டம் உசிலம்பட்டிக் கோட்டத்திலுள்ள சுந்தரமகாலிங்கம் மலைக்கோயிலில் வருடாந்திர விழாவிற்கு சென்று கொண்டிருக்கையில் இந்த விபத்து நேர்ந்தது.

மாவட்ட ஆட்சியாளரும் காவல் துறை அதிகாரிகளும் செய்தி அறிந்ததும், இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டு நிவாரணப் பணிகளையும், மீட்புப் பணிகளையும் மேற்கொண்டனர்.

அரசுக்கு வந்துள்ள தகவலின்படி உயிரிழந்தவர்களின் விபரம் பின் வருமாறு :—

ஆண்கள் (பெரியவர்கள்)—10; ஆண் குழந்தைகள்—9; பெண்கள் (பெரியவர்கள்)—14; பெண் குழந்தைகள்—13; மொத்தம்—46.

இவர்களில் இரு பெண் குழந்தைகள் தவிர ஏனைய 44 பேருடைய அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டு சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இறந்தவர்கள் 39 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.

மேலும் சிலர் காணப்படவில்லை என்று கூறப்படுவதால் அவர்களைத் தேடும் பணி தொடர்ந்து நடைபெறுவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார். உயிரிழந்தோரைத் தேடி வரும் உறவினர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. குடும்பப் பாதுகாவலர்களாக இருந்து இறந்துபோனவர்களுடைய குடும்பங்களுக்கு அவர்களது ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபாய் இரண்டாயிரம் உதவித்தொகை அளிப்பதென்று அரசு முடிவு செய்துள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விபத்தில் உயிரிழந்தோர் குறித்து முழு விபரங்கள் அரசுக்கு கிடைத்ததும் இதுபற்றி அரசு ஆணை பிறப்பிக்கப்படும்.

[முற்பகல் 10-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து, இத்தீர்மானம் குறித்து, விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு இசைவு தர மறுக்கப்படுகிறது.

(5) மருத்துவத் துறை மானியக் கோரிக்கைக்கு முதலமைச்சர் அளிக்க வேண்டிய பதிலுரை பிற்பகலில் எடுத்துக் கொள்வது குறித்து.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நிகழ்ச்சி நிரலின்படி இப்பொழுது நமது முதல்வரவர்கள் மருத்துவ மானியக் கோரிக்கையின் மீது நடந்த விவாதத்திற்குப் பதில் அளிக்க வேண்டும். உடல் நலம் இல்லாத காரணத்தினாலும், தாள முடியாத தலைவலியால் அவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலும் பிற்பகல் 4 மணிக்கு இந்த விவாதத்தில் பதில் சொல்லுகின்ற முறையில் நான் பதில் சொல்லுகிறேன் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். எதிர்க்கட்சித் தலைவரிடம் இதுபற்றிக் கலந்தேன். அவர்களும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அவையும் அதை ஒத்துக்கொண்டு பிற்பகல் அவர்கள் பதில் அளிக்கின்ற வாய்ப்பைப் பெறுகின்ற அளவிற்கு உதவுவார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவை முன்னவரவர்கள் கூறியதற்கிணங்க முதல்வரவர்கள் உடல்நலமின்றி இருக்கின்ற காரணத்தால் மாலையிலேயே அவருடைய பதிலுரையை வைத்துக் கொள்வதற்கு எங்களுக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை ஒருமனதாக ஏற்றுக்கொள்வதால் அடுத்த நிகழ்ச்சியை எடுத்துக் கொள்கிறேன்.

(6) 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும்—வாக்கெடுப்பும்.

(அ) கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம்.

THE HON· THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 4,57,57,000 under Demand No. 13–Administration of Justice."

திரு. துரை முத்துசாமி: தலைவரவர்களே, கள்ளக்குறிச்சி,யில் ஒரு சப்-கோர்ட் ஏற்படுத்த வேண்டியது பற்றி விவாதிக்க

'' நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவரவர்களே, உயர்நீதிமன்றத்தின் ஓர் பிரிவை மதுரையில் செயல்பட வைப்பது பற்றி விவாதிக்க,

'' நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, திருவண்ணாமலையில் கோர்ட்டுகளுக்குப் போதிய கட்டிடங்கள் கட்டித்தருவதைப்பற்றி விவாதிக்க,

'' நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss the necessity to have a High Court Bench at Madurai, I move—

"That the allotment of Rs. 4,57,57,000 under Demand No·13—Administration of Justice be reduced by Rs. 100."

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, மதுரையில் உள்ள இராமநாதபுரம் மாவட்டம் நீதி சம்பந்தப்பட்ட இலாக்காக்களையும், நீதிமன்றங்களையும் இராமநாதபுரம் மாவட்டத்திற்குள்ளேயே மாற்றுவது பற்றி விவாதிக்க,

'' நிதிக் கோரிக்கை எண். 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,57,57,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABANDHU: Mr. Deputy Speaker, Sir, to discuss about Administration of Justice and functioning systems and implementation, I move—

'That the allotment of Rs. 4,57,57,000 under Demand No. 13—Administration of Justice, be reduced by Rs. 100.'

(ஆ) கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,34,94,000 under Demand No. 14—Jails."

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, சிறைக் கைதிகளை மனிதாபிமான அடிப்படையில் நடத்துவதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லாததைப்பற்றி விவாதிக்க,

'' நிதிக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,34,94,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன்: தலைவரவர்களே, ஜென்ம தண்டனைக் கைதிகள் பலர் பல்லாண்டுகள் சிறையில் வாடுவதைத் தவிர்க்க அதைப் பரிசீலனை செய்யும் கமிட்டியை திருத்தி அமைப்பது பற்றி விவாதிக்க,

'' நிதிக்கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,34,94,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை: தலைவரவர்களே, சப்-ஜெயில் உள்பட அனைத்து சிறைகளையும் மக்கள் கமிட்டிகள் மூலம் கண்காணிக்க வேண்டும் என்பது பற்றியும், சுகாதாரம், உணவு, உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதுபற்றியும் விவாதிக்க,

'' நிதி கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,34,94,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்'',

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, ஆயுள் தண்டனைக் கைதிகளுக்கு இப்பொழுதுள்ளதைவிட அதிக '' மார்க்குகள் '' கொடுத்து விடுதலையைத் துரிதப்படுத்துவது பற்றி விவாதிக்க,

"நிதிக் கோரிக்கை எண். 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 5,34,94,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்",

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU R. MARGABHANDHU: Mr. Deputy Speaker, Sir, to discuss about methods of reformation and maintenance of Jails, I move—

'That the allotment of Rs. 5,34,94,000 under Demand No. 14--Jails---be reduced by Rs. 100/-

THIRU. J. JAMES: Mr. Deputy Speaker. Sir. to discuss the necessity to have open air jails for the political prisoners. I move....

'That the allotment of Rs. 5,34,94,000 under Demand No. 14-Jails be reduced by Rs. 100.'

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு சட்டத்துறை அமைச்சரவர்கள் முதலில் ஏதேனும் தெரிவிக்க விரும்பினால் தெரிவிக்கலாம்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: Mr. Deputy Speaker, Sir, so far as the policy notes* in respect of Demands 13 and 14 are concerned, the necessary monographs have been printed and circulated to the hon. Members of this House and I take it that these have been perused by the Hon. Members of the House and I request. Mr. Deputy Speaker to include these literatures in the official proceedings of the House.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இந்த 2 மானியக் கோரிக்கைகளுக்கும் ஏறக்குறைய 1½ மணி நேரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அமைச்சரவர்களின் பதில் உரையும் இந்த 1½ மணி நேரத்திற்குள்ளே அடங்கும் என்பதைக் கூறிக்கொண்டு, திரு. சுப்பு அவர்களைப் பேச அழைக்கிறேன்.

திரு. க. சுப்பு: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது இரண்டு மானியங்கள் அவைமுன் இருந்தாலும், என்னைப் பொறுத்தவரையில், சிறைச்சாலைகளைப் பற்றி மாத்திரம் பேச விரும்புகிறேன். என்னுடைய கட்சியைச் சேர்ந்த திரு. சாதிக் பாட்சா அவர்கள் அடுத்து, நீதி நிர்வாகத்தைப் பற்றி பேசுவார்கள். சிறைச்சாலைகள் பற்றி பேசும்பொழுது, இன்றைய தினம் அரசியல் வாதிகளால் அதிகமாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியது சிறைச்சாலை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. தண்டனைக் கைதிகள், விசாரணைக் கைதிகள், அரசியல்

* 442—456ஆம் பக்கங்களில் இணைப்புகள் II, III ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

கைதிகள் என்று பல்வேறு கைதிகள் அடைக்கப்படுகிறார்கள் எந்தக் குற்றமும் இழைக்காதவர்கள், சந்தேக கேஸில் பிடிக்கப் படுபவர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்படுகிறார்கள். விசாரணை செய்து, குற்றவாளி என்று தண்டிக்கப்பட்ட பிறகுதான், தண்டனைக் கைதியைப் போல் நடத்தப்பட வேண்டும் என்ற சட்ட நீதியைக் கூடக் கற்றுக்கொள்ளாமல் அவர்களும் கூடத் தண்டனைக் கைதியைப் போல் நடத்தப்படுகிற நிலைமை இப்பொழுது நிலவி வருகிறது.

சிறைச்சாலைகளைப் பொறுத்தவரையில், ஏதோ ஒரு காலத்தில் ஆங்கிலேயர் போட்ட விதிமுறைகளை அப்படியே கடைப்பிடித்து வருகிறோம். அதிலே தேவையான மாற்றங்களைச் செய்ய, சரியான அளவிலே விதிமுறைகளை மாற்றம் செய்ய உத்தேசம் கூட இல்லை. சிறைச்சாலை விதிமுறைகள் உடனடியாக மாற்றப்பட வேண்டும். சிறைச்சாலை சூப்பரின்டென்டன்ட் நினைத்தால்தான் உள்ளே நடக்கின்ற விஷயம் வெளியே வரமுடியும் என்ற நிலைமை இருக்கும்போது, அங்கே என்ன நடந்தாலும், அந்த 4 சுவர்களுக்குள் எது நடந்தாலும் யாரும் கேட்கமுடியாது என்ற நிலைமை இருப்பதால் தான் அரசியல்வாதிகள் சமீபகாலத்திலே கசப்பான அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்கள். அரசியல்வாதிகள் மிசா என்ற கொடுவாளின் குத்துக்கு ஆளாகியதை நாம் மறந்துவிட முடியாது. கேரளாவிலே இராஜன், கர்நாடகாவிலே சினேகலதா, சென்னை மத்திய சிறைச்சாலையிலே சிட்டிபாபு *போன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன. இதை எல்லாம் எதற்குச் சொல்கிறேன் என்றால், சிறைச்சாலை விதிமுறைகளை எல்லாம் எந்த அளவுக்கு மாற்றவேண்டும் என்பதற்குச் சொல்கிறேன். சிறைச்சாலைக் கொடுமைகளைப் பற்றி எந்த அடிப்படையிலே அணுகவேண்டுமென்பது சமீப காலத்திலே சில மாநிலங்களில் அதிகமாக அக்கறை எடுத்து செயல்படுத்தி வருகின்றார்கள்..........

மாண்புமிகு ச. இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது சிட்டிபாபு * * * என்று கூறி இருக்கிறார்கள். இது விசாரணையில் இருக்கிற காரணத்தால் சிட்டிபாபு * * * இறந்து போனாரா?

* மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10.40-10.41இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

திரு. க. சுப்பு : சிட்டிபாபு * * * என்பதுதான் விசாரணையில் இருக்கிறது. * * * என்பதை யாரும் மறுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * என்ற வார்த்தை வேண்டாம். அதற்குப் பதிலாக இறந்து விட்டார்கள் என்று மாற்றிப் பேசுமாறு உறுப்பினரைக் கேட்டுக் கொள்கிறேன். சபைக் குறிப்பிலிருந்து * * என்பதை நீக்க வேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. க. சுப்பு : இறந்தாரா * * என்பதை கமிஷன் முடிவு செய்யும். அவர் மரணமடைந்தார். இத்துடன் விட்டுவிடுகிறேன். அதற்குரிய காரணங்களை எல்லாம், விளக்கமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொன்னேன். * * என்று நான் என்னுடைய கருத்தைச் சொன்னேன். எப்படி * * * என்பது விசாரணையில் இருக்கிறது. அரசாங்கம்.........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * என்றும் கொள்ளலாம். பின்னாலே எப்படி முடிவு ஆகிறதோ....,

திரு. மு. கருணாநிதி : அதனாலே * * * சிட்டிபாபு சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டார் என்று தற்காலிகமாகச் சொல்லி வைக்கலாம்.

திரு. க. சுப்பு : அதைப் பற்றி விசாரணைக் கமிஷன் நடைபெற்று வருகிறது. அதற்குள்ளே நான் செல்ல விரும்பவில்லை. சிறையிலே விதிமுறைகள் எப்படி அமைக்க வேண்டுமென்பதைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். அரசாங்கம் போதிய அக்கறை கொண்டு இந்நிலைகளை எல்லாம் மாற்றவேண்டும்.

அரசியல்வாதிகள் கண்ணீர் விடக்கூடிய நிலையில் சிறையிலே இருக்கிறார்கள். அந்த நிலைமைகளை எல்லாம் இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10.42—10.43இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன

கேரளாவில் இருக்கக் கூடிய கைதிகளைப் பொறுத்தவரையில் ஏராளமான சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அங்குள்ள கைதிகளுக்குச் சம்பளம் கொடுக்கப்படுகிறது. சம்பளம் என்றால் நியாயமான சம்பளம். பயிற்சி அளிக்கப்படுகிறது. வெளியே சென்றால் வேலைக்கு உத்திரவாதம் உள்ளது. சிறைச்சாலைக்குள் சிற்றுண்டி விடுதி (காண்டீன்) அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. ஆயுள் தண்டனை அடைந்தவர்கள் குறிப்பிட்ட ஆண்டுகள் சிறையில் கழித்துவிட்டால் விடுதலை செய்யப்படுகிறார்கள் என்ற நிலைமை அங்கே இருக்கிறது. அதைப்போல கர்நாடகாவில் பல்வேறு சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார்கள். நம்மைவிட சிறிய மாநிலங்கள் பல்வேறு சீர்திருத்தங்கள் செய்து வருகிறார்கள். இந்த அரசு இதை எல்லாம் பரிசீலனை செய்து அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நேற்றுக் கூட அரியானாவில் சிறையில் பல சீர்திருத்தங்களை அறிவித்திருக்கிறார்கள். அகில இந்திய ஜனதா கட்சித் தலைவர் திரு. சந்திரசேகர் அவர்கள் "சீப் கெஸ்ட்" ஆக இருந்திருக்கிறார். பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறது. அப்போது அந்த விழாவில் அரியானா மாநில முதலமைச்சர் பல்வேறு சீர்திருத்தங்களை அறிவித்திருக்கிறார்கள். யார் யார் பரோல் கொடுக்க வேண்டும் என்பதைப் பொறுத்தவரையில் சூப்பிரன்டென்டுக்கு அந்த அதிகாரம் இருக்கிறது. தற்போது அவர் நினைத்தால், யாராவது மரணம் அடைந்தால் விடலாம், நோய்வாய்ப்பட்டால் விடலாம் என்பது மாத்திரம் அல்ல, அறுவடை நேரத்தில் நீண்டகாலத் தண்டனை பெற்றவர்களைச் சிறை சூப்பிரன்டென்டுகள் நினைத்தால் அனுப்பலாம் என்ற நிலையை வைத்திருக்கிறார்கள். இங்கே என்ன நிலைமை? பரோல் கேட்டால், விண்ணப்பத்தை போலீசுக்கு அனுப்புகிறார்கள். போலீசார் எப்படி எல்லாம் சிபாரிசு செய்வார்கள் என்று நமக்குத் தெரியும். ஒரு அடிகோல் வைத்திருக்கிறார்கள். அந்த அடிகோலுக்குப் பரிதாபகரமான ஏழை எளிய மக்கள் போலீசாரை அணுகி பரோல் பெறமுடியாத நிலைமை இருக்கிறது. இவற்றை எல்லாம் மாற்றுவதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

புதிய அரசு வந்த உடனே, அரியானா முதலமைச்சர் நான்கு மாதம் கைதிகளுக்கு "ரெமிஷன்" கொடுத்தார். அவர் என்ன கொடுப்பது, நானும் கொடுக்கிறேன் என்று சிறைத் துறை பெண் அமைச்சர் இரண்டு மாதம் "ரெமிஷன்" கொடுத்தார். ஆக ஆறு மாத காலம் ரெமிஷன் அங்கே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. இங்கே நாம் என்ன பண்ணுகிறோம். அரசியல் கைதிகளை இந்தியாவிலேயே விடுதலை பண்ணாத பெரும் புகழும்

நம்முடைய புரட்சித் தலைவரைத்தான் சாரும். இங்கேதான் கைதிகளை விடுதலை செய்யாமல் அழைத்துக் கொடுமைக்கு ஆளாக்குகிறார்கள்.

கேரளாவில் புல்பள்ளி காவல் நிலைய வழக்கில் தண்டனை அடைந்த அஜீதா என்ற வீராங்கனையை எல்லாம் அவர்களுடைய சமுதாயப் பின்னணியையும் வளமான உணர்வினையும் கருத்திலே கொண்டு, காங்கிரஸ் முதலமைச்சர் விடுதலை செய்திருக்கிறார். அதேபோல மேற்கு வங்காள முதலமைச்சர் ஜோதிபாசு அவர்கள் முதலமைச்சரானவுடன் நக்சலைட் கைதிகளை விடுதலை செய்திருக்கிறார்கள். அவர் என்ன செய்வது, நாமும் செய்ய வேண்டாமா என்று பீகாரில் கர்பூரி தாகூர் அருமையான நடவடிக்கை எடுத்து சந்தோஷ் ராணா என்ற புரட்சித் தலைவரை விடுதலை செய்திருக்கிறார். ஆனால் தமிழகத்தின் நிலை என்ன? உயர்நீதி மன்றம் குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளித்த பின்பும் வழக்கறிஞர் ஏ. எம். கோதண்டராமன் அவர்களை விடுதலை செய்யவில்லை என்பதும், அவர் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்தார் என்றும் இந்த மன்றத்தில் எடுத்து வைத்தோம். அதற்குரிய பதில் கூட இந்த அவையில் அளிக்கப்படவில்லை.

சிறைக் கொடுமைகளைப் பற்றி பேசுகிற நேரத்தில், தண்டனை அடைந்து இருக்கும் அரசியல் கைதிகள் அனைவரும் நல்ல முறையில் நடத்தப்படவேண்டும். சென்னை சிறைச்சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி விவரித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்கப்பட்டபோது சிறைச்சாலையில் இருக்கும் கைதிகள் அனைவரும் மனிதர்களாக நடத்தப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். இதை அரசாங்க அதிகாரிகள் சரியாகப் புரிந்து கொண்டு இருப்பார்கள் என்று நம்புகிறேன். இங்கே மனிதர்களைத்தான் சிறைக்குள்ளே கொண்டு செல்கிறார்கள். எந்தக் குற்றமும் செய்யாமல் இரவில் பஸ் கிடைக்காமல் பஸ் ஸ்டாண்டிலே படுத்து உறங்குகிறவர்களைப் பிடித்து வந்து சந்தேகக் கேஸ் என்ற பெயரால் போடுவது எங்கே உண்டு என்றால் அந்தப் பெருமை தமிழ்நாட்டிற்குத்தான் உண்டு. அரியானா மாநிலத்தில் 8 ஆண்டுகள் தண்டனை முடிந்து விட்டால் அந்தக் கைதியின் நன்னடத்தை அறிந்து விடுதலை செய்து விடுகிறார்கள். அந்த மாதிரி கேஸ்களைப் பரிசீலிக்க ஒரு குழு வைத்து இருக்கிறார்கள். அவர்கள் அதை ஆராய்ந்து செய்கிறார்கள். ஜெயிலுக்கு அனுப்புவது என்பது ஒரு பிரிவென்டிவ் மெஷர் தானே தவிர அவன் அங்கேயே இருக்கவேண்டும் என்பது அல்ல. அவன் திருந்தி விட்டால் அவன் விடுதலை செய்யப்பட வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கமிட்டி அமைப்பு இங்கேயும் தேவை என்று கூற விரும்புகிறேன்.

ஆனால் இங்கே நிலைமை என்ன? உயர்நீதி மன்ற நீதிபதி இஸ்மாயில் சிறைக்குச் சென்று விசாரணை நடத்தச் சென்ற போது அங்கேயிருக்கிற கைதிகள் அவரிடத்தில் கோரிக்கைகளைச் சொன்னார்கள் என்ற காரணத்திற்காக குரல் வளையை நெருக்கிப் பிடித்துக் கொல்லப்பட்டார்கள். கொல்லப்பட்டார்கள் என்று சொன்னால் வேறுவிதமாகப் போய்விடும். குத்தப்பட்டார்கள், அடிக்கப்பட்டார்கள். கோவை மத்திய சிறையில் என்ன நடந்தது? அமைச்சர் குழந்தைவேலு அவர்கள் சென்ற நேரத்தில் அங்கேயிருக்கிற கைதிகள் புரட்சித்தலைவர் அவர்கள் தங்களுடைய கோரிக்கைகளைக் கேட்கவேண்டும், அவர் இங்கே வரவேண்டும் என்று கேட்ட நேரத்தில், புரட்சித் தலைவருக்கு நேரம் இல்லை என்ற காரணத்தினால் அவருக்குப் பதிலாக மாண்புமிகு இராமச்சந்திரன் அவர்கள் போய் வாக்குறுதி கொடுத்து விட்டு வந்து இருக்கிறார்கள். அந்த வாக்குறுதிகள் தேர்தல் கால வாக்குறுதிகளாக இருக்கக்கூடாது. தேர்தல் காலத்தில் 'சட்டவரம்பு தெரியாமல் வாக்குறுதி தந்து இருக்கலாம். அந்த விவகாரத்திற்குள் நான் போக விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சிறைச்சாலைக்குச் சென்ற அனுபவம் இல்லாவிட்டாலும் அங்கே நடப்பதைத் தெரிந்து கொள்ள முடியும்.

போலீஸ் லாக்கப்பிலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் ஒருவர் இறந்து இருக்கிறார். இதைப்போல் பல்வேறு இடங்களில் நடந்து இருக்கின்றன, சென்னையில், மேட்டூரில், சின்னமனூரில் நடந்து இருக்கின்றன. இப்படி கைதிகள், அதுவும் காவல் கைதிகள் மரணம் அடைவது குறித்து அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன? இதுபற்றி முதலமைச்சர் அவர்களிடத்தில் கேட்டால் அந்தக் குற்றத்தைச் செய்த அதிகாரிகளும் சாதாரண மனிதர்களாக கருதப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் எல்லாம் இதுவரையில் அசாதாரணமான மனிதர்களாகக் கருதப்பட்டார்கள். 'தி இந்தியன் பீனல் கோட் இஸ் காமன் டு ஆல்'. அப்படி இருக்கும்போது முதலமைச்சர் அவர்கள் என்ன அர்த்தத்தில் சொன்னார் என்று தெரியவில்லை. அவர் எதுவும் சொல்லியிருக்கலாம். அது தவறாகச் சொல்லப்பட்டது என்பது என் வாதம்.

இங்கே சிறைச்சாலைக்குள்ளே, மரணம் அடைந்தால் என்ன நிலைமை? பஞ்சாப் மாநிலம், சிறிய மாநிலம். அங்கே இருக்கும் பிரகாஷ்சிங் பாதல் அவர்கள் பெண்களைப் போலீஸ் நிலையத்திற்கு

அழைத்துப் போய் விசாரிக்கக்கூடாது என்று ஆணையிட்டு இருக்கிறார். நாம் கூட போர்ட் எழுதிப்போட்டு இருக்கிறோம், போலீஸ் நிலையத்திற்குக்குழந்தைகளையும் பெண்களையும் அழைத்து வந்து விசாரிக்கக்கூடாது,அவர்கள் இருக்கும் இடத்திற்கே சென்று விசாரிக்கவேண்டும் என்று. ஆனால் காவலர்களே அதைப் பின்பற்றுவது இல்லை.

ஸ்ரீவைகுண்டத்திலே என்ன நிலைமை? ஒரு பெண் போலீஸ் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு கற்பழிக்கப்படவில்லையா? அப்படி கற்பழிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் புரட்சித் தலைவர் ஆட்சி ஏற்பட்ட பிறகு நடைபெறவில்லையா? அப்படி இருக்கிற போது ஏன் பஞ்சாப் மாநிலத்தில் போட்ட ஆணையைப் போல் நம்முடைய தமிழ்நாட்டில் செய்யப்படவில்லை அதே போல் போலீஸ் லாக்கப்பில் மரணம் அடைந்தால், பீகார் மாநிலத்தில் கர்பூரி தாகூர் முதலமைச்சர் அவர்கள் ஒரு ஆணை போட்டு இருக்கிறார். அந்தக் காவல் நிலையத்திற்கு யார் பொறுப்பாளியாக இருக்கிறாரோ அவர் கைது செய்யப்பட்டுக் குற்றவாளியாக ஆக்கப்படுவார், சிறையில் தள்ளப்படுவார் என்று உத்தரவு போட்டு இருக்கிறார்கள். அந்த மாதிரி இந்த மர்நிலத்தில் ஏன் போடக்கூடாது? அப்படிப் போட்டால் அந்த அதிகாரி அந்த லாக்கப்பில் மரணம் அடையவிடுவானா, சாகும் நிலையில் எவனாவது இருந்தாலும் அவனை வெளியே இழுத்துப் போட்டு விடமாட்டானா? ஆகவே, அப்படிப்பட்ட ஒரு ஆணையைத் தமிழ்நாட்டிலும் போடுவதற்கு முதலமைச்சர் முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கைதிகளுக்கு உணவு வழங்குவது ஒழுங்காக இல்லை. அது காண்டிராக்ட் முறையில் வழங்கப்பட்டு வருகிறது. எனக்கு ரொம்ப அனுபவம் உண்டு.

[முற்பகல் 10-50]

பல தடவை சிறைக்குச் சென்றிருக்கிறார்கள். [*] 'மிசாவில்' உள்ளேயிருந்தார்கள். இப்போதிருக்கிற அரசாங்கம் என்ன செய்ய வேண்டும்? அதிலிருந்து வேறுபட்டு, அப்படிப்பட்ட நடைமுறைகளுக்கு அங்கீகாரம் அளிப்பது போல் இல்லாமல், கொடுமை செய்யப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும். இஸ்மாயில் கமிஷன் முன் வைக்கப்படும் கருத்துக்களும், வாதங்களும் எல்லா பத்திரிகைகளிலும் வெளி வருகின்றன. ஆனால் ....

(அவையில் பல உறுப்பினர்கள் எழுந்தனர்.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு

அவர்கள் பேசும்போது * * * மிசா என்றார். தயவு செய்து * * * அந்த வார்த்தையைக் குறிப்பேட்டிலிருந்து நீக்க உத்திரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முருகன் : தலைவர் அவர்களே, மிசாவைப் போட்டவர்களுக்கு இவர்கள் துணை போனதால் தான் உறுப்பினர் அப்படி சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * 'மிசா' என்று சொன்னதில் * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுகிறேன்.

திரு க. சுப்பு : நான் சொல்ல வந்தது் மிசாவின்கீழ் உள்ளேயிருந்தார்கள். அப்படிக் கொடுமைப்படுத்தியதில் எங்களுக்குப் பொறுப்பில்லை என்ற முறையில் இந்த அரசாங்கம் நடைமுறையில் காட்ட வேண்டும். ஆனால் நிலைமை என்னவென்றால், இஸ்மாயில் கமிஷன் நடவடிக்கைகள் ஆளுங் கட்சி பத்திரிகையில் வருவதில்லை. இதில் மவுனம் சாதிப்பது ஏன் என்பதுதான் என்னுடைய கேள்வி. வித்தியாசாகரும், அவருடைய தந்தையும் முதலமைச்சரைச் சந்தித்துக் கொண்டிருக்கிறார்களே, ஏன்? அந்த அளவுக்கு என்ன உறவு இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்புகிறோம்.

மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் தோழர்கள், சிறையில் இவ்வளவு கொடுமைகளைச் செய்த அந்த அதிகாரியை உடனடியாக சஸ்பெண்டு செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விட்டும் அது மதிக்கப்பட்டதா என்றால் இல்லை. தோழமைக் கட்சி வேண்டுகோளைக் கேட்காததற்கு என்ன காரணம்? அத்தனைக்கும் நீங்கள் உடந்தையாக இருந்திருக்கிறீர்கள். அதன் பின்னால் வரும் நடவடிக்கைகளை மறைக்கப் பார்க்கிறீர்கள் என்ற காரணமாகத்தானே இருக்கமுடியும். .பாரதி. கமிஷன் அறிக்கையைப்பற்றி புகழ்ந்து பேசினீர்கள். அதைப் போல மிசாவைக் கொண்டு எடுத்த நடவடிக்கைகளைப் 'பற்றி கருத்தைச் சொல்ல வாய் திறவாமல் இருப்பது ஏன்?

திரு. கே. சௌந்தரராசன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிசாவின்கீழ் நடைபெற்ற கொடுமைகளுக்கு நாங்கள் உடந்தையாக இருந்ததாக உறுப்பினர் குறிப்பிட்டார். அது தவறான செய்தியாகும். எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-50—10-51இல் ஒரு சொல் அகற்றப்பெற்றது.

திரு. க. சுப்பு : சிறைத் துறை அமைச்சர் இருக்கிறார். அவர் பதில் அளிக்கும்போது அதை மறுக்கட்டும். மிசா கொடுமைகளுக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்கிறதா இல்லையா என்பதற்குச் சான்றுகளைச் சொல்லுகிறேன். விசாரணை கமிஷன் முன் நடைபெறும் நடவடிக்கைகளை ஏன் ஆளுங்கட்சி பத்திரிகையில் வெளியிட மறுக்கிறார்கள்! ஏன் சம்பந்தப்பட்ட அதிகாரியை சஸ்பெண்டு செய்ய மறுக்கிறீர்கள் என்பதுதான் கேள்வி. இது ஒரு சாதாரண கேள்வி. உங்களுடைய 'சப்சிகுவென்ட் காண்டக்ட்' இதற்கு நீங்கள் உடந்தையாக இருந்தீர்கள் என்பதற்குச் சான்றாக இருக்கிறது. முன்னால் முதலமைச்சர் பக்தவத்சலம் பல தகவல்களைக் கமிஷன் முன் சொல்லியிருக்கிறார். அவ்வளவு மோசமான நிலைமை மீண்டும் திரும்பக் கூடாது என்பதற்காகத் தான் கூறுகிறேன். யார் ஆட்சியில் இருந்தாலும், சிறையில் வைக்கப்படுகிறவர்கள் யாராக இருந்தாலும் அடிக்கப்படக் கூடாது. உங்களில் நான்கு பேர் அடிக்கப்பட்டால், அதை விரும்புவோமா என்றால் இல்லை. யாராக இருந்தாலும், அரசியல் கைதிகள் அடிக்கப்படக் கூடாது மிருகங்கள் போல் அடிக்கப்படக் கூடாது.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, யாராக இருந்தாலும் சிறையில் இருக்கிற கைதிகளைக் கொடுமைப்படுத்தக் கூடாது என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றி. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கட்சியாக இருந்த காலத்தில் ஏராளமான வழக்குகள் அண்ணா தி.மு.க. வினர் பேரில் போடப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் ஒரு வழக்கறிஞர். 307 இ.பி. கோ. எதற்காக பயன்படுத்துவார்கள் என்பது உறுப்பினருக்குத் தெரிந்திருக்கும். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியிலிருந்த காலத்தில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் மீது பல்லாயிரக்கணக்கான வழக்குகள் 307 இ.பி.கோ. வின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டது மாத்திரமல்லாமல், மாதக் கணக்கில் குற்றப் பத்திரிகை (சார்ஜ் ஷீட்) கூட தாக்கல் செய்யப்படாமல், இப்படிப்பட்ட கைதிகள் எல்லாம் நீண்ட காலமாக சிறைச் சாலையில் வைக்கப்பட்டிருந்தது உறுப்பினருக்குத் தெரியுமா? அன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த உறுப்பினர் இதையெல்லாம் கண்டித்திருக்கிறாரா?

திரு. க. சுப்பு : நான், யாராக இருந்தாலும் சரி, எந்த ஆட்சியாக இருந்தாலும் சரி, சரியென்று சொல்லமாட்டேன். தவறாக வழக்குப் போட்டிருந்தாலும், கொடுமை...........

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் சொன்னதைத் தொடர்ந்து இன்னொரு கருத்தையும் அவையின் கவனத்திற்குத் கொண்டுவர விரும்புகிறேன். மிசா என்ற கொடிய சட்டத்தைத் திராவிட முன்னேற்ற கழகம் ஆட்சியிலிருந்தபோது கூட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தை சார்ந்த எங்களுடைய மாவீரன் ஜேப்பியார் மீது பயன்படுத்தி கொடுமைப்படுத்தியதை நாங்கள் மறந்துவிடவில்லை என்பதை உறுப்பினருக்குச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : ஜே. பி. ஆர். அவர்களையும் சேர்த்துத்தான் நான் பேசுகிறேன். அவர் எனது நண்பர். சிறையில் என் கூட இருந்தார்கள். * * * * *
என்று சபாநாயகர் அவர்களின் அறையில் வைத்துச்சொன்னார்கள். அதை வரவேற்கிறேன். ஜே. பி. ஆர்.-ஐ அடித்தது சரியல்ல, எங்களை அடித்தது சரியா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு க. உரொ. எட்மண்ட் : எங்கள் கட்சியைச் சார்ந்த ஜே. பி. ஆர். அவர்களிடத்தில் பேசுகிறபோது அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னதாகச் சொல்கிறார்கள். அதை ஒப்புக்கொள்வதற்கோ அல்லது மறுப்பதற்கோ ஜே. பி. ஆர். அவர்கள் இந்த அவையில் இல்லை. ஜே. பி. ஆர். அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார்கள், நெசவாளர் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப்போல் ஜே. பி. ஆர். அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார் என்பதைச் சொல்லலாம். ஆனால் ஜே. பி. ஆர். அவர்கள் தம்மிடம் இப்படிச் சொன்னார்கள் என்று சொல்வதை ஏற்றுக் கொள்ளவோ அல்லது மறுக்கவோ அவர்கள் இந்த அவையில் இல்லை. ஆகவே அவையில் இல்லாத ஒருவரை இங்கு இழுப்பது அல்லது அவர்கள் இப்படிச் சொன்னார்கள் என்று அவையில் சொல்வது முறை அல்ல, சரியல்ல. ஆகவே ஜே. பி. ஆர். அவர்கள் இப்படி இப்படிச் சொன்னார்கள் என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுவது நலம் என்று சொல்லிக்கொள்கிறேன்.

திரு. மு. கருணாநிதி : ஜே. பி. ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மிஸா கைதியாக பிடிக்கப்பட்டதை பற்றிச் சொன்னார்கள். நான் ஏற்கனவே சொன்ன 156 பேர்கள் பட்டியலில் ஜே. பி. ஆர். அவர்களும் இணைக்கப்பட்டு அவர் பிடிக்கப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு மறுபடியும் கிட்டத்தட்ட ஏழெட்டு மாத காலம் குடியரசுத்தலைவர் ஆட்சியிலும் அவர் மிஸா கைதியாகத்தான்

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-55இல் ஒரு பகுதி அகற்றப் பெற்றது.

வைக்கப்பட்டிருந்தார். ஆகவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மிஸா கைதியாக வைக்கப்பட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியில் அவர்கள் ஏன் அதை உறுதி செய்தார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிஸா சட்டத்தின்கீழ் எந்த அடிப்படையில் அன்று கைது செய்யப்பட்டார்கள் என்பதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். இங்கே மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கைது செய்யப்பட்டவர்கள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படவில்லை என்ற பெரிய குறைபாட்டைச் சொல்லி வருகிறார்கள். அன்று ஜே.பி.ஆர். அவர்களுக்குச் சிறைச்சாலையில் இழைக்கப்பட்ட கொடுமைகள், அவர்களிடம் எந்தவிதமான முறையில் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருவதைத் தவிர மிஸாவில் கைது செய்யப்பட்டவர்கள் குறிப்பாக அரசியல்வாதிகள் மனிதாபிமானத்துடன் நடத்தப்படவேண்டும் என்ற விவாதத்திற்குத் தான் பதில் சொல்ல வேண்டியவர்களாகவும் இருக்கிறோம். மிஸாவின்கீழ் சமூகக் குற்றங்கள் புரிந்தவர்கள், சமூக சூதாடிகள் போன்றவர்களும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அரசு ரீதியில் கைது செய்யப்பட்டவர்கள் மனிதாபிமானத்தோடு நடத்தப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்பவை பற்றி இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

திரு. மு. கருணாநிதி : அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட ஜே. பி. ஆர். அவர்கள் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மிஸா கைதியாக இருந்தபோது எந்தவிதமான துன்புறுத்தலுக்கும் சிறைச்சாலையில் ஆளாகவில்லை. அப்படி எந்தப் புகாரும் தரப்படவும் இல்லை.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர்: எதிர் கட்சித் தலைவர் அவர்கள்விளக்கமாகச் சொன்னதற்குப் பின்னால் திரு. சுப்பு அவர்கள் * * என்று சொன்ன பகுதியிலிருந்து............

திரு. க. சுப்பு : மாண்புமிகு அமைச்சர் திரு. எட்மண்ட் அவர்கள் அவையில் இல்லாத ஒருவரைப்பற்றிச் சொல்லக்கூடாது என்று சொன்னார்கள். எதைச் சொல்லக் கூடாது? குற்றச் சாட்டு சொல்லக்கூடாது. ஒருவரைப்பற்றி குற்றச் சாட்டு

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10-57—10.58 இல் ஒரு சொல் அகற்றப்பெற்றது.

சொல்லக்கூடாது. அவையில் இல்லாத ஒருவரைப் பற்றி குற்றச் சாட்டு சொல்லக்கூடாது. ஆனால் ரெபரன்ஸ் கூடவா கூடாது? நான் சொன்னதை நீக்குவதென்றால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதையும் நீக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. க. உறொ. எட்மண்ட் : திரு. ஜே. பி. ஆர். அவர்களை இந்த மன்றத்தில் இழுப்பதன்மூலம் இதற்கு முன்பிருந்த அரசின்மீது ஒரு குற்றச்சாட்டைக் கொண்டுவருகிறார்கள். ஜே.பி. ஆர். அவர்கள் என்னிடம்'இப்படிச் சொன்னார்கள் என்று சொல்லி இதற்கு முன்பு இருந்த அரசின்மீது குற்றஞ்சாட்டு கிறார்கள். அவர்கள் இந்த அவையில் இருந்தால் இப்படிச் சொன்னேன் அல்லது இப்படிச் சொல்லவில்லை என்று மறுக்க வசதியாக இருக்கும். ஆனால் அவர்கள் இந்த அவையில் இல்லை. உறுப்பினர் அவர்கள் ஜே. பி. ஆர். இப்படிச் சொன்னார் என்று சொன்னதை ஏற்றுக்கொள்ளவோ அல்லது மறுக்கவோ அவர்கள் இந்த அவையில் இல்லை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : ஜே. பி. ஆர். அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதற்கு ஆதாரபூர்வமான ரிக்கார்ட்ஸ் இருக்கின்றன. அதை யாரும் மறைத்துவிட முடியாது. ஆனால் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போன்று, அவர்கள் சொன்னதாக இங்கு சொல்கிறார்களே அது உண்மையா இல்லையா என்று சொல்ல அதை மறுப்பதற்கு அவர்களுக்கு வாய்ப்பு இல்லை. ஆகவே இதையும் அதையும் ஒன்றாக எடுத்து குழப்ப வேண்டாம்.

[முற்பகல் 11-00]

திரு. க. சுப்பு : அவையில் இல்லாதவர்களைப்பற்றி பேசக்கூடாது
என்றால், அவையில் இருக்கக்கூடிய 234 பேர்களைப்பற்றி மட்டும்
தான் பேசிக்கொண்டிருக்க முடியும். வெளியில் இருக்கின்ற
வர்களைப்பற்றி குற்றச்சாட்டு சொல்லக் கூடாது. ஜே. பி. ஆரைப்
பற்றி அமைச்சர் அவர்கள்தான் குறிப்பிட்டார்கள். அதன் பின்
தான் நான் குறிப்பிட்டேன். ஏன் குறிப்பிட்டேன் என்றால், அவர்
சொல்வது எவ்வளவு உண்மை என்பதற்கு மதிப்பு கொடுக்கும்
போது நான் சொல்வதற்கு அதே மதிப்பு கொடுக்கக்கூடாதா?
இதில் என்ன தப்பு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள்
சொன்னது, அவர் மிஸாவில் கைது செய்யப்பட்டார் என்பதைப்
பற்றி சொன்னார். ஆனால் திரு. சுப்பு அவர்கள் குறிப்பிடும்போது,

* * * * * * *

என்று சொன்னார்கள். குற்றச்சாட்டு சொல்லக் கூடாது என்
பதை எல்லோரும் ஒத்துக்கொள்கிறோம். தனிப்பட்ட முறையில்
அவர்கள் திரு. சுப்பு அவர்களிடம் சொன்னதை நான் நம்புகிறேன்.
ஆனால் இந்த அவையிலுள்ள அத்தனை பேரும் நம்ப வேண்டும்.
வெளியிலுள்ள தனிப்பட்ட ஒருவரைப்பற்றிச் சொல்லும்போது
அவையிலுள்ள அத்தனைபேரும் நம்பவேண்டும். தனிப்பட்ட
முறையில் அவர் சொன்னதில் உண்மையிருக்கிறதா இல்லையா
என்பது இப்போது சபையின் சந்தேகத்திற்கு வந்துவிட்டது என்
கின்ற காரணத்தால், தனிப்பட்ட முறையில் திரு. சுப்பு அவர்க
ளிடம் சொன்னதாகக் கூறிய பகுதிகளைச் சபை நடவடிக்கை
குறிப்பு களிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று உத்திர
விடுகின்றேன்.

திரு. மு. கருணாநிதி : சபையிலுள்ளவர்கள் அத்தனைபேரும்
ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சொல்வதாக இருந்தால், நிதி
அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையின் விவாதத்திற்குப்
பதிலளிக்கும்போது, சில கருத்துக்களைச் கூறி, இதை என். ஜி.
ஓக்கள் ஆதரிக்கிறார்கள் என்று தன்னிடம் நேரில் தெரிவித்
தார்கள் என்று இங்கு சொன்னார்கள். என். ஜி. ஓக்களின் தலைவர்
சபையில் இல்லாதவர், வெளியில் இருப்பவர். அப்படி அவர்
தன்னிடம் வந்து நேரில் சொன்னார் என்று நிதி அமைச்சர்
சொன்னதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லையா ? ஆகவே அதை
யும் இப்போது கவனத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது அப்போது
நடந்த விஷயம். இப்போது என் கவனத்திற்குக் கொண்டுவரு
வதைப் பற்றிதான் நான் தீர்ப்புக் கூறமுடியும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : கைத்தறி நெச
வாளர் துறை அமைச்சர் அவர்கள் சொன்னது....

It is a point of fact; it is a fact.

அதாவது கைது செய்யப்பட்டது உண்மை. அதைச் சொல்வதில்
எந்தத் தடையும் இல்லை. வெளியில் உள்ள ஒருவரைப்பற்றிக்
குறிப்பிடும்போது, அவர் இன்னவிதமாகச் சொன்னார் என்று சில

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க
முற்பகல் 11-00—11-01 இல் ஒரு பகுதி அகற்றப்பெற்றது.

கருத்துக்களைச் சொல்லும்போது, அது அவருக்கு இழுக்கையே
உண்டு பண்ணுவதாக இருக்குமானால், அதை ஒரு "ரெஃபரன்ஸ்க்
காக" குறிப்பிடக்கூடாது. என். ஜி. ஓக்களைப்பற்றி சொன்னார்
கள் என்றால் அவர்கள் மீது எந்த விதமான குறைவும் ஏற்பட்டு
விடவில்லை.

திரு. மு. கருணாநிதி : என். ஜி. ஓக்களுக்கு இதனால் எந்த
விதமான குறைவும் ஏற்பட்டுவிடவில்லை என்று சொல்லிவிட
இயலாது. காரணம் அன்றைக்கு நாங்கள் வெளிநடப்பு செய்து
வெளியே போகும்போது, வாசலில் நின்றுகொண்டிருந்த
என்.ஜி.ஓ. சங்கத் தலைவர் இளங்கோ அவர்கள் நாங்கள் அப்படி
நிதியமைச்சரிடம் சொல்லவில்லை என்று என்னிடமே சொன்னார்
கள்.....

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே,
விவாதம் வேறு திசைக்குப் போய்க் கொண்டிருக்கிறது. வெளியி
லுள்ள ஒருவரைப் பற்றி குறிப்பிடும் போதுஅவருக்குக் குறைவு ஏற்
படும் வகையில் நாம் இங்கு ரெபரன்ஸாக எடுத்துக் கூறக்கூடாது.
நண்பர் சுப்பு அவர்கள் குறிப்பிட்ட நபர் ஒரு இயக்கத்தைச்
சேர்ந்தவர். தனிமையில் அவரிடம் சொன்னார் என்று சொல்வது
ஒரு குறைபாட்டை உண்டாக்கும். ஆகவே தான் அந்தப் பகுதியை
எடுத்துவிடவேண்டும் என்று கூறப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே
சொன்னது போல் அன்றைக்கு நடந்த விஷயத்திற்கு இப்போது
நான் தீர்ப்பு கொடுக்க முடியாது. இங்கு இப்போது நடந்த
நிகழ்ச்சிக்குத்தான் நான் என் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறேன்.
அப்பகுதி நீக்கப்படவேண்டும் என்று சொல்லிவிட்டேன். (சில
உறுப்பினர்கள் எழுந்திருந்தனர்). தயவு செய்து எல்லோரும்
உட்காருங்கள். இன்னும் இரண்டு டிமாண்டுகள் எடுத்துக்கொள்ள
வேண்டியிருக்கிறது. நேரம் குறைவாக இருக்கிறது. திரு. சுப்பு
அவர்கள் தொடர்ந்து பேசலாம்.

திரு. க. சுப்பு : நான் கான்ட்ரவர்ஷியல் சப்ஜெக்டுக்கு போக
விரும்பவில்லை. அரியானாவில் ஓய்வு பெற்ற நீதிபதிகளைக்கொண்ட
ஒரு ஹைபவர் கமிட்டி போட்டிருக்கிறார்கள். எதற்கென்றால்
"for improving the conditions, providing living condition and
amenities to prisoners, etc...." சிறைச்சாலை அதிகாரிகள், அதில்
பணியாற்றுபவர்கள் இவர்களுடைய வேலை நேரம், இன்னும்
நல்ல முறையில் எப்படி சிறைச்சாலைகளில் வேலை செய்வது
"better service conditions to Officers and other jail officials"

என்கின்ற முறையில் அவர்களுடைய நிலைமைகளைப்பற்றி பரிசீ
லனை செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இப்போது நிலைமை என்னவென்றால் 24 மணிநேரமும் வேலை
செய்யவேண்டியிருக்கிறது. அதனால்தான் அவர்களுக்குக் கைதி
களிடத்தில் கோபமும் வருகிறது. எட்டு மணி நேரம் மட்டும்
அவர்கள் வேலை செய்யக்கூடிய நிலைமை இருக்கவேண்டும். சேலத்
தில் கூட 'எட்டு மணி நேர வேலை' அமல் நடத்தப்பட்டு வருகிறது.
இந்த எட்டு மணி நேர வேலை எல்லா சிறைச்சாலைகளிலும்
அமல் நடத்தப்பட வேண்டும். அங்குள்ள அதிகாரி
களுக்கு இப்போது கொடுக்கப்படும் சம்பளம், வேறு பல
வசதிகள் இவைகள் எல்லாம் போதாது, கம்மியாக இருக்கிறது.
இவைகள் கம்மியாக இருக்கின்ற காரணத்தால் தான் நீங்கள்
கொடுக்கிற உணவு, கைதிகளுக்குக் கொடுக்கும் உணவுப்பொருள்
சரியாகப் போய்ச் சேராமல் வேறு விதத்தில் போய்விடுகிறது.
கூட்டணியாக இருந்துகொண்டு இது நடைபெறுகிறது. யார்
வந்தாலும் இந்த அதிகாரிகளுக்குள் கூட்டணி இருந்து கொண்டே
யிருக்கும். உங்களில் கூட சிலர் சிறைச்சாலைக்கு வந்திருக்கக்
கூடும். வந்தவர்கள் இருக்கிறார்கள். ஆகவே யாராக இருந்தாலும்
இந்த நிலைமை மாறியாக வேண்டும். இதற்கெல்லாம் லா
டிப்பார்ட்மென்ட் ஒரு வழிவகுக்கவேண்டும். தனியாக இதற்
கென்று வழிவகுத்தால் போதும்.

இதற்கு மட்டும் ஒரு உத்திரவாதம் கொடுத்தால் போதும்.
அவர்களுக்கு அளிக்கக் கூடிய உணவு அவர்களுக்குச் சரியாகப்
போய்ச் சேருகிறதா என்பதைப் பார்க்க வேண்டும். அதை
மாற்றி ஒரு காமன் கிச்சனில் சமையல் செய்யலாம் என்று சொல்
கிறார்கள். அதற்குப் பதிலாக, இந்தக் கைதிகளையே ஒரு கூட்டு
முறையில் சமையல் செய்யச் சொல்லி, அவர்களே அந்த உணவை
பரிமாறிக் கொள்ளுகின்ற முறையை ஏற்படுத்தினால் வசதியாக
இருக்கும். அரசியல் கைதிகளுக்கு மட்டும் அதிகாரிகளின் தயவு
இருந்தால், இத்தகைய முறையில் நல்ல சாப்பாடு கிடைக்கும்.
இல்லாவிட்டால் அவர்களும் கஷ்டப்பட வேண்டியதுதான். இந்தி
யன் பீனல் கோடின் கீழ் கைது செய்யப்படுகிறார்கள். ஆனால்
அரசியல் கைதிகள் என்று தனியாக கிளாசிபிகேசன் கிடையாது,
எனவே, அதன் கீழ் யாரை வேண்டுமானாலும் நீ அரசியல் கைதி
இல்லை. அதனால் உனக்கு அந்த வசதி கிடையாது என்று சொல்லி
உனக்கு இந்தச் சாப்பாடுதான் என்று சொல்லிக் கொடுக்கிறார்கள்.
ஆகையால், அவர்களுக்கு அளிக்கக்கூடிய உணவும் அவர்களுக்குப்
போய்ச் சேருவதில்லை. அவர்களுக்குரிய சாப்பாடு, உணவு போய்ச்
சேர தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

உடையைப் பொறுத்தவரையில், ரொம்ப மோசமான நிலை
யிருக்கிறது. இதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிறையில் கொடுக்கக்
கூடிய உடையைக் கொஞ்சம் மாற்றினால் நல்லது. சிறைக்கு
அருமையான ஆட்களெல்லாம் வருகிறார்கள். படித்த பட்டதாரி
களும் வருகிறார்கள். சந்தேக கேஸ் என்று ஸ்டாஸ்டிஸ்டிக் பர்ப
சுக்காக அவர்களை இத்தகைய வழக்குகளில் போடுகிறார்கள்.
அப்படிப் போட்டு, அவர்களுக்கு கன்விக்ஷனும் வாங்கிக் கொடுத்து
விடுகிறார்கள். அதன் கீழ் அவர்களுக்கு உடைகளை மாற்றும் போது
அவர்களுடைய உருவமே மாறிவிடுகிறது. மாதவன் அவர்கள்
சிறைக்குச் சென்ற போது அவருக்கு ஒரு தொப்பி காண்பித்
தார்கள். அதற்கு குரங்குத் தொப்பி என்று பெயர். அவர்
இண்டர்வியூவில் இந்தத் தொப்பிகளை மாட்டிக்கொண்டு வந்த
தைப் பார்த்தார். திரும்பி வந்தவுடன் அந்தத் தொப்பியை
மாற்றச் சொல்லி உத்தரவிட்டார். இந்தச் சிறைக் கைதி
களுக்கு தைக்கக்கூடிய சட்டையை மாற்றச் சொல்லி உத்தர
விட்டார். இந்தச் சிறைக் கைதிகளுக்குத் தைக்கக் கூடிய
சட்டையை ஸ்பெஷலாகத் தைக்கின்றார்கள் என்று நினைக்கிறேன்.
அதனுடைய பேசிஸ் என்னவென்றால் அவர்களுக்கு மனித உணர்வு
என்பது ஏற்படக் கூடாது என்பதுதான். அந்த முறையிலே அவர்
களுக்கு இந்த உடைகளைப் போட்டு, அவர்களை அடிக்கின்றார்கள்;
அப்படி அடித்து மிதிக்கின்றார்கள். இது ரொம்ப கேவலமாக
இருக்கிறது. விலங்குகளுக்குக் கூட சில சட்டங்கள் இருக்கின்றன.
இவர்கள் விலங்குகளைக் காட்டிலும் மிகக் கேவலமாகவும், கொடு
மையாகவும் நடத்தப்படுகின்றார்கள். இதையும் கொஞ்சம்
கவனிக்கவேண்டும்.

அதே போல், மிசாவின் கீழ் கைது செய்யப்படுகின்றவர்
களுக்கு அலவன்சு கொடுக்கப்படவேண்டுமென்று "மான்டேடரி
புரொவிஷன்" இருக்கிறது. அதே போல், "செகியூரிடி பிரிசனர்ஸ்"
களுக்கு "செகியூரிடி பிரிசனர்ஸ் ரூல்ஸ்"-ன் கீழ் அதே முறையை
வைத்திருக்கிறார்கள். அப்படி முறைகள் எல்லாம் இருந்
தாலும், Shall be given என்று மான்டேடரி புரொவிஷன்
இருந்தாலும், அந்த குவான்டத்தை நிர்ணயிக்கும் டிஸ்கிரிஷன்
அதாவது 50 ரூபாய், 100 ரூபாய்என்று கொடுக்கக்கூடிய அதிகாரம்
Discretionary powers of the authority அவர்களிடத்திலே
இருக்கிறது: இப்படிக்கொடுக்கும்போது, வழக்கறிஞராக உள்ள
வர் அவர் வீட்டில் இருந்தாலும், உள்ளே இருந்தாலும் ஒன்றுதான்
என்று வசதி படைத்தவர்களுக்கு அரசியல் கைதிகள் என்று
100 ரூபாயும் உண்மையிலே வசதியில்லாதவர்களுக்கு ஒன்றுமில்
லாத நிலையும்தான் இன்று இருக்கிறது. என்னுடைய நண்பர்
அரிபட் என்பவர் தொடர்ந்து பலமுறை சிறையில் பிரிவென்டிவ்
டிடென்ஷனிலும், டி. ஐ. ஆரிலும் இருந்திருக்கிறார். அப்போ
தெல்லாம் அவருக்கு இந்த உதவித் தொகை கொடுக்கப்பட்டது.

ஆனால், அவருக்குத் திருமணமாகி, குழந்தை பிறந்தவுடன், அவருக்குக் குடும்பம் இருக்கிறது என்று சொல்லப்பட்டு, இந்தத் தொகை கொடுப்பது நிறுத்தப்பட்டது, இப்படியெல்லாம் மான்டேடரி புரொவிஷனில் வழிவகைகள் இருந்தும், அவைகள் மீறப்படுகின்றன. ஆகவே, இவற்றில் எல்லாம் கவனம் செலுத்தி ஜெயில் கோட், ஜெயில் மானுவல் ஆகியவற்றைத் திருத்தம் செய்வதோடு, குறிப்பாக இப்படிப்பட்டச்சீர்திருத்தங்களைச்செய்ய வேண்டும். இத்தகைய சீர்திருத்தங்களை உடனடியாகச் செய்யா விட்டாலும், உடனடியாகப் பரிசீலனை செய்வதற்காகவாவது நட வடிக்கைகள் எடுக்கவேண்டும். அப்படிச் செய்வதற்கு ஒரு கமி ஷனை ஏற்படுத்துவது நல்லது. அரியானாவில், இப்படிப்பட்ட ஒரு கமிஷன் அமைக்கப்பட்டு, அதிலே திரு. சமர்குகா என்பவரும் திரு. மணிராம் பக்ரி, எம். பி. யும், ஒரு சட்டமன்ற உறுப்பினரும் அங்கத்தினர்களாக உள்ளனர். இப்படி இதிலே அங்கத்தினர்களாகப் போடும்போது, சிறைக்குச் சென்று அதிலே அனுபவம் பெற்றவர்களைப் போடவேண்டும். இப்படிப் பட்ட அனுபவம் பெற்றவர்கள் உங்களிடத்திலும் இருக்கிறார்கள். அவர்களைப் போடவேண்டும். இப்படிப் போடுவதில் அனுபவம் உள்ள யாரை வேண்டுமானாலும் போடுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. (மணி அடிக்கப்பட்டது).

கடைசியாக ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்து விடுகிறேன். இந்தக் கமிஷன் போடும்போது, ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரைப் போடுங்கள். இப்படி நீதிபதியைப் போட வேண்டுமென்று சொல்லும்போது, ஒருவரையே திரும்பத் திரும்ப போடக்கூடிய நிலையில்லாமல், அவருக்கு ஏதோ எக்ஸ்டென்ஷன் ஆப் சர்வீஸ் கொடுப்பது போல் இல்லாமல், ரெட்டியார் இருக் கிறார். அப்படிப்பட்ட ஒரு ஓய்வு பெற்ற நீதிபதியைப் போட்டு இதையெல்லாம் பரிசீலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். இதை அரசாங்கம் பரிசீலிக்கவேண்டும்.

[முற்பகல் 11-10]

நாங்கள், நீதி விசாரணைக் கமிஷன் போடுங்கள், சீராளன் மரணத்திற்குப் போடுங்கள் என்றோம். ஒன்று கூடப் போட வில்லை. நெருக்கடிக் கொடுமைகளுக்கு மட்டும் ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது. சரண்சிங் அவர்கள் சொல்லியும் முத லமைச்சர் அவர்கள் மனதில் வாங்கியதாகத் தெரியவில்லை. இப் போது நீதிபதியாக இருந்தவர்கள் அமைச்சராக வந்திருக்கிறார் கள். ஓய்வு பெற்ற நீதிபதியைப் போட்டு இந்தத் துறையை எப்படிச் சீர்திருத்துவது என்பது பற்றி ஆராயவேண்டும், அவர் களுடைய பரிந்துரையைக் கேட்டு முடிவு எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

திரு. டாக்டர் கே. சமரசம் : பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், சார். மாண்புமிகு சுப்பு அவர்கள் பேசும்போது அவசரக்காலச் சட்டத்தின் கொடுமைகள் பற்றிப் பேசினார்கள். இருக்கட்டும். ஆனால் அவர்கள் அரசு இருந்த காலத்தில் நேர்மையான முறையில் நடந்தார்களா ? அந்த அவசரக் காலச் சட்டத்தைக் கொடுமை யாக பயன்படுத்திய காரணத்தால்தான் தூக்கி எறியப்பட் டார்கள். அவர்கள்............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கிளாரிபிகேஷன் போதும். தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர்கள் இருக்கி றார்கள். உங்களுடைய கருத்துக்களைப் பேசும்போது சொல்லலாம். கிளாரிபிகேஷன் என்று இவ்வாறு பேசக்கூடாது.

*திரு. அ. க. அரங்கநாதன் : நம்முடைய மாண்புமிகு உறுப் பினர் சுப்பு அவர்கள் பேசும்போது சிறையில் பல்வேறு கொடுமை களைச் செய்வதாகச் சொன்னார்கள். ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில் அந்த சிறைச்சாலைகளில் எல்லாம் அங்கிருக்கும் கைதிகளுக்கு ஏழாண்டுக் காலமாக சர்க் கரைப் பொங்கலா வைத்தார்கள்?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: எதிர் கட்சித் தரப் பில் இருந்து பேசும்போது ஆளும் கட்சி தரப்பில் பதில் சொல்ல அமைச்சர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகவே ஏதே னும் பதில் சொல்லவேண்டுமென்றால் அமைச்சர்கள் பதில் சொல் லுவார்கள். உங்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில் ஏதாவது சொல்லியிருந்தால், கிளாரிபிகேஷனாக ஏதாவது நீங்கள் சொல்ல லாம். அல்லது நடைமுறை விதிகளில் மாறுபாடு ஏதேனும் காணப்பட்டால் பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுந்து அதைப் பற்றிக் கூறலாம். ஒருவர் பேசியதற்குப் பதிலாகக் கேள்வி கேட்டுக்கொண்டிருப்பதற்கு எந்த உறுப்பினருக்கும் உரிமை கிடையாது.

திரு. துரைமுருகன் : இந்த இரண்டு பேர் பேசியதையும் சபைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுவீர்களா ? இல்லையென்றால் அதற்குப் பதில் சொல்ல விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவுசெய்து உட்காருங்கள். நடந்தது நடந்தபடியே இருக்கட்டும். இனிமேல் இப்படிப் பேசுவது கூடாது.

நேரம் குறைவாக இருக்கும் காரணத்தால் இனி பேச இருப்ப வர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷத்திற்குள் முடித்துக் கொண் டால்தான் இந்த மானியக் கோரிக்கையை 12½ மணிக்குள்ளாக

முடிக்க முடியும். ஆகவே, ஒவ்வொரு உறுப்பினரும் ஐந்து
நிமிஷம் மட்டும் பேசுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. ஜெயவேலு : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, வேலூர் நகரத்தில் இருக்கின்ற நீதிமன்றங்கள்
எல்லாம் மைய அரசுக்குச் சொந்தமான இடங்களில் இருக்கின்றன.
அவைகளை வேறு நல்ல இடங்களில் வைக்க கட்டிடம் கட்டிக்
கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்போ
தெல்லாம் பொதுமக்களிடையே அடிக்கடி பேசப்படுகின்ற ஒரு
சட்டத்தைப் பற்றி என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். தமிழ்நாடு 1973-ம் ஆண்டு பொதுவாழ்வில்
ஈடுபடுவோர் மீது குற்றம் சாட்டுவது பற்றிய சட்டம் அது.

இந்தச் சட்டம் ஒட்டை உடைசல்கள் நிறைந்த பல
சந்து பொந்துகள், விரிசல்கள் நிறைந்த சட்டமாக இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களால் புறக்கணிக்கப்
படுகிற இந்தச் சட்டம் மிகக் குறைபாடுகளைக் கொண்டிருக்கிறது.
இது குற்றத்தைச் செய்வோரை தண்டிப்பதற்குப் பதிலாக,
அவர்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே இந்தச் சட்டம் இருக்
கிறது. ஆகவே எவ்வளவு சீக்கிரம் இந்தச் சட்டத்தைச் சட்டப்
புத்தகத்திலிருந்து நீக்கவேண்டுமோ, எவ்வளவு சீக்கிரம் இந்த
அரசு அந்தச் சட்டத்தை வாபஸ் பெறுகிறதோ, அவ்வளவு சீக்கிரம்
இந்த நாட்டிற்கும் நல்லது, இந்த அரசுக்கும் நல்லது என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் லஞ்சத் தடுப்புச் சட்டம் இருக்கிறது
இந்தியக் குற்றச் சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டங்களைவிட
இது எந்த வகையிலும் உயர்ந்த சட்டமில்லை. இந்த இரண்டு
சட்டங்களிலேயும் சிக்கிக்கொள்கின்ற குற்றவாளிகள் இந்தச் சட்
டத்தினாலே விடுதலை பெறுகின்ற நிலை இருக்கிறது. லஞ்சத்
தடுப்புச் சட்டம், இந்தியக் குற்றவியல் சட்டம் என்ற இரண்டு
சட்டங்களைத் தவிர இது மூன்றாவது சட்டமாக இருப்பதால்

Even though it is a third amendment my humble submission is that it is a third-rate enactment. It helps the accused rather than the complaint. It deters the complainant rather than the culprit.

என்ற நிலைமை இருக்கிறது. அதற்காக என்னுடைய கருத்துக்களை
சொல்லவிரும்புகிறேன். ஐ. பி. சி. 21-வது பிரிவில் பப்ளிக்
சர்வன்ட்ஸ் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தச்
சட்டத்திலே பப்ளிக் மென் பொது மனிதர்கள் என்று சொல்லப்
பட்டிருக்கிறது. அந்தச் சட்டத்தை உருவாக்கியவர்கள் மக்களின்
தொண்டர்களை சேவகர்கள் என்று சொல்லிக் கொள்ள வெட்கப்

பட்டோ என்னமோ பப்ளிக் மென் என்று சேர்த்திருக்கிறார்கள்.
அதிலே அமைச்சர்கள் மட்டுமல்ல, இன்னும் பலதரப்பட்ட பொது
ஊழியர்களையும் கொண்டிருக்கிறது. ஆனால் இந்தச் சட்டத்திலே
பலரை விடுவதற்கு இடம் இருக்கிறது. இந்தியத் துணைக் கண்
டத்தின் தலைமை நீதிமன்றம் அமைச்சர்களையும் மற்ற அமைச்சர்
களையும் சேர்த்து பப்ளிக் செர்வன்ட்ஸ் என்று சொல்லப்பட்டிருக்
கிறது என்று சொல்லிற்று. அது மட்டுமல்ல, சமீபத்திலே
சென்னை உயர்நீதி மன்றம் கூட ஒரு நல்ல தீர்ப்பைக் கூறியிருக்
கிறது. ஆகையினால் பப்ளிக் மென் ஆக்ட் என்பது மிகக் குறைந்த
அளவிலேதான் ஊழியர்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.
ஆனால் பப்ளிக் செர்வன்ட்ஸ் என்பது மிக்க பெரிய அளவிலே
விளக்கத்தைக் கொண்டிருக்கிறது.

இந்த பப்ளிக்மென்ஆக்டிலே பதவிக் காலத்திலே குற்றம்செய்த
வர்களைத்தான் விசாரிக்கமுடியும்என்று இருக்கிறது ஆனால் ஐ.பி.சி.
162-வது பிரிவிலே பதவிக்கு வருமுன், பதவியிருந்தபோது பதவியி
லிருந்து விலகிய பின் குற்றம் செய்தாலும் கூட விசாரித்துத்
தண்டிக்கலாம் என்று இருக்கிறது. ஆகவே இந்த புதிய சட்டத்
தின் பிரகாரம் பதவிகாலம் முடிந்த பிறகு ஏதாவது ஒன்றைப்
பற்றிச் சொல்லவேண்டுமென்றால் அது குற்றமன்று என்ற நிலைமை
இருக்கிறது. ஆனால், ஐ. பி. சி. யிலே அப்படியில்லை, பதவிக்கு
வருவதற்கு முன்பு, பதவி முடிந்த பிறகு குற்றம் செய்தாலும்,
லஞ்சம் வாங்கினாலும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆனால், இவர்
களையெல்லாம் காப்பாற்றுகிற முறையிலேதான் இந்தச் சட்டம்
இருக்கிறது. இந்த பப்ளிக் மென் ஆக்டிலே தொடக்க நிலை
விசாரணை வைக்கப்படவேண்டும் என்ற புரவிஷன் இருக்கிறது.
ஆனால் ஐ. பி. சி. பிரகாரம் குற்றத்தைப் பற்றி காவல் துறையிலே
புகாரைக் கொடுத்துவிட்டால் அவர்கள் விசாரித்து வழக்கு மன்
றத்திலே வழக்குப் போடுகிறார்கள். ஆனால் இந்த பப்ளிக் மென்
சட்டத்திலே அவர்கள் விருப்பப்பட்டால் தொடக்க நிலை விசாரணை
நடத்தலாம், முதலிலே எடுத்துக்கொண்டாலும் எடுத்துக் கொள்ள
லாம், இல்லாவிட்டால் தொடக்க நிலை விசாரணை வைக்கலாம்,
அது முடிந்த பிறகு வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம்,

[முற்பகல் 11-20]

இல்லாவிட்டால் தள்ளிவிடலாம், வேண்டுமானால் இஷ்டப்பட்
டால் விசாரணை செய்து குற்றவாளி என்று சொல்லலாம், இல்லா
விட்டால் விட்டுவிடலாம். இந்த மூன்றுக்கும் மேல் முறையீடு
களுக்கு வகை இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. இந்திய
துணைக் கண்டத்தில் தலைமை நீதிமன்றத்தைவிட மிக உயர்ந்த
நீதிபதியாக கமிஷனரை வைத்திருப்பது ஏன் என்று புரியவில்லை.
நல்லெண்ணத்தோடு தீர்ப்பு அளிக்கிறாரா, கெட்டெண்ணத்தோடு

தீர்ப்பு அளிக்கிறாரா என்பதைக் கூட மேல் முறையீடு செய்யும் அளவிற்கு இந்தச் சட்டத்தில் இடமில்லை. அதாவது முதலிலேயே பிராதைத் தள்ளிவிட்டால் மேல் முறையீடு செய்ய இடமில்லை. அதற்கு வேறு சட்டத்திற்குப் போகவேண்டும். அப்படியென்றால் இந்தச் சட்டம் எதற்காக என்று கேட்க விரும்புகிறேன். தொடக்கநிலையில் விசாரித்த பிறகு அவர் இஷ்டப்பட்டால் தள்ளிவிடலாம்.

(திரு. கே. பண்ணை சேதுராம் தலைமை.)

மேல் முறையீட்டு வேறு சட்டத்திற்குப் போக வேண்டும். மூன்றாவதாக அவர் விசாரணை செய்து குற்றம் என்றோ அல்லது குற்றம் அல்ல என்றோ தீர்ப்புக் கூறினால் அதற்குப் பிறகு மேல் முறையீடு இல்லை. அதற்கு வேறு சட்டத்தில் வழக்குப் போடலாம் என்று பார்த்தால் அரசியல் சட்டத்திலே அதற்கு வழிவகை இல்லை. அதாவது ஒரு முறை ஒருவர் விடுதலை செய்யப்பட்டால் மீண்டும் அதே குற்றத்திற்காக வழக்கு தொடரக்கூடாது என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன.

அடுத்த நிலை என்னவென்றால், நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. யாராவது புகார் கொடுத்தால் அதனை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு புகார் கொடுத்தவர் மேல் இருக்கிறது. ஆனால் இலஞ்சத் தடுப்புச் சட்டத்தில் அப்படி இல்லை. புகார் ஓரளவுக்கு உண்மை என்று நிரூபித்து விட்டால், தான் நிரபராதி என்று நிரூபிக்கும் பொறுப்பு குற்றவாளிக்கு இருக்கிறது. ஆகையால் ஓட்டாண்டிகள், சொத்தில்லாதவர்கள்தான் வழக்கு போடலாம் என்ற நிலைமைகள் இதில் இருக்கின்றன. நல்ல பொறுப்பு உள்ளவர்கள் வழக்குப் போடப் பயப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல பொய்யாக வழக்குப் தொடர்ந்தால் மூன்றாண்டுத் தண்டனை என்றிருக்கிறது. இதிலே முக்கியமாகக் குற்றவியலிலே அவர் நல்லெண்ணத்தோடு கொடுத்தாரா இல்லையா Whether the intention is bona fide or malafide, என்பது இதிலே இல்லை. Whether there was just or reasonable ground or not to come to this conclusion அதுவும் இதில் இல்லை. ஆகவே, குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்றால் உள்ளே போவோம், நஷ்ட ஈடு தருவோம் என்ற நிலை இருக்கிறது. ஆனால் மற்றச் சட்டத்தில் இப்படி இல்லை. பொய்க் குற்றச்சாட்டு சாட்டினால் அதற்கு ஐ.பி.சி. 216 செக்ஷன் இருக்கிறது. அதிலே அப்படிப்பட்டவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்று குறிப்பிட்டிருக்கிறது. அதெல்லாம் இதில் இல்லை. எனவே, இது உண்மையிலேயே கோர்ட்டிற்கு வருபவர்களையும், நீதிமன்றத்திற்கு வருபவர்களையும் பயமுறுத்துவதாக இருக்கிறது.

It is a draconian provision. It deters the complainant more than the accused.

அடுத்தபடியாக, இந்தச் சட்டத்திலே இருக்கின்ற முறையெல்லாம் உரிமை இயல் முறையிலே இருப்பதைத்தான் பின்பற்ற வேண்டுமென்று இருக்கிறது. இப்படிப்பட்ட குற்ற வழக்குகளை விசாரிக்க சி. ஆர். பி.சி. முறைதான் பின்பற்றப்பட வேண்டும். இதிலே சி.பி.சி. முறை இருக்கிறது. கமிஷனர் தஸ்தாவேஜுகளை கொணர முடியாத நிலைமை இருக்கிறது.

Commissioner is impotent with regard to production of documents by witnesses, of compelling witnesses to give evidence before the authority.

ஆகையால் இதுவரைக்கும் ஐந்தாறு வழக்குகளே இந்தக் கமிஷன் முன் வந்திருக்கிறது என்றும், இந்தக் கமிஷனருக்கு 4,000 ரூபாய் சம்பளம் என்றும், நல்ல ஓய்வான வேலை என்றும் எனவே, மீண்டும் அதை அரசு பரிசீலித்து கமிஷனரை நியமிக்காமல் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மீண்டும் நான் கேட்டுக்கொள்வது,

The sooner the Act is repealed the better for the people of Tamil Nadu.

*திரு. ஓ. சோ. வேலுச்சாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக இந்த நீதி நிர்வாகம், சிறைச்சாலை சம்பந்தமான துறைகளிலே ஒருசில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இங்கே சிறைச்சாலையிலே நடந்த கொடுமைகளைப்பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னார்கள். குடியரசுத் தலைவருடைய ஆட்சிக்கு முன்பிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே நடந்த இரண்டொரு நிகழ்ச்சிகளை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். அந்த நிகழ்ச்சிகளின் மூலம் எப்படி நீதி நிர்வாகம், அதைச் சேர்ந்த துறைகளெல்லாம் ஸ்தம்பித்து இருந்தது, கெட்டுப் போய் இருந்தது என்பதைத்தான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திலே கயத்தாற்றிலே அப்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தவர் பெருந் தலைவராக இருந்தார். அங்கே ஆணையாளர், தன்னுடைய அறையிலே இருக்கும்பொழுது திராவிட முன்னேற்றக் கழகத்தவர் அரிவாளை வைத்து அவர் மீது வெட்டினார்கள். ஆனால் வெட்டு அவர் மீது விழாமல் அந்த நாற்காலியிலே பட்டு, அந்த ஆணையாளர் அலறித் துடித்து பக்கத்தில் இருக்கும் அந்த ரோட்டிற்கு வந்து பஸ் ஏறி மாவட்ட ஆட்சி

யாளரிடத்தில் முறையிட்டுக்கொண்டார். ஆனால், எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. உண்மையிலே வேறு ஒரு சாதாரண மனிதனாக இருந்திருந்தால், அந்தக் குற்றம் செய்தவனுக்கு அங்கே சட்ட ஆட்சி (ரூல் ஆஃப் லா) இருந்திருக்கும், அங்கே சட்டத்தினுடைய ஆட்சி இருந்திருக்கும். குறைந்தது, ஐ.பி.சி. 307-வது செக்ஷன்படி, அவர்கள் மீது குற்றப் பத்திரிகை சாட்டியிருப்பார்கள். ஆகவே, நீதி நிர்வாகம் என்றெல்லாம் இப்பொழுது பேசுகிறவர்கள், தமிழ்நாடே சிறைச்சாலையாகத் தானிருந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதிகாரிகளுக்கே பாதுகாப்பு இல்லையென்ற நிலைதானிருந்தது என்றால், சாதாரண மக்களுக்கு எப்படி பாதுகாப்பு கொடுத்திருக்கமுடியும், சாதாரண மக்கள் எப்படி புகார் கொடுப்பார்கள் என்பதையெல்லாம் யோசிக்க வேண்டும். ஆகவே, இதையெல்லாம் சிந்தனை செய்து பார்க்கவேண்டும்.

அடுத்து, கோயில்பட்டி நகராட்சியிலே ஒரு சுதந்திரா கட்சி உறுப்பினர் தலைவராக இருந்தார்—பூதலிங்கம் செட்டியார் என்பது அவர் பெயர். அவர் ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார். அந்தக் கூட்டம் முடிய மாலை 7 மணியாகியது. நாங்களெல்லாம் இருந்தோம். அந்தக் கருத்தைச் சொன்னார் என்பதற்காக, அந்த நகர்மன்ற கூட்டம் முடிந்து அவர் நகராட்சி மன்றத்திலேயிருந்து வீட்டிற்குச் செல்லும்போது, ரோட்டிலே தாக்கப்பட்டார். தாக்கப்பட்டு, இரத்தக் காயத்தோடு ஆஸ்பத்திரிக்கு வந்தார். இரத்தக் காயத்தோடு மறுபடியும் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தார். அப்பொழுதும் திராவிட முன்னேற்றக் கழகத்துக்காரர்கள் தான் தாக்கினார்கள். ஆனால், அவர்கள் பெயரைச் சொல்ல பயந்து கொண்டு அவர் கறுப்பு சிவப்பு கட்டம் போட்ட துண்டைப் போட்டவர் அடித்தார் என்று சொன்னார். ஆனால், அங்கே, போலீஸ் ஸ்டேஷனில், F.I.R.-ல் முதல் தகவல் அறிக்கையில், கட்டம் போட்ட துண்டினைப் போட்டவர் அடித்தார் என்றுதான் எழுதி இருந்தார்கள். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால், ஏதோ சிறைச்சாலையிலே கொடுமைகள் இருந்தால்—அவை மனிதாபிமானத்திற்கு விரோதமான கொடுமைகள் என்பதை யாரும் கண்டிக்காமல் இருக்கமுடியாது—தமிழ்நாடே சிறைச்சாலையாக இருந்தது என்பதைச் சுட்டிக்காட்டத்தான் சொல்லவிரும்புகிறேன். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையிலே சிவில் நிர்வாகமே ஸ்தம்பித்துப் போயிருந்தது. இதே நேரத்தில், இந்த நீதி நிர்வாகம், அழுகிய மாம்பழங்களுக்கு உள்ளே இருந்த நல்ல மாம்பழம் போல், தன்னிச்சையாக, சுயேச்சையாக செயல்பட்டு வருகிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால், உண்மையிலே அப்படி செயல்பட்டு வந்ததா என்பதை நான் அறிய விரும்புகிறேன். அதற்கு குற்றம் சாட்டுகிறேன் என்று பொருள் அல்ல.

இந்தத் துறை அமைச்சரவர்கள் உயர் நீதி மன்றத்திலே நீதிபதியாகப் பணி புரிந்தவர். ஆகவே, கீழேயிருந்து மேலே வரை எப்[illegible] இருந்தது என்பதைச் சரி செய்ய பார்க்கவேண்டும், ஆகவே, இது சுயேச்சையாகச் செயல்பட்டு வந்ததா கடந்த சில ஆண்டுகளாக என்பதைப் பார்க்க வேண்டும். சிவில் நிர்வாகமே ஸ்தம்பித்து விட்டது. ஆகவே, அழுகிய மாம்பழத்தில் இருந்த இந்த மாம்பழம் கூடப் பாழாகாமல் இருந்ததா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று பொறுப்புணர்ச்சியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த நீதி நிர்வாகம் எப்படி சாதாரண மனிதனுக்கு உகந்த வகையிலே நடவடிக்கை எடுக்க முடியும் என்பதைப் பார்க்கும் போது, இங்கே சொன்னார்கள், கேள்வி நேரத்திலே, திரு. வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்களும், திரு பகவதி அவர்களும் சேர்ந்த குழுவை அமர்த்தினார்கள் என்று. அந்தக் குழுவினுடைய குறிக்கோள் to take justice to the door step of the common-man என்று சொன்னார்கள். சாதாரண மனிதன் நீதியை அடைவதற்கு என்ன செய்வது? உதாரணமாக, 4 (1) (எ)-வில் புரஹிபிஷன் கேஸ் போடுகிறார்கள். 200 மில்லி, 100 மில்லி சாராயம் வைத்திருந்தால் கேஸ் போடுகிறார்கள். சாராயத்தைப் பரிசோதனைக்கு அனுப்புகிறார்கள், உண்மையிலேயே சாராயமா இல்லையா என்று அறிய. ஆனால், அதற்கு எடுத்துக் கொள்கிற காலம் 6 மாதத்திலிருந்து 9 மாதம் வரை. அந்த 9 மாத காலமும் சாதாரண மனிதன் கோர்ட்டுக்கு அலைந்து கொண்டிருக்கிறான். ஆகவே, நீதி அவனுக்குக் கிடைக்கவில்லை. உண்மையிலே, அவன் ஒப்புக் கொண்டிருந்தால், ரூ. 50, ரூ. 100 தண்டனை போட்டு அனுப்பி விடுகிறார்கள். ஆனால், அவன் தன்னை நிரபராதி என்று நிரூபிக்க கோர்ட்டுக்கு 9 மாத காலம் வரை செலவிடக்கூடிய தொகை, கஷ்டங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே, இரசாயன பரிசோதனைக்கு எடுக்கிற நேரத்தை குறைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.30]

அதுமட்டுமல்ல. Second Class Judicial Magistrate Courts அந்த நீதிமன்றங்களிலே—அந்த கோர்ட்டுகளிலே ஏராளமாக கேஸ்கள் இருக்கின்றன. 5 ஆயிரம், 10 ஆயிரம், 15 ஆயிரம் கேஸ்கள் ஆண்டொன்றுக்கு வந்திருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் Honorary First Class Magistrate கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இடையிலே இந்த கௌரவ மாஜிஸ்டிரேட்டுகள் பதவிகளை எடுத்து விட்டார்கள். ஆகவே மறுபடியும் அந்த honorary first class magistrate என்ற பதவிகளை நியமித்தால் வேலை பளு குறையும் என்று

சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். பொதுவாக, அதிகமாக கோர்ட்டுகள் இருக்கிறதா என்று சொல்ல முடியாது. கிராமப் புறங்களில் வசதிக்கு கோர்ட்டுகள் இல்லை. உதாரணமாக ஒட்டப் பிடாரத்திலே Second Class Judicial Magistrate Court வேண்டும். முன்னாலே ஒட்டப்பிடாரம் தனித் தாலூகாவாக இருந்தது. அப்போது தனிக் கோர்ட்டு இருந்தது. இப்போதும் தாலூகாவாக ஆக்கப்பட்டிருந்தும் கோர்ட்டு இல்லை. அந்தக் கோர்ட்டிலேதான் கப்பல் ஓட்டிய தமிழன் வ. உ. சிதம்பரம் வழக்கு நடத்தினார். தொழில் பார்த்தார். அந்த கப்பலோட்டிய தமிழன் வ. உ. சிதம்பரனாருடைய ஞாபகார்த்தமாகவாவது குறைந்தது Second Class Judicial Magistrate Court ஏற்படுத்த வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அடுத்தபடியாக இந்த அறிக்கையில் கொடுத்திருக்கிறார்கள் integration of First Class Magistrates என்று சொல்லுகிறபோது, நான் நினைக்கிறேன் 31-1-1976ல இந்த ஜி.ஓ. கவர்ன்மென்ட் ஆர்டர் போடப்பட்டிருக்கிறது. இன்னும் உயர்நீதி மன்றம் இதைச் செயல்படுத்தவில்லை. ஆகவே காலதாமதம் இல்லாமல் அந்த integration of First Class Magistrate செயல்படுத்த வேண்டுமென்று அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது). இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானையில் 4 மாதமாக கோர்ட்டில் நீதிபதி இல்லை. வழக்குகள் பெருமளவுக்கு இருக்கின்றன. பொதுமக்களுக்கு மிகவும் சங்கடங்கள் இருக்கின்றன. உடனடியாக இந்தக் குறையை நிவர்த்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இந்த இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளுக்கு சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. தாசில்தார் வாங்குகிற சம்பளத்தை விட குறைவாக இருக்கிறது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் வாங்கும் சம்பளத்தைவிட குறைவாக இருக்கிறது, ஆனால் வேலை பளு அதிகமாக இருக்கிறது. அவர்களுடைய வீட்டு வாடகையை சம்பளத்தில் கழித்துக் கொள்கிறார்கள். ஆனால், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் வீட்டுக்கு வாடகை இல்லை. ஆகவே வீட்டு வாடகையை நல்ல முறையிலே இலவசமாக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே சிறைக் கொடுமைகளைப் பற்றி சுருக்கமாக சில சொல்லியும் சிறைச்சாலைகளில் என்ன செய்யவேண்டுமென்று ஆலோசனை சொல்லியும், நீதி நிர்வாகம் சம்பந்தமாக என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைக் கூறி சுருக்கமாக முடித்துக் கொள்கிறேன். கடந்த 30 ஆண்டுகளாக சிறைக் கொடுமைகள் நடைபெறுகின்றன. ஆளும் கட்சிகள் போலீசையும், சிறையையும் பலாத்கார இயந்திரமாக உபயோகப்படுத்துகின்றன. அனைத்திந்திய அண்ணா தி.மு.க

அரசு குறையில்லாமல் வைக்கமுடியுமே தவிர, இந்த அரசு சிறைச் சாலையிலே என்ன கொடுமைகள் செய்தது என்று கூறுவதற்கு சாத்தியம் இல்லை. அடுத்த தடவை நான் பேசுகிறபோது இப்படி இல்லாமல் இருப்பது அவசியம். 30 ஆண்டுகளாக நடந்த கொடுமைகளைச் சொன்னால் காங்கிரஸ் ஆட்சி, தி.மு.க. ஆட்சி அண்மையில் நடந்த அவசர நிலைமையில் நடந்திருக்கிறது. சேலம் சிறையில் நாச்சியாபுரம் இராமநாதன் என்பவர், உண்ணாவிரதம் இருந்த காரணத்திற்காக, மாட்டுக் கொட்டத்தில் கஞ்சியை எடுத்து வாயில் நுழைத்து சாகடித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட சீர்கேடுகளை எடுத்துச் சொல்லவேண்டுமானால் நேரம் அதிகம் ஆகும். சிறைக் கொடுமைகளைத் தாங்கி இருக்கிற மார்க்சிஸ்ட் தோழர்களானாலும் சரி, நாங்களானாலும் சரி, என் உடம்பில் தழும்புகளைத் தாங்கி இருக்கிறோம். அவ்வளவு அடிகளை வாங்கி யிருக்கிறோம். கொடுமைகளைத் தாங்கியிருக்கிறோம். நீங்கள் கேள்விப்பட்டிருக்க முடியாது உண்ணாவிரதம் இருந்ததற்காக, பிரச்சார பலம் இல்லாத காரணத்தால்—ஒரு அம்சத்தை மட்டும் சொல்கிறேன். தண்ணீர் தொட்டிக்குள் மூச்சு போகிற அளவுக்கு அமிழ்த்துகிற மிகப் பெரிய கொடுமைகளுக்கு நாங்கள் ஆளாகி இருக்கிறோம். ஆகவே சிறைக் கொடுமைகளை சொல்லப் போனால் சொல்வது சாத்தியம் அல்ல. எழுதுவதற்கே புத்தகங்கள் போதாது. தி.மு.க. ஆட்சியில் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த சின்னக் கருப்பன், திருச்சி சிறைச் சாலையிலே கொடுமைகளின் காரணமாக மரணமடைந்தபோது நாங்கள் ஊர்வலம் நடத்தி னோம். நாகூரான் இறந்து இருக்கிறார். சிறையில் நடந்து இருக்கும் கொடுமைகளால். உணவு இல்லாமல் தவிக்கும் கொடுமைகள் நடந்து இருக்கின்றன. சிறைக் கொடுமைகள் எந்த ஆட்சியில் இல்லை, செய்ததில் சில மாற்றங்கள், வித்தியாசங் கள் இருக்கலாம், அவ்வளவுதான். மதுரையில் நடந்து இருக் கும் சிறைக் கொடுமைகள் பற்றி தொடர்ந்து விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டு இருக்கிறோம். அண்மையில் சென்னைச் சிறையில் நடந்த கொடுமைகள் மட்டுமல்ல, கடந்த கால ஆட்சி யில் என்ன நடந்தது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடைபெற்ற சிறைக் கொடுமைகள் என்ன என்பவைகளையும். விசாரிக்க வேண்டும் என்ற காரணத்தால்தான் கேட்டுக்கொள் கிறேன். ஏனென்றால் அகில இந்திய அண்ணா திராவிட முன் னேற்றக் கழக ஆட்சி அது சம்பந்தமாக அதிகாரிகளை விசாரிக்க வேண்டும் என்று சொல்வதோடு, பின்னர் நாம் அதன் மேல் என்ன செய்ய வேண்டும் என்பதையும் யோசித்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏனென்றால் இனி சிறைச்சாலையில் கொடுமைகள் நடக்கக் கூடாது. சுப்பு சொன்னார்கள். நான் அப்போது ஆர்ப்பரித்தேன். என்ன காரணம் என்றால், அவர்கள் அரசியல் கைதிகள் யாராக

இருந்தாலும் அவர்களை கொடுமை படுத்தக்கூடாது என்று சொன்னார்கள். அரசியல் கைதிகளாக தலைவர்களைக் கூட சிறையில் போடலாம். அப்படி வருகிற நேரத்தில் தலைவர்களைத் தனியாகவும், ஊழியர்களைத் தனியாகவும் வைக்கின்ற நிலைமை இருக்கிறது. தலைவருக்கு ''பி'' வகுப்பு என்றால், ஊழியர்களுக்கு ''சி'' வகுப்பு கொடுக்கிறார்கள். எத்தனையோ தலைவர்கள் தனிச் சிறை கொடுமைகள் கூட அனுபவித்து இருக்கிறார்கள். நான் கேட்டுக்கொள்வேன், தலைவன், ஊழியன் என்று வித்தியாசம் இல்லாமல், பணக்காரன், ஏழை என்று வித்தியாசம் இல்லாமல் அரசியல் கைதிகள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு தனி வகுப்பு ஒன்று ஏற்படுத்தித் தரவேண்டும் என்று அந்தத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சிறையில் என்ன நடந்து இருக்கிறது என்று சொன்னால், மதிப்பிற்குரிய பழைய அமைச்சர் மாதவன் காலத்தில்தான் தேர்தல் நேரத்தில் சிறைக் கைதிகளை தேர்தல் வேலை பார்க்கும் கேவலம் நடந்து இருக்கிறது. அதற்கு யார் யார் துணை நின்றார்கள், அந்த அதிகாரிகள் பெயர்கள் கூட சொல்ல முடியும். ஆகவே, இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்துகொண்டு இருக்கின்றன. சிறை சீர்திருத்தம் செய்யப்பட வேண்டும். அது மிகவும் அவசியம். அரசியல் கைதிகள் எவ்வளவு பெரிய தலைவர்களாக இருந்தாலும், ஊழியர்கள்ாக இருந்தாலும், அவர்களிடையே சாப்பாட்டில் வித்தியாசம் காட்டக்கூடாது. அரசியல் கைதிகள் எல்லோருக்கும் தனி மரியாதை ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வகையில் செய்வதற்கு இந்த புதிய அரசு கட்டாயம் பரிசீலிக்கும் என்று கருதுகிறேன்.

சிறைக்குள்ளே நடக்கிற நிகழ்ச்சிகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, அங்கே தான் ஊழல் மிகவும் அதிகம் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஊழல் என்று சொன்னால் சுப்பு அவர்கள் குறிப்பிட்டது போல், மருத்துவ மனையில் கைதிகளை மனிதர்களாக நடத்தப்படுவது கிடையாது. கைதிகளை மிருகங்களைப் போல் பார்க்கும் மனோபாவம் சிறையில் இருக்கிறது. அங்கே உள்ள மருந்துகளையெல்லாம் சொந்தக்காரர்களுக்கு அனுப்புவார்கள். அந்த மருந்துகளை சிறைக் கைதிகளுக்கு கொடுத்ததாக அந்த எம்.ஓ. பெயர் மட்டும் எழுதிக்கொண்டு விட்டு, மருந்துகளை வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். இதையெல்லாம் விசாரிக்க வேண்டும். அதற்கெல்லாம் தனியாக ஒரு குழு ஏற்பாடு செய்ய வேண்டும்.

ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உங்களில் பலருக்குத் தெரியும். சிறைக்குள்ளே பீடிதான் டாலர் மதிப்பு பெற்று இருக்கிறது. 16 பீடிக்கு 4 வேளை கறியை விற்றுவிடுவான். 8

அணு சாப்பாட்டிற்கு 8 பீடி வாங்குவான். இரண்டு உருளைக்
கிழங்கிற்கு 2 பீடி வாங்குவான். அங்கே இருக்கிற அதிகாரிகளும்
சிறைக் கைதிக்கு ஆரஞ்சு பழம் கொடுக்க வேண்டும் என்றால்
6 ஆரஞ்சு பழம் என்றால் 6 கட்டு பீடியைக் கொடுத்துவிட்டு
ஆரஞ்சு பழத்தை எடுத்துக்கொண்டு விடுவார்கள். பால் கொடுப்
பதற்கு பதிலாக பீடியைக் கொடுத்துவிடுவார்கள். இந்த நிலைமை
களை மாற்றுவதற்கு எங்களைப்போன்று விவரம் அறிந்த உறுப்பினர்
களைக்கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து இதனை ஆராய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஜென்மக் கைதிகளைப் பற்றி சொல்கிறபோது, ஜென்மக்
கைதிகள் என்றால் அவர்கள் எத்தனை ஆண்டுகள் என்பது நமக்குத்
தெரியும். ஏற்கனவே 20 ஆண்டு என்று சொன்னால், அது ஆராயப்
பட்டு அதன் பேரில் 14 ஆண்டுகள் என்று குறைக்கப்பட்டது.
இருந்தாலும் இத்தனை ஆண்டுகள் என்று வரையரை
இல்லை. ஜென்ம தண்டனை என்பது தான் தூக்குத் தண்டனையை
விட கொடுமையான தண்டனை. ஒரு இடத்தில் ஒருவர் 16 ஆண்டு
கள் 18 ஆண்டுகள் என்று இருந்தால் அது எப்படி இருக்கும்
என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவர்களுக்கு
சலுகை அளிப்பதற்கு ஒரு கமிட்டி வைத்து இருக்கிறோம். அதில்
போலீஸ் அதிகாரிகள், ஜெயில் அதிகாரிகள் தான் இருக்கிறார்கள்.
அந்தக் கமிட்டியில் மற்றவர்களையும் சேர்க்க வேண்டும். ஏனென்
றால் சிறை அதிகாரிகள் போலீஸ் அதிகாரிகள் தான் அந்தக் குழு
வில் இருக்கவேண்டுமானால், பெருவாரியாக அவர்கள் நீதி அளிக்க
மாட்டார்கள் ஆகவே அந்தக் குழுவில் மற்றவர்களும் இருக்க
வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அறிக்கையில்
அவர்களுக்கான தண்டனையை 3½ ஆண்டுகள் குறைத்து இருப்ப
தாக அறிவித்து இருக்கிறார்கள். அதற்கு நன்றி. (மணியடிக்கப்
பட்டது) ஒரு சில யோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறேன்.
விரைவில் முடித்து விடுகிறேன்.

[முற்பகல் 11.40]

இதை எச்சரிக்கத் தான் சொல்லுகிறேன். போலீஸ் மானி
யத்தின் மீது பேசலாம் என்றிருந்தேன். மதிப்பிற்குரிய கோதண்ட
ராமன், கலிய பெருமாள் ஆகிய நக்சலைட்டுகளை விடுதலை செய்ய
வேண்டும். அப்பு போன்ற நக்சலைட் * * * *
அவைகளைப் பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்
என்று கேட்டுக் கோள்கிறேன். போலீஸ் மானியத்தின் மீது மற்ற
வற்றை சொல்கிறேன். சிறை சம்பந்தமாக ஒரு கருத்தைச்
சொல்லி முடிக்கிறேன். சிறையிலிருந்து வெளியே வருகிறபோது
படி ஒன்றரை ரூபாய். . . . . . .

திரு. கா. சுப்பிரவேலு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள், * * * * * * என்று குறிப்பிட்டார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கூத்தகுடி திரு. ச. சண்முகம் : தலைவர் அவர்களே, * * * * * * * * * என்று தான் சொன்னேனே தவிர, எதிர்க்கட்சித் தலைவரோ, மற்ற உறுப்பினர்களோ கொன்றார்கள் என்று சொல்லவில்லை. திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியில் கொல்லப்பட்டார் என்பதை மறுக்க முடியாது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, * என்று சொல்கிறார். எந்த ஆதாரத்தை வைத்து சொல்கிறார்? திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது அப்படி புகார் ஒன்றும் வரவில்லை. புதிதாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். அதைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

கூத்தகுடி திரு, ச. சண்முகம் : தலைவரவர்களே, கேரளத்திலே ராஜனை காணவில்லை, **என்றுதான் குற்றச்சாட்டு சொல்லப்பட்டு, இன்று அமைச்சர் நீதிமன்றத்தின் முன் நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. அதே போன்று தமிழ்நாட்டில் ஒரு முக்கியமான நக்சலைட் தலைவர் காணவில்ல. அவர் * * * * * என்பது ஊர்ஜிதமாகியிருக்கிறது. எப்படிக் * * * * * * என்பது விசாரணையில் இருக்கிறது. யார் * * * * * * என்பது விசாரிக்கப்பட வேண்டியிருக்கிறது.

திரு .க. சுப்பு : பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே * * * * * * * எம். கல்யாணசுந்தரம் அவர்கள் இதுபற்றி பாராளுமன்றத்தில் கேள்வி கேட்டிருக்கிறார். சர்க்கார் தரப்பில் * * * * என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. மனித உரிமை கழகத்தின் மூலம் நடவடிக்கை எடுத்துப் பார்த்தோம். தகவல் இல்லை. அப்போது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றது என்பதற்காக, * * * * என்று சொல்வது ஆதாரமற்றது.

* மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-40—11-45-ல் சில பகுதிகள் அகற்றப்பெற்றது.

கூத்தகுடி திரு ச. சண்முகம் : தலைவர் அவர்களே, சீராளன் என்ற புனை பெயரில் அப்பு இருந்தார் என்று சொல்லப்பட்டது.

திரு க. சுப்பு : தலைவர் அவர்களே, சீராளன் 19 வயது பையன்.

கூத்தகுடி திரு. ச. சண்முகம் : அப்பு வேறு ஒரு பெயரில் இருந்ததாகச் சொல்லப்பட்டது.

திரு. கா. சுப்பிரவேலு : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் பேசும்போது சிட்டிபாபு * * என்று சொன்னதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று சொல்லி இருக்கின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் கூத்தகுடி சண்முகம் இந்த குற்றச்சாட்டை ஆதாரமில்லாமல் எப்படிச் சொல்லலாம்.

திரு, துரை முருகன் : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் கருத்தைச் சொல்ல உரிமை உண்டு என்றாலும், * * * * என்று சொல்லக்கூடாது. அப்பு காணாமல் போய்விட்டார் என்று சொல்லப்படுவது ஒன்று, அப்பு * * * என்று சொல்வது வேறொன்று. சுப்புவுக்கு ஒரு நீதி, கூத்தகுடி சண்முகத்திற்கு ஒரு நீதி என்று இந்த மன்றத்தில் இருக்காது என்று நினைக்கிறேன். ஆகவே * * * * என்ற வார்த்தையை அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. கே. பண்ணை சேதுராம்) : உறுப்பினர் திரு. சண்முகம் அவர்கள் * * * என்று சொன்ன வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன்.

கூத்தகுடி திரு. ச. சண்முகம் : தலைவர் அவர்களே, சிட்டிபாபு சிறையில் செய்யப்பட்ட கொடுமையால் சிரமப்பட்டு வெளியே வந்து இறந்தார் என்பதும் தெரியும். அவர் எப்படி இறந்தார், ஏன் இறந்தார் என்பதும் தெரியும். அது வேறு, இது வேறு.

* மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 11-40—11-44 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

(சில உறுப்பினர்கள் அவையில் எழுந்து நின்றனர்.)

தயவு செய்து பாயின்ட் ஆப் ஆர்டர், நான் பேசி முடித்த பிறகு கிளப்ப வேண்டும்.

<u>மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் :</u> சிட்டிபாபு பற்றிய விஷயம் கமிஷன் விசாரணையில் இருப்பதால், அதைப் பற்றி உறுப்பினர்கள் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>கூத்தக்குடி திரு. ச. சண்முகம் :</u> தவறாக இருந்தால் திருத்திக்கொள்கிறேன். சிட்டிபாபு மரணம்..............

The Hon. THIRU K. NARAYANASWAMY MUDALIYAR: The manner of the death of Thiru Chittibabu is a thing under judicial investigation and determination. It is **sub-judice**. Any kind of guess or surmise on the manner of death should be expunged from the records.

<u>திரு. க. சுப்பு :</u> 'மானர் ஆப் டெத்', அது சப் ஜுடீஸ். சிட்டிபாபு இறந்த பிறகு பிணம் வெளியே கொடுக்கப்பட்டது. இது சப் ஜுடிஸ் அல்ல.

<u>கூத்தகுடி திரு. ச. சண்முகம்</u> சிட்டிபாபுவின் மரணத்தைப் பற்றி முதலில் நான் கிளப்பவில்லை. அந்தக் கட்சிஉறுப்பினர்தான் முதலில் அதைக் கிளப்பினர்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (பண்ணை திரு.கே. சேதுராம்) :</u> பத்து நிமிடங்களாகிவிட்டன.

<u>திரு கா. சுப்பிரவேலு :</u> நான் பாய்ன்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் செய்யும்போது, ~~மாண்புமிகு உறுப்பினர் திரு.~~ கூத்தக்குடி சண்முகம் அவர்கள், தம்முடைய பேச்சு முடிந்த பிறகு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம் என்று சொன்னர்கள்.

A member can raise a point of order at any time and any number of times.

<u>கூத்தகுடி திரு. ச. சண்முகம் :</u> எவ்வளவு தடவை வேண்டுமானலும் எழுப்புங்கள், எனக்கு ஆட்சேபணையில்லை.

கடைசியாக நான் கூற விரும்புவது என்னவென்றால், மிஸா காலத்தில் மட்டுமல்ல, அவசர காலம் இருந்தபோது மட்டுமல்ல, ஏற்கனவே இந்த ஆட்சி வருவதற்கு முன்னல் திராவிட முன்

னேற்றக் கழக ஆட்சியில் நடந்த கொடுமைகளையும் விசாரிக்க வேண்டும் என்பது என் வேண்டுகோள். அது அவசியம் என்று கருதுகிறேன். அடுத்தபடியாக.........................

*<u>திரு. ப. உ. சண்முகம் :</u> ஒரு விளக்கம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். மாதவன் அவர்கள் அமைச்சராக இருந்த போது ஆயுள் கைதிகளை தேர்தல் காலங்களில் விடுதலை செய்து தேர்தல் வேலைகளில் ஈடுபடச் செய்தார்கள் என்று குற்றச்சாட்டு சாட்டினர்கள், அது உண்மையா என்று விசாரிக்க வேண்டும் என்று சொன்னர்கள். தீர விசாரியுங்கள், விசாரிக்கவேண்டும் என்று நானும் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பாலதண்டாயுதம் எப்படி விடுதலை செய்யப் பட்டார், யாரால் விடுதலை செய்யப்பட்டார், எதற்காக விடுதலை செய்யப்பட்டார் என்பதையும் சேர்த்து விசாரணை வைத்துக் கொள்ள எனக்கு ஆட்சேபணையில்லை. அதையும் சேர்த்து விசாரிக்கட்டும்.

<u>கூத்தகுடி திரு. ச. சண்முகம் :</u> நாங்கள் யாரையும் கெஞ்சி விடுதலை அடைந்த பாரம்பரியமே கிடையாது.(ஆரவாரம்.)

அடுத்தபடியாக, நீதி சம்பந்தமாக வரும்போது, இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றங்கள் இராமநாதபுரம் மாவட்டத்தில் இல்லை. அவை மதுரையில் இருக்கின்றன. இராமநாதபுரம் மாவட்ட நீதிமன்றங்களை இராமநாதபுரம் மாவட்டத்தில்—எந்த இடத்தில் வைத்தாலும் ஆட்சேபனை இல்லை—வைப்பதற்கு கட்டாயம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று வற்புறுத்தி அமர்கிறேன். வணக்கம்.

*<u>திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் :</u> தலைவர் அவர்களே, இந்த மானியத்தின்மீது மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையைத் தெளிவு படுத்த நிற்கிறேன். ஏற்கனவே மிஸா கைதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள் பற்றி பல நண்பர்கள் இங்கே பேசினலும் குறிப்பாக சென்னை மத்திய சிறைச் சாலையில் நடைபெற்ற கொடுமைகள் பற்றி நீதிபதி விசாரணை நடப்பதினல் அதில் அதிகமாகப் பேச நான் விரும்பவில்லை. அந்த விசாரணைமட்டும் போதாது. அப்போது அந்த நேரத்தில் பாளையங்கோட்டை, மதுரை, கோவை, திருச்சி போன்றயிடங்களில் மிஸா கைதிகளுக்கு கொடுக்கப்படவேண்டிய சலுகைகள் பல கொடுக்கப்படவில்லை என்பது மட்டுமல்ல, மிஸா கைதிகளுக்கு விரிப்பதற்கு படுக்கைகள், கட்டில்கள் கொடுக்கப்பட

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

வில்லை. அந்த அளவிற்கு மிஸா கைதிகள் ராஷ்ட்ரபதி ஆட்சிக் காலத்தில் கொடுமைப்படுத்தப்பட்டிருக்கிறார்கள். குடும்ப அலவன்ஸ் பலருக்கு கொடுக்கப்படவில்லை அதைப்பற்றியும் விசாரிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல. ஜெயில் சீர்திருத்தங்கள் பற்றி தொடர்ச்சியாக நாம் பேசிக்கொண்டு வருகிறோமே தவிர போதுமான அளவிற்கு சீர்திருத்தங்கள் இன்னும் செய்யப்பட வில்லை. ரூ. 2-45 தண்டனைக் கைதிகளுக்குக் கொடுக்கப்படுவ தாகச் சொல்லப்படுகிறது. ஆனால் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் சொன்னது போல் அந்தப் பணம் முறையாக— சாமான்கள் கொடுக்கப்பட்டு சமைத்துக் கொடுக்கப்படவில்லை. பல்வேறு ஊழல்கள் நடைபெறுகின்றன ஜெயில்களில் என்பதை நான் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கி றேன் திரு. சண்முகம் அவர்கள் சொல்லும்போது, பீடிக்குப் பதிலாக மற்றவை எல்லாம் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள்

[முற்பகல் 11-50]

அதற்குக் காரணம் ஜெயிலில் பீடி கிடைப்பதில்லை இப்போதுதான், தண்டனை கைதிகளுக்கு மட்டும் இரண்டு பீடி கள் வீதம் கொடுக்கிறார்கள். ஒரு மனிதனுக்கு இரண்டு பீடி என்பது போதாது. அதனால் தான் பீடி கொடுத்தால் அதற்குப் பதிலாக எந்த சாமான்களையும் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலைமை இருந்து கொண்டிருக்கிறது என்பதை உங்கள் கவனத் திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சாப்பாடு மட்டும் கொடுப் பது போதாது. பீடி கொடுப்பதற்கும் நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்த மாமன்றத்தில் கேட்டுக்கொள்கி றேன்.

அதோடு, சிறைச் சாலையில் வைத்திய வசதிகளைப் பொறுத்த வரையில் போதாது நம்பகமான கைதிகள் ஆஸ்பத்திரி யில் வராந்தாவில் படுத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்று சொல்லப்பட்டிருப்பது அவ்வளவு உண்மையல்ல. என்றால் அதை நம்ப முடியாது. அவசர கால நெருக்கடி காலத்தில் ஏராளமான அரசியல் கைதிகள் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். ராஷ்டிரபதி ஆட்சி காலத்தில் குறிப்பாக பாளையங்கோட்டை சிறைச் சாலையில் 400 பேர் அக்காமடேஷன் உள்ள அந்த இடத் தில் சுமார் 4,000 பேர்களை ஆடுமாடுகளைப் போல் அடைத்து வைத்திருந்தார்கள். இவ்விதம் அடைத்து வைத்து இருப்பது சரியல்ல, குறைந்த பட்சம் அரசியல் கைதிகளையாவது திறந்த வெளியில் வைத்திருங்கள் என்று கேட்டதற்கு, எல்லோரையும் பலாத்காரமாக லாக் அப் செய்து வைக்கப்பட்ட கொடுமை

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்]

படுத்தப்பட்டதை நான் உங்கள் கவனத்திற்கு கொண்டுவர
விரும்புகிறேன். அரசியல் கைதிகளை எல்லாம் திறந்த வெளி
யில் விட்டு வைத்திருப்பதற்கு அப்போதைய சர்க்கார் தயாராக
இருக்கவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். எல்லா சிறை
களிலும் திறந்த வெளி சிறையாக கொண்டுவர வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீதி நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், சிவில்
கோர்ட்டுகளில் பல வருடங்கள் கேஸ்கள் அப்படியே தூங்கிக்
கொண்டிருக்கின்றன. கிரிமினல் வழக்குகள் கூடுதலாக இருக்
கிறது என்று கோவையிலிருந்து உடுமலைப்பேட்டைக்கும், பொள்
ளாச்சிக்கும் மாற்றப்பட்டது. இதன் காரணமாக அங்குள்ள
மக்கள் 30, 40 மைல்கள் பல தடவை போக வேண்டும், அங்கு
வக்கில்கள் வைத்து கேஸ் நடத்த வேண்டும். இத்தகைய பல சிரமங்
கள் மக்களுக்கு ஏற்படுகின்றன. ஆகவே கோர்ட்டுகள் எங்
கெங்கு இருக்கின்றதோ அந்தந்த பகுதியிலுள்ள கேஸ்களை எடுத்து
சீக்கிரமாக பைசல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கி
றேன்.

அடுத்தபடியாக லேபர் கோர்ட்டு பற்றி சொல்லப்பட்டது.
இப்போது மூன்று இடத்தில் தான் இருக்கிறது. சென்னை,
மதுரை, கோவை என்ற இம்மூன்று இடங்களில் மட்டும் இருப்
பது போதாது, இரண்டு மாவட்டங்களுக்கு ஒரு கோர்ட்டு
என்ற முறையில் அதாவது மதுரை, ராமநாதபுரம் மாவட்டங்
களுக்கு மதுரையிலும், திருநெல்வேலி, குமரி மாவட்டத்திற்குச்
சேர்ந்து திருநெல்வேலியிலும் இப்படி இரண்டு மாவட்டங்
களுக்கு ஒரு கோர்ட்டு விதம் பிரித்து அமைக்கவேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன். மேலும் அதிகப்படியாக கேஸ்கள்
இருக்கின்ற இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் அடிஷனல்
கோர்ட்டு ஏற்படுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

ட்ரிப்யூனலை எடுத்துக்கொண்டால் இப்போது சென்னையில்
மட்டும்தான் இருக்கிறது. தொழிற்சாலை சம்பந்தப்பட்ட கேஸ்
களை இன்னும் விரைவாக விசாரித்து முடிவுகள் எடுப்பதற்காக
கோவை, சென்னை, மதுரை இம்மூன்று இடங்களிலும் ட்ரிப்யூனலை
நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு அடிஷனல்
(ஃபர்ஸ்டு கிளாஸ்) முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட் கோர்ட்டு
வேண்டும். சுற்றியுள்ள பல இடங்களிலிருந்தும் இந்த கோர்ட்டுக்கு
மக்கள் வரவேண்டியிருக்கிறது. முக்கியமாக கிரிமினல் கேஸ்
களில் ஜாமீனில் எடுக்கவேண்டுமென்றால் போலீஸ் அபிப்பிராயம்
கேட்பதற்கு மிக காலதாமதம் ஆகிறது. இதற்காக பல

காலம் நடக்க வேண்டும், இந்த நிலையை மாற்றி, கிரிமினல் வழக்குகள் எல்லாம் கால தாமதம் இல்லாமல் விரைவில் முடிப்பதற்கு வேண்டிய வழி வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : பெருமதிப்பிற்குரிய துணைத் தலைவர் அவர்களே, நீதித் துறை மான்யக் கோரிக்கையின் மீது என்னை பேச அழைத்ததற்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே பேசியவர்கள் அனைவரும் எந்தெந்த முறையில் நீதி மன்றங்களில் நீதி கிடைப்பதற்கு காலதாமதம் ஆகிறது, அதற்கு என்னென்ன முறைகளை கடைப்பிடிக்கவேண்டும் என்பதைப்பற்றி எடுத்துச் சொன்னார்கள். நீதித்துறையை பார்க்கும்பொழுது, சிவில் வழக்குகளால் அரசாங்கத்திற்கு அதிகமாக வருமானம் இல்லாவிட்டாலும், கிரிமினல் வழக்குகள் மூலம் அதன் அபராதத் தொகை மூலம் அதிக வருமானம் கிடைக்கலாம். அப்படி கிடைக்கின்ற வருமானத்தின் மூலம் நீதித் துறையில் உள்ள குறைகளைப் போக்கி, கால தாமதமின்றி வழக்குகளை விசாரிப்பதற்கும், மக்களுக்கு நீதி கிடைப்பதற்கும் இந்த அரசு ஆவன செய்யும் என்று நம்புகிறேன். Justice delayed is Justice denied என்று சொல்வார்கள். அதாவது, நீதி ஒருவருக்கு தாமதமாகக் கிடைப்பது, நீதி கிடைக்காமலேயே வழி செய்வதற்கு ஒன்றாகும். ஆகவே, நம்முடைய தமிழ் மாநிலத்தில் ஒரே ஒரு உயர் நீதி மன்றம் இருந்து, மக்களுடைய தேவைகளை செய்து கொண்டிருந்தாலும், காலத்தையொட்டி இம்மாதிரியான உயர்நீதிமன்றம் ஒன்றை மதுரையிலே நிறுவ வேண்டுமென்று பல்வேறு கட்சிகளும் பல்வேறுஅரசுகள் காலத்தில் வற்புறுத்தி வந்திருக்கிறார்கள். அப்படி மதுரையிலே ஒரு உயர்நீதி மன்றம் நிறுவுவதன் காரணமாக தென் மாவட்டங்களில் ஏற்படும் வழக்குகள் அனைத்தும் துரிதமாகவும், மக்களுக்கு மிகவும் எளிதாகவும் கிடைக்கச் செய்வதற்கு நாம் வழி கோலுவதாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப் போனால், சென்னை உயர் நீதி மன்றத்தில் நீதித் துறையில் நீதிபதிகள் இன்னும் 7 பேர்கள் இடம் பூர்த்தி செய்யப்படாமல் காலியாகவே இருக்கிறது. எனவே இந்த 7 நீதிபதிகளையும் துரிதமாக இந்த அரசு மத்திய அரசுடன் ஆலோசனை செய்து, நல்லதொரு நீதிபதிகளை உடனடியாக நியமனம் செய்வதன் மூலமாக, துரிதமாகவும், ஏழை எளிய மக்களுடைய வழக்குகள் துரிதமாக நடைபெறுவதற்கும் நாம் வழிகோலியவர்கள் ஆவோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

உயர்நீதி மன்ற நீதிபதிகள் குறிப்பாக வழக்கறிஞர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற நேரத்தில், உயர்நீதி மன்றத்தில் அரசாங்க வக்கீல்களாகளையோ, 'இல்லாவிட்டால் அட்வகேட் ஜெனரலையோதான் தேர்ந்தெடுக்கிறார்கள். இன்னும், ஒரு மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றத்திலே பணிபுரியும் மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாக உள்ளவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால், மாவட்டங்களில் இந்த நீதி மன்றங்களிலே வாதாடுகின்ற வழக்கறிஞர்கள் நீதிபதியாக வருவதற்கு வழியில்லை. மாவட்ட முன்சீப்பாக பணியாற்றி, பின்னர் பதவி உயர்வு காரணமாக மாவட்ட செஷன்ஸ் நீதிபதியாக உள்ளவர் உயர்நீதி மன்ற நீதிபதியாக நியமிக்கப்படுகின்றபோது, நாம் ஏன் இந்த மாவட்ட முன்சிப் நீதிமன்றங்களிலும், மாவட்ட செஷன்ஸ் நீதிமன்றங்களிலும் வழக்காடுகின்ற வழக்கறிஞர்களையும் நேரடியாக உயர்நீதி மன்றங்களில் நீதிபதிகளாக நியமிக்கக் கூடாது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாவட்ட நீதிபதிகளாக இருப்பவர்களும், உயர்நீதி மன்ற அனுபவம் இல்லாதவர்கள்தான். குறிப்பாக, 'ரிட் ஜுரிஸ்டிக்ஷன்' அவர்களுக்கும் குறைவுதான். இதுபோலவே மாவட்ட நீதிமன்றங்களிலே வழக்காடும் வழக்கறிஞர்களுக்கும் குறைவுதான். எப்படி மாவட்ட நீதிபதிகள் எந்தச் சூழ்நிலையில் தங்கள் அறிவைப் பக்குவப்படுத்திக் கொள்கிறார்களோ, அந்தப் போக்கிலே இந்த மாவட்ட வழக்கறிஞர்களும் பெற்றுக் கொள்ளலாம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

கடந்த காலமாக, சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் கார்களில் செல்கையில், அவர்களுடைய கார்களில் உயர்நீதி மன்றக் கொடி ஒன்று பறந்து கொண்டிருக்கும். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில், உயர்நீதி மன்ற பிரதம நீதிபதி ஒருவருக்கு மட்டும் இந்தக் கொடியைக் கொடுத்துவிட்டு, அவர் செல்கின்ற காரில் மட்டும் இந்த கொடி பறந்து கொண்டிருக்கும், மற்ற நீதிபதிகளுக்கு இந்தக் கொடிகள் கூடாது என்று பின்வாங்கப்பட்டது. எனவே, உயர்நீதி மன்ற நீதிபதிகள் அனைவரது கார்களிலேயும், அவர்கள் செல்லும்போது இந்தக் கொடியைப் பொருத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் வற்புறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் என்ன வென்றால், இப்போது 4, 5 நீதிபதிகள் ஒன்றாகச் சேர்ந்து உயர்நீதி மன்றத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் வாங்குகின்ற சம்பளம் அவர்களில் ஒருவரே தனியாக வாகனம் வைத்துக்கொள்ள முடிவதில்லை, அப்படி 4, 5 பேர்கள் வருகின்ற நேரத்தில், திடீரென்று மவுண்ட் ரோடிலே

அல்லது நம்முடைய நெடுஞ்சாலைகளிலே அவர்கள் நிறுத்தப்படுகிறார்கள். அப்படி நிறுத்தப்படுகின்ற நேரத்தில், சென்ற மாதம் நம்முடைய உயர்நீதி மன்ற நீதிபதிகள் நால்வர் ஒருவரோடு ஒருவர் இடித்துக்கொண்டு, காரிலே மோதிவிட்டார்கள். இதை என்னிடம் கூறுகின்ற நேரத்தில், நான் இந்த அரசை அவர்களுக்குத் தனியாக ஒரு கொடியை, இதற்கு முன்னாலே இருப்பதைப்போல், அவர்களும் கௌரவமாகச் செல்ல ஒவ்வொரு உயர்நீதி மன்ற நீதிபதியின் காரிலேயும் ஒரு கொடி பொருத்துவதற்கு உத்தரவிடுமாறு இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

[நண்பகல் 12.00]

இதற்கு முன்னால், நம்முடைய உயர்நீதி மன்ற நடவடிக்கைகள் தமிழில் நடக்கவில்லை. ஆனால் அரசு தமிழிலே நீதிபதிகள் தங்களுடைய தீர்ப்புகளை வழங்கலாம் என்று ஆணை பிறப்பித்தது. அவ்வாறு ஆணை பிறப்பித்த பிறகு மொழிபெயர்க்கப்பட்ட சட்டங்கள் மூன்றே மூன்றுதான். குற்ற நடைமுறைச் சட்டம் அதாவது—

Criminal Procedure Code, Food Adulteration Act., Customs Act, Foreign Exchange Act.

இப்படி பல்வேறு சட்டங்கள் தமிழிலே மொழி பெயர்க்கப்படாமல் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் நீதிபதிகள் எப்படி தமிழிலே தீர்ப்புகள் வழங்க முடியும்? இப்படி தமிழிலே வழங்க முடியாத நிலையைக் கூறினால் தமிழுக்கு இழுக்காகப் பேசுவதாகக் கூறக்கூடும். ஆகவே, முக்கியமான சட்டங்களைத் துரிதமாக தமிழிலே மொழிப் பெயர்த்தால் நீதிபதிகள் தமிழிலே தீர்ப்பு வழங்க இலகுவாக இருக்கும். கீழ் உள்ள நீதிமன்றங்களில் உள்ள வழக்குகள் அப்பீல் செய்கிறபோது உயர்நீதி மன்றங்களுக்கும், உச்ச நீதிமன்றங்களுக்கும் செல்லுகின்றன. அப்படிச் செல்லும்போது இங்கே தமிழில் சட்டங்கள் நல்ல முறையில் மொழி பெயர்க்கப்படாமல் இருக்கும் காரணத்தால் ஏழை எளிய மக்கள் பாதிக்கப்படக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஆகவே, நம்முடைய அரசு ஸ்பெஷல் ஆக்ட்டை விசேஷ சட்டங்கள் அனைத்தையும் உடனே தமிழில் மொழி பெயர்க்கவேண்டுமென்று பணிவோடு கூறிக்கொள்கிறேன்.

சிறை மானியத்தைப் பற்றி பேசுகிற நேரத்தில் நண்பர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். 'கிளாசிபிகேஷன் ஆப் பிரிசினர்ஸ்' என்று சொல்லும்போது சமுதாயத்திலே நல்ல நிலையில் வாழக்கூடியவர்கள் சிறைக்கு வரும் நேரத்தில் முதல் வகுப்பு கொடுக்கிறார்கள். நான் பத்து லட்ச ரூபாய்க்குச்

சொந்தக்காரன், வருமான வரி கட்டுபவன், ஆகவே, முதல் வகுப்பு வழங்க வேண்டும் என்று கேட்பார்கள். நம்முடைய சிறை விதிகளில்—சிறைத் துறை மான்யுவலில் முதலாவது வகுப்பு சமுதாயத்தில் உயர்ந்த நிலையில் இருப்பவர்கள், வருமான வரி கட்டுபவர்கள், இல்லாவிட்டால் சொத்துக்காரன் என்ற நிரூ பணத்தைக் கொடுக்கிறவர்கள் ஆகியோருக்கு முதல் வகுப்பு கொடுக்கிறார்கள். அப்படி வசதி படைத்தவர்களுக்கு முதல் வகுப்பு கொடுக்கிற நேரத்தில் அரசு அப்படி தண்டனை பெற்றவர்களுக்காக அபராதம் அரசே கட்டுவது போன்ற நிலைதான் இருக்கிறது. ஆகவே, பணக்காரர்கள், வருமான வரி கட்டுபவர்கள் குற்றம் செய்து சிறை தண்டனை பெற்றால் அவர்களுக்கு முதல் வகுப்பு கொடுத்து அதனால் அவர்களுக்காகச் செலவாகக்கூடிய தொகையை அரசாங்கம் ஏன் திரும்ப வசூலிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன். உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் ஒரு பெரிய லட்சாதிபதி கொலை வழக்கிலோ, கள்ள நோட்டு வழக்கிலோ நீதிபதியால் பத்தாண்டு காலம் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டு சிறைக்கு அனுப்பப்பட்டால் அவர்களுக்கு முதல் வகுப்பு கொடுக்கும்போது அவர்களுக்கு செலவழிக்கிற செலவுத் தொகையை அவர்களிடமிருந்து வசூலிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

நேற்று முன்தினம் Legal Aid to the poor ஏழை எளிய மக்களுக்கு இலவச சட்ட உதவி பற்றிச் சொன்னார்கள். இதற்குமுன்னால் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் அதற்காக Legal Aid Board ஒன்றை நியமித்தார்கள். அதிலுள்ளவர்கள் இப்போது ஏழை எளிய மக்களுக்குச் சட்ட உதவி செய்கிறார்களா? எந்தச் சூழ்நிலையில் அந்த போர்டு பயன்படுகிறது என்பதை அரசு ஆராயவேண்டும். எந்தச் சூழ்நிலையிலும் எந்த உதவியும் ஏழை எளியவர்களுக்குச் செய்ய முடியாத நிலைமையில் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே அதை மாற்றியமைத்து ஏழை எளிய மக்களுக்கு உடனே இலவசச் சட்ட உதவி செய்ய அரசு ஆவன செய்யவேண்டும்.

சிறைகளிலே இருக்கிறவர்கள் அடிக்கப்படுகிறார்கள், கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்பதையெல்லாம் உறுப்பினர்கள் இங்கே சொன்னார்கள். சிறைத் துறையிலே அதிகாரிகளாக வருகிறவர்கள் பி.ஏ. பட்டம் பெற்றுவிட்டு, எம்.ஏ. பட்டம் பெற்றுவிட்டு அதிகாரிகளாக நியமனம் பெற்றுவிடுகிறார்கள். அவர்களுக்குத் சிறை துறையைப்பற்றிய அனுபவம் இல்லாத காரணத்தால் எடுத்தவுடனேயே நியமிக்கப்பட்டு விடுகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுகின்றன. குறிப்பாக சிறைத் துறைக்கு அதிகாரிகளாக நியமிக்கப்பட

[திரு பி. எச். பாண்டியன்] 1977 [ஆகஸ்டு 16

வேண்டியவர்கள் கிரிமினலஜி, பீனலஜி என்று சொல்வார்கள், இந்த இரண்டு துறைகளிலேயும் கல்வியறிவு பெற்றவர்களாக இருந்தால் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாது. அந்தத் துறைகளிலே எம்.ஏ. பட்டப்படிப்பு கோர்ஸ் ஒன்றை மருத்துவக் கல்லூரியிலே ஏற்படுத்தினர்கள். எம்.ஏ. கிரிமினலஜி இன் போரான்சிக் சயன்ஸ் என்று அதிலே பட்டம் பெற்றவர்களை சிறைத் துறையிலேயும் போலீஸ் துறையிலேயும் நியமிக்கவில்லை. இப்படிப்பட்ட கல்வி அறிவு பெற்றவர்கள் நியமிக்கப்பட்டால் தான அவர்கள் எந்த நிலையிலேயும் கைதிகளின் தேவைகளுக்கேற்ப அவர்களை அணுகுவதற்கும் ஆற்றல் பெற்றவர்களாக இருப்பார்கள். இதற்கு முன்னலே இருந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே எம்.ஏ. பட்டப்படிப்பு அளவில் அப்படிப்பட்ட கோர்ஸ் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலே அந்த சிறைத் துறைக்கு அமைச்சராக அப்போது இருந்த மாதவன் அவர்கள் அந்தத் துறையிலே கல்வி அறிவு பெற்றவர்கள் சிறைத் துறையிலே முதலிடம் கொடுத்து நியமிக்கப்படுவார்கள் என்று உறுதியளித்தார்கள். அதற்குப் பின்னலே 8 பேர்கள்.............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடியுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒவ்வொரு நிமிடம் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறீர்கள். மற்றவர்கள் பேசவேண்டாமா? சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. பி. எச். பாண்டியன் : அந்தத் துறையிலே எம்.ஏ. பட்டம் பெற்றவர்கள் போலீஸ் துறையிலோ சிறைத் துறையிலோ இடம்பெறவில்லை என்ற காரணத்தினலே இண்டியன் சொசைடி ஆப் கிரிமினலஜி என்று ஒன்று ஆரம்பித்தார்கள். இதற்கு முன்னலே தமிழகத்தை ஆண்டுகொண்டிருந்த முதலமைச்சர் திரு கருணநிதி அவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வந்த போது அந்தத் துறையில் கல்வியறிவு பெற்றவர்களுக்கு சிறைத் துறையிலேயும், போலீஸ் துறையிலேயும் முதலிடம் கொடுக்கப் போவதாக உறுதிமொழியளித்தார்கள். ஆனல் அந்த உறுதி மொழி அளித்து மறு ஆண்டிலே போலீஸ் சூப்பிரன்டென்டெண்டுக்கு தேர்வு நடைபெற்றபோது நாங்கள் எல்லாம் போனபோது அங்கே இடம் பெற்றவர் ஒரே ஒருவர்தான் அவர்களுடைய முன்னள் உதவியாளராக இருந்த வைத்தியலிங்கத்தின் மைத்துனர்தான். நானும் அங்கே சென்றிருந்தேன் நான்

1977 ஆகஸ்டு 16] [திரு பி. எச். பாண்டியன்]

எப்படியோ சட்டசபைக்கு வந்துவிட்டேன். அதிலே உள்ள இருபத்தைந்து பேர்களுக்கு அரசு எந்தவிதமான வேலைவாய்ப்பும் கொடுக்கவில்லை. சிறைத் துறையை வலுப்படுத்துவதற்கும் அந்தத் துறையைச் சீர்ப்படுத்துவதற்கும் அந்தத் துறையிலே கல்வியறிவு பெற்றவர்களை பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. கா. அப்புனு கவுண்டர் : பேரவை உதவித் தலைவர் அவர்களே, இன்று நீதித் துறையிலே பொது ம்க்களுக்கு நீதி வழங்கப்படுவதில் ஏற்படுகிற சில சங்கடங்களை எடுத்துச் சொல்ல ஜனதா கட்சியின் சார்பாக முன்வந்து இருக்கிறேன். முதலாவதாக கீழ் மட்டத்திலே இருக்கக்கூடியவைகள் இரண்டாவது குற்ற இயல் மாஜிஸ்டிரேட் கோர்ட்கள்தான். அங்கே நீதி வழங்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இன்னும் 24 கோர்ட்களிலே மாஜிஸ்டிரேட்களை அப்பாய்ன்ட்மெண்ட் செய்யப்படாத நிலை இருக்கிறது, 2, 3 மாதங்களாக அப்பாய்ன்ட்மெண்ட் செய்யப்படவில்லை என்ற நிலைமை இருக்கிறது, இப்படி இருந்தால் எப்படி நீதி வழங்குவது விரைவாக நடைபெறமுடியும் என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும்.

[பிற்பகல் 12.10]

இரண்டாவதாக, அப்பாய்ன்ட்மெண்ட் செய்யும் மாஜிஸ்ட்ரேட்டுகளைப் பொறுத்தவரையில், வேறு துறையிலே உள்ளவர்கள் சட்டத் துறையிலே பாஸ் செய்திருந்தால் அவர்களை கோர்ட் மாஜிஸ்ட்ரேட்டுகளாகப் போடுகிருர்கள். அவர்கள் நடைமுறைச் சட்டத்தில் அனுபவம் பெற்று கேஸ் நடத்தித் தீர்ப்பு சொல்வதற்கு ரொம்ப காலதாமதம் ஆகிறது. ஆகவே முன்பிருந்த முறையைப்போலவே வழக்கறிஞர் சங்கத்திலிருந்து, அதாவது பார்களிலிருந்து ஏன் அவர்களை மாஜிஸ்ட்ரேட்டுகளாக அப்பாயின்மெண்ட் செய்யக்கூடாது என்பதை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இப்பொழுது இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டைப் பற்றி எடுத்துக்கொண்டால், எங்கள் தர்மபுரி கோர்ட்டுக்கு ஒரு வருஷத்தில் 10,000 கேஸ்களுக்கு மேல் ஒரே மாஜிஸ்ட்ரேட் டிஸ்போஸ் செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. எனவே இன்னொரு கோர்ட் தேவை என்று பல தடவைகள் அரசுக்கும் ஹைகோர்ட்டுக்கும் தெரிவித்தும் வேறொரு கோர்ட் ஏற்படாமல் இருக்கிறது. இந்தக் குறையை சட்ட அமைச்சரவர்கள் நிவர்த்தி செய்வார்கள் என்று நான் நம்புகிறேன்.

[திரு கா. அப்புனு கவுண்டர்] [1977 ஆகஸ்டு 16

மேலும், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே முதல் பக்கத்தில், ''உயர்நீதி மன்றம் பரிந்துரைப்பதன் பேரில், அவசியமானபோதெல்லாம், புதிய கூடுதல் நீதிமன்றங்கள் அமையப்பெற அனுமதிப்பதன் மூலமாக, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படுவதில் ஏற்படும் காலதாமதத்தை நீக்கும் பயனுள்ள பணியை அரசு தனது தரப்பில் செய்யக்கூடும்'' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இது செயல்முறையில் அமுல்படுத்தப்படவில்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன். தர்மபுரி மாவட்டத்திற்கு ஒரேயொரு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தான் இருக்கிறது. அதுவும் கிருஷ்ணகிரியில்தான் இருக்கிறது. தர்மபுரி மாவட்டம் ஏற்பட்டு இவ்வளவு ஆண்டு காலமாகியும் தர்மபுரி மாவட்டத்தின் தலைநகராகிய தர்மபுரியில் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட் இல்லாமல் இருப்பது வருந்தத் தக்க விஷயம். இது விஷயமாகச் சட்ட அமைச்சரிடம் கேட்ட பொழுது உயர்நீதிமன்றத்தில் பரிந்துரை செய்தால் உடனடியாகக் கவனிப்பதாக வாக்குறுதி அளித்தார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இத்தகைய முதல் வகுப்பு மாஜிஸ்ரேட் கோர்ட், சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட் கோர்ட் தர்மபுரிக்கு அவசியம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எங்களுடைய பாரிலும் தீர்மானம் போடப்பட்டு அரசுக்கும், ஹைகோர்ட்டுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. உடனடியாக சட்ட அமைச்சரவர்கள் இது குறித்து நடவடிக்கை எடுத்து தர்மபுரிக்கு முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டை ஏற்படுத்தித் தருவார்கள் என்று நான் நம்புகிறேன்.

அடுத்தபடியாக, சிறைச்சாலைகள் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது திறந்த வெளிச் சிறைச்சாலை முறை மூன்று மாவட்டங்களில் மட்டும்தான் இருக்கிறது. மேலும் நான்கு இடங்களில் ஏற்படுத்தப் போவதாகவும் குறிப்பிலிருந்து தெரிகிறது. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், எல்லா மாவட்டங்களிலும் திறந்த வெளி சிறைச்சாலைகள் அமைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம் ஆகும் அதற்கும் ஆவன செய்ய வேண்டுமென்று சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் சிறைச்சாலைகளிலுள்ள குறைபாடுகளைப் பற்றி இங்கே பேசிய நண்பர்கள் பலர் குறிப்பிட்டார்கள். முக்கியமாக அவர்களுக்கு இருக்கின்ற சுகாதார வசதிகள் போதாது. இடமின்மை காரணமாக, ஆறுபேர்கள் இருக்க வேண்டிய இடத்தில் 12 பேர்கள், 18 பேர்கள் என்று போட்டு அடைக்கிறார்கள். அதனால் அவர்களுக்குச் சுகாதார வசதிகள் கிடைக்காமல் இருக்கின்றன. அந்தமாதிரி இல்லாமல் இன்னும் விஸ்தரித்து

1977 ஆகஸ்ட் 16] [திரு. கா. அப்புனு கவுண்டர்]

இட வசதியை அதிகப்படுத்தி 6 பேர் கெப்பாசிட்டி என்றால் அந்த 6 பேரை மட்டும் வைக்கும் முறையில் சிறைச்சாலைகளைத் திருத்தியமைக்க வேண்டுமென்று சட்ட அமைச்சரவர்களைக் கேட்டுக் கொண்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வைத்திய வசதிகளைப் பொறுத்த வரையில் சிறைச்சாலைகளில் உடனடியாகக் கவனிப்பது இல்லை என்ற குற்றச் சாட்டைக் கூற விரும்புகிறேன். சிறைச்சாலையில் இருக்கிற கைதிகளும் மனிதர்கள் தான் என்ற உணர்வோடு அவர்களுக்கு வைத்திய வசதிகளைத் தர அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குத் தகுந்த உத்தரவுகளைப் பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் உணவு பற்றி எடுத்துக்கொண்டால், ஊழல் நடக்கிறது என்று சிலர் குறிப்பிட்டார்கள். விளக்க உரையிலே பார்த்தேன். பலவிதமான சத்துணவுகள், பல கீரை வகைகள் கொடுக்கப்படுவதாக விவரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. ஆனால் நடைமுறையில் எவ்வளவு தூரம் இருக்கிறது என்று பார்க்க வேண்டும். கமிட்டி போடப்பட்டதாகக் கூறினார்கள். சட்ட மன்ற உறுப்பினர்களும் இருந்து அப்பொழுதைக்கப் பொழுது அதைக் கண்காணித்துச் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்றும், இந்தக் குறைகளை நீக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இப்பொழுது நம்முடைய உயர்நீதி மன்றம் சென்னையில் இருப்பதால் கன்னியாகுமரி ஜில்லா, இராமநாதபுரம் ஜில்லா, திருநெல்வேலி ஜில்லா ஆகிய ஜில்லாக்களிலிருந்தெல்லாம், தென் மாவட்ட மக்கள் சென்னைக்கு வந்து உயர்நீதி மன்றத்திலே நீதி பெறுவது சிக்கலாக, சிரமமாக இருப்பதால் உயர்நீதி மன்றத்தின் பெஞ்சு ஒன்றை, அதாவது ஒரு டிவிஷனை மதுரையில் ஏற்படுத்தினால் நீதி கிடைப்பதிலே கொஞ்சம் செலவைக் குறைக்கலாம், கால தாமதத்தைக் குறைக்கலாம் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது, கோர்ட்டுகளிலே நீதி வழங்கப்படுவதிலே, மற்றொரு முக்கியமான குறை தாமதமாகும். தாமதத்திற்குக் காரணம் என்ன என்பதை பார்த்தால், காவல் துறையினர் ஒத்துழைப்புக் குறைவு என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்பு

கிறேன். பென்ச் அண்ட் பார் இரண்டுக்கும் ஒற்றுமை ஏற்பட்டாலும்கூட, பிராசிக்யூஷன் தரப்பிலேயிருந்து ஒற்றுமை வருவதில்லை. ஒரு கேஸ் போட்டால், சாட்சிகளை ஒழுங்காக ஆஜராக்குவதில்லை. காவல் துறையினர் தொடுக்கிற வழக்குகளில் காவல் துறையினரே கூட, சாட்சிகளாக இருக்கும்போது, கேஸ்களில் ஆஜராகாத நிலைமையில் கோர்ட்டுகளிலிருந்து வாரன்ட்டுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்ற நிலைமைகள் இருக்கின்றன. போலீசே சாட்சி சொல்லவேண்டிய நிலைமையில் கோர்ட்டுக்கு வராமலிருந்தால், பொதுமக்களுக்கு எப்படி நீதி கிடைக்கும்? அந்தக் காரணங்களால் தான் தாமதம் ஏற்படுகிறது. இவைகளைச் சீர்திருத்தம் செய்ய தகுந்த முடிவெடுத்து ஆவன செய்யுமாறு சட்ட அமைச்சரைக் கேட்டுக்கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவரவர்களே, நீதி நிர்வாகத்திலே என்னுடைய கருத்துகளை உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியினுடைய கருத்துக்களாக தெரிவிக்க விரும்புகிறேன். கோர்ட்டுகளுக்கு வசதியற்றவர்கள், சக்தியற்றவர்கள்' Might is right' என்கிற ஒரு பரிணாமத்திலே ஆரம்பிக்கப்பட்டு, இந்த நீதியினுடைய வளர்ச்சியானது, இப்பொழுதும் அந்த 'Might is right' என்ற முறையிலேதான் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். காரணம், ஏழைகள் அதிகமாக, கோர்ட் பீஸ்களை ஸ்டாம்பாக ஒட்டி, கோர்ட்டுகளுக்குச் சென்று டிக்கிரி வாங்குகிறார்கள். அந்த டிக்கிரிகளை வாங்கிய பிறகு, அதை அமுல்படுத்த முடியாத நிலைமையிலே எத்தனையோ பேர்கள் அவஸ்தைப்படுவதை நாம் நேரடியாகப் பார்க்கிறோம். ஆகவே, கோர்ட்டுகளிலே தருகிற தீர்ப்புகள் பேப்பர் டிக்கிரிகளாக இருக்கின்றனவே தவிர, அமுலுக்கு வர முடியாத நிலைமையிருக்கிறது. கோர்ட்டுக்குப் போய் 'declaration for title and possession' என்ற ஒரு தாவாவை போடுகிறோம்.

கோர்ட்டுகளிலிருந்து அந்தச் சுவாதீனத்தைப் பெறுகிறோம். நிலத்திற்குப் போனால், அங்கே நிலத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறவன் அடித்து, உதைத்து விரட்டுகிறான். போலீஸ் நிலையத்திற்குச் சென்றால் அங்கே அவனை அனுமதிப்பதில்லை. இது சிவில் வழக்கு, நாங்கள் தலையிட முடியாது என்று சொல்கிறார்கள். இது போலிசின் நிலைமை. குறிப்பாக, சுவர்ணம்மாள் என்றவர்

தாவாவுக்கு நான் ஆஜராகி, கோர்ட்டிலே வழக்கு போட்டு, ஒரு தீர்ப்பு வாங்கினேன். தீர்ப்பு வாங்கி டெலிவரி எடுத்தும்கூட, இன்றுவரைக்கும் 10 ஆண்டுகளாக சுவாதீனத்தை எடுக்க முடியவில்லை. நிலத்தின் உள்ளே நுழைய முடியவில்லை. காரணம், அங்கே சென்றால் அடித்து விரட்டுகிறார்கள். போலீசிடம் சொன்னால், உதவி தருவதில்லை.

அதேபோல், மற்றொன்று, 4, அண்ணா பிள்ளை தெரு, சென்னை-1-ல் இருக்கிற இடத்திற்கு ஆண்டாளம்மாள் என்பவர் [illegible]காரராக இ[illegible] அந்த இடத்திலே வாடகைக்கு இருந்தவர் எஸ். ஜி. தாவூத் அனீப் என்பவர். அவர் சப் லெட்டிங் என்ற அடிப்படையிலே, கீழ்க் குத்தகை விட்டார்கள். ஆகவே, காலி செய்ய வேண்டுமென்று எச். ஆர். சி. 367/73-லே வழக்கு போட்டார்கள். கோர்ட்டிலே அந்த மனுவானது 9—2—1976 தள்ளுபடி செய்யப்பட்டு, எச். ஆர். எ. 82/76-லே அப்பீல் செய்யப்பட்டு, அதுவும் 26—6—76-ல் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. அந்த டெனன்டை காலி செய்ய முடியாத அந்த அம்மாள் பிரேம்சேகர் ரெட்டி என்பவருக்கு 26—7—1977-லே அந்த நிலத்தை—அந்த இடத்தை— ரூ. 1,05,000-க்கு விற்றார்கள். ஆனால் ஏற்கனவே, 1955-வது ஆண்டிலே போட்டிருக்கிற அக்ரிமென்ட் பிரகாரம் சூப்பர் ஸ்ட்ரக்ச்சர் கட்ட, வழிவகை செய்யப்பட்டதால் ஏராளமான பணம் செலவு செய்து, இப்பொழுது அதன் மதிப்பு ரூ. 1,50,000 இருக்கும் என்று வேண்டுகோள் விடுத்து தெரிவித்தும் வேண்டுமென்றே குறைத்து மதிப்பிடப்பட்டு, ரூ. 1,05,000-க்கு விற்கப்படுகிறது.

[பிற்பகல் 12.20]

பின்னாலேதான் அதை வாங்கிய பிரேம் சேகர் ரெட்டி, 12-8-76லே நான் அதை வாங்கிவிட்டேன். எனக்கு வாடகை தரவேண்டுமென்று நோட்டீஸ் கொடுக்கிறார். 16—8—1976-லே வாடகை தரப்பட்டு அதற்கான ரசீதும் இருக்கிறது. அப்படியும் புலம் பொருந்திய, பணம் பொருந்தியவர் என்ற காரணத்தாலே, 2 அதிகாரிகளுடைய உதவியோடு, அவர்களுடைய பெயர்களை சொல்ல விரும்புகிறேன் அஸிஸ்டண்ட் கமிஷனர் வரதராஜன், Assistant commissioner attached to the Law College and a Deputy Commissionet, Mr. Perumalswami.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதிகாரிகளுடைய பெயர்களை எல்லாம் தயவு செய்து சொல்லவேண்டாம். காவல் துறையைச் சேர்ந்தவர்கள் என்று மட்டும் சொல்லுங்கள்.

திரு. ரா. மார்க்கபந்து: 17—9—1976-ஆம் தேதி துராக்கிரமமாக வெளியே துரத்தி அடிக்கப்பட்டார்கள். பணம் படைத்தவர்கள் போலிஸ் அதிகாரிகளிடம் சென்றால் அதற்கு ஒரு நீதி. ஏழை எளிய மக்கள் போலிஸாரிடம் சென்றால் ஒரு நீதி என்கிற நிலைமை இருக்கும்போது, தீர்ப்பு வந்த உடனே அதை அமல்படுத்துவதிலே போலீசார் ஒத்துழைப்பு இருக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது வழக்குகளின் கால அளவுகள் நீண்டு கொண்டே செல்கிறது. ஆகவே ஒரு சிறு மாற்றத்தை செய்தால் நலமாக இருக்கும். ட்ரையல் கோர்ட்டிலே, முன்சீப் கோர்ட்டிலே, சப் கோர்ட்டிலே வழக்கமாக போடப்படுகிறபோது அதை ஒரு நீதிபதி விசாரிக்கிறார். பர்ஸ்ட் அப்பீல் என்று வரும்போது ஒரு நீதிபதிதான் விசாரிக்கிறார். சக்கண்டு அப்பீல் என்று வரும்போது அங்கேயும் ஒரே நீதிபதிதான் விசாரிக்கிறார் அதன் காரணத்தாலே அந்த தீர்ப்புகள் தடம் மாறி செல்வதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆகவே சக்கண்டு அப்பீல் என்று வரும்போது, குறைந்த பட்சம் 3 ஜட்ஜ்களாவது தீர்ப்புத் தருகின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். இப்போது இருக்கிற லீவ் டு அப்பீல் புரொவிஷன் இல்லாது செய்வது நலமாக இருக்கும். காரணம் பணம் படைத்தவர்கள் அந்த அதிகாரத்தைப்பெற்று சுப்ரீம் கோர்ட்டுக்கு செல்கின்றபோது, வசதியற்றவர்கள் அங்கே ஏசன்று தங்கள் வழக்காட முடியாது, என்று தெரிவித்துக் கொண்டு செக்கண்டு அப்பீல் பொறுத்தமட்டில் 3 ஜட்ஜ்களுக்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கிரிமினல் வழக்குகளுக்கு 2 மாதங்கள் ஆகின்றன. இதை ஒரு கன்வென்ஷனாக கிரிமினல் கோர்ட்டுகள் நடத்தி வருகின்றன. 6 மாத காலத்தில் சிவில் வழக்குகளை முடிக்கவேண்டுமென்று நியதி ஏற்பாடு செய்யவேண்டும். குறிப்பாக நீதிபதிகளைப் பொறுத்த மட்டிலே சம்பளம் குறைவு. கேரளாவில் இந்த நீதிபதிகளுக்கு—சாதாரணமாக டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு ரூ. 750 இங்கே 550 ரூபாய்தான் இருக்கிறது. அதே நேரத்திலே அந்த நீதிபதிகளுக்குத் தருகின்ற சலுகைகள் மிகமிக குறைவு. சாதாரணமாக ஒரு பி.டி.ஓ. அல்லது ஒரு தாசில்தாருக்கு எல்லாவிதமான சலுகைகளும் கன்வேயன்ஸ் சலுகைகளும் இருக்கிறது. ஆனால் நீதிபதிகளுக்கு— அந்த உயர்ந்த நீதிபதிகளுக்கு சலுகை இல்லாத காரணத்தால் அவர்கள் டஸ்களிலே நின்று கொண்டு செல்கிறார்கள். குற்றவாளி உட்கார்ந்து கொண்டு வருவான், நீதிபதி நின்று கொண்டு வருவார். அவர்களுக்கு கன்வேயன்ஸ் சார்ஜ் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே சென்னையில் ஒரு அக்காமொடேஷன் கன்ட்ரோலர் இருக்கிறார். கடந்த 15 ஆண்டுகளாக அவர் இருக்கிறார். இதிலே 'priority on the basis of seniority என்று நியமிக்கிறார்களா தெரியவில்லை. 60 லா ஆபீசர்கள் இருக்கிறார்கள். அக்காமொடேஷன் கன்ட்ரோலில் 5 ஆயிரம் வீடுகள் இருக்கின்றன. ஆனால் இந்த லா ஆபீசர்களுக்கு இடம் கிடைக்காத முறையில் இருக்கின்றன. குறிப்பாக 2, 3 வீடுகளைப் பற்றி நான் சொல்கிறேன். அது பற்றி விசாரணை நடத்தவேண்டும், நெ. 5, நாதன் தெரு, சேத்துப்பட்டு, நெ. 1, பார்க் சைட் ரோடு, சேத்துப்பட்டு, நெ. 3, வெங்கட்டராமன் தெரு, தேனாம்பேட்டை, இந்த 3 வீடுகள் 'சீனியாரிட்டி' பின்பற்றப்பட்டு ஒதுக்கப்பட்டிருக்கிறதா? இல்லை என்றால் ஏன் பின்பற்றப்படவில்லை. இது யாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அக்காமொடேஷன் கன்ட்ரோலர் அவர்களுக்கு வேண்டியவர்களுக்குத் தரப்பட்டிருக்கிறதா? வேறு எந்த முறையிலே தரப்பட்டிருக்கிறது. என்பதை நீங்கள் விசாரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சிறைச்சாலையைப் பற்றி சொல்லும்போது அங்கு நடக்கிற தில்லுமுல்லுகளை எல்லாம் குறிப்பிட்டார்கள். நான் நேரடியாக அதில் நுழைய விரும்பவில்லை. குற்றம் புரிந்து ஜெயிலுக்கு செல்கிறவன் திருந்த வாய்ப்பு சிறைச்சாலையில் இருக்கும் என்பதுதான் சிறைச்சாலைகளின் நோக்கமாக இருக்கிறது. ஆனால் இந்த நோக்கத்தின் அடிப்படையில் இருக்கிற புரோபேஷனரி ஆபிசர்கள் சிறைச்சாலை அட்மினிஸ்டிரேஷன் கீழ் சேர்த்திருக்கிறார்கள்.

இந்த சிறைச்சாலை துறையிலிருந்து அந்த ப்ரோபேஷனரி ஆபிசர்ஸ் துறையைத் தனியாகப் பிரித்து நடத்தவேண்டுமென்று ஏற்கனவே 1946-லே ஒரு அரசாங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அது 1948-ல் விரிவாக்கப்பட்டு, 1950-51 ஜெயில் ரூல்ஸ் கமிட்டியில் அந்த டிபார்ட்மெண்டை தனியாக பிரிக்க வேண்டுமென்று சொல்லியும், 1962-63, 1974-75 ஆகிய இரண்டு எஸ்டிமேட் கமிட்டியிலும் பரிந்துரை செய்யப்பட்ட பின்பும் அது செய்யப்படவில்லை. இந்த மாற்றம் ஏற்பட்டால்தான் சிறைக்கு அனுப்பப்படுவர்களின் குறைகள் குறைக்கப்படும். அதே நேரத்தில் சிறையில் இருக்கும் கைதிகளையும் சரியான முறையில் சீர்திருத்த முடியும், ஆகவே, இந்த ப்ரோபேஷனரி ஆபீசர்ஸ் டிபார்ட்மென்டை தனியாக ஜெயில் டிபார்ட்மெண்டிலிருந்து பிரித்து செயலாற்ற வேண்டுமென்ற கருத்தினைத் தெரிவித்துக்கொண்டு என் பேச்சினை முடிக்கிறேன். வணக்கம்.

[1977 ஆகஸ்டு 16

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டு இருக்கும் இந்த மான்யக் கோரிக்கையை நான் ஆதரித்து ஒரு சில வார்த்தைகளை சொல்ல விரும்புகிறேன்.

சிறைக் கொடுமைகள் பற்றி பல்வேறு விதமாக எடுத்துக் கூறி, அந்தக் கைதிகள் நடத்தப்பட்ட முறைபற்றியும் இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் எடுத்துக் கூறினார்கள். இத்தகைய கொடுமையான இந்த மிசா சட்டத்தை, மிசா சட்டத்தால் பாதிக்கப்பட்டவர்கள் [illegible] றுகூட [illegible]றைக்கும் நாம் வைத்துக் கொண்டு இருக்கிறோம். மிசாவிற்கு வழங்கப் பட்ட விசாவை நாம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைப் பார்க்கிற போது உண்மையிலேயே வேதனைப்படக் கூடிய நிலைமைதான். ஆக, இந்த மிசா சட்டத்தை உடனடியாக ரத்து செய்துவிட மத்திய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் வகையில் மாநில அரசு பரிந்துரை வழங்கவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

மனித உரிமைகள் பாதிக்கப்படும் வகையில், மனித உணர்வுகளுக்கு சவாலாக அமையும் வகையில் சிறையில் காரியங்கள் நடக்கின்றன என்று சிறைக்குச் சென்று அனுபவம் பெற்று, சட்டமன்ற உறுப்பினர்களாக இங்கே வந்து சொல்கிறார்கள், அதைக் கேட்கக் கூடிய துர்பாக்கியமான நிலைமை நமக்கும் நாட்டிற்கும் ஏற்பட்டு இருக்கிறது என்று நாம் நினைத்துப் பார்க்கிறபோது உண்மையிலேயே வேதனை அடையக் கூடியவர்களாக இருக்கிறோம். அரசியல் கைதிகளை நாம் சிறைச்சாலைக்கு அனுப்புவது என்பது குறிப்பிட்ட காரியத்திற்காகத்தானே தவிர அந்த அரசியலை சிறைச்சாலைக்குள்ளே எடுத்துச் சென்று சிறைச்சாலையில் இருக்கும் அதிகாரிகளை அரசியல்வாதிகளாக மாற்றிட அல்ல என்பதை சிறைச்சாலை நிர்வாகிக்கும் அதிகாரிகளுக்கும் நாம் நன்றாக உணர்த்தக் கடமைப்பட்டவராக இருக்கிறோம். சிறைச்சாலைக்கு ஒருவனை எடுத்துச் சென்று அவனை அங்கே வைத்துக் கொண்டு எப்படிப்பட்ட வகையில் அந்த அரசியல் கட்சியினர் செயல்களை செய்கிறார்கள் என்று கேட்டறிவதற்காக அரசியல் கைதிகளை நாம் அனுப்பவில்லை, அவர்களை அதற்காக கொடுமைப்படுத்தப்படவும் இல்லை. இது நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் இருக்கிற மனிதாபிமான உணர்வுக்கும் மனித உரிமைக்கும் மாபெரும் சவாலாக அமைந்து இருக்கிறது என்பதை மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, அரசியல் வாதியாக இருந்தாலும், சாதாரண கைதியாக இருந்தாலும் அவர்களுக்கு கொடுமைகள் இழைப்பது தடுக்கப்பட வேண்டும் என்ற உணர்வினை அரசு அதிகாரிகளுக்கு ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

1977 ஆகஸ்டு 16] [திரு. எம். ஏ. லத்தீப்]

குறிப்பாக நெருக்கடி காலத்தில் மிசாவில் கைது செய்யப்பட்டவர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளைப் பற்றி விரிவான விளக்கங்களும், அல்லது விசாரணைகளும் நடந்து கொண்டு இருக்கின்றன. அதற்காக ஏதோ தார்குண்டே கமிட்டி ஒன்று மத்திய சர்க்காரினால் அமைக்கப்பட்டு, அவர்கள் எல்லா மாநிலங்களுக்கும் சென்று விசாரணை செய்து ரகசியமாக மத்திய அரசாங்கத்திற்கு ஒரு அறிவிப்பை கொடுத்து இருக்கிறார்கள் என்று அறிகிறேன். அந்த அறிக்கையின் நகல் மாநில அரசாங்கத்திற்கு மட்டும் அனுப்பப்பட்டு இருக்கிறதா, அப்படி வந்து இருந்தால், அதை வைத்துக் கொண்டு அந்தக் கொடுமைகளைச் செய்தவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடு[illegible]வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சிறைச்சாலையில் இருப்பவர்களுக்கு தினப்படி கொடுக்கிறார்கள் சாப்பாட்டிற்கு. உணவுக்கு கொடுக்கும் தொகை மிக மிகக் குறைவாக இருக்கிறது. வேலை செய்பவர்களுக்கு ரூ. 5.35, வேலை செய்யாதவர்களுக்கு ரூ. 4.80; சைவ சாப்பாடு (விஜிட்டேரியன்) சாப்பிடுகிறவர்களுக்கு. அதே மாதிரி அசைவ சாப்பாடு சாப்பிடுகிறவர்களுக்கு ரூ. 5.70 வேலை செய்பவர்களுக்கு; வேலை செய்யாதவர்களுக்கு ரூ. 4.60 என்று சொல்லியிருக்கிறார்கள். ரூ. 4.60 பைசாவிலே அதுவும் அசைவ சாப்பாடு எப்படி கொடுக்கமுடியும் என்று தெரியவில்லை. அதுவும் கூட, மூன்று வேளைக்கு. சிறைச்சாலைக்குள்ளே செல்பவர்கள் கொஞ்சம் வாட்ட சாட்டம் ஆனவர்களாகத்தான் இருப்பார்கள்.

(பிற்பகல் 12.30)

அவர்கள்தான் சில காரியங்களில் ஈடுபடுகிறார்கள். குற்றவாளி என்ற நிலை வரும் போது, அவர்களுக்கு ஓரளவு சாப்பாடு கொடுத்தால்தான் முறையாக வேலைகள் நடக்கும். சில வேளையில் 'நியுட்ரிஷன்' சாப்பாட்டில் குறையும்போது, 'சைகாலாஜிகல் இபெக்ட்' ஏற்பட்டு குற்ற எண்ணங்கள் அதிகமாக உதயமாகிறது என்று சைகாலாஜி சம்பந்தப்பட்டவர்கள் சொல்லுகிறார்கள். ஆகவே நியுட்டிரிஷனைக் குறைத்து மீண்டும் குற்ற உணர்வுகளைத் தூண்டுகிற வகையில் பஞ்சப்படியை குறைவாக வைத்துக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று சிறைக் கைதிகளுக்கு பத்திரிகைகள் போட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இந்தக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. தினமணி, சுதேசமித்திரன், நவசக்தி ஆகிய பத்திரிக்கைகள் சிறையில் கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. கொடுக்கப்படுவதைப் பற்றி சந்தோஷப்

படுகிறேன். ஆனால் இந்த மூன்று பத்திரிக்கைகளை எந்த அடிப்படையில் தேர்ந்தெடுத்தார்களோ தெரியாது. யார் தேர்ந்தெடுத்தார்கள், நீங்கள் தேர்ந்தெடுத்தீர்களா, நெருக்கடி காலத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் தேர்ந்தெடுத்தார்களா என்று தெரியவில்லை. மற்ற பத்திரிக்கைகளும் கொடுக்கப்பட வேண்டும். ஆங்கில பத்திரிக்கைகள் ஒன்றிரண்டு கொடுக்கப்பட வேண்டும். சஞ்சிகைகள், 'வீக்லி மாகசீன்கள்' கொடுக்கப்பட வேண்டும். அப்படி கொடுக்கப்படுகிற போது 100 பேருக்கு ஒரு பிரதி கொடுக்கப்படுகிறது. மாலையில் சுதேசமித்திரன் வருகிறது. ஒரு பத்திரிக்கை பிரதியைக் கொடுத்தால் ஒரே நேரத்தில் 100 பேரும் எப்படிப் படிப்பார்கள்? சிறையில் விளக்கு ஏற்பாடு கிடையாது. சூரியன் மறைந்தவுடன் செல்லில் அடைத்துவிடுகிறார்கள். சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு, ஒரே ஒரு சுதேசமித்திரன் பிரதியை வைத்துக் கொண்டு எப்படி 100 பேர் படிப்பார்கள். ஆகவே கொடுத்தால் சரியாகக் கொடுங்கள். இல்லாவிட்டால் நிறுத்திவிடுங்கள். பெயரளவில் கொடுத்தோம் என்று சொல்ல வீண் செலவு செய்ய வேண்டாம். சிறை சூப்பிரண்டு, மற்ற அதிகாரிகள் படிப்பதற்காக போடுவதாக இருந்தால் வேண்டாம். பிராக்டிகலாகக் கொடுக்க வேண்டுமென்று நான் இந்த அரசை கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து நீதிமன்றங்களைப் பற்றி பலவாறு எடுத்துச் சொன்னார்கள். நீதித் துறையில் கூட இன்றைக்கு நாம் வருந்தத்தக்க வகையில் நிலைகள் உருவாகியிருக்கின்றன என்று சதாசிவம் கமிட்டி கருத்துக்கள் சொல்லியிருப்பது, எடுத்துச் சொல்லக் கூடியவைகளாக அமைந்திருக்கின்றன. நான் நீதிமன்றத்தைச் சார்ந்த கோர்ட்டு ஆபிசர்களில் ஒருவனாக இருப்பதால், நீதித் துறை பற்றி சதாசிவம் கமிட்டி சொன்ன கருத்தை அப்படியே ஏற்றுக் கொள்வதாக இல்லை. இருந்தாலும், அந்தக் கமிட்டி நீதிபதிகளைப் பற்றி குறிப்பாக சொல்லியிருக்கின்ற கருத்தை, மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள், நீதிபதியாக இருந்து பக்குவப்பட்டவர்கள் என்பதால், கவனித்து, குறிப்பாக சப் மாஜிஸ்டிரேட்டுகளாக இருப்பவர்கள் விஷயத்தைப் பற்றி கவனித்து, உயர்நீதி மன்றத்துக்குச் சொல்லி, தலைமை நீதிபதி அவர்கள், அவர்களை கட்டுப்பாட்டில் வைக்க தேவையான சாத்தியக்கூறுகளை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கீழ் கோர்ட்டில், சப் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டில், மதுவிலக்கு கேஸ்களை நடத்துகின்ற வக்கீல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியும். வக்கீல்களோடு தொடர்பு வைத்திருப்பவர்களுக்குத் தெரியும். The culprit and the police officers as well as the judicial officers have collusion..' என்று சொல்லியிருக்கிறார்கள். இது மிகவும் கடுமையான கருத்து. இந்தக் கருத்தை அரசாங்கம் கவனத்தில் வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எங்கள் சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் 5 ஆண்டுகளுக்கு முன்பாக 11 டிஸ்டிரிக்ட் ஜட்ஜுகள் இருந்தார்கள். இன்றைக்கு ஒருவர் ரிடையர் ஆகிறார் என்றால், அவருக்குப் பதிலாக ரீபிளேஸ்மென்ட் இல்லை. ஒருவேளை சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒருவர் ரிடையரானால், இந்த இனமே ரிடையர் ஆகிவிட வேண்டுமோ என்னவோ தெரியாது. மாண்புமிகு சட்ட அமைச்சர் இதைக் கவனித்து, எங்களுக்கு அதிகம் வேண்டாம், எவ்வளவு கொடுப்பதற்கு நியாயம் இருக்கிறதோ, அதைக் கொடுத்தால் போதும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல் எல்லாத் துறைகளிலும், சட்ட ஆபிசர்கள் நியமிக்கப்படுகின்ற விஷயத்திலும், நீதிமன்றங்களுக்கு நியமிக்கின்ற விஷயத்திலும் இதைக் கவனித்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாணியம்பாடி ஒரு தாலூக்கா ஹெட்குவார்ட்டர்ஸ். அதில் சிவில் கோர்ட்டு இதுவரையில் இல்லை. பல ஆண்டுகளாக நாங்களும் சொல்லி வருகிறோம். சப் மாஜிஸ்டிரேட் கோர்ட்டு தான் இருக்கிறதே தவிர, வாணியம்பாடியில் சிவில் கோர்ட்டு இல்லை. குறைந்த பட்சம் ஒரு டிஸ்டிரிக்டு முன்சீப் கோர்ட்டாவது ஏற்பாடு செய்யுங்கள் என்று குழு வந்த போது, குழுவிடம் சொன்னோம். அரசாங்கத்திடமும் தொடர்ந்து சொல்லி வருகிறோம். ஏனோ தெரியவில்லை, வாணியம்பாடி ஒதுக்கப்படுகிறது. மாண்புமிகு சட்ட அமைச்சராவது கொஞ்சம் தமது கனிவுப் பார்வையை வாணியம்பாடியின் பக்கம் திருப்பும்படி கேட்டுக்கொள்கிறேன். சென்னையில் மட்டுமே பார்வையை வைத்துக் கொள்ள வேண்டாம் என்று வற்புறுத்தி, இந்த மானியத்தில் பேசுவதற்கு இவ்வளவுதான் நேரம் இருக்கின்ற காரணத்தால் இத்துடன் அமர்கின்றேன்.

*திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள் மானியக் கோரிக்கைகள் மீது என்னுடைய சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். நீதி நிர்வாகம் என்பது மிக முக்கியமான ஒரு பிரிவு. It is an important limb of the Government. ஜுடிஷியரி என்பது மிக முக்கியமான ஒரு பிரிவு. அதைப்பற்றி விவாதிப்பதற்கு இரண்டு மணி நேர அவகாசம் போதாது என்பதை வலியுறுத்திச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அடுத்த தடவையாவது நீதி நிர்வாகம் பற்றி பேசுவதற்கு ஒரு அரை நாளாவது ஒதுக்க வேண்டும் என்று சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நமது சட்ட அமைச்சர் அவர்கள் பிரபலமான வழக்கறிஞராக பணியாற்றியிருக்கிறார்கள். அட்வகேட் ஜெனரலாக பணியாற்றியிருக்கிறார்கள், நீதிபதியாக பணியாற்றியிருக்கிறார்கள். எனக்குக் கூட

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1977 ஆகஸ்டு 16

அவர்கள் வக்கீலாக இருந்து வாதாடியிருக்கிறார்கள். அண்ணா அவர்கள் இருந்த காலத்தில் அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தின் போது—அப்போது நகர மன்றத் தலைவராக நான் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தேன்— காரணம் இல்லாமல் என்னை கைது செய்தார்கள். அப்போது நமது சட்ட அமைச்சர் அவர்கள் எனக்காக வாதாடி ரிட் ஆப் ஹேபியஸ் கார்பஸ் தாக்கல் செய்து, ஜாமின் வாங்கியவுடன், அப்போது நீதிபதியாக அனந்தநாராயண ஐயர் அவர்கள் இருந்தார்கள், நீதிபதி அவர்கள் என்னை திங்கட்கிழமை ஆஜர் படுத்தும்படி உத்தரவிட்டார்கள். ஆனால் ஞாயிற்றுக்கிழமை அன்றே என்னை விடுதலை செய்துவிட்டார்கள். கோர்ட்டுக்குப் போக வேண்டிய தேவை ஏற்படவில்லை. நமது சட்ட அமைச்சர் அவர்கள் பல் வேறு துறைகளில் அனுபவம் பெற்றவர்கள். ஆகவே நாங்கள் சொல்கிற கருத்துக்களை விருப்பு வெறுப்பின்றி பரிசீலித்துப் பார்த்து தக்க நடவடிக்கைகள் எடுப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. குறிப்பாக, நீதி நிர்வாகத்தைப் பொறுத்த வரையில், மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்ற இடங்களாக விளங்கி வருகின்றன நீதிமன்றங்கள். அரசியலமைப்புச் சட்ட 32-வது பிரிவின்படி மக்கள் தங்கள் உரிமைகளைக் கோரிப் பெறுவதற்கு நீதிமன்றங்களுக்குச் செல்ல உரிமை கொடுக்கப் பட்டிருக்கிறது. 'Right to move the Supreme Court by appropriate proceedings for the enforcement of the fundamental rights is guaranteed.' இந்த அடிப்படை உரிமை பாதுகாக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படை உரிமைகள் இடைக்காலத்தில் எவ்வளவு அலங்கோலத் திற்கு ஆளாக்கப்பட்டது என்பதைப் பார்த்தோம். 'கமிட்டெட் ஜுடிஷியரி, இன்டிபென்டென்ட் ஜுடிஷியர்' என்றெல்லாம் காரசாரமாக விவாதம் நடைபெற்றதையும் பார்த்தோம். அதிருஷ்டவசமாக இன்று அந்தச் சூழ்நிலை மாற்றப்பட்டு நீதி மன்றங்கள் சுதந்திரமாக இயங்குவதற்கு வாய்ப்புகள் உருவாக்கப் பட்டிருக்கின்றன. ஆனால் அவசர கால நேரத்தில் மத்திய அரசு ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தச் சட்டத்தை எதிர்த்து நமது மதராஸ் பார் அஸோஸியேஷன் ஒரு தீர்மானத் தைப் போட்டிருக்கிறது.

'The Bar Association later passed unanimously a resolution condemning the amendment to the Advocates Act made during the emergency making the Attorney-General of India ex-officio Chairman of the Bar Council of India and Advocate-General ex-officio Chairman of State Bar Councils.

The Association also resolved to request the Union Law Minister to amend the Advocates Act restoring the democratic right to the elected representatives of the Bar Council of India and State Bar Councils so that they could elect a Chairman of their choice......'

1977 ஆகஸ்டு 16] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

என்ற தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள். இந்தத் தீர்மானத்தை வற்புறுத்துவதன் மூலம் நம் அரசாங்கம் அட்வெகேட் ஜெனரலாக நியமிக்கப்படுபவர் பார் கவுன்ஸில் தலைவராக நியமிக்கப்படுகிற நிலை நீடிக்காது என்று நம்புகிறேன். வழக்குமன்றம் என்பது மக்களின் உரிமைகளுக்காக வாதாடுகிற இடம். மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் எண்ணம் படைத்தவர்கள்தான் அரசாங்கத்தின் சார்பாக லா ஆபிஸர் களாக நியமிக்கப்படவேண்டும். நான் யாரையும் குறை கூறு வதாக தயவு செய்து எண்ணக் கூடாது. இப்படி ஒரு லா ஆபிஸர் ஏற்கெனவே இருந்த மத்திய அரசுக்கு, அவர்களுடைய கமிட்டெட் ஜுடிஷியரிக்கு துணை போனார்கள் என்று குற்றஞ் சாட்டப்பட்டு அதைப் பற்றி விவாதிக்கும் நிலையைப் பார்த் தோம். அப்போது மத்திய அரசின் லா ஆபிஸராக இருந்தவர் இப்போது அட்வெகேட் ஜெனரலாக நியமிக்கப்பட்டிருப்பவர்.

'The Madras Bar Association, on Thursday, dropped a resolution declaring Advocate-General V. P. Raman as "an advocate of tyranny and despotism and...... unfit to be Chairman of the Tamil Nadu State Bar Council'.

The draft resolution had referred to Mr. Raman's support for the supersession of Supreme Court Judges and for the concept of a committed judiciary......

Mr. V. P. Raman's letter of apology said "I have been, and continue to be, second to none in my concern for human liberties or the independence of the judiciary"

என்ற மனமாற்றம் ஏற்பட்டிருப்பதை வரவேற்கிறேன்.

[பிற்பகல் 12.40]

இந்த மனமாற்றத்தின் அடிப்படையில் நாம் விளக்கங்களை பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சட்டத்தை படிக்கும்போது Once a mortgage, always a mortgage என்று நாம் படித்திருக்கிறோம். இப்போது இருப்பது என்ன, Once a magistrate always a magistrate என்ற நிலைமைதான் இருந்து வருகிறது. மேலும் எவ்வளவுதான் சர்வீஸ் இருந்தாலும் பதவி உயர்வை பொறுத்த வரையில் Munsiff-*cum*-Magistrate என்ற அளவில், 30-1-1976-ம் தேதி அன்றைக்கு ஆட்சியில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஒரு உத்தரவை பிறப்பித்தது.

பின்னால் வந்த ஆட்சிக்காலத்தில், திராவிட முன்னேற்றக் கழக அரசு போட்ட உத்தரவில் ஏதாவது தவறுகள் இருக்குமோ என்று நினைத்து அட்வைசர் ரீஜிமில் இந்த உத்தரவு பற்றி பரிசீலிக்கப்பட்டது. பின்னால் இது நியாயமான உத்தரவு தான், ஆகவே இதைச் செயல்படுத்தலாம் என்று உத்தரவு போடப்பட்டதாக நான் அறிகிறேன். ஆகவே இனிமேலும் இந்த உத்தரவை செயல்படுத்துவதில் காலதாமதம் செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்போது இது செயல்படுத்தப்பட்டால் 12, 14 டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் பதவிகள் கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது. ஆகவே இதைப்பற்றி சட்ட அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து Sub-Judge என்ற நிலையில் இருப்பவர்கள் Estate Abolitsion Tribunal, Special Tribunal, and Tribunal இப்படி பல்வேறு வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். சப்-ஜட்ஜ்களை பொறுத்தவரையில், காலையில் பத்து மணிக்குப் போனால் இரவு நேரம் வரை அவர்களுக்கு வேலை இருக்கிறது. சப்-ஜட்ஜ் என்றால் சௌகரியமாக இருக்கலாம் என்று சிலர் நினைக்கிறார்கள். They will have to record evidence follow depositors apply their mind to case, come to decision and dictate judgement இவற்றையெல்லாம் தயாரிக்கவேண்டும். பின்னால் அவர்களே டிக்டேட் செய்யவேண்டும். இப்படி காலை 7 மணி முதல் இரவு 11 மணி வரையிலும் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட கஷ்டங்களை உணர்ந்து அவர்களுடைய ஊதிய விகிதங்களையும் மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கலெக்டருடைய சம்பளத்தை எடுத்துக் கொண்டால் 1,100-லிருந்து 2,000 வரை இருக்கிறது. டி. ஆர் ஓ. சம்பளத்தை எடுத்துக் கொண்டால் 1,100-லிருந்து 1,800 வரை இருக்கிறது. ஆனால் சப்-ஜட்ஜின் சம்பளத்தை எடுத்துக் கொண்டால், அவர்கள் பாரில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 10 ஆண்டு காலம் வக்கீலாக வேலை செய்திருப்பார்கள், பத்து ஆண்டு காலம் முன்சீப்பாக வேலை செய்து அதற்குப் பின்னால் தான் சப்-ஜட்ஜாக வருகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு என்ன சம்பளம் என்றால் 850 முதல் 950 ரூபாய் வரை என்றிருக்கிறது. ஆர்.டி.ஓ-வை எடுத்துக் கொண்டால் 575 முதல் சம்பளம் துவங்குகிறது, முன்சீப்பை எடுத்துக் கொண்டாலும் அவர்களுக்கும் 575 முதல் என்றிருக்கிறது. டி.ஆர்.ஓ.-வுக்கு 1,100 என்றிருக்கிறது, அப்படியிருக்கும்போது, சப்-ஜட்ஜ்-க்கு 850 முதல் 950 என்றிருப்பது மிக மிக குறைவு. ஆகவே இந்த பாகுபாட்டை நீக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உயர்நீதிமன்றத்தைப் பொறுத்த வரையில் சில கருத்துக்களை சொல்ல விரும்புகிறேன். அங்கு இப்போது 7 இடங்கள் காலியாக இருப்பதாக சொல்லப்படுகிறது. உயர்நீதிமன்ற நீதிபதிகளை நியமிக்கும்போது இந்த ஏழு இடங்களை நிரப்பும்போது அதில் தமிழ்நாட்டு அரசாங்கத்திற்கும் பெரும் பங்கு இருக்கிறது. அதில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினர், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், சிறுபான்மையோர் இவர்களுக்கெல்லாம் நியாயமான பிரதிநிதித்துவம் இருக்கக்கூடிய வகையில் அமைய வேண்டும் என்பதை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். இப்போது உயர்நீதி மன்றத்தில் ஏராளமான வழக்குகள் தேங்கிக் கிடக்கின்றன. இதற்கு காரணம் இப்படிப்பட்ட ஏழு ஜட்ஜுகளை போடாமல் இருப்பதும், வேறு பல வசதிகள் இல்லாமல் இருப்பதும் காரணமாகும். வழக்குகள் விரைவில் முடிய வேண்டும் என்றால் அதற்கு வக்கீல்களின் ஒத்துழைப்பு மிகவும் தேவை. நான் இடைக்காலத்தில் கடந்த ஓராண்டு காலமாக பிராக்டீஸ் செய்வதற்காக உயர் நீதிமன்றத்திற்கு போனபோது அங்கு வழக்கறிஞர்களுக்கு போதுமான இடவசதியில்லாமல் இருப்பது தெரிய வந்தது. ஓரளவு சேம்பர்ஸ்க்கு இடம் கொடுத்திருந்தாலும் அவை போதுமானதாக இல்லை. மீண்டும் கட்டிடம் கட்டிக் கொடுத்தும் போதுமானதாக இல்லை என்ற நிலைமைதான்இருந்து கொண்டிருக்கிறது. எனக்கு ஒரு சேம்பர் தரவேண்டும் என்று சீப்-ஜஸ்டிஸ் இடத்தில் கேட்டேன், இரண்டு மாதங்கள் ஆயின, அதன்பிறகு ஒரு சேம்பர் ஒதுக்கப்பட்டது, அதிலும் ஏற்கெனவே ஏழு எட்டு பேர்கள் இருந்தார்கள், அவர்களுக்கே இடம் போதாமல் இருந்தது. இந்த நிலைமையில் வக்கீல்களுக்கு சரியான இடவசதி இல்லாத நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே அடிஷனலாக ஒரு சேம்பர் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், வக்கீல் குமாஸ்தாக்கள் இருக்கிறார்கள். அவர்கள் இல்லாமல் எந்த பேப்பரும் மூவ் ஆக முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அவர்களுடைய குறைகளையும் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இது தவிர, வழக்கு மன்றத்தில், ஜுடிஷியல் ஆபீஸர்கள் அல்லாத ஸ்டாஃப் நிறைய பேர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு வீட்டு வசதி கிடையாது. இவர்களுடைய கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றுவதற்குரிய வாய்ப்பு இல்லாமல் இருந்தது. ஆகவே இவர்களுடைய கஷ்டங்களையும் நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு பல நீதி மன்றங்களைப் பொறுத்தவரை நம்முடைய அரசாங்கத்தின் கொள்கை 'டீ-சென்ட்ரலைசேஷன் ஆப் பவர்ஸ்'

(decentralisation of Powers) என்று சொல்லப் படுகிறது. எனவே, பரவலாக நீதிமன்றங்கள் அமைப்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. அதைப்போல், நம்முடைய தென் ஆற்காடு மாவட்டத்தில், விருத்தாசலத்திலே ஒரு சப்-கோர்ட்டு அமைக்கப்பட வேண்டுமென்கின்ற கோரிக்கை சொல்லப் பட்டு, அந்த கோரிக்கை இப்போது தலைமை நீதிபதியின் பரிசீலனையில் இருப்பதாக நான் அறிகிறேன். அந்தக் கோரிக்கையை பூர்த்தி செய்து தரவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நீதியைப்பொறுத்தவரையில் 'Justice should seem to be done' என்று சொல்லப்படுகிறது. அப்படி நல்ல முறையிலே நிறைவேற்றப்பட வேண்டுமென்ற கொள்கை இருக்கிறது. ஆனால் நான் இந்த நேரத்தில் பத்திரிகைகளில் வந்த இரண்டு பரபரப்பான வழக்குகளைப் பற்றி இந்தச் சபையின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன். சென்னை மாநகரத்திலே, ஒரு பிரபலமான வழக்கு இது. இந்த வழக்கு நீதிமன்றத்திற்கு கொண்டு போகப் பட்டது. இதிலே முக்கியமாக நான் பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. 4(1) ஜே ஆக்ட்படி வழக்குத் தொடரப்பட்டு அதற்கான சார்ஜ் ஷிட் போடப்பட்டு, போலீஸ் தரப்பிலே ஒரு பெண்ணை அதற்குச் சாட்சியாக அவர்கள் போட்டிருக்கிறார்கள். ஆனால், நீதிமன்றத்திலே அந்த சாட்சி விசாரிக்கப்படவில்லை. நீதிபதி ஜட்ஜ்மெண்ட் சொல்லும்போது இதைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார். Non-examination of that lady is fatal for the prosecution என்று அவர்கள் இதைக் கண்டித்திருக்கிறார்கள். ஒரு கேள்வி கேட்கலாம். நீதிபதியே அந்தச் சாட்சியை சம்மன் செய்து, விசாரித்திருக்கலாமே என்று கேட்கலாம். ஆனால், அதற்கான காரணம் எனக்குத் தெரியாது. ஆனால் நீதிபதி அவர்கள் பிராசிகியூஷன் தரப்பில் சாட்சி விசாரிக்கப்படவில்லை என்று கண்டித்திருப்பதை, அப்படி விசாரிக்காதது என்ன நியாயம் என்று கேட்டிருப்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது ஒரு உதாரணம். இது போன்ற பலவழக்குகளில் நியாயம் கிடைக்கவில்லை. இதை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

சேலம் மாவட்டத்தில் ஒரு பரபரப்பான வழக்கு. இந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட குற்றம் சாட்டப்பட்டவர் சார்பிலே ஒருவர் உயர்நீதி மன்றத்திலே ஒரு ரிவிஷன் பெடிஷன் போட்டிருக்கிறார். அதிலே, இந்தகேசைவேறு ஊருக்கு, வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார். அதற்கு அவருக்கு உரிமை இருக்கிறது. அதை நான் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அரசாங்கம் அம்மாதிரி ஒரு பெடிஷன் போட்டு, வேறு நீதிமன்றத்திற்கு மாற்ற வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அப்படி அரசாங்கத்தின் சார்பாக ஒரு

வழக்கை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென்று ஒரு விண்ணப்பத்தைப் போட்டுவிட்டு, அரசாங்க சார்பில் உள்ள ஒரு வழக்கறிஞர் அதை நடத்தாமல் ஏன் காலங் கடத்த வேண்டுமென்று கேட்கிறேன். எல்லோருக்கும் நியாயம் கிடைக்கவேண்டும். இந்த அரசுக்கும் அம்மாதிரி நியாயம் கிடைக்க வேண்டும். ஆனால் இதிலே கால தாமதம் ஏற்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பப்ளிக்மென் (கிரிமினல் மிஸ்கான்டக்ட்) ஆகட் [Public Men (Criminal Mert conduct) Act] என்று ஒன்றிருக்கிறது. இது நல்ல எண்ணத்தோடு கொண்டு வரப்பட்ட சட்டமாகும். வேறு எந்த மாநிலத்திலும் இந்தச்சட்டம் கொண்டுவரப்படவில்லை. இன்றைக்கு மத்திய சர்க்கார் 'லோக் பால்' என்று கொண்டு வந்திருக்கிறார்கள். இப்போது நேரமில்லாத காரணத்தால், அதைப் பற்றி நான் விவாதிக்கவில்லை. இப்போது இந்தச் சட்டத்தின் மூலமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. ஆனால் இன்று அந்தச் சட்டத்தை ரத்து செய்யவேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்கள். எனக்கு இருக்கிற சந்தேகம் எல்லாம், சில பேர்களுக்கு இந்தச் சட்டம் பாதகமாக இருக்கின்ற காரணத்தால், அவர்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அவர்களுக்குச் சாதகமாக இந்தச் சட்டம் வாபஸ் வாங்கப்படுகின்றதோ என்று. ஆகவே, இந்தச் சட்டத்தைப் பற்றியும் அரசாங்கம் எண்ணிப் பார்க்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு முக்கியமான கோரிக்கையை இந்தச் சபையின் தலைவர் அவர்கள் மூலமாக, சட்ட அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். சட்டசபை நூல் நிலையத்தைப் பொறுத்தவரையில், அங்கு சட்டப் புத்தகங்களை அதிகமாக கிடையாது. அதிலும் முக்கியமாக, ஒரு ஜீ. ஓ. வேண்டுமென்று கேட்டால், அந்த ஜீ. ஓ. சம்பந்தப்பட்ட இலாகாவைக் கேட்கவேண்டுமென்று சொல்கிறார்கள். இந்தக் குறைபாடுகள் முன்பே இருந்திருக்கலாம். ஆனால், நான் இப்போதுதான் லைப்ரரிக்குப் போகிற நிலைமை இருக்கிறது. அந்த ஜீ. ஓ. வேண்டுமென்று சொன்னால், அதிகாரிகளைக் கேட்டால் அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம், அதிகாரிகள் கொடுப்பார்கள். அதிலே எந்த விதமான கருத்துவேறுபாடும் இல்லை. இருந்தாலும், அரசாங்கத்தில் இப்படி ஒரு ஜீ. ஓ. போடும்போது அந்த ஜீ. ஓ-க்களின் நகல்களில் 10, 20 நகல்களை லைப்ரரிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் சட்ட அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

சட்டசபை நடவடிக்கைக் குறிப்பு புத்தகங்கள் வேண்டுமென்று கேட்டாலும் இதே நிலைதான். ஒரு காப்பிதான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, சட்டசபை நடவடிக்கைக் குறிப்பாக இருந்தாலும், பாராளுமன்ற நடவடிக்கைக் குறிப்பாக. இருந்தாலும் அதிலேயும் 10, 20 காப்பிகள் லைப்ரரிக்கு அனுப்பி வைத்தால் உதவியாக இருக்கும் என்கின்ற கருத்தைத் தெரிவித்துக்கொண்டு, இதையும் சட்ட அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-50]

சிறைச்சாலை பற்றி ஒரே ஒரு கருத்தைச்சொல்லவிரும்புகிறேன். சென்னை சிறைச்சாலை கொடுமைகள் பற்றி விசாரிக்க ஒரு நீதிபதியை-ரிடையர்டு ஜட்ஜை நியமிப்பதாக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்த நீதிபதியை உடனடியாக நியமித்தால் பலன் தரும். Disappearannce of evidence.
காலம் கடந்தால் தடயங்கள் இல்லாமல் போய்விடும். வக்கீல் கிளார்க்ஸ் கஷ்டங்கள், காப்பியிங் செக்ஷனில் உள்ள குறைகள், மபசில் பார் அசோசியேஷனில் போதுமான வசதிகள் இல்லாத குறைகள் ஆகியவற்றைப் போக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். திரு. துரைமுருகன் அவர்கள் வேலூர் சிறைச்சாலையில் மிசா கைதிகளிடம் பணம் வசூலித்ததாகச் சொல்லுகிறார், அதையும் விசாரிக்க வேண்டுமென்று கூறி இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. மு. கருணாநிதி</u> : தலைவர் அவர்களே, சட்ட அமைச்சர் அவர்கள் பதில் அளிப்பதற்கு முன்பு ஒரு முக்கியமான விஷயத்தைத் தங்களுடைய கவனத்திற்கும் சட்ட அமைச்சர் கவனத்திற்கும் கொண்டுவர விரும்புகிறேன். தயவு செய்து சட்ட அமைச்சர் அவர்கள் சிறை மானியத்தினுடைய தமிழ் நூலையும் அதைப் போலவே ஆங்கிலத்தில் அச்சடிக்கப்பட்ட நூலையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தமிழில் தரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைக்கும் ஆங்கிலத்தில் தரப்பட்டுள்ள மானியக் கோரிக்கைக்கும் இடையே நிறைய வேறுபாடுகள், பெரும் தவறுகள் இருக்கின்றன. அடிக்கடி இந்த மன்றத்தில் இப்படிப்பட்ட குறைபாடுகள், ஒவ்வொரு மானியக் கோரிக்கையிலும் பேசுகின்ற உறுப்பினர்களாலும், நாங்கள் பேசுகின்ற நேரத்திலும், குறிப்பாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் பேசிய நேரத்திலும் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். இப்போது, நான் கூறுவது இனிமேல் இத்தகைய குறைபாடு வராமல் இருப்பதற்காகத்தான் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

உள்துறை (சிறைகள்) என்ற தலைப்பிலுள்ள புத்தகத்தில் தமிழில் 21 ஆம் பக்கம் 'இணைப்பு 2' என்ற தலைப்பில் 1970-71 முதல் 1976-77 வரை சிறைத் துறையின் வரவு, செலவையும் 1977-78-ம்ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டையும் குறிக்கும் அட்டவணை என்று போடப்பட்டிருப்பதில் 'வரவு' என்று ஆரம்பமாகியிருக்கிற தலைப்பு ஆங்கிலத்தில் 'எக்ஸ்பென்டிச்சர்' என்று போடப்பட்டிருக்கிறது. 'எக்ஸ்பென்டிச்சர் ' என்பதற்கு 'வரவு' என்பது தமிழ் மொழி பெயர்ப்பா அல்லது 'வரவு' என்ற தமிழ்ச் சொல்லுக்கு 'எக்ஸ்பென்டிச்சர்' என்பது ஆங்கில மொழி பெயர்ப்பா ? புரியவில்லை. இந்த அவையில் ஆங்கிலம் படித்து புரிந்து கொள்பவர்களைக் காட்டிலும் தமிழில் புரிந்து கொள்ளும் உறுப்பினர்கள் அதிகமாக இருக்கிறார்கள் என்பது பல நேரங்களில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. பெரிய முரண்பாடு 1971-72-ல்வரவு என்பதில் 2,57,64,000, 1972-73-ல் 2,69,32,000, 1973-74-ல் 3,15,13,000, 1974-75-ல் 2,86,34,000, 1975-76-ல் 4,86,50,000, 1976-77-ல் 4,65,11,000 1977-78-ல் 4,24,79,000 என்றும் மீண்டும் 1971-72, 1972-73, 1973-74 என்று தொடருகிறது. இதைப் பெரிய தவறு என்று குறிப்பிடவேண்டும். ஆங்கிலத்தில் 'எக்ஸ்பென்டிச்சர்' என்று போடப்பட்டிருக்கிறது. 1971-72-ல் ஆரம்பித்து 1977-78 வரை முடிகிறது. ஆங்கிலப் புத்தகம் 17ஆம் பக்கத்தில் இரண்டாவது பகுதியாக 'ரெசிப்ட்ஸ்' என்று போடப்பட்டிருப்பது தமிழ்ப் புத்தகத்தில் வரவு என்ற தலைப்பின் கீழேயே இரண்டாவது முறையாகத் திரும்பச் சொல்லப்படுகிறது. ஆங்கிலத்தில் சரியாக இருக்கிறது. தமிழில் முழுவதும் தவறாக இருக்கிறது. இனிமேல் தமிழில் வெளியிடப்படுகிற இத்தகைய நூல்களில் குறைபாடுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. THIRU K. NARAYANASAWAMI MUDALIAR: I straightaway apologise to the House for these grave mistakes committed staff of the department.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்</u> : மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் விவாதத்திற்குப் பதில் கூறுவார்கள்.

*THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Deputy Speaker, Sir, I am bound to express my sincere gratitude and appreciation of the sentiments of most of the speakers expressed in the hope that some of the grave irregularities or defects in the jail administration and in the administration of justice may be either corrected or remedied in course of time by this Government.

[திரு. கே. நாராயணசாமி முதலியார்] [1977 ஆகஸ்டு 16

I am beholden to the hon. Member, Thiru Suppu for his speech covering a vast ground but in the limited time available to me, I will try to cover as vast a ground as possible. The hon. Member, Thiru Suppu spoke about the prejudices perpetrated on the MISA prisoners during Emergency period. I think they will all be a subject-matter of some enquiry in due course of time. That would be a kind of prefactory work for the Government to look into the grievances of the prisoners that have been done subsequently.

The hon. Member ThiruSuppu spoke about thelifers and compared to the condition in some of the neighbouring States. The lifers, people who have been imprisoned for life are generally released after 10 years, after they obtained certain remissions. But so far as this State is concerned, the main and principal purpose of jail administration being the rehabilitation of prisoners, most of them are advised by the Advisory Board and by concerned authorities to spend sometime in what is called "After-care Homes" so that they might learn some trades like carpentry or some other trade which might be useful vocation when they return to normal life as free men. There was again reference to Kerala Reform and that Kerala Government has liberalised jail administration. Well, I should be very happy to read the Kerala Government's reformtory measures undertaken by that, a Government. The other day the Hon. Minister for Andhra State, the Hon. Minister for Law and Jails, and Courts, met me and in fact requested me to visit some of the old Telengana Jails which were much more spacious than the old jails of the composite State, where in a part of Andhra State was situated. The Hon. Law Minister of the Andhra Government particularly requested me to visit the Tehir jail in Delhi, which has been conceived on modern lines. I hope I will get an opportunity to study these jails either along with committee's deliberations or independently of it in due course of time and when I assimilate some of these improvements effected elsewhere, I will be losing no time in implementing them in as early a manner as possible.

[பிற்பகல் 1–00]

A number of speakers, Thiruvalargal Suppu and Jayavelu were concentrating more on the scope of the Madras Act of 1973. The hon. Member Thiru Koothakudi Shanmugam was very eloquent about the kingship of beedi in the kingdom of jail. The hon. Member, Thiru Sornam and also Thiru Pandian made reasoned speeches. Thiru Appannu Gounder of the Janatha Party made a very vigorous speech. Thiru Abdul Latheef made a gracious and eloquent speech and Thiru

1977 ஆகஸ்டு 16] [திரு. கே. நாராயணசாமி முதலியார்]

Sadiq Pasha covered about dozen points in his speech. I think it would be impossible for me to cover all the points one by one. All that I can tell you is that so far as Thiru Kothandaraman is concerned, he is a nexalite prisoner. I have no material to say whether he has not been involved in any other case and what term of imprisonment he had already undergone. I can tell you here, some years back, I have myself met him in the Office of John & Rao. I have known him personally. He is related to my old friend, one Mr. Ethiraj Reddy of Thimiri, who started his practice in Madras about 40 years back. He is related to him. I have absolutely no material to make observation on the floor of the House in regard to Thiru Kothandaraman is whether he released or otherwise.

A number of speakers have spoken about the diet and deficiency of diets, which would drive the prisoners even to exhibit their criminal proclivities. I do not know whether the jail officials would not envy the recommended diet of some hon. Members, especially when with their petty salaries, they watch the sumptuous meal before their eyes. Any way in addition to what is called Nutrition Scheme, which has been brought into force in the jail administration, other steps would be contemplated in due course certainly to give nutritive diets to the prisoners—at least to political prisoners and security prisoners. In fact, last night I was myself mistaken thinking about the imposition of regulation of 8 hours in jail, the extension of the experiment which is now going on in Salem, its extension to other jails. But the note gave me a jolt as it were, when it would result in tremendous expenditure, for which the State Government finances may not quite suffice. Anyway the eight hours work which is now experimented in Salem Jail is really worthy of experimentation and extension to other areas.

I shall rather strike a note about the monetary provision referred to by the hon. Member, Thiru Suppu about the security prisoners. I just now got a note saying that under certain sections it is purely discretionary grant. According to Rule 26(b), the Government may in their discretion and on application made to them by any security prisoner pay family allowances, etc., etc. I may straightway tell this house submit to this House with a sense of humility that this rule 26(b) is violative of Article 14. This is really no good law. It should be struck down as bad in law. No discretion should be left to any Officer. There must be a definite criteria or guidelines for allocating the family allowance or whatever allowance they are entitled to. You cannot say a Jail Superintendent or any other authority of Government can turn round and say 'Your face is black' I won't give Rs. 500 or your face is white and beatiful

[திரு. கே. நாராயணசாமி முதலியார்] [1977 ஆகஸ்டு 16

I will give Rs. 500. That is not the way in which the law has to be administered.

So far as the plea for the constituion of the Commission headed by a retired judge is concerned, it is under the serious consideration of the Government and I hope necessary steps will be taken sooner than later.

The hon. Member Thiru Suppu referred to Emergency and the absenee of rule of law. I may submit to the House that as one, who had founded the Human Rights Association in as early as 1963 or 1964, along with my beloved late lamented revered Anna. I have myself felt along with Mr. Suppu that not merely the Koilpatti prison house, but the whole country was like that, particularly the draconian measures were being contemplated with terrific severity without any care to human considerations.

About the legal aid to the poor—common man—even yesterday, I have already mentioned that only a lakh of rupees has been allotted this year and the entire experiment is in the stage of what I call it "trial and error". We are going to establish District Committees and along with them in smaller areas, Counselling Committees. They will give their assistance to indigent and poor litigants. The District Committees will engage some lawyers as indicated by the District Judges, which will be a judicial choice for the selection of lawyers for a particular case. There will be no governmental interference in the matter.

The hon. Member Thiru Veluchami was mentioning about section 4(1)(a) regarding chemical analysis, taking a long time. I do not know why it should take more than six months, unless the Chemical Analysis Office is overburdened. Otherwise there is no reason for this delay. One solution which could be reasonably considered is that one need not wait for six months and the party may be asked to appear after three months. A time-bound programme could be chalked out. We can give that facility. Of course, I do not know how many Magistrates would give thought to it, because I have no control over the judiciary. The particular party involved may be directed to appear before the Magistrate after three months instead of waiting for six months. That practical step may be taken by the Court.

The hon. Member also referred to the establishment of Court at Ottapidaram. I suppose we have already given enough indication that establishment of courts is purely dependent on the High Court's

1977 ஆகஸ்டு 16] [திரு. கே. நாராயணசாமி முதலியார்]

recommendation. We cannot arbitrarily decide on that. One strong sphere of the recommendation of the HighCourt is that there is one Committee called the "Jurisdication Committee". It has given its findings. They went through this aspect very elaborately. My recollection is this. When I was there three Judges made recommendations. In the light to their recommendation, the Hight Court makes recommendations with regard to the establishment of Courts. Therefore, I am not in a position to give a guarantee to the establishment of Court at Ottapidaram.

[பிற்பகல் 1-10]

So far as the integration of the...............

THIRU M. A. LATHEEF : So far as the particular requirements of a particular area are concerned, they represent the social aspirations of the people of that locality. Therefore, at least the views expressed by the hon. Members in this House may be forwarded to the High Court for its consideration.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : I want to assure the hon. Member, Thiru Latheef and other hon. Members that every view expressed in this House will be forwarded to the High Court for its very due and serious consideration and the matter will not be treated lightly either.

So far as the integration of the Judicial Magistrates is concerned that question is again before the High Court and we are still awaiting the report of the Chief Justice, as has been indicated in one of the monographs submitted to this House.

THIRU S. J. SADIQ PASHA : May I request the Hon. Minister for Law to persuade the Chief Justice to issue orders as early as possible. Already about 1 1/2 years are over and some persons are awaiting promotion opportunities. At least the Hon. Minister for Law could take up the matter to the Chief Justice so that orders are issued at an early date.

THE HON. THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Because it is an administraive matter, there is no delicacy on my part to speak to the Chief Justice when the occasion presents itself at the earliest opportunity. But this much I want to assure the hon. Member, Thiru Sadiq Pasha, that

necessary steps will be taken by the Government to apprise the anxiety on the part of this House and to get the final opinion from the Chief Justice.

Thiru Koothagudi Shanmugam also pleaded for a Committee. I want to inform the hon. Member that the constitution of the Committee is under the contemplation of the Government and, as I have already indicated, an announcement may be made sooner, than I hope later.

The hon. Member Thiru Koothagudi Shanmugam also pleaded for the establishment of a Court in Ramanathapuram district. Those who come from the Ramanathapuram district must be knowing more about the geographical peculiarities of the district. It is a far-stretched coastal district and I think time and again a number of judicial authorities as well as executive authorities and several other persons have given thought to this aspect and the nearest place for a litigant from the farthest corner of the Ramanathapuram district seems to be only Madurai. Otherwise a litigant from West Ramanathapuram district will find it very difficult to go to Sivaganga through Madurai (Interruption). My own feeling is that the Ramanathapuram district should be divided into two and there should be two district courts, one for the litigant from west Ramanathapuram and another for East Ramanathapuram at Sivaganga. Unless that compromise is done. I do not think it will be possible now to shift the courts from Madurai to any part of the Ramanathapuram district......

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : துணைத்தலைவரவர்களே, நான் குறுக்கிடுவதற்காக வருத்தப்படுகிறேன். இருந்தாலும்கூட அவசியமான முறையில் தூரம் என்பது பெரிய விஷயம் அல்ல. டெல்லி தலைநகரம் கூட கன்னியாகுமாரிக்கும் தூரமானது சென்னை நகரம் தமிழ்நாட்டின் தலை நகரம், அது கன்னியாகுமரிக்கு தூரம் தான். ஆகவே, அந்த மாவட்டத்திற்குள் ஏதாவது ஒரு இடத்தில் வைத்தால் நல்லது. அந்த மாவட்டத்தில் எந்த இடத்தில் வைத்தாலும் ஆட்சேபனை இல்லை தூரம் என்பது பற்றிய பிரச்னையை வைத்து அதை விட்டு விடக்கூடாது என்று சொல்லிக்கொள்கிறேன் அப்படிச் செய்வதால் அந்தப் பகுதி வளர்ச்சி அடைய வாய்ப்பு உள்ளதால் சொல்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : If the matter is one of local prestige and pride, I would be the first person to encourage it

After all, I as a native of the Ramanathapuram district, would not like to have my headquarters in a different district....(Interruption) East or West Ramanathapuram, it is my native place.

Then a reference has been made by another Member, Thiru Sornam about the scarcity of accommodation when 4,000 prisoners were packed during the time of emergency in the jails in the Tirunelvely district and the horrors committed while they were in jail custody during the emergency and later. That is a question of what is called providing sufficient accomodation in accordance with the Jail Regulations. When emergency does occur, these inconveniences have become inevitable concomitants.

So far as cases that were transferred from Coimbatore to Pollachi are concerned, I know Coimbatore lawyers are put to a lot of hardship in travelling a distance of 40 miles and then arguing cases and then coming back, and that the poor litigant has to bear extra expenditure for the extra journey that a Coimbatore lawyer has got to perform. I have no doubt that the cases were transferred to the Sub Court at Pollachi for the simple reason—at least a Sub Court has to sustain itself by sufficient litigation—that the Judge presiding over the Pollachi Court might not have enough work and therefore the Coimbatore cases must have been transferred. Anyhow if it is possible for what I call, the stoppage of Coimbatore cases being transferred to the Pollachi Court, it will be given due consideration ....(Interruption from Thiru K. Ramani ; Udumalpet also....) It is also about 40 miles, and the grievance of Thiru Ramani is also in my mind.

Then the hon. Member, Thiru Sadiq Pasha, would very much like to have a Sub Court especially at Udumalpet even at the expense of Coimbatore lawyers.

THIRU S. J. SADIQ PASHA : Since the Hon. Minister for Law has referred to me, I want to say that there are sufficient cases and a Sub Court can be located at Udumalpet. There is such a beautiful building constructed there. Even Madras Courts do not have such buildings. I would plead for the people of Udumalpet also that such a court should be continued there as there are sufficient cases. Wrong statistics had been given for that...........

THIRU K. RAMANI : Coimbatore lawyers have been suffering and they have to travel from one court to another along with the litigants. Secondly, the litigants themselves suffer. Thirdly, cases are getting

transferred while they are being heard in Coimbatore to other places. Therefore, they request that the transfer of cases from one place to another should be stopped........

திரு. எ. சுவாமிதாஸ் : துணைத்தலைவர் அவர்களேதிலு, எம் தமிழ் எங்கும் தமிழ் என்ற திட்டம் வைத்திருக்கும் நாம், சட்ட மன்றத்திலே தமிழை குறைத்துக் கொண்டிருக்கிறோம். இது முறை தானா? எனக்குக் கூட ஆங்கிலத்திலே பேசலாம் என்று தோன்றுகிறது.

மாண்புமிகு பேரவை துணைத்தலைவர் : ஆங்கிலத்திலே பேசலாம் என்று விதி இருக்கிறது. ஆங்கிலத்திலே பேசலாம் என்று ஏற்கனவே தீர்ப்பு பல முறை சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அவரவர்கள் இஷ்டப்படி நிச்சயமாகப் பேசலாம்.

THIRU K. NARAYANASWAMI MUDALIAR : Regarding the establishment of labour courts and industrial tribunals, the matter will be duly considered by the Government.

The hon. Member Mr. Pandian made a few suggestions for the expeditious disposal of the cases. Even the Central Government and other Arrears Committees have been at it; they have been at labour, they have been at pains to make various suggestions for the expeditious disposal of these cases and certainly Judges of Courts are seized of the urgency to the disposals. Mr. Pandian pleaded for some of the vacancies being given to district lawyers; because District Judge is promoted to the High Court as a Judge, equally there is reasonable ground for this but somehow the Law Commission headed by Mr. Setalvad has not encouraged that and they went to the extent of even saying that almost all the vacancies must go and must be recruited only from the Bar. That is the recommendation of the Setalvad Commission. But as a matter of practice and usage, some of the members of the subordinate judiciary are being promoted as Judges of the High Court and what pertains to the Judges may not necessary pertain to the leader of the Bar in the districts. One suggestion which has been welcomed by me and which is worthy of examination by Government is this, viz. that 'A' class prisoners must be made to reimburse the State Government for the expenses incurred for their maintenance in the jails but again there is one difficulty. A man may be rich before he goes to the jail, if he has made over all the properties,

I do not know what the recovery process will be. It will not be such an easy thing unless the properties are really in the name of the prisoner himself but anyway it is worth while to examine the suggestion. The suggestion must have been inspired by Mr. Pandian because everybody now is asking for 'A' class and one way to put down this practice will be to put an embargo so that there might be a kind of discouragement for asking for 'A' class. But anyway Mr. Pandian was saying that he lost Deputy Superintendent of Police place in selection some years back. Of course what is loss to the police is a gain to this House and to the politics of this State. The hon. Member Mr. Latheef has spoken about the vacancies of High Court Judges and said that due share should be given to the minorities. Due share to the minorities would be certainly born in mind by the Government but so far as selection of Judges to the High Court is concerned, I beg leave to tell this House that this always had been done strictly on the basis of merit. Somehow the practising lawyers of the Bar including law officers are considered and only they are chosen. Sofaras my knowledge goes, the concerned Article in the Constitution of India is not limited or abridged for any consideration of these things but if there is any distinguished lawyer among lawyers of backward classes and minorities, certainly I have no doubt that the Chief Justice will consider their claims, weigh them properly and make recommendations to the State Government and Central Government. The hon. Member Thiru Sadiq Pasha has pleaded for increase in the pay scales of the subordinate judicial officers. Certainly, I do not know the terms of reference of the Third Pay Commission and whether judicial officers would come in it. If they do come under it, I hope the Pay Commission would give proper attention and make necessary recommendations which will be implemented by Government in course of time.

The hon. Member Thiru Sadiq Pasha has pleaded for the minorities and depressed classes and said that due representation should be given to them in the coming seven vacancies. What I have already stated in reply to hon. Member Mr. Latheef will cover this also. Subject to the financial viability of the resources at the hands of the State, the amenities of staff members of the High Court in regard to their accommodation and other allied matters will be duly considered.

So far as establishment of sub-court at Vriddachalam is concerned, we are still awaiting the orders of High Court. The report is awaited. Once we receive the report, we will take necessary steps, consequential steps to implement them.

The hon. Member Thiru Sadiq Pasha has referred to two cases, one at Salem and one at Madras. I am not in a position to make any dogmatic statement about the failure of the prosecution in the first case and about what I call the lethargic delay on the part of the concerned parties in revision before High Court. Unless the hon. Member gives me the entire materials by way of reference to the case, it will not be possible for me to give straightaway a reply to the problems raised by the hon. Member Thiru Sadiq Pasha.

So far as Legislature library is concerned, I made a visit because I am trained to do some reading. My only pleasure in life has been reading before I became Law Minister. Striking a personal note, I may say that from my childhood I love to read lot of books. I got a few books from the Legislature library and I was not myself quite happy about the place and accommodation there. Even some members who are constitutionally-minded, who want to do some research on some problems, I do not think the atmosphere in the library is very hospitable. It is rather stony and forbidding. Therefore, I would very much like to plead with the Hon. Chief Minister for the better accommodation for library facilities. Here again I would like to refer to another pleasant anecdote. My revered brother used to tell me when he was a Member of the Rajya Sabha, that he used to see Hiren Mukerjee and that socialist M.P. who died Mr. Nath Pai and about five names he used to tell me, who were always reading and doing research in the Parliament Library. I was wondering how many of you would go into our library especially when you have the type of atmosphere when you do not even get copies of G.Os. I plead along with my friend Mr. Sadiq Pasha for the expansion of amenities and facilities for doing good amount of research in the State Legislative Assembly library.

Many members pleaded for constitution of a Committee by a retired Judge of High Court. As I have already indicated, steps are under contemplation of Government and an announcement may be made in due course.

மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் : பேரவையின் அனுமதியோடு பேரவையின் நேரம் 1½ மணிக்கு மேல் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ்: இன்றைய தினம் காலையில் கொண்டு வரப்பட்ட மானியக் கோரிக்கைகள் இன்னும் இருக்கின்றன. அவை எப்போது எடுத்து கொள்ளப்படும்?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர்:—இன்று மாலை 4.00 மணிக்கு அவை மீண்டும் கூட இருக்கிறது அப்போது அந்த மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

[பிற்பகல் 1.30]

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : There is only one point which I have got to meet and that is the criticism of Public Men (Criminal Misconduct) Act of 1973. Thiru Jayavelu has made elaborate criticism on that.

While I express my gratitude to the Hon. Deputy Speaker of the House for the extension of time, I would like to mention one aspect of this Act of 1973, Madras Act of 1973. The hon. Member, Thiru Jayavelu made an elaborate criticism of that Act pointing out various defects. The hon. Member Thiru Sadiq Pasha also perhaps felt that this Public Men Misconduct Act, 1973, may be scrapped because some are going to be affected by it. I have always felt one thing. Myself being trained in the Court for 40 years, I would request any Member to make a 'definite charge' or 'No charge'. I am saying this with some pains. I am not saying anything against anybody. I have got great respect for every Member. If a Member wants to make a charge, if a Member wants to formulate a charge, you tell it that this is the charge against 'A', 'B' or 'C' of the Ministry. When you do not say that, speculation goes along. I do want to dilate more on that. The speculation goes all along. Suppose there is a speculation against 'A' and he is the subject matter of ridicule talk to-day, 'B' is the subject matter of scandalous talk tomorrow, and 'C' is the subject matter of defamatory talk day-after tomorrow. Whenever there is a genuine plea or whenever there is a definite charge against misconduct of any Minister, let there be a definite charge, so that we can avoid speculation in the minds of the people. That is my plea. I beg leave to submit this in a spirit of humility and truthfulness, so that they may be above suspicion.

திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே குறிப்பிட்ட விஷயம் இந்த அவையில் பேசப்பட்டிருக்கிறது. இந்த மன்றத்தில் இந்தச் சட்டம் விவாதிக்கப்பட்டபொழுது, குறிப்பிட்ட அமைச்சர் மீது குற்றசாட்டு சொல்லப்பட்டது. அவர்களின் பெயரை சொல்ல வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வலியுறுத்துவதாக இருந்தால் சொல்ல தயாராக இருக்கிறேன்.

THE HON. THIRU. K. NARAYANASWAMY MUDALIAR : So far as this Act is concerned, there has been criticism and I have myself examined it. There is recently a Lok Pal Bill published by the Central Government. I have had an opportunity of going through the Third Report of Justice Venkatadri Commission of Inquiry, dated 15th April 1977. He

[திரு. கே. நாராயணசாமி முதலியார்] [1977 ஆகஸ்டு 16

has produced this Report after visiting Delhi, Haryana and a number of other places, after seing, reading and working of Commissions of Inquiry elsewhere and submitted his Report. He has made certain radical criticisms. Then the Advisor to Governor felt that it was not worthwhile to appoint an immediate successor to Justice Venkatadri at this stage. So things have taken such a turn. We are now faced with the question with all these defects whether this Government should continue this Act or repeal it. I am constrained to submit to the House that the repeal of the Act is under serious contemplation of the Government.

I now request the Hon. Members to withdraw their cut motions.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : தலைவர் அவர்களே, நன்நடத்தையைப் பொறுத்தவரையில் தனியாக அமைக்கப்படுமா என்று கேட்டேன், அதற்கு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. இரண்டாவது, அரசியல் கைதிகள் போராட்டங்களாக இருந்தாலும் சரி அல்லது வேறு எதுவாக இருந்தாலும், தனித் தனி வகையாகப் பிரிக்காமல், ஒரே வகையில் அமைக்கவேண்டுமென்று சொன்னேன். அதையும் விளக்க வேண்டும். மூன்றுவது இப்போது 1½ ரூபாய்க்கு நாம் எல்லோரும் வாங்கிச் சாப்பிடுகிறோம். ஜனதா சாப்பாடு என்று ஒரு ரூபாய்க்குப் போடுகிறார்கள். அது போதாது. அதைப்பற்றியும் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR : I am obliged to the hon. Member, Thiru Kuthakudi Shanmugam for reminding me of these points. All the three points would be seriously considered by the Government. The first suggestion made by the hon. Member is worthy of serious consideration by the Government because according to him there should not be any discrimination in the jail administration. The question of supplying Janatha meals was a commendable idea and it would be looked into and examined thoroughly. Due to non-availability of time, I am not able to deal with the points elaborately. I now request the hon. Members to withdraw their Cut Motions and vote the amount asked for by the Government.

(திரு. எ. சுவாமிதாஸ் இருக்கையிலிருந்து எழுந்திருந்தார்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மீண்டும் சபை 4 மணிக்கு கூட இருக்கிறது. அமைச்சர் அவர்கள் ஏதாவது விட்டிருந்தாலும், அந்த விவரங்கள் பற்றியும் கவனிப்பதாகச் சொல்லிவிட்டார்கள். ஆகவே, இத்துடன் விவாதம் முடிவு பெற்றது. இப்போது வாக்கெடுப்பு. கோரிக்கை எண் 13.

977 ஆகஸ்டு 16]

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், துரை முத்துசாமி, ரா. வரதராசன், கூத்தக்குடி ச. சண்முகம், ரா. மார்க்கபந்து ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி "நிதிக் கோரிக்கை எண். 13. நீதி நிர்வாகம்" என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,57,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திருவாளர்கள் க. சுப்பு, எம். அண்ணாமலை, கூத்தக்குடி ச. சண்முகம், ரா. மார்க்கபந்து ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

திருவாளர்கள் ஒ. சுப்பிரமணியன், ஜே. ஜேம்ஸ் ஆகியோர் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி. நிதிக் கோரிக்கை எண் 14, சிறைச் சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,34,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : வேறு மானியம் பிற்பகல் எடுத்துக்கொள்ளப்படுமா? அல்லது முதல் அமைச்சர் அவர்களின் பதில் இருக்குமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கனவே கேட்டுக் கொண்டதுபோல், பிற்பகல் 4 மணிக்கு தேநீர் வழங்கப்பட இருக்கிறது. அவை 4 மணிக்குக் கூடும்போது எதை முதலில் எடுத்துக்கொள்ளலாம் என்பதை முடிவு செய்யலாம்.

பேரவையின் அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4 மணிக்கு மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.42 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

[மாலை 4.00]

சட்டமன்றப் பேரவை மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. எஸ். திருநாவுக்கரசு அவர்கள் தலைமையில் கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மானியக்கோரிக்கைகள் மீது விவாதம். மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தீர்மானத்தை முன்மொழிவார்கள்.

(6) 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி).

(இ) கோரிக்கை எண். 25—சின்கோனு.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, ஆளுநர் அவர்கள் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

> ''நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின் கீழ் ரூ. 92,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, சின்கோனு சம்பந்தமான தொழிற்சாலைகள் ஆரம்பிப்பது பற்றி விவாதிக்க,

> ''நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகிற ரூ. 92,78,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்,''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

Thiru A. SWAMIDHAS : Sir, to discuss policy, I move 'That the allotment of Rs. 92,78,000 under Demand No. 25—Cinchona be reduced by Rs. 100'.

(எ) கோரிக்கை எண் 45—காட்டு வனத்துறை.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே ஆளுநர் அவர்கள் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்;

> ''நிதிக்கோரிக்கை எண் 45—காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,46,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழகங்ப்பெற வேண்டும்''

திரு. என். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, செஞ்சி வட்டத்தில் அமைந்துள்ள காடுகளில் புதிய மரங்களை நடவும் இருக்கின்ற மரங்களைப் பாதுகாக்கவும் வேண்டியது பற்றி விவாதிக்க—

> ''நிதிக் கோரிக்கை எண் 45—காட்டுவளத்துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,46,28,000ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, தகுதியான காட்டிலாக்கா இடங்களில் தென்னை பயிரிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைக் குறிப்பிட்டு விவாதிக்க—

> ''நிதிக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,46,28,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, வனங்களிலும் மலைகளிலும் உள்ள எல்லா மரங்களையும் அழித்துக் கொண்டிருப்பதால் தமிழ்நாட்டில் எல்லா பகுதிகளும் குறிப்பாக கன்னியா

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1977 ஆகஸ்டு 16

குமரி மாவட்டத்தில் மழை குறைந்து வருகின்ற நிலையில் வனங்களிலுள்ள மரங்களை வெட்ட ஏலத்திற்கு விடப்படுவதைத் தடுத்து மரங்களைப் பாதுகாக்கும் ஏற்பாடுகள் செய்வதற்கான திட்டமிடப்படாதது குறித்து விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,46,28,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

''நிதிக்கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,68,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, முதுமலை போலும் வனவிலங்கு சரணாலயங்களில் மேலும் வசதிகளைப் பெருக்க வேண்டும் என்பதைப்பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,68,21,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU A. SWAMIDAS : Sir, to discuss policy, I move.........
''That the allotment of Rs. 3,68,21,000 Demand No. 55—Capital Outlay on Forests—be reduced by Rs 100''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மன்றத்தின் முன்னால் வைத்திருக்கும் மானியக் கோரிக்கைகளின்மீது அரசுத் தரப்பில் கொள்கை

1977 ஆகஸ்டு 16] [திரு. க. உரொ. எட்மண்ட்]

விளக்கங்களை @ அச்சடித்து மன்ற உறுப்பினர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதை நான் வாசித்ததாக ஏற்றுக்கொண்டு அவை நடவடிக்கைக் குறிப்பில் ஏற்றும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்த பின்னால் நான் பதில் கூற இருக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்திருக்கும் மானியக் கோரிக்கைகளின் மீது எங்கள் கட்சி சார்பாகக் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஒட்டிச் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நமது மாநிலத்தைப் பொறுத்தமட்டில் காட்டுப் பரப்பளவு இருக்க வேண்டிய அளவுக்கு இல்லை. ஏறத்தாழ 33.3 சதவிகிதம் இருப்பதற்குப் பதிலாக 16 சதவிகிதந்தான் இருக்கிறது என்று அறிக்கையிலேயே கூறப்பட்டிருக்கிறது. காடுகள் இயற்கை வளங்களைக் கொடுக்கிறபோது மரம், விறகு, தழை உரங்கள் போன்ற அத்தியாவசியப் பொருள்களைக் கொடுப்பதோடு விவசாயத் தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்பையும் கொடுக்கிறது.

அதோடு பல்வேறு தொழில்களுக்குத் தேவையான மூலப் பொருட்களையும் காட்டு இலாகாவிலிருந்து நாம் பெற்றுக் கொண்டே இருக்கிறோம். குறிப்பாக, பேப்பர் தொழிலுக்குத் தேவையான பேம்பு போன்ற மூலப்பொருட்கள் எங்கள் பகுதிகளிலே உள்ள காடுகளிலிருந்தும், திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கின்ற காடுகளிலிருந்தும் செங்கோட்டைப் பகுதிகளிலிருந்தும் ஏராளமாகக் கிடைக்கிறது. இந்த மூலப்பொருட்களைக் கொண்ட இந்த சன் பேப்பர் மில் என்ற மில்லை நடத்து கொண்டிருக்கிறது என்பதை இந்த அறிக்கையில் பார்க்கிறோம். 1976-77 ஆம் ஆண்டிலே ஏறத்தாழ 3,543 டன் ரீட் இந்த வன இலாகாவிலிருந்து கொடுக்கப்பட்டதாக இந்த அறிக்கையிலே தரப்பட்டு இருக்கிறது; ஆனால் இத்தனை டன்கள் கொடுத்த தன் பயனாக அரசுக்கு எத்தனை லட்சம் ரூபாய் வந்தது என்றோ அல்லது டன் ஒன்றுக்கு என்ன நிரக்கு வாங்கப்பட்டது என்றோ கொடுத்த முறை என்ன என்றோ இங்கே கொடுக்கப்படவில்லை. கடந்த ஆண்டு. கடந்த ஆண்டு என்கிறபோது 1975 ஆம் ஆண்டு நான் இதே மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது அன்றைய தினம் மிகக் குறைந்த நிரக்கலில் கீத்தலை அந்த பேப்பர் மில்லுக்குக் கொடுத்து இருக்கிறோம் என்று சுட்டிக் காட்டியிருக்கிறேன். பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஏற்படுத்தப்பட்ட நிரக்குக்கு இன்றைய தினம் கொடுத்துக் கொண்டு

@249—277ம் பக்கங்களிலுள்ள இணைப்புகள் IV, V ஆக அச்சிடப் பெற்றுள்ளன.

இருக்கிறோம், அதனால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாய் மிக அதிகமாகப் பாதிக்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ அரசுப் பொறுப்பிலிருந்து ஒரு அமைச்சரின் உறவினராக இருந்தவர் அந்த மில்லை நடத்துகிறார் என்ற காரணத்தால் அன்றைய தினம் அந்தப் பொருட்கள் நியாயமான விலைக்குக் கொடுக்கப்படாமல் மிகக் குறைந்த விலைக்குக் கொடுக்கப்பட்டது என்பதைச் சுட்டிக்காட்டினேன். இப்போதாகிலும் இந்தப் பொருள்களுக்கு நியாயமான விலை போட்டிருக்க வேண்டும். பண்டைய காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நிரக்குக்கு இன்னும் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்று சொன்னால் ஏதோ பேவரிட்டிஸம் காட்டிக் கொண்டிருக்கிறது இந்த அரசாங்கம் என்றுதான் நினைக்கத் தோன்றுகிறது. எனவே இனிமேலாவது—இதுவரையில் அந்த மில்லுக்கு கொடுத்ததால் ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று விசாரித்துப் பார்த்து—நியாயமான விலையில் சன் பேப்பர் மில்லுக்கு அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக மரம் நடு விழாவிற்காக ஆளுநர் தலைமையிலே ஒரு குழுவை அமைத்திருப்பதாக அறிக்கையிலே காணப்படுகிறது. ஆளுநர் எவ்வளவோ பெரிய பொறுப்புக்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது, அவர் மரம் நடுவதற்கு உண்டான இந்தக் குழுவின் தலைவராக நியமித்திருக்கிறோம் என்று சொன்னால் உண்மையிலேயே வியப்பாகத்தான் இருக்கிறது. ஏற்கனவே நெருக்கடி நிலை இருந்தபோது ஏதோ ஒரு விளையாட்டுத்தனமாக செய்யப்பட்ட அன்றைய தினம் இருந்த மத்திய அரசால் ஏற்பட்ட நிகழ்ச்சியே தவிர இது ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு புறம் மரம் நடுவிழா நடந்த போது எமர்ஜன்ஸி காலத்திலே மறுபுறம் மரம் வெட்டு விழாவும் நடந்துவிட்டது. என் பகுதியிலே எஸ். எல். பி. ஏ. பள்ளிக்கூடம் எவ்வளவு சிறந்த பள்ளிக்கூடம் என்பது இந்தத் துறையின் அமைச்சர் அவர்களுக்கே நன்றாகத் தெரியும் என்று நினைக்கிறேன். அந்தப் பள்ளிக்கூடத்தில் இருந்த சிறந்த மைதானத்தில்—அந்த மைதானம் அழகாக அமைந்திருந்தது—அந்த விளாகத்தில் இருந்த மரங்களை அன்றைய தினம் பிரதமர் வருகிறார் என்று தெரிவித்துக் வெட்டி வீழ்த்தினார்கள். அன்றைய தினம் மரங்களை வெட்டி வீழ்த்திவிட்டு பாரதப் பிரதமரின் மகன் கொண்டுவந்த திட்டம் என்ற பெயரால் அந்தத் திட்டத்திற்கு மரம் நடுவிழா என்று ஏற்படுத்தி—நான் இதை ஏளனம் செய்யவில்லை—இந்த விழா சம்பந்தப்பட்ட இந்தக் குழுவிற்கு ஆளுநர் தலைவராக இருக்கவேண்டுமா என்பதை சற்று சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4.10]

அடுத்து வனத்துறை சம்பந்தமாகப் பழங்குடி மக்களுக்காகப் பெரிய நன்மைகளைச் செய்வதாக அறிக்கையிலே காண்கிறோம். ஆனால் கன்னியாகுமரி மாவட்டத்தில் காணிக்காரர்கள் என்ற பழங்குடி மக்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த இலாக்கா எதையும் செய்வதாக அறிக்கையில் காணவில்லை. குறைந்த பட்சம் வனத்தில் ஐந்து ஏக்கராவது பயிர் செய்ய இடம் ஒதுக்க வேண்டும். அதோடு அவர்கள் சாதாரணமாகத் தொழுநோயால் பாதிக்கப்படுகிறார்கள். எனவே, அவர்கள் வாழும் இடத்தில் ஒரு ஆஸ்பத்திரியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தேயிலைத் தோட்டம் விரிவாகச் செயல்பட்டுக் கொண்டு இருப்பதாக அறிக்கையில் காண்கிறோம். எங்கள் பிர தேசத்தில் ஆங்கிலேயர் இந்த நாட்டை ஆண்டபொழுது நிர்வாகத்தில் இருந்த பல தேயிலைத் தோட்டங்கள் இப்பொழுது புழக்கத்தில் இல்லாமல் தள்ளி வைத்திருக்கிறார் கள். அதை அரசாங்கம் எடுத்துச் செயல்படுத்தினால் உண்மை யிலேயே அரசுக்கு அதிக நிதி வருவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஆனால் இப்பொழுது Abandoned எஸ்டேட்டாக இருக்கிறது என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

4,000 ஹெக்டேரில் இரப்பர் தோட்டங்கள் அமைப்பதாக அறிக்கையில் காணப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு வருவாய் வருகிறது. எவ்வளவு என்றால் குறைந்தது 2 கோடி ரூபாய் நெட் பிராஃபிட் வரும் நிலையில்தான் இந்தத் தோட்டங்கள் அமைக் கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்தத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களின் நிலைமைகளைப் பார்த்தால் உள்ள படியே தனியார் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கொடுக் கப்படும் அளவிற்குக்கூட சலுகைகள் கூட அரசாங்கத்தில் கொடுக்கப்படவில்லை என்பது நிச்சயமாக விரும்பத் தக்கது அல்ல. தனியார் தோட்டங்களில் வேலை செய்யும் தொழி லாளர்களுக்குக் கொடுக்கும் சலுகைகள், நன்மைகள் அனைத் தையும் அரசாங்கம் உடனடியாகக் கொடுக்க முயற்சியெடுக்க வேண்டுமென்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அந்தத் தொழிலாளர்களுக்குப் போக்குவரத்துக்காக லாரி, பஸ் வசதி கள் செய்து கொடுக்கப்பட்டிருந்தது. இப்பொழுது நெருக்கடி காலத்தில் அவை நிறுத்தப்பட்டிருக்கிறது. பஸ் வசதியோ, லாரி வசதியோ அவர்கள் தங்கியுள்ள இடத்திலிருந்து தோட் டத்தில் வேலை செய்யப் போகும் இடம் வரை வசதி செய்து

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 16

கொடுக்க வேண்டும். இல்லையென்றால் அவர்களுக்கு Bus fare ஆவது கொடுக்க அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மழை அலவன்ஸ் என்று இரண்டு ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. மழை தினத்தில் வேலை செய்ய முடியாது. வேலை ஸ்தலம் வரை போய்த் திரும்பி வர வேண்டும். எனவே, இரண்டு ரூபாய்க்குப் பதிலாக அன்றைய கூலியைக் கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு எந்த நிறுவனமும் வீட்டு வசதி செய்து கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறது. தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கப்படவில்லை. கொஞ்சம் கொஞ்சமாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் காட்டு வேலை செய்யும் தொழிலாளர் உட்பட அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வீட்டு வசதி செய்து கொடுக்க அரசு முயற்சிக்க வேண்டும்.

அங்கே 8, 9 தோட்டங்களாக அமைத்திருக்கின்றனர். அங்கே வேலை செய்யும் மூன்றாயிரம், நான்காயிரம் தொழிலாளர்களுக்குப் போதுமான மருத்துவ வசதி இப்பொழுது இல்லை, ஆகவே, தோட்டங்களில் மருத்துவமனைகளை அமைத்துத் தேவையான டாக்டர்களையும், மற்றவர்களையும் வைத்துத் தேவையான மருந்துகளைக் கொடுத்து அத்தியாவசிய சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அங்கே பணியாற்றும் ''வாட்சர்கள்'' 24 மணி நேரமும் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. ஒரு மனிதன் 24 மணி நேரம் வேலை செய்வது என்பதை ஒருவேளை அமைச்சரவர்கள் நம்பாமல் இருக்கலாம். ஆனால் உண்மையிலேயே நடப்பது அது. எனவே, 8 மணி நேரம்தான் வேலை செய்ய வேண்டுமென்ற ஒழுங்கை வகுத்துக்கொள்ள வேண்டும். தேவையானால் அதிகநேரம் வேலை செய்யும் வாட்சர்களுக்கு ஓவர் டைம் கொடுக்க வேண்டும். யூனிபார்ம் மற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போல் கம்பளி போன்ற மற்ற உரிமைகளையும் வழங்க அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு, அரசு ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் ''ஃபேமிலி பெனிஃபிட் ஸ்கீம்'' அமல் படுத்தப்பட்டு இடையில் மரணம் அடையும் தொழிலாளர்களுக்கு மற்ற அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுவதைப்போல பத்தாயிரம் ரூபாய் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

1977 ஆகஸ்டு 16] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அது மட்டுமல்ல, பிராவிடென்ட் ஃபண்ட் இதுவரையிலும் பலருக்குப் பிடிக்கப்படவில்லை. பிடித்தவர்களுக்குக்கூட ரசீது வழங்காத மோசமான நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, பிராவிடென்ட் ஃபண்ட் பிடிக்காத தொழிலாளர்கள் அனைவரிடமிருந்தும் பிராவிடென்ட் ஃபண்ட் பிடிக்கவேண்டும். பிராவிடென்ட் ஃபண்ட் பிடித்த தொழிலாளர்களுக்கு அதற்கான ரசீதை அரசு வழங்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஒரு தொழிலாளியைத் திடீரென்று பாம்பு கடித்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல ஆம்புலன்ஸ் இல்லாத காரணத்தால் அங்கிருந்த டி.எஃப்.ஓ.-விடம் ஆம்புலன்ஸ் கேட்டு அவரும் கொடுக்க மறுத்ததன் காரணமாக உடனடி சிகிச்சை கொடுக்க முடியாமல் பொன்னையப்பன் என்ற அந்தத் தொழிலாளி இறந்து விட்டான் என்று ரூல் 41 நோட்டீஸ் அரசாங்கத்திற்குக் கொடுத்திருக்கிறேன். ஆக இம்மாதிரியான திடீர் திடீர் விபத்துக்கள் காரணமாகத் தொழிலாளர்கள் மரணம் அடைகிறார்கள். ஆகவே இவற்றையெல்லாம் தவிர்க்க ஒவ்வொரு கட்டத்திலும் ஒரு ஆம்புலன்ஸ் எப்பொழுதும் இருக்க வேண்டும். ஏனென்றால் அந்தத் தோட்டங்கள் நடுக்காட்டில் இருக்கின்றன. அவர்கள் பட்டணத்திற்கு வரவேண்டுமென்றால் அல்லது மருத்துவ வசதியைப் பெற வேண்டுமென்றால் பக்கத்தில் ஆஸ்பத்திரி 10 மைல் 15 மைல் வந்துதான் மருத்துவ வசதியைப் பெற முடிகிறது. ஆகவே ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒரு ஆம்புலன்ஸ் என்று ஏற்பாடு செய்யவேண்டும்.

மத்திய அரசு கட்டாய சேமிப்பை உடனடியாகக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து ஏற்கெனவே அனைத்துத் தொழிலாளர்களுக்கும் முதல் கட்டமாக முதல் இன்ஸ்டால்மென்டைக் கொடுத்தாகிவிட்டது. ஆனால், இரப்பர் தோட்டத்தில் பணியாற்றுகிற எந்தத் தொழிலாளிக்கும் கட்டாய சேமிப்பு முதல் தவணை கூடக் கொடுக்கப்படவில்லை. (குறுக்கீடு) இரண்டு இன்ஸ்டால்மென்ட் கொடுத்ததாக மாண்புமிகு தொழிலாளர் அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் தொழிலாளர் நலத்துறை ஆதரவு இல்லாத காரணத்தால் அனைத்தையும் வன இலாகா அமைச்சர் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருப்பதன் காரணமாக —தொழிலாளர் இலாகாவிற்கு முறையிட்டால் அமைச்சர் என்னுடைய பார்வைக்கு வரவில்லை, வன இலாகா அமைச்சரிடம் செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள்—அதனால் வன இலாகா அமைச்சர் அவர்கள் பிரத்தியேகமாக இதில் கவனம் செலுத்தி இரண்டு தவணை பணத்தையும் ஒன்றாகக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முன்பெல்லாம், அந்தப் பகுதியில் தனியார் தோட்டத் தொழிலாளர்கள் 20 சதவிகிதம் போனஸ் வாங்கிக் கொண்டிருந்தார்கள், எமர்ஜென்ஸி வரையிலும். எமர்ஜென்ஸி எடுக்கப்பட்ட பிறகு, செட்டில்மென்ட் மூலமாக, அவர்கள் போனஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அரசு ரப்பர் தோட்டத்தில் பெருவாரியான இலாபம் வந்தும் தொழிலாளர்களுக்குப் போனஸ் கொடுக்கப்படவில்லை. கடந்த பல ஆண்டுகளாக இதனை வற்புறுத்தி வருகிறோம். ஆனால், இதுவரையில் அரசு இணங்கவில்லை. மக்கள் ஆதரவு பெற்றிருக்கிற இந்த அரசு, நிச்சயமாக இந்தப் பிரச்னையில் தலையிட்டு தொழிலாளர் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கும் என்று நான் எண்ணுகிறேன். ஆகவே, போனஸ் உடனடியாகக் கொடுக்க முயற்சி எடுக்கவேண்டும்.

1977-ல் 4185 என்ற ஒரு ஜி.ஓ. அந்த ஜி.ஓ. படி 1971 முதல் 1976 வரையிலே சி.எல்.ஆர்.-ஆக வேலை செய்த தொழிலாளர்களுக்குத்தான் மீண்டும் வேலை கொடுக்கப்படும் என்ற நியதி இருக்கிறது. இந்த ஜி.ஓ. ஏதோ இரகசியமாக தொழிலாளர்களைக் கலந்துகொள்ளாமல் எமர்ஜென்ஸி காலத்தில் நிறைவேற்றப்பட்ட ஜி.ஓ. ஆகவே, இந்த ஜி.ஓ. மாற்றப்பட்டு, 1965 முதல் சி.எல்.ஆர். ஆக இருந்த எண்ணற்ற தொழிலாளர்கள் இன்னும் வேலை கிடைக்கவேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். 1976 மார்ச் மாதம் வரையிலும் சி.எல்.ஆர். ஆகப் பணியாற்றிய தொழிலாளர்களுக்கு நிரந்தரமான வேலை வாய்ப்பு கொடுப்பதற்கு இந்த ஜி.ஓ.-வை மாற்றி, அவர்களுக்கும் வேலை கொடுக்க அரசு பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்துடன், இப்பொழுது வேலை செய்கின்ற தொழிலாளர்கள் அன்றாடம் கொண்டு வருகிற பாலின் அளவு அவர்களுக்கு ரிட்டர்ன் கொடுப்பதில்லை. இதனால் தொழிலாளர்கள் தங்கள் ஊதியத்தில் பெரும் இழப்பை ஏற்கவேண்டியுள்ளது. ஆகவே, தொழிலாளர்களின் நன்மையைக் கருதி, அவர்கள் கொண்டுவருகிற பாலின் அளவையும், அதோடு மற்ற பொருள்களின் அளவையும் குறைத்துக் கணக்கிடாமல் அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்பொழுதெல்லாம் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது; அத்தியாவசியப் பண்டங்களைத் தொழிலாளர்கள் வாங்க மிகச் சிரமமாக இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு கோட்டத்திலும் அரசு ஸ்டோர் அமைத்து, அத்தியாவசியமான பண்டங்களை நியாயமான விலையில் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

அத்துடன், 8, 9 கோட்டங்கள் இருக்கின்றன. ஆனால், சீஃப் கன்சர்வேட்டர் ஆஃப் பாரஸ்ட்ஸ் ஆஃபீஸின் தலைமைக் காரியா

லயம் நாகர்கோவிலில் செயல்படுகிறது. அதை நாகர்கோவிலிலிருந்து குலசேகரத்திற்கு மாற்றினால் அனைவருக்கும் சௌகரியமாக இருக்கும் என்ற ஆலோசனையை அரசுக்குக் கூறிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 4–20)

இன்னும் அந்தப் பக்கத்தில் ரப்பர் பிளான்டேஷனைப் பொறுத்தமட்டில் இன்னும் விரிவான சூழ்நிலை இருக்கிறது. பல கார்டுகள், ஃபாரஸ்டர்கள், ரேஞ்சர்கள் போன்ற அத்தனைபேர்களும் வேலை செய்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் பயிற்சி அளிக்க அங்கு ஒரு ஃபாரஸ்ட் டிரெய்னிங் ஸ்கூல் அமைத்தால் நலமாக இருக்கும் என்று ஆலோசனையை அரசுக்குக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு இப்போதெல்லாம் ரப்பர் பிளான்டேஷனைப் பொறுத்த மட்டில் இதுசம்பந்தமாக மத்திய அரசாங்கம் ரப்பர் போர்டு அமைத்திருக்கிறது. இது கேரளாவில் இருக்கிறது. அனைத்திந்தியாவிற்கும் இது ஒன்று தான் இருக்கிறபடியால் நமக்குக் கிடைக்க வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே, கேரளாவில் இருப்பதைப்போல் ஒரு ரப்பர்போர்டு தமிழ்நாட்டிலே அமைக்க அல்லது அதனுடைய கிளையை அமைக்க வேண்டும். இதற்கு மாநில அரசாங்கம் முயற்சி எடுக்கவேண்டும். மத்திய அரசாங்கம் எந்தெந்த அளவுக்குப் பண உதவி செய்கிறார்களோ அந்தப் பண உதவியை நாம் பெற வேண்டும்.

அதோடு பிளான்டேஷன் பாதுகாப்பு என்று ஒரு தலைப்பு இருக்கிறது. அடிக்கடி வன இலாகாவில் தீப்பிடித்து பல லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. குறிப்பாக ரப்பர் பிளான்டேஷனைப் பொறுத்தமட்டில் பல லட்சம் நஷ்டம் ஏற்படுகிறது. சம்மர் சீசனில் திடீரென்று தீப்பிடிக்கின்ற காரணத்தால் பல லட்சம் நஷ்டம் ஏற்படுகிறது. குலசேகரத்தை மையமாகக் கொண்டு Fire Service Station வைத்து ரப்பர் பிளான்டேஷன் பயனடையச் செய்யவேண்டும். வன இலாகாவுக்கும் பயனுள்ளதாக இருக்கும். தனியார் ரப்பர் தோட்டங்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்னும் இப்போது இங்கு 8 கோட்டங்கள் உள்ளன. ஒரு கோட்டத்தில் உள்ள பால் கீரிப்பாரை என்ற கோட்டத்திற்குக் கொண்டு வரப்படவேண்டியிருக்கிறது. அது சற்று காலதாமதம் ஏற்பட்டால் உறைந்து போகின்ற காரணத்தால் மாதந்தோறும் பல லட்சம் நஷ்டம் ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே கீரிப்பாரையில் இருப்பதைப்போல் மணலோடு என்னும் இடத்தில் ஒரு ஃபாக்டரி அமைத்தால் நஷ்டம் ஏற்படாமல் பாதுகாப்பதற்கு நலமாக இருக்கும். ஆகவே மணலோடு டிவிஷனில் ஃபாக்டரி அமைக்க அரசு ஆலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்டு 16

சாலை அமைக்கும் திட்டம், குலசேகரம் கோதையாறு இணைந்து ஒரு சாலை இருக்கிறது. அது கவனிப்பாரற்றுக் கிடக்கிறது. கோதையாறு, மின்சாரத் திட்டத்திற்கு அபிவிருத்திக்காக அமைக்கப்பட்ட திட்டம். அந்த மின்சாரத் திட்டம் அமைந்து போன காரணத்தால் போக்குவரத்து மேலும் தேவையில்லை என்ற காரணத்தால் சாலைகள் பராமரிக்கப்படாமல் இருக்கின்றன. ஆனால் இந்த ரூட்டில் இரண்டு பக்கத்திலும் ரப்பர் தோட்டங்கள் அமைந்திருக்கின்றன. ரப்பர் பிளான்டேஷன் இந்த ரூட்டுக்கு அத்தியாவசியம். இதனால் இந்த ரோட்டை வன இலாகா எடுத்து பராமரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராம்பு வளர்க்கும் திட்டம். அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது அதற்கு பூவைஎடுத்து கிராம்பு வளர்க்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இப்போதெல்லாம் இங்கே இருக்கிற பெரும் முதலாளிகள் கிராம்பு வளர்த்து, அதனால் பெரும் லாபத்தை அடைகிறார்கள். ஏழை விவசாயிகள் இந்தத் திட்டத்தால் பயனடைய முடியவில்லை. கிராம்பு கன்றுகள் இலகுவில் கிடைக்கவில்லை. இப்போதெல்லாம் கிராம்பு கன்றுகள் 10 ரூபாய், 15 ரூபாய் விலை இருக்கிறது. ஏழை விவசாயிகள் வாங்கி உபயோகிக்க வாய்ப்பு இல்லை. ஆகவே கிராம்பு கன்றுகளை வளர்த்து ஏழை விவசாயிகளுக்கு அரசு இலவசமாகக் கொடுத்தால் இந்தத் திட்டம் மேலும் ஏழைகளுக்குப் பயன்படக்கூடிய திட்டமாக இருக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அங்கே வன இலாகாவைச் சேர்ந்த செக்-போஸ்ட் 10 மைலுக்கு அந்தப்புறம் இருக்கிறது. செக்-போஸ்ட்டுக்கும் வனத்திற்கும் இடையே இருக்கும் விஸ்தீரணம் 10 மைலுக்கும் அதிகமாக இருக்கிறது. அந்தப் பகுதியில் சொந்தமாக நிலம் வைத்து இருப்பவர்கள் விறகு அல்லது மற்ற பொருள்கள் எடுத்துச் செல்ல வேண்டுமானால், அவர்கள் அந்தப் பட்டா, அந்த பூமியின் பிளான் இவற்றைத் தயார் செய்து கொண்டு, மற்ற ரிக்கார்டுகளையும் எடுத்துக்கொண்டு வில்லேஜ் ஆபீசரிடம் கொடுத்து No objection certificate வாங்கிச் சென்றால்தான் அந்த செக்-போஸ்ட்டுகளைத் தாண்டி அவர்களுக்குச் சொந்தமான விறகுகளை எடுத்துச்செல்ல முடியும். இந்த முறை ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் ஏற்பட்டது. அதை மாற்றி அமைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதெல்லாம் வன இலாகாவில் இருக்கும் அதிகாரிகளுக்கு போலீஸ் இலாகாவில் இருக்கும் அதிகாரிகளை விட அதிகமான அதிகாரம் இருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட

1977 ஆகஸ்டு 16] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அதிகாரத்தை யார் அவர்களுக்குக் கொடுத்தார்கள் என்பது தெரியவில்லை. சாதாரணமாகப் பெண்கள் அந்த வனத்திற்குள் சென்று விரல் பரிமாணம் உள்ள விறகுகளைப் பொறுக்கி எடுத்து வந்து சொந்த உபயோகத்திற்கு அல்லது ஓட்டலில் 2-3 ரூபாய்க்கு விற்று அன்றாடம் ஜீவிக்கும் ஏழைகளை அவர்கள் துரத்திப் பிடித்து அந்த அதிகாரிகள் செய்யும் அட்டூழியங்கள் சொல்லிமுடியாது. அப்படிப்பட்ட அதிகாரத்தை அவர்களுக்கு யார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. போலீஸ்காரர்கள் செய்யும் அநீதிகளைவிட, கொடுமைகளைவிட இவர்கள் அதிகமான அளவில் விளைவிக்கிறார்கள். ஆகவே, அப்படி அதிகாரத்தை வழங்கும் வகையில் வன இலாகா விதிகள் இருக்குமானால் அதை மாற்றி அமைக்கவேண்டும். அதற்கான ஏற்பாடுகளை அரசு எடுக்கவேண்டும் என்று சொல்லி, நான் சுருக்கமாகக் கூறிய சில கருத்துகளைக் கவனத்தில் கொண்டு, அக்கறை செலுத்தி, அதற்குத் தேவையான காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, அப்படிச் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு விடை பெறுகிறேன், வணக்கம்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்போது சின்கோனா, காட்டு வளத் துறை, காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பில் கொண்டு வந்து இருக்கக்கூடிய மானியக் கோரிக்கைகளின் மீது கலந்துகொண்டு ஒரு சில கருத்துக்களை உங்கள் முன்னால் சொல்வதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

காட்டு வளம் என்று சொல்கிறபோது, எனக்கு முன்னால் பேசிய அருமை ஜனதா கட்சித் தலைவரவர்கள் சொல்லியதைப் போல், காட்டு வளம் நாட்டிலே எப்படி இருக்கிறது என்பதைப் பார்க்கிறபோது நாம் எல்லாம் வேதனைப்பட வேண்டிய அளவுக்கு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாகவே காடு என்ற பெயர் இருக்கிறதே தவிர அந்தக் காடு என்ற இடத்தில் மரம் இல்லை, கொடி இல்லை, மட்டை இல்லை, குட்டை இல்லை, ஆடுமாடுகள் இல்லை என்கிற நிலையில் இருக்கிறது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நாட்டிலே நிலம் வைத்து இருப்பவர்களிடத்தில் கூட ஒரு ½ ஏக்கர் இருந்தால் அதில் 50 மரம் இருக்கும். ஆனால் இந்தக் காட்டிலே மரமே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

என்னுடைய காவேரிப்பட்டினம் தொகுதியில் மட்டும் இது வரையில் என்னிடத்தில் 324 பேர் பட்டா நிலம் வேண்டுமென்று மனு கொடுத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன். அங்கே நிலைமை எப்படி இருக்கிறது என்றால் அங்கே இருக்கக்கூடிய பெரும்பாலான விவசாயிகள் காடுகளுக்குப் போய் குடியேறி அங்கே அவர்கள் நவதானியங்கள் விவசாயம்

செய்து வருகிறார்கள். இந்த நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன், காடு என்ற ஒன்று இருப்பதாக ஏட்டிலே இருக்கிறதே தவிர அது பெரும்பான்மையாக நாட்டிலே இல்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் வசதி உள்ளவன் அந்த நிலத்தை மேய்ச்சல் நிலமாக ஆக்க வேண்டும் என்று கோரியும், வசதியற்றவர்கள் விளைச்சல் நிலமாக ஆக்கவேண்டும் என்று கோரியும் வருகிறார்கள். ஆனால் அரசு அதை வறண்ட காடாக வைத்து அழகு பார்த்துக்கொண்டு இருந்தது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை.

[மாலை 4.30]

இன்று இருக்கக்கூடிய நிலையில், மொட்டைத் தலைக்கு எண்ணெய் வாங்கியது எத்தனை ரூபாய், சிப்பு வாங்கியது எத்தனை ரூபாய் என்று கணக்கு எழுதுகிற அளவுக்குத்தான் நமது வன இலாகா இருக்கிறதே தவிர, நல்ல நிலையில் வன இலாக்கா எங்கள் பகுதியில் இல்லை. இப்படிப்பட்ட நிலை மாறி, உண்மையாக விவசாயம் செய்யக்கூடியவர்கள், ஏழைகள், எளியவர்கள், நிலமற்றவர்கள், ஆகியவர்களுக்கு இந்த காட்டு நிலத்தை பட்டா செய்து கொடுக்கக்கூடிய வகையில் நிலைமைகளை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யத் தவறினால், அவர்களுக்கு வேறு ஒரு இடத்திலாவது நிலத்தைக் கொடுத்து, அதைக் காடாக மாற்ற, மரம், மட்டை வைத்துப் பயிர் செய்ய வழிவகை செய்யவேண்டும்.

அதே நேரத்தில் காடு என்று சொல்லுகிறபோது எங்கள் தொகுதியில் கொத்தளம், குண்டான்காடு, சோக்காடு, மகேந்திரமங்கலம் ஆகிய இந்த பகுதிகளில் வாழ்வோர் காட்டில் வாழக்கூடிய அளவுக்கு தொகுதியில் இருக்கின்ற மக்கள் காட்டிற்குக் குடியேறி, அங்கே விவசாயம் செய்யும் அளவுக்கு இருக்கிறார்கள். அது அதிகார பூர்வமற்றதாக இருப்பதால், அவர்கள் நிரந்தர விவசாயம் செய்ய வழிவகை செய்ய வேண்டுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சின்கோனா என்ற தலைப்பின் கீழ் மானியக் கோரிக்கை வந்திருக்கிறது. இந்த சின்கோனா என்பது எப்படி ஏற்பட்டது என்று பார்க்கின்றபோது, இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னால், ஊட்டி என்ற பகுதியில் ஒரு மேனாட்டு இளவரசி தங்கியிருந்தபோது, அந்த அம்மையாருக்கு உடல்நலமில்லாமல் போய், அவருக்கு வைத்தியம் பார்த்த பலரும் அம்மையார் இதோடு தீர்ந்துவிட்டாள் என்று கைவிரித்துவிட்ட நேரத்தில் அந்த அம்மையாரை ஒரு அறையில் பூட்டிவிட்டு வெளியே

உட்கார்ந்து வேதனையுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அந்த நேரத்தில் அந்தக் காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு மாது, பச்சைமணி, பவளமணி என்று கூவிக்கொண்டு அங்கே வருகிறாள். "எங்கள் இளவரசி அசௌகரியமாக இருக்கிறாள், இந்த நேரத்தில் நீ இப்படி கூவிக்கொண்டு வருகிறாய், அரசி எப்படியும் செத்துவிடுவாள்" என்று அவர்கள் சொல்ல, நாளை இளவரசி இருக்க மாட்டார்கள் என்று அவர்கள் தெரிவிக்க, வந்த பெண் கதவைத் திறந்து சென்று உள்ளேயிருந்த இளவரசியைப் பார்த்துவிட்டு, நேராகக் காட்டுக்குச் சென்று ஒரு பட்டையைக் கொண்டு வந்து கஷாயம் வைத்துக் கொடுத்துவிட்டு பேசாமல் போய்விடுகிறாள். மறுநாள் காலை இவர்கள், அம்மையார் செத்துப் போய் இருப்பார்கள் என்று எண்ணி, அம்மையாரை அடக்கம் செய்ய வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு, கதவைத் திறந்து பார்க்கின்றபோது, அம்மையார் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு படித்துக் கொண்டிருந்தார்களாம். தாங்கள் கொடுத்த மருந்துகள் எல்லாம் உதவாமல் போய், தாங்கள் செய்ய முடியாத காரியத்தை, காட்டிலிருந்த பெண் கொண்டு வந்து கொடுத்த பட்டையில் கஷாயம் செய்துவிட்டதைக்கண்டு, இளவரசி உயிர் பிழைத்துவிட்டதைக் கண்டு, அது எப்படி என்று இளவரசி கேட்க, மீண்டும் அந்தப் பெண்ணைத் தேடிப்போய் என்ன பட்டை என்று கேட்டு தெரிந்துகொண்டு, அதற்கு அந்த சிமாட்டியின் பெயரான 'சின்கோனா' என்ற பெயரை வைத்தார்கள் என்று அறிகிறோம். இப்படிப்பட்ட நிலையில், இன்றைய தினம் சின்கோனா பெரும் அளவிற்கு வளரக்கூடிய பெரியதொரு திட்டமாக மாறியிருக்கிறது, இந்த சின்கோனா இப்போது பெருகியிருக்கிறது. அதன் வியாபாரம் பெருகியிருக்கிறது என்கிறார்கள். இதிலிருந்து நோயும் உலகில் பெருகியிருக்கிறது என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் இங்கே ஒரு 'அறிக்கையின் மீது பேசுகிறபோது மாண்புமிகு ஆளும்கட்சித் தரப்பில் பேசிய உறுப்பினர் கருத்தை அடுத்து, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நோய் உள்ளவர்களுக்கு மருந்து கொடுக்கலாம், நோய் இல்லாதவர்களுக்கு மருந்து கொடுத்தால் விபரீத நிலை ஏற்படும் என்று சொன்னார்கள். ஒரு கசப்பான உண்மையை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாட்டில் உள்ள அனைவரும் நோயாளிகள்தான். ஏனென்றால் நாம் சாப்பிடக்கூடிய அவ்வளவும் Chemical food. எந்த உணவை எடுத்தாலும் அரிசியா இருந்தாலும், கேழ்வரகாக இருந்தாலும், கீரையாக, இருந்தாலும், நாம் உண்ணும் உணவுகள் அனைத்தும் கெமிக்கல் ஃபுட்டாக இருப்பதால், நாம் அனைவரும் ஒரு வகையில் நோயாளிகளாகத்தான் இருக்கிறோம். நோய் வெளியே சொல்லக் கூடியதாக இருக்கலாம், அல்லது வெளியே சொல்லக் கூடாததாக இருக்கலாம்.

இப்படிப்பட்ட நிலையில் இது போற திட்டத்தைக் கொண்டு

வருகிறபோது, நோய் இல்லாதவர்களுக்கு மருந்து கொடுத்தால் விபரீத விளைவு வரும் என்றார்கள். அதுவல்ல. நாம் எல்லோரும் எப்படிப்பட்ட நிலையில் இருக்கிறோம் என்று பார்த்தால் அது சரியாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லி, இன்று இருக்கக் கூடிய இந்தச் சூழ்நிலையில், சின்கோனா வளர்ப்புத் திட்டம் பெருகி இருப்பதைக் கண்டு நான் உண்மையிலேயே வரவேற்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மலேரியா ஊழியர்கள் என்று வேலை செய்கிறார்கள். அவர்களுடைய நிலை மிகப் பரிதாபகரமானதாக இருக்கிறது. தமிழகத்தில் மலேரியா ஒழிப்புப் பணியில் சுமார் 4,000 பேர் வேலை செய்கிறார்கள் என அறிகிறோம்.

ஆனால் மலேரியா மிக அதிகமாக இருக்கக்கூடிய பகுதிகள் சேலம், கோவை, தர்மபுரி என்று சொல்கிறார்கள். ஆனால் இந்தப் பணியில் வேலை செய்யக்கூடியவர்களுக்கு, முதலில் இருந்து வேலை செய்பவர்களுக்கு 14—12—1977 முதல் பெர்மனென்ட் ஆர்டர் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ஏதோ இருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய பகுதியினருக்கு, மற்ற மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு, 1—7—1966 முதல் ''பெர்மனன்ட் ஆர்டர்'' போட்டிருக்கிறார்கள். நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அதில் வேலை செய்யக்கூடிய அத்தனைபேர்களையும் நல்லமுறையில் நிரந்தரமாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அடுத்து காலையில் நீதிபற்றி பேசியவர்கள் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். அதைப்பற்றி நான் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். மனு நீதி என்று சொல்கிறோம். தமிழகத்தில் மக்கள் மனு கொடுத்து நிதி அளிப்பதன் மூலம் தான் நீதி கிடைத்திருக்கிறது என்ற தகவல் நிறைய இருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : காலையில் அந்த டிமான்ட் முடிந்து, மாண்புமிகு மந்திரி அவர்கள் பேசி, கோரிக்கை நிறைவேறியாகிவிட்டது. இந்த மானியக் கோரிக்கை பற்றி பேசுங்கள்.

டாக்டர் கே. சமரசம் : அந்நிலையில் மனு கொடுத்து நிதி கொடுத்து நெஞ்சுக்கு நீதி கிடைத்ததாகப் பல தகவல்கள் உள்ளன; வேண்டுமானால் அந்தத் தகவல்களை நான் அரசாங்கத்திற்குத் தரத் தயாராயிருக்கிறேன். ஆகவே இந்தப் பிரச்சனைகளை எல்லாம் விசாரித்து மக்களுக்குச் சம நீதி கிடைக்கச் செய்ய வேண்டும். இந்தச் சூழ்நிலையில் வாதத்தில் வல்லவர் டாக்டர் கலைஞர் என்று தெரிந்த காரணத்தினால்தான் இந்த நாட்டு மக்கள் அவரை எதிர்க்கட்சித் தலைவராகக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும், நியாயத்தில் சிறந்தவர் வணக்கத்திற்குரிய

புரட்சித் தலைவர் என்பதால் அவர்களை ஆளும்கட்சித் தலைவராக, முதல்வராக மக்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்து * * * * * * * * என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : * * * * * என்று அவர்கள் சொல்கிறார்கள். allegation against Members of the House அதை வாபஸ் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : * * * * * * என்ற நினைப்பு மக்களுக்கு ஏற்படும். ஆதலால் அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே சமரசம் : வணக்கத்திற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உண்மையில் பேராசிரியர் அவர்களும், அருமை முன்னாள் அமைச்சரும் இந்நாள் உறுப்பினருமாகிய சாதிக் பாட்சா அவர்களும், மாயூரம் கிட்டப்பா போன்றவர்கள் பேசுகிறபோது நாங்கள் அவர்களும், இவர்கள் எல்லாம் பேசுகிறபோது அவர்கள் கருத்துக்கள் எல்லாம் அமைதியாக, அன்போடு அவர்கள் கருத்துக்கள் சொல்வதைக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனால் சுப்பு போன்றவர்கள் பேசுகிறபோது பல கருத்துக்கள் நல்ல முறையில் அமையாமல் இருக்கின்றன. (திரு. சி. ஆறுமுகம் எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : * * * * * * என்ற வாக்கியங்களை சபைக் குறிப்பேட்டிலிருந்து நீக்கி விட உத்தரவிடுகிறேன். அதன் தொடர்பாகப் பேசியதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

---

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாலை 4.37 4.39 இல் சில பகுதிகள் அகற்றப்பெற்றன.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, இந்த வனத்துறை மானியத்தின்பேரில் என் கருத்துக்களைச் சொல்ல முன் வந்துள்ளேன். நாட்டிலே காடு அதிகமாக இருக்கவேண்டும் என்ற கொள்கையை யாரும் மறுக்க முடியாது. அதிலும் குறிப்பாக தமிழகத்தில் காட்டு வளம், காட்டு விஸ்தீர்ணம் குறைவாக இருக்கிறது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன் அப்படிக் குறைவாக இருக்கிறது என்ற காரணத்திற்காக காட்டு வளர்ப்புக்கு லாயக்கில்லாத நிலங்களைச் சேர்த்து விஸ்தீர்ணம் காட்டுவதில் பயன் கிடையாது.

[மாலை 4.40]

மொத்தத்தில் 33 சதவீதம் காடுகள் இருக்க வேண்டும் என்றிருக்கிறது. ஆனால் நம்மிடமுள்ள விஸ்தீர்ணம் 16 சதவீதம்தான். வைத்திருக்கின்ற இந்த 16 சதவீத இடமும் காடுகள் வளர்ப்பதற்கு லாயக்கான இடங்களாக வைத்திருந்தால் நமக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனால் என்னைப் பொறுத்தவரையில் நான் சொல்ல விரும்புவது, காடுகளுக்கு லாயக்கற்ற ஏராளமான நிலங்கள் தரிசாகப் போடப்பட்டிருக்கின்றன. காடுகளுக்கும் பயன்படாத அளவில் இருக்கின்ற இந்த நிலங்களை வேறு காரியங்களுக்குப் பயன்படுத்தக்கூடாதா என்பதைத் தயவு செய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். காட்டு இலாகாவினர் ரிசர்வ் பாரஸ்டு என்று போட்டு வைத்திருப்பதைப் பரிசீலனை செய்து பார்த்து, எவை எவை காடுகள் வளர்ப்பதற்கு லாயக்கில்லையோ அவற்றை வேறு சாகுபடி செய்வதற்கு ஒதுக்கித் தரவேண்டும். இல்லையென்றால் வீணாகக் கிடந்துவிடும். என் தொகுதியில் கடற்கரை ஓரமாக 1,000 ஏக்கர் நிலங்களை காட்டு இலாகாவுக்கு என்று ஒதுக்கி வைத்திருக்கின்றனர். ஆனால் நிச்சயமாக இதில் மரம் வளரவே வளராது. அவ்வளவு சதுப்பு நிலம். அந்த நிலத்தையும் காட்டு நிலம் என்று தனியாக வைத்துக் கொண்டிருப்பதில் எந்தவிதப் பயனும் கிடையாது. இவற்றை நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுத்தால் அதில் நல்ல முறையில் நஞ்சை சாகுபடி செய்யலாம். ஆகவே இம்மாதிரியான காட்டு இலாகா ஒதுக்கி வைத்திருக்கும் இடங்களை விலக்கி நிலம் இல்லாதவர்களிடம் கொடுத்தால் நல்ல முறையில் சாகுபடி செய்யலாம். ஆகவே தான் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் இப்போது காட்டு இலாகாவினால் முதலீடு செய்யப்படுகிறது. ரப்பர் தோட்டங்கள், கிராம்பு தோட்டங்கள் இவையெல்லாம் பயன்படக்கூடிய அளவில் இருக்கின்றன. இவைகள் எல்லாம் நல்ல முதலீடு தான். பெரிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதற்காக எவ்வளவோ கோடிக்கணக்கில் நிதி ஒதுக்குகின்றோம். அதே போன்று காட்டு இலாகாவிலும் செய்யப்படுகின்ற முதலீடுகளுக்கும் நிச்சயமாகப் பயன் உண்டு.

ஏதோ பயன் இல்லாமல் போய்விடுமோ என்று நாம் கருதத் தேவையில்லை. ஆகவே இதில் துணிந்து முதலீடு செய்யலாம். அதிகமான முதலீடு செய்வதன் மூலமாக வேலையில்லாதவர்களுக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும், ஆகையினால் அரசு இதைப் பரிசீலனை செய்து, காடுகளில் மரம் வளர்ப்பதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நீண்டகாலமாக நான் சட்டப்பேரவையில் ஒரு கருத்தை வலியுறுத்திக் கொண்டே வருகிறேன். காட்டு இலாகாவிலிருந்து தென்னை வளர்ப்பதற்கும் முயற்சி எடுக்க வேண்டும் என்று. தென்னம் தோப்புகளிலிருந்து கிடைக்கின்ற வருவாயைப்போல் வேறு எதிலும் வருமானம் வருவதில்லை. தென்னை வளர்ப்பதற்கு லாயக்கான இடங்கள் காட்டு இலாகாவில் இருக்கின்றன. ஆகவே ஒரு பகுதியை தனியாக ஒதுக்கி மிக அதிகமான வருவாய் வரக்கூடிய தென்னை மரங்களையும் வளர்ப்பதற்கு முன் வர வேண்டும். ஒரு ஏக்கரில் தென்னை வைத்தால் 3,000 ரூபாய் வருவாய் வரும் என்று சொல்லப்படுகிறது. காட்டு இலாகாவிலிருந்து அதிகமான முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் தென்னை வளர்ப்பதற்கு ஏதாவது ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்று இந்த அறிக்கையில் துளாவி, துளாவி பார்த்தேன், எதிலும் காணப்படவில்லை. இதைப்பற்றி நான் நீண்ட காலமாக இந்தச் சபையில் பேசிக்கொண்டேயிருக்கிறேன். ஆனால் காட்டு இலாகா மூலம் ஏதாவது இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்தால் கிடையவே கிடையாது. ஆகவே தென்னை மரங்களை வளர்ப்பதும் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்டு இதற்கான முயற்சிகளை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்தில் பல மலைப்பகுதியான இடங்களில் காட்டு இலாகாவினர் பழத்தோட்டங்கள் வைப்பதற்கும், தென்னம் தோப்புகள் வைப்பதற்கும் ஏற்ற இடங்கள் இருக்கின்றன. இவைகளை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய ஜனதா கட்சித் தலைவர் அவர்கள் மரம் நடும் விழாவைப் பற்றி சற்று கிண்டலாகப் பேசினார்கள். மரம் நடும் விழா என்பது நீண்ட நாளாக நடைபெற்று வருகிறது. மரங்கள் வளர்க்க வேண்டும் என்று சொல்வது மிகவும் நியாயமானது. மரங்கள் வளர வளர, மழையும் பெருகும். விஞ்ஞான முறையில் பார்த்தால் கூட, மரங்கள் இல்லாதவாறு, காடுகள் அதிகமாக அழிக்கப்பட்டு விட்டதன் காரணமாகத்தான் மழைக் குறைவு ஏற்பட்டதற்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது

மரம் நடுகின்ற இத்திட்டம், ஜனதா கட்சித் தலைவர் இருந்த முந்திய காங்கிரஸ் கட்சி காலத்தில் போட்ட திட்டம் தான். ஆகவே, இதைக் குறை கூற வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எ. சுவாமிதாஸ்: மரம் நடும் விழா நல்ல திட்டம் தான், ஜேம்ஸ் அவர்கள் அதைக் குறை கூறவில்லை. அவர் குறிப்பிட்டது, இந்திரா அம்மையார் அவர்கள் வந்த போது, அதிகாரிகள் ஏராளமான மரத்தை அழித்தார்கள். மரம் நடும் விழா என்று சொல்லிவிட்டு, மரங்களை அழிக்கும் விழாவைத் தான் நடத்தினார்கள் என்று தான் சொன்னார்களே தவிர, மரம் நடும் விழாவைப்பற்றி ஆட்சேபித்துப் பேசவில்லை.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மரம் நடு விழாவைப் பற்றி தப்பாகச் சொல்லக்கூடாது என்பதுதான் என்னுடைய வாதம். மேலும், அதிக மரங்கள் நடவேண்டும் என்று உற்சாகப்படுத்து வதற்குத்தான் இது ஒரு முன்முயற்சி. அதைப்போய் குறைகூற வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

தென் ஆற்காடு மாவட்டத்தில் ஜாகிர்தார்களிடமிருந்து ஒரு லட்சம் ஹெக்டர் காட்டுப் பகுதிகள் எடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தப் பகுதி நீர்வளம் உள்ள பகுதி. ஆகவே, அந்தப் பகுதியில் வருவாய் வரக்கூடிய மரங்களை நடவேண்டுமே அல்லாமல், தேவையற்ற மரங்களை நடக் கூடாது. அதிக வருவாய் தரக்கூடிய திட்டங்களைத் தயாரித்து அதன்படி என்ன மரங்களை நடுவது என்பதைப்பற்றி யோசிக்க வேண்டும். ஒரு லட்சம் ஹெக்டர் நிலங்கள் இருக்கிறது என்று சொல்லப்பட்டது. ஒரு ஏக்கர் நிலத்தில் நல்ல வருவாய் வரக் கூடிய மரங்களை நட்டால் சுலபமாக ஆண்டு ஒன்றுக்கு 2,000 ரூபாய் லாபம் வரும், ஒரு லட்சம் ஹெக்டர் நிலம் என்றால் அது கிட்டத்தட்ட $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலமாகும். ஒரு ஏக்கர் நிலத் தில் வரக்கூடிய வருவாயில், ஒரு குடும்பம் பிழைப்பது என்று வைத்துக்கொண்டாலும், நாம் $2\frac{1}{2}$ லட்சம் குடும்பங்களைக் காப்பாற்ற முடியும். அதை நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு, அந்த வகையிலே திட்டமிட்டு, அதற்கான மரங்களை நடுவதற்கு, சாகுபடி செய்வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அகதிகளுக்குத் தேயிலைத் தோட்டம் ஏற்படுத்தி குடிய மர்த்தும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 1,155 ஹெக்டரில் தேயிலை நடப்பட்டு 826 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்

பட்டுள்ளது. நாட்டில் வேறு அகதிகள் குடும்பங்கள் இல்லையா? இந்த அளவுக்குத்தான் வேலை கொடுக்க முடிகிறதா? இதுபற்றி அதிகம் ஒன்றும் தெரியவில்லை. எனவே, இதையும் பரிசீலனை செய்து, இன்னும் அதிகப்படியான குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முந்திரித் தோட்டம் போடுவது பற்றியும் சொல்லப்படுகிறது. முந்திரித் தோட்டம் பயிரிடுவதில், விஸ்தீரணத்தை மட்டும் அதிகப்படுத்துவதில் பிரயோஜனம் இல்லை. முந்திரித் தோட்டத் தில் ஒரு ஏக்கருக்கு $\frac{1}{2}$ மூட்டைதான் விளைகிறது. ஆனால் ஒழுங்காகக் கவனித்து உரம் இட்டால் ஒரு ஏக்கருக்கு 8 மூட்டை கள் கிடைக்குமென்று சொல்லப்படுகிறது. ஆகவே, முந்திரி யைப் பொறுத்தமட்டில் திட்டத்தை மேலும் விரிவுபடுத்திக் கொண்டு போகும் போது, இருக்கும் தோட்டங்களில் அதிக விளைச்சல் எடுக்க கவனம் செலுத்த வேண்டும். தனியார் பலர் முந்திரித் தோட்டங்கள் வைத்திருக்கிறார்கள். அவர்களும் ஒரு ஏக்கருக்கு $\frac{1}{2}$ மூட்டை தான் கிடைக்கிறது என்று சொல்கிறார்கள். எனவே, இந்த அரசு இந்தத் திட்டத்திலே போதிய கவனம் எடுத்துக்கொண்டு, அதிக விளைச்சல் பெற, அதாவது ஏக்கருக்கு 8 அல்லது 10 மூட்டைகள் எடுக்க முடியும் என்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்னும் ஆற்றங்கரை ஓரங்களிலே பல இடங்களில் 10 ஆண்டுகளுக்கு முன்னர் காட்டிலாகாவினர் தேக்கங் கன்றுகளைப் போட்டார்கள். எங்களுடைய பகுதியிலும் இவ்வாறு ஆற்றங்கரை ஓரங்களிலே இவ்விதமான தேக்கங் கன்றுகளைப் போட்டார்கள். அவைகள் இப்போது நல்லபடியாக வளர்ந்து, பெரிய மரங் களாக உருவாகியிருக்கின்றன. ஆகவே, இம்மாதிரி தேக்கங் கன்றுகளை மேலும் ஆற்றங் கரை ஓரங்களிலே போடுவதற்கு தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அடுத்து, எங்களுடைய பகுதியில், பட்டுக்கோட்டை, திருத் துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் குருவிக்காரர்களை குருவிகள் பிடிக்கக் கூடாது என்று காட்டு இலாகாவினர் தடுக்கின்றனர். இப்படி குருவிகளைப் பிடிப்பதையே தொழிலாகக் கொண் டுள்ள குருவிக்கார குடும்பங்கள் பல இன்றைக்கு இந்தத் தொழில் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலும், குறிப்பாக எங்கள் பகுதியில் செறவி என்ற பறவை அதிக மாகக் காணப்படுகிறது. அரசாங்கம் இந்தக் குருவிகளைப் பிடிக்கக் கூடாது என்று தடை விதித்து விட்டதால், இந்தக்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1977 ஆகஸ்ட் 16

குருவிகள் இப்போது அதிகமாகி, பயிர்களை எல்லாம் அழித்து
விடுகின்றன. இதனால், இவர்களுக்கு வேலைவாய்ப்பும் போய்
விடுகிறது. பயிர்களும் அழிகின்றன. இன்றைக்குச் சென்னை
யிலே தினமும் எது எதற்கோ பல பறவைகள் அடிக்கப்படு
கின்றன. ஆனால், இங்கு மட்டும் இப்படித் தடை விதிப்பதால்,
அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய குருவிக்கார குடும்பங்களுக்கும்
வேலை வாய்ப்பு போய்விடுகிறது. இப்படி குருவிகள், பறவை
கள் அதிகமாக வளர்வதால், அவைகளால் பயிர்களும் அழி
கின்றன. ஆகவே, குருவிக்காரர்கள் குருவிகளைப் பிடிக்க
அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்
உரையை முடிக்கிறேன்.

[பிற்பகல் 4.50]

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு
உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஐந்து நிமிஷத்திற்குள் முடித்துக்
கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. எம். சுப்பிரமணியம்</u> : மாண்புமிகு பேரவைத்
துணைத்தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கொண்டு வந்
துள்ள மானியங்களின் மீது என்னுடைய சில கருத்துக்களைக்கூற
வாய்ப்பளித்தமைக்காக நன்றியைக் கூறிக்கொள்கிறேன். இங்கு
பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் ஒரு
நாட்டின் பரப்பளவில் மூன்றில் ஒரு பங்கு காடுகளாக இருந்
தால்தான் அந்த நாடு வளமாக இருக்குமென்று கூறினார்கள்.
ஆனால் நம்முடைய தமிழ் நாட்டில் 16 சதவிதம் காடுகள் தான்
இருக்கின்றன என்று புள்ளி விவரத்தில் எடுத்துக் கூறியிருக்கிறார்
கள். புள்ளிவிவரத்தில் 16 சதவிகிதம் காடுகள் என்று கூறியிருந்
தாலும், அந்தக் காடுகள் வளமான மரங்களைக் கொண்டு
செழித்து வளர்ந்திருக்கும் சூழ்நிலை இருக்கிறதா என்றால், நிச்சய
மாக இல்லையென்ற நிலையைத்தான் கூறவேண்டும். அதற்கான
காரணங்களை நாம் மிகவும் நுணுக்கமாக ஆராயக்கூடிய சூழ்
நிலையில் இருக்கிறோம். காடுகளை வளர்ப்பதற்காக வனத்துறை
அதிகாரிகளை வைத்திருக்கிறோமே தவிர, வனத்துறை அதிகாரி
கள் காடுகளை வளர்க்கிறார்களா, அல்லது அங்கே வளருகிற
மரங்களை அழிக்க துணை புரிகிறார்களா என்பதைச் சிந்தித்துப்
பார்க்க வேண்டிய கட்டாய நிலைக்கு ஆளாகியிருக்கிறோம்.

காட்டு இலாகாவில் மூன்றில் ஒரு பகுதி வருமானம் சந்தன
மரம் மூலமாக வருகிறது என்று அறிவோம். அப்படிப்பட்ட
சந்தன மரங்களையும், தேக்கு மரங்களையும், விலை உயர்ந்த
மரங்களையும் பலர் திருடிக்கொண்டு செல்ல காட்டு இலாகா
அதிகாரிகள் தங்கள் கவனக்குறைவால் விட்டு விடுகிறார்களோ
என்பது தெரியவில்லை. அப்படிப்பட்ட அச்சமான சூழ்நிலை

1977 ஆகஸ்ட் 16] [திரு. எம். சுப்பிரமணியம்]

நாட்டில் நிலவிக் கொண்டிருக்கும் காரணத்தால் காட்டிலாகா
வைச் சற்று உன்னிப்பாகவும் ஆழ்ந்த நோக்கத்துடனும்
கவனிக்கவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

காட்டு இலாகா அதிகாரிகளுக்கும் காட்டிலாகாவுக்கும் முக்கிய
மான குறிக்கோளாக இருக்கின்ற காடுகள் பராமரிக்கும் பணி,
புதிதாகக் காடுகளை வளர்க்கவேண்டிய சூழ்நிலை ஆகியவற்றில்
உறுதியாகப் பாடுபட வேண்டும். காட்டிலாகாவில் காடுகளை
வளர்க்க ஏற்றதாக இல்லாத புல் வெளிகள் இருக்கின்றன.
அப்படிப்பட்ட புல்வெளிகளை ரெவின்யூ இலாகாவுக்குக்
கொடுத்து, ஏழை விவசாய மக்களுக்கு வழங்கினால் விவசாயத்திற்
குச் சிறந்த நிலமாக, விவசாய சாகுபடிக்கு ஏற்ற நிலமாக
விளங்கும். புல்வெளிகளைக் காட்டிலாகாவில் இருந்து எடுத்து
ஏழை விவசாயிகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று தாழ்மை
யோடு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் நாக்குப்பம், இல்லாநத்தம் பகுதி
களில் அதிகமான புல்வெளிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட
இடங்களில் உள்ள நிலங்களை எடுத்து ஏழை விவசாயிகளுக்குக்
கொடுக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.
மலைக்கோட்டாலம் என்ற பகுதியில் மிகுந்த பரப்பளவுள்ள
நிலங்கள் மோசமான நிலையில், காட்டு இலாகா அதிகாரிகளால்
பராமரிக்கும் சூழ்நிலையில் இல்லாமல் இருந்து கொண்டிருக்
கிறது. அவற்றை அரசு கவனித்து ஏழை விவசாயிகளுக்கு
பட்டா செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காட்டிலாகாவைப் பொறுத்தவரை தேயிலையை நாம் அதிக
மாகப் பயிர் செய்ய ஊக்குவிக்க வேண்டும். தேயிலைப் பயிர்
செய்ய ஊக்குவிக்கும் போது அகதிகளாக, குறிப்பாக இலங்கை,
பர்மா ஆகிய இடங்களிலிருந்து வந்தவர்களுக்கு வேலைவாய்ப்புக்
கொடுக்கப் பயன்படும் என்ற நிலையில் தேயிலை பயிரிட
ஊக்குவிக்கவேண்டுமென்று அரசைத் தாழ்மையுடன் கேட்டுக்
கொள்கிறேன்.

1975-76-ம் வருஷத்தில் நீலகிரி மாவட்டத்தில் 3,000
ஏக்கருக்கும் அதிகமாக தேயிலை பயிர் செய்வதாக அறிகிறோம்.
இந்த ஆண்டும் அதற்கு அதிகமான ஊக்கம் கொடுக்க
வேண்டும். குறிப்பாகச் சொல்ல விரும்புவது இன்னும் லட்
சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் தனியார் கையில்தான் இருந்து
கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நிலங்களை எந்த நஷ்ட
ஈடும் கொடுக்காமல் அரசே எடுத்து ஏழை விவசாயிகளுக்குக்
கொடுக்கவேண்டும். நஷ்ட ஈடு கொடுக்க வேண்டாமென்று ஏன்

[திரு. எம். சுப்பிரமணியம்] [1977 ஆகஸ்டு 16

சொல்லுகிறேன் என்ருல் அந்த மரங்கள் அவர்கள் வளர்த்தது
அல்ல. தானுகவே வளர்ந்தவைகள். அவற்றை நஷ்ட ஈடு
கொடுக்காமல் அரசு எடுத்துக் கொள்வதில் எந்தவிதத்
தவறும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட முயற்சிகளை எடுத்து
கேரள மாநிலத்தில் ஏழை விவசாயிகளுக்கு அவற்றைக்
கொடுத்ததாகத் தெரிகிறது. அதற்கு மத்திய அரசோ, அல்லது
அரசியல் அமைப்பு சட்டமோ இடையூருக இருந்ததாகத் தெரிய
வில்லை. அந்தத் திட்டத்தைச் செய்ய வேண்டுமென்று தாழ்மை
யோடு கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே நம் வனத்துறையைக் கவனிக்கிறபோது
சில இடங்களிலே வேதாரண்யம் போன்ற இடங்களிலே
கோடியக்காடு, லகூன் போன்ற இடங்களிலே, குதிரைகளும்,
மான்களும், மற்றும் 50, 60 வகையான பறவைகளும், வெளி
நாட்டுப் பறவைகளும்கூட அங்கே வந்து அது ஒரு பறவை
சரணுலயம் என்று சொல்லத்தக்க அளவிற்கு இருக்கிற அந்தப்
பகுதியில், சுற்றுலாப்பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிற அந்தப்
பகுதியில் உள்ள விலங்குகளையும் பறவைகளையும் வேட்டை
யாடிக் கொன்று குவிக்கின்ற சூழ்நிலை இருப்பதாகத் தகவல்
வந்திருக்கிறது. அந்த அப்பாவி மான்களையும் பறவைகளையும்
வேட்டையாடி அவைகளுடைய உயிர்களைப் பறிக்காமல் இருக்க
அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று இந்த
நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல,
சுற்றுலாப் பகுதி என்று அறிவிக்கப்பட்ட அந்தப் பகுதிக்கு
வேண்டிய பல வசதிகளையும் செய்து கொடுக்க நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே முன்னுலே பேசிய உறுப்பினர் திரு. ஏ.ஆர் மாரிமுத்து
அவர்கள் பேசியபோது குறிப்பிட்டார்கள். தென் ஆற்காடு
மாவட்டத்திலே கல்ராயன் மலைப் பகுதியிலே சாகிர் பரம்பரை
யினரிடமிருந்து நிலங்களை எடுத்து அங்கேயுள்ள மலைவாழ்
மக்களுக்குக் கொடுத்து அவர்கள் நல்வாழ்வு வாழ்வதற்கான
திட்டங்களை நிறைவேற்ற இருப்பதாக முன்பு குடியரசுத்
தலைவர் ஆட்சி இருந்தபோது அங்கே உள்ள மாவட்ட ஆட்சித்
தலைவர் வேண்டிய வசதிகளைச் செய்துகொடுத்தார்கள்.
தென் ஆற்காடு பகுதியிலே உள்ள மலைப்பாங்கான சுற்றுப்
புறங்களிலே உள்ள மக்களுடைய நன்மைகளுக்காக அங்கே
சப்-கலெக்டர் போடப்பட்டு, அவர் கள்ளக்குறிச்சியிலே தம்
முடைய அலுவலகத்தை வைத்துக்கொண்டு அநேக நன்மைகளைச்
செய்து வருகிருர்கள். ஆனுல் அந்த சப்-கலெக்டர் அவர்கள்
போடுகின்ற உத்திரவுகளையெல்லாம் இந்த வனத் துறையைச்
சேர்ந்தவர்கள் ஆட்சேபித்து அமல்படுத்த, நிறைவேற்ற மறுக்கி
ருர்கள் என்று என்னிடம் கூறியிருக்கிருர்கள். வனத்துறை

1977 ஆகஸ்டு 16] [திரு. எம். சுப்பிரமணியம்]

யிலே இருக்கிற அதிகாரி சொல்கிறபடி இவர் கேட்பதா அல்லது
இவர் சொல்கிறபடி வனத் துறை அதிகாரிகள் கேட்பதா என்ற
போட்டி மனப்பான்மை அந்த அதிகாரிகளுக்குள்ளே ஏற்பட்டு
அதன் காரணமாக அங்கேயுள்ள மக்கள் எல்லாம் இன்றைக்குத்
துன்பப்பட்டுக்கொண்டிருக்கிருர்கள் என்பதை நான் அரசாங்கத்
தின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

சாகிர் பரம்பரையினரிடமிருந்து ஒரு வருடத்திற்கு 150
ரூபாய் கொடுத்து ஒரு அனுமதிச் சீட்டை வாங்கிக்கொண்டால்,
அந்த வருடம் முழுவதும் அந்த மலையிலிருந்து மூங்கில்களையும்
தழைகளையும் அங்கேயுள்ள மக்கள் எடுத்து வந்து கூடைகளை
யெல்லாம் செய்து அவைகளை விற்று பிழைப்பு நடத்திக்கொண்டு
வந்தார்கள். ஆனுல் இன்றைக்கு ஒரு கட்டு மூங்கில் வாங்க
வேண்டும் என்ருல் 3.15 ரூபாய் கொடுத்து வாங்கவேண்டிய
நிலைமை இருக்கிறது. இந்த நிலையில் எதற்காக சாகிர் பகுதி
யைச் சேர்ந்த மக்களுக்கு நன்மைகளைச் செய்யவேண்டுமென்று
திட்டங்கள் கொண்டுவரப்பட்டனவோ, அந்தத் திட்டங்களின்
குறிக்கோள் நிறைவேருத முறையில் 150 ரூபாய் கொடுத்துக்
கொண்டு வந்த சூழ்நிலை மாறி, ஒரு கட்டுக்கு 3.15 ரூபாய்
கொடுக்கக்கூடிய நிலைமை அந்த மக்களுக்கு நன்மைகளை அளிப்ப
தாக ஆகாது என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் பரிசிலித்து
நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து தேயிலையும் சரி, முந்திரியும் சரி, சந்தனமும் சரி
எல்லா மரங்களையும் நன்ருக வளர்க்கவேண்டும். வனத் துறை
அதிகாரிகள், வனத்தை நன்ருக வளர்ப்பதற்கு, அதை வியாபார
ரீதியில் இல்லாமல் காடுகளை வளர்க்கவும், அதன் மூலமாக
மக்களுக்கு நன்மைகளைச் செய்துதரவேண்டுமென்றும் கேட்டு,

Forest is the life—blood of the country. Once the life-blood of
the country, viz., Forest, is destroyed, the heart of the country is gone

என்ற அடிப்படையிலே செயல்பட்டால்தான் வனங்கள்
நாட்டுக்கு மக்களுக்கு நல்ல வாழ்வை அளிப்பதற்காகப் பயன்
படும் என்று கூறி, அந்த முறையிலே இந்த வனத் துறை அதிகாரி
கள் மிகவும் கண்காணிப்போடு இருக்கவேண்டும் என்று கேட்டு,
வனங்களை அதிகமாக வளர்க்கவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, இந்த வனத் துறை மானியத்தின்மீது என்னுடைய
கட்சியின் சார்பிலே கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்
களை ஆதரித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.
நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் காடுகள் எந்த
அளவிற்கு இருக்க வேண்டுமோ அந்த அளவிற்கு இல்லை என்று

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஆகஸ்டு 16

சொல்கிறூர்கள். ஆனுல் இப்போது இருக்கிற காடுகளை சீக்கிரமாக
முழுமையான சர்வே செய்து காடுகள் என்று சொல்லப்படுகிற
வற்றை மட்டும், மரங்கள் வளருகின்ற இடங்களை மட்டும்
வைத்துக்கொண்டு காடுகள் வளருவதற்குத் தகுதியான இடங்களை
தவிர மீதியுள்ள இடங்களை அவை விவசாயத்திற்கு லாயக்காக
இருந்தால் விவசாயம் செய்வதற்கு ஒதுக்கி விடவேண்டும், இந்த
இடங்களை வன இலாகாவிலிருந்து எடுத்துவிட வேண்டும். உதா
ரணத்திற்குச் சொல்லவேண்டுமானுல் என்னுடைய தொகுதி
யிலே லிங்கம்பட்டி என்ற கிராமத்திலே பாரஸ்ட் இலாகா
விலே சிறந்த பரம்பு பகுதி ஒன்று இருக்கிறது.

[மாலை 5.00]

அந்த இடத்திலே பொட்டல் காடாக இருக்கும் இடத்தில்
அரிசனங்கள் வீட்டு மனைகள் வேண்டுமென்று கேட்கக்கூடிய
நேரத்தில் வன இலாக்காவினர், ஏதோ அவைகள் அதிகமாக
வருமானத்தைக் கொடுப்பதைப்போல நினைத்துக் கொண்டு நாட்
கணக்கில் மறுத்துக்கொண்டு வருகிறூர்கள். அதே மாதிரி பல
இடங்கள் இருக்கின்றன. திருச்சி, இராமநாதபுரம் போன்ற
இடங்களில், காடுகள் மேலும் வளர முடியாத இடங்களில்,
வெறும் புதர்களாக இருக்கும் இடங்களில், ஆடு மாடுகளைக் கூட
மேய்ப்பதைத் தடுக்கும் நிலைமை இருக்கிறது. எனவே, இது
பற்றி முழுமையாக சர்வே செய்து எவை எவை காடு வளர்க்க
இலாயக்கான இடங்கள், எந்தெந்த இடங்களில் காடுகள் வளர
முடியாது என்பதைச் சர்வே செய்ய வேண்டும். காடுகள்
வளர முடியாத, காடுகள் வளர்க்க இலாயக்கு இல்லாத இடங்களை
வேறு எதற்காவது பயன்படுத்தும் முறையில் செய்ய வேண்டும்.
விவசாயத்திற்கு இலாயக்கு உள்ள இடமாக இருந்தால் அதற்கும்
அனுமதிக்காமல், பக்கத்தில் இருப்பவர்கள் வீட்டு மனை
கள் வேண்டுமென்று கேட்டால் அதற்கும் கொடுக்காமல் தடுக்கும்
போக்கை மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

அது மட்டுமல்லாமல், இன்றைய தினம் வனத்துறையிலே
இருக்கும் மூலப்பொருட்கள் மிகப் பெரிய தனியார் கம்பெனிகளுக்
குக் கொடுக்கப்படுகின்றன. குறிப்பாக, நம்முடைய சேஷசாயி
பேப்பர் மில், சன் பேப்பர் மில், விஸ்கோஸ் போன்ற கம்பெனி
களுக்குக் கொடுக்கப்படுகின்றன, கடந்த காலத்திலிருந்து கொடுக்
கப்படுகின்றன. மிக மலிவான விலைக்கு, இனமாகக் கொடுக்கும்
நிலையிலே கொடுத்துக்கொண்டு வருகிறூர்கள். அது கூடாது.
அதிக இலாபத்தை அவர்கள் சம்பாதிக்க நம்முடைய அரசாங்கத்
திற்குச் சொந்தமான மூலப்பொருட்களை மலிவான விலைக்குக்
கொடுக்கக் கூடாது. எனவே, நியாய விலையிலே, ஒரு ரேட்டை

1977 ஆகஸ்டு 16] [திரு. சோ. அழகர்சாமி]

நிர்ணயம் செய்து அவர்களுக்கு வழங்க வேண்டுமென்று இந்தச்
சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கி
றேன்.

அதேமாதிரியாக இன்றைக்கு சின்கோனக் காடு நடுவட்டம்
நீலகிரி போன்ற மாவட்டங்களில் வளர்க்கப்படுகிறது. அதைப்
போல மரங்கள், மருந்துக்கு வேண்டிய பல மரங்கள் ஆகி
யவற்றை வளர்க்கும் காலத்தில் அங்கே வேலை செய்யும் தொழி
லாளர்கள் இருக்கிறூர்கள். நாம் எவ்வளவோ பணம் செல
வழிக்கிறோம், அதிகமான சம்பளம் வாங்கும் அதிகாரிகள் இருக்
கிறூர்கள். அங்கே வேலை பார்க்கும் தொழிலாளிகள், மரங்களை
வெட்டுவது, மரங்களை நடுவது போன்ற காரியங்களைச் செய்கின்ற
தொழிலாளர்களுக்கு மிகமிகக் குறைந்த கூலியிருப்பது மட்டு
மல்ல, அவர்கள் இருப்பதற்கான வேண்டிய வசதிகள் இல்லாதது
மட்டுமல்ல, அவர்களுடைய குழந்தைகள் கல்வி கற்க வேண்டிய
பள்ளிகள் போன்ற எதுவும் கிடையாது. இது அங்கே போன
வர்களுக்குத் தெரியும். இன்றைக்கும் அப்படியே இருக்கிறது.
அதுமட்டுமல்ல, குறைந்த பட்சக் கூலி என்று சர்க்காரால்
நிர்ணயிக்கப்பட்ட கூலியும் அவர்களுக்குக் கிடையாது.
குறைந்த பட்ச வேலை நேரமும் அவர்களுக்குக் கிடையாது.
இந்த நிலைமைகள் உடனடியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.
காட்டிலே வேலை செய்யும், தோட்டங்களிலே வேலை செய்யும்
தொழிலாளர்களுக்கு நியாயக் கூலி தர வேண்டுமென்பது மட்டு
மல்ல, அவர்களுக்குக் குறைந்தபட்ச வேலை நேரம் வேண்டு
மென்பது மட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பும்,
அவர்களது குழந்தைகளின் எதிர்கால வளர்ச்சிக்கு வேண்டிய
கல்விக் கூடங்கள், ஆஸ்பத்திரிகள் போன்றவைகளையும் ஏற்
படுத்திக் கொடுக்க வேண்டும். அவைகளைச் செய்ய உடனடி
யாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

அதைப் போலவே வறட்சித் தணிப்புத் திட்டம் என்று
முகவை, தர்மபுரி மாவட்டங்களில் காடு வளர்க்கத் திட்டமிடப்
பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முகவை மாவட்
டத்தை ஒட்டிய திருநெல்வேலி மாவட்டத்தில் விளாத்திகுளம்
தாலூகா இருக்கிறது. கடற்கரைப் பகுதிகளை ஒட்டிய பிரதேசம்
அது. அதிலே இம்மாதிரி மரங்கள் வளர ஏற்பாடு செய்தால்
அங்குள்ளவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். காடுகளுடைய
விஸ்தீரணத்தை அதிகரிக்கவும் வாய்ப்பிருக்கும். விவசாயத்
திற்கு இலாயக்கு இல்லாத இடங்கள், வேறு பயிர் செய்ய
முடியாத இடங்கள், சில நேரங்களில் தண்ணீர் அதிகமாக
வரும் இடங்கள், அந்த மாதிரி இடங்களில் காடுகளை வளர்க்க
நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஜமீன் பிரதேசத்திலே ஃபாரஸ்டாக, புல் தரையாக இருந்த இடங்கள் பூராவும் பலயிடங்களில் எந்தவிதமாகவும் பிரயோசனப்படுத்தப்படாமல் இருக்கின்றன. விவசாயத்திற்கு இலாயக்கு இல்லாத இடங்களில் காடுகள் வளர்க்கலாம். பண்ணைத் திட்டம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அந்தமாதிரித் திட்டங்களை, எந்தெந்தக் கிராமங்களில் இப்படி விவசாயத்திற்கு இலாயக்கு இல்லாத இடங்கள் இருக்கின்றனவோ அந்த இடங்களில் எப்படி அந்தக் காடுகளை வளர்க்கலாம் என்பதற்கு ஒரு சர்வே செய்ய வேண்டும். எட்டயாபுரம் ஜமீனிலே ஆயிரம் ஏக்கர் காடாக, புல்தரையாக இருந்து, இப்பொழுது தரிசாக இருக்கிறது. அந்த இடங்களில் காடுகளை வளர்க்க வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதிரி வனத்துறையில் உள்ள மூலப் பொருட்களை மலிவான விலைக்கு விற்பதைத் தடுப்பதோடு, வனசெல்வத்தை அதிகரிக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதோடு காடுகளை அதிகமாக வளர்க்க வாய்ப்புள்ள இடங்களையும் சர்வே செய்ய வேண்டும். அதோடு வனத்துறை பிரதேசங்களில் எந்தெந்த பிரதேசங்களில் காடு வளர்க்க இலாயக்கு இல்லாத இடங்கள் இருக்கின்றனவோ, அவைகளில் வேறு வகையான காரியங்களுக்குப் பயன்படுத்தத் தகுதியுள்ள இடங்களை அவைகளுக்குக் கொடுத்துவிட்டு, புதியதாகக் காடுகளை வளர்க்கத் திட்டங்களைச் செய்ய வேண்டுமே தவிர, அந்தக் காலத்தில் எப்படியிருந்ததோ அதையே வைத்துக்கொண்டு, தங்களுடைய ஆஸ்தியைப் போல் வைத்துக் கொண்டு மற்றக் காரியங்களுக்கு விடாத போக்கை மாற்ற வேண்டும். பலயிடங்களில் விவசாயம் செய்யும் விவசாயிகள் வெளியேற்றப்படுகிறார்கள். , குடிசை போட்டுக் கொண்டிருப்பவர்கள் அப்புறப்படுத்தப்படுகிறார்கள். அம்மாதிரி இல்லாமல் விவசாயம் செய்ய இலாயக்கு இல்லாத இடங்களை வேறு பயன் உள்ள காரியங்களுக்குப் பயன்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். எங்கெங்கு காடுகள் இருக்கின்றனவோ அவற்றைப் பாதுகாக்கவும் புதிய காடுகளை வளர்க்கவும், காடுகள் வளர்க்க இலாயக்கு இல்லாத இடங்களை வேறு காரியங்களுக்குப் பயன் படுத்துவதற்குக் கொடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. க. அரங்கசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக எனக்கு இப்பேரவையில் பேசுகின்ற சந்தர்ப்பம நல்கிய கழகத் தலைவர் டாக்டர் கலைஞருக்கும், பேராசிரியருக்கும், குன்னூர் தொகுதி பெருமக்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியையும், வணக்கத்தையும் கூறி, ஆரம்பிக்கிறேன்.

மலைகளின் ராணி எனப்படுவது நீலகிரி. வெளி நாட்டினரும், இந்தியாவின் பல பாகங்களில் இருந்தும் நீலகிரியின் எழிலை, மலைகளின் அழகை ரசிக்க வருவதுடன், இயற்கைக் காட்சிகளை படமாக்க பலதரப்பட்ட படப்பிடிப்பு நிலையங்களும் நீலகிரிக்கு வருகின்றன. இப்படி இயற்கையின் எழிலை தாங்கி நிற்கின்ற சோலைகளை அழித்து தேயிலை பயிரிடுவதால் இம்மாவட்டத்தில் மழையின்றி வேலை வாய்ப்பும் குறைகிறது. இதனால் வரட்சி ஏற்படுகிறது. ஆதலால் இயற்கையான சோலைகளை அழிக்காமல் சோலைகளற்ற காலி நிலங்களில் தேயிலையைப் பயிரிடவேண்டும். இம்மாவட்டத்தில் காகிதம் தயாரிக்க தேவையான மரங்கள் இருப்பதால் காகிதத் தொழிற்சாலை ஒன்று உதகைத் தொகுதி முள்ளியில் ஆரம்பிக்கவேண்டும். அதேபோன்று சந்தன மரங்களும், வாசனைத் தைலங்களுக்குத் தேவையான இலைகள் இப்பகுதியில் இருப்பதால் சந்தன சோப் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் வாசனை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் குன்னூரில் ஆரம்பிக்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

உதகைத் தொகுதியில் முள்ளி என்னும் இடம் பல தரப்பட்ட வனவிலங்குகள் வாழ்வதால் அப்பகுதியை சுற்றுலா பயணிகள் பார்க்குமிடமாக மாற்றி, அப்பகுதியில் இருக்கும் அண்ணா ஆற்றில் படகு குழாம் ஒன்று அமைக்க வேண்டும். இத்தொகுதியில் பேலூர் எஸ்டேட் என்னும் இடத்தில் செங்குட்டு வராயன் மலை சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. அதைப் பராமரித்து, சுற்றுலா பயணிகள் பார்க்க வசதி செய்து தரவேண்டும் என்பதுடன், குன்னூர் தொகுதி ட்ரூக் (பக்காசுரன்) கோட்டையையும் வழியையும் செப்பனிட்டு சுற்றுலா பயணிகள் பார்க்க வசதி செய்து தரவேண்டும். இம்மாவட்டத்தின் சாலை ஓரங்களில் உள்ள காலி நிலங்களில் பூச்செடிகளையும் மரங்களையும் நடவேண்டும். வன இலாகாவிற்குட்பட்ட நிலங்களில் சாலை வசதி செய்தவைகளை செப்பனிட்டு அவைகளை பராமரிக்க அப்பகுதியில் உள்ள ஊராட்சி, பேரூராட்சிகளுக்கு இச்சாலைகளை ஒப்படைக்கவேண்டும். இம்மாவட்டத்தில் பல பாகங்களில் இருக்கும் ஓடைகளை ஒன்றாக இணைக்க வேண்டும். அப்படி இணைப்பதனால் பல பயனுள்ள காரியங்களைச்செய்யமுடியும் ஊராட்சி, பேரூராட்சி எல்லையில் உள்ள வனத்துறை நிலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யக் கிணறு அல்லது செக்டேம் கட்டி குடிநீர் விநியோகம் செய்ய விரைவில் அனுமதி தரப்படுவதில்லை. இது உடனடியாக பொதுமக்களுக்கு பயன் தரக் கூடியதாக இருப்பதால் காலதாமதமின்றி அனுமதி அளிப்பதுடன், ஊராட்சி பேரூராட்சி மன்றங்கள் வன இலாக்காவிற்கு கட்டவேண்டிய குத்தகையை ரத்து செய்யவேண்டும். தமிழ்நாட்டின் பல பாகங்களில் உள்ள வன இலாகாவின் காலி நிலங்களை பலர் விவசாயம் செய்து வந்தார்கள். அவர்கள் அதற்கான குத்தகையை வன இலாகாவிற்குக் கட்டி வந்தார்கள்.

[திரு. க. அரங்கசாமி] [1977 ஆகஸ்டு 16

ஆனால் தற்சமயம் அவர்கள் விவசாயம் செய்யும் நிலங்களை காலி செய்ய வன இலாகாவினர் அவர்களுக்குப் பல இன்னல்களைத் தருகிறார்கள். அது தடுத்து நிறுத்தப்படவேண்டும் என்பதுடன், அவர்கள் ஆக்கிரமித்துள்ள நிலத்தைப் பட்டா செய்து கொடுக்க வேண்டும். வன இலாகாவினர் பயிரிடும் தேயிலை நாற்றுகளையும் சவுக்கு நாற்று எனப்படுகின்ற சில்வர் ஓக் நாற்றுகளையும் குறைந்த விலையில் சிறு தேயிலை தோட்ட உற்பத்தியாளர்களுக்கு வழங்க வேண்டும். வன இலாகாவினர் வனங்களை தனியாருக்கும், அரசு நிறுவனங்களுக்கும் ஏலம் விடுகின்றனர். அப்படி ஏலம் எடுத்த தனியாருக்கு நீலகிரி மாவட்டத்தில் தேவைக்கேற்ற விறகு போக மீதியுள்ள விறகைத்தான் வெளி மாவட்டங்களுக்கு விற்க வேண்டுமென்ற விதியிருந்தும், அவர்களின் லாபம் கருதி வெளிமாவட்டங்களில் விற்று விடுகிறார்கள். இதை அரசு தடுத்து நிறுத்தி ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

[மாலை 5.10]

திரு. ரா. மார்க்கபந்து: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் காட்டு இலாகாவைப் பற்றியும், அதிலே வளர்கின்ற மரங்களைப் பற்றியும், குறிப்பாக நாங்கள் வட ஆற்காடு மாவட்டத்தைப் பற்றி சொல்கின்ற பொழுது, நானும் என்னுடைய அருமை நண்பர் லத்தீப் அவர்களும் அடிக்கடி சொல்லி வருகிறோம். ஜவ்வாது மலையிலே ஏராளமான சந்தன மரங்கள் வளர்கின்றன என்றும் சாதாரணமாக சந்தனத் தொழிற்சாலைக்கு வேண்டிய சந்தனம் அங்கே வளர்கிறது என்றும் சொல்லி வருகிறோம். அதே நேரத்தில், அந்த ஜவ்வாது மலையிலே, காட்டுப் பகுதியிலே, சந்தனம் வளரக்கூடிய ஏற்பாடுகளை நிரந்தரமாகச் செய்யவேண்டும். காரணம் என்னவென்றால், பெருவாரியான பகுதி, காட்டிலாகாவிலே இருந்த போதிலும் கூட, அங்கே பிரயோஜனம் இல்லாத வெறும் செடி கொடிகளே வளர்ந்து கொண்டிருக்கிற நிலைமையிருக்கிறது. அந்தப் பயன்படாத செடி கொடிகளையெல்லாம் விலக்கி, அந்தப் பகுதியிலே பயன் தரக்கூடிய இந்தச் சந்தனக் கன்றுகள், மற்றும் தேக்கு போன்ற வருவாய் தரக்கூடிய கன்றுகளை நடுவதன் மூலமாக, வேலை வாய்ப்புகளை அதிகமாகத் தர வாய்ப்புகள் இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தண்ணீருடைய மட்டத்தை இந்தக் காடுகள் பாதுகாப்பதன் மூலமாக, அந்த மலையிலே பாய்கின்ற மழையானது சவுக்கு

1977 ஆகஸ்டு 16] [திரு. ரா. மார்க்கபந்து]

முதலியவைகள் இருக்கின்ற காரணத்தாலே, அந்தத் தண்ணீரானது தேக்கப்பட்டு, நீர் ஊற்றுக்கு வழி ஏற்படுகிறது. அதே போன்று தான் நிலத்தடி நீர் மட்டத்தைப் பற்றி சொல்கிறபொழுது, எனக்கு முன்னாலே பேசியவர்கள் கூட சொன்னார்கள், எந்தெந்தப் பகுதியிலே மலைகள் இருக்கின்றனவோ, அங்கே, காடுகளிலிருந்து வருகிற தண்ணீரைச் சேர்க்க, சிறிதாக, ரிசர்வாயர் போன்ற அணைக்கட்டுகள் கட்டுவதன் மூலமாக, வெறும் தண்ணீரைத் தேக்கி வைப்பதன் மூலமாக, நிலத்தடி நீர் மட்டத்தைச் சரியான அளவிலே நாம் நிர்வகிக்க முடியும் என்ற நிலைமையிருக்கிறது.

குறிப்பாக என்னுடைய வட ஆற்காடு மாவட்டத்தைப் பொறுத்தமட்டிலும் அங்கே வன இலாகாவிலே வேலை செய்கிறவர்கள் உண்மையிலே காட்டு தர்பார் நடத்துகிறவர்களாக இருக்கிறார்கள். அங்கேவாழ்கின்ற காட்டு ஜாதியினர் மீது, தங்களுக்குத் தேவையான மாமூல் கிடைக்கவில்லையென்றால், அந்த அப்பாவி மக்கள் மீது வழக்குகளைப் போடுவது சர்வ சாதாரணமான நிலைமையாக இருக்கிறது. நிறைய கேஸ்களை நானே நடத்தி இருக்கிறேன். எத்தனை வழக்குகள் பொய்யான வழக்குகள்! யாரையோ கவனிக்கவில்லையென்ற நிலைமையில் இந்தக்கேஸ்கள் நடக்கிற நிலைமையிருக்கிறது. போளூர் பகுதியிலே வழக்கு என்று சொன்னால், வாணியம்பாடிக்கு அவர்கள் செல்ல வேண்டும். வாணியம்பாடிக்கு 40 மைல் தூரத்திற்குச் சென்று கோர்ட்டுகளிலே வழக்குகளை நடத்த வேண்டுமென்று சொல்கிற பொழுது, ஏறக்குறைய 7, 8 மாதங்கள் கூட, அந்த வழக்குகள் நிலுவையிலே இருக்கிற நிலைமையை நாம் காண்கிறோம். ஆகவே, குறிப்பாக, இந்த அரசானது வனத்துறையிலே வேலை செய்பவர்கள்மீது ஒரு கண்காணிப்பு வைத்திருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் சென்ற தி. மு. க. ஆட்சியின்போது இந்த ஊழலைக் கண்டுபிடித்த ஒரு அதிகாரி அவருடைய பதவியிலிருந்து நீக்கப்பட்டு, குறைந்த பதவிக்கு அனுப்பப்பட்டார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தியாகராஜன் ஐ. எப். எஸ். ஆபிசர். அவருக்குப் பின்னாலே இருந்தவருக்கு பதவி உயர்வு கொடுத்து வேண்டுமென்றே பழி வாங்கினார்கள். அதனை இங்கே படிக்க காலையில் பேரவைத் தலைவருடைய ஒப்புதல் வாங்கி இருக்கிறேன். 'தென்னகம்' என்ற பத்திரிகையில் வெளியான செய்தி 10—6—1974-ல் வந்திருக்கிறது. அந்தத் தலையங்கம் வெளியிடப் பட்டிருக்கிறது. அதை மட்டும் பேரவைத் தலைவருடைய ஒப்புதலோடு படிக்க விழைகிறேன். "கிண்டியில் உள்ள வனவிலங்குகள் சரணாலயத்தில் விலங்குகளுக்கு உணவு வாங்கிப் போட்டதில் பெரும் ஊழல் நடந்ததைக் கண்டுபிடித்து அதனை லஞ்ச ஒழிப்புப் போலிசிடம் ஒப்படைத்தார் ஓர் உயர் அதிகாரி. நல்லவர்கள் ஆட்சி என்றால் இப்படிப்பட்ட நேர்மையான அதிகாரிகளை பாராட்டி பதவி உயர்வு தருவார்கள். ஆனால்

நடப்பது கருணாநிதி ஆட்சி அல்லவா ! ஊழலை கண்டுபிடிப்பதே ஒரு பெரிய குற்றம் அல்லவா ! அந்த அதிகாரியை அவருடைய தகுதி, சர்வீஸ் அனைத்தையும் புறக்கணித்து சேலம் மாவட்டத்துக்கு மாற்றி கீழ்ப்பதவி ஒன்றை கொடுத்து உத்தரவு போட்டிருக்கிறார்களாம். வேண்டுமென்றே பழிவாங்கப்பட்ட அந்த அதிகாரி வனவிலங்கு அதிகாரியாக இருந்தவர். அவருக்கு இப்போது எ.சி.எப். என்கிற பொறுப்புக் கொடுக்கப்பட்டு கீழே தள்ளப்பட்டிருக்கிறார்.

இத்தனைக்கும் தியாகராசன் என்னும் அந்த அதிகாரியைப் பற்றிய தனிப்பட்ட நடத்தை குறிப்புகள் மிக உயர்ந்தவையாக விளங்குகின்றனவாம்.

நேர்மையாக நடக்கும் இத்தகைய அதிகாரிகளுக்கு வேண்டும் என்றே இன்னல் இழைக்கப்படுவதன் மூலம் ஊழலை வெளிக் கொண்டு வர யாராவது முயன்றால் அவர்களை மிரட்டும் வகையில் நல்லவர்கள் வேண்டுமென்றே பழிவாங்கப்படுகிறார்கள். அதற்குத் தியாகராசன் போன்ற நேர்மையான அதிகாரிகள் படும் பாடே தலைசிறந்த உதாரணமாகும்'', என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்படி இந்த ஊழலானது அந்த வன இலாகாவிலே மலிந்திருக்கிறது. ஆகையினாலே, இதைக் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்த வனங்களைப் பாதுகாப்பதிலே மிக அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே, தேவையற்ற நிலங்கள் இருக்கின்றன என்று சொன்னால், பயிர் வளராத நிலங்களிருக்கின்றன. ஃபாரஸ்ட் ஆக்டிலே, 21 (டி) பிரிவிலே, பயிரிடுகிறவர் மேல் Unauthorised Occupation என்று வழக்குகளைப் போடுகிறார்கள். பயிரிட இலாயக்கான நிலங்கள் என்று சொன்னால், அதை De-Reserve செய்து, காலங்காலமாகப் பயிரிடுகிற அந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன், வணக்கம்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று தமிழக அரசால் இந்த அவைமுன் வைக்கப்பட்டிருக்கிற வனத்துறை, சின்கோனா மானியக் கோரிக்கைகள் மீது பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக என் கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த வனத்துறை அதிகாரிகள் தற்போது அதிக நாள் இடைவெளிக்குப் பிறகு தெரிந்தெடுக்கப்படுகிறார்கள். பல ரேஞ்சுகளில் உள்ள உத்யோகங்களுக்கு விவசாயக் குடும்பங்களில்

இருந்து வரக்கூடியவர்களுக்கு முன்னுரிமை அளித்து உத்யோகம் அளிக்கவேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை. காரணம், தொழிற்சாலையில் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கு அவருடைய வாரிசுகளுக்கு தொழிற்சாலையில் முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆகவே, அந்த வகையில் இந்த வனத்துறையில் உத்யோகம் பார்ப்பதற்கு விவசாயக் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என்று அமைச்சர் அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். மன்னிக்க வேண்டும், அமைச்சர் அவர்கள் வெளியே போகிறார்கள், அவர்களுக்குத்தான் இந்த. வேண்டுகோள், அவர்கள் இதை தயவு செய்து கவனிக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட் : தலைவரவர்களே, வெளியே போகவேண்டி இருப்பதால் தான் வெளியே போகிறேன். பக்கத்திலே இருக்கிற அமைச்சர் அவர்களிடத்தில் நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்பதைக் கேட்டு குறித்துக் கொள்ளச் சொல்லி விட்டுத்தான் போகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி மிக்க நன்றி. காரணம் இதை அனுபவரீதியாக பார்க்கின்றவன் என்ற காரணத்தால் சொல்லிக் கொள்கிறேன். இந்த நாட்டில் விவசாயிகளுக்கு என்று வாதாடுகிற நிலைமை இல்லாமல் போய்விட்டது. விவசாயச் சமுதாயம் தான் பெரும்பான்மையாக உள்ள சமுதாயம் என்றாலும், இங்கே இவ்வளவு பேர் இருந்தாலும், ஓட்டு வாங்குகிற நேரத்தில் அவர்களுக்காக வாதாடுகிறோம் என்று சொன்னாலும், விவசாயிகளுக்கு என்று வாதாட யாரும் இல்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது. இங்கே சட்ட மன்றத்தில் தொழிலாளர்களுக்கு என்று வாதாட அழகர்சாமி இருக்கிறார்கள். படித்தவர்களுக்காக வாதாட பலர் இருக்கிறார்கள். ஆனால் இந்த 100-க்கு 80 பேர் இருக்கும் விவசாயிகளுக்கு வாதாட ஆள் இல்லை. அந்த விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர்களுக்கு B. Sc. (Ag.) படிக்க முன்னுரிமை அளிக்க வேண்டும். அவர்களுக்கு வனத்துறையில் எல்லா மட்டத்திலும் வேலை கொடுக்க முன்னுரிமை அளிக்கவேண்டும் என்பது என்னுடைய தாழ்மையான கோரிக்கை. இங்கே மைனாரிட்டி சமுதாயத்திற்கு என்று வாதாட லத்திப் அவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இந்த மெஜாரிட்டி சமுதாயத்திற்கு என்று வாதாட யாரும் இல்லை. ஓட்டுக் கேட்க மட்டும் செல்கிறார்கள், அவர்கள் ப்ளாட் பாரத்தில் நின்று பேசும் பேச்சைக் கேட்டு, 'நாங்கள் உங்களுக்காகத்தான் உழைக்க இருக்கிறோம்' என்பதைக் கேட்டு அவர்களுக்கு ஓட்டு போடுகிறார்கள். ஆனால் இங்கே வந்தவுடன் அவர்களைப் பற்றி யாரும் பேசுவது இல்லை. தொழி

வாளர்களுக்கு என்று பாடுபட பலர் இருக்கிறார்கள். அவர்கள்
ஆர்கனைசுடு லேபராக இருக்கிறார்கள். ஆனால் இந்த விவ
சாயிகள் அன்-ஆர்கனைசுடு லேபராக இருக்கிறார்கள்.
தொழிலாளர்கள் ஆர்கனைசுடு லேபராக இருப்பதால் நம்மை
மிரட்டுகிறார்கள். மாணவர்கள் கூட நம்மை மிரட்டுகிற அள
வுக்கு இங்கே வெராண்டாவிற்கே வந்து விட்டார்கள். ஆகவே,
மாணவர்களுக்கு என்று பரிந்து பேசினார்கள். ஆசிரியர்கள்,
நாங்கள் 4 லட்சம் பேர் இருக்கிறோம் என்று சொல்லி மிரட்டு
கிறார்கள். அவர்களுக்குப் பரிந்துரை. ஆனால் இந்த 4 கோடி
விவசாயிகளுக்கு என்று பரிந்து பேச யாரும் கிடையாது. ஆகவே,
இந்த விவசாயிகள் அடித்தளமாக இருக்கும் இந்த வனத்துறையில்
பல குறைபாடுகள் இருந்தாலும், அந்த அதிகாரிகளை நான்
பாராட்டுகிறேன். உண்மையிலேயே அந்த விவசாய சமுதாயம்
காக்கப்பட வேண்டுமானால், இந்த வன இலாகாவில் உள்ள
எல்லா உத்யோகங்களையும் அந்த விவசாயக் குடும்பத்தைச்
சார்ந்தவர்களையும் அளிக்கவேண்டும். இந்த வனத்தைப் பற்றி
பேசும்போது சொல்வார்கள், வனம் எவ்வளவு வாளவ
இருக்கிறதோ அந்த அளவுக்கு நீர்த்துளிகளை மேலே அனுப்பி
மேகங்களை ஆகர்ஷித்து மழையைப் பெய்யச் செய்யும் என்று
சொல்வார்கள். இன்னும் சொல்லப்போனால் மாண்புமிகு உறுப்
பினர்கள் ஆட்சேபிக்கக்கூடும்.

நான் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை—எனக்கு
வெற்றியைப் பற்றிக் கவலை இல்லை—அவர்கள் ஒப்புக்
கொள்ளவில்லை என்றாலும்—நான் சொல்ல விரும்புகிறேன்.
சில சாதுக்கள் பெரிய மரங்களில் உள்ள குகையிலே இருப்பார்
கள் என்றும், அவர்கள் மனம் குளிர்ந்து இருந்தால் அதன்
காரணமாக மழை பெய்யும் என்று சொல்வார்கள். ஆகவே,
அந்த வனத்துறையை நன்றாகப் பாதுகாக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போல் பல குறை
பாடுகள் அந்த இலாகாவில் இருக்கின்றன. பல அதிகாரிகள்
இங்கே வந்து இருக்கிறார்கள். அவர்கள் இதை ஒப்புக் கொள்ள
வேண்டும். சில நேரங்களில் நடைமுறையில் அந்தக் குற்றங்
களுக்கு நாங்களும் இலக்காகிவிடுகிறோம். விரும்பியோ விரும்
பாமலோ அந்தத் துறையில் ஊழல்கள் நடந்து கொண்டு இருக்
கின்றன. விலை உயர்ந்த தேக்கு மரங்கள், சந்தன மரங்கள்
இரவில் வெட்டப்பட்டு லாரியில் கடத்தப்பட்டு வருகின்றன.
இதை அதிகாரிகள் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். இவற்றைத்
தடுக்க அவர்கள் அமைச்சர்களுக்கு சரியான வகையில்
ஆலோசனை அளிக்கவேண்டும். இந்த திருட்டு தொடர்ச்சியாக
நடந்து வருகிறது. இன்றைக்கு நடக்கிறது என்று நான் சொல்ல

விரும்பவில்லை. அவற்றை நிறுத்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நமது அதிகாரிகள் ஆலோசனை சொல்ல வேண்டும். ஏதோ நடக்கிறது, அமைச்சர் சொல்கிறார்கள், நாங்களும் சொல்கிறோம், நீங்களும் கேட்பீர்கள் என்று நிலை இல்லாமல் அங்கேயுள்ள வனத்தைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 5.20]

1954 ஆம் ஆண்டில் "குரோ மோர் ஃபுட் காம்பெயின்" என்ற திட்டத்தின் கீழ் நேரு அவர்கள் பிரதமராக இருக்கின்ற போது வனம் வளர்க்கிறோம் என்று சொல்லி ஆரம்பித்தார்கள். அப்போது இங்கே மேதகு கவர்னராக திரு. ஸ்ரீ பிரகாசா இருந்தார்கள். காங்கிரஸ்காரர்கள், அவரைக் கொண்டு மரம் நடுவதற்குப் பதிலாக துளசிச் செடியை பிடுங்கி நட்டார்கள் என்று பத்திரிக்கையில் எல்லாம் செய்தி வந்தது. அன்று ஆரம்பிக்கப்பட்ட திட்டம் துர்ப்பாக்கிய வசமாக இன்னும் சரியாக வளர்க்கப்படாமல் இருக்கிறது. பசுமைப் புரட்சி 'கிரீன் ரெவல்யூஷன்' என்று சொல்லி பல மரங்களை நடுவதற்கான முயற்சிகளை அரசு செய்திருந்தாலும், இதில் இருக்கும் ஊழல்களை தடுத்து நிறுத்த, இன்றைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியில் அதற்கு என்று ஒரு விசாரணைக் குழு அமைத்து, கடந்தது கடந்ததாக இருக்கட்டும், இனி புதிய சமுதாயத்தை உருவாக்குவோம் என்று நல்ல முறையில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளின் பிள்ளைகளுக்கு இதில் முன்னுரிமை வேண்டும் என்று விவசாயிகளின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்: பி. எஸ்ஸி. அக்ரிகல்சர் அட்மிஷனைப் பற்றித் தானே சொல்கிறீர்கள்.

திரு. கே. கந்தசாமி: அதுவல்ல, இந்த வன இலாக்காவில், கார்டுகள், வாட்சுமேன்கள், பாரஸ்டு ஆபீசர்கள் என்று எடுக்கிறார்கள். இந்த காட்டு வேலைகளுக்கு, விவசாயிகளின் பிள்ளைகளுக்கு மண்வெட்டி, கலப்பை இதுதானே தெரியும் என்று கருதாமல்—அவன் மரம் என்றால், வேப்ப மரம் போன்றவற்றை தெய்வமாகக் கும்பிடுகிற அளவுக்கு இருக்கிறான்—அப்படிப்பட்ட விவசாயிகளின் பிள்ளைகளுக்கு இந்த வேலைகளின் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்ற கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குமரி கல்டிவேஷன். அதன்படி மரங்கள் வெட்டப்பட்டு, ஏலம் அரசால் விடப்பட்டு, காலியாக இடங்கள் வருகிறபோது, நிலமற்ற ஏழைகளுக்கு குத்தகைக்கோ அல்லது

'பஞ்சரியாகவோ' கொடுக்கிருர்கள். அந்த இடங்களில் 2, 3 வருடம் விவசாயம் செய்த பிறகு, மரம் நடுகிருேம் என்று சொல்லி விவசாயி பயிர் செய்த பொருட்களை அவர்கள் எடுத்துக்கொள்ள அனுமதிக்கிருர்கள். அது ஒரு நல்ல திட்டம்தான். என்ருலும் மரம் வைக்க லாயக்கு இல்லாமல் பாரஸ்டு லிமிட்டுக்கு வெளியே இருக்கிறது. அவை கிளாசிபிகேஷனில் பாரஸ்ட்டு லாண்டு என்றிருக்கிறது. உதாரணத்துக்குச் சொல்ல வேண்டுமானுல், எங்கள் ஆண்டிப் பட்டித் தொகுதியில் அரசரடிக்காடு என்று இருக்கிறது. அங்கே 200 குடும்பங்கள் 17 வருடங்களுக்கு மேலாக விவசாயம் செய்து வருகிருர்கள். அவர்கள் ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்களுக்கு வேறு நிலபுலம் கிடையாது. வீட்டடி கிடையாது. தேர்தல் முடிந்த பிறகு நாங்கள் சர்வ கட்சிக்காரர்களும் கூட்டம் போட்டு உண்ணுவிரதம் இருக்கப் போகிருேம் என்று சொன்ேனும். இதன் மூலம் அரசைக் கவிழ்த்து விடவோ மிரட்டவோ முடியாது என்று ஒத்துக்கொள்கிறேன். இருந்தாலும் விரும்பத்தகாத போராட்டத்தால் ஏழைகளுக்குகஷ்ட நஷ்டம் ஏற்படாமல் தடுப்பது நல்லது என்று மனுவை கொடுத்திருக்கிறேன், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம். அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறேன் என்று சொன்ஞர்கள். ஒரு வாரம் கழித்து செக்ஷனில் போய் பார்த்தால், ரெக்கார்டு கிளார்க், பி. ஆர். மெயின்டெயின் செய்கிறவர், 50 லெட்டர்களை வைத்துக்கொண்டு இன்றைக்குத்தான் பதிய இருக்கிறேன் என்ருர். இது என்ன நியாயம்? இதை அருள்கூர்ந்து அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். செகரடேரியட் ஈஸ் தி ஹார்ட் ஆப் தி ஸ்டேட் கவர்மெண்ட். இங்கே செகரடேரியட்டில் அதிகாரிகளின் லட்சணம் இப்படி இருந்தால் ஏழைகளுக்கு எப்படி நியாயம் கிடைக்கும்? இன்றைக்கு பாப்புலர் கவர்ன்மெண்ட் ஏற்பட்டிருக்கிறது. 1½ வருட இருட்டாட்சிக்குப் பின்னுல், மேகம் கலைந்து சூரிய வெளிச்சம் தெரிகிற மாதிரி நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த நிலையில் சர்வ கட்சி போராட்டம் என்று சொல்லியிருக்கிருர்கள். அதுவும் புதிய ஆட்சி அமைந்து 10 நாட்கள் தான் ஆகியிருக்கிறது என்ற நிலைமையில், போராட்டம் விரும்பத் தகாதது. அதைக் கிள்ளி எறிய வேண்டும் என்று அமைச்சரிடத்தில் நான் சொல்லி, அவர் நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி, மனுவை அனுப்பியிருக்கிறேன், விரைவில் பதில் வரும் என்ருர்கள். செக்ஷனில் போய் பார்த்தால், அமைச்சர் என்னுடைய மனுவில் 'போஸ்ட் இம்மீடியட்' என்று போட்டு கொடுத்தது, ஒரு வாரம் கழித்து ரிஜிஸ்தர் செய்யப்பட்டு, இனிமேல்தான் அனுப்பப்படப்போகிறது உரியவர்களுக்கு என்ற நிலை இருந்தது. அங்கேயிருந்து சி. ஆர். எப்-க்குப் போய்க் கேட்டேன். அவர் மனு வந்திருக்கிறதா இல்லையா என்று பார்த்து சொல்கிறேன் என்ருர். அதற்கு மேல் விவரம் தெரியவில்லை. நமது சட்டமன்றம் நடக்கின்றபோது, பொறுப்புள்ள ஒரு

அமைச்சர், அன்புள்ள அமைச்சர், பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று விரும்புகிருர். என்ருலும் இந்த நிலை இருக்கிறது என்ருல், இதை நான் யாரையும் குறை கூறவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை, ''அவர் சிஸ்டம் ஈஸ் ஸச்'' அந்தக் குறைபாடுகளை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : நேரயாகிவிட்டது, முடியுங்கள்.

திரு. கே. கந்தசாமி : காலையில் பேசாமல் ஒதுங்கினேன். இந்தச் சந்தர்ப்பத்தில் பேசுவதற்கு கொஞ்ச நேரம் வேண்டும். இரண்டு நிமிடம் அளிக்கும்படி வேண்டுகிறேன். குமரி கல்லூவைஞுக்கு, அரசரடிக்காட்டை அருள்கூர்ந்து ஜாரி செய்து கொடுத்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இலங்கை அகதிகளுக்கு, பர்மா அகதிகளுக்கு பாடுபடுகிறேம், மத்திய சர்க்கார் கோடிக்கணக்கான ரூபாய் செலவு செய்து அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க முன்வந்திருக்கிருர்கள், பாராட்டுகிறேன். 1956-ல் வைகை அணைக்கட்டு கட்டப்படுகிறது ஆண்டிப்பட்டித் தொகுதியில். கருப்பூதிப்பட்டி, கருத்தவன்பட்டி, காமுப்பட்டி, போன்ற ஊர்களில் உள்ள மக்கள், 1,500 குடும்பங்கள் பன்றி திருடுவது, ஆடு திருடுவது கழுதை திருடுவது, போன்ற தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள்-அவர்களது நிலங்களை அணை கட்டப்போகிருேம் என்று சொல்லி எடுத்துக் கொண்டார்கள். அவர்கள் இப்போது ஒழுங்காக நிலத்தில் பாடுபட்டுப் பிழைக்கலாம் என்ருல் அவர்களுக்கு நிலம் இல்லை என்ற நிலைதான் இருக்கிறது. அவர்களிடத்தில் இருந்து அணைகட்ட எடுக்கப்பட்ட நிலங்களுக்கு மாற்று நிலம் இதுவரை கொடுக்கப் படவில்லை.

வாச்மேன், ப்யூன், எல். எப். ஆர். என்று பதினைந்து ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிருர்கள். இப்போது 300 ஏக்கர் நிலம் காலியாக இருக்கிறது. அதில் உழுது வேளாண்மை செய்யலாம் என்ருல் அவர்கள் விரட்டப்படுகிருர்கள். அகதிகளுக்கு நாம் கருணை காட்டுகிருேம். ஆனல் உள்நாட்டிலே பிறந்து வளர்ந்த, வாழ உரிமை பெற்ற ஒரு குடிமகனை நிலம் இல்லாத நிலைக்கு ஆளாக்கியிருப்பது நியாயமா என்பதை அருள் கூர்ந்து சிந்தித்துப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பழமுதிர் சோலையில் 1,500 ஏக்கர் நிலங்களைப் பிடித்து வைத்திருக்கிருர், ஒருவர் கோயம்புத்தூர்க்காரர் என்று சொல்கிருர்கள். உங்கள் மாவட்டம்தான். பழமுதிர்சோலையில் 1,500 ஏக்கர்களை தங்கள் கையில் வைத்துக்கொண்டிருக்கிருர்கள். ரோடு வசதி அங்கு கிடையாது. கார் போகமுடியாது. அவர்கள், லாரிகள் ட்ராக்டர்கள்தான் போகும். ஏழைகளை அவர்கள் கொத்தடிமைகள் போல் வைத்திருக்கிருர்கள். விவ

சாயிகளுக்கு சரியானபடி கூலி கொடுப்பதில்லை. அங்கு தாழ்த்தப்பட்ட மக்களை கூலிக்கு வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு லான்ட்ஸீலிங் ஆக்ட் அப்ளை ஆகிறதா இல்லையா என்று தெரியவில்லை.

How do they escape from the clutches of the law?

பதினைந்து ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களிடம் குறுக்கிடுகிறார்கள். ஆனால் 1,500 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார்கள். யார் யார் பேரில் பினாமியாக வைத்துக்கொண்டிருக்கிறார்களோ, அவர்களை எப்படி அனுமதிக்கிறார்கள் என்று தெரியவில்லை. அந்தப் பண முதலைகளையெல்லாம் சரியானபடி கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு எனக்குச் சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

*திரு. தே. ஞானசிகாமணி : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது சொல்லப்பட்டிருப்பது, ஒரு நாட்டுக்கு அதிகமான பெரிய காடுகளும், அடர்த்தியான காடுகளும் இருந்தால் அந்த நாடு பெருவாரியான செல்வாதாரங்களைத் திரட்டும் என்றும் அப்படி அடர்த்தியான பெரிய காடுகள் இருந்தால் ஏராளமான மழை பெய்யும் என்றும் அப்படி மழை பெய்தால் நாடு செழிக்கும் என்றும் பொதுவாகச் சொல்லப்படுகிறது. இந்த அறிக்கையில் பண்ணைக்காடுகள் என்ற தலைப்பில் நாட்டில் இருக்கக்கூடிய பயனற்ற நிலங்கள், புறம்போக்கு நிலங்கள் இவற்றில் ஏராளமான மரங்களை நட்டு காடுகள் வளர்ப்பதற்காக ஒரு திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. அதற்கு 95 லட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை தீட்டியவர்களை நிச்சயமாக பாராட்டவேண்டியதுதான். தமிழகம் அதிகமான மழை இல்லாத பிரதேசம் என்பது நமக்குத் தெரியும். அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம் போன்ற மாநிலங்களில் உள்ள அளவிற்கு மழை நமக்கு இல்லை. அந்நிலை மாறி ஏராளமாக மழை பெய்ய இந்தப் பண்ணைக் காடுகள் வளர்த்தல் திட்டத்தின் கீழ் பயனற்ற நிலங்களிலும் புறம்போக்கு நிலங்களிலும் ஏராளமான காடுகளை நாம் வளர்க்கவேண்டும். அதற்கு முன்பாக பத்தாண்டுத்திட்டம் ஒன்றைத் தீட்டி ஆண்டு ஒன்றுக்கு கொஞ்சங்கொஞ்சமாக காடுகளை வளர்த்து, ஆண்டு ஒன்றுக்கு இரண்டு அல்லது மூன்று கோடி ரூபாய் செலவு செய்து, பத்தாண்டுகளில் பயனற்ற நிலங்களிலும் புறம்போக்கு நிலங்களிலும் ஏராளமான காடுகளை வளர்த்தால் தமிழகத்தின் நிலை நிச்சயமாக மாறும்.

அடுத்தபடியாக, நீலகிரி, வால்பாறை போன்ற இடங்களில் சின்கோனா பயிரிடப்படுகிறது. அங்கு வேலை செய்கிற ஏராளமான தொழிலாளர்களுக்கு பக்கத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய சம்பளம் கொடுப்பதில்லை. அத்தொழிலாளர்கள்

பல்வேறு வகைகளில் கஷ்டப்படுகிறார்கள். அதுமட்டுமல்ல. அங்குள்ள அதிகாரிகளுக்கு பெருவாரியான தொழிலாளர்கள் பண்ணை வேலை செய்வது வழக்கமாகயிருக்கிறது.

(மாலை 5.30)

காட்டு இலாகாவில் சம்பளத்திற்கு அமர்த்தப்பட்டிருந்தாலும் அவர்கள் பெரும் பகுதி அதிகாரிகளுக்காகத்தான் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு தவறான நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. காட்டுப் பகுதியில் அதாவது வன இலாகாவுக்கு சொந்தமான பல இடங்களிலும் சிறு சிறு விவசாயிகள் அந்தந்த இடங்களில் புறம்போக்கு நிலம் என்று நினைத்துக் கொண்டு விவசாயம் செய்து கொண்டு வருகிறார்கள். 10, 15 ஆண்டுகளாக ஒரு ஏக்கர் 2 ஏக்கர் என்று அந்த இடங்களில் விவசாயம் செய்துவருகிறார்கள். இப்படி 10, 15 ஆண்டுகள் விவசாயம் செய்வது வன இலாகாவினரின் கண்களில் படுவதில்லை. பயிர் செய்யும் போது விட்டுவிடுவார்கள். 10, 15 ஆண்டுகள் பயிர் செய்து காட்டை செப்பனிட்டு விவசாயம் செய்த பிறகு அவர்களுக்குத் தோன்றும்போது இது காட்டு இலாகாவுக்கு சொந்தமானது என்று கூறி அதில் விவசாயம் செய்து கொண்டு இருந்தவர்களை வெளியேற்றிவிடுவார்கள். அண்மையில் பழனி எம். எல். ஏ. அவர்களுக்கு ஒரு தந்தி வந்திருக்கிறது. இருபது வருடங்களாக பயிர் செய்து வந்தவர்களை வெளியேற்றி கேஸ் போட்டு கைது செய்து அவர்களை சிறையில் அடைத்திருக்கிறார்கள் என்று தந்தி வந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலை இந்த நாடு முழுவதும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்று சொல்வது, அதாவது வன இலாவுக்குச் சொந்தமான இது, ரெவின்யூ இலாகாவுக்கு சொந்தமானது இது என்று சொல்லிவிடவேண்டும். அதை தெரிந்து கொண்டால் ஏழை விவசாயிகளைத் துன்புறுத்தாமல் இன்னின்ன நிலம் என்று வரையறுத்துக்கொள்ள முடியும். அப்படி செய்து கொடுத்து விட்டால், நிச்சயமாக அரசாங்க பணத்தை அழிப்பதற்கு மக்கள் போக மாட்டார்கள். மேலும் காட்டு இலாகாவில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு நியாயமான ஊதியங்கள் கூலி கொடுப்ப கொடுப்பதில்லை. காண்ட்டிராக்ட் சம்பந்தப்பட்ட எல்லா மட்டங்களிலும் ஊழல்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, கான்டிராக்ட் ஸிஸ்டத்தை ஒழிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக என்னுடைய மாவட்டத்தில் ரப்பர் பயிரிடப்படுகிறது. தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் அதிக செழிப்பாக வளருகிற இடம். அதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அங்கு இரு சீசனிலும் மழை பெய்வதாலும், மற்றும் வெட்பதட்ப சூழ்நிலை ரப்பர் பயிருக்கு ஏற்றதாக இருப்ப

தாகவும் மண்வளம் ரப்பருக்குத் தகுந்தது என்றும் சொல்லுகிறார்கள். அங்கு மலையோரப் பகுதிகளில் சுமார் 30 ஆயிரம் ஏக்கரில் தனியார்களின் ரப்பர் தோட்டங்கள் இருக்கிறது. இதில் இங்கு நம்முடைய வன இலாகாவினர் 1960-ல் பத்தாயிரம் ஏக்கரில் ரப்பர் பயிரிட வேண்டும் என்று முடிவு செய்து, இப்போது 8,000 ஏக்கர் ரப்பர் பயிரிடப்பட்டிருக்கிறது. அப்படியென்றால் இந்த 10 ஆயிரம் ஏக்கர் இடங்களும் காடுகள் நிறைந்த இடம் என்று அர்த்தம். ரப்பரில் அதிக லாபம் வருகிறது என்று நினைத்து இந்த 10 ஆயிரம் ஏக்கர் காடுகளையும் அழித்துவிட்டதால் மழை மிகவும் குறைந்து இருக்கிறது என்பது எங்களைப் போன்றவர்களின் அனுமானம் ஆகும். இந்த 10 ஆயிரம் ஏக்கரிலுள்ள காடுகள் போய்விட்டதால் தான் மழையில்லை என்று எங்கள் நாட்டு மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, மழை குறைந்து போனதின் காரணமாக மின்சார உற்பத்தி தட்டுப்பாடு வருமோ என்று சந்தேகிக்கவேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியில் பெருஞ்சாணி, பேச்சிப் பாறை என்ற இரண்டு அணைகள் இருக்கின்றன. இவற்றில் 7 அடி, 6 அடி தண்ணீர்தான் இருக்கின்றது. இந்த அணைகளின் நீர்கோள் பகுதிகளில் எல்லாம் இந்த ரப்பர் பயிரிடப்படுகிறது. மேலும் ரப்பர் பயிரிடப்படுகிற இடங்களிலெல்லாம் மண் அரிப்பு ஏற்பட்டு அணையில் மண் நிறைந்து கொள் அளவு குறைந்து கொண்டேயிருக்கிறது. வண்டலும் அளவுக்கு மீறி படிந்து இருக்கிறது. இப்படிப் போய்க்கொண்டேயிருந்தால் நிச்சயமாக நாஞ்சில் நாட்டில் விவசாயம் பாதிக்கப்படும். ஆகவே உடனடியாக இந்த மண் அரிப்பை தடுக்கவேண்டும். அத்துடன் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி இந்த அணைக்கட்டுக்குள் இருக்கும் வண்டலை எடுப்பதற்கும் திட்டங்களை போடவேண்டும். இல்லையென்றால் நிச்சயமாக விவசாயம் பெருமளவில் பாதிக்கும். அந்த அணைக்கட்டப்பட்டு 100 ஆண்டுகளுக்கு மேலாகிறது. ஒன்றை செய்யும்போது மற்றொன்றை பார்க்க தவறிவிடுகிறார்கள். ரப்பர் பயிரிட வேண்டும் என்று திட்டமிட்டபோது காடுகள் அழிந்து போகும் என்பதை கவனிக்க தவறிவிட்டார்கள். இன்னும் 2,000 ஏக்கர்களில் ரப்பர் பயிரிட இருக்கிறார்கள். விஞ்ஞான ரீதியாக ரப்பர் பயிரிட்டால் மழை குறையுமா என்பதை நன்கு பரிசீலனை செய்து அறிந்து அப்படி மழை பாதிக்கப்படுமானால் ரப்பர் பயிரிடும் திட்டத்தை நிறுத்திவிடுவது நல்லது. இந்த விஞ்ஞான ரீதியான பரிசீலனையை உடனடியாக செய்யவேண்டும் என்று அரசாங்கத்திற்கு வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்ததாக ரப்பர் தோட்டங்களைப் பற்றி சொல்லுகிறேன். 8,000 ஏக்கரிலே 600 பால் வெட்டும் தொழிலாளர்கள் 800 காட்டு வேலை தொழிலாளர்களும் 250 மற்ற தொழிலாளர்களும் வேலை செய்கிறார்கள். ஆனால், பக்கத்தில் இருக்கக்கூடிய கம்

பெனித் தோட்டங்களிலே அங்குள்ள தொழிலாளர்களுக்குக் கொடுக்கக்கூடிய விவசாயக் கூலி அல்லது போனஸ் போன்ற எதுவும் சர்க்கார் தோட்டங்களில் உள்ளத் தொழிலாளர்களுக்கு கொடுப்பதில்லை. அப்போது இந்த சர்க்காரைப் பற்றித் தொழிலாளர்கள் என்ன நினைப்பார்கள். இந்த சர்க்கார் ஏழைத் தொழிலாளர்களுக்கு உதவும் என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், தனியார் தோட்டங்களிலே கொடுப்பதுபோல் உள்ள எல்லா உரிமைகளும் தங்களுக்கு கொடுக்கப்படவேண்டும் என்று இப்போது அவர்கள் சர்க்காரை வலியுறுத்துவதற்காக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கான சத்தியாக்கிரகம் நடத்திக் கொண்டிருப்பதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. ஆகவே, தொழிலாளர்களுக்கு உதவ வேண்டுமென்று எண்ணுகின்ற இந்த சர்க்கார், அவர்களின் எல்லாக் குறைகளையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லுகிறேன் அங்கு பலவிதமான ஊழல் நடக்கின்றது. 600 பால் வெட்டும் தொழிலாளர்கள் வேலை செய்யக்கூடிய இந்தத் தோட்டத்தில், சரியாக பிளான்டு செய்யாத காரணத்தால் அவர்களால் 20 கிலோ பால் கொண்டு வர முடியவில்லை. 10 அல்லது 12 கிலோ பால்தான் கிடைக்கிறது. அதற்குக் காரணம், அங்குள்ள மரங்கள் விஞ்ஞான ரீதியாக பயிர் செய்யப்படவில்லை. அது நம்முடைய நாட்டுக்கு, அரசாங்கத்திற்கு பெரிய நஷ்டமாக இருக்கிறது. மலேயா, கேரளா ஆகிய இடங்களிலே விஞ்ஞான ரீதியாகப் பயிர் செய்வதால், ஒரு தொழிலாளி 20 கிலோ பால் எடுக்கிறான். ஒரு கிலோ 10 ரூபாய் என்றால் ஒரு தொழிலாளி வேலை செய்வதில் 200 ரூபாய் கிடைக்கும் ஆனால், இங்கே 6, 7 ரூபாய்தான் ஒரு கிலோ பாலுக்கு விலை கிடைக்கிறது. அதிலும் இங்கு 10 கிலோ பால்தான் கிடைக்கும் என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் இந்த அறிக்கையிலே இந்த ரப்பர் தோட்டத்தினால் எவ்வளவு வருமானம் கிடைக்கின்றது என்று குறிப்பிடவில்லை. ஒரு சமயம் வேறு பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறதோ என்னவோ, நான் பார்க்கவில்லை. நான் பார்த்த வரையில், இந்த ரப்பர் தோட்டம் மூலம் இந்த ஆண்டு எவ்வளவு வருமானம் கிடைக்கும், அடுத்த ஆண்டு எவ்வளவு கிடைக்கும் என்று சொல்லப்படவில்லை. அப்படி இருக்கக்கூடாது. இதனால் ஒரு தொழிலாளி 10 கிலோ பால் எடுத்தாலும், 6 ரூபாய் என்று வைத்துக்கொண்டு, 600 தொழிலாளர்கள் ஒரு நாளைக்கு 6,000 கிலோ பால் எடுப்பார்கள். அப்போது கிலோ 6 ரூபாய் என்று பார்த்தால், 36,000 ரூபாய் முதல் 50,000 ரூபாய் வரையிலே வருமானம் வரும். இதற்கு அப்படி ஒரு கணக்கு இல்லை என்றால் மிகவும் வேடிக்கையாக இருக்கிறது. எனவே, விஞ்ஞான ரீதியாக பயிர் செய்தால் நிச்சயமாக இன்னும் அதிக லாபம்

[திரு. தே. ஞானசிகாமணி] [1977 ஆகஸ்டு 16

கிடைக்கும். எனவே, ரப்பர் பிளான்டேஷனில் எக்ஸ்பர்ட்ஸ் கமிட்டியை ஏற்படுத்தி, விஞ்ஞான முறையிலே பயிரிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுவரையில் அப்படிச் செய்யவில்லை என்பதற்கு உதாரணம், தற்போது ஒருவர் வேலை செய்தால் 10 கிலோ பால் கிடைப்பதுதான்

அடுத்ததாக இந்தப் பிரதேசத்தில் 3 பெரிய ரோடுகள் இருக்கின்றன. அங்கே ரோடு வசதி கிடையாது. ஆலச்சோலையிலிருந்து மருதம்பாறை பத்துகாணி ஆறுகாணி வழியாக முல்லைக்காணி வரையிலும் ரோடு தேவை. அப்படி ரோடுகள் போடுவதற்கு, அங்குள்ள நிலங்கள் காலி செய்யப்பட்டு, சர்வே செய்யப்பட்டு, கல் போடப்பட்டது. ஆனால், அங்குள்ள ரப்பர் எஸ்டேட் முதலாளிகள் அந்த நிலத்திலே முள் வேலி போட்டார்கள். அந்த முள் வேலியை அப்புறப்படுத்திவிட்டு, அங்கு கல் போட்டு சர்வே செய்த இடத்தில் ரோடுகள் போடுவதற்கு அங்குள்ள அதிகாரிகள் தயாராக இல்லை. ஆகவே, இந்த ரப்பர் பிளான்டேஷனிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு போக்குவரத்து மிகமிக பாதிக்கப்பட்டிருக்கிறது மட்டுமின்றி 3000, 4000 குடும்பங்கள் போக்குவரத்து வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள்.

அடுத்ததாக நாகர்கோவிலிலிருந்து பால்மோர் வழி, மேல் கோதையாறு போகவேண்டுமென்றால், திருநெல்வேலி ஜில்லாவிற்கு வந்துதான் போகவேண்டும். இதற்கு போக்குவரத்து 150 கல் தொலைவு போகவேண்டும். நேர்மாறாக, நாகர்கோவிலிலிருந்து பால்மோர் சென்று, அங்கிருந்து மலைப்பாதை வழியாகச் சென்றால், மேல் கோதையாறு செல்ல 10 மைல் தூரத்தில் சென்றுவிடலாம். மேல்கோதை ஆறு கடல்மட்டத்திலிருந்து 4,000, 5,000 அடிக்கு மேல் உயரத்தில் உள்ளது. முத்துக்குளி என்ற சுகவாச ஸ்தலம் பால்மோருக்கு மேலே இருக்கிறது. இங்கு 10 மைல் தூரத்திற்கு ரோடு போடவில்லை. ஒரு முதலாளியின் வேண்டுகோளுக்கிணங்க அந்த ரோட்டை அதிகாரிகள் போடாமல் தடை செய்து கொண்டிருக்கிறார்கள்.

[மாலை 5-40]

அடுத்தது ஆலச்சோலை கோதையாறு ரோடு, மின்சார இலாகாவும் வன இலாகாவும் சேர்ந்து செப்பனிட வேண்டியதாகும். யார் அதைச் செய்வது என்ற நிலையில் அது அப்படியே செப்பனிடாமல் இருக்கிறது. அங்கு ஏராளமான டூரிஸ்டுகள் போய்க் கொண்டிருக்கிறார்கள். மின்சாரத் திட்டத்திற்கும் மிக தேவையான ரோடாகும். அந்த ரோடு குண்டும் குழியுமாக இருக்கிறது. ஒட்டு மொத்தத்தில் ரப்பர் பிளான்டேஷன் ஏரியாவில் என்ன

[1977 ஆகஸ்டு 16] [திரு தே. ஞானசிகாமணி]

நடக்கிறது என்று அரசாங்கம் கவனிக்கவேண்டும். தயவு செய்து அமைச்சர் அவர்கள் அந்தப் பிரதேசத்திற்கு வந்து பார்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஏ. லத்திப் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தில் விரிவான கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருந்தாலும் காலத்தைக் கருதி நான் என்னுடைய மாவட்டத்தில் இருக்கின்ற ஒரு சில பிரச்சினைகள் பற்றி மட்டும் எடுத்துச் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். குறிப்பாக, வட ஆற்காடு மாவட்டத்தில் இரண்டு சிறப்புகள் இருக்கின்றன. ஒன்று பாலாறு. வரலாற்றுச் சிறப்புமிக்க வேதமங்களம் ஏரி கர்நாடகத்தில் உருவானதன் காரணமாகப் பாலாறு பாழாக ஆகிவிட்டது. அடுத்து இருக்கிற சிறப்பு ஜவ்வாது மலை. மாநிலத்தில் இருக்கின்ற காடுகளில் விரிந்து, படர்ந்து, அடர்ந்து இருக்கின்ற காடுகள் உள்ளது ஜவ்வாது மலை. அந்தக் காட்டில் எல்லாச் செல்வமும் உண்டு. அகில் உண்டு, சந்தனம் உண்டு, தேன் உண்டு, தினை உண்டு, காட்டு வளங்கள் உண்டு. இலக்கியங்கள் போற்றுகின்ற எல்லாமே உண்டு. இன்றைக்கு அந்தக் காட்டில் வளம் இல்லாமல், பசுமை இல்லாமல் பார்ப்பதற்கே கோரமான காட்சியாக பாலாற்றைப் போல் மாறிவிட்ட நிலைமையில் இருக்கிறது. அங்கு காடுகள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன. இந்த அவைக்கு வந்த பிறகு தொடர்ந்து பேசிவருவது ''ஜவ்வாது மலையைக் காப்பாற்றுங்கள்'' என்பதுதான். எனக்குக் கூட ஜவ்வாது மலை என்றே பெயர் வைத்து விட்டார்கள் முன்னாள் முதலமைச்சர் அவர்கள். இதுவரை முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா என்றால் இதுவரையில் இல்லை. ஆட்சியில் இருப்பவர்கள் காப்பாற்ற வேண்டுமென்று நினைத்தாலும் அங்கு நடக்கும் காரியங்கள் உங்களை மீறி நடக்கின்றன. என்னையும் மீறி நடந்து கொண்டிருக்கின்றன. அங்கிருக்கும் மக்கள் பிரதிநிதியால் கூட ஒன்றும் செய்ய முடியவில்லை. தயவு செய்து அதைக் காப்பாற்றுங்கள்.

சந்தன மரம் மிகப் பெரிய செல்வம். இன்றைக்கு மாநிலத்திற்கு வருவாய்க்கு அந்த மரங்களை ஏலம் விடுவதன் மூலம் சந்தன மரங்கள் மூலம் 3 கோடி ரூபாய் கிடைக்கிறது. இந்த மூன்று கோடி ரூபாய் ஜவ்வாது மலையிலிருந்து வருகிறது என்று சொல்லும்போது திருட்டுத்தனமாக வெளியே போகிற மரங்கள் 90 சதவீதம். நமக்குக் கிடைத்திருப்பது 10 சதவிகிதந்தான். அதாவது 30 கோடி ரூபாய்க்குத் திருட்டுப் போகிறது என்று அர்த்தம். அது உண்மை. அதைத் தடுக்க என்ன வழிவகைகள் என்று தயவுசெய்து அரசு காண்டாகவேண்டும்.

பல்வேறு வகைகளில் சாவடிகளை வைத்திருக்கிறார்கள். சாவடியில் இருக்கும் காவலர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பது எனக்கும் தெரியும். அமைச்சருக்கும் தெரியும். இதைத் தடுக்க சில உறுதியான முடிவுகளை எடுத்து நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். ஜவ்வாது மலையில் இரண்டு பகுதிகள்(–)h ஒன்று ரிசர்வ் பகுதி, இன்னொன்று ரெவின்யூ பகுதி. ஜவ்வாது மலை பூராவும் ரிசர்வ் பகுதி என்று அறிவிக்கவேண்டும். இதுபற்றி டி.டி.சியில் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு தீர்மானம் நிறைவேற்றி இதுவரை முடிவு எடுக்கவில்லை. என்ன கதி, என்ன விதி என்று இன்றைக்கும் கூடத் தெரியவில்லை. ஜவ்வாது மலை பூராவையும் ஒய்ல்டு லைப் சாங்சுவரி என்று அறிவித்துவிட வேண்டும். சாங்சுவரி சட்டம் மலைக்குப் பூராவும் அமல்படுத்தும்போது வன விலங்குகளைக் காப்பாற்றும்போது அந்தக் காட்டையும் பாதுகாக்க முடியும். இதனை அரசு மேற்கொள்ள வேண்டும். ஜவ்வாது மலையின் கடைசிப் பகுதிகளில் ஓரமான பகுதிகளில் வாணியம்பாடி வரை ஜவ்வாது மலைப் பகுதி இருக்கிறது. ஆலங்காயத்திற்கு இடையில் இருக்கும் பகுதியும் ஜவ்வாது மலைப் பகுதியாக இருக்கிறது—அங்கு பல்லாண்டுகளாக விவசாயிகள் விவசாயம் செய்து வருகிறார்கள். காட்டிலாகாவினர் இன்றைக்கும் அந்தப் பகுதி காட்டுப் பகுதி, விவசாயிகளுக்குப் பட்டா கொடுக்கமாட்டோம் என்று சொல்லுகிறார்கள். இவ்வளவு அக்கறை காட்டைக் காப்பாற்றுவதில் அவர்களுக்கு இல்லை. அவர்கள் காட்டை விட்டு விட்டு நாட்டுக்கு வந்து நாட்டிலிருக்கும் விவசாயிகளுக்கும் தொந்தரவு கொடுக்கிறார்களே தவிர, இருக்கிற காட்டை கன்சர்வ் செய்கிற வேலையை நன்றாகச் செய்கிறார்களா என்றால் இல்லை. ஆகவே தயவு செய்து பாகுபாடு செய்து, டி-லிமிட் செய்து எது ரெவின்யூ பகுதி, எது காட்டுப் பகுதி என்று பிரிக்க அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆலங்காயம் பகுதியில் சந்தன தைலம், வாசனைப் பொருட்கள் அல்லேட் பொருள்கள் இவைகளையெல்லாம் தயாரிக்கக்கூடிய வகையிலே பெரிய அளவிலே ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவோமேயானால் அங்கே திருடு போகின்ற சந்தன மரங்களையெல்லாம் அங்கேயே வைத்து தைலம் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை ஏற்படுத்துவதற்கும், அதன் மூலமாக அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்கும், அங்கே வேலையில்லாதவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்பாக இருக்கும் ஆகவே அதற்காக தொழில் துறையிடமிருந்து அனுமதி பெற்று இந்த வன இலாகாவே அதைச் செய்தால் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மிளார் மரங்களை வளர்க்கவேண்டும், பொள்ளாச்சிப் பகுதியிலே ஆனைமலைப்பகுதியிலே தான் சின்கோனா மரங்கள் அதிகமாக வளர்கின்றன. அந்த சின்கோனா மரங்களை, மிளார் மரங்களை ஏலகிரியிலே அவை வளருமா என்று பார்த்து வளர்த்துத் தாருங்கள் என்று இலாகாவினரிடம் சொன்னால் இதுவரையிலே அதைப்பற்றி நடவடிக்கை எடுக்காமல் இருக்கிறார்கள், அதைப் பற்றியும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மிளார் மரங்களையும், கற்பூர மரங்களையும் விசுகோசுக்கும் டான் இண்டியாவுக்கும் நாமினல் ரேட்டில் ஏன் கொடுக்கிறீர்கள்? அவர்களுக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை நீலகிரியிலும், கொடைக்கானலிலும் நாம் கொடுத்திருக்கிறோம். ஆனால் அவர்கள் எவ்வளவு பாக்கி கொடுக்க வேண்டும் தெரியுமா ? அந்த பைலைப் பார்த்தால் தெரியும். அதையெல்லாம் நான் இங்கே சொல்லக்கூடாது. கட்டுப்பாடு இருக்கிறது. டான் இண்டியா எவ்வளவு கொடுக்கவேண்டும் தெரியுமா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்குத் தெரியாத விஷயமாக இருந்தால் அது அங்கத்தினருக்குத் தெரிந்தால் அதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள், ஆகவே அப்படி ஏதாவது தகவல் இருந்தால் அதைச் சொன்னால் இந்த சபைக்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : I can disclose all the facts but I cannot disclose the source or information. Of course, I will post the Honbie Minister with all the facts and these no dout about if.

அமைச்சர் அவர்களிடம் நான் அந்த விவரங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். தனிப்பட்ட முறையிலே நான் விசாரணைகள் நடத்தியிருக்கிறேன். ஒரு ஏழை விவசாயி 5 ரூபாய் நிலத் தீர்வை கட்டவில்லையென்றால் ஜப்தி செய்கிற அதிகாரிகள் லட்சக்கணக்கான ரூபாய்களை வைத்துக் கொண்டிருக்கிற விசுகோசையும், டான் இண்டியாவையும் விட்டு விடுகிறார்கள் என்றால் இந்த நாட்டிலே என்ன ஜனநாயகம் நடந்து கொண்டிருக்கிறது என்று தெரியவில்லை. இதையெல்லாம் பொது மக்கள் உணர்ந்தால் மிக பயங்கரமான சூழ்நிலை உண்டாகும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். காட்டு இலாகா பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் துறையைப் பற்றி நன்றாக அறிந்தவர்கள் அவர்கள், சமூக நீதிக்காக நல்ல உணர்வை வைத்திருக்கிறார்கள் அவர்கள். மாண்புமிகு அமைச்சர்

எட்மண்ட் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன், தயவு செய்து நடவடிக்கை எடுங்கள். பெரிய பெரிய பணக்காரர்களின்மீது நடவடிக்கைகளை எடுங்கள். விவசாயிகளை ஏழை விவசாயிகளை விட்டுவிடுங்கள், ஏழைகளை விட்டுவிடுங்கள், பெருத்த பணக்காரர்களை பெரிய பெருச்சாளிகளை மற்றவர்களின் ரத்தத்தை உறிஞ்சுகின்ற உறிஞ்சி வாழுகின்ற இந்தப் பணக்காரர்களுக்கு விட்டுக் கொடுப்பது என்ன நியாயம்! விசுகோசுக்கும், டான் இண்டியாவுக்கும் கொடுத்துள்ள விவரங்களை எல்லாம் இந்த அவையிலே வைக்க வேண்டுமென்றால் அமைச்சர் அவர்கள் வைக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டால் அவர்கள் நிச்சயமாக வைப்பார்கள் என்று நம்புகிறேன். ஆனைமலையிலே நடுவட்டத்திலே ஆரோமெடிக் டிரக்ஸ், ஆரோமெடிக் ஆயில்ஸ் வாசனைத் திரவியங்கள் இவைகளையெல்லாம் நல்ல முறையிலே தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த வனத் துறையிலேயே அந்த சின்கோனா துறைதான் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. கூடலூர் வட்டாரத்திலே ஆரோமெடிக் கிராஸ் இருக்கிறது. அந்த புல்லை கையிலே எடுத்தால் வாசனை வரும். அந்த புல்களையெல்லாம் மாநிலத்திலே வேறு எந்தப் பகுதியிலாவது அது வளருகிறதா என்று பரிசீலனை செய்து பார்த்து அங்கங்கே வளர்க்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த பட்சம் ஜவ்வாது மலையிலே இருக்கின்ற காடுகளைக் காப்பாற்றுவதற்கும் அங்கே உள்ள எல்லாக் காடுகளையும் ரிசர்வ் காடுகளாக மாற்றுவதற்கும், அங்கே உள்ள பகுதிகளை ஒய்ல்ட் லைப் சாங்சுவரியாக ஆக்குவதற்கும் அங்கே ஒரு பெரிய தொழிற்சாலையை அமைப்பதற்கும், அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு, இங்கே பல உண்மைகளைப்பற்றி பேசுவதற்கு நேரம் இல்லை என்ற காரணத்தாலே எனக்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது என்ற காரணத்தாலே நான் இங்கே வைத்த கோரிக்கைகளை எல்லாம் அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டு நான் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளை முழுமனதுடன் ஆதரிக்கிறேன் என்ற என் ஆதரவோடு அந்த வகையில் மக்களுக்கு ஆதரவு தருகிற நல்ல பல திட்டங்களை உருவாக்கட்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

[மாலை 5.50]

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கருத்துக்களைச் சுருக்கமாக நான் சொல்லி முடித்துக் கொள்கிறேன். சின்கோனா

மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் நான் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். சின்கோனா மூலப்பொருட்களை கொண்டு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். வன இலாக்கா சம்பந்தமான மானியக் கோரிக்கையைப் பொறுத்தவரையில் வன விலங்குகள் சரியான முறையில் பாதுகாக்கப்படவில்லை என்று வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

சின்கோனாவைப் பொறுத்தவரையில் அது ஃபாரின் எக்சேஞ்ச் சம்பாதிக்கின்ற முக்கியப் பொருளாக இருக்கிறது. குறிப்புகளிலிருந்து பார்த்தாலும் சின்கோனாவில் வருமானம் அதிகமாக வந்திருக்கிறது என்று தெரிகிறது. சின்கோனா சம்பந்தப்பட்ட அதிகாரிகள் என்னிடத்திலே சொன்னார்கள், ஹார்ட் அட்டாக் நோய்க்கு சின்கோனாவைக் கொண்டு மருந்து தயாரிக்கலாம் என்று கருத்து தெரிவிக்கிறார்கள். எனவே இது பற்றி ஆராய்ச்சி நடத்த வேண்டும். ஏனென்றால் இப்பொழுது ஹார்ட் அட்டாக் பரவலாகப் பலருக்கு ஏற்பட்டு வருகிறது. அதைத் தடுக்கும் முறையில் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்று என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வனங்களைப் பொறுத்தவரையில் இன்றைக்குக் கொடுத்திருக்கின்ற அறிக்கையின்படி 16 சதவிகிதம் தமிழ்நாட்டில் இருப்பதாகவும், ஆல் இந்தியா ஆவரேஜ் 33 1/3 என்று விவரம் சொல்லியிருக்கிறார்கள். ஒரு கட்டத்திலே வனங்களை அழிக்கும் காரியங்களும், வனப் பகுதிகளைப் பட்டா கொடுக்கும் காரியங்களும் நடப்பதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். வன வளத்தைப் பெருக்குவது நம்முடைய கடமை என்ற கருத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

வனத்திலிருந்து இன்றைக்கு ஏராளமான பொருள்கள் நமக்குக் கிடைக்கிறது. குறிப்பாக இலவங்கம் ஏலம், மிளகு, தேன், மூங்கில், தேக்கு, சந்தனம் முதலியவைகள் கிடைக்கின்றன. இவைகளைப் பாதுகாப்பதற்கு நாம் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, வன விலங்குகளைப் பாதுகாப்பதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். wild life sanctuary.

[திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா] [1977 ஆகஸ்டு 61

முதுமலையிலே இருப்பதைப் போல இன்னும் பல பகுதிகளில் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. நம்முடைய உறுப் பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள் சொன்னதைப் போல ஜவ்வாது மலையிலும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் டாப்ஸ்லிப் பகுதியிலும் ஏற்கனவே வன விலங்குகளுக்குப் பாது காப்பு ஏற்படுத்துவதற்கான இடம் இருக்கிறது. Topslip பகுதியில் இருக்கின்ற காட்டெருமைகள் உலகப் பிரசித்தி பெற்றவை என்று சொல்லப்படுகிறது. வங்காளத்திலும், தமிழ் நாட்டிலும்தான் இதுபோன்ற பைசன்கள் இருப்பதாகச் சொல் கிறார்கள். யானைகள், காட்டெருமைகள், காட்டுக் கோழி, வரையாடு, கடமான், சிட்டா என்று சொல்லப்படும் புலி முதலியவைகளைக் காப்பாற்றுவதற்கு விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது, சாத்தனூரில் முதலைப் பண்ணை ஏற்படுத்த வாய்ப்பிருப்பதாகச் சொல்லப்பட் டிருக்கிறது. அமராவதி அணைக்கட்டியிலேயும் முதலைகள் காணப் படுகின்றன. எனவே, முதலைப் பண்ணைகள் அமைக்க வாய்ப்புள்ள இடங்களில் அவற்றை அமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையிலுள்ள கிண்டி பார்க்கைப் பொறுத்தவரையில் அதை நேஷனல் பார்க்காக ஆக்க வேண்டுமென்ற கோரிக்கை பல ஆண்டுகளாக இருக்கிறது. அது அரசாங்கத்தின் கவ னத்தில் இருக்கிறது. அந்த கிண்டி பார்க்கை நேஷனல் பார்க்காக ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் நேஷனல் பார்க் என்று ஏற்படுத்தினால் பிறகு வேறு தனிப்பட்ட நபர்களுக்குக் கொடுப் பதோ அல்லது வேறு காரியங்களுக்குப் பயன்படுத்துவதோ முடியாது என்ற சூழ்நிலை ஏற்படும். எனவே கிண்டி பார்க்கை நேஷனல் பார்க்காக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த கிண்டி பார்க் பகுதியிலுள்ள நிலத்தை யாருக்கும் கொடுக்கக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. அறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவம் பார்த்த அந்த கேன்சர் இன்ஸ்டி டியூட்டிற்கு 6 ஏக்கர் கொடுக்க வேண்டுமென்று அன்றைக் கிருந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்தது. அதை அதற்குப் பிறகு வந்த அரசு காலதாமதம் செய்து கை விட்டு விட்டதாகச் சொல்லப்படுகிறது. அதற்கு 6 ஏக்கர் கொடுக்க ஆட்சேபணை செய்தவர்கள் கிண்டி பகுதியில் ஸ்நேக் பார்க்கிற்கு ஒன்றரை ஏக்கரா பூமியை இந்த அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்

1977 ஆகஸ்டு 16] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

வதற்குச் சில மாதங்களுக்கு முன்பு ஒரு பாப்புலர் கவர்ன் மெண்ட் வரப்போகிறது என்று தெரிந்தும், ஒன்றரை ஏக்கர் பூமியை தனிப்பட்டவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். ஸ்நேக் பார்க் வேண்டாமென்று சொல்லவில்லை. அவர்கள் 3 லட்சம், 4 லட்சம் ரூபாய் சம்பாதிக்கிறார்கள். எனக்குக் கிடைத்த தகவலின்படி அரசாங்கத்திற்கு அவர்கள் கொடுக்கும் வாடகை, குத்தகை மிகக் குறைந்தது என்று சொல்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, இதைப்பற்றிப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன். ஏனென்றால் 25 ஆண்டுக் காலத்திற்குக் கொடுத்து விட்டால் மீண்டும் அதை வாங்க முடியாது. இந்த நிலைமை களைப் பரிசீலித்துப் பார்க்க வேண்டுமென்று நான் மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கே வேடந்தாங்கலில் ''பறவைகள் சரணாலயம்' (Bird Sanctuary) இருக்கிறது. ஏற்கனவே, அந்தச் சரணாலயத்தி திற்குப் போவதற்குத் தனியாக பஸ்கள் விட்டிருந்தார்கள் ; இப் பொழுது நிறுத்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. எனவே, அந்த பஸ்களை மீண்டும் விட வேண்டுமென்று அமைச்ச ரவர்களை நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நண்பர்கள் பொதுவாக, காட்டு வளங்களைப் பற்றிப் பேசும்பொழுது, சந்தனத்தைப் பற்றி குறிப்பாகச் சொன்னார்கள். சந்தன மரம், தேக்கு மரம், இவை விலை மதிக்க முடியாத மரங்களாகும். அதிகமாகப் பணம் ஈட்டித் தருகிற மரங்களாகும். சந்தன மரத்தைக் கொண்டு பல தொழிற்சாலைகள் உருவாக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். நாளவாடி பகுதியில் சந்தனத்தைக் கொண்டு ஒரு தொழிற்சாலை உருவாக்க வேண்டுமென்ற குறிப்பு இருக்கிறது. அதையும் அமைச்சரவர் கள் ஆராய வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு யூக்கலிப்டஸ் மரங்கள் எங்கேயெல்லாம் வளரு கிறதோ அந்தப் பகுதிகளிலே தண்ணீர் உறிஞ்சப்படுவதாகவும் தண்ணீருக்குக் கஷ்டம் இருப்பதாகவும் ஒரு கருத்து இருக்கிறது. ஏற்கனவே, அன்றைக்கு இருந்த அரசாங்கம் அதைக் கவனித்து நடவடிக்கை எடுத்ததாக நான் கருதுகிறேன். அதைத் தொடர்ந்து அமைச்சரவர்கள் கவனிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன்.

குறிப்பாக திரு. கந்தசாமி அவர்களும், திரு. இலத்திப் அவர் களும் பல கோடி ரூபாய் பெறுமான சந்தன மரங்கள் எல்லாம் கடத்தப்படுவதாகச் சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள்

இதனைத் தடுக்க தக்க நடவடிக்கை எடுப்பார் என்று நான் கருதுகிறேன். உப்பிலியாபுரத்தைச் சேர்ந்த அரசாங்கத்திற்குச் சொந்தமான காடுகளிலிருந்து திருட்டுப் போயிருக்கிறது. திருட்டுக் கண்டு பிடிக்கப்பட்டு ஒருவருக்கு 3 ஆண்டு தண்டனையும் அதிலே சம்பந்தப்பட்ட ஒரு அதிகாரிக்கு ஓராண்டு தண்டனையும் விதிக்கப்பட்டன. அவர்கள் மேற்முறையீடு செய்திருக்கிறார்கள். ஏற்கனவே அது அப்பீலில் இருக்கிறது. அவ்வாறு குற்றம் சுமத்தப்பட்ட சம்பந்தப்பட்ட ஒருவருடைய தோட்டத்தில் 15-7-1977 தேதியன்று உப்பிலியாபுரம் போலீஸ் சோதனை போட்டிருக்கிறார்கள். சோதனை போட்ட பொழுது 1½ டன் சந்தனம் அங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுதான் நாம் எதிர்பார்த்த நிலைமையாகும். ஆனால், நிலைமை என்ன என்று சொன்னால், அந்தச் சந்தனத்தை வெட்டிய கோடாரி ஆண்டுன் என்கிற செல்லமுத்து வடகிரி, இராமசாமி, பொன்னுசாமி என்பவர் மாட்டிக்கொண்டார்கள். ஆக, இராமசாமியும் பொன்னுசாமியும் மாட்டிக் கொண்டார்களே தவிர, யாரால் அவர்கள் கட்டுப்படுத்தப் பட்டார்களோ, அவர்கள் தப்பித்துக் கொண்டார்கள். இவர்கள் குற்றவாளிகளாக்கப்பட்டார்கள், சம்பந்தப்பட்ட பெரிய மனிதர்கள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் நிச்சயமாக நம்புகிறேன், வன இலாகா மற்றும் C.I.D. மூலமாக, Special Branch மூலமாக, விசாரித்தால் பல உண்மைகள் வெளி வரும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிச்சயமாக நம்முடைய அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார். ஏனென்றால் நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இதில் ஆழ்ந்த கவனம் செலுத்தி இந்தத் திருட்டுக்கு காரணமாக இருந்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

மாண்புமிகு திரு. க. ராசா. முகம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் தரப்பில் நான் இந்த மாமன்றத்திலே வைத்திருக்கிற கோரிக்கைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களைச் சொன்னதற்காக நான் என்னுடைய நன்றியறிதலை அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக எந்த நாட்டில் வன வளம் அதிகமாக இருக்கிறதோ அந்த நாடு அதிக வளம் கொழித்த நாடாக இருப்பதை பூகோளம் படித்த நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தெரிந்து வைத்திருப்பார்கள். மத்திய அரசாங்கத்தினுடைய கணக்குப்படி ஒரு நாட்டினுடைய நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்கு வனப் பகுதியாக இருந்தால்தான் அங்கே மழை தாராளமாக காலம் தவறாது பெய்வதற்கும் செழுமை ஏற்படுவதற்கும் வசதியாக இருக்கும் என்று அறிக்கையில் கொடுத்திருந்தாலும் தமிழ்நாட்டை

பொறுத்தமட்டும் இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் கருத்துச் சொன்னதைப் போல் 16 சதவிகிதம் நிலப் பரப்புதான் இங்கே வனப் பகுதியாக இருக்கிறது. அந்த அடிப்படையிலே காட்டுப் பகுதிகளைப் பெருக்க வேண்டுமென்கிற முயற்சியிலேதான் இன்றைய தினம் இந்த அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறது.

[மாலை 6-00]

மலைக்காடு போன்ற பகுதிகளிலே இந்தத் திட்டங்களை யெல்லாம் இந்த அரசாங்கம் மேற்கொள்வதின் காரணமாக காட்டுப் பகுதிகளை 16 சதவிகிதத்திலிருந்து கூட்ட வேண்டும்— அதிகரிக்கவேண்டும்— என்ற எண்ணத்திலே அப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கிறது. ஆனால் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுக்கிற நேரத்தில் ஒரு பகுதியிலே இருந்து இந்தத் திட்டங்களுக்கு—நாட்டு மக்கள் மத்தியிலேயிருந்து நல்லாதரவு கிடைத்தாலும்— சில பகுதிகளிலேயிருந்து அதற்குக் கடுமையான எதிர்ப்பு வருவதையும் இந்த அரசு இன்றையதினம் கண்காணித்துக்கொண்டு இருக்கிறது. இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் சொல்லும்போது இனிமேல் காட்டு இலாகா பகுதியைச் சேர்ந்த நிலங்களையெல்லாம் பட்டா செய்து கொடுப்பதைத் தவிர்க்க வேண்டுமென்ற நல்ல கருத்தைச் சொன்னார்கள். இன்றைய தினம் அவர்கள் இந்தக் கருத்தைச் சொல்கிறார்களே யொழிய இதற்கு முன்னாலே இருந்த அரசு— அது எந்த அரசாக இருந்தாலும் சரி—இந்தத் துறையிலே இருக்கும் பகுதிகளை பட்டா செய்து கொடுப்பதில் அல்லது அங்கேயிருந்து [illegible] ஆக்கிரமிப்பாளர்கள் மேல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்த நேரத்தில் அந்தக் குறிக்கோளை எதிர்த்து எந்த அளவு [illegible] என்று பார்க்கிற நேரத்தில் [illegible] காரணத்தால், அதிகாரிகள் எடுக்கிற அப்படிப்பட்ட நடவடிக்கைகளுக்கு அன்றைக்கிருந்த அரசாங்கம் போதுமான பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவில்லையென்பதுதான் பொதுவான கருத்தாக இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலேயும் சரி, அதற்கு முன்பிருந்த காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலேயும் சரி, வனப் பகுதியைப் பேணிப் பாதுகாக்க வேண்டும், பெருக்க வேண்டும், அங்கே இருக்கிற காட்டு மரங்களை வளர்க்க வேண்டுமென்று அரசு வன இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகள் பொறுப்போடு நடந்து, அந்தந்த பகுதிகளிலே [illegible] நேரத்திலே அங்கங்கே ஆக்கிரமிப்புகள் நடைபெற்றிருந்த காரணத்தால், ஆக்கிரமித்த கிராமவாசிகளை அப்புறப்படுத்துகிற முயற்சியிலே அதிகாரிகள் நடவடிக்கை எடுத்த நேரத்தில் அரசியல்வாதிகளுடைய தலையீடு காரணமாக, அல்லது வேறு பல [illegible] காரணமாக அப்படிப்பட்ட ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த முடியாத

அவல நிலை அன்றைய தினம் இருந்த அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் இன்றைய தினம் பொறுப்பேற்றிருக்கிற அரசு ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்துகிற முயற்சியிலே அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுகிற நேரத்தில், நியாயமான முறையில் அப்புறப்படுத்துவார்களேயானால் இந்த அரசு நிச்சயமாக தலையிடாது, தலையிடவில்லையென்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே பெருவாரியான ஆக்கிரமிப்புகள் நடந்திருக்கின்றன. பட்டா வழங்கக் கூடாது என்று சில உறுப்பினர்கள் கருத்தைச் சொன்னார்கள். ஆக்கிரமிப்பு பல்வேறு சந்தர்ப்பங்களிலே பலவகைகளிலே நடந்திருக்காது ஏற்கனவே, காட்டுப் பகுதியிலே, சொந்த நிலங்கள் உள்ளவர்—நூற்றுக்கணக்கான ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்—பக்கத்திலே இருக்கிற வன இலாகாவிற்குச் சொந்தமான நிலத்தையும் ஆக்கிரமித்திருக்கிறார்கள். அதைப் போல், பிழைப்புக்கு வேறு வழியே இல்லாமல் இருக்கிற, அல்லது 1 ஏக்கர், 2 ஏக்கர் 3 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறவர்கள் சிறு சிறு பரப்பளவை ஆக்கிரமித்து, அதிலே விவசாயம் நடத்தி, அதன் மூலமாகத் தங்களுடைய பிழைப்பை நடத்திக் கொண்டிருக்கிற ஏழை எளிய விவசாயிகளும் இருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசைப் பொறுத்தமட்டிலே, பெரிய பெரிய நிலச்சுவாந்தார்கள், ஏற்கனவே நூற்றுக்கணக்கான ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர்கள் காட்டு இலாகா நிலத்தை ஆக்கிரமித்திருப்பதை அப்புறப்படுத்துகிற முயற்சியை எடுக்கிற நேரத்தில், சிறிய விவசாயிகள் தங்களுடைய பிழைப்பிற்கு வேறு வழியே இல்லாமல், காட்டு இலாகா நிலத்தைப் பயிர் செய்கின்ற ஏழை விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுப்பதா, அல்லது மேலும் குத்தகைக்கு விட்டு, கூட்டுப் பயிர் செய்வதன் மூலம் அவர்கள் வருமானம் தேடிக்கொள்கிற அதே நேரத்தில், வன வளத்தை அவர்கள் பாதுகாக்க ஏற்பாடுகளைச் செய்வார்களானால், அந்த நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுப்பதா, அல்லது அவர்களுக்குக் குத்தகைக்குக் கொடுப்பதா என்பதைப் பற்றி இந்த அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. கூடிய விரைவிலே அதைப் பற்றிய முடிவிற்கு இந்த அரசாங்கம் வரும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, பல்வேறு மகஜர்கள் என்னிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கங்கே விவசாயிகளை எல்லாம் அப்புறப்படுத்துகிறார்கள் என்றெல்லாம் கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன என்றாலும் அரசு உண்மையிலே விவசாயிகள் என்ற பெயராலே பெரிய பணக்காரர்கள், வசதி படைத்தவர்கள் கூட காட்டிலாகாவிற்குச் சொந்தமான நிலங்களை இன்றையதினம் ஆக்கிரமித்திருக்கிறார்கள்

என்பதை அறிகிறது. ஆகவே, பெரிய பணக்காரர்களும் ஆக்கிரமித்திருக்கிறார்கள் என்பதால் சந்தர்ப்ப சூழ்நிலையின் காரணமாக வறுமையின் காரணமாக, சில விவசாயிகள் இன்றைய தினம் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதையெல்லாம் இந்த அரசு தெரிந்து வைத்திருக்கிறது. ஆகவே நியாயமான முடிவை எடுக்க விவசாயிகளுக்கு நல்ல பல நியாயமான சலுகைகளைச் செய்ய இந்த அரசு ஆலோசனைகளைச் செய்து கொண்டிருக்கிறது. இன்றைய தினம் விவசாயிகளும் இந்த அரசாங்கத்தின் தன்மையை உணர்ந்து வருகிறார்கள். தெரிந்து கொண்டு வருகிறார்கள். இந்த அரசு ஏழை எளிய விவசாயிகளுக்கு தங்களுடைய ஒத்துழைப்பையும் நல் ஆதரவையும் நல்கிக் கொண்டு இருக்கிறது என்பதை நாட்டிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்தைச் சொல்கிற நேரத்தில் நான் குறிப்பாக இந்த மன்றத்தில் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்த மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களுக்கும், திரு. லத்தீப் அவர்களுக்கும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் பல்வேறு தவறுகள் இந்த வனத் துறையில் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இல்லை என்று சொல்லவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகளை கண்காணிப்பது என்பது மிகவும் கஷ்டமான காரியம். காரணம் அதற்கான அதிகாரிகள் சில நேரங்களில் அந்தத் தவறுகளைச் செய்யும் போது அந்தத் தவறுகளை நாட்டிலே இருக்கும் மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளான சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்து, அந்த உறுப்பினர்கள் என்னென்ன தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்பதை சட்ட மன்றத்தில் வெளிப்படையாகச் சொல்ல முடியாவிட்டாலும் என்னைத் தனிமையாகப் பார்த்துச் சொன்னாலும் அதுபற்றிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன் என்பதை மாண்புமிகு லத்தீப் அவர்களுக்கும், இந்த மன்றத்திற்கும் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சந்தன மரம் இன்றைய தினம் ஜவ்வாது மலைப் பகுதியில் இருந்து கடத்தப்பட்டு வருகிறது என்ற கருத்தை சொன்னார்கள். அதற்கு அவரிடத்தில் சில புகார்களும், ஆதாரச்சுளும் இருக்கின்றன என்று சொன்னார்கள். என்ன தவறு நடந்து இருக்கிறது என்பதை என்னிடத்தில் தனியாகச் சொல்வார்களானால் அதைப்பற்றி உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இந்த அரசு வலியுறுத்தும் என்பதை அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்பு

[திரு. க. உ. ரொ. எட்மண்ட்] [1977 ஆகஸ்டு 16

இருக்கும். நாட்டிலுள்ள காடு முழுவதும் கிடைக்கும் செல்வத்தை நாட்டுக்கு பயன்படுத்த வேண்டுமே ஒழிய தனி நபர் அதன் மூலம் பயன் அடைவதற்கு அரசு ஒரு போதும் அனுமதிக்காது என்பதைத் தெரிவித்து, அது சம்பந்தமாக காகித மில் அதிபர்களை அழைத்து அரசின் கருத்தை தெரிவிக்க வேண்டும் என்று தான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு ஒரு தொழிற்சாலையை ஆரம்பிக்கவேண்டுமென்று தம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். சந்தனக் கட்டையிலிருந்து எண்ணெய் எடுக்கலாம், பல சிலைகள் செய்யலாம், சந்தன பேஸ்ட் செய்யலாம், அதைப் பற்றி செய்யலாம். காட்டுப் பகுதியில் இருந்து கிடைக்கும் சந்தனக் கட்டையிலிருந்து இப்படிப்பட்ட பண்டங்களைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கலாம். இன்றைய தினம் சில காரியங்கள் அரசாங்கத்தின் கவனத்தில் இருந்து கொண்டு இருக்கின்றன. நானும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு தொடர்பு கொண்டு அந்த நிலைமையை பரிசீலித்து வருகிறேன். கூடிய விரைவில் அதற்கான தகவல் கொடுக்கவேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். அந்தத் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்று அரசாங்கத்திற்குத் தெரிகிறபோது, நிச்சயமாக அந்தத் தொழிற்சாலை அங்கே ஆரம்பிக்க அதற்கான ஏற்பாட்டை இந்த அரசாங்கம் மேற்கொள்ளும் என்று தான் இந்த நேரத்தில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தம்முடைய மாண்புமிகு திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் பேசும்போது ஒரு வழக்கைப் பற்றிச் சொன்னார்கள். 15-7-77 அன்று போலீஸ் சோதனையிட்டதில் 1½ டன் சந்தனக் கட்டைகள் வைத்திருந்ததை கண்டுபிடித்ததாகவும் வெட்டியவர்கள் மீது வழக்கு போட்டதாகவும், வைத்திருந்தவர்களை விட்டு விட்டதாகவும் சொன்னார்கள். அது பற்றி அதிகாரிகளைக் கலந்து ஆலோசித்தேன். மற்ற மாநிலங்களில் 1 கிலோவிற்கு அதிகமாக சந்தனக்கட்டைகள் வைத்திருப்பது குற்றம் ஆகிறது. தமிழ் நாட்டில் அப்படிப்பட்ட சட்டம் இல்லை. 'போசஷன் ஆப் சாண்டல் வுட் டு எனி எக்ஸ்டெண்ட்' Possession of sandal wood to any extent தமிழ் நாட்டில் குற்றம் இல்லை. ஆனால் அண்டை மாநிலங்களில் 1 கிலோ அதற்கு மேல் வைத்து இருந்தால் அது குற்றம் ஆகிறது. சில மாநிலங்களில் 2 கிலோ என்று வைத்து இருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவிற்கு நம்முடைய சட்டத்தை திருத்தி, அந்தத் திருத்தத்தை இங்கே கொண்டு வருவதன் மூலம் சந்தனக் கட்டைகளை வைத்திருப்பவர்கள் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள் என்று சட்டத்தை மாறுதல் செய்ய யோசித்துக்கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட சட்டங்களிலே சில ஓட்டைகள் அப்படியே இருக்கும். தவறுகளை இப்படிப்பட்ட முறையில் செய்து விட்டு தப்பித்

1977 ஆகஸ்டு 16] [திரு. க. உ. ரொ. எட்மண்ட்]

துக்கொள்ள வழி செய்கிறது. அந்த அடிப்படையில் சந்தனக் கட்டைகளை வைத்துக் கொண்டிருந்தவர்கள் மேல் வழக்குப் போடாமல் அதை வெட்டியவர்கள் மீது வழக்கு போட்டிருக்கலாம். என்றாலும் மாண்புமிகு உறுப்பினர் சாதிக் பாட்சா அவர்கள் அந்த தகவலைத் இந்த மன்றத்திலே தெரிவித்ததற்காக நன்றியைத் தெரிவித்து, அதைப் பற்றி தீவிரமாக விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து, வழக்குப் போட ஏற்பாடுகளைச் செய்வேன் என்று தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த மன்றத்தின் மூலம் உறுதி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 6.10]

இங்கே பேசிய நமது ஜனதா கட்சித் தலைவர் திரு. ஜேம்ஸ் அவர்கள் சில கேள்விகளை எழுப்பியிருக்கிறார்கள். சன் பேப்பர் மில்லுக்கு எவ்வளவு மூங்கில் கொடுக்கப்பட்டிருக்கிறது, என்ன விலை அடிப்படையில் கொடுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் அவர்கள் இங்கே கேட்டார்கள். அதற்கான தகவல்கள் எனக்கு இங்கே கிடைத்திருக்கிறது. 1—4—1975 முதல் 31—3—1976 முடிய ஒரு டன்னுக்கு 40 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். சன் பேப்பர் மில்லுக்குக் கொடுத்த கோறுக்கைக்கு (eta reeds) அதற்கு முன்னால் ஒரு டன்னுக்கு 6 ரூபாய் என்று இருந்தது. அந்த 6 ரூபாய் கூட 60,000 டன் வரைக்கும் தான். 60,000 டன்னை தாண்டிவிட்டால் ஒவ்வொரு டன்னுக்கும் 12 ரூபாய் என்று அன்றைய தினம் அதற்கான விலையை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ஆகவே சன் பேப்பர் மில்லுக்கு.......

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 40 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நிர்ணயித்தது யார்? டெண்டர் விடப்பட்டதா? இந்த விளக்கங்களைக் கூறினால் நலமாக இருக்கும்.

<u>மாண்புமிகு திரு. க. உ. ரொ. எட்மண்ட் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட காரியங்களிலே டெண்டர் விடுவது என்பது முடியாத காரியம். காரணம், தமிழ்நாட்டிலே பேப்பர் செய்யும் ஆலைகள் குறைவாக இருக்கின்றன. இப்படிப்பட்ட தொழிலில் ஈடுபடுகிறவர்கள் ஏராளமாக இருந்து, கோறுக்கைக்கு (eta reeds) அதிக அளவுக்கு தேவை இருந்தால், நமது அரசாங்கம் வருவாயைக் கருதி டெண்டர் விடுவார்கள். தமிழ் நாட்டிலே குறைந்த அளவுக்குத்தான் காகிதம் செய்யும் ஆலைகள் இருக்கின்றன. ஆகவே அரசாங்கம் அன்றைய தினம் மற்ற மாநிலங்களில் இருக்கின்ற விலையை ஒப்பிட்டுப்

பார்த்து விலையை நிர்ணயம் செய்திருப்பதாகத் தெரிகிறது. அந்த அடிப்படையில் டன்னுக்கு 40 ரூபாய் என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள்.

திரு. எ. சுவாமிதாஸ்: தலைவர் அவர்களே, சாதாரண விவசாயிகளுக்கு, கிராமத்தில் இருக்கிற வேறு தொழில் செய்பவர்களுக்கு மூங்கில் வாங்குவது என்றால் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டும் என்ற நிலைமை அந்தக் காலத்திலிருந்து இருக்கிறது. தனியாருக்கு ஏலம் போடாமல் கொடுத்ததால் மற்றவர்களுக்கு மூங்கில் கிடைக்கவில்லையோ என்னவோ. மூங்கில் வாங்குவதற்கு, ஒரு மூங்கிலுக்கு 5 ரூபாய், 10 ரூபாய் என்று விலை கொடுக்க வேண்டியிருந்தது. சிலருக்கு மூங்கில் கூட கிடைக்கவில்லை. ஆகவே இப்படி ஏலம் போடாமல் கொடுத்தது முறைதானா? அரசாங்கத்திற்கு அதிக வருவாய் தரக்கூடிய மூங்கிலை இப்படி ஊதாரித்தனமாக ஒருவருக்கு மட்டும் கொடுத்தது முறைதானா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவை துணைத் தலைவர் அவர்களே, முறை தானா, அல்லது முறையற்ற செயலா என்பதற்கு இப்போது பதில் சொல்ல தயாராக இல்லை. நான் 1974—75-ல் நடந்ததைச் சொல்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: துணைத்தலைவர் அவர்களே, சன் பேப்பர் மில்லுக்கு கொடுக்கப்பட்ட மூங்கில் விலையைப்பற்றி சர்ச்சை கிளப்பியிருக்கிறார்கள். சேஷசாயி பிரதர்ஸ் பேப்பர் மில்லுக்குக் கொடுக்கப்பட்ட மூங்கிலுக்கு என்ன விலை கொடுத்திருக்கிறார்கள், எந்த ஆட்சி காலத்தில் கொடுக்கப்பட்டது, எவ்வளவு வருடத்திற்குக் கொடுக்கப்பட்டது என்ற விபரத்தை அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, சேஷசாயி பேப்பர் மில்லுக்கு எந்த விலை விகிதத்தில் மூங்கில் மரங்களைக் கொடுத்தார்கள் என்பது பற்றி என்னிடம் இப்போது தகவல் இல்லை. ஆனால் சமீபத்தில் எனக்கு சேஷசாயி மில்லிடமிருந்து ஒரு மகஜர் அனுப்பப்பட்டிருக்கிறது. மற்ற மாநிலங்களைப் பார்க்கின்ற நேரத்தில், இங்கே விலை மிகவும் அதிகமாக இருக்கிறது. 10, 15 மடங்கு அதிகமாக இருக்கிறது. ஆகவே எங்களுடைய தொழில் நசிந்து போகிற நிலைமை இருக்கிறது. எங்களுக்கு விலையைக் குறைத்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள்

மூங்கில் பற்றி கோரிக்கை விடவில்லை. காரணம், மூங்கிலுக்கு
அவர்களுக்கு காலவரையறை நிர்ணயித்திருக்கிறார்கள். அந்தக்
காலம் வரைக்கும் இந்த விலைக்கு வாங்குவது என்று ஒப்பந்தம்
செய்திருக்கிறோம்; அதற்குப் பிறகு மூங்கிலுக்கு விலையைக் குறைத்
துக் கேட்க வேண்டுமா, வேண்டாமா என்பதை அந்த நேரத்தில்
பரிசீலித்துக் கொள்கிறோம். இப்போது காட்டு மரத்தை
கொடுத்ததற்கு, டன்னுக்கு இவ்வளவு என்று விலை நிர்ணயம்
செய்யப்பட்டிருப்பது அதிகமாக இருக்கிறது என்று என்னிடம்
மகஜர் கொடுத்திருக்கிறார்கள்.

அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. என்ன விலைக்கு
சேஷசாயி மில்லுக்குக் கொடுத்தார்கள் என்பது பற்றிய விவரம்
எனக்குத் தெரியாது. பொதுவாகப் பார்த்தால், இன்று
டிமான்ட் அதிகமாக இல்லை. போட்டிபோட்டு இதில் விலை
கேட்பவர்கள் அதிகமாக இல்லை என்ற காரணத்தினால் தான் இதில்
அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட விலையை நிர்ணயம் செய்து, இந்த
விலையை மற்ற மாநிலங்களிலுள்ள விலையோடு ஒப்பிட்டுப்
பார்த்து அந்த மாநிலத்தில் ஒரு டன்னுக்கு இவ்வளவு விலை
கிடைக்கும் என்றால் நம் நாட்டில் ஒரு டன் மூங்கிலுக்கு அல்லது
காகிதம் செய்யக் கூடிய மரங்களுக்கு இந்த விலையை நிர்ணயம்
செய்தால் போதும் என்ற அடிப்படையில் செய்திருப்பதாகத்
தெரிகிறது.

அடுத்து, நம் ரப்பர் உற்பத்தி பற்றி மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஞானசிகாமணி அவர்கள் ஒரு பிரச்சனையை
இங்கே எழுப்பினார்கள். எவ்வளவு தொகைக்கு இதுவரையில்
தமிழ்நாட்டில் ரப்பர் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று
கேட்டார்கள். 1975--76ம் ஆண்டு 55 லட்சம் ரூபாய்க்கு
தமிழ்நாட்டில் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை
செய்யப்பட்டிருக்கிறது. 1976--77ல் 69 லட்சம் ரூபாய்க்கு
ரப்பர் தமிழகத்தில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்
யப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரி
வித்துக்கொள்கிறேன். இந்த ஆண்டு இன்னும் அதிகமாக இருக்
கும் என்று எதிர்பார்க்கலாம். இன்றையதினம் ரப்பர் உற்
பத்தி தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நல்ல முறையில்
வளர்ச்சி பெற்றிருக்கிறது.

திரு. ஜேம்ஸ் அவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில்
ரப்பர் தோட்டங்களில் வேலை செய்யக் கூடிய தொழிலாளர்
களுக்கு சலுகைகள் கொடுக்கப்படவில்லை என்றெல்லாம்
சொன்னார்கள். குறிப்பாக காவல் பார்க்கிற வேலைக்கு
அமர்த்தப்பட்டவர்கள் 24 மணி நேர வேலை செய்
கிறார்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அது சரியான தகவல்
அல்ல. அவர்கள் இருபத்திநாலு மணி நேரம் வேலை வாங்கப்
படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இருந்தாலும்
அதைப்பற்றி விசாரிக்கிறேன். ஒருவேளை தவறாக ஒரு தகவல்

வந்திருக்கலாம். 24 மணி நேரம் ஒரு தொழிலாளி வேலை செய்வது போலவும் திங்கள்-சம்பளம் என்பது போலவும் [illegible] ஒரு வேலை. சென்றுகொண்டிருக்கின்றன் எட்டு மணி நேரம் [illegible] வேலை பார்க்கலாம். அதற்கான [illegible] பற்றி விவாதிக்க வேண்டிய [illegible] திரு. [illegible] அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[illegible] இன்றையதினம் அமர்ந்திருக்கின்ற [illegible] வீடுகள் எல்லாம் சொந்தவீடுகளாக மாறியிருக்கிறது. [illegible] தோட்டங்கள். அதிலே 180 தொழிலாளர்களுக்கு இதுவரை நிலம் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. 12.6 லட்சம் ரூபாய் செலவில் 180 வீடுகள் இன்றையதினம் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 180 வீடுகளைச் சேர்க்கும் 183 வீடுகள். மொத்தம் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. [illegible] துறை வசதி இல்லை என்று சொன்னார்கள். இரண்டு மருத்துவ மனைகள் அங்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. வனத்துறையிலிருந்து தொழிலாளர்களுக்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். வீடுகள் கட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது. 1977-78-ல் 70 வீடுகள் கட்ட ஆறு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1978-79-ல் 16.40 லட்சம் மதிப்பீட்டில் 200 வீடுகள் கட்டவும், 1979-80-ல் 27.70 லட்சம் ரூபாய் செலவில் 277 வீடுகள் கட்டவும், 1980-81-ல் 300 வீடுகள் கட்டுவதற்கும், 81-82ல் 300 வீடுகள் கட்டுவதற்கும், 1981 82க்குள் 1147 வீடுகள் இன்னும் அதிகமாகக் கட்டுவதற்கும் வனத்துறை ஏற்பாடுகள் செய்து அதற்கு 110 லட்சம் ரூபாய் மதிப்பிட்டு போட்டிருக்கிறது என்பதையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வேறு எதுவும் விசேஷமாக இந்தத் துறையைப் பொறுத்து சொல்வதற்கில்லை. ஒன்றை மட்டும் சொல்லிக் கொள்கிறேன். இந்த அரசு பொறுத்தமட்டில் வனத்துறையை வளர்ப்பதில் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது. நிலங்களை பட்டா செய்து கொடுப்பதில் மிகவும் கவனமும் கருத்துமாக இருக்கிறது. [illegible] இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நிலங்களை பட்டா செய்து கொடுப்பதைக் குறித்து [illegible] வனத்துறையைப் பொறுத்த முடியும். திரு. மணி அவர்கள் [illegible] பற்றிச் சொல்லும்போது அது [illegible] திட்டம் என்று சொன்னார்கள். அந்தத் திட்டத்திற்கு என்னவளவு எதிர்ப்பு இருக்கிறது என்பதை இன்றையதினம் அரசு [illegible] வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

[மாலை 6-20]

[illegible] கருவேலம் மரங்களை வளர்க்கின்ற வாய்ப்பு இருக்கிறது. கிராமங்களில் இருக்கின்ற [illegible] களையும்

வளர்க்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. [illegible] மன்றங்களில் இருக்கின்ற [illegible] மரங்களை வளர்க்கின்ற வாய்ப்புகள் இருக்கின்றன. ஆனால் இதுவரை [illegible] வழக்குகளில் இறங்கும்போது, அங்குள்ள மக்கள் எதிர்ப்பு காட்டுகிறார்கள். நாம் இதுவரை [illegible] மரங்களை [illegible] அதைப் பாதுகாக்க வேண்டும். [illegible] மாடுகள் [illegible] மேயாமல் தடுக்க வேண்டும். இப்படிப் [illegible] களிலும், மக்களைத் தோட்டங்களிலும் மரங்களை வளர்க்கின்ற தேவத்தில், ஆடு மாடுகளை வைத்திருக்கிறவர்கள் [illegible] இதை ஆட்சேபிக்கின்றார்கள். இதை அதிகாரிகள் தடுக்கிறார்கள். ஆனால் [illegible] நாட்டுக்கு தடுக்கிறார்கள் என்றும் [illegible] மூன்று ஆண்டுகளுக்குத் தான் தடுக்கிறார்கள். அதாவது நடப்பட்ட மரங்களின் வேர்கள் பரவி [illegible] பிறகுதான், எந்தவிதமான பகுதிகள் பின்னால் நல்ல முறையில் வளர்க்கக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆரம்பக் கட்டத்தில் தான் ஆடுமாடுகள் மேயாமல் பார்த்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. ஆனால் இதற்கு பெருவாரியான எதிர்ப்புக்களை அங்குள்ள மக்கள் தெரிவிக்கிறார்கள். அரசாங்கத்திற்கும் பல எதிர்ப்பு புகார்கள் வந்திருக்கின்றன. இருந்தும் அதிகாரிகள் பொறுமையாக இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு இதற்கான விளக்கங்களை அளித்துக்கொண்டு, வனத்துறையை வளர்த்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறார்கள்.

இங்கேயுள்ள சில உறுப்பினர்கள் ஏழை எளியவர்களுக்கு பட்டா செய்து கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். ஏழை மக்கள் 3 ஏக்கர், 5 ஏக்கர் என்று காட்டு நிலங்களை காட்டு இலாகாவினர் குத்தகைக்கு விடுகிறார்கள். அவர்கள் பயிர் செய்வதற்கு, வாய்ப்பும் வசதியும் செய்து கொடுக்கிறார்கள். அப்படி குத்தகைக்கு விட்டு பயிரிட வேண்டும் என்று சொல்லப்படும்போது எந்தவிதமான பயிர்களை போடவேண்டும் என்று காட்டு இலாகாவினர் சொல்லுகிறார்கள். ஆனால் விவசாயிகள் [illegible] சோளம், வாழை, கரும்பு இவைகளை எல்லாம் பயிர் செய்கிறார்கள். மூன்று காலத்திற்கு என்று குத்தகைக்கு நிலத்தை விட்டு கொடுத்திருந்தால், குத்தகை முடியும்போது, நிலத்தை விட வேண்டும் என்று சொல்லும்போது, அவர்கள் எந்தவிதமான கோரிக்கையோடு வருகிறார்கள் என்றால், நான் பயிர் செய்த கரும்பு அப்படியே இருக்கிறது. வாழை அப்படியே நிற்கிறது. அதை அப்புறப்படுத்தியவுடன் விட்டு விடுகிறேன் என்று சொல்லுகிறார்கள். அப்படி ஆறு மாதங்கள் கழித்து நிலத்தை விட வேண்டும் என்று வரும்போது, அங்கே சோளம் இருக்கிறது என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட கஷ்டங்கள் வனத் துறைக்கு நிறைய இருக்கிறது. என்றாலும் கூட பாராட்டத்தக்க முறையில் வனத்துறையை வளர்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட குறைபாடுகள் இருந்தாலும் அவைகளை சரிப்படுத்தி, சீராக்க வேண்டும் என்று இந்த அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு உறுப்பினர்கள் நல்ல பல கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். திரு. லத்தீப் போன்றவர்கள் மிகுந்த பயனுள்ள கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்கள். வனத்துறையில் ஏற்படுகின்ற சீர்கேடுகளுக்கு யார் பொறுப்பு, திருடர்கள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதன் அடிப்படையில் தான் இந்த அரசு செயலாற்றிக்கொண்டிருக்கிறது. திரு. லத்தீப், கந்தசாமி போன்றவர்கள் இப்படிப்பட்ட கருத்துக்களை இங்கு சொல்வதோடு நின்று விடாமல் எங்கெங்கு தவறுகள் யார் யாரால் நடைபெறுகின்றதோ அவைகளை அரசாங்கத்தின் கவனத்திற்கு கொண்டு வரவேண்டும் என்றும், அப்படி கொண்டு வரும்போது, அவர்கள் யாராக இருந்தாலும் சரி, பாரபட்சம் பார்க்காமல், அதிகாரிகள் இதில் தவறுகள் செய்திருந்தாலும் அப்படிப்பட்டவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தெரிவித்து, வெட்டுத் தீர்மானத்தை கொடுத்திருகின்றவர்கள், என்னுடைய விளக்கத்திற்குப் பிறகு, வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இந்த மான்ய கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டு அமருகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஸான்டல்வுட்களை வைத்திருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க சட்டம் இல்லை என்று சொன்னார்கள் என்று நினைக்கிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் நமக்குச் சட்டம் இருக்கிறது..............

In Madras Act 31 of 1961, according to Clause 36(a):

'No person sh ll have in his possession any quantity of sandalwood in excess of 5 Kg. *unless* under a licence granted by the D.F.O. in that behalf etc.'

ஆகவே நமக்கு இந்தச் சட்டத்தின்படி அதிகமாக ஸான்டல்வுட் வைத்திருக்கின்றவர்களுக்கென்று சட்டம் இருக்கிறது. இந்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒரு அளவுக்கு மேல் ஸான்டல்வுட் யார் வைத்திருக்கின்றார்களோ அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம் என்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

திரு நா. பழனிவேல் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கையின் மீது பேசுகின்றபோது, இந்த சிறு விவசாயிகள் பிரச்னையிலே, மலை ஓரங்களிலுள்ள பூமிகளில் சாகுபடி செய்யக்கூடிய சிறு விவசாயிகள் அதாவது 1 அல்லது 2 ஏக்கர், அல்லது 40, 50 சென்ட் நிலங்களிலே 10 அல்லது 20 வருஷங்களாகப் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அப்படி சாகுபடி செய்யக்கூடிய நிலங்களிலே வன இலாகாவினர் அந்த நிலங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதில்லை. அப்படி பட்டா செய்து கொடுக்கப்படாமல், என்னுடைய தொகுதியிலே 2 அரிசனங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கையிலே காசு கிடையாது. ஜாமீனிலே வெளியே வரவேண்டுமென்றாலும், அவர்களிடம் உள்ள சட்டிப்பானைகளை விற்றால்தான் முடியும். அரசு இதைப்பற்றி பரிசீலனை செய்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னதை நான் வரவேற்கிறேன். ஆனால், பரிசீலனை செய்து அதற்கு ஒரு முடிவு எடுப்பதற்குள், இவர்களுடைய நிலை என்னவாகும் என்பதை அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்குரிய நடவடிக்கைகளில் இந்த அரசு உடனடிக் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் இதற்குப் பதில் கொடுத்தால் வசதியாக இருக்கும். எனக்கு அவர்களிடமிருந்து தந்தி வந்திருக்கிறது. அவர்களுக்கு என்ன பதில் சொல்லலாம்..............................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப்பற்றி அமைச்சர் அவர்களுடைய அறையிலே கொண்டுபோய் சொல்லுங்கள். தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் சொன்ன குற்றச்சாட்டிற்கு உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னதற்கு அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் ஒரு சட்ட விஷயத்தைக் கிளப்பினார்கள். மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவு வைத்துக் கொள்ளலாம். என்று சொன்னார்கள். ஆனால், நான் குற்றம்சாட்டு இருப்பதோ அவர் 1½ டன் சந்தனக்கட்டை வைத்திருப்பதாகச் சொன்னேன். நான் கேட்டுக் கொள்வது, அவர் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை அப்படி எடுக்கப்படும் நடவடிக்கை, அங்குள்ள உப்பிலியாபுரம் போலீஸ் மூலமாகவோ அல்லது வேறு சிறப்பு அதி

காரிகள் அமைச்சரை அல்லாமல், குறிப்பாக சி.ஐ.டி. இலாகா மூலம் நடவடிக்கை எடுத்தால் சாத்தியமாக இருக்கும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. ராஜா. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சாதிக்பாட்சா அவர்கள் சொன்னதைப் பற்றி நான் அந்த அடிப்படையிலேயே நடவடிக்கை எடுக்கிறேன். அந்தச் சட்டத்திலேகூட, லைசன்ஸ் இல்லாமல் 5 கிலோகிராம் சந்தனக் கட்டையும், வித் லைசன்ஸ் அதாவது லைசன்ஸுடன் அதற்கு மேல் எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது.

திரு. ஓ. சுப்பிரமணியம்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது, மூன்று ஆண்டுகளுக்கு கண்மாய்கள் உள்ள பகுதிகளுக்கு ஆடு மாடுகள் போவதை தடை செய்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால், யூகலிப்டஸ், முந்திரி போன்றவைகள் உள்ள பகுதிகளில் மக்கள் பாதைகளாக உபயோகப் படுத்திக் கொண்டு வந்த இடங்களை உபயோகப்படுத்த முடியாமலும், அதனால் அவர்கள் ஆடுமாடுகளைக் கொண்டு செல்ல முடியவில்லை என்றும், அதையும் இந்த அதிகாரிகள் தடை செய்கிறார்கள் என்றும் சொல்கிறார்கள். அதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தர வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. ராஜா. எட்மண்ட்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. எந்தப் பகுதியில், எந்த வழியில், என்ன காரணத்திற்காக இப்படிப்பட்ட தடைகளை அதிகாரிகள் செய்கிறார்கள் என்ற விவரங்களை எல்லாம் என்னிடம் கொடுத்தால், அதைப்பற்றி பரிசீலனை செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவு பெற்றது. இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, எ. சுவாமிதாஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— "கோரிக்கை எண் 25—சின்கோனா' என்று தலைப்பின் கீழ் ரூ. 92,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திருவாளர்கள் ஏ. ஆர். மாரிமுத்து, திரு எ. சுவாமிதாஸ் ஆகியோருடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

திரு. என். இராமச்சந்திரன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

[மாலை 6-30]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 45—காட்டுவளத் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,46,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திருவாளர்கள் எ. சுவாமிதாஸ், என். இட்டப்பா ஆகியோர்களின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி "நிதிக் கோரிக்கை எண் 55—[illegible] என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,68,21,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

(7) மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் அவர்களின் பதிலுரை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து, மானியக் கோரிக்கைகள் 18— மருத்துவம், 19— பொதுச் சுகாதாரம் ஆகிய கோரிக்கைகள் மீது 13— 8— 1977ம் நாளன்று நடந்த விவாதத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது பதிலுரை ஆற்றுவார்கள்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : மாண்புமிகு சட்ட மன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இந்த மன்றத்தின் முன் வைத்த மானியக் கோரிக்கைகளின் மீது மன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் தங்களுடைய கட்சியின் சார்பாகவும், தங்களுடைய கொள்கையை அடிப்படையாகக் கொண்டும் பல்வேறு நல்ல கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நான் உண்மையிலேயே அவர்களுக்கெல்லாம் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் இந்தக் கோரிக்கையின் மீது கருத்தைத் தெரிவித்தவர்கள் தாங்கள் எதையெதை நம்புகிறார்களோ, எந்த வகையில் தமிழகத்தில் சுகாதாரம் சிறப்பாக அமைய வேண்டுமென்று விரும்புகிறார்களோ அந்த வகையில், அந்த எண்ணத்தின் அடிப்படையில் தங்களது கருத்துக்களை இங்கே வெளியிட்டதற்காகவும் நான் நன்றி கூறக் கடமைப் பட்டவன் என்று கூறுகிறேன்.

அதிலும், பல உறுப்பினர்கள் இந்த மானியக் கோரிக்கையை, அதிலே சொல்லப்பட்டிருப்பவைகளைப் பாராட்டியதோடு மட்டுமல்லாமல் என்னென்ன புதிய வழிமுறைகளைக் கையாள வேண்டுமென்பதையும் இங்கே தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அதைவிட இன்னும் கொஞ்சம் முன்னாலே சென்று என்னென்ன சிறப்புகள் அல்லது தேவைகள் தமிழகத்திலே இப்போது இல்லை என்பதை அவர்கள் சுட்டிக்காட்டியபோது அவர்களுடைய எண்ணம், நினைப்பு எல்லாம் எங்களுடைய எண்ணத்தைப் போலவே, நினைப்பைப் போலவே, ஆசையைப் போலவே இருந்தது ; அவர்களும் எங்களைப் போல அதில் தீவிரமாக இருக்கிறார்கள் என்பதை எண்ணி உண்மையிலேயே நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு கோரிக்கையை அவையிலே வைத்து அந்தக் கோரிக்கையைப்பற்றி உறுப்பினர்களின் கருத்துக்களை அறிகின்ற நேரத்தில் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனிக்கும்போது தான் அவர்கள் எடுத்துச் சொல்லுகிற முறையில் இருக்கிற கண்ணியத்தன்மையிலேதான், அவர்கள் எடுத்து வைக்கிற புள்ளி விவரங்களிலேதான் நல்ல நிறைவு பெற்ற ஒரு கருத்து எங்களுக்குத் தரப்படுகிறது என்பதை நான் நன்கு உணருகிறேன்.

எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர், காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திரு. ஏ. ஆர். மாரிமுத்து அவர்கள் தொடக்கத்திலே தன்னுடைய கருத்துக்களைச் சொல்லிவிட்டுப் பாராட்டியதோடு எங்கெங்கே குறைகள் இருக்கின்றன என்பதையெல்லாம் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். அவர்களைப் போலவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஜனதாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் சி.பி.ஐ.-யைச்

சேர்ந்தவர்களும், உழைப்பாளர் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்தவர்களும், தேசிய பார்வர்ட் பிளாக் கட்சியைச் சேர்ந்தவர்களும், முஸ்லிம் லீக்கைச் சேர்ந்தவர்களும் இங்கே தங்களுடைய யோசனைகளை வைத்துப் பாராட்டி எங்களுக்கு ஊக்கம் தருகின்ற வகையிலே துணிந்து நாங்கள் செயல்படுவதற்கேற்ப தங்களுடைய ஆர்வத்தை மட்டுமல்லாமல், ஆதரவையும் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள்.

குறிப்பாக, எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன்னேற்ற கழகத்தைச் சேர்ந்த இங்கே துணைத் தலைவராக இருக்கிற பேராசிரியர் அவர்கள் பல்வேறு புள்ளி விவரங்களைச் சுட்டிக் காட்டி, என்னென்ன குறைகள் என்பதையும், ஆங்கிலத்திலே வெளியிடப்பட்டிருக்கிற சொற்களுக்கும், தமிழிலே தரப்படுகின்ற சொற்களுக்கும் எவ்வளவு வேறுபாடுகள், மாறுபாடுகள் இருக்கின்றன என்பதையெல்லாம் எடுத்துக்காட்டி, திறந்த மருத்துவமனைப் பிரிவை, இதய நோய்ப் பிரிவை மறுபடியும் திறந்துவைக்க வேண்டுமா என்பதையெல்லாம் நகைச்சுவையோடு சொல்லாமல் ஆனால் நகைச்சுவை ஏற்படும்படியும் ஆனால் அதே நேரத்திலே நடந்தது என்ன என்பதை உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிற வகையிலே தெளிவாக விளக்கிக் கூறினார்கள் என்பதற்காக உண்மையிலேயே நான் மகிழ்கிறேன்.

அதிலும் இரண்டு நாட்களுக்கு முன்பாகப் பேசியிருக்க வேண்டிய நான் காலம் இல்லாத காரணத்தால் பேச முடியாது சென்றபோதும், இன்றைய தினம் காலையிலே உடல்நிலை சரியில்லாத காரணத்தால் பேச முடியவில்லை என்பதையும் ஏற்றுக் கொண்டு பிற்பகல். மாலையிலே பேசலாம் என்று அனுமதித்த அத்தனை பேர்களுடைய நல்ல உள்ளங்களுக்கும் நான் தனிப்பட்ட முறையிலே நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்களுடைய ஆசை இந்த நாட்டில் வாழுகின்ற மக்கள் நோயற்று வாழவேண்டுமென்பதை இங்கே இருக்கின்ற, மாமன்றத்திலே உள்ள மாண்புமிகு நண்பர்கள் அத்தனை பேர்களும் நன்றாகப் புரிந்திருக்கிறார்கள், என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. அந்த நம்பிக்கையிலே தான் நீங்கள் நடத்திக்காட்ட வேண்டுமென்ற கட்டளையிடுவது போலவும் நடத்தியே தீரவேண்டுமென்று வற்புறுத்துவது போலவும் எந்த எந்த வகையிலே புள்ளி விவரங்களிலே தவறுகள், அல்லது போட்டிருக்கின்ற திட்டங்களை நிறைவேற்ற முடியுமா என்பதையெல்லாம் கேள்வியாகவும் பதிலாகவும் யோசனையாகவும் நண்பர்கள் இங்கே அக்கறையோடு சொல்லியிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் உறுப்பினர்களுடைய நல்ல உள்ளங்கள் அடையாளமாக இருக்கின்றது என்று நான் எடுத்துக் கொள்கிறேன்.

[திரு. எம். ஜி. இராமச்சந்திரன்] [1977 ஆகஸ்டு 16

ஒவ்வொரு தரப்பினருக்கும் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்தவருக்கும் பல்வேறு கொள்கைகள் இருக்கின்றன. ஆனால் நோயற்ற மக்கள் வாழுகின்ற நாடாக இந்த நாடு இருக்க வேண்டுமென்பதிலே யாருக்கும் வேறுபாடோ கருத்து வேற்றுமையோ இருக்கமுடியாது என்பதும் யாரும் மறுத்துக் கூற முடியாத உண்மையாகும். எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கோரிக்கை மருத்துவத்துறை என்ற பெயரிலும் மக்கள் நல்வாழ்வுத் துறை என்ற பெயரிலும் நாங்கள் எவ்வளவு தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறோமோ அந்தக் கோரிக்கையின் அடிப்படையில் சொல்லி இருப்பவைகள் அனைத்தும் எங்களுடைய முடிவான ஆசையின் எடுத்துக்காட்டு என்று மட்டும் தயவுசெய்து யாரும் நினைத்துவிட வேண்டாம் என்று மட்டும் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[மாலை 6-40]

நாங்கள் பதவியேற்று ஏறத்தாழ நாற்பது நாட்களுக்குள் இந்த பட்ஜெட்டைக் கொண்டு வந்து இந்தத் திட்டங்களை உங்கள் முன் வைத்து, அடுத்த மார்ச் மாதத்திற்குள் என்னென்ன செய்ய முடியும் என்பதையும், ஆனால் சொல்லும்போது ஆண்டுக்கு இவ்வளவு என்று திட்டத்தையும் வைத்து நாங்கள் எங்கள் எண்ணங்களை உங்கள் முன் எடுத்து வைத்திருக்கிறோம்.

கிராமப்புறத்து மக்கள் எப்படி வாழ வேண்டும், எப்படிப்பட்ட சுற்றுச் சார்பிலே வாழ வேண்டும். எவ்வளவு நல்ல சுகாதார சூழ்நிலையிலே வாழ வேண்டுமென்பதில் எங்களுக்கு மெத்த அக்கறை இருக்கிறது என்பதையும், அதை இங்குள்ள நீங்கள் நன்கு புரிந்திருக்கிறீர்கள் என்பதையும் நான் அடிப்படையாக வைத்துக்கொண்டு என்னுடைய எண்ணத்தைச் சொல்லலாம் என்று நான் நம்புகிறேன்.

எத்தனை ஆயிரம் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அல்லது வட்டார நிலையங்கள் அல்லது மருத்துவ மனைகள் அல்லது நடமாடும் வைத்திய அமைப்புகள், இவைகளை ஏற்படுத்துவோம் என்பதைப்பற்றி நாங்கள் சொல்லும்பொழுதோ அதே நேரத்தில் நகர்ப் பகுதிகளில் எங்கெல்லாம் மருத்துவ மனைகள் புதிதாகத் துவங்கப்படும் என்ற கேள்விக்கு நாங்கள் பதில் சொல்லும் பொழுதோ அல்லது எங்கெங்கே நீர்நிலைத் தொட்டிகள் தொடங்கப்பட்டு குடிசை வாழ்-பகுதி மக்கள், கிராமத்திலே இருக்கின்ற மக்கள், உழைக்கின்ற அந்த வர்க்கத்திற்கு வேறு எந்த வசதியும் உடனே கிடைக்காவிட்டாலும் குடிநீர் வசதியாவது எப்படிக் கிடைக்கும் என்ற கேள்விகளை எங்கள் முன் நீங்கள் வைத்துள்ளீர்கள்.

1977 ஆகஸ்டு 16] [திரு. எம். ஜி. இராமச்சந்திரன்]

நான் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன், யாரும் தவறாகக் கருதமாட்டார்கள் என்ற நம்பிக்கையிலும், ஏடுகளிலே தவறாகச் செய்தியை வெளியிடாமல் உண்மையை வெளியிடுவார்கள் என்ற நம்பிக்கையிலும் சொல்ல விரும்புகிறேன். நாம் செலவழிக்கும் ஏறத்தாழ 70 கோடி ரூபாயில் எத்தனை கோடி ரூபாய் நகர்ப்புறங்களுக்குச் செலவழிக்கப்படுகின்றன, எவ்வளவு கோடி ரூபாய் கிராமப் பகுதிகளுக்குச் செலவழிக்கப்படுகின்றன என்பதையெல்லாம் நாம் கணக்கிட்டுப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்

ஏழை பணக்காரர் என்ற பேதம் கூடாது என்று சொல்கின்றவர்கள் நாம் என்பதில் நமக்குள் எந்தப் பேதமும் இருக்காது என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. ஒரேயிடத்தில் நிதி குவிந்துவிடக் கூடாது, பரவலாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்திலே நமக்குள் மாற்றுக் கருத்து இருக்காது என்பதிலும் எனக்குச் சிறிதும் ஐயமில்லை. அதேபோல ஒரு சில பகுதிகளுக்கு மட்டும் நல்லமருத்துவமனைகளும், வசதிகளும், அமைத்துக் கொடுப்பதற்காக கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவழிக்கப்படுவதுதான் நியாயம் என்று நாம் அனைவரும் நிச்சயமாக ஒப்புக்கொள்ள மாட்டோம் என்பதிலே எனக்கு நிறைய நம்பிக்கை இருக்கிறது. அந்த வகையிலே உங்களுக்கு ஒரு சிலவற்றைச் சொல்ல வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

ஏறத்தாழ 19 மருத்துவ மனைகளுக்கும், 8 கல்லூரிகளுக்கும் நாம் செலவழிக்கின்ற பணம் $22\frac{1}{2}$ கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் இவைகளை அனுபவிப்பவர்கள் எத்தனை பேர்கள் என்று கேட்டால், தோராயமாகச் சொல்லப்போனால் ஏறத்தாழ 50 இலட்சம் அல்லது 60 இலட்சம் மக்கள்தான் இவைகளினால் பலன் பெறக்கூடியவர்கள் என்பதை நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள். எனக்கு முன்னாலே நான்கைந்தாண்டுகளாக மருத்துவத்துறையைத் தன் கையிலே வைத்துக் கொண்டிருந்த பேராசிரியர் அவர்களுக்கு அது நன்கு தெரியும் என்று நான் நம்புகிறேன்.

நாம் ஒரு சிறிது இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்ப்போம். ஏறத்தாழ 60 இலட்சம் மக்களுக்கு $22\frac{1}{2}$ கோடி ரூபாய் செலவழிக்கப்படுகிறது என்பதையும், மிச்சமுள்ள ஏறத்தாழ 4 கோடி மக்களுக்கு 35 கோடி ரூபாய்கள் செலவழிக்கிறோம் என்பதையும் கணக்கிட்டுப் பார்த்தோமானால், இது எந்த அளவிற்கு நியாயம் என்பதை நம் உள்ளத்திற்குக் கேள்வியாக வைத்தோமானால் நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம்.

ஆனால், நாமே சிந்தித்துக் கொண்டு இந்தத் திட்டத்தை இங்கே வைத்து, அனுமதி கேட்டு அந்தப் பதவியிலே, பொறுப்பிலே

இருக்கிற நான் இப்படிப்பட்ட ஒரு கருத்தை வெளியிடுகின்றேனே, இது வேடிக்கையாக இருக்காதா, இது எப்படி இருக்கிறது, எதிர்க்கட்சிக்காரர்கள் பேசுவதைப்போல் இருக்காதா என்றெல்லாம் கூடக் கருதக்கூடும்.

ஆனால், எங்கள் மனநிலை என்ன என்பதையும், எங்களுக்கு இந்தத் திட்டத்திலே உண்மையாக இப்பொழுது வெளியிடப்பட்டிருக்கிற திட்டத்திலே மன நிறைவு இல்லை என்பதையும் சொல்லி, நாங்கள் எண்ணுகிற திட்டங்களை, எண்ணுகிற எண்ணங்களை நிறைவேற்றுகிற வழிமுறைகள் இதுவல்ல. இது தற்காலிகமாகச் செய்யப்படுகிறது. வேறு வழியில்லாமல், அவசரமாக யாரோ சிலர் ஆரம்பித்து வைத்து விட்ட வேலைகளைத் தொடர்ந்து செய்து முடிக்க, அதற்கிடையிலே நாங்கள் ஆசைப்படுகிற சிலவற்றையும் சிராக்க முயன்றிருக்கிற ஒரு அறிக்கை என்பதையும், ஒரு கோரிக்கை என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இதை நான் தெளிவாகச் சொல்கிறேன்.

நகர்ப்புறத்திலே இருக்கிற என்னென்ன புதிதான விஞ்ஞானக் கருவிகள், நவீன கருவிகள் புதிதாக வாங்கப்பட வேண்டுமென்று நாம் ஆசைப்படுகிறோமோ, அதே நேரத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்குள்ள நல்ல ஆயுதங்கள் கூட இல்லாத கிராமப்புற மக்களைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதையும் இங்கே கோடிட்டுக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். எங்களைப் பொறுத்தவரையில், எவ்வளவு செலவழித்திருக்கிறோம் என்று கணக்குப் போட்டு அதோடு முற்றுப் புள்ளி வைத்து விடுவதா? திட்டங்கள் போதும் நகர்ப்புற மக்களுக்கு; இனிமேல் அடுத்து திட்டமிடும்போது கிராமப் புறங்களிலே இருந்து தொடங்கலாமா? இதை அப்படியே நிறுத்தி விடுவதா என்று கேட்டால் நான் அந்த அளவிலே பேச முன்வரவில்லை. இங்கே நான் சொல்வதற்குக் காரணம், நகரத்திலே ஒரு நபருக்கு ரூ. 19-25 காசு செலவழிக்கப்படுகிறது. ஆனால், அதே நேரத்தில் கிராமத்திலேயுள்ள ஒருவருக்கு ரூ. 7-95 காசு செலவழிக்கப்படுகிறது என்ற கணக்கு என்னிடம் தரப்பட்டிருக்கிறது இதை நான் உங்கள் முன் வைப்பதற்குக் காரணம், எங்கள் மனம், எங்கள் இந்த நிலையைப் பேசச் செய்கிறது என்பதை எடுத்துக் காட்டுவதற்குத்தான். ஒரு நாட்டிலே இருக்கிற மக்களிடையில் எங்கே நோய் வாய்ப்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறதோ, அங்கே அதிகமாகச் செலவு செய்வதும் எங்கே ஓரளவுக்குப் பாதுகாப்பு இருக்குமோ அங்கே அந்தப் பாதுகாப்புக்கு ஏற்ப நாம் கொஞ்சம் குறைத்துக் கொள்வதும் நியாயம் என்று இருந்தாலும் தீட்டப்பட்டிருக்கிற திட்டங்களின் தொடர்ச்சி இப்படியே அமைத்துப் பழகிவிட்ட காரணத்தாலே, இப்படியே திட்டங்கள் தீட்டித் தீட்டி இதுதான் ஒரு வரைமுறை, வழிமுறை என்ற நியதி நிலைநாட்டப்

பட்டு விட்டதன் விளைவாகத் திட்டங்கள் தீட்டுகிறவர்கள் நாம் அந்தக் கருத்தைச் சொன்னாலும், அவர்களால் சீரணிக்க முடியவில்லையென்றாலும் அவர்களை இழுத்து வருவதற்குக்கூடக் கஷ்டமாக இருக்கிறது என்பதையும் நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேராசிரியர் அவர்கள் மொழி பெயர்ப்பைப் பற்றி சொல்லும்போது பொருள் சரியாக இல்லை, தமிழிலே சரியாக மொழி பெயர்க்கவில்லையென்று சொன்னார்கள். அந்த நிலைமை எப்பொழுது ஏற்பட்டிருக்கும் என்று நான் சிந்தித்துப் பார்த்தேன். ஏறத்தாழ $1\frac{1}{2}$ ஆண்டுக் காலத்திற்கு இடையிலேதான் இந்த பலவீனம் ஏற்பட்டிருக்கிறதாவென்றால், அதற்கு முன் அந்த பலவீனம் ஏற்பட்டிருக்காது என்பதை உண்மையிலே நான் நம்புவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். உண்மையில், இந்த இடைக் காலத்தில் ஏற்பட்ட இந்த நிலைமைகளை மாற்றுவதற்கு எப்படி தமிழிலே மொழி பெயர்க்கிற திறமைசாலிகள் இருந்தாலும், எங்கெங்கே மாற்றப்பட்டு விட்டார்களோ, எங்கெங்கே நீக்கப் பட்டார்களோ, அவர்களைப் போன்றவர்களையெல்லாம் தேடிப் பிடித்து மீண்டும் வேலை கொடுக்கக் கடமைப்பட்டிருப்பதைப் போல், இந்த அமைப்புகளை, திட்டங்களை நிறைவேற்ற இருக்கிற அதிகாரிகளையும் செயலாளர்களையும் திட்டம் தீட்டித் தருகின்ற திறமையாளர்களையும் நம்முடைய நோக்கத்திற்கும் எண்ணத்திற்கும் கொள்கைக்கும் ஏற்ப நம் பக்கம் இழுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதை இங்கே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

[மாலை 6-50]

இதற்கு அனுமதி தரவேண்டுமென்று கேட்கிற நேரத்தில், இவைகளை ஏன் எடுத்துச் சொல்கிறேன் என்றால், இந்த நாட்டின் நிலைமை ஏன் இப்படி இருக்கிறது என்பதையும், நிர்வாகத்தின் அமைப்புமுறை எப்படி போய்க் கொண்டிருக்கிறது என்பதையும் உங்களுக்கு நினைவுபடுத்தத்தான் என்பதை உங்களுக்கு வற்புறுத்திக்கூற விழைகிறேன்.

அப்படி நாம் மாற்றி அமைக்கும்போது, சிலருக்கு கஷ்டமாக இருக்கும். சிலருக்கு வேதனையாக இருக்கும். சிலருக்கு ஆத்திரம் கூட வரும். அந்த அளவுக்கு இதைப்போன்ற திட்டங்களை மாற்றி அமைத்து கிராமப்புறங்களுக்கு அதிகமாகவும், எங்கே வாய்ப்பு வசதி இல்லையோ அங்கே ஏற்பாடுகளை செய்வதற்கும், வாய்ப்பு வசதி உள்ள இடங்களில் ஓரளவு செலவுகளைக் குறைத்து சமப் படுத்தவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம் என்ற உணர்வை நாங்கள் பெற்றிருக்கிறோம். அந்த எண்ணத்தோடுதான் நான் இந்தக் கோரிக்கையை உங்கள் முன் வைத்திருக்கிறேன் என்பதை முதலாவதாக சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்கிறேன். நகரத்திலே இருக்கிற நல்ல மருத்துவர்கள் கிராமப் பகுதிகளுக்குப் போவதில்லை என்று இங்கே நண்பர்கள் குறிப்பிட்டார்கள். அந்த கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டியது என்னுடைய தலையாய கடமை என்ருலும் ஒன்றை நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். இது இன்று நேற்று என்று ஆரம்பித்த பழக்கம் அல்ல. ஒருவர்— ஓரிருவர் என்று சொன்ஞல், 20 ஆண்டுகளுக்கு மேல் சிலர் ஒரே இடத்தில் மருத்துவராக சென்னை நகரத்திலே இருக்கிற வேடிக்கை என்று நினைத்தாலும் சரி, வேதனை என்று எடுத்துக்கொண்டாலும் சரி, விபரீதம் என்ற முடிவுக்கு வந்தாலும் சரி, இது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் காண்கிருேம். இந்த அரசைப் பொறுத்தவரையில் காலத்தை நீட்டிக் கொண்டு போவதை (எக்ஸ்டன்ஷன்) நிறுத்திவிட்டோம் என்பதை முதலில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். இளைஞர்கள்—காத்துக் கொண்டிருப்பவர்கள் மேன்மேலும் புதிய பதவிக்கு வந்து தங்களுடைய திறமையைக் காட்டி அந்த வாய்ப்பைப் பெருவதற்கு நல்லதொரு சூழ்நிலையை உருவாக்கித் தந்தால்தான், அப்படிப்பட்ட கிராமங்களுக்குப் போவதற்கு அவர்கள் வருவார்கள் என்பது மட்டுமல்ல கிராமப் பகுதிகளில் நல்ல மருத்துவர்கள் கிடைப்பார்கள்.

இங்கே ஒருவர் அவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்று குறித்து வைத்திருக்கின்றேன். நேரம் ஆகும் என்பதால் அந்த விவரத்தை எடுக்கவில்லை. நினைவிலே இருப்பதை சொல்கிறேன். அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒருவருக்கு நோய் கண்டது, ஆபத்து ஏற்பட்டது எடுத்துக் கொண்டு போஞல் அந்த ஊரிலே இருக்கிற மருத்துவர் இன்ஞெரு ஊருக்கு செல்லுங்கள் என்று அனுப்பிவிட்டார். நாகைக்குச் சென்ருேம், தஞ்சைக்குச் சென்ருேம் இப்படி தூக்கிக்கொண்டு சென்ற நிலைமை ஆபத்து இருந்த நேரத்திலே ஏற்பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வேதனை எல்லாம் எங்கே ஏற்படுகிறது என்ருல், நகரத்திலே இருக்கிற— குறிப்பாக சென்னையிலே இருக்கிற மருத்துவர்களைப் பார்த்து, தஞ்சை போன்ற இடங்களிலே மதுரை போன்ற இடங்களிலே, இராமநாதபுரம் போன்ற இடங்களிலே இருக்கிற மருத்துவர்களிடம் அதிகமாக வருகிறது. ''எத்தனை நாள் நாங்கள் இங்கேயே சுற்றிக் கொண்டிருப்பது. அவர்கள் மட்டும் வாழ்கிருர்கள், வளருகிருர்கள் என்றும் அவர்கள் வசதியாக இருக்கிருர்கள். நாங்கள் மட்டும் என்ன பாவம் செய்தோம்' என்று சொல்வது போல் அவர்களுக்கு ஆத்திரம் வருகிறது. இவைகளின் அடிப்படையை நாம் மாற்றி அமைத்தாக வேண்டும். இத்தனை ஆண்டுக்கு ஒருமுறை இடம் மாற்றப்பட வேண்டும் என்ற நிலைமை சட்டத்திலே இருப்பதைப்போல், நடைமுறையில்

கொண்டுவரவேண்டும் என்று இந்த அரசு விரும்புகிறது. தயவு தாட்சண்யம் இல்லாமல் அவர்களை வெவ்வேறு இடங்களுக்கு மாற்றி ஆங்காங்குள்ள இளைஞர்களாக உள்ள மருத்துவர்களை திறமை வாய்ந்த அந்த மருத்துவர்களின் அறிவை அவர்கள் பெரும்படியான சூழ்நிலையை உருவாக்கி, அதன் விளைவாக அந்தப் பகுதியிலே வாழ்க்கை பெறமுடியாது இருக்கிற மக்களுக்கு வாழ வசதி செய்து கொடுப்பதற்கு நல்ல மருத்துவ வசதி செய்து கொடுப்பதற்கு உதவ நாம் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிருேம்.

இன்னும் ஒன்றை நான் குறிப்பிடுவேன், மருத்துவமனைகளில் எப்படிப்பட்ட ஊழல்கள் லஞ்சம் நடமாட்டம் இருக்கிறது என்பதை இங்கே பலபேர்கள் குறிப்பிட்டார்கள் ஊழல் நிறைய இருக்கிறது. லஞ்சம் இருக்கிறது. ஏதாவது போய் வேலை செய்ய வேண்டும் என்று கேட்டால் எவ்வளவு கொடுப்பாய் என்ற கேள்வியை அரசு மருத்துவ மனையில் இருப்பவர்கள் கேட்கிருர்கள் என்று இங்கே குறிப்பிட்டார்கள். நான் ஒரு மருத்துவ மனைக்கு சென்றபோது ஆயிரக்கணக்கான வழக்குகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டதைக் கேட்டு எல்லோரும் சிரித்தார்கள். நான் கோப்புகளைப் பார்த்தபோது அந்த எண்ணம் தான் என் மனதில் பதிந்தது. நான் இன்னும் ஒன்றை அழுத்தம் திருத்தமாகச் சொல்வேன். மருந்து வாங்குவதில் ஊழல் நடக்கிறது. மருந்துகள் வாங்குவதில் மட்டுமல்ல, அந்த மருந்துகளை செலவு செய்யும்போது, பயன்படுத்தும்போதும், ஊழல்கள் நடக்கின்றன. உண்மையான மருந்துகள் எங்கோ போகின்றன. போலி மருந்துகள் அந்த இடத்தைக் கைப்பற்றிக் கொண்டு விடுகின்றன. இப்படிப்பட்ட கொடுமைகள் எத்தனை இடங்களில் ஏற்பட்டு இருக்கின்றன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிருேம்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு உறுதியாகச் சொல்வேன், எப்படிப்பட்டவர்களாக இருந்தாலும் சரி, எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய பிரமுகர்கள் சிபார்சு செய்தாலும் சரி விட்டுக்கொடுக்காமல் அவர்கள் மீது எல்லாம் நடவடிக்கை எடுத்து, அதைப் புனிதமாக்கவேண்டும் என்ற நிலையில் இந்த அரசு செயல்படும். அந்த முடிவுக்கு நீங்கள் அத்தனை பேரும் ஒத்துழைப்புக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கையை நீங்கள் பேசிய பேச்சு உத்தரவாதம் அளிப்பது போல் இருந்தது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

என்ன கேட்டார்கள் இங்கே, தண்ணீர் வசதி இல்லை, வசதி இருக்கிறபோது செய்யாமல் ஒதுக்கிவிடுகிறார்கள், 5—6 ஆண்டுகள் அதற்காக நாங்கள் விண்ணப்பம் போட்டோம், பணம் சேர்க்கச் சொன்னார்கள், சேர்த்தோம், ஆனால் நிறைவேற்றப்படவில்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகள் பல்வேறு முறையில் சொல்கிறார்கள். எங்கே செய்யப்பட்டு இருந்தாலும் அங்கே தண்ணீர் வசதி இல்லை. எங்கள் கட்சியைச் சார்ந்த நண்பர் மாண்புமிகு உறுப்பினர் எஸ். ஆர். ராதா அவர்கள் ''நான் ஒரு மருத்துவ மனைக்குச் சென்றேன். அங்கே உள்ள நாற்றம் என்னால் சகிக்க முடியவில்லை. அந்தத் தண்ணீர் நாற்றம் அடித்து மிகவும் மோசமாக இருந்தது'' என்று சொன்னார்கள். நான் சொல்வேன், நாங்கள் இந்தப் பதவியை ஏற்றுக்கொண்ட பிறகு, நான் விசாரித்ததில் தொட்டி திறக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு யாராவது போய் திறந்தீர்களா என்று கேட்டு விடாதீர்கள். நான் போய் பார்த்து விட்டு வந்தேன். அங்கே தண்ணீர் இருக்கிறது. போதிய வசதிகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது என்ற நிலைமையை நான் உணர்ந்து இருக்கிறேன். அப்படிப் பட்ட நிலைமை இப்போது தவிர்க்கப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருநெல்வேலி பகுதியில் மற்ற பகுதிகளில் நீர் வசதி இல்லை என்பதும் மருத்துவ வசதி இல்லை என்பதும் மிகத் தெளிவாக சுட்டிக்காட்டினார்கள். அவர்களுக்கு எல்லாம் நாங்கள் திட்டம் போட்டு இருக்கிறோம் என்று சொல்லி, அத்தனையையும் அடுத்த மாதத்திலேயே நிறைவேற்றிடுவோம் என்று சொல்லி ஏமாற்றத் தயாராக இல்லை. இந்தத் திட்டத்தில் எதையெதை நிறைவேற்ற வேண்டுமென்று உங்கள் முன்னால் எண்ணத்தை வைத்து இருக்கிறோமோ அவைகளை குறித்த காலத்திற்குள் நிறைவேற்றுவதற்கு நாங்கள் நிச்சயமாக முயற்சிப்போம் என்பதை உங்களுக்கு நான் உறுதி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அது மட்டுமல்ல, எம்.பி.பி.எஸ். தேர்வு பற்றி இங்கே பலர் பாராட்டினார்கள். சிலர் குறை கூறினார்கள். பாராட்டியவர்களுக்கு நன்றியும், குறை கூறியவர் மீது காழ்ப்புணர்ச்சியும் கொள்வேன் என்று யாரும் கருத வேண்டாம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு செய்தி வரலாம். நான் எல்லாப் பத்திரிக்கைகளையும் படித்து விடுவது இல்லை. சில பத்திரிக்கைகளைப் படித்து சில விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம். சிலர் சொல்வதைக் கேட்டு சில விஷயங்களைத் தெரிந்து கொள்ள

லாம். ஆனால் உண்மையைச் சொல்ல வேண்டுமானால் நாங்கள் பதவியை ஏற்பதற்கு முன்பே அந்தத் தேர்வு செய்யும் குழுவினர் பெயரை முன்னால் இருந்தவர்கள் நியமித்து விட்டார்கள், என்பதை முதலில் இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதோடு அவர்கள் அந்தக் குழுவினர் எப்படி தேர்வு நடத்த வேண்டும் என்பதையும் முடிவு எடுத்து விட்டார்கள் என்பதையும் நான் நிச்சயமாகத் தெளிவுபடுத்திச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். அதிலே ஒரு பத்திரிகையில் சொன்னார்கள். பொய்யாக ஏமாற்றுவது போன்று குறிப்புகளைச் சொல்லி விட்டோம் என்று குற்றம் சாட்டப்பட்டு இருந்ததாகக் கேள்விப்பட்டேன். அது உண்மையா பொய்யா என்பதை நான் சொல்வதற்கு முன் ஒன்றைச் சொல்ல நான் கடமைப்பட்டு இருக்கிறேன். தேர்வுக்கு வந்தவர்கள் 5,375 பேர்கள். தேர்வு பெற்றவர்கள் 883.

[இரவு 7-00]

பொதுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட 51 சதவிகிதத்தில் மொத்தம் 449 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். பிற்பட்ட வகுப்புக்கு ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதத்தில் 275 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்தில் 159 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 449 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டதிலே பொது என்று 51 சதவிகிதம் பிரித்து வைத்திருக்கிறார்களே முற்பட்ட சமூகத்திற்கும் மற்றவர்களுக்கும் பொதுவாக, அதிலே பிற்பட்டவர்கள் 212 பேர்கள் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு என்னுடைய மன நிறைவை இங்கே வெளியிட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆக பிற்பட்டவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட 31 சதவிகிதத்தில் கிடைத்த 275 இடங்களும், பொதுவில் வருகிற 51 சதவிகிதத்தில் 212 இடங்களும், ஆக ஏறத்தாழ 487 இடங்களை பிற்பட்டவர்கள் பெற்றிருக்கிறார்கள் என்ற குறிப்பை இங்கே நான் உங்களுக்குச் சொல்வதில் மனநிறைவு பெறுகிறேன்.

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். இந்த 449 பேரில், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த 5 பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அதையும் இங்கேயுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். அவர்களுக்கு என்று ஒதுக்கப்பட்டிருக்கின்ற 18 சதவிகிதத்தில் அவர்கள் பெற்றிருக்கின்ற அந்த இடங்கள் போக மேற்கொண்டு 5 இடங்கள் பொதுவாக வைத்திருக்கின்ற தேர்வில் அவர்கள் தேர்வு பெற்றிருக்கிறார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே இன்னொரு பிரச்சனை எடுத்து வைக்கப்பட்டது. உண்மையிலே இந்த மருத்துவத் துறை பிரச்சனையில் என்னைவிட மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்கள் நேரடியாக 4, 5 ஆண்டு காலம் அனுபவப்பட்டவர்கள் என்பதை உலகம் அறியும். அவர்கள் இங்கே குறிப்பிட்டபோது, மதுரை மாவட்டத்திற்கு இவ்வளவா, தஞ்சை மாவட்டத்திற்கு ஏதும் இல்லையா, ஏன் இப்படி ஓரவஞ்சகம் என்று கேட்டார்கள். வாக்குப் போடவில்லை என்ற கோபமா என்று ஒரு சிலர் கேட்டிருப்பார்கள், பேராசிரியர் கேட்கவில்லை. அந்த நிலையில் நான் ஒன்றை பணிவோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். சுப்ரீம் கோர்ட்டில் அப்படிப்பட்ட வழிமுறைகளை எந்த நேரத்திலும், எப்படியும் நிறைவேற்றக் கூடாது என்று தீர்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது என்று எனக்குச் சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பு இருக்கிறது வேண்டுமானால் படித்துக் காண்பிக்கலாம். நான் எதற்குச் சொல்கிறேன் என்றால், பிற்பட்ட சமூகத்தாருக்கு, முற்பட்ட சமூகத்தாரைப் போன்று படிக்கின்ற வாய்ப்பு இல்லாத காரணத்தால், அவர்களுக்கு 31 சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்பது நியாயத்தின் அடிப்படையில் வைக்கப்பட்டிருக்கின்ற முடிவாகும். அதே போல தாழ்த்தப்பட்ட மக்கள், முற்போக்கு சமூகத்தாரோடு போட்டியிட முடியாத சூழ்நிலை காரணமாகவும், ஏழ்மையின் காரணமாகவும், அவர்களுக்கு இருக்கின்ற தொல்லைகள், வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவற்றின் காரணமாகவும் பிற்பட்ட நிலைமையில் இருப்பதால், அவர்களுக்கு என்று 1[illegible] சதவிகிதம் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட நடைமுறைகள் இருந்து, தேர்வு நடந்தபோது நாங்கள் அமைச்சர் பதவியில் இல்லை. தேர்வு முடிந்து, அவர்கள் நடுவர்களுக்கு முன்னால் வந்து தங்களுடைய திறமையைக் காட்ட முயன்றபோது நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. அந்தத் தேர்வு நாங்கள் வருவதற்கு முன்னால் நடந்து முடிந்து கொண்டிருந்தது. அதுவும் நாட்டுக்கு நன்றாகத் தெரியும்.

இன்னொன்றையும் சொல்வேன். ஒரு எண், 5572 என்று கருதுகிறேன். நினைவிலிருந்து சொல்கிறேன். '2' என்ற எண் தவறாகி விட்டது என்பதைத் தான் பெரிய பிரச்சனையாக ஒரு சில பத்திரிக்கைகளில் எழுதி, இங்கே இருக்கிற நண்பர்கள்கூட சொன்னார்கள். சந்தேகப்பட்டார்கள். மேலவையில் கூட சொல்லப்பட்டது என்று கேள்விப்பட்டேன்.. அதாவது முடிவில் வரும் '70' என்பதை '72' என்று அவர்கள் கொடுத்து விட்டார்கள் என்றும், அந்த எண் எப்படி மாற்றப்பட்டது, ஏன் மாற்றப்பட்டது என்று கேட்டுவிட்டு, ஆகவே அந்த எண்ணை வெளியே விளம்பரம் செய்துவிட்டு, இவர்களே வேண்டுமென்று மாற்றி இருக்கிறார்கள் என்று ஒரு குற்றச்சாட்டு இங்கே சொல்லப்பட்டது.

ஆனால் நான் ஒன்றைச் சொல்வேன். 5270 எண்ணுள்ள மாணவன் பெயர் ஸாம்ஸன் பாப்ளி என்பதாகும். அவர் பெயர்தான் மாற்றி வெளியே வந்த பிறகு அவர் அந்த எண் அல்ல, 5272 என்று திருத்தப்பட்டது. நான் ஒன்றை பணிவன்போடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இப்படி சில பத்திரிகைகள் வேண்டுமென்றே மக்கள் மத்தியில் எதற்கெடுத்தாலும் ஒரு காரணத்தைக் காண்பித்து பழி சுமத்த வேண்டுமென்று எண்ணுகிறார்கள் என்பதை இங்கே நான் வெளியிடுவதற்காகச் சொல்கிறேன். 5270 என்ற எண்ணுள்ள அந்த நபர் பெற்றிருப்பது 117 மார்க்தான் அவரை தேர்வுக்குழு அழைக்கவே இல்லை. அவர் அந்தத் தேர்வுக் குழுவின் முன் வரவே இல்லை. வராத ஒருவர் எப்படி தேர்ந்தெடுக்கப்பட முடியும் ? வராத ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்றும், பிறகு யாரோ சூழ்ச்சி செய்தார்கள், யாரோ பணம் கொடுத்தார்கள், யாரோ மாற்றி வைத்தார்கள், ஆகவே மாற்றி விட்டார்கள் என்ற நிலையில் இங்கே பேசப்பட்டது என்று நான் வருத்தப்படவில்லை, வெளியே எழுதுகிறார்களே என்றுதான் நான் உண்மையிலே வேதனைப்படுகிறேன். அவர்கள் கேட்டு அறிந்து கொள்ளலாம். அதற்காக இலாகாக்கள் இருக்கின்றன. என்ன உண்மை என்று பார்த்து தெரிந்து கொண்டு அவர்கள் பேசியிருந்தார்களானால்எழுதியிருந்தார்களானால்நன்றாகயிருந்திருக்கும். இங்கே ஒருவருக்கொருவர் சவால் விட்டுக்கொண்டார்கள். நீங்கள் ராஜிநாமா செய்வீர்களா நிரூபித்தால், நீங்கள் நிரூபித்தால் நான் ராஜிநாமா செய்கிறேன் நான் நிரூபித்தால் நீங்கள் ராஜிநாம செய்வீர்களா. என்று கேட்டுக் கொண்டார்கள். அந்தச் சவாலுக்கு நான் வரவில்லை என்றாலும் ஒன்றை நான் சொல்வேன். இப்போதும் சொல்கிறேன். இந்த நேரத்தில் இங்கிருக்கிற எந்த உறுப்பினரானாலும் சரி, எனது மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர்கள் இதில் விசாரணை வைத்தாக வேண்டும் என்றால் நான் விசாரணை வைக்கத்தயார். (பெருத்த ஆரவாரம்.) அவர்களுடைய முடிவு எந்த முடிவு என்பதைப்பற்றி நான் இப்போது கவலைப்படவில்லை. யார் சவால் விட்டார்களோ அந்த நண்பரின் சவாலை ஏற்றுக்கொண்டு, எதிர்க்கட்சித் தலைவர்கள் எந்த நீதிபதி வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அந்த நீதிபதியை நான் இதை விசாரிக்கும்படி கேட்டுக்கொள்ளத் தயார்; அப்படி ஒரு நிலை ஏற்படும் என்று நான் கிஞ்சித்தும் அச்சப்படவில்லை, நான் வருத்தப்படவும் இல்லை, ஏமாற்றம் அடையவும் இல்லை. மனநிறைவோடு சொல்கிறேன். இந்த ஆட்சியில், என் கட்சியை சேர்ந்த எம்.எல். ஏ.-க்கள் யாராகயிருந்தாலும் சரி, அல்லது எங்கள் கட்சியைச் சார்ந்த நண்பர்கள், கட்சி உறுப்பினர்களாக யாராக இருந்தாலும் சரி, அமைச்சர்கள் யாராக இருந்தாலும் சரி, நானாக இருந்தாலும் சரி இந்தத் தேர்வுக் குழுவினரிடம் நாங்கள் யாராவது சிபார்சு செய்து எடுக்கப்பட்டிருக்கிறது என்று நிரூபித்தார்களானால் இந்த மந்திரி சபையே, நாங்கள், ராஜிநாமா செய்யத் தயாராயிருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

அந்தக் கமிஷன் அமைக்கப்பட்டு அப்படி இல்லை என்று நிரூபிக்கப்படுமானால் என்ன முடிவு செய்யலாம் என்பதை நண்பர்களுக்கே விட்டுவிடுகிறேன். நான் போட்டிக்கு வரவில்லை. அவமானப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எங்களை அவமானப்படுத்தாதீர்கள் வீணாக என்றுதான் நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுக்கு ஒரு ஆசை இருக்கிறது. அந்த ஆசைக்காகத்தான் நாங்கள் இப்போது பதவியில் இருக்கிறோம். நியாயமாகவும், நாணயமாகவும் நடப்பதற்கு நாம் சில கட்டுப்பாடுகளை ஏற்படுத்திக் கொண்டு அந்த வழிமுறையில் நாங்கள் எங்களாலான பணிகளை இந்த நாட்டுக்குச் செய்ய வேண்டும், நாங்கள் யாரை தெய்வமாக வணங்குகிறோமோ அந்த அமரர் பேரறிஞர் அண்ணா அவர்களின் கொள்கையை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகத்தான் நாங்கள் பதவியில் வந்து உட்கார்ந்திருக்கிறோமே தவிர இதில் எந்த லாபமும் சம்பாதிக்க வேண்டும் என்று வரவில்லை. அப்படி எங்கள் கட்சியில் யாராவது வந்திருப்பதாக யார் நிரூபித்தாலும் நிச்சயமாக நாங்கள் நடவடிக்கை எடுப்போம், அரசின் மூலமாகவும் எடுப்போம், கட்சி மூலமாகவும் எடுப்போம் என்று உறுதிகூற விரும்புகிறேன். இந்தப் பிரச்சனை இதோடு முடிவடையும் என்று நான் கருதவில்லை என்றாலும் சொல்கிறேன், அதை எழுதினாலும் ஒன்று சொல்கிறேன், இந்த விளக்கத்திற்குப் பிறகும், நான் இவ்வளவெல்லாம் சொல்லிய பிறகும் வேண்டுமென்று பொய் செய்தியை யாராவது, எந்த பத்திரிகையாவது வெளியிடுமானால் நான் அச்சுறுத்துவதற்காகச் சொல்லவில்லை பேச்சு உரிமையை, எழுத்து உரிமையைத் தடுப்போம், அந்தச் சக்தி எங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது என்ற அகந்தையால் பேசவில்லை, நியாயத்தை நிலைநிறுத்துவதற்காக அந்தத் தேர்வுக் குழுவினர் அந்த சம்பந்தப்பட்ட பத்திரிகைகளின்மீது நிச்சயமாக வழக்குத் தொடுப்பார்கள் என்பதையும் அரசு அதற்கு உதவி செய்யும், அரசே அந்த வழக்கை நடத்தும் என்பதையும் நான் இங்கே பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[இரவு 7-10]

அதோடு மட்டுமல்ல, இன்னும் பல பிரச்சனைகள் இருக்கின்றன. கிராமப்புற பகுதிகளில் குழந்தைகளுக்கு எங்கெங்கு தொழுநோய் ஏற்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி சொல்லியிருப்பதில், மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஒரு கருத்தைப் படித்துக் காண்பித்து தவறை திருத்திக் கொள்ள வேண்டும் என்ற, நல்லெண்ணத்தோடு, கேட்டார்கள் என்று நம்புகிறேன். 300 லட்சம் பேர்களுக்கு எப்படி தொழுநோய் ஏற்பட்டிருக்க முடியும் என்று கேட்டார்கள். சொல்லப்பட்டிருக்கின்ற அறிக்கையைப் பற்றி கேட்ட போது, இதற்கு இலாக்கா மூலம்

எனக்குச் சொல்லப்பட்டிருப்பது, 300 லட்சம் பேர்களுக்கு பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது என்று இருந்திருக்க வேண்டும் என்று விளக்கம் தந்திருக்கிறார்கள். வாக்கிய பிழை இதில் ஏற்பட்டிருக்கிறது என்பதை இலாக்கா மூலம் எனக்குத் தெரிவித்திருக்கிறார்கள்.

*திரு. க. அன்பழகன் : நான் சொன்னது, 375 லட்சம் அளவுக்கு மக்கள் (எக்ஸ்டன்ஷன்) வாழ்கிற பகுதியில் தொழு நோய்க்கான சிகிச்சை நடைபெற்றிருக்கிறது என்றுதான் இருந்திருக்க வேண்டும். 375 லட்சம் மக்களுக்கு பரிசோதனை நடைபெறவில்லை. 375 லட்சம் மக்கள் வாழ்கிற இடத்தில் தொழு நோய்க்கான சிகிச்சை வழங்கப்பட்டிருக்கிறது என்றுதான் இதை எடுத்துக்கொள்ள இயலும்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : நான் மறுபடியும் சொல்ல விரும்புவது, இலாக்கா மூலம் தந்திருக்கின்ற விவரங்களைத் தான் நான் சொன்னேன். நாங்கள் போய் மருத்துவர்களாக இருந்து சிகிச்சை செய்து பரிசோதனை செய்து தரப்பட்டிருக்கின்ற கணக்கு அல்ல, இது. நான்கைந்து ஆண்டு காலமாக இந்த மருத்துவத் துறையில் அமைச்சராக இருந்து, பொதுநலத்துறையை தன் கையில் வைத்திருந்து, நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்று நினைத்து இருந்தவர்கள், அதன் அடிப்படையில் பேராசிரியர் அவர்கள் சொல்வதை நான் நிச்சயமாக சம்பந்தப்பட்ட இலாகாவினரிடம் கேட்பதாகவும் இருக்கிறேன். அவர்கள் எனக்கு நாளையதினம் பதில் கூற கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை தெளிவுபட கூற கடமைப்பட்டிருக்கிறேன். தவறான குறிப்புக்களை இங்கே தயாரித்து தந்திருந்தார்கள் என்றாலும், தவறுகள் நேர்ந்து விட்டது என்றாலும், அதற்கு இந்த அரசு பொறுப்பு இல்லை என்று நான் தட்டிக்கழிக்க விரும்பவில்லை. ஒன்றைத் தெளிவாக சொல்லுகிறேன். குறைகள் இலாகாக்களின் மூலம் ஏற்படுகின்றன என்று இருக்குமானால் நிச்சயம் அதுபற்றி கவனிக்கப்படும் என்று சொல்லி தொடர்ந்து கூறுகின்றேன். ஒரு இலாக்காவுக்கும் இன்னொரு இலாக்காவுக்கும் இருக்கின்ற பொறுப்பு, கடிகாரம் ஓடுவதைப்போல் இருக்க வேண்டும். ஒரு கடிகாரத்திற்குச் சாவி கொடுத்தவுடன், முள் சக்கிரம் சுற்றுகிறது, அத்துடன் இன்னொரு சக்கிரத்தையும் இணைத்து சுற்ற வைத்து முள்ளை அசைய வைத்து கடிகாரம் ஓடுகிறது. அதே போல், இலாகாக்கள் இருக்க வேண்டும் என்று வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். இந்த முள் எனக்கு வேலை முடிந்து விட்டது, நான் இந்தச் சக்கிரத்தை மட்டும் சுற்ற வைத்துவிட்டேன் என்ற நிலைமையில் அத்துடன் நின்றுவிடுகின்ற நிலையில் இலாகாக்கள் இருக்குமானால் அது எவ்வளவு பெரிய தவறாகும் என்பதை கடந்த காலங்களில் கண்டோம். அதற்காக எச்சரிக்கையாக இருக்கின்ற அளவில் இந்த குறிப்பில் எடுத்து வைத்துப் பேசுகின்ற அளவில் இதை நான் வெளியிடுகின்றேன்

பல வார்த்தைகள் கொடுக்கப்பட்டன. உத்தரவும் தரப்பட்டன. ஆனால் மருத்துவ மனையைக் காணோம். மருத்துவ மனைகள் பட்டியல் இருக்கிறது, பட்டியலில் இருந்தாலும், அங்கே போய் பார்த்தால் மருத்துவமனை காணப்படவில்லை, என்கின்ற பதில் நமக்கு வந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொன்றையும் எண்ணிப் பார்க்கிற பொழுது உங்களுக்கு நான் ஒன்று சொல்வேன். எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. முன்பு திராவிட முன்னேற்றக் கழகம் சென்னை மாநகராட்சியை பிடிப்பதற்கு முன்பு பல்வேறு திட்டங்கள் நிறைவேறப்பட்டிருப்பதாக புள்ளி விவரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். அரசு என்ற நண்பர் மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் பிரதிநிதியாக மாநகராட்சியில் பணியாற்றும்போது, ஒரு பட்டியலைப் பார்த்த பிறகு அந்தப் பட்டியலிலுள்ள ஒரு கார்ப்பரேஷன் பள்ளி எப்படி நடக்கிறது என்பதைப் போய் பார்ப்பதற்காக பள்ளியைப் போய் பார்த்தார். பார்த்தால் பள்ளிக்கூடமே இல்லை. ஆனால் பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது, பணம் வாங்கியிருக்கிறார்கள். அது செலவழிக்கப்பட்டு இருக்கிறது என்ற நிலைமையை அறிந்து அந்தக் குழுவிலே யார் யார் இருந்தார்களோ, அத்தனை பேர்களையும் அந்தப் பணத்தைத் திருப்பித்தர வேண்டுமென்று, அப்போதிருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அதிகாரத்திலே இருந்தவர்கள் நடவடிக்கை எடுக்கத் துணிந்தார்கள்.

நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புவது, அந்த உதாரணத்தையே எனக்கு ஒரு உதாரணமாக்கிக் கொண்டு, அந்த வழிமுறையையே துணையாகக் கொண்டு, இதற்கு முன்னால் என்னென்ன தவறுகள் நடந்திருக்கின்றனவோ, என்னென்ன குறைகள் நடந்திருக்கின்றனவோ, என்னென்ன ஊழல்கள் இங்கே திணிக்கப்பட்டு இருக்கின்றனவோ, என்னென்ன லஞ்சக் குற்றங்கள் நடமாட்டத்திற்கு உள்ளாகி, சொந்தமாக்கப்பட்டிருக்கின்றவோ, அவைகளையெல்லாம் விசாரித்து, நிச்சயமாக அகற்றிட இந்த அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மட்டும் நான் உறுதியாகக் கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். (பலத்த ஆரவாரம்.)

ஏனென்றால், ஒரு நாட்டிலுள்ள மக்கள் உண்மையிலேயே நோயற்று இருந்தால்தான், அவர்கள் எந்தப் பணிகளையும் ஒழுங்காகச் செய்வதற்கு முடியும். எந்தக் கோளாறும் உடலிலேயோ அல்லது மூளையிலேயோ அல்லது மனதிலேயோ என்று சொல்லி, நான் மனதை ஒப்பிடா விட்டாலும், பைத்தியம் வரக்கூடிய நிலைமைக்கு அப்பாற்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் தடுப்புச் சிகிச்சை முதலில் தொடங்க வேண்டுமென்று இங்கு பேசியவர்கள் வற்புறுத்தியதைப் போலவே, தடுப்பு நிலைமைகளை எல்லாம் எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கான முறைகளை முதலில் நாம் கண்டுபிடித்தாக வேண்டும்.

லஞ்சத்தை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள், ஊழலை எப்படி ஒழிக்கப் போகிறீர்கள் என்று கேட்கப்படுகிறது. இந்தத் துறையைப் பொறுத்தமட்டில் நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்வேன். ஊழல் செய்பவர்கள், லஞ்சம் வாங்கியவர்கள் அத்தனை பேரும் அதற்காகவே தான் பிறந்தோம் என்ற நம்பிக்கையில் இல்லை என்பது நமக்குத் தெரியும். அவர்களுடைய பேராசை அல்லது இல்லாமை அல்லது மக்கள் ஏமாறுகிறார்கள் என்ற நிலைமையில் தான் இந்தப் பணத்தை லஞ்சமாக வாங்குகிறார்களே தவிர, அப்படிப்பட்ட தவறுகளைச் செய்கிறார்களே தவிர, அப்படித் தவறு செய்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்குத் தண்டனை கிடைக்கும் என்கிற நிலைமை நாட்டிலே உருவாகுமானால், இந்தப் பொதுநலத் துறை என்கிற மருத்துவத் துறை நிச்சயமாக மக்களுக்கு நன்மை செய்கிற துறையாக அமையும் என்பதில் எனக்கு கிஞ்சித்தும் சந்தேகம் இல்லை.

எத்தனையோ பிரச்சினைகளை நாங்கள் நித்தம் சந்திக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். அப்போது, கோப்புகளைப் பார்க்கின்றபோது மனதில் வேதனையாகத்தான் இருக்கிறது. இங்கே நண்பர்கள் கேட்கின்ற கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லமுடியும் என்றாலும், இந்த நேரத்தில் நான் அவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல விரும்பவில்லை. என் உடல்நலம் எப்படி என்று தெரியும். காலையில் நோயுற்று, தலைவலியால் உட்காரக்கூட முடியவில்லை. அந்தக் காரணத்தால்தான் எனது வேலைகள் பாதிக்கப்பட்டன என்று எண்ணிப்பார்க்கும்போது, எத்தனையோ வேலைகளைச் செய்ய வேண்டியவர்கள், கடமைகளைச் செய்ய வேண்டியவர்கள் எங்காவது நோய்வாய்ப்பட்டால் என்ன ஆகும் என்பதை என்னால் உணர முடிகிறது. இப்படிப்பட்ட குற்றத்தைச் செய்கிறவர்கள், அந்த நோயைத் தடுக்காமல், அதை ஊக்குவிக்கின்ற சூழ்நிலையை உருவாக்குவார்களானால், ஆபத்தில் இருக்கின்ற மக்களைக் காப்பாற்றாமல், தன்னுடைய சுயநலத்தையே பெரிதாகக் கருதுகிறவர்களை இந்த நாடு ஒருபோதும் மன்னிக்காது என்பதை இந்த அரசின், ஆட்சியின் சார்பாக நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கோரிக்கையை உங்கள் முன் வைக்கும்போது இன்னொன்றையும் நான் தெளிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்தக் கருத்துகள் அத்தனையும் முடிவான கருத்துக்கள் அல்ல என்பதையும், இதுதான் எங்களுடைய எல்லைக்கோடு என்று முடிவான ஒரு எல்லைக்கோட்டையும் நாங்கள் சொல்லமுடியாது என்பதையும் நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[இரவு 7-20]

முன்னாள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அப்படியே சாய்ந்துகொண்டு, மணியைப் பார்க்கிறார்கள். தெரிகிறது. காரணம் என்ன தெரியுமா? நீங்கள் சபையிலே பேசும்போது'

கடமைப்பட்டவனாக இருக்கிறேன். பொறுமைக்காகவோ,
அவமானப்படுத்த வேண்டுமென்பதற்காகவோ குற்றம் சொல்ல
வேண்டும் என்பதற்காகவோ இவைகளை நான் எடுத்து
வைக்கவில்லை.

நேற்று, நேற்றைய முன்தினம் இவைகளைக் குறித்தும் கண்
அறுவை சிகிச்சைகள் குறித்தும் மருத்துவ நிபுணர்களிடம் விவா
தித்தேன். ஆறு நிமிடத்திற்குள் அறுவை சிகிச்சை செய்யலாம்
என்று சொன்னார்கள். ஆறு நிமிடத்திற்குள் அறுவை சிகிச்சை
என்றால் தையல் போடாமல் இருக்க வேண்டும். தையல்
போடாமல் இருந்தால் பின்னால் ஆபத்து வருவதற்கு நியாயம்
உண்டு என்பது நிபுணர்கள் கருத்து.

அது மட்டுமல்ல, வலி தோன்றாமல் இருப்பதற்கு முன்னோடி
யாக இன்ஜெக்ஷன் போட வேண்டும். அதற்கும் முன்னாலே
அறுவை சிகிச்சை ஏற்றுக் கொள்கிற வகையிலே அவர் உடல்
இருக்கிறதா, சர்க்கரை நோயா? ரத்தக் கொதிப்பா? என்று
பரிசோதிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.

எனக்குப் புள்ளி விவரங்கள் தந்தபோது அதைப் பார்த்து
நான் திகைத்துப் போனேன். நிபுணர்களைக் கலந்து கேட்டேன்,
இப்போது கொடுக்கப்படுகிற கண்ணாடியை நிரந்தரமாகப் பயன்
படுத்த முடியுமா என்று. கிடையாது என்று சொன்னார்கள்.
ஆறு மாதங்களுக்குப் பிறகு அவர்கள் வந்து மேலும் பரிசோதித்துக்
கொண்டு வேறு கண்ணாடியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.
அவரவர் பார்வை சக்திக்கேற்ப வேறு கண்ணாடியைப் போட்டுக்
கொள்ள வேண்டும் என்று சொல்லப்பட்டது. இந்தக் கண்
ணாடியை ஏன் கொடுக்கிறீர்கள் என்று கேட்டபோது சொன்
னார்கள், அவர்கள் கண்ணில் தூசி படியாமல் இருப்பதற்காகவும்
அவர்களுக்கு நோய்நொடி வராமல் இருப்பதற்காகவும் கொடுக்
கிறோம் என்று சொன்னார்கள். ஒரு இடத்திலே ஒரு ரூபாய்க்கு
கண்ணாடி வாங்கியிருக்கிறார்கள். இன்னொரு இடத்திலே 4½
ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். இன்னொரு இடத்திலே 6
ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். இவைகளைப் பற்றி நான்
விசாரிக்கச் சொல்லியிருக்கிறேன். எந்த எந்தக் கம்பெனிகள்
என்று சொல்லியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் இங்கே
படிப்பதற்கு நேரம் இல்லை. என்ன தான் பதவியில் இருந்தாலும்
பதவியில் இருப்பதால் நல்ல நோக்கத்திலே ஒரு சேதியைச்
சொன்னாலும் உண்மையைத் தான் சொல்ல வேண்டுமென்று
நான் நினைக்கிறேன். நம்முடைய முன்னாள் முதலமைச்சர்
அவர்கள் என்ன கருதுகிறாரோ எனக்குத் தெரியாது. அவர்
களுக்கு இதையெல்லாம் சொல்லி இருக்க மாட்டார்கள் என்று
நினைக்கிறேன். 600 பேர்களுக்கு ஒரு நாளில் அறுவை சிகிச்சை
நடந்திருக்கிறது என்று இலாகாவினர் எனக்குத் தகவல் தந்திருக்
கிறார்கள்.

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அதிகாரிகள்
தங்களிடத்திலேயே சரியான விளக்கம் தரவில்லை என்பதை
வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். உண்மையிலேயே
இந்தத் துறையிலே எனக்கு இருக்கிற அனுபவம் காரணமாக,
5 ஆண்டுக்காலம் இந்தத் துறையோடு தொடர்புடையவனாக
இருந்தேன் என்ற காரணத்தினாலே சொல்கிறேன், 600 பேர்கள்
என்பது 10 நாட்களிலே நடைபெறும், ஒரு நாளைக்கு 60 அல்லது
80 பேர்கள் என்று சொல்வார்கள். சில இடங்களிலே 800
பேர்கள் 1,000 பேர்கள் நோயாளிகள் வருவார்கள். யார்
யார் நோயாளிகள் என்று அறிய அந்த வட்டாரத்து கிராமங்
களிலே பிரச்சாரம் செய்து முதலில் அவர்களுக்குக் கண்படலம்
இருக்கிறதா என்று பரிசோதித்துப் பார்த்து ஐ கேம்ப்புக்கு
அழைத்து வருவார்கள். இதையெல்லாம் மாவட்ட ஆட்சித்
தலைவர் மேற்பார்வை செய்கிறார். இப்படிப்பட்ட முறை
சிறந்த முறை என்று டாக்டர் வெங்கிடசாமி அவர்கள் உலகம்
முழுவதும் சுற்றி வந்துள்ள சிறந்த நிபுணர் சொல்லி இருக்கிறார்.
இன்றும் டாக்டர் ஆப்ரகாம் அவர்கள்—இத்துறையில் தலைசிறந்த
நிபுணர் அவர்—இந்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்.
திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை போன்ற தென்
பகுதிகளிலேதான் இந்தக்கண் சிகிச்சைக்கு அதிகமாக வருவார்கள்.
செங்கற்பட்டு, சென்னை போன்ற இடங்களிலே அந்த
எண்ணிக்கை குறைவாக இருக்கும். கேட்ராக்ட் கேஸஸ் ஆப
ரேஷன் 1 லட்சத்து 39 ஆயிரம் என்று சொல்வது 3, 4 ஆண்டுக்
காலத்திலே தொடர்ந்து நடைபெற்றது என்பது ஏறத்தாழ
சரியான புள்ளி விவரம். குறை சொல்லப்பட்டது மற்றொன்றைப்
பற்றி. ரெப்ராக்ஷன் என்று ஆங்கிலத்திலே உள்ளதற்கு—பார்வைக்
கண்ணாடிக்கான அளவு என்பதற்கு பதில்—அதையும் ஒரு கண்
அறுவை சிகிச்சை என்று தமிழில் தந்துள்ளனர் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: இப்போது
நான் சொல்லும்போது பேராசிரியர் அதைப்பற்றி விசாரிக்கச்
சொன்னார்கள். நான் விசாரிக்கத் தயாராக இருக்கிறேன்.

[இரவு 7-30]

எனக்குக் கிடைத்த செய்திதான். அதைப் படித்து விடு
கிறேன். கிராமச் சேவக்கைச் சேர்ந்தவர்கள் கண் சிகிச்சை
முகாம் பற்றிய விளம்பரம் செய்கிறார்கள். 3 மருத்துவர்கள்
கொண்ட குழு பரிசீலித்த பிறகு அவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.
முகாம் துவங்குவதற்கு மூன்று நாட்களுக்கு முன் இது
நடைபெறும். ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் இடங்களைக்
குறிப்பிட்டுக் கண்காணிப்பாளர்களுக்குத் தெரிவிப்பார்கள்.

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்:__ கலைஞர் அவர்களுடைய கண் நல்ல கண். ஆகவே, அவர் தப்பித்துக் கொண்டார் என்று நான் கருதுகிறேன். (சிரிப்பு). ஏனென்றால் என் தமையனாருக்கும் காட்டராக்ட் கண் ஆப்பரேஷன் நடந்தது. என்னுடைய அண்ணியாருக்கும் கண் ஆப்பரேஷன் நடந்தது. டாக்டர் பத்ரிநாத் செய்தார். இவைகளை நான் சொல்வதற்குக் காரணம்..........

__திரு. ஏ. ரகுமான்கான்:__ முதல்வரவர்கள் பேச்சினூடே குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டுமென்று முதலாவதாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்தத் தொடர் விட்டுப் போகும் என்பதற்காக அருள்கூர்ந்து பதில் வழங்கினால் சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

5270 என்ற நம்பர் 5272 ஆக மாறியது எப்படி என்று சொல்கிற பொழுது ஒரு விளக்கத்தைக் கொடுத்தார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது 3970, 3543 ஆக மாறி யிருக்கிறது. 3970 என்ற நம்பர் உடையவர் பெற்ற மார்க் எவ்வளவு? 3543 என்ற நம்பர் உடையவர் பெற்ற மார்க் எவ்வளவு? இந்த மாற்றம் எப்படி ஏற்பட்டது? மருத்துவக் கல்லூரியில் இடம் ஒதுக்கீடு செய்வதில் எந்த ஊழலும் நடைபெறவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது. இதற்கு விளக்கம் கொடுத்தால் சபைக்கு உதவியாக இருக்கும்.

__மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் :__ நாளைய தினமோ, நாளை மறுதினமோ, எனக்கு வாய்ப்புக் கிடைக்கும்போது இதற்குக் கண்டிப்பாகப் பதில் சொல்வேன். ஆனால் ஒன்றை நிச்சயமாகக் கொள்ள வேண்டும். ஊழலோ, இலஞ்சமோ இல்லை என்பதை நான் அப்பொழுது சொன்ன உத்தரவாதத்துடன்—நான் அந்த நிலையிலிருந்து மாறாத நிலைமையில்—பதில் சொல்கிறேன் என்று நீங்கள் கண்டிப்பாக நம்பலாம்.

அதிகாரிகளைப் பொறுத்த வரையில் நான் இங்கே குறிப்பிட விரும்புவது மானியக் கோரிக்கையின் மீது எப்படிப்பட்ட எண்ணங்களைச் சொல்வது என்று கேட்பார்களானால், எந்தெந்த நிலையில் விட்டுப் போனவைகளை நாம் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பில் இருக்கிறோம் என்பதை உணர்ந்தும், ஏன் இடையிலே அப்படி மாற்றப்பட்டது, அப்படி மொழி மாற்றம் செய்வதற்கோ அப்படிப்பட்ட மாற்றங்கள் செய்வதற்கோ யார் காரணம் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டுமென்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேறு ஒரு பிரச்னையில் கேட்டபொழுது, நான் அன்று

பதில் சொல்லவில்லை, இன்று பதில் சொல்கிறேன். அப்படிப்பட்ட பிரசனைகள் இங்கே ஏதோ ஒரு நிலையில் தவறாக நடந்து கொண்டிருக்கின்றன. அவைகளையெல்லாம் ஒழுங்குபடுத்துகின்ற வேலையும் இந்த அமைச்சரவைக்கு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எங்கெங்கே எப்படியெல்லாம் பணியாற்ற வேண்டுமென்று, நன்றாகத் தெரிந்தவர்கள், விஷயத்தை உணர்ந்துள்ள அனுபவம் பெற்றவர்கள், இப்படிப்பட்ட தவறுகளுக்குக் காரணமாக இருந்தால், அவர்கள்மேல் கண்டிப்பான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையில் ஒரு அரசு கண்டிப்பாக நடவடிக்கை எடுத்தால்தான் காரியங்கள் ஒழுங்காக நடைபெறும் என்பது என்னுடைய நம்பிக்கை. ஆகவே, ஊழலை ஒழிப்பதிலும், இலஞ்சத்தை ஒழிப்பதிலும் நிச்சயமாக இந்த ஆட்சி சரிவரச் செய்யும் என்பதை இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் கவனம் செலுத்தும் என்பதை உங்களுக்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

அதோடு அரிஷ்டத்தைப் பற்றி நான் இங்கே ஒன்றைச் சொல்லியாகவேண்டும். இந்திய மருத்துவம் நல்ல மருத்துவம் என்பதையும் அதற்குள்ள முக்கியத்துவம் இங்கே கொடுக்கப் படவில்லை என்பதையும் நான் கூர்ந்து நோக்கி, மாறுபாடாக கருத்துச் சொல்லவில்லை. ஆனால், வழக்கப்படி அதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு செயல்பட்டு வருகிறது. நாங்கள் கொஞ்சம் வற்புறுத்தியதன் விளைவாக, கொஞ்சம் சேர்க்கப் பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன். எதிர்காலத்தில், இந்த அரிஷ்டத்தைத் தடுக்க என்ன செய்யலாம் என்று பேசி நான் டெல்லி மாநகருக்குச் சென்றபொழுது அங்கே பிரதம அமைச்சரிடத்திலே குறிப்பிட்டுப் பேசியிருக்கிறேன். அதைப்பற்றி நான் தெளிவோடு சொல்லியிருக்கிறேன். அவர்கள் அதைப் பற்றி சிந்தித்துச் சொல்வதாகக் கூறியிருக்கிறார்கள் என்ற நல்ல செய்தியை இங்கே சொல்லியாக வேண்டும். ஏன் இதை வற்புறுத்துகிறேன் என்றால், இந்த அரிஷ்டம் என்ற பெயரிலே, மதுக்கஷாயம் என்ற பெயரிலே எத்தனை இளைஞர்கள், எத்தனை குடும்பங்கள் பாழாகின்றன என்று நாம் உணர்ந்தாகவேண்டும்.

[இரவு 7.40]

ஆகவே அந்த அளவில் அதை ஒரு நோய் மருந்தாக இருக்கிற, மருத்துவர்களுடைய ஆராய்ச்சியின் விளைவாக, கிடைக்க முடியாத ஒரு சொத்து. அது மக்களுக்கு தரவேண்டிய ஒன்று என்று சொல்வதன் விளைவாக, அவைகளை தடுக்காமலேயே ஏற்படுகின்ற தீமைகளை, உண்மையிலேயே நல்ல மருந்தாக இருந்தாலும் அந்தப் பெயரைப் பயன்படுத்தி மற்றவர்கள்

இணைப்பு I.

[245-ஆம் பக்கத்திலுள்ள வினா எண் *53-க்கான விடையைக் காண்க.]

தமிழ்நாட்டில் ஒவ்வொரு மாவட்ட வேலை தேடிதரும் அலுவலகத்திலும் (Employment Exchanges) 1977-ல் பதிவு செய்த பட்டதாரிகள் மற்றும் பட்டதாரி அல்லாதவர்களின் எண்ணிக்கை விவரம் கீழ்க்கண்டவாறு:—

வேலைதேடித்தரும் அலுவலகம், மாவட்டம்.	1—1—1977 முதல் 30—6—1977 வரை பதிவு செய்த		
	பட்டதாரிகள்.	பட்டதாரிகள் அல்லாதோர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
வட ஆற்காடு	742	8,681	9,423
தென் ஆற்காடு ..	753	8,449	9,202
பல்கலைக் கழக வேலை வாய்ப்புத் தகவல் மற்றும் வழிகாட்டி நிலையம், அண்ணாமலைநகர்.	142	..	142
செங்கற்பட்டு	1,041	13,901	14,942
கோயம்புத்தூர் ..	1,461	13,993	15,454
தர்மபுரி	310	4,816	5,126
கன்னியாகுமரி	624	5,879	6,503
சென்னை-35	2,149	28,621	30,770
சென்னை உடல் ஊனமுற்றோருக்கான அலுவலகம்.	56	552	608
பல்கலைக் கழக வேலை வாய்ப்பு மற்றும் வழி காட்டி நிலையம், சென்னை.	81	..	81

வேலைத் தேடித் தரும் அலுவலகம், மாவட்டம்.	1—1—1977 முதல் 30—6—1977 வரை பதிவு செய்த		
	பட்டதாரிகள்.	பட்டதாரிகள் அல்லாதோர்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)
மதுரை	1,457	13,073	14,530
பல்கலைக் கழக வேலை வாய்ப்பு மற்றும் வழி காட்டி நிலையம், மதுரை.	294	..	294
உதகை	313	4,015	4,328
புதுக்கோட்டை ..	133	2,452	2,585
இராமநாதபுரம் ..	774	6,207	6,981
சேலம்	970	9,405	10,375
தஞ்சாவூர்	931	12,330	13,261
திருச்சி	1,056	14,006	15,062
திருநெல்வேலி ..	877	9,119	9,996
தொழில் மற்றும் நிர்வாக வேலை வாய்ப்பகம், சென்னை-35.	2,047	..	2,047
மொத்தம் ..	16,211	1,55,499	1,71,710

இணைப்பு II.

[282-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

முக்கியக் கூறுகளையும் கொள்கையும் பற்றி விளக்கக் குறிப்பு.

இந்திய அரசியல் அமைப்பில் பொறிக்கப்பட்டுள்ள நெறிமுறைக் கோட்பாடுகளுக்கிணங்க, குடிமக்கள் அனைவருக்கும் நீதி கிடைக்குமாறு செய்வதே இவ்வரசின் கொள்கையாக இருந்து வருகிறது. நீதிமன்ற நிர்வாகம் என்பது, உண்மையில் நீதிமன்றங்களுக்குள்ள பொறுப்பையே குறிக்கின்றது. இது அரசாங்க நிர்வாகப் பணியாளர், நிர்வாக இயந்திரம் இவற்றினின்றும் முழு சுதந்திரத்துடன். செயல்படுகின்றது. உயர்நீதிமன்றம் பரிந்துரைப்பதன்பேரில், அவசியமானபோதெல்லாம், புதிய கூடுதல் நீதிமன்றங்கள் அமையப்பெற அனுமதிப்பதன் மூலமாக, நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படுவதில் ஏற்படும் காலதாமதத்தை நீக்கும் பயனுள்ள பணியை அரசு தனது தரப்பில் செய்யக்கூடும்.

நீதி நிர்வாகம் பற்றிய சிறப்புக் கூறுகள் கீழே குறிப்பிடப் பட்டுள்ளன :—

13 ஆம் எண் கோரிக்கையும், ''நீதி நிர்வாகம்'' தொடர்பான மானியங்களும், இதன்கீழ் குறிப்பிடப்பட்ட நீதிமன்றங்கள், அதிகாரிகள் மற்றும் அவர்களது பணியாளர் அமைப்பு ஆகியவை குறித்த செலவைக் குறிப்பதாகும்.

1. உயர் நீதிமன்றம், சென்னை.

2. நொடித்தவர் சொத்தாட்சியர் (Official Assignee), உயர் நீதிமன்றம், சென்னை.

3. (மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட) சிவில் செஷன்ஸ் நீதிமன்றம்.

4. சிறு வழக்கு நீதிமன்றங்கள்.

5. மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் நீதிமன்றம்.

6. துணைக் குற்றவியல் நீதிமன்றங்கள் (தலைமை நீதித்துறை மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்).

7. அரசுப் பொறுப்புச் சொத்தின் ஆட்சியாளர், பொறுப்புச் சொத்தாட்சியர்.

8. அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள்.

நீதிமன்றங்கள், அதிகாரிகளிடையே பின்வருவனவற்றைக் குறித்த செலவு ''சாட்டியவை'' என்றும், ''அனுமதித்தவை'' என்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளது:—

சாட்டியவை.	அனுமதித்தவை.
1. உயர் நீதிமன்றம் (நீதிபதிகள், பதிவாளர், அசல் தரப்பு, அப்பீல் தரப்பு கொண்ட பணியாளர் அமைப்பு, மொழி பெயர்ப்பு, அச்சுத்துறை, சட்ட அறிக்கையாளர்கள், தனி அலுவலர், பணியாளர் அமைப்பு, புதுச்சேரி, சென்னை உயர் நீதிமன்ற ஷெரிஃப் அவரது பணியாளர்;	1. மாநகர சிவில் நீதிமன்றம் உட்பட சிவில் செஷன்ஸ் நீதிமன்றங்கள்.
	2. சிறு வழக்குகள் நீதிமன்றம்.
	3. மாநகர மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள்.
	4. துணைக் குற்றவியல் நீதிமன்றங்கள்.
	5. அரசுப் பொறுப்புச் சொத்தாட்சியர்—பொறுப்புச் சொத்தாட்சியர் (Administrator-General and Official Trustee), சென்னை.
2. நொடித்தவர் சொத்தாட்சியர் — அவரது பணியாளர் அமைப்பு.	6. அரசு சட்ட ஆலோசகர்கள், வழக்கறிஞர்கள்.

1977-78 ஆம் ஆண்டுக்கான செலவுக்கு, ''சாட்டியவை'' எனும் இனங்களின்கிழ் ரூ. 70,43,000 தொகையும் ''அனுமதித்தவை'' எனும் இனங்களின்கிழ் ரூ. 4,57,57,000 தொகையும் தேவைப்படுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

1. உயர் நீதிமன்றம்.

உயர் நீதிமன்றம் இம்மாநிலத்தில் நீதி வழங்கும் தலையாய நீதிமன்றமாகும். மேதகு தலைமை நீதிபதி உள்ளிட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட மேதகு நீதிபதிகளின் நிலையான பதவிகளின் எண்ணிக்கை 22. சிவில் விவகாரங்களில் உயர் நீதிமன்றம், அசல் தரப்பு வழக்குகளை

விசாரணை செய்யும் அதிகாரம் பெற்றதாகும். சிவில், குற்றவியல் வழக்குகளில் இதற்கு அப்பீல் விசாரணை அதிகாரம் உண்டு. அசல் தரப்பு வழக்கில், ரூ. 50,000-க்கு மேற்பட்ட மதிப்புடையதும் சென்னை மாநகருக்குள்ளேயே எழக்கூடியதுமான வழக்குகளை உயர் நீதிமன்றம் விசாரணை செய்கிறது. நீதிபதிகளுக்கு, தலைமை நீதிபதி பணியைப் பிரித்துக் கொடுக்கிறார்.

உயர் நீதிமன்றம், நீதி வழங்குவதுடன், நீதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாடுகள் அனைத்தையும் செலுத்துகிறது.

2. உயர்நீதிமன்றம்—சாட்டியது.

மாண்புமிகு தலைமை நீதிபதி உட்பட 22 நீதிபதிகள் உள்ளனர். தலைமை நீதிபதியின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 4,000 ஆகும். நீதிபதியின் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ. 3,500 ஆகும். நீதிபதிகளின் சம்பளம், அரசியலமைப்புச் சட்டத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அவர்களின் பணி நிலைகள், உயர் நீதிமன்ற நீதிபதிகளின் (பணி நிலைமைகள்) சட்டத்தால் நிர்வகிக்கப்படுகின்றன. மாண்புமிகு நீதிபதிகள், மாவட்ட நீதிமன்றங்களை ஆய்வு செய்வதற்காகப் பயணம் செய்கையில் பயணப்படி பெறத் தகுதியுடையவர்களாவர். மாண்புமிகு தலைமை நீதிபதி, தலைமை நீதிபதிகளின் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவும், தலைமையிடத்தை விட்டு பிற இடங்களுக்கு, பிற அரசுப் பணிகளைப் கவனிப்பதற்காகவும் பயணம் செய்கையில் அவர் பயணப்படி பெறத் தகுதியுடையவராவார்.

பதிவாளர், அலுவலகத்தின் நிர்வாகத் தலைவர் ஆவார். அவருக்கு மேலாளர், துணைப் பதிவாளர், உதவிப் பதிவாளர்கள் போன்ற அரசிதழ் பதிவு பெற்ற பல அதிகாரிகள் உதவி புரிகின்றனர். உயர் நீதிமன்ற அலுவலகம் பல பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவையாவன, அசல் தரப்பு வழக்குப் பிரிவு, மேல் முறையீட்டு தரப்பு வழக்குப் பிரிவு, நொடிப்பு நிலை வழக்குப் பிரிவு, தலைமை நீதிமன்றப் பிரிவு, குற்றவியல் வழக்குப் பிரிவு, ரிட் மனு அதிகார வரம்பு, அதிகார வரம்பைப் புதுச்சேரிக்கு நீட்டித்தல், பெஞ்ச் கிளார்க் துறைகள், மேல் முறையீடு ஆய்வாளர்கள் பிரிவுகள், சுருக்கெழுத்து, தட்டச்சர்கள் பிரிவு, மொழி பெயர்ப்பு, அச்சு நகலெடுப்போர் துறை, ஆவணப் பிரிவுகள், மாண்புமிகு நீதிபதிகள், உயர் நீதிமன்ற அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோரின் சம்பளமும் படிகளும் ஆண்டுக்கு ரூ. 48,82,000 செலவில் கணக்கிடப்பட்டுள்ளது. 'அலுவலகச் சில்லறைச் செலவுகள்' என்னும் தலைப்பின்கீழ் ரூ. 4,65,000 செலவு

செய்யக் கருதப்பட்டுள்ளது. அலுவலகச் சில்லறைச் செலவு என்பதில், அரசுப் பணி, அஞ்சல் செலவு, பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கான கட்டணங்கள், தொலைபேசிக் கட்டணங்கள், அலுவலகச் செலவுகள், வாடகை வீதங்களும், வரிகளும், மேஜை, நாற்காலிகள் முதலியன, புத்தகங்கள், சஞ்சிகைகள், மாண்புமிகு நீதிபதிகளின் பயனுக்காக செய்தித் தாள்கள், ஆணைகள், புத்தகங்கள் ஆகியவற்றை அனுப்புவதற்கென்று உள்ள மோட்டார் வண்டிகளைப் பராமரிப்பதற்கான செலவு, உயர் நீதிமன்றத்தில் நிறுவப்பட்டுள்ள படவுருப் படிவங்களை எடுப்பதற்கான நிகழ்படக் கருவியை இயக்குவதற்கான கட்டணங்கள் ஆகியவை அடங்கும்.

நொடித்தவர் சொத்தாட்சியரும் பணியாளர்களும், இந்திய சட்ட அறிக்கையின் ஆசிரியரும், பணியாளர்களும், அதிகார வரம்பை புதுச்சேரிக்கு நீட்டிப்பதற்கான சிறப்பு அதிகாரி, மொழி பெயர்ப்பு, அச்சுத் துறை ஆகியவற்றால் அவற்றிற்கு எதிரே காட்டப்பட்டுள்ளவாறு பணியாளர் அமைப்பு—அலுவலகச் சில்லறைச் செலவுகளைப் பொறுத்த மட்டில் மதிப்பீடு செய்யப்பட்டவாறு, செய்யப்பட வேண்டிய செலவுகளைக் குறித்த விவரங்கள் தனித்தனியே கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

நொடித்தவர் சொத்தாட்சியர், பணியாளர்.	ரூ. 2,71,000
இந்தியச் சட்ட அறிக்கை ஆசிரியர், பணியாளர்	ரூ. 43,000
புதுச்சேரி தனி அதிகாரி, பணியாளர் ..	ரூ. 80,000
மொழிபெயர்ப்பு—அச்சுத் துறை.. ..	ரூ. 7,03,000

3. சட்ட அதிகாரிகள்.

மாநகரத்திலும் வெளியூரிலும் உள்ள சட்ட அதிகாரிகளுக்காகும் செலவுகளை ஏற்பதற்காக இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கப்படுகிறது. மாநிலத் தலைமை வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர், வழக்கு நடத்துநர், கூடுதல் அரசு வழக்கறிஞர், உதவி வழக்கு நடத்துநர்கள், மாநகர அரசு வழக்கறிஞர், மாநகர வழக்கு நடத்துநர்கள் ஆகியோர் மாநகரிலுள்ள சட்ட அதிகாரிகளாவர். வெளியூரில், ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு வழக்கறிஞர் ஒருவரும், வழக்கு நடத்துநர் ஒருவரும் இருக்கின்றனர். மாநகரத்திலும், வெளியூரிலும் உள்ள உதவி வழக்கு நடத்துநர்கள் (தரம் I, II) முறையான சம்பள வீதங்களைப் பெறும் முழுநேர அரசுப் பணியாளர்

களாவர். மாவட்ட முனிசீப் நீதிமன்றங்களிலும், துணை நீதிமன்றங்களிலும் அரசுப் பணியை மேற்கொள்வதற்காக வழக்கறிஞர்கள் நேமகம் செய்யப்படுகின்றனர். அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட கட்டணம் மட்டுமே வழங்கப்படுகிறது. வழக்கறிஞர் அமர்ந்துகை கட்டணம் எதனையும் பெற அவர்கள் தகுதியுடையவர் அல்லர்.

சட்ட அதிகாரிகள் புரிகின்ற பணியின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கட்டணம் வழங்கப்படுகிறது. இக்கட்டணம் அரசினால் அல்லது துறைத் தலைவர்களால் அனுமதிக்கப்படுகிறது. மேற்கூறிய கட்டணங்களைத் தவிர அரசு அல்லது துறைத் தலைவர்கள், அரசுப் பணியில் இல்லாத வழக்கறிஞர்களுக்கு (அதாவது மாநிலத் தலைமை வழக்கறிஞர், அரசு வழக்கறிஞர்கள், வழக்கு நடத்துநர்கள், சட்ட அதிகாரிகளுக்கு உதவிபுரியும் பயிற்சி பெறும் வழக்குரைஞர்கள் ஆகியோர் நீங்கலாக ஏனைய வழக்கறிஞர்கள்) கட்டணங்கள் வழங்குகின்றனர்.

பல்வேறு அரசுத் துறைகள் சார்பில் சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்வதற்காக நீதிமன்ற முத்திரைதாள் கட்டண வில்லைகளை வாங்குவதற்காக கணிசமான அளவுக்குச் செலவு செய்யப்படுகிறது. இச்செலவு, சம்பந்தப்பட்ட துறையின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டின்கீழ் பற்று வைக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அத்துறை, தமது சார்பில், சிவில் வழக்குகளைத் தாக்கல் செய்யுமாறு அரசு வழக்கறிஞருக்கு கட்டளையிட்டுள்ளது. இப்போதைக்கு இச் செலவினம், "214. நீதி நிர்வாகம்—h. சட்ட ஆலோசகர்கள்—வழக்கறிஞர்கள்—AC. அரசு வழக்கறிஞர்கள்—03. அலுவலகச் செலவுகள்" என்ற தலைப்பின்கீழ் பற்று வைக்கப்பட்டு வருகிறது.

1977-78 ஆம் ஆண்டுக்காக, "சட்ட அதிகாரிகள்" என்ற தலைப்பு [illegible] மொத்தச் செலவு ரூ. 20,41,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

4. அட்மினிஸ்ட்ரேட்டர்-ஜெனரல்—சொத்துப் பொறுப்பாட்சியர், சென்னை.

சென்னை, அட்மினிஸ்ட்ரேட்டர்-ஜெனரல்—சொத்துப் பொறுப்பாட்சியர், மாவட்ட நீதிபதி தரத்தில் உள்ளவர், [illegible] அட்மினிஸ்ட்ரேட்டர்-ஜெனரல் [illegible] பொறுப்பாட்சியர் [illegible]. அவரு[illegible] ரூ. [illegible]—1,000 ஆகும். [illegible] மைனர்கள்,

எஸ்டேட்டுகள் சம்பந்தப்பட்ட பொறுப்பு வகிப்பவர்கள். அட்மினிஸ்ட்ரேட்டர்-ஜெனரல் சட்டத்திலும், சொத்துப் பொறுப்பாட்சியர் சட்டத்திலும் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றி வருகின்றனர்.

1977-78-ல் இந்தத் தலைப்பு தொடர்பான செலவு 2,00,000 ரூபாயாகும்.

5. மாநகர மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்கள்.

இம்மாநகரில் பெருநகர் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றம் உட்பட 20 மாநகர மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருகின்றன. மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு இரண்டாம் நிலை மாவட்ட நீதிபதி தரத்தைச் சேர்ந்தவர். இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, பத்தாவது, பதினோராவது மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் துணை நீதிபதிகள் தரத்தைச் சேர்ந்தவர்கள். ஏனைய மாநகர மாஜிஸ்ரேட்டுகள் அனைவரும் மாவட்ட முன்சீப் தரத்தைச் சேர்ந்தவர்கள். மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் சென்னை மாநகரில் உள்ள, சம்பந்தப்பட்ட காவல் நிலைய ஆட்சி வரம்பில் அதிகாரம் செலுத்தி வருகின்றனர்.

1974 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி முதற்கொண்டு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவை புதிதாக கொண்டு வரப்பட்டதையடுத்து மாகாணத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு பதவிப் பெயர், மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டு என்றும், ஏனைய மாகாண மாஜிஸ்ட்ரேட்டுகளின் பதவிப் பெயர்கள் மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகள் என்றும் மாற்றப்பட்டன. கௌரவ மாஜிஸ்ட்ரேட்டு நீதி மன்றங்களும், சென்ட்ரல் இரயில் நிலையம், எழும்பூர் இரயில் நிலையம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த இரயில்வே மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றங்கள் எடுக்கப்பட்டுவிட்டன. ஒரு வழக்கில் தொடக்க விசாரணை நடத்திய பிறகு குற்றம் சாட்டப்பட்டவரை செஷன்ஸ் நீதிமன்றத்திற்கு அனுப்பும் நடைமுறை ஒழிக்கப்பட்டு விட்டது. பழைய குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படி, மாநகரப் பகுதியைப் பொறுத்தவரை கைதிகளை ரிமாண்டில் வைக்கும் பணியை காவல்-துறை கமிஷனர் செய்து வந்தார். புதிய விதிக்கோவையின்படி, கைதிகளை ரிமாண்டில் வைக்கும் அதிகாரங்களை மாநகரத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டும் ஏனைய மாநகர மாஜிஸ்ட்ரேட்டுகளும் செலுத்தி வருகின்றனர்.

மேற்சொன்ன ஏற்பாட்டையடுத்து பெருகிவரும் பணிச்சுமையை ஈடு செய்ய உயர் நீதிமன்றப் பரிவுரைகளின் பேரில், தேவையான பணியாளர்களுடன் கூடிய 8 மாநகர மாஜிஸ்ட்ரேட்டு பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பெருகிவரும் பணிச்சுமையைக் கவனிக்க

மாநில அரசு உதவி வழக்கு நடத்துநர் பதவிகள் 11-ஐ ஏற்படுத்தவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. காவல் துறை சிறப்புப் பிரிவும் மாநில அரசு காவல்துறை உணவுப் பிரிவும் தாக்கல் செய்துள்ள வழக்குகளைக் கவனிக்க சென்னை மாநகரில் மாநகரத் தலைமை கூடுதல் மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றங்கள் இரண்டினை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது.

போக்குவரத்து குற்றங்கள், சிறு குற்றங்கள் ஆகியவை விசாரிக்கும்பொருட்டு, முழுநேர மாஜிஸ்ட்ரேட்டு நடமாடும் நீதிமன்றங்கள் மூன்று சென்னை மாநகரில் செயல்படத் தொடங்கியுள்ளன. மெரினா கடற்கரை உட்பட சென்னை மாநகரத்தை சுத்தமாகவும் தூய்மையாகவும் வைத்துக்கொள்ளும் நோக்குடன், இரண்டு மாநகர மாஜிஸ்ரேட்டு நடமாடும் நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன; அவை, நகரக் குற்றங்களை மட்டுமே விசாரிக்கும்.

சென்னை மாநகரில் உள்ள மேற்சொன்ன குற்ற நீதிமன்றங்களுக்கு 1977, 1978 ஆகிய ஆண்டுகளில் ஆன செலவு, ரூ. 18,74,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

6. சென்னை மாநகர சிவில் நீதிமன்றம்.

நான்கு மாவட்ட நீதிபதிகள், 12 சார்நிலை நீதிபதிகள் என்ற அடிப்படையில் 16 நீதிமன்ற அதிகாரிகள், சென்னை மாநகர சிவில் நீதிமன்றத்தில் செயல்பட்டு வருகின்றனர். நிர்வாகப் பொறுப்பினை கவனிக்கும் பொருட்டு, அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவி தரத்தில் தனியானதொரு பதிவாளர் பதவி ஒன்று உள்ளது. மாநகர சிவில் நீதி மன்றத்தின் நிலவரை அதிகாரவரம்பு, சென்னை மாநகர் முழுவதற்கும் பரந்து நிற்கும், மாநகர சிவில் நீதிமன்றம் ரூ. 50,000 வரை பண விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கொண்டுள்ளது. மாநகர சிவில் நீதிமன்றம், மேல் முறையீட்டு கீழ் நீதிமன்றம் ஆகவும் உள்ளது; எனவே, மேல் முறையீட்டு மனுக்களை விசாரிப்பதற்கான அதிகாரம், மாவட்ட நீதிமன்றத்திற்கு இணையாக இருப்பதற்காக ரூ. 10,000-க்கு உயர்த்தப்பட்டுள்ளது. மாநகர சிவில் நீதிமன்றம், சென்னை கோட்டம் பொறுத்தவரையில் செஷன்ஸ் நீதிமன்றமாகவும் செயல்பட்டு வருகிறது. மாநகர சிவில் நீதிமன்றத்திற்கு ஆன மொத்தச் செலவு ரூ. 15,27,000 ஆகும்.

நீதிமன்றக் கட்டளைகளைச் சேர்பிப்பதற்கும்—ஆவணங்களை நகல் எடுத்துக் கொள்வதற்கும் இதுவரையில் சென்னை, மாநகர சிவில் நீதிமன்றத்தில் தனியாக பணியாளர் எவரும் இல்லை. சென்னை சிறு வழக்கு

நீதிமன்றத்தைச் சேர்ந்த நீதிமன்ற கட்டளைகளை சேர்ப்பித்தல்—ஆவணங்களை நகல் எடுத்தல் குறித்த துறை, இந்த இரண்டு நீதிமன்றங்களுக்கும் பொதுவாக செயல் பட்டது. இது, இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நீதி மன்ற கட்டளைகளை சேர்ப்பித்தல்—ஆவணங்களை நகல் எடுத்தல் குறித்த பணியாளர் அமைப்பு தற்போது மாநகர சிவில் நீதிமன்றத்தில் அதன் சொந்த நிறுவன அமைப்பாக செயல்பட்டு வருகிறது.

7. வெளியூர்களில் உள்ள சிவில் நீதிமன்றங்கள்.

இம் மாநிலத்தில் 15 மாவட்ட நீதிமன்றங்கள் உள்ளன. திருநெல்வேலியில் கூடுதல் மாவட்ட நீதிமன்றமும் உள்ளது. மாவட்ட நீதிபதிகள், சம்பந்தப்பட்ட கோட்ட செஷன்ஸ் நீதிபதிகளாவர். ரூ. 10,000 மதிப்பு வரையிலான சிவில் மேல் முறையீடுகளை விசாரிக்க அவர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். அவை, சிறப்பு நடுவர் நீதி மன்றங்களாக (அதாவது தொழிலாளர்கள் மாநில காப்புறுதி நீதி மன்றம், எஸ்டேட் ஒழிப்பு நடுவர் மன்றம், மோட்டார் வண்டிகள் விபத்து உரிமைக் கோரிக்கை நடுவர் மன்றம் போன்று) சிறப்பு சட்டங்களின் கீழ் செயல்படு கின்றன. மாவட்ட நீதிபதிகள், தங்களது கோட்டங்களில் உள்ள சார்நிலை சிவில் நீதிமன்றங்களையும் மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டு நீதிமன்றத்தையும் ஆய்வு செய்கின்றனர். மாநகர சிவில் நீதிமன்றத்தின் பிரதம நீதிபதிக்குக் கூடுதலாக, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்ட நீதிபதிகள், மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களில் விசாரணை அதிகாரத்துடன், குற்றவியல் சட்ட திருத்தச் சட்டத்தின்கீழ் வழக்குகளை விசாரணை செய்வதற்கென, சிறப்பு நீதிபதிகளாகவும் பதவிப் பெயர் வழங்கப்பட்டுள்ளனர்.

8. சார்நிலை நீதிபதிகள்.

இம் மாநிலத்தில் 50 சார்நிலை நீதி மன்றங்கள் உள்ளன. சார்நிலை நீதிபதிகளுக்கு வரையறையற்ற பண விவகாரங்களைக் கொண்ட வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரமுண்டு. அவர்களுடைய வட்டார அதிகார வரம்பு சிவில் நீதிமன்றங்கள் சட்டத்தில் விளக்கப்பட்டுள்ளது. சார்நிலை நீதிபதிகள் தங்களது அதிகார வரம்பிற்குள் செயல்படும் மாவட்ட முனிசிப்புகளின் முடிவுகளுக்கு எதிராக செய்து கொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரணை செய்யவும் அதிகாரமுண்டு. சார்நிலை நீதிபதிகள், உதவி செஷன்ஸ் நீதிபதிகளும் ஆவர். சில இடங்களில் மோட்டார் வண்டி விபத்துக்கள் உரிமை கோரிக்கையின்கீழ் வழக்குகளை விசாரணை செய்ய தலைமையிடங்களிலுள்ள பிரதம சார்நிலை நீதிபதிகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகள் 13 பேர் செயல்பட்டு வருகின்றனர். இவர்களில், அண்மையில் அமைக்கப்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்தில் நியமிக்கப்பெற்ற நீதித்துறை தலைமை மாஜிஸ்டிரேட்டும் ஒருவரானவர். இவர்கள் அனைவரும் மாவட்ட உதவி—நீதிபதிகள் பதவித் தரத்தில் உள்ளவர்கள். இவர்கள் தங்கள் மாவட்டத்திலுள்ள சார் நிலைக் குற்ற வழக்கு நீதிமன்றங்களையும் பார்வையிடுகின்றனர். அவர்கள் மாதம் ஒன்றுக்கு ரூ. 50 சிறப்பூதியம் பெறத் தகுதியுடையவரானவர். இவர்கள் தங்களுக்குள்ள நிர்வாகப் பணியோடு 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக்கோவையின்படி, முதல் வகுப்பு நீதிபதிக்குரிய அதிகாரத்தை செலுத்துகின்றனர். அத்துடன் 1973-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிக் கோவையின் விதித்துறையின்படி மாவட்ட செஷன்ஸ் நீதிபதிக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டிய மேல் முறையீடுகளை அந்த நீதிபதி நீதித் துறை தலைமை மாஜிஸ்டிரேட்டுகளுக்கு அனுப்ப அவற்றையும் இவர்கள் விசாரணை செய்ய இவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

16 உட் கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள், மாவட்ட முன்சீப் உட்கோட்ட நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள், 1 மாவட்ட முன்சீப்—நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டு உள்ளனர். அவர்கள் மாவட்ட முன்சீப் பதவித் தரத்தில் உள்ளவர்கள் ஆவர். அவர்கள் முதல் வகுப்பு நீதிபதிக்குரிய அதிகாரங்களைப் பெற்றுள்ளனர். ஆனால், நீதித்துறை இரண்டாம் வகுப்பு நீதிபதிகள் தீர்ப்பு குறித்து செய்துகொள்ளப்படும் மேல் முறையீடுகளை விசாரிக்கும் அதிகாரம் இவர்களுக்கு இல்லை. நீதித்துறை முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள் 22 பேர் உள்ளனர்.

நீதித்துறைத் தலைமை மாஜிஸ்ட்ரேட்டுகளின் நேரடி அதிகார வரம்பிற்குள் உள்ள பகுதியிலிருந்து எழுகின்ற வழக்குகளை முடிவு செய்வதில் அவர்களுக்கு உதவுவதற்காகவே இவர்கள் உள்ளனர்.

[illegible] மாஜிஸ்ட்ரேட்டுகள் 132 நீதித்துறை இர[illegible]வது வகுப்[illegible]டுகள் தத்தம் அதிகார பேர் உள்ளனர். இந்த மாஜிஸ்ட்ரேட்[illegible] வருகின்ற புகார்களை வரம்பிற்கு உட்பட்ட பகுதியிலிருந்து [illegible]க்குகளை 1973 ஆம் ஏற்றுக்கொண்டு அவை தொடர்பான வழ[illegible]த்தின் முதலா ஆண்டு குற்றவியல் நடைமுறை விதிச் சட்ட[illegible] விசாரணை வது விவர அட்டவணையில் விதித்துள்ளவா[illegible] செய்து தீர்ப்பளிக்கின்றனர்.

[illegible]க[illegible]னியாக நட[illegible]காரங் வெளியூர்களில் கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் தி-7[illegible]கள் அல்லது நீதிபதி குழுவில் உறுப்பினராக இருந்து அதிகாரச் செலுத்துகின்றனர். இரயில்வே மாஜிஸ்ட்ரேட்டு வழக்கு மன்றங்கள் அனைத்தும் நீக்கப்பட்டுவிட்டன. சிற[illegible]

குற்றங்கள், அவை தொடர்பான வழக்குகள் பற்றிப் பணிச்சுமை கூடுதல் ஆகுமாயின், அதற்கிணங்க, உரிய அளவில் அவற்றைக் கவனித்து வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பளிப்பதற்காக நீதித்துறை தனி மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமனம் செய்வதற்கு விதித்துறை உள்ளது.

மாவட்டங்களிலுள்ள குற்றவியல் நீதிமன்றங்கள் அனைத்திற்காகும் மொத்தச் செலவு ரூ. 1,35,23,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொகையில் பின்வரும் செலவினங்கள் அடங்கும்—அதிகாரிகளின் சம்பளம், நிர்வாகப் பணியாளர்களின் சம்பளம், நிர்வாகப் பணியாளர்கள் வாங்கும் படிகள் அன்றியும் அரசுப் பணி அஞ்சல் தலைகள், வாடகைகள், கட்டணங்கள், வரிகள், அலுவல் வகைச்செலவுகள், மேசை, நாற்காலி முதலியன வாங்குவதற்கான செலவுகள் ஆகியவை போன்ற சில்லறைச் செலவினங்களும் ஏனைய வகைச் சில்லறைச் செலவினங்களுமாகும். I, II-நிலை அரசு உதவி வழக்குரைஞர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளனர்.

இதுகாறும் ''214. நீதி நிர்வாகம்'' என்பதன் கீழ் ''e. AA. குற்றவியல் நீதிமன்றங்கள்'' என்னும் தலைப்பில் பற்று எழுதப்பட்டுவந்த நீதிமன்றம் விதிக்கும் அபராதங்களுக்குப் பதிலாக உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஏனையோருக்கும் கொடுக்கப்படும் இழப்பீட்டு செலவுத் தொகை இனி கோரிக்கை எண் 46 இன் கீழ் ''363. உள்ளாட்சி மன்றங்களுக்கும், [illegible] இழப்பீடும், ஒப்படைகளும்.—d. ஏனையப் பல்வகை இழப்பீடும், ஒப்படைகளும்'' என்னும் தலைப்பின்கீழ் பற்று எழுதப்படவேண்டுமென ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பொது.

தலைமையிடங்களில் அமைந்துள்ள நீதிமன்றங்களில் வழக்குகள் மிகுதியாக வந்து குவிவதைத் தவிர்க்கவும், தங்கள் வழக்குகளுக்காக தற்போது தலைமையிடத்தை நாடிச் செல்வதில் இடர்பாடுறுகின்ற வழக்காடும் பொது மக்களுக்குப் போதுமான அளவிற்கு நிவாரணமளிக்கவும் இயலும் வகையில் தலைமையிடங்களிலுள்ள வழக்கு மன்றங்களின் அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டுமென அரசும், நீதிமன்றங்களும் கருதுகிறது. உரிமை வழக்கு, குற்ற வழக்கு நீதிமன்றங்களின் அதிகார வரம்புகளைக் குறித்து மாநில அளவில் பரிசீலனை செய்யும் பணியை ஏற்கும்பொருட்டு அரசால் நியமிக்கப் பெற்ற அலுவலர்கள் குழு தனது அறிக்கையைப் பணிந்தனுப்பியுள்ளது. நீதிமன்றங்களின் அதிகார வரம்பு குறித்த குழுவின் பரிவுரைகளை அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளது. எனினும், இப்பரிவுரைகளை

ஐந்து ஆண்டு கால அளவில் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின்கீழ் செயற்படுத்துவதென அரசு முடிவு செய்துள்ளது. 1977-78 ஆம் ஆண்டிலும் அதனை அடுத்துவரும் ஆண்டுகளிலும் படிப்படியாக நிறைவேற்றும் திட்டத்தின் கீழ், அந்தந்த ஆண்டுகளில் அனுமதிக்கப்பட வேண்டிய குற்றவியல் நீதிமன்றங்கள்—உரிமை வழக்கு நீதிமன்றங்களின் முன்னுரிமைப்பட்டியல் ஒன்றைத் தயாரித்தளிக்குமாறு உயர் நீதிமன்றம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நீதித்துறை சார்ந்த II ஆம் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுப் பதவிகள் முதல் வகுப்பு மாஜிஸ்திரேட்டுப் பதவிகளாக உயர்த்தப்பட்டு, மாவட்ட முன்சீப் பதவி தரத்துடன் ஒருங்கிணைக்கப்படலாம் என்று அரசு ஆணையிட்டுள்ளது. குற்றவியல் மாஜிஸ்ட்ரேட்டுகளும், உரிமை வழக்கு நீதிபதிகளும் ஆகிய இருசாரார்களுமே பதவி உயர்த்தப்பட்டு, மாவட்ட, செஷன்ஸ் நீதிபதிகளாக நியமனம் பெறுகின்ற காலத்தில் அவர்கள் நீதித் துறையின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பணிகளை மிக நன்றாக அறிந்திருக்கச் செய்ய வேண்டி, மாஜிஸ்ட்ரேட்டுகள் உரிமை வழக்குகள் குறித்து அனுபவம் பெறவும், உரிமை வழக்கு நீதிபதிகள் குற்ற வழக்கு விசாரணைகள் பற்றி அனுபவம் பெறவும் உதவும்பொருட்டே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. மாஜிஸ்ட்ரேட்டுகளும், குற்ற வழக்கு நீதிபதிகளும் பின்னர் வகிக்க இருக்கின்ற ஒருங்கிணைந்த பதவிகளில் தம் கடமைகளை ஆற்றுவதற்கு உதவும் பொருட்டு, மேற்சொன்ன அரசாணையானது குற்ற வழக்கு மாஜிஸ்ட்ரேட்டுகளின் அதிகார வரம்புகளையும், உரிமை வழக்கு நீதிபதிகளின் அதிகார வரம்புகளையும் திருத்தி அமைத்து ஒன்றுக்குவதற்கு அல்லது இவ்விருசாரரின் அதிகார வரம்புகளையும் ஒருங்கிணைப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்டதாகும்.

இது தொடர்பான இன்னொரு முக்கியமான அம்சம் என்னவெனில் அசல் மேல் முறையீட்டு வழக்குகளில் உயர் நீதிமன்றமும், அத்துடன் சார்நிலைக் குற்றவியல் நீதி மன்றங்களும் ''நீதி நிர்வாகம்'' என்னும் தலைப்பின்கீழ் வருவாயைப் பெறுகின்றன என்பதாகும். மேலும், நீதி நிர்வாகம் என்னும் தலைப்பின்கீழ் பெறுகின்ற வருவாயைக் கருத்திற் கொண்டு பார்த்தால், இதற்கு ஏற்படக்கூடிய செலவு நீதித் துறையால் நிர்வகிக்கப்படக்கூடிய வரம்பிற்குள்ளேயே இருக்கும்.

வறியவர்களாகவும், உதவுவதற்குரிய தகுதிபெற்றவர்களாகவும் உள்ளவர்களுக்கு இலவச சட்ட உதவியும், அறிவுரையும் வழங்குவதற்கு உறுதி செய்யும் நோக்குடன் சென்னை, சேலம், கோயம்புத்தூர், ஈரோடு ஆகிய 4 நகரங்களில், 4 சட்ட உதவிக் குழுக்களை ஏற்படுத்த அனுமதி வழங்கப் பெற்றுள்ளது; தமிழ்நாடு மாநில சட்ட உதவி

அறிவுரைக் குழு, சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒரு சங்கமாகப் பதிவு செய்யப்பெற்றுள்ளது. மேலும் செஷன்ஸ் நீதி மன்றங்களில் விசாரணையிலுள்ள வழக்குகளில் ஏதாவதொரு குற்றம் தொடர்பாகக் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அவரது வழக்கினை நடத்துவதற்காக வழக்குரைஞரை அமர்த்தும் கருத்துடன், 1976 ஆம் ஆண்டு குற்றம் சாட்டப்பட்ட வறியவர்களுக்கு இலவசச் சட்ட உதவி விதிகளை அரசு ஏற்பளித்துள்ளது. செஷன்ஸ் நீதிமன்றம் ஒன்றில் குற்றஞ் சாட்டப்பட்டு விசாரணையில் உள்ள ஒரு குற்றவாளியின் சார்பில் வழக்குரைஞர் எவரும் வாதிடாமலிருந்தால் அல்லது வழக்குரைஞரை அமர்த்திக்கொள்ள அவருக்குப் போதுமான வருவாயில்லாதிருந்தால், அவர் வழக்கில் அவருக்காக வாதிடுவதற்கு அரசுச் செலவில் வழக்குரைஞர் ஒருவரை அமர்த்திக்கொள்ள இவ்விதிகள் வகை செய்கின்றன. சென்னையிலுள்ள மாநில சட்ட உதவி—அறிவுரைக்குழு 1977-78 ஆம் ஆண்டு தனக்கேற்படும் செலவுகளைச் செய்யும் பொருட்டு, அக்குழுவிற்குத் தொடக்க முன்மானியமாக ரூ. 1 இலட்சம் தொகையை அரசு அனுமதித்துள்ளது. இச்செலவு ''214.A. நீதி நிர்வாகம்'' என்னும் புதிய உள் தலைப்பின்கீழ் பற்று எழுதப்படும்.

இணைப்பு III.

[283 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

சிறைத்துறை, சிறைகள் மற்றும் பார்ஸ்டல் பள்ளியின் நிர்வாகம், அமைப்பு, கட்டுப்பாடு ஆகியவற்றை கவனிக்கும் துறையாகும். சிறைவாசிகளை சீர்திருத்தி அவர்கள் விடுதலையான பின்பு நல்ல குடிமக்களாக, வாழவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையை பயன்தரக்கூடிய வகையில் அமைத்துக் கொள்ளவும் உதவுவது இத்துறையின் முக்கிய நோக்கமாகும்.

1. சிறைகளின் வகைப்பாடு.

இம்மாநிலத்திலுள்ள சிறைகள் கீழ்க்கண்ட வகையில் பிரிக்கப் படுகின்றன:—

1. மத்திய சிறைகள்.
2. சிறப்பு சிறை (மாநில மகளிர் சிறைச்சாலை, வேலூர்).
3. கிளைச் சிறைகள்.

மத்திய சிறைகளில் பொதுவாக ஒரு மாதத்திற்கு மேற்பட்ட தண்டனையை அடைந்தவர்களும், ஆயுள் தண்டனை அடைந்தவர்களும், வழக்கமாக குற்றம் செய்வோரும் வைக்கப்படுகின்றனர். கிளைச் சிறைகளில் விசாரணைக் கைதிகளும் ஒரு மாதத்திற்குக் குறைவாக தண்டனை பெற்றவர்களும் வைக்கப்படுகின்றனர். வயது வந்த சிறைவாசிகள், இளங் குற்றவாளிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். அதுபோன்று ஆண் சிறைவாசிகள் பெண் சிறைவாசிகளிடமிருந்து பிரித்து வைக்கப்படுகின்றனர். நிரந்தர சிறைவாசிகள் சேலத்திலும் கடலூரிலும் உள்ள மத்திய சிறைகளிலும், பெண் சிறைவாசிகள் வேலூரில் உள்ள மாநில மகளிர் சிறையிலும் வைக்கப்படுகின்றனர். இளங்குற்றவாளிகளுக்கென்று பிரத்யேகமாக புதுக்கோட்டையிலுள்ள பார்ஸ்டல் பள்ளி இயங்கி வருகிறது. தற்காலிகமாக மனநோய் குற்றவாளிகளை சென்னை அரசாங்க மனநோய் மருத்துவ மனையில் சேர்க்கப்படவேண்டும் என்று அரசு ஆணையிட்டுள்ளது. வேலூர், திருச்சி மத்திய சிறைகளில் தொழுநோய் மற்றும் தொற்று நோய் குற்றவாளிகளுக்கென்று தனிச்சிறை கூடங்கள் உள்ளன.

சிறைத்துறையின் பொறுப்பிலுள்ள வெவ்வேறு நிறுவனங்கள் பின்வருமாறு:—

1. மத்திய சிறைகள்	8
2. மாநில மகளிர் சிறை	1
3. பார்ஸ்டல் பள்ளி	1
4. சிறப்பு கிளை சிறைகள்	3
5. கிளைச் சிறைகள்—	
(அ) சிறைத்துறை தலைவரின் பொறுப்பிலுள்ளவை.	10
(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின் பொறுப்பிலுள்ளவை	112

2. நிர்வாகம்.

சிறைத்துறையின் நிர்வாக அமைப்பை காட்டும் விளக்கப் படம் ஒன்று பிற்சேர்க்கை 1 இல் இணைக்கப்பட்டுள்ளது.

பிற்சேர்க்கை இரண்டில் உள்ள படிவத்தில் 1970-71-லிருந்து 1976-77 வரை சிறைத்துறையின் வருவாய் மற்றும் செலவினங் களும், 1977-78-க்குரிய பட்ஜெட் மதிப்பீடும் கொடுக்கப்பட் டுள்ளது.

3. திறந்தவெளிச் சிறைகள்.

தற்போது மாநிலத்தில் மூன்று திறந்த வெளிச் சிறைகள் உள்ளன. ஒன்று தஞ்சாவூரிலுள்ள நீலகிரி கிராமத்திலும் மற்றொன்று சேலத்திலும் மூன்றாவது கோவை மாவட்டத்தி லுள்ள சிங்காநல்லூரிலும் உள்ளன.

2. திறந்தவெளிச் சிறைகளின் நோக்கங்களாவன.—

(1) சாதாரண சிறைகளில் ஏற்படும் நெருக்கடியை தவிர்க்க;

(2) அவர்களுடைய எதிர்கால புனர்வாழ்வுக்காக சிறைவாசிகளுக்கு சரியான முறையில் விவசாயத்தில் பயிற்சி அளிக்க;

(3) வேளாண்மைப் பொருட்களில் சிறைகள் தன்னிறைவு காண;

(4) நன்முறையில் நடந்துகொள்ளும் சிறைவாசிகளுக்கு சிறிதளவு சுதந்திரமளிக்க;

(5) குறைந்த பட்ச பாதுகாப்பு கொள்கையை மேம்படுத்த.

[1977 ஆகஸ்டு 16

3. தற்போதுள்ள திறந்த வெளிச் சிறைகளின் அடிப்படையில் கீழ்க்காணும் இடங்களில் திறந்த வெளிச் சிறைகள் அமைப்பது குறித்து குறிப்புரை அரசின் பரிசீலனையில் உள்ளது:—

(1) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சிவகங்கை;

(2) கோவை மாவட்டத்திலுள்ள வேலமுண்டி ஒதுக்கக்காடு;

(3) தென்னாற்காடு மாவட்டத்திலுள்ள வேலப்பாக்கம் மாநில விதைப் பண்ணை;

(4) செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள வெங்கடமங்கலம்.

அரசு ஆணை நிலை எண் 2238, உள்துறை, நாள் 9—9—1976-ன் படி அமைக்கப்பட்ட ஆய்வுக்குழுவின் பரிந்துரைகளின் பேரில் இந்த குறிப்புரை உள்ளது.

4. சிறைவாசிகளின் உரிமையும் அவர்களின் பாகுபாடும்.

சிறைகளில் 'ஏ', 'பி' என்ற இரண்டு வகுப்புகளே உள்ளன. சிறைவாசிகளின் அந்தஸ்து, கல்வி, வாழ்க்கைத்தரம், சொந்தமாக வைத்துள்ள சொத்து விபரம், நடத்தை மற்றும் முன் வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சிறைவாசிகள் பாகுபடுத்தப்படுகிறார்கள். சமூக அந்தஸ்து, கல்வி மற்றும் உயர்தரமான வாழ்க்கையைக் கொண்ட சிறைவாசிகள் 'ஏ' வகுப்பிற்கு தகுதியுள்ளவர்கள். கீழ்த்தரமான குற்றம் புரிந்தவர்களும் தகாத நடத்தை உடையவர்களும் 'ஏ' வகுப்பில் வைக்கப்படமாட்டார்கள். முன் வரலாறு, நடத்தை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வழக்கமாக சிறைபடும் சிறைவாசிகளுக்கு பாகுபாடு செய்யும் அதிகாரமுடையவர்களின் விருப்பத்திற்கிணங்க 'ஏ' வகுப்பு கொடுக்கப்படுகிறது. சமுதாயத்திற்கு விரோதமான குற்றம் புரிந்த சிறைவாசிகள் 'ஏ' வகுப்பிற்கு தகுதியற்றவர்கள். 'ஏ' வகுப்பில் இடம் பெறாதவர்கள் 'பி' வகுப்பு சிறைவாசிகள் ஆவர்.

5. உணவு.

'ஏ' வகுப்பு சிறைவாசிகளுக்கு கொடுக்கப்படும் உணவு கீழ்க்கண்ட நான்கு வகையாக பிரிக்கப்படுகிறது. அவைகள் (1) வேலை செய்யும் சைவ சிறைவாசிகள், (2) வேலை செய்யா சைவ சிறைவாசிகள், (3) வேலை செய்யும் அசைவ சிறைவாசிகள், (4). வேலை செய்யா அசைவ சிறைவாசிகள். இக்குற்றவாளிகள் பழங்களும், பிஸ்கட், கோகோ, ஓவல்டின் மற்றும் உணவுக்கு பயன்படும் இதர பொருட்களை வாங்குவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு சைவ உணவே குறித்த அளவு வழங்கப்படுகிறது. அளவு வேலை செய்வோர்

1977 ஆகஸ்டு 16]

களுக்கும் வேலை செய்யாதவர்களுக்கும் மாறுபடும். மருத்துவ அலுவலர் உடல் நலத்திற்காக சிறைவாசிகளுக்கு முட்டை, கறி ஆகியவை வழங்க பரிந்துரை செய்யலாம்.

பல்வேறு வகுப்பு சிறைவாசிகளுக்கும் நாளொன்றுக்கு ஒரு சிறைவாசிக்கு வழங்கப்படும் உணவின் தோராயமான மதிப்பீடு கீழ்வருமாறு :—

(1) 'ஏ' வகுப்பு சிறைவாசி— வேலை செய்யும் சைவ சிறைவாசி	ரூ. 5.35
'ஏ' வகுப்பு சிறைவாசி— வேலை செய்யா சைவ சிறைவாசி	ரூ. 4.80
'ஏ' வகுப்பு சிறைவாசி— வேலை செய்யும் அசைவ சிறைவாசி	ரூ. 5.70
'ஏ' வகுப்பு சிறைவாசி— வேலை செய்யா அசைவ சிறைவாசி	ரூ. 4.60
(2) 'பி' வகுப்பு சிறைவாசி—	
வேலை செய்யும் சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ள சிறைவாசி.	ரூ. 2.65
வேலை செய்யா சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ள சிறைவாசி	ரூ. 2.50
'பி' வகுப்பு சிறைவாசி—	
ஓரளவு சத்துணவுத் திட்டத்தின் கீழ் உள்ள வேலை செய்யும் சிறைவாசி.	ரூ. 2.45
ஓரளவு சத்துணவுத் திட்டத்தின்கீழ் உள்ள வேலை செய்யா சிறைவாசி.	ரூ. 2.30

சத்துணவுத் திட்டம்.—

1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு கொடுக்கப்பட்டு வந்த உணவு சத்துணவுத் திட்டமாக மாற்றப்பட்டது. பழைய உணவுத் திட்டத்திலுள்ள 'ஏ' வைட்டமின், கால்சியம் ஆகியவற்றின் குறைபாட்டை தவிர்க்கவும், காலோரி மதிப்பினை அதிகப்படுத்துவதற்காகவும் இத்திட்டம் கொணரப்பட்டது. வழங்கப்படும் அரிசி, கோதுமை, சோளம், வெங்காயம், கடலெண்ணெய், நிலக்கடலை மற்றும் வெல்லம் ஆகியவையின் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. காய்கறிகளின் அளவு 230 கிராமிலிருந்து 250 கிராமாக உயர்த்தப்பட்டுள்ளது. அவைகளில் 100 கிராம் கீரை வகைகளும் அடங்கும்.

காலை உணவிற்கு கஞ்சிக்குப் பதிலாக சோளம் அல்லது கேழ்வரகு, இட்லி அல்லது கோதுமை உப்புமா அல்லது சோளபுட்டு வழங்கப் படுகிறது.

முதன் முதலாக சென்னை மத்திய சிறையில் புதிய அளவு உணவு (சத்துணவுத் திட்டம்) அறிமுகப்படுத்தப்பட்டது. சென்னை மத்திய சிறை 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு வழங்கப் படும் சத்துணவுத் திட்டம் மதுரை, கோவை மத்திய சிறை வாசிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

(a) ஓரளவு சத்துணவுத் திட்டம்.—1975-76-ம் ஆண்டு ஓரளவு சத்துணவுத் திட்டமான வாரத்தில் 3 நாட்களுக்கு காலை உணவு இட்லியும்; 4 நாட்களுக்கு புட்டும் மாநில மகளிர் சிறை உட்பட எல்லா சிறையிலுள்ள 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

(b) படுக்கையும் உடுக்கையும்.—'ஏ' வகுப்பு சிறைவாசிகள் வேலை செய்யும் நேரத்தை தவிர மற்ற நேரங்களில் தங்களுடைய சொந்த உடை, படுக்கை ஆகியவற்றை பயன்படுத்த அனுமதிக் கப்படுகிறார்கள். வேலை செய்யும் நேரங்களில் சிறை ஆடையை அவர்கள் அணியவேண்டும். உறவினர்களின் நேர்காணலின் போது 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் தங்களுடைய சொந்த உடையை அணிய அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறை வாசிகள் சிறை ஆடைகளையே அணிதல் வேண்டும்.

(c) சோப்பும் மற்றும் வாசனைப் பொருட்கள்.—எல்லா சிறை வாசிகளும் சோப்பு, தலைக்கு தேய்க்கும் எண்ணெய் மற்றும் எண்ணெய் ஆகியவைகளை தங்களுடைய சொந்த செலவில் வாங்கி பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறார்கள். மாதத்திற்கு ஒருமுறை எண்ணெய் தேய்த்து குளிப்பதற்காக ஒவ்வொரு சிறைவாசிக்கும் ஒரு அவுன்சு எண்ணெய் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாதம் ஒவ்வொரு சிறைவாசிக்கும் ஒன்றரை அவுன்சு (42 கிராம்) பூந்திக்காய் வழங்கப்படுகிறது. கோவை மத்திய சிறையில் உள்ள நூற்பாலையில் வேலை செய்யும் சிறைவாசிகள் குளிப்பதற் காக மாதத்திற்கு ஒருமுறை 2 அவுன்சு (56 கிராம்) எண்ணெய் கொடுக்கப்படுகிறது. நன்னடத்தை உள்ள தேவையுள்ள எல்லா வகுப்பு சிறைவாசிகளும் தங்களுடைய நண்பர்கள் அல்லது உறவினர்களிடமிருந்து இரண்டு வாரங்களுக்குத் தேவையான சோப்பு, எண்ணெய், பற்பொடி ஆகியவற்றை பெற்றுக்கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். மேற்கண்ட பொருள்கள் சிறை உயர் அதிகாரி ஒருவரால் நன்கு பரிசீலிக்கப்பட்டபின்பே சிறை வாசிகளுக்கு வழங்கப்படுகிறது.

(d) நேர்காணலும் கடிதங்களும்.—'ஏ' வகுப்பு சிறை வாசிகள் வாரத்திற்கு ஒருமுறை கடிதம் எழுதவும், இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரை மணி நேரம் நேர்காணலுக்கும் அனுமதிக்கப்படுகிறார்கள். 'பி' வகுப்பு சிறைவாசிகள் மாதத்திற்கு 2 கடிதங்களை எழுதவும், பெறவும்

மேலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை மூன்று பேர்களை அரைமணி நேரம் நேர்காணலுக்கும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

(e) தினத்தாட்களும் சஞ்சிகைகளும்.—தற்போது 'பி' வகுப்பு சிறைவாசிகளுக்கு கீழ்க்கண்ட தமிழ் தினத்தாட்கள் வழங்கப்படுகின்றன :—

(1) தினமணி, (2) சுதேசமித்திரன், (3) நவசக்தி, தினத் தாட்கள் 100 சிறைவாசிகளுக்கு ஒரு பிரதி என்ற விகிதத்தில் அரசு செலவில் வழங்கப்பட்டு வருகிறது. அரசால் அனுமதிக்கப் பட்ட தினத்தாட்களை தங்களது சொந்த செலவில் வாங்கிக் கொள்ள 'ஏ' வகுப்பு சிறைவாசிகள் அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும் சிறை நூலகத்தில் பயனுள்ள புத்தகங்கள் வைக்கப் பட்டுள்ளது. பள்ளி கல்வி இயக்குநருடன் கலந்து ஆலோசித்து தயாரிக்கப்பட்ட புத்தகப் பட்டியல் ஒன்று தேவையானால் வாங்குவதற்கு ஏற்ப எல்லாச் சிறைக் கண்காணிப்பாளர் களுக்கும் சுற்றுக்கு அனுப்பப்படுகிறது.

இதர சலுகைகள்.—'ஏ' வகுப்பு சிறைவாசிகள் மரச் சாமான்கள், கொசுவலை மற்றும் புகையிலை, சமையலுக்குத் தேவை படும் பாத்திரங்கள் ஆகியவற்றை பயன்படுத்த அனுமதிக்கப்படு கிறார்கள். சிறைக் கண்காணிப்பாளரின் விருப்பத்தின்பேரிலும் மருத்துவ ஆலோசனையின் பேரிலும் இதற்கு முன் சிறை தண்டனை அடையாத வழக்கமாக குற்றம் செய்யாத சிறைவாசிகள் சிறையின் மருத்துவமனையின் வெளிப்புறத்தில் தகுந்த காப்போடு உறங்க அனுமதிக்கப்படுகிறார்கள். எல்லா மத்திய சிறைவாசிகளும் ஞாயிற்றுக்கிழமையிலும் மற்றைய சிறை விடுமுறை நாட்களிலும் கைப்பந்து, பூப்பந்து ஆகிய விளை யாட்டுகளை விளையாடவும், வேலூர் மாநில மகளிர் சிறை வாசிகள் வளை பந்து விளையாடவும் அனுமதிக்கப் படுகிறார்கள்.

6. சிறை வேலையும் தொழிற்சாலைகளும்.

சிறைவேலைகளின் முக்கிய நோக்கம் சிறைவாசிகள் விடுதலை யடைந்த பின்பு அவர்களின் புனர்வாழ்வுக்கு உதவுவதே ஆகும். எனவே பயனில்லாத உற்பத்தி நோக்கமில்லாத வேலைகள் தவிர்க்கப்படுகின்றன. எல்லா சிறைவேலைகளும் கடினம், நடுத்தரம், சுலபம் என்னும் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட் டுள்ளன. மருத்துவ அலுவலரின் ஆலோசனையின்படி சிறை வாசிக்கு உரிய வேலை கொடுக்கப்படுகிறது. சிறைவாசிகளுக்கு விடுதலைக்குப் பின் அவர்களுக்கு உதவிடும் வகையில் தச்சு வேலை, தையல், நெசவு, சாயம் தோய்த்தல், கட்டிட வேலை, கருமார் வேலை, காலணி உற்பத்தி, புத்தகம் கட்டுதல், காகிதம் செய்தல், கோழி வளர்த்தல், தேனி வளர்த்தல் ஆகிய தொழில் கள் பயிற்றுவிக்கப்படுகின்றன. கோவை மத்திய சிறையில் நெசவுப்பிரிவுடன் கூடிய நூற்பாலை ஒன்று இருக்கிறது. கூடுமா மான வரையில் சிறைவாசிகள் சிறைக்கு வரும் முன்னதாக

[1977 ஆகஸ்டு 16

எந்தெந்த தொழில்களை செய்து வந்தார்களோ அதுவே கொடுக்கப் படுகிறார்கள். தொற்றுநோய்க்காக ஒதுக்கப்படும்போது சிறை வாசிகளுக்கு கொடுக்கப்படும் வேலை, கல்வி, பயிற்சி ஆகியவைகளை தீர்மானிப்பதற்காக் சிறையின் கண்காணிப்பாளர், மூத்த உதவி மருத்துவ அலுவலர் மற்றும் சிறை அலுவலர் ஆகியோரைக் கொண்ட பாகுபாட்டுக் குழு அமைக்கப்பட்டுள்ளது. நகர மாநகராட்சியின் வேலைகளுக்காக சிறைவாசிகள் பயன்படுத்தப் படுகின்றனர். சிறைவாசி தன்னுடைய வேலையில் மாற்றம் வேண்டினால் அந்த சிறைக் கண்காணிப்பாளரிடம் விண்ணப்பிக்க லாம். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வேலைகளுக்கு மேலும் வருவாய் உள்ள வேலையாகவும் இருந்தால் கிழககண்ட விகிதங் களில் அத்தகைய வேலைகளுக்கு கொடை வழங்கப்படுகிறது:—

கொடையின் விகிதம்.

1. சிறைவாசி	.. ..	0.25	பைசா (ஒரு மாதத்திற்கு).
2. சிறைவாசி (இரவுக் காவலர்)	..	0.50	,, ,,
3. சிறைவாசி (வேலை மேற்பார்வையாளர்).		1.00	ரூபாய் ,,
4. சிறைவாசி காவலர்.	..	2.00	,, ,,

ஊதியம் வழங்கும் திட்டமானது சேலம் மத்தியச் சிறையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வழங்கப்படும் ஊதிய விகிதங்களாவன :

(1) தேர்ச்சி பெற்ற வேலையாள்—0.40 பைசா.

(2) ஓரளவு தேர்ச்சி பெற்ற வேலையாள்—0.20 பைசா.

(3) தேர்ச்சிபெறாத வேலையாள்—0.10 பைசா.

சேலம் மத்திய சிறையில் இத்திட்டம் செயல்படும் விதத்தைக் கவனித்த பிறகு இதர சிறைகளில் காலப்போக்கில் அறிமுகப் படுத்தப்படவிருக்கிறது.

மருத்துவ சுகாதார ஏற்பாடுகள்.— சிறைகளில் மருத்துவ சுகாதார ஏற்பாடுகள் திருப்திகரமாக உள்ளன. ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் ஒரு மருத்துவமனை உள்ளது. ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் ஒரு மருத் துவ அதிகாரியும், அவருக்கு உதவி செய்ய, மருந்தாளுநரும் உள்ளனர். கண்ணாடி தேவையாக உள்ள சிறைவாசிகளுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்படுகின்றன. சிறைவாசிகளுக்கு அவர்களின் பாகுபாட்டின்படியும் அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சையை பொருட்டும் அவர்களுடைய சொந்த செலவிலோ அல்லது அரசாங்க செலவிலோ பல் வைத்தியம் செய்யப்படு

1977 ஆகஸ்டு 16]

கிறது. ''பி'' வகுப்பு கைதிகளுக்கு இலவசமாக சாதாரண சிகிச்சை கொடுக்கப்படுகிறது. வாரத்திற்கு இருமுறை தலைமை மருத்துவ மனையோடு இணைக்கப்பட்ட பல் மருத்துவர் சிறைச்சாலையை பார்வையிடுகிறார். வேலூர் மத்திய சிறைச் சாலையில் உள்ள தனிக்கூடங்களில், தொழு நோயால் பாதிக்கப் பட்ட சிறைக்கைதிகள் தனியாக வைக்கப்படுகின்றனர். மனநோய்க் குற்றவாளிகள் சென்னை மனநோய் மருத்துவ மனைக்கு அனுப்பப்படுகின்றனர்.

7. சிறைவாசிகளுக்கு கல்வி.

கல்வியின் மூலம் பயனடையக்கூடிய நிலையில் இருக்கும் சிறை வாசிகளுக்கு கல்வி வசதி அளிக்கப்படுகின்றது. ஒவ்வொரு மத்திய சிறைச்சாலையிலும் முழுமையாக பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்ட தொடக்கப்பள்ளி ஒன்று உள்ளது. சில குறிப்பிட்ட சிறைச்சாலைகளில் முதியோர் கல்வியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களை கொண்டு முதியோர் கல்வித்திட்டம் நவீன முறையில் நடத்தப்படுகிறது. சிறைவாசிகள் இரவு 9 மணி வரை விளக்கு வசதி உள்ள சிறைச்சாலைகளில் படிக்க அனுமதிக்கப் படுகிறார்கள். விளக்கு வசதி இல்லாத சிறைச்சாலைகளில் அவ்வசதியை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படு கின்றன. சிறைவாசிகளின் நன்மையைக் கருதியும் சிறைச்சாலை யில் கல்வியை முன்னேற்றுவதற்காகவும் சிறை கண்காணிப் பாளர்கள் பள்ளி நிறுவனங்களிலிருந்து ஆசிரியர்களையும் விரிவுரை யாளர்களையும் வரவழைத்து சிறை விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அரசியல் சம்பந்தப்படாத விஷயங்களில் உரையாற்றுமாறு ஏற்பாடு செய்ய அதிகாரம் கொடுக்கப்பட்டிருக் கின்றது. சிறைவாசிகள் பல்கலைக் கழகங்கள் மற்றும் அரசு நடத்தும் தேர்வுகளில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். புத்தகம், தேர்வுக் கட்டணம் மற்றும் இதனைச் சார்ந்த சகல செலவுகளையும் அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுகிறது.

மத சம்பந்தமான நீதிபோதனைகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் அந்த விரிவுரைகளும், சம்பாஷணைகளும் சிறைவாசிகளின் மத நம்பிக்கையை புண்படுத்தா வகையிலும், அவர்களது நம்பிக்கையை வளர்க்கும் வகையிலும் அமைந்திருத்தல் வேண்டும் என்ற நிபந்தனையோடு, அனுமதிக்கப்படுகின்றது. இலக்கிய சம்பந்தமான விரிவுரை ஆற்றுவதற்காக தமிழ் வல்லுநர்களை அழைக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம்.

ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம், சீர்திருத்தம் அல்லது சீர்திருத்தம் அல்லாத நிறுவனங்களிலிருந்து வெளி வருபவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு தச்சு வேலை, உலோக வேலை அல்லது தையல் வேலை ஆகியவற்றில் பயிற்சி அளிப்பதற் காக உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வித பயிற்சிகளினால் அவர்கள் தங்களை நேர்மையான, சட்டத்திற்கு மதிப்பு கொடுக்கும்

குடிமக்களாக ஆக்கிக்கொள்ள முடியும். பயிற்சி காலத்தில் அவர்களுக்கு தினம் ரூ. 2 உதவித் தொகையும், மற்றும் இலவச உணவு, உடை, இருப்பிடம் ஆகியவைகளும் வழங்கப்படுகின்றன. அவர்களுக்கு தொழிற்பயிற்சி கூடங்களில் நடைமுறையில் உள்ள பாடதிட்டங்களின்படி அவர்களது நிலைமைக்கும், வசதிக்கும் ஏற்றாற்போன்ற மாற்றங்களுடன் பயிற்சி அளிக்கப்படுகின்றது. வயது வந்தவர்கள் மட்டுமே இவ்வில்லத்தில் அனுமதிக்கப்படுகின்றார்கள். இவ்வில்லத்தில் அனுமதிக்கப்பட்ட மொத்த இருப்பிடங்கள் 100 என்றாலும் இவ்வில்லத்தில் சராசரியாக 44 பேர்களுக்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இவ்வில்லத்தில் தச்சுவேலை, தையல் வேலை, உலோக வேலை ஆகிய மூன்று தொழிற் பிரிவுகள் உள்ளன.

பார்ஸ்டல் பள்ளி.

இளம் வயது குற்றவாளிகள் (18 வயதுக்கு மேல் 23 வயதிற்குள்) பார்ஸ்டல் பள்ளியில் வைக்கப்படுகின்றனர். பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் கிழே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர் :—

(அ) தச்சு வேலை.

(ஆ) கருமார் வேலை.

(இ) புத்தகம் கட்டுதல்.

(ஈ) தையல் வேலை.

(உ) விவசாயம்.

(ஊ) கொத்து வேலை.

(எ) சலவைத் தொழில்.

(ஏ) பேன்ட் வாசிப்பு பயிற்சி.

(ஐ) வீட்டு வேலைகள்—சமையல் வேலை.

(ஒ) சலவை பணியாளர் வேலை.

அவர்களுக்கு தொழிற் பயிற்சி நிலையங்களில் தொழிற் பயிற்சி அளிக்கப்படுகிறது. பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு மேற்படி தொழிற் பயிற்சி நிலையங்களிலிருந்து அவர்கள் பிற்காலத்தில் வேலையில் அமர்வதற்கு வசதியாக சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் தங்குவதற்காக அனுமதிக்கப்பட்ட மொத்த இடங்கள் 405. சராசரியாக இங்கு இருக்கும் பார்ஸ்டல் பள்ளி மாணவர்கள் மொத்தம் 390. அங்குள்ள துயிற்கூடம் ஒன்று வயது வந்த இளங் குற்றவாளிகள் (23 வயது) தங்குவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது. வயது வந்த இளங் குற்றவாளிகள் அங்கு 25 வயது வரும் வரை வைக்கப்படுகின்றனர். அந்த துயிற்கூடம் சிறைச்சாலை சட்டத்தின்படி சிறைச்சாலை என்று கருதப்படுகின்றது. பார்ஸ்டல் பள்ளி மாணவர்களுக்கு அவர்கள் விடுதலையாகி வரும்பொழுது இயந்திரங்களாகவும் அல்லது பசு மாடு அல்லது எருமை மாடு வாங்குவதற்கு பண உவியாகவும் வழங்கப்படுகிறது. மேற்படி அளிக்கப்பட்ட பண உதவி அவர்களிடமிருந்து சுலப தவணையில் வசூலிக்கப்படும்.

விடுதலைப் பெற்ற சிறைவாசிகள் சகாய சங்கத்தின் செயல்முறைகள்.

விடுதலை பெற்ற சிறைவாசிகள் சகாயசங்கம் 1921ஆம் ஆண்டு விடுதலை பெற்ற சிறைவாசிகளுக்கு புனர்வாழ்வு அமைத்து கொடுக்கவும் மற்றும் பலவித உதவிகள் செய்து கொடுக்கவும் அவர்கள் வழக்கமாக குற்றம் புரிந்து வருவதைத் தடுக்கவும், இளங் குற்றவாளிகளைத் திருத்தம் செய்யவும், அவர்களது நல்வாழ்விற்காக வேண்டிய சட்டதிட்டங்களை வகுத்து ஆவன செய்ய வேண்டிய புனிதமான நோக்கத்துடன் அமைக்கப்பட்டது. இச் சங்கம் சிறு தொழில்கள் நடத்துவதற்கும், கருவிகள் மற்றும் தேநீர் கெண்டி (கொதிகலன்), தையல் இயந்திரங்கள் வாங்குவதற்காக பண வசதி செய்து கொடுக்கிறது. மேலும் புகைவண்டி பேருந்து செலவிற்காக பண வசதி மற்றும் தொழில் செய்வதற்காக துணைக் கருவிகள் வாங்குவதற்கும் கடன் வசதி வழங்குகிறது. மேலும் வேலை வாங்கித் தருவதற்கும், சட்ட உதவிகள் செய்வதற்கும், ஓய்வுகால ஊதியங்கள் பெறுவதற்கும் உதவி செய்கிறது. மேலும் ஆடைகள் மூக்கு கண்ணாடி ஆகியவை வழங்குகிறது.

இச்சங்கம் சென்னையில் உள்ள மத்திய குழுவினாலும், மாவட்டங்களில் மாவட்ட குழுக்களினாலும் நடத்தப்பட்டு வருகிறது. தற்பொழுது 10 மாவட்ட குழுக்கள் மத்தியக் குழு சென்னையின் ஆலோசனைகளின்படி செயல்பட்டு வருகிறது. இம் மாவட்டக் குழுக்களுக்கு மாவட்ட ஆட்சியாளர்கள் அலுவல் சார்பற்ற தலைவர்களாக இருக்கின்றனர். மத்திய குழு, சென்னையில் மொத்தம் 30 தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் உள்ளனர். இந்த உறுப்பினர்களில் சிறைத்துறைத் தலைவர், காவல்துறைத் தலைவர் நகர காவல்துறை ஆணையாளர், முதன்மை பலநோக்கு குற்றவியல் நடுவர், கண்காணிப்பாளர், மத்திய சிறை சென்னை முதன்மை நன்னடத்தை அலுவலர், கண்காணிப்பாளர், ஆண்கள் பிற்காப்பு இல்லம், பல்லாவரம் ஆகியோர் அலுவல் சார்பில்லாத உறுப்பினர்கள் ஆவர்.

அரசு மத்திய குழுவிற்கு ஐந்து உறுப்பினர்களுக்கு மேற்படாமல் நியமனம் செய்ய ஓர் விதியும் உள்ளது. ஐம்பது உறுப்பினர்களுக்கு ஒரு நியமனதாரர் என்ற விகிதத்தில் தங்களுடைய நியமனதாரர்களை மத்திய குழுவிற்கு அனுப்புகின்றன.

ஆண்டுதோறும் நடைபெறும் பொதுக்குழுக் கூட்டத்தைத் தவிர காலாண்டுக்கு ஒருமுறை கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. இக்கூட்டங்களுக்கு அரசு தலைமைச் செயலாளர் அல்லது அரசு உள்துறைச் செயலாளர் தலைமை வகிக்கின்றனர். அதே போன்று மாவட்டக்குழுக்கள், மாவட்ட ஆட்சியாளரின் தலைமையில் கூட்டங்களை நடத்துகின்றன. சிறையிலுள்ள விடுதலை பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக சென்னையிலுள்ள மத்திய குழுவும், மதுரையிலுள்ள மாவட்ட குழுவும், தொழில் நிறுவனங்களை நடத்துகின்றன; சென்னையிலுள்ள தச்சு பட்டறையில் 1974-75 ஆம் ஆண்டில் தோராயமாக மாதமொன்றுக்கு 16 நபர்களுக்கும் 1975-76 ஆம் ஆண்டில் தோராயமாக மாதமொன்றுக்கு 21 நபர்களுக்கும் வேலை அளிக்கப்பட்டது.

ஆண்டொன்றுக்கு ரூ. 12,000 வீதம் இச் சங்கத்திற்கு அரசு உதவித் தொகையாக அளிக்கிறது. இந்தத் தொகை இரண்டு தவணையாக அளிக்கப்படுகிறது. நன்கொடை மூலமாக ரூ. 6,000 இச் சங்கம் திரட்ட வேண்டும்.

சிறைப் பார்வையாளர்கள்.

பணிச்சார்புள்ள பார்வையாளர்களைத் தவிர, பணிச்சார்பில்லாத பார்வையாளர்களையும் அரசு நியமிக்கிறது. குறிப்பாக நீதி, மருத்துவம், தொழில் மற்றும் தீயணைக்கும் துறைகளில் பணியாற்றியவர்களும், கைதிகளுக்காகப் பணி செய்யும் மனப்பான்மையுடையவர்களும் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். மனநோய் நிபுணர்களும், மனோதத்துவ நிபுணர்களும் சமூக சேவையாளர்களும் கூட பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். அலுவல் சார்பற்ற பார்வையாளர்களாக சாதாரணமாக விடுதலைக் குற்றவாளிகளின் சங்கத்தில் அங்கத்தினர்களாக உள்ளவர்களும் குற்றவாளிகளின் நல்வாழ்வில் அக்கறை உள்ளவர்களும் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் பணியாதெனில் சிறை விதிகள் சரியாக கடைப்பிடிக்கப்படுகின்றனவா என்பதைப் பார்க்கவும், சிறைவாசிகளின் குறைபாடுகளைக் கேட்டறியவும் மற்றும் சிறையின் எல்லாப் பகுதிகளையும் சுற்றிப் பார்ப்பதாகும். சாதாரணமாக மூன்றில் இரண்டு பங்கு பார்வையாளர்கள் புதியவர்களாக இருக்கவேண்டும். இவர்களுடைய பதவிக் காலம் இரண்டாண்டுகளாகும்.

இவர்களைத் தவிர, அலுவல் சார்பற்றவர்கள் மாநில சிறைப் பார்வையாளர்களாக நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் எல்லாச் சிறைகளையும் பார்வையிடலாம்.

தனிப்பட்ட சிறைவாசியின் நலனில் அக்கறை உள்ளவர்கள் அலுவல் சார்பற்ற பார்வையாளர்களாக நியமிக்கப்படுவதில்லை.

தண்டனைக் குறைப்பு.

சிறைவாசிகள் நன்னடத்தையில் இருக்க ஊக்குவிக்கவும், நன்கு வேலை செய்யவும், தங்களுடைய குற்றம் செய்யும் மனப்போக்கை

மாற்றிக் கொள்ளவும் பலவிதமான தண்டனைக் குறைப்புகள் உள்ளன. மாதத்திற்கு இரண்டுநாட்கள் நன்னடத்தையில் உள்ளவர்களுக்கும், நன்கு வேலை செய்பவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. சிறைவாசிக் காவலர்களுக்கு மாதத்தில் 8 நாட்கள் தண்டனைக் குறைப்பு அளிக்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் பணிபுரியும் சமையல்காரர்கள், கூட்டுநர்கள் ஆகியவர்களுக்கு காலாண்டுக்கு மூன்று நாட்கள் கூடுதலாக அளிக்கப்படுகிறது. சிறப்புத் தண்டனைக் குறைவாக ஒரு ஆண்டில் 30 நாட்களும் சிறைத்துறை தலைவரால் அல்லது அரசால் 60 நாட்களாகவும் நன்னடத்தையில் உள்ள சிறைவாசிகளுக்கும் நன்கு வேலை செய்பவர்களுக்கும் அளிக்கப்படுகிறது. குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் சிறைவாசிகளுக்கு ஒரு ஆண்டு தண்டனைக் குறைப்பும், இரத்ததானம் செய்யும் சிறைவாசிகளுக்கு 10 முதல் 15 நாட்கள் தண்டனைக் குறைப்பும் அளிக்கப்படுகிறது.

மேற்கண்டவைகளைத் தவிர ஆயுள் தண்டனைக் குற்றவாளிகளுக்கு கீழ்க்கண்ட தண்டனைக் குறைப்புகள் அளிக்கப்படுகின்றன :—

(1) உலகத் தமிழ் மாநாடு .. .. ஒரு ஆண்டு.

(2) காந்தி நூற்றாண்டு விழா .. .. ஒரு ஆண்டு

(3) இந்திய சுதந்திரதின வெள்ளி விழா ஒன்றரை ஆண்டு.

மேற்கண்ட தண்டனைக் குறைப்புகளைத் தவிர, மூன்றாண்டுகளுக்கு மேல் தண்டனைப் பெற்றவர்கள் அறிவுரைக் கழகத்தால் பரிசீலிக்கப்படுகிறது. சிறைவாசி மூன்றில் இரண்டு பங்கு தண்டனைக் கழித்த பின்பு அறிவுரைக் கழகம் சிறைவாசிகளின் முந்தைய பதிவுகளையும், காவல்துறை அறிக்கை மற்றும் சிறை அலுவலரின் பரிந்துரை ஆகியவைகளை கருத்திற்கொண்டு, பிரிவு 432—சி.ஆர்.பி.சி. 1973-ன்படி முன்விடுதலை செய்வது பற்றி பரிந்துரை செய்கிறது. இரண்டிலிருந்து மூன்று வருட குறைந்த கால தண்டனைப் பெற்ற சிறைவாசிகள், அவர்கள் தண்டனையின் முக்கால் பாகம் அனுபவித்தபின் இதேபோன்று பரிசீலிக்கப்படுகிறார்கள். முதல் தடவையாக தண்டனை பெற்ற 65 வயதிற்கு மேற்பட்ட ஆண் சிறைவாசிகளின் நிலைமையையும் 55 வயதிற்கு மேற்பட்ட பெண் சிறைவாசிகளின் நிலைமையையும் அவர்கள் தண்டனைக் குறைப்பையும் சேர்த்து 2½ ஆண்டு தண்டனை அனுபவித்திருந்தால் அறிவுரைக் கழகத்தாரால் அரசின் முன் விடுதலைக்காகப் பரிசீலிக்கப்படுகிறது.

திறந்த வெளிச் சிறைகளின் பயன்களையும் அதனைப் பயன்படுத்துவது பற்றியும் அமைக்கப்பட்ட ஆய்வுக்குழு திறந்த வெளிச் சிறைகளில் இருக்கும் சிறைவாசிகளுக்கு ஒரு நாள் வேலைக்கு ஒரு நாள் தண்டனைக் குறைப்பும் (எல்லா ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களும் தவிர்த்து) நன்னடத்தைக்காக ஒரு மாதத்திற்கு இரண்டு நாட்கள் தண்டனைக் குறைப்பும்

மேலும் குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்ட சிறைவாசிகளுக்கு ஐந்து வருடத்திற்கு ஒரு வருட தண்டனைக் குறைப்பும் வழங்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது.

இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

சிறைவாசிகளின் நலம்.

தற்போது ஒவ்வொரு மத்திய சிறைக்கும், மாநில மகளிர் சிறைக்கும், புதுகை பார்ஸ்டல் பள்ளிக்கும் ஒருவர் வீதம் மொத்தம் பத்து நல அலுவலர்கள் உள்ளனர். இந்த நல அலுவலர்கள், சிறைவாசிகளுக்கு சிறையின் விதி முறைகளுக்கேற்ப அவ்வப்போது வேண்டிய உதவிகளை அளித்தும், சிறைவாசிகள் வெளியிலுள்ள உறவினர்களுடன் தொடர்பு கொள்ள கடிதப் போக்குவரத்திற்கு உதவி செய்தும், சிறைவாசிகள் விடுதலைக்குப் பின், சமூகத்தில் நல் வாழ்வில் அமருவதற்கும் வழிவகை செய்கிறார்கள்.

சிறு குழந்தைகளையுடைய பெண் சிறைவாசிகளுக்கு மாற்று நடவடிக்கை செய்ய முடியாவிட்டாலும், வேலூர் மாநில மகளிர் சிறையில் பெண் சிறைவாசிகளின் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு, குழந்தைக் காப்பிடமும் மூன்று வயதிற்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு குழந்தை வளர்ப்பிடமும் தொடங்கி செயல்படுகிறது.

சிறைவாசிகளின் நலத்திற்கும், கலாசாரத்திற்கும் ஒழுக்கச் சீரமைப்பிற்காகவும், ஒவ்வொரு மத்திய சிறையிலும், மத்திய சிறைக்குழு அமைக்கப்பட்டு உள்ளது. இந்த கலாச்சாரக் குழு சிறைவாசிகளின் நன்மைக்காக காலமுறையாக பல கலை நிகழ்ச்சிகளை வெளியில் உள்ளவர்களைக் கொண்டு சிறைக்குள் நடத்துகிறது.

நன்னடத்தைப் பணி.

நன்னடத்தைப் பணி சிறைத்துறையின் ஒரு பிரிவாகும். நன்னடத்தைப் பணியானது, சிறைவாசிகளின் வீட்டு நலம் பற்றி விசாரிப்பது, பிணைப் பத்திரத்தின் பேரில் முன் விடுதலையாகும் குற்றவாளிகளையும், பார்ஸ்டல் பள்ளியிலிருந்தும் சீர்திருத்தப் பள்ளியிலிருந்தும், விழிப்பகத்திலிருந்தும் விடுதலையாகும் வாசிகளைக் கண்காணிப்பது முதலியன. சிறைத்துறைத் தலைவரின் கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் உட்பட்டு நன்னடத் [illegible] நேரிடைக் கட்டுப்பாட்டில் உள்ளது. சமீபமாக, ஒரு மண்டல நன்னடத்தை அலுவலரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஆராய்ச்சிக்கூடம் அமைக்கப்பட்டுள்ளது.

சிறைவாசிகளைப் பிரிப்பதும் இப்பிரிவின் பணியாகும். சென்னை பல்லாவரத்தில் ஒரு பிரிப்பு இல்லம் (ஆண்கள்)

உள்ளது. விடுதலையாகும் சிறைவாசிகளுக்கு பிற்காப்பு உதவிகளை இவ்வில்லம் செய்கிறது. இந்த இல்லவாசிகளுக்கு இலவச உணவும், உடையும், இருப்பிடமும் பொழுது போக்கு வசதியும், மருத்துவ வசதியும் கொடுக்கப்படுகின்றது. அவர்கள் கைவினைத் தொழிலாகிய தச்சுத்தொழில் அல்லது கருமார் தொழில் அல்லது தையல் தொழிலில் இரண்டு ஆண்டு பயில உதவி செய்து நல் வாழ்வில் அமைய உதவுகின்றது.

தமிழ்நாடு குற்றவாளிகளின் நன்னடத்தை சட்டம் மத்திய சட்டத்தால் மாற்றப்பட்டது. மத்திய சட்டம் சென்னை நகரத்திலும், செங்கற்பட்டு மாவட்டத்திலும் 1—12—1962 முதல் அமல் படுத்தப்பட்டது. மாநிலத்தின் இதர பகுதிகளுக்கு 1—12—1962-லிருந்து 1—5—1964-க்குள் அமல் செய்யப்பட்டது.

இரண்டாண்டுகளுக்கு மேற்படாத சிறைவாசத்தையும் அல்லது அபராதத்துடன் கூடிய இத்தண்டனையையும் அளிக்கக்கூடிய குற்றத்தைப் புரிந்த குற்றவாளிகளை, முன் குற்றம் ஏதும் அவர்கள் மீது இல்லை என்று நிருபணம் செய்யப்பட்டால் இச்சட்டம் நீதி மன்றத்திற்கு குற்றவாளிகளை நன்னடத்தையின்பேரில் மன்னித்து விடுதலை செய்ய அதிகாரம் அளிக்கின்றது. மத்திய சட்டத்தின் இந்தப் பிரிவு நவீன முறையான சீர்திருத்த நிர்வாகத்திற்கு எளிதாகவும், பொருத்தமாகவும் உள்ளது.

இணைப்பு—III (அ).

1970-71 முதல் 1976-77 வரை சிறைத்துறையின் வரவு, செலவையும் 1977-78-ம் ஆண்டிற்கான வரவு-செலவு மதிப்பீட்டையும் குறிக்கும் அட்டவணை.

		தொகை ரூபாயில்
1. செலவு.—		
1971-72	..	2,57,64,000
1972-73	..	2,69,32,000
1973-74	..	3,15,13,000
1974-75	..	2,86,34,000
1975-76	..	4,86,50,000
1976-77	..	4,65,11,000
1977-78	..	4,24,79,000
2. வரவு.		
1971-72	..	76,81,000
1972-73	..	80,94,000
1973-74	..	87,94,000
1974-75	..	1,00,61,000
1975-76	..	99,82,000
1976-77	..	1,18,61,000

மாநிலத்திலுள்ள சிறைகளின் எண்ணிக்கை.

1. மத்திய சிறைகள்—8.
2. மாநில மகளிர் சிறை—1.
3. பார்ஸ்டல் பள்ளி—1.
4. தனிக்கிளைச் சிறைகள்—3.
5. கிளைச்சிறைகள் —

(அ) சிறைத்துறைத் தலைவரின் நேரடி பொறுப்பில் இருப்பவை—10.

(ஆ) மாவட்ட ஆட்சியாளர்களின் கீழ் இருப்பவை—112.

சிறைகளின் பட்டியல்.

வரிசை எண்.	சிறைகளின் பெயர்.
	சிறைத்துறையின்கீழ் இருப்பவை.
1.	மத்திய சிறை, சென்னை.
2.	மத்திய சிறை, வேலூர்.
3.	மத்திய சிறை, கடலூர்.
4.	மத்திய சிறை, திருச்சி.
5.	மத்திய சிறை, சேலம்.
6.	மத்திய சிறை, கோவை.
7.	மத்திய சிறை, மதுரை.
8.	மத்திய சிறை, பாளையங்கோட்டை.
9.	மாநில மகளிர் சிறை, வேலூர்.
10.	பார்ஸ்டல் பள்ளி, புதுக்கோட்டை.
11.	தனிக்கிளைச்சிறை (ஆண்கள்), சேலம்.
12.	தனிக்கிளைச்சிறை, கொக்கிரகுளம்.
13.	தனிக்கிளைச்சிறை, திருச்சி.
14.	தனிகிளைச்சிறை, சிங்கநல்லூர்.
	நிலை—1
15.	கிளைச்சிறை, சைதாப்பேட்டை.
	நிலை—1
16.	கிளைச்சிறை, நாகர்கோவில்.
	நிலை—2.
17.	கிளைச்சிறை, செங்கல்பட்டு.
18.	கிளைச்சிறை, மதுராந்தகம்.
19.	கிளைச்சிறை, பூந்தமல்லி.
20.	கிளைச்சிறை, தஞ்சாவூர்.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண். சிறைகளின் பெயர்.

நிலை—2—தொடர்ச்சி.

21. கிளைச்சிறை, பொன்னேரி.

22. கிளைச்சிறை, திருவள்ளூர்.

23. கிளைச்சிறை, திருத்தணி.

24. கிளைச்சிறை காஞ்சிபுரம்.

வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பவை.

வடாற்காடு மாவட்டம்.

1. கிளைச்சிறை, அரக்கோணம்.

2. கிளைச்சிறை, ஆம்பூர்.

3. கிளைச்சிறை. செய்யார்.

4. கிளைச்சிறை, ஆரணி.

5. கிளைச்சிறை, செங்கம்.

6. கிளைச்சிறை, குடியாத்தம்.

7. கிளைச்சிறை, போளூர்.

8. கிளைச்சிறை, திருப்பத்தூர்.

9. கிளைச்சிறை, திருவண்ணாமலை.

10. கிளைச்சிறை, வாணியம்பாடி.

11. கிளைச்சிறை, வாலாஜா.

12, கிளைச்சிறை, வந்தவாசி.

தென்னாற்காடு மாவட்டம்.

13. கிளைச்சிறை, கள்ளக்குறிச்சி.

14. கிளைச்சிறை, சிதம்பரம்.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி

வரிசை எண். சிறைகளின் பெயர்.

வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இருப்பவை—தொடர்ச்சி

தென்னாற்காடு மாவட்டம்—தொடர்ச்சி.

15. கிளைச்சிறை, கடலூர்.

16. கிளைச்சிறை, செஞ்சி.

17. கிளைச்சிறை, காட்டுமன்னார்கோயில்.

18. கிளைச்சிறை, பரங்கிப்பேட்டை.

19. கிளைச்சிறை, திண்டிவனம்.

20. கிளைச்சிறை, திருக்கோவிலூர்.

21. கிளைச்சிறை, திட்டகுடி.

22. கிளைச்சிறை, உளுந்தூர்பேட்டை.

23. கிளைச்சிறை, விழுப்புரம்.

24. கிளைச்சிறை, விருத்தாசலம்.

25. கிளைச்சிறை, பண்ருட்டி.

கோவை மாவட்டம்.

26. கிளைச்சிறை, அவினாசி.

27. கிளைச்சிறை, பவானி.

28. கிளைச்சிறை, தாராபுரம்.

29. கிளைச்சிறை, ஈரோடு.

30. கிளைச்சிறை, கோபி.

31. கிளைச்சிறை, காங்கேயம்.

32. கிளைச்சிறை, மேட்டுப்பாளையம்.

33. கிளைச்சிறை, சத்தியமங்கலம்.

34. கிளைச்சிறை, திருப்பூர்.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண். சிறைகளின் பெயர்.

வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவை—தொடர்ச்சி.

கோவை மாவட்டம்—தொடர்ச்சி.

35. கிளைச்சிறை, உடுமலைப்பேட்டை.

36. கிளைச்சிறை, பொள்ளாச்சி.

37. கிளைச்சிறை, பெருந்துறை.

38. கிளைச்சிறை, பல்லடம்.

நீலகிரி மாவட்டம்.

39. கிளைச்சிறை, உதகமண்டலம்.

40. கிளைச்சிறை, கூடலூர்.

41. கிளைச்சிறை, கூடலூர்.

சேலம் மாவட்டம்.

42. கிளைச்சிறை, ஆத்தூர்.

43. கிளைச்சிறை, நாமக்கல்.

44. கிளைச்சிறை, ஓமலூர்.

45. கிளைச்சிறை, பரமத்தி.

46. கிளைச்சிறை, ராசிபுரம்.

47. கிளைச்சிறை, சங்கரி.

48. கிளைச்சிறை, திருச்செங்கோடு.

49. கிளைச்சிறை (பெண்கள்), சேலம்.

50. கிளைச்சிறை, பெண்ணாகரம்.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண். சிறைகளின் பெயர்.

வருவாய்த் துறையின் கட்டுபாட்டின் கீழ் இருப்பவை—தொடர்ச்சி.

மதுரை மாவட்டம்.

51. கிளைச்சிறை, திண்டுக்கல்.

52. கிளைச்சிறை, கொடைக்கானல்.

53. கிளைச்சிறை, நிலக்கோட்டை.

54. கிளைச்சிறை, பழனி.

55. கிளைச்சிறை, பெரியகுளம்.

56. கிளைச்சிறை, திருமங்கலம்.

57. கிளைச்சிறை, உசிலம்பட்டி.

58. கிளைச்சிறை, உத்தமபாளையம்.

59. கிளைச்சிறை, வேடசந்தூர்.

60. கிளைச்சிறை, மேலூர்.

கன்னியாகுமரி மாவட்டம்.

61. கிளைச்சிறை, தக்கலை.

62. கிளைச்சிறை, குழித்துறை.

இராமநாதபுரம் மாவட்டம்.

63. கிளைச்சிறை, அருப்புக்கோட்டை.

64. கிளைச்சிறை, முதுகுளத்தூர்.

65. கிளைச்சிறை, பரமக்குடி.

66. கிளைச்சிறை, இராமநாதபுரம்.

67. கிளைச்சிறை, சாத்தூர்.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண். சிறைகளின் பெயர்.

வருவாய்த் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவை—தொடர்ச்சி.

இராமநாதபுரம் மாவட்டம்—தொடர்ச்சி.

68. கிளைச்சிறை, சிவகங்கை.

69. கிளைச்சிறை, ஸ்ரீவில்லிபுத்தூர்.

70. கிளைச்சிறை, திருப்பத்தூர்.

71. கிளைச்சிறை, திருவாடனை.

72. கிளைச்சிறை, விருதுநகர்.

திருச்சி மாவட்டம்.

73. கிளைச்சிறை, அரியலூர்.

74. கிளைச்சிறை, ஜெயங்கொண்டான்.

75. கிளைச்சிறை, கரூர்.

76. கிளைச்சிறை, குளித்தலை.

77. கிளைச்சிறை, லால்குடி.

78. கிளைச்சிறை, மணப்பாறை.

79. கிளைச்சிறை, முசிறி.

80. கிளைச்சிறை, பெரம்பலூர்.

81. கிளைச்சிறை, துறையூர்.

புதுக்கோட்டை மாவட்டம்.

82. கிளைச்சிறை, புதுக்கோட்டை.

83. கிளைச்சிறை, அறந்தாங்கி.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண். சிறைகளின் பெயர்.

வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவை—தொடர்ச்சி.

புதுக்கோட்டை மாவட்டம்—தொடர்ச்சி.

84. கிளைச்சிறை, கீரனூர்.

85. கிளைச்சிறை, திருமயம்.

திருநெல்வேலி மாவட்டம்.

86. கிளைச்சிறை, அம்பாசமுத்திரம்.

87. கிளைச்சிறை, கோவில்பட்டி.

88. கிளைச்சிறை, நாங்குனேரி.

89. கிளைச்சிறை, ராதாபுரம்.

90. கிளைச்சிறை, சங்கரன்கோவில்.

91. கிளைச்சிறை, தூத்துக்குடி.

92. கிளைச்சிறை, ஸ்ரீவைகுண்டம்.

93. கிளைச்சிறை, தென்காசி.

94. கிளைச்சிறை, திருச்செந்தூர்.

95. கிளைச்சிறை, விளாத்திக்குளம்.

தஞ்சாவூர் மாவட்டம்.

96. கிளைச்சிறை, கும்பகோணம்.

97. கிளைச்சிறை, மாயூரம்.

98. கிளைச்சிறை, மன்னார்குடி.

99. கிளைச்சிறை, நாகப்பட்டினம்.

சிறைகளின் பட்டியல்—தொடர்ச்சி.

வரிசை எண். சிறைகளின் பெயர்.

வருவாய்த்துறையின் கட்டுப்பாட்டின் கீழ்
இருப்பவை—தொடர்ச்சி.

தஞ்சாவூர் மாவட்டம்—தொடர்ச்சி.

100. கிளைச்சிறை, நன்னிலம்.

101. கிளைச்சிறை, பட்டுக்கோட்டை.

102. கிளைச்சிறை, பாபநாசம்.

103. கிளைச்சிறை, சீர்காழி.

104. கிளைச்சிறை, திருத்துறைபூண்டி.

105. கிளைச்சிறை, திருவையாறு.

106. கிளைச்சிறை, திருவாரூர்.

107. கிளைச்சிறை, தரங்கம்பாடி.

108. கிளைச்சிறை, திருவிடைமருதூர்.

தர்மபுரி மாவட்டம்.

109. கிளைச்சிறை, ஹோசூர்.

110. கிளைச்சிறை, ஹரூர்.

111. கிளைச்சிறை, தர்மபுரி.

112. கிளைச்சிறை, கிருஷ்ணகிரி.

சீர்திருத்தப் பணித்துறை.

கொள்கை விளக்கம் 1977-78.

1920ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் சிறுபிழை புரிந்தோர், ஆதரவற்றோர், இளங்குற்றவாளிகள் மற்றும் கட்டுப்பாடற்ற சிறுவர் ஆகியவர்கள், 1956ஆம் ஆண்டு மகளிர் மற்றும் சிறுமியர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் வரும் மகளிர் மற்றும் சிறுமியர் ஆகியவர்களின் பொறுப்பு, பாதுகாப்பு, பயிற்சி (கல்வி மற்றும் தொழிற் கல்வி), பிற்காப்பு மற்றும் புனர்வாழ்வு முதலியவற்றை நிர்வகித்தல் சீர்திருத்தப்பணித்துறையின் சீரிய பொறுப்பாகும்.

2. பொதுக்கல்வி மற்றும் தொழிற்கல்வியில் பயிற்சிக்காபத் வசதிகளுடன் கூடிய நீண்டகால தங்குமிடங்களாக இருவற்தொன்று சீர்திருத்தப்பள்ளிகள் தற்போதுள்ளன. அசீர்றில் இரண்டு முதுநிலைப்பள்ளிகளும், நான்கு இளநிலை 15 திருத்தப் பள்ளிகளும் அரசின் நேரடி பொறுப்பிலும், மற்றயா இளநிலை சீர்திருத்தப்பள்ளிகள், அரசு உதவியுடன் தனியாராலும் நடத்தப்பட்டு வருகின்றன. இவைகளில் சென்யர் பாலவிகாரின்கீழ் இயங்கிவரும் இரண்டு இளநிலை சீர்திருத்தப் பள்ளிகள் (ஒன்று சிறுவர்களுக்கும் மற்றொன்று சிறுமிகளுக்கும்) மனவளர்ச்சிக்குன்றிய பிள்ளைகளுக்கென்று நடத்தப்பட்டு வருகின்றன. திருநெல்வேலி மாவட்டத்தில் சிவசைலம் என்னுமிடத்தில் இருக்கும் ஸ்ரீஅதிரிக்கலா நடுநிலைப் பள்ளியை மாணவர் இளநிலை சீர்திருத்தப்பள்ளியாக தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920-ன்படி அரசு அந்தாட்சி வழங்கியுள்ளது.

3. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள வரவேற்பில்லம், தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள வரவேற்பில்லம், சென்னை பாலமந்திரின்கிழ் உள்ள வரவேற்பில்லம் ஆகியவற்றோடு சிறுவர் சிறுமியர்க்கான வரவேற்பில்லங்கள் பதினொன்று உள்ளன. இவற்றில் நான்கு அரசினராலும் மற்றவை அரசு உதவியுடன் ''குழந்தைகள் உதவிச் சங்கம்'' விடுதலைக் கைதிகள் உதவிச் சங்கம் போன்ற தனியார் நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. இவைகளைத் தவிர சீர்திருத்த நிலையங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கென இரண்டு பிற்காப்பு இல்லங்கள் ஒன்று செங்கல்பட்டிலும்

மற்றொன்று மதுரையிலும் அரசால் நடத்தப்பட்டு வருகின்றன. இத்துடன், சீர்திருத்த நிலையங்களிலிருந்தும் சிறையிலிருந்து வெளியேற்றப்படும் பெண்களுக்கென தொழிற் பயிற்சி நிலையம் அமைந்த பிற்காப்பில்லம் ஒன்று வேலூரில் அரசால் நடத்தப்பட்டு வருகின்றது. இந்த தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ஆடைகள் மற்றும் உள்ளடக்கிகள் தொழிற் பயிற்சி நிறுவனம், வேலூர் என்று பெயர்.

4. இம்மாநிலத்தில் இயங்கி வரும் பதின்மூன்று விழிப்புப் பணி நிலையங்களில், ஏழு குறுகியகால நிறுவனங்களாகவும், ஆறு நீண்டகால நிறுவனங்களாகவும் உள்ளன. மதுரை அரசு விழிப்புப்பணி நிலையம் ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத தின்கீழ் இத்துறையால் ஆரம்பிக்கப்பட்டது ஆகும்.

சென்னை ராயபுரத்தில் தனியாரால் நடத்தப்பட்டு வந்த குழந்தைகள் நல இல்லத்தை 1977ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 15ஆம் நாள் முதல் அரசு பொறுப்பேற்று நடத்தி வருகின்றது.

5. கீழே கூறப்பட்டிருக்கும் திட்டங்கள் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்:—

(i) இராமனுதபுரம் மாவட்டத்தில் மாணவருக்கென கூடுதலாக அரசு இளநிலை சீர்திருத்தப் பள்ளியொன்று திறக்க படுதல் (திட்டம்);

(ii) அரசு சென்னை விழிப்புப்பணி நிலையம் ஸ்ரீசதனுவில் ஒரு தனி இணைப்பகம் விழிப்புப்பணி வரவேற்பு மையமாக கட்டுதல்;

(iii) இராமநாதபுரம் மாவட்டத்தில் இளநிலை குற்றவாளிகளை தனியாக வைப்பதற்கென்று கூடுதலாக ஒரு வரவேற்பில்லம் திறக்கப்படுதல்.

6. 1977-78 ஆம் ஆண்டுக்காக இத்துறையைப் பொறுத்த மட்டில் திட்டத்தில் சேரா வேலைகளுக்காக ரூ. 78·90 இலட்சங்களும், திட்ட வேலைகளுக்காக ரூ. 13·06 இலட்சங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

வரவு-செலவுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளுக்கு விவரம்.

		(ரூபாய் இலட்சங்களில்.)
1. மாநிலத் திட்டங்கள்	..	13·06
2. திட்டத்தில் சேராதவை	..	78·90
மொத்தம்	..	96

செலவு விவரங்கள்.

(1)	திட்டத்தில் சேராதவை. (2)	திட்டத்தில் சேர்ந்தவை. (3)
	(ரூ. இலட்சத்தில்.)	
1. பணியாளர்களின் ஊதியம் ..	30.26	7.66
2. பிரயாணச் செலவு	0.36	0.02
3. உணவுச் செலவினம்	24.69	1.98
4. உடையும் படுக்கைகளும் ..	2.71	0.38
5. கருவிகளும் தளவாடங்களும் ..	0.07	0.01
6. இதரச் செலவினங்கள்	5.92	2.[illegible]7
7. மூலப் பொருட்கள்	1.70	0.05
8. மருத்துவமும், சுகாதாரமும் ..	0.93	0.05
9. உதவி மானியம்	10.20	
10. இயந்திரங்களும், உதரி சாமான்களும்	00.3	..
11. விடுதலையளிக்கப்பட்ட இளங் குற்றவாளிகளுக்குப் புனர் வாழ்விற்கென செலவு	..	0.05
12. சிறப்புப் பயிற்சிக்கூடம் (ஆடைகள், உள்ளடக்கிகள், செய்தலுமான பயிற்சி நிலையம், வேலூர்) ..	1.72	0.03
13. மனவியல் நெறிமுறையும் செயலும் (இளைஞர் வழிகாட்டி நிலையம்) ..	0.31	..
மொத்தம் ..	78.90	13.06

[1977 ஆகஸ்டு 16

துறை வரவுகள்.

	(ரூ. இலட்சத்தில்.)
1. பிற்காப்பில்லங்கள் மற்றும் அரசினர் ஆடைகள் உள்ளடக்கிகள் பயிற்சி நிலையத்திலுள்ள தொழில் கூடத்திலிருந்து பெற்ற வரவினங்கள் ..	1·00
2. சீர்திருத்தப் பள்ளியின் தொழிற்கூடத்திலிருந்து பெற்ற வரவினங்கள் ..	2·80
மற்ற வரவினங்கள்.	
3. பணமாக வரவினம் (தோட்டங்களில் உற்பத்தி செய்யப்பட்டவைகளை விற்பனை செய்தல், வாத்தியக்குழுவை வாடகைக்கு அனுப்பல், மாட்டுப்பண்ணையின் மூலம் வரவினங்கள் முதலியன).	1·72
4. விழிப்புப்பணி நிலையங்களிலுள்ள தொழிற் கூடங்களின் மூலம் வரவினம் ..	0·60
மொத்தம் ..	6·12

சீர்திருத்தப்பள்ளிகள், விழிப்புப்பணி நிலையங்கள், பிற்காப்பில்லங்கள் ஆகியவைகளில் கற்பிக்கப்படும் தொழில்களின் பட்டியல்.

சீர்திருத்தப்பள்ளிகள், விழிப்புப்பணி நிலையங்கள்.

1. தச்சுவேலை.
2. தையல் மற்றும் பூ வேலை.
3. நெசவு.
4. பாய் நெசவு.
5. கருமாரத் தொழில்.
6. உலோகத் தொழில்.
7. தோட்டமும், விவசாயமும்.
8. கொத்துவேலை.
9. புத்தகக் கட்டுமானம்.
10. பேண்டு வாத்தியம்.
11. மாட்டுப்பண்ணை.

1977 ஆகஸ்ட் 16]

பிற்காப்பில்லங்கள்.

1. புத்தகக் கட்டுமானம்.
2. கருமாரத் தொழில்.
3. தையல்.

தொழில் பிரிவு.

ரெடிமேடு ஆடைகள், உபயோகமான ரெக்சின் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள், ஃபோம், உள்ளடக்கி ஆடைகள் ஆகிய பொருட்கள் செய்வதில் பயிற்சியளிக்கப்படுகின்றது.

துறையிலுள்ள நிறுவனங்களில் மாணவர் எண்ணிக்கை விவரம்.

(1)		சிறுவர். (2)	சிறுமியர். (3)	குழந்தைகள். (4)
அரசு சீர்திருத்தப்பள்ளிகள் ..	6	2,602	308	..
தனியார் சீர்திருத்தப்பள்ளிகள்.	15	936	584	..
அரசு வரவேற்பில்லங்கள் ..	4	366	17	15
தனியார் வரவேற்பில்லங்கள் ..	7	508	72	..
அரசு பிற்காப்பில்லங்கள் ..	3	60	66	..
அரசு விழிப்புப்பணி இல்லங்கள்.	5	..	398	14
அரசு விழிப்புப்பணி புகலிடங்கள்.	5	..	32	..
தனியார் விழிப்புப்பணி இல்லங்கள்	1	..	14	21
தனியார் விழிப்புப்பணி புகலிடங்கள்	2	..	27	2
		4,472	1,518	52

ஊழியர் விவரம்.

அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் —	
தலைமையிடம் (சென்னை நகரம்)	7
மாவட்ட அலுவலக நிலையம்	11
	18
அரசிதழ் பதிவு பெறு அலுவலர்கள்—	
அமைச்சுப் பணியாளர்கள்	109
பாதுகாப்புப் பணியாளர்கள்	169
ஆசிரியர்கள், தொழிலாசிரியர்கள்	195
மருத்துவப் பணியாளர்கள்	26
கடைநிலை ஊழியர்கள்	249
	748
மொத்தம் ..	766

[1977 ஆகஸ்ட் 16

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டப் பணிகளாவன :

1. சீர்திருத்தப்பள்ளிகளில் தொழிற்கல்வியை வலுப்படுத்துவதுடன் செங்கற்பட்டு மாவட்டம் ஆத்தூர் கிராமத்தில் சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கெனத் தொழிற்கூடம் நிர்மாணித்தல்.

2. சீர்திருத்தப்பள்ளி விழிப்புப்பணித் துறையை வலுப்படுத்துவதுடன், '' சீர்திருத்தப் பணித்துறை இயக்கம் '' எனப் பெயர் மாற்றம் செய்தலும் மற்றும் இளமையில் தவறு இழைத்தோர் மற்றும் ஒழுக்கத்தில் தவறியோர்களுக்கென சீர்திருத்தப் பணித்துறையின் கீழ் தனியே ஒரு நன்னடத்தை அலுவலர் அமைப்பு ஏற்படுத்துதல்.

3. ஆதரவற்ற மற்றும் அனாதை குழந்தைகளுக்காக இல்லம் ஒன்று துவக்குதல்.

4. செங்கற்பட்டுக்கருகாமையில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் சிறுவர் பிற்காப்பில்லத்திற்காக கட்டிடம் ஒன்று கட்டுதல்.

5. தென் ஆற்காடு கடலூரில் அரசினர் சிறுவர் (இளநிலை) சீர்திருத்தப்பள்ளி ஒன்று துவக்குதல்.

6. மதுரையில் '' மீனாட்சி சதனம் '' என்ற தனியார் நிறுவனத்தின் பணி இல்லத்தை அரசு ஏற்று நடத்துதல்.

7. கோயம்புத்தூரில் அரசு பாதுகாப்பு இல்லம் ஒன்று ஏற்படுத்தல்.

ஐந்தாவது திட்ட காலத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள திட்டங்களில் கீழ்காணும் திட்டங்கள் 1974–75, 1975–76, 1976–77 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டன.

1974–75 :

1. சீர்திருத்தப் பள்ளிகளில் தொழிற்கல்வியை வலுப்படுத்துவதுடன் செங்கற்பட்டு மாவட்டம் ஆத்தூர் கிராமத்தில் சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கென தொழிற்பயிற்சி நிலையமொன்று நிலவுதல்.

2. சீர்திருத்தப்பள்ளி விழிப்புப்பணித்துறையை வலுப்படுத்துவதுடன் சீர்திருத்தப்பணித்துறை இயக்ககம் எனப் பெயர் மாற்றம் செய்தலும் மற்றும் இளமையில் தவறிழைத்தோர் மற்றும் ஒழுக்கத்தில் தவறியோர்களுக்கென சீர்திருத்தப் பணித்துறையின்கீழ் தனியே ஓர் நன்னடத்தை அலுவலர் அமைப்பு ஏற்படுத்துதல்.

1977 ஆகஸ்டு 16]

3. தென்னாற்காடு மாவட்டம் கடலூரில் ஓர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி (சிறுவர்க்கு) ஆரம்பித்தல்.

1975-76 :

1. செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளியில் நெசவுத் தொழிலையும், தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி மற்றும் சென்னை சிறுமியர் சீர்திருத்தப் பள்ளி ஆகியவற்றில் தையல் பிரிவையும் இயந்திரமாக்குதல்.

2. மதுரை மீனாட்சி சதனத்தின்கீழ் இயங்கி வந்த விழிப்புப்பணி இல்லத்தை அரசு பொறுப்பேற்று நடத்துதல்.

(ரூ. இலட்சத்தில்.)

1976-77 :

1. செங்கற்பட்டு அரசினர் மாணவர் பிற்காப்பில்லத்திற்காக செங்கற்பட்டு அருகாமையில் ஆத்தூர் கிராமத்தில் கட்டிடங்கள் நிர்மாணித்தல் ..	1·00

1977–78 :

1. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஆத்தூர் கிராமத்தில் அரசினர் சிறுவர் பிற்காப்பு இல்லத்திற்கான நிர்வாக அலுவலகம் ஒன்று கட்டுதல்.

மேலே கூறப்பட்டுள்ள திட்டப் பணிகளை செயலாக்குவதுடன், சில புதிய திட்டப் பணிகளும் 1977–78இல் மேற்கொள்ளப்படும்.

<u>திட்டத்தில் சேர்ந்தவை.</u>

(ரூ. இலட்சத்தில்.)

1. இராமநாதபுரம் மாவட்டத்தில் சிறுவர்களுக்காக அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி ஒன்று துவக்குதல் ..	4·06
2. சென்னை விழிப்புப்பணி மற்றும் ஸ்திரிசதன இல்லத்தில் விழிப்புப்பணி வரவேற்பு மையங்கள் கட்டுதல்	1·00

<u>திட்டத்தில் சேராதவை.</u>

இராமநாதபுரம் மாவட்டத்தில் இளம் குற்றவாளிகளுக்கான மற்றுமொரு வரவேற்பு இல்லம் ஏற்படுத்துதல்	0 93

128—129—17A

பொது.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டங்களில் தற்போது நிறைவேற்ற எண்ணியிருக்கும் திட்டங்களினுல் சீர்திருத்தப் பள்ளிகளில் உள்ள சிறுவர்களைத் தொழில் துறையில் நவீன தொழில் முறைகளில் பயிற்சியளித்துத் தேர்ச்சி பெற வைக்கவும் அதன் மூலம் அவர்கள் விடுதலை காலத்திற்குப் பின் சமுதாயத்தில் நன்மக்களாக வாழ்ந்து நல்ல முறையில் தங்கள் ஊதியத்தை ஈட்டி வாழ வழி வகுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இணைப்பு IV.

[355ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கைகள் 25—சின்கோனு.

50—மூலதனம்.

கொள்கை விளக்க குறிப்பு.

பிரிவு அ.

(1) தமிழக அரசின் வணிக நிறுவனங்களில் ஒன்ருன சின்கோனுத் துறையானது 1975-76 ஆம் ஆண்டில் தொடர்ந்து வெற்றிகரமாகப் பணியாற்றி, மூலதன வட்டிக்காக ரூ. 20.99 இலட்சமும், நிரந்தர ஒதுக்கீட்டிற்காக ரூ. 30 இலட்சமும் போக ரூ. 40.09 இலட்சம் நிகர ஆதாயத்தை ஈட்டியுள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 59.20 இலட்சம் நிகர இலாபம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இதைப்போலவே 1977-78 ஆம் ஆண்டிலும் சுமார் ரூ. 40 லட்சம் நிகர இலாபம் ஈட்டலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

கொய்னுப் பொருட்களுக்கான தேவை வெளிநாடுகளில் அதிகரித்து வருவதுடன், எதிர்பாராதவிதமாக மலேரியா நோய் நம் நாட்டில் தீவிரமாக பரவி வருவதன் காரணமாக உள்நாட்டிலும் அவற்றின் தேவை அதிகரித்து வருகிறது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதன் பொருட்டு, இத்துறையானது ஏற்கெனவே சின்கோனு சாகுபடி செய்யப்பட்டு செடித்திரட்சி குறைவாக உள்ள நிலங்களில் அதிக முனைப்புடன் பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளது. இது தவிர, புதிய நிலங்களில் விரைவான வளர்ச்சி உள்ளதாயும் அதிக பலன் தரக் கூடியவையுமான சின்கோனு மர வகைகளைப் பயிர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1 ஆம் நாளன்றின்படி (1-4-1977) இத்துறையிலுள்ள சின்கோனுத் தோட்டங்களின் பரப்பளவு பின்வருமாறு :—

நீலகிரி.	ஆனைமலை.	மொத்தம்.
421.45 (ஹெக்.)	1,973.55 (ஹெக்).	2,395.00 (ஹெக்.)

(2) நடுதல் திட்டம்—

1975-78 ஆம் ஆண்டுகளுக்கான சின்கோனா நடுதல் திட்டம் பின்வருமாறு:—

		1975-76.	1976-77.	1977-78. (மதிப்பிடப் பட்டது.)
		(ஹெக்டேர்களில்.)		
1	வழக்கமான நடுகைத் திட்டம்.	100.00	131.00	124.86
2	பதியன் முறை நடுகைத் திட்டம்.	38.00	74.00	54.71
	மொத்தம் ..	138.00	205.00	179.57

இத்துறை நம் நாட்டில் மருந்து மற்றும் நறுமணத்தைலங்களுக்கான விரிவடைந்துவரும் தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் தனது நடவடிக்கைகளைப் பன்முகமாகப் பெருக்கி அதற்காக பயிர் வகைகளை பெருமளவில் பயிரிட்டு வருகிறது. 1-4-1977 ஆம் நாளன்று இப்பயிர்கள் பயிரிடப்பட்டுள்ள பரப்பளவு பின்வருமாறு :—

1 நீலகிரிப் பிரிவு	..	918.71 ஹெக்டேர்.
2 ஆனைமலைப் பிரிவு	..	375.44 ஹெக்டேர்.
மொத்தப் பரப்பளவு	..	1,294.15 ஹெக்டேர்.

இப்பயிர்கள் 1975-78 வருடங்களுக்கான நடுதல் திட்டம் பின்வருமாறு :—

	1975-76.	1976-77.	1977-78. (மதிப்பிடப் பட்டது.)
	(ஹெக்டேரில்).		
ஜெரேனியம்	15.00	15.00	26.00
சிட்ரோனெல்லா ..	10.00	1.25	..
பைரேத்ரம்	4.00	2.00	..
டயஸ்கோரியா ..	20.00	20.00	10.00
யூகலிப்டஸ் சிட்ரியோடோரா	27.00	15.00	6.00
யூகலிப்டஸ் குளோப்லஸ்	12.00	10.00	12.00
சொலானம் லாசினியாட்டம்	..	..	4.00
வின்கா ரோசியா	..	..	6.60
சொலானம் காசியானம்	..	..	20.00
மொத்தம் ..	88.00	63.25	84.00

3. கொய்னாப் பொருட்களின் உற்பத்தி—

கோவை மாவட்டம் வால்பாறைக்கு அருகில் உள்ள அரசாங்க சின்கோனாத் தோட்டத்திலுள்ள கொய்னாத் தொழிற்சாலையானது இத்துறைத் தோட்டங்களிருந்து கிடைக்கும் சின்கோனாப் பட்டையிலிருந்து பல்வேறு வகைக் கொய்னாப் பொருட்களை தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. கடந்த நான்கு வருடங்களில் இத்தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட கொய்னாப் பொருட்களின் விபரம் பின் வருமாறு!—

	1973-74.	1974-75.	1975-76.	1976-77.
	(கிலோக்களில்.)			
குனைன் சல்பேட் ..	5,973	5.094	7,308	8,905
குனைன் ஹைடிரோ குளோரைடு ..	2,476	3,570	1,476	5,043
குனைடின் சல்பேட் ..	181	190	300	250
சின்கோனா பெப்ரி பியூஜ்	8,194	8,299	8,011	8,110

1977-78 ஆம் ஆண்டுக்கான கொய்னாப் பொருட்கள் உற்பத்தி திட்டம் பின்வருமாறு :—

	(கிலோ கிராம்.)
குனைன் சல்பேட் மற்றும் குனைன் ஹைடிரோ குளோரைடு	9,200
சின்கோனா பெப்ரிபியூஜ்	8,000
குனைடின் சல்பேட்	300

4. மருந்து மற்றும் முக்கிய எண்ணெய்கள் உற்பத்தி—

நீலகிரி மாவட்டத்தில் உள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலத் தொழிற்சாலை இத்துறையின் தோட்டங்களிலிருந்து பெறப்படும் சுத்திகரிக்கப்படாத எண்ணெய்களை சோதனை செய்து, சுத்திகரித்து, தரம் பிரித்து சிப்பம் கட்டி, வெளியிடங்களுக்கு விற்பனைக்காக அனுப்பும் பணியினைத் தொடர்ந்து செய்து கொண்டு வருகின்றது. இத் தொழிற்சாலையிலிருந்து 1977-78 ஆம் ஆண்டில் ஏறத்தாழ ரூ. 13.80 இலட்சம் மதிப்புள்ள மருந்து மற்றும் வாசனைத் தைலங்களை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. விற்பனையும் வருவாயும்—

(அ) கொய்னாப் பொருட்கள்— இப்பொருட்களுக்கான வெளிநாட்டுத் தேவை அதிகரித்துக்கொண்டு வருகின்றது. இது தவிர அண்மைக் காலத்தில் பரவி வரும் மலேரியா காய்ச்சலின் காரணமாக இப்பொருட்களுக்கான தேவை உள் நாட்டிலும் வெகுவாக அதிகரித்து வருகிறது. கொய்னாப் பொருட்கள் விற்பனையின் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பின்வருமாறு :—

	1973-74.	1974-75.	1975-76.	1976-77.
	(ரூபாய் இலட்சத்தில்.)			
உள்நாட்டு விற்பனை	7.85	8.06	10.16	10.16
வெளிநாட்டுக்கான ஏற்றுமதி	30.97	64.79	119.61	111.25
மொத்தம் ..	38.82	72.85	129.77	121.41

1977-78 ஆம் ஆண்டு முடிவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனை இரண்டும் சேர்ந்து கிடைக்கும் வருவாய் ரூ. 70 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு விற்பனை வருவாய் குறையக் காரணம் தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தின் இன்றியமையாத தேவைகளுக்காக கொய்னாப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்குவதேயாகும்.

(ஆ) மருந்து மற்றும் நறுமணத் தைலங்கள்— இத் தைலங்களின் விற்பனையால் கடந்த நான்கு ஆண்டுகளில் கிடைத்த வருவாய் பின்வருமாறு:—

ஆண்டு.	விற்பனை மதிப்பு. (இலட்சத்தில்.)
1973-74	8.90
1974-75	5.38
1975-76	10.41
1976-77	16.25

1977-78 ஆம் ஆண்டில் இப்பொருட்களின் விற்பனை மதிப்பு ரூ. 13.80 இலட்சமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

6. ஆராய்ச்சி—

மூலிகை மற்றும் நறுமணச் செடிகளைப் பயிரிடுவதில் மேம்பாடான முறைகளைக் கண்டறிவதிலும், உயர் விளைச்சலையும் ஆதாயத்தையும் தரும் செடிவகைகளை வளர்த்தலிலும் இத்துறை ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளது. சின்கோனா மற்றும் இதர பயிர்கள் பற்றிய விரிவான ஆராய்ச்சியின் பொருட்டு அரசின் அங்கீகாரத்துடன் தாவர நுண் அறிஞர் ஒருவரைத் தலைமையாகக் கொண்ட ஓர் ஆராய்ச்சி மையம் 1976 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1 ஆம் நாள் முதல் இயங்கி வருகின்றது.

7. திட்டப் பணிகள்—

ஐந்தாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் இத்துறையில் செயலாற்றப்பட்டு வரும் திட்டங்கள் பின்வருமாறு :—

(1) சின்கோனாவை முனைப்புடன் பயிரிடுதல்.

(2) மருந்து மற்றும் நறுமணப் பயிர்களை வர்த்தக ரீதியில் பெருமளவில் பயிர் செய்தல்.

(3) மருந்து மற்றும் நறுமண எண்ணெய்ச் செடிகள் பற்றிய முனைப்பான ஆராய்ச்சியும், மேம்படுத்தலும்.

(4) இத்துறையின் தொழிலாளர்கள், அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் ஆகியோருக்கு குடியிருப்பு, போக்குவரத்து மற்றும் ஏனைய வசதிகள் அளித்தல்.

(5) இத்துறையிலுள்ள இருதொழிற்சாலைகளுக்கும் தேவையான நவீன இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்குதல்.

(6) மருந்து மற்றும் வாசனைத் தைலம் பயிர்ப்பொருட்களை முன்னோடி அளவில் பதப்படுத்தல்.

8. இத்துறையின் நிதியமைப்பு.—

1976 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 31 ஆம் நாளன்றுள்ளவாறு (31-3-1976) சின்கோனாத்துறையின் மொத்த இருப்புகளின் மதிப்பு ரூ. 3,55,77,652.94 இதன் விவரம் பின்வருமாறு :—

	ரூபாய்.
நிலையான இருப்புகள்—	
சின்கோனாத் தோட்டங்கள் ..	87,02,178.90
விறகு மரங்கள், மருந்து மற்றும் நறுமணத் தைலச் செடிகள்	33,02,700.94
கட்டிடங்கள், தளவாடங்கள், இயக்க ஊர்திகள் போன்ற இதர இருப்புகள்	1,83,80,856.12
தற்காலிக இருப்புகள்—	
பண்டகங்கள், நிறைவுபெற்ற பொருட்கள் மற்றும் உற்பத்தி வேலையில் உள்ள பொருட்கள்	51,91,916.98
	3,55,77,652.94

பிரிவு ஆ.

இத்துறையின் பொதுவான வளர்ச்சித் திட்டம்.

இத்துறையின் அண்மைக் காலச் சாதனைகளிற் குறிப்பிடத்தக்கவை பின்வருமாறு :—

(1) மிகக் குறைந்த விலைபெறுவதும் தேங்கிப் போவதுமான துணைப்பொருளான சின்கோனா பெப்ரிபியூஜிலிருந்து அதிக விலை பெறக் கூடிய குனைன் சல்பேட் மற்றும் குனிடைன் சல்பேட் (இருதய நோய்க்கான மருந்து) தயாரித்தல்.

(2) சுற்றுப்புறங்களிலுள்ள தேயிலைத் தோட்டங்களிலிருந்து கிடைக்கும் தேயிலைக் கழிவிலிருந்து காப்பின் என்னும் மருந்தினை முன்னோடி திட்டத்தில் தயாரித்தல்.

(3) குடும்பநலத் திட்டத்தில் பயன்படுத்தப்படும் கருத்தடை மாத்திரைகளை தயாரிப்பதில் மூலதாரமான 'டயஸ்ஜனின்' என்ற மருந்தை, இத்துறையில் பயிரிடப்பட்டு வரும் டயஸ்கோரியா கிழங்குகளிலிருந்து ஆய்வக அளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

(4) மலேரியாக் கொசுக்களின் தொல்லைகளிலிருந்து நிவாரணம் பெற சினோமாஸ் என்னும் களிம்பும் சின்ஸ்ப்ரே சின்பிரஷ் என்ற தெளிப்பான்களும் குறைந்த விலையில் தயாரித்து விற்பனை செய்து இத்துறை சேவை புரிகிறது.

(5) நீலகிரி மாவட்டத்தின் பருவ நிலைகளுக்கு ஈடுகொடுத்து செழித்து வளரக்கூடிய புதியவகை ஜெரேனியம் பயிரடப்படுகிறது.

பிரிவு இ.

ஸ்ரீலங்கா அகதிகளின் மறுவாழ்வுத் திட்டம்.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோரை குடியமர்த்த ஆனைமலை அரசினர் சின்கோனாத் தோட்டங்களில் உள்ள வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு அரசு வருவாய்த் துறையினால் 1973 ஏப்ரல் திங்களில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி 125 ஸ்ரீலங்கா அகதிகள் குடும்பத்திலிருந்து 250 நபர்களை வேலைக்கமர்த்தப்பட வேண்டும். இதுகாறும் 100 குடும்பத்திலிருந்து 200 பேர்களுக்கு வேலை அளிக்கப்பட்டுள்ளது. இத்துடன் 10 வீடுகள் அடங்கிய ஒரு புதிய தொழிலாளர் குடியிருப்பு கட்டப்பட்டுள்ளதுடன் 3 பழைய குடியிருப்புகள் பழுது பார்க்கப்பட்டு செம்மை படுத்தப்பட்டுள்ளன. மேலும் ஒரு குடியிருப்பு பழுது பார்க்கப்பட்டு வருகின்றது.

மேலும் இந்திய அரசின் நிதி உதவியுடன் ''மேல் பழனி'' மலைத் தொடரில் (கொடைக்கானல்) 100 ஸ்ரீலங்கா அகதி குடும்பங்கட்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் ஜெரேனியம் பயிரிடும் திட்டம் தமிழக அரசின் தீவிர கவனத்தில் உள்ளது.

[1977 ஆகஸ்டு 16

நிதி நிலை.

(அ) கோரிக்கை எண் 25—சின்கோனு.

1976-77 ஆம் ஆண்டுக்கு ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டிருந்த மதிப்பீடான ரூ. 86.83 இலட்சம், அவ்வாண்டு திருத்திய மதிப்பீடு அளிக்கும்போது ரூ. 93.56 இலட்சமாக உயர்த்தப்பட்டது. 1-1-1975 ஆம் நாளிலிருந்து இத் துறையின் 2,600 தொழிலாளர்கட்கும் ஒருமித்த ஊதிய உயர்வு அளிக்கும் வகையில் ஏற்பட்ட அதிகப்படி செலவுகளை சரிகட்டவும், அதிகப் படியான கொய்னு மற்றும் ஏனைய பொருட்களைத் தயாரிக்க மூலப் பொருட்களை உற்பத்தி செய்யும் செலவுகளை ஈடு செய்யவும் இந்த அதிகப்படியான நிதி அளிக்கப்பட்டது. அதன்படி 1975-76 ஆம் ஆண்டில் 138 ஹெக்டேர் பரப்பில் மட்டுமே பயிர் செய்யப்பட்ட சின்கோனு 1976-77 ஆம் ஆண்டில் 205 ஹெக்டேர் பரப்பில் பயிர் செய்யப்பட்டது.

1977-78-ம் ஆண்டின் நிதி நிலை.—1977-78 ஆம் ஆண்டிற்கு அரசு ஒப்புதல் அளிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 92.78 இலட்சமாகும். இதே வருடத்திற்கான திருத்திய மதிப்பீட்டுத் திட்டங்கள் அனுப்புகையில் ரூ. 2.09 இலட்சம் அதிகமாகக் கோரப்பட்டது. இந்த அதிகப்படியான நிதித் தேவை தொழிலாளர்களின் ஊதிய உயர்விற்காகவும் 1977 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தமிழக அரசினுல் அளிக்கப்பட்ட அரசு ஊழியர்க்கான பஞ்சப்படி உயர்விற்காகவும் கோரப்பட்டது. இந்த ஆண்டில் புதிதாக சின்கோனுப் பயிரிடுதலைத் தவிர, புதிதாக ஏற்கெனவே சின்கோனு பயிரிடப்பட்ட நிலங்களின் பராமரிப்பு மேற்கொள்ளப்படும்.

(ஆ) கோரிக்கை எண் 50—மூலதனம்.

1976-77 ஆம் ஆண்டில் முதலில் கேட்கப்பட்ட ரூ. 3 இலட்சத்திற்கு மாறுக திருத்திய மதிப்பீட்டில் ரூ. 7.14 இலட்சம் வழங்கப்பட்டது. இந்த அதிகப்படியான நிதியானது தொழிலாளர்கட்கு குடியிருப்பு வசதி அளிக்கும் பொருட்டு வழங்கப்பட்டது. இதன் படி 10 வீடுகள் அடங்கிய 2 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன. தொழிலாளர்களுக்குத் தேவையான இதர வசதிகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

1977-78 ஆம் ஆண்டின் நிதி நிலை.—1977-78 ஆம் ஆண்டில் கட்டிடங்கள் பழுதுபார்த்தல், சாலைகள் அமைத்தல் மற்றும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான இயந்திர சாதனங்கள் வாங்குதல் ஆகியவற்றிற்காக மொத்தம் ரூ. 9 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

பகுதி 2 திட்டம்—1977-78 ஆம் ஆண்டில் இரண்டாம் பகுதி திட்டத்தின்கீழ் 100 தொழிலாளர் குடியிருப்புகள் கட்டும் பணிக்காக ரூ. 6 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது.

1977 ஆகஸ்டு 16]

தற்போதுள்ள குடியிருப்புகள் 30—40 ஆண்டுகளுக்கு முன்பே கட்டப்பட்டவை. இவற்றில் தொழிலாளர் நலச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள வசதிகள் இல்லை. எனவே, தேவையான வசதிகளுடன் கூடிய புதிய தொழிலாளர் குடியிருப்புகளை திட்டமிட்ட முறையில் கட்டித்தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முடிவுரை :

சின்கோனுந் துறை, தொழிலாளர்களை அதிக அளவில் பயன்படுத்தி இயங்கி வருவதால், நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையே நல்லுறவு இன்றியமையாததாகும். எனவே, இத்துறை, தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழ் அனைத்து வசதிகளையும் அளித்து தொழிலாளர்கள்—நிர்வாகம் ஆகியோருக்கு இடையே சுமுகமான உறவைத் தொடர்ந்து நிலவச் செய்கிறது. இத்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டப் பணிகளின் கீழ் அதிக அளவு தொழிலாளர்களுக்கும் அவர்களைச் சார்ந்தோருக்கும் வேலைவாய்ப்பளிக்கப்படுகிறது.

320 தொழில்.—கோரிக்கை எண் 25.

விவரங்கள் (கணக்குத் தலைப்புகள்).	வரவு-செலவு மதிப்பீடு, 1976-77.	திருத்திய மதிப்பீடு, 1976-77.	வரவு-செலவு மதிப்பீடு, 1977-78.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
இயக்கம்	6.30	6.70	6.84
தோட்டங்கள் (நீலகிரி மற்றும் ஆனமலை) ..	33.09	32.92	32.70
தொழிற்சாலைகள் (மருந்து மற்றும் வாசனை எண்ணெய் தொழிற்சாலை, நடுவட்டம் மற்றும் அரசினர் கொய்னு தொழிற்சாலை, ஆனமலை) ..	10.80	11.17	10.76
விற்பனை	1.05	1.13	1.13
பணி (ஆய்வு மற்றும் திட்டம்)	18.59	21.64	22.35
வட்டி ..	17.00	20.00	19.00
மொத்தம் ..	86.83	93.56	92.78

[1977 ஆகஸ்டு 16

526 தொழில் வளர்ச்சிக்கான மூலதனம் இடல்—கோரிக்கை எண் 50.

விவரங்கள் (கணக்குத் தலைப்புகள்).	வரவு-செலவு மதிப்பீடு, 1976-77.	திருத்திய மதிப்பீடு, 1976-77.	வரவு-செலவு மதிப்பீடு, 1977-78.
	(ரூபாய் இலட்சத்தில்.)		
கட்டிடங்கள்	2.00	6.14	2.00
பகுதி-2 திட்டத்தின்கீழ் ..	..	..	6.00
தளவாடங்கள் மற்றும் தொழிற் கருவிகள்	1.00	1.00	1.00
மொத்தம் ..	3.00	7.14	9.00

இணைப்பு V.

1977 ஆகஸ்டு 16]

[355ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை.

கொள்கை விளக்க குறிப்பு.

1976–77இல் வனத்துறையின் நிர்வாகம் குறித்த முக்கிய கூறுகளும் 1977–78ஆம் ஆண்டிற்கான வேலைத் திட்டங்களும்.

காடுகள் இன்றியமையாத இயற்கை வளங்களைக் கொண்டவை. நாட்டின் பொருள் வளத்திலும் மக்களின் நல்வாழ்விலும் அவை பெரும் பங்கு பெறுகின்றன. மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களான (தடி) மரம், விறகு, எருத்தழை, (மரம்) பிசின், (தோல் பதனிடும்) பட்டைகள், எண்ணெய் வகைகள், உண்ணத்தக்க பழங்கள், பருப்புக்களையும் மற்றும் வேறு பல பொருள்களையும் காடுகள் வழங்குகின்றன. காகிதம் (Paper), அட்டை (Board), மர இழைப் பட்டு (Rayon), மரத்தூள் பலகை (Chip-Board), தோல் பதனிடும் பொருள், நறுமணப் பொருள் ஆகியவற்றை ஆக்கும் தொழில்களுக்கும் பிற தொழில்களுக்கும் பயன்படும் மூலப் பொருட்களையும் காடுகளே வழங்குகின்றன. இவை வெளிப்படையான பயன்கள். இவையன்றி, மண் வள/ஈரக் காப்பிலும், தட்பவெட்ப மிகுதியைத் தணிப்பதிலும், சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேட்டின் விளைவை மட்டுப்படுத்துவதிலும் காடுகளின் பயன்கள் குறிப்பிடத்தக்கனவாம். கண்ணைக் கவரும் வனவிலங்குகள் வாழ்விடமும் காடுகள்தாம். எனவே, காடு காத்தலும் மேம்படுத்தலும் தலைமையான இடத்தைப் பெறுகின்றன.

காட்டின் பரப்பு.—நம் மாநிலத்தில் காட்டின் பரப்பு 20,909 சதுர கிலோ மீட்டராகும். இதில், 17,357 சதுர கிலோ மீட்டர் ஒதுக்குக் காடாகவும் எஞ்சிய 3,552 கிலோ மீட்டர் ஒதுக்கு நிலமாகவும் உள்ளது. இம் மாநிலத்தில் 16 விழுக்காடு நிலமே காடாக உள்ளது. இது, வகுக்கப்பட்ட தேசிய வனக் கோட்பாட்டின் குறைந்த அளவின் (33 1/3) பாதியைக் காட்டிலும் குறைவு. பண்ணைக் காடுகள் (Village Forests), மிகைக் காடுகள் (Extension Forests) வளர்ப்பு திட்டத்தின் கீழும், வறட்சி தணிப்பு திட்டத்தின் கீழும் காடுகளுக்கு வெளியே

ஊராட்சி நிலங்களிலும், அரசு புறம்போக்கு நிலங்களிலும், காடுகள் பெருமளவில் வளர்க்கப்பட்டுள்ளன. காடுகளின் பரப்பை உயர்த்த ஓரளவுக்கு இவையும் துணை செய்யும். காடு சாராத நோக்கங்களுக்கு வனத் துறையைச் சேர்ந்த நிலங்களை விடுவிப்பது இல்லை எனவும் அரசு முடிவு செய்துள்ளது.

வரவும்-செலவும்.

காடுகளிலிருந்து 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 845·72 இலட்சமும், 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 1,273·27 இலட்சமும் வருவாயாகக் கிடைத்துள்ளன. இதுவரை கிடைத்த வருமானத்தில் இதுதான் அதிகப்படியானதாகும். 1976-77ஆம் ஆண்டில் ரூ. 601·39 இலட்சம் வருவாய் தந்து சந்தன மரம் வனத் துறையின் வருவாயில் பெரும் பங்கு பெற்றுள்ளது. தடி மரமும், விறகும் ரூ. 329·02 இலட்சம் வருவாயாகத் தந்துள்ளன. 1975-76ஆம் ஆண்டில் சந்தன மரத்திற்கு டன் ஒன்றுக்கு ரூ. 19,753 கிடைக்க 1976-77இல் ரூ. 39,648 கிடைத்தது. இதுவே வருவாய் உயர்வுக்கு முதன்மையான காரணமாகும்.

'காடுகள்' தலைப்பின் கீழ் 1975-76ஆம் ஆண்டில் செலவழித்த தொகை ரூ. 667·83 இலட்சம்; 1976-77 ஆம் ஆண்டில் செலவான தொகை ரூ.652·17 இலட்சம். செலவுத் தொகையின் பெரும்பகுதி காடுகளின் விளைவை மிகுவிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களுக்கான செலவீடாகும் (Capital expenditure). வளர்ந்து வரும் மரம், விறகு, மூலப் பொருள், பிற கான் விளை பொருள்களின் தேவையை ஈடு செய்யும் நோக்கில் தோட்டங்கள் வளர்ப்பு, பெரும் அளவில் மேற்கொள்ளப்பட்டது.

திட்டங்களைச் செயல்படுத்தல்.

வளமைத் திட்டங்கள் (Development Schemes)கீழ் 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 222·04 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது. இதில் ரூ. 182·00 இலட்சம், மாநில திட்டங்களின் கீழ் தொழில் மற்றும் பொருளாதாரச் சிறப்பு வாய்ந்த தோட்டங்களை வளர்க்கவும், வன இயல் ஆய்வு, வனத் திட்டம், விலங்குகள் பாதுகாப்பு, வைகை அணை, மேட்டூர் நீர் பிடிப்பு பகுதியின் மண் வளப் பாதுகாப்பு திட்டங்களைச் செயல்படுத்தவும் செலவழிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு ஆதரவு திட்டங்

களின் கீழ் 1976-77 ஆம் ஆண்டில் 40·04 இலட்சம் செலவழிந்துள்ளது. 1976-77ஆம் ஆண்டில் இத்துறை நிறைவேற்றிய மத்திய அரசு ஆதரவு திட்டங்களாவன:—மேற்கு மலைத் தொடர் வனத்திட்டத்தின் கீழ் பயிரிடப்பட்ட ரப்பர் தோட்டங்கள், கிராம்புத் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்கள், மரக்கூழ் தோட்டங்கள் முதலியன, கலப்பின மரத் தோட்டங்கள், பாழடைந்த காடுகளைப் புதுப்பித்தல், சாத்தனூர் முதலை வளர்ப்பு பண்ணை, களக்காடு சிங்கவால் குரங்கு புகலிடம் அமைப்பு, நீலகிரி மலைப் பகுதி வளர்ப்பு.

மண் வளப் பாதுகாப்பு திட்டங்கள் உள்ளிட்ட மாநில திட்டங்களுக்கு 1977-78இல் திட்டமிடப்பட்டுள்ள செலவீடு ரூ. 285·95 இலட்சம். 1977-78ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ஆதரவு திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ள செலவீடு ரூ. 79·78 இலட்சமாகும். முதலீட்டிற்கும் விளைபயனுக்கும் இடையே நீண்ட காலத்தை உடையது காடு வளர்ப்பு என்றாலும், முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பயன்தர தொடங்கி, மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத் தக்க பங்கு ஆற்றியுள்ளன.

காடுபடு பொருள்களைச் சார்ந்த தொழில்களுக்கு மூலப் பொருள்கள் வழங்கல்.

மாநிலத்தில் உள்ள சில பெரிய தொழிற்சாலைகளுக்கு இத்துறை மூலப் பொருள்களை வழங்குகிறது. 1976-77ஆம் ஆண்டில் 'சேசசாயி' காகித தொழிற்சாலைக்கு 32,000 டன் மூங்கிலும், 7,000 டன் தைல மரமும், 'சன்' காகித ஆலைக்கு 3,543 டன் கொறுக்கையும் (Reed) வழங்கப்பட்டுள்ளது. மர இழைப்பட்டு அணியமாக்க 'சவுத் இந்தியா விசுகோசு' நிறுவனத்திற்கு 1976-77ஆம் ஆண்டில் 328 எக்டர் தைல மரத் தோட்டங்களும், 1,378 எக்டர் பட்டை உரிக்கப்பட்ட மிலாறு தோட்டங்களும் ஒதுக்கப்பட்டன. நீலகிரி, கொடைக்கானல் குன்றுகளில் உள்ள தோட்டங்களிலிருந்து மிலாறு பட்டைகள் 'டான்' தோல் பதனிடு தொழிற்சாலைக்கு வழங்கப்பட்டன. 6,518 டன் பட்டைகள் 1976ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

மேற்கு மலைத் தொடர்வளர்ச்சித் திட்டம்.

இது மத்திய அரசு ஆதரவு திட்டம். மேற்கு மலைத் தொடரில் உள்ள இயற்கை வளத்தை அப்பகுதியின் பொது வளத்திற்கு ஏற்ப பயன் கொள்ளுதலும் வளர்த்தலும் இதன்

நோக்கங்கள். 1975–76ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ்
இரண்டு பணிகளை இத்துறை மேற்கொண்டது. அவை (அ)
நீலகிரியில் தேயிலைத் தோட்டங்கள் வளர்த்தல், (ஆ) கன்னி
யாகுமரி மாவட்டத்தில் கிராம்பு வளர்த்தல். இதற்கென
ரூ. 18·83 இலட்சம் செலவழிக்கப்பட்டது. 1976–77இல்
இவற்றுடன் மேலும் இரண்டு பணிகள் மேற்கொள்ளப்
பட்டன. அவை (அ) மதுரை மாவட்ட மேற்பழனி குன்று
களில் சூழ்மரங்கள் வளர்த்தல், (ஆ) கன்னியாகுமரி மாவட்டத்
தில் ரப்பர் வளர்த்தல். இத்திட்டத்தின் கீழ் 1976–77ஆம்
ஆண்டில் ரூ. 31·87 இலட்சம் செலவிடப்பட்டது. 1977–
78ஆம் ஆண்டிற்கு ரூ. 74·78 இலட்சம் குறிக்கோளாக
வைக்கப்பட்டுள்ளது.

வறட்சி தணிப்புத் திட்டங்கள்.

தணிப்புப் பணியாக வறட்சியில் பாதிக்கப்பட்ட இடங்
களில் தோட்டங்கள் வளர்த்தல் பெருமளவில் மேற்கொள்ளப்
பட்டது. மழை இன்மையைத் தவிர்க்க நிலையான ஏற்
பாடாக மரம் வளர்த்தலும், வறட்சியில் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு துயர் நீர்ப்பு இடை ஏற்பாடாக வேலை வழங்கலும்
இதன் நோக்கங்களாம். இத்திட்டத்தின்கீழ் 1976–77ஆம்
ஆண்டில் 38·26 இலட்சம் செலவிடப்பட்டது. 7,688
'எக்டர்' பரப்பு பயன்படுத்தப்பட்டது. 150 கி.மீ. சாலை
ஓர கரையோர மரங்கள் நடப்பட்டன. தனியார் தம்
நிலத்தில் மரம் வளர்க்க கன்றுகள் வழங்கப்பட்டன.

வறட்சிக்கு ஆட்படும் பகுதிகளுக்கானத் திட்டம்.

இது ஒரு மத்திய அரசு ஆதரவு திட்டம். இராமநாத
புரம், தருமபுரி மாவட்டங்களில் இது செயல்படுத்தப்படு
கிறது. காடு வளர்த்தலும் புல் வளர்த்தலும் முதன்மையாக
செய்யப்படுகின்றன. 1976–77ஆம் ஆண்டில் 20·30 இலட்சம்
செலவிடப்பட்டுள்ளது. 1977–78ஆம் ஆண்டில் இத்
திட்டம் மத்திய அரசின் உதவியால் செயல்படுத்தப்படும்.

மரம் நடு விழா.

மத்திய அரசு, மத்திய வன ஆலோசனைக் குழுவின்
வேண்டுகோளுக்கு இணங்க 1976–77ஆம் ஆண்டில் இம்
மாநிலத்தில் மரம் நடு விழா பெருமளவில் கொண்டாடப்
பட்டது. மரம் நடுதல் விழாக் கொண்டாட ஆளுநர் தலைவ
ராகவும், முன்னாள் ஆலோசகர் துணைத் தலைவராகவும்,
வனத் துறைச் செயலர், செயலாளராகவும் கொண்ட மாநிலக்

குழுவும் அமைக்கப்பட்டது. மாநகராட்சி, நகராட்சி,
ஊராட்சி, கல்வி நிலையங்கள் சார்ந்த நிலங்கள், தனியார்
நிலங்கள் முதலியனவற்றில் மரம் நடுதல் ஊக்கப்படுத்தப்
பட்டது. நாற்றங்கால் எழுப்புதலும் கன்றுகள் வழங்குதலும்
வனத் துறை, வேளாண்மைத் துறைகளால் மேற்கொள்ளப்
பட்டன. 1976–77ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 84
இலட்சம் நாற்றுகள் நடப்பட்டன. அவற்றுள். 23 இலட்சம்
நாற்றுகள் வனத் துறை வழங்கியவை. 1977–78ஆம் ஆண்
டிற்கு திட்டமிடப்பட்டுள்ள குறிக்கோள் ரூ. 150 இலட்சம்.
வனத் துறை 22·80 இலட்சம் நாற்றுகளும் தனியார்
நாற்றுகள் வழி 54 இலட்சம் நாற்றுகளும் வழங்கப்பட திட்ட
மிடப்பட்டுள்ளது.

" சாகிர் காடுகள். "

தென்னாற்காடு மாவட்ட சாகிர்கள் வழக்கைத் திரும்ப
பெற்றுக்கொண்டவுடன் சுமார் 1,00,000 எக்டர் சாகிர்
காடுகளை 1976ஆகஸ்டு மாதத்தில் அரசு எடுத்துக்கொண்டது.
இச் சாகிரில் பெரும் பகுதி காடாகும். ஒரு உதவி வனப்
பாதுகாவலர், சார் நிலை அலுவலர் அடங்கிய சிறிய பணித்
தொகுதிக்கு ஒப்பு அளிக்கப்பட்டுள்ளது. காத்தலைச் செய்
தலுடன் எல்லைகளை வரையறுக்கும் பணியையும் அவர்கள்
மேற்கொண்டுள்ளனர். இவைகள் ஒதுக்குக் காடுகளாகப்
பின்னர் அறிவிக்கப்படும்.

பழங்குடியினர் வளர்ச்சி.

இம் மாநிலத்தில் பழங்குடியினர் தொகை 2 இலட்ச
மாகும். அவர்கள் காடுகளில் வாழ்கின்றனர். அவர்
களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வனத் துறை பல
நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவர்கள் வேளாண்மை
மேற்கொள்ள குத்தகைக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது. வனத்
துறையின் தோட்டங்களில் ஊடு பயிரிடும் 'கும்ரி' முறையை
மேற்கொள்ளவும் அவர்கள் தூண்டப்பட்டுள்ளனர். அவர்
களது வேளாண்மைக்கு வேண்டிய பொருள்கள் இலவசமாக
வழங்கப்படுகின்றன. அவர்களுடைய கால்நடைகள் இலவச
மாக மேய விடப்படுகின்றன. காடு பணிகளிலும் அவர்கள்
அமர்த்தப்படுகின்றனர். சிலர் பணியாளர்களாகவும் பாகர்
களாகவும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பழங்குடியினர்கள் குழந்தைகளுக்காக வட ஆற்காடு,
கோவை மாவட்டங்களில் இத்துறை பள்ளிக்கூடங்களை
நடத்துகின்றது. 12 துவக்கப்பள்ளிகளும், ஒரு நடு நிலைப்

பள்ளியும், ஒரு உயர்நிலைப் பள்ளியும் உள்ளன. பிள்ளைகளுக்கு நடுப் பகல் உணவும், பாடநூல்களும் எழுத பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சில பள்ளிகளில் உணவுச் சாலைகளும் உள்ளன. பழங்குடியினர் நன்மைக்காக 19 தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. விறகு கூப்புகளும், சிறு பொருள் கூப்புகளும் குறைந்த தொகையில் இச் சங்கங்களுக்கு குத்தகைக்கு விடப்படுகின்றன. அவர்களுக்கு மருத்துவ வசதி, வீட்டு வசதி முதலியவற்றையும் துறை தந்துள்ளது.

தமிழ்நாடு தேயிலை தோட்ட கழகம்.

இலங்கை அகதிகளைக் குடியமர்த்த 1969ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் தொடங்கப்பட்ட தேயிலை வளர்ப்பு துறை தனிக் கழகமாக தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகமாக 1976ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1ஆம் தேதி முதல் மாற்றப்பட்டுள்ளது. 1,500 எக்டர் பரப்பில் தேயிலை வளர்த்து 1,875 அகதிக் குடும்பங்களைக் குடியமர்த்த வேண்டும் என்பது திட்டத்தின் குறிக்கோள். இதுவரை 1,155 எக்டரில் தேயிலை நடப்பட்டுள்ளது. 826 குடும்பங்கள் குடி அமர்த்தப்பட்டுள்ளன.

ரப்பர் தோட்டங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் ஆளுகை குழு அமைத்தல்.

அரசு, ரப்பர் தோட்டங்கள் மற்றும் ரப்பர் தொழிற்சாலை தொடர்பான நடை முறை பணிகளை வரைவு செய்ய தக்க அமைப்பொன்று காணும் கருத்துடன் அரசு, தேவையான அதிகார வரம்புடைய ஆளுகைக் குழு ஒன்றை அமைத்துள்ளது. அதன் தலைவர் வன மற்றும் மீன் வளத் துறை அரசுச் செயலர் ஆவார். நிதித் துறை செயலரும், வருவாய்த் துறை செயலரும், வனத் துறைத் தலைவரும் (வளர்ச்சி) துறையைச் சாராத வல்லுநர் ஒருவரும், ரப்பர் தோட்ட வனப் பாதுகாவலரும் குழுவின் உறுப்பினர்கள். கடைசியாகக் குறிக்கப்பட்டவர் உறுப்பினர் செயலரும் ஆவார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இத்துறை நிறைவேற்றிய திட்டங்கள் பற்றிய விரிவான தகவல்கள் வருமாறு :—

வனத் திட்டங்கள் திட்டமிடல்.

வனத் திட்டமிடலே காடுகள் நிர்வாகத்தின் அடிப்படையாகும். வனத் திட்டமிடல் பணிக்கு வலிவு சேர்க்கவும்,

அது செம்மையாக நடைபெற தேவையான கருவிகளை வாங்கவும் போதிய வாய்ப்பைத் தருகின்றது. இதனுடைய திட்டங்கள்.

ஐந்தாவது ஐந்தாண்டு கால செலவீட்டின் மதிப்பு ரூ. 5 இலட்சம். 1976–77ஆம் ஆண்டில் 0·16 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. 1977–78ஆம் ஆண்டிற்கு 0·36 இலட்சம் குறியீடாக வைக்கப்பட்டுள்ளது.

வன இயல் ஆய்வும் கல்வியும்.

காடு வளர்ப்புக் கலை, மரபியல், ஆய்வு, மண்ணிலாய்வு, கோமியியல் ஆய்வு ஆகிய துறைகளின் ஆய்வு மேற்கொள்ளத்தக்க வகையில் ஆய்வுத்துறைக்கு வலிவு சேர்த்தலே இத் திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாவது திட்டக் காலத்தில் வன இயல் ஆய்வு செலவீட்டு மதிப்பு 20 இலட்சமாகும். 1976-77ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 2·84 இலட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.

1977–78ஆம் ஆண்டில் 3·07 இலட்சம் செலவில் மரபியல் ஆய்வு, உருவளவு துறைகளிலும் ஆய்வை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

முந்திரித் தோட்டங்கள்.

வாய்ப்பான இடங்களில் முந்திரி வளர்த்தலும் வளர்க்கப்பட்டுள்ள முந்திரி தோட்டங்களில் உரமிடுதல், மருந்து தெளித்தல் முதலிய தீவிர பண்படுத்தப் பணிகளை மேற்கொள்ளுவதின் மூலம் விளைச்சலை மிகுவித்தலும் இத் திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டத்திற்கு ஐந்தாவது திட்டகால செலவீட்டின் மதிப்பு ரூ. 75 இலட்சமாகும்.

1976–77 ஆம் ஆண்டில் ரூ. 5·45 இலட்சம் செலவிடப்பட்டு 1,163 எக்டரில் முந்திரி வளர்க்கப்பட்டுள்ளது.

1977–78 ஆம் ஆண்டில் 11·00 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சி, மதுரை கோட்டங்களில் 800 எக்டரில் முந்திரி வளர்க்கவும், பழைய தோட்டங்களில் பண்பாட்டு பணிகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ரப்பர் தோட்டங்கள். —ரப்பர் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருவதாலும், குறிப்பிட்ட சில தொழில்களுக்கு இயற்கை ரப்பரை விரும்புவதாலும், செயற்கை ரப்பரின் விலை உயர்வா[illegible] அது சில சிறப்பான தொழில்களுக்கு ஒதுக்கப்

படுவதாலும் இயற்கை ரப்பருக்கு தேவை மிகக்கூடும். தமிழ் நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் வளர்ப்புக்கு வாய்ப்பான சூழ் நிலையை வழங்குகிறது. ஐந்தாம் திட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 800 எக்டரில் ரப்பர் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 24·69 இலட்சம் செலவில் 152 எக்டரில் ரப்பர் வளர்க்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் பழைய தோட்டங்களைப் பாது காக்கவும், குடியிருப்பு கட்டல், சாலை அமைத்தல் மேற் கொள்ளவும் 11·03 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப் பட்டுள்ளது.

கூழ்மரத் தோட்டங்கள்.

மரங்களை மூலப்பொருளாக கொண்டு இயங்கும் தொழில் களின் தேவையை ஈடு செய்ய விரைந்த வளர்ச்சியுடைய தைல மர வகைகளையும் மூங்கில் போன்றவற்றையும் வளர்ப்பதை விரைவுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்க மாகும். ஐந்தாம் திட்ட காலத்தில் 100 இலட்சம் ரூபாய் செலவில் 18,000 எக்டரில் தோட்டங்கள் வளர்க்க திட்ட மிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் ரூ. 22 இலட்சம் செலவிட்டு 2,361 எக்டர் பரப்பில் தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன.

1977-78 ஆம் ஆண்டில் 31·38 இலட்சம் ரூபாய் செல வில் 2,470 எக்டரில் தோட்டங்கள் வளர்க்க திட்டமிடப் பட்டுள்ளது.

பண்ணைக்காடுகள்.—சிற்றூர்களில் அரசு புறம்போக்கு நிலங்களிலும் பயனற்ற நிலங்களிலும் வாய்ப்பான திட்டு களில் காடு வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம். ஐந்தாவது திட்டத்தின் கீழ் ரூ. 95 இலட்சம் செலவிட்டு 25,000 எக்டரில் காடு வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் 38·17 இலட்சம் ரூபாய் செல விட்டு 10,726 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட் டுள்ளது. இது வறட்சித் தணிப்பு பணியின் கீழ் வளர்த்த பரப்பை உள்ளடக்கியதாகும்.

1977-78 ஆம் ஆண்டில் 33 இலட்சம் ரூபாய் செலவில் 6,210 எக்டரில் காடு வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில் வாணிகத் துறைகளுக்கு வேண்டிய மரங்கள் வளர்த்தல்—

தேக்கு மரம்.—இம் மாநிலத்தில் பெரு மரங்கள் வளத்தை மிகுவிக்க தேக்கு போன்ற கடின வகை மரங் களை வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் திட்ட காலத்தில் ரூ. 15 இலட்சம் செலவில் 2,500 எக்டரில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் ரூ. 2·99 இலட்சம் செலவிட்டு 524 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட்டது.

1977-78 ஆம் ஆண்டில் ரூ. 6 இலட்சம் செலவில் 500 எக்டரில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

தீக்குச்சி.—தீக்குச்சி தொழிலுக்கு வேண்டிய குச்சிகளை யும், பெட்டிகளையும் அணியமாக்க தேவையான மர வகை களை மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங் களில் வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கம். ஐந்தாம் திட்டத்தில் 4 இலட்சம் ரூபாய் செலவில் 1,000 எக்டர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் 0·54 இலட்சம் ரூபாய் செல விட்டு 109 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் வாகை, இலை மரம் போன்ற மர வகைகள் 0·60 இலட்சம் ரூபாய் செலவில் 100 எக்டர் பரப்பில் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

'வாட்டில்' தோட்டங்கள்.—தோல் பதனிடு தொழில் மற்றும் மரக்கூழ் தொழில் ஆகியவற்றிற்கு வாட்டில் மரமும் பட்டையும் சிறப்பின மூலப்பொருளாகும். நீலகிரியிலும், மேல் பழனியிலும் வாட்டில் மரம் வளர்க்க, திட்டம் வகை செய் கிறது. ஐந்தாவது திட்ட காலத்தில் 35 இலட்சம் ரூபாய் செலவில் 10,000 எக்டர் பரப்பில் தோட்டம் எழுப்ப திட்ட மிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் 3·09 இலட்சம் ரூபாய் செலவில் 924 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட்டது.

1977-78 ஆம் ஆண்டில் 6·50 இலட்சம் ரூபாய் செல வில் 1,400 எக்டர் பரப்பில் தோட்டம் வளர்க்க திட்ட மிடப்பட்டுள்ளது.

ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரையோரக் காடுகள்.

வெட்டு மரங்களை அதிக அளவு பெறுதற்கும் மண் அரிப்பைத் தடுப்பதற்கும், பொருளாதார சிறப்புள்ள மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் திட்ட காலத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 எக்டர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் 7·81 இலட்சம் ரூபாய் செலவில் 1,126 எக்டர் பரப்பில் தோட்டம் எழுப்பப்பட்டது.

1977-78 ஆம் ஆண்டில் 12·21 இலட்சம் ரூபாய் செலவில் 1,270 எக்டர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

விறகு மரக்காடுகள்.—மக்களின் எரிபொருள் (விறகு) தேவையை ஈடு செய்யும் மர வகைகளை வளர்க்க இத்திட்டம் வகை செய்கிறது. ஐந்தாம் திட்ட காலத்தில் 220 இலட்சம் ரூபாய் செலவில் 31,000 எக்டர் பரப்பில் விறகு மர வகைகளை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் 24·08 இலட்சம் ரூபாய் செலவிட்டு 2,644 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட்டுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில் சவுக்கு மர வகைகள், பிறவகை மரங்களை 37·43 இலட்சம் ரூபாய் செலவில் 2,885 எக்டர் பரப்பில் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

சந்தன மரக்காடு.—வனத்துறை வருவாயில் மூன்றில் ஒரு பங்கு சந்தனமர விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மர வளத்தை மிகுவிக்க வாய்ப்பான இடங்களில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது. ஐந்தாம் திட்ட காலத்தில் 500 எக்டர் பரப்பில் சந்தன மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ஆம் ஆண்டில் 4·54 இலட்சம் ரூபாய் செலவிட்டு 198 எக்டர் பரப்பில் சந்தன மரம் வளர்த்து உடன் 100 எக்டர் பரப்பில் இயற்கை தோட்டங்களில் பண்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன,

1977-78ஆம் ஆண்டில் 9·07 இலட்சம் ரூபாய் செலவில் 200 எக்டர் பரப்பில் சந்தன மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

மிகைக்காடுகள்.

புறம்போக்குகள், குன்று சரிவுகள், சாலை ஓரங்கள் முதலிய இடங்களில் விறகு, எருத்தழை, புல் முதலிய தேவைகளை ஈடு செய்யும் வகையில் மரம் வளர்த்தலுக்கு வகை செய்கிறது, இத்திட்டம். மண்ணின் வளம், ஈரம் பாதுகாப்பதற்கும் மக்களுக்கு பூங்காவாகவும் இக்காடுகள் பயன்படுகின்றன.

ஐந்தாம் திட்ட காலத்தில் 90 இலட்சம் ரூபாய் செலவில் 25,000 எக்டர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77ஆம் ஆண்டில் 10·84 இலட்சம் ரூபாய் செலவிட்டு 1,097 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட்டுள்ளது. 17·5 கி.மீ. தூரம் சாலை ஓர மரங்கள் வளர்க்கப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டில் 23·15 இலட்சம் ரூபாய் செலவில் 3,100 எக்டர் பரப்பில் மரம் வளர்ப்பும், சாலை ஓரங்களில் மரம் வளர்ப்பும், பொது மக்களுக்கு கன்றுகள் வழங்குதலும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

மரம் வெட்டும் பணிகள்.

இத்திட்டத்தின் நோக்கங்களாவன.

(1) கட்டைகளை வெட்டுதல், வெட்டி அகற்றுதல் முதலிய பணிகளில் அபிவிருத்தி செய்தல்.

(2) மரங்களை எடுத்துச் செல்ல போக்குவரவு வசதிகளை மேம்படுத்துதல்.

(3) மேம்பாடு அடைந்த மரம் வெட்டு முறையில் வனத்துறைத் தொழிலாளர்களுக்குப் பயிற்சி அளிக்க வகை செய்தல்.

ஐந்தாவது திட்ட செலவு மதிப்பீடு ரூ. 8 இலட்சம். 1976-77-ல் ரூ.0·13 இலட்சம் செலவிடப்பட்டது. 1977-78-ல் ரூ. 2·14 இலட்சம் செலவிடப்படும்.

அரக்கு உற்பத்தி.

மதுரை தெற்குக் கோட்டத்தில் உள்ள அரக்கு நிலையத்தில் அரக்கு உற்பத்தியை மிகுவிக்க வகை செய்கிறது, இத்திட்டம். ஐந்தாவது திட்ட காலத்தில் ஐந்து லட்சம் ரூபாய் செலவில் 150 எக்டர் பரப்பில் 'குசும்' வளர்க்கப்படும். 1976–77ஆம் ஆண்டில் ரூ. 0·20 இலட்சம் செலவிட்டு 25 எக்டரில் மரம் வளர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது அரக்கு தொழிற்சாலை தமிழ்நாடு வனத்தோட்டக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் துறை இத்திட்டத்தை செயல்படுத்துவதை நிறுத்தியுள்ளது.

காடுபடு சிறு பொருள்கள்.

புளி, கொக்கோ, இலவங்கம், குங்கிலியம், கற்பூர தைல மரம், எலுமிச்சை, கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களை வளர்ப்பதன் மூலம் காடுபடு சிறுபொருள்களிலிருந்து வருவாய் கூடுவதற்கு சாத்தியக் கூறுகள் உள்ளதால் இத்தகைய மரங்களை வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஐந்தாம் திட்ட காலத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் 2,500 எக்டர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

1976–77ஆம் ஆண்டில் 6·44 இலட்சம் ரூபாய் செலவில் 1,127 எக்டர் பரப்பில் மரம் வளர்க்கப்பட்டுள்ளது.

1977–78-ல் 8 இலட்சம் ரூபாய் செலவிட்டு 1,105 எக்டர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

போக்குவரத்து.

வெட்டப்பட்ட மரங்களை விரைந்து எடுத்து செல்லத் தக்க வகையில் ஏற்கெனவே உள்ள சாலைகளை மேம்படுத்துவதும், புதிய சாலைகள் அமைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். காடுகளில் மேற்கொள்ளப்படும் காடு வளர்ப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நல்ல போக்குவரத்து அமைப்பு, மிகவும் இன்றியமையாதது ஆகும். ஐந்தாவது திட்ட காலத்தில் 32 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1976–77ஆம் ஆண்டில் 3·55 இலட்சம் ரூபாய் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்டுள்ளது.

1977–78இல் 14 இலட்சம் ரூபாய் செலவில் சாலைகள் அமைக்கவும் பழைய சாலைகளை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டிடங்கள்.

உள் காடுகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு குடியிருப்புகள் கட்ட இத்திட்டம் வகை செய்கிறது. ஐந்தாவது திட்ட காலத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. 1976–77ஆம் ஆண்டில் ரூபாய் 2·21 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1977–78ல் கட்டிடங்கள் கட்ட ரூ. 8 லட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

வனவிலங்குகள் புகலிடங்கள்.

காடு வாழ் விலங்குகளை பாதுகாப்பதிலும் வளர்ப்பதிலும் விலங்கு புகலிடங்கள் இன்றியமையாப் பங்கு பெறுகின்றன. இப்புகலிடங்கள் சுற்றுலாப்பயணிகளை பெரிதும் கவர்கின்றன.

ஐந்தாவது திட்ட காலத்தில் 20·00 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1976–77ல் 6·57 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1977–78ல் இப்புகலிடங்களில் உள்ள சாலைகளை மேம்படுத்தவும், உள் பகுதியில் பணிபுரிகின்றவர்களுக்கு குடியிருப்புகள், அலுவலகங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிண்டி குழந்தைகள் பூங்கா, வேலூருக்கு அண்மையில் உள்ள அமிர்தி பூங்கா, முதலைப் பண்ணை அமைத்து பாதுகாத்தல், விலங்குகள் வாழ் சூழலை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு தொகை செலவிடப்படும்.

1977–78ல் ரூ. 12·86 இலட்சம் செலவிடப்படும்.

காடு விளம்பரம்.

நாட்டு நலன் காக்கும் பணியில் காடுகளும், விலங்குகளும் ஆற்றும் பங்கு குறித்தும், அதனைக் காப்பதன் இன்றியமையாமை குறித்தும் மக்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடன் இத்திட்டம் செய்யப்படுகிறது. ஐந்தாவது திட்ட காலத்தில் ரூ. 5 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1976–77ல் ரூ. 0·69 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1977–78ல் ரூ. 1·00 இலட்சம் செலவில் விளம்பரப் பொருட்கள், நிழற்படச் சுருள்கள் வாங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

காடுகளைச் சேர்த்தல்.

ஏறத்தாழ 3,800 ச.மீ. பரப்புள்ள முன்னாள் சமீன் காடுகளை துறை எடுத்துக்கொண்டுள்ளது. இவற்றைச் சிறந்த முறையில் பாதுகாக்க இக்காடுகளை நில அளவை

செய்து முறையான எல்லை வரையறுத்து தமிழ்நாடு காடுகள் சட்டத்தின்கீழ் ஒதுக்குக் காடுகளாக ஏற்படுத்தவேண்டும். இத் திட்டத்திற்கு ஐந்தாவது திட்ட காலத்தில் 5 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77 ல் ரூ. 0·68 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

நிலத்தை அளந்து எல்லை வரையறுக்க 1977-78இல் 1·19 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

காடு பாதுகாப்பு.

தீ விபத்துகளிலிருந்தும் ஏனைய இடையூறுகளிலிருந்தும் காடுகளைக் காப்பதற்கான வழி வகைகளை வகுப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாவது திட்ட காலத்தில் 10 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1977—77இல் ரூ. 0.67 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1977-78இல் ரூ. 0·80 இலட்சம் செலவில் தீ தடுப்பு வேலைகளைப் பாதுகாக்கவும், தீ எதிர்நோக்கும் காலத்தில் காவலர்களை அமர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

வனத்துறை பணியாளர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏந்துகள் (வசதிகள்).

காடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும் பணியாளர்களுக்கும் 'கம்பளி' வழங்கல், குடியிருப்பு கட்டுதல், மருத்துவம் பார்த்தல், குடிநீர் ஏற்பாடு செய்தல் முதலிய ஏந்துகளை (வசதி) செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாவது திட்ட காலத்தில் 15 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77ல் ரூ. 0·06 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

1977-78இல் 3·04 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. கம்பளி வழங்குதல், குடிநீர் ஏற்பாடு, மருத்துவம் பார்த்தல் முதலியன தொடர்ந்து மேற்கொள்ளப்படும்.

வன வள ஆய்வு.

வன வளத்தை சிறப்பான முறையில் பயன் கொள்ளும் நோக்குடன், கான் வளத்தின் அளவை ஆய்ந்து மதிப்பிடுதலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாவது திட்ட காலத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77இல் ரூ. 0·20 இலட்சம் செலவிடப்பட்டது. 1977-78இல் ரூ. 2·53 இலட்சம் செலவில் ஆய்வுப்பணி தொடரும்.

பழங்குடியினர் முன்னேற்ற திட்டம்.

இம்மாநிலத்தில் வாழும் பழங்குடியினர் தொகை மொத்தம் 2 இலட்சமாகும். பெரும்பான்மையினர் காட்டில் வாழ்கின்றனர். பல காட்டு வேலைகளுக்கு துறை அவர்களையே சார்ந்து நிற்கிறது. துறைக்கும் அவர்களுக்கும் இடையே உள்ள நெருக்கத்தைக் கொண்டு, அவர்கள் நல் வாழ்விற்கு துறை சிறப்பான நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது.

1977-78இல் 6·35 இலட்சம் ரூபாய் செலவில் பழங்குடியினர் நல்வாழ்விற்கான திட்டங்களைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. ஜவ்வாது மலையில் உள்ள பள்ளிகளை மேம்படுத்துதலும், பள்ளி ஆசிரியர்களுக்கு குடியிருப்பு கட்டுதலும், பழங்குடியினர் வாழும் பச்சமலை பகுதிகளில் சாலை அமைத்தலும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

புள்ளி விவரப் பிரிவு.

வனங்கள் குறித்த புள்ளி விவரங்களைத் திரட்டவும் விளை பொருள்கள் அளவு தொடர்பான தகவல்களைத் தொகுத்தலும், அங்காடி குறித்தலை மேற்கொள்ளவும் தற்போதைய வருங்காலத் தேவைகளை மதிப்பிடவும் ஒரு பிரிவினை அமைப்பதே இத்திட்டத்தின் நோக்கம். ஐந்தாவது திட்டத்தில் ரூ. 5 இலட்சம் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது.

மண் வளப் பாதுகாப்பு மாநிலத் திட்டங்கள்.

வைகை ஆற்றின் நீர் கோள் பகுதிகளில் மண் அரிப்பையும் வார் வடிதலையும் தடுக்கும் வகையில் மண் வளத்தைப் பாதுகாப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாவது திட்ட காலத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் 2,800 எக்டர் பரப்பில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

1976-77இல் 5 இலட்சம் ரூபாய் செலவில் 450 எக்டர் பரப்பில் இப்பணி மேற்கொள்ளப்பட்டது.

1977-78ல் 6 இலட்சம் ரூபாய் செலவில் 600 எக்டர் பரப்பில் மண் வளப் பாதுகாப்பு பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

[1977 ஆகஸ்டு 16

முந்திரிகளின் பதியப் பெருக்கம்.

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாகும். கூடுதல் விளைச்சலைத் தரும் பதியப் பெருக்க முறையில் முந்திரியை வளர்த்தலே இதன் நோக்கமாகும்.

1976-77இல் 0·29 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

1977-78இல் 0·91 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மைய அரசு ஏற்பாதரவு திட்டங்கள்.

கலப்பின மரங்கள் வளர்த்தல்.

இது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்தின்கீழ் செலவிடப்படும் தொகை மத்திய அரசும் மாநில அரசும் 75 : 25 விழுக்காட்டில் பங்கிடப்படுகிறது. 1976-77இல் ரூ. 0·29 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1977-78இல் 16 இலட்சம் ரூபாய் செலவிட திட்டமிடப்பட்டுள்ளது. 1,000 எக்டர் பரப்பில் மரம் வளர்ப்பும் 3,000 எக்டர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகளும் மேற்கொள்ளப்படும். கிராமப்புற மக்கள் தேவையான விறகு, எருத்தழை, தடி மரம் முதலியவற்றை ஈடு செய்யும் வகையில் ஊராட்சி நிலங்களில் மரங்கள் வளர்க்கப்படும்.

தரம் தாழ்ந்த காடுகளை வளப்படுத்துதல்.

இதுவும் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்திற்காகும் செலவுத் தொகையை மைய அரசும் மாநில அரசும் 50 : 50 என்ற விழுக்காட்டில் பகிர்ந்து கொள்ளுகின்றன. 1976-77இல் 0·84 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1977-78இல் 16·12 இலட்சம் ரூபாய் செலவிட்டு 800 எக்டர் பரப்பில் மரம் வளர்ப்பும் 1,500 எக்டர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. மக்களின் விறகு மற்ற தேவைகளை ஈடு செய்ய வனத் துறையின் தரம் தாழ்ந்த காடுகளை மீண்டும் வளப்படுத்த வகை செய்கிறது இத்திட்டம்.

தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

புதன்கிழமை, ஆகஸ்டு 17, 1977.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கடன்கள் வழங்கல்.

*4 குறுகியகால வினா—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

தஞ்சை மாவட்டத்திலும், கீழத் தஞ்சை மாவட்டத்திலும் விவசாயக் கூட்டுறவு சங்கங்களில் உரமும், பணமும் முதல் (Set) பிரிவிற்கே பட்டுவாடா ஆகாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : இக்கேள்வி முதலிலே சரியில்லை.

12—8—1977 முடிய, தஞ்சாவூர், கும்பகோணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள், முறையே மேலத் தஞ்சைக்கும், கீழத் தஞ்சைக்கும் 491 விவசாயக் கடன் சங்கங்கள் மூலமாக 14.26 கோடி ரூபாய்க்கு (ரொக்கமாக ரூ. 6.25 கோடி, பொருட் பகுதி ரூ. 8.01 கோடி) கடன்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. கடன்களின் ரொக்கப்பகுதி உறுப்பினர்களின் சேமிப்புக் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட்டிருக்கிறது. பொருட் பகுதியைச் சேர்ந்த உரம் உறுப்பினர்களால் அவர்களுக்குத் தேவைப்படும்போது பெற்றுக் கொள்ளப்படுகிறது.

30—9—1977-ல் முடிவுறும் நடவு காலத்திற்குள் மேலும் 9 லட்ச ரூபாய் அனுமதிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கோ. இளங்கோவன் : இதே தேதியில் சென்ற ஆண்டு எவ்வளவு கடன் கொடுக்கப்பட்டது, இந்த ஆண்டு எவ்வளவு கடன் கொடுக்கப் பட்டிருக்கிறது, வித்தியாசம் எவ்வளவு என்று அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : சென்ற ஆண்டு ரூ. 21.51 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு ரூ. 23.50 கோடி வழங்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. சுப்பு : சில கூட்டுறவு கடன் சங்கங்களில் 50%க்கு மேல் கடன் வசூலாகாமல் இருக்கிற காரணத்தினால் புதியதாகக் கடன் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டிருக்கிறது. அப்படியின்றி எல்லாக் கூட்டுறவு கடன் சொஸைடிகளின் மூலமும் விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை 513 கூட்டுறவு சங்கங்களில் 22 கூட்டுறவுச் சங்கங்களில் மாத்திரம் கடன் வழங்கப்படவில்லை. இந்த 22 கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர்கள் திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகை அதிகமாக இருப்பதால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கடன் வழங்க முடியாது.

வடிமுனைக் குழாய் கிணறுகள் அமைக்கக் கடன்கள்.

*57 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகள் அந்த நிலங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொள்ள கடனுதவி புரியும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : ஆம்.

திரு. என். கிட்டப்பா : குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிகள் அந்த நிலங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகளை அமைத்துக் கொள்ள கடன் உதவி புரியும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா என்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆமாம் என்றார்கள். அதன் விவரம் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, தற்போது வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொள்ள நிலவள வங்கிகள், நிலச் சொந்தக்காரர்களின் நிலங்களின் அடமானத்தின் பேரிலும், கடன் தகுதி, திரும்பச் செலுத்தும் திறன் ஆகியவைகளின் பேரிலும் நீண்ட காலக் கடன்கள் வழங்குகின்றன. மேற்படி நிலங்களில் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் அமைத்துக் கொள்ள நிலத்தைக் குத்தகைக்குப் பயிரிடும் விவசாயிக்குத் தனிப்பட்ட முறையில் கடன் மனு செய்ய உரிமையில்லை. தற்போதைய விதிகளின்படி நிலத்தின் உடைமையாளரும் அவருடன் இணைந்து கூட்டாக நில அடமானத்தை வங்கியின் பேரில் நிறைவேற்ற முன் வந்தால் மட்டுமே குத்தகைக்காரர் கடன் பெற முடியும். நிலத்தைக் குத்தகைக்கு எடுத்துப் பயி

ரிடும் விவசாயி, நில உரிமையாளரின் ஒப்புதல் இல்லாமலேயே, தாம் பயிரிடும் நிலத்தில் வடிமுனைக் குழாய்க் கிணறு அமைக்க அவருக்குக் கடன் வழங்க அனுமதிக்கும் வகையில் தமிழ்நாடு கூட்டுறவு நிலவள வங்கிச் (1934) சட்டத்தில் புதிதாக 23-பி என்ற பிரிவைச் சேர்க்கும் வகையில் கூட்டுறவுப் பதிவாளர் ஒரு திருத்தப் பிரேரணை அரசுக்கு அனுப்பியிருக்கிறார். இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, குத்தகைத்தாரர்கள் பயிரிடும் நிலங்களில் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் எப்படியும் அவர்களை நிலத்தைவிட்டு வெளியேற்றவேண்டும் என்பதற்காக அத்தகைய ஒப்புதல் அளிக்க பல இடங்களில் தஞ்சை மாவட்டத்தில் மறுத்து வருகிறார்கள். எனவே குத்தகைத்தாரர்கள். நேரடியாக வேண்டுகோள் விடும்பொழுது வடிமுனைக் குழாய் கிணறுகளுக்கு உடன் உதவி புரிவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவர் அவர்களே இப்போதிருக்கிற சட்டச் சிக்கலைப் பயன்படுத்திக் கொண்டு நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் குத்தகைக்காரர்களை அப்புறப்படுத்துவதற்கு இம்முறை கையாளப்படுகிற நிலைமை இருப்பதால்தான் குத்தகைக்கு எடுத்த விவசாயிகள் நேரடியாக விவசாயச் சங்கங்களுக்குக் கடன் மனுசெய்தால் குழாய் கிணறுகள் அமைப்பதற்கு கடன் வழங்குகிற முறையில் இச் சட்டத்தைத் திருத்த அரசு முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, இந்த வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்காகக் கொடுக்கப்படுகிற கடன்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடுக்கப்படுகின்றனவா அல்லது குறிப்பிட்ட ஒரு சில மாவட்டங்களில் மட்டும் கொடுக்கப்பட்டுள்ளதா ? ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்தால் மாவட்ட ரீதியாக எத்தனை பேர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை விதிமுறைகள் எல்லா மாவட்டங்களுக்கும் பொதுவாகப் பொருந்தும். இந்த விதிமுறைகள் அமல் செய்யப்படுகிறது. இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்த பிறகு இந்த விதிகள் தமிழ்நாடு முழுவதற்கும் எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் செல்லும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ரீதியாக எத்தனை குழாய் கிணறுகளுக்கு கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்பது பற்றி குறிப்பு என்னிடத்தில் இல்லை. அது பற்றி மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

[1977 ஆகஸ்ட் 17

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்தக் குத்தகைதாரர்களுக்கு கடன வழங்குவதில் சட்டத்தில் சிக்கல் இருப்பதால் சட்டத்தைத் திருத்தப் போவதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். குத்தகைதாரர்களுக்கு ஒரு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது, அதாவது அந்த நிலத்தை விட்டு வெளி யேற்றக்கூடாது, அவருக்கு சாகுபடி செய்ய உரிமை வழங்கப் பட்டு பதிவும் செய்யப்பட்டிருக்கிறது. வடிமுனை குழாய்க் கிணறுகளுக்கு ரூ. 1,000 முதல் 3,000-க்கு மேல் தேவைப் படாது. எனவே அவர்களுக்கு நபர் ஜாமீன் பேரில் மத்திய கால கடனாகவோ, நீண்டகால கடனாகவோ கடன் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி இந்தக் குத்தகைக்காரர் களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் நேரடியாக கடன் வழங்குவதற்கு விதிமுறை இருக்கிறதா இல்லையா என்பது தான். மாண்புமிகு உறுப்பினர் குத்தகைதாரர்களை வெளியேற்றும் விஷயமாகச் சொன்னார்கள். அதற்கும் கூட்டுறவுத் துறைக்கும் சம்பந்தம் இல்லை. சிவில் அது நேச்சர்.

திரு. ஏ. ஆர் மாரிமுத்து : தலைவர் அவர்களே, இப்போது வெளியேற்றக்கூடாது என்று சட்டம் இருக்கிறது. அவர்களுக்கு உரிமை இருக்கிறது. அதில் சாகுபடி செய்கிறார்கள். அவர் களுக்கு வடிமுனைக் குழாய் கிணறுகளுக்கு நபர் ஜாமீன் பேரில் ஏன் கடன் வழங்கக்கூடாது?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1934-ம் ஆண்டு நிலவள வங்கிகள் சட்டத்திற்கு கொண்டு வரவிருக்கிற 23-பி சட்டம் திருத்தப் பட்டால் ஜாமீன் கூட தேவைப்படாது.

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இதே மாதிரி கோவில், மடம், அறநிலையங்களுக்குச் சொந்த மான நிலங்களில் குத்தகைதாரர்கள் சாகுபடிக்காரர்கள் கூட் டுறவுச் சங்கம் ஒன்று அமைத்துக் கொண்டு இருக்கிறார்கள். அதன் மூலம் குழாய்க் கிணறுகள் கடன் பெற்று அமைக்க முயற்சி செய்தால் கோவில், மடம், மற்றும் அறநிலையப் பிரமுகர்கள் தடுக்காமல் அமைத்துக் கொள்வதற்கு அரசு அனுமதி வழங்குமா ?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : தலைவர் அவர்களே, இருக்கிற சிக்கல்களை நீக்குவதற்காகத்தான் சட்டத் திருத்தம் கொண்டுவர அரசு உத்தேசித்திருக்கிறது. இது கொண்டு வந்தவுடனே எல்லாக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் எல்லா வகையிலும் பயன்படும்.

பேரில் நபர் கடன் பெற முடியும். நபர்

1977 ஆகஸ்ட் 17]

டாக்டர் கே. சமரசம் : தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் அரசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளதா? ஆம் எனில் அம்மாதிரி அரசிடம் குறைந்த குத்தகைக்குப் பெற்று உழுது பயிரிடும் விவசாயிகளுக்கு அதிக குத்தகைக்கு கொடுத்து வருவது அரசுக்கும் தெரியுமா ? இவ்வாறு இடைத் தரகர்கள் அரசிடம் குறைந்து குத்தகைக்குப் பெற்று அதிகமான குத் தகைக்கு விட்டு லாபம் பெறுவதையறிந்து இம்மாதிரியான குற்றங்களை களைய அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா; அப்படிப்பட்ட குத்தகைதாரர்களுக்கு அரசு கடன் வழங்குமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

[முற்பகல் 9.10]

திரு. மு. அம்பிகாபதி : மன்னார்குடி பஞ்சாயத்து யூனியன் பகுதியில் இந்தக் கடன் வழங்கப்படுகிறது. அதே தாலூகா கோட்டூர் பகுதியில் வழங்க மறுக்கிறார்கள். அது கடற்கரை யோரமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். கடல் நாற்பது மைல் தூரம் இருக்கிறது. அதை மறு பரிசீலனை செய்து அங் குள்ள விவசாயிகளுக்கும் கடன் வழங்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : கடற்கரைப் பகுதியாக இருக்கிற காரணத்தால் விவசாயத்திற்கு தேவையான Ground water ஒருவேளை உப்புத் தண்ணீராக இருக்கலாம் என்ற அடிப்படையில் அந்தப் பகுதியில் கடன் வழங்க மறுத் திருக்கலாம். இருந்தாலும் அரசு அதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. ரெ. வி. சவுந்திரராஜன் : மிராசுதாரர்கள் பேரில் சாகுபடி கணக்கு வைத்துக் கொண்டு எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல் சாகுபடி செய்யும் குத்தகைதாரர்களுக்கு இந்தச் சலுகைகள் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரோ. எட்மண்ட் : உண்மையில் குத்தகைதாரர்கள் என்று தங்களை அறிவித்துக் கொண்டவர் களுக்குத்தான் இந்தக் கடன் வழங்கப்படும்.

திரு. கே. கந்தசாமி : அரசு மூலம் கிணறுகளுக்கு கடன்கள் வழங்க ஆண்டிப்பட்டி தொகுதியில் உற்பத்தியாகிற— வைகை ஆற்றிலேயே ஆழக் குழாய்க் கிணறுகளைப் போட்டு பெரிய மிராசுதாரகள் அரசை ஏமாற்றி மக்களுக்கு வரும் தண்ணீரை அவர்களுக்குக் கிடைக்காது ஏமாற்றுகிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இது பொதுப் பணித்துறை அமைச்சர் சம்பந்தப்பட்டது. எனவே கேள்வியை பொது பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை கோவிந்தராசன்: இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிராமப்புறங்களில் இருக்கிற க்ரெடிட் சொஸைட்டிகள் கடன் வழங்கும்போது ஆண்டுக்கு ஒரு முறை கூடிக்கொண்டே போகிறது. ஒரு கிராமத்தில் இரண்டாயிரம் ஏக்கர்கள் இருக்கின்றன என்றால், அங்குள்ள குளங்கள், குட்டைகள், ஏரிகள் எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து லோன் கொடுக்கப்படுவதாகச் சொல்கிறார்கள். அம்முறையை நீக்குவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லை.

பாபநாசம் திட்டப் பகுதியில் மேய்ச்சல் நிலங்கள்.

*58 வினா—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பாபநாசம் ப்ராஜக்ட், அப்பர்டாம், சேர்வலாறில் வாழும் மக்களின் மாடுகளை வழக்கம் போல் மேய்ச்சலுக்கு அனுமதிக்க காட்டு இலாகா மறுப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் யாது?

மாண்புமிகு க. உ. ரொ. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) வனவிலங்கு சரணாலயங்கள் என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ள இடங்களில் அரசு வனவிலங்கு பராமரிப்பினைத் தீவிரப்படுத்தியுள்ள காரணத்தால் அந்தச் சரணாலயங்கள் அமைந்துள்ள இடங்களில் வனவிலங்குகளைக் காப்பதன் அவசியத்தை முன்னிட்டு, ஒரு சில பகுதிகளில் மட்டுமே மேய்ச்சலை அனுமதிப்பது என்று கட்டுப்பாடு செய்ய வேண்டியதாக உள்ளது.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: இராமநாதபுரம் மாவட்டத்தில் கிழக்குப் பகுதியில் பெரும் பகுதி முள் செடியாக இருக்கிறது. அந்த இடங்களில் கூட ஆடுமாடுகள் மேய்வதைத் தடை செய்கிறார்கள். அது பற்றி அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கேள்வி, பாபநாசம் திட்டப் பகுதியில் மேய்ச்சல் நிலங்கள் பற்றியது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியதல்ல. தனிக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: இந்த பாபநாசம் அணைக்கட்டுப் பகுதிக்குக் கீழே உள்ள பூமி விளை நிலங்களாக இருப்பதால் அந்தப் பூமியில் கால்நடைகளை மேய்ப்பதற்கு வசதி இல்லாததால், கால்நடைகளை மேய்ப்பதற்கு ஒரு பகுதியை ஒதுக்கித் தர அரசு முன்வருமா? பகலில் புலிகள் கீழே வர நியாயம் இல்லை. ஆகவே ஒரு பகுதியை மேய்ச்சலுக்காக ஒதுக்கித் தர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: புலிகள் அந்தப் பகுதியில் பகல் நேரங்களில் வருவதில்லை என்பதை ஒத்துக் கொள்கிறேன். புலிகள் பகல் நேரங்களில் வருகின்றன என்ற காரணத்தால் கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலங்கள் ஒதுக்கப்படவில்லை என்று இல்லை. கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுமதித்தால் அங்கேயிருக்கிற காய்ந்துபோன புல்வெளிப் பகுதிகளில் கால்நடைச் சொந்தக்காரர்கள் தீ இட்டுக் கொளுத்துவதின்மூலம் காடுகளில் உள்ள மரங்களுக்கு ஆபத்து இருக்கிறது. ஆகவே, இந்த மேய்ச்சலை இத்துறை தடை செய்திருக்கிறது. இங்கிருந்து புல் வெட்டிக்கொண்டு போய் தொழுவங்களில் மாடுகளுக்குக் கொடுக்க அனுமதி அளிக்கப்படுகிறது.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: எங்கள் பகுதியில் ஆடுமாடுகள் மேய்ப்பதற்கு இடவசதி செய்து தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இது தஞ்சை மாவட்டத்திலிருக்கிற பாபநாசத்தைப் பொறுத்தது அல்ல. இது நெல்லை மாவட்டத்திலுள்ள பாபநாசத்தைப் பொறுத்தது.

திரு. என். வரதராசன்: தலைவரவர்களே, நேற்று காட்டு வளர்ப்புக் கோரிக்கையின் மீது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது சிறு விவசாயிகளின் பிரச்னை பரிசீலிக்கப்பட வேண்டியிருக்கிறது என்று சொன்னேன். அதை ஒட்டியேதான் இந்த கால்நடை மேய்ப்பும். இன்றைக்கு கால்நடையைப் பற்றி விவாதிக்க இருக்கிறோம். இப்படிப்பட்ட நிலையில் கால்நடையை வளர்க்க என்று ஒரு பகுதியை ஒதுக்க அரசு புனர் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: [illegible] தலைவர் அவர்களே, கால்நடையை வளர்க்க ஒரு பகுதியை ஒதுக்குவது என்பது சாத்தியக் கூறு இல்லாததாகும். என்றாலும் விவசாயிகளுடைய நலனைக் கருத்தில் கொண்டு, இந்தப் பகுதியில் இருக்கிற புல்லை வெட்டிக் கொண்டு போய் தொழுவங்களில், இருக்கும் கால்நடைகளுக்கு கொடுக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது.

பல்வேறு விழாக்களில் உணவு வழங்குகின்றபோது, அதற்கு கட்டுப்பாடு இல்லை. அதைப் போல சமுதாய நலத் துறையில் ஈடுபட்டிருக்கிற ரோடரி கிளப் போன்ற சங்கங்கள் ஏதாவது உணவு வழங்குகின்ற நேரத்தில், அதற்கும் கட்டுப்பாடில்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிட்டப்பா கேட்ட போது, இந்த விருந்துக் கட்டுப்பாடு எடுத்து விடப்படுமா அல்லது நீக்கி விடப்படுமா என்று கேட்டபோது, அதை எடுக்கத் தேவையில்லை, இப்போது அமுலில் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அமுலில் இல்லாத ஒன்றை சட்டமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியமென்ன?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுக்குத் தொந்திரவு கொடுக்காத ஒரு சட்டம் அமுலில் இருப்பதால் எந்த விதமான இடையூறும் இருக்காது என்று கருதுகிறேன்.

[முற்பகல் 9-20]

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, நான் கேட்க விரும்பிய கேள்வியை கேட்டுவிட்டார்கள். நடைமுறையில் இல்லாத சட்டத்தை எதற்காக வைத்திருக்க வேண்டும். ஒரு ஊரில் 300 குடும்பங்கள் இருக்கிறது என்றால், ஒரு சில பேர்களை விட்டுவிட்டு திருமணங்கள் போன்றவற்றை நடத்துவது எவ்வளவு சிரமம் இருக்கிறது. இதில் எனக்கு சொந்த அனுபவம் இருக்கிறது. இதனால் பெரிய தகராறுகள் கூட நடந்து விட்டிருக்கின்றன. 10, 15 பேர்களை கூப்பிடவில்லை என்ற காரணத்திற்காக இரண்டு கட்சிகளாகவே மாறிவிடுகின்ற நிலையும் ஏற்படுகிறது, சாப்பாடு போடுகிற இந்தச் சட்டத்தை நாமே இயற்றி விட்டு நாமே உடைப்பது சரியாக இல்லை. ஆகவே இதை இன்னும் வைத்துக்கொண்டிருப்பது நல்லதல்ல, எனவே இதை எடுத்துவிடுவதற்கு அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: ஒரு சில உறவினர்களை திருமணங்களுக்கு கூப்பிடாத நிலை ஏற்பட்டு விடாது, ஏனென்றால் முந்திய நாள் 200 பேர்களுக்கு சாப்பாடு போடலாம் காலையில் 200 பேர்களுக்கு மத்தியானம் 200 பேர்களுக்கு இரவில் 200 பேர்களுக்கு போடலாம் என்றிருக்கிறது. இருந்தாலும் இந்தக் கட்டுப்பாட்டை எடுப்பதைப்பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம்: தலைவர் அவர்களே, இந்த விருந்துக் கட்டுப்பாடு அமலில் இருந்தபோது எங்கள் பகுதியில் வட்டச் செயலாளர் ஒருவர் மகளின் காது குத்து விழா என்று

நடத்தி 500 பேர்களுக்கு மேல் சாப்பாடு போட்டார்கள். இந்தக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. சட்டத்தை காற்றில் பறக்கவிட்டு விட்டார்கள். இப்படிப்பட்டவர்களை கண்டுபிடித்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, வைபவத்திற்கு வருகின்றவர்களின் தலைகளை எண்ணி எத்தனை பேர்கள் சாப்பிட்டார்கள் என்று கணக்கெடுக்க முடியாது. காரணம் வைபவத்திற்கு வந்தவர்கள் எல்லாம் உணவு உண்டார்கள் என்று சொல்லி விட முடியாது. அப்படி கணக்கெடுக்க வேண்டுமென்றால் இலைகளை எண்ணித்தான் கணக்கெடுக்க வேண்டும். அது இயலாத காரணத்தால்தான் அப்படியே இதைக் விட்டு வைத்திருக்க கூடும்.

GANDARVAKOTTAI HIGH SCHOOL.

*60. THIRU RAJKUMAR VIJAYA RAGUNTHA TONDAMAN: Will the Hon. the Minister for Education be pleased to state.—

(a) Whether representation has been received during July 1977 from the parents and public of Gandarvakottai, Pudukottai District, regarding irregularities in the Gandarvakottai High School;

(b) if so, the nature of complaint; and

(c) the action taken by the Government on the matter?

மாண்புமிகு செ. அரங்கநாயகம்:

(அ) பெற்றோர்களிடமிருந்து மே மற்றும் ஜூன் மாதங்களில் மனுக்கள் பெறப் பெற்றுள்ளன.

(இ) பள்ளி மாணவர்களின் கூட்டுறவு பண்டக சாலையின் செயலாளர் பதவி வகித்த திரு. பி. எஸ். பக்கிரிசாமி என்னும் பட்டதாரி ஆசிரியர் பண்டகசாலையின் நிதி நடவடிக்கைகளில் விதிக்குப் புறம்பாக நடந்ததாக தெரிவித்து அவரை அப்பள்ளியிலிருந்து மாற்றம் செய்ய கோரியிருந்தனர்.

(உ) திரு. பக்கிரிசாமி ரகுநாதபுரத்திலுள்ள அரசினர் உயர்நிலைப் பள்ளிக்கு மாற்றப்பட்டுள்ளார்.

[1977 ஆகஸ்ட் 17

கிழக்குக் கடற்கரைச் சாலை.

*61. வினா.—திரு. என். கிட்டப்பா & திரு. எஸ். கணேசன்:

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-கன்னியாகுமரி கடலோரப் பாதை அமைப்பது குறித்து மாநில அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: சென்னை-கன்னியாகுமரி கடலோர நெடுஞ்சாலையை ஒருவழிச்சாலையாக மேம்படுத்த ரூ. 28.50 கோடி மதிப்பீட்டிலும், இருவழிச்சாலையாக மேம்படுத்த ரூ. 44.00 கோடி மதிப்பீட்டிலும் திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. நாளதுவரை மத்திய அரசு இதற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. எனினும் இக் கிழக்கு கடற்கரைச்சாலை செல்லும் இராமநாதபுரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் உள்ள சில மோசமான பகுதிகளையாவது மேம்படுத்த ரூ. 54.47 இலட்சம் மதிப்பீட்டில் தலைமைப் பொறியாளர் மாநில அரசுக்கு ஒரு திட்டம் அனுப்பியுள்ளார். இவற்றில் ரூ. 26.315 இலட்சம் கொண்ட மூல திட்டத்தை (Original works) மத்திய அரசுக்கு பரிந்துரைப்பது குறித்தும், ரூ. 28.155 இலட்சம் கொண்ட செப்பனிடும் திட்டத்தை (Repair works) 1978-79-ல் கொண்டு வருவது பற்றியும் அரசு பரிசிலனை செய்து வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து கன்னியாகுமரி வரை கடலோரப் பாதை அமைக்க வேண்டும் என்பது நீண்ட காலமாக இருந்து வருகிறது....

(மதுராந்தகம் உறுப்பினர் திரு. சி. ஆறுமுகம் அவர்கள் இருக்கையில் இருந்தவாறே ஏதோ பேசிக்கொண்டிருந்தார். இதனால் திரு. கிட்டப்பா அவர்களின் கேள்வி தடைபட்டது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது திரு. கிட்டப்பா அவர்களுக்கே இடைஞ்சலாக இருக்கிறது, இதிலிருந்து உறுப்பினர்களுடைய கடமைகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

திரு. என். கிட்டப்பா: இதை செயல்படுத்துவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து மானியத் தொகை அல்லது கடன் தொகை கேட்டு நமது மாநில அரசு கோரியுள்ளதா? அவ்வாறு கோரியிருந்தால் மத்திய சர்க்காரிலிருந்து என்ன பதில் வந்தது, எப்படியாவது மத்திய சர்க்காரின் உதவி பெற்று இதை செயல்படுத்துவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு முன்னால் இருந்த அரசு 1972-ம் ஆண்டு, கிழக்கு கடற்கரை சாலை அமைப்பதை தேசிய நெடுஞ்

1977 ஆகஸ்ட் 17]

சாலையாக ஆக்க வேண்டும் என்று பரிந்துரை செய்தது. நிதி பற்றாக்குறை காரணமாக மத்திய அரசு இதை எடுத்துக் கொள்வதற்கில்லை என்று அப்போது அறிவித்துவிட்டது. பின்னால் மாநில அரசு, இதை தேசிய நெடுஞ்சாலை தரத்திற்கு இதை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசைக்கேட்டுள்ளது. அதற்கு மத்திய அரசிடமிருந்து எந்தவிதமான பதிலும் வரவில்லை. இருந்தாலும் தொடர்ந்து இதில் மாநில அரசு வெற்றி பெற முயற்சிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். கணேசன்: தலைவர் அவர்களே, இந்த கிழக்குக் கடற்கரை சாலை பல இடங்களிலே கடலோரத்தை விட்டு அதிக தூரத்திற்கு ஒதுங்கியிருக்கிறது. அப்பேர்பட்ட குறைகளை இந்த அரசு போக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிழக்கு கடற்கரை சாலை சென்னை-செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சை, ராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் வழியாகச் செல்லும் வெவ்வேறு சாலைகளையும், பாலங்களையும் ஒருங்கிணைக்கின்ற முயற்சியில் ஈடுபட்டு அதற்கான திட்டம் ஏற்கனவே அமுலில் இருக்கிறது. புதிதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியது போல் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கடற்கரை ஓரச் சாலைகளில் மூன்றில் ஒரு பகுதி இராமநாதபுரத்தில் இருக்கிறது. இந்தச் சாலைகளை கவனத்தில் எடுத்துக் கொள்வதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், அங்கே போடப்பட்டுள்ள பாலங்களைப் பலர் பார்த்திருப்பார்கள். கள்ளக் கடத்தல்காரர் ஒருவருக்கு காண்ட்ராக்ட் விடப்பட்டு, அவர் அங்கில்லாத நிலைமையில், அந்த வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன என்பது உண்மையா? அதைச் சீக்கிரம் போடுவதற்கான முயற்சிகளை இந்த அரசு துரிதமாக எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் ஆகியவைகளிலுள்ள சாலைகளில் சில பகுதிகளை மாநில அரசே அதனைச் செப்பனிடும் பொறுப்பையும், நிர்வகிக்கும் பொறுப்பையும் மேற்கொண்டு, அதற்காக 54.47 லட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றச்சாட்டிற்கான தகவல்களைக் கொடுத்தால், அதைப் பற்றி பரிசிலனை செய்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1977 ஆகஸ்ட் 17

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, இந்தச் சாலை பிரசித்திப் பெற்ற, பிரக்யாதி பெற்ற சாலையாகும். ராமன்—சுக்கிரிவன் கூட்டணி வகுத்து, இராவணனை போர் தொடுப்பதற்காக சென்ற சாலை என்று சொல்லப்படுகிறது. அந்தச் சாலையை அமைப்பதற்கு மத்திய அரசு கவனம் செலுத்தாததற்கான காரணம் என்ன? எனவே, மத்திய அரசுக்கு நம் மாநில அரசு ஓலை அனுப்பி வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே கூறியது போல், மத்திய அரசு நிதிப் பற்றாக்குறை என்று கூறி, இதிலே தயக்கம் காட்டி வருகிறது. ஏற்கனவே, 1976ஆம் ஆண்டு மீண்டும் மத்திய அரசை இதிலே ஈடுபடுமாறு வேண்டி கடிதம் எழுதப்பட்டுள்ளது. அந்தவகையிலே, இந்த அரசும் முயற்சிகள் எடுத்துக் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை—கன்னியாகுமரி கடலோரப் பகுதிக்கு முழுவதும் இடையிடையே ஆங்காங்கே உள்ள ஆறுகளுக்கு எத்தனை புதிய பாலங்கள் கட்டப்பட வேண்டியிருக்கிறது என்பதையும்; அவற்றிற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, செங்கற்பட்டு, தென் ஆற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களின் வழியாக பல்வேறு இடங்களில் இம்மாதிரி பாலங்கள் கட்டுவதற்கான முயற்சியில் மத்திய அரசு 40 பாலங்கள் கட்ட முன்வந்தது. எந்தெந்தப் பாலங்கள் என்ற குறிப்பு, அதற்கான மதிப்பீட்டுத் தொகைக்கான தகவல்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, இந்த கிழக்கு கடற்கரை சாலை எல்லைப் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்தது. இதற்காக முன்னாலே 2½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு பாலங்கள் கட்டப்பட்டன. பல இடங்களில் ரோடுகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைத் தொடர்ந்து கவனிக்காத காரணத்தினால், அங்கே பல இடங்கள் போக்குவரத்துக்கு லாயக்கற்ற நிலைமையில், போட்ட முதலீடு வீணாகக் கூடிய காரணத்தினாலே, அந்த மாதிரியான போக்குவரத்து இடங்களை மத்திய அரசின் நிதி உதவி கிடைக்கின்ற வரையில், மாநில சர்க்காரே தங்களுடைய நிதியிலிருந்து செப்பனிடுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1977 ஆகஸ்ட் 17]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய யோசனையின் அடிப்படையில், ஏற்கனவே ராமநாதபுரம், தஞ்சை மாவட்டங்களில் இத்தகைய போக்குவரத்திற்கான ரோடுகளை செப்பனிடுவதற்காக 54.47 லட்சம் ரூபாயை இந்த அரசு ஒதுக்கியுள்ளது. அந்த வகையிலே செப்பனிடும் பொறுப்பையும், மேலும் புதிய பாலங்கள் அமைக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயத்திலே, மத்திய அரசை நிதி உதவி கேட்டு பெறுவதற்கான முயற்சியில் மீண்டும் ஈடுபடுவதற்கான யோசனை பரிசீலனையில் இருக்கின்றது என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, சாலைகள், பாலங்கள் என்ற தலைப்பிலே இப்படிப்பட்ட போக்குவரத்துக்கான வசதிகளை கான்ட்ராக்ட் விடுவதன் மூலம், கான்ட்ராக்ட்காரர்கள் சரியான முறையில் இந்த ரோடுகளையும் பாலங்களையும் கட்டாததன் காரணமாக, வெகு சீக்கிரமே பழுதடைந்து விடுகிறது. இதனால் அரசுக்கும் நஷ்டம் ஏற்படுகிறது. மக்களுக்கும் போக்குவரத்து வசதி இல்லாத நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இந்த கான்ட்ராக்ட் முறையை அடியோடு கைவிடக்கூடிய நிலையை இந்த அரசு யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிழக்கு கடற்கரைச் சாலையிலுள்ள பாலங்களில் எந்தப் பாலங்களில் இப்படி குறைகள் ஏற்பட்டன, எந்த கான்ட்ராக்டர்களால் இந்தக் குறைகள் ஏற்பட்டன என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவார்களானால் அந்த அடிப்படையில் உறுப்பினரின் ஆலோசனை பரிசீலிக்கப்படும்.

பாக்கூர் திரு. சு. சுப்பிரமணியம் : திருக்கழுக்குன்றத்திலிருந்து மரக்காணம் வரை கிழ் கடற்கரைச் சாலை பழுதுபட்டிருக்கும் காரணத்தால் ஏராளமான தொகை செலவழித்து பாலங்கள் கட்டியும் போக்குவரத்து வசதியற்று காட்சியளிக்கிறது. அதை மாநில சர்க்கார் கவனித்து ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சாலைகளைச் செப்பனிடுவதற்காக மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று மாநில அரசு கோரியுள்ளதற்கு அவர்கள் பதில் அளித்த பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் கோரிக்கையைப் பற்றி மாநில அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. சிவசாமி : என்னுடைய தொகுதியில் 12 மைல் தூரம் இந்த ரோடு போய்க்கொண்டிருக்கிறது. பல பாலங்கள்

[1977 ஆகஸ்ட் 17

கட்டப்பட்டு முடிந்துவிட்டன. பாலத்திற்கு பக்கத்தில் தோண்டிய பள்ளங்கள் சரியானபடி மூடப்படாததன் காரணமாக போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கிறது. இதை உடனடியாக அரசு கவனிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிழக்குக் கடற்கரைச் சாலையிலுள்ள குறைபாடுகளைத் தனித்தனியாக ஒவ்வொரு இடத்திலும் எடுத்துச் செய்ய வாய்ப்பு இல்லை. ஒட்டுமொத்தமாக மத்திய அரசு நிதிபெற்று விரைவில் அவற்றுக்கு ஏற்பாடு செய்யப்படும்.

திரு. எம். ஏ. லத்தீப் : இது முக்கியமான சாலை. இதனுடைய முழு நீளம் எவ்வளவு? இந்தச் சாலைக்கிடையே எத்தனை பாலங்கள் கட்டப் பட்டிருக்கின்றன அல்லது கட்டப்பட்டு வருகின்றன? இந்தப் பாலங்களைக் கட்ட ஒரே காண்டிராக்டர் அமைக்கப்பட்டிருக்கிறாரா அல்லது பல காண்டிராக்ட்டர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றனவா? அப்படியானால் எத்தனை காண்டிராக்டர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது? அது முழுமையாக நிறைவேற்றப்பட்டதா இல்லையா? இல்லை என்றால் ஏன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கிழக்குக் கடற்கரைச் சாலையில் மொத்த நீளம் 773 கிலோ மீட்டர். இச்சாலையில் 40 பாலங்களைக் கட்டுகின்ற பொறுப்பு பல்வேறு காண்டிராக்டர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எந்தெந்த காண்டிராக்டர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என்ற தகவல் இல்லை. எந்தெந்தப் பாலங்கள் முடிவுற்றுள்ளன, முடிவுறும் நிலையில் இருக்கின்றன என்ற தகவல் இல்லை. அவற்றைப் பிறகு தருகிறேன்.

கடலூர் துறைமுகம்.

*62 வினா—திரு. சி. கோவிந்தராசன் & திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கடலூர் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : கடலூர் துறைமுகத்தின் முகத்துவாரத்தை 9 அடி ஆழம் உள்ளதாக விருத்தி செய்யும் வகையில் மத்திய அரசின் உதவியுடன் கீழ்க்கண்ட பணிகளும், இதர பல பணிகளும் ரூ. 199 இலட்சம் மதிப்பீட்டில் 1964ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டு 1974ஆம் ஆண்டில் முடிக்கப்பெற்றுள்ளன.

1977 ஆகஸ்ட் 17]

பணிகள் :—

(1) கடிலம்—பரவனார் ஆறுகளை ஒரு குறிப்பிட்ட இடத்தில் கடலுடன் கூடும்படி செய்து, அலைவாயிலில் அலை தடுப்பு கட்டுவதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வரையில் சுவர்கள் கட்டுதல்.

(2) தென் அலைவாய் அலைத்தடுப்பு, மற்றும் மணிக்கு 350 டன் மணலை உறிஞ்சும் இரண்டு உறிஞ்சிகள் பொருத்தப்பட்ட 840 அடி கான்கிரீட் பாலம் அமைத்தல்.

இவை தவிர, கீழே குறிப்பிட்டுள்ளவாறு பல பணிகளும் ரூ. 54.835 லட்சம் செலவில் 1974-75, 1975-76, 1976-77 ஆண்டுகளில் மாநில அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டு முடிக்கப்பெற்றுள்ளன.

வரிசை எண்.	பணிகள்.	செலவு. (ரூபாய் லட்சத்தில்.)
(1)	(2)	(3)
1	உப்பளங்களை பண்படுத்தி அவைகளை சரக்குகள் அடுக்கி வைக்கிற பகுதியாக மாற்றுதல்.	17.00
2	சிறு படகுகளை இழுத்துச் செல்வதற்காக இரண்டு இழு படகுகளை வாங்குதல்.	3.75
3	சரக்குத்துறை எல்லைச் சுவர் கட்டுதல்.	1.50
4	கடலின் முன் பகுதியில் (Nose point) துறை முக அலுவலகக் கட்டிடத்தையும் அடையாள அறிவிப்பு (Signal Cabin) அறையும் கட்டுதல்.	2.385
5	மணிக்கு 205 கன மீட்டர் மண் உறிஞ்சும் சக்தியுள்ள 8 மீட்டர் ஆழம் தோண்டி 360 மீட்டருக்கு அப்பால் வெளியே கொண்டு செல்லக்கூடிய குழாய்களுடன் கூடிய தூர்வாரி கப்பல் ஒன்று வாங்குதல்.	30.20
	மொத்தம் ..	54.835

திரு. என். கிட்டப்பா : கடலூர் துறைமுகம் நெய்வேலி அருகே இருக்கும் காரணத்தால், தற்போது இரண்டாவது சுரங்கம் கூட தோண்டப்பட ஆவன செய்யப்பட்டு வருவதால் கடலூர் துறைமுகத்தை அதிக அளவுக்குப் பெரிய துறைமுகமாக உருவாக்க நமது அரசு மத்திய அரசை வலியுறுத்தி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; கடலூர் துறைமுகத்தை விரிவுபடுத்தும் பணி பெல்லாரி—ஹாஸ்பெட் இரும்புக் கனியை ஏற்றுமதி செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன்தான் துவக்கப்பட்டது. இந்த Bellary, Hospet இரும்புக்கனி இத்துறைமுகத்திற்கு வராத நிலையில் நெய்வேலி பகுதியில் இருந்து நிலக்கரியை ஏற்றுமதி செய்யக்கூடிய அளவுக்கு நிலைமைகள் வருமானல் மத்திய அரசிடம் பரிந்துரை செய்து ஆவன செய்ய அரசு முன்வரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி * இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(2) ஒத்திவைப்புத் திர்மானம்.

சைதாப்பேட்டை எம். சி. ராஜா அரிசன மாணவர்கள் விடுதியில் நடந்த சம்பவம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :* அடுத்து ஒத்திவைப்புத் தீர்மானம். நேற்றைய தினம் சைதாபேட்டை எம். சி. ராஜா ஹாஸ்டலில் நடந்த சம்பவம் பற்றி விவாதிக்கப் பேரவையின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டுமென்று ஏறக்குறைய 11 மாண்புமிகு உறுப்பினர்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிருர்கள், திருவாளர்கள், வி. கே. கோதண்டராமன், ஜே. ஜேம்ஸ், மு. அம்பிகாபதி, ஏ. ஆர். மாரிமுத்து, திரு. எம். ஏ. லத்தீப், து. புருஷோத்தமன், ஒ. சுப்ரமணியன், என். வரதராஜன், கே. கந்தசாமி, சோ. அழகர்சாமி, வ. துலுக்காணம், எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் கருணாநிதி ஆகியோர் தந்திருக்கிருர்கள். இதிலே யாராவது ஒருவர் சொன்னல் நல்லது. எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிவிட்டால் போதும் என்று கருதுகிறேன். மற்றக் கட்சிக்காரர்களும் சந்தர்ப்பம் வேண்டுமென்ருல் தருகிறேன். மன்னிக்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பெரு மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சென்னை சைதாப்பேட்டையிலே இருக்கக்கூடிய எம். சி. ராஜா அரிசன மாணவர்கள் விடுதியிலே அந்த மாணவர்கள் மீது கண்ணீர் புகையும் தடியடிப் பிரயோகமும் செய்து பல்வேறு வகைகளிலே கடுமையாகத் தாக்கப்பட்டார்கள் என்பதை பத்திரிகை வாயிலாகப் பார்க்கிருேம். நேரிலே தெரிந்தவர்களிடம் கேட்டுத் தெரிந்ததிலிருந்தும் தெரிய வருகிறது. அந்த மாணவர்கள் அவ்வளவு பேர்களும் தாழ்த்தப்பட்ட மாணவர்கள். அரிசன இனத்தைச் சேர்ந்த மாணவர்கள். அவர்கள் கோரி இருப்பது எல்லாம் 75 ரூபாயாக இருப்பதை 100 ரூபாயாக ஆக்கவேண்டும் என்பது, அது மட்டுமல்ல, அந்த விடுதிப் பராமரிப்பு மிகவும்....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எப்படி நடந்தது, எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்று மட்டும் சொல்லுங்கள், தீர்மானத்திற்கு இசைவு கொடுக்கப்பட்டால்தான் மற்றவைகளை சொல்லவேண்டும். இன்னும் பேச வேண்டியவர்கள் இருக்கிருர்கள், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன் : அவர்கள் சில கோரிக்கைகளை வைத்து அந்த அடிப்படையிலே அங்கே இருக்கிற வார்டன் சரியாகக் கவனிக்காதது மட்டுமல்ல, அங்கே அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய உணவைக்கூட சரியான முறையிலே கொடுக்காமல் இருந்தார்கள் என்ற காரணத்தினுலே அங்கே மாணவர்கள் ஆத்திரப்பட்டிருக்கிருர்கள். மாணவர்கள் பசியும் பட்டினியுமாக இருந்ததால், மாணவர்கள் ஆத்திரப்படக்கூடிய சூழ்நிலை இருந்திருக்கிறது. இப்படிப்பட்ட நிலை அங்கே அந்த விடுதியிலே மட்டுமல்ல, மற்ற ஹாஸ்டல்களிலும் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. ஆகவே, சர்க்கார் உடனடியாகக் கவனித்து ஆகவேண்டும். இதுபோன்ற சூழ்நிலைகள் ஏற்படாதபடி பார்த்து மாணவர்களுடைய பசி, பட்டினியைப் போக்க வேண்டும். அவர்கள் கேட்கிறபடி 75 ரூபாயை 100 ரூபாயாக ஆக்க வேண்டும். அவர்கள் கேட்டு இருப்பது நியாயமானது. அப்படிக் கேட்ட மாணவர்கள் மிகவும் கொடூரமாகத் தாக்கப்பட்டிருக்கிருர்கள். அவர்கள் பட்டினியாகக் கிடந்த நேரத்திலே அப்படி நடந்திருப்பதற்கு அந்த வார்டன் செய்த செயல்தான் அடிப்படைக் காரணம். ஆனல் மாணவர்கள் மீது பழிபோட்டு வேறு விஷமிகள் அவர்களோடு சேர்ந்து கொண்டு அவர்கள் பஸ்களின்மீது கல்லெறிவதும், பொது மக்கள் மீது கல்லெறிவதும் நடந்திருக்கிறது. ஆகவே, அவர்களைக் கைது செய்தது நியாயமல்ல என்பதைத் தெரிவித்து அவர்களையெல்லாம் நிபந்தனையின்றி விடவேண்டும், அதோடு அவர்கள் கோரிக்கை தீர்க்கப்பட வேண்டுமென்பதை நாம் விவாதிப்பதற்

காக இந்தச் சபையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜெ. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நேற்றைய தினம் சைதாப்பேட்டை அரிசன மாணவர்கள் விடுதியில் நிகழ்ந்த விரும்பத் தகாத செயலால் மாணவர்களிடையே ஒரு பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிறது. மாணவர்கள் சில கோரிக்கைகளை வைத்து பல நாட்கள் ஆகியும்கூட அதற்குப் பரிகாரம் கிடைக்கும் என்று எதிர்பார்த்தும் அந்தப் பிரச்னை தீர்க்கப்படாத காரணத்தால்தான் இப்படிப் பட்ட நிகழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

[முற்பகல் 9.40]

பிரச்சினைகள் அப்பொழுதுக்கப்பொழுது தீர்க்கப்படும் என்று சொன்னால் இம்மாதிரியான விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடைபெறாமல் இருப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் இங்கே பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருப்பதால் இந்த நிகழ்ச்சிகள் நடைபெற்றிருகின்றன.

குறிப்பாக நேற்றையதினம் அங்கே மாணவர்கள் தங்கியிருந்த அறைகளுக்கு உள்ளே சென்று போலீஸ்காரர்கள் தடியடி பிரயோகம் செய்தது மட்டுமல்ல, கண்ணீர்ப்புகை பிரயோகம் அறைகளுக்குள்ளே சென்று செய்திருக்கிறார்கள் என்றால் இதற்குத் தேவை உண்டா என்பதை இந்த அரசு உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். ஒரு வேளை இந்த நிகழ்ச்சிகளைத் தடுப்பதற்குப் போலீஸ் உதவி தேவைப் பட்டிருந்தால் வெளியேயிருந்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கலாம். ஆனால் மாணவர்கள் தங்கியிருந்த அறைக்குள்ளேயே தடியடிப்பிரயோகம் செய்திருப்பது கண்டிக்கத் தக்கது.

அதுமட்டுமல்ல, இத்தனை நிகழ்ச்சிகளுக்கு அப்புறம் மேலும் பல மாணவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டிருக்கிறது என்பதை எண்ணும்பொழுது நிச்சயமாக மாணவர்களிடையே இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற அமைதி குலைவதற்கு இது ஏதுவாக இருக்கக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டத்தான், இந்தப் பிரச்சனைகளை அரசு உடனடியாகத் தீர்த்து வைக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் மாணவர்கள் மேல் உள்ள வழக்குகளை உடனடியாக வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரிவாக விவாதிக்க இந்த அவையில் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, நேற்றைய தினம் நடந்திருக்கின்ற இந்தச் சம்பவம் ரொம்பவும் ருந்தத்தக்க நிகழ்ச்சி. தேங்கியிருக்கும் பிரச்னை வெடிக்

கிறது. அதிகாரிகளின் செயல்கள் நீடிக்கின்றன. அதன் விளைவாக சைதாப்பேட்டையில் நடந்திருக்கும் இந்தச் சம்பவங்கள் தொடர்கின்றன. லத்தி சார்ஜ் நடந்திருக்கிறது. கண்ணீர்புகைக் குண்டு வீசப்பட்டிருக்கிறது. மாணவர்கள் படுகாயப்பட்டிருக்கிறார்கள், கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்தப் பிரச்னையில் அதிகாரிகளிடத்திலே கிளைவ் ஹாஸ்டல் பாணியும், பாளையங்கோட்டை பாணியும் தொடர்கிறதோ என்ற ஐயப்பாடு எழுகிறது. அரசு இதில் கவனம் செலுத்தி பழைய பாணி தொடராத முறையில் கவனிக்க வேண்டும். இத்தகைய செயலில் போலீசார் கண்ணீர்ப்புகை குண்டு வீச வேண்டிய அளவிற்கு அங்கே என்ன அவசியமான நிலை எழுந்தது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதைப் பற்றித் துல்லியமாக விசாரிக்க ஒரு கமிஷனை அமைப்பது பற்றி விரிவாக விவாதிக்க இந்த அவையின் பிற நிகழ்ச்சிகளை ஒத்தி வைப்பது மிகவும் சரியானது என்று கருதுகின்ற காரணத்தால் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவரவர்களே, நேற்றைய் தினம் நடந்த சம்பவம் ரொம்ப துரதிருஷ்டமானது. மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை, தங்களுக்கிருக்கின்ற சிரமங்களை சீர்திருத்தம் செய்ய வேண்டும், மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, அது ஒழுங்காகக் கவனிக்கப்படாத முறையில், இதற்கு அங்குள்ள அதிகாரிகள் முயற்சியெடுக்காததன் விளைவாக இந்த நிகழ்ச்சிகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த மாதிரி ஆங்காங்குள்ள குறைகள் அப்பொழுதைக்கப்பொழுது கவனிக்கப்பட்டுத் தீர்க்கப்பட்டு இருக்குமேயானால் இந்த மாதிரி சம்பவங்கள் ஏற்பட்டிருக்காது. வார்டனைப் பற்றிப் பல குறைகள் சொல்லப்படுகிறது. உணவு சரியாக வழங்கப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. உணவுக்காகப் போதிய தொகை ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்கிறார்கள். குறைந்தபட்சம் ஒதுக்கிய தொகையாவது ஒழுங்காகச் செலவழிக்கப்பட்டு உணவு அளிக்கப்படுகிறதா என்று பார்த்து கவனித்திருக்க வேண்டும். அதைச் செய்யாததன் காரணமாக அவர்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டிருப்பதால் இதில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இது இந்த இடத்தில் மட்டுமல்ல, பலயிடங்களுக்கும் பரவலாம். இம்மாதிரி குறைபாடுகளைக் கவனிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இருக்கிற குறைகளை எடுத்துச் சொல்வதற்காக இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, நேற்று சைதாப்பேட்டை விடுதியில் மாணவர்கள் கோரிக்கைகளுக்காக வழியிலே ரோட்டிலே சென்று கல், சோடா பாட்டில்களை

எறிந்ததாகவும், அதன் மூலமாக அங்குள்ள பொதுமக்கள் ஆத்திரம் அடைந்து இவர்களை விடுதிக்குள் விரட்டிப்போய் அடித்ததாகவும், போலீசார் தலையிட்டு அமைதி காக்க முயற்சியெடுக்கும்பொழுது, கலவரம் கட்டுக்கு அடங்காமல் போய் கண்ணீர்ப்புகை, லத்தி சார்ஜ் போன்ற நிகழ்ச்சிகள் ஏற்பட்டதாகவும் பத்திரிகையிலே வந்துள்ள செய்தியைக் கண்டு மிகவும் துயரடைகிறேன்.

இந்தச் செயலைப் பற்றி முன்னாலே பேசியவர்கள் பேசினார்கள், மாணவர்களுக்குப் பரிந்து கொண்டு பேசுவதைப்போலப் பேசினார்கள். அதை நான் பாராட்டுகிறேன். என்றாலும், நான் அடிக்கடி கூறுவது தந்தை ஸ்தானத்திலேயிருந்து நீங்கள் பிரச்னைகளை அணுக வேண்டுமென்று உங்களைப் பணிவோடு வேண்டுகிறேன். நாம் சட்டமன்ற உறுப்பினர்கள் மாத்திரமல்ல, பொறுப்புள்ள பிரஜைகள். 1 இலட்சம் மக்களை, எதிர்கால வாரிசுகளைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பில் இருக்கிறோம். அந்தப் பொறுப்பை நீங்கள்—நான் சொல்வதற்கு வருந்துகிறேன்—ஏதோ உங்களுக்கு இல்லாதது போல் நான் சொல்கிறேன் என்று பொருள் அல்ல—அன்பு காரணமாக நான் பரிந்துரை செய்யவில்லை—பிரம்பை எடுத்தால் அவர்கள் தங்கள்...............(மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான பிரச்னை. This has become a recurring feature, an unfortunate feature in our State.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் ஒத்தி வைக்கச் சொல்கிறாரா? ஒத்தி வைக்க வேண்டாமென்று சொல்கிறாரா?

திரு. கே. கந்தசாமி : ஏசுநாதர் அவர்களே சொல்லி இருக்கிறார்கள்—அஹிம்சைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்த மகான் அவர். அப்படி இருக்கிற நேரத்தில் நாம் பிரம்பு எடுக்காமல் எப்படி பிள்ளைகளை வளர்க்க முடியும். 'Discipline is essential for better growth.' ஆகவே, அருள் கூர்ந்து மாணவர்களிடம் மாத்திரம் நான் சொல்லவில்லை. 'It should be enforced on both the teachers and the taught' என்பதை நான் வலியுறுத்திக் கூற ஆசைப்படுகிறேன். ஆசிரியர்கள் ஏதோ சம்பளம் வாங்கினோம், படித்தால் படி, போனால் போ என்ற மனப்பான்மையை விட்டுவிட வேண்டும்.

அதே நேரத்தில், மாணவர்களும், ஆசிரியர்கள் நமக்கு குரு, தந்தை ஸ்தானத்தில் அவர்களுக்குப் பணிந்து கடமைச் செயலாற்ற வேண்டுமென்ற மனப்பக்குவத்தையும் இங்குள்ள தலைவர் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் பெற்றிருக்கின்றனர். அதற்காகத்தான் பெற்றோர் சங்கம் அமைக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தேன். புரட்சித் தலைவர் அவர்கள் அமைத்திருக்கிறார், வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். இப்படிப் பட்டவர்கள் மீது தயவு தாட்சண்யம் இன்றி நடவடிக்கை எடுத்தால்தான் எதிர்காலத்தில் இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நிகழாது. மாணவக் குழந்தைகளை அடித்தால் அது வேதனையாக இருக்கிறது...........(மணியடிக்கப்பட்டது) என்றாலும் அப்படிப்பட்ட துயர நிகழ்ச்சிகள் இனிமேல் நடைபெறாமலிருக்க பொறுப்புள்ள அதிகாரிகளை விசாரித்து, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். The lethargic tendency of the officials or the teachers should go immediately. அதற்குரிய நடவடிக்கையை, மெத்தனமாக இருக்கக் கூடிய நடவடிக்கையை எடுத்தவர்கள் மீது, அது வார்டனாக இருந்தாலும் யாராக இருந்தாலும் மாணவர்களது எதிர்காலம் வீணாகாமலிருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் இனி ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்ற காரணத்தால், இந்தச் சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து விவாதித்து, அதற்கு ஒரு தீர்வு காண அனுமதி தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்திப் : பேரவைத் தலைவரவர்களே, நேற்று சைதாப்பேட்டையில் நிகழ்ந்த நிகழ்ச்சி பல அம்சங்களில் நம்முடைய கவனத்தைக் கவரக்கூடிய நிகழ்ச்சியாக இருக்கிறது. முதலில், மாணவர்கள் தங்களுடைய கோரிக்கைகளை எவ்வளவு காலம் வரையிலே, அதிகாரிகளிடத்திலே கொடுத்து வந்திருக்கிறார்கள். அது ஏன் கவனிக்கப்படவில்லை என்பது ஒன்று.

அடுத்து, அவர்கள் போராட்டத்திலே இறங்குகிற வகையில் அந்தக் கோரிக்கைகளை அங்கே இருக்கிற வார்டன் அவர்கள் மேலதிகாரிகளிடத்திலே தெரிவித்து அதற்கு நிவாரணம் பெறுகிற அளவுக்கு ஏன் தெரிவிக்கவில்லை என்ற கேள்வியும் எழுகிறது.

அதே நேரத்தில் போலீஸ் அதிகாரிகள் சார்பாக ஒரு குற்றச் சாட்டு சொல்லப்படுகிறது. மாணவர்கள் அறையிலே காலி பாட்டில்களும், கற்கள் மூட்டைகளும் குவிக்கப்பட்டு வைக்கப் பட்டிருந்தன என்ற குற்றச்சாட்டும் சொல்லப்பட்டிருக்கின்றது. அப்படி காலி பாட்டில்களும் கற்கள் மூட்டைகளும் குவிக்கப்பட்டு

வைத்திருந்தன என்றால், அது வார்டனுக்குத் தெரியாமல் எப்படி அங்கே நடந்தது என்பது இன்னொரு கேள்வியாக இருக்கிறது. பொதுவாக, அரிசனங்கள் ஆஸ்டலிலே, வார்டன்களாக இருப்பவர்கள், அரிசன மாணவர்களை மனிதர்களாக நடத்துவதில்லை என்ற குறைபாடு இருப்பதை நாம் பார்த்து வருகிறோம்; நம் அனைவருக்கும் தெரியும். வார்டனாக இருப்பவர்கள். மாணவர்களைக் கேவலமாக நடத்தி வருகிறார்கள். அவர்களுடைய உணர்வுகளுக்குப் பாதகம் ஏற்படுகிற வகையில் நடத்துகிறார்கள். அதனால்தான் பொறுத்துப் பொறுத்து போராட்டத்திலே இறங்குகிறார்கள் என்பது ஒன்று. அவர்கள் போராட்டத்திலே இறங்கி ஏதோ ஒரு வகையிலே கிளர்ச்சி நடத்தினார்கள் என்றால் அந்தப் போராட்டத்திலே பொதுமக்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது இன்னொரு கேள்வியாக இருக்கிறது. அவர்களுடைய அறைக்குச் சென்று பொதுமக்கள் தாக்குதல் நடத்துகிறார்கள், அறைகளில் பாட்டில்கள் குவிக்கப்பட்டிருக்கின்றன என்ற குற்றச்சாட்டுகள் எல்லாம் சொல்லும்போது. இவைகளெல்லாம் அதிகாரிகளுக்குத் தெரியாமல். குறிப்பாக வார்டனுக்குத் தெரியாமல் எப்படி நடந்திருக்கிறது என்பது பெரிய கேள்விக் குறியாக இருக்கிறது.

ஆகவே, தொடர்ந்து மாணவர்கள் உலகத்திலே நடக்கின்ற நிகழ்ச்சிகளுக்கு சம்பிரதாயமாக ஒத்திவைப்பு தீர்மானம் கொடுப்பதும் சிலர் பேசுவதும் அதற்கு அரசு பதில் கொடுப்பதும், தலைவர் அனுமதி மறுப்பதும் சம்பிரதாயம் என்ற அளவில் இல்லாமல் ஒரு நாளாவது இந்த மாணவர்களது பிரச்னைகளை, முழுமையாகப் பேசித் தீர்வு காணுவது நன்றாக இருக்கும் என்ற காரணத்தாலே, நான் இதனை வலியுறுத்தி, சபை நடவடிக்கைகளை ஒத்திவைத்து, இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் இந்த அவை சம்பிரதாயத்திற்காகப் பேசுவதும், சம்பிரதாயத்திற்காகத் தள்ளிவிடுவதும் என்று சொல்வது அவ்வளவு பொருத்தமாக இல்லை. யோசித்து, சிந்தித்து, பரிசீலித்து, எது நியாயம் என்று தெரிந்துதான் சொல்லப்படுகிறது. அடுத்து மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள்.

[முற்பகல் 9.50]

*திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, சென்னை சைதாப்பேட்டையிலே எம். சி. இராஜா ஆஸ்டலில் நடைபெற்றுள்ள வேதனை மிகுந்த சம்பவம் குறித்து இங்கே மற்றக் கட்சிகளின் தலைவர்களும், உறுப்பினர்களும் தங்களுடைய ஆழ்ந்த துயரத்தை வெளிப்படுத்தி இருப்பதோடு, இதுபோன்ற சம்பவங்கள் நடை

பெறாமல் தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க அரசினுடைய கவனத்தைத் திருப்புகின்ற வகையில், இந்த அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டும் என்று கூறி இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை நானும் இந்த அவையின் முன்னால் வைத்திருக்கிறேன்.

மாணவர்களுடைய பிரச்னையை அரசியலாக ஆக்குகின்ற குறுகிய மனப்பான்மை திராவிட முன்னேற்றக் கழகத்திலே இல்லை என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கிறேன். அண்மையிலே ஈரோடு நகரத்திலே நடைபெற்ற ஒரு கல்லூரி விழாவில் நான் கலந்து கொண்டு பேசிய போது கூட, அங்கே விழாவிலே கலந்து கொண்ட மாணவர்களுக்கு இதே அறிவுரையை எடுத்துச் சொல்லி, படிக்கின்ற காலத்தைப் பாழாக்கிக்கொள்ளக் கூடாது என்பதை மிக மிக வலியுறுத்திக் கூறியது ஏடுகளிலேகூட வந்திருக்கிறது.

ஆனால் இப்போது நடைபெற்றிருக்கிற இந்தச் சம்பவம் எந்த விதமான அரசியல் பின்னணியிலேயும் இல்லாத ஒரு சம்பவம் என்பதை அவை முன்னவர் உணருவார்கள் என்றே நான் கருதுகிறேன்.

அந்த விடுதியிலே தங்கியிருக்கிற மாணவர்களும் வேறு பல விடுதிகளில் தங்கியிருக்கிற மாணவர்களும், தங்களுடைய கோரிக்கையை முன்வைத்து ஒரு கிளர்ச்சியைத் தொடங்கி இருக்கிறார்கள். அந்தக் கிளர்ச்சி அறவழியில் தொடங்கப்பட்ட கிளர்ச்சி என்று மாணவர்களால் கூறப்படுகிறது. உதவிப் பணம் தருவது, ஏற்கனவே 73-74 ஆம் ஆண்டில் தங்களுக்கு ஆஸ்டலில் அளிக்கப்பட்ட வசதிகள் மீண்டும் தரப்படவேண்டும் என்று வலியுறுத்துவது என்ற அடிப்படையில் தான் மாணவர்கள் தங்களுடைய முறையீட்டினை வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அதன் தொடர்பாக ஏற்பட்டுவிட்ட சம்பவங்கள் பற்றி இது சரியா, தவறா, இதிலே எது நியாயம், எது நியாயமற்றது என்கிற ஆராய்ச்சியின் கீழ் நுழைந்திட நான் விரும்பவில்லை. ஆனால், அந்த பாதிக்கப்பட்ட மாணவர்களில் பலர் என்னைச் சந்தித்தார்கள். நான் அவர்களைக் கண்டபோது உள்ளபடியே மிகுந்த வேதனை அடைந்தேன். குருதி கொட்டுகின்ற தலை, கை, கால் அது மாத்திரமல்ல, அவர்களுடைய உடைகள் எல்லாம் ரத்தத்தால் நனைந்திருந்தது. அவர்களுக்கு அறிவுரை கூறி அமைதிப்படுத்தி, இந்தப் பிரச்சினை இன்று அவையில் எழுப்பப்பட்டு இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்படும் என்று நான் கூறினேன்.

தாக்கப்பட்ட மாணவர்கள் அனந்தன், 2-பி.ஜி.எல்.படிக்கின்ற மாணவர், பிரசிடென்சி கல்லூரி மாணவர் இராமச்

சந்திரன் முதல் பி.எஸ்.ஸி., அரிகரன், கவர்ன்மென்ட் ஆர்ட்ஸ் காலேஜ், நந்தனம், மற்றும் குணசேகரன், விவேகானந்தா கல்லூரி, வேல் ராமலிங்கம், எம். இராமன், ராஜாராம் பெருமாள் ஆகிய 8 பேர்களும் கடுமையாகத் தாக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே ராஜாராம் என்ற மாணவர் மிகவும் கடுமையாகத் தாக்கப்பட்டு, மருத்துவ மனையிலே இருப்பதாக அறிகிறேன். வேறு சிலரும் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

இந்த ராஜாராம் என்ற மாணவர், ஏற்கனவே அண்ணா சிலைக்கு மாலையிட்ட போது தாக்கப்பட்ட அதே மாணவர்— அதைப்பற்றி எதிர்க்கட்சித் தலைவரிடம் நீ எப்படி முறையிட்டுக் கொள்ளலாம் என்று கூடக் கூறியதாக நான் கேள்விப்பட்டேன். கண்ணீர்ப்புகை பிரயோகம் நடத்தப்பட்டிருக்கிறது. இதற்கு மேலும் ஏதாவது நீங்கள் செய்தால், சுடுவதற்கும் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அதிகாரிகள் சொன்னதாக மாணவர்கள் சொன்ன தகவலைத்தான் நான் இங்கே குறிப்பிடுகிறேன்.

எனவே இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை தொடராவண்ணம் பார்த்துக் கொள்ளுகிற பொறுப்பு இந்த அரசுக்கு இருக்கிறது. மாணவர்கள் பிரச்னை சுமுகமாகத் தீருவதற்கு எதிர்க்கட்சி என்கிற முறையில், திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு ஒத்துழைக்க முடியுமோ அந்த அளவுக்கு ஒத்துழைக்க நிச்சயமாக தயாராக இருக்கிறது என்ற உறுதியையும் நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அதே நேரத்தில் மாணவர்களுக்கு ஏற்பட்டிருக்கிற அந்த சங்கடத்தை ஏற்படுத்திய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாணவர்கள் பிரச்னை என்பது ஏதோ இந்த அரசு வந்த பிறகு திடீரென்று வந்து விட்ட பிரச்னை என்றோ, அல்லது இந்த மாநிலத்தில்தான் ஏற்பட்டது என்றோ கூற முடியாது. பல்வேறு மாநிலங்களிலே இப்படிப்பட்ட பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. கேரளத்திலே கூட அச்சுதமேனன் ஆட்சியிலே கூட மாணவர்கள் தாக்கப்பட்டார்கள் என்ற செய்திகள் வரத்தான் செய்தன. எனவே மாணவர்கள் தாக்கப்படுவது, அல்லது மாணவர்கள் பிரச்னை எழுவது எல்லா ஆட்சியிலும் உண்டு.

ஆகவே, அதை அரசியலாக்க விரும்பாமல் அது ஒரு பொதுப் பிரச்னையாக, மாணவர்களுக்கு ஏற்பட்ட துன்பம் என்ற வகையில் கருதி, அரசு ஏற்ற நடவடிக்கை எடுத்து, அதிகாரிகள் மேலும் இப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடாமல் தடுப்பு நடவடிக்கையாக அரசு அதிகாரிகளை எச்சரிக்க வேண்டுமென்று கேட்டுக்

கொண்டு இவைகளைப் பற்றி விவாதிக்க இந்த அவையின் நடவடிக்கைகளை ஒத்தி வைப்பது சாலப்பொருத்தம் என்பதைக் கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, 16-8-1977 காலை சுமார் 9-00 மணிக்கு கோடம்பாக்கம், தி. நகர், சைதாப்பேட்டை, ஷெனாய்நகர் ஆகிய இடங்களிலுள்ள பின்தங்கிய சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்காக உள்ள அரசாங்க விடுதியிலுள்ள மாணவர்கள் சுமார் 600 பேர்கள் திரு. கே. வி. இராசாராம் என்ற மாணவர் தலைமையில் எம்.சி. இராசா விடுதியில் சைதாப்பேட்டையில் கூடினர்.

அவர்கள் தங்கள் கோரிக்கைகளை முதல் அமைச்சருக்கும், அரிசன நல அமைச்சருக்கும் சமர்ப்பிப்பதற்கு ஊர்வலமாகச் செல்ல முடிவு செய்து பின்னர் சில மாணவர்களின் தூண்டுதல்களின் பேரில் அதைக் கைவிட்டு அனைவரும் எம்.சி. ராசா விடுதியை விட்டு வெளியில் வந்து அண்ணா சாலையின் குறுக்கே வழி மறித்து சைதை கால் நடை மருத்துவ மனை முன்பு உட்கார்ந்து கொண்டும் படுத்துக்கொண்டும் போக்குவரத்துக்கு இடையூறு செய்து கொண்டும் இருந்தனர்.

அதில் சில மாணவர்கள் அங்கு வரும் வாகனங்கள் மீது கற்களையும் வீசினர். சாலையில் செல்லும் பொது மக்களுக்கும் காயங்கள் உண்டாயின. அதனால் வாகனங்கள் வேறு திசையில் திருப்பி விடப்பட்டன. அன்று காலை 10-30 மணிக்கு வாகனங்கள் செல்ல முடியாமல் போக்கு வரத்து ஸ்தம்பிக்கப்பட்டது.

போலீசார் விரைந்து சென்று மாணவர்களை சாலையை விட்டு ஓரமாகச் செல்லும்படி கேட்டுக் கொண்டனர். அவர்கள் போலீசார் வேண்டுகோளை ஏற்காமல் கற்கள் எறிவதைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தனர். அதே சமயத்தில் பொதுமக்களும் அநேகர் அங்கே கூடி விட்டனர். மாணவர்கள் அனைவரும் விடுதிக்குள் சென்று அங்கிருந்த பாட்டில்களையும் கற்களையும் பொதுமக்கள் மீதும் போலீசார் மீதும் எறிந்த வண்ணமிருந்தனர். இதனால் பொதுமக்கள் அநேகர் அடிபட்டனர்.

ஆகவே, கொதிப்படைந்த பொதுமக்கள் மாணவர் எறிந்த கற்களை எடுத்துத் திரும்பவும் விடுதியின் மீது வீசினர். இந்தச் சம்பவத்தில் பொது மக்களில் 48 பேர்களும் காவல் துறையினரில் ஒரு ஆய்வாளரும், ஒரு உதவி ஆய்வாளரும், 8 காவலரும், சுமார் 20 மாணவர்களும் காயமுற்றனர்.

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 17

காவல் துறை துணை ஆணையாளர் சாலையில் கூடியிருந்த பொது மக்கள் சுமார் 3000 பேரை கலைந்து போக ஏற்பாடு செய்து விட்டு மாணவர்களைக் கற்களை வீசாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்தார். மாணவர்கள் இதற்குச் செவி சாய்க்காமல் வன்முறையில் தொடர்ந்து ஈடுபட்டனர்.. பொதுமக்கள் சுமார் 100 பேர்கள் விடுதியின் பின்புறமாக காம்பவுண்டுக்குள் நுழைந்து விட்டனர். அவர்கள் கட்டுக்கடங்காமலும் மாணவர்கள்மீது ஆத்திரமடைந்திருந்ததால் எச்சரித்த பின்னர் 8 கண்ணீர்ப் புகை குண்டுகள் வெடித்து கூட்டத்தைக் கலைத்து விட்டார்.

மாணவர்கள் மேல் மாடிகளுக்குச் சென்று வன்முறையில் ஈடுபட்டவண்ணமிருந்தனர். மாணவர்கள் அங்குள்ள மேஜை நாற்காலிகளை உடைத்தும், கட்டைகளைக் கையில் வைத்துக் கொண்டும் வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். அப்போது காவல் துறை துணை ஆணையாளர் 20 காவலருடன் உள்ளே சென்றபோது அவர்களை மாணவர்கள் தாக்கினர்.

[முற்பகல் 10.00]

அங்கு மூன்று கண்ணீர்ப் புகை குண்டுகள் எச்சரித்த பின்னர் வீசப்பட்டன. அங்கு வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த மாணவர்களையும், அவர்களுக்கு ஒத்தாசையாக இருந்த மாணவர்களுமான 450 பேர்களை காவல்துறை ஆணையாளர் அலுவலகத்திற்குக் கொண்டு வந்து காவல் துறையினர் பார்க்கும் போது வன்முறையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவர்களைத் தவிர மற்றவர்களை எச்சரித்து விடப்பட்டது. சம்பந்தப்பட்ட 43 மாணவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து ஜாமீனில் அன்றே (16-8-77) விடப்பட்டது. பொதுமக்கள் மீதும் ஒரு வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் உபயோகப்படுத்தியது போக அந்த விடுதியில் சாக்கு மூட்டைகளில் வன்முறையின் போது உபயோகப்படுத்துவதற்காக 8 மூட்டைகளில் காலிப் பாட்டில்களும் கற்களும் வைக்கப்பட்டிருந்தன.

நிலைமை இப்போது கட்டுக் கடங்கியுள்ளது. மாவட்ட ஆட்சியாளர், அரிசன நலத் துறை இயக்குநர் ஆகியோர் இடத்தைப் பார்வையிட்டனர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மான்புமிகு அவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத் தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவையில்லை யென்ற காரணத்தினால் இதற்கு இசைவு தர மறுக்கப்படுகிறது.

1977 ஆகஸ்ட் 17]

(3) அரசினர் தீர்மானம்.

விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"தமிழ்நாடு சட்டமன்ற பேரவை நடைமுறை விதி 41(3)-ன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருட்களை கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

(4) கவன ஈர்ப்பு.

(அ) திருத்தணி வட்டம், அகூர் அரிசன காலனியில் ஏற்பட்ட தீ விபத்து குறித்தும், மக்களுக்கு உதவி அளிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து.

திரு. எஸ். ஜெ. இராமசாமி : பேரவைத் தலைவரவர்களே, செங்கை மாவட்டம், திருத்தணி வட்டம், அகூர் அரிசன காலனியில் 104 வீடுகள் தீப்பற்றி எரிந்து மிகுந்த நஷ்டத்துக்கு உள்ளான மக்களுக்கு அரசு உதவிகள் புரிவது குறித்தும், அவர்களுக்கு உதவி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, செங்கற்பட்டு மாவட்டம், திருத்தணி வட்டம், அகூர் கிராமத்தின் அரிசனக் காலனியில் 4—8—1977 அன்று மதியம் 12-10 மணிக்குத் தீ விபத்து ஏற்பட்டது. இவ் விபத்தில் 92 குடிசைகள் எரிந்து போயின; மாடி வீடுகள் மூன்று ஓரளவு சேதமடைந்தன. 92 குடிசைகள் எரிந்து போனதால் 100 குடும்பங்கள் பாதிக்கப்பட்டன. மாடி வீடுகள் மூன்றில் 4 குடும்பங்கள் உள்ளன. இந்த 4 குடும்பங்களைப் பொறுத்த மட்டில் வீடுகளை மீண்டும் கட்ட வேண்டிய தேவை ஏதுமில்லை. அவைகளில் துணிகளுக்கோ அல்லது ஏனைய வீட்டுச் சாமான்களுக்கோ நட்டம் ஏதும் ஏற்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் திங்கள் ஒன்றுக்கு ரூ. 100-க்கும் குறைவான வருமானத்தையுடைய உழவுக் கூலியாட்களாவார்கள். 22 பேர் ரூ. 10-க்கும் குறைவாக கிஸ்தி செலுத்தும் மிகச் சிறிய

உழவர்களாவர். தீ விபத்து தற்செயலாக நிகழ்ந்த ஒன்றாகும். இவ் விபத்தில் ஒருவரும் உயிரிழக்கவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு, அருகிலுள்ள உள்ளூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளியிலும், அரிசி ஆலை ஒன்றிலும் தங்குவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சித் தலைவர் அரிசன காலனிக்குச் சென்று எரிந்த வீடுகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். எரிந்து போன வீடுகள் உட்பட சேதமடைந்த உடைமைகளின் மதிப்பு ரூ. 1,06,200 எனக் கருதப்படுகிறது. 92 குடும்பங்களுக்கு, குடும்பம் ஒன்றுக்கு ரூ. 80 வீதம் உடை மானியம் உட்பட்ட ரொக்க மானியமும், 8 குடும்பங்களுக்கு குடும்பம் ஒன்றுக்கு ரூ. 20 வீதம் உடை மானியமும் மொத்தம் ரூ. 7,520 நிவாரணத் தொகை வழங்க 7—8—1977 அன்று மாவட்ட ஆட்சித் தலைவரால் அனுமதியளிக்கப்பட்டு, 8—8—1977 அன்று அத்தொகை அவர்களுக்கு வழங்கப்பட்டது.

திரு. எஸ். ஜே. இராமசாமி : தலைவரவர்களே, இப்பொழுது எரிந்து போன வீடுகளில் சேதமடைந்த உடமைகளுக்கு அவர்களுக்கு ரூ. 80 அளிக்கப்படுவதாக, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது நல்லதுதான். ஆனால் இப்பொழுது கொடுப்பது போதாது. எனவே, இதை உயர்த்தி இன்னும் கொஞ்சம் கூடுதலாகக் கொடுப்பதற்கு, ரூ. 80 என்று இருப்பதை ரூ. 120 ஆகக் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினரின் இரக்க சுபாவத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து ஆவன செய்வதற்கு அரசாங்கம் முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவக் கல்லூரி அட்மிஷனுக்கான தேர்வு பற்றிய விளக்கம்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: ஒரு Clarification. அவைத் தலைவர் அவர்களே, நேற்று மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் பொதுச் சுகாதாரம், மருத்துவம் என்ற மானியக் கோரிக்கைமீது தனது பதிலைத் தெரிவிக்கும்போது இங்கே எம்.பி.பி.எஸ். அட்மிஷன் பிரச்னை பற்றி நண்பர் ரகுமான்கான் அவர்கள் ஒரு கேள்வி கேட்டார்கள். ஒரு நம்பரைச் சொல்லி, இந்த நம்பர் முதலிலே வெளியாகி அதற்குப் பிறகு அது எடுக்கப்பட்டு வேறு ஒரு நம்பர் வந்திருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அதற்கு விளக்கம் தெரிவிக்கிற முறையில் தான் விளக்கம் தருவேன் என்று நேற்று முதல் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். முதல் அமைச்சர் அவர்கள் இங்கு இல்லை. குடியரசு தலைவர் அவர்களை வரவேற்பதற்காகச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் சார்பில் இந்த விளக்கத்தைத் தருவதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். நமது நண்பர் ரகுமான்கான் அவர்கள் தெரிவித்த நம்பர் 3543. அந்த நம்பர் உள்ளவர் ஜி. துளசிகுமார் தேர்வு

பெற்றவர் என்று வந்தது. அவர்கள் பெற்ற மொத்த மார்க்குகள் 191.75. அதற்குப் பிறகு, 3970. பெயர் குமாரி. அவர் அகமுடையர் சமுதாயத்தைச் சேர்ந்தவர். பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். அவர் பெற்ற மார்க்குகள், 183. ஆக, 3970 குமாரி பெற்ற மார்க்குகள் 183. இது வெளியாயிற்று. செலக்டட் என்று வெளியாயிற்று. அதற்குப் பிறகு திருத்தம் செய்து—துளசிகுமார்—மிகவும் பிற்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்—பெற்ற மார்க்ஸ் 191.75. ஆக, 3970 மாற்றப்பட்டு 3543—191.75 பெற்ற துளசிகுமார் செலக்ட் செய்யப்பட்டார் என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிற அதே நேரத்தில், எந்தக் காரணத்தைக் கொண்டும் நேற்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்தது போல், இதில் எந்தவிதமான தில்லுமுல்லும் நடைபெறவில்லை என்பதும் முறையாகத்தான் நடைபெற்றிருக்கின்றன என்பதும், இப்படி இது ஏற்பட்டது ஒரு தற்காலிக தவறே தவிர இதன் மூலம் இதற்கு உள்நோக்கம் கற்பிக்கிற அளவிற்கு உறுப்பினர்கள் தயவு செய்து வர வேண்டாம் என்று மிகவும் வேண்டி அவர்களைக் கேட்டு, இந்த விளக்கம் நண்பர் ரகுமான்கான் அவர்களுக்குப் போதுமானதாக இருக்கும் என்று கருதி அமர்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான் : பாயின்ட் ஆப் க்ளாரிபிகேஷன். அமைச்சர் அவர்கள் விளக்கம் கொடுத்ததற்கு நன்றி. அதே நேரத்தில் இந்த மாநிலத்தில் ஒரு பெரிய பொறுப்பை வகிக்கக்கூடிய ஒருவர் பம்பாய்க்குப் பக்கத்திலிருக்கிற பவநகர் என்று கருதுகிறேன், அங்கு பேசுகிறபோது மருத்துவக் கல்லூரி. . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து ஏதாவது சந்தேகம் இருந்தால் கேளுங்கள் வேறொன்றும் பேசாதீர்கள்.

திரு. க. அன்பழகன் : நமது முன்னவர் அவர்கள் தந்திருக்கிற விளக்கம், இன்டர்வ்யூ முடிந்து அவர்கள் பெற்ற அதிக எண்ணிக்கை என்ற அடிப்படையில் தரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன். ஏனென்றால் பத்திரிகைகளில் வந்த விளக்கங்கள்படி 125-க்கு மேல் 170 வரையில் வாங்கியவர்கள்தான் அதிக எண்ணிக்கை வாங்கியதாக ஒரு குறிப்பு வந்திருக்கிறது. அது அங்கே போடப்படுகிற கணக்கு. பெற்றிருக்கிற எண்ணிக்கையை எந்த விகிதாசாரத்தில் கூட்ட வேண்டும் என்ற முறைப்படி உள்ள எண்ணிக்கை. முன்னவர் அவர்கள் சொல்வது இன்டர்வ்யூ நடந்ததற்குப் பின்னால் பெற்ற எண்ணிக்கை. இதில் ஐயம் யாருக்காவது இருக்குமானால் அதைப் போக்குவதற்கு அந்த மாணவர் ஏற்கனவே நடைபெற்ற பி.யு.சி. தேர்வில் பெற்ற எண்களும், இன்டர்வ்யூவில் பெற்ற எண்களும் தரப்படுமானால் ஐயுறவு நீங்க எளிதாக இருக்கும். அந்த முறையில்

திரு. சி. ஆறுமுகம் : மாண்புமிகு உறுப்பினர்கள் அதிகாரிகளிடத்தில் பேசக்கூடாது என்றிருக்கிறது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் இதைப் புதிதாகக் கண்டுபிடித்து விட்டார்கள்.

(இ) ஐவ்வாது மலையிலிருந்து சந்தனக் கட்டைகள் திருடு போவதாலும், கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாலும் அரசுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நஷ்டம் குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஐவ்வாது மலையிலிருந்து விலையுயர்ந்த சந்தனக் கட்டைகள் திருடு போவதாலும், கள்ளக் கடத்தல் செய்யப்படுவதாலும் அரசுக்கு ஆண்டுதோறும் ஏற்படும் நஷ்டம் குறித்து, மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் சந்தனக்கட்டை பெரும் பகுதி வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஐவ்வாது மலையிலிருந்து பெறப்படுகிறது. திருப்பத்தூரையும், வேலூரையும் தலைமை இடங்களாகக் கொண்டுள்ள இரண்டு கோட்டங்களின் கீழ் ஐவ்வாது மலை வருகிறது. ஐவ்வாது மலையில் உள்ள சந்தன மரக்காட்டின் மொத்த பரப்பு 86,797 ஹெக்டேர் ஆகும்.

ஐவ்வாது மலையிலிருந்து 1974 முதல் 1977 வரை அரசால் வெளியேற்றப்பட்ட சந்தனக் கட்டைகளின் அளவும் கிடைத்த வருவாயும் கீழ் வருமாறு :—

1974-75 830 டன்..ரூ. 2,44,39,690.

1975-76 1,397 டன்..ரூ. 1,70,84,956.

1976-77 1,301 டன்..ரூ. 4,31,08,144.

தற்போது கோட்ட பணியாளர்கள் தவிர இரண்டு தனி இயங்கும் காவல் படை, இரண்டு வனப் பாதுகாவலர் தலைமையின் கீழ் திருப்பத்தூரிலும், வேலூரிலும் இருந்து கொண்டு பணியாற்றுகின்றன. அக்குழுவினர் வரும்பொழுது ஐவ்வாது மலையில் கடத்தலுக்கு வாய்ப்புள்ள இடங்களைச் சுற்றி காவல் செய்கின்றனர். தற்போது உள்ள பணியாளர்களைக் கொண்டு சந்தன மரக் கடத்தலை தடுத்து குறைக்க தேவையான காப்பு நடவடிக்கைகளை துறை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாறு வன மண்டலத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் 65 டன் சந்தன கட்டைகள் சம்பந்தப்பட்ட 745 வகைக் குற்றங்கள் வனத் துறை சிப்பந்திகளால் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றில் 344 குற்றங்களுக்கு இணக்க கட்டணமாக ரூ. 3,50,738 வசூலிக்கப்பட்டது. 311 குற்றங்களுக்கு நீதி மன்றத்தில் தண்டிக்கப்பட்டு ரூ. 23,211 அபராத தொகையாக வசூலிக்கப்பட்டது. 90 வழக்குகளில் குற்றவாளிகள் தண்டனையின்றி விடுவிக்கப்பட்டனர்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் கடத்தலில் ஈடுபட்டிருந்த 19 அம்பாசிடர் கார்களும், ஒரு ஸ்கூட்டரும் கைப்பற்றப்பட்டன. கடந்த ஜூலை மாதத்தில் தர்மபுரி கோட்ட சித்தேரியில் கடத்தலில் ஈடுபட்ட 3 கார்களும், 1 லாரியும் பிடிபட்டன. அத்துடன் கிருஷ்ணகிரி சரகத்தில் ஒரு லாரியும் பிடிபட்டது. 6—8—77 அன்று திடீர் சோதனையிட்டு ஐவ்வாது மலையில் ரூ. 31,000 மதிப்புள்ள கட்டைகள் கைப்பற்றப்பட்டன. பத்து நாட்களுக்கு முன்பாகக்கூட திருப்பத்தூரில் இயங்கும் காவல்படை ஐவ்வாது மலையில் 18,000 மதிப்புள்ள கட்டைகளைக் கைப்பற்றி 12 பேர்களைக் கைது செய்தது.

தற்பொழுது இக்குற்றங்கள் வழக்குரிமைக்கு உட்பட்டதாக, இரண்டாம் நிலை குற்ற நடுவரால் ஆயத்தக்கதாக உள்ளது. தண்டனையைக் கடுமையாக்கும் எண்ணத்துடன் திருத்திய வனச் சட்டத்தில் தண்டனையை மூன்று ஆண்டு கடுஞ் சிறை அல்லது ரூ. 5,000 அல்லது இரண்டும் விதிக்கத்தக்க வகையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்குற்றங்களை முதனிலை குற்ற நடுவரால் ஆய வகை செய்யப்பட்டுள்ளது. கடத்தல் தகவல்களை முன்கூட்டி பெறவும், கடத்தலை உறுதியாகத் தடுக்கவும் காடு, காவல் வழக்குத் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் பங்குபெறும் தனி நுண்ணமைப்பு தேவைப்படுகிறது. இக்கருத்தின் அடிப்படையில் கடத்தலைத் தடுக்க இத்துறையில் காவல் துறையினர் உதவியுடன் ஒரு தனி அமைப்பு அமைப்பது பற்றி அரசு ஆய்ந்து வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, இந்த தனி அமைப்பு எப்போது ஏற்படுத்தப்படும்? அது வட ஆற்காடு மாவட்டத்திற்காக மட்டும் ஏற்படுத்த இருக்கும் தனி அமைப்பா? அப்படி ஏற்படுத்துவதாக இருந்தால், அதனுடைய தலைமை அலுவலகம் ஐவ்வாது மலைப் பகுதியிலுள்ள ஆலங்காயத்தில், காவலூரில் ஏற்படுத்தபடுமா? மேலும், அங்கே தாணா கேட்டுகள் சரியான முறையில் இயங்கவில்லை. கேட்டுகள் வெகு தூரத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் கள்ளக் கடத்தல் நடைபெறுகின்றது. உதாரணமாக, ஆலங்காயத்தில் தாணா கேட்டு இன்னும் ஒரு மைல் தள்ளி வைக்கபடுமானால்,

கள்ளக்கடத்தலுக்கு சௌகரியமாக இருக்காது. இவைகளை எல்லாம் ஆராய்ந்து, தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தனித் துறை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. இதைப்பற்றி கூடிய விரைவிலே அரசு முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏற்கனவே, சந்தனக் கட்டை கடத்தல்காரர்களைக் கட்டுப்படுத்துவதற்காக அங்கே காவலுக்கான அதிக அதிகாரிகள் போடப்பட்டிருக்கிறார்கள். இந்த தானு கேட்டுகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனைப்படி ஏற்கனவே அங்கு போடப்பட்டுள்ளது.

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகத்தில் வேலைநிறுத்தம் குறித்து தொழிலாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்குத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கும் உறுப்பினர்கள் திருவாளர்கள் ஆர். விஜயரகுநாத தொண்டமான் அவர்களும், என். சுந்தரராஜ் அவர்களும் இருக்கையில் இல்லாததால் அத்தீர்மானம் தள்ளப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: உறுப்பினர்கள் இல்லையென்று சொல்லி ஒரேயடியாகத் தள்ளிவிட வேண்டாம். நாளைக் காவது எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகிறது.

(ஈ) சென்னையில் 'கல்கி' பத்திரிகை நிறுவனம் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலை குறித்து

திரு. மு. அம்பிகாபதி: பேரவைத் தலைவரவர்களே, ''சென்னையில் 'கல்கி' பத்திரிகை நிறுவனம் 16—6—1977 முதல் மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலைபற்றி'' விவாதிக்க மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, தமிழ் வார இதழான ''கல்கி'', ஆங்கில வார இதழான

''சுயராஜ்யா'' தமிழ் மாதமிரு முறை இதழான ''கோகுலம்'' ஆகிய மூன்று பத்திரிகைகளின் உரிமையாளர் சென்னை பரதன் பப்ளிகேஷனஸ் லிமிடெட் என்னும் நிறுவனமாகும்.

2. மத்திய அரசு பத்திரிகை தொழிலாளர்கட்கு அறிவித்திருந்த இடைக்கால நிவாரணத்தை அமுல்படுத்தக் கோரி 16—6—1977 அன்று இந்த நிறுவனத்தைச் சேர்ந்த சுமார் 120 தொழிலாளர்கள் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர். பின்னர் இடைக்கால நிவாரணம் அளிப்பதில் நிர்வாகம் ஒரு உடன்பாட்டுக்கு வரவில்லை என்பதால் தொழிலாளர்க்ள் 17—6—1977 முதல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதன் விளைவாக மேற்படி பத்திரிகைகள் வெளி வராமல் நின்றுவிட்டன.

3. இந்தப் பிரச்னை குறித்து தொழிலாளர் துறை அலுவலர் மற்றும் தொழிலாளர் துறை உதவி ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. எனினும் 1—9—1977 முதல் நிறுவனத்தை மூடிவிட முடிவு செய்துவிட்டதாக நிர்வாகத்தினர் அரசுக்குத் தெரிவித்தனர்.

4. தொடர்ந்து 5—7—1977 அன்று தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு நடந்த பேச்சு வார்த்தைகளின் போது கூறிய ஆலோசனைப்படி தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு 6—7—77 முதல் வேலைக்குத் திரும்புவது என முடிவெடுத்தனர். ஆனால் நிதி நிலைமை காரணமாக தொழிலாளர்கட்கு வேலை தர இயலாத நிலைமையை நிர்வாகத்தினர் தெரிவித்தனர். ஆயினும் வேலை நிறுத்தத்தைக் கைவிட்ட தேதி முதல் தொழிலாளர்களுக்கு ஊதியம் கொடுத்து விடுவதாக ஒப்புக் கொண்டனர்.

5. இதன் பின்னர் 13—7—77 அன்று தொழிலாளர் துறை ஆணையர் இரு தரப்பினருடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். பொருளாதார நெருக்கடி காரணமாக பத்திரிகைகளைத் தொடர்ந்து நடத்த இயலாது எனவும், நிறுவனத்தை மூடும் தங்களது முடிவை மறுபரிசீலனை செய்ய முடியாது எனவும் நிர்வாகம் தெரிவித்தனர். அன்று மாலையில் தொழிலாளர் நல அமைச்சர் முன்பும் பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. அப்போது அமைச்சர் பத்திரிகைகளைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்றும் நிறுவனத்தை மூடிவிடக்கூடாது என்றும் நிர்வாகத்தைக் கேட்டுக் கொண்டார். தொழிலாளர்களின் பிரதிநிதிகள் 1977 ஜூன் மாத ஊதியமும், நிர்வாகம் அறிவித்திருந்த 8 நாள் ஊதிய பிடித்தம் ஏதுமின்றி வழங்கப்பட வேண்டுமென்று கோரினர். அவ்வாறே 20—7—77 அன்று

பிடித்தம் ஏதுமின்றி ஜூன் மாத ஊதியத்தை நிர்வாகம் பட்டுவாடா செய்து விட்டனர்.

6. நிறுவனத்தை மூடிவிடுவது என்கிற முடிவை மறுபரிசிலனை செய்ய நிர்வாகத்தை இசையச் செய்யும் பொருட்டு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் மீண்டும் 8—8—1977 அன்று இருதரப்பினரோடும் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். நிறுவனத்தை மீண்டும் திறந்து நடத்தும் யோசனையை பரிசிலனை செய்ய நிர்வாகத்தினர் அவகாசம் கேட்டுள்ளனர்.

திரு. மு. அம்பிகாபதி: தலைவர் அவர்களே, தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகளுக்கு நன்றி. குறிப்பாக, எத்தனை தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்பதல்ல பிரச்சினை. அந்தப் பத்திரிகையின் முக்கியத்துவத்தையும் அதனுடைய பெயரையும் எண்ணிப் பார்க்க வேண்டும். 'கல்கி' என்ற பெயரில் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெயரும் கல்யாணசுந்தரனார் பெயரும் இணைந்து அந்தப் பத்திரிகை வருவதாகச் சொல்லப்படுகிறது. தொடர்ந்து அந்தப் பத்திரிகை வெளிவர தீவிரமான முயற்சிகளில் அரசாங்கம் மேலும் ஈடுபட வேண்டும். 5 ஆம் தேதி பேச்சு வார்த்தை முடிந்து 6-ம் தேதி வேலைக்குப் போனார்கள். நிர்வாகம் வேலை இல்லையென்று கூறியிருக்கிறது. ஊதியக் குழு தீர்ப்பை அமல் நடத்துவதில் வந்த சிக்கலின் விளைவால் இது ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்கள் தர்ம யுத்தம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்கள் சொன்னதில் விட்டுப் போனது பற்றி மேலும் அதிகத் தகவல்கள் தேவை என்றால் கேட்கலாமே தவிர மறுபடியும் ஆரம்பத்தில் இருந்து வ்ர வேண்டாம். நேரத்தை வீணாக்காதீர்கள்.

திரு. மு. அம்பிகாபதி: எனவே இந்த நிறுவனம் உடனடியாகத் திறக்கப்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இது மூடப்பட்டால் 15 லட்சம் ரூபாய் அவர்கள் சம்பளம் மற்ற விஷயங்கள் என்ற முறையிலே கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்த நிர்வாகி 2—9—1977 அன்று அமெரிக்கா பயணம் போவதாகவும் தெரிகிறது, ஆகவே, அரசு துரிதமாக நடவடிக்கை எடுத்து இதைத் திறக்கச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிறுவனத்தின் உரிமையாளர்களை அழைத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்பிகாபதி அவர்கள் சொன்ன அந்தக் கருத்தையே தான் அவர்களிடம் சொன்னேன், கல்கி என்ற பெயரில் உள்ள அந்த இதழ் புனிதமான தன்மை பெற்றது.

அதிலே பல பெரியவர்கள் எல்லாம் கட்டுரைகளை எழுதி இருக்கிறார்கள். மூதறிஞர் ராஜாஜி அவர்களும் எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதியிருந்த வியாசர் விருந்து கட்டுரையை மீண்டும் பிரசுரம் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அனைவரும் படிக்கக் கூடிய நிலையிலே உள்ள இதழாக இருக்கிறது. மறுபடியும் வெளி வர வேண்டும் என்று எங்களுடைய புரட்சித் தலைவர் கருதுகிறார். ஆகவே மீண்டும் திறக்க வேண்டுமென்று என்னுடைய வேண்டுகோளை முதலமைச்சர் அவர்களின் சார்பிலே வைத்திருக்கிறேன். அந்த நிர்வாகிகளும் 300 பேர்களுக்குக் குறைவாக, 120 பேர்கள்தான் வேலை செய்கிறார்கள், ஆகவே, புதிதாகக் கொண்டுவரப்பட்ட சட்டம் இதற்குப் பொருந்தாது என்றும் இப்போது இருக்கிற விதி 25 எப். எப். ஏ. பிரகாரம் ஒரு சாதாரண அறிவிப்புக் கொடுத்தால் போதும், 1—9—1977 அன்று மூடப் போகிறோம் என்று அறுபது நாட்கள் நோட்டீஸ் இன்பர்மேஷன் கொடுத்துவிட்டால் போதும் என்று இன்றைய சட்டம் இருக்கிறது. ஆகவே, 1—9—1977 அன்று மூடிவிட்டு, மறுநாள் 2—9—1977 அன்று வெளியூர் செல்வதாக நிர்வாகத்தினர் உள்ளனர் என்று மாண்புமிகு உறுப்பினர் தகவல் தந்திருக்கிறார், ே: ாவதாக இருக்கலாம். ஆனால், நாங்கள் தொடர்ந்து இதைப் பற்றிப் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டு இருக்கிறோம், வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கையும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(6) ஒழுங்குப் பிரச்சினை

கவன ஈர்ப்புக் கொடுத்த உறுப்பினர் அவையில் இல்லை என்றாலும் மற்றொருவர் வேண்டுகோள் மீது எடுத்துக் கொள்வது குறித்து

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, நம்முடைய சட்ட மன்ற விதி 41(6)-ன்கீழ் இந்த ஒழுங்குப் பிரச்சினையை நான் எழுப்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. என். சுந்தரராஜன் அவர்களும் திரு. விஜய ரகுநாத தொண்டமான் அவர்களும் நம்முடைய தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கவன ஈர்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தார்கள். அவர்கள் இருக்கையிலே இல்லை என்கிற காரணத்தால் ஸ்டேட்மெண்ட் படிக்கக் கூடாது என்று பேரவைத் தலைவர் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் தான் அதை எழுப்ப விரும்புவதாகவும், ஆகவே அதையெடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் சொன்னார்கள். ஆனால் நீங்கள் அது முறையற்றது என்று தீர்ப்பளித்திருக்கிறீர்கள். அது நம்முடைய சட்ட மன்ற விதி முறைகளுக்கு முரண்பட்டது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நம்முடைய சட்ட மன்ற விதி 41(6) என்ன சொல்கிறது என்றால்

[திரு. பெ. சௌந்தர பாண்டியன்]

(6) If on a matter being taken up, a member in whose name it stands is absent, the Speaker at the request of any member may direct that the statement on the matter may be made.

என்று விதிமுறை இருக்கிற காரணத்தால் அதைப் படிக்க தாங்கள் அனுமதிப்பது முறையானது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

<u>திரு. க. சுப்பு:</u> ஒரு மெம்பர் கேட்டால் தான் இந்த விதி முறை அப்ளை ஆகுமே தவிர, ஒரு மெம்பரும் கேட்கவில்லையென்றால் விட்டுவிடுவதற்கு பேரவைத் தலைவருக்குப் பிரத்தியேக அதிகாரம் விதி 242-ன் கீழ் டிஸ்கிரஷன் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:</u> உறுப்பினர் கேட்காவிட்டால்தான் அப்படிப்பட்ட நிலைமை. ஆனால் இங்கே திரு மாரிமுத்து அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

<u>திரு. க. சுப்பு:</u> யாரும் கேட்கவில்லை.

<u>மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்:</u> திரு மாரிமுத்து அவர்கள் கையை உயர்த்தி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு சுப்பு அவர்கள் கவனத்தை எங்கேயோ வைத்திருந்தால் அதற்கு நான் பொறுப்பு இல்லை.

<u>மாண்புமிகு திரு. க. உரா. எட்மண்ட்:</u> பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய விதிமுறைகளின்படி அந்த ஒழுங்குப் பிரச்னை சரியாக இருந்தாலும் கூட ஏற்கனவே பேரவைத் தலைவராகிய தாங்கள் ஒரு தீர்ப்பை வழங்கி விட்டீர்கள். You have already given a ruling on that matter. ஆகவே தீர்ப்பை வழங்கியதற்குப் பிறகு அந்தத் தீர்ப்பை மாற்றி 41வது விதியின் கீழே இன்றைய தினம் அவையிலே கொண்டு வருவது முறையாக இருக்காது. வேண்டுமென்றால் நாளை எடுத்துக் கொள்ளலாம்.

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து:</u> தலைவர் அவர்களே, ரூலிங் விதிகளுக்குப் புறம்பாக இருந்தால் மாற்றிக் கொள்ளலாம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> இப்போது இருக்கிற ரூல் பிரகாரம் சொல்லுங்கள். வேண்டுமானால் அமைச்சர் அவர்கள் 82-வது விதியிலே ஒரு ஸ்டேட்மெண்ட் கொடுக்கச் சொல்லலாம். கொடுத்த உறுப்பினர் இல்லையென்றால் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில்லை.

(முற்பகல் 10-30)

<u>திரு. ஏ. ஆர். மாரிமுத்து:</u> விதியின்படி ஒரு மெம்பர் இல்லை என்றால் வேறொரு மெம்பர் பிரேரேபிக்கலாம், கொடுக்கலாம் என்று இருக்கிறது. அதை நான் எடுத்துக் கொள்கிறேன் என்று கூறினேன். அதைத் தள்ளி வைத்து விட்டீர்கள். எனக்கு அதைப் படிக்க அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்.</u> பாயின்ட் ஆப் ஆர்டர். விதி முறைகள் பற்றி இப்பொழுது இரண்டு மாண்புமிகு அமைச்சர்களுக்கிடையே தகராறு ஏற்பட்டிருக்கிறது. அதற்கு நான் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

THE HON. THIRU. G. R. EDMUND : Sir, I have no misunderstanding with the Hon. Minister for Harijan Welfare.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> எல்லோருக்கும் விளக்கம் புரிந்திருக்கிறது. இப்பொழுது நான் சொல்வதைக் கேட்டுவிட்டுப் பேசுங்கள்.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்:</u> நான் இன்னும் என்னுடைய பாயின்ட் ஆஃப் ஆர்டரை முடிக்கவில்லை. Both Ministers seem to disagree.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> அமைச்சர்களுக்கிடையே கருத்து வேறுபாடு என்று ஆரம்பித்தீர்கள். அதை ஆரம்பிக்க வேண்டாமே.

THIRU. J. JAMEL : Let me explain. The Speaker may ....

என்றிருக்கிறது. . So the rule is quite clear.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நான் சொல்வதைக் கேளுங்கள். உங்கள் பாயின்ட் ஆஃப் ஆர்டரை நான் அனுமதிக்கிறேன். 41-வது விதி 6-வது துணை விதியின்படி அறிக்கை விடச் சொல்ல

லாமே தவிர நாளைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்பது கூடாது என்பது ஒரு அமைச்சருடைய எண்ணம். தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகு அதைப் பற்றிப் பேசலாமா என்பது இன்னொரு அமைச்சருடைய வாதம். எனவே, அமைச்சர்கள் ஒருவருக்கொருவர் மறுக்கவோ அல்லது வேறுபாட்டுடனோ ஒன்றும் பேசவில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ்: Sir, according to rule 41(6) the Speaker may direct that the statement on the matter may be made, etc. அதனாலே ஸ்பீக்கர் விரும்பினால் கொடுக்கலாம், இல்லை என்றால் இல்லையென்று சொல்லலாம். தாங்கள் கொடுத்த தீர்ப்பே முடிவானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. மாரிமுத்து அவர்கள் நாளைக்கு எடுத்துக்கொள்ளலாமே என்று கேட்கிறார். நான் தள்ளி விட்டேன். அவர் சொன்னது இது.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நான் சுட்டிக்காட்டியது, இந்த அவையின் நடைமுறை செம்மையாக இருக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்தே தவிர பேரவைத் தலைவரவர்களின் தீர்ப்புக்கு விரோதமாக நான் சொல்ல விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவையிலே பல தடவை மீறப்படுகிறது என்று அவசரப்பட்டுச் சொல்லி விடக்கூடாது. இந்த அவையின் முறைகளிலே, சில சம்பிரதாய முறைகளிலே மாறியிருக்கிறது என்று சொல்லலாமே தவிர அவையின் போக்கு முறையாக இல்லை என்று உள்நோக்கும் கற்பிக்கின்ற அளவிற்கு இருக்கக்கூடாது. அமைச்சர் சொல்லும் கருத்து நல்ல கருத்து. அதனால் முன்னால் நடந்தது தவறு என்று சொல்லக்கூடாது. இதோடு இந்தப் பிரச்னையை விட்டு விடுவோம்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அவை தன்னுடைய விதிமுறைகளை முழுக்க முழுக்கப் பயன்படுத்த வேண்டுமென்று விரும்புகின்றவர்களில் நானும் ஒருவன். இன்று கூட முதலில் ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட்டது. நமது விதிமுறைகளில் விளக்கமாக இருக்கிறது. கேள்வி நேரம் முடிந்தவுடன் கவன ஈர்ப்புத் தீர்மானம் முதலில் இருக்கவேண்டும். இந்த அவையின் கடந்த கால சட்டமன்றக் கூட்டத்தொடரில் பலமுறை கவன ஈர்ப்புத் தீர்மானத்தை முதலில் எடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே, ஒரு நாள் ஒத்தி

வைப்புத் தீர்மானம் முன்னாலும், இன்னொரு நாள் கவன ஈர்ப்புத் தீர்மானம் முன்னாலும் வருகிறது. இப்படிப்பட்ட பிரச்னைகள் வரக்கூடாது என்பதைச் சுட்டிக் காட்டினேனே தவிர பேரவைத் தலைவரவர்களுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டுமென்ற எண்ணமோ, இந்த அவை முறைகேடாக நடக்கிறது என்று சொல்ல வேண்டுமென்ற எண்ணமோ எனக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, ஒரு விளக்கம் சொல்கிறேன். அவையின் விதிமுறை சம்பந்தப்பட்டது இது. இந்த அவையில் பலமுறை மீறப்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு சொல்லப்பட்டது தவறு. அதை வித்ட்ரா செய்யவேண்டும். அது அவைக் குறிப்பிலே இருக்கக் கூடாது. பிறகு நான் சொன்னால் தப்பாகச் சொல்லக்கூடாது. ஒத்தி வைப்புத் தீர்மானம் இரண்டாவதாக வர வேண்டுமென்று சொல்கிறார்கள். அது தப்பு. விதியின்படி இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டுமென்றுதான் 42-வது விதியின்படி. இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால், 41-வது விதியின் கீழ் வருவது லிஸ்டிலே வரும். இந்த லிஸ்டிலே இருக்கக்கூடிய அத்தனையையும் ஒத்தி வைத்து, விவாதிக்க வேண்டுமென்பது 42-வது விதி. ஆகவே, குவஸ்டியன் ஹவர் முடிந்தவுடனே, ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுக்க வேண்டும் என்பதுதான் முறை. ஆகவே, இந்த முறையை மீறிக் குற்றச் சாட்டு சொல்வது முறையல்ல என்பது என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் கடந்தகால அவை நடவடிக்கையை படித்திருக்கமாட்டார் என்று நம்புகிறேன். படித்துப் பாருங்கள். ஒவ்வொரு சட்டமன்ற நடவடிக்கையையும் படித்துப் பார்த்தால், தெளிவாக இருக்கும். 41-வது விதி என்ன சொல்கிறது என்று மீண்டும் படிக்கிறேன் 41 (1) A member may after Questions, and with previous permission of the Speaker, call the attention of a Minister to any matter of urgent public importance and the Minister may then make a brief statement on the matter or ask for time to make a statement later இதுதான் 41-வது விதி. ஆகவே, இந்த விதி முறை கிளியராக இருக்கிறது.

திரு. க. சுப்பு : அமைச்சரவர்கள் புரிந்து கொள்ளாததால் ஏற்படக்கூடிய தவறு இது. அதிலே, குவஸ்டியன் ஹவருக்குப் பின்னால் ரூல் 42 எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது.

நான் சொல்வது, குவஸ்டியன் ஹவர் முடிந்தவுடன், லிஸ்டட் பிஸினஸ் எல்லாவற்றையும் ஒத்தி வைக்கவேண்டுமென்று 42-வது விதியின் கீழ் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கிறோம். ஆகவே தான், any matter of urgent public importance கொண்டுவருகிறோம். other "listed business* including those under Rule 41, stands adjourned மற்றவைகளை ஒத்திவைக்கவேண்டுமென்பதுதான் விதி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 45-இல் என்ன இருக்கிறது:

If the Speaker gives his consent under Rule 43, he shall after questions and before the further business set down in the list of business for the day is entered upon, read the statement referred to in Rule 43 to the House and deceide whether the matter proposed to be discussed is or is not in order. Before he so decides, he may, if he thinks necessary, call upon the member to explain how the matter is in order and he may also ask the Leader of the House or the Minister concerned to state the Government's point of view.

என்றிருக்கிறது அதனாலே ஒத்தி வைப்புத் தீர்மானம் பின்னாலே வரவேண்டும், அல்லது கவன ஈர்ப்புத் தீர்மானம் முன்னாலே வர வேண்டுமென்று விதி இங்கே சுத்தமாக இல்லை. நாம் நடைமுறையிலே கடைப்பிடித்து வருவது, கேள்வி நேரத்திற்குப் பின்னாலே உரிமை மீறல் பிரச்னை; அதற்குப் பிறகு ஒத்தி வைப்புத் தீர்மானம்; அதற்குப் பின்னாலே கவன ஈர்ப்புத் தீர்மானம் என்றுதான் கடைப்பிடித்து வருகிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பின்னாலே ஒத்தி வைப்புத் தீர்மானம் என்று விதிகளில் விளக்கமாக இல்லை. அது பெரியபிரச்னையும் அல்ல. அதை வைத்துக் கொண்டு நீங்கள் வாதாடி நேரத்தை வீணாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*புலவர் கா. கோவிந்தன்: பேரவைத் தலைவரவர்களே, கவன ஈர்ப்புத்தீர்மானம் எப்பொழுது வரவேண்டும்; ஒத்திவைப்புத் தீர்மானம் எப்பொழுது வரவேண்டுமென்பதற்கு விதி தெளிவாக இல்லை. ஆனால், நாம் ஒத்தி வைப்புத் தீர்மானத்தை முன்னே எடுத்துக் கொண்டு, கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் பின்னாலே எடுத்துக்கொள்வது மரபாக இருக்கிறது என்று நீங்கள் சொல்லி இருக்கிறீர்கள். ஆனால், விதியில்

If the Speaker gives his consent under Rule 43, he shall after questions and before the further business etc., etc.

என்றிருக்கிறது. கவன ஈர்ப்புத் தீர்மானம் நம்முடைய நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு வருகின்றது. ஆகவே, அந்த நிரலிலே உள்ளதை எடுத்துக்கொள்வதற்கு முன்பு இந்த ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, விதி தெளிவாக இல்லை என்பதல்ல; தெளிவாக இருக்கிறது. அது முன்னேயா, இது முன்னேயா என்று பார்த்தால்,

before the further business set down in the list of business for the day is entered upon.

என்றிருக்கிறது. ஆகவே, கவன ஈர்ப்புத் தீர்மானம் நிகழ்ச்சி நிரலிலே இருக்கிறது. அதற்கு முன்னே ஒத்தி வைப்புத் தீர்மானம் வரவேண்டுமென்று தெளிவாக விதிகள் இருக்கின்றன. ஆகவே, அதனை மரபு என்று கொள்ளவேண்டியதில்லை, விதிகளிலேயே தெளிவாக இருக்கிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இது என்னவாயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்தான் சொல்லிவிட்டேனே, நாளைக்குச் சம்பந்தப்பட்ட அமைச்சர் இந்த அவையிலே அறிக்கை சமர்ப்பிப்பார். ஆனால், உறுப்பினருடைய உரிமை இன்றோடு போய்விட்டது. (குறுக்கீடு) சரி படியுங்கள்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: இந்த விதிகளின்படி என்னுடைய கட்சி உறுப்பினர் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் எழுந்து நின்றார்). நீங்கள் அனுமதி கொடுத்து விட்டீர்கள். படிக்கச் சொல்லிவிட்டு ....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் உட்காருங்கள். நான் அனுமதி கொடுத்தால் கூட............

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அந்த முடிவை மாற்றி, படிக்க அனுமதி கொடுத்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சம்பந்தப்பட்ட பாயின்ட் ஆஃப் ஆர்டராக இருந்தால்தான் படியுங்கள் என்று சொல்லி............

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : நீங்கள் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைப் படிக்கச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அதைப் படிக்கச் சொல்லவில்லை. தயவு செய்து மன்னிக்க வேண்டும். ஒழுங்குப் பிரச்னை என்ன என்பதைப் படியுங்கள் என்று சொன்னேன். நீங்கள், கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மீண்டும் கொண்டு வருகிறீர்கள்.

அடுத்து, மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும், (புலவர் கா. கோவிந்தன் எழுந்தார்) என்ன இது பற்றியா! பெரியவர் தயவுசெய்து அமர்ந்தால் நல்லது. புதுப்புது பிரச்னையைக் கிளப்பவேண்டாம். அடுத்து, மானியக் கோரிக்கை மீது விவாதமும் வாக்கெடுப்பும்.

[முற்பகல் 10-40]

(7) 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

''நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 10,16,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சிறு கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு வரும் நோய்களை உடனடியாகக் கவனித்து அகற்றுவதற்கு மேலும் கவனம் செலுத்த வேண்டியதன் இன்றியமையாமையினைப் பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,16,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஓ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, வெளிமாநிலங்களுக்கு கால்நடைகள் ஏற்றுமதி செய்யப்படுவது தடை செய்யப்பட வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 22—கால் நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,16,63,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எம். அண்ணாமலை : தலைவரவர்களே, அரூர் வட்டம், ஊத்தங்கரை வட்டங்களில் காடுகள் அதிகமாக உள்ளதால் இங்கு ஒரு கால்நடை வளர்ப்புப் பண்ணை அமைக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,16,63,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES: Sir, to discuss policy, I move—' That the allotment of Rs. 10,16,63,000 under Demand No. 22—Animal Husbandry be reduced by Rs. 100.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவரவர்களே, கிராமங்களில் செம்மறியாட்டு வளர்ப்பை ஊக்கப்படுத்துவது பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 10,16,63,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன்.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

''நிதிக்கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,39,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்க பெறவேண்டும்''

திரு. ஜி. சொக்கலிங்கம் : தலைவரவர்களே, ஊனமுற்றோர், தொழுநோய்க்காரர்கள் கண்காணிப்பு பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண்30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 4,39,00,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU M. ARUMUGAM : Sir, to discuss the need to reserve and offer protective treatment to young widows, physically handicapped, etc., in the Government Service and State Undertakings, I move—

'That the allotment of Rs. 4,39,00,000 under Demand 30—Social Welfare be reduced by Rs. 100.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன.

மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை இலாகா சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புப்* புத்தகமும், சமூக நலன் பற்றிய ஆக்கப் பணி குறித்த குறிப்புகள்* அடங்கிய புத்தகத்தையும் ஏற்கனவே அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற இந்தப் புதிய அரசின் திட்டங்களையும் ஆக்கப்பணிகளைப் பற்றியும் தகவல்கள் அதில் தெளிவாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, உறுப்பினர்கள் அதைப்படித்து புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் உளமாற கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான கருத்துக்களை அறிந்து கொள்வது நலம் என்று நான் எண்ணுகிறேன். எனவே கால்நடை பராமரிப்புத் துறை சம்பந்தப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தையும் சமூக நலன் பாதுகாப்புக் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தையும் நான் இந்த அவையிலே படித்துக் கூறியதாக எடுத்துக் கொண்டு அவையின் நடவடிக்கைக் குறிப்பேட்டில் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களின் மேலான யோசனையையும், கருத்துக்களையும் தெரிந்து கொண்டு என்னுடைய பதிலுரையை ஆற்றுகிறேன் என்று கூறி எனது முன்னுரையை முடிக்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மானியக் கோரிக்கையின் மீது ஒரு அமைச்சரும், அடுத்த மானியக் கோரிக்கையின் மீது மற்றொரு அமைச்சரும் பதில் சொல்ல வேண்டியிருக்கிறது. அவையை மாலையிலே வைத்துக் கொள்ள இயலாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்றால் குடியரசுத் தலைவர் நாளை வருவதால், ஏற்பாடுகளை செய்ய வேண்டி இருப்பதால் அவையை அவர்களிடம் விட்டாக வேண்டும். ஆகவே, 2 மணிக்குள் 4 மானியக் கோரிக்கைகளை

*671–710ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

முடித்தாக வேண்டும். ஆகவே தயவு செய்து உறுப்பினர்கள், இதிலே பேசுகிறவர்கள் அடுத்த மானியத்தில் பேசாமல், மிகச் சுருக்கமாக கட்சிக்கு ஒருவர் என்று பேசினால் போதும் என்று கேட்டுக் கொள்கிறேன். திரு. லத்தீப், திரு. கந்தசாமி, திரு. மார்க்கபந்து ஆகியோர் அடுத்த மானியக் கோரிக்கையில் பேசலாம். இதிலே தயவு செய்து விட்டுவிட வேண்டும். ஆளுக்கு 5 நிமிடந்தான். கடைசியிலே எதிர்க்கட்சித் தலைவர் 15 நிமிடம், மாண்புமிகு அமைச்சர் 15 நிமிடம்.

திரு. கெ. சொக்கலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் சமூகநலத்துறை பற்றி இங்கே பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, இதற்கு முன்னால் இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த சமூக நலத்துறையின்பால் செய்திருக்கிற நல்ல காரியங்களை எல்லாம் நான் சொல்லவிருந்தேன். தலைவர் அவர்கள் அதற்கு நேரம் இல்லையென்று சொல்லிவிட்டார். மாதர் நல இலாகா என்று அழைக்கப்பட்டு வந்த இந்த துறைக்கு மகளிர் நலத் துறை என்றும் பின்னர் சமூக நலத்துறை என்றும் நல்ல பொருத்தமான பெயரைச் சூட்டியது டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையின் கீழ் இருந்த அரசுதான் என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதே போல் சமூக நலத்துறை என்ற பிரிவில் மாதர் சங்கங்கள், மகளிர் மன்றங்கள் என்று அழகிய தமிழ்ப் பெயர்களைக் கொண்டு விளங்கியது. எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற சீரிய கொள்கையைக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில் இப்படிப்பட்ட அழகிய தமிழ் சொற்கள் கொண்டு வரப்பட்டன. பேரறிஞர் அண்ணா அவர்களும் அடுத்து டாக்டர் கலைஞர் அவர்களும் தமிழின் பால் பற்றும் தன்னிகரற்ற புலமையும் கொண்டிருந்த காரணத்தினால் தான் அரியணையில் தமிழ் அன்னையைக் கொலுவீற்றிருக்கச் செய்தார்கள். மாதர் மடமையைக் கொளுத்துவோம் என்று பாரதியார் சொன்னார்; ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதியா என்று தந்தை பெரியார் அவர்கள் கேட்டார்கள். அதை போக்குவிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தந்தை பெரியார் அவர்களும் பேரறிஞர் அண்ணா அவர்களும் அவர்கள் வழி வந்தவர்களும் கடந்த 40 ஆண்டுகாலமாக சுயமரியாதை இயக்கத்தை சமூக சீர்திருத்த கொள்கைகளை நாட்டில் பரப்பி வந்ததன் காரணமாக இன்று ஓரளவுக்கு பெண்களும் ஆண்களைப் போல் கல்வி பயின்று பதவிகளில் அமர்ந்து ஆண்களோடு பெண்களும் சரிசமம் என்று வாழ்ந்து வருவதைப் பார்க்கிறோம். இன்றையதினம் என்னுடைய தொகுதியில் இருக்கிற பரனூர் கிராமத்தில். 31—7—77 அன்று நமது அமைச்சர் அவர்கள் பார்வையிட்ட நேரத்தில் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு எந்தவித அறிவிப்பும் செய்யாமல் அன்றையதினம் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பார்வையிட்ட நேரத்தில் அங்கே

யிருக்கிற தொழு நோய்க்காரர்களுக்கு நல்ல உணவு அளிக்கப் படவில்லை. நல்ல பல சலுகைகள் அளிக்கப்படவில்லை. மற்றும் பயிற்சி பெறுகிற தன்மைகளை எல்லாம் விளக்கிச் சொல்ல லாம் என்று நினைத்தாலும், அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் ஒரு அழைப்பிதழ் அனுப்பப்பட வில்லை.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

அடுத்தபடியாக என்னுடைய தொகுதியில் முட்டுக்காடு கிராமத்தில் ஊனமுற்றோர் பயிற்சி முகாமிற்கு அன்றையதினம் அமைச்சர் அவர்கள் சென்றிருக்கிறார். அதற்கும் அறிவிப்பு கொடுக்கப்படவில்லை. அங்கே ஊனமுற்றோர்களுக்கு உறுதுணை யாக தமிழகத்தின் தானைத் தலைவர் கலைஞர் இருந்தார்கள். தொழு நோய்க்காரர்களின் தொண்டனாக கலைஞர் அவர்கள் இருந்தார்கள். அந்தத் தொழு நோய்க்காரர்களுக்கு கழகத் தலைவர் அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை அதற்காக முதலமைச்சர் நிதியிலிருந்தும் நன்கொடை மூலமாகவும் பெற்று அவர் களின் நல்வாழ்விற்காகக் கொடுத்து வந்தார்கள். அவர்கள் நிலை இன்றையதினம் எப்படி இருக்கிறது? இன்றைய தினம் அவர் களுக்கு வண்டி இல்லை. ஊனமுற்றோர்களுக்கு அங்கே உள்ள வண்டிகள் குறைவாக இருக்கின்றன. ஒரு முறை முட்டுக்காடு கிராமத்திற்கு சென்று பார்த்த நேரத்தில் முன்பு அங்கிருந்த வண்டிகளின் எண்ணிக்கை இன்றையதினம் பாதி மடங்கு தான் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். ஆனால் அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு வந்திருக்கிறார்களே தவிர அங்கே நிலைமைகளை விளக்கிச் சொல்லியதாகத் தெரியவில்லை. அதற்கும் எனக்கு ஒரு அழைப்பும் அனுப்பவில்லை. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், அமைச்சர் அவர்கள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குச் செல்கிற நேரத்தில் அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினருக்கு அதன் சார்பான எந்த அறிவிப்பும் தெரிவிக்கப்படவில்லை என்பதை மிகவும் வருத்தத்தோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10-50]

இப்படி என்னுடைய தொகுதிக்கு அப்பாற்பட்ட மற்றொரு சட்ட மன்ற உறுப்பினரை அழைத்துக் கொண்டு சென்றிருக் கிறார்கள். என்னுடைய தொகுதிப் பிரச்னை எனக்குத் தான் தெரியும். மற்றொரு சட்டமன்ற உறுப்பினருக்கு நிச்சயமாகத் தெரியாது என்று இந்த நேரத்திலே அமைச்சரவர்களின் கவனத் திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோன்று பரனூர் கிராமத்தில் முன்பு நெருக்கடி காலத்தில் கலைஞர் அவர்கள் அந்த வழியாகச் செல்கின்ற நேரத்திலே ஆவலோடு அவரை தொழு நோய்க்காரர்கள் பார்க்கக் காத்திருந்தார்கள். அவர் அவர்களைப் பார்த்து விட்டுச் சென்றார். இப்படி அவர்கள் கலைஞரைப் பார்த்த ஒரே காரணத் திற்காக அவர்களில் 75 பேரை அங்கிருந்து வெளியேற்றி

விட்டார்கள். முன்பு இருந்த கவர்னர் ஆட்சியில் அவர்கள் வெளி யேற்றப்பட்டார்கள் என்பதைச் சுட்டிக் காட்ட ஆசைப்படு கிறேன். தொழு நோய்க்காரர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற் காக இப்படிப்பட்ட இல்லங்கள் கலைஞர் அவர்களால் அமைக்கப் பட்டன. இப்படி அங்கிருந்தவர்களில் 75 பேர் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இந்த அரசு அதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பது எனக்குப் புரியவில்லை.

அடுத்தபடியாக இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். மறுவாழ்வு இல்லத்திலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்கள் தலைமையிலே, தொகுதி சட்ட மன்ற உறுப்பினர், நாடாளு மன்ற உறுப்பினர், பெருந்தலைவர் ஆகியோரைக் கொண்ட ஒரு கமிட்டி அங்கு அமைப்பு முறையாக இருந்திருக்கிறது. ஆனால் அதைப் பற்றி எந்தவித நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியவில்லை.

ஊராட்சி ஒன்றியத்திற்கு திட்ட ஆதாரங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 ரூபாய் வழங்கப் பெற்று அந்த 100 ரூபாய் 5 இடங்களில் பரிசு வழங்கப் பயன்படுத்தப்பட்டது. இதனால் ஒவ்வொரு பகுதிக்கும் ரூ. 20 கிடைத்தது. இந்த ரூ. 20-ல் என்ன பரிசு கொடுத்து விட முடியும்.

இந்த ரூ. 100-ஐ ரூ. 500 ஆக உயர்த்திக் கொடுத்தால் அது மிக்க உதவியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத் திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் சொல்லிக் கொள்கிறேன். பரனூரில் 402 தொழுநோய்க்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 75 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். நீங்கள் வெளியே இருப்பவர்களை உள்ளே கொண்டு வரப் போவதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். ஆனால் உள்ளே இருந்தவர்கள் வெளியே அனுப்பப் பட்டிருக்கின்றனர். அவர்கள் எப்பொழுது உள்ளே அழைத்துக் கொள்ளப்படுவார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. இப்படி வெளியே இருக்கிற தொழு நோயாளிகளை உள்ளே அழைத்து வந்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக் கொண்டு, அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இந்த அரசு இனிமேலாவது இப்படிப் பட்ட பிரச்னைகளில் தொகுதி சட்ட மன்ற உறுப்பினரை அழைக் காமல், வேறு ஒரு தொகுதி சட்ட மன்ற உறுப்பினரை அழைத் துச் செல்வதை விட்டு விட்டு, தொகுதி சட்ட மன்ற உறுப்பினரை அழைத்துச் செல்கின்ற முறையை மேற்கொள்வாரா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன் என்பதைக் கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

128-131—4A

திரு. ரா. க. சு. தண்டபாணி: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே! எனது தொகுதி காங்கேயம் என்றவுடனேயே நினைவுக்கு வருவது காங்கேயம் ''பிரீட்'' (Breed) கால்நடைகளாகும். அவை வாயில்லா ஜீவன்கள். இது யாவரும் அறிந்தது. ஆனால் இதுவரை அந்தப் பகுதியிலிருந்து தேர்ந்து எடுக்கப்பட்டு வந்தவர்களும் * * இருந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த மன்றத்தில் இதற்கு முன் காங்கேயம் இனக் கால்நடைகளைப் பற்றி அரசு கவனத்திற்கு கொண்டு வந்ததும் இல்லை, அவற்றைக் காப்பதற்கு அரசும் எந்த வித நடவடிக்கையும் மேற்கொண்டதும் இல்லை. காமான், கோமான் இனத்தையெல்லாம் காப்பதற்கு மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் கால்நடை வளர்ப்பு நிறுவனங்கள் உள்ளன. ஆனால் உலகப் புகழ் பெற்ற காங்கேயம் ''பிரீட்'' (Breed)-ஐ காப்பதற்கோ அல்லது புகழ் வாய்ந்த தமிழ்நாட்டின் உயிர்நிலை - மாவட்டமான கோவை முழுவதிலுமோ ஒரு கால்நடை வளர்ப்பு நிறுவனம் இல்லை. இது பற்றி 7 ஆண்டுகள் தமிழகத்தை பிடித்துக் கொண்டிருந்த கலைஞரின் ஆட்சிக்கும், காலத்திற்கும் நினைவு வராதது எனக்கு வருத்தம். ஆதலால் புரட்சித் தலைவர் அவர்கள், கலைஞரும், காலமும் காங்கேயம் கால்நடைகளுக்குச் செய்த சதியை ஒரு கால்நடை வளர்ப்பு நிறுவனம் நிறுவி முறியடிக்க வேண்டுகிறேன்.

திரு. எம். ஆறுமுகம்: தலைவரவர்களே! ஒரு ''பாயிண்ட் ஆப் ஆர்டர்''. மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது ஏற்கெனவே இந்த அவையில் இருந்தவர்கள் * * * * இருந்தார்கள், அவர்கள் எதுவும் செய்யவில்லை என்று இப்படிக் குறிப்பிட்டுப் பேசுவது முறையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஏற்கனவே இந்தச் சட்ட சபையில் சட்ட மன்ற உறுப்பினராக வீற்றிருந்தவர்களைப் பற்றி, அவர்கள் * * * * இங்கே இருந்தார்கள் என்று சொல்வதன் மூலம் அவர்கள் இங்கு தங்கள் கடமைகளை ஆற்றாமல் இருந்தார்கள் என்று பொருள்படும். எனவே அந்த வாக்கியம் முழுவதையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட உத்தரவிடுகிறேன்.

திரு. ரா. க. சு. தண்டபாணி: தங்கள் திருத்தத்திற்கு நன்றி. இப்படி ஒரு கால்நடை வளர்ப்புப் பண்ணையை காங்கேயத்தில் அமைப்பதற்கு ஒரு சுலபமான வழி இருக்கிறது. முன்னாள் அமைச்சர் திரு. மன்றாடியார் அவர்களிடமும், அவர்

*மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவரின் ஆணைக்கிணங்க முற்பகல் 10.50—51 இல் சில சொற்கள் அகற்றப்பெற்றன.

களது தம்பி குடும்பத்திடமும் இருக்கும் 3,000 ஏக்கர் நிலத்தையும் 400 animal களையும் நியாயமான விலைக்கு அரசுக்குத் தருவதாக எழுதியிருப்பதாக அறிகிறேன். அப்படி எழுதியிருந்தால் அந்த 3,000 ஏக்கரில் நல்லதொரு கால்நடைப்பண்ணை அமைக்க முடியும். பழைய கோட்டை கால்நடைப் பண்ணை அரசுப் பண்ணைகளுக்கும் ஆதார கிராமப் பண்ணைகளுக்கும் தேவையான பொலிக்காளைகள், மற்றும் எருதுகளை வழங்கி வருகிறது. Brazil, Ceylon முதலிய வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டும் இருக்கிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள சிறு விவசாயிகளுக்கு கண்ணபுரம், திருப்பூர் கால்நடை சந்தை மூலம் வேலை மாடுகள் விற்பனை செய்யப்படுகின்றன. மேற்படி பண்ணையின் தனிச் சிறப்பானது அதனுடைய பூமியின் கால்ஷியம் வளமும் சேர்ந்தார்போல் ஒரே இடத்தில் சுமார் 1,800 ஏக்கர் நிலப்பரப்பும் அமைந்திருப்பதேயாகும். இங்கு உற்பத்தியாகும் கொழுக்கட்டைப் புல்லில் வளரும் கால்நடைகள் திடமுள்ளதாகவும் பஞ்சகாலத்திலும் சகிப்புத்தன்மை உடையவைகளாகவும் இருப்பது குறிப்பிடத்தக்கது. கோவை மாவட்ட விவசாயிகள் பசுக்களையும் வேலைக்கு உபயோகப்படுத்துகிறார்கள். அதற்கு ஏற்றது இந்த காங்கேயம் இனம் ஒன்றுதான். தனியார் பண்ணையாக இருப்பினும் நல்ல முறையில் நடத்தப்படுவதால் கோவை, திருச்சி, மதுரை மாவட்டங்களில் அரசு பண்ணை நிறுவ அவசியம் ஏற்படவில்லை. இந்தப் பண்ணையை அரசு நடத்துமானால், கோவை மாவட்டத்தில் பின்பு அரசு கால்நடைப் பண்ணை அமைக்க நூற்றுக் கணக்கான விவசாயிகளிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியது இருக்காது. கோவையில் அமைந்துள்ள தமிழ்நாடு விவசாயப் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் இந்தப் பண்ணை அமைந்துள்ளதால் கால்நடை மருத்துவம், மற்றும் ஆராய்ச்சி, நுண்கலை இன அபிவிருத்தி முதலியவைகளுக்குப் பெரும் அனுகூலமாக இருக்கும். இப்போதுள்ள நிலைமை என்னவெனில் பால் உற்பத்தி குறைவாக இருப்பதால் தாய்க்குலத்திற்குப் பால் கிடைப்பதில் கூடக் கஷ்டமிருக்கிறது.

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர். காங்கேயத்தில் உள்ள பசுக்களும் காளைகளும் சேர்ந்து பிறக்கின்ற கன்றுகளால் தாய்க் குலத்திற்குப் பால் கிடைக்காமல் போகிறது என்று சொல்கிறார்கள். அது உண்மையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அது அவர்களுடைய கருத்து. இதில் பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றுமில்லை.

திரு. ரா. க. சு. தண்டபாணி: ஈரோட்டில் ஒரு பால் பண்ணை அமைக்க இருப்பதாகச் சொல்கிறார்கள். நான் நிரூபிக்க முடியும். அடுத்து, இந்தப் பண்ணையைச் சரியாகப்

பயன்படுத்தினால் கால்நடை, வேளாண்மை இரு துறைகளுக்கும் லாபம் ஏற்படும். அதோடு கூட இந்தப் பண்ணை இயக்குநர் திரு. மன்றாடியார் அவர்கள் தனது அனுபவத்தை அரசுக்கு ஊதியம் இல்லாமல் வழங்க இசைந்துள்ளார்கள். ஆகவே பாரதத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்த பற்பல கால்நடை வல்லுநர்களால் போற்றப்பட்டதும், தமிழகத்திற்கு தனிப்பெரும் பெருமையை அளித்ததுமான இந்த பழையகோட்டை கால்நடைப் பண்ணையை அரசு ஏற்று நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஆநிரை காப்பகங்கள் அமைய இருப்பது புரட்சித் தலைவர் ஜீவகாருண்யத்திற்கும் கொடைத்தன்மைக்கும் ஒரு எடுத்துக்காட்டாகும். அப்படி ஒரு ஆநிரை காப்பகத்தை சென்னிமலையில் சுப்பிரமண்ய சுவாமி தேவஸ்தானம் சார்பாக ஏற்படுத்தித்தர வேண்டும் என்றுகேட்டுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11.00]

இதற்கான தடுப்பு வாக்சின்களை கொடுக்க வேண்டும். எதிர்காலத்தில் நல்ல முறையில் கால்நடைச் செல்வங்கள் வளர இப்படிப்பட்ட மருந்துகளை ஏராளமாக கொடுக்க வேண்டியது அரசின் கடமை என்பதை சொல்லிக் கொள்கிறேன். விவசாயிகளின் செல்வமாக இருக்கின்ற இந்த கால்நடைகளை விற்கின்ற போது, இடையிலுள்ள இடைத் தரகர்கள் மாட்டு சந்தைகளில் வந்து கலந்து கொண்டு, ஒவ்வொருவரும் 500 முதல் 1,000 ரூபாய் எடுத்துக் கொள்கின்ற முறையிருக்கிறது. இதை மாற்றி தேங்காய் வியாபாரிகள் போன்றவர்கள் கையாளும் ஒழுங்கு முறை மார்க்கட்டிங் கமிட்டி மூலமாக மாடுகளை விற்பதிலும் ஏலம் போட்டுச் சந்தையில் விற்கக் கூடியநிலை வரவேண்டும். அதற்கு அரசு ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் Livestock Assistants களை ஒரு ரீஜனலிருந்து இன்னொரு ரீஜனுக்கு டிரான்ஸ்பர் செய்கிறார்கள். ஏதாவது தங்கள் சொந்த வீடுகளில் காரியங்களுக்காக போய்வருவதென்றால் குறைந்த சம்பளம் பெறுகின்ற இந்த லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்டுகளுக்கு மிகவும் சஷ்டமாக இருக்கிறது. ஆதலால் நேட்டீவ் ரீஜனிலேயே அவர்களை பணி செய்ய அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் காங்கேயம் கால்நடைச் செல்வங்கள் வளருவதற்குத் தடையாக இருப்பது அங்குள்ள வறட்சிதான். அதைப் போக்குவதற்கு புரட்சித் தலைவர் போட்டுள்ள பி. எ. பி. விஸ்தரிப்புத்

திட்டத்தையும், அறிஞர் அண்ணா அவர்களின் ஆசி பெற்ற நொய்யல் ஆற்றுத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டும். அறிஞர் அண்ணா இருந்த போது, அப்போதிருந்த திரு. கோவிந்தசாமி அவர்களை இந்த நொய்யல் ஆற்றுத் திட்டத்தைப் பார்த்து வரச் சொன்னார்கள். மறைந்த அறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் திட்டத்தை ஏன் இன்னும் நிறைவேற்றவில்லை என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே அண்ணாவின் ஆசி பெற்ற நொய்யல் ஆற்றுத் திட்டத்தையும், புரட்சித் தலைவரின் பி.எ.பி. விஸ்தரிப்புத் திட்டத்தையும் நிறைவேற்றி காங்கேயம் கால்நடைச் செல்வத்தை பிழைக்க வைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன், நன்றி.

*<u>திரு. ரா. நாராயணன்</u>: மாண்புமிகு துணைத்தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் கீழ் இந்திய தேசிய காங்கிரஸ் சார்பாக நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மான்யத்தின் கீழ் 10 கோடியே 16 லட்சத்து, 63 ஆயிரம் ரூபாய் ஒதுக்குமாறு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள். விவசாயிகளுக்கு முக்கியமான கால்நடைச் செல்வங்களை வளர்ப்பதற்கு இது போதிய தொகை அல்ல, இன்னும் அதிகமாக ஒதுக்கியிருக்கவேண்டும். விவசாயிகளுக்கு அதிக நன்மை செய்ய வேண்டுமென்றால் கால்நடைச் செல்வங்கள், ஆடு மாடுகளை அதிகமாக வளர்ப்பதற்கு இன்னும் அதிக நிதி ஒதுக்கி அதன்மூலம் பயன் அடையச் செய்ய வேண்டும். அந்த முறையில் பார்த்தால் இப்போதுள்ள தொகை போதாது, இன்னும் அதிகமாக ஒதுக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக விவசாயிகளுக்கு விவசாயம் செய்கின்ற நேரம் தவிர மற்ற நேரங்களில் கால்நடைகளை வளர்த்து அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய சிறிய வருமானத்தைக் கொண்டு தங்கள் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றுள்ள நிலையில் ஒரு ஜோடி மாடுகள், 20 ஆடுகள் வாங்க வேண்டும் என்றால் 5,000 ரூபாய் வரை தேவைப்படுகிறது. அந்தத் தொகையை கடன் வாங்குவது என்றால், தனியார்களிடமிருந்தோ அல்லது வெளியார்களிடமிருந்தோ தான் கடன் வாங்கவேண்டும். வேறு கடன் கிடைக்க வழியில்லை. கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக அவர்களுக்குப் போதிய தொகை கால்நடைகள் வாங்க கொடுப்பதில்லை. கால்நடைகள் வாங்க வேண்டுமென்றால் அதிகமான வட்டிக்கு தனியாரிடமிருந்துதான் கடன் வாங்க வேண்டும். இந்த நிலைமையில் கால்நடைகளை வைத்துக் கொண்டு அதன் மூலம் உழவுத் தொழிலைச் செய்து விவசாயம் செய்து வருகிறார்கள். மேலும் இவர்கள் வாங்கக்கூடிய கடன் தொகையையும் அடைக்க முடியாமல் வட்டியும் கொடுக்க முடியாமல்,

தங்கள் நிலங்களையும் விடக்கூடிய நிலையில் மிகவும் மோசமான நிலைமைக்கு ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் தமிழகத்தில் ஆடுகள் வளர்ப்புச் சங்கம் என்று பல இடங்களில் பதிவு செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கங்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட பாங்குகள் மூலம் கடன் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்டது, ஆனால் மாடுகள் வாங்குவதற்கு கடன் கொடுப்பதில்லை. குறிப்பாக தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளாக இருந்தாலும் சரி, இல்லையென்றாலும் சரி, விவசாயிகளுக்கு ஒரு ஜோடி மாடுகள், 15-20 ஆடுகள் வாங்கிக் கொள்கின்ற அளவில் குறைந்தது 5,000 ரூபாய் வரை கடன் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று அரசை கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, விவசாயிகள் இந்த ஆடு, மாடுகள், கால்நடைகளை நம்பித்தான் தங்களுடைய விவசாயத்தைப் பெருக்குகிறார்கள். இன்றைய நிலையில் இயற்கை உரத்தை அதிகமாகப் பயன்படுத்தாமல், செயற்கை உரத்தைத்தான் அதிகமாக உபயோகிக்கின்றார்கள். ஆடு, மாடுகள், கால்நடைகளின் உரத்தை அதிகமாகப் பயன்படுத்த முடியாத நிலைதான் இருக்கின்றது. குறிப்பாக, நம்முடைய மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சராக இருந்த திரு. ஓ. பி. ராமசாமி ரெட்டியார் அவர்கள், கிராமங்களிலே உள்ள விவசாயிகள் உணவு உற்பத்தியைப் பெருக்க இப்படி ஆடு, மாடு, கால்நடைகளின் உரத்தைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதே முறையில் ஜனதா கட்சியின் தலைவராக இருக்கும் பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் செயற்கை உரத்தை அதிகமாக நம்பக் கூடாது, இயற்கை உரத்தின் மூலமாகவே விவசாயிகளுக்கு அதிக பலன் ஏற்படும் என்று கூறியிருக்கிறார்கள். அப்படி இயற்கை உரத்தை அதிகமாகப் பெருக்க வேண்டுமானால், அதற்கு நாம் இந்த ஆடு, பாடுகள், கால்நடைகளைப் பெருக்குவதன் மூலமாகத்தான் உற்பத்தியைப் பெருக்க இயற்கை உரத்தை உபயோகிக்கவேண்டும். அதற்கான வழிவகைகளை இந்த அரசு மேற்கொள்ள வேண்டும். இன்று கிராமங்களிலே உள்ள விவசாயிகள் ஒட்டிய வயிரோடும், ஒளியிழந்த கண்களோடும், வாடிய முகத்தோடும்தான், தங்களுடைய வாழ்க்கையைப் பெருக்குவதற்கு வசதியில்லாமல் வறுமையால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசாங்கம் அவர்களுக்கு ஆடு, மாடுகள், கால்நடைகள் வாங்கு, வதற்கு அதிகமான நிதி ஒதுக்கியிருக்கவேண்டும். குறிப்பாக சிறிய விவசாயிகளுக்கு குறைந்தது 5,000 ரூபாய் வீதம், ஆடு, மாடுகள் வாங்குவதற்கு அனுமதி வழங்க இந்த அரசு உடனடியாக ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தது, எங்களுடைய பகுதியிலே குறிப்பாக மேய்ச்சேரி ஆடு என்றால் பெயர்போனது. தமிழ் நாட்டிலேயே, இந்த இனத்தை பெருக்குவதற்கு இந்த ஆடுகளை வாங்கி வட்டார அலுவலகங்கள் மூலம் எல்லா இடங்களுக்கும் கொடுத்தார்கள். அந்த அளவுக்கு பிரசித்தி பெற்ற ஆடுகள். அந்த ஆடுகளை வளர்ப்பதற்காக, ஒரு கால்நடைப் பண்ணை ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தில் இருந்தது. பின்னர் அது கைவிடப்பட்டது. ஆகவே, அந்த அடிப்படையில் இப்பகுதியில் ஆட்டுப் பண்ணையை வைத்து, இந்த மேய்ச்சேரி ஆடுகளை வளர்ப்பதற்கான ஒரு திட்டத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று நான் இந்த அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

ஏற்கனவே பசுக்களுக்கு இலவசமாகக் கருத்தரிக்கும் ஊசி போடப்பட்டது. ஆனால், இன்றைக்கு அந்த நிலைமை மாற்றப்பட்டு, ஒரு பசுவுக்கு ஒருமுறை ஊசி போடுவதற்கு ரூபாய் இரண்டு கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. இதை விவசாயிகள் கொடுக்க முடியாத நிலையில் உள்ளார்கள். ஒரு பசுவுக்கு ஊசி போட்டால் கருத்தரிப்பது இல்லை. 4, 5 ஊசிகள் போட வேண்டியிருக்கிறது. எனவே, நான் அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே இருந்ததுபோல், பசு கருத்தரிக்க ஊசி போடுவதை இலவசமாகவே போடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், பால் மாடுகள் வாங்குவதற்கு கடன் வழங்கும் திட்டத்திற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதேபோல் ஆடுகள் வாங்குவதற்கும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். சமூக நலத்துறையைப் பொறுத்த மட்டில், குறிப்பாக கிராமங்களிலே உள்ள வயதான விதவைகள் மிகவும் கஷ்டப்படக்கூடிய நிலையிலேதான் இருக்கிறார்கள். அங்குள்ள விதவைகள் அனாதைகளாக, ஆதரவு அற்றவர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்குப் பென்ஷன் தொகை வழங்கப்பட வேண்டும்.

இன்று பஞ்சாயத்து யூனியன்களிலே, பல வட்டாரங்களிலே வேலை செய்யக் கூடிய ஸ்டாக்மென் வேலையாளர்கள் வட்டார அலுவலகங்களிலே வேலை செய்து கொண்டிருந்தவர்களை முன்பு, அரசாங்கம் எடுத்துக் கொண்டார்கள். பின்னர், அவர்கள் அரசாங்கத்தில் இருந்து வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி அனுப்பி வைக்கப்படும் ஏ. எச். அசிஸ்டெண்டுகள், ஸ்டாக்மென்கள் ஒரே இடத்தில் வட்டார அலுவலகங்களிலேயே வேலையில் அமர்த்தப்பட வேண்டும்.

கிராமங்களிலே வேலைசெய்யும் இந்த ஸ்டாக்மென் கம்பவுண்டர்கள் அந்த இடத்தை விட்டு வேறு எங்கும் கால்நடை

மருத்துவத்திற்கு செல்வது கிடையாது. ஆடு மாடுகள் நோய்வாய்ப்பட்டால், அந்த ஆடு மாடுகளை அவர்கள் மருத்துவ மனைக்குக் கொண்டு வரவேண்டுமென்று சொல்கிறார்களே தவிர ஆடு மாடுகள் நோய்வாய்ப்பட்டிருக்கும் இடத்திற்கு அவர்கள் வந்து பார்ப்பதில்லை. அதனால் அங்குள்ள விவசாயிகளுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படுகிறது. எனவே, நோய்வாய்ப்பட்ட இடத்திலேயே வைத்தியம் செய்வதற்கான ஆணையை இந்த அரசாங்கம் பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அது தான் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது)

எனவே, இந்த மான்யக் கோரிக்கைக்கு இன்னும் அதிகத் தொகை ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்து கொள்கிறேன், வணக்கம்.

* திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்கள, கால்நடை வளர்ப்பு, சமூக நலத்துறை மானியங்களின் மீது பேசுகிற வாய்ப்புத் தந்தமைக்காக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கால்நடை பற்றிப் பேசுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்தது போல், நேரத்தைக் குறைத்தது போல், கால்நடைப் பராமரிப்பில் நம்முடைய கவனத்தைக் குறைத்து விடக் கூடாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் இருக்கும் கால்நடைகள் எண்ணிக்கை ஆண்டுக்காண்டு குறைந்து வருகிறது. அந்த எண்ணிக்கையைப் பெருக்கியாக வேண்டிய காலக்கட்டத்தில் இருக்கிறோம். கால்நடைகளுக்கு நமக்குத் தெரியாத விதவிதமான நோய்கள் வருகின்றன. அவை எந்த வகையைச் சார்ந்தவை என்று கண்டுபிடித்து தக்க மருந்துகளைக் கண்டு பிடித்து அந்த நோய்களைத் தீர்க்க ஆவன செய்ய வேண்டும். வாயில்லாத ஜீவன்கள் அவைகளுக்கு ஏற்பட்டிருக்கும் நோய்களைப் பற்றிக் கூற முடியாது. ஆகவே, எப்படிப்பட்ட நோய்கள் வருகின்றன என்று கண்டுபிடித்து தக்க மருந்துகளைக் கொடுத்து காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம்.

கால்நடைகளுக்குச் சரியான தீவனம் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. மேய்ச்சல் நிலம் குறைவாக இருக்கிறது. மேய்ச்சல் நிலத்தை அதிகப்படுத்தும் வகையில் புறம்போக்கு நிலங்களை மேய்ச்சலுக்குத் தகுதியுடையதாக ஆக்கி தீவனத்தை நல்ல முறையில் அளிக்க அரசு ஆவன செய்யவேண்டும்.

ஒரு மனிதனுக்கு எந்த அளவுக்கு உணவு தேவை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு நபருக்கு 300 கிராம் பாலும்,

பால் பொருட்களும், 85 கிராம் இறைச்சி, மீன், 40 கிராம் முட்டையும் நாள் ஒன்றுக்குத் தேவைப்படுகிறது. ஆனைத்திந்திய நிலையில் நபர் ஒருவருக்குக் கிடைக்கின்ற அளவு 130 கிராம் பால், 14 கிராம் இறைச்சி, மீன், முட்டை ஆகியவை பட்டுமே ஆகும். தமிழ்நாட்டில் நபர் ஒருவருக்கு கிடைக்கின்ற அளவு 63 கிராம் பாலும் இறைச்சியும், மீனும் முட்டையும் 20 கிராம் ஆகும். தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரு மனிதனுக்குக் கிடைக்கின்ற உணவை அகில இந்திய அளவோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது மிகவும் குறைவாக இருக்கிறது. இந்த அளவு கூட எத்தனை பேர் சாப்பிடுகிறார்கள் என்று பார்த்தால் மிகவும் குறைவாகத்தான் இருக்கும். கால்நடைகளைப் பெருக்கி, கோழி வளர்ப்பைப் பெருக்கினால்தான் மக்களுக்கு ஏற்ற அளவில் அந்த உணவுப் பொருட்கள் கிடைக்கும். அது உணவுத் தட்டுப் பாட்டையும் நீக்கும் வகையில் இருக்கும்.

தமிழகத்தில் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்கின்ற வகையில் ஆங்காங்கு மாட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தி தொழிலாளர்களுக்கு வேலை அளிக்கும் வகையில் திட்டங்களைத் தீவிரமாகத் தீட்டவேண்டும். அங்கெல்லாம் தொழிலாளர்கள் தினம் 4 ரூபாய் 5 ரூபாய் பெற்றுக் கொண்டு காஷுவல் லேபராகத் தான் வேலை செய்கிறார்கள். அவர்களை நிரந்தரத் தொழிலாளர்களாக ஆக்கவேண்டும். கோழிப் பண்ணையைப் பொறுத்தவரை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்தால் வேலைவாய்ப்பை அளிக்கக்கூடியதாக இருக்கும். இந்தத் திட்டத்தை விரிவுப்படுத்தி கிராமங்கள்தோறும் கோழிப் பண்ணைகளை ஏற்படுத்தி சிறந்த கோழிகளைக் கொடுத்து அவற்றிற்கு ஏற்படக் கூடிய நோய்களையும் தீர்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

சமூக நலத்துறையைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது கிராமங்களில் வாழக்கூடிய விதவைகள், முதியோர், ஆதரவற்ற இளைஞர்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் வகையில் அரசு திட்டம் தீட்டி செயல்பட வேண்டும். பிச்சைக்காரர் மறுவாழ்வு நிலையம் என்ற பெயரை மாற்ற வேண்டும். ஆதரவற்றோர் மறுவாழ்வு நிலையம் என்று வைக்கலாம். கிராமங்களில் ஆதரவற்றோர் முதியோரும் மற்றவர்களும் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அவர்களுக்கு ஆதரவு அளிக்கும் திட்டத்தைத் திட்டவேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

திரு. என். பழனிவேல் : மதிப்பிற்குரிய சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு கால்நடை வளர்ச்சிக்கு 2 கோடியே 26 லட்சத்து 82 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அதே சமயத்திலே அதிகாரிகளுக்கு 2 கோடியே 11 லட்சத்து 79 ஆயிரம் ரூபாய் செலவு செய்யப்

படுகிறது. இதிலே அரசாங்கம் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவிகள் அளவிற்கு அதிகாரிகளுடைய சம்பளம் இருக்கிற காரணத்தால் மக்களுக்குக் கிடைக்கக்கூடிய உதவிகள் அதிகமாகக் கிடைக்காத நிலைமை இருக்கிறது. இதை மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இன்றைய தினம் பெரிய அதிகாரிகள் 1,591 பேர்கள் இருக்கிறார்கள். 1,000 ரூபாய், 1,500 ரூபாய் சம்பளம் வாங்கக்கூடிய பெரிய அதிகாரிகள் இத்தனை பேர்கள் இருக்கிறபோது குறைந்த சம்பளம் வாங்கக்கூடிய சிப்பந்திகள் 3,500 பேர்கள் தான் இருக்கிறார்கள், சிப்பந்திகள், உதவியாளர்கள் அதிகமாக ஏற்படுத்தினால்தான் விவசாயிகளுக்கு உதவக் கூடிய நிலைமை இருக்கும். அதோடு கூட வேலையில்லாமல் இருக்கக்கூடியவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க கூடிய நிலைமையும் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கால்நடை இலாகாவின் டைரக்டர் இன்றைய தினம் நான்கு இலாக்காக்களை பொறுப்பேற்றுக் கொண்டு இருக்கிறார். அதாவது கால்நடை, பால்வள நிறுவனம், பால் இலாகா, கோழி வளர்ப்பு இப்படி நான்கு துறைகளை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக சிறு அதிகாரிகள் அந்த டைரக்டரைப் பார்க்கவேண்டுமென்று சென்றால் பல நேரங்களிலே ஒவ்வொரு இலாகாவிற்கு சென்றுவிட்டார் என்று கூறுகிறார்களாம். இதனால் அந்தச் சிப்பந்திகள் எல்லாம் துறையைப் பொறுத்த வரையிலே கஷ்டப்படுகிறார்கள், ஆகவே அரசு இதைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஊசி போடுவதற்காக விவசாயிகள் பணம் கொடுக்கவேண்டுமென்று சொல்வது மிகவும் கொடுமையான காரியமாகும். கால்நடைகள் அபிவிருத்தி என்ற பெயரில் கால்நடைகளை அதிகமாக உற்பத்தி செய்வதற்கு 2 ரூபாய், 5 ரூபாய் என்று பணம் வசூலிக்கப்படுகிற நிலைமை இருக்குமானால் இது முறையானது அல்ல, கால்நடைகள் சினைப்படுவது குறிப்பிட்ட காலங்களில் தான். அந்தக் காலத்தில் 24 மணி நேரத்திற்குள் ஊசி போட்டால்தான் சினை பிடிக்கும். அந்த சந்தர்ப்பத்தைத் தவறி விட்டுவிட்டால் அடுத்த மாதத்தில்தான் பார்க்க வேண்டும். இப்படி பணம் வசூல் செய்வது அவசர கால நேரத்திலே கொண்டு வரப்பட்டது, இன்றைக்கு அவசரகாலநிலை போக்கப்பட்டு விட்ட காரணத்தினாலே இப்படி பணம் வசூலிப்பதையும் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளின் மருத்துவமனைகளிலே இன்றைய தினம் 350 உதவியாளர்கள் வேலை காலியாக இருக்கிறது. அவற்றிற்கு எல்லாம் உடனடியாக அதிகாரிகளை நியமித்து வேலைவாய்ப்புக்

களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறையிலே அதிகாரிகள் அடிக்கடி மாற்றப்படுகிறார்கள். இதனால் சிப்பந்திகளுக்கு அதிகமாக சிரமங்கள் ஏற்படுகின்றன. இதனால் விவசாயிகளுக்கு உதவிகள் கிடைக்காமல் போய்விடுகின்றன. ஆகவே இப்படி மாற்றுவதைக் குறைக்கவேண்டும்.

இந்தக் கால்நடை துறையில் உள்ள அதிகாரிகளுக்குத்தான் விடுமுறையே கிடையாது என்று சொல்கிறார்கள். என்ன கொடுமையான சங்கதி? எந்த இலாகாவை எடுத்துக் கொண்டாலும் விடுமுறை கொடுக்கப்படுகிறது. ஆனால் இந்தக் கால்நடை துறையில் இருக்கிறவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை, குறைந்த பட்சம் ஆண்டுக்கு ஒரு மாதமாவது விடுமுறை கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, நிர்ணயப்படி உதவியாளர்களுக்குக் கிராமங்களுக்கு 8 கிலோ மீட்டருக்கு அதிகமாகப் பயணம் செய்கிற நேரத்திலே மாதம் ஒன்றுக்கு 35 ரூபாய் கொடுக்கப்பட்டு வந்தது. அவசர காலத்திலே அதை ரத்து செய்துவிட்டார்கள். இப்போது நிர்ணயப்படி கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்கள் எங்கே போவார்கள்? அங்கேயுள்ள அதிகாரிகளைக் கேட்டால் அவர்கள் விவசாயிகளிடம் சென்று வாங்கிக்கொள்ளுங்கள் என்று கூறுகிறார்களாம். அதிகாரிகள் இப்படி லஞ்சம் வாங்குங்கள் என்று சொல்லலாமா? இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கூறக்கூடாது என்று சொல்ல வேண்டும், நிர்ணயப்படி 35 ரூபாயை அவர்களுக்கு உடனடியாகக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிராமங்களிலே கேந்திர கிராம அபிவிருத்தி நிலையங்கள் 10, 15 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. வாரத்திற்கு ஒரு முறையாவது நடமாடும் கால்நடை மருத்துவ மனைகளை இயங்கச்செய்து அவைகள் வந்து கால்நடைகளைப் பார்ப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

ஆடு வளர்ச்சிக்குக் கடன் கேட்டு கிராமங்களிலே உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் மனுச்செய்தார்கள். ரூபாய் செலவு செய்தும் சங்கங்களையெல்லாம் பதிவுசெய்தும் இன்றைக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லாமல் இருக்கிறது. ஆகவே ஆட்டுக் கடன்களுக்கு மனுச் செய்தவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டும்.

தர்மபுரி மாவட்டத்திலே காடுகள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் கால்நடை மருத்துவமனை ஒன்றை அங்கே ஏற்படுத்தக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கே கால்நடைப்

பணியாளர்களை அமைத்தால் சிறப்பாக இருக்கும், அரூர் வட்டாரத்திலே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-20]

அதேபோல் ''கருணை இல்லங்கள்'' என்ற பெயரால் இன்றைய தினம் 53 இடங்களிலே ''கருணை இல்லங்கள்'' இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அது போதாது. அவற்றை நாடு முழுவதும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கருணை இல்லத்தில் இருக்கும் ஏழை மாணவர்கள் சாதாரண மட்டத்திலேயிருந்து வந்தவர்கள். ஏழ்மையினால் பல குற்றங்களைச் செய்கிறார்கள், கிரிமினல் வாதியாக மாறுகிறார்கள். இது விஷயத்தில் விரிவான முறையில் கவனிக்க வேண்டும். ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12·50 வீதம் ஒரு மாதத்திற்கு வழங்குவதாகக் கூறியிருக்கிறார்கள். இதை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறதுமாதத்திற்கு 12 1/2 ரூபாய் மற்றச் செலவுகளுக்குக் கொடுக்கப்படுவதாக. கட்டிடம், மரச் சாமான்கள் முதலியவற்றிற்காக ஒரு குழந்தைக்கு 1,000 ரூபாய் செலவாகும் என்று கூறுகிறார்கள். அது எப்படிச் செய்ய முடியுமென்று விளங்கவில்லை. ஒரு வருடத்திற்கு ஒரு மாணவருக்கு 600 தான் கணக்கு வருகிறது. ஆனால், கட்டிடங்கள், மரச் சாமான்களுக்கு ஆயிரம் ரூபாய் என்றால் மொத்தை போட்டிருக்கிறார்களா என்னவென்று சரியாக விளங்கவில்லை. அதை அமைச்சரவர்கள் பதில் உரையிலே நமக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல விதவைகளுக்கு மறுமணம் செய்துகொள்ள 18 முதல் 30 வயது வரையில் உள்ளவர்கள் மறுமணம் செய்து கொண்டால் அவர்களுக்கு ஏழாண்டு தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வடிவில் ரூ. 5,000 நிதியுதவி வழங்குவதாகக் கூறுகிறார்கள். 1975-76ஆம் ஆண்டில் 90 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். இதை அதிகப்படுத்த வேண்டும். ஏனென்றால் 90 பேர் என்றால் கடலில் கரைத்த பெருங்காயம் என்று சொல்வார்களே அதுகூட வராது. ஆகவே, இதை அதிகமாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குழந்தை நலத்தைப் பொறுத்தவரையில் சுமார் 3,000 சிறார் பள்ளிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இது கொஞ்சமும் பொருத்தமில்லாததாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்த வரையில் 13,000-க்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் ஒவ்வொன்றாவது ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். ஆனால் புதிய அரசு 100 பள்ளிகளை அதிகப்படுத்தியிருப்பதாகக் கூறியிருக்கிறார்கள். அது

போதுமானது அல்ல. குறைந்த பட்சம் கிராமத்திற்கு ஒன்றாவது இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் இந்த ஆண்டில் 500 பள்ளிகளாவது திறக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பென்ஷன் வழங்குவதியேும் இன்றைய தினம் பல சிக்கல்கள் இருக்கின்றன. முதியோர்கள், அனாதைப் பெண்களுக்கு 40-க்கு மேல் 60 வயது வரையுள்ளவர்கள் பெறுவதற்காக அவர்கள் மனுப்போட்டால், யாரிடம் போய் என்ன செய்வது என்று இன்றையதினம் தெரியாமல் திக்கு முக்காடிக்கொண்டிருக்கிறார்கள். எனவே அதில் உள்ள சிக்கலைப்போக்க வேண்டும். உரிய அதிகாரிகளுக்கு மனுச் செய்தால் போட்டோ எடுத்துக்கொண்டு வரச் சொல்கிறார்கள். அவர்களோ அனாதைகள், யாரிடம் பணம் வாங்குவது போட்டோவுக்கு என்ற சிக்கலான பிரச்சனைகளை நீக்கி உரிய முறையிலே அந்தத் தொகைகளை நாடு முழுவதும் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். இப்படிப் பல சிக்கல்கள் இருக்கின்றன. அந்தச் சிக்கல்களைப் போக்கி, விதவைப் பெண்களுக்கு உதவித் தொகைகள் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். அதைப்போல (மணியடிக்கப்பட்டது) நம்முடைய பேரவைத் தலைவரவர்கள் மணியடித்துக் கொண்டே இருப்பதால் என்னுடைய பேச்சை இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

* திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கையின் பேரில் பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையிலே நல்ல பல திட்டங்கள் இருக்கின்ற காரணத்தினால் இந்தக் கோரிக்கையை முழுமனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக பிற்பட்ட பழங்குடி மக்கள் பகுதிகளுக்குக் கால்நடை வளர்ப்புக்காக நல்ல தொகைகளை ஒதுக்கியிருக்கிறார்கள். சின்னக்கல்ராயன் பகுதி மக்களுக்கு முழுத் தொகை மானியமாக கால்நடை வளர்ப்பிற்காக இங்கே ஒதுக்கப்பட்டிருப்பதற்குப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பழங்குடி மக்களுக்காக இந்த ஆண்டு ஏறத்தாழ ரூ. 16.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதையும், மலைவாழ் பகுதியில் மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையிலே அதிகத் தொகை ஒதுக்கப்பட்டிருப்பதையும் நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாட்டு வைத்திய முறைக்கும் நவீன கால்நடை மருத்துவத்திற்கும் ஏற்படுகின்ற கடும் மோதல் இந்த மாமன்றத்தில் உள்ள எல்லோருக்கும் தெரிந்த ஒன்றாகும். நவீன மருத்துவத்தில், அக்கறையும் ஆர்வமும் காட்டுகிற கிராமப் பகுதிகளுக்கு மட்டும்

[திரு. யா. சை. மு. யூசுப்] [1977 ஆகஸ்ட் 17

இந்த அரசு அதிக அளவு கவனம் செலுத்தி, தீவிரம் செலுத்தி, அந்தப்பகுதி மக்களுக்குக் கால் நடை மருந்தகங்களை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அடிப்படையில் என்னுடைய தொகுதியிலே, பணகுடி பேரூராட்சி பகுதியில் ஒரு மருத்துவமனையை உருவாக்கித் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சங்கனாபுரம் என்ற ஊரிலே மருத்துவமனை இயங்கிக் கொண்டுவருகிறது. ஆனால், பஞ்சாயத்துக் கட்டிடத்தின் ஒரு பகுதியிலே மருந்தகம் நடத்தி வருகிறார்கள். தனியாக கட்டிடம் கட்டித் தந்து நல்ல மருந்தகமாக மாற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மருந்தகங்களுக்கும் தனி மருத்துவத்திற்கும் அதிக தொகை ஒதுக்கியிருப்பதை நான் முழுமனதுடன் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அத்துடன் கால்நடைத் தீவனங்கள் என்ற அடிப்படையில், இப்பொழுது ஹா வாலஸ் போன்ற பெரிய இடங்களிலே சத்துத் தீவனம் தயாரிக்கப்படுவதைப்போல், கிராமப்புறங்களிலே தயாரிக்க வேண்டும். இவ்வாறு கிராமப்புறங்களிலே தயாரித்தால் குறைந்த நேரத்தில் சத்தான கால்நடைத் தீவனம் குறைந்த விலையில் வழங்க முடியும் என்ற உண்மையை நான் தெரிவித்துக்கொண்டு அதன் அடிப்படையில் பற்பல கிராமங்களிலும் இதுபோன்ற கால்நடை உணவு தயாரிக்கும் நிலையங்களை உருவாக்க வேண்டும். இதில், குறிப்பாக, முந்தைய ஆட்சிக் காலத்திலே, நவீன அரிசி ஆலைகள் என்ற பெயரிலே, கூட்டுறவு துறையிலே உருவாக்கப்பட்டு முடங்கிக் கிடக்கிற நவீன அரிசி ஆலைகளைப் பயன்படுத்தி, அந்த ஆலைகளிலே சத்துணவைத் தயாரிக்கலாம். அப்படிச் செய்தால் மிகக்குறைந்த விலையில், சத்துணவைத் தயாரிக்க முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, எனது தொகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் உள்ள புல் வெளிகளில் தற்பொழுது, ஆடுமாடுகளை மேய விடுவதில்லை. ஏற்கனவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளில் ஆடுமாடுகள் மேய்ச்சலில்லாமல் நலிந்த காரணத்தினால், அண்டை மாநிலங்களாகிய கேரளாவிற்கு ஆடுமாடுகள் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. அது இங்குள்ள எல்லோருக்கும் தெரியும் என்று நினைக்கிறேன். அதை எப்படியாவது தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதிகளிலே ஆடுமாடுகள் மேய்வதற்கு உடனடியாக அனுமதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உதகையிலும் கொடைக்கானல் பகுதியிலும் கால் நடைகளுக்காக, நடமாடும் மருந்தகங்களை ஏற்படுத்த இருக்கிறார்கள். புதிதாக மருந்தகங்கள் துவங்க இருக்கும் திட்டமெல்லாம் இருக்கின்றது. இவற்றை மனதார பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஆகஸ்ட் 17] [திரு. யா. சை. மு. யூசுப்]

அடுத்து, கோழிகளைப் பற்றி சொல்வோமானால், நம்முடைய அரசுக் கோழிப் பண்ணையிலே இருக்கிற ஒருசில குறைபாடுகளை நான் இங்கே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பண்ணைகளில் மார்ட்டலிட்டி ரேட் நிர்ணயம் செய்வதன் காரணமாக, நோய்வாய்ப்பட்ட கோழிக் குஞ்சுகளையும் விலைக்கு வாங்க வருகிறவர்கள் தலையிலே கட்டுகிறார்கள். ஆகவே, மார்ட்டலிட்டி ரேட் நிர்ணயம் செய்யாவிட்டால் நோயினால் இறப்பது எவ்வளவு கோழிகளாக இருந்தாலும் பரவாயில்லை என்ற நிலைமைகள் இருக்குமானால், நல்ல தரமான கோழிகளை விலைக்கு விற்கமுடியும். நோய்களைத் தடுக்கவும் இன்னும் அதிகமான அக்கறை எடுத்துக்கொள்ளவேண்டும். பாக்யார்ட் பவுல்ட்ரி திட்டம் என்று உள்ளது. அந்தத் திட்டமும் சரியாக இயங்கவில்லை. குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், அரசுப்பண்ணையில் வாங்குகிற 4 மாதக் கோழியின் விலை ரூ. 14 ஆக இருக்கிறது. 4 மாதக் கோழிக்கு ரூ. 14 என்பது மிக அதிகத் தொகையாகும். ஆகவே, இந்தக் குறையைப் போக்க மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

என்னுடைய பகுதியிலே பள்ளிக்குடியிலே கிடைக்கும் நாட்டுக் கோழிகள், கோழிக் குஞ்சுகளை வளர்ப்பதற்கு சிறப்பானவை. எந்த விதமான அபாயத்திலிருந்தும் குஞ்சுகளை நல்லமுறையிலே வளர்க்கின்றன. அதற்கென்று தனி பெயரே இருக்கிறது. ஆகவே, அந்தக் கோழிக் குஞ்சுகளை பாக்யார்ட் பவுல்ட்ரிக்குக் கொடுத்து, கோழிக் குஞ்சுகள் வளர்க்க பள்ளிக்குடி கோழிகளையும் தந்தால், குஞ்சுகள் நேரத்தில் இறந்து விடாமல் பாதுகாக்க உதவும். எனவே இதையும் சேர்த்து வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூகநலத் துறையைப் பற்றி ஒருசில வார்த்தைகள் மட்டும் கூறி விடைபெற்றுக்கொள்கிறேன்.

[முற்பகல் 11-30]

குறிப்பாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு முந்தைய ஆட்சியினரால் பால சேவிகாக்கள் பலர் வேலையிலிருந்து பயிற்சிக்கு அனுப்பியும் கல்விக் குறைவு என்ற காரணத்தால் நீக்கப்பட்டார்கள். 25 ஆண்டுகளாகப் பணியாற்றிய பிறகு நீக்கப்பட்ட இந்தப் பால சேவிகாக்களுக்குத் திருப்பி வேலை கொடுத்த அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே வழங்கப்பட்டிருக்கிற திட்டங்களில் 1977-78 இல் குழந்தைகள் காப்பகங்கள் மேலும் 30 இடங்களில் விஸ்தரிக்கப்பட இருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கண்பார்வை இழந்தவர்களுக்குக் கூரை வேய்ந்த பணிக்களரிகள் திறப்பதற்கு முடிவு செய்யப்

பட்டுள்ளதையும் வரவேற்று, புரட்சித் தலைவரின் தலைமையில் அமைந்துள்ள இந்த அரசு ஏழை எளிய மக்களுக்கு, பாமர மக்களுக்கு நல்ல பல திட்டங்களை உருவாக்கியிருக்கிறது என்ற அடிப்படையில், இந்தச் சமூகநல மானியக் கோரிக்கையை முழுமனதோடு வரவேற்பதோடு, வாய்ப்பளித்தற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

திரு. மு. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் கால்நடை வளர்ச்சிக்கு 10,16,63,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏழை விவசாயிகளுக்கு இந்தக் கால்நடை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஏற்கனவே இருந்த சலுகைகளும், உரிமைகளும் கடந்த காலத்தில் பறிக்கப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, நாட்டிலே பெருகக் கூடிய ஜனக் கூட்டத்திற்கு, குடும்பநலத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு இலவச அறுவை சிகிச்சையும், அப்படி செய்து கொண்டவர்களுக்கு ஊக்கப்பணமும் அரசாங்கத்தின் அளவில் கொடுக்கப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் இந்த நாட்டிலே உள்ள ஏழை எளிய விவசாயிகள், கால்நடைச் செல்வங்களான ஆடுமாடுகளை அவர்கள் ஏற்கனவே வைத்திருக்கக்கூடிய கால்நடைகளை, செயற்கை முறை இன அபிவிருத்திக்காக அனுப்பி வந்ததில் சில சலுகைகளைக் கடந்த காலத்தில் பெற்றிருந்தார்கள். விவசாயிகள் தங்களுடைய மாடுகளைப் பொறுத்த வரையில் செயற்கை முறை இன அபிவிருத்திக்காகக் கடந்த 20 ஆண்டுகளாக இலவசமாக ஊசி போட்டு வந்தார்கள். ஆனால் நெருக்கடி நிலை அமுலான நேரத்தில் இரண்டு ரூபாய், சில இடங்களில் 5 ரூபாய் வசூலிக்கப்பட்டு வந்தது. அப்படி மாடுகள் பயிருக்கு வரக்கூடிய நேரத்தில் விவசாயிகளிடத்தில் கையில் காசு இல்லை என்றால் இந்த மாடுகளை இன அபிவிருத்தி செய்ய முடியாமல் போகிறது. அப்படி வருகின்ற நேரத்தில் 24 மணி நேரத்தில் பயிருக்குக் கொண்டு வரவில்லை என்றால் 21 நாட்கள் காத்திருக்கக்கூடிய நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே விவசாயிகளுக்கு இருந்த அந்த உரிமைகளை மீண்டும் அவர்களுக்கு வழங்கவேண்டும். இடைக்காலத்தில் வசூலிக்கப்பட்ட கட்டணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய அரசு கால்நடை அபிவிருத்திக்காக கோடிக் கணக்கிலே செலவிடுகிறது. மேய்ச்சலுக்காக சில வறட்சிப் பகுதிகளில் மேய்ச்சல் தரை இருந்து வந்தது. தேர்தல் நேரத்தில் அந்த மேய்ச்சல் தரையையே அவர்களுக்குச் சொந்தமாக மாற்றுவோம் என்று கூறப்பட்டது. ஏற்கனவே ஆடுமாடுகள் மேய்வதற்குத் தடை விதித்ததின் காரணமாக அவைகளுக்குத் தீனி கிடைக்காமல்—கால்நடைச் செல்வங்கள்—குறைந்து கொண்டே வருகிற நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே ஏற்கனவே

சிறு உழவர்கள் தங்கள் கால்நடைகளை மேய்ச்சல் இடங்களில் மீண்டும் மேய்ப்பதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகள் கடன்பட்டு நல்ல உயர்ந்த ரக கறவை மாடுகளை 3 ஆயிரம் 5 ஆயிரம் கொடுத்து வாங்கியிருக்கிறார்கள். அப்படி வாங்கக் கூடிய கறவை மாடுகள் கொள்ளை நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விடுகின்றன. அவர்கள் வாங்கிய கடனை அடைக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே விவசாயிகளது இந்தக் கால்நடைகளுக்கு இன்ஷூரன்ஸ் மூலம் பாதுகாப்பு அளித்தால் ஏழை எளிய விவசாயிகள், வாங்கிய உதவிகளை, எதிர்பாராத விதத்தில் இறந்து விடுகிற கால்நடைகளுக்கான பணத்தை, திருப்பிக் கட்டுகின்ற வாய்ப்பு கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமூக நலத் துறையை எடுத்துக் கொண்டால் அதற்கு ரூ. 4 கோடிக்கு மேல் ஒதுக்கப்பட்டிருந்தும் சேலம் மாவட்டம் நேரடியாக உதவி பெறக்கூடிய ஒரு திட்டம்கூட நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்படவில்லை, குறிப்பிடப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். விதவைகளைப் பொறுத்த வரையில் தஞ்சையிலும், தாம்பரத்திலும், கடலூரிலும் 18 வயது முதல் 30 வயதிற்குட்பட்ட சமூகத்தில் கைவிடப்பட்ட அனாதையாக வாழக் கூடிய இளம் பெண்களுக்கு பணிமனைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. அதே போல் நமது மாநிலத்தில் பல பகுதிகளில் திறக்கப்படவேண்டும். குறிப்பாக, சேலம் மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். ஏழை எளிய விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள் வாழக்கூடிய மாவட்டம். அந்த மாவட்டத்திற்கு இம்மாதிரி வாழ்க்கையில் வசதியற்ற இளம் பெண்களுக்குப் பணிமனைகள் திறக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இளம் பெண்கள் எதிர்பாராமல் வாழ்க்கையில் விதவைகளாகிவிடுகிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வாழ்க்கையில் மிகவும் ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்து வருங்கால வாழ்வை நல்லமுறையில் அமைத்துக் கொள்ள முடியாமல் சமூகத்தில் பல தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். இதைத் தடுத்து நிறுத்த அரசாங்க நகராட்சிப் பள்ளிகளில் ஆயா வேலையும், நகராட்சி மகப்பேறு மருத்துவ மனைகளில் ஆயா வேலையும், மற்றும் அரசாங்க கூட்டுறவு சூப்பர் மார்க்கெட்டில் அவரவர்களின் கல்வித் தகுதிக்கேற்றபடி வேலை வாய்ப்புகளும் வழங்கும்படி கேட்டுக் கொள்கிறேன். விதவைகளின் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி அளிக்க வேண்டும். கல்லூரிகளில் சேர்ப்பதற்கு அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

தையல் பயிற்சி நிலையங்கள் சம்பந்தமாக, சேலம் மாவட்டம் புறக்கணிக்கப்பட்டிருக்கிறது. விதவைகளுக்குச் சேலத்தில் தையல் பயிற்சி நிலையத்தை ஏற்படுத்தி இளம் விதவைகளுக்குத்

தையல் பயிற்சி அளித்து அவர்கள் வருங்காலத்தில் தானே உழைத்து வாழ்க்கை நடத்திக் கொள்வதற்கு அவர்களுக்குத் தையல் மெஷின்களும் கொடுத்து உதவ வேண்டும். இப்போது விதவைகளுக்கு வாழ்க்கை நடத்துவதற்கு உதவித் தொகை ரூ. 20 அளிக்கப்படுகிறது. இது மிகவும் குறைவு. இந்த உதவித் தொகையைக் குறைந்தது ரூ. 50 ஆக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து முடியுங்கள்.

திரு மு. ஆறுமுகம் : கதர் அபிவிருத்தியைப் பற்றி ஒரு வார்த்தை கூறி என் உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்போது அந்த டிமாண்டு கிடையாது. அடுத்த டிமாண்டில் பேசலாம், சீக்கிரம் முடியுங்கள்.

திரு. மு. ஆறுமுகம் : நம்முடைய தேசத்தில் மாபெரும் தந்தை மகாத்மா காந்தி அடிகளின் புனிதமான திட்டம் கிராம கைத் தொழில் அபிவிருத்தித்திட்டம். அவருடைய நிர்மாணத் திட்டங்களில் ஒன்று, இந்த நாட்டில் வாழக்கூடிய ஏழை எளிய மக்கள் லட்சக் கணக்கில்....................

மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் : இந்த டிமாண்டை இன்னும் மூவ் பண்ணவே இல்லை. இதில் ஏதாவது பேசுங்கள். ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள். பாக்கி பேர்கள் எல்லாம் பேசவேண்டியிருக்கிறது.

திரு. மு. ஆறுமுகம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை உதவியாளர்கள் பயிற்சிக்குச் சென்ற ஆண்டு 100 பேர் தேர்ந்தெடுக்கப்படப் போவதாக பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டு பல்லாயிர விண்ணப்பங்கள் வந்து என்ன காரணத்தாலோ 25 பேர்கள் தான் எடுக்கப்பட்டார்கள். ஆகவே பல கிராமக் கால்நடை கிளை நிலையங்களில் கால்நடை உதவியாளர்கள் இல்லாமல், இருக்கக்கூடிய உதவியாளர் ஒருவரே இரண்டு மூன்று கிளை நிலையங்களைப் பார்க்க வேண்டியிருக்கிறது. அங்கே சிராகு நடைபெறவேண்டிய வேலைகள் ஒழுங்காக நடைபெருமல் கிராமப்புற மக்களுக்கு நியாயமான வைத்திய வசதி கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே வரக்கூடிய காலத்தில் குறைந்தபட்சம் 200 பேர்களுக்காவது பயிற்சி அளிக்கும் கால்நடை உதவியாளர்கள் பயிற்சித் திட்டத்தை விரிவுபடுத்தி அமல்படுத்தி ஏழை எளிய விவசாய மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்து உதவும்படி அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தக் கால்நடை பராமரிப்புத் துறையிலுள்ள அலுவலர்களை அடிக்கடி தலைநகரங்களுக்கும் அங்கிருந்து பஞ்சாயத்து யூனியன் ஆளுகைக்கும், பஞ்சாயத்து யூனியன் ஆளுகையிலிருந்து மறுபடி கால்நடை ஆளுகைக்கும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் பலவிதமான தொந்தரவுகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். அந்த நிலைமையை அரசு பரிசீலித்து அவர்களைக் கால்நடைத்துறையிலிருந்து மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 11-40]

*திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கால்நடை பராமரிப்புத்துறை சம்பந்தமாக எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பல விவரங்களைச் சொல்லி இருந்தாலும் இது விவசாயிகள் சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனை, அவர்களுக்கு வருமானத்தை அதிகப்படுத்திக் கொடுப்பதற்கு உதவி செய்யக்கூடியது, அப்படிப்பட்ட தொழிலாக இந்தக் கால்நடை வளர்ப்பு அமைந்திருக்கிறது. ஆகவே அந்தத் துறை சம்பந்தப்பட்ட மட்டில் விவசாய அமைச்சரிடத்திலே சேர்ந்து இருக்க வேண்டும். எனவே விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்குவதற்கு இந்தத் திட்டத்தைச் சரியான முறையிலே செயல்படுத்த வேண்டுமென்ற கருத்தைச் சொல்லிக் கொள்கிறேன்.

கால்நடை சம்பந்தபட்ட மட்டில் அதுவும் குறிப்பாக கிராமப் பகுதியில் இருக்கிற விவசாயிகள் வளர்க்கின்ற கால்நடைகளுக்கு ஏதாவது நோய் வந்து இறந்து விடுமானால் அதனால் அந்த விவசாயிகள் பேரிழப்புக்கு உள்ளாகிறார்கள். அவர்களுக்கு ஏற்படுகிற பாதிப்பு மிகப் பெரும் பாதிப்பு. அவைகளுக்குச் சரியான வைத்திய உதவி கிடைப்பதில்லை. பல இடங்களில் பார்த்தோமானால் பல கால்நடை மருத்துவமனைகளில் மருத்துவர்கள் இருந்தாலும் போதுமான, சரியான மருந்துகள் இல்லை. இப்படிப்பட்ட மருத்துவமனைகளுக்கு, அவர்கள் கால்நடைகளை அழைத்துச்செல்வது என்றால் 5, 10 மைல்கள் கூடச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது. இப்படி விவசாயிகள் தங்களுடைய கால்நடைகளை வைத்தியம் செய்வதற்காகப் பல மைல் தூரம் செல்லாமல் அவர்கள் இருக்கும் இடங்களுக்கு மிக அருகாமையில் மருத்துவர்கள் இருக்கும்படியாக இந்த மருத்துவ மனைகளை இன்னும் அதிகமாக அமைத்துக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மருத்துவமனைகள் மிக, மிகக் குறைச்சலாக இருக்கின்றன.

இன்றைக்குப் புள்ளி விவரங்களைப் பார்த்தால் ஒரு நபர் 300 கிராம் பால், 80 கிராம் இறைச்சி, 40 கிராம் முட்டை சாப்பிட வேண்டும் என்று சொல்கிறார்கள். அந்த

இந்திய அடிப்படையில் இன்றைக்கு 120 கிராம் பாலும், 14 கிராம் இறைச்சியும் சாப்பிடுவதாகச், சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் இன்னும் குறைச்சல். இங்கே ஒரு நபருக்கு 63 கிராம் பாலும், 20 கிராம் இறைச்சியும் கிடைக்கிறது என்கிறார்கள். நாம் இன்னும் அதிகமான கவனத்தை இந்தத் துறையில் செலுத்தி, கால்நடைகளை, ஆடு, மாடுகள், போன்றவற்றை அபிவிருத்தி செய்வதற்கு, பால் உற்பத்தியை இன்னும் பெருக்குவதற்கு நவீன முறைகளை மேற்கொள்ள வேண்டியது மிக, மிக இன்றியமையாததாகும். இது சம்பந்தப்பட்ட மட்டில் நம்முடைய கவனம் மிக, மிகக் குறைச்சல். கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. கால்நடைகளை வளர்ப்பதற்கும், அவற்றை அபிவிருத்தி செய்வதற்கும் மட்டுமல்ல, இதை நம்பியிருக்கிற விவசாயிகளின் வருமானத்தை அதிகப்படுத்துவதற்கும். அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்கும் இன்னும் அதிகம் கவனம் செலுத்தப்பட வேண்டும். ஒரு ஏக்கரா, ½ ஏக்கரா வைத்திருக்கும் விவசாயிகள், 20 கால்நடைகளை வளர்ப்பதன் மூலம், கிடை வைத்தால் அதன் மூலம் மேலும் அதிகப்படியான வருமானம் அவனுக்குக் கிடைக்கிறது. வருஷா வருஷம் கிடை போட்டால் அவற்றை விற்பதன் மூலம் கிடைக்கின்ற வருமானத்தைக் கொண்டு அவன் வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட முடியும். சீராக அந்தக் கடனைக் கட்டி விடுவான். இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற மாவட்டங்களில் இப்படிப்பட்ட வறட்சிப் பகுதிகளில் ஆடுகளை வளர்ப்பதற்குக் கூட்டுறவுச் சங்கங்களை அதிகமாக ஏற்படுத்த வேண்டும். மத்திய சர்க்காரிலிருந்து ''எஸ். எப். டி.'' போன்ற பல்வேறு திட்டங்களில் மானியம் கொடுக்க மத்திய சர்க்காரில் வகை செய்யப்பட்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில் ஆடுகளை வளர்ப்பதற்குக் கூட்டுறவு சங்கங்களை அமைத்துக் கொடுத்து அவர்களுக்கு வேண்டிய உதவித் தொகை கிடைப்பதற்கு சுறுசுறுப்பான முறையிலே நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு ஆடுகள் கூட்டுறவு சங்கங்களை அமைத்து ஆடுகள் பராமரிப்புக்கு மட்டும் சில இடங்களில் இப்படிக் கடன் தொகை கொடுக்கப்படுகிறது. சங்கங்கள் அமைத்து ஆடுகளை வளர்ப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்வது போல பால் மாடுகளை வளர்ப்பதற்கும் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டுமென்று கூறிக் கொள்கிறேன்.

சப்சென்டர்களுக்குக் கால்நடை உதவியாளர் பயிற்சிக்குச் சென்ற ஆண்டு 100 பேர் தேவை என்று அறிவித்து விட்டு 25 பேர் மட்டும் எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 200, 300 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. எனவே இப்படிப்பட்ட காலியிடங்களுக்கு வேண்டிய அலுவலர்களை உடனடியாக இந்த ஆண்டாவது எடுக்க வேண்டும். இப்படிச் செய்வதன் மூலம் பல பேருக்கு வேலை வாய்ப்புக்கு ஏற்பாடு செய்ய முடியும். அவர்களுக்கு வேலை கிடைப்பது மட்டுமல்ல, அவர்கள் குறிப்பாக விவசாயிகள் ஆடு, மாடுகள் ஆகியவைகளை அதிகமாக வளர்ப்பதற்கு உதவி செய்வதன் மூலம் இந்த விவசாயிகள் கொஞ்சம் அதிக வருமானத்தைப் பெற உதவி செய்ய முடியும். எனவே இந்த அலுவலர்களை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கால்நடை மருத்துவர் கால்நடை உதவியாளர் தேர்வில் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும். ஏனென்றால் அவர்கள் படித்துவிட்டு தங்கள் முன்னோர்கள் தொழிலை நடத்த உதவியாக இருக்கும், சொந்தமாகவும் தொழில் நடத்த உதவியாக இருக்கும். அதையும் செய்ய வேண்டும். கோழி வளர்ப்புக்காக எல்லாயிடங்களிலும் முயற்சி செய்யப்பட்டது. இதில் ஏகப்பட்ட நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. கோழிகளுக்காக என்று கடன் கொடுத்ததைத் திரும்ப வசூலிக்க முடியவில்லை. இந்தச் சமயத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்தக் கோழித் தீவனம், மாட்டுத் தீவனம் இவற்றை டிப்பார்ட்மெண்ட் மூலம் தயார் செய்கிறார்கள். அவை மலிவான விலைக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அரசாங்க மானியம் கொடுத்தாவது அவற்றின் விலையைக் குறைக்க, அதாவது விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் அந்தத் தீவனங்கள் கிடைப்பதற்கு வகை செய்ய வேண்டும். அதையும் கவனிக்க வேண்டும். அடுத்தபடியாக, கால்நடை இன்ஷூரன்ஸ் செய்ய வேண்டும். அதைக் கொண்டுவர இந்த இலாகா முயற்சிக்க வேண்டும். கறவை மாடுகள் வாங்குவதற்கு வங்கிகள் கடன் கொடுக்கும்போது இன்ஷூரன்ஸ் பிடிக்கிறார்கள். ஆனால் அதன் ப்ரீமியம் அதிகமாக இருக்கிறது. அந்தப் ப்ரீமியத்தைக் குறைக்க வேண்டும். குறைந்த ப்ரீமியம் கட்டக்கூடிய முறையில் இன்ஷூரன்ஸ் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும். ஐயாயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதியில் ஒரு லைவ் ஸ்டாக் அஸிஸ்டெண்ட் கட்டாயம் இருக்கும்படியான ஒரு ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும். முதலில் ஒரு திட்டம் போடப்பட்டு ஒன்றியத் தலைவரின் மேற்பார்வையில் கொண்டு வந்தார்கள். 1970 ஆம் ஆண்டு அத்திட்டம் இருந்தது. பிறகு அதை மாற்றி அறிவிப்பு வந்தது. ஐயாயிரம் மக்கள் உள்ள ஒரு பகுதியில் ஒரு கால்நடை உதவியாளர் இருக்கும் முறையில் ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். மாடுகளுக்குக் கருத்தரிக்க ஊசி போடுவது இனாமாக இருந்தது. இப்போது இரண்டு ரூபாய் என்று வாங்குகிறார்கள். இரண்டு மூன்று முறை போகவேண்டியிருக்கிறது. எனவே இந்த இரண்டு ரூபாயை வசூலிக்க வேண்டிய அவசியமில்லை. கால்நடை உதவியாளர்களுக்கு எட்டு ஆண்டுகளில் பதவி உயர்வு என்றிருந்தது. அப்படிப் பதவி உயர்வு கொடுத்ததைக்கூட

ரத்து செய்யக்கூடிய ஏற்பாடு நடந்திருக்கிறது, அது கூடாது. பல இடங்களில் கால்நடைகள் வாங்க மானியம் கொடுக்கும் ஏற்பாடு இருக்கிறது. அதைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு யூனியனிலும் முதல் நிலை உதவியாளர்கள் இருக்கிறார்கள். அதை மாற்றி பி. வி. எஸ்ஸி. படித்த டாக்டரைப் போடலாம் என்ற யோசனை இருப்பதாகத் தெரிகிறது. மருத்துவ வசதிகளைப் பெருக்கும் விதத்தில் தாலூகா ஒன்றிய சென்டர்களில் உள்ள மருத்துவமனைகளில் கூடுதலாக ஒரு மருத்துவரைப் போட்டு மருந்துகள் அதிகமான முறையில் கிடைப்பதற்கும் வழிவகை செய்யவேண்டும். பால் உற்பத்தியைப் பெருக்க பல இடங்களில் தனித்தனி சென்டர்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இப்படி பால் உற்பத்தியைப் பெருக்கும்போது விவசாயிகள் பாலை விற்கமுடியாமல் கடன் தொல்லையினால் கஷ்டங்களை அனுபவிக்க நேரிடுகிறது. இதிலும் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும். சமூக நலனைப் பொறுத்தவரையில், முதியோர் பென்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது. இது இத்துறையின் கீழ் வருகிறது. முன்னமேயே நிர்ணயிக்கப்பட்டதொரு எண்ணிக்கையில், அதாவது ஒரு வட்டாரம் அல்லது ஒரு தாலூகாவில் 500 பேர்களுக்கு என்றால் அவர்களுக்குத்தான் பென்ஷன் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அது சரியல்ல. யார் யார் தகுதி உள்ளவர்களோ, எந்தவிதமான உதவியும் இல்லாமல், குழந்தைகள் இல்லாது பராமரிக்க ஆள் இல்லாதிருந்தால், முதியோர்கள் யாராக இருந்தாலும், எவ்வளவு பேர்களாக இருந்தாலும், முதியோர் பென்ஷன் பெற தகுதியுள்ளவர்களாக இருந்தால் அவர்கள் அத்தனை பேர்களுக்கும் முதியோர் பென்ஷன் கிடைக்கக்கூடிய முறையில் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு அதிகச் செலவு ஆகாது.

[முற்பகல் 11.50]

அதேபோன்று, விதவைகளுக்கும் உதவித் தொகை கொடுப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆதரவற்ற எல்லா விதவைகளுக்கும் கொடுக்கும் திட்டம் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதிலும் இத்தனை பேர்களுக்கு கொடுக்கப்படும் என்றிருக்கிறது. அப்படியில்லாமல், நியாயமாக, இந்த உதவியைப் பெற தகுதியுடையவர்கள் அத்தனை பேர்களுக்கும் கிடைக்க வழி செய்ய வேண்டும். முக்கியமாக முதியோர் பென்ஷன் என்பது மிகவும் முக்கியம். கிராமங்களில் இருக்கின்ற விவசாயத் தொழிலாளர்கள்தான் இதில் முக்கியமாக வருகிறார்கள். நாள் முழுவதும் வேலை செய்து, தன்னுடைய சக்தியை எல்லாம் சக்கையாகப் பிழிந்து எடுத்தபின் எதுவும் வழியில்லாமல் நிற்கக் கூடியவர்கள். இவர்களுக்குப் பென்ஷன், கிராஜுவட்டி எதுவுமே கிடையாது, இப்படிப்பட்ட பெற்றோர்களைப் பிள்ளைகளும் வயதான காலத்தில் கவனிப்பது கிடையாது. பெண் குழந்தைகள் சிலருக்கு இருக்கலாம், சிலருக்கு இல்லாமலும் இருக்கலாம். ஆகவே இத்தனை பேர் என்று கணக்கிடாமல் தகுதியுள்ள அத்தனை பேர்களுக்கும்

கொடுப்பதோடு, இப்போது கொடுக்கப்பட்டு வரும் 20 ரூபாய் என்றிருப்பதை 30 ஆக உயர்த்தி ஆதரவற்றிருக்கும் அத்தனை பேர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டு கொள்கிறேன்.

அடுத்து, கருணை இல்லங்கள் அங்கங்கே நடத்தப்படுகின்றன. இவை அறநிலையப் பாதுகாப்பு துறையால் நடத்தப்படுகின்றன. இங்கே போய்ப் பார்த்தால், அங்குள்ள குழந்தைகள் எல்லாம் மிகவும் மெலிந்து, வீட்டிலிருந்தபோது இருந்த சக்திகூட இல்லாத நிலையில் இருக்கிறார்கள். இதைப்பற்றிக் கேட்டால் எங்களுக்குத் தரப்படும் நிதி போதவில்லை, அதனால் போதிய அளவுக்கு உணவு கொடுக்கமுடியவில்லை என்று சொல்லுகிறார்கள். ஆதலால் இன்னும் சிறிது நிதியை அதிகமாக ஒதுக்கினால் இன்னும் கொஞ்சம் அதிகமாகக் கஞ்சி ஊற்ற முடியும் என்று சொல்கிறார்கள். ஆகவே இதற்கு அதிகமாகத் தொகை ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, முக்கியமாக முதியோர் பென்ஷன் விஷயத்தில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும், இன்று முதியவர்களாக இருப்பவர்கள் எல்லாம், இன்னும் இரண்டோ மூன்றோ ஆண்டுகளில் சாகப் போகிறவர்கள். இந்த நிலையில் கடைசிக் காலத்திலாவது சிறிது நிம்மதியாக இருப்பதற்கு அவர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகின்ற 20 ரூபாயை, 30 ரூபாய் என்று உயர்த்தி கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தின் கால்நடைப் பராமரிப்பு துறையின் மான்ய கோரிக்கையும் சமூகநலத் துறையின் மான்யக் கோரிக்கையும் சபைமுன் வைக்கப்பட்டிருக்கின்றன. இதன்மீது இந்திய தேசீய பார்வார்டு பிளாக் சார்பாக வரவேற்றுக் கீழ்க்கண்ட கருத்துக்களைச் சுருக்கமாகச் சொல்வதற்கு முயலுகிறேன். நான் முதல் கோரிக்கையாக வைக்க விரும்புவது, மாண்புமிகு அழகர்சாமி அவர்கள் சொன்னதுபோல் essentially agricultural based industry இது இல்லாமல், அதாவது கால்நடை இல்லாமல் விவசாயம் செய்யவே முடியாது. இந்தியாவிலும் சரி, தமிழகத்திலும் சரி, இதற்கு வருகிற, குறிப்பாக தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், இன்னும் மலைவாழ் சமுதாயத்திலிருந்து இப்படிப்பட்டவர்களிடமிருந்து இப்பணிகளுக்காக வருகின்றவர்களுக்கு உத்தியோகத்தில் முன் உரிமை இருக்கவேண்டும் என்பது என் முதல் கோரிக்கையாகும். Inborn blood என்ற

அளவில், பரம்பரை பரம்பரையாக அவர்களுடைய ரத்தத்தில் ஊறிப்போய்இருக்கிறது. உழவுத் தொழிலிலும், கால்நடைப் பராமரிப்புத் தொழிலிலும், அனுபவத்துடனும் ஆர்வத்துடனும் இவர்கள் தான் செயல்படுவார்கள். ஆகவே இப்படிப்பட்ட குடும்பங்களிலிருந்து வருகின்றவர்களுக்கு முன் உரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சென்ற சட்டமன்றத் தொடர் கூட்டங்களில் நான் பல முறை பேசியிருக்கிறேன். அதாவது நம் நாட்டிலிருந்து மாடுகளை (out of use) 'அவுட் ஆஃப் யூஸ்' என்று டாக்டர்களிடம் சர்டிபிக்கேட் வாங்கிவிட்டு, அத்தனை மாடுகளையும் கேரளாவுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். கேரளாவில் ஸ்லாட்டர் அவுஸ்-க்கு அனுப்பிக்கொண்டிருக்கிறார்கள். இதை நாம் தடுத்தாக வேண்டும். கோவையில் பொள்ளாச்சி மூலமாக, மதுரையில் தேக்கடி மூலமாக, சங்கரன்கோவில் மூலமாக இப்படிப்பட்ட மாடுகள் அனுப்பப்படுகின்றன. இதைத் தடுத்து நிறுத்த வேண்டியது மிகவும் அவசியம். உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்று சொல்லிக்கொண்டு, ஒரு பக்கம் மலைகளையும் காடுகளையும் அழித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமையில் வேளாண்மைக்கு இனி வருங்காலத்தில் சாணமே கிடைக்காது என்ற நிலைமை வரும். சாணத்தைப்போல் நேச்சுரல் மன்யூர் எதுவும் இருக்க முடியாது. இப்படிப்பட்ட 'கௌடங்' சாணத்தைப் பாதுகாக்க வேண்டும் என்றால் நம்மிடம் ஏராளமான மாடுகள் இருந்தாக வேண்டும். மேலும் மக்களுடைய சுகாதாரமான வாழ்வுக்கு, பாலும் மாமிசமும் அவசியம் என்பதையும் நாம் அறிகிறோம், ஆகவே இவ்விதம் கேரளாவுக்குச் செல்லும் மாடுகளை தடுத்து நிறுத்த வேண்டும் என்று கோருகிறேன்.

அடுத்து, செயற்கை முறையில் கருத்தரிப்புக்கு விஞ்ஞான முறையில் ஊசிகளைப் போடலாம் என்று கண்டு பிடித்திருக்கிறார்கள் இதன் மூலம் நல்ல வித்துக்காளைகளைத் தயார் செய்யலாம் என்றும் சொல்லப்படுகிறது. என்னுடைய அனுபவத்தை சொல்லுகிறேன். செக்கானூர் ஊரணி, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தொகுதியில் இருக்கிறது. அங்கே ஊசி போடுவதாகச் சொன்னார்கள். ஆனால் அங்குள்ள ஆசுபத்திரிக்குப் போதிய அளவு கட்டிட வசதி கிடையாது. ஒரே பசுவை நான்கு தடவை அனுப்பி ஊசி போட்டுவிட்டு வந்தார்கள். என்றாலும் கரு தரிக்கவில்லை. 100-க்கு 90 பங்கு நிச்சயமாகக் கரு தரிக்கும் என்று சொல்லுகிறார்கள். பசு கத்தினவுடன் அனுப்பிவிட வேண்டும் என்று சொன்னார்கள். அதைப் போலவே பசுவை அனுப்பினேன். இரண்டு ரூபாய் வீதம் கொடுத்து, நான்கு தடவை ஊசி போடச் செய்தேன், இருந்தும் கரு தரிக்கவில்லை.

இப்படி பல தோட்டக்காரர்கள் சொல்கிறார்கள். நானும் என் சொந்த அனுபவத்தில் சொல்கிறேன். இது மருந்தின் கோளாறாக இருந்தாலும் சரி, அல்லது அதிகாரிகளின் குறையாக இருந்தாலும் சரி, அல்லது மாட்டின் சரியான பக்குவத்தில் செலுத்தப்படவில்லை என்ற நிலையாக இருந்தாலும், இதைத் தீர நுணுக்கமாக ஆராய்ந்து தீர்க்கப்பட வேண்டிய ஒன்று என்பதை நான் உங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அடுத்து, வெம்மை நோய் என்று சொல்லப்படுகிறது. சில விஷ ஜந்துக்கள், பாம்பு போன்றவைகள் கடித்து விட்டால், அதற்கு உருப்படியான மருந்து இல்லை என்பது என் கருத்து. வண்டி ஓட்டிக் கொண்டு போகும்போது, காளை மாட்டை ஒரு விஷ ஜந்து கடித்து விட்டால் அதன் வயிறு வீங்கி உடம்பெல்லாம் தடித்துப் போய்விடுகிறது ஆனால், அதை சொஸ்தம் செய்வதற்கு மருந்து இல்லை பழைய காலத்திலே தழைகளை வைத்துக்கொண்டு...............

<u>திரு. எஸ். ஆர். இராதா</u> : காளை மாடு கரு தரிக்குமா?

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : மாண்புமிகு உறுப்பினர் அவ்வாறு சொல்லவில்லை.

<u>திரு. கே. கந்தசாமி</u> : நான் பசுவைப் பற்றி பேசி, அந்தப் பசு கன்றுபோட்டு, இப்போது காளை மாட்டிற்குப் போய்விட்டேன். விஷ ஜந்து கடித்துவிட்டால் அதற்கு மருந்து இல்லை என்று சொல்கிறார்கள், நான் ஒரு சம்சாரி என்கிற முறையிலே சொல்கிறேன். அப்படி மருந்து இருந்தாலும்கூட, அது எபக்டிவ்வாக இல்லை என்று சொல்லிக் கொள்கிறேன். எனவே, அதிகாரிகள் இதற்கு ஒரு தீர்வு காணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு ஒரு நல்ல மருந்து தேவை.

அடுத்து, பன்றியைப் பற்றி ஒரு வார்த்தை, பன்றி வளர்ப்பு பொருளீட்டக்கூடியது என்ற வகையிலே, ஐரிஷ் போன்ற மேல் நாடுகளிலிருந்தும், மற்றும் சில நாடுகளில் இருந்தும் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது. மதுரையிலே, கிறித்துவ பாதிரியார் ஒருவர் இருக்கிறார். அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், மிக உயர்ந்த முறையிலே அந்தப் பாதிரியார் ஒயிட் பிக்குகளை வளர்க்கின்றார். ஒரு பன்றி 500 அல்லது 1,000 ரூபாய் வரையிலே விற்கப்படுகிறது. அதன் இறைச்சி பக்குவப்படுத்தி, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது என்று சொல்லுகிறார்கள். மிக உயர்ந்த லாபம் வரக்கூடியது. ஆகவே, அங்கே அதிகாரிகளை அனுப்பி, அங்கே எப்படி வளர்க்கிறார்கள் என்பதையெல்லாம் ஆராய்ந்து, மதுரையிலே ஒரு ரிசர்ச்சென்டர், ஆராய்ச்சி வளர்ச்சி நிலையம் கொண்டு வரலாம் என்பதையெல்லாம் ஆராய்ந்து, பொருளாதார ரீதியாக இதைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் என்று இருக்கிறது. அதிலே இராமநாதபுரம் மாவட்டம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன்; பாராட்டுகிறேன். அதேபோல், மதுரையில் வைகை இருப்பதால், அதிலே அணைக்கட்டு கட்டியிருப்பதால், அது செழிப்பான பகுதியாக கருதப்படுகிறதோ

[திரு. கே. கந்தசாமி] [1977 ஆகஸ்ட் 17

என்னவோ, தெரியவில்லை. குறிப்பாக, ஆண்டிப்பட்டி, உசிலம்பட்டி, திருமங்கலம், இது அமைச்சர் அவர்களுடைய தொகுதி, மற்றும் வட மதுரை போன்ற இடங்களை எடுத்துக்கொண்டால், அங்கே குடிக்கத் தண்ணீர் கிடையாது. அப்பேர்பட்ட பகுதிகளில் இந்தக் கோழி வளர்ப்புப் பண்ணை, பன்றி வளர்க்கும் திட்டம், மாடு வளர்க்கும் திட்டம், அதன் மூலம் பால் வளத்தைப் பெருக்குதல் போன்ற திட்டங்களைக் கொண்டு வந்தால் தான் அங்குள்ள மக்கள் காப்பாற்றப்படுவார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கால்நடை இன்சூரன்ஸ் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். மிக அத்தியாவசியமான திட்டம்; மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய திட்டம். அந்தத் திட்டத்தையும் நல்ல முறையிலே கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்ததாக, சமூக நலத் துறை. மகளிர் நலத் துறை என்பதை மாற்றி, ஒயிடர் ரேஞ்சை கவர் பண்ணக்கூடிய அளவிலே, இந்தச் சமூக நலத் துறையில் பல திட்டங்கள் போட்டிருப்பது பாராட்டுதலுக்கு உரியதாகும். இத்திட்டத்தின்கீழ், ஓல்ட் ஏஜ் பென்ஷன் திட்டம் வருகிறது. அதாவது வயோதிகத் தாயாக இருந்தாலும், கிழவராக இருந்தாலும் அவர்களுக்கெல்லாம் கொடுக்கவேண்டும். ஆனால், இதற்கு ஒரு லிமிட் வைத்திருக்கிறார்கள். அதனால், எல்லோருக்கும் கொடுக்க முடியவில்லை. என்னுடைய வீட்டிற்குப் பக்கத்திலே 4 பாட்டிமார்கள் இருக்கிறார்கள். நான் ஊருக்குப் போனால் ஆளுக்கு ஒரு ரூபாய் கொடுக்க வேண்டும். தம்பி வந்துவிட்டாயா என்று கேட்பார்கள். ஒரு பாட்டிக்கு இந்தப் பென்ஷன் வாங்கிக் கொடுத்துவிட்டேன். அந்தப் பாட்டி, உன்னை மேரி அம்மாள் காப்பாற்றுவார் என்று சொன்னார்கள். இன்னும் 3 பேர்கள் இப்படிக் கேட்கிறார்கள். வாங்கிக் கொடுக்காவிட்டால், நாசமா போ என்றும் சொல்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள். யாரும் 5 நிமிஷத்தில் முடிப்பதில்லை. 10 நிமிஷத்திற்கு எடுத்துக் கொள்கிறார்கள். எனவே, சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : பெருந்தன்மையோடு நேரம் கொடுத்ததற்குப் பாராட்டுகிறேன். என்னுடைய நிலைமை அப்படி. முக்கியமானவைகளை சொல்லித்தான் ஆகவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய நிலைமையைவிட என்னுடைய நிலைமை மோசமானது. ஒருவருக்கு மட்டும் நான் பிரிவிலேஜ் கொடுப்பதாக யாரும் கருதிவிடக் கூடாது. எனவே தயவு செய்து சீக்கிரமாக முடித்துக் கொள்ளுங்கள்.

1977 ஆகஸ்ட் 17] [பேரவைத் துணை தலைவர்]

திரு. கே. கந்தசாமி : இதை நான் சொல்வதற்குக் காரணம், இது மிகவும் அத்தியாவசியமான ஓல்ட் ஏஜ் பென்ஷன் திட்டம்.

திரு. கே. சுப்பு : பேசக் கூடாது என்று நான் சொல்லவில்லை. 5 நிமிஷம் என்று வரையறை செய்வதற்குக் காரணம், அதற்குள் முடித்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகத் தான். கைத்தறித் துணிகள், மில்கள், கதர் போன்ற மானியக் கோரிக்கைகள் இன்றும் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. அவைகளை யெல்லாம் இன்றைக்குள் முடித்தாக வேண்டும். பன்றி வளர்ப்பு, கோழி வளர்ப்பு பற்றியெல்லாம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். அதைவிட முக்கியமான, மில்கள் மூடப்பட்டு இருத்தல் போன்ற பெரிய பிரச்சனைகள் எல்லாம் இருக்கின்றன.

[நண்பகல் 12.00]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தந்த டிமாண்டுகளில் வருகிற முக்கியமான பிரச்சினைகளைப் பேசுகிறார்கள். 12 மணியிலிருந்து 121/4 வரை எதிர்க்கட்சி துணைத் தலைவர் அவர்கள் பேசுவார்கள். அடுத்து அமைச்சர் பதிலுக்குப் பிறகு 12 1/2 மணிக்கு அடுத்த டிமாண்டின் மீது விவாதம் ஆரம்பமாகிவிடும்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனைக்காகப் பாராட்டுகிறேன். ஓல்ட் ஏஜ் பென்ஷனை அதிகமாகக் கொடுக்க வேண்டும். தையல் மெஷின் கொடுப்பதோடு அவர்களுக்கு ட்ரெயினிங் கொடுக்க வேண்டும். சிலருக்குக் கொடுப்பதில்லை. டிஸ்ட்ரிக்ட் வெல்பேர் ஆபீசர் இராமநாதபுரத்திலிருந்து வந்து கொண்டிருக்கிறார். இரவு இரண்டு மணி ஜீப் மானாமதுரையில் நிற்கிறது. ரிப்பேர் என்று சொல்லி அந்த அம்மையாரிடம் தவறாக நடக்கிற சூழ்நிலை ஏற்பட்டது என்பதை வேதனையோடும் வெட்கத்தோடும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நாங்கள் அந்தப் பையனை அச்சுறுத்தி ஜீப்பை மதுரையில் கொண்டு போய்விட்டோம். லேடி ஆபீசருக்கு பியூன், வாச்மேன் போடும் போது அவர்கள் லேடீஸ் ஆக இருப்பது உத்தமம். அதற்குப் பண வசதி இல்லையென்றாலும் பண வசதியைப் பெருக்கி பாதுகாப்பு அளிக்கவேண்டுமென்று தெரிவித்துத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

*திரு. க. அன்பழகன் : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை மானியக் கோரிக்கையின்மீதும், சமூக நலத் திட்டங்களுக்கான கோரிக்கை மீதும் சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல வாய்ப்புப் பெற்றதற்காக நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். கால்நடை வளர்ச்சி அதனுடைய

பலனாலேதான் கணக்கிடப்பட வேண்டியது என்பதும், கால்நடை வளர்ச்சி மூலமாக அவற்றில் கிடைக்கிற உழைப்பாற்றல் மிகுதியாக வேண்டுமென்பதும், அதே போல் அவற்றின்மூலம் கிடைக்கக்கூடிய பால் போன்ற உணவுகளும், இறைச்சி போன்ற உணவுகளும் அதிகமாக வேண்டுமென்பதும் நாமெல்லாம் அறிந்த உண்மையாகும்.

இந்த அறிக்கையில் தந்திருக்கிற ஒரு குறிப்பு 1977 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட ஒரு புள்ளி விவரப்படி நாள் ஒன்றுக்குப் பசும்பால் 2.44 கிலோ கிராம் அளவும், எருமைப் பால் 2.99 கிலோ கிராம் அளவும் கிடைக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். 1966-67-ல் அது மிகக் குறைவாகக் கிடைத்தது—1.22 கிலோ கிராம் பசும் பாலும், 1.96 கிலோ கிராம் எருமைப் பாலும் கிடைத்தது என்று தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் புள்ளி விவரத்தைப் பொதுவாக சில குறிப்பிட்ட வட்டாரத்திலுள்ள நிலைமைகளைக் கொண்டுதான் எடுக்க முடியுமே தவிர, இந்தப் புள்ளி விவரம் தமிழ்நாடு முழுவதற்கும் உள்ள நிலைமையைக் காட்டுவதாக ஆகும் என்று எதிர்பார்க்க முடியாது. கார்ணம்—பால் பண்ணைகளில் கூட, கால்நடைப் பண்ணைகளில் கூட ஓராண்டு உற்பத்தி பெருகியிருப்பதாகக் காட்டி அடுத்த ஆண்டு உற்பத்தி குறைகிறது, பால் உற்பத்தி குறைகிறது, முட்டை உற்பத்தி குறைகிறது, இறைச்சி உற்பத்தி குறைகிறது என்ற விவரத்தைத் தருகிறபோது இந்த உண்மையைக் காணமுடியும். இந்தச் சராசரி கூட பசுவுக்குச் சராசரியாக இருக்கவேண்டும், ஒவ்வொரு மனிதனுக்கும் சராசரியாக நினைக்கவில்லை. அது 2.44 கிலோ கிராம் அளவுக்கு உயர்ந்திருக்கிறது என்று சொன்னால் அந்தப் புள்ளி விவரங்கள் எந்த அடிப்படையில் திரட்டப்பட்டன என்ற விவரத்தைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தருவார்களானால் வரவேற்க முடியும்.

பொதுவாக, கால்நடைகளின் தரம் உயர்த்தும் முயற்சியில் 100-க்கு 20 அல்லது 30 என்ற அளவில் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும் அதற்காக ஆர்டிபிஷியல் இன்செமினேஷன் முறை கையாளப்பட்டாலும் மேலை நாட்டுக் கால்நடைகள் இங்கே பயன்படுத்தப்பட்டாலும் அதே நேரத்தில் உள்நாட்டுக் கால்நடைகள் பத்தாண்டுகளுக்கு முன்னால் இருந்ததைவிட தரம் குறைந்து கொண்டே வருகிறது—கிராஸ் ப்ரீட் தவிர, கலப்பினத்தால் உருவாக்கப்பட்ட கால்நடைகள் தவிர மற்றக் கால்நடைகள் அப்படியே இருந்து வருகின்றன—ஹெரிடிடரி என்ற காரணத்தால் பழைய நிலையில் தரம் குறைவாக இருக்கும் காரணத்தால் பால் உற்பத்தி குறையத்தான் செய்யும். பால் உற்பத்தியைப் பற்றிய அறிக்கை இன்னும் திட்டவட்டமாக தரப்பட வேண்டுமென்று முதலிலே தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்து பர்பாமன்ஸ் பட்ஜட் தரப்பட்டிருக்கிறது. இதை என்ன என்ன முறையிலே நிறைவேற்றினார்கள், டார்ஜெட் என்ன, அதிலே எவ்வளவு நிறைவேற்றப்பட்டது என்று நாலாவது பக்கத்திலே The Government is pleased to sanction 25 Veterinary Dispensaries every year on a phased programme என்று இருக்கிற ஒரு வரி அச்சடிக்கப்பெற்று அப்படி அச்சடிக்கப்பட்டது தவறு என்ற அடிப்படையிலே அது கோடிட்டு அடிக்கப்பட்டு இருக்கிறது. நான்கு ஆண்டுகளுக்கு முன்னாலே டிஸ்பென்சரிகள் எண்ணிக்கை ஒரு ஆண்டுக்கு இருபத்தைந்தாவது உயர்த்தப்பட வேண்டுமென்ற எண்ணம் இருந்தது. அந்த எண்ணம் நடைமுறைப் படுத்தப்பட்டது. அப்படி நடைமுறைப் படுத்தப்பட்டதை இந்த 16, 17-வது பக்கத்திலே பார்க்கிற போது நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். அங்கே தரப்பட்டிருக்கிறது Veterinary Health Services என்ற தலைப்பிலே அந்தத் தலைப்பிற்குள்ளே வருகிற செய்தியைப் ார்க்கிறப போது number of Veterinary Dispensaries (physical target) என்று தரப்பட்டிருக்கிறது. இது டார்ஜெட் அல்ல, அச்சீவ்மெண்ட் அல்ல. அது புரடக்ஷனிலே சேராத ஒரு தலைப்பு வருகிறபோது மருந்தகங்கள் ஏற்படுத்துவது என்று வருகின்றபோது, முதல் ஆண்டிலே 544 ஆக இருந்தது அடுத்த ஆண்டு 22 அதிகமாகி 566 என்று தரப்பட்டு இருக்கிறது. 1976-77-ல் 566 ஆக இருந்தது 584 ஆக உயர்த்தப்பட்டு ஏறத்தாழ 18 ஏற்படுத்தியிருக்கிறார்கள். 1977-78 இல் டார்ஜெட்டும் இல்லை, அச்சீவ்மெண்ட்டும் இல்லை. ஆனால் மேலே தரப்பட்டு இருக்கிற தலைப்பிலே 5 ஏற்படுத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி இதை புரடக்ஷனாக கருதி ஒரு குறியீடு வைத்து அது நிறைவேறிற்றா இல்லையா என்ற செய்தியை உள்ளடக்கி இருப்பது பொருத்தமாக இல்லை. இந்த ஆண்டு ஏற்படுத்தப்பட்ட எண்ணிக்கை இவ்வளவு என்று இருக்க வேண்டும், அதைக் குறிப்பிடுவது தவறு அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன், அதே பக்கத்திலே Castration done in lakhs என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த வகையிலே 1975-76ஆம் ஆண்டிலே 6.3 லட்சம் மாடுகள் காயடிக்கப்பட்டன, ஆனால் 1976-77ஆம் ஆண்டில் 4.9 லட்சம் மாடுகள்தான் காயடிக்கப்பட்டன என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. 6 1/4 லட்சமாக இருந்தது, 5 லட்சத்திற்குக் குறைந்து வந்துவிட்டது என்றால் அந்த எண்ணிக்கைக் குறைந்ததற்கு, அது உயராமல் இருந்ததற்கு என்ன காரணம், என்ன வசதிகள் இல்லை, ஏன் பணியாற்றுவதில், அலுவலர்களுக்கு இருக்கிற இடையூறு என்ன என்பதையெல்லாம் ஆராய்ந்து அதை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல் Vaccination done in lakhs என்பதில் நோய்த் தடுப்பிற்காக போடப்படுகிற ஊசிகள் 1975-76ஆம் ஆண்டிலே 116 லட்சம் என்று போடப்பட்டிருக்கிறது. 1976-77ஆம் ஆண்டிலே 104 லட்சமாகக் குறைந்துவிட்டது. கடந்த ஆண்டு இந்த இலாகாவினுடைய பணி

களிலே ஏதேனும் ஒரு வகையிலே ஊக்கம் குறைந்துவிட்டதோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. ஊக்கம் குறைந்திருக்குமானால், ஊக்கம் அதிகப்படுத்தப்படுகிற முறையிலே செயல்படுவதன் மூலமாக ஆர்வத்தை அதிகப்படுத்துவதன் மூலமாக இந்தத் துறை வளர்ச்சியடைய .முடியும் என்று கருதுகிறேன். எனவே இதை ஆழ்ந்து கவனிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளுக்கு மருத்துவ மனை ஏற்படுத்துவது ஒன்றியத்திற்கு ஒன்று என்ற அடிப்படையிலே விரிவுபடுத்தவேண்டுமென்ற திட்டம் இருந்தது. ஆனால் அது மிகக் கடினமான ஒன்று என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். டிஸ்பென்சரிகள் என்ற முறையிலே ஒன்றியத்திற்கு ஒன்று என்று இல்லாமல் ஒன்றியத்திலே உள்ள கால்நடைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்த வேண்டுமென்றால் 10 ஆயிரம் கால்நடைகளுக்கு ஒரு மருத்துவ மனை என்று ஏற்படுத்துவது என்பது ஏற்கப்பட்டிருந்தது எண்ணிக்கைக்கு ஏற்ப 2–வது மருந்தகம், 3-வது மருந்தகம் என்று ஏற்படுத்தக் கட்டடச் செலவுகளுக்கு 27 ஆயிரம் ரூபாய் அல்லது 30 ஆயிரம் ரூபாய் அந்த ஒன்றியம் தந்து விடுமானால் அப்படி மருந்தகங்களை ஏற்படுத்தலாம் என்ற கருத்து இருந்தது. கடந்த ஆண்டு இந்தக் கருத்து காணாமல் போய்விட்டது. நான் அதற்காக இந்த அமைச்சரவை பொறுப்பு என்று சொல்லவில்லை, அப்படிச் சொல்ல எண்ணவும் இல்லை. ஆனால் இதை அதிகப்படுத்துவதைத் தவிர வேறு வழி கிடையாது என்பதை கால்நடைகளை வளர்ப்பதோடு, கால்நடைகளின் தரத்தை வளர்ப்பதில் ஈடுபட்டுள்ள துறை உணர்ந்து செய்யவேண்டும். தரத்தை உயர்த்துவதற்காக Key Village Centres programme, Intensive Cattle Development Progaamme எனறு இருக்கிறது. மாநிலம் முழுவதும் நடத்த முடியாவிட்டாலும் அந்த அளவிற்கு எண்ணிக்கையைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[பிற்பகல் 12.10]

மற்றொன்று, தரம் உயர்த்துவது என்ற கடமையைச் செய்யும் பொழுது அதில் இங்கே தரப்பட்டுள்ள புள்ளி விவரங்களைப் பார்த்தால்தரம்உயர்த்துமமுயற்சியில், இனக்கலப்பு முறையில் புதிதாகப் பிறக்கும் கன்றுகள், சீமைப் பசு, முர்ரா எருமை இவைகளின் மூலம் கலப்பினக் கன்றுகளை வைத்து வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறதா அல்லவா என்பதைப் புள்ளி விவரத்திலே பார்க்க முடியும்.

இன்டென்சிவ் கேட்டில் டெவலப்மென்ட் ப்ராஜக்ட்டைப் பார்த்தால் 1975-76-லே, 'காவ்ஸ் பார்ன் அண்ட் வெரிஃபைட்' என்பதில் பார்த்தால் 10,584 என்று உள்ளது 1976-77-ல்அப்படிப்

பிறந்த கன்றுகள்வெரிஃபைட் 8,550தான். ஒரு ப்ராஜக்ட் அதிகப்படுத்தப்பட்டிருப்பதாகப் புள்ளி விவரம் சொல்கிறது. காலதாமதமாக நடந்திருக்கிறது. முதலாண்டுக்காலத்தில் டார்ஜெட் 18,000, அச்சீவ்மெண்ட், 10,584. 1976-77-ல் டார்ஜெட் 24,000, அச்சீவ்மெண்ட் 8,550 நடைபெற்றிருக்கிறது. ஏன் அதிகமாக நடைபெறவில்லை, அதற்கு இடையூறு என்ன, இதை எப்படி மாற்றியமைக்க கருதப்படுகிறது. 1977-78 இல் டார்ஜெட் 30,000, அதில் 6,000தான் நடக்குமோ என்னமோ நானறிய மாட்டேன்.

ப்ரப்போர்ஷனேட்டாக வளர்வதற்குப் பதில் குறைந்து கொண்டு வருகிறது. 'கீ வில்லேஜ் ஸ்கீமில்' 'காவ்ஸ் பார்ன் அண்ட் வெரிஃபைட்' என்ற அடிப்படையில் அதற்கொரு டார்ஜெட் வைத்திருக்கிறார்கள். 1975-79இல் டார்ஜெட் 22,800 நடைமுறைபடுத்தப்பட்டது 10,646. 1976-77-ல் டார்ஜெட் 30,000. ஆனால் நடைமுறைப்படுத்தப்பட்ட எண்ணிக்கை தரப்படவில்லை. எவ்வளவுதான் செய்தார்கள் என்ற புள்ளி விவரத்தை எத்தனையோ துணை இயக்குநர்கள் இருக்கும் இந்த இலாக்காவில் தரவில்லை.

அதற்கடுத்த ஆண்டு ''காவ்ஸ் பார்ன் அண்ட் வெரிஃபைட்'' என்ற தலைப்பிலே டார்ஜெட் 46,800 வைக்கப்பட்டிருக்கிறது. அதில் குறைந்தது 25,000 ஆவது வெரிஃபை செய்யப்பட வேண்டும். அதற்குத் தகுந்த வழி இருக்கிறதா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் சொன்னார். நான்கு முறை கருத்தரிக்க ஊசிபோட்டாலும் பசுவுக்கோ, எருமைக்கோ கன்று தோன்றுவதில்லை, கன்றுபோடுவதில்லை என்று குறிப்பிட்டார்கள். இங்கே, அளிக்கப்பட்ட புள்ளி விவரத்தில் 'நம்பர்ஆஃப் ஆர்ட்டிஃபிஷியல் இன்செமினேஷன் done' 1,05,351 அதிலே ''நம்பர் ஆஃப் ஆர்ட்டிஃபிஷியல் இன்செமினேஷன்'' வெரிஃபைட் 36,289. அதாவது மூன்றில் ஒரு பங்கு. பிறந்த கன்றுகள் 10,000 என்று வருகிறது. அதேபோல் 1976-77-ல் வளர்ந்து உள்ளது. 1,72,406. வெரிஃபைட் 74,396 என்று எண்ணிக்கை, இருக்கிறது.

எனவே, இதிலே விஞ்ஞான முறையிலே குறைபாடு இருக்குமா அல்லது ஊசி போடும் முறையில் குறை இருக்கிறதா, அல்லது பருவம் பார்த்துச் செய்ய வேண்டுமென்பதில் ஏதாவது குறையிருக்கிறதா, கிராம மக்களுக்குத் தெளிவை ஊட்டலாமா என்று பார்க்க வேண்டும். 1975ஆம் ஆண்டு இல்லாத முறையில் 1976 ஆம் ஆண்டில் ஊசி போட இரண்டு ரூபாய் என்றும், ஐந்து ரூபாய் என்றும் கட்டணம் வைத்திருக்கிறார்கள் என்ற குறிப்பைப் பார்க்கிறேன். இப்பொழுதே கிராமப்புற மக்களுக்கு இவைகளிலே இன்னும் தெளிவான நம்பிக்கை ஏற்பட

வில்லை. ஒவ்வொரு வட்டாரத்திலும் சில கிராமங்களில் இப்படிப்பட்ட கால்நடை உற்பத்தி ஏற்படுமானால் அதைப் பார்த்து மற்றவர்கள் தீவிரமாக ஈடுபடுவார்கள். 20 மைல்களுக்கு அப்பாலுள்ளவர்களுக்கு இதை நேரடியாகப் பார்க்கும் பயிற்சி அனுபவம் இல்லாத காரணமாக அவர்கள் ஈடுபடுவதில்லை. அப்படி ஈடுபடாத காரணத்தால் இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய் என்று சொன்னால் அதில் அவர்கள் நிச்சயமாக அக்கறை காட்ட மாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் கட்டணத்தை நீக்குவதை ஜனநாயக உணர்வோடு பாமர மக்களுக்குச் செய்யும் எண்ணத்தில் மேற்கொள்ளும் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

இடையிலே குடியரசுத் தலைவர் ஆட்சியின்பொழுது பசுவதையைத் தடுக்கும் முறையில் இங்கே ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 31—8—1976-ல் பசுவதையைத் தடுக்கும் சட்டத்திலிருக்கின்றநோக்கம் என்னவென்றுபார்த்தோமானால் பசுவை கொல்லுவது புண்ணியத்திற்கு மாறானது, பாவச் செயல் என்று கருதுகிறார்கள். பசுக்களை தமிழ்நாட்டிலே யாரும் கொல்வதற்கு முன் வரமாட்டார்கள். ஆனால் எங்கே கொல்லப்படுகிறது என்றால் அவைகள் பயன்படாத நிலையில், பராமரிக்கப்பட முடியாத நிலையில் வறுமையில் வாடும் ஏழை மக்களால், இன்னும் சொல்லப்போனால் அவர்களால் விற்கப்பட்டு வேறு யாராலோ கொல்லப்படுகிறது. ஒரு நாளைக்கு ஏறத்தாழ 5,000, 10,000 கால்நடைகள் கேரளத்திற்குப் போகிறது. அங்கேநான் இறைச்சியைப் பதப்படுத்தி வெளிநாட்டுக்கு அனுப்புகிறார்கள், உள்நாட்டிலேயும் பயன்படுத்துகிறார்கள்.

இது தொழில் முறை. தொழில் முறைக்குக் கேரளாவுக்குப் பயன்படுகிற அந்த மாடுகளைத் தமிழ் நாட்டிலேயே, தொழில் முறையிலே பயன்படுத்தி, வருமானத்தைப் பெருக்க வேண்டுமென்ற நோக்கம் நியாயமான நோக்கம். அதற்காக, ஒரு திட்டம் 3 ஆண்டுகளுக்கு முன்னாலே, அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்னாலே, ஐந்தாண்டுத் திட்டத்தை ஒட்டி, இறைச்சிகளை விஞ்ஞான முறையிலே மக்களுக்கு வழங்க தீட்டப்பட்டது. அந்தத் திட்டத்திற்காக, ஒரு பெரிய தொழிற்சாலை சென்னைக்குப் பக்கத்திலுள்ள புழல் பகுதியிலே ஏற்படுத்துவதாக இருந்தது. அந்தப் பகுதியிலே இருக்கிற சமணச் சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் அதற்கு மாறுபாடு தெரிவித்தார்கள், எதிர்த்தார்கள். அந்த வேறுபாடு காரணமாக, பொருத்தமான வேறிடத்திலே ஏற்படுத்துவதற்கான திட்டம் இருந்தது. அந்தத் திட்டம்பற்றி, இப்பொழுது இந்தக் குறிப்பிலே எதுவும் குறிப்பிடவில்லை என்பதை நான் குறித்துக் காட்டாமல் இருக்க முடியாது. எனவே, அதிலும் கவனம் செலுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கால்நடைகளுக்கான காப்பீட்டுத் திட்டம் 5 ஆண்டு, 6 ஆண்டுகளாக பரிசீலனையில் இருந்தது. அது மத்திய அரசுக்கு எழுதப்பட்டு, இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அது பற்றியும் எதுவும் குறிப்பில் இல்லை. அது நல்ல பயனுள்ள திட்டம் என்று அப்பொழுது கருத்து தெரிவிக்கப்பட்டது. அதையும் நிறைவேற்ற முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதையெல்லாம் விட, மேல்நாட்டுக் காளைகளை, ப்ரீஷியன் ரெட்டன் போன்ற காளைகளை, இங்கே கொண்டு வருவதன்மூலம், இன்னும் சொல்லப்போனால், அப்படிப்பட்ட இனத்தையே இங்கே உற்பத்தி செய்ய, கலப்பினமாக இல்லாமல், உற்பத்தி செய்ய, அதற்காக அந்த நாட்டு பசுக்களையும் கொண்டு வருவதற்கும் விரிவான திட்டம் 3 ஆண்டுகளுக்கு முன்னால் விரிவாக ஆலோசிக்கப்பட்டது. இந்த ஆண்டு அந்தத் திட்டம் இருப்பதாக அறிக்கையிலே தெரியவில்லை. ஓராண்டுக்கு 100 பசுக்களாவது, 20 காளைகளாவது வரவழைக்கப்பட்டால், தனி இனத்தைத் தொடர்ந்து விருத்தி செய்ய முடியுமே தவிர, வரவழைக்கப்படாத வரை அது முடியாது.

செம்மறி ஆடுகளைப் பற்றி சொல்ல வேண்டுமானால், ஆஸ்திரேலியா ஆடுகளை இங்கே உதகையிலும், கொடைக்கானலிலும் வளர்க்க, விரிவான திட்டம் முன்னாலே இருந்தது. இப்பொழுது அதுபற்றிய கருத்துக்கள் இங்கே தரப்படவில்லை. அப்படி தரம் உள்ளவற்றை வளர்க்க ஊக்குவிக்கவில்லை யென்பதுதான், தமிழக மக்களுக்குக் கிடைக்கிற இறைச்சியின் அளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே மிகக் குறைந்த அளவுக்கு இறைச்சியை பால் உணவைப் பெறுகிற மக்கள் நம்முடைய தமிழக மக்களாக இருக்கிறார்கள் என்பதிலிருந்தே, இந்தக் கால்நடை துறை சமுதாயத்திலே மிகப்பெரிய அளவுக்கு வளர வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆகவே, இந்தத் துறை வளர்வதற்கான நிதி ஆதாரத்தை மேலும் காண வழி வகுக்க வேண்டுமென்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோழி வளர்ப்பு பற்றி 3, 4 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆர்வம் பிறந்தது, மக்கள் மிகப் பெரிய அக்கறை செலுத்தினார்கள். எங்கே போனாலும், டாக்டர்கள், வழக்கறிஞர்கள், பெரிய மிராசுதார்கள் எல்லாம் கோழி வளர்ப்பிலே ஈடுபட்டார்கள். நான் அப்படி பார்த்த பொழுது எனக்கே ஆச்சரியமாக இருந்தது. இந்த ஆர்வம் அப்படியே இருக்குமானால், அடுத்தது 3 ஆண்டுகளிலே பெரிய வளர்ச்சி ஏற்படும், இந்தக் கோழி வளர்ப்பிலே என்று எண்ணினேன். ஆனால், இன்றைக்குக் கேள்விப்படுவது, அரசாங்கப் புள்ளி விவரப்படி, இது ஒழுங்காக நடைபெறுகிறது என்பதிலே சந்தேகம் இல்லை அந்த அளவு

ஆர்வம் இல்லை என்பதுதான். முட்டை உற்பத்தி குறைவதைத் தடுக்கவில்லை. ஆனால், எண்ணிக்கைக் குறைவதற்குக் காரணம், தனியார் நடத்துகிறபொழுது, அரசாங்கத்தாலே அதற்குப் போதிய ஊக்கம் தரப்படுவதில்லை. தீவனம் கிடைப்பதில்லை. அதனால் கோழிகளை வளர்ப்பது சரியாக நடைபெறவில்லை.

திருமயம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்திலே சரியான வகையிலே, தீவனங்கள் வழங்கப்படாத காரணத்தாலே, அவைகள் நல்ல முறையிலே பராமரிக்கப்படாமல், இன்றைய தினம் நசித்துப் போயிருக்கிறது. அவர்களுக்குக் கடன்கள் ஏற்பட்டு, அவர்களுடைய சிறு சிறு கோழிப் பண்ணைகள் அழிந்து போய்விட்டன என்று கேள்விப்படுகிறேன். அப்படி இருக்குமானால், மறுபரிசிலனை செய்து, கோழிகள் கொடுக்கப்பட்ட பின்னர், அதை வளர்க்க இருக்கிற நிலைமை—ஒருவேளை தீவனம் குறைந்த விலையில் கிடைக்காமல் இருக்கலாம்; முட்டைகளை விற்க வாய்ப்புகள், வசதிகள் குறைவாக இருக்கலாம்—எப்படி இருக்கிறது என்பதைக் கவனிக்கவேண்டும். முட்டைகள் இங்கே சென்னை நகருக்கு அனுப்பப்படுகிற முயற்சி இருந்தது. இன்றைக்கு கூட கேராளவிலிருந்து வருகிற முட்டைகள் முற்றும் குறைந்திருக்கின்றன என்று சொல்லவில்லை—ஆனால், ஓரளவு குறைந்திருகிறது. அந்தந் தளர்ச்சியைப் போக்கி முட்டைகள் இங்கேயே உற்பத்தி செய்ய ஊக்குவிக்க வேண்டுமென்று நான் தெரிவித்து கொள்றேன்.

காநடைஇலாகாவில் பணியாற்றுகிற கால்நடை ஊழியர்களுக்கு ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்னாலே 300 பேருக்குத்தான் பதவி உயர்வு தரப்பட்டுள்ளது. அதற்கு முன்னாலே, ஆயிரம் பேருக்குத் தரப்பட்டிருந்தது. கடந்த ஆண்டு 300 பேருக்குக் பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. அவர்களெல்லாம் 15 ஆண்டுக் காலம் பணியாற்றியவர்கள். அவர்களுப் கெல்லாம் செக்கண்ட் கிரேடிலிருந்து ஃபர்ஸ்ட் கிரேட் பரமோஷன் தரப்பட்டது. இடைக்காலத்திலே, அந்த பரமோஷன் மறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் எல்லாம் ஃபர்ஸ்ட் கிரேடில் இருந்து திரும்பவும் செக்கண்ட் கிரேடாக ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்று, ஓராண்டு இத்துறையில் பயிற்சி பெற்று, 15 ஆண்டுகளாகப் பணியாற்றிய அவர்களுக்கு உரிய சம்பளம் கொடுக்கவில்லை முறையான ப்ரமோஷன் கொடுக்கவில்லையென்ற குறை இருந்தது அது வெறும் ஃபர்ஸ்ட் கிரேட். ஆகவே அதைத் திருப்பி அவர்களுக்குத் தர முயற்சிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12.20]

அதேபோல கால்நடை உதவியாளர் பயிற்சி கடந்த ஆண்டு 100 பேர்களுக்கு இருந்து இப்போது 25 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. திடீரென்று குறைப்பதற்கான காரணமும் இதிலே கொடுக்கப்படவில்லை. 200 பேர்களுக்கு மேல் வேலை காலியாக இருக்கிறது. எனவே இந்த ஆண்டாவது எண்ணிக்கையை உயர்த்தி 100 ஆக ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் இரண்டு ஆயிரம் கால்நடை உதவியாளர்கள் இந்தத் துறையிலே பணியாற்றும்போது ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து அரசுத் துறைக்கு மாற்றப் பட்டார்கள். மீண்டும் அவர்கள் ஊராட்சி ஒன்றியங்களுக்கு மாற்ற வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மறுபடியும் திரும்பத் திரும்ப மாற்றினால் குழப்பமாக இருக்கும் என்ற காரணத்தினால், சரியான வழிமுறைகளை காணவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால் இந்தத் துறையில் கேந்திர கிராமத் திட்டம், தீவிர கால்நடைத் திட்டம் நாலைந்து மாவட்டத்திலே திருச்சியிலே ஒரு திட்டம், தஞ்சையிலே வேறொரு திட்டம், புதுக்கோட்டையில் இரண்டு வகையான திட்டம் மதுரையிலே இரண்டு வகையான திட்டம், திருநெல்வேலியிலே ஒரு வகையான திட்டம் என்று இருப்பதை எல்லா மாவட்டங்களிலும் பரவலாக, பால் உற்பத்தித் திட்டத்திற்காக ஒரு தனித் துறையை இத்துடன் இணைத்தாவது இந்த கேந்திர திட்டத்தை செயல்படுத்தி எல்லா மாவட்டங்களிலும் உருவாக்குவதன் மூலமாக, தென்னாற்காடு, வடார்க்காடு போன்ற மாவட்டங்களை இணைக்கும் விதத்தில், கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, சமூகநலத் துறையில் அதிகம் கருத்துக்களை குறிப்பிடமுடியாத நிலையில் என்னுடைய கருத்துக்களை இந்தத் துறையில் இந்த அளவோடு நிறுத்திக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

*<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :</u> பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை வளர்ப்புத் துறை, சமூக நலத் துறையைப் பற்றி தங்களுடைய அருமையான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்கள், தங்களுக்கே உரித்தான முறையில் இங்கே எடுத்தும் தொடுத்தும் சொன்னார்கள். நல்ல அறிவுரைகளையும் எனக்கு வழங்கியிருக்கிறார்கள். இந்தத் துறையின் அமைச்சராக ஏற்கனவே இருந்த மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் சில தவறுகளைச் சுட்டிக் காட்டினார்கள். இனிமேல் எப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதைப் பற்றியும் சொன்னார்கள். எங்களைப் பொறுத்த அளவிலே மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய முதலமைச்சரின் கீழ் பணியாற்றுகிற நாங்கள், நல்லவைகளை எடுத்துக் கொண்டு நல்ல முறையிலே செயல்பட கடமைப் பட்டிருக்கிறோம்.

எனவே, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் சொன்ன நல்ல கருத்துக்களை எல்லாம் பரிசிலித்து நாங்கள் நல்ல முறையிலே முடிவெடுப்போம் என்று இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஆடு வளர்ப்பைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இங்கே ஆடு வளர்ப்பிற்காக ரூ. 24 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். ஏழை விவசாயிகள் பொருளாதாரத்தை வளர்க்க ஆடு வளர்ப்பு லாபகரமான தொழில் என்பதை புரிந்து கொண்டு ஆடு வளர்ப்பு அபிவிருத்திக்காக தமிழ்நாட்டில் ஏழு மாவட்டங்களில், செங்கை, சேலம், வடார்க்காடு, தர்மபுரி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய இடங்களில், விவசாய மறு நிதிக் கழகத்தின் உதவியுடன் 39 கூட்டுறவு சங்கங்களை அரசு உருவாக்கி உள்ளது என்பதை நான் எடுத்துக்கூற விரும்புகிறேன். நீலகிரி மாவட்டத்தில் மட்டும் ஆடுகளை வளர்த்து கம்பளி தயாரிக்க 400 ஆடுகளை வைத்து நான்கு கூட்டுறவு சங்கங்கள் அமைக்க கடனாகவும், மானியமாகவும் 4.02 லட்சம் அரசு அளித்துள்ளது என்பதனை மதிப்பிற்குரிய உறுப்பினர். நாராயணன் அவர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே ஒரு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஐந்து ஆயிரம் கால்நடைகள் இருக்கிற ஊர்களில் ஒரு கால்நடை உதவியாளரைப் போட்டால் நலமாக இருக்கும் என்று சொன்னார்கள். ஆனால் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஆட்களைக் கணக்குப் போட வேண்டாம், 10 ஆயிரத்துக்கு மேற்பட்ட கால்நடைகள் இருக்கிற இடங்களில் உதவியாளரைப் போட்டால் நலமாக இருக்கும் என்றார்கள். அந்த முறையில் 12,500 கால்நடைகள் உள்ள இடத்திலே ஒரு கால்நடை மருந்தகம் என்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு பூராவும் கணக்கிட்டுப் பார்த்தால் கால்நடை மருத்துவ மனைகள் 33, கேந்திர கிராம நிலையங்கள் இணைந்த மருத்துவ மனைகள் 10, கால்நடை மருந்தகங்கள் 505-ம், கேந்திர கிராம நிலையங்கள் இணைந்தது 79-ம் இருக்கின்றன. 1,954 கிளை நிலையங்களும் செயல்பட்டுவருகின்றன. சீரான பணியாற்றி செயல் பட்டு வருகின்றன. மதிப்பிற்குரிய அண்ணன் கந்தசாமி அவர்கள் கூட எடுத்துச் சொன்னார்கள்.

சில நோய்கள் தடுக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆனால் இந்தத் துறையைப் பொறுத்தவரையில் கால்நடைக்கு ஏற்படக் கூடிய வெக்கை நோய் தடுப்புத் திட்டத்தின்கீழ் 14 மாவட்டங்களில் பயிற்சிக் குழுக்களும் 10 இடங்களில் விழிப்புக் குழுக்களும் மற்றும் 9 இடங்களில் சோதனைச் சாவடிகளும் இயங்கி வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

மருந்துகள் சீராக கொடுக்கவில்லை என்று மதிப்புக்குரிய மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி சொன்னார்கள். மருந்துகள் சில சமயங்களில் தீர்ந்து போவதைத் தடுக்கும்பொருட்டு அரசு ஆணை எண் 273, விவசாயத்துறை. தேதி 16-2-ன் படி, மருந்துகள் சப்ளை செய்யும் கம்பனிகளுடன் ஒரு வருட திட்டத்தின் அடிப்படையில் அவைகளைப் பெறுவதற்கு ஒரு குழுவை நிறுவி அந்தப் பணிகளை சீராக்க முடிவு செய்திருக்கிறோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் தண்டபாணி தனியார் துறையிலுள்ள கால்நடை பராமரிப்பு நிலையங்களை அரசு வாங்க முடியுமா, முன்னாள் அமைச்சர் என். எஸ். எஸ். மன்றாடியார், காங்கேயம், ஆனூர் சம்பந்த சர்க்கரை சிவகுமார், இவர்களின் பண்ணைகளை எடுத்துக் கொள்ள முடியுமா என்று கேட்டார்கள். இரண்டாவதாக குறிப்பிட்ட சம்பந்த சர்க்கரை சிவகுமார் கோரிக்கை ஹைகோர்ட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்ற வகையில் அரசு பரிசீலனையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். மன்றாடியார் கால்நடை பண்ணையை எடுத்துக் கொள்வதா என்பது பற்றி அரசு பரிசிலித்து வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் நாராயணன், பழனிவேல் அழகர்சாமி, ஆடு வளர்ப்புத் திட்டங்களில் உள்ள குறைபாடுகளைச் , சொன்னார்கள். சேலம் ஆடு வளர்ப்பு பண்ணைக்கு 1,200 மேச்சேரி ரக ஆடுகள் அளித்திருக்கிறோம். 1976-77-ம் ஆண்டில் 275 கடாக்கள் தரப்பட்டிருக்கின்றன. சின்ன தண்டாவில் மற்றொரு கூட்டுறவு சங்கம், அங்கே மேச்சேரி ரக ஆடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. வேளாண்மை மறுநிதி உதவி நிறுவனத்தின் உதவியுடன் 39 கூட்டுறவு சங்கங்கள் ஆடுகள் வளர்க்க அமைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளில் எட்டு சங்கங்கள் திருநெல்வேலி மாவட்டங்கத்திலும் 10 சங்கங்கள் இராமநாதபுரம் மாவட்டத்திலும் அமைந்துள்ளன. மேலும் சேலம், திருநெல்வேலி, வட ஆற்காடு மாவட்டங்களில் மத்திய சர்க்கார் உதவி பெற்று ஆடு வளர்ப்பு சிறப்புத் திட்டம் செயல்பட்டு வருகிறது. இதனால் தனிப்பட்ட சிறு விவசாயிகள் பயன் பெறுவார்கள். மாவட்டங்கள் பூராவும் மொத்தம் 3 ஆயிரம் விவசாயிகள் 3 ஆண்டுகளில் பலன் பெறுவார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் அவர்களும், உறுப்பினர்கள் கந்தசாமி அவர்களும், பழனிவேல் அவர்களும் ஆறுமுகம் அவர்களும், எடுத்துச் சொல்லுகிறபோது . இலவச செயற்கை முறை இன அபிவிருத்தி பற்றி பரிசீலனை செய்ய வேண்டும், அதற்கு பணம் வசூலிக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். 14-8-1976-ல் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் நகர்ப்புறங்களில் கால்நடை வளர்ப்புக்கு ஆதர

[செல்வி பி. டி. சரஸ்வதி] [1977 ஆகஸ்ட் 17

வளிக்காமல், கிராமங்களில் வளர்ப்பு குறைவாக இருப்பதால் கிராமங்களில் செயற்கை கருவூட்டு முறைக்கு ரூ. 5-ம் மற்றும் ரூ. 2-ம் வசூல் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. மேலும் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல, பொலி காளைகளை பராமரிப்பதிலும், மற்றொரு செயற்கை இனவிருத்தி நிலையமும், சினைக்கன்றுகளை பரிசோதனை சம்பந்தமாகவும் செலவு செய்யப்படுகிறது என்பதைக் கூறிக் கொள்கிறேன். இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். இன்னும் அதிகமான முறையில் கால்நடை மருந்துகள் இருந்தால் நன்றாக இருக்குமென்ற கருத்தினைத்தான் எடுத்து சொல்லியிருப்பார்கள் என்று கருதுகிறேன். எனவே கோரப்படுகிற தொகையில் இன்றைய தினம் மருத்துவ கல்லூரிக்கு மொத்த தொகையிலிருந்து ரூ. 142.16 லட்சமும், புதிய வளர்ச்சி திட்டங்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையிலிருந்து ரூ. 20.65 லட்சமும் கால்நடை மருத்துவ கல்லூரி பல்கலைக் கழகத்தின் ஐந்தாம் ஐந்தாண்டு திட்டத்தில் ரூ. 15.91 லட்சமும், இவற்றிற்காக வகை செய்யப்பட்டுள்ளது. இவற்றின் மூலம் தமிழ் நாட்டில் 5 புதிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் துவக்கப்படவிருக்கின்றன. மதுரை மாவட்டத்தில் ஏழுமலையிலும், இராமநாதபுரம் மாவட்டத்தில் பந்தல்குடியிலும் வட ஆற்காடு மாவட்டத்தில் புதுப்பாளையத்திலும் சேலம் மாவட்டத்தில் மொரப்பாளையத்திலும் செங்கற்பட்டு மாவட்டத்தில் மாணம்பதியிலும் மருந்தகங்கள் அமைக்கபெறும்.

[பிற்பகல் 12-30]

கால்நடைகள் அவசர மருத்துவ உதவி பெறத் தக்க வகையில் மருத்துவ மனைகள் இன்னும் அதிகமாக அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். அந்த ரீதியில் திருநெல்வேலி சேரன்மகாதேவி, திருச்சி மாவட்டம் லால்குடி, தென்னாற்காடு மாவட்டம் திட்டக்குடி, வடஆற்காடு மாவட்டம் வாணியம்பாடி, செங்கற்பட்டு மாவட்டம் செங்கற்பட்டு ஆகிய இடங்களில் உள்ள மருந்தகங்கள் மருத்துவ மனைகளாக உயர்த்தப்படுகின்றன. மேலும் பல இடங்களில் இந்த உதவி இருக்க வேண்டியது அவசியம் என்று சொல்லப்பட்டது. இது வரை கால்நடை பராமரிப்பு அதிக அளவில் நடைபெறாத பகுதிகளில் 15 கேந்திர கிராம வட்டாரங்கள் ஏற்படுத்த நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர், சேலம் மாவட்டத்தைச் சார்ந்த உறுப்பினர், குறிப்பிட்டவைகளை நாங்கள் பரிசீலனையில் எடுத்துக் கொள்கிறோம் என்பதைக் கூறிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

77 ஆகஸ்ட் 17] [செல்வி பி. டி. சரஸ்வதி]

கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் காரணமாக அவை றந்து விடுகின்றன என்று சொன்னார்கள். இப்படிக் கால் டைகளுக்கு ஏற்படக் கூடிய நோய்களை உடனடியாகக் ன்டு பிடித்து அவற்றை தடுப்பதற்கு இந்த ஆண்டு பொபைல் பன்கள் திருநெல்வேலி, மதுரை, வேலூர் ஆகிய மாவட்டத் லைநகர்களில் இயங்கும்.

நிர்வாக, திட்டப் பணிகளை, பல்வேறு வளர்ச்சிப் பணிகளை ரிவு படுத்த வகை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு புதிய ணை இயக்குநர்கள் காஞ்சிபுரம், இராமநாதபுரம் ஆகிய இடங் ளில் ஏற்படுத்தப்படுவார்கள். நிர்வாக சீரமைப்பிலே இவை சயல்படுவதால் இதற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு எதுவும் சய்யப்படவில்லை.

அடுத்து சமூக நலத்துறை பற்றி பல்வேறு கருத்துக்களைச் சான்னார்கள். (குறுக்கீடு).

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u>: இப்போது வேண்டாம். ாண்புமிகு அமைச்சரவர்கள் அவருடைய உரையை முடித்த றகு சந்தேகங்கள் இருந்தால் கேட்கலாம்.

<u>மாண்புமிகு செல்வி பி. டி. சரஸ்வதி :</u> இங்கே பேசிய ாண்புமிகு உறுப்பினர் சொக்கலிங்கம் அவர்கள் குறிப்பிட்டார் ள் ''மகளிர்'' என்று பெயர் வைத்திருந்தோம். ''சமூக நலம்'' ன்று பெயர் வைத்திருக்கிறீர்கள் என்றார். இப்படிப் புதிய பயரை சொல்லியிருக்கிறீர்களே என்று பேரறிஞர் அண்ணா ாலத்திலும், அதற்கு முன்பு இருந்தும் மேற்கோள்களை எடுத்துக் ாட்டினார்கள்.

''சட்டங்கள் செய்வதும், பட்டங்கள் ஆள்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'' என்ற பாரதியாரின் வாக்கிற் ிணங்க நான் பெண்களின் பிரதிநிதியாக இந்த அவையிலே அமர்ந்திருக்கிறேன் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள டமைப்பட்டிருக்கிறேன்.

பரனூர் தொழு நோய் இல்லத்தில் உள்ளவர்களின் எண் ணிக்கையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அங்கே 223 ஆண் களும், 119 பெண்களும், 60 சிறுவர்களும் இருக்கிறார்கள் என் பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். பரனூரைப் பொறுத்த மட்டில் அங்கு நான் சென்றிருந்த நேரத்தில் என்னி டத்தில் அவர்கள் சில குறைகளை எடுத்துச் சொன்னதாகவும், அவை பத்திரிக்கையில் வந்துள்ளதாகவும் குறிப்பிட்டார்கள். அவைகளைப் பற்றி சுகாதாரத் துறைத் துணை இயக்குநருக்கு நேர்முகக் கடிதத்தின் மூலம் எழுதப்பட்டு மேல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்று சக்கர வண்டிகள் போன்ற கருவிகள் ஆவடியில் தயார் செய்யப்படுகின்றன.

வாழ வழியற்ற, இவர்களைக் காப்பாற்றக் கடமைப்பட்ட உறவினர்களால் கைவிடப்பட்ட அநாதைகளுக்கு முழுமையான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகள், உதவி ஆகியவைகளை அளிப்பதற்கு அமைப்புகள் உருவாக்கப்பட்டு அவை 1—4—1962 முதல் செயல்படுத்தப்பட்டு வந்துள்ளன. இப்படிப்பட்ட அமைப்புகளைத் தமிழக அரசு செயல்படுத்திக் கொண்டு வருகிறது. புகல் அற்ற குருடு, மன நோய், தொழு நோய் உள்ள புகலிடம் அற்ற 60 பேர்களுக்கும், புகல் அற்ற 15 குடும்பங்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் புகல் அற்ற, உற்றார் உறவினரால் கை விடப்பட்டவர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 20 ரூபாய் அளிக்கப்படுகிறது. இந்தத் தொகை அரசு செலவில் பண அஞ்சல் மூலம் கொடுக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அழகர்சாமி அவர்களும், கந்தசாமி அவர்களும் இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்று சொன்னார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு என்ன செய்யலாம் என்பதைப் பற்றி ஆலோசித்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். நேரமில்லாத காரணத்தில் விளக்கமாகச் சொல்ல முடியவில்லை.

மேலும் இன்றையதினம் புகல் அற்ற 56,882 பேர் இந்தத் திட்டத்தினால் பயன் அடைந்து கொண்டிருக்கிறார்கள். 452 உடல் ஊனமுற்ற அநாதைகள் உதவி பெற்று வருகிறார்கள். அரசு ஆணை 642-ன்படி 10,242 பேர் பயன் அடைகிறார்கள்.

1975-76 ஆண்டு தமிழக அரசு ஆதரவற்ற விதவைகள் மறுவாழ்வுத் திட்டத்தைக் கொண்டு வந்தது.

இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்ற விதவைகள், ஆதரவற்ற மகளிர் மற்றும் சமூக, பொருளாதார நிலையில் பின்தங்கியும் உடல் ஊனமுற்ற 20 முதல் 40 வயது வரை உள்ள மகளிர்க்கும் தையற் பயிற்சி அளிக்கப்பட்டு நன்கொடையாக ஒரு தையல் இயந்திரமும் அளிக்கப்படும். 1975-76 ஆம் ஆண்டு ரூ. 7,00,000 செலவில் ஆயிரம் பேருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1976-77-ம் ஆண்டு ரூ. 3,00,000 செலவில் 500 பேர் பயனடைந்தனர். இவ்வாண்டும் ரூ. 3,00,000 செலவில் 500 பேர் பயனடையும்படி இத்திட்டத்தை தொடர்ந்து செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. 3—6—75-க்குப் பிறகு மறுமணம் செய்துகொண்ட 18 முதல் 30 வயது வரம்பிற்குட்பட்ட விதவைகள் மறுமணத்தை ஆதரிக்கும் திட்டத்தின்கீழ் தம்பதிகளின் கூட்டுக் கணக்கில் ரூ. 5,000 மதிப்புள்ள 7 ஆண்டு

தேசிய சேமிப்பு பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு ஐந்து லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அடுத்து, ஆதரவற்ற விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கும் பொருட்டும், நிரந்தர வேலைவாய்ப்பு அளிக்கவும், கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் சர்க்கா இயந்திரங்களையும் சாதனங்களையும் வாங்கி வழங்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது. அவற்றை வாங்க தலா ரூ. 1,000 விதம் மான்யமாக கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு வழங்கப்படுகிறது. இதற்காக 1977-78-ம் ஆண்டு ரூ. 2.79 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இன்றைய தினம் சமூக நலத் துறை சார்பாக நிறைவேற்ற கருதியுள்ள திட்டங்களை இந்தப் புத்தகத்தில் படித்திருப்பீர்கள். சுருக்கெழுத்து, தட்டச்சு வடிவில் வாழ்க்கை தொழில் பயிற்சியை பெற உதவும் வகையில் 16—30 வயதுத் தகுதியிலுள்ள 1,000 ஏழைப் பெண்களுக்கு ரூ. 150 ஆண்டு பயிற்சி உதவிப் பணமாக வழங்குதல், இதற்கு அவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக இருக்க வேண்டும். எந்த விதவைகளின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கு குறைவாக உள்ளதோ அவர்களது குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் வழங்க இருக்கிறோம். ஆயுள் ஈட்டுறுதிப் பயன்களையும், வருங்கால வைப்பு நிதிப் பயன்களையும் பெறுதல், அவர்களது குழந்தைகளை அனாதை இல்லங்களிலும், கல்வி நிலையங்களிலும் சேர்த்துக்கொள்வது தொடர்பாகவும், கல்வி-வேலை வாய்ப்புகள் பெறுதல் தொடர்பாகவும் விதவைகளுக்கு உதவும் பொருட்டு ஆலோசனை நல்கும் வழிகாட்டி அமைப்புகளை மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் நிறுவ இருக்கிறது.

இந்தப் பிரச்னைகள் வாயில்லா ஜீவன்களைப் பற்றிய பிரச்னைகள். ஜீவகாருண்ய நோக்கத்தோடு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

அடுத்து உடல் ஊன முற்றோரும், வாழ்க்கை இழந்து தவிக்கிற விதவைகளும் சொல்லப்போனால் தாய் தகப்பன் இல்லாத, பெற்றோர்களின் முகமே தெரியாத அனாதைகள் இவர்களின் நலனுக்காக கோரப்பட்டுள்ள மானியக் கோரிக்கையாகும். எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் பாசத்தோடும், பரிவோடும், அனுதாபத்தோடும், கருணை உள்ளத்தோடும், கொடுக்கப்பட்டுள்ள வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையையும் நிறைவேற்றித் தர வேண்டும் என்று மிக்க பணிவன்புடன் வேண்டுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் என். கிட்டப்பா, ஓ. சுப்பிரமணியம், எம். அண்ணாமலை, ஜே. ஜேம்ஸ், ச. சண்முகம் ஆகியோரது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்; பேரவை முன்னுள்ளகேள்வி :—

''நிதித் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,16,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் ஜி. சொக்கலிங்கம், மு. ஆறுமுகம் ஆகியோரது வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

''நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,39,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[பிற்பகல் 12.40]

(இ) கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன் :—

''நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூபாய் 3,30,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, நெசவாளர்கள் கஷ்டத்தைப் போக்க சில ரக துணிகளை கைத்தறிக்கு ஒதுக்குவது பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,30,40,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவர் அவர்களே, மாஸ்டர் வீவர்களிடம் வேலை பார்க்கும் நெசவுத் தொழிலாளர்களை, தொழிலாளர்கள் என அறிவித்து மற்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கும் சலுகைகள் கிடைக்கச் சட்டம் இயற்ற வேண்டும் என்பதைக் குறித்து விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,30,40,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. வி.கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, கைத்தறி நெசவுத் தொழிலையும், தொழிலாளர்களையும் ஊக்குவிக்க, நூல் விலையையும், சாய விலையையும் குறைக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,30,40,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to stay the recovery of all loans given to weavers by the banks, societies and financial corporations as the Handloom weavers are in difficulties, I move—

"That the allotment of Rs. 3,30,40,000 under Demand No. 26—Handlooms and Textiles—be reduced by Rs. 100".

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, விசைத்தறிப் போட்டியிலிருந்து கைத்தறி தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கையை குறித்து விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 3,30,40,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

(ஈ) கோரிக்கை எண் 27—கதர்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:—

''நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப் பின்கீழ் ரூபாய் 62,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கதர் நூல் நூற்பவர்களுக்கு மேலும் உதவித் தொகை வழங்குவது பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூபாய் 62,30,000-ல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ஏ. வி. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, காதியின் விலை அதிகமாக இருப்பதால் அதைக் குறைக்க நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்க—

''நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப் பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 62,30,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU A. SWAMIDHAS : Sir, to discuss Policy, I move—

'That the allotment of Rs. 62,30,000 under Demand No. 27—Khadi be reduced by Rs. 100.'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் தொழிலும் துணிகள், கதர் கிராமத் தொழில்கள் இவை பற்றி அரசின் கொள்கை விளக்கக் குறிப்புகள் * மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காகவும் அனுமதி முறைக்காகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. அதையெல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக படித்துப் பார்த்து பல அரிய கருத்துக்களை சொல்லவிருக்கிறார்கள். எனவே

* 728–758ம் பக்கங்களில் இணைப்புகள் III, IV, V ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

இந்த விளக்கக் குறிப்புகளை எல்லாம் நான் படித்ததாக எடுத்துக் கொண்டு அவை சபைக் குறிப்பேட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவை பற்றிய உறுப்பினர்களின் கருத்துரைகளுக்குப் பின் இறுதியில் நான் பதில் சொல்லுகிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, கதர் தொழில், கிராமத் தொழில் இந்த மானியக் கோரிக்கைகளின் மீது சில கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறித் தொழிலைப் பொறுத்த வரையில் அந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நெசவாளர்களின் வாழ்க்கையைப் பற்றி பொதுவாக இதற்கு முன்னால் இருந்த அரசும் இந்த அரசும் பல்வேறு காரியங்களை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இருக்கின்றன என்பதை முதலில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற பெரும்பாலான நெசவாளர்கள் குடும்பங்கள் நிம்மதியாக வாழ வேண்டும் இந்த தொழில் சிறப்பாக இருக்க வேண்டும், என்பதில் மிகுந்த அக்கறையோடு இருக்கிறது என்பதை இந்த நாடு அறியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு கட்டத்தில் இந்த கைத்தறித் தொழிலில் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த துணிகள் விற்பனையாகாமல் தேங்கி கிடந்த நிலையில் அந்த நிலையைப்பார்த்து பேரறிஞர் அண்ணா அவர்களும் கலைஞர் அவர்களும் பேராசிரியர் அவர்களும் மற்ற பல தலைவர்களும் அவர்களுடைய துயரை துடைப்பதற்கு தேங்கி கிடந்த கைத்தறி துணிகளை எல்லாம் தங்கள் தோளிலே சுமந்து விற்று அவர்களுடைய துயரை துடைத்தது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதை நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

பொதுவாக கைத்தறித் தொழில் என்று சொல்லுகின்ற நேரத்திலே என்னுடைய தொகுதியும், அதை ஒட்டியுள்ள சைதாப்பேட்டை, குன்றத்தூர், திருமழிசை, அனகாபுத்தூர், கூடுவாஞ்சேரி, மாங்காடு போன்ற பகுதிகளிலும், அதையொட்டிய பகுதிகளிலும் லுங்கி உற்பத்தி செய்கின்ற தொழில்தான் மிக அதிகமாக இருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படி லுங்கி உற்பத்தி செய்கின்ற தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளி அல்லது சிறு உற்பத்தியாளர்கள் படுகின்ற சிரமங்களை நான் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நான் சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த தொழில் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். பொதுவாக, இந்தத் தொழில் இரண்டு பிரிவாக இருக்கின்றது என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒன்று, நம்முடைய கூட்டுறவு சங்கங்களில் மூலமாக, அதிலே அங்கம் வகிக்கின்றவர்கள் அவர்களுடைய உதவியைப் பெற்று, லுங்கி உற்பத்தி செய்கிறார்கள். மற்றொன்று, தனியார் மூலமாக அவர்களுடைய உதவியைப் பெற்று, துணியை உற்பத்தி செய்கிறார்கள். இதிலே அடிப்படையிலே இருக்கின்ற வித்தியாசத்தை நாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த கூட்டுறவு உற்பத்தி சங்கங்கள் மூலமாக உற்பத்தி செய்யப்படுகின்ற உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களும் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும் என்று உங்கள் மூலமாக நான் இந்த சபைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவு உற்பத்திச் சங்கங்கள் உற்பத்தியாளர்களுக்கும், நெசவுத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றவர்களுக்கும் அவர்களுக்குத் தேவையான நூலைத் தருகிறார்கள். முன்பணம் தருகிறார்கள். அப்படி இருந்தாலும்கூட இங்கே ஓரளவுக்கு கொடுக்கப்படக்கூடிய நூல் தரமாக இல்லை என்பதை பெரும்பாலான தொழிலாளர்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற தொழிலாளர்கள் பெருங் குறையாகச் சொல்வதை நான் இந்த நேரத்திலே இந்தச் சபைக்குத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அப்படி அவர்கள் உற்பத்தி செய்கின்ற துணிகளுக்கும் அவர்கள் உடனே பணம் கொடுப்பதில்லை என்ற குறையை உற்பத்தியாளர்கள் சொல்கிறார்கள். ஆனால், அதே நேரத்திலே தனியார் அல்லது மொத்த வியாபாரி என்று சொல்லக்கூடியவர்கள், மொத்த வியாபாரம் நடத்துகின்றவர்கள் அதாவது சங்கு மார்க்கு, மௌலானா போன்ற பெரும் வியாபாரிகள் உற்பத்தி செய்கின்ற உற்பத்தியாளர்களும், தொழிலாளர்களும் ஓரளவு நிம்மதியாக இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். காரணம், தரமான நூலை அவர்கள் கொடுக்கிறார்கள், அவர்கள் அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளுக்கு முன்பணம் தரப்படுகின்றது. அப்படி உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகளுக்கு உடனே அவர்கள் பணம் கொடுக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும் போது, இந்த வியாபாரத் தொழிலில் பல சிரமங்கள் இருக்கின்றன. இதை ஒட்டு மொத்தமாகப் பார்க்கின்றபோது, ஒரு துறையிலே, தனியார் துறையிலே தரமான நூலைக் கொடுக்கிறார்கள், அதே சமயத்தில் கூட்டுறவு சங்கங்களிலே கொடுக்கப்படுகின்ற நூல் தரமாக இல்லை. இதற்குக் காரணம், நூலை உற்பத்தி செய்கின்ற ஆலைகள், அதன் சொந்தக்காரர்கள் பெரும்பாலும் இந்த நூல் விலையை அதிகமாக்கி

விடுகிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மார்க்கெட்டில் நூல் கிடைக்க வேண்டிய விலைக்குக் கிடைக்காமல், மூன்று மடங்கிற்கும், அதற்கும் அதிகமாக நூல் விலையை அந்த நூலை உற்பத்திச் செய்யக்கூடிய மில்லின் சொந்தக்காரர்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள் என்கின்ற நிலையையும் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

[பிற்பகல் 12-50]

இடையிலே அந்த நூல் அதிகமான விலைக்கு விற்கக் காரணம் இடைத்தரகர்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

பொதுவாக, உற்பத்தியாகிற துணிகளில் குறிப்பாக லுங்கிகளை விற்பனை செய்ய நல்ல மார்க்கெட்டை இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டும். தனியார் அந்த விற்பனை மார்க்கெட்டை பிடித்து அதிக லாபம் சம்பாதிப்பதைத் தடுக்க இருக்கின்ற கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் நியாயமான விலையில் மற்றவர்களைக் கவரக்கூடிய விலையில் உற்பத்தி செய்து விற்பனை செய்ய நல்ல மார்க்கெட்டை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக எல்லா ஆண்டுகளிலும் ரம்ஜான் பண்டிகையின் போது உற்பத்தி, விற்பனை இரண்டும் அதிகமாக இருக்குமென்று நெசவாளர்கள் கருதுகிறார்கள். அவர்கள் தங்களுக்கு ஏற்பட்ட கடனை ரம்ஜான் மாதத்தில் அடைக்கிற நிலைமை இருக்கிறது. அந்த நிலைமை இந்த ஆண்டு இல்லை. பெருவாரியாக உற்பத்தியும், விற்பனையும் குறைந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நீக்க இந்த அரசு மூன்று காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கனவே 7 நிமிஷம் ஆகிவிட்டது, சீக்கிரம் முடியுங்கள்.

திரு. து. புருஷோத்தமன்: ஒரே ஒரு நிமிஷம். அரசு அலுவலாளர்கள் மற்றவர்களுக்கு கைத்தறித் துணி வாங்க அட்வான்ஸ் கொடுக்கிறார்கள். அவர்கள் அப்படித் துணி வாங்கும் போது லுங்கியையும் சேர்த்து வாங்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டும். இலங்கை, சிங்கப்பூர் போன்ற வெளிநாடுகளில் லுங்கிக்கு அதிகமான மார்க்கெட் இருக்கிறது என்றும் அத்தனை அமைச்சர்களுக்கும் தெரியும். புதிய அரசு இலங்கையில் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அரசோடு நம்முடைய அரசு பேசி சுமூகமாக லுங்கி ஏற்றுமதிக்கு வழி காண வேண்டும். அதைப் போல்....

(மணி அடிக்கப்பட்டு திரு. எஸ். ஆர். இராதா பேச அழைக்கப் பட்டார்).

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாட்டில் இருக்கும் கைத்தறி நெசவாளர்கள் கணக்கைத் தெரிவிக்கிற நேரத்தில் 5.56 லட்சம் தறிகள் இருப்பதாகவும், 1.80 லட்சம் தறிகளைக் கூட்டுறவுச் சங்கத்தில் ஏற்படுத்திக் கொண்டிருப்பதாகவும் அறிக்கையில் காணப்படுகிறது. இந்த அறிக்கையைப் பற்றி எடுத்துச் சொல்லு வதைவிட நெசவாளர்களின் உண்மை நிலையை இந்த மன்றத் திற்குத் தெரிவித்தாக வேண்டும்.

இன்றைக்கு நெசவாளர் நிலைமை என்னவென்று சொன்னால் 12 வயது, 13 வயது ஆகிய நெசவாளர் குழந்தைகள் எல்லாம் மிதிபலகை எட்டவில்லை என்றாலும் மிதி பலகையை உயர்த்தி சிறு பையன்கள் தறி நெய்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கக் காரணம் ஒரு குடும்பத்தில் இருக்கும் அத்தனை பேரும் தொழில் செய்தால்தான் அரை வயிற்றுக் கஞ்சிக்காவது வழி ஏற்படும் என்ற நிலைமை இருப்பதுதான் என்பதை இந்த மன்றத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மன்றத்திலே கால்நடை மானியத்தோடு கைத்தறி மானியத்தையும் சேர்த்திருக்கிறார்கள். கால்நடைகள் பேசாது என்ற நிலைமையில் கைத்தறி நெச வாளர்களும் பேசமாட்டார்கள் என்ற நிலையில் வந்ததோ என்று நினைக்கிறேன். இன்றைய நிலையில் நெசவாளர்களுக்குச் செய்யப்பட வேண்டியதைப் பற்றி ஒன்று கூற விரும்புகிறேன்.

1976-77 ஆம் ஆண்டில் 112 கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கி 37,416 நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கத்தில் சேர்த்திருப்ப தாகக் கணக்கைத் தெரிவித்திருக்கிறார்கள். விரைவில், மூன்றாண்டுக் காலத்தில் 60 சதவிகிதம் நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை வெகுவாக வரவேற்று உள்ளபடியே இந்த அரசை மனதார பாராட்டு கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன்—1974-75 ஆம் ஆண்டிலும், 1975-76 ஆம் ஆண்டிலும் நெசவாளர்களுக்காகவே நாங்கள் இருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருந்த அரசு கூட 6,000 பேருக்குத்தான் கூட்டுறவுத் துறையில் வேலை வாய்ப் புகளைத் தர முடிந்ததே தவிர, அதற்கு மேல் அவர்களால் வாய்ப் புத் தர முடியவில்லை.

ஆனால், அவர்கள் பேசுகின்ற நேரத்திலே, நாங்கள் மூட்டை களைத் தூக்கி கைத்தறித் துணிகளை விற்றோம், கைத்தறிக்கு ஆதரவாக இருக்கிறோம் என்று பேசியது எல்லாம் பேச்சளவில் தான் இருந்ததே தவிர, நடைமுறையிலே பார்க்கிற நேரத்திலே 1974-75 ஆம் ஆண்டிலேயும், 1975-76 ஆம் ஆண்டிலேயும் 6,000 பேர்களுக்குத்தான் கூட்டுறவுத் துறையிலே வேலை வாய்ப்புத் தரப்பட்டிருக்கிறது. ஆனால் 1976-77 ஆம் ஆண்டிலே ஏறக்குறைய 37,416 பேர்களுக்கு கூட்டுறவுத் துறையிலே வேலை வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது. 1977-78 ஆம் ஆண்டிலே 30 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்புத் தரப்போவதாக அதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள், நான் அதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே கைத்தறி நெசவாளர்களுக்கென்று ஒரு புதிய திட்டத்தை பழைய அரசு 15—11—1975 இல் ஒரு திட்டத் தைப் புகுத்தி இருக்கிறார்கள். கூட்டுறவுத் துறையிலே நெச வாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தைப் போட்டு அவர்களுக்கு வருகிற கூலியிலே இருந்து 6% எடுத்து, அரசு அதற்காக 7% வட்டி கொடுத்து கடைசியிலே நெசவாளிகள் சாகின்ற நேரத்திலே அவர்களுக்கு 500 ரூபாய் தரப்படும் என்று ஒரு திட்டத்தைக் கொண்டுவந்து ஆனால் அந்த திட்டம் ஆமை வேகத்திலே சென்று அதிலே 57 ஆயிரம் பேர்களைச் சேர்த்துவிட்டு மீதம் இருக்கிற நெசவாளர்களை அந்தத் திட்டத் திலே சேர்க்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. இந்தத் திட்டத்தை இன்னும் கொஞ்சம் கவர்ச்சிகரமாக ஆக்கி, 500 ரூபாய் என்பது மிக மிகக் குறைவு, சாதாரணமான தொகை. அந்தத் தொகையை அதிகமாக்கி வட்டியையும் அதிகமாக்கி நெசவாளர்களுக்குத் தரவேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

இதைச் சொல்கிற நேரத்திலே, இன்றைக்கு கூட்டுறவுத் துறையிலே கோடிக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள கைத் தறி துணிகள் தேக்கமாக இருக்கின்றது, அதற்காக கூட்டுறவுத் துறையிலே விற்பனை நிலையங்களை ஆரம்பிக்கப் போவதாகச் சொல்லப்படுகிறது, அப்படி ஆரம்பிக்கப்படுகிறபோது வெளி மாநிலங்களிலேயும், வெளி நாடுகளிலேயும் விற்பனை செய்யும் அளவில் இந்த அரசு முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

செயற்கைப் பட்டுநூல் வட்டாரக் குழுவிற்கு மத்திய அரசி லிருந்து மாநில அரசுக்கு ஒரு இடம் தரவேண்டுமென்று கோரப் பட்டிருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். இந்த மாநில வட்டாரக் குழுவிலே மிகப் பெரிய ஊழல் நடைபெற்ற ஒரு சில முதலாளி கள் பம்பாயிலிருந்து கொண்டு பல்வேறு ஊழல்களைச் செய்கிற நிலைமைகளை நிறுத்திவிட்டால் இந்த செயற்கை பட்டு நூல் உற்பத்தி அதிகமாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஆகஸ்ட் 17] [திரு. எஸ். ஆர். இராதா]

சரிகை உற்பத்தி செய்வதற்கு காஞ்சிபுரத்திலே ஒருநிலையத்தை ஆரம்பித்தார்கள். ஆனால் அங்கே உற்பத்தி மிகமிகக் குறைவாக இருக்கிறது. 8 ஆயிரம் சரிகை மார்க் தான் உற்பத்தி செய்யப்படுகிறது என்ற நிலைமையை மாற்றி, தமிழ் நாட்டின் தேவைக்கு ஏற்றபடி அந்த உற்பத்தியை அதிகப்படுத்தினால்தான் குஜராத்தை நம்பி அந்த வகையிலே வாழ்கிறோம் என்ற நிலைமையை மாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறிக்குத் தேவையான சாமான்களை உற்பத்தி செய்கிற நேரத்திலே விசைத்தறிகளுடைய நிலைமையினால் கைத்தறிக்குப் பாதகம் ஏற்படுகிறது. 12,500 விசைத்தறிகள் மத்திய அரசின் அனுமதியோடு புகுத்துவதற்கு இன்றைக்குத் திட்டம் இருக்கிறது. மத்திய அரசு இந்த விசைத்தறிகளுக்கு இருந்த எக்சைஸ் வரியை நீக்கிவிட்டார்கள். அப்படி நீக்கிவிட்ட காரணத்தாலே கைத்தறி தொழில் எந்த அளவிற்குப் பாதிக்கப்படுகிறது என்பதை உணர்ந்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்றைக்கு விசைத்தறிகளுக்கும், பஞ்சாலைகளுக்கும் சில ரகத் துணிகளை ஒதுக்கிவிட்டு கைத்தறிக்கு என்று சில துணிகளை ஒதுக்கிவிட்டிருக்கிற நேரத்தில் விசைத்தறிகள் கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகத் துணிகளையும் உற்பத்திசெய்கிற நிலைமையை அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். நூல், செயற்கை பட்டு நூல், இவைகளின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நிதி நிலை அறிக்கையிலே சாய பவுடருக்கு வரியைப் போட்டிருக்கிறார்கள். அதனால் கைத்தறி துணி வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அந்த வரியை நீக்கவேண்டும், அப்படிச் செய்யாவிட்டால் நூலின் விலை ஏறி துணியின் விலையும் ஏறிவிடும். ஒருமுனை வரியை பலமுனை வரியாக்கி இருப்பதாலே இந்த மாநிலத்திலே சாயப் பவுடரின் விலை அதிகமாகி அதன் காரணமாக வெளியூரிலேயும் மற்ற மாநிலங்களிலேயும் 4% கொடுத்து நெசவாளர்கள் வாங்கக்கூடிய நிலைமை ஏற்படும். சாயப்பவுடருக்கு உள்ள வரியை நீக்காவிட்டால் துணியின் விலையும் ஏறும்.

நெசவாளர்களுக்கு வீடுகட்டுவதற்கான திட்டமும் இருக்கிறது. நெசவாளர்கள் வீடு கட்டுவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

வீடு இல்லாமல் இன்றைக்கு நெசவாளிகள் அவதிப்படுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் எங்களுக்கு எந்தச் சட்டப் பாதுகாப்பும் இல்லை. குறைந்த பட்சக் கூலி நிர்ணயச் சட்டம் வருகிற நேரத்தில் அந்தச் சட்டம் வந்த பிறகு ஒன்று கூலி அதிகமாக இருக்கிறது இல்லாவிட்டால் சட்டம் அமலுக்கு வராத நிலை இருக்கிறது. அதை மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று

1977 ஆகஸ்ட் 17] [திரு. எஸ். ஆர். இராதா]

கேட்டுக்கொள்கிறேன். பணிக் கூட்டுறவுச் சங்கம் என்று ஆரம்பித்தார்கள். ஆனால் அது செயல்படாத நிலைமை இருக்கிறது. அதைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். சிவராமன் குழு என்று மத்திய அரசிலே அமைத்தார்கள், சந்தானம் பெயரில் ஒரு குழுவை மாநில அரசில் அமைத்தார்கள். இந்த இரண்டு குழுக்களும் அறிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த அறிக்கைகளை உடனடியாக நீங்கள் அமல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கூட்டுறவுத் துறையிலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேட்டுக்கொண்டு கேட்டுக் கொண்டு என்று சொல்கிறீர்களே தவிர முடிப்பதாகக் காணோமே.

திரு. எஸ். ஆர். இராதா: தலைவரவர்களே கூட்டுறவுத் துறையில் இன்றைக்கு நெசவாளர் சங்கங்களில் பல்வேறு ஊழல்கள் இருக்கின்றன. அதைக் களைவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கூட்டுறவுச் சங்கத்திலே பொதுநல நிதி இருக்கிறது. அந்த நிதியிலிருந்து அந்தக் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்றவர்கள் அந்தச் சங்கத்திலிருந்து ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பட்டது).

THIRU EAKAMBARA REDDY: Mr. Speaker, Sir, I rise to speak on Demand No. 26—Handlooms and Textiles. Next to Agriculture, the handloom industry is the largest cottage industry in the State and nearly one million people are employed in it. Four million people are depending on this industry for their livelihood. They produce about 500 million metres of cloth. As a whole in our country 2,200 million metres of handloom cloth is produced by the handloom industry and the production in our State is roughly one-fourth of the total production of our country. Such is the state of affairs in the handloom industry. At present the handloom weavers are put to much hardship and difficulty for their daily bread.

Now, I came to know that about 430 handloom weavers were arrested at Karur for picketing before the Central and State Government Offices to redress their grievances. Also prominent all party leaders were arrested in that connection. So, I request the Honourable Chief Minister and the Minister for Handlooms to kindly interfere in the matter immediately and enquire into their grievances and also see that they are redressed immediately.

So far as the handloom industry is concerned, the Intensive Handloom Development Projects started by the Central Government at Erode and Kancheepuram are able to cover only 5,000 looms each and this is very meagre. This scheme can very well be extended throughout the State so as to provide labour and some financial assistance also.

Also last year only 25,000 weavers who were outside the Co-operative fold were brought in to form new Weavers' Societies. In my view, the target of enrolling 30,000 weavers annually is very low and it should be enhanced to at least 50,000 every year to improve the Co-operative sector. Now individual weavers who are in the clutches of master weavers are suffering a lot and they are very much depressed and are hard-pressed for their daily bread. If they are brought into the co-operative fold, they could clear off their debts. So the Government have to come forward to sanction individual loans. Nationalised Banks such as Indian Bank and other Banks are not at all advancing individual loans. Only the District Central Co-operative Banks should be instructed to give loans not only for working capital but also individual loans so that they can clear off their previous debts and also activise the dormant societies. Also, the cost of yarn should be reduced so that their wages could be increased.

Under the Export-Oriented programme the handloom industry is exporting towels and ready-made garments to Great Britain, France and Australia and there is a good market there. We are getting foreign exchange to the tune of Rs. 2,000 millions every year. We should give encouragement to the weavers to produce such handloom goods by providing financial assistance so that they can produce goods to suit export markets. I request the Honourable Chief Minister and the Honourable Minister for Handlooms to kindly go into the matter deeply and see that the required financial assistance is sanctioned to the handloom weavers who are engaged in the production of export-oriented goods.

Then, the weavers who are very poor are suffering a lot for their essential commodities. Now the Government have come forward to open fair price shops in all revenue villages. I request the Honourable, Minister to kindly see that in villages where there are weavers centres fair price shops are located and these shops should supply essential commodities to them at all times. Especially at the time when they get wages, these shops should remain open so that they can purchase the essential commodities required by them for their daily consumption.

Now, the handloom industry is facing stiff competition from the textile industry and the synthetic industries. A rebate scheme and also a scheme to give loans to the Handloom Weavers' Co-operative Societies

to clear off their accumulated goods and make them self-sufficient should be sanctioned by the Government. Then only these societies will thrive. Now, I close my speech with thanks to the Honourable Speaker for having given me a chance to speak.

<u>திரு. அ. க. அரங்கநாதன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே! தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் கைத்தறி பஞ்சாலைபற்றி பேசுகின்ற வாய்ப்பு எனக்கு அளித்தமைக்கு இந்த மாமன்றத் தலைவருக்கு என்னுடைய நன்றிகலந்த வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குக் கைத்தறி நெசவாளர்களுடைய பிரச்னை தமிழகத்திலே மிகப் பயங்கரமான சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிறது. இன்றைக்கு நூலின் விலை ஏராளமாக ஏறி வருகின்றது. 60-ம் நெம்பர் நூல் ரூ. 80க்கு விற்றது. ஆனால் இப்பொழுது ரூ 140 க்கு விற்கிறது. இந்த நூலை வாங்கி கைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்கின்றபொழுது உற்பத்திச் செலவினங்கள் அதிகரிக்கின்றன. உற்பத்திச் செலவினங்கள் அதிகரிப்பதால் அவர்களால் செய்யப்படுகின்ற துணிகளுடைய விலை அதிகரிக்கிறது. விலை உயர்வு காரணமாகவும் வாங்குகிற மக்களிடத்திலே சக்தி இல்லாத காரணத்தாலும் கைத்தறி துணிகள் விற்பனையில் மிகப்பெரிய தேக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். குறிப்பாக நம்முடைய கூட்டுறவு சங்கங்களில் நாம் என்னதான் கன்ட்ரோல் விலையில் நூல் கொடுத்தாலும் ரூ. 140க்குக் குறைவாக கொடுக்கமுடியவில்லை. காரணம் பஞ்சாலைத் தொழிலிலே பஞ்சின் விலை உயர்ந்திருக்கிறது. அதனால் பஞ்சாலைகளுக்கே ஆபத்தான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் பஞ்சின் விலை உயர்ந்து அதன் விளைவாக நூலின் விலை உயர்ந்து இன்றைக்குக் கைத்தறி துணிகள் ஏராளமாகத் தேங்கி இருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இந்த நூலின் விலையைக் குறைக்க அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

1976-ல் பஞ்சு விலை உயர்வின் காரணமாக பஞ்சாலைத் தொழிலுக்கு ஏற்பட்ட அந்தச் சோதனையிலிருந்து மீள பருத்தியின் விலையைக் குறைத்தால்தான் நூலின் விலையைக் குறைக்க முடியும். ஆகவே மத்திய அரசோடு பேசி பஞ்சு உற்பத்தி செய்கிற மாநிலங்களிலிருந்து வாங்குகிற பஞ்சின் விலையைக் குறைக்க நம்முடைய மாநில அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே குறிப்பிடுகிறேன்.

குறிப்பாக இந்த ஆண்டு 119 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. 37,416 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக்கொள்ளப்பட்டு, துணிகள் ஏராளமாக

உற்பத்தி செய்யப்பட்டிருக்கின்றன. அப்படி ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டிருக்கிற காரணத்தால்தான் இன்றைக்கு மந்த நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒரு பக்கம் துணி விலை ஏறியிருக்கிறது. மற்றொரு பக்கம் கூட்டுறவு சங்கங்கள் ஏராளமாக துவக்கப்பட்டு ஏராளமான அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டு அதனாலே உற்பத்தி அதிகமாகியிருக்கிறது. உற்பத்தி அதிகமாகியிருக்கிற அளவுக்கு மக்களுடைய வாங்குகிற சக்தி இல்லை. கைத்தறி துணி விலை அதிகமாக இருக்கிறது. கைத்தறி துணி விலையைக் குறைத்தோமானால் கோடிக்கணக்கில் தேங்கிக் கிடக்கிற துணிகளை ஏழை பாட்டாளி மக்கள் வாங்கி அதன் மூலம் விற்பனை செய்ய முடியும் அதற்கான நிவாரணமும் கிடைக்கும்.

[பிற்பகல் 1.10]

ஆகவே, துணிவிலையைக் குறைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகைகளில் விற்கிறபோது ரிபேட் கொடுத்து வந்தார்கள். சென்ற 1975-76-லே பொங்கல், தீபாவளி பண்டிகைகளில் 39.98 கோடி ரூபாய்க்கு கைத்தறி விற்றிருக்கிறது. 1976-77-லே இதே பண்டிகைகளில் 16.60 கோடி ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 13.36 கோடி இந்த ஆண்டு கைத்தறி துணி விற்காமல் இருப்பதற்குக் காரணம் விலை உயர்வு தான். அதன் காரணமாக ஏழை மக்கள், கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை மிகப் பரிதாபகரமாக இருக்கிறது. இப்போதும் ஒவ்வொரு ஆண்டும் இதே நிலைமைதான். இருக்கிறது. ஆகவே இதைப் போக்குவதற்கு, குறிப்பாக நூற்பாலைகளில் பணிபுரியும், இந்த கைத்தறி சம்பந்தப்பட்ட தொழிலாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கொடுத்தால்தான் இந்தக் கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்களுடைய பிள்ளைகளை வேறு தொழிலுக்கு மாற்றுவதற்கும் ஏதுவாக இருக்கும். குறிப்பாக இன்றைக்கு கைத்தறி நெசவாளர் பிரச்சனையைப் பற்றி பேசுகிற ஒவ்வொரு அரசும் வாதாடுகின்றபோது, பாதுகாப்பு இல்லை என்று வாதாடுகின்றனர். எனவே கைத்தறி நெசவாளர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு இன்றைக்கு மேல் சபையிலே கைத்தறி நெசவாளர்களின் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. பீடி தொழிலாளர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டும் பிரச்சினை இருக்கிறது. பீடித் தொழிலாளர்களுக்கும் இந்த அரசு மேல் சபையிலே பிரதிநிதிகளை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய குறைகளைப் போக்க துன்பங்களைப் போக்குவதற்கு இந்த அரசு கவனம் செலுத்தவேண்டும்.

இந்த அரசு ஏற்பட்ட பிறகு மேலும் 119 சங்கங்களை துவக்கு வதாக இருக்கிறது என்பது நல்ல அறிகுறியாக இருக்கிறது. முன்னாலே 6 ஆயிரம் சங்கங்கள் தான் இருந்தன. புரட்சித் தலைவர் தலைமையிலே அமைந்திருக்கிற அனைத்திந்திய அண்ணா தி. மு. க. ஆட்சியிலே 25 ஆயிரம் சங்கங்கள் ஏற்படுத்துவதற் கான பல்வேறு திட்டங்களை அரசு இந்த மசோதாவில் வைத் திருப்பது உண்மையிலேயே பாராட்டுக்குரியதாகும். 1974-75-லே 6 ஆயிரம் சங்கங்கள், 1975-76-லே 6 ஆயிரம் சங்கங்கள் ஆனால் அனைத்திந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி ஏற்பட்ட பிறகு 25 ஆயிரம் சங்கங்கள் ஏற்படுத்தப்படுகிறது என்றால் உண் மையிலேயே நெசவாளர் பிரச்சனையிலே கவனம் செலுத்தி பல் வேறு திட்டங்களை, இந்த அரசு செயல்படுத்துகிறது என்பதை எடுத்துச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து பாராட்டி, நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூ னிஸ்ட் கட்சியின் சார்பில் இந்த மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை சொல்ல முன் வருகிறேன். 5 லட் சத்து 56 ஆயிரம் கைத்தறிக்காரர்களில் 1 லட்சத்து 80 ஆயிரம் பேர்களை கூட்டுறவு சங்கங்களில் சேர்த்துள்ளார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது மூன்றில் ஒரு பகுதி. பாக்கி இருக்கிற கைத்தறித் தொழிலாளர்களும், கைத்தறிக்காரர்களும் வெளியிலே இருக்கிறார்கள். இந்தத் தொழிலைப் பற்றி நீண்ட காலமாக ஏன் வெள்ளைக்காரன் காலத்திலே இருந்து நெருக் கடியைப்பற்றி இந்த சட்டமன்றத்திலும் பாராளுமன்றத் திலும் காலமெல்லாம் பேசப்பட்டும், பிரச்னை தீர்ந்தபாடில்லை. மேன்மேலும் தலைவலி போய் திருகு வலி வந்தமாதிரியாக இருக் கிறது. இதற்கு அடிப்படையான காரணம் நூல் விலைதான். எங்களைப் பொறுத்தவரையில் துணி உற்பத்தி செய்ய தேவைப் படும் மிக முக்கிய மூலப் பொருளான நூலின் விலையைக் குறைக் காமல் இந்தப் பிரச்சனைக்கு இறுதி முடிவு காண முடியாது.

நூல் விலையை குறைக்க வேண்டுமென்றால் பருத்தி உற்பத்தி பண்ணக்கூடிய விவசாயிகளுக்கு விலையைக் குறைத்தால் பிரச்சனை தீராது. விவசாயிகளுக்கு நியாய விலை கொடுக்க வேண்டும். இடையில் இருக்கும்படியான ஆட்கள், விவசாயிகளுக்கும் மில் முதலாளிகளுக்கும் இடையில் இருக்கும் இடைத்தரகர்கள் கொண்டுபோகும் லாபத்தைக் குறைப்பது தான் அதற்கு அடிப்படை வழி. இதைச் செய்ய வேண்டுமென்றால் நிச்சய மாக தமிழக அரசால் மட்டும் முடியாது. மத்திய அரசும் இதில் ஒரு பங்கு ஏற்பதற்கு முன் வரவேண்டும். ஒரு நூற்றாண் டுக்கு மேலாக பழக்கத்திலுள்ள இந்திய பஞ்சாலை தொழிலை தேசியமயமாக்காமல், சமுதாயத்தில் மக்களின் துணித் தேவை களைப் பூர்த்தி செய்யக்கூடிய ஜீவ சக்தி இத்துறைக்கு தனியார் துறையால் கொடுக்க முடியும் என்று நம்ப முடியாது. இடை

யில் இருக்கிற நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க எல்லாவிதமான முயசிற்களும் செய்யப்படுகின்றன. இதில் அரசு கவனம் செலுத்த வேண்டும். நூல் விலையைக் குறைக்க மில் முதலாளிகளின் லாபத்தை பெருமளவுக்கு குறைக்க வேண்டும். பஞ்சாலை முதலாளிகளுக்கும், சர்க்கரை மில் முதலாளிகளுக்கும் கொள்ளை லாபம் கிடைக்கிறது. அதைக் கருதி நூல் விலையைக் குறைக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். கூட்டுறவு தொழிலில் உள்ள கைத்தறி நெசவாளர்களை பாதுகாக்க முழு முயற்சி எடுக்க வேண்டும். அன்றைக்கு ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் கைத்தறி அமைச்சர் ரூ. 19 கோடிக்கு மேலான துணி தேங்கிக் கிடக்கிறது என்று குறிப்பிட்டார். உற்பத்தி செய்யப்பட்ட துணி ஏன் தேங்கிக் கிடக்கிறது. மக்களுக்கு தேவை இல்லாமல் இல்லை. வெளிநாட்டுக்கு துணி ஏற்றுமதி செய்வதை நம்பிப் பயன் இல்லை. அதை விட்டு நாட்டிலுள்ள 60 கோடி மக்களும் அந்தத் துணியை வாங்க வழியை உண்டாக்க வேண்டும். அடக்க விலை குறைக்கப்படவேண்டும். சாயப் பொருளுக்கு விலையைக் குறைப்பது, தறிகள் அமைப்பதற்கான செலவைக் குறைப்பது, நூல் விலையைக் குறைப்பது, இவ்வாறு அடக்க விலை குறைந்தால் விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் இந்தத் துணியை வாங்குவார்கள். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேுண்டும்.

மேற்கொண்டு பவர் லூம்களை அதிகப்படுத்துவதை அனுமதிக்கக் கூடாது. இதை அதிகப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை மில் முதலாளிகளிடமிருந்துதான் வந்தது. கைத்தறிகளால் மட்டும் பூராவும் நூலை ஜீரணம் செய்ய முடியாது பவர்லூம் வந்தால் தான் முடியும் என்று மத்திய சர்க்காரைப் பிடித்து பவர் லூம் அதிகமாகிவிட்டது. ஒரு பவர் லூம் வந்தால், அதனுல் 30 கைத்தறி ஒழிந்து விடும். கரூரில் ஒரு லட்சம் கைத்தறி நெசவாளர்கள் ஏன் போராடுகிறுர்கள். பவர் லூமின் ஆக்கிரமிப்பினுல்தான். இந்த அரங்கத்தில் புகுந்து கொள்கிறது. அதற்கு விட்டு வைத்திருக்கும்படியான நூலைக் கொண்டு பவர் லூமில் துணி தயார் செய்து கொடுக்கும்படியான நிலைமை இருக்கிறது. பவர்லூமுக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இப்போதுள்ள பவர் லூம்களை பாதுகாத்து இனிமேல் வராமல் தடுத்துக் கொள்ள வேண்டும். கூண்டிற்குள் சிக்கின எலி தான் தப்பித்துக் கொள்வதற்காக கூண்டையே தூக்கிக் கொண்டு போக வேண்டிய நிலைமைக்கு வந்தமாதிரி இது போய்க்கொண்டிருக்கிறது. கைத்தறிக்கு ஒதுக்கப்பட்ட ரகங்களை அவர்களே செய்ய வேண்டும். பவர் லூம்களை ஊடுருவவிடக் கூடாது. அதைக் கட்டுப்படுத்த வேண்டும். கரூர், கோவை மாவட்டங்களில் பவானி, சென்னிமலை போன்ற இடங்களில் மற்றும் தமிழகத்தில் கன்னியாகுமரி முதல் செங்கற்பட்டு மாவட்டம் வரை ஜமக்காளங்களும் நல்ல துணிகளும் உற்பத்தி செய்து விற்பனை செய்யக்கூடிய பிரம்மாண்டமான தொழில் இப்படி நெருக்கடிக்கு உள்ளாகாமல் இருக்க நடவடிக்கை தேவை. தேங்கி

இருக்கும் ஸ்டாக்கை மாநில அரசு மத்திய அரசு உதவியுடன் வாங்கி ஜனங்களுக்கு அதிக ரிபேட் கொடுத்து விற்பனை செய்ய, ஸ்டாக்கை லிக்குவிடேட் செய்ய அரசு முன் வரவேண்டும். இதிலுள்ள தொழிலாளர்களுக்கு சட்ட பாதுகாப்பு இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் இங்கே சொன்னுர்கள். அவர்களுக்கு சம்பளப் பட்டுவாடாச் சட்டம், மருத்துவ வசதி சட்டம், கிராச்சுவட்டி சட்டம், போன்ற எந்தச் சட்டமும் இந்தத் தொழிலாளர்களுக்கு கிடையாது. இவர்களுக்கு சட்ட பாதுகாப்பு கொடுப்பதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் குழுவின் அறிக்கையை துரிதப்படுத்தி முன்னுக்கு கொண்டு வந்து அவர்களுக்கு சட்ட பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவர்களுடைய பாரம்பரியத்தைப் பற்றி திரும்பத் திரும்ப பேசிப் பயன் இல்லை. அவர்களுக்கு சோறு கொடுக்க வேண்டும், வேலை கொடுக்க வேண்டும், அந்தக் கைத்தறி தொழிலுக்கு ஆவன செய்ய வேண்டும் என்று மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

அடுத்து மூடப்பட்டிருக்கிற பஞ்சாலைகள், இந்தப் பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதென்ருல் அவைகள் தேசியமயமாக்கப்பட வேண்டும். அதை இந்த அரசால் மட்டும் செய்துவிட முடியாது. அந்தப் பாதையில் செல்லவேண்டும் என்று மத்திய சர்க்காரை வற்புறுத்த வேண்டும். பஞ்சாலைகளை தேசியமயமாக்கினுல் கைத்தறி நெசவாளர்களுக்கு பாதி விலைக்கு நூல் கொடுக்க முடியும். கூட்டுறவு ஆலைகள் கூட கொடுக்காததை தேசியமயமாக்கப்பட்ட ஆலைகள் கொடுக்க முடியும். இன்றைக்கு நடக்கிற முறை என்ன? முதலாளிகளுக்கு நிதி பற்ருக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதை சரிசெய்து கொடுப்பதற்கு அரசு பொறுப்பேற்க வேுண்டியிருக்கிறது. அதற்காக சில பரிசீலனைகள் என்றளவில் நெருக்கடியைச் சமாளிக்கப் பார்க்கிறது.

<u>மாண்புமிகு. பேரவைத் தலைவர்:</u> இன்னும் பத்துப் பேர் இருக்கிறுர்கள். ஒரு நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

<u>திரு. கு. ரமணி:</u> இப்படி நிதி உதவி அளித்து நிலைமையை சமாளிக்க முடியாது என்று அரசுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மூடிய பஞ்சாலைகளை எல்லாம் தொழிலாளர்கள் எடுத்து நடத்துவது என்பதெல்லாம் முடியாத சங்கதி. இந்த முதலாளித்துவ முறையில், மார்க்கெட் காம்பெட்டிஷனில் எந்தத் தொழிற்சாலைகளையும் தொழிலாளிகள் எடுத்து நடத்த முடியாது. கடைசியில் தொழிலாளர்கள் தெருவில் நிற்க வேுண்டியது தான். நம் நாட்டின் பொருளாதாரத்தில் 95% அரசு பொருளாதாரமாக இல்லை. தனியார் துறையில் உள்ளது. அப்படி இருந்தால் பிரச்னை தீராது. எனவே மூடப்பட்ட

ஆலைகளை தொழிலாளர்கள் ஏற்று நடத்துவது என்று சொன்னால் இதைச் செய்ய முடியாது. பணம் மட்டும் முதலாளிகளுக்கு கொடுத்தாலும் தீராது. இடைக்கால ஏற்பாடாக மூடப்பட்ட பஞ்சாலைகளை மாநில அரசு எடுத்துக் கொள்வதற்கு மத்திய சர்க்காரை வற்புறுத்தி உதவி பெறுவதற்கு நாங்கள் ஒத்துழைக்கத் தயாராய் இருக்கிறோம். அந்த முறையில் உதவிகளைப் பெற்று பஞ்சாலைகளைத் திறக்க வேண்டும். அதன் மூலம் வேலை வாய்ப்புக் கொடுக்க வேண்டும். மேற்கொண்டும், இப்படி பஞ்சாலையை எடுத்துக்கொண்டு பணம் கொடுத்தால் மூடுவதற்கு அனுமதிக்கக்கூடாது. இந்த முறையில் மூடப்பட்ட பஞ்சாலைகள் பொறுத்தவரையில் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அடுத்தபடி கஷ்டப்படுகிற தொழிலாளர்களுக்கு உடனடியாக ரிலீப் கொடுக்க வேண்டும். ஆறு மாதம் ஒரு வருஷம் ஆகியும் சம்பாதித்த சம்பளம் கொடுக்கப்படவில்லை. சில மில்களில் இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, இந்தத் தொழிலுக்குள்ள நெருக்கடியைக் கணக்கில் எடுத்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 1.20]

*திரு. க. பாலாஜி: மபண்புமிகு பேரவைத்தலைவரவர்களே! நெசவாளர்களின் பிரச்னை ஒரு சிக்கல் விழுந்த நூல் பந்துக்கு ஒப்பாகும் அந்தச் சிக்கலில் நெசவாளர்கள் இன்றையதினம் இருட்டிலே ஆழ்ந்து கொண்டு இருக்கிறார்கள் அது அவிழ்க்கப்படவேண்டும். ஆனால் ...ல் அறுந்து விடாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிடுகிறார்கள். அண்ணா அவர்களின் கருத்துப்படி நெசவாளர்களின் வாழ்வில் இப்படிப்பட்ட பிரச்சனைகள் குறுக்கிடாதபடி ஆவன செய்து, நெசவாளர்களின் வாழ்வில் மறு மலர்ச்சி ஏற்படுத்த புரட்சித் தலைவரவர்கள் இதிலே நிச்சயம் ஈடுபடுவார் என்பதை இந்த நேரத்திலே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் நெசவாளர்கள் நூற்றுக்கு 50 மிகவும் மோசமான நிலையிலே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு நெசவாளியின் குடும்பத்தில் சிறியவர்களும், பெரியவர்களும் உழைத்தாலும் அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கிடைப்பதில்லை. எனவே இதைக் கருத்திலே கொண்டு நெசவாளர்களுக்குக் குறைந்த பட்சம் ரூ. 300 கிடைக்கின்ற வகையிலே சட்டத்தின் மூலம் குறைந்த பட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டும். இவர்களுக்கு வேலை நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மற்ற தொழிலாளர்களுக்குக் கிடைக்கின்ற சலுகைகள் வழங்கப்பட வேண்டும். விடுப்புச் சலுகை வழங்கப்பட வேண்டும். விடுப்பு ஊதியம் வழங்கப்பட வேண்டும். மருத்துவச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். நெசவாளர் குடும்பங்களுக்கு மருத்துவச் சலுகைகள் வழங்கப்பட வேண்டும். நெசவாளர்கள் வேலை செய்கிற இடங்களில்

அவர்கள் தொழில் செய்வதற்கு வேண்டிய வசதிகள் செய்து தரப்பட வேண்டும். மற்ற தொழிலாளர்களுக்குக் கிடைப்பது போன்ற பாதுகாப்பு, இன்ஷ்யூரன்ஸ் போன்ற சலுகைகள் நெசவாளர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இந்தச் சலுகைகளை தனிப்பட்ட முதலாளிகள் மட்டுமல்ல, நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் நல்ல முறையில் அமுல்படுத்த வேண்டும்.

அதோடு இதுவரையிலும் கூட்டுறவுச் சங்கங்களிலும், தனிப்பட்ட முதலாளிகளிடமும் நிரந்தரமாகத் தொழில் பெற முடியாமலும், கூட்டுறவுச் சங்கங்களில் சேராமலும், தற்காலிகமாக, பரவலாக பல்வேறு இடங்களில் நெசவாளர்கள் நிரந்தரமற்ற முறையில் தொழில் செய்கின்றார்கள். இப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தோ, அல்லது பெரிய அமைப்புகளை உருவாக்கியோ தொழிலில் நிரந்தரம் செய்யப்பட வேண்டும்.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டு வீடு கட்டும் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொள்வதற்குக் கடன்கள் வழங்கப்பட்டு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. கூட்டுறவு சங்கங்களின்கீழ் இல்லாத மற்ற நெசவாளர்களுக்கும் வீடு கட்டிக் கொள்வதற்கு வட்டி இல்லாக் கடன் வங்கிகளின் மூலம் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

இதேபோன்று நெசவாளர்களுக்கு என்று தனியாக கூட்டுறவு மாநில வங்கி ஒன்றையும், கைத்தறி மற்றும் துணி நூல் துறை உதவி இயக்குநர்கள் வட்டவாரியாக தனித்தனி கூட்டுறவு வங்கிகளும் ஏற்படுத்தவேண்டும். மேலும் மாநில வங்கிகளுக்கும் மற்ற வங்கிகளுக்கும் நெசவாளர்களுக்கு என்று நெசவுத் தொழில் செய்வதற்கு கடன் வழங்குவதற்கு ரிசர்வ் வங்கி, கூட்டுறவு மத்திய வங்கிகளுக்குச் செய்கின்ற முதலீட்டை மேற்படி வங்கிகளுக்கும் செய்து கொடுக்கவேண்டும். உதவி இயக்குநர் அலுவலகம் காஞ்சிபுரம் மற்றும் திருச்சி ஆகிய அலுவலங்கங்களில் விவகார எல்லை மிகப் பெரியதாக இருப்பதால் அந்த அலுவலகங்களை இரண்டாகப் பிரிக்க வேண்டும். உற்பத்தியான கைத்தறி துணிகளை தேக்கமின்றி உடனுக்குடன் விற்பனை செய்ய நல்ல டிசைன்களை உற்பத்தி செய்ய நெசவாளர்களுக்கு அவ்வப்போது பயிற்சிகள் கொடுக்க ஆவன செய்யவேண்டும். உற்பத்தி சரக்குகளை உடனுக்குடன் விற்க உள்நாட்டு விற்பனை வசதிகளைப் பெருக்குவதோடு வெளி நாட்டில் புது புது மார்க்கெட்டுகளை கண்டுபிடித்து ஏற்றுமதி செய்ய வழிவகை செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் நெசவுத் தொழிலை நம்பி ஐந்து லட்சத்து ஐம்பத்தாறாயிரம் குடும்பங்கள் இருக்கிறார்கள். சுமார் முப்பது லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். நமது அரசு நெசவுத் தொழிலுக்காக சென்ற காலத்தை விட அதிகத் தொகையை ஒதுக்கி பல திட்டங்களைச் செயல்

படுத்த முனைந்திருப்பது பாராட்டுக்குரியது. அந்தந் தொழிலுக்கு வேண்டிய கச்சாப் பொருட்களை இடைத்தரகர்கள் இன்றி நேரடியாக கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஒவ்வொரு நெசவுக் குடும்பத்திற்கும் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் பட்டு நெசவுத் தொழிலை நம்பி 28,000 தறிகள் இருக்கின்றன. அத்தறிகளுக்கு வேண்டிய கச்சாப்பொருளான கோராவின் மதிப்பு மாதத்திற்கு 84 லட்சம் ரூபாய். அதேபோன்று அந்தத் தொழிலுக்கு வேண்டிய சரிகைப் பொருள் 68 ஆயிரம் மார்க் தேவைப்படுகிறது. ஆகவே பட்டுத்தொழில் எங்கெங்கே அதிகமாக நடைபெறுகிறதோ அங்கெல்லாம் மார்கட்டிங் பெடரேஷன் ஏற்படுத்தி அதன் மூலம் நியாயமான விலைக்கு சீரான விநியோக முறையில் தொழிலை தொடர்ச்சியாக நடத்துவதற்கு மேலே சொன்ன இரு கச்சாப் பொருள்களையும் நெசவாளர்களின் தேவைக்கு குறைவின்றி தடையின்றி தொடர்ந்து வழங்க வழிவகை காண வேண்டும். காஞ்சிபுரத்தில் இருக்கின்ற சரிகை உற்பத்தி தொழிற்சாலையின் தற்காலிக உற்பத்தித்திறன் ஆண்டு ஒன்றுக்கு 8,500 மார்க் என்று நிர்ணயித்திருந்தும், தற்சமயம் உற்பத்தியின் திறன் 1,900 மார்க். ஆனால் ஒட்டுமொத்தமாகத் தேவைப்படுவது 68,000 மார்க். எனவே அறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த காஞ்சியிலே இருக்கிற இந்த சரிகை தொழிற்சாலையின் உற்பத்திதிறனை அதிகப்படுத்துவதோடு காஞ்சியில் இருக்கும் பட்டு நெசவாளர்களுக்கு தேவைப்படுகின்ற அளவிற்காவது சரிகை உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நமது அரசைக் கேட்டுக் கொள்கிறேன். காஞ்சியிலுள்ள நூற்பாலையின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதோடு செங்கை மாவட்ட நூல் கைத்தறி நெசவாளர்களின் உற்பத்திக்கு வேண்டிய நூல் ரகங்களை அவர்களின் தேவைக்கேற்ப உற்பத்தி செய்து வழங்க தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் அரசைக் கேட்டுக்கொள்கிறேன். பட்டுத் தறி நெசவாளர்களுக்கு கோரா வழங்குகிற நேரத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக வழங்கினால் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள் அல்லது நிர்வாகஸ்தர்கள் தவறு செய்வதைத் தவிர்க்கமுடியும். காஞ்சிபுரத்தில் பட்டு நூல் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக இருக்கின்றன. அங்கிருக்கிற தலைவர்கள் தவறு செய்வதற்கு உறுதுணையாக பங்களுருக்கு கோரா வாங்கச் செல்லும்போது 10%, 12% என்று பேரம் பேசி நெசவாளர்களின் கூலியில் அல்லது அவர்களது வருமானத்தில் கை வைக்கக்கூடிய நிலை இருக்கிறது. என்ற காரணத்தால் இவற்றையெல்லாம் புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் இயங்கக்கூடிய அரசு நல்லமுறையில் கண்காணித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.

(பிற்பகல் 1.30)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அவை நிகழ்ச்சிகள் பேரவையின் அனுமதியுடன் பிற்பகல் 1.30 மணிக்கு மேலும் நீட்டிக்கப்படுகிறது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, அவை முன் வைத்திருக்கின்ற மான்யக் கோரிக்கையின் மீது ஜனதா கட்சியின் சார்பாக சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கிராமத் தொழில் என்கின்ற மான்யத்திற்கு அரசு ஒதுக்கியிருக்கின்ற நிதி போதாது என்பதை முதற்கண் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கிராமத் தொழில் என்பது, கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியம் என்பதை நான் கூற வேண்டிய தேவையில்லை. இந்த அரசும் கிராம வளர்ச்சிக்காக முதல் கவனம் செலுத்தவிருக்கிறது என்று கூறிக்கொண்டிருக்கிறார்கள். அர்பன் எக்கானமியைவிட, ரூரல் எக்கானமி வளர வேண்டும் என்பதற்காக கிராமப் புறத்திலுள்ள கிராமத் தொழில்களுக்காக அதிக கவனம் செலுத்தியிருக்கவேண்டும். கிராமத் தொழில்தான் அண்ணல் காந்தி அடிகள் வகுத்து தந்த கதர் தொழில் அங்கீகரிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டு வந்தது. காரணம் மில் தொழிலுக்கு நாம் எந்த அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோமோ அதைவிட சற்றும் குறையாமல் நிச்சயமாக கிராமத் தொழில்களுக்கும் முக்கியத்துவம் கொடுப்போம் என்றால், நிச்சயமாக கிராம மக்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்பதோடு மட்டுமில்லாமல், கிராமப் பகுதிகளில் பொருளாதாரம் வளருவதற்கும் வாய்ப்பு இருக்கும். காரணம் இன்றைய தினம் கதர் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றவர்கள், இதன் மூலம் வருவாய் ஒரு ரூபாய் கிடைக்கிறது என்றால் அதில் 63 காசு தொழிலாளர்களுக்காக செலவிடப்படுகிறது என்று சொல்லப்படுகிறது. ஆகவே கதர் தொழில் சம்பந்தப்பட்ட வரை தொழிலாளர்களுக்காகவே இருக்கின்ற தொழில் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆகவே மேலும் இப்போது எல்லா கதர் துணிகளின் விலை அதிகமாக அதிகரித்திருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இருந்தாலும் அதிகமான ஜனங்கள் கதரை உபயோகிப்பதற்கு வசதியாக இதன் விலையை சற்றுக் குறைவாக குறைத்து கொடுத்தால், அதிகமான ஜனங்கள் இதை வாங்குவதற்கு வாய்ப்பு அளிக்கின்ற வகையில் இதைச் செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் கதருக்கு ஆதரவு அளிக்கின்ற வகையில் ஆளுகின்ற கட்சியிலுள்ளவர்களும் அமைச்சர்களும் இனிமேல் கதர் துணிகளை அணிய வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அப்படி அணிந்தால்தான் மற்றவர்களுக்கும் அது ஒரு முன்மாதிரியாக இருக்கும்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1977 ஆகஸ்ட் 17

அடுத்து, கைத்தறித் தொழிலைப் பற்றி இன்றைய தினம் ஏறக்குறைய 20 லட்சத்திற்கும் அதிகமான தொழிலாளர்கள் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களின் நிலையை நாம் ஆராய்ந்து பார்ப்போமேயானால் மற்ற பட்டணங்களில் இருக்கின்ற தொழிலாளர்களைவிட அதாவது ஆர்கனைஸ்டு லேபர் என்று சொல்லக்கூடியவர்களைவிட, பொருளாதாரத்தில் குன்றி, நசித்து, நலிந்து இருக்கிறார்கள் என்பதை இந்த அறிக்கையிலேயே நாம் பார்க்கிறோம். அவர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், மற்றும் பல்வேறு உரிமைகள் பாதுகாப்பு இவை எதுவுமேயில்லாத அளவில், அவர்களுக்கென்று எந்த சட்டமும் இல்லை, பாதுகாப்பும் இல்லை, இதன் காரணமாக நூல் விலையும் அதிகமாக இருக்கிறது. நெசவாளர்களுக்கு நெசவு செய்வதற்கு நியாயமான விலையில் நூல் கிடைக்காத காரணத்தால் உற்பத்தியாகின்ற துணிகள் எல்லாம் தேங்கிக் கிடக்கக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் நெசவுத் தொழில் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கைத்தறி துணி விற்பனையை எடுத்துக்கொண்டால், விற்பனை குறைந்திருக்கிறது. 1975-76-ல் 29.8 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகியிருக்கிறது என்றால், 1976-77-ல் 16.6 கோடி ரூபாய் அளவுக்குத்தான் விற்பனையாகியிருக்கிறது. எந்த அளவுக்கு நெசவுத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் இன்றைக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலமாக நெசவாளர்களுக்கு நூல் கொடுக்கின்றார்கள். கூட்டுறவு சங்கங்களில் இல்லாத நெசவாளர்களின் நிலைமை மோசமாக இருக்கிறது. ஆகவே எல்லா நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கங்களில் இணைத்து, நெசவு தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் நூல் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய தொகுதியாகிய அருப்புக்கோட்டைத் தொகுதியில் நெசவுத் தொழிலிலே ஈடுபட்டிருக்கும் ஏறக்குறைய 20,000 தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக, முதல் அமைச்சர் அவர்களுக்கு ஒரு மனுவை அனுப்பிவிட்டு, அதன் நகல்களை எல்லாக் கட்சித் தலைவர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதோடு தந்திகளும் வந்தவண்ணம் இருக்கின்றன. இப்போது முதல் அமைச்சர் அவர்களும் சபையிலே இருக்கிறார்கள். ஆகவே, நான் தலைவராகிய உங்கள் மூலம் கேட்டுக்கொள்கிறேன். அந்தத் தொகுதியிலுள்ள நெசவாள மக்களின் நிலைமையை தயவு செய்து நன்கு பரிசீலிக்க வேண்டும். அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அதேபோல் இன்றையத் தினம் கரூரிலே 400, 500 நெசவுத் தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் சிறையிலே வாடுகிறார்கள். அவர்கள் தங்கள் கோரிக்கையை அரசாங்கத்

1977 ஆகஸ்ட் 17] [திரு. ஜே. ஜேம்ஸ்]

திற்கு வைத்து, அதற்கான போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இன்றையத் தினம் அவர்களுடைய பிரச்னை, வாங்கிய கடனை அவர்களால் திருப்பிக் கொடுக்க வழியில்லாமல் இருக்கிறார்கள் என்பது. இந்தக் கடன்களை அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்தும், பைனான்ஸ் கார்ப்பரேஷன் மூலமாகவும் வாங்கியிருக்கிறார்கள். அப்படி வாங்கிய கடனை திருப்பி செலுத்த வழியில்லாத நிலைமையில், சூழ்நிலையில் அவர்கள் வீடுகளிலுள்ள ஜங்கம சொத்துக்களையெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் ஜப்தி செய்யக்கூடிய ஒரு நிலையிருக்கிறது. ஆகவே, அவர்கள் பெற்ற கடனை வசூலிக்காமல் திரும்பப் பெறவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். உடனே அரசாங்கம் அவர்களின் நிலையை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக கிராமங்களில் எல்லாம் பனை வெல்லம் உற்பத்தி செய்யக்கூடிய தொழில் ஒரு முக்கியமான தொழிலாக இருக்கிறது. அதற்கு அரசு இன்னும் கூடுதலான ஊக்கம் அளிக்கவேண்டும். இன்றைய தினம் அதற்காக இருந்த பெடரேஷன் கலைக்கப்பட்டு, தனி அதிகாரியின் நிர்வாகத்தின்கீழ் இருக்கிறது. அதை மாற்றி, விரைவிலே தேர்தல் முறையில் அந்த பெடரேஷன் அமைக்கப்பட்டு, ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களின் வழியாகவும் இந்த பனைவெல்ல தொழிலாளர்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் ஓராயிரம் ரூபாய் கடனாக வழங்கப்பட வேண்டும் என்றும், அப்போதுதான் உற்பத்தி அதிகமாகும் என்று சொல்லிக்கொண்டு இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

(8) அறிக்கை அளித்தல்.

பாடி தொழில் நிறுவனங்கள் தகராறு குறித்து அவை முன்னவர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 82-வது விதியின்கீழ் அவையின் முன்னவர் அவர்கள் இப்போது இந்தச் சபையிலே ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கின்றார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, பாடி தொழிற்பேட்டைப் பகுதிகளில் டி.வி.எஸ். நிறுவனங்களான சுந்தரம் கிளேடன், பிரேக்ஸ் இந்தியா, லூகாஸ் ஆகிய தொழிற்சாலைகளில் ஐ.என்.டி.யூ.சி. தொழிற் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கும், சி.ஐ.டி.யூ. சங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும், இடையே ஏற்பட்ட பூசல்களின் காரணமாகவும், நிர்வாகத்தினருக்கும் சி.ஐ.டி.யூ. சங்கத்தினருக்கும் இடையே ஏற்பட்ட தொழில் தகராறாலும், அப்பகுதிகளில் அமைதியின்மையும் வன்முறைச் செயல்களும் தலைதூக்கின. மூன்று தொழிற்சாலைகளும் மூடப்பட்டன.

[திரு. கி. மனோகரன்] [1977 ஆகஸ்ட் 17

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடனும், நிர்வாகப் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தியதன் பயனாக தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்தினருக்கும் இடையே இருந்த தொழிற் தகராறுகள் தீர்க்கப்படும் வண்ணம் உடன்பாடுகள் ஏற்பட்டன. அதன் அடிப்படையில் 17-8-1977 அன்று சுந்தரம் கிளேடன் நிறுவனமும், 19ஆம் தேதியன்று பிரேக்ஸ் இந்தியா நிறுவனமும், 19 அல்லது 22ஆம் தேதியன்று லூகாஸ் நிறுவனமும் திறக்கப்பட வேண்டும் எனும் உடன்பாடு ஏற்பட்டது.

ஆனால் இத்தகைய சுமுக உடன்பாடுகள் ஏற்பட்ட பிறகு பாடி தொழிற்பேட்டை பகுதிகளிலும், குறிப்பாக இந்த மூன்று தொழிற்சாலைப் பகுதிகளிலும் மாறுப்பட்ட தொழிற்சங்கங்களின் இடையே பூசல்கள் ஏற்படும் சூழல் உருவானது. நல்லதொரு உடன்பாடு தொழிலாளர்களுக்கும் நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்பட்டு, தொழிற்சாலைகள் திறக்கப்படும் தருவாயில் ஐ.என்.டி.யூ.சி. தொழிற் சங்கங்கத்திற்கும் சி.ஐ.டி.யூ. தொழிற் சங்கத்திற்கும் இடையே ஏற்படும் பூசல்கள் வன்முறையை வளர்த்து, மீண்டும் அமைதியின்மையை ஏற்படுத்தினால் தொழிலாளர் நலனும் தொழில் அமைதியும் பாதிக்கப்படும் எனக் கருதப்பட்டதால், பாடி பகுதிக்கு மட்டும் 144 தடையுத்தரவு போடப்பட்டது.

ஆனாலும் வேதனை தரும் வகையில் இன்று 7-15 மணிக்கு சுந்தரம் கிளேடன் தொழிற்சாலை திறக்கப்பட்ட பின் சி.ஐ.டி.யூ. தொழிற்சங்கத்தைச் சார்ந்த திரு. சிந்தன் அவர்கள் 144 தடையுத்தரவை மீறி சி.ஐ.டி.யூ. தொழிலாளர்களும், அவர்களின் ஆதரவாளர்களும் ஆக சுமார் 600 பேர் கலந்த கூட்டத்தைக் கூட்டி, உரை நிகழ்த்தியுள்ளார். அரசின் தரப்பிலும் காவல் துறையினரும் 144 தடையுத்தரவு அமுலில் உள்ளது பற்றியும், திரு. சிந்தன் அவர்களின் சி. ஐ.டி.யூ. சங்கத்தைப் போலவே மற்ற தொழிற் சங்கங்களும் செயல்படின், எப்படிப்பட்ட பயங்கர நிலைமை ஏற்பட்டு, அமைதி கெட்டு, அதனால் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டும் என்பதையும் எவ்வளவோ எடுத்துக் கூறியும், திரு. சிந்தன் அவர்கள் தடையை மீறி உள்ளார். பல உயிர்களை காக்க வேண்டிய நிலையில் சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் காவல் துறையினருக்கு ஏற்படும்போது பொது மக்களின் அன்றாட வாழ்க்கை சீராக நடைபெற இடப்படும் 144 போன்ற தடைகளை மீறுவது பொது மக்களின் அமைதியான வாழ்க்கை முறையை வேண்டுமென்றே சீர்குலைக்க முயற்சிக்கும் செயல் என்றுதான் இம்மாமன்றத்தில் உள்ள அனைவரும் கருதுவீர்கள்.

1977 ஆகஸ்ட் 17] [திரு. கி. மனோகரன்]

[பிற்பகல் 1-40]

144 தடையுத்தரவினை மீறி தொழிலாளர் நலனுக்கும் தொழில் அமைதிக்கும் பங்கம் ஏற்படும் வண்ணம் நடந்து கொள்வது விரும்பத்தக்கதல்ல.

பாடிப் பகுதியில் தொழிலாளர்கள் நலன் காக்கவும், தொழில் அமைதி காணவும் கண்டுள்ள உடன்பாடுகள் செயல்படுத்த வேண்டுமென்பதில் அரசு ஆவலுடன் உள்ளது.

ஒழுங்கு முறைகளைப் பேண வன்முறைகளைத் தடுக்க அதன் மூலம் தொழிலாளர்களின் நலன், தொழில் அமைதி காக்க, இந்த அரசு, கண்டிப்பாக சட்டப்பூர்வமான முறையில் நிச்சயம் நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். சட்டத்திற்கு மரியாதை தருவதும் பொதுமக்களுக்குத் தொல்லைகள் ஏற்படாமல் நடந்து கொள்வதும் குடிமகனின் கடமை. சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல் அரசின் தலையாய கடமை ஆகும். தனிப்பட்டவர்களின் சொத்துக்களுக்கும் உயிருக்கும் பாதுகாப்பு தருவதும் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசின் நீங்காத பொறுப்பாகும்.

பாடிப் பிரச்னையில் தொழிலாளர்களுக்காக இந்த அரசு எந்த அளவு ஒத்துழைத்தது என்பதையும், இந்த சுமுகமான உடன்பாடு ஏற்படுவதற்கு, இருதரப்பிற்கும் மனக் குறைவின்றி எத்தகைய முடிவு ஏற்பட அரசு உழைத்தது என்பதும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் தெரிந்த உண்மையாகும். இருப்பினும் சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க வேண்டிய பொறுப்பை ஏற்றுக்கொண்ட அரசு என்ற வகையில் சட்டத்தை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பதைத் தவிர இந்த அரசிற்கு வேறு வழி இல்லை என்ற நிர்பந்தத்திற்கு திரு. சிந்தன் அவர்களும் அவரின் நண்பர்களும் கட்டாயப்படுத்தியுள்ளனர்.

ஆகவே, வேறு வழியின்றி பாடியில் 144 தடையை மீறியோர் மீது இந்த அரசு வழக்குப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டது என்பதை இந்த அவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் ஒரு தகவலையும் அவைக்குத் தெரிவிக்க விழைகிறேன். ஏழை விவசாயிகளை வரி கொடுக்க வேண்டாமென்று மேடையில் பேசி தூண்டிவிட்டவர்கள் மீது, ''அரசிற்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்கள்'' அதாவது ''Offences against the State'' எனக் கருதி சட்டப்படி சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க இவ்வரசு தக்க நடவடிக்கைகளை எடுக்கும் என்பதையும் அவைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிவுற்று மீண்டும் மாலை 4 மணி அளவில் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1 43 மணி அளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

[மாலை 4-00]

பேரவை மீண்டும் மாலை 4 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனுஆதி அவர்கள் தலைமையில் கூடியது.

***திரு. செ. சிவசாமி :** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். கைத்தறிப்பற்றி இன்றைக்கு மிக முக்கியமான பிரச்னைகளை நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையிலே 20 லட்சம் மக்கள் கைத்தறியை நம்பி வாழ்கிறார்கள். விவசாயத்திற்கு அடுத்தபடியாக கைத்தறிதான் மிக முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே மேலும் 30 ஆயிரம் மக்களை கூட்டுறவில் கொண்டுவருவதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது வரவேற்க வேண்டிய அம்சம். அது மட்டுமல்ல, கைத்தறித் துணிகளை கொள்முதல் செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் நிதி உத்வி செய்வதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் பரமக்குடி போன்ற முக்கியமான இடங்களிலே கிட்டத்தட்ட 40 லட்சம் ரூபாய்க்கு கைத்தறி துணி தேங்கிக் கிடக்கிறது என்று பல தடவைகள் இங்கே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இன்றைக்கும் அதிலே ஒரு பகுதி மட்டும்தான் வாங்கப்பட்டிருக்கிறது. 40 லட்சம் ரூபாய்க்கும் கைத்தறி துணியை முழுவதுமாக வாங்க வேண்டுமென்று வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். கைத்தறித் துணிகள் முழுவதையும் வாங்காமல் பகுதி பகுதியாக வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. மொத்தத்திலே தமிழ் நாட்டிலே 25 கோடி ரூபாய்க்கும் அதிகமான அளவிற்கு தேக்கம் ஏற்பட்டு இருப்பதன் காரணமாக இந்தத் தொழிலே நசிந்துவிடக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதையும் கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். அது மட்டுமல்ல, கரூர் போன்ற இடங்களிலே மிகப் பெரிய போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. அதிலே 436 பேர்கள் மறியல் செய்து கைதாகி இருக்கிறார்கள். இன்றைக்கு 700 பேர்களுக்கு மேல் தலைமை போஸ்ட் ஆபீஸிலே மறியல் செய்திருக்கிறார்கள். நாளைய தினம் அவர்கள் சட்ட சபைக்கு வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அளவிலே தமிழ்நாடு முழுவதும் கைத்தறித் தொழில் சம்பந்தப்பட்ட எத்தனை தொழிலாளர்கள் மிகப் பெரிய போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதில் அரசாங்கம் உன்னிப்பாகக் கவனம் செலுத்தி மேலும் தமிழகம் முழுவதும் பரவாத அளவிற்கு அவர்களது குறைகளைக் கேட்டறிந்து ஆவன செய்யும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஆளுங்கட்சி நண்பர் ஒருவர் பேசும்பொழுது குறிப்பிட்டார். மில்லிலே உற்பத்தியாகும் துணி விலையைக் குறைக்க வேண்டுமென்றால் பஞ்சு விலையைக் குறைக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். பஞ்சு விலையைக் குறைப்பது என்பது விவசாயிகளின் வயிற்றில் அடிக்கும் கொள்கையாகும். ஆகவே, பஞ்சு விலையைக் குறைப்பதற்குப் பதிலாக, அதிலிருந்து உற்பத்தியாகும் நூலின் விலையைக் குறைக்க வேண்டும். இன்றைக்கு பஞ்சு விலையைக் காட்டிலும் அது மில்லுக்குச் சென்று வெளியே வரும்பொழுது 3 பங்கு, 4 பங்குக்கு மேல் விலை அதிகரித்திருக்கிறது. இலாபம் முழுவதையும் ஒரு சில முதலாளிகள் கொள்ளையடித்துக்கொண்டு இருக்கிறார்களே தவிர அந்த நெசவாளிகள் முன்னுக்கு வரவில்லை என்று பணிவோடு சொல்லிக்கொண்டு பஞ்சு விலையைக் குறைக்க வேண்டுமென்ற கொள்கையைக் கைவிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இப்படியாக தேங்கிக் கிடக்கும் கைத்தறி துணிகளைக் கொள்முதல் செய்வதற்கான சில ஆலோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். பரமக்குடி போன்ற இடங்களில் துணி தேங்கியிருப்பதால் அங்கே தொழில் நசித்துக்கொண்டு வருகிறது. எனவே சொசைட்டிகள் மூலம் இந்தக் கைத்தறித் துணியை வாங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். சுமாராக மெம்பர் ஒருவருக்கு 100 ரூபாய் கைத்தறித் துணி வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்பட்டால் சொசைட்டிகளில் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் ரூபாய்க்கு வாங்கும் அளவிற்கு லோன் வழங்க ஏற்பாடு செய்தால் நிச்சயமாகப் பல கோடி ரூபாய்க்குத் தேங்காத அளவிற்குக் கைத்தறித்துணிகளை வாங்குவதற்கு ஏற்பாடு செய்ய முடியும். பொதுவாக சொசைட்டிகளில் சராசரி 1,000 பேர் மெம்பர்களாக இருக்கிறார்கள். 100 ரூபாய் அளவிலே வாங்குவதற்கு லோன் கொடுத்தால் 1 இலட்சம் ரூபாய்க்கு சர்வசாதாரணமாக ஒரு சொசைட்டிக்குக் கடன் கொடுக்கும் அளவிற்கு வரும். தமிழ்நாட்டில் ஏறத்தாழ 4,600 சொசைட்டிகள் இருக்கின்றன. அவைகளை இன்றைக்கு ஒவ்வொரு சொசைட்டியாக வாங்குவதற்கு வசதி ஏற்படுத்திக் கொடுத்தால் கிட்டத்தட்ட 4 கோடி ரூபாய்க்கு மேல் வாங்கும் நிலை ஏற்படும். அதன் விளைவாகத் துணிகள் தேங்குவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படாத அளவிற்குச் செய்ய முடியும்.

இன்றைக்குக் கைத்தறித் துணிகளை சொசைட்டிகள் மூலம் வியாபாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இன்றைக்கு மில் துணிகளை சொசைட்டிகள் மூலம் விற்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல கைத்தறித் துணிகளுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதனால் துணிகள் தேங்கிக் கிடக்கும் சந்தர்ப்பம் இல்லாத அளவிற்குச் செய்ய முடியும்.

சந்தானம் கமிட்டி போன்ற கமிட்டிகள் கூறிய ஆலோசனை கள் தமிழ்நாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அவை களை அமல் படுத்த வேண்டும்.

கொள்முதல் செய்யாத சொசைட்டிகள் பாதிக்கப்பட் டிருக்கின்றன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சொசைட்டிகள் கொள்முதல் செய்யாததால் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அதில் தேங்கியிருக்கும் துணிகள் அனைத்தையும் வாங்க வேண்டும்.

நூல் விலை ஏறியிருக்கிறது. அதைக் குறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

நூல் குறைந்த விலைக்கு தேவையான அளவிற்குக் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும். நூல் விநியோகிப்பதில் கார்டு முறையைக் கொண்டுவர வேண்டும். அதன்மூலம் சர்வ சாதாரணமாக மெம்பர்களுக்கு நூல்கள் நல்லபடியாகக் கிடைக்க சந்தர்ப்பம் உண்டாக்க வேண்டும்.

உற்பத்தியாவதில் 25 சதவிகிதத்திற்குத்தான் கடன் கிடைக்கிறது. அதை 50 சதவிகிதமாக உயர்த்த வேண்டும்.

மாஸ்டர் வீவர்ஸ் நூலை வாங்கிக் கொண்டு விசைத்தறி களுக்குக் கொடுத்து அதன்மூலமாகக் கொள்ளையடிக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். அந்த நூலை நம்பிக் கொண்டிருக்கும் மக்களுக்கு அந்த நூலைக் கொடுப்பதற்கு உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்களுக்குக் கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யாததால் பல கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். ஓரிடத்திலிருப்பவர்களுக்கு ஒரு கூலியும், வேறோர் இடத்தி லிருப்பவர்களுக்கு மற்றொரு கூலியும் என்று பெற்றுக் கொண் டிருக்கின்ற சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, தமிழ்நாடு முழுவதற்கும் ஒரே கூலி என்ற அளவிற்கு நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெசவாளர்கள் வீடு கட்டிக் கொள்வதற்கு நீண்ட காலக் கடன்களைக் கொடுக்க வேண்டும். அதன்மூலமாக நீண்ட காலத் தவணைகளிலே சொந்தமாக வீடுகளைக் கட்டிக்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை உண்டாக்க முடியும்.

அதுமட்டுமல்லாமல் ரிபேட்டை 6 மாதம், 7 மாதத்திற்கு ஒருமுறை என்று கொடுக்கிறார்கள். அதைமாற்றி இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை ரிபேட் என்று செய்ய வேண்டும்.

காசுக்கடன் 10 சதவிகிதம் கொடுக்கப்படுவதை 25 சத விகிதமாக ஆக்க வேண்டும்.

மில்லிலே உற்பத்தியாகும் நூலில் சகாய விலைக்கு சொசைட் டிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி அந்த அள விற்குச் சட்டங்கள் நிர்மாணிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4–10]

கைத்தறி நெசவு செய்யும்போது, அங்கு விபத்துக்கள், ஆபத்துக்கள், தீ படுதல் போன்ற சம்பவங்கள் ஏற்படக்கூடிய நேரத்திலே, அவர்களுக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டால், மீனவர்களுக்குக் கொடுப்பதைப் போல் ஓரளவு உதவித் தொகை கொடுக்கும்படியாகவும் கேட்டுக்கொள்கிறேன். தவிர, கைத்தறி சொசைட்டி தீவிர வளர்ச்சி திட்டத்திலே பரமக்குடி போன்ற இடங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்றைக்குப் புதிதாக ரூ. 3½ இலட்சம் செலவில் அங்கு ஒரு இன்டஸ்டிரியல் சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டிருக் கிறது. கடந்த 6 மாதங்களாகப் பல வேலைகளைச் செய்வதாகச் சொல்கிறார்கள். இன்று வரைக்கும் வேலை நடப்பதாகத் தெரிய வில்லை. சாங்க்ஷனாகியுள்ளது. ஆனால், அந்த சொசைட்டி இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. ஆகவே, அந்தத் திட்டத்தை உடனே எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவரவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

<u>திரு. வீ. அர்சுனன்</u> : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர் களே, இங்கே கைத்தறி மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களை கூறுகிறேன். கூட்டுறவு சங்க நிதிநிலை மோசமாக இருக்கிறது. உரிய இலாபம் கிடைப்பதில்லை. எனவே 6 சதவிகிதம், 7 சதவிகிதம், 9 சதவிகிதம் இலாபம் வைக்க வேண்டும் என்பதை மாற்றி, 12 சதவிகிதமாக வைக்கவேண்டும். இல்லை எனில், அரசு வங்கிகள் தரும் கடன் வட்டியைக் குறைக்கவேண்டும். மத்திய கூட்டுறவு வங்கி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கடன் தரும் வீதத்தை உயர்த்த வேண்டும். நூல் விலை,

பட்டு விலை, ஜரிகை விலை, இந்த விலை ஏற்றத்தைக் கணக்கில் கொண்டு வங்கியின் கடனை உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப் படுகிறது. மற்றும் மாவட்டவாரியாக, கைத்தறி நெசவாளர்கள் அங்கங்கே நசுக்கப்பட்டு வருகிறார்கள். செங்கற்பட்டு மாவட்டத்திலும், வட ஆற்காடு மாவட்டத்திலும், சின்னாளப்பட்டி, குடியாத்தம் போன்ற பகுதிகளிலும் நெசவுத் தொழிலாளர்கள் அதிகம் இருக்கிறார்கள். ஆரணியைப் பொறுத்தமட்டில், அங்கே கைத்தறி நெசவாளர்கள் தனியாரிடத்தில் தொழில் செய்பவர்கள் கூலிக் குறைவைக் கண்டித்து ஒரு மகஜர் கொடுத்திருக்கிறார்கள். ஒரு முட்டா தறி நெய்ய ஆரணியில் ரூ. 90 கொடுக்கிறார்கள். காஞ்சிபுரத்திலே ரூ. 125 கொடுக்கிறார்கள். காஞ்சிபுரத்திலே ரூ. 125 கொடுக்கிறார்களே, ஆரணியில் ஏன் கொடுக்கக்கூடாது என்று கண்டனத் தீர்மானம் போட்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுத்து, கைத்தறி நெசவாளர்களுக்குக் கூலி உயர்வு தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

திருவள்ளூர் சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டு ஓராண்டுக் காலம் ஆகிறது. ஆரம்பித்த நேரத்தில் 11 தறிகள்தான் இயங்கின. இப்பொழுது ஓராண்டுக்குள் ஏறத்தாழ 120 தறிகள் இழைந்து கொண்டிருக்கின்றன. ஆரம்பித்த ஓராண்டில், ஏறக்குறைய ரூ. 10,000-க்கு இலாபம் ஈட்டியிருக்கிறது. ஏறத்தாழ 170 கைத்தறி உற்பத்தியாளர்கள் அந்த சொசைட்டியில் நல்லமுறையில் செயலாற்றி, கைத்தறி சேலைகளை உற்பத்தி செய்து, ஏறத்தாழ 4½ இலட்சம் சேலைகள் அங்கே ஸ்டாக் செய்து வைக்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கம் இதில் உடனடியாகத் தலையிட்டு, ஸ்டாக்கில் இருக்கிற சேலைகளை, காதி இலாகா மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கைத்தறி லேபர் அதிகாரிகள் சரியான முறையில் தனிப்பட்ட முதலாளிகளிடம் கண்டிப்போடு இல்லாத காரணத்தால் தொழிலாளர்கள் நசுக்கப்பட்டு வருகிறார்கள்; அவர்களுடைய கூலியை, முதலாளிகள் குறைத்து வருகிறார்கள். காஞ்சிபுரத்திலும், ஆரணியிலும் ஒரே இடத்திலிருந்துதான் நூலை வாங்கி, தொழில் செய்கிறார்கள். ஆரணியிலே கூலி கம்மியாகக் கொடுக்கிறார்கள், காஞ்சிபுரத்திலே அதிகமாகக் கொடுக்கிறார்கள் என்று கூறப்படுகிறது. ஆகவே, அரசாங்கம் அதிகாரிகளிடம், ஏ. டி.-யிடம் சொல்லி, அதற்கு உடனடியாக என்ன நடவடிக்கையை எடுக்கவேண்டுமோ, அதைச் செய்ய வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

மற்றும் இங்கே வடாற்காடு மாவட்டத்தில் ஏறத்தாழ 35 ஆயிரம், 40 ஆயிரம் தறித் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஏ. டி. ஆபீசுக்கு போவதானால் காஞ்சிபுரம்தான் போகவேண்டியிருக்கிறது. எனவே, வடாற்காடு மாவட்டத்தில் ஒரு ஏ.டி. ஆபீஸ் அமைக்க இந்த அரசை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

கூட்டுறவு சங்க நிதிநிலைமை மோசமாக இருக்கிறது. உரிய லாபம் கிடைப்பதில்லை. எனவே, 6 சதவிகிதம், 7 சதவிகிதம் 9 சதவிகிதம்தான் லாபம் வைக்கவேண்டும் என்பதை மாற்றி, 12 சதவிகிதமாக மாற்ற வேண்டும். இல்லை எனில் அரசு வங்கிகள் தரும் கடன் வட்டியைக் குறைக்கவேண்டும். மத்திய கூட்டுறவு வங்கி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கடன் தரும் வீதத்தை ஒரு சதவிகிதம் உயர்த்தவேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

*திரு. செ. சதாசிவம் : பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குப் பேச அளித்த இந்த நேரத்தை நான் மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன். நான் காலையிலே 42-வது விதியின்படி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்தில், என்னை இந்த மானியத்திலே கலந்து கொண்டு பேச அனுமதியளித்தீர்கள். என்னுடைய பகுதியாகிய கரூரில் நெசவுத் தொழிலாளர்களிடையே இருக்கிற பதட்ட நிலையை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றைய தினம் அந்தப் பகுதியிலே ஒரு போராட்டம் நடத்தப்பட்டு 432 பேர்கள் அதிலே கலந்து கொண்டு கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். மிக முக்கியமாக, பழைய சட்ட மன்ற உறுப்பினர்களும், சமீபத்திலே தேர்தலில் நின்றவர்கள், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்தவர்கள் அத்தனைபேர்களும் இந்தப் போராட்டத்திலே கலந்து கொண்டார்கள். இதன் காரணமாக எனக்கு வந்த தந்தியைக் கூட அமைச்சரிடத்திலே கொடுக்கத் தயாராகயிருக்கிறேன். இந்தப் பதட்ட நிலை ஏற்பட்டிருக்கிற நேரத்திலே, இந்த நிலையைப் போக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்ற கோரிக்கையை இந்த சபையிலே வைக்கிறேன். அவர்களுடைய கோரிக்கையை அரசுக்கு தெரிவித்திருப்பதாகவும், அதைத் தீர்க்கும் வரையிலும் மீண்டும் போராட தீர்மானித்திருப்பதாக கேள்விப்பட்டேன். அதை எல்லாம் உணர்ந்து பாண்பு மிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்ற கருத்தைச் சொல்லுகின்ற நேரத்திலும், இந்த நெசளாளர்களுடைய நிலைமையையும் சற்றுப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்று கரூர் பகுதி அனைத்துத் தமிழகத்திலேயும் அதிக நெசவாளர்களை மையமாகக் சொண்ட பகுதி என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பல ஆயிரக்கணக்கான நெசவாளர்கள் கரூரிலும் பல்வேறு பகுதியிலே இருக்கிற கூட்டுறவு அடிப்படையிலே, தனிப்பட்ட நபர்களின் பட்டரைகளிலே நெய்யக் கூடிய சூழ்நிலையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்தப் பகுதி தமிழ்நாட்டிலேயே இந்தியாவிலேயே—உலகத்திலேயே உள்ள பல்வேறு நாடுகளிலே கரூர் பெட்ஷீட் தலைசிறந்த பெட்ஷீட்டாக விளங்குகிறது. ஆனால் இன்று நூல் விலை ஏற்றத்தின் காரணமாக அந்தத் தொழிலாளர்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியில்லாத நிலையில் இந்தப் போராட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள்.

[மாலை 4-20]

இந்த நேரத்திலே நூல் விலை உயர்வு என்று கூறுகிறோம். துணியின் உற்பத்தி விலை கட்டுப்படியாகவில்லை. அதே நேரத்தில் விவசாயிகள் அவர்களுடைய பருத்தியின் விலை கட்டுப்படியாக வில்லை என்று இந்த இரண்டு போராட்டங்களுக்கிடையே, இந்தப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். பருத்தி விலை குறைந்ததன் காரணமாக விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்கத் தவறிவிட்டார்கள். ஆனால் அதே நேரத்தில் இன்று நூல் விலை அதிகமான காரணத்தால் உற்பத்தியாகின்ற துணி தேங்கிக் கிடக்கிற காரணத்தால் இந்தத் தொழில் நசித்துவிட்டது. பஞ்சு விலை குறைவால் விவசாயிகளுக்கு குறையும். முன்பு கூறியவர்கள் கூறியது போல் இடைத்தரகர்களின் அதிகமான லாபத்தைக் குறைக்க வேண்டும். அதன் மூலம் நூல் விலையைக் குறைத்து இந்த கைத்தறி நெசவாளர்களுக்கு அதிக நூல் கிடைக்க வழிவகை செய்யப்பட வேண்டும். அதோடு கைத்தறித் துணி தேங்கிக் கிடப்பதை கைத்தறி சங்கங்கள், சொசைட்டிகளில் இருக்கக்கூடிய பொருள்களை மட்டும் வாங்கக் கூடிய நிலைமையில் அரசு இருக்கிறதே தவிர, தனியார் துறையில் பெரிய பெரிய பட்டரைகளில் துணி தேங்கியிருப்பதால் அந்தத் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஆவன செய்ய முயற்சிக்க வேண்டும். அதே நேரத்தில் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய கைத்தறி நெசவாளர்களுக்கு முன்பு செய்தது போல் ஓரளவு சலுகை செய்து சகாயத் தொகை கொடுத்து மீண்டும் இந்தத் தொழிலில் அதிக அக்கறை காட்ட வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக் கொள்வதோடு, இன்று நடக்கிற இந்தப்போராட்டத்தில் அக்கறை கொண்டு உடனடியாக வேலைநிறுத்தத்தை நிறுத்த ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கூட்டுறவு நூற்பு ஆலைகளைப் பற்றி ஒரு வார்த்தை. உங்களிடம் கொடுத்த வாக்குறுதிப்படி முடித்துக் கொள்கிறேன்.

கூட்டுறவு நூற்பு ஆலைகள் மொத்தம் 12. அவற்றில் முதலில் 4 ஆலைகள் இருந்தன. பின்னர் 8 ஆரம்பிக்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டத்தில் நூற்பு ஆலைகளை ஆரம்பிப்பதற்கு கர்த்தாவாக இருந்தவர்களில் நானும் ஒருவன் என்று தாழ்மையுடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்ட மன்றம் நடந்து கொண்டிருக்கும்பொழுது, பதினைந்து நாட்கள் பங்குத் தொகை வாங்கிக் கொண்டிருந்தார்களே, அவர்களுக்கு முதலிடம் கொடுப்பதாகக் கூறும் நேரத்தில் 15 நாட்களுக்கு பங்குத் தொகையைப் பெற்று வந்தோம்.

அந்த அளவிலே அந்த பங்குத் தொகையை பெற்று வந்த நூற்பு ஆலைகளைப் பார்க்கும்போது மிக மோசமான நிலைமையில் இருப்பதை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். கரூர் நூற்பு ஆலை கிட்டத்தட்ட ரூ. 70 லட்சம் நஷ்டத்திலே இருப்பதாக நான் கேள்விப் பட்டேன். அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய ஏழை எளியவர்களுக்கு பெருமளவிற்கு வேலை வாய்ப்பு கொடுப்பதற்காக இந்த நூற்பு ஆலை ஏற்படுத்தப்பட்டது. நெசவாளர்களுக்கு நூலின் விலையைக் குறைப்பதற்காக கூட்டுறவு அடிப்படையில் அந்த நூற்பு ஆலைகள் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இன்று இருக்கிற அந்த நிலையைப் பார்த்தால் மிக மிக அவல நிலையில் இருக்கிறது. அது சரிவர நடைபெறுவதற்குத் தக்க நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இப்படி நெருக்கடியில் உள்ள நிலைமையை கணக்கிட்டு, அந்த நிறுவனத்தை சீர்திருத்தியாக வேண்டும். அங்கு உள்ள சில அதிகாரிகள் நடந்து கொள்ளும் முறைகளினால் அங்கு உற்பத்தி சரிவர நடைபெறுவதில்லை. உற்பத்தியைக் குறைக்கக் கூடிய அளவிலே இன்று அங்கு காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதை நான் மன வருத்தத்துடன் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அந்த நெருக்கடி எங்கே போய் நிற்கிறது என்றால் இந்த நூற்பு ஆலையில் யாரும் பங்குத் தொகை போடுவதற்கு முன்வராத நிலை உள்ளது. எனவே அரசே இந்த நூற்பு ஆலையை எடுத்து நல்ல முறையிலே நடத்த முன் வர வேண்டும். இப்படி இந்த மாநிலத்திலே இந்தத் துறையிலே உள்ள குறைகளைத் தீர்ப்பதற்கு அரசு நல்ல முறையிலே செயல்படுத்த வேண்டுமென்று கேட்டு, கடைசியாக இந்தக் கதர் திட்டம் ஒரு நல்ல திட்டம். ஏழை எளியவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்குப் பெரிதும் பயன்படும். இதிலே தேக்கம் இல்லாமல் இருப்பதற்கு பல்வேறு துறைகளிலே நாம் ''ரிபேட்'' கொடுத்து வருகிறோம். கைத்தறிக்கும், கதருக்கும் ரிபேட் தருகிறோம். நம்முடைய பெருந்தலைவர் மாண்புமிகு காமராஜ் அவர்களின் உருவப்படத்தை திறக்கிற இந்த நேரத்திலே அவருடைய பிறந்த நாள் அன்று, அந்த மாதத்திலே இப்படி ரிபேட் கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டுமென்ற கோரிக்கையை வைத்து எனக்குப் பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பிற்கு நன்றி கூறி என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

[1977 ஆகஸ்ட் 17

திரு. எம். ஏ. லத்தீப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இரண்டு பெரும் மக்கள் முதன்மையாகப் போற்றிய இரண்டு துறைகளைப் பற்றி இன்று சபை விவாதித்துக் கொண்டிருக்கிறது.

கிராம வாழ்விலே குறிப்பாக கதர்த் தொழில் இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்களுக்கு வாழ்வதற்கு வழி அளிக்க வேண்டும் என்று காந்தியடிகள் விரும்பினார். அதை இன்றைக்கு நம்முடைய விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

அடுத்து, கைத்தறித் துறை. தமிழ் கூறு நல்லுலகத்தினுடைய பெருந்தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தத் துறை தமிழ்நாட்டினுடைய பொருளாதாரத்திற்கு ஆதாரமாக இருக்க வேண்டுமென்று விரும்பினார். அந்த முக்கியமான துறையை இன்றைக்கு நம்முடைய ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

இந்த இரண்டு துறைகளும், கதர்த் துறையும், கைத்தறித் துறையும் நம்முடைய தமிழ்நாட்டினுடைய பொருளாதார வாழ்விற்கு ஆதாரமாக இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு கிடையாது.

ஆனால் இங்கே பேசிய பேச்சுக்களிலிருந்து கைத்தறி இத்தகைய அளவிற்குப் பாராட்டப்பட்டாலும், அதனுடைய வளர்ச்சிக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், இன்றைக்குக் கூட நெசவுத் தொழிலை செய்கிற நெசவாளர்களின் வாழ்க்கை கடினமான முறையிலேதான் இருக்கிறது. அப்படி அவர்கள் கடினமான முறையிலே தங்கள் வாழ்க்கையை நடத்தக் கூடியவர்களாக இருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரிய வருகிறது.

உழவுத் தொழில் நமக்கு உணவு தருகிறது. உணவு இல்லாவிட்டால் ஒரு சில நாட்களுக்கு மனிதன் நடமாட முடியும். நெசவுத் தொழில் நமக்கு உடை தருகிறது. உடை இல்லாமல் ஒரு நிமிடமும் நாம் வெளியே நடமாட முடியாது. அவ்வளவு முக்கியமான, மானத்தைக் காக்கின்ற ஒரு தொழில் இந்த நெசவுத் தொழில். இந்தத் தொழிலை, நாம் குறிப்பாக கைத்தறி நெசவுத் தொழிலை எவ்வளவுதூரம் ஊக்கப்படுத்துகிறோமோ அவ்வளவுதூரம் நம்மை நாமே பாராட்டிக்கொள்கிறோம், நம்மை நாமே உயர்த்திக் கொள்கிறோம் என்ற எண்ணம் சமுதாயத்தில் வாழ்கிற எல்லாத் தரப்பு மக்களுக்கும் வர வேண்டும். அப்போதுதான் இந்தத் துறை வளர்ச்சியடைய முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1977 ஆகஸ்ட் 17] [திரு எம். ஏ. லத்தீப்]

கைத்தறித் துறையைப் பொறுத்தமட்டில் அதற்குப் பெரிதும் போட்டியாக இன்றைக்குக் கருதப்படுவது விசைத் தறி. விசைத் தறியா அல்லது கைத்தறியா, விசைத் தறி ''வர்சஸ்'' கைத்தறி என்ற அளவிற்கு ஒரு போராட்டம் நாட்டிலே நடைபெற்று வருகிறது. 25 வயது கட்டிளங்காளை ஒருவன் 25 மாதக் குழந்தையிடத்திலே குஸ்திக்கு வருகிறேன் என்று சொன்னால் அது எப்படி விந்தையாகவும், வேடிக்கையாகவும் இருக்குமோ, அப்படியேதான் இன்றைக்கு கைத்தறியோடு விசைத்தறி போட்டிக்கு வருவது.

நீங்கள் என்ன உடை உடுத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். நாங்கள்தான் இன்றைக்கு கைத்தறி ஆடையை உடுத்திக் கொண்டிருக்கிறோம். நாங்கள் லுங்கி கட்டுகிறோம். இந்த லுங்கி கைத்தறிதான். ஆகையினாலே கைத்தறிக்கு ஆதரவு தரக்கூடியவர்களாக எப்போதும் நாங்கள் இருக்கிறோம். அதேபோல கலைஞர் அவர்களும் எப்போதும் லுங்கியை உடுத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். நாங்களும்தான் அதை உடுத்திக் கொண்டிருக்கிறோம் என்பதை அவர்களுக்கு சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

ஆக, விசைத்தறி இன்றைக்குப் போட்டியாக வருகிறது. இதை நாம் எப்படியும் சமாளித்தாக வேண்டும் என்று இதற்கு முன்பு இருந்த ஆட்சியாளர்கள், குறிப்பாக அண்ணா அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு தமிழ் நாட்டில் கைத்தறித் தொழிலின் நலனுக்காக நல்ல பல திட்டங்களை செய்து வந்தார்கள்.

இப்போது ஆட்சிக்கு வந்துள்ள அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அமைச்சரவர்களும் கைத்தறித் துறை நன்கு வளர வேண்டும் என்பதிலே ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். அது முனைப்போடு செயல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

இப்போது விசைத் தறியிலே உற்பத்தி செய்யப்படும் ரகங்கள் 36'' துணி ரகங்கள் உற்பத்தி செய்யப்படுவது தடை செய்யப்பட வேண்டும் என்பதுதான் கைத்தறி நெசவாளர்களின் கோரிக்கை. இதை அரசு கவனித்து ஏதாவது ஒரு முறையிலே கைத்தறிக்கு என ஒரு சில ரகங்களை ஒதுக்கினால்தான் அவர்களுக்கு நாம் உறுதியான பாதுகாப்புத் தர முடியும் என்பதை அரசு கவனத்தில் வைத்து அவர்கள் நீண்ட நாட்களாக வைத்துள்ள கோரிக்கையான 36'' ரகங்களை விசைத்தறிகள் உற்பத்தி செய்வது கூடாது என்பதற்கான தடையைப் பிறப்பித்து ஒரு உத்திரவு போட முடியுமா என்பதை ஆய்வு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

[மாலை 4-30]

வேஷ்டி, சேலை ரகங்களை கைத்தறிக்கு ஒதுக்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக இருக்கிறது. ஆகவே வேஷ்டி, சேலை ரகங்களை கைத்தறித் துறை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற ஒரு விதியைக் கொண்டு வந்து அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நூல் தட்டுப்பாடு பற்றி இங்கே எல்லோரும் எடுத்துச்சொன்னார்கள். நூற்பாலைகள் தமிழ்நாட்டில், கூட்டுறவுத் துறையில் 12 நூற்பாலைகள் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த நூற்பாலைகள் மாவட்டத்திற்கு ஒரு நூற்பாலையாவது இருந்தாக வேண்டும். குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரில் ஒரு நூற்பாலை இருக்கிறது. ஆனால் குடியாத்தம், வாணியம்பாடி, ஆம்பூர், திருப்பத்தூர் போன்ற பகுதிகளில் வாழையடிவாழையாக நெசவாளர்கள் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். குறிப்பாக குடியாத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஈடுபடக்கூடிய ஒரு தொழிலாக நெசவுத் தொழில் இருந்து வருகிறது. நூல் கிடைக்கவில்லை என்பதற்காக நெசவாளர்களுக்கு வேலை இல்லை என்று சொல்வது, இவ்வளவு நூற்பாலைகளை வைத்துக் கொண்டு அங்கு உற்பத்தியாகிற நூலை சரியானமுறையில் பங்கீடு செய்யவில்லையா அல்லது உற்பத்தி குறைவா அல்லது பங்கீட்டில் ஏதாவது குறைகள் இருக்கின்றனவா என்று கண்டுபிடித்து உற்பத்தி குறைவாக இருந்தால் அந்தக் குறைவை நிறைவு செய்வதற்கு எந்த முறையில் பிரச்னையை அணுகவேண்டும் என்பதைக் குறித்து அரசு ஆராய வேண்டும். மேற்கொண்டு நூற்பாலைகள் ஏற்படுத்த வேண்டும் என்ற திட்டம் இருக்குமேயானால் தயவு செய்து குடியாத்தம் பகுதியில் நூற்பாலை ஒன்றை ஏறபடுத்தி அந்தப் பகுதியில் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிற நெசவாளர்களுக்கு நூல் கிடைக்கும் வகையில் அரசு முயற்சிகள் செய்ய வேண்டும். ஆரணிப் பகுதியிலும் செய்யாறு பகுதியிலும் பட்டு நூல் நெசவு செய்கிறார்கள் என்றாலும் இந்த நூல் தட்டுப்பாடு காரணமாக அங்கிருப்பவர்களுக்கு பாதகம் ஏற்படுகிறது என்றெல்லாம் சொல்கிறார்கள். ஆகவே, வட ஆர்க்காடு மாவட்டத்தில் குடியாத்தம் அல்லது ஆரணிப் பகுதியில் மேற்கொண்டு ஒரு நூற்பாலை கூட்டுறவுத் துறையில் அல்லது தனியார் துறையில் இருந்தாவது ஏற்படுத்தி அதற்கு ஆக்கம் அளிக்க வேண்டும். நூல் பங்கீட்டு முறையில் குறைபாடுகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேமாதிரி நெல்லை மாவட்டத்தில் இருக்கிற புளியங்குடி, கடையநல்லூர் பகுதியில் கூட இந்த கூட்டுறவு நெசவாளித் தத்துவம் என்ற ஆக்கத்தை அளிக்கும் வகையில் நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது மில்களில் உற்பத்தியாகும் நூலை அரசாங்கமே கூட கொள்முதல் செய்து நியாயமான முறையில் நெசவாளர்களுக்கு வழங்குவது என்பது அது பயன் உள்ள வகையாக இருக்கும் என்று சொல்லிக்சொள்ள விரும்புகிறேன். அரசு அத்தகைய முயற்சிகளில் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நெசவாளர்கள் நெய்கிற துணிகளை அரசே கொள்முதல் செய்து விற்பனைக்கான மார்க்கெட்டிங் முறைகளில் ஒரு பாதுகாப்பு அளிக்கவேண்டும். அல்லது அரசே நூலை சப்ளை செய்து துணிகளை அவர்களிடமிருந்து பெற்று இதற்காகும் மார்ஜின் இருக்கிறதே அதை நெசவாளர்களுக்குக் கொடுக்கிற ஒரு முறையைக் கொண்டு வருவது பயனுடையதாக இருக்கும். மதுரை, கரூர், குறிஞ்சிப்பாடி போன்ற இடங்களில் அரசு கைத்தறி சென்டர்ஸ் திறந்திருப்பதுபோல் வட ஆர்க்காடு மாவட்டத்திலும் முகவை மாவட்டத்திலும் இத்தகைய கைத்தறி சென்டர்களை திறக்க வேண்டும். நெசவாளர்களுக்கு இதுவரை கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை என்ற குறை இருக்கிறது. ஆகவே நெசவாளர்களுக்கு கூலி நிர்ணயம் செய்ய உடனடியாக அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நெருக்கடி காலத்தில் ஒழுங்கீனங்கள் நடந்திருக்கின்றன. இந்தத் துறையைப் பொறுத்து அவர்கள் கவனம் நெருக்கடி காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. ஏனெனில் இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற புள்ளிவிவரங்கள்படி; 1975-76 ஆம் ஆண்டில் கோவாப்டெக்ஸ் நிறுவனமும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் பண்டிகை காலங்களில் மொத்தம் 29.98 கோடி ரூபாய்க்கு துணி விற்பனை செய்திருக்கிறார்கள். ஆனால் அவை 1976-77 ஆம ஆண்டில் அதே பண்டிகை காலங்களில் மொத்தம் ரூ. 16.60 கோடி மட்டுமே விற்பனை செய்திருந்தன. ஆகவே நெருக்கடி காலத்தில் இந்தத் துறையை உதாசீனப்படுத்தி விட்டார்கள் ஆட்சிபொறுப்பில் இருந்தவர்கள் என்ற எண்ணம் உருவாகிறது. அந்தக்காலத்தில் ஏற்பட்ட நஷ்டத்தைப் போக்க அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்சொள்கிறேன்.

குறிப்பாக அரசு துறையினர் ஏஜென்ஸி மூலம் வெளியில் சில அட்வர்டைஸ்மென்ட்களை கொடுக்கிறார்கள். கமர்ஷியலாக ஏதாவது தேவை என்றால் இப்படிப்பட்ட ஏஜென்ஸிகள் மூலம் அட்வர்டைஸ்மென்ட் கொடுக்கலாம். எல்லாவற்றுக்கும் இதே அடிப்படையில் கொடுக்கவேண்டிய தேவையில்லை. குறிப்பாக நான் சொல்ல விரும்புவது, எலிகென்ட் விளம்பர ஏஜென்ஸி என்று ஒன்று இருக்கிறது. இந்தத் துறைக்கு சில பணியாளர்கள் வேண்டும் என்று அட்வர்டைஸ்மென்ட் கொடுப்பதற்கு இவர்களிடம் கொடுத்திருக்கிறார்கள். இதன் மூலம் சில

ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. உதாரணமாக கைத்தறி நிதி வணிகக் குழு என்று ஒன்று இருக்கிறது. நெருக்கடி காலத்தில் இந்த ஏஜென்ஸி மூலம் அட்வர்டைஸ்மென்ட் கொடுத்திருக்கிறார்கள், ஏழு தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர்கள் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இதற்கான விளம்பரம் வந்து மனுக்களை கேட்டு, ஏஜென்ஸி மூலம் இந்தத்துறைக்கு மனுக்கள் வரும்போது, அதில் பிற்படுத்தப்பட்டவர்களின் மனுவோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களின் மனுவோ ஒன்றும் அதில் இல்லை. இவ்வளவு தான் வந்தன என்று துறைக்குக் கொடுத்து விடுகிறார்கள். இதிலிருந்து நியமனம் செய்யப்படுகின்றவர்கள் எல்லாம் அவர்களாகவேதான் இருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏழு டைபிஸ்டுகள் எப்படி நியமிக்கப்பட்டார்கள் என்பதை கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதேபோன்றுதான் இந்த குழுவுக்கு ஒரு இடத்தை தேடியிருக்கிறார்கள். அதற்கும் இந்த ஏஜென்ஸி மூலமாக 5,000 ரூபாய் வாடகை கூடுதல் என்று ஒருவர் காலி செய்த இடத்தை இவர்கள் 14 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) விரைவில் முடித்துக் கொள்கிறேன். இப்படி தனியார் 5,000 ரூபாய்க்கு தேவையில்லை என்று விட்டுவிட்ட இடத்தை இந்த ஏஜென்ஸி மூலம் 14 ஆயிரம் ரூபாய்க்கு எடுத்திருக்கிறார்கள். மேலும்........ (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போது தாங்கள் பேச ஆரம்பித்து 13 நிமிட்ங்கள் ஆகிவிட்டது. தாங்கள் ஒத்துழைத்தால் நன்றாக இருக்கும். ஒத்துழைப்பு தருவதாக சொல்லுகிறீர்கள், நான் முதலாவது மணி அடித்து நீங்கள் முடித்துக் கொண்டதே கிடையாது. நாளைய நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ய வேண்டியிருப்பதால்தான் விரைவில் முடிக்க வேண்டியிருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: மாலை நேர விவாதம் தானே என்று நினைத்துத்தான் சற்று நேரம் எடுத்துக்கொண்டு பேசுகிறேன். விரைவில் முடித்துக் கொள்கிறேன். ஆகவே இவற்றையெல்லாம் அரசு கண்காணிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். 5,000 ரூபாய்க்கு வேண்டாம் என்று தனிப்பட்டவர்கள் விட்ட இடத்தை இந்த நிதி வணிகக் குழு 14 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிறது என்றால், இதில் என்ன விஷயம் இருக்கிறது என்பதை அரசு கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஷோ ரூம்கள் வைத்திருக்கிறார்கள். டெல்லியில் கூட ஷோ ரூம் வைத்திருக்கிறார்கள். இதைச் சொல்வதால் பல இடங்களிலுமுள்ள ஷோ ரூம்களைப் பற்றி கவ்னித்துக்கொள்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று நினைத்துத்தான் இதைச் சொல்கிறேன். 10 ஆண்டுகளாக டெல்லியில் ஒரு ஷோ ரூம் இருக்கிறது.

இதிலுள்ள சரக்கு எல்லாம் அப்படியே இருக்கிறது, சுமார் 21 லட்சம் ரூபாய் பெறுமான சரக்குகள் எல்லாம் மக்கிப்போய், இன்றைக்கு கால் அணாவுக்கு பெறாத நிலையில் 10 ஆண்டுகளாக விற்கப்படாமலும், டிஸ்போஸ் செய்யாமலும் அப்படியே வைத்துக் கொண்டிருக்கிறார்கள். எப்போது கணக்கு கேட்டாலும், கிரெடிட் ஆர்டர் என்று சொல்லி லாபம் என்று கணக்கை காட்டுகிறார்கள். ஆனால் உண்மையிலேயே 21 லட்சம் ரூபாய்க்கு சரக்கு தேங்கிக் கிடக்கிறது. எந்தவிதமான பிரயோசனமும் இல்லாத நிலையில் இருக்கிறது. இதுபோன்று பெங்களூரில் இருக்கின்ற ஷோ ரூமும் இருக்கிறது. இவற்றையெல்லாம் கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலை செய்து கொண்டிருக்கின்ற பல தொழில்களை இதில் சேர்த்துக்கொள்ளலாம். செருப்பு தைப்பது, காலணிகள் தயாரிப்பது போன்ற தொழில்களையும் எடுத்துக்கொண்டு, அவர்களுக்கு ரா மெட்டீரியல்ஸ் கொடுத்து, இந்தக் கைத்தறி போர்டு மூலமாக தயார் செய்து அதையும் முன்னுக்கு கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு சற்று அதிக நேரம் எடுத்துக்கொண்டதற்கு தலைவர் அவர்களிடத்தில் மன்னிப்பையும் கோரி, நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன்.

திரு. என். லட்சுமிநாராயணன்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவை முன் வைக்கப்பட்டிருக்கின்ற கைத்தறி, மற்றும் துணிகள் மான்யக் கோரிக்கைகள் மீது எனது கருத்துக்களைச் சொல்வதற்கு சந்தர்ப்பம் தந்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கைத்தறி தொழில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக தமிழகத்தில் நடைபெறக்கூடிய ஒரு மாபெரும் தொழிலாகும். இந்தத் தொழிலில் ஏறக்குறைய 50 லட்சம் பேர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தத் தொழிலானது, இன்று நேற்று ஏற்பட்ட தொழில் அல்ல. சற்றேறக்குறைய 2000 ஆண்டுகளுக்கு முன்பே சங்க காலம் முதற்கொண்டே தமிழ்நாட்டில் தொன்றுதொட்டு நடைபெற்று வருகிறது.

(பிற்பகல் [4-40)

இந்தத் தொழிலின் மீதுள்ள அக்கறை காரணமாக, இந்தத் தொழில் மேன்மேலும் வளர வேண்டுமென்ற எண்ணத்திலே நம்முடைய மாண்புமிகு முதல் அமைச்சர், புரட்சித் தலைவர் அவர்கள் இந்தத் துறைக்கு என்று தனி அமைச்சர் அவர்களை ஏற்படுத்தி, இந்தத் துறையின் வளர்ச்சிக்காக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறது என்பதை காட்டியுள்ளார்.

இன்றைக்கு மாநிலத்தில் ஏறத்தாழ 5.56 லட்சம் தறிகள் இருப்பதாகச் சொல்கின்றார்கள். அந்தத் தறிகளில் ஏறத்தாழ 1.80 லட்சம் தறிகள் தொடக்கக் கூட்டுறவு சங்கங்களோடு இணைக்கப்பட்டுள்ளதாக இங்கே வைக்கப்பட்டுள்ள குறிப்புகள்

உணர்த்தியிருக்கின்றன. இது வரவேற்கத்தக்க அம்சம்தான் என்றாலும், இந்த தொடக்கக் கூட்டுறவு சங்கங்களிலே ஏராளமான ஊழல்கள் நடைபெறுகின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. ஆனால், அதே நேரத்திலே இன்டஸ்ட்ரியல் கோவாபரேடிவ் சொஸைட்டீஸ் அதாவது தொழில் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையிலே செயல்படுவதாக குறிப்பேட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி 33 தொழில் கூட்டுறவு சங்கங்கள் இந்த மாநிலத்திலே நல்ல முறையிலே செயல்பட வேண்டும் என்ற வகையிலே திட்டம் வகுத்து, அந்த வகையிலே செயல்பட்டு வருவதை நான் பாராட்டாமல் இருக்க முடியாது.

அடுத்ததாக, கூலி நிர்ணயம் செய்வதைப்பற்றி நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். விவசாயத் தொழிலாளர்களுக்கும், பீடித் தொழிலாளர்களுக்கும், ரைஸ் மில் தொழிலாளர்களுக்கும் இன்றைக்கு நம்முடைய அரசு குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயம் செய்திருக்கிறது. ஆனால் நெசவுத் தொழிலாளர்களுக்கு மட்டும் எந்தவிதமான கூலியும் நிர்ணயம் செய்யப்படாமல் இருக்கிறது. இதையும், இந்த அரசின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்லாமல் நெசவாளர்களுக்கு வீவிங் சென்டர்களை அமைத்தால், வேலையில்லாத நெசவுத் தொழிலாளர்கள் அந்த வீவிங் சென்டரிலே வேலை வாய்ப்பு பெறுவதற்கு உதவியாக இருக்கும் என்பதைக் கேட்டுக்கொள்கிறேன். இதன் மூலமாக கூலி நிர்ணயம் செய்வதற்கும் ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நெசவாளர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களான நூல், சாயப் பொருள்கள், செயற்கைப் பட்டு நூல், பட்டு நூல், ஜரிகை போன்றவைகள், நியாயமான விலையிலே கிடைப்பதற்கு இந்த அரசு அவர்களுக்கு ஒரு ரா மெடீரியல் பாங்கு என்ற அமைப்பு ஏற்படுத்தி, அதன்மூலம் இந்த விதமான கச்சாப் பொருள்களை அவர்களுக்கு வழங்குவதற்கு ஏற்பாடு செய்தால், நெசவாளர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே நூல் ஏறத்தாழ தமிழ் நாட்டிற்குத் தேவையான அளவுக்கு உற்பத்தியாகிறது. ஆனால், சாயப் பொருள்களுக்கு நாம் பம்பாய் போன்ற வட நாட்டைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது. எனவே, சாயப் பொருள்களையும் இங்கேயே உற்பத்தி செய்வதற்கான செயல் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

செயற்கை பட்டு நூல் கோவையிலே தயார் ஆகிறது. ஆனால், நமது மாநிலத்திற்குத் தேவையான ஜரிகையில் எட்டில் ஒரு

பங்குதான் இங்கு தயார் ஆகிறது. அதையும், இங்கே உற்பத்தி செய்வதற்கு நாம் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெசவாளர்களுக்கு இலவசக் கல்வி வசதி, வீட்டு வசதி, மருத்துவ வசதி ஆகியவைகளை செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நெசவாளர்களுக்கு க்ஷயரோக வியாதி வருகிறது. அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கு மருத்துவ வசதி செய்து கொடுத்தால் நல்லது. தொழிலாளர் நலத் திட்டத்தின் கீழ் இந்த நெசவாளர்களைக் கொண்டு வந்து, அவர்களுக்கு அந்தச் சட்டத்தின் பலன்களை அனுபவிக்கும் வகையிலே ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, நெசவாளர்களுக்கு கடன் நிவாரண உதவி செய்ய நாம் முன்வர வேண்டும். எப்படி விவசாயிகளுக்கு இன்றைக்கு குறைந்த வட்டியில் $6\frac{1}{4}$ சதவிகிதத்தில் கடன் பெற வசதி இருக்கிறதோ, அந்த வகையில் இவர்களுக்கும் குறைந்த வட்டியில் கடன் கிடைப்பதற்கு நாம் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதைத் தவிர, வயோதிகம் அடைந்த நெசவாளர்களுக்கு மாதந்தோறும் 50 ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது கைத்தறித் துணிகளை விற்பனை செய்வதிலே போதிய அக்கறை காட்டவில்லை. அந்த வகையிலே இப்போது கோ-ஆப்டெக்ஸ்லே பணி செய்கின்ற விற்பனையாளர்கள் திறமையாக நடந்து கொள்ளவில்லை. அப்படி விற்பனை செய்கின்றவர்களுக்கு எந்தவிதமான ஊக்கமும் காட்டவில்லை. எனவே, இந்த கோ-ஆப்டெக்ஸ் விற்பனையாளர்களுக்கு ஊக்கம் கொடுக்கும் வகையிலே அவர்களுக்கு இன்சென்டிவ் போனஸ் போன்றவை கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்குப் பேச சந்தர்ப்பம் அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*புலவர் கா. கோவிந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவைமுன் கைத்தறி, பஞ்சாலை பற்றிய மானியக் கோரிக்கை விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த மானியக் கோரிக்கை விவாதத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசுக் கொள்கையைப் புத்தகமாக அச்சடித்து வழங்கியிருக்கிறோம், அதை ஆதாரமாகக் கொண்டு உறுப்பினர்கள் கருத்துக்களைச் சொல்ல வேண்டுமென்ற வேண்டுகோளை விடுத்தார்கள். நாங்களும் அந்தப் புத்தகத்தை ஆதாரமாக வைத்துதான் கருத்துக்களைச் சொல்ல கடமைப்

[புலவர் கா. கோவிந்தன்] [1977 ஆகஸ்ட் 17

பட்டிருக்கிறோம். ஆனால் கொடுக்கின்ற அந்த விளக்கப் புத்தகங்கள் ஒரே மொழியில் இருந்துவிட்டால் எந்தவிதமான குழப்பமும் இருக்காது. ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளில் அது அளிக்கப்படுகிறது. இந்த அவையில் இதற்கு முன்பே பல முறை இரண்டிலும் இருக்கக்கூடிய வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இங்கே மிகப் பெரிய அளவில் தவறுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற நிகழ்ச்சியைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தமிழிலே 'கோடி' யாக கூறப்படுவது ஆங்கிலத்திலே லட்சமாக மாறிவிடுகிறது. தமிழ்ப் புத்தகம் பக்கம் 3-ல் ''ஆண்டு உற்பத்தி மதிப்பில் 25 சதவீதத்தில் இருந்து 33 1/3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1976-77-ம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும், தொடக்கச் சங்கங்களுக்கும் இந்திய ரிசர்வு வங்கி ரூ. 1,834 இலட்சம் வழங்க அனுமதித்துள்ளது. ஆனால் 1975-76-ம் ஆண்டில் இவற்றுக்கு ரூ. 1,307 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டது'' என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இதே அடிப்படையில் ஆங்கிலப் புத்தகத்தில் 18.34 லட்சம் என்றும் 13.07 லட்சம் என்றும் இருக்கிறது. அதனை ஆங்கிலப் புத்தகத்தில் பார்க்கிற நேரத்தில்,

"During 1976-77 Rs. 18.34 lakhs have been sanctioned by the Reserve Bank to the Co-optex and Primaries Compared to Rs. 13.07 lakhs sanctioned for 1975-76...." என்று இருக்கிறது.

தமிழில் போடப்பட்டிருப்பதைப் பார்க்கும்போது அதை 18.34 கோடி என்றும் 13.07 கோடி என்றும்தான் கொள்ள வேண்டும்.

தெளிவாக 18.34 லட்சம் என்றும் 13.07 லட்சம் என்றும் ஆங்கிலத்தில் இருக்கிறது. ஆக, தமிழில் கோடியாக இருப்பது ஆங்கிலத்தில் லட்சமாக இருக்கிறது. தமிழில் கோடியாக இருப்பது ஆங்கிலத்தில் லட்சமாக மாறுகிற அளவுக்கு தவறுகள் நடைபெற்று இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்னொன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஆங்கிலத்தில் 5-வது பக்கத்தில் ஹாண்ட்லூம் வீவர்ஸ் நிலையை வளர்ப்பதற்காக என்னென்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற பட்டியலைக் கொடுக்கும் நேரத்தில் ஏ, பி, சி, டி என்று கொடுத்திருக்கிறார்கள்; தமிழில் அ, ஆ, இ, ஈ என்பதோடு 'உ' என்ற ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. அது 'கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனை நடவடிக்கைகளை விரிவுபடுத்த உதவும் வகையில் அதற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 50 இலட்சம் ஒதுக்கித் தருதல். தேசியக்

1977 ஆகஸ்ட் 17] [புலவர் கா. கோவிந்தன்]

கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இதுவரை 20 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது' என்று இருக்கிறது. இந்தப் பத்தி அடியோடு ஆங்கிலத்தில் விடப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். நாங்கள் எதை நம்புவது? ஆங்கிலத்தில் இருப்பதை உண்மையான புள்ளிவிவரம் என்று நம்புவதா அல்லது தமிழில் கொடுக்கப்பட்டிருப்பதுதான் சரியான புள்ளிவிவரம் என்று நம்புவதா? என்ற அளவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு குழப்பமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்தக் குழப்ப நிலை ஏற்படாமல் காக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இப்போது முக்கியமான விவாதத்தை மேற்கொண்டிருக்கிறோம்.

[மாலை 4-50]

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். உணவு இல்லாமல்கூட இருக்கலாம், ஆனால் உடை இல்லாமல் இருக்க முடியாது என்று சொன்னார்கள். அது உண்மைதான். உணவு, உடை, உறையுள் என்று சொல்கிற நேரத்திலே உணவு இல்லாமலே 1 நாள் அல்ல, 2 நாட்கள் கூட இருக்கலாம், உறையுள் இல்லாமல் நடைபாதையிலேயே கூட நீண்ட நாட்கள் வாழலாம், ஆனால் அரை நாழிகை கூட ஒரு முழத் துண்டுகூட இல்லாமல் இருக்கமுடியாது. ஆகவே மனிதனுடைய மானத்தைக் காக்கின்ற தொழிலைப்பற்றிய விவாதத்திலே இந்த அவை இருக்கிறது. ஆள் பாதி ஆடை பாதி என்று சொல்வார்கள். 50 வயது கிழவரையும் நல்ல 16 வயது இளைஞராகக் காட்டுவது ஆடைதான், அழகில்லாதவர்களையும் அழகிலே சிறந்தவர்களாகக் காட்டுவது ஆடைதான், இப்படி மானத்தைக் காக்கின்ற ஆடையை நமக்கு ஆக்கித் தருகின்ற நெசவாளர்களுடைய வாழ்க்கையை ஒளிமயமான எதிர்காலமாக ஆக்கித்தருகின்ற நிலைமை இன்றைக்கு இல்லையென்றாலும்கூட அவர்கள் எல்லாம் வயிறார உண்ணுவதற்கு ஏற்ற முறையிலே அவர்களுடைய தொழிலை வாழவைக்கக்கூடிய நிலைமையை ஏற்படுத்த வேண்டுமென்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. உழவுத் தொழிலைவிட சிறந்த தொழில் இல்லை என்று சொல்வதைப்போல் நெய்யும் தொழிலுக்கு நிகரில்லை என்று பாராட்டலாம். ஆனால் அப்படி பாராட்டுவதோடு நின்றுவிடக்கூடாது. வெளிநாடுகளிலிருந்து கப்பல் கப்பலாக பொன் நாணயங்களை இங்கே கொண்டுவந்து கொட்டிவிட்டு மிளகு போன்ற விளை பொருட்களை இங்கே இருந்து வாங்கிக்கொண்டு சென்றிருக்கிறார்கள் என்று சங்க இலக்கியங்கள் எல்லாம் பாராட்டியிருப்பதுபோல் வெளி நாட்டுப் பொற்காசுகளை ஈட்டித் தந்த உறையூர் பூந்துயில் போன்ற ஆடைகளை

உற்பத்தி செய்த இந்தத் தொழில் இன்றைக்கு நசித்துவிட்டது. இந்தத் தொழிலை முன்னேற்றமடையச் செய்வதற்காக என்ன என்ன வகையிலே செயல்படலாம் என்று அரசு பார்த்து பல திட்டங்களை அளித்திருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே இந்தத் தொழிலை நம்பியிருக்கிறவர்கள் ஏறத்தாழ 20 லட்சத்திற்கும் மேலாகும். தறிகளைப் பொறுத்த வரையில் ஏறத்தாழ 5.56 லட்சம் தறிகள் இருக்கின்றன, கூட்டுறவுத் துறையிலே கிட்டத்தட்ட 1.80 லட்சம் தறிகள் இருக்கின்றன. இந்த 1.80 லட்சம் தறிகளிலே ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தியாவது சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள துணி இருக்கும் என்று அறிக்கை கூறுகிறது. அவர்களே இந்த எண்ணிக்கையைக் கொடுத்திருக்கிறார்கள். 1976-77ஆம் ஆண்டிலே ரிசர்வ் வங்கியிலே இதுவரையிலும் அனுமதித்த வட்டி ஆண்டு உற்பத்தியில் மூன்றில் ஒரு பங்கு வாங்குவது என்று திட்டமிடப்பட்டு கடன் கொடுத்து இருக்கிறார்கள். அந்தக் கடன் 18.34 கோடி ரூபாய் என்று சொல்லி இருக்கிறார்கள். அப்படியானால் மூன்றில் ஒரு பங்கு 18.34 கோடியாக இருக்கிறது என்றால் கிட்டத்தட்ட 54 கோடி ரூபாய் வரையிலும் இந்த 1.80 லட்சம் தறிகளிடமிருந்து உற்பத்தியாகிறது. தமிழ்நாட்டிலே நம்முடைய அரசினுடைய குறிக்கோள் மொத்தமுள்ள 5.56 லட்சம் தறிகளில் கூடிய விரைவில் 60 சதவிதம் தறிகளையாவது கூட்டுறவுத் துறையிலே கொண்டு வர வேண்டுமென்று சொல்கிறார்கள். அந்த நிலையைப் பார்த்தால் கிட்டத்தட்ட 110 கோடி ரூபாய் மதிப்புள்ள துணிகள் கூட்டுறவுத் துறையின் மூலமாகக் கொண்டு வரப்படுகிற தறிகளின் மூலமாக உற்பத்தியாகும் என்றும் மொத்தமாக இந்தத் துறையிலே இருக்கின்ற தறிகளின் உற்பத்தி முழுமையும் பார்த்தால் 165 கோடி, 170 கோடி ரூபாய்க்கு ஆண்டு உற்பத்தி இருக்கும் என்று தெரிகிறது. இதுவும் எந்த நிலையிலே என்றால் தறிக்காரன் வேலை பாதி நேரம்தான் செய்கிறான். அதற்குப் பல காரணங்கள் உண்டு. பாதி நேரம் வேலை செய்கிறவன் முழு நேரமும் வேலை செய்தால் இன்னும் உற்பத்தி அதிகமாகும். இந்த நிலையிலே 165 கோடி என்பது இன்னும் அதிகமாகக்கூடிய நிலைமை ஏற்படும். 1975-76 ஆம் ஆண்டிலே 29.98 கோடி ரூபாய்க்கு விற்பனை ஆகியிருக்கிறது. ஆனால் அது 1976-77ஆம் ஆண்டிலே 16.60 கோடியாகத் தாழ்ந்து இருக்கிறது. அதற்காகப் பெரு முயற்சி எடுத்து 1977ஆம் ஆண்டிலே 20 சதவீதம் தள்ளுபடி செய்ததாலே இரண்டு மாத காலத்திலே 18 கோடிக்கு விற்பனையாகி இருக்கிறது. இதற்கு 3.6 கோடி தள்ளுபடியாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே 54 கோடி விற்பனையாகும் என்றால் கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய்க்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

கூட்டுறவுத் துறையிலே 60 சதவீதம் தறிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு அதற்கு தள்ளுபடி செய்யவேண்டுமென்றால் 22 கோடி ரூபாய் தேவைப்படும். ஆனால் இந்த நிதிநிலை அல்க்கையிலே தள்ளுபடிக்காக 2 கோடி ரூபாய்தான் ஒதுக்கி

யிருக்கிறார்கள். பணம் போதாது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

வெளிநாட்டிலேயும், நம்முடைய உள்நாட்டிலேயும் விற்பனையான கணக்கைச் சொன்னார்கள். வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகி விற்பனையான வகையில் 1974-75ஆம் ஆண்டு 18.75 கோடியும், 1975-76-ல் 30 கோடியும், 1976-77ஆம் ஆண்டில் 31 கோடியும்தான் விற்பனையாகியிருக்கிறது. ஆகவே, என்ன கணக்குப் பார்த்தாலும் கூட பாதி அளவுக்குக்கூட வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் போதுமான அளவிற்கு விற்பனை செய்யும் வழிமுறை இல்லை. இப்படிப்பட்ட நிலையில் ஆண்டுதோறும் 60 கோடி, 70 கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறிப் பொருட்கள் குவிந்து கொண்டே இருக்குமானால் இந்தத் தொழிலுக்கு நல்ல எதிர்காலம் இருக்குமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இதற்காக அரசு பல தொழில் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க வேண்டுமென்று சொன்னார்கள். அடுத்து மலிவு விலைத் துணியை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கூறினார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலே மலிவு விலை துணியை உற்பத்தி செய்கிறார்கள். அதே நேரத்தில் ஆலையிலிருந்தும் உற்பத்தியாகி, அந்தத் துணிகளும் நம்முடைய தமிழகத்தின் கடைகளில் விற்கப்படுவதால் கைத்தறித் துணியின் விற்பனை பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்கள் கவனத்திற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையம் பற்றிக் கூறினார்கள். வாடகை 11,000-க்குப் பேசி இப்பொழுது கொஞ்சம் குறைத்து நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அதில் 150 தையல் இயந்திரங்களுக்கு மேலேயிருந்தாலும் எல்லாம் பழுதுபட்டிருக்கும் நிலையில் இருக்கின்றன என்ற நிலைமை இருக்கிறது. அதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு கைத்தறி நிதி வணிகக் கழகம் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். ஒரு காலத்திலே எங்களுக்கு 40 ஆம் நம்பர் நூல் தேவை, எங்களுக்கு 20 ஆம் நம்பர் நூல்களைக் கொடுக்கிறீர்களே என்று அதிகாரிகளைக் கேட்கும்பொழுது 40 வேண்டும் என்றால் 20 இரண்டாகப் போட்டுக் கொள்ளுங்கள் என்று கூறுகிற அதிகாரிகளும் இருந்திருக்கிறார்கள். 40, 20, 60 என்ற நிலைமைகளைத் தெரியாதவர்கள்கூட அந்தத் துறையிலே அதிகாரிகளாக இருந்த காரணத்தால் இந்த விடை அளிக்கப்பட்டது. ஆனால் இப்பொழுது இந்தத் துறையிலே, பணியாற்றுகின்றவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு

காலத்தில் பெரியார் இருந்தார்கள், இப்பொழுது இல்லை. அவர்கள் பட்டியல் போட்டுக் கொடுப்பார்கள். ஒவ்வொரு துறையிலும் எவ்வளவு உத்தியோகம் இருக்கின்றன? அதில் எந்தெந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்று காட்டுவார்கள். பெரியார் மறுபடியும் பிறக்க வேண்டுமோ என்று எண்ணவேண்டிய அளவிற்கு ஒரே இனத்தவர்கள் ஆட்சி புரிகிறார்கள் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். ஷோ ரூம், அதாவது காட்சி நிலையம் வைத்திருக்கிறார்கள். அங்குள்ள எல்லோரும் அந்த ஒரே இனத்தைச் சாராதவர்கள். அண்மையிலே எடுக்கப்பட்ட ஏழு பேரில் ஒருவர்கூட அந்தத் தொழிலை நம்பி வாழ்பவர் இல்லை. மீனளத் துறையைப் பற்றி எடுத்துக் கொண்டால் அதில் அந்தக் குலத்தைச் சேர்ந்தவர்கள் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதே போல் விவசாயக் கல்லூரிக்கு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர் வர வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால் நெசவாளர்களுக்காக இருக்கின்ற, நெசவாளர்களை உயர்த்துவதற்காக இருக்கின்ற நிலையம், அதிலே அந்தக் குலத்திலே பிறந்தவர்கள் இடம் பெறக்கூடாது என்ற வகையில் ஆட்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அமைச்சர் அவர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இரண்டு குழுக்கள் நாளையோ, மறுதினமோ ஒன்று கீழை நாடுகளுக்கும், ஒன்று மேலை நாடுகளுக்கும் செல்ல இருப்பதாக நான் அறிகிறேன். எப்படிப்பட்ட நிலையில் என்றால் 68 இலட்சம் ரூபாய் அளவில் இந்த ஆண்டு நஷ்டம் என்று கணக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட காலத்தில் கீழை நாடுகளுக்கு ஒரு குழு, மேலை நாடுகளுக்கு ஒரு குழு என்று $1\frac{1}{2}$ இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய் செலவில் அனுப்பவேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டும். நஷ்டம் வருகிறது என்பதற்காக, அதை விற்பதற்கான வணிக நிலையங்கள் சம்பந்தமாக ஆராய இப்படிப்பட்ட குழுக்கள் செல்வது முறைதானே என்று அமைச்சரவர்கள் கேட்க முடியும். அது நியாயம்தான். அதிலேயாவது கைத்தறி பற்றித் தெரிந்தவர்கள், இதிலே பழக்கப்பட்டவர்கள் இருப்பதற்குப் பதிலாக எதுவுமே தெரியாதவர்கள், நான் முன்பு சொன்னதைப் போல 60 வேண்டும் என்றால் 30ஐ இரண்டாகச் சேர்த்துக்கொள் என்று சொல்வதைப் போன்றவர்கள் சென்றால் பயன் இருக்குமா என்பதை அமைச்சரவர்கள் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விலையைக் குறைக்க வேண்டுமென்று சொன்னார்கள். 1975-லே 26 ஆம் நம்பர் 50 ரூபாய் 50 காசு என்று இருந்தது இப்பொழுது 93 ரூபாயாக ஆகியிருக்கிறது. காரணம் பஞ்சின் விலை ஏறியிருக்கிறது என்று சொல்கிறார்கள். பஞ்சு மகாராஷ்டிரத்திலிருந்தும், குஜராத்திலிருந்தும் பெரும் பகுதி வருவதாகச் சொல்கிறார்கள். அதிக விலை ஏறுகிறது என்றால் அமைச்ச

ரவர்கள் இதற்கு மத்திய அரசோடு பேசி வழிவகை செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

[மாலை 5-00]

நூல் விலை குறைய வேண்டும். நூல் விலையைக் குறைக்கின்ற அதே நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். அதற்கு வேண்டிய டை, வண்ணப் பொருள், பவுடர் எல்லாம் வெளி மாநிலங்களிலிருந்து வரக்கூடிய நிலைமையிருக்கிறது. அந்தப் பொருள்களை நம்முடைய மாநிலத்திலே உற்பத்தி செய்ய வழிவகை செய்ய வேண்டும். கட்டுப்படியாகக் கூடிய அளவுக்கு நூலின் விலையைக் குறைக்க முயற்சிகள் எடுக்க வேண்டும். அதே நேரத்திலே, மாஸ்டர் வீவர்கள், நூல் விலை உயர்ந்துள்ளது என்றால் கூலியைக் குறைக்கப் பார்க்கிறார்கள். ஆகவே, தொழிலாளர்களுக்கு எந்தவித பாதுகாப்பும் இல்லை. மாண்புமிகு இராதா அவர்கள் நெசவாளர்களுக்குப் பாடுபடக்கூடியவர் என்பதை நான் அறிவேன். அவர்களும் நெசவாளர்களுக்காகக் குரல் எழுப்பினார்கள். ஆனால் மாண்புமிகு இராதா அவர்கள் அந்தக் குரல் எழுப்பும்போது, அந்தக் குரல் அந்த இடத்தில் இல்லாமல் இந்த இடத்திலிருந்து எழுப்பியிருப்பாரானால் எப்படி இருந்தது, இருக்கும் என்பதை நாங்கள் நன்றாக அறிவோம். காலையிலே, திரு. சதாசிவம் சொன்னார்கள், ஒரு போராட்டம் நடந்தது என்று. பல தலைவர்கள்-ஆளுங்கட்சி ஒன்று இல்லையென்று நினைக்கிறேன்—மற்ற எல்லாக் கட்சிக்காரர்களும் அங்கே போராட்டம் நடத்தி இருக்கிறார்கள். அப்படிப்பட்ட போராட்டம் மேலும் பரவாத நிலையிலே அவர்களுடைய குறைகளைத் தீர்க்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்தத் தொழில் இன்னும் கொஞ்சம் உயிரோடு இருக்கிறது என்று சொன்னால், அதைச் செய்தவர்கள் நம்முடைய தமிழ்நாட்டுத் தாய்க் குலம்தான். அவர்கள்தான், ஆடவர்கள் எந்தவிதமான ஆடைகளை அணிந்து கொண்டிருந்தாலும், தங்களைப் பொறுத்தவரையில் கைத்தறி துணிகளையே அணிந்து வந்தார்கள். அந்த நிலையும் இப்பொழுது மாறி விட்டது. அவர்களும் கைத்தறி அணிகின்ற அந்த நிலைமையிலேயிருந்து மாறி வேறு நிலைக்குச் சென்று இதர வகை துணிகளை அணியும் நிலைக்கு வந்துவிட்டார்கள். அப்படிப்பட்ட துணிகள் தமிழ்நாட்டிற்கு வர இயலாத நிலையை ஏற்படுத்த, பாதுகாப்பும் கொடுக்க வேண்டும்.

ஆலைகளையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொல்கிறோம். நம்முடைய இந்திய நாட்டிலே இருக்கிற ஆலைகளுக்கு ஒரு கட்டுப்பாடு விதிக்கலாம். ஆனால், நம்முடைய தொழில் நம்முடைய நாட்டோடு இல்லை. வெளிநாட்டிலேயிருக்கிற—வாங்குகிற—மக்களை நம்பித்தான் நம்முடைய தொழிலே இருக்கிறது. வெளிநாடுகளோடு போட்டி போட்டு.......

திரு. துரை முத்துசாமி : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மாண்புமிகு உறுப்பினர்கள் சட்டமன்றத்திலே பத்திரிகை படிக்கலாமா என்று கேட்கிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடைசியாக, இந்தக் கைத்தறியை நம்பி வாழ்கின்றவர்களுக்கு ஆண்டுதோறும் இப்படி தள்ளுபடி, தள்ளுபடி என்று கொடுத்து, நீண்ட நாளைக்கு வாழ வைக்க முடியுமா என்று நெஞ்சார எண்ணிப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, அந்தத் தொழிலை நம்பி வாழ்கின்றவர்கள் எண்ணிக்கை குறைய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள், அந்த நெசவாளர்களுக்கு உத்தியோகம் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். கொடுக்கிறேன் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். கொடுக்கிறேன் என்று உள்ளத்திலே உருவாகியிருப்பதால்-உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று சொல்லியிருக்கிறார் வள்ளுவர்-அந்த உள்ளத்தைப் பாராட்டுகிறேன். அந்தத் தொழிலை நம்பி வாழ்கிறவர்கள் எண்ணிக்கையைக் குறைக்க, அந்த இனத்திலேயுள்ளவர்களுக்கு மாற்று வேலை தருவதற்கு முன்னுரிமை கொடுக்க—ஒவ்வொரு துறையிலும், ஆசிரியர் பயிற்சி என்றால் நெசவாளர் இனத்தவர்களில் இத்தனை பேர், மருத்துவத் துறை என்றால் அதில் இத்தனை பேர், நூற்பாலை என்றால் இத்தனை பேர் என்ற அளவுக்கு நிலையை உருவாக்க வேண்டும். தமிழகத்திலே, ஆண்டொன்றுக்கு 75,000 பேர் ஈடுபடக்கூடிய அளவுக்கு, நூற்பாலைகள் இருக்கின்றன. அதில் எத்தனை சதவிகிதம் நெசவாளர்கள் குடும்பத்திலே இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, அவர்களுடைய வாழ்க்கையை ஒளிமயமாக்கச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. தி. சு. நல்லதம்பி : ஆன் எ பாயின்ட் ஆஃப் ஆர்டர், சார். பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் நமது கைத்தறி அமைச்சரவர்களால் இங்கே மாமன்றத்தில் வைக்கப்பட்ட இந்த மானியத்தில் ஒரு விளக்கத்தை அமைச்சரிடத்திலே எதிர்பார்க்கிறேன். அதாவது, இந்த மன்றத்தில் கைத்தறித் துணிக்கு நாம் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறோம் என்பது பற்றியும் அதிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கொள்கை எந்த அளவுக்கு உண்மையானது என்பது பற்றியும் சொல்லும்போது, அண்ணாவினுடைய கொள்கையைப் பின்பற்றுகிறவர்கள், தீபாவளி, பொங்கல் போன்ற பண்டிகைகளில் விசேஷ தள்ளுபடி வைத்து, அதற்கு ஒரு சலுகை வைத்து—அண்ணா அவர்கள் பிறந்த நாள் விழாவிலும், தந்தை பெரியார் பிறந்த நாள் விழாவிலும் இப்படி ஒரு சலுகை தருவீர்களா என்று இந்த மாமன்றத்தில் கேட்கப்பட்டது. அதற்கு, அமைச்சரவர்கள் அன்றையதினம், நிச்சயமாக இதைப் பின்பற்றுவோம் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுடைய

கொள்கை விளக்கத்திலே இது இல்லையென்பதைத் தெரிவித்து, அதற்கு விளக்கம் தருவாரா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியது ஒழுங்குப் பிரச்னை அல்ல. என்னைக் கேட்டிருந்தால் 5 நிமிடம் பேச அனுமதித்திருப்பேன். இதில் ஒழுங்குப் பிரச்னை இல்லை. அமைச்சரவர்கள் பதில் சொல்வார்கள்.

*மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறித் துணி, நூல் பற்றிய மானியத்தின் மீதும் கதர், கிராமத் தொழில்கள் பற்றிய மானியத்தின்மீதும் மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அவர்களுடைய மேலான ஆலோசனைகளையும் இங்கே வழங்கியிருக்கிறார்கள், அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியறிதலை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே 9 பேர்கள் வெட்டுத் தீர்மானங்களை கொடுத்து, 13 பேர்கள் இந்த இரண்டு துறைகளின் மீதும் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதை ஒரு பட்டிமண்டப விவாதம் என்ற போக்கிலே எடுத்துக்கொள்ளாமல், அவர்கள் சொன்ன ஒவ்வொரு கருத்துக்கும் எதிர்வாதம் செய்ய வேண்டும் என்ற நோக்கம் இல்லாமல், அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களை குறிப்பாக இதயத்தின் உணர்ச்சி பூர்வமாக, இந்தப் பிரச்னைகளைத் தீர்க்கவேண்டுமென்ற வகையிலும் அவர்கள் சொன்ன கருத்துக்களை எல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு எனது பதிலுரையை நான் அமைத்துக் கொள்கிறேன்.

குறிப்பாக திரு. இலட்சுமிநாராயணன் அவர்களும், அன்புக்குரிய புலவர் கோவிந்தன் அவர்களும், இந்தத் துறையின் மீது பேசுகின்றபோது, சங்க காலத்திலே ,இருந்து இந்தத் துறை இருந்து வருகிறது என்பதைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். எனவே சங்க காலத்திலேயிருந்தே என்னுடைய பதிலை ஆரம்பிக்கலாம் என்று நான் எண்ணுகிறேன். குறிப்பாக இலக்கியங்களிலே நாம் பார்க்கிறபோது, 'தோலாடையைக் காணமுடியவில்லை; மாறாக நூலாடையைப் பற்றித்தான் காண முடிகிறது. நாலாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே, தழையாடைகளைக் காண முடியவில்லை; இழையாடைகளைப்பற்றித்தான் குறிப்புகள் இருக்கின்றன. ஆனால் இந்த நிலைமைகள் உங்களுக்குத் தெரியும்.

கருத்துக் கருவூலமாக பேரறிஞர்கள் எழுதியவைகளை நூல் என்று சொல்கிறோம். ஆடைக்கு நாம் பயன்படுத்துவதையும் நூல் என்று சொல்கிறோம். அதைப் போல செய்யுளிலே 'பா' என்று சொல்வது போல, நூலிலேயும் 'பா' என்று சொல்கிறோம். செய்யுளிலே 'சீர்' இருப்பதைப் போல, பஞ்சு நூலிலே 'சீர்' என்ற சொல் நூல் பாவைக் குறிக்கும். 'அலகிடல்' என்று நூற்பு செய்யும் போது சொல்கிறோம். அதே போல, செய்யுளிலே 'அலகிடல்' இருப்பதை நாம் பார்க்கிறோம். இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் வாழ்க்கையோடு, இயற்கை

யோடு நம்முடைய நாகரிகம் தொடங்கிய காலத்திலே இருந்து, மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு பாதுகாக்கப்பட்ட தொழில் இந்த நெசவுத் தொழில். விவசாயத்திற்கு அடுத்தபடியாக இந்தத் தொழில் இருந்து வருகிறது என்பது யாவரும் அறிந்த் உண்மை. அதை யாரும் மறுத்திட முடியாது. இன்னும் சொல்லப்போனல்—புலவருக்குப் பிடிக்கும் என்பதாலே—ஒரு குறிப்பைக் கோடிட்டு சொல்ல விரும்புகிறேன். நாட்டிய மங்கை மாதவி, பண்டைக் காலத்திலே—1800 ஆண்டுகளுக்கு முன்னலே—அவள் அணிந்திருந்த ஆடைகளைப் பற்றி—37 வகையான ஆடைகளைப் பற்றிச் சொல்கிருர்கள். அவை, கோசிகம், பீதகம், பச்சிலே, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக் கம்மி, குருதி, கரியல், பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வன்னடை, கவற்றுமடி, நூல், யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து குச்சாரி, தேகரி, காத்துலம், இறஞ்சி, வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி என்னும் இந்த 37 வகை ஆடைகள் இன்றைக்கு இருக்கிறதா என்று கேட்கலாம். இருக்கிறதா, இல்லையா, நமக்குத் தெரியாது. ஆனல் அப்படிப்பட்ட வகைகளைக் கொண்டுவரக்கூடிய முயற்சிகளை ஓரளவு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை நாம் கவனத்தில் கொள்வது நல்லது என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

காரணம், இன்றைக்கு உற்பத்தியிலே எந்த அளவுக்கு சிரமம் இருக்கிறதோ அதைப்போல விநியோகத்திலும் சிரமம் இருந்து வருகிறது. விற்பனையிலும் சிரமம் இருந்து வருகிறது. இந்தப் பிரச்னையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாகச் சொன்னர்கள்.

ஷோ ரூமிலே உள்ள குறைபாடுகளைப் பற்றி எல்லாம் சொன்னர்கள். வாடகை பற்றி எல்லாம் விசாரிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிருர்கள். இது நிச்சயமாக கவனிக்கப்படும். எந்தத் தரப்பிலே இருந்து வருகிறது என்பதல்ல முக்கியம். புலவர் கோவிந்தன் அவர்கள் கூட சொன்னர்கள். திரு. ராதா அவர்கள் இந்தப் பக்கத்திலே இருந்து குரல் கொடுத்தார் என்றும் அந்தப் பக்கத்திலே இருந்து குரல் கொடுத்தால் இன்னும் நன்ருக இருந்திருக்கும் என்று. எந்த இடத்திலேயிருந்து குரல் கொடுத்தார்கள் என்பதல்ல முக்கியம்.

[மாலை 5-10]

இடம் முக்கியமல்ல, இதயம் தான் முக்கியம் என்று புலவர் கோவிந்தன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். எந்த உணர்ச்சி அடிப்படையில் இந்தப் பிரச்னையைத் தீர்க்கப் போகிருேம் என்பதுதான் முக்கியம். எந்த இடம் என்பது பிரச்னை அல்ல, என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்துகிறேன்.

பெருமதிப்புக்குரிய மூதறிஞர் ராஜாஜி அவர்கள் ஆட்சி செய்த காலத்தில் பேரறிஞர் அண்ணு அவர்களும் திரு. செங்கல்வராயன் அவர்களும் கைத்தறி வார விழாவில் கலந்து கொண்டு பேசினர்கள். பேரறிஞர் அண்ணு அவர்கள் விஞ்ஞானம் வீறு கொண்டு வளர்ந்தாலும் புராதனத் தொழில் என்ற அடிப்படையில் கைத்தறியைக் காப்பாற்றித்தான் ஆக வேண்டும், அந்தத் தொழிலை யாரும் அழித்துவிட முடியாது என்று, நித்யானந்த கனுங்கோ கமிட்டி அறிக்கை வருவதற்கு முன்பு இந்தத் தொழிலைக் காப்பாற்றவேண்டுமென்று அறிஞர் அண்ணு அவர்கள் சொன்னர்கள். துரதிருஷ்டவசமாக இந்தக் கருத்து முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. பிரச்னைகள் சிக்கலாக்கப்பட்டன என்று இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன். அப்போது அறிஞர் அண்ணு அவர்கள் நீண்ட இழையும் குறுக்கு இழையும் ஒழுங்காகவும் சமத்துவமாகவும் இணைந்தால்தான் ஆடை கிடைக்கும். அது போல் எதிர்க்கட்சியும் ஆளும் கட்சியும் இணைந்து சென்ருல்தான் பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று சொன்னதைத்தான் அண்ணு வழியில் நடக்கிற புரட்சித் தலைவர் தலைமையில் நடக்கும் அரசு கருதிக் கொண்டிருக்கிறது என்பதை புலவர் கோவிந்தன் அவர்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இதில் எடுத்துக்கொள்ள வேண்டிய அம்சங்கள் இந்த மூன்று நிலைகள்தான், உற்பத்தி, விநியோகம், விற்பனை. விற்பனையைப் பற்றி மிகுந்த குறைபாடுகளைச் சொன்னர்கள். அதை நாம் மறுக்க முடியாது. உதாரணமாக 15 நாட்களுக்கு முன்பு வாய்ஸ் ஆப் அமெரிக்காவில் ஒரு குறிப்பு வந்தது. வெளிநாடுகளிலிருந்து இந்திய துணைக் கண்டத்திற்கு வருகிறவர்கள், தமிழகத்திற்கு வரும் பொழுது கோ-ஆப்டெக்ஸ் நிலையங்களுக்கு அங்குள்ள பொருள்களை வாங்குவதற்கு சென்ருல் அங்கே உள்ள விற்பனையாளர்கள் சிரிப்பதற்குக்கூட கஷ்டப்படுகிருர்கள். வாங்கவேண்டுமென்று நுழைகிறவர்கள்தான் சிரிக்க வேண்டியிருக்கிறது. 'தி கன்ஸ்யூமர் ஹேஸ் டு ஸ்மைல்' நான் கூட யோசித்துப் பார்க்கிறேன். நான் அவர்களிடம் சென்று எப்படி சிரிப்பது என்று சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு ஒவ்வொரு விஷயத்திலும் நவீனப்படுத்த வேண்டியிருக்கிறது. உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் அந்த விற்பனை நிலையங்களுக்குச் சென்று அங்குள்ள விற்பனையாளர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டு நின்று கொண்டிருந்தால் இப்படி இருக்கக்கூடாது சிரிக்க வேண்டுமென்று சொல்லி கொடுத்தால் நலமாக இருக்கும்போல் தோன்றுகிறது. எதிலும் 'ஹியூமன் அப்ரோச்' வேண்டும். எதற்காகச் சொல்லுகிறேன் என்ருல் சாதாரணமாக வருகிறவர்கள் ஏதோ வழியில்லாமல் கைத்தறி ஆடையைக் காட்டு என்ருல் அவர்கள் வக்கற்றுப் போய் வருகிருர்கள் என்ற எண்ணம் இருக்கக்கூடாது. அது ஒரு புராதனத் தொழில் என்பது மட்டுமல்ல. நவீன வளர்ச்சி அதில் அடங்கியிருக்கிறது என்பதை பொதுவாக எண்ணிப் பார்க்க வேண்டும்.

[திரு. கே. இராஜா முகமது] [1977 ஆகஸ்டு 17

விநியோக முறையில் குறைபாடுகள் இருக்கின்றன. வறியவர்கள் செய்கிற தொழிலில் கூட இடைத் தரகர்கள் செய்வதை நினைத்தால் நெஞ்சம் பதைக்கிறது. ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். நெசவாளர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கிறதோ இல்லையோ, அவர்களைப் பயன்படுத்துகிறவர்கள் யாராவது ஏழைகளாக இருக்கிறார்களா, விரல் விட்டுச் சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூட தனியார் துறையில் உற்பத்தி செய்து வைத்திருக்கும் பொருள்களை ஏன் வாங்கக் கூடாது என்று சொன்னார்கள். வாங்க வேண்டுமா, வேண்டாமா என்று வாதத்திற்கு அப்படிப்பட்ட சிந்தனை ஏற்பட்டாலும் கூட, நெசவாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற மனிதாபிமான அடிப்படையில் வாங்க முயற்சி எடுக்க வேண்டுமேயன்றி நெசவாளிகளை வைத்துக்கொண்டு இன்று வியாபாரம் செய்கிறார்களே, இந்த இடைத் தரகர்கள், இவர்களில் யாரும் ஏழைகள் இல்லை.

செயற்கைப் பட்டு உற்பத்தியைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். நூல் விநியோகம் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை உற்பத்தி செய்யக்கூடிய ஆலை அதிபர்களும் செயற்கைப்பட்டைப் பயன்படுத்தும் இந்தப் பெரிய இடைத் தரகர்களும் அல்லது நெசவாளர்கள் எல்லாம் வாலண்டரி அக்ரிமெண்ட் என்ற அடிப்படையில் கமிட்டி அமைத்துக்கொண்டு வாங்குகிறார்கள். அவர்களுக்கு வேண்டியவர்களுக்கு அதை விநியோகம் செய்கிறார்கள், என்ற நிலைமையை புரட்சித் தலைவருடைய அரசு வந்தவுடனேயே கடுமையாக எதிர்த்துப் போராடியிருக்கிறது. நிச்சயமாக வெற்றி பெறும், அரசு நேரடியாக இந்த செயற்கைப் பட்டை விநியோகிக்கும் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். காரணம், அவர்கள் தவறான வாதத்தை வைக்கிறார்கள். ஏதோ ஒரு விஸ்கோஸ் மில் அவர்களுடைய புத்திசாலிதனத்தால் லாபகரமாக நடப்பதாக ஆலை அதிபர்கள் கருதுகிறார்கள். உண்மை அதுவல்ல. நேற்று வன இலாகா மானிய கோரிக்கையின் மீது உறுப்பினர் லத்தீப் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அது பற்றி கொடைக்கானல் பகுதியிலிருந்து வருகிறவர்களிடம் நேரடியான அனுபவம் இருக்கிறது. மலிவான விலையில் அவர்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களான யூகாலிப்டஸ், புளுகம், வாட்டில், கொடுக்கிறோம். காரணம், தொழில் வளர்ந்தால் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்ற அடிப்படையில் தான் செயற்கைப் பட்டு நூல் ஏழை நெசவாளர்களுக்கு நியாயமான அளவில் கிடைக்க முயற்சி எடுத்தது யாருடைய குறுக்கீட்டாலோ என்று கருத முடியாது. எல்லா வகையிலும் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. சமூக பாதுகாப்பு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டிய பொறுப்பு இருப்பதால், நிச்சயமாக அதைப் பற்றி அரசு கவனம் செலுத்தும் என்று சொல்லி, கருத்துக்கள் தெரிவித்த உறுப்பினர்களுக்கு நேரடியாக ஒரு சில வார்த்தைகளைச் சொல்லி விவாதத்தை நீட்டிக்கொள்ளாமல் முடித்துக் கொள்கிறேன்.

1977 ஆகஸட் 17] [திரு. கே. இராஜா முகமமது]

மதிப்புக்குரிய உறுப்பினர் புருஷோத்தமன் நூல் தரமானதாக இல்லை, உடனேபுணம் கிடைப்பதில்லை, நியாய விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று சொன்னார்கள். அந்தக் குறைபாடுகள்எந்த அளவுக்கு உண்மையாக இருக்கின்றன என்று பரிசீலனைசெய்து தரத்தைப் பொறுத்த வரையில் நிச்சயமாக இன்றைக்கு கூட்டுறவு நூற்பாலைகள் தரமாக இருக்கின்றன. இதில் ஒன்றும்பிரச்னை இல்லை. இன்னும் சொல்லப்போனால், கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யக்கூடிய துணிகள் தனியார் துறைஉற்பத்தி செய்யக்கூடிய துணிகளைவிட தகுதியில், மதிப்பில் உயர்ந்திருக்கிறது என்ற நிலை இருக்கிறது.

நூல் விலையை ஒரே சீரான போக்கில் இருக்கும்படி நிச்சயமாக நடவடிக்கை எடுக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ். ஆர். இராதா அவர்கள் பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். இன்றைக்கு இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதே நேரத்தில் கைத்தறி நெசவாளர்கள் பல நோய்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள், அதிலும் குறிப்பாக காச நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள், அதனாலே அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று புள்ளி விவரங்கள் காணப்படுகின்றன. நெசவுத் தொழில் செய்கின்றவர்கள் குழி தோண்டி பாதி அளவிற்கு அந்தக் குழியிலே பாதி செத்துக் கொண்டிருக்கிற நிலைமையிலே, அந்த இடத்திலே நின்றுகொண்டு வேலை செய்கிறார்கள். அவர்கள் இந்த காச நோயால் பாதிக்கப்படுகிறார்கள். 100-க்கு 80 பேர் இந்த நோயால் பாதிக்கப்படுகிறார்கள் என்று வருத்தப்பட்டார்கள். எனவே நெசவாளர்கள் எங்கெங்கே இருக்கிறார்களோ அங்கேயெல்லாம் ஒரு ''மொபைல் யூனிட்''டை அனுப்பி அவர்களுக்கு நேரிடையாக இந்த காச நோய்க்கு சிகிச்சை அளிக்கப்பட வேண்டுமென்பதற்கு கைத்தறி இயக்குநரும், நாங்களும் முயற்சி எடுத்துக் கொண்டு இருக்கிறோம். இந்த நல்ல முயற்சியை ஒட்டி அவர்களுக்கு நிச்சயமாக பாதுகாப்பு அளிக்கப்படும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய ஏகாம்பர ரெட்டியார் பல்வேறு முக்கியமான கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலும் நெசவாளர்களுக்கு தனிப்பட்ட முறையிலே வங்கிகளிலிருந்து ஏதாவது கடன் கொடுத்தால் நல்லது என்று சொன்னார்கள். அவருடைய கவனத்திற்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களில் உள்ள நெசவாளர்களுக்கு அரசு பொறுப்பேற்று வங்கிகளிலிருந்து 1,500 ரூபாய் கடன் வாங்கி இவர்கள் தனியாரிடத்திலே கடன்பட்டிருந்தால் அதைத்

[திரு. கே. இராஜா முகமது] [1977 ஆகஸ்டு 17

திருப்பிக் கொடுத்துவிட்டு மிச்சம் இருந்தால் நம்முடைய சங்கங்களில் ''டிபாசிட்''டாக அவர்கள் பெயரில் செய்வதற்கு மிகப் பெரிய ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இந்த அடிப்படையில் ''ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா'' 4.5 கோடி ரூபாயைக் கடனாகத் தர இருக்கிறார்கள். அதற்கான யோசனையை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். நிச்சயமாக இது செயல்படுத்த முடியும் என்பதை கனம் உறுப்பினரின் மேலான கவனத்திற்கு இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து கரூர் நிகழ்ச்சி. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் கொஞ்சம் அமைதியான முறையிலே அணுக வேண்டுமென்ற ஒரு முறையை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கனவே பாரதப் பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்கள் கூறினார்கள், வன்முறையிலே ஈடுபட்டு போராட்டம் நடத்துகிறவர்களை நாங்கள் சந்திக்க மாட்டோமென்று. ஆனால் நம்மைப் பொறுத்த மட்டில் மிகத் தெளிவாக ஒன்றைக் கூறுகிறோம். வன்முறையைத் தூண்டாத அளவிற்கு பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் குறைகளைச் சொல்கிறபோது நிச்சயமாக அதிலே உள்ள நியாயத்தை, அந்தப் பிரச்னையில் உள்ள தன்மையினை ஆராய்ந்து நிச்சயமாக தக்கதோர் பரிகாரம் காணப்படும் என்றும், சட்டப்படி அவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய பாதுகாப்பு அளிக்கப்படுமென்றும், அவர்கள் இந்த ஆட்சியை சங்கடத்திற்குள்ளாக்கக்கூடிய எதையும் செய்யக்கூடாது என்பதை இந்த நேரத்திலே சொல்லி, ஏற்கனவே நாங்கள் இந்தத் துறையின் மூலம் தக்க நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறோம். அவர்கள் எங்களுக்குத் தந்தி அனுப்பியும், தொலை பேசி மூலமும் தொடர்பு கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கவும், மற்ற விஷயங்களில் கூலி நிர்ணயம் செய்யவும், கூலி வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. நாளைய தினம் அவர்கள் இங்கு வந்து இயக்குநரை சந்திக்க இருக்கிறார்கள். அதற்குப் பிறகு என்னைச் சந்திக்க இருக்கிறார்கள். நாங்கள் நிச்சயமாக சுமுகமான முறையில் இந்தப் பிரச்னையை தீர்க்க இருக்கிறோம். தக்க நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

அவர்கள் மிகத் தெளிவாக ஒன்றை வலியுறுத்துகிறார்கள். இந்த நூல் அவர்களுக்கு குறைந்த விலையில் கிடைப்பதில்லை என்கிறார்கள். இந்தப் பொறுப்பு, அதற்கான அதிகாரம் யாருக்கு இருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். மத்திய அரசு இதற்குப் பொறுப்பு ஏற்றிருந்தாலும், நிச்சயமாக மத்திய அரசோடு போராடியாவது இதிலே முடிவு காண்கின்ற முயற்சிகளிலே இநத அரசு ஈடுபட்டு, இதற்குத் தீர்வு காணப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977 ஆகஸ்ட் 17] [திரு. கே. இராஜா முகமது]
மாலை 5-20

இல்லை என்று சொன்னால் பிறகு நிவாரணம், பிறகு நுனித்தேக்கம் பிறகு நிவாரணம் என்று போகும். மாண்புமிகு உறுப்பினர் சுப்பு அவர்கள் சொன்னார்கள், தண்டவாளங்கள் இரண்டும் ஒன்றோடொன்று இணையாமல் போய்கொண்டிருக்கின்றன என்று. இரண்டு தண்டவாளங்களும் இணைந்துவிடக்கூடாது, இணைந்துவிட்டால் வண்டி கவிழ்ந்துவிடும். எந்த அளவிற்குப் போவது என்பதில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எந்த இடத்திற்குப் போகிறது எந்த இடத்தில் நிற்கிறது என்பதைப் பார்ப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் இந்தப் பிரச்னை நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கவேண்டும். பிரச்னையே இல்லாமல் எந்தத் தொழிலையும் நடத்த முடியாது. மனித சக்தி போராடிக்கொண்டிருக்கும்போது பிரச்னைகள் வரத்தான் செய்யும். ஆனால், அவை நம் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும்படியாகப் பார்த்துக்கொள்ளவேண்டும். இந்தக் கருத்துக்களை நாம் மத்திய அரசிடம் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜேம்ஸ் அவர்கள் இதைக் கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். இது மனிதாபிமானப் பிரச்னை. இந்த ஆட்சிக்காலத்தில் இந்த பிரச்னை தீர்க்கப்பட்டது என்று நான் மார்தட்டிக்கொண்டு சொல்லவில்லை, இது ஒரு சமூகப் பிரச்னை.

நூல் விலையை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு லட்சுமிநாராயணன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நா பெட்டூரியல்ஸ் பாங்க் ஒன்று இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். நா பெட்டூரியல் பாங்க் எப்படி வரும்? நூல் இருந்தால்தானே. அடிப்படையில் நூல் இருக்க வேண்டும், இரசாயனப் பொருள்கள் இருக்க வேண்டும். இந்த இரண்டும் வேண்டுமென்றால் மத்திய அரசின் ஒத்துழைப்பு முழுக்க முழுக்க தேவைப்படுகிறது. மத்திய அரசோடு தொடர்பு கொண்டு அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தயாராயிருக்கிறோம், தொடர்ந்து பாடுபட்டுவருகிறோம் என்பதை இந்த நேரத்தில் இந்த அவையின் கவனத்திற்கு எடுத்து வைக்க விரும்புகிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: இப்போது மத்திய அரசு மாநில அரசுக்கு ஒத்துழைப்பு தரவில்லையா? மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிக்கையில் நான் பார்த்தேன். ஆறு திட்டங்கள் மத்திய அரசின் திட்டங்கள்தான் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த அளவிற்கு மத்திய அரசு மாநில அரசுக்கு சலுகைகள் செய்து கொண்டிருக்கும்போது, இன்னும் கூடுதலாக என்னென்ன வேண்டும் என்று கேட்டால் அவற்றைக் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: திரு. ஜேம்ஸ் அவர்களின் உத்தரவாதத்திற்கு நான் மிகவும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்கள் கொடுக்கிறபோது நாங்கள்

வாங்கிக் கொள்ள நிச்சயமாக 24 மணி நேரமும் தயாராகயிருக்கிறோம், அதில் நாங்கள் ஒய்வு எடுத்துக்கொள்ள விரும்பவில்லை.

நூல் விலை நிர்ணயப் பிரச்னையை கொஞ்சம் யதார்த்தத்துடன் பார்க்கவேண்டும். கூட்டுறவு மில்கள் மூலம் குறைத்துக் கொடுக்கக்கூடாதா என்று கேட்கிறார்கள். இதிலுள்ள விநோதமான நிலை என்னவென்றால் சில நேரங்களில் பருத்தி விலையை விட குறைவாக பருத்தி வாங்கி நூல் செய்கிறோம்—நூல் விலை வந்துவிடுகிறது. சில நேரங்களில் அடக்கவிலை கிடைக்க வேண்டும் என்று வரும்போது ஓப்பன் மார்க்கட்டில் குறைவாக இருக்கிறது, எனவே சங்கங்களில் உள்ளவர்கள் சொல்கிறார்கள், ஓப்பன் மார்க்ட் விலை குறைவாக இருக்கிறது, எப்படி அடக்க விலைக்கு வாங்குவோம் என்று சொல்கிறார்கள். சிலநேரங்களில் ஓப்பன் மார்க்கட்டில் அதிகமான விலைக்கு விற்கிறது என்று சொல்லும்போது அடக்கவிலைக்கு கொடுத்தால் என்ன என்று கேட்கிறார்கள். இந்தியா முழுமைக்கும் ஒரு சீரான கொள்கை இருக்க வேண்டும். அப்படியிருந்தால்தான் இந்தத் தொழிலுக்கு ஆபத்து வராமல் பார்த்துக்கொள்ள முடியும்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்கள் நூல் விலை பற்றியும், இடைத்தரகர்கள், மில் முதலாளிகளுக்கு குறைந்தபட்ச லாபம்தான் கிடைக்க வேண்டும் என்றெல்லாம் தெளிவாக எடுத்துச்சொன்னார்கள். அதேபோல் கூட்டுறவுக்கு உள்ளேயும் வெளியேயும் நெசவாளர்களுக்கு என்ன பாதுகாப்பு, அவர்களுக்குள்ள கூலிப்பிரச்னை, வாழ்க்கைப் பிரச்னை பற்றியெல்லாம் கேட்டார்கள். -

ஒரு முக்கியமான அறிவிப்பை, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் சார்பில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் அமைந்திருக்கும் இந்த அண்ணா அரசு இந்தக் கைத்தறித் தொழிலாளர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கைத்தறித் தொழில் வாரியம் ஒன்றை புதிதாக அமைக்க இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (ஆரவாரம்) அதன் மூலம் நித்தியானந்த கனுங்கோ குழு அறிக்கையிலிருந்தும், ராஜா சுப்பிரமண்யம் குழு சொல்லியுள்ளதையும், சந்தானம் குழு அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிற கருத்துக்கள் அத்தனையையுமே பரிசீலனை செய்து எந்தெந்த வகைகளில் இவர்களுக்கு நியாயமான பாதுகாப்பு கொடுக்க முடியும் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து இந்த வாரியம் இயங்கும். நிச்சயமாக அந்த அளவில் ஒரு நல்ல பாதுகாப்பை இந்த நெசவாளர்களுக்கு நிரந்தரமாகக் கொடுக்கவேண்டும் என்பதையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, பாலாஜி அவர்கள் கூலி நிர்ணயம் பற்றிச் சொன்னார்கள். தவறு செய்கிற தலைவர்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு எதிர் கட்சித் தலைவர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன், இந்த இடைத்தரகர்கள் வெளியே இருந்து

மட்டும் வரவில்லை. இந்தச் சங்கங்களை நடத்திக்கொண்டிருக்கிறவர்கள் பலர் நுழைந்திருக்கிறார்கள். வறியவர்களின் வாழ்க்கையில், ஏழை மக்களின் எதிர்காலத்தில், அவர்களின் வயிற்றில் மண்ணைப்போடுகிற அளவில் அரசியலைப் புகுத்தி பலதரப்பட்ட தலைவர்கள் நாம் கொடுக்கிற நூலை சரியாக வழங்காமல் தவறாகப் பயன்படுத்துகிறார்கள். இதனைத் தடுத்தாக வேண்டும். துணித்தேக்கம் அதிகம் இருந்தால் நெசவுத் தொழில் நசித்துப் போய்விடும், அவர்களுக்கு வேலை கிடைக்காது என்று ரிபேட் அறிவிக்கிறோம், மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் ஓரளவு பொருள் நஷ்டம் ஏற்பட்டாலும் கவலையில்லை, இருந்தாலும் அந்தத் தொழில் நடக்க வேண்டும் என்று சலுகைகள் அறிவிக்கிறோம். அதையும் தவறாகப் பயன்படுத்துகிறபோக்கு தலைவர்களிடம், டயரக்டர்களிடம் இருப்பதாக காஞ்சிபுரம் பாலாஜி அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள்.

இதிலும் நிச்சயமாக போதிய கவனம் செலுத்தப்படும். மனிதாபிமானம் இல்லாமல் கொஞ்சம் கூட தொழிலைப்பற்றி தெரியாதவர்கள் எல்லாம் தலைவர்களாக இருக்கிறார்கள். ஓரளவுக்கு இந்தத் தொழிலைப்பற்றி தெரிந்து வைத்திருக்கலாம். நான் புதிதாக இந்தப் பொறுப்புக்கு வந்திருந்தாலும், யார் யாரிடம் இது பற்றி பேச வேண்டுமோ அவர்களிடம் எல்லாம் பேசி தெரிந்து வைத்திருக்கிறேன்.

திரு. அழகர்சாமி அவர்கள், சந்தித்துப் பேசியிருக்கிறார்கள். திரு. சுப்பு அவர்களும் திரு. மாரிமுத்து அவர்களும் சந்தித்து பல பிரச்னைகளைப்பற்றி பேசியிருக்கிறார்கள். இப்படியெல்லாம் பிரச்னைகளை தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது. இந்த நிலைமையில், பல்வேறு இடங்களில் ஒன்றுமே இதைப்பற்றி தெரியாதவர்கள் நிர்வாகப் பொறுப்பில் இருந்து வருவதைப் பார்க்கிறோம். நிச்சயமாக கவனித்து அரசாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, திரு. ஜேம்ஸ் அவர்கள் கதரைப்பற்றி குறிப்பிட்டார்கள். ஓரிருவராவது கதரைப்பற்றி பேச வேண்டும் என்று நினைத்தேன். ஜேம்ஸ் அவர்கள் கதரைப்பற்றி சொன்னார்கள். கதரைப் பொறுத்த மட்டில் இன்றைக்கு நாட்டில் ஏழை எளிய மக்களுக்கு, இது பெரியதொரு பற்றுக்கோடாக இருக்கிறது என்று சொல்லிவிட முடியாது என்றாலும்—கிராமங்களில் இருக்கக் கூடிய ஏழை எளிய மக்களுக்கு வருவாய் வரக்கூடிய நல்லதொரு தொழில் என்ற முறையில் பொருளாதார முறையில் இந்தத் திட்டத்தை காந்தியடிகள் அறிமுகம் செய்தார்கள். கதரைப் பொறுத்த அளவில் இன்றைக்கு அதில் எவ்வளவோ பிரச்னைகள் இருக்கின்றன. இதனுடைய அபிவிருத்திக்கு மாநில அரசு எந்த அளவுக்கு உதவியை கொடுக்கிறது.....

'non-trading losses are being compensated by the State Government'

இன்றைக்கு இருக்கின்ற நிலைமைக்கேற்றவாறு கிராமங்களில் வேலை வாய்ப்புகளை மாநில அரசு கொடுத்துக் கொண்டிருக்கிறது. துணிகளைப் பொறுத்தவரையில், சில பிரச்னைகள் இருக்கின்றன. இது எப்படி இயங்கி வருகிறது என்பதைப் பார்த்தால், ஆரம்ப காலத்தில் கிஸான் சர்க்கா, பின்னால் அம்பர் சர்க்கா, பின்னால் நியூ மாடலில் சர்க்கா, அதாவது மரங்கள் உள்ள பகுதிகளே இல்லாமல் அத்தனையும் உலோகங்களினாலேயே செய்யப்பட்ட சர்க்கா, இப்படி பல சர்க்காக்கள் வந்தன. இவை 303 இடங்களில் மையங்களில் வைக்கப்பட்டிருக்கிறது. பருத்தியாக கொடுத்து நூலை வாங்கிக்கொள்வது என்றால் அதிலும் பல கஷ்டங்கள் இருக்கிறது. பட்டையாக தயாரித்து கொடுத்துவிடலாம் என்று இதற்கென்று 2 லட்சம் ரூபாய்க்கு மான்யம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே கதர் தொழில் வாரியத்தின் மூலம் மேலும் இதில் கவனம் செலுத்தப்படும். புதிய ரக இயந்திரங்களை, பருத்தியைப் பட்டை செய்ய பயன்படுத்தக்கூடாது என்று இந்த காதி, கிராமத்தொழில் ஆணைக்குழு சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஆனால் சர்வோதயக்காரர்கள் இதை பயன்படுத்துகிறார்கள். அப்படி வரும்பொழுது, எளிமையான வகையில் அவர்கள் நூற்களை நூற்க முடியும். அதற்காக லிக் மில்ஸ் என்றிருப்பன்வகளில் ஒன்றை எடுத்துக்கொண்டு அதன் மூலம் இப்படிப்பட்ட பட்டைகளை தயாரித்துக் கொடுக்க முடியுமா என்றும் ஆலோசித்துக் கொண்டிருக்கிறோம். முக்கியமாக 20 கௌன்ட் நூலை கொடுக்க வேண்டும் என்று வரும்போது அவர்கள் 60 கௌன்ட் நூலை கொடுக்கிறார்கள். இதை மற்றவர்களிடம் கொடுத்து சரியான படி பட்டை போட்டுத்தராத காரணத்தால் நாமே இதை நேரடியாக செய்யலாமே என்றும் யோசித்துக் கொண்டிருக்கிறோம். இதை நவீனப்படுத்துவோம் என்று சொல்லும்போது இதை இயந்திரத்தின் மூலம் செயல்படுத்தப்படும் என்று பொருள் அல்ல. நம்முடைய டேஸ்ட்க்கு தகுந்தவாறு நமது விருப்பத்திற்கு ஏற்ப போதிய கவனம் செலுத்தி எந்த அளவுக்கு முன்னேற முடியுமோ அந்த அளவுக்கு செயல்படுவோம், விஞ்ஞான ரீதியில் ஐ. ஐ. டி.-யில், இதைப் பற்றி பரிசீலனை செய்யச் சொல்லி, அதிலிருந்து கிடைக்கும் பயன்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு.......

'How to modernise the Handloom Industry' என்று பார்த்து,—இன்னும் சொல்லப்போனால் பல புள்ளி விபரங்களையும் சேகரித்து, டிமான்ட் அனலைஸிஸ் செய்து கொடுக்கிறார்கள், அதாவது எந்த அளவுக்கு தேவை, எவ்வளவு ஆண்டுகளுக்கு தேவைப்படும், எந்தெந்த மாநிலங்களில் தேவைப்படுகின்றன, எந்த அளவுக்கு தேவைப்படுகின்றன என்கின்ற விபரங்களையெல்லாம் கொடுக்கிறார்கள். அப்படியெல்லாம் இந்தத் தொழி

லில் அக்கறை எடுத்துக்கொண்டு இதில் மாபெரும் ஒரு மாற்றத்தை செய்யலாம்......என்று எண்ணி நமது முதலமைச்சர் அவர்கள் " Our Chief Minister wants to make a break—through" என்ற அளவில் நிச்சயமாக, விஞ்ஞான ரீதியாக, யதார்த்த அணுகு முறையை வைத்துக்கொண்டு, இருக்கின்ற சிக்கல்களை தீர்த்து, நல்லபடியாக எப்படி நடத்த வேண்டும் என்பதை அக்கறையோடு கவனம் செலுத்த வேண்டும் என்று கருதியதின் காரணமாகத்தான், தனியாக இந்தத் துறைக்கு என்று—நெசவுத் துறைக்கு என்று ஒரு அமைச்சரை நியமித்து, இதில் முழு அக்கறை செலுத்தப்பட்டு வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> நாளைய தினம் குடியரசுத் தலைவர் அவர்கள் இங்கு வருகை தரவிருப்பதால் சில மாற்றங்கள் செய்ய வேண்டியிருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலுரையை முடிக்க இன்னும் எவ்வளவு நேரம் ஆகும் என்பதை தெரிவித்தால் நல்லது.

<u>மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:</u> இன்னும் ஐந்து நிமிடங்களில் முடித்து விடுகிறேன்.

[மாலை 5.30]

பரமக்குடி பகுதியில் உண்மையான நிலை 95% வருடம் பூராவும் நாமே கொள்முதல் செய்தாலும், சாதாரணமாக இந்த 2, 3 மாதங்கள் லீன் மாதங்களாகத்தான் இருக்கும்.

மாண்புமிகு உறுப்பினர் நல்லதம்பி அவர்கள்கூட கேட்டார்கள். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் பிறந்த நாட்களிலே ரிபேட் அறிவிக்கப் போகிறீர்களா என்று கேட்டார்கள். அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் கேட்டபோதுகூட, இந்த அரசுப் பொறுப்பை புரட்சித் தலைவர் அவர்கள் ஏற்றுக்கொண்டவுடன், முதலில் இதைத்தான் கேட்டார்கள். அப்பேர்ப்பட்ட அந்த அறிவிப்பு நிச்சயம் செய்யப்படும். செப்டம்பர் மாதம் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் நினைவாகவும், பகுத்தறிவு பகலவன் பெரியார் அவர்களுடைய நினைவாகவும் இந்த விசேஷ தள்ளுபடி திட்டம் செயல்படுத்தப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

இப்போது பல்வேறு நல்ல யோசனைகளை எல்லாம் மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். இது ஏற்கனவே பெரிய பிரச்னைகள் உள்ள தொழில். எல்லோருக்கும் சம்பந்தப்பட்ட காரியம். நான் விளக்கம் சொல்ல வேண்டுமென்றால், முடியாதது அல்ல. ஆனால், காலநிலை இடம் தரவில்லை.

'ஆடையே இல்லாமல் அரை நாழிகை இருக்க முடியாது' என்று சொன்னார்கள். முடியுமா, முடியாதா என்றால் முடியும். ஆனால், கூடாது என்ற முறையிலேதான் அதற்கான கவனம் செலுத்தப்படுகிறது; ஏற்பாடுகள் செய்யப்படுகிறது. (பலத்த ஆரவாரம்) மக்கள் எல்லோரும் இதிலே அதிகமாக ஈடுபடக் கூடிய முறையிலே இருக்கவேண்டும். எல்லோருமே இதற்கு முன்வந்து, இந்தத் துணியை வாங்குவதற்கு, நம்மிடத்தில் 3 ஆடைகள் இருந்தால், ஒரு ஆடையாவது இந்தத் துணியில் இருந்தால் நல்லது என்ற அளவிலே மக்கள் இதை ஒரு பிரச்னையாக எடுத்துக்கொண்டு, மக்கள் ஆதரவு கொடுத்து, மக்களே இதை வாங்குகிறோம் என்ற அளவிலே இருக்கவேண்டும்.

'They are not purchasing, they are patronising this Industry' என்ற முறையிலே எடுத்துக்கொண்டு இந்தத் தொழிலுக்கு எல்லோரும் ஒட்டுமொத்தமாக பாதுகாப்பு தரவேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். "ஆளும் கட்சியின் அரவணைப்பும், எதிர்க்கட்சியின் ஒத்துழைப்பும், அதிகாரிகளுடைய சுறுசுறுப்பும் இருந்தால்" இந்த தொழிலுக்கான பிரச்சனைகளைத் தீர்த்துவிடலாம் என்று சொன்னார்கள். எனவே, அரசியல் ரீதியாக இந்தப்பிரச்னையைப் பார்க்காமல், மனப்பூர்வமாக இதை அணுகுகின்றோம் என்பது எல்லோருக்கும் தெரியும். அந்த வகையிலே இந்தப் பிரச்சனைகளை அணுகிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, நேரம் இல்லாத காரணத்தினாலே, நீங்கள் பெரிய மனது வைத்து, உங்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இந்த ஷோரூம்களிலே பணிபுரிகின்றவர்களுக்கு வெளிநாடுகளிலே இருந்து யாராவது வந்தால், அவர்களை எப்படி வரவேற்பது என்பதுகூடத் தெரியவில்லை என்று சொன்னார்கள். இதற்கு என்று ஒரு கார்ப்பரேஷன் இருக்கிறது. அதன் மூலம் மற்ற ஷோரூம்களுக்கு மிகமிக முற்போக்குப் பிரிவினரை மட்டும்தான் வேலையில் அமர்த்தியிருக்கிறார்கள். முற்போக்குப் பிரிவு என்று எதை நான் சொல்கிறேன் என்பதை அமைச்சர் அவர்கள் புரிந்துகொள்வார்கள். 7 பேர்கள் இந்த மிக மிக முற்போக்குப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். கைத்தறி நெசவாளர்கள் எவ்வளவோ பேர்கள் வேலையில்லாமல் வாடுகிறார்கள். கைத்தறி இலாகா சம்பந்தப்பட்ட வரையிலாவது, அவர்களுடைய தொழிலுக்கு முதலிடம் கொடுத்து, கைத்தறி நெசவாளர்களுடைய பிள்ளைகளுக்கு முதலில் வேலை கொடுக்கப்பட வேண்டும். அங்கே அவர்கள் ஆண்களாக இருந்தாலும் சரி,

பெண்களாக இருந்தாலும் சரி, அந்த நிலைமையை அங்கே ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, அந்த கார்ப்பரேஷனில் 8 சூபர்வைசர்கள் இருக்கிறார்கள். பிற்பட்டவர்கள் அதிலே ஒருவர்கூட கிடை**யாது**. அதிலேகூட மிகமிக முற்பட்டவர்கள்தான் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, அந்த நிலையை மாற்றி, நெசவாளர்களும் பிற்பட்டவர்கள்தான், அவர்களுக்காக இயங்குகின்ற ஒரு இலாகாவிலே, முற்போக்கு வகுப்பைச் சேர்ந்தவர்கள் ஆக்கிரமித்துக் கொள்வது முறைதானா? ஏற்கனவே அரசாங்கத்தில் ஒரு ஜீ. ஓ. இருக்கிறது, இனிமேலாவது அந்த ஜீ. ஓ.ப்-படி இவ்வளவு பேர்கள் பிற்பட்டவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இனிமேலாவது இந்த இலாகாவில் குறிப்பாக நெசவாளர் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளை எடுப்பதற்கான ஒரு உத்தரவை அமைச்சர் அவர்கள் போடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் இந்தக் கேள்வியை எழுப்பினார். அதற்கு முன்னால், இந்த மன்றத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் லத்திப் அவர்கள் இதே கோரிக்கையைச் சொன்னார்கள். அது எந்த அளவுக்கு செயல்படுத்தப்படும் என்பதைப் பார்க்க கடமைப்பட்டிருக்கிறேன். இரண்டாவதாக, வேலை வாய்ப்பு கொடுக்கிறபோது, நாம் ஏற்கனவே அரசாங்கத்தினுடைய ஆணைப்படி, அதாவது பார்வேர்ட் கம்யூனிடி, பின்னர் ஷெடியூல்டு கம்யூனிடி, அதற்குப் பின்னர் பேக்வேர்ட் கம்யூனிடி என்ற வகையிலே பின்பற்றுவதற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம். அது ஒட்டுமொத்தமாக நிராகரிக்கப்பட்டிருக்கிறதா என்பதையெல்லாம் நிச்சயமாக பரிசீலனை செய்யப்பட்டு, நியாயம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த முயற்சி மேற்கொள்ளப்படும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ரகுமான்கான்: மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் சில தகவல்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்பர்மேஷனா கிளாரிபிகேஷனா? நீங்கள் பேசவில்லையே.

* திரு. ஏ. ரகுமான்கான். இன்பர்மேஷன், ஹாண்ட்லூம் கார்ப்பரேஷன் காபிடல் 120 லட்சம் ரூபாய். இப்போதே 78,000 ரூபாய் நஷ்டத்தில் இருப்பதாகத் தகவல். நாளையதினமோ நாளை மறுநாளோ ஒரு டீம் சேர்மன் உட்பட அமெரிக்காவுக்கு

இன்னொரு டீம் ஜப்பானுக்கும் போவதாக தகவல். இதற்கு மூன்று லட்சம் ரூபாய் ஆகும் என்று சொல்லப்படுகிறது. சிக்கனமான அரசு வீண் விரயத்தைத் தடுக்கும் அரசு இதைத் தடுக்குமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்களுக்கு நானே சொல்கிறேன். இதெல்லாம் அரசுக்கு அத்தியாவசியமானவை கூட. எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும் அந்நிய நாட்டுத் தொடர்போடு பல திட்டங்களை நிறைவேற்ற வேண்டியிருக்கிறது. அதையொட்டி குழுக்கள் வெளிநாடுகளுக்குச் சென்று தொழில் நுட்பங்களை அறிந்து வருகின்றன. இதற்கு அமைச்சர் அவர்களிடம் விளக்கம் கேட்பது அவ்வளவு சரியாகத் தெரியவில்லை.

திரு. ஏ. ரகுமான்கான்: நான் சொல்ல விரும்புவது அது நஷ்டத்தில் ஓடுகிறது என்று சொல்கிறார்கள். வீண் விரயத்தைத் தடுக்கவேண்டுமென்று கூறுகிற அரசு இதை ஏற்றுக் கொள்கிறதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இந்தக் கைத்தறி நிதி வர்த்தகக் கழகத்தின் சார்பில் வெளிநாடுகளுக்குச்செல்ல இருக்கின்ற அதிகாரிகள் பற்றிய கேள்வி ஒன்றை எழுப்பியிருக்கிறார்கள். ஏற்கனவே சட்டமன்றத்தில் கூட வெளிநாடுகளுக்கு அதிகமாக கைத்தறித் துணிகளை ஏற்றுமதி செய்யவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினார்கள். கைத்தறித் தேக்கப் பிரச்னை முக்கியமான காரணமாக இருக்கிறது. நேரடியாக அரசே வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற திட்டத்தின் அடிப்படையில்தான் அதிகாரிகள் செல்லுகிறார்கள். தனியார் துறையைச் சார்ந்தவர்கள் 25 கோடி ரூபாய் அளவுக்குத் தமிழகத்தில் இருந்து கைத்தறியை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறார்கள். நாமே முயற்சி செய்து மார்க்கட் நிலவரங்களை அறிந்து, அங்குள்ள வியாபாரிகளை நேரடியாகக் கண்டு மார்க்கட் நிலவரங்களை அறிந்து ஏற்றுமதி செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடுதான் அவர்கள் செல்லுகிறார்கள். குறிஞ்சிபாடியில் ஏற்றுமதித் திட்டத்திற்காக உற்பத்தி நிலையம் உருவாக்கி இருக்கிறோம். மத்திய அரசும் நிதி உதவி இருக்கிறது. அதையெல்லாம் வைத்துக் கொண்டு இந்த கழகத்தின் மூலம் அவர்களை அனுப்புகிறோம். வியாபார நோக்கோடு நல்ல முயற்சியாக எடுக்கப்படுகிற இந்த நடவடிக்கையை ஆரம்பத்தில் லாப நஷ்டக் கணக்குப் பார்த்துச் செய்ய முடியாது. இது எப்படிச் செயல்படுகிறது என்று ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் பார்த்துவிட்டு அதிலே லாபம் வருகிறதா நஷ்டம் வருகிறதா என்று பரிசீலிக்கலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: கடையநல்லூர் கூட்டுறவுச் சங்கங்களில் சுமார் 113 கூட்டுறவுச் சங்கங்களின்மீது கடந்த பல ஆண்டுகளாக வழக்குகள் நடைபெற்று வருகின்றன. அது நிர்வாகச் செலவுக்கூட பயன் அளிக்கக்கூடிய வகையில் இல்லை, திருப்பிப் பெறவேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு சட்டத்துறையிலும் கூட அந்தக் கருத்து தெரிவிக்கப்படுவதாக அறிகிறேன். அதை வாபஸ் பெற அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கடையநல்லூர் கூட்டுறவுச் சங்கங்களின் மீது ஒரு மோசடி வழக்கு தொடரப்பட்டு தொடர்ந்து செயல்படுத்தப்படுமா அல்லது விட்டு விட்டார்களா என்பது பற்றிக் கேட்கிறார்கள். உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்—10 லட்ச ரூபாய் பாக்கியை வசூலிப்பதற்காக 12 லட்சம் ரூபாய் செலவழிக்கக்கூடிய நடவடிக்கையில் நிச்சயமாக இந்த அரசு இறங்காது. ஆடிட் ரிப்போர்ட்டில் என்ன இருக்கிறது, லா டிப்பார்ட்மென்டில் என்ன கருத்துத் தெரிவிக்கிறார்கள் என்பதையெல்லாம் கேட்டு அறிந்து நிச்சயமாக நல்ல முடிவை அரசு எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*திரு. என். வரதராஜன்: அமைச்சர் அவர்கள் இடைத்தரகர்களைப் பற்றி அழகாக, அற்புதமான கருத்தைப் படைத்தார்கள் மெத்த மகிழ்ச்சி, இந்த விவாதத்தில் முக்கியமான ஒரு கருத்து—கைத்தறியை விசைத் தறிகள் ஆக்கிரமித்துக் கொண்டு லைசென்ஸ் இல்லாது நடத்தப்படுவது பெரிய சிக்கலை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது. இன்று கரூரில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும் இந்தப்பிரச்சினை சம்பந்தப்பட்டுள்ளது இந்தப் பிரச்சனையைக் கருத்தில் கொண்டு அதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: உறுதியான, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசு அதிகாரிகளுக்கு யோசனை சொல்லப்பட்டிருக்கிறது. எப்படிப்பட்ட நடவடிக்கை என்று இந்த மன்றத்தில் சொல்லிவிட்டால் அதிலிருந்து தப்பித்துக் கொள்ள முயற்சிக்கக்கூடும் என்ற காரணத்தால் சொல்ல விரும்பவில்லை. ஆனால் நிச்சயமாக சட்டத்திற்குப் புறம்பாக அனுமதி இல்லாமல் விசைத்தறி வைத்திருப்பவர்கள் மீதும், கட்டுப்பாடாக இதை இதைத்தான் அவர்கள் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாட்டை மீறுபவர்கள் மீதும் தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாலை 5-40)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்பொழுது வாக்கெடுப்பு.

திருவாளர்கள் எஸ். ஜே. சாதிக் பாட்சா, ஏ. ஆர். மாரிமுத்து, வி. கே. கோதண்டராமன் ஆகியோர் இருப்பிடங்களில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றனவாகக் கருதப்பெற்றன.

திருவாளர்கள் ஜே. ஜேம்ஸ், சோ. அழகர்சாமி ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :—''நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும் துணித் தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,30,40,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திருவாளர்கள் என். கிட்டப்பா, ரெ. வீ. சவுந்திரராஜன், எ. சுவாமிதாஸ் ஆகியோர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி:—'' நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 62,30,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும் ''.

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

9. அறிவிப்பு.

பேரவையில் அமரர் கு. காமராஜ் அவர்களது படம் திறந்து வைக்கப்பெறும் நிகழ்ச்சி குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து பேரவைக்கு ஓர் அறிவிப்பு—நாளை இப்பேரவை மண்டபத்தில் இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் அமரர் காமராஜ் அவர்களின் திருவுருவப் படம் காலை 10-30 மணிக்கு திறந்து வைக்கப்படும். இவ்விழாவிற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் அழைப்பிதழ் அனுப்பப்பட்டுள்ளது. உறுப்பினர்கள் அனைவரும் வந்து நிகழ்ச்சியில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள், 19—8—77 அன்று காலை 9 மணி அளவில் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை மாலை 5-43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

A. *Statutory Rules and Orders.*

NIL.

B. *Reports, Notifications and other papers.*

@68. Policy Note on Demand No. 13—Administration of Justice, 1977-78 (English and Tamil).

@69. Policy Note on Demand No. 14—Jails, 1977-78 (English and Tamil).

†70 Policy Note on Department of Correctional Administration, 1977-78 under Demand No. 14 (English and Tamil).

† 71. Policy Note on Demand No. 25, Chinchona, 1977-78 (English and Tamil.)

† 72. Performance Budget of Chinchona Department for the year, 1977-78 (English).

£73. Commercial Budget of Chinchona Department for the year, 1977-78 (English).

£74. Policy Note on Demand No. 45—Forest Department, 1977-78 (English and Tamil).

£75. Performance Budget of Forests for the year, 1977-78 (English).

% 76. A review on Industrial Growth in Tamil Nadu—Handlooms and Textiles—1976-77 (English and Tamil).

% 77. Performance Budget of Directorate of Handlooms and Textiles for the year 1977-78 (English and Tamil).

% 78. Policy Note on the Tamil Nadu Khadi and Village Industries Board (English and Tamil).

@ 79. Policy Note on Demand No. 30—Social Welfare, 1977-78 (English and Tamil).

@ 80. Policy Note on Demand No. 22—Animal Husbandry, 1977-78 (Tamil).

% 81. Policy Note on Demand No. 22—Animal Husbandry, 1977-78 (English).

@ 82. Performance Budget of Animal Husbandry Department, 1977-78 (English).

@ Despatched to members on 15th August 1977.

† Circulated to members on 13th August 1977.

£ Despatched to members on 13th August 1977.

% Despatched to members on 14th August 1977.

இணைப்பு-I.

[....562ஆம் பக்கங்களிலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண்.—22 கால்நடை வளர்ப்பு.

கொள்கை விளக்கம்.

1. முகவுரை.

கால்நடை பராமரிப்புத் துறையின் முக்கிய நோக்கம் கால்நடை உற்பத்தித் திறனை பெருக்குவதாகும். கால்நடை, செம்மறியாடு, பன்றி, கோழி இவற்றை அறிவியல் முறையில் இனப் பெருக்கம் செய்தல்; விஞ்ஞான முறைப்படி உயர்வு அளித்து பால் பண்ணை, கோழிப் பண்ணை, பன்றி வளர்ப்பு இவற்றை நிர்வகித்தல்; விலங்குகளுக்கு ஏற்படும் நோய்களைத் தடுத்து அவற்றுக்குச் சிகிச்சை அளிப்பதற்கான வசதிகளை அளிப்பது ஆகியவை இப்பணியில் அடங்கும். பொதுவாக நம் உணவில் புரோட்டின் சத்து குறைவாகவும், அதிலும் குறிப்பாக பால், இறைச்சி, முட்டை போன்ற விலங்கு புரோட்டின் சத்து மிகவும் குறைவாக உள்ளது. ஒரு நபருக்கு 300 கிராம் பாலும், பால் பொருட்களும், 85 கிராம் இறைச்சி, மீனும், 40 கிராம் முட்டையும் நாள் ஒன்றுக்கு தேவைப்படுகிறது. ஆனால் அனைத்திந்திய நிலையில் நபர் ஒருவருக்கு கிடைக்கின்ற அளவு 130 கிராம் பால், 14 கிராம் இறைச்சி, மீன், முட்டை ஆகியவை மட்டுமே ஆகும். தமிழ் நாட்டில் நபர் ஒருவருக்குக் கிடைக்கின்ற அளவு 63 கிராம் பாலும் இறைச்சியும், மீனும் முட்டையும் 20 கிராம் ஆகும். நமது மாநில மக்களின் ஆரோக்கிய நல்வாழ்விற்காக சத்துயர்வு மிக்க உணவுப் பொருட்களை வழங்கும் பொருட்டு உழவுக் கால்நடைகளின் திறமையை பெருக்குவதையும் பால், பால் பொருட்கள், முட்டைகள், இறைச்சி, கோழி இறைச்சி, பன்றி இறைச்சி, வரவையும் பெருக்குவதையும் கால்நடை வளர்ப்புத் துறை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

2. நமது மாநிலத்தில் கால்நடைகள் அதிக அளவில் இருக்கின்றன. 1974ஆம் ஆண்டு கால்நடைப் புள்ளி விவரக் கணக்கின்படி, 10.57 மில்லியன் மாடுகள், 2.85 மில்லியன் எருமைகள், 5.39 மில்லியன் செம்மறியாடுகள், 3·95 மில்லியன் வெள்ளாடுகள், 0.56 மில்லியன் பன்றிகள்; மற்றும் குதிரைகள், மட்டக் குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள், ஒட்டகங்கள்

போன்று 0.098 மில்லியன் விலங்குகளும் உள்ளன. இத்துடன், வாத்துக்கள் உட்பட 12.98 மில்லியன் கோழியினங்கள் உள்ளன.

3. உற்பத்தித் திறனின் பெருக்கத்தை குறிக்கோளாக இத் துறை பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு இம்மாநிலத்தில் அவற்றை செயல்படுத்தி வருகிறது. அண்மையில் சில ஆண்டுகளாக, கால்நடை உற்பத்தி, அதன் துணை உற்பத்திப் பொருள்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பண்ணை கால்நடைகளைச் சேர்ந்த எல்லா இனங்கள் வளர்ச்சி குறித்தும் ஏற்றமான தொழில் உத்திகள் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றன. சிரான உயர் சாதிகளுக்கு தர உயர்வுப் படுத்துவது, சிறந்த உணவு அளித்துப் பராமரிப்பது இவற்றினுல் கால்நடையின் தரம் உயர்கிறது. இதன் பலனுக, பால், முட்டை, கம்பளி, கால்நடை இறைச்சி முதலியவற்றின் உற்பத்தி பெருகுகிறது. கால்நடை வளர்ப்புத் திட்டங்களில், இன விருத்தி, விருத்தி, தீவன ஆதாரங்கள், நோய்க் கட்டுப்பாடு, விற்பனைத் திட்டங்கள் போன்ற நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

4. கால்நடை வளர்ப்புத் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதால் கிடைக்கும் பலன்கள், கால்நடை உற்பத்தியில் ஒருங்கிணைந்து திறமையாகச் செயல்பட சிறு உழவர்களையும், உழவுத் தொழிலாளர்களையும் ஊக்குவிக்கிறது. இதனுல்—

(i) நகரங்களிலும் அவற்றைச் சார்ந்த இடங்களிலும், பால், இறைச்சி, முட்டை முதலியவை அதிக அளவில் கிடைக்கிறது.

(ii) கால்நடைகளை அறிவியல் முறைப்படி இன விருத்தி செய்து தரப்படுத்துவதால், உழவரின் செல்வம் அதிகரிக்கிறது. இதனுல், தேசிய வருமானமும் பெருகுகிறது.

(iii) குறைந்த வருமானம் உள்ள ரொக்க வருமானம் கிடைப்பதோடு வாழ்க்கைத் தரமும் உயர்கிறது.

(iv) குடியானவர் குடும்பங்கள் உணவு உட்கொள்ளும் முறையைப் பல வகைப்படுத்துதல் இதனுல் இறைச்சி புரத சத்துணவு அதிகமாக உட்கொள்ளப்படுகிறது. தானியங்களை பயன்படுத்துவது குறைகிறது.

(v) பயிர் உற்பத்தியை விரிவாக்குவதற்காக இழுவை ஆற்றலுக்கு வேண்டிய கால்நடைகள் எருதுகள், எருமைகள் கிடைக்கின்றன. கால்நடைகளை ஏற்றுமதி செய்தல், அதன் துணை உற்பத்திப் பொருட்களாகிய கம்பளி, தோல், குளம்புகள், எலும்பு, ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலமாக ஏராளமான அன்னியச் செலாவணி கிடைக்கிறது.

5. தமிழ் நாட்டில் 1977 ஆம் ஆண்டில் அண்மையில் அனுமதி பெற்று மத்திய அரசு ஆதரவோடு நடத்தப்பட்ட ஒருங்கிணைப்பு மாதிரி ஆய்விலிருந்து, நாளொன்றுக்குச் சராசரி 2.44 கிலோ கிராம் பசும் பாலும், நாளொன்றுக்கு சராசரி 2.99 கிலோ கிராம் எருமைப் பாலும் கிடைப்பதாகத் தெரிய வருகிறது. ஆனல் 1966-67 ஆம் ஆண்டில் வேளாண்மை ஆராய்ச்சிப் புள்ளி விவர நிறுவனம் நடத்திய ஆய்விலிருந்து 1.22 கிலோ கிராம் பசும் பாலும், 1.96 கிலோ கிராம் எருமைப் பாலும் கிடைத்த அளவில் இருந்து பார்க்கும்போது உற்பத்தி எவ்வளவு அதிகப்படுத்தப் பட்டுள்ளது என்பது தெரிகிறது, பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்கள், செயல்படுத்தப்பட்டன; கால்நடை வளர்ப்பில் பின்பற்றிய நவீன உத்திகள் பின்பற்றப்பட்டதுமே இந்த முன்னேற்றத்திற்குக் காரணம்.

I. பொதுவான முன்னேற்றத் திட்டங்கள்.

1. இம் மாநிலத்தில் பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, செயற்கை முறையில் கருத்தரிப்பு, சிறந்த அயல் நாட்டு இனங்களுடனும் உள்நாட்டு இனங்களுடனும் சேர்த்து இன விருத்தி செய்தல் ஆகியவற்றின் மூலமாகக் கால்நடையின் தரத்தை உயர்த்திப் பால் உற்பத்தியை உயர்வதற்குப் பல திட்டங்களை இம் மாநில அரசு மேற்கொண்டுள்ளது. தற்போது செயல்பட்டு வருகிற திட்டங்களும், அவற்றின் முன்னேற்றமும் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளவை:—

2. கேந்திர கிராமத் திட்டம்.—பால் உற்பத்திக்காகவும், இழுவை வேலைகளுக்காகவும், அந்தந்தப் பகுதிகளில் கலப்பின விருத்தி அல்லது தர உயர்வு உயர்வுபடுத்துவதன் மூலமாகவும் அன்றி இனவிருத்தி செய்வதன் மூலமாகவும், கால்நடைகள், எருமைகள் இவற்றின் தரத்தை உயர்த்துவதே கேந்திர கிராமத் திட்டத்தின் நோக்கமாகும். ஒருங்கிணைந்த கிராமங்களைக் கொண்டு பல வசதிகளை உள்ளடக்கிய பகுதியில் இது செயல்படுகிறது. ஒவ்வொரு கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரமும் இனவிருத்தி மூலம் பால் உற்பத்திக்கும் பொருத்தமான மொத்தம் 10,000 பசுக்களையும், எருமைகளையும் கொண்டதாகும். மதுரை, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய 5 மாவட்டங்களில் 24 கேந்திர கிராம வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. இந்தியா முழுவதும் மேற்கண்ட முறையில்தான் செயல்படுகிறது.

3. கேந்திர கிராம அதிகாரி ஒருவர் எட்டு கேந்திரக் கிராம வளர்ச்சி வட்டாரங்களைக் கொண்ட இத்திட்டத்திற்குப் பொறுப்புடையவராவார். ஒரு தலைமை நிலையத்தையும் 10 கிளை

நிலையங்களையும் கொண்டுள்ள ஒரு கேந்திரக் கிராம வளர்ச்சி வட்டாரத்திற்கு கால்நடை உதவி மருத்துவர் பொறுப்புடையவராவார். அவ் வட்டாரத்திற்குப் பொறுப்பாக உள்ள கால்நடை உதவி மருத்துவரின் நேரடி பொறுப்பின் கீழ் தலைமை நிலையம் உள்ளது. இவருக்கு உதவியாக, கால்நடை உதவியாளர் நிலை I; ஆய்வுக்கூட உதவியாளர் (கால்நடை உதவியாளர் நிலை II) உள்ளனர். துணை நிலையங்கள், கால்நடை செயற்கைக் கருத்தரிப்புப் பணியில் பயிற்சி பெற்ற கால்நடை உதவியாளர் நிலை II பொறுப்பில் உள்ளன. கேந்திரக் கிராம வளர்ச்சி வட்டாரம் ஒவ்வொன்றிலும் பால் உற்பத்திப் பதிவாளர்கள் இருவர் உள்ளனர்.

4. கேந்திர கிராமத் திட்டத்தின் முக்கிய பணி உள்நாட்டு கால் நடைகளையும், எருமைகளையும், ஜெர்஭ி, ப்ரீஷியன், ப்ரவுன்ஸ்விஸ், ரெட்டேன் போன்ற அயல் நாட்டு இனங்கள், ஸிந்தி, தார்பாக்கர், காங்கேயம் போன்ற இந்திய இனங்கள், எருமைகளுக்கு முர்ரா இனக் காளைகள், இவற்றின் விந்துவோடு செயற்கருத்தரிப்பு செய்வதன் மூலமாக அவற்றின் பரபியல் பண்புகளை மேம்படுத்துவதாகும். உயர்ரக இழுவை மாடுகள் வளர்க்கப்படுகிற இனவிருத்திப் பகுதிகளில் தெரிந்தெடுத்த மாடுகளுக்கு இனவிருத்தி செய்வதனால் உள்ளூர் இனங்களின் தனித்தன்மை பாதுகாக்கப்படுகிறது. கேந்திரக் கிராம வளர்ச்சி வட்டாரங்களில் உயர் இனங்கள் பிறப்பதற்கு மரபியல் சீரமைப்பு பணி மட்டுமே போதாது. மேலும், கன்றுகள் வளர்ப்பு, தீவனங்கள், பசுந்தழை விருத்தி, தரமற்ற காளைகளுக்குக் காயடித்தல், நோய்த் தடுப்பு, கட்டுப்பாட்டு ஏற்பாடுகள், முதலிய பணிகள், கால் நடை வளத்தைப் பெருக்க கேந்திரக் கிராமத்தில் ஒரே சமயத்தில் மேற்கொள்ளப்படுகின்றன.

5. இந்தக் கேந்திரக் கிராம வட்டாரங்களில் 1976-77 இல் ஆற்றிய பணிகள் குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

		திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள கேந்திர கிராம வட்டாரங்கள். (1)	திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள கேந்திர கிராம வட்டாரங்கள். (2)	மதுரை மாவட்டத்தில் உள்ள கேந்திர கிராம வட்டாரங்கள். (3)	மொத்தம். (4)
1.	அந்தப் பகுதியில் இனப் பெருக்கம் செய்யத்தக்க கால்நடைகள்—				
	பசுக்கள்	163,826	104,376	58,184	326,386
	எருமைகள்	88,638	63,382	43,723	195,743
2.	செயற்கை கருத்தரிப்பு செய்யப்பட்டவை—				
	பசுக்கள்	56,266	61,480	4,739	122,485
	எருமைகள்	25,270	21,046	3,605	49,921
3.	சோதனை செய்யப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை—				
	பசுக்களும், எருமைகளும். ..	15,233	51,745	7,418	74,396
4.	பிறந்து பதிவுசெய்யப்பட்ட கன்றுகளின் எண்ணிக்கை—				
	காளைக் கன்றுகள்	1,630	4,803	2,489	8,922
	கிடேரிக் கன்றுகள் ..	1,588	4,295	1,658	7,541
5.	தடுப்பு ஊசி போடப்பட்டவைகளின் எண்ணிக்கை	177,243	331,124	2,952	511,319
6.	காயடிக்கப் பட்டவைகளின் எண்ணிக்கை	12,632	11,229	2,183	26,044
7.	நடத்தப்பட்ட, கால்நடை கண் காட்சிகளும், கன்றுக்குட்டி அணிவகுப்புகளும்.	5	8	..	13

6. தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம்.

பால் உற்பத்தியை உடனடியாகப் பெருக்கும் நோக்கத்துடன், சிறப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டத்தை அமைப்பது குறித்து முடிவு எடுக்கப்பட்ட போது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைப்பகுதியில், கால்நடை வளர்ப்பில் சீரிய மாற்றங்கள் ஏற்பட்டன.

ஜெர்ஸி, பிரைஸ்சியன் போன்ற பால் வளமிக்க அயலின வகைகளை அறிமுகப்படுத்தி அதன் மூலம், திட்டப் பகுதிகளில் 5 ஆண்டுக் காலத்திற்குள் பால் உற்பத்தியை 33 1/3 சதவீதத்திற்கு அதிகரிக்கக் இத் திட்டம் கேந்திரக் கிராம வளர்ச்சித் திட்டத்தை விட சிறந்ததாகும்.

கேந்திரக் கிராம வட்டாரங்களில், மையமாக அமைந்த முக்கிய நிலையத்துடன் 10 துணை நிலையங்களைக் கொண்டு 12-லிருந்து 15 கிலோ மீட்டர் பரப்பளவிலுள்ள ஒரு செறிவு மிக்க பகுதியில் செயல் படுகையில், தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் 4 வட்டார செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களையும், அவை ஒவ்வொன்றிலும் 25 துணை நிலையங்களையும் கொண்ட பரந்த ஒரு பகுதியில் செயல்படுகிறது.

7. பால் உற்பத்தி, தீவன உற்பத்தி, மற்றும் கால்நடை சிகிச்சை முறைகள் போன்ற முக்கிய கூறுகள் குறித்த புள்ளி விவரங்களைத் தொடர்ந்து சேகரிப்பது, திட்டத்தின் பலனை மதிப்பிட்டு திட்டத்தை முறையாக நிறைவேற்றுவதற்குச் சரியான கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு, தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டத்தின் முக்கியமான கூறுகளாகும். அருகிலுள்ள நகரத்தில் பால், பால் பொருள்களுக்கு உடனடியாக, ஆதாயம் தரத்தக்க விற்பனை வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக ஒவ்வொரு திட்ட நிலையமும், ஒரு இலட்சம் இனப் பெருக்கம் செய்யத்தக்க பசுக்களையும் எருமைக் கிடேரிகளையும் உள்ளடக்கி பணிபுரிகின்றது.

8. தற்போது, தமிழ் நாட்டில், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் 4 தீவிர கால்நடை வளர்ப்பு நிலையங்கள் உள்ளன.

திட்டப் பணியின் பெயர். (1)	தொடங்கப் பட்ட நாள். (2)
1. மதுரை	7— 1—1974
2. திருநெல்வேலி	1—10—1974
3. தஞ்சாவூர்	22—10—1975
4. புதுக்கோட்டை	3— 2—1977

9. ஒவ்வொரு திட்டப் பணியிலும், உதவி இயக்குனர் பதவியைக் காட்டிலும் உயர்ந்த அதிகாரி ஒருவர் நிர்வாகத் தலைவராக உள்ளார். இவரைத் தவிர, கால்நடை வளர்ப்பு உதவி இயக்குனர் பதவித் தரத்தில் பால் பண்ணை வளர்ச்சிப் பணிகளைக் கவனிப்பதற்கு பால் பண்ணை வளர்ச்சிப் பணி அதிகாரி ஒருவரும், வேளாண்மைத் துறையின் மாவட்ட வேளாண்மை அதிகாரியின் பதவித் தரத்தில், தீவன மேம்பாட்டுப் பணியைக் கவனிப்பதற்கு தீவன மேம்பாட்டு அதிகாரி ஒருவரும் மதிப்பிடுவதற்காக உதவி இயக்குநர் (புள்ளி விவரம்) ஒருவரும், திட்டப்பணி அதிகாரிகளுக்கு, அவர்களது தொழில் நுட்பப் பணியில் உதவி புரிவதற்காகத் தலைமையிடத்தில் உள்ளனர். ஒவ்வொரு திட்டத்திலும், திட்ட அதிகாரிகட்கு, நிர்வாக நடை முறைகள் அனைத்திலும் உதவி புரிவதற்காக நிர்வாக அதிகாரி ஒருவரும் உள்ளார்.

10. மதுரை திட்டத்தில் 4 வட்டார செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களும், திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய திட்டங்களில் முறையே இரண்டு வட்டார செயற்கைக் கருத்தரிப்பு நிலையங்களும் உள்ளன. கால்நடை வளர்ப்பு உதவி இயக்குநர் பதவித் தரத்தில், ஒவ்வொரு வட்டார செயற்கைக் கருத்தரிப்பு நிலையத்திற்கும் ஒரு அதிகாரி பொறுப்பானவராய் உள்ளார். வட்டார செயற்கைக் கருத்தரிப்பு நிலையத்தை நிர்வகிப்பதற்கு கால்நடை மருத்துவர் ஒருவர் உதவி புரிகிருர். தீவன மேம்பாட்டுப் பணிகளைக் கவனிப்பதற்காக, களத்தில் 2 கிராம அளவுப் பணியாளர்கள் இருவருடன், வட்டார செயற்கைக் கருத்தரிப்பு நிலையம் ஒவ்வொன்றிலும் வேளாண்மைத் துணை அதிகாரி ஒருவரும் உள்ளார். வட்டார செயற்கைக் கருதரிப்பு நிலையம் ஒவ்வொன்றிலும், பால்பண்ணை வளர்ச்சிப் பணியின் பொறுப்பில், பால்பண்ணை வளர்ச்சிப் பணி உதவியாளர் ஒருவரும் உள்ளார். தீவிர கால்நடை வளர்ப்புத் திட்ட துணை நிலையம் ஒவ்வொன்றும், கால்நடை உதவியாளர் (தரம் I) ஒருவரால் நிர்வகிக்கப்படுகிறது. இவர்கள் செயற்கைக் கருதரிப்புப் பணி, கருதரித்துள்ளதா என்று சோதனை செய்து சரிபார்த்தல், பிறந்த கன்றுகளை பார்வையிடல், போன்ற தொடர் பணிகள், தீவன மேம்பாட்டுத் திட்டம், பால் பண்ணை வளர்ச்சிப் பணி ஆகியவற்றை நிறைவேற்றுவதற்கான முறைகளை கண்டறிந்து முறைப்படுத்துதல் போன்ற தீவிர கால்நடை அபிவிருத்தித் திட்ட துணை நிலையங்களின் பணியைக் கவனிக்கின்றனர். வட்டார செயற்கைக் கருதரிப்பு நிலையம் ஒவ்வொன்றிற்கும், முன்னேற்ற உதவியாளர் பதவி ஒன்று உள்ளது. இவர், தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் குறித்த புள்ளி விவரங்களையும் பிற தகவல்களையும் சேகரிப்பார்.

11. 3—2—1977இல் புதுக்கோட்டையில் தொடங்கப்பட்ட தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டம் நீங்கலாக மூன்று தீவிர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள், 2 இலட்சம் இனப் பெருக்கம் செய்யத்தக்க பசு, எருமைகளுக்கு உள்ளடக்கியுள்ளது.

12. 1976-77இல் மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர் ஆகிய மூன்று இடங்களிலுமுள்ள திட்டங்களின் சாதனைகளை கீழே கொடுக்கப்பட்டுள்ள விவர அட்டவணை காட்டுகிறது:—

செயற்கைக் கருதரிப்பு செய்யப்பட்டவைகளின் எண்ணிக்கை.	1,21,405
காயடிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை ..	24,388
தடுப்பு ஊசி போடப்பட்டவைகளின் எண்ணிக்கை.	5,21,244
புல் நாற்றுக்கள் வழங்கப்பட்டவைகளின் எண்ணிக்கை.	42 இலட்சம்.

13. முன்னாள் தீவிர கால்நடை வளர்ப்புத் திட்ட பகுதிகளின் பெருமளவிற்கு தற்போது உற்பத்தி செய்யப்பட்டு தமிழ்நாடு பால் வள நிறுவனத்தால் வாங்கப்படும் பால் அளவிலிருந்து இந்த திட்டங்களின் மூலம் எய்திய சாதனைகள் நன்கு வெளிப்படையாக தெரியும். லூசெர்ன், பெர்சீம், கினியாபுல், நேபியர் புல் போன்ற பல்வேறு தீவனப் பயிர்களின் உற்பத்தி, இந்தத் திட்டங்களில் பயிரிடுவதற்காக முன்னேற்ற விவசாயிகளால் பெருமளவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதனால் தீவனப்புல் கிடைப்பது அதிகரித்துள்ளது. இந்த மாவட்டங்களில் சந்தைகளிலும், விழாக் காலங்களிலும் கலப்பினப் பசுக்கள் பெரும் எண்ணிக்கையில் விற்பனைக்காகக் காணப்படுவது இத்துறையில் நிகழ்த்திய சாதனையையும் முன்னேற்றத்தையும் உணர்த்தும்.

மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் மும்முர கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் மிக அண்மையில்தான் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளன. இதற்குள்ளாக இவற்றின் விளைவை மதிப்பிட்டுரைக்க இயலாது. ஆனாலும் பால் உற்பத்தியிலும் கால்நடைத் தீவன மேம்பாட்டிலும் படிப்படியாக முன்னேற்றம் நிகழ்ந்து வருகின்றது என்பதை நாம் உணர முடிகிறது.

14. ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டம்—வம்சாவழி ஆய்வுத் திட்டம்.

(Progeny Testing Scheme.)

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டமாக இனப் பெருக்க ஆற்றல் சோதனைத் திட்டம் தொடங்கப்பட்டது. இது சிவப்பு சிந்தி இனத்தைச்

சேர்ந்த பொலி காளைகளை (இனப் பெருக்க ஆற்றல் குறித்துச் சோதனை நடத்துவதற்கான காளைகள்) முறைப்படி அமையும் ஏற்பாட்டின்கீழ் உற்பத்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த கால்நடை வளர்ப்புத் திட்டமாகும். இத்திட்டம் ஹோசூரிலுள்ள மாவட்டக் கால்நடைப் பண்ணையில் 13—3—1972 ஆம் நாள் முதல் செயல்பட்டு வருகிறது.

வம்சாவழி ஆய்வுத் திட்டம் என்பது ஒரு பொலி காளை ஒரு குறிப்பிட்ட வகைப் பசுவுடன் சேர்வதால் அப்பசு ஈனுகின்ற கன்றுகளைக் கொண்டு அந்தப் பொலி காளையின் இனப் பெருக்க ஆற்றலை மதிப்பிட்டு இந்த வழியில் அதுபோன்ற பொலி காளைகளை வரிசைப்படுத்துகின்ற ஒரு முறை ஆகும்.

பரிசோதனை வரிசையில் முதற் குழுவில் ஐந்து சிந்திக் காளைகளும் இரண்டாவது குழுவில் மூன்று சிந்திக் காளைகளும் பசுக்களுடன் சேருகையை முடித்துள்ளன. முதல் குழுவைச் சேர்ந்த சிந்திக் காளைகளுக்குப் பிறந்த காளைக் கன்றுகள் வளர்ந்து பெரிதாகிப் பொலிகாளை ஆயின. 1975 அக்டோபர் முதல் பசுக்கள் அவற்றுடன் சேர்க்கப்பட்டன. இச் சேர்க்கையில் கருத்தரிப்புற்ற பசுக்கள் யாவும் 1976 ஜூலை முதல் கன்றுகளை ஈனத் தொடங்கின. இவ்வாறு கருத்தரித்த பசுக்களையும் அவை ஈன்ற கன்றுகளையும் வளர்ந்து பெரிதாகும் கிடேரிகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் பணி 1977-78-க்குப் பின்னர் தொடங்கும்.

15. உறைநிலை விந்து சேமிப்பு வங்கி.

விந்தினைப் பல ஆண்டுகளுக்குத் திறன் குன்றாமல் காத்து வைக்கக்கூடிய வகையில் செயற்கை முறை கருத்தரிப்பு முறையில் ஒரு புதிய தொழில் நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது. தனிச் சிறப்பு உடைய இனப் பெருக்க ஆற்றல் குறித்துச் சோதனையிடப் பட்ட காளைகள் அவற்றின் விந்தினை எடுத்துச் சேமித்துப் பாதுகாத்து வைக்கின்ற இந்த முறையின் மூலமே மிக விரிவாகப் பயன்படுத்தப்பட இயலும்.

இவ்வாறு இந்த முறையின் மூலம் ஒரு பொலிகாளையின் விந்தினை 20 ஆண்டுகள் வரை பயன்படுத்த முடியும். விந்து வீணாவதும் குறையும். இம்முறையினால் விந்து விநியோகப் படுத்துவதற்கு ஆகும் செலவும் மிகவும் குறைந்ததாக்கப் பட்டுள்ளது.

ஓசூர் நாட்டில் உறைநிலை விந்து சேமிப்பு வங்கி ஒன்றை நிறுவுவதற்கு டென்மார்க் அரசு இசைந்துள்ளது. இதற்காக ஓசூர் நாட்டில் நைட்ரஜன் திரவத் தொழிலகம் ஒன்று நிறுவப்படும். இந்த உறைநிலை விந்து சேமிப்பு நிலையம் அதனைச் சுற்றியுள்ள 50 கிளை நிலையங்களுக்கு உறை விந்தினைத் தொடக்கத்தில் வழங்கும்.

[1977 ஆகஸ்ட் 17

16. வெக்கை நோய் ஒழிப்புத் திட்டம்.

வெக்கை நோய் அதிக காய்ச்சலும் சில சமயங்களில் காய்ச்சல் குறைவாகவும் விஷக் கிருமிகள் உண்டாகும் நோய் கால்நடைகளுக்கு வருகின்ற நோய்களிலேயே வெக்கை நோய் மிக கொடுமையான தொத்து நோய். இந்நோய் கொண்ட மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஆகியவை மந்தை மந்தையாக இறந்து விட்டுப் பெரும் இழப்பு ஏற்படுவதுண்டு. மேலும், பால் உற்பத்தி, இறைச்சி உற்பத்தி முதலியனவும் குறைந்து விடும். இந்நோய், கால்நடைகளுக்கு ஆண்டின் எல்லாக் காலத்திலும் எந்த வயதிலும் பால் வேறுபாடின்றி ஏற்படுகிறது. இந்நோயைத் தடுக்கின்ற ஆற்றல் கால்நடைகளிலேயே இனத்துக்கு இனம் வேறுபடுகிறது. அன்றியும் ஒரு இனத்துக்குள்ளேயும் கால்நடைக்குக் கால்நடை வேறுபடுகிறது. நோயைக் கட்டுப்படுத்துதல், நோய்த் தடுப்பு, ''நோயற்ற பகுதிகள்'' குறிப்பாக வெக்கை போன்ற கொள்ளை நோய் தோன்றிப் பரவாத மண்டலங்களைப் பேணுதல் ஆகியவற்றிற்கு முழு கவனம் செலுத்தப் பெறுதல் வேண்டும். வெக்கை நோய் ஒழிப்பிற்காக மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்ட மொன்று தமிழ்நாட்டில் 5—3—1965 முதல் செயலில் இருந்து வருகிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது, இத்திட்டத்தின் கீழ் முழு நிதி உதவியை வழங்கி சோதனைச் சாவடிகள் ஐந்தும் கண்காணிப்புப் பிரிவுகள் நான்கும் ஏற்படுத்தப்பட்டன. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத்திட்டத்தின்கீழ் இந்திய அரசு அளிக்கும் 100 சதவீத உதவியைக் கொண்டு வெக்கை நோய்ச் சோதனைச் சாவடி ஒன்றும் கண்காணிப்புப் பிரிவுகள் ஆறும் ஏற்படுத்தப் பெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. தமிழ்நாட்டில் கீழ்க்காணும் பிரிவுகளின் மூலமாக வெக்கை நோய்த் தடுப்பு ஊசி குத்தும் பணி நடைபெற்று வருகிறது:—

1.	வெக்கை நோய்த் தடுப்பூசி குத்தும் மாவட்டக் குழுக்கள்.	14
2.	கண்காணிப்புப் பிரிவுகள்	10
3.	சோதனைச் சாவடிகள்	9

(மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டம்.)

தமிழ்நாட்டின் எல்லைப் பகுதிகள் நெடுகிலும் மற்ற மாநிலங்களின் எல்லைப் பகுதிகளிலிருந்து 15 கிலோ மீட்டர் தூரத்திற்குள் தமிழ்நாட்டில் அமைந்துள்ள கிராமங்கள் அனைத்திலும் கண்காணிப்புப் பிரிவுகள் கால்நடைகளுக்குக் வெக்கை நோய்த் தடுப்பு ஊசிகள் குத்தி அதன் மூலம் வெக்கை நோய் வராமல்

1977 ஆகஸ்ட் 17]

தடுப்பாற்றலைப் பெற்ற எல்லைப் பகுதியாக விளங்குமாறு அவற்றை உருவாக்கி வருகின்றன. 1975-76 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிலுள்ள வெக்கை நோய்த் தடுப்பூசி குத்தும் மாவட்டக் குழுக்கள் கண்காணிப்புப் பிரிவுகள் சோதனைச் சாவடிகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து மொத்தம் 41.94 இலட்சம் கால்நடைகளுக்கு வெக்கை தடுப்பூசி குத்தியுள்ளன.

17. கால்நடைத் தீவனங்கள்-தீவனப்புல் மேம்பாடு.

கால்நடைக்குப் போதுமான அளவிற்குப் பசும்புல் வழங்கி சிறந்த தீவனமும் அளித்து அவற்றை வளர்த்தாலன்றி விஞ்ஞான முறையில் அமைந்த கால்நடை வளர்ப்பில் கணிசமான அளவிற்கு எவ்வித மேம்பாட்டையும் காண்பதென்பது இயலாது என்பது அனைவரும் ஒப்புக் கொள்ளும் உண்மையாகும். தரமற்ற, வகைப்படுத்தப்படாத சாதாரண வகை பசுக்களேகூட சிறந்த வகையில் தீவனமளித்து நன்கு பேணி காக்கப்பட்டதன் மூலம் மட்டுமே அவற்றின் பாலுற்பத்தி சராசரியாக 60 சதவீதம் அளவிற்கு உயர்ந்ததென இந்திய அரசின் (பாற்பண்ணைத் துறை) முன்னால் அறிவியல் வல்லுநர்—ஆலோசகரும் கால்நடை பரபியல் துறை அறிஞருமான நார்மன் சி. ரைட் என்பவர் கூறியுள்ளார். உயர்ந்த தரமுள்ள இனம் என வகைப்படுத்தப்பட்ட கால்நடைகளும் கலப்பினக் கால்நடைகளும் சரிவிகித அளவில் சத்துமிக்க தீவனம் வழங்கப்படுவதன் மூலம் மட்டுமே உரிய அளவுக்குப் பாலுற்பத்தியை வழங்கச் செய்ய முடியும். மாவட்டக் கால்நடைப் பண்ணைகளில் தீவனப் புல் உற்பத்தியை விரைவுபடுத்துவது மிகவும் இன்றியமையாதது. அதுபோலவே உழவர்கள் தங்கள் கால்நடைகளுக்குத் தேவைப்படுகின்ற தீவனப் புல்லைப் பெறும் பொருட்டு தாங்களே தீவனப் புல்லை பயிரிடுவதை மேற்கொள்ளுமாறு அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டியதும் மிகவும் இன்றியமையாததாகும். பண்ணையிலுள்ள கால்நடைகளின் தீவனத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு கால்நடைத் தீவனப் புல் உற்பத்திக்காக அரசு கால்நடைப் பண்ணைகளில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. கால்நடைத் தீவனப் புல் மேம்பாடு கருதி (கால்நடைத் தீவன) புல் நாற்று உழவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இது தவிர கால்நடை வளர்ப்புப் பண்ணைகளில் கீழ்க்காணும் பிரிவுகளும் செயல்படுகின்றன:—

(1) கால்நடைத் தீவனப் புல் விதை உற்பத்திப் பிரிவு, படப்பை (செங்கற்பட்டு மாவட்டம்).

(2) செம்மறியாட்டுப் பண்ணை, சின்ன சேலம் (தென்னாற்காடு மாவட்டம்).

[1977 ஆகஸ்ட் 17

(3) கால்நடைத் தீவனப் புல் விதை உற்பத்திப் பிரிவு, மாவட்டக் கால்நடைப் பண்ணை, திருநெல்வேலி (திருநெல்வேலி மாவட்டம்).

(4) கால்நடைத் தீவனப் புல் விதை உற்பத்திப் பிரிவு, மாவட்டக் கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்).

இந்தப் பிரிவுகள் செயல்படுவதன் முக்கிய நோக்கம், நம்மிடமுள்ள கால்நடைத் தீவனப் புல் வித்துக்களைப் பெருக்கி அவற்றைச் சாதாரண விலையில் உழவர்களுக்கு வழங்குமாறு பார்த்துக் கொள்வதேயாகும். 1976-77 ஆம் ஆண்டில், இந்தக் கால்நடை உற்பத்திப் பிரிவுகளில் மொத்தம் 45 லட்சம் புல் நாற்று என். பி. 21 உற்பத்தி செய்யப்பட்டு அவை எளிய விலையில் உழவர்களுக்கு வழங்கப்பட்டன. இது தவிர, கால்நடை வளர்ப்பு மும்முரத் திட்டத்திலும், கேந்திர கிராமப் பகுதித் திட்டங்களிலும் கால்நடைத் தீவனப் புல் மேம்பாட்டு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

18. ஆநிரைக் காப்பகங்கள்.

கல்வி நிறுவனங்கள், கோவில்கள், மடங்கள், அனாதை இல்லங்கள் போன்ற தனிப்பட்ட அறக்கொடை நிறுவனங்களுக்கு சிறிய அளவிலமைந்த பால்பண்ணைகள் நிறுவுவதற்காக அவற்றுக்கு உதவியளிக்கும் திட்டமே ஆநிரைக் காப்பகங்கள் திட்டமாகும். இதன் மூலம், அந்த நிறுவனங்கள் சிறு அளவிலான பாலுற்பத்தி நிலையங்களாகச் செயல்பட்டு விஞ்ஞான முறையில் கறவை மாடுகள் மேம்பாட்டுக்கு அவை ஊக்கமளிக்க வியலும்.

இத் திட்டத்தின்கீழ், அரசு வழங்கும் உதவியின் இயல்பும் அளவும் பற்றி கீழே குறிப்பிடப் பெற்றுள்ளது :—

(1) இத்திட்டத்தின் ஒவ்வொரு பண்ணைக்கும் உயர் இனத்தைச் சேர்ந்த 10 பசுக்களும், 1 பொலி காளையும் வழங்குதல். ரூ. 11,000-க்கு மேற்படாத அளவில் வழங்குதல்.

(2) கட்டிடங்களைப் புதுப்பித்தல், கால்நடைக் கொட்டகைகள் அமைக்க மானிய உதவித் தொகை ரூ. 5,000.

(3) கால்நடை தீவனச் செலவுக்காக தொடர் இன ஆண்டு பராமரிப்பு மானியம் ரூ. 2,000.

(4) தேர்ந்தெடுக்கப்பட்ட பால்குடியை மறந்த ஐந்து கன்றுகளுக்கு மேற்படாத வகையில் ஒவ்வொரு கன்றுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 10 என்ற வீதத்தில் இரண்டு வருடம் வரையில் உதவித் தொகை வழங்குதல்.

1977 ஆகஸ்ட் 17]

தற்போது கீழ்க்கண்ட இடங்களில் 7 ஆநிரைக் காப்பகங்கள் உள்ளன. அவையாவன:—

1. சேவா சமாஜம் சிறுவர்கள் இல்லம், சாலிகிராமம் (செங்கல்பட்டு மாவட்டம்).

2. புனித ஜோஸப் இடைநிலைப் பள்ளி, கூடலூர் (தென்னாற்காடு மாவட்டம்).

3. ஸ்ரீரங்கநாதஸ்வாமி தேவஸ்தானம், ஸ்ரீரங்கம் (திருச்சி மாவட்டம்).

4. ஸ்ரீசண்முகநாத சுவாமி தேவஸ்தானம், குன்றக்குடி (மதுரை மாவட்டம்).

5. ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி, சேலம் (சேலம் மாவட்டம்).

6. பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம் (திருநெல்வேலி மாவட்டம்).

7. குருடர் பள்ளி, பாளையங்கோட்டை (திருநெல்வேலி மாவட்டம்).

19. ஆடு வளர்ப்பு திட்டம்:

தமிழ்நாட்டின் தற்போதைய இறைச்சித் தேவையின் பெரும் பகுதியை செம்மறி ஆடுகளும் வெள்ளாடுகளும் நிறைவு செய்கின்றன. செம்மறி ஆட்டிலிருந்து இறைச்சி கிடைப்பதுடன் அதன் தோல், உரோமம் கம்பளி முதலியனவும் வருமானத்தை ஈட்டித் தருகின்றன. மேலும், செம்மறி ஆட்டு உரம், மண்ணின் வளத்தைப் பெருக்கி, வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கிறது. நமது மாநிலத்தில் உள்ள செம்மறி ஆடுகளில் பெரும்பாலனவை உரோம வகையின. கம்பளி செம்மறி ஆடுகள் சுமார் 10 முதல் 15 சதவீதம் தான். கிராமப் பகுதிகளிலும் ஆடுகள் புல்வெளிகளில் மேயவிட்டும், இலை தழைகளைப் போட்டும் வளர்க்கப்படுகின்றன.

நல்ல தரமான இறைச்சியையும் கம்பளிகளையும் பெறுவதற்காக வேண்டி, கால்நடை வளர்ப்புத் துறை, சில தேர்ந்தெடுக்கப்பட்ட செம்மறி ஆட்டு வகைகளை மேம்படுத்துவதில் அதிக நாட்டம் செலுத்தி வருகிறது. சாத்தூர், சின்னசேலம் ஆகிய இரண்டு இடங்களில் செம்மறியாட்டு பண்ணைகளும், ஹோசூர், புதுக்கோட்டை, செட்டிநாடு, அபிஷேகப்பட்டி ஆகிய அரசினர் கால்நடை பண்ணைகளை சேர்ந்த நான்கு ஆடு வளர்ப்புப் பிரிவுகளும் உள்ளன.

இந்த ஆடு வளர்ப்புகளில் முக்கியமாக திருச்சி கறுப்பு, மேச்சேரி, மண்டியா, இராமநாதபுரம் வெள்ளை ஆகிய முக்கியமான இனங்கள் பராமரிக்கப்படுகின்றன. இந்த ஆடு வளர்ப்புப் பிரிவுகள், மாதிரிப் பண்ணைகளாக கிராமப்புற ஆட்டு இனம் மேம்பாட்டுக்காக சில வகை ஆட்டுக் கிடாக்களை வழங்குவதற்காகவும் இயங்கி வருகிறது.

வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத் திட்டச் சங்கங்களைத் தவிர தமிழ்நாட்டில் 105 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன.

20. வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் நிறைவேற்றப்படும் ஆடு வளர்ப்புத் திட்டம்.

ஆடு வளர்ப்போரும் மற்றும் பிற முற்போக்கு விவசாயிகளும் ஆடு வளர்ப்புத் தொழிலில் அதிக ஆதாயம் பெறவும், ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து தங்களது பொருளாதார நிலைமையை மேம்படுத்திக் கொள்ளவும் இயலும் வகையில், ரூ. 83.03 இலட்சம் செலவில், வேளாண்மை மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத்தின் நிதி உதவியுடன், தமிழ்நாட்டில் செயற்படுத்தக் கூடிய ஆடு வளர்ப்பு மேம்பாட்டுத் திட்டம் ஒன்றுக்கு தமிழ்நாடு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, இம் மாநிலத்தில் 39 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஒவ்வொரு சங்கமும் 3 மைல் சுற்றளவுக்கு அதிகார வரம்புடையவை. விவசாயிகளையும் பரம்பரையாக ஆடு வளர்ப்புத் தொழிலில் ஈடுபட்டு வருவோர் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். செம்மறி ஆடுகள் வாங்குவதற்கு அவர்களுக்குக் கடன் வசதிகளும் அளிக்கப்படுகின்றன.

ஒவ்வோர் உறுப்பினருக்கும், சங்கம், 1½ முதல் 2 வயதுடைய உள்ளூர் இனத்தைச் சேர்ந்த 24 புறுவைகளும் ஒரு கிடாவும் வாங்குவதற்குக் கடன் உதவி அளிக்கிறது.

வேளாண்மை, மறுநிதி உதவி வளர்ச்சிக் கழகத் திட்டத்தின்படி, மேற்படி 39 சங்கங்களின் உறுப்பினர்களுக்கு, 2,020 ஆட்டுக்கடா, 52,645 புறுவைகளும், 207 ஆட்டுக்கிடாக் குட்டிகள், 178 பெண் ஆட்டுக் குட்டிகள் ஆக மொத்தம் 55,050 ஆடுகள் வழங்கப்பட்டன. ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களிடம் தொடக்கத்தில் 55,050 ஆடுகள் இருந்ததற்கு மாறாக 31—3—1977 ஆம் நாளன்றின்படி அவற்றின் எண்ணிக்கை 73,299 ஆக உயர்ந்துள்ளது.

இந்தத் திட்டத்தின் பலன்கள்.

39 ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களுமே ஆதாயத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சின்ன சேலம் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம், 31—3—1977 ஆம் நாளன்றின்படி ரூ.14,177 ஆதாயம் ஈட்டி, ரூ. 16,384 செலவில் தனக்கென்று சொந்தமாக ஒரு கட்டிடமும் கட்டியுள்ளது குறிப்பிடத்தக்கது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள துரைசாமிபுரம் ஆடு வளர்ப்பு கூட்டுறவுச் சங்கம், ஒரு புதிய பணியில் ஈடுபட்டு வருகிறது. இச்சங்கம், இறைச்சியின் விலையைக் கட்டுப்படுத்துவதற்காக, துரைசாமிபுரத்திலும் அதைச் சுற்றிலும் உள்ள கிராமங்களிலும் சங்கரன்கோவிலிலும் பக்குவப்படுத்தப்பட்டு ''பாலிதீன்'' பைகளில் அடைக்கப்பட்ட தரமான இறைச்சிகளை வழங்கி வருகிறது.

இந்திய அரசு பொறுப்பேற்கும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றின்கீழ் நீலகிரி மாவட்டத்திலும் 9 பழங்குடியினர் வாழும் பகுதிகளிலும் பழங்குடியினர், ஆட்டிடையர் மற்றும் ஆடு வளர்ப்போரின் பயனுக்காக ஆடு வளர்ப்பு நிலையங்கள் ஏற்படுத்தப்படும். இதனால் அவர்களுக்கு துணைத் தொழில் கிடைப்பதுடன் அவர்களது குடும்பத்திற்கு நிரந்தரமான கூடுதல் வருமானம் கிட்டுவது உறுதியாகிறது.

21. கோழி வளர்ப்பு.

காட்டுப்பாக்கம், ஹோசூர் ஆகிய இடங்களில் உள்ள இரண்டு குஞ்சு பொரிப்பு நிலையங்களைத் தவிரவும், கால்நடை வளர்ப்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 29 கோழியின வளர்ப்பு விரிவாக்க நிலையங்களும் உள்ளன. ஹோசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை, செட்டிநாடு, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள மாவட்ட கால்நடைப் பண்ணைகளிலும் சாத்தூர், சின்னசேலம் ஆகிய இடங்களில் உள்ள ஆட்டுப் பண்ணைகளிலும் கோழி. வளர்ப்புப் பிரிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன.

இத்துறையைச் சேர்ந்த கால்நடைப் பண்ணைகள், கோழி வளர்ப்பு விரிவாக்க நிலையங்களில் உள்ள கோழி வளர்ப்பு பிரிவில் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள பணித் திட்டங்களின் நோக்கம் குஞ்சுகள், முட்டையிடும் கோழிகள் மற்றும் உணவுக்காக முட்டைகள், இறைச்சி ஆகியவற்றை உற்பத்தி செய்வதாகும். அவ்வப்பகுதிகளைச் சேர்ந்த இந்த கோழி வளர்ப்பு விரிவாக்க நிலையங்கள், கோழி வளர்ப்போர், உழவர்கள் மற்றும் விவசாயிகளின் தேவைகளையும் நிறைவு செய்யும்.

தற்போது, தமிழ்நாட்டில் 120 கோழி வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களும், 2 கோழி வளர்ப்போர் கூட்டுறவு விற்பனை சங்கங்களும் உள்ளன. அவற்றின் மூலம், உறுப்பினர்கள் வெளிநாட்டு இன கோழிகளை வாங்கி பராமரிப்பதும், அவர்கள் நவீன முறைகளையும் இயந்திரங்களையும் பயன்படுத்தி கோழி வளர்ப்புப் பணிகளை மேம்படுத்துவதும் இயலுகிறது. கோழிப் பண்ணை வளர்ச்சி தொடர்பான வணிகமுறைக் கூறுகளை கவனித்துக் கொள்வதற்காக தன்னாட்சி உரிமையுள்ள கோழிப் பண்ணை வளர்ச்சிக்கழகம் ஒன்றை அமைத்துள்ளது.

22. தமிழ்நாடு கோழிப்பண்ணை வளர்ச்சிக் கழகம், சென்னை.

நோக்கங்கள்.

மாநிலத்தில் கோழிப் பண்ணை வளர்ச்சிக் குறித்த பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதும் அதே சமயத்தில் பொருளாதார வகையில் தனித்தியங்கக்கூடியதாக இருப்பதற்கு வகை செய்வதுமே இக் கழகத்தின் முக்கிய நோக்கமாகும். இந்தக் கழகத்தின் இரு நோக்கங்களாவன: கோழிப் பண்ணைப் பொருட்களுக்கு வணிக முறையில் விற்பனை வசதிகளைச் செய்து கொடுத்தல், நுகர்வோரின் நலனை முன்னிட்டு, விலைகள் உயராமல் பார்த்துக் கொள்வதும், கோழி வளர்ப்போரின் பொருளாதார தரத்தை உறுதிப்படுத்துதல் இதன் நோக்கங்களாகும்.

இக்கழகத்தின்கீழ் தீவன பிரிவுகள் நந்தனம், கோட்டப்பட்டு (திருச்சி), கப்பலூர்,(மதுரை), திருப்பூர் (கோயம்புத்தூர்), சேஷஞ்சாவடி (சேலம்) ஆகிய இடங்களில் உள்ளன.

ஐந்து விற்பனை பிரிவுகள் சென்னை, திருச்சி, சேலம், மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ளன.

கோழி வளர்ச்சி கழகத்தின் விஸ்தரிப்பு நிலையங்கள், அடையாறு, செங்கல்பட்டு, கோட்டப்பட்டு, பெருந்துறை, சேஷஞ்சாவடி ஆகிய இடங்களில் இயங்கி வருகிறது.

விஸ்தரிப்புப் பணிகளுக்காக தமக்கு ஏற்படும் செலவு குறித்து இந்நிறுவனம் உதவித் தொகை பெறுகிறது. விஸ்தரிப்பு நிலையங்களைப் படிப்படியாக உற்பத்தி நிலையங்களாக மாற்றியமைப்பதே இந்நிறுவனத்தின் நோக்கமாகும்.

23. சரிவிகித தீவனத்தை வழங்குவதன் மூலமும் நியாய விலைகளில் முட்டைகள் வழங்குவதன் மூலமும் மாநிலத்தில் உள்ள தனியார் கோழி வளர்ப்போரை தனது நிர்வாகத்தின்கீழ் கொண்டு வருவதற்கான திட்டங்களை இக்கழகம் கொண்டு அதிக அளவு முட்டைகள் இடும் கலப்பின கோழிக் குஞ்சுகளையும்,

உண்பதற்கேற்ற கோழிக் குஞ்சுகளையும் உற்பத்திச் செய்வதற்காக பூனா - பர்ல்ஸ் கோழி வளர்ப்புப் பண்ணை குஞ்சு பொரிப்பு நிலையங்களின் உடனுழைப்புடன் அரசூரில் இணைக் குஞ்சுப் பொரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பொதுத் துறையில் இந்த வகையில் முதல் குஞ்சு பொரிப்பு நிலையம், கனரா வங்கியின் நிதியுதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது. குஞ்சு பொரிப்பு நிலையத்தில் உற்பத்தியைத் தொடங்குவதுடன் இம்மாநிலத்தில் தேவைப்படும் கலப்பினக் கோழிக் குஞ்சுகள் எப்போதும் பிற, அண்டை மாநிலங்களிலிருந்தே பெறப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டிலுள்ள உழவர்கள், தங்களது சொந்த மாநிலத்திலிருந்தே அதிகமாக முட்டை இடும் கோழிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கை தற்போது உறுதியாகியுள்ளது. இது இம்மாநிலத்தில் கோழிப் பண்ணை மேம்பாட்டை உண்மையிலேயே உயர்த்தும். இக்குஞ்சு பொரிப்பு நிலையம் வாரம் ஒன்றுக்கு 3,000 முட்டையிடும் கோழிக் குஞ்சுகளையும், 4,000 உண்பதற்கான கோழிக் குஞ்சுகளையும் உற்பத்திச் செய்யும், மதுரை மாவட்டம், கப்பலூரிலுள்ள குஞ்சு பொரிப்பு நிலையம், விக்டோரியா வகையைச் சேர்ந்த ஒயிட் லெஃகான் கோழிக் குஞ்சுகளைத் தற்போது உற்பத்தி செய்கிறது. இக் கோழிக் குஞ்சுகள் வளர்ப்பதற்காகவும், பொது மக்களுக்கு விற்கப்படுவதற்காகவும் கோழிப் பண்ணை விஸ்தரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்படுகின்றன.

இனப்பெருக்கம் செய்யக் கூடிய கோழிக் குஞ்சுகள், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின்கீழ் கிராமங்களில் பெருமளவில் வினியோகிக்கப்பட்டுள்ளன.

இக் குஞ்சு பொரிப்பு நிலையத்தை கலப்பின குஞ்சு பொரிப்பு நிலையமாக விரைவில் மாற்றியமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அப்போதுதான் இம்மாநிலத்தின் கலப்பின கோழிக் குஞ்சுகளின் தேவை முழுவதையும் இக்கழகம் நிறைவு செய்ய முடியும்.

இந்த ஆறு விஸ்தரிப்பு நிலையங்கள் குஞ்சு பொரிப்பு நிலையங்களிலிருந்து கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்க்கும் பணியில் ஈடுபடுகின்றன. 12 வாரங்கள் வரை அவற்றை வளர்க்கின்றன. அவை பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும், பொதுமக்களுக்கும் அவை விற்கப்படுகின்றன.

கீழ்க்காணும் திட்டங்களைச் செயற்படுத்தும் பணியை இக்கழகம் மேற்கொண்டுள்ளது:—

(1) <u>ஐந்து லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டம்.</u>—படித்து வேலையற்றிருக்கும் இளைஞர்கள் கோழிப் பண்ணை நடத்த ஊக்கமளிக்கும் பொருட்டு, இந்திய

[1977 ஆகஸ்ட் 17

அரசின் நிதியுதவியுடன் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது. தாம்பரத்தைச் சுற்றிலும் மற்றும் படப்பையைச் சுற்றிலும் இத்திட்டம் செயல்பட்டுவருகிறது. இத்திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், கோழிப் பண்ணையைத் தொடங்குவதற்கு நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் நிதியுதவி அளிக்கும் முன்னர், கோழிப் பண்ணை நடத்துவதில் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. தீவனம், கோழிக் குஞ்சுகள் வழங்கல், சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளுதல் முதலிய அவசியமான சேவைகள் அனைத்தையும் இக்கழகம் அளிக்கிறது. அவர்களிடமிருந்து முட்டைகள் சேகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன.

24. கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டம்.

(1) செங்கற்பட்டு, (2) வட ஆற்காடு, (3) சேலம், (4) மதுரை, ஆகிய தெரிந்தெடுக்கப்பட்ட மாவட்டங்களில் செயற்படுத்தப்படுவதற்காக இந்திய அரசால் ஒப்பளிக்கப்பட்ட இத்திட்டம், கோழிப்பண்ணை மூலமாக, கிராமங்களில் உள்ள உழவர்களுக்குக் கணிசமான வருமானம் கிடைக்க வழி செய்கிறது.

நிலமற்ற உழவுத் தொழிலாளர்களுக்கும் ஓரளவு நிலமுள்ள உழவர்களுக்கும் 33 1/3 சதவிதம் சிறு உழவர்களுக்கு 25 சதவிதமும் கோழி வளர்ப்புக்காக உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மூன்றாண்டுகளில் படிப்படியாக இந்த 4 மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் 100 கோழிகள் வீதம் மொத்தம் 1,500 கோழிப் பண்ணைகள் தொடங்கப்படவிருக்கின்றன.

சாவடி 6,000 உழவர்கள் ஒவ்வொருவரும் மாதமொன்றுக்குக் குறைந்
75 ரூபாயாவது வருமானம் ஈட்ட முடியும் என்ற வகையில்
ஐந்து ...டம் கிராமவாசிகளின் பொருளாதார நிலைமையை மேம்
கோயம்புத்தூர ...காள்ள உதவும். மேலும், மூன்றாவது ஆண்டு இறுதி
...த்தின் முட்டை உற்பத்தி நாளொன்றுக்கு 3,50,000
கோழி வளர்ச்சி முட்டைகள் குறித்த தேவைக்காக நாம் அண்டை
யாறு, செங்கல்பட்டு சார்ந்திருப்பது இதன்மூலம் பெரிதும் குறைந்து
சாவடி ஆகிய இடங்...ருளாதார நிலைமை சீர்பட இயலும்.

விஸ்தரிப்புப் பணிகதின் பொருளாதார நிலைமை ஒரே சிராக
இந்நிறுவனம் உதவித்...ளது. 1973-74இல் 24.00 லட்சம் ரூபாயாக
நிலையங்களைப் படிப்படி976-77இல் 2.18 லட்சம் ரூபாயாகக் குறைந்து
யமைப்பதே இந்நிறுவனத் நன்மையல்லாத விஸ்தரிப்புப் பணிகளுக்குச்
...லவுகளும் இதில் அடங்குவதால் இவ்வாறுள்ளது.
23. சரிவிகித தீவனத்...ருளாதார தன்னிறைவு ஏற்பட்டுள்ளது.
களில் முட்டைகள் வழங்
தனியார் கோழி வளர்த் தொழிற்சாலைகளில் 1973-74இல் 2,477
கொண்டு வருவதற்கான வன விற்பனை 1976-77இல் 4,866 டன்னுக
அதிக அளவு முட்டைகள் ஈந்த போன்று, 1973-74இல் 65.92 லட்சமாக

1977 ஆகஸ்ட் 17]

இருந்த முட்டை விற்பனை 1976-77இல் 110.83 லட்சமாக உயர்ந்தது. 1973-74இல் 4,172 கிலோகிராமாக இருந்த இறைச்சி விற்பனை 1976-77இல் 6,742 கிலோகிராமாக உயர்ந்தது. 1973-74இல் 24,513 ஆக இருந்த முட்டையிடும் கோழிகளின் விற்பனை 1976-77இல் 63,040 ஆக உயர்ந்தது.

25. பன்றி வளர்ப்பு.

பன்றிகள் பெருமளவில் இன விருத்தி செய்யக்கூடியவை. அவை விரைவில் கருவுற்று இனவிருத்தி செய்வதால் விரைவில் இனப் பெருக்கம் ஏற்படுகிறது. பன்றிகள் சிறந்த இறைச்சி உணவாகப் பயன்படுகின்றன; ஏனைய கால்நடைகளுடன் ஒப்பிடுகையில் பன்றி இனம் பெரும் ஆதாயமளிப்பதாகவும் பெருமளவில் இறைச்சி தருவனவாகவும் இருக்கின்றன. பன்றி வளர்ப்புத் தொழில் தனிப்பட்ட விவசாயியின் வருமானத்தைக் கணிசமான அளவுக்கு உயர்த்தி தேசியப் பொருளாதாரத்தையும் உயர்த்தும்.

இம்மாநிலத்தில் தற்போது பன்றி வளர்ப்புப் பண்ணை என்று ஏதுமில்லை; 9 பன்றி வளர்ப்புப் பிரிவுகள் ஓசூர், புதுக்கோட்டை, ஒரத்தநாடு, திருநெல்வேலி, உதகமண்டலம், செட்டிநாடு மாவட்ட கால்நடை பண்ணைகளிலும் சின்ன சேலம், சாத்தூர் ஆட்டுப் பண்ணைகளிலும், சைதாப்பேட்டை கால்நடை மருத்துவமனையிலும் செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவுகள் செய்முறை விளக்கப் பிரிவுகளாகவும் உழவர்கள் பன்றி வளர்ப்புப் பிரிவுகள் தொடங்குவதற்காக குட்டிகளும் பன்றிகளை வழங்கவும் பயன்படுகின்றன. இப்பிரிவுகளில் பெரிய வெள்ளை யார்க்ஷயர் பன்றிகள் பராமரிக்கப்படுகின்றன.

ஆட்டு இறைச்சியுடன் ஒப்பிடுகையில் பன்றி இறைச்சிக்கு உற்பத்திச் செலவு குறைவாக இருப்பதுடன் அதிக புரோட்டீனும் சக்தியளிக்கும் பொருள்களும் கொண்ட உணவுப் பொருளாகவும் அது பயன்படுகிறது. ஆகவே பன்றி இறைச்சி உண்போர் சங்கங்கள் மூலமாக பன்றி இறைச்சி உண்ணும் பழக்கம் பொது மக்களிடையே பரப்பப்படுகிறது. இம்மாநிலத்தில் பன்றி உண்போர் சங்கங்கள் தற்போது 23 செயல்பட்டு வருகின்றன. விஞ்ஞானம் அடிப்படையில் பன்றிகளுக்குத் தீனமிடுதல், அவற்றை வளர்த்தல், நிர்வாக முறைகள் ஆகியவை குறித்து பொது மக்களுக்கு விளக்கிக் கூறி ஆர்வமுள்ள சங்க உறுப்பினர்கள் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் பெறுவதன்மூலம் பன்றி வளர்ப்புப் பிரிவு ஒன்றைத் தொடங்கவும் இச்சங்கங்கள் உதவி புரிகின்றன.

26. கால்நடை வளர்ப்பு சிறப்புத் திட்டங்கள்.

1. சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் மேம்பாட்டு முகவரமைப்பு.—இந்திய அரசு கேட்டுக் கொண்டதன் பேரில் தமிழ்நாட்டில் ஏற்பளிக்கப்பட்ட மாவட்டங்களில் கால்நடை வளர்ப்பு சிறப்பு திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, கால்நடை வளர்ப்புத் துறை அத்திட்டத்தை உருவாக்கியது. 25,000 கலப்பின இளம் பசுக் கன்றுகளை வளர்த்தல், ஒவ்வொரு முட்டையிடும் 100 கோழிகளைக் கொண்ட 6,000 கோழி வளர்ப்புப் பிரிவுகளையும், 9,000 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் தொடங்குதல் ஆகியவை இத்திட்டத்தின் நோக்கமாகும்.

கீழ்க்காணும் மாவட்டங்களில் தமிழ்நாடு பால்டன்ணை வளர்ச்சிக் கழகம் கன்றுகள் வளர்த்தல் திட்டத்தினையும், தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகம் கோழியினப் பெருக்குத் திட்டத்தினையும் கால்நடை வளர்ப்புத் துறை செம்மறி ஆட்டுயினப் பெருக்குத் திட்டத்தினையும் செயல்படுத்தி வருகின்றன:—

மாவட்டம். (1)	திட்டங்கள். (2)
1. சேலம்	கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல், செம்மறி ஆடு வளர்த்தல்.
2. வடஆர்க்காடு	கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல், செம்மறி ஆடு வளர்த்தல்.
3. மதுரை	கன்று வளர்த்தல், கோழி வளர்த்தல்.
4. தென் ஆர்க்காடு ..	கன்று வளர்த்தல்.
5. கோயம்புத்தூர்	கன்று வளர்த்தல்.
6. திருநெல்வேலி ..	செம்மறி ஆடு வளர்த்தல்.
7. செங்கற்பட்டு	கோழி வளர்த்தல்.

கன்று வளர்த்தல்.—மூன்றும் மாதம் முதல் 28ஆம் மாதம் வரையில் தேவையான உதவியை தீவன வடிவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறியளவு நிலம் வைத்திருக்கும்/ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கும் வேளாண்மைத் தொழிலாளர்களுக்கும் இத்திட்டத்தின் கீழ் அளிக்கப்படும். சிறிய அளவு நிலம் வைத்திருக்கும்/ஓரளவு நிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு விவசாயி, உதவித் தொகையாக 800 ரூபாயையும் கடனாக 800 ரூபாயையும் பெறுவார். ஒவ்வொரு வேளாண்மைத் தொழிலாளர் உதவித் தொகையாக 1,066 ரூபாயையும் கடனாக 534 ரூபாயையும் பெறுவார். 28ஆம் மாதம் வரையில் கன்று ஒன்றினை வளர்ப்பதற்காகும் மொத்தச் செலவு ரூ. 1,600 ஆகிறது.

செம்மறி ஆட்டு இனப் பெருக்குத் திட்டம்:—செம்மறி ஆட்டுப் பிரிவு ஒவ்வொன்றிலும் 20 செம்மறி ஆடுகளும் ஒரு ஆட்டுக்கிடாவும் இருக்கும். அப்பிரிவில் மொத்த மூலதனச் செலவு ரூ. 3,000 ஆகிறது. அத்தொகையில், சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகள், உதவித் தொகையாக 750 ரூபாயும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயிகளும் வேளாண்மைத் தொழிலாளர்களும் உதவித் தொகையாக 1,000 ரூபாயும் பெறுவர்.

கோழியினப் பெருக்குத் திட்டம்:—கோழி வளர்ப்புப் பிரிவு ஒவ்வொன்றிலும், முட்டையிடும் 100 கோழிகள் இருக்கும், அப்பிரிவிற்காகும் மொத்த மூலதனச் செலவு சுமார் ரூ. 5,330 ஆகும். சிறிய அளவு நிலம் வைத்திருக்கும் ஒவ்வொரு விவசாயி, உதவித் தொகையாக 1,330 ரூபாயும், ஓரளவு நிலம் வைத்திருக்கும் விவசாயியும் வேளாண்மைத் தொழிலாளரும் உதவித் தொகையாக 1,776 ரூபாயும் பெறுவர்.

வறட்சிப்பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—தமிழ்நாட்டிலுள்ள வறட்சிப் பாங்கான பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில், தருமபுரி மாவட்டமும், இராமநாதபுரம் மாவட்டமும் அடங்குகின்றன. மக்கள் வாழ்க்கைக்குரிய வருமானத்தை அளித்தல், சுற்றுப்புறப் பகுதிகளில், தரம் வாய்ந்த கால்நடை செல்வத்தைப் பெருக்குதல் ஆகிய இவ்விரண்டும் இத்திட்டத்தின் நோக்கமாகிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்குத் துணைத் தொழில் வாய்ப்பினை அளிப்பதற்கும் இது வகை செய்கிறது.

இராமநாதபுரம் மாவட்டம் :

1976-77 ஆம் ஆண்டில் 750 கறவை இனங்களை பங்கீடு செய்வதற்காகவும், 770 செம்மறி ஆடு பிரிவுகளைத் தொடங்குவதற்காகவும், பால் பண்ணை வளர்ச்சிக்கு நிதியுதவி அளிப்பதற்காகவும் 1976-77 ஆம் ஆண்டு உதவித் தொகையாகிய ரூ. 16.81 இலட்சம் ஒதுக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம் :

1976-77 ஆம் ஆண்டில் 3,500 கலப்பின கன்றுகளை வளர்ப்பதற்காகவும், 100 செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளை தொடங்குவதற்காகவும், 100 கோழி வளர்ப்புப் பிரிவுகளை தொடங்குவதற்காகவும் அரசு, 1976-77 ஆம் ஆண்டில் உதவித் தொகையாகிய ரூ. 10.36 இலட்சம் ஒதுக்க அனுமதி வழகியுள்ளது.

28. பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்.

தமிழ் நாட்டில், சேலம், தென் ஆற்காடு; திருச்சிராப்பள்ளி, தருமபுரி, வட ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகள் ஒன்பது உள்ளன. மேற்கூறியவற்றில், தென் ஆர்க்காடு மாவட்டத்திற்கு அடுத்தபடியாக, சேலம் மாவட்டம் பெருவாரியான பழங்குடியினர்களைக் கொண்டுள்ளது. பழங்குடியினர் வாழும் தனித்தனியான ஒன்பது பகுதிகளிலும் வசிக்கின்ற மொத்த பழங்குடியினரின் எண்ணிக்கை 1,45,416 ஆகிறது.

மலைப் பகுதிகளில் மேய்ச்சல் தரைகள் மிகுதியாக காணப்படுவதால், கால்நடை வளர்ப்பிற்கு அவை மிகவும் பொருந்துகின்றன. கால்நடை வளர்ப்பின் கீழ் உள்ள துணைத் தொழில்கள், பழங்குடி குடும்பங்களுக்கு நிலையான துணை வருமானம் அளிக்கின்றன.

கால்நடை வளர்ப்புத் துறையின் வருமானம் ஆண்டு முழுவதும் ஒரே சீராக இருக்கும் ; நாள் தோறும் வருமானம் கிடைக்கும் ; அத்தகைய கால்நடை வளர்ப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம் பழங்குடி மக்கள் அதிகமாகப் பயனடைவார்கள் ; இத்திட்டங்களை மேற்கொள்வதற்கு அவர்களே விரும்பி வருவார்கள். மலைப் பகுதிகளில் வாழும் பழங்குடியினரின் குடும்பங்கள் பயன் பெறும் வகையில் திட்டங்கள் வகுக்கலாம் ; அவ்வாறு செய்கையில் கால்நடை மருத்துவ உதவி அவர்களது

கால்நடைகளுக்கு கிட்டுமாறு செய்ய வேண்டும் ; அத்துடன் அவர்களது கால்நடை பண்ணைப் பொருட்களுக்கு விற்பனை வசதியும் செய்து தர வேண்டும்.

கறவை மாடுகளை வளர்த்தல், கோழி வளர்ப்பு நிலையங்களை அமைத்தல், பன்றி வளர்ப்பு நிலையங்களை அமைத்தல், தீவன புல் நாற்றுக்களை வழங்குதல், சுகாதார வசதிகளை வழங்குதல் போன்றவற்றில் பழங்குடி மக்களுக்கு உதவ இத்துறை கருதியுள்ளது.

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் அதிகரித்து வரும் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு இம்மாவட்டங்களில் தற்போது கிடைக்கின்ற கால்நடை வசதிகள் போதுமானதாக இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு, பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு மேம்பாட்டுக்காக சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. பழங்குடியினர் பகுதி வளர்ச்சிக்காகவென்றே துணைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.; இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக 1976-77 ஆம் ஆண்டில் ரூ. 4 இலட்சம் நிதி ஒதுக்கி அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வடஆர்க்காடு, தென்னார்க்காடு, தருமபுரி, சேலம், திருச்சி, மாவட்டங்களிலுள்ள பழங்குடியினர் வாழும் 9 பகுதிகளில் கீழ்க்காணும் கால்நடை வளர்ப்புத் திட்டங்கள் 1976-77 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டன :—

1. கோழி வளர்ப்புப் பிரிவுகள் (5 பெட்டைக் கோழிக் குஞ்சுகளும், ஒரு சேவல் கோழிக் குஞ்சும் அடங்கிய ஒவ்வொரு பிரிவு) ..	580
2. செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகள் (10 செம்மறி ஆடுகளும் ஒரு ஆட்டுக் கிடாவும் அடங்கிய ஒவ்வொரு பிரிவு) ..	325
3. பன்றி வளர்ப்புப் பிரிவுகள் (2 பெண் பன்றியும் ஒரு ஆண் பன்றியும் அடங்கிய ஒவ்வொரு பிரிவு). ..	52
4. கறவை மாடுகளை பங்கீடு செய்தல்—	
(a) பசு மாடுகள்	10
(b) எருமை மாடுகள்	18

கால்நடை வளர்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக, பழங்குடி மக்களை ஊக்குவிக்கும் பொருட்டு, சின்னக்கல்ராயன்மலைக்கு 100 சதவீத உதவித் தொகைக்கும், ஏனைய பகுதிகளுக்கு 50 சதவீத உதவித் தொகைக்கும் அனுமதி வழங்கப்பட்டது.

ரூ. 16.50 இலட்சம் செலவில், 1977-78 ஆம் ஆண்டில் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் கால்நடை வளர்ப்பு வளர்ச்சிக்காக அதே போன்ற துணைத் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முன் கூட்டியே செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

29. மலைப்பகுதி வளர்ச்சித் திட்டம்.

இந்திய அரசு ஆதரவு பெற்ற மலைப் பகுதி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், நீலகிரி மாவட்டம், கால்நடை வளர்ப்பு வளர்ச்சித் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மாநில அரசு இணை மானியம் வழங்கப்படவேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, இந்திய அரசு, இத்திட்டத்திற்கு முழு நிதியுதவி அளித்துள்ளது.

உதகமண்டலம், மாவட்ட கால்நடை வளர்ப்புப் பண்ணையை விரிவுபடுத்தும் திட்டத்தின்கீழ், கால்நடைகள், டிராக்டர்கள் வேளாண்மை சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக, 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 2.45 இலட்சம் நிதி ஒதுக்கி அனுமதி வழங்கியுள்ளது. செம்மறி ஆடு வளர்ப்பு திட்டத்தின் கீழ் 150 செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகள், 4 செம்மறியாடு இனப் பெருக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றை அமைப்பதற்காக 1975-76 ஆம் ஆண்டில் ரூ. 4.2 இலட்சம் ஒதுக்க அனுமதி வழங்கியுள்ளது.

1977-78 ஆம் ஆண்டில், ரூ. 4.60 இலட்சம் செலவில் 100 செம்மறியாடு வளர்ப்புப் பிரிவுகளைத் தொடங்குவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன, மற்றும் இந்த ஆண்டில் ரூ. 22.37 இலட்சம் செலவில், கோல்கிரைன், குருத்துகுளியில் 78 ஏக்கரில் தீவனப் பண்ணையை ஏற்படுத்தவும், உதகமண்டலத்தில் கால்நடை நோய் ஆய்வுப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவும், குன்னூர், கேத்தி, கோத்தகிரி ஆகிய இடங்களிலுள்ள கால்நடை மருந்தகங்களைத் தரம் உயர்த்தவும், குன்னூர், உதகமண்டலத்தில் இரண்டு நடமாடும் மருந்தகப் பிரிவுகளை தொடங்கவும், குன்னூரில் அவசர சிகிச்சை மருந்தக ஊர்தி ஒன்றை ஏற்படுத்தவும் கருதப்பட்டுள்ளது.

30. மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்.

சிறப்பு மத்திய உதவியின் மூலம் நிதியுதவி பெறும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 500 தேர்ந்தெடுக்கப்பட்ட உழவர்கள், சிறு உழவர்களுக்கும், 500 வேளாண்மை

தொழிலாளர்களுக்கும் 1976-77 ஆம் ஆண்டில் உதவித் தொகை வழங்கும் பொருட்டு ரூ. 2.25 இலட்சம் நிதி ஒதுக்கி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. உற்பத்தி நிலை வரை 1,000 கலப்பின கன்றுகளை வளர்ப்பதற்காக தீவன உதவித் தொகை வடிவில் உழவர்கள் உதவி பெறுவர். மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டத்தின் கீழ் கீழ்க்கண்டவை பரிசீலனையில் உள்ளன. திருநெல்வேலியில் 1,000 கலப்பினக் கன்றுகளை வளர்த்தல், கோடைக்கானல் கால்நடை மருத்துவ மனையை மருந்தக நிலையமாகத் தரம் உயர்த்துதல்; கோடைக்கானல் வட்டத்திற்கு இரண்டு நடமாடும் மருந்தகப் பிரிவுகளை அமைத்தல்; கால்நடை நோய் ஆய்வு பிரிவு ஒன்று அமைத்தல்; அவசர சிகிச்சை மருந்தக ஊர்திகள்; கோடைக்கானலில் கேந்திர கிராம நிலையம் ஒன்றையும், வால்பாறையில் ஒரு கேந்திர கிராமத்தையும், இரண்டு நடமாடும் மருந்தகப் பிரிவுகளையும் ஏற்படுத்துதல்.

31. ஒருங்கிணைந்த மாதிரிப் பொருள் ஆய்வுத் திட்டம்.

தமிழ் நாட்டில் ஒருங்கிணைந்த மாதிரி ஆய்வுத் திட்டம் என்னும் மத்திய அரசு ஆதரவுத் திட்டத்திற்கு திட்டக் குழுவும், மத்திய நிதியமைச்சகமும், இந்திய அரசும் ஏற்பளிப்பு வழங்கியது; முறையான வகையில் சீராக பால், முட்டை, கம்பளி, இறைச்சி போன்ற கால்நடை உற்பத்திப் பொருட்களின் விவரங்களைத் தொகுத்து சேகரிப்பதற்காக தமிழ்நாடு அரசு இதற்கு அனுமதி வழங்கியது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம் முழுவதும் மாநில, மத்திய அரசால் இத்திட்டத்திற்கு சரிசம அடிப்படையில் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

32. பன்னிரெண்டாவது, ஐந்தாண்டுக்கொருமுறை எடுக்கும் கால் நடைக் கணக்குகள்.

15—7—1977 ஆம் நாளைக் கணக்கெடுப்பு நாளாகக் கொண்டு, தமிழ்நாட்டிலுள்ள புள்ளி விவரத்துறை, ஐந்தாண்டுக்கொருமுறை எடுக்கும் கால்நடைக் கணக்கெடுப்பைப் பன்னிரெண்டாவது முறையாகத் தொடங்கியுள்ளது.

33. சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி.

சென்னையிலுள்ள கால்நடை மருத்துவக் கல்லூரியும், கால்நடை அறிவியலுக்கென்று அமைந்த ஆறு, ஆராய்ச்சிப் பயிற்சிப் பிரிவுகளும், 1976 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் நாளிலிருந்து தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்துடன் இணைந்த தொகுதிப் பிரிவுகளாக மாற்றப்பட்டுள்ளன. இம்முடிவின்படி, பல்நோக்கு ஆராய்ச்சிப் பணிகளைத் தொடர்வது குறித்த பல்கலைக்கழகச் செயல்கள் குறிப்பிடத் தக்க வகையில் அதிகரித்துள்ளது.

பிற துறைகளிலும், இயல்களிலும் உள்ள கற்பித்தல், ஆராய்ச்சி, வளர்ச்சிக் கல்வி பற்றிய நடவடிக்கைகளோடு சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி, கால்நடை அறிவியல் பற்றிய ஆறு ஆராய்ச்சி நிலையங்கள், இவற்றின் கற்பித்தல், ஆராய்ச்சி, பயிற்சி ஆகிய பணிகளோடு, 1977-78 ஆம் ஆண்டில் முழுமையாக இணைக்கப்படும். இவ்விதம் இணைப்பதன் மூலம் பல்கலைக் கழக முறையில் அமையும் வகையில் முன்கூறிய நிறுவனங்கள் மாற்றியமைக்கப்படும்.

பல்கலைக் கழகத்திற்கு மாற்றப்பட்ட சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியும், மற்றும் ஆடு ஆராய்ச்சி பயிற்சி நிலையங்களும், எஞ்சியுள்ள காலமான 1—2—1976 முதல் (மாற்றம் செய்யப்பட்ட நாள்) 31—3—1977 வரையுள்ள காலத்திற்கு திட்டத்தில் வராத பணிகளின் கீழ் ரூ. 41.05 இலட்சமும், திட்டப்பணிகளின் கீழ் ரூ. 23.67 இலட்சமும் ஆக மொத்தம் ரூ. 64.72 இலட்சம் செலவுத் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

III. கால்நடைப் பண்ணைகளும் கால்நடை நோய் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிலையமும்.

1. கால்நடைப் பண்ணைகள்.

உயரினப் பொலி காளைகளைக் கிடைக்கச் செய்வதற்காக, நம் மாநிலத்திலுள்ள ஏழு அரசு கால்நடைப் பண்ணைகள் மூலப் பண்ணைகளாகச் செயல்படுகின்றன. கால்நடைப் பண்ணைகளில், இந்திய இனக் கால்நடைகளும், அயல் இனக் கால்நடைகளும் பராமரிக்கப்படுகின்றன.

பணியின் நோக்கம் :—(1) கலப்பற்ற இந்திய தேசிய ரகங்களைப் பேணியும் விஞ்ஞான முறைப்படி உற்பத்தி செய்தும் உணவளித்தும், சிறந்த பராமரிப்பு முறைகளாலும் அவைகளின் வளர்ச்சிக்கு உகந்த இருப்புத்திறனை ஆராய்தல் ;

(2) உயர்ந்த அளவு பால்தரும் இந்திய—அயல் இன ஆகிய இரு ரகங்களிலும், கலப்பற்ற இனங்களைப் புகுத்துதல்;

(3) தெரிந்தெடுத்த உற்பத்தி செய்ய உயர் ரகக் காளை இனங்களை வளர்க்க, ஆகிய இவ்விரு நோக்கங்களுக்காக பெயர் தெரியாத உள்ளூர் கால்நடை வகைகளை முன்னேற்றுதல்;

(4) நல்லரகக் கால்நடையினங்களை உருவாக்கும் நோக்கத்துடன் மாடுகள், ஆடுகள், பன்றிகள் இவற்றின் முன்னேற்றத்திற்கான ஆராய்ச்சிகளை நடத்துதல்;

(5) கால்நடைகளுக்கு உணவூட்டுதல், இனப் பெருக்கம் செய்தல், பராமரித்தல் முதலியவை பற்றிய அறிவியல் முறைகளை மாணவர்களுக்கும் குடியானவர்களுக்கும் கற்றுக்கொள்ளப் பயிற்சி நிலையங்களாகப் பயன்படுதல்;

(6) மாநிலம் முழுவதிலும், உள்நாட்டு கிராம ரகங்களைத் தரப்படுத்தி முன்னேறச் செய்ய, அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், விவசாயிகள் ஆகியோருக்கு நல்லரக இனப் பெருக்க 'மூலப் பொருட்களை' (Seed Materials) பலதிறப்பட்ட மாடுகள் இனப் பெருக்கத் திட்டங்களுக்காக வழங்குதல் ; கம்பளி, இறைச்சி இவற்றைப் பொறுத்தமட்டில் உள்நாட்டு ஆடுகளை முன்னேற்ற, ஆட்டின உற்பத்தித் திட்டங்களுக்காக போதுமான அளவில், தரமான பொலி ஆடுகளை வழங்குதல் ; உயர்ரகப் பன்றி வகைகளைப் பரவலாக்க, ஆண், பெண் பன்றிகளை வழங்குதல்;

(7) இந்த பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் பால், இறைச்சி ஆகியவை உள்ளூர் பொதுமக்களுக்குப் பயன்படச் செய்தல்;

(8) தீவன விதைகளைப் பெருக்குவதன் மூலம் பலதரப்பட்ட தீவனப் புல்கள் பயிர்கள்—இவற்றின் உள்ளூர்க்கு உகந்த வகையில் மாற்றப்பட்ட ரகங்களை பொதுமக்களின் நிலங்களில் உற்பத்திப் பெருக்கத்திற்காக அவர்கட்கு வழங்குதல்;

2. அயல் இன மாட்டுப் பண்ணை, ஈச்சங்கோட்டை.

ஒரத்தநாடு, மாவட்டக் கால்நடை பண்ணையுடன் இணைந்த ஈச்சங்கோட்டைப் பண்ணை, கலப்பற்ற ஜெர்ஸி மாடுகளை உற்பத்தி செய்வதற்காக, டேனிஷ் அரசின் உதவியுடன், மத்திய கால்நடை இனப்பெருக்கப் பண்ணையாகத் தற்போது செயல்பட்டு வருகின்றது.

மாவட்ட கால்நடைப் பண்ணையின் விவரங்கள்.

பண்ணையின் பெயர்.	பராமரிக்கப்படும் கால்நடை இனம்.	மொத்த பரப்பு. (ஏக்கரில்).	1–4–1976ஆம் நாள் நிலவரப்படி மொத்த எண்ணிக்கை.	1975–76 ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட பால். (கி.கிராம்.)	1975–76 ஆண்டில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்கள்/ தீவனங்கள். (கி.கிராம்).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1. மாவட்டக் கால் நடைப்பண்ணை, ஓசூர்.	சிந்தி, ஜெர்ஸி, பெரிஸியன், சிவப்பு இன சிந்தி, அயலினக் கலப்புக் கால்நடைகள்.	1,646.4	1,108	4,76,978.0	33,90,275
2. மாவட்டக் கால் நடைப்பண்ணை, ஒரத்தநாடு.	சிந்தி, பழுப்புநிற சுவிஸ், ஜெர்ஸி, அயலினக் கலப்புக் கால்நடைகள், மூர்ரா எருமை.	253.65	972	2,59,880.0	15,10,353
3. கால்நடைப் பண்ணை, கொருக்கை.	உம்பலாச்சேரி, சிந்தி உம்பலாச் சேரி, கலப்பினம்.	495.7	678	34,305.7	34,200
4. மாவட்டக் கால் நடைப்பண்ணை, செட்டிநாடு.	தார்பார்க்கர், ஜெர்ஸி முர்ரா கலப்பினம்.	1,907.3	760	1,71,381.6	18,45,670
5. மாவட்டக் கால் நடைப்பண்ணை, அபிஷேகப்பட்டி.	ஜெர்ஸி கிர், கலப் பினம், கிர், மூர்ரா.	1 969.8	243	71,764.6	3,60,400
6. மாவட்டக் கால் நடைப்பண்ணை, உதகமண்டலம்.	ஜெர்ஸி கலப்பினம், பெரிஸியன் கலப் பினம், பெரிஸியன் ஜெர்ஸி.	129.4	308	1,01,748.5	8,76,320
7. மாவட்டக் கால் நடைப்பண்ணை, புதுக்கோட்டை.	சிந்தி, காங்கயம், மூர்ரா, ஜெர்ஸி, சிந்தி கலப்பினம்.	990.6	1,011	2,33,103.7	3,15,000

[1977 ஆகஸ்ட் 17

3. இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிறுவனம்.

கடும் தொற்று நோயினால் பெருவாரியான கால்நடைகள் இறந்துவிடுவதன் காரணமாக, இத்தகைய நோய்களைக்கட்டுப் படுத்துவது குறித்து கவனம் செலுத்துவது இன்றியமையாத தாகும். பல்வேறு தொற்று நோய்கள் பரவாவண்ணம் கால் நடைகள் உரியவாறு பாதுகாக்கப்பட்டால்தான் கால்நடைகளைப் பெருமளவுக்கு உற்பத்தி செய்ய முடியும். எனவே, நோய்த் தடுப்புத் திட்டம் வெற்றி அடைவதைப் பொறுத்து மேற்கொண்டு கால்நடை உற்பத்தித் திட்டம் வெற்றியடையும். ஆதலால், தர மான நிணநீர், நோய்த்தடுப்பு மருந்துகள் ஆகியவற்றைத் தயா ரிக்க வேண்டியது அவசியம் என உணரப்பட்டது. இதைக் கருத் திற்கொண்டு, கால்நடைகளுக்கு வரும் வெக்கை நோய்த் தடுப்பு மருந்தை உற்பத்தி செய்ய 1932 ஆம் ஆண்டில், கால்நடை நோய்த்தடுப்பு மருந்துநிறுவனம் தொடங்கப்பட்டது. இந் நிறுவனம் தற்போது, நோய்த்தடுப்பு மருந்தினை உற்பத்தி செய்த தோடு நோய்த்தடுப்பு மருந்தின் தரத்தை உயர்த்துதல், நோய்த்தடுப்பு மருந்துகளைப் புதிதாகக் கண்டுபிடித்தல், பல்வேறு நோய்க்கான காரணங்கள், அவற்றைத்தடுப்பதற்கான முறைகள் ஆகியவை குறித்து ஆய்வு செய்தல் முதலிய ஆராய்ச்சிப் பணி களில் ஈடுபட்டுள்ளது. இந்நிறுவனத்திலிருந்து பல ஆராய்ச் சிக் குறிப்புகளும் வெளியிடப்படுகின்றன. இந்நிறுவனத்தில் 23 உயிரியல் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இவற்றைக் கொண்டு நமது மாநிலத்தின் தேவைகளை நிறை செய்வதோடு மட்டுமல்லாது அண்டை மாநிலங்களுக்கும் வழங்கப்படுகின்றன. சென்னை கால்நடைக் கல்லூரி, கால்நடை மருத்துவ பட்ட மேற்படிப்பு மாணவர்கள், பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்கள் கொண்ட குழுவினர் பல்வேறு உயிரியல் பொருட் களைத் தயாரிக்கும் முறையையும் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றியும் அறிந்து கொண்டு அவற்றில் பயிற்சி பெற ஒவ்வோராண்டும் முகமையில் அனுப்பப்படுகின் றனர்.

இராணிப்பேட்டையிலுள்ள கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிறுவனங்களை துணை இயக்குநர் பதவித் தரத்திலுள்ள ஓர் அதிகாரியின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயலாற்றி வருகிறது. தொற்று நோயைத் தடுப்பதற்கான பல்வேறு உயிரியல் பொருட்களை உற்பத்தி செய்து அவற்றை வழங்கும் பணியை இந்நிறுவனம் கவனித்து வருகிறது.

மேலும் இந்நிறுவனம் நோய்களைக் கண்டறிதல், புதிய நோய்த் தடுப்பு மருந்துகள், உயிரியல் பொருட்கள் உற்பத்தி செய்தல் ஆகியவை குறித்த ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டுவருகின்றது.

1977 ஆகஸ்ட் 17]

நோயைக் கண்டறிவதில் இராணிப்பேட்டை கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிறுவனத்தின் இயக்குநருக்கு உதவ இத்துறையில் கால்நடை, செம்மறியாடு, கோழி ஆகிய மூன்றுக்கும் தனித் தனியே ஒரு அதிகாரியாக நோய் ஆய்வு அதிகாரிகள் மூவர் உள்ளனர்.

கால்நடை நோய் தடுப்பு மருந்து நிறுவனத்தின் இயக்கு நருக்குத் தொழில் நுட்பப் பணிகளில் துணை புரிவதற்கென்று ஆராய்ச்சி அதிகாரி (கிருமி நோய்க்குறி இயல்), ஆராய்ச்சி அதிகாரி (கொள்ளை நோய்), ஆராய்ச்சி அதிகாரி (சோதனை-தரக்கட்டுப்பாடு), ஆராய்ச்சி உதவி அதிகாரிகள், உயிரியல் இரசாயன வல்லுநர் ஒருவர் ஆகியோர் உள்ளனர்.

இந்நிறுவனம் கால்நடைகள், கோழிகள் ஆகியவற்றை நோயினின்றும் பாதுகாக்க பல்வேறு நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்கிறது. அவற்றின் விவரம் பின்வருமாறு :—

1. இராணிகெட் நோய்த் தடுப்பு மருந்து—K.
2. இராணிகெட் நோய்த் தடுப்பு மருந்து—F.
3. கோழி தொற்று நோய்த் தடுப்பு மருந்து.
4. புரு தொற்று நோய்த் தடுப்பு மருந்து.
5. கறவைப் பசுக்களுக்கு நச்சு, சீழ்க்கட்டும் நோய்த் தடுப்பு மருந்து.
6. சப்பை நோய்த் தடுப்பு மருந்து.
7. அடைப்பான் நோய்த் தடுப்பு மருந்து.
8. தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்து.
9. வெக்கை நோய்த் தடுப்பு மருந்து.
10. (Tissue Culture) தசைகள் வழியாக வெக்கை நோய் தடுப்பு மருந்து.
11. செம்மறியாட்டு அம்மை நோய்த் தடுப்பு மருந்து.
12. ஆடுகளுக்கு காய்ச்சலுடன் மூட்டுக்களை வீங்கச் செய்யும் நோய்த் தடுப்பு மருந்து.
13. சாதாரண உப்பு நீர்.

[1977 ஆகஸ்ட் 17

14. காய்ச்சலுடன் மூட்டுக்களை வீங்கச் செய்யும் நோய் கண்டுள்ள ஆடுகளின் பாலை சோதனை செய்வதற்கான மருந்து.

15. ஆடுகள் நச்சுச் செடிகளை உட்கொள்ளுவதனால் நச்சு நோய் பரவி மரணத்தை உண்டாக்கும் நோயைத் தடுக்கும் மருந்து.

16. பன்றிகளுக்கு முகம், கழுத்து ஆகிய பகுதிகளில் நோய் பரவி அவை சிவந்து காணப்படும் அத்தகைய நோயைத் தடுக்கும் மருந்து.

17. சோடியம் சிட்ரேட் கரைசல்.

18. சோடியம் பை-கார்பனேட் கரைசல்.

19. பி-52, நுண்கிருமி வளர்ப்புச் சோதனை.

20. ஆடு, மென்தோல் ஆகியவற்றைத் தாக்கும் கோமாரி நோய்க்கு உறையவைத்து உலர வைத்த தடுப்பு மருந்து.

21. கால்நடை நோய்த் தடுப்பு மருந்து (H. S. Oil Adj vaccine).

22. செம்மறியாடு, ஆடு நோய்த் தடுப்பு மருந்து (H S. Oil Adj vaccine).

23. கோழியைத் தாக்கும் காலரா நோய்த் தடுப்பு மருந்து.

4. <u>கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டங்கள்.</u>—கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிறுவனத்தில் உள்ள மாநில உயிரியல் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்தி பலப்படுத்துவதற்கான மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டத்தை, 1975 ஏப்ரல் திங்கள் முதல், 1979 மார்ச்சுத் திங்கள் வரை 50 இலட்சம் ரூபாய் செலவில் செயல்படுத்த மத்திய அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

இராணிப்பேட்டையிலுள்ள, கால்நடை நோய்த் தடுப்பு மருந்துவ நிலையத்தில் மேலே சொல்லப்பட்ட திட்டத்தின்கீழ் கீழ்க்காணும் பணித் திட்டங்களை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. :—

(i) நோய்த்தடுப்பு மருந்திற்கான தேவை அதிகரித்து வருகிறது. இதனை நிறைவு செய்ய வேண்டி பல்வேறு நோய்த் தடுப்பு மருந்துகளை அதிக அளவில் உற்பத்தி செய்ய கூடுதல் கட்டிடங்களைக் கட்டுதல், கருவிகளை வாங்குதல், கூடுதல் பணியாளர்களை நியமித்தல்.

1977 ஆகஸ்ட் 17]

(ii) கீழ்க்காணும் நோய்த் தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்தல் :—

1. வெறிநாய் நோய்த் தடுப்பு மருந்து (Antirabies).

2. கோழிக்குஞ்சுகளின் கால்களைச் செயலிழக்கச் செய்யும் தொற்று நோய்த் தடுப்பு மருந்து (Marek's disease vaccine).

3. நாய்களுக்கு வரும் டிஸ்டெம்பர் வியாதிக்கு தடுப்பு மருந்து (Distemper).

4. கால் வாய் கோமாரி நோய்த் தடுப்பு மருந்து (Foot and mouth).

5. பன்றிக்கு கடும் காய்ச்சலை உண்டாக்கும் நோய்த் தடுப்பு மருந்து (Swine Fever).

(iii) பிரோட்டோஜோவன் நுண் கிருமிகளினால் ஏற்படும் நோயினைத் தடுக்கப் புதிய மருந்துகளை உற்பத்தி செய்தல்.

1. தெய்லேரியா நோய்த் தடுப்பு மருந்து.

2. அன பிளாஸ்மா நோய்த் தடுப்பு மருந்து.

3. கால்நடைகளுக்கு அடிக்கடி காய்ச்சல் கண்டும், கல்லீரல், மண்ணீரல் ஆகியவற்றை வீங்கச் செய்யும் நோய்த் தடுப்பு மருந்து.

IV. கால்நடைச் சுகாதாரப் பணிகள்.

1. செயற்படுத்தப்படும் வளர்ச்சித் திட்டங்கள் மூலம் நல்ல பலனை அடைய வேண்டுமானால், கால்நடைகளை நோய் நொடியின்றி நல்ல முறையில் பராமரிப்பது மிகவும் அவசியம்.

219 ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு கால்நடை மருந்தகமும், 141 ஊராட்சி ஒன்றியங்களில் இரு கால்நடை மருந்தகங்களும், 13 ஊராட்சி ஒன்றியங்களில் மூன்றுகால்நடை மருந்தகங்களும், ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு கால்நடை மருந்தகங்களும் உள்ளன.

2. 1977-78-ல் ஐந்து கால்நடை மருந்தகங்கள் ஏற்படுத்தப்படும்.

[1977 ஆகஸ்ட் 17

தற்போது செயல்பட்டு வரும் கால்நடை மருத்துவ நிலையங்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது :—

1. கால்நடை மருத்துவ மனைகள்	..	33
2. கால் நடை மருத்துவ மனைகள்—		
மையக் கிராம நிலையங்கள்	.. ..	10
3. கால்நடை மருந்தகங்கள்	.. ..	505
4. கால்நடை மருந்தகங்கள்—		
மையக் கிராம நிலையங்கள்	.. ..	79

1977-78 ஆம் ஆண்டில் ஐந்து கால்நடை மருந்தகங்களை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலையங்களில் கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிப்பதோடு, நோய்த்தடுப்பு மருந்துகள் ஊசிமூலம் போடப்படுகின்றன. காளைகளுக்கு காயடித்தலும் செய்யப் படுகிறது.

	1974–75.	1975–76.
1. சிகிச்சையளிக்கப்பட்ட கால் நடை.	49,98,392	53,70,511
2. நோய்த் தடுப்பு மருந்து குத் தப்பட்டவை.	80,65,205	1,16,42,991
3. செயற்கை முறையில் கருத் தரிப்புச் செய்யப்பட்டவை.	7,23,916	7,41,701
4. காயடிக்கப்பட்டவை ..	4,68,382	6,30,693

<u>மருத்துவமனை ஆய்வுக்கூடங்கள்.—</u>

நவீன மருந்தைக் கையாளுவதில் தனி மருத்துவ ஆய்வுக் கூடங்கள் புரிந்துள்ள பணியானது, வெகு விரைவில் நோயறிதல், பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை அளித்தல், தடுத்தல் ஆகியவை

1977 ஆகஸ்ட் 17]

குறித்து துறைப் பணியாளர் தொகுதியினருக்கு உதவி நல்கும். தற்போது, அத்தகைய பதிமூன்று ஆய்வுக் கூடங்கள் தமிழ் நாட்டில் மாவட்ட தலைமையிட மருத்துவ மனைகளிலும் கால் நடைப் பண்ணைகளிலும் செயல்படுகின்றன. சென்னை, காஞ்சி புரம், வேலூர், கடலூர், கோயம்புத்தூர், சேலம், நாகர் கோயில், திருநெல்வேலி, தல்லாகுளம் ஆகிய மாவட்டத் தலைமை யிடங்களில் ஒன்பது தனி மருத்துவ ஆய்வுக் கூடங்களும், சிவகங்கையில் வட்டத் தலைமையிடத்தில் ஒன்றும், ஹோசூர், ஒரத்தநாடு, புதுக்கோட்டை ஆகிய இடத்தில் மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் மூன்றும் அமைந்துள்ளன.

<u>மருத்துவ நிலையங்கள்.—</u>

3. சென்னை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருச்சி ஆகிய நான்கு இடங்களில் நோய் வல்லுனர் கொண்டுள்ள மருந் தகங்கள் இயங்கி வருகின்றன.

V. கால்நடைப் பராமரிப்புத் துறையின் நிர்வாக அமைப்பு.

மண்டல அடிப்படையில், கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுகிறது. கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநரின் மேற்பார்வையின்கீழ் துறையின் அனைத்து நடவடிக்கைகளும் கால் நடைப் பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்துடன் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

மண்டல துணை இயக்குனரின் தலைமை இடமும், அவர்களின் வரம்பிற்கு உட்பட்ட இடமும்.

மண்டலம்.	தலைமையிடம்.	அதிகார வரம்புள்ள மாவட்டங்கள்.	உதவி இயக்குநர்கள் கோட்டம்.	பண்ணைகள்.
(1)	(2)	(3)	(4)	(5)
1. சென்னை ..	சென்னை மாநகரம்.	சென்னை மாநகரம்.	சென்னை ..	....
2. வேலூர்	வேலூர்	வட ஆற்காடு ..	திருப்பத்தூர், ராணிப்பேட்டை, ஆரணி, திருவண்ணாமலை, தருமபுரி, ஹொசூர்.	தருமபுரி மாவட்ட கால் நடைப்பண்ணை, ஹொசூர்.
3. கோயம்புத்தூர் ..	கோயம்புத்தூர் ..	கோயம்புத்தூர் ..	கோபிசெட்டி பாளையம், ஈரோடு, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருப்பூர், தாராபுரம், உடுமலைப் பேட்டை, அவினாசி.	....
		சேலம்	சேலம், நாமக்கல், திருச்செங்கோடு, ஓமலூர்.	....
		நீலகிரி	உதகமண்டலம் ..	மாவட்ட கால் நடைப் பண்ணை, உதகமண்டலம்.
4. தஞ்சாவூர் ..	தஞ்சாவூர் ..	தஞ்சாவூர் ..	மாயவரம், கும்பகோணம், தஞ்சாவூர், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, நாகப்பட்டினம்.	மாவட்ட கால் நடைப் பண்ணை, ஒரத்தநாடு, மாவட்ட கால்நடைப் பண்ணை, கொருக்கைப் வெளிநாட்டு இனக் கால் நடைவளர்ப்புப்பண்ணை, ஈச்சன்கோட்டை.
		திருச்சி	அரியலூர், முசிறி, கரூர், திருச்சி.	....
		புதுக்கோட்டை ..	புதுக்கோட்டை ..	மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை.
5. மதுரை	மதுரை	மதுரை	திண்டுக்கல், கொடைக்கானல், திருமங்கலம், மதுரை, மேலூர், பழனி.	....
		இராமநாதபுரம் ..	காரைக்குடி, சிவகங்கை, விருதுநகர், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம்.	ஆட்டுப்பண்ணை, சாத்தூர், மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு.
6. திருநெல்வேலி .. .	திருநெல்வேலி ..	திருநெல்வேலி ..	கோவில்பட்டி, திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி.	மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிஷேகப் பட்டி.
		கன்னியாகுமரி ..	நாகர்கோயில் ..	....
7. கடலூர்	கடலூர் ..	செங்கற்பட்டு ..	சித்லபாக்கம், திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கற்பட்டு, பொன்னேரி, பூந்தமல்லி, திருத்தணி, மதுராந்தகம்.	....
		தென்னாற்காடு ..	சிதம்பரம், விழுப்புரம், திண்டிவனம், கள்ளக்குறிச்சி.	ஆட்டுப் பண்ணை, சின்ன சேலம்.

கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் அலுவலகத்தில் கால்நடைப் பராமரிப்பு கூடுதல் இயக்குநர் ஒருவரும், கால்நடைப் பராமரிப்பு இணை இயக்குநர்கள் இருவரும், கால்நடைப் பராமரிப்பு (ஆட்டின வளர்ச்சி) துணை இயக்குநர் ஒருவரும், கால்நடைப் பராமரிப்பு (புள்ளி விவரம்) துணை இயக்குநர் ஒருவரும், கால்நடைப் பராமரிப்பு இயக்குநருக்கு உதவி புரிகின்றனர். இந்த இயக்குநர் அலுவலகத்தில், வெக்கை நோய் ஒழிப்பு அதிகாரி ஒருவரும் இருக்கிறார். இந்த மாநிலத்தில் வெக்கை நோய்ஒழிப்புத் திட்டத்திற்கு அவர் பொறுப்பு ஏற்றுள்ளார். ஆடு, கோழி மற்றும் பிற இனம் வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல், மேற்பார்வையிடுதல், கட்டுப்படுத்துதல் முதலியவற்றிற்கு கால்நடைப் பராமரிப்பு இயக்குநருக்கு, கூட்டுறவுச் சங்கங்களின் துணைப் பதிவாளர் உதவிபுரிகிறார். இயக்குநர் அலுவலகத்தில் கால்நடைப் பண்ணை பராமரிப்பு விவரங்களை பராமரிப்பு செய்வதற்கும், இந்திய அரசு ஒருங்கிணைப்பு மாதிரி ஆய்வுத் திட்ட பொறுப்புக்கும், இரண்டு கால்நடைப் பராமரிப்பு புள்ளி விவ்ர இயலாளர்கள் உள்ளனர்.

இது தவிர, மாநிலம் முழுவதும் கால்நடை தீவன வளர்ச்சித் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, வேளாண்மைத் துறையைச் சேர்ந்த கால்நடை தீவன வளர்ச்சி அதிகாரி ஒருவர் இயக்குநர் அலுவலகத்திலும் இருக்கிறார்.

சென்னை, கடலூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள கால்நடைப் பராமரிப்பு தலைமை அலுவலக துணை இயக்குநர்களைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத்துறையின் மண்டல துணை இயக்குநர்களுக்கு இரண்டு சிறப்பறிஞர்கள் உதவி புரிகின்றனர். இவற்றில், கால்நடைப் பண்ணைக்காக ஒருவரும், நோய் ஆராய்ச்சிக்காக மற்றொருவரும் ஆவர். கடலூர், திருநெல்வேலியிலுள்ள கால்நடைப் பராமரிப்பு மண்டல துணை இயக்குநர்களுக்கு ஒரு சிறப்பறிஞர் உதவி புரிகிறார். நோய்களை எதிர்த்து தடுப்பதற்கான பல்வேறு நோய் தடுப்பு நடவடிக்கைகளை எடுத்து, அவர்களுடைய பகுதியில் நோயினை கட்டுப்படுத்துவதே சிறப்பறிஞர்களின் (நோய் ஆய்வாளர்) முக்கிய திட்டப் பணியாகும். இவ்வட்டார அளவின் கீழ், சிறிய பகுதிகளில் நடவடிக்கைகள் பிரிக்கப்பட்டன. இந்த பகுதியின் கால்நடை வளர்ப்பு பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, ஒரு கால்நடை பராமரிப்பு உதவி இயக்குநர் பணி புரிகிறார்.

VI. (1) நிர்வாகத்தை சீர்படுத்த நிர்வாக அதிகாரத்தை பரவலாக்கப்பட்டது.

நிர்வாக செயல்முறையை துரிதமாக்கவும், திறம்பட செயல்படவும் சில அதிகாரங்களை இயக்குநருக்கும் கூடுதல் இயக்குநருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

(2) மாவட்ட கால்நடைப் பண்ணைகளைச் சீரமைத்தல்.

மாவட்ட கால்நடைப் பண்ணைகள் செயல்படும் விதத்தை முழுமையாக ஆய்வு செய்வதற்கும், அவசியம் ஏற்படின் பண்ணைகளின் நடவடிக்கைகளை மேம்படுத்தவும், கொள்கைக் குறிப்பில் தகுந்த மாற்றங்களை ஆலோசிப்பதற்கும் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பண்ணைக்கும் குறிப்பிட்டுள்ள மாட்டுப் பிரிவுகளுக்கு இணங்க தீவனத்தை உற்பத்தி செய்வதில் தன்னிறைவு அடைவதற்கு, கால்நடைகளின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஒவ்வொரு பண்ணைக்கும் ஒரு முழுமையான திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

VII. திட்ட ஒதுக்கீடு.

ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் திட்டச் செலவு வளர்ச்சி கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

ஆண்டு.	வரவு-செலவு மதிப்பு.	உண்மைச் செலவு.
(1)	(2)	(3)
	(ரூபாய் இலட்சத்தில்.)	
1974–75	45.16	67.22
1975–76	66.58	66.43
1976–77	82.88	121.92

வருங்காலத் திட்டம்.

1977–78ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்குக் கருதப்பட்டுள்ளது :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
(1)	(2)
1. பதினைந்து கேந்திர கிராம வட்டாரங்கள் அமைத்தல்.	13.57
2. ஐந்து கால்நடை மருந்தகங்கள் ஆரம்பித்தல்.	1.60
3. கால்நடை மருந்தகங்களை கால்நடை மருத்துவமனைகளாக உயர்த்துதல்	1.00
4. மூன்று கால்நடை நோய் ஆய்வுப் பிரிவுகளை அமைத்தல்	4.48
மொத்தம் ..	20.65

இணைப்பு-II.

[562-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 30—சமூக நலன்.

கொள்கை விளக்கக் குறிப்பு.

சமூக நலம் என்ற தலைப்பின் கீழ் 1977–78ஆம் ஆண்டிற்காக ரூ. 439.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்ய அவையின் ஒப்புதலைக் கோருகிறேன்.

2. மகளிர் நலத்துறை 1947 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. மகளிர் நல இயக்குநர் ஒருவரைக் கொண்ட முழு அளவிலான துறையொன்று 1955ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. தமிழ் நாடு மாநில சமூகநல வாரியம் 1954ஆம் ஆண்டில் ஏற்படுத்தப் பட்டது. 1958ஆம் ஆண்டு தமிழ் நாடு ஊராட்சிகள் சட்டம் கொண்டுவரப்பட்டதை அடுத்து, மகளிர் நலத்துறை, மாநில சமூகநல வாரியம், சமுதாய வளர்ச்சித் துறையின் மகளிர் நலப் பிரிவு ஆகிய மூன்று அமைப்புகளும் 1961ஆம் ஆண்டில் ஒருங்கிணைக்கப்பட்டு தனிப்பட்டதோர் மகளிர் நலத் துறையாக உருவாக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டில் மகளிர் நலத்துறையின் பெயரை, சமூக நலத்துறை என்று மாற்றியது இத்துறையின் வரலாற்றில் முக்கிய அம்சமாகும்.

3. மகளிர் நலப் பணிகளை மேற்கொள்வதுடன், இத்துறை பள்ளியில் சேராத சிறார்களுக்கும், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோருக்கும் பல்வேறு சத்துணவுத் திட்டங்கள், உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சியளித்தல், புதுவாழ்வளித்தல், சட்டப்படி காவலில் வைக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்காக இல்லம் ஒன்றை நடத்துதல் போன்ற பணிகளையும் மேற்கொண்டு வருகிறது.

நிர்வாக அமைப்பு.

4. மாநில அளவில் சமூக நலத்துறை இயக்குநரே, இத்துறையின் தலைவராவார். துணை இயக்குநர் ஒருவரும், நேர்முக உதவியாளர் ஒருவரும், நிர்வாக நேர்முக உதவியாளர் ஒருவரும் (சிறார் நலத்திற்கு ஒருவர், சிறப்புச் சத்துணவுத் திட்டத்திற்கு ஒருவரும்) ஆக சிறப்பு அலுவலர் இருவரும், உடலூனமுற்றோரின் புது வாழ்வுக்குப் பொறுப்பு வகிக்கும் உதவி இயக்குநர் ஒருவரும், முதுநிலைக் கணக்கு அலுவலர் ஒருவரும் சமூகநலத்துறை இயக்குநருக்கு உதவி புரிகின்றனர்.

5. மாவட்ட அளவில், மாவட்ட சமூகநல அதிகாரியே, துறைத் திட்டப் பணிகள் அனைத்திற்கும் பொறுப்புள்ளவராவார். ஊராட்சி ஒன்றியங்களுடன் இணைக்கப்பட்ட விரிவாக்கப் பணியாளர்கள் (சமூக நலம்) ஊர்நலப் பணியாளர்கள், சிறார் நல நிலையங்களில் சிறார் நல அமைப்பாளர்கள், நகர்ப் பகுதிகளில் சமூகநல அமைப்பாளர்கள் ஆகியோர் களப் பணியாளர்களாவர்.

மகளிர் நலன்.

பணி இல்லங்கள்—

6. 18 வயது முதல் 30 வயது வரை சமூகத்தில் உள்ள ஆதரவற்ற, கைவிடப்பட்ட பெண்களுக்கு தாம்பரத்திலும், கடலூரிலும் தஞ்சாவூரிலும் ஆக மூன்று பணி இல்லங்களை இத்துறை நடத்தி வருகிறது. அவர்களுடன் அவர்களின் இரு குழந்தைகளும் அனுமதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு ஈ.எஸ்.எல்.சி. வரை கல்வி கற்பிக்கப்படுகிறது. முதியோர் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 40 வீதமும், சிறார் ஒருவருக்கு திங்கள் ஒன்றுக்கு ரூ. 27 வீதமும் பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்தப் பயிற்சி உதவித் தொகையை முதியோர்களுக்கும், சிறார்களுக்கும் முறையே ரூ. 50, ரூ. 36 என்று உயர்த்தக் கருதப்பட்டுள்ளது. இந்த இல்லங்களில் இருப்பதற்கு அனுமதிக்கப்படுகின்ற காலம் மூன்றாண்டுகளாகும். முதியோர் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 60-ம் சிறார் ஒருவருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 25-ம் உடைகளுக்காக மானியம் வழங்கப்படுகிறது.

7. தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தின் பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள முதியோர் 200 பேராவர்; சிறார் 100 பேராவர். கடலூர், தஞ்சாவூர் பணி இல்லங்கள் ஒவ்வொன்றிலும் அனுமதிக்கப்பட்ட முதியோரின் எண்ணிக்கை 50. சிறாரின் எண்ணிக்கை 25 ஆகும்.

8. தாம்பரம் பணி இல்லத்தில் உடலூனமுற்ற மகளிர், சிறார் ஆகியோருக்காக தனிப்பிரிவு ஒன்றும் உள்ளது. இதில் அனுமதிக்கப்படும் முதியோரின் எண்ணிக்கை 30 ஆகும். சிறாரின் எண்ணிக்கை 20 ஆகும்.

9. பணி இல்லங்களில் முன்பு தங்கியிருந்தவர்கள் மறுவாழ்விற்காகக் கீழ்க்காணப்பெறும் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன :—

(i) தாம்பரம் பணி இல்லத்திலுள்ள பொதுப்பிரிவில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கை 200-க்கு உட்பட்டு படிப்புதவித் தொகை வழங்குவதுடன், இரண்டாண்டு எஸ்.எஸ்.எல்.சி. (S.S.L.C. குறுகிய பாடமுறை வகுப்பும் நடத்தப்பட்டு வருகிறது.

(ii) அரசாங்கத் தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுப்புவதற்காக 65 பெண்களுக்கு தையல் தொழிலில் பயிற்சியளிக்கும் பொருட்டு, தையல் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்திலுள்ள பணி இல்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அது போன்ற தையல் பயிற்சி நிலையங்கள் கடலூர் பணி இல்லத்துடனும், தஞ்சாவூர் பணி இல்லத்துடனும் இணைக்கப்பட்டு உள்ளன; அவை ஒவ்வொன்றிலும் 15 பேர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது.

(iii) மூன்று பணி இல்லங்களிலும், ஸ்திரி சேவா மந்திரில் ஒன்றுமாக நான்கு சுருக்கெழுத்து, தட்டெழுத்துப் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு இல்லத்திலும் 20 பேர் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகின்றனர். பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 20 பயிற்சியுதவித் தொகை வழங்கப்படுகிறது.

(iv) இளநிலை ஆசிரியர்கள் பயிற்சிப் பாடமுறை வகுப்பு ஒன்றும் நாம்பரத்தில் நடத்தப்பட்டு வருகிறது. முதுநிலைப் பிரிவில் 40 பேர், இளநிலை பிரிவில் 40 பேர் ஆக 80 பேர்கள் பயிற்சி பெற அனுமதிக்கப்பட்டுள்ளனர். இப்பிரிவைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை திங்கள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 30-லிருந்து ரூ. 50 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(v) ஆயத்த உடைகள் தைக்கும் பயிற்சி நிலையம் ஒன்று தாம்பரத்திலும், கடலூரிலும் உள்ள பணி இல்லங்களில் நடைபெற்று வருகிறது. ஒவ்வொரு பிரிவிலும் அன்றாடக் கூலி பெறும் பத்து பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஒவ்வொரு பணியாளருக்கும் நாளொன்றுக்கு ரூ. 3 கூலி வழங்கப்படுகிறது.

(vi) ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (1974–75 ஆம் ஆண்டுத் திட்டம்) எட்டாம் வகுப்பு படித்துத் தேறிய பெண்கள், வீட்டைக் கவனித்துக் கொள்பவராகவும், வேலைக்காரிகளாகவும் பணியில் சேரும் பொருட்டு அவர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்த திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டு, தாம்பரத்திலுள்ள பணி இல்லத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சிப் பிரிவில் 25 பேருக்கு பயிற்சியளிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெறுகின்ற ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சி உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இந்த உதவித் தொகையை திங்கள் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 30-லிருந்து ரூ. 50 ஆக உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

10. திருநெல்வேலி மாவட்டத்தில் பணி இல்லம் தொடங்குவதற்கு கருதப்பட்டுள்ளது.

பணிபுரியும் பெண்களுக்குரிய விடுதிகள்.

11. குறைந்த வருவாய், நடுத்தர வருவாய் உள்ள பணிபுரியும் பெண்களுக்கென 1967-ல் 25 பெண்கள் கொண்ட பணிபுரியும் பெண்கள் விடுதி ஒன்று சென்னை மாநகரில் இத்துறை வாயிலாகத் தொடங்கி, நடத்தப்பட்டு வருகிறது. உணவிற்காக 80 ரூபாயும், வாடகைக்காக 28 ரூபாயும், மின் சக்திக்காக 5 ரூபாயும் இவ்விடுதியில் தங்குவோரிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

12. பணிபுரியும் பெண்கள் விடுதிகளை நடத்துவதற்குத் தொண்டு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. இக்காரியத்திற்காக மாநில அரசின் பரிந்துரையின் பேரில், பெண்கள் நலனில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்களால் கட்டப்படுகின்ற விடுதிக் கட்டிடத்தின் கட்டுமான/விரிவாக்க மதிப்பீட்டுச் செலவில் 75 சதவீதம் வழங்க இந்திய அரசு அனுமதிக்கிறது. அந்த தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்ற இந்திய அரசு மானியத் தொகைக்குக் கூடுதலாக மாநில அரசு, தகுதி வாய்ந்த தொண்டு நிறுவனங்களுக்கு 15 சதவீதம் வரையில் அல்லது ரூ. 35,000 (இவற்றில் எது குறைவோ அத்தொகையினை) மானியமாக வழங்கி வருகின்றது.

பயிற்சி நிலையங்களும் உற்பத்தி நிலையங்களும்.

13. இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்தே அரிசனங்கள், பழங்குடியினர், குற்றப்பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட சாதியினரைச் சேர்ந்த மகளிர் நலனுக்காகவே பயிற்சி நிலையங்களும், உற்பத்தி நிலையங்களும் தொடங்கப்பட்டு, அரிசன நலத்துறை, பிற்பட்டோர் நலத்துறை ஆகியவற்றிடமிருந்து நிதியுதவி பெற்று இத்துறையின் மேற்பார்வையில் நடத்தப்பட்டு வந்தன. இரண்டாம், மூன்றும் ஐந்தாண்டுத் திட்டக்காலம் முடிவடைந்த பின் இந்த நிலையங்கள் அனைத்தும் சமூக நலத்துறையில் நிதி ஒதுக்கீட்டின் கீழ் எல்லா வகுப்பைச் சேர்ந்த மகளிருக்காகவும் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

(i) கிராமப்புற மகளிர்க்கு, தையல் பயிற்சி, கம்பளி நெசவு, பனை ஓலை, பாய் முடைதல், சமுக்காளம் நெய்தல் போன்ற எளிய குடிசைத் தொழில்களின் வாயிலாக, ஆழ்ந்த பயிற்சி அளிக்கும் பொருட்டு பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டன; அதனால் அவர்கள் தங்கள் குடும்ப வருவாயைக் கூட்டிக்கொள்ள முடிகிறது. இதற்குரிய பயிற்சிக் காலம் ஓராண்டாகும். பயிற்சிக் காலத்தில், பயிற்சி பெறுவோரின் வண்டிச் செலவுகள் போன்ற தற்செயல் செலவுகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, அவர்கள் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 30 பயிற்சியுதவித் தொகை வழங்கப்படுகிறது. மூன்று அல்லது நான்கு பிரிவு முடிந்த பின்னர்

பயிற்சி நிலையம் உற்பத்தி நிலையமாக மாற்றப்பட்டு பயிற்சி பெற்ற பெண்களுக்கு அவர்களால் முடிக்கப்படும் பொருட்களுக்குத் தகுந்தாற்போல் கூலி வழங்கப்பட்டு வருகின்றது.

(ii) தற்போது 25 பயிற்சி நிலையங்களும் 7 உற்பத்திப் பிரிவுகளும் உள்ளன.

(iii) இவைகளைத் தவிர, அரிசன நலத்துறை, பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை, தொழிலாளர் நலக்குழு, மறுவாழ்வுத் துறை ஆகியவற்றின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட பயிற்சி நிலையங்களும் இத்துறையால் நடத்தப்படுகின்றன :—

		பயிற்சி நிலையங்களின் எண்ணிக்கை.
1.	அரிசன நலத்துறை நிதி	9
2.	பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை நிதி.	3
3.	தொழிலாளர் நலக்குழு நிதி	10
4.	மறுவாழ்வுத்துறை நிதி	3

(iv) பழங்குடியினரைச் சேர்ந்த மகளிருக்காக வட ஆற்காடு மாவட்டத்தில் தையற் பயிற்சி நிலையம் ஒன்று திறக்கப்பட்டது. ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

மகளிர் நலக்கிளைகள்:

14. மாநிலம் முழுவதிலும் 50 மகளிர் நலக்கிளைகள் உள்ளன. மகளிர் நலக்கிளைப் பொறுப்பேற்றுள்ள சமூக நலத் திட்ட அமைப்பாளர்கள் காலையில் புகுமுக ஆதாரக்கல்வி வகுப்புகள் நடத்துகின்றனர். மாலையில் குடும்பக்கலை, சத்துணவு, குழந்தை வளர்ப்பு, உடல்நலம், சுகாதாரம், உடலை நல்ல நிலையில் வைத்துக் கொள்ளுதல் போன்ற கலைகளை பெண்களுக்குக் கற்றுக் கொடுக்கின்றனர். குடும்ப வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் பொருட்டு தையற் பயிற்சி, பாய் முடைதல், தையல் இலைகள் தைத்தல் போன்ற குடிசைத் தொழில்களை வயதடைந்த மகளிருக்குக் கற்றுக் கொடுக்கின்றனர்.

தனியார் தொண்டு நிறுவனங்களுக்கு அரசு மானியம் அளித்தல்:

15. சமூகத்தில் பொருளாதார நிலையில் பின்தங்கிய மகளிர் நலனுக்காகவும், உடல் ஊனமுற்றவர்களின் நலனுக்காகவும் உள்ள தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் பொருட்டு கீழ்க்காணும் காரியங்களுக்கு அரசு மானியம் வழங்குகிறது:—

(அ) அனாதைப் பெண்டிர்க்காக பணி இல்லங்கள் நடத்த மானியம்.

(ஆ) இளம்பிள்ளை வாதம், மூளை வாதநோய், மன வளர்ச்சிக் குறைவு நோய் இவற்றால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் தவிர, தொழுநோயால் பாதிக்கப்பட்ட பெற்றோர்களின் வலிவுள்ள குழந்தைகள், தொழுநோயாளிகளின் தொழுநோய் குழந்தைகளையும் பராமரிக்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.

(இ) மன வளர்ச்சி குன்றிய சிறார்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுப்பதற்காக சிறப்பாசிரியர் பயிற்சிக்காக உள்ள சென்னை பாலவிகார் பயிற்சிப் பள்ளிக்கு மானியம்.

(ஈ) இப்போதுள்ள திட்டப் பணிகளை விரிவுபடுத்துவதற்கும் பாலவிகார் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியம்.

மகளிர்-குழந்தைகளுக்கான குறைந்தளவுத் திட்டம்:

16. இத்திட்டம், கிராமப் பகுதிகளில் உள்ள பெண்கள், பற்பல சமூக, பொருளாதார வேற்றுமைகளை மறந்துவிட்டு இந்த மகளிர் மன்றங்களில் ஒன்று கூடுவதற்காக வகுக்கப்பட்ட ஒரு திட்டமாகும். மூன்றாவது திட்டக் காலத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு 30 மன்றங்கள் வீதம் 11,220 மகளிர் மன்றங்கள் அமைக்கப்பட்டன. இவை தொடர்ந்து செயல்பட்டு வருகின்றன. ஆண்டுதோறும் ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் இத்திட்டத்திற்காக ரூ. 4,000 ஒதுக்கப்படுகிறது.

மகளிர் மன்றங்கள் மூலமாகச் சத்துணவுக் கல்வி:

17. மேற்சொன்ன திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக, தெரிந்தெடுக்கப்பட்ட 104 வளர்ச்சி வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் 6 மகளிர் மன்றங்கள் தெரிந்தெடுக்கப்பட்டன. சத்துணவு செய்முறை விளக்கப் உள்ளூர் உணவைச் சிறந்த

முறையில் பயன்படுத்துவது எவ்வாறு என்பதைக் காட்டுதல், சீரான உணவு பற்றி செய்முறைக் குறிப்புகளை அறிமுகப் படுத்துதல் ஆகியவை சிறப்பான நடவடிக்கைகளாகும். ஒவ்வொரு மகளிர் மன்றத்திற்கும் செய்முறை விளக்கச்சாதனமும் சமையல் கருவிகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

மகளிர் மன்றம் மூலமாகப் பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவித்தல்:

18. பல்வேறு வகையான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள மகளிர் மன்றங்களை ஊக்குவிப்பதற்காக பொருளாதார நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ள சிறந்த மகளிர் மன்றங்களுக்கு ரொக்கப் பரிசுகள் கொடுக்கப் படுகின்றன. மகளிர் மன்றங்கள் மூன்று வகைகளாகத் தரம் பிரிக்கப்பட்டு, ரொக்கப் பரிசாக முறையே ரூ. 1,000, ரூ. 600, ரூ. 400 என்று தொகை வழங்கப்படுகிறது.

மகளிர் மன்ற அமைப்பாளர் பயிற்சி:

19. தலைமை தாங்கி நடத்தும் தகுதியுள்ள உள்ளூர் மகளிர் ஒவ்வொரு ஊராட்சியிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்டு, டி. கல்லுப்பட்டி (மதுரை), எஸ். வி. நகரம் (வடஆற்காடு) ஆகிய இடங்களில் உள்ள கிராம விரிவாக்க பயிற்சி நிலையத்தில் ஒரு மாத கால அளவிற்கு அமைப்பாளர் பயிற்சி பெற அனுப் பப்படுகின்றனர். அத்தகைய பயிற்சி பெற்ற அமைப்பாளர்கள் அவரவர் தொடர்பு கொண்டுள்ள மகளிர் மன்றங்களில், மகளிர் கூட்டத்தைக் கூட்டி, குழந்தை நலன், மனைக்கலைகள் மனைப் பொருளியல், காய்கறித் தோட்டம் வைத்து வளர்த்தல், சுற்றுப்புறச் சுகாதாரம், துப்புரவு போன்ற ஆர்வமும் பயனும் மிக்க பல்வேறு பொருள் குறித்து உள்ளூர் மகளிருடன் விவாதிக்கின்றனர். இது மத்திய அரசுத் துறைத் திட்ட மாகும்.

மகளிர் மன்றங்களின் முன்னேற்றமும் வளர்ச்சியும்:

20. மகளிர் மன்றங்களின் வளர்ச்சியை மேம்படுத்த இத் திட்டம் முத்துப்பேட்டை, உசிலம்பட்டி, தள்ளி ஆகிய மூன்று வட்டாரங்களில் செயற்படுத்தப்படுகிறது. இதுவும் மத்திய அரசுத் துறைத் திட்டங்களில் ஒன்றாகும்.

2. குழந்தைகள் நலன்.

சிறுவர் பள்ளிகள்:

21. (i) இம்மாநிலத்தில் மூன்றாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து தொடங்கி தற்போது 2,988 சிறுவர் பள்ளிகள் இயங்கி வருகின்றன. பூவிருந்தவல்லியில் உள்ள 50 சிறுவர் பள்ளிகள், அரிசனக் குடியிருப்பில் உள்ள 100 சிறுவர் பள்ளி கள், நீலகிரியைச் சேர்ந்த பனியா குழந்தைகளுக்கான 10 சிறுவர் பள்ளிகள், தென்னாற்காடு மாவட்டத்தில் உள்ள பழங் குடியினருக்கான 10 சிறுவர் பள்ளிகள், வட ஆற்காடு மாவட் டத்தில் உள்ள பழங்குடியினருக்கான 9 சிறுவர் பள்ளிகள், ஸ்ரீலங்கா அகதிகளுக்கான 4 சிறுவர் பள்ளிகள், ஒருங்கிணைந்த குழந்தை மேம்பாட்டுச் சிறுவர் பள்ளிகள் 300 ஆகியவை, இதில் அடங்கும்.

(ii) எல்லா சிறுவர் பள்ளிகளிலும் பாலாஹார் (''கேர்'' நிறுவனம் இலவசமாக வழங்கும் பொருள்) வழங்கும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டன்கீழ் சுமார் 2.1 லட்சம் சிறுவர்—பள்ளி குழந்தைகளும், கருவுற்ற மகளிரும், பாலூட்டும் தாய்மார்களும் பயனடைகின்றனர். இந்த சிறுவர் பள்ளிகளில் நோய்த்தடுப்பு ஊசி குத்தும் திட்டமும் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

(iii) இந்த சிறுவர் பள்ளிகளில் நேரடி கல்வி பயிற்சி அளிப்பதைவிட விளையாட்டு கருவிகளின் வாயிலாக பயிற்சி அளிப்பதற்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. ஆகவே ஒவ்வொரு சிறுவர் பள்ளியிலும் கல்விச் சாதனங்களும், பொது விளையாட்டுச் சாதனங்களும் உள்ளன. அந்த விளையாட்டுச் சாதனங்கள் எந்த அளவுக்குப் பழையதாகி விட்டது என் பதைக் கருத்தில் கொண்டு, ஐந்தாண்டுகளுக்குப் பிறகு அவற்றுக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சாதனங்கள் வாங் கப்படும். 1962 ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட சிறுவர் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பழைய விளையாட்டுச் சாதனங்களுக்குப் பதிலாக புதிய விளையாட்டுச் சாதனங்கள் வழங்குவது படிப்படியாக நிறைவேற்றப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் 1.20 இலட்சம் ரூபாய் செலவிடப்பட இருக் கிறது.

(iv) ஒவ்வொரு ஊராட்சியிலும் குறைந்தது ஒரு சிறுவர் பள்ளியாவது இருக்கவேண்டும் என்பது கொள்கை ஆதலின் படிப்படியாக மேலும் பல சிறுவர் பள்ளிகளைத் திறக்கக் கருதப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் அத்தகைய 100 பள்ளிகள் தொடங்கக் கருதப்பட்டுள்ளது.

(v) இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து பால சேவிகைகள் பலர் சொந்த காரணங்களுக்காக வேலையிலிருந்து விலகி விட்டனர். அவர்களுக்குப் பதிலாக பயிற்சி பெறாத பால சேவிகைகள் நியமிக்கப்பட்டுள்ளனர். பயிற்சி பெறாத பால சேவிகைகளுக்கு உதவியாக பயிற்சித் திட்டம் ஒன்று வகுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 200 பால சேவிகாக்கள் பயிற்சி பெறுவர்.

22. ஒரு முன்னோடி திட்டமாக 1962-63 ஆம் ஆண்டில் குழந்தைகள் நல்வாழ்வு ஒருங்கிணைந்த திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்கீழ், சராசரி 40 குழந்தைகள் உள்ள 50 குழந்தை காப்பகங்களும் செயல்பட்டு வருகின்றன. முழு பயிற்சி பெற்ற பாலசேவிகாக்கள் இச்சிறார் பள்ளிகளை நடத்தி வருகின்றார்கள். இக்குழந்தைகளுக்கு பாலாஹார் உணவு கொடுக்கப்படுகிறது. விரிவான நோய்த்தடுப்பு, சுகாதாரத் திட்டங்களும் மேற்கொள்ளப்படுகின்றன.

23. 1975-76 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த சிறார் நல மேம்பாட்டு வளர்ச்சிப் பணிகள் (மத்திய அரசு ஆதரவு) திட்டத்தின்கீழ் மூன்று இடங்களில் தொடங்க அனுமதியளிக்கப்பட்டது. இவை, சென்னை நகரம், தர்மபுரி மாவட்டத்தில் தள்ளி ஊராட்சி ஒன்றியம், மதுரை மாவட்டத்தில் நிலக்கோட்டை ஆகிய மூன்று பிரிவுகளாக செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் 100 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. துணைச் சத்துணவு, உடல் நலப் பரிசோதனை, நோய்த் தடுப்பு, ஆலோசனை கூறும் பணிகள் 0—5 வயதுக்குட்பட்ட சிறார்களுக்கு கல்வி, கர்ப்பிணி, பாலூட்டும் தாய்களை சிறப்பு மருத்துவத்திற்கு அனுப்பி வைக்கும் பணிகளை வழங்க, இத்திட்டம் வகை செய்கிறது. இத்திட்டத்தின்கீழ் சத்துணவுப் பொருள்களை வழங்குவது மாநில அரசின் பொறுப்பாகும். 15—44 வயதுத் தொகுதியைச் சேர்ந்த மகளிருக்குப் பயனளிக்கும் பொருட்டு, இம் மூன்று திட்டங்களிலும் செயல் முறைக் கல்வி கற்பிக்கும் புதிய திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது.

24. பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ், தென்னாற்காடு, வட ஆற்காடு மாவட்டங்களில் பழங்குடியினர் பகுதிகளில் 1966-67 ஆம் ஆண்டில் 19 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டன; நீலகிரி மாவட்டத்தில் பனியா சிறார்களுக்காக (Pania) 10 சிறார் பள்ளிகள் தொடங்கப்பட்டுள்ளன. 1977-78 ஆம் ஆண்டில் கல்ராயன், பச்சைமலை, சித்தேரி, அானூத்துமலை ஆகிய ஏனைய பழங்குடியினர் பகுதிகளில் 30 சிறார் பள்ளிகளைத் தொடங்கக் கருதப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா அகதிகளின் சிறார்கள் பயனுக்கென்று நான்கு சிறார் பள்ளிகளைத் தொடங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

25. ஊராட்சிகள் அல்லது உள்ளூர் சமுதாய மன்றங்களால் வழங்கப்பட்ட கூரைக் கொட்டகைகளில் அல்லது வாடகையற்ற இடத்தில் இச்சிறார் பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. இச்சிறார் பள்ளிகளுக்காக கட்டிடங்களைக் கட்ட 1974-75 ஆம் ஆண்டு தொடங்கி, ஒவ்வொரு ஆண்டும் 'கேர்' நிறுவனத்தின் நிதியுதவியுடன் 200 கட்டிடங்களைக் கட்டுவதற்காக அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது. இத்திட்டம், நடப்பாண்டில் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

26. உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படவிருக்கும் சென்னை நகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தாய்-சிறார் நலத் திட்டம் ஒரு பகுதியாகும். வில்லிவாக்கம், அரும்பாக்கம், கொடுங்கையூர் ஆகிய இடங்களில் இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, இத்திட்டத்தின்கீழ், 200 சிறார் நிலையங்கள் தொடங்கப்படவுள்ளன. ஒவ்வொரு நிலையத்திலும் 70 குழந்தைகள் (சிறார் பள்ளிகளில் 40 குழந்தைகளும் மற்றும் காப்பகங்களில் 30 குழந்தைகளும்) அனுமதிக்கப்படுவர். 1977-78 ஆம் ஆண்டில் 30 நிலையங்கள் தொடங்கப்படும். இந்த நிலையங்களுக்காகக் கட்டிடங்களைக் கட்டுதல் குறித்து இத்திட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் வழங்கப்படும்:—

1. துணைச் சத்துணவு.
2. உடல் நலப் பரிசோதனை, ஆலோசனை கூறும் பணிகள்.
3. நோய்த்தடுப்பு.
4. சிறார் கல்வி.
5. சத்துணவு, உடல் நலக் கல்வி.
6. செயல்முறைக் கல்வி.

இத்திட்டம் சமூக நலத்துறை இயக்குநரால் செயல்படுத்தப்படும். உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் செயல்படும் திட்டங்கள் அனைத்தையும் ஒருங்கிணைக்கும் பொறுப்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திடம் விடப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக நடப்பாண்டில் (1977-78) ரூ. 20 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

<u>சிறப்புச் சத்துணவுத் திட்டம்:</u>

27. சிறப்புச் சத்துணவுத் திட்டம் முதன் முதலில் 1970-71 ஆம் ஆண்டில் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாக

தொடங்கப்பட்டது. 1974-75 ஆம் ஆண்டில் இத்திட்டம் மாநில அரசுக்கு மாற்றப்பட்டது. ஊட்டச் சத்துக் குறைவினால் நலிவுற்ற சிறார்கள் குறிப்பாக நகர்ப்புற குடிசைப் பகுதிகளில் பள்ளி செல்லும் வயதுக்குட்பட்ட சிறார்களுக்குச் சத்துணவு வழங்குவதும், மாடர்ன் ரொட்டி வழங்கி ஊட்டச் சத்து குறைவினால் ஏற்படும் நோயினை ஒழிப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். மாடர்ன் ரொட்டி வழங்கும் இத்திட்டம் 1976 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் வரை செயலில் இருந்தது. பின்னர், இத்திட்டம் பாலாஹார் உணவு வழங்கும் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது.

28. 100 கிராம் பாலாஹார் உணவில் 360 கலோரிகளும், 21 கிராம் புரதமும் அடங்கியுள்ளது. சென்னை மாநகரத்தின் எல்லையோரப் பகுதிகளிலும், வெளியூர்களிலும் இவ்வுணவைப் பயன்படுத்துபவர்களுக்கு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 80 கிராம் வீதம் பாலாஹார் சமைத்த உணவு வழங்கப்படுகிறது. உடல் நலப் பரிசோதனை செய்து பார்த்த பிறகு தேவைப்படுபவர்களுக்கு பாலாஹார் உணவு வழங்கப்படுகிறது. மருத்துவப் பரிசோதனையுடன் சிறப்புச் சத்துணவுத் திட்டத்தின்கீழ், தேவையான நோய்த்தடுப்புப் பணிகள், மதிப்பீட்டுப் பணிகள் ஆகிய பணிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகரங்களிலும், புதுக்கோட்டை நகராட்சியிலும் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இடங்களில் வாரத்திற்கு ஒரு தடவை ஒருவருக்கு 700 கிராம் தூய பாலாஹார் தரப்படுகின்றது. இவ்வாறு 1976-77 ஆம் ஆண்டில், சத்துணவு சிறப்புத் திட்டத்தின்கீழ் 2,76,530 பேர் பயன் அடைந்துள்ளார்கள். ஓராண்டில் 300 நாட்களுக்கு இவர்களுக்கு இச்சத்துணவு வழங்கப்பட்டது.

3. உடல் ஊனமுற்றோர்.

29. உடல் ஊனமுற்றோருக்காக, கீழ்க்கண்ட பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன :—

(1) நவீன முறைப் பயிற்சி—உற்பத்தி தொழிற் பட்டறை, முட்டுகாடு —உடல் ஊனமுற்றோர் மறு வாழ்விற்காக, தமிழக அரசு நவீன முறைப் பயிற்சி உற்பத்தித் தொழிற் பட்டறை ஒன்று சென்னை—மாமல்லபுர சாலையில் முட்டுக்காடு என்ற இடத்தில் அமைந்துள்ளது. 1975 ஆம் ஆண்டு ஜுன் திங்களில் இத்தொழில் பட்டறை செயல்படத் தொடங்கியது. 1976 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இத் தொழில் பட்டறையில் சேர்க்கப்பட்ட பயிற்சியாளர்களில் முதல் குழுவினர் தமது பயிற்சியினை முடித்தனர். தற்போது இரண்டாம் குழுவினரில் 27 பேர் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும், இலேசான பொறியியல் ரகங்கள், கட்டுமானப் பணிகள், உதிரிப் பாகங்கள் செய்தல் போன்ற உற்பத்திப் பணிகள் இத்தொழில் பட்டறையில் செய்யப்படுகின்றன.

(2) உடல் ஊனமுற்ற 32 மகளிருக்கு ஸ்திரீசேவா மந்திரில் ரூ. 5,600 செலவில் பயிற்சி அளிக்கப்படுகிறது. செவிடு, ஊமைப் பெண்களுக்கு, பொம்மை செய்தல், பூவேலை, ஆடை தைத்தல் ஆகிய வேலைகளில் பயிற்சியளிக்கப்படுகிறது. கண் பார்வையற்ற மகளிருக்கு, பாய் முடைதல், ஆடை நெய்தல் ஆகிய தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. கண்பார்வையற்ற மகளிருக்குச் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

(3) இதுவரை 3,000 மூன்றுகால் சைக்கிள்களும், 1,125 கேட்பு உதவிச் சாதனங்களும் (Hearing aids) கொடுக்கப்பட்டுள்ளன.

(4) இளம்பிள்ளை வாதத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், மூளைக் கோளாறினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், ஊமை நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், செவிடு, ஊமை, குருடு, மேலும் கண்பார்வையற்ற உடல் ஊனமுற்ற குழந்தைகள், 8 வயதிற்கும் 16 வயதிற்கும் உட்பட்ட குழந்தைகளைப் பேணுவதற்காகத் தானே முன் வந்து உதவி புரியும் நிறுவனங்களுக்குப் பேணுதல் மானியமாக ரூ.40,000 கொடுக்கப்பட்டுள்ளது. தொழுநோயால் துன்புறும் குழந்தைகள், தொழுநோயாளர்களின் குழந்தைகளைப் பேணுவதற்காக மேலும் ரூ. 40,000 கொடுக்கப்பட்டுள்ளது.

(5) மனநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் பொருட்டு ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்குவதற்காக பாலவிகாருக்கு ரூ. 45,600 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(6) செவிட்டுக் குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் பொருட்டு ஆசிரியர்களின் பயிற்சிக்காக, சென்னையிலுள்ள செவிடர்கள் பள்ளிக்கு ரூ. 65,000 மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

(7) சென்னை நகரத்திலுள்ள கண்பார்வையற்றவர்கள், நகரத்தினுள் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் (பெருநகர் பிரிவு) இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது.

(8) நடப்பாண்டில் குருடர்களுக்காக கூரைவேய்ந்த பணிக்களரிகள் திறப்பதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

4. அனாதைக் குழந்தைகளுக்கான இந்திய அரசின் திட்டம்.

30. இத்திட்டத்தின்கீழ் இம்மாநிலத்திலுள்ள ஆதரவற்ற/அனாதைக் குழந்தைகளைப் பேணிவரும் தொண்டு நிறுவனங்களுக்கு மானியத் தொகை வழங்குவது குறித்து

இந்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 5 முதல் 18 வயதுள்ள ஆதரவற்ற ஏழைக் குழந்தைகள், இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்திய அரசு, கட்டுமானப் பணிக்கும் பராமரிப்புக்கும் செலவுத் தொகையில் 90 சதவீதத்தை மானிய உதவித் தொகையாக வழங்கியுள்ளது. தொடர், தொடரா இனச் செலவுகளில் 10 சதவீதத்தினை தொண்டு நிறுவனங்கள் ஏற்கவேண்டும். இத்திட்டத்தின் கீழ் 43 நிறுவனங்கள் இம்மானியத் தொகையினைப் பெறுகின்றன.

5. கருணை இல்லங்கள்.

31. 1975 ஆம் ஆண்டில் 53 இடங்களில் கருணை இல்லங்கள் (அனாதை இல்லங்கள்) தொடங்கப்பட்டுள்ளன. இவ்வில்லங்கள் கோயில் நிதிகளின் கூடுதல் நிதியினால் நடத்தப்படுகின்றன. 5 முதல் 18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற அனாதைக் குழந்தைகள் இவ்வில்லங்களில் சேர்க்கப்பட்டுள்ளனர். ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு ரூ. 12-50 வீதம் இக்குழந்தைகளைப் பேணுவதற்காகும் செலவில் 25 சதவீதத்தை மானியமாக வழங்க அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. மேலும் கட்டிடம் மரச் சாமான்கள் முதலியவற்றிற்கென ஒரு குழந்தைக்கு ரூ. 1,000 வீதம் ஒப்புதல் வழங்கப்படும். 1975-76 ஆம் ஆண்டில் குழந்தைகளைப் பேணுவதற்காக அரசு மானியமாக ரூ. 2.46 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. 53 இல்லங்கள் தற்போது 36 இல்லங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம், இந்து சமய அறக்கட்டளைத் துறையின் ஆணையாளரால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கான மானியமும் இத்துறையின் மூலம் அனுமதிக்கப்படுகிறது.

6. பிச்சைக்காரர்கள் இல்லம்.

அரசுப் பாதுகாப்பு முகாம், மேல்பாக்கம்.

32. மேல்பாக்கத்திலுள்ள பாதுகாப்பு முகாம் பிச்சைக்காரர்களுக்கான ஓர் இல்லமாகும். தமிழ்நாடு 1945 ஆம் ஆண்டு பிச்சையெடுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழும், நிதித்துறை மாஜிஸ்டிரேட்டுகளாலும் மூன்றாண்டுகள் வரை தண்டனை விதிக்கப்பட்டுள்ள பிச்சைக்காரர்களுக்காக இந்த இல்லத்தை அரசு நடத்துகிறது. இந்த இல்லத்தை காவல்துறை நிர்வகித்து வந்தது. 1973 ஆம் ஆண்டில் இவ்வில்லத்தின் நிர்வாகப் பொறுப்பு சமூக நலத்துறை இயக்குநர் அலுவலகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. பணியாளர் அமைப்பு முறை தற்போது மாற்றப்பட்டு மேற்பார்வைப் பணியாளர்களுக்குப் பதிலாக சமூக நலப் பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். துணை இயக்குநர் பதவித் தரத்தில் ஓர் அலுவலர் இவ்வில்லத்திற்குப் பொறுப்பு வகிக்கிறார். இவ்வில்லத்தில் 770 ஆடவரும், 180 பெண்டிரும் தங்கியிருக்க அனுமதிக்கப்பட்டது. இப்

போது 215 ஆடவரும், 73 பெண்டிரும் உள்ளனர். இல்லத்தில் தங்கியிருப்போருக்கு நெசவு, தச்சு வேலை, தையற்கலை முதலிய தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1976 ஆம் ஆண்டு இத்தொழில் பயிற்சிக்காக ரூ. 3,06,202.98-ம், இவர்களுக்கு உணவு, உடை வழங்க ரூ. 2,81,229.20 செலவிடப்பட்டுள்ளது. அண்மையில், வசிக்கும் அறைகள், தொழில் பிரிவுகள் ஆகியவற்றின் கட்டுமான அமைப்பில் மேம்பாடுகள் செய்வதற்காக அரசு ரூ. 3 இலட்சம் வழங்கியுள்ளது. நடப்பு ஆண்டுத் திட்டத்தில் பணியாளர் குடியிருப்புக்கள், தொழுநோய் ஒதுக்கிட வார்டு கட்டவும், மருத்துவ மனைக்குத் தேவையான சாதனங்கள் முதலியவற்றை வாங்கவும் செயற்குறிப்பு ஒன்றுள்ளது. இதற்கு 1.95 இலட்சம் ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

7. ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு.

33. 1975-76 ஆம் ஆண்டில் ஆதரவற்ற கைம்பெண்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக கீழ்க்காணும் திட்டங்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது:—

(1) முதியோர் உதவித் தொகை.—இத்திட்டத்தின் கீழ் ஆதரவற்றவர்களும், 45 வயதிற்குக் குறையாமல் இருப்பவர்களுமான கைம்பெண்கள் திங்களொன்றுக்கு ரூ. 20 முதியோர் உதவித் தொகை பெறத் தகுதியுடையவராவர். இத்திட்டத்தை வருவாய்த் துறை வாரியம் செயல்படுத்தி வருகிறது. சாதாரணமாக முதியோர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டத்திற்கு பொருந்தக் கூடிய விதிகள் இத்திட்டத்திற்கும் பொருந்தும். ஆதரவற்ற கைம்பெண்கள் 9,075 பேர் இதுவரை இத்திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். இத்திட்டம் ஒவ்வோர் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(2) தையல் இயந்திரங்கள் வழங்குதல்.—ஆதரவற்ற கைம்பெண்கள், ஆதரவற்ற மகளிர், சமூகத்திலும், பொருளாதார வகையிலும், உடல் அளவிலும் ஊனமுற்றுள்ள மகளிர் (20 முதல் 40 வயது வரை உள்ளவர்கள்) தையற் கலையில் பயிற்சி பெற்றிருந்தால் அவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. இதனால், அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வருவாயினை ஈட்டிக் கொள்ள இயலும். 1975-76ஆம் ஆண்டில் ஆதரவற்ற கைம்பெண்கள் 1,000 பேருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டன. 1976-77ஆம்

ஆண்டில் 500 பேர் பயனடைந்தனர். இத்திட்டத்தை இவ்வாண்டும் தொடர்ந்து செயற்படுத்தவும் 500 தையல் இயந்திரங்களை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

(3) கிராமப்புற நூற்பு மையங்களில் பயிற்சியளித்தல்.—ஆதரவற்றுள்ள கைம்பெண்களுக்கு கிராமப்புற நூற்பு மையங்களில் பயிற்சியளிப்பதின்மூலம் மறுவாழ்வு அளிக்கும் நோக்குடன் கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக சர்க்கா இயந்திரங்களையும், சாதனங்களையும் வாங்கி வழங்கும் ஒரு திட்டத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. சர்க்கா வாங்கவும், இயந்திரங்கள் வாங்கவும் கதர்-கிராமத் தொழில் வாரியத்திற்கு ஆகும் செலவுக்காக இத்திட்டத்தின்கீழ், பயன்பெறுவோர் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 வீதம் மானியத் தொகை, வாரியத்திற்கு வழங்கப்படுகிறது. இதன்படி வாரியத்திற்கு மானியமாக வழங்குவதற்காக ரூ. 2.79 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கைம்பெண்களுக்கு மறுமணம் செய்வித்தல்.

34. கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் திட்டத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 18 முதல் 30 வரையிலான வயது வரம்பினைச் சேர்ந்த கைம்பெண்கள் மறுமணம் செய்து கொள்வார்களானால் அந்த மணமக்கள் இருவர் பெயரிலும் கூட்டாக முதலீடு செய்யப்படுகின்ற ஏழாண்டு தேசீய சேமிப்புத் பத்திரங்கள் வடிவில் அவர்களுக்கு ரூ. 5,000 நிதியுதவி வழங்கப்படுகிறது. 1975-76 ஆம் ஆண்டில் 90 தம்பதியினர் பயனடைந்தனர். 1976-77 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டது. 1977-78 ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தைத் தொடர்வதற்கான செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஊனமுற்றோர்க்கான மாநில வாரியம்.

35. சென்னை, ஊனமுற்றோருக்கான மாநில வாரியத்தை மூன்று ஆண்டுக் கால அளவிற்கு அரசு அமைத்துள்ளது. இவ்வாரியத்தின் நோக்கங்களும், பணிகளும் வருமாறு:—

(1) உடல் ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பிரச்சினையின் அளவை மதிப்பிடுதல்.

(2) உடல் ஊனமுற்றோரை பெருமளவில் வேலையிலமர்த்துவதை நோக்கமாகக் கொண்ட திட்டங்களை அரசுடன் கலந்து ஆலோசித்து வகுத்தல்.

(3) உடல் ஊனமுற்றோர்க்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.

(4) உடல் ஊனமுற்ற தனிப்பட்டவர்களுக்கும், சமூகப் பணி முதலியவற்றில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களுக்கும் 'நிதியுதவி அளிப்பது பற்றி ஆய்வு செய்தல், நிதியுதவி வழங்குதல்.

(5) உடல் ஊனமுற்றோர்க்கு கல்வி கற்பித்தல், பயிற்சி அளித்தல், மறு வாழ்வு அளித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மேற்கொள்ளும் முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

சமூக நலத்துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராவார். இவ்வாரியத்தின் முதற் கூட்டம் விரைவில் நடக்கவிருக்கிறது.

தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம்.

36. தமிழ்நாடு மாநில சமூகநல வாரியம் இம்மாநிலத்தில் தொண்டு நிறுவனங்களை உருவாக்கி அவற்றை ஊக்குவித்து வளர்ச்சி பெறச் செய்வதில் முக்கியப் பங்காற்றி வருகிறது. மத்திய சமூக நல வாரியம் வழங்கும் மானியத் திட்டத்தின் கீழ், இவ்வாரியம் தொண்டு நிறுவனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது. ஆதரவற்ற கைம்பெண்கள், குழந்தைகள் ஆகியோரின் நலனைப் பாதுகாக்கவும், மறு வாழ்வு அளிப்பதற்குமான திட்டங்கள், பள்ளி செல்லும் வயதடையாக் குழந்தைகளுக்கும், சூலுற்ற மகளிருக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் ஊட்டச்சத்துணவை அளிக்கும் திட்டங்கள், உடல் ஊனமுற்றோர்க்குத் தொழிற்பயிற்சித் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்த இம்மானியம் வழங்கப்படுகிறது. கீழ்க்காணும் நலத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக இம் மாநிலத்தில் உள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களுக்கு 1976-77 ஆம் ஆண்டில் 23.46 இலட்சம் ரூபாயை தமிழ்நாடு மாநில சமூக நல வாரியம் வழங்கியது.

[1977 ஆகஸ்டு 17

தொடர் எண்.	இனம்.		நிறுவனங்களின் எண்ணிக்கை.	அனுமதிக்கப்பட்ட மானியம்.	
(1)	(2)		(3)	(4)	
				ரூ.	பை.
1.	ஆண்டு மானியம்	..	278	3,41,670	00
	திட்ட காலம்	..	80	4,03,297	00
2.	மகிளா மண்டல்	..	14	1,30,638	00
3.	விடுமுறை முகாம்கள்	..	18	51,000	00
4	வயது வந்தவர்களுக்கு குறுகிய கால கல்விப் பயிற்சி.	..	2*	80,000	00
			7†	1,04,825	00
5.	தொழிற் பயிற்சித் திட்டம்	..	24	3,36,785	00
6.	சமூக பொருளாதாரத் திட்டம்.	..	3	1,13,608	00
7.	பால்பண்ணைத் திட்டம்	..	21	2,94,000	00
8.	பணிபுரியும் பெண்கள் விடுதி	..	7	44,000	00
9.	குழந்தைகள் வளர்ப்புக் காப்புப்பணிகள்.	..	1	30,000	00
10	ஊட்டச் சத்துணவுத் திட்டம்	..	122	4,03,297	00
11	சமூக நல வளர்ச்சித் திட்டங்கள்.		2	13,200	00
	மொத்தம்	..		23,46,320	00

*இரு ஆண்டுகள்.

†ஓர் ஆண்டு.

1977 ஆகஸ்ட் 17]

37. நிறைவேற்றக் கருதியுள்ள திட்டங்கள்.

1. சுருக்கெழுத்து, தட்டச்சு வடிவில் வாழ்க்கை தொழில் பயிற்சியைப் பெற உதவும் வகையில் 16—30 வயதுத் தொகுதியிலுள்ள 1,000 ஏழைப் பெண்களுக்கு ரூ. 150, ஆண்டு பயிற்சி உதவிப்பணமாக வழங்குதல் இதற்கு அவர்களது குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக இருக்க வேண்டும்.

2. எந்த விதவைகளின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்குக் குறைவாக உள்ளதோ அவர்களது குழந்தைகளுக்கு இலவசமாகப் புத்தகங்களையும், நோட்டுப்புத்தகங்களையும் வழங்குதல்.

3. ஆயுள் ஈட்டுறுதிப் பயன்களையும், வருங்கால வைப்பு நிதிப் பயன்களையும் பெறுதல், அவர்களது குழந்தைகளை அனாதை இல்லங்களிலும், கல்வி நிலையங்களிலும் சேர்த்துக் கொள்வது தொடர்பாகவும், கல்வி-வேலை வாய்ப்புகள் பெறுதல் தொடர்பாகவும் விதவைகளுக்கு உதவும் பொருட்டு ஆலோசனை நல்கும் வழிகாட்டி அமைப்புகளை மாநிலத்தின் வெவ்வேறு பகுதிகளில் நிறுவுதலுமாகும்.

[1977 ஆகஸ்ட் 17

இணைப்பு-III.

[609ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தொழில்துறை.

கொள்கை விளக்கக் குறிப்பு.

தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி கடந்த சில ஆண்டுகளாக மந்தமாகவே இருந்தது. தீவிரமான மின்சார வெட்டுகளும், முடிவுக்கு வராது இருந்த தொழிலாளர் சிக்கல்களும், பொதுவாக நாட்டிலே பரவி இருந்த பொருளாதார மந்த நிலையும் இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாகும்.

தமிழ் நாட்டில் பஞ்சாலைகள், கைத்தறி, சர்க்கரை, தோல், பொறியியல் ஆகிய தொழில்கள் அதிக அளவில் பங்கு பெறுகின்றன. தொழில் வளர்ச்சிக்காக அரசாங்கத்தால் பல கழகங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக்கழகம், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சர்க்கரைத் தொழில் கழகம், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் ஆகியவை முக்கியமானவையாகும்.

சிறு தொழில்கள் :

இம்மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதற்காக தொழில் வணிக இயக்குநர் அலுவலகம் திட்டங்கள் பலவற்றை மேற்கொண்டுள்ளது.

இத்திட்டங்கள்—

1. தொழில் நுட்பத் தகவல் பணி,
2. பணி வசதிகள் பயிற்சி வசதிகள்,
3. உற்பத்தி பழுது பார்த்தல் பிரிவுகள்,
4. ஆய்வு-புள்ளி விவரங்கள்,
5. பிற வசதிகள் என வகைப் படுத்தலாம்.

1977 ஆகஸ்ட் 17]

தொழில் அதிபர்களுக்கும் தொழில் முனைவர்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் நூலகங்களுடன் கூடிய தகவல் பிரிவுகள் கிண்டி, மதுரை, பேட்டை, அம்பத்தூர், திருச்சி, காட்பாடி, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பேட்டைகளிலும், தொழிற்பேட்டைகளைச் சுற்றிலும் உள்ள தொழில் நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி, கருவிகள் அச்சு வடிவமைப்புப் பயிற்சி நிலையம், திண்டுக்கல், கருமார் தச்சுத் தொழில், அரக்கோணம் ஆகிய இடங்களில் பணி வசதிகள், பயிற்சி வசதிகள் தரப்படுகின்றன. இதைத்தவிர இந்த இயக்குநர் அலுவலகத்தில் மின்சார மின்னணுவியல் பிரிவு இயங்கி வருகிறது. மாநில அரசு சிறு தொழில் வளர்ச்சிக்காக பல வசதிகளை வழங்குகின்றது. இதைத் தவிர, தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்தின் மூலமும், 'சிட்கோ' மூலமும் மூலப்பொருள்களை வழங்கியும், தொழிற் பேட்டைகளிலும், மேம்பாடுகள் செய்யப்பெற்ற தொழில் மனைகள் கொண்ட தொழிற்பேட்டைகளிலும் தொழிற் கூடங்களை சகாய வாடகைக்கு விட்டும், தண்ணீர் வசதியும், மின்வசதியும் வழங்கியும், 'சிட்கோ', தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகக்கூட்டு நிறுவனக் கடன்களுக்கு வகைசெய்தும், தொழில்-வணிகத் துறையினரிடமிருந்தும் சிட்கோவிடமிருந்தும் சிறுதொழில்கள் பணி நிலையத்திடமிருந்தும் தொழில் நுட்ப உதவியைப் பெற்றுத் தந்தும் சிறு தொழில் முனைவர்களுக்கு வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இவைகள் தவிர, சிறு தொழில் பொருட்களை கிரயத்திற்கு வாங்கும்போது அவற்றிற்கு 15 சதவிகித விலைச் சலுகை வழங்கப்படுகிறது. ஆகஸ்டு 1976 முதல் நவம்பர் 1976-க்கு உள்ளிட்ட 100 நாட்களுக்கு உள்ளாக இம்மாநிலம் முழுவதிலும் இரசாயனப் பொருட்கள், மின்னணுவியல், பொறியியல் தொடர்பான 10,000-க்கு மேற்பட்ட அளவிற்கு சிறுதொழில்கள் பதிவு செய்வதற்காக முனைந்து நின்றது சிறு தொழில் வளர்ச்சித் துறையின் சாதனையாகும். கிராமப்புறங்களிலும், நடுத்தரப் பகுதிகளிலும் தொழில்கள் பரவலாகத் திட்டமிட்டு நிறுவப்பட வேண்டும் என்ற அரசின் கொள்கையின் அடிப்படையில் இப்பணி தொடங்கப் பெற்றது. இம்மாநிலத்தில் 50,000 சிறு தொழில்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதில் சில இயங்காமலும், மூடப்பட்டும் இருக்கலாம். இவைகளை இயங்கச் செய்வதற்கு வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன.

சிறு தொழில்கள் மூலம் அதிக வேலை வாய்ப்பு அமையும் என்ற அடிப்படையில் நிதி நிலை அறிக்கையில் 10,000 புதிய சிறு தொழில்கள் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அடுத்து, தொழில்-வணிக இயக்குநரும், சிட்கோவும் சிறு தொழில்கள் இயங்க எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள். சிட்கோவின் கூட்டு முயற்சியுடன் தொழில்-வணிகத் துறை இயக்குநர் அலுவலகத்தால் இப்பணிகள் செயற்படுத்தப்படும். சிறு தொழில்கள் தொடங்க முனைவோரைக் கண்டு கொள்வதில், முக்கிய கவனம் செலுத்தப்படும். சிறுதொழில் முனைவோருக்கு அவருடைய தொழில்களுக்குத் தேவையான தொழில் நுட்ப உதவியும், **தகவல்**

களும் அளிக்கப்படும். இந்த மாநிலத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகளிலும் தொழிற் பேட்டைகளிலும், தேவையான குறைந்த வாடகையோடு கூடிய தொழிற் கூடங்கள், மின்சாரம், தண்ணீர் போன்ற வசதிகள் செய்துதரப்படும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிட்கோ கூட்டுத் திட்டத்தின் கீழ் நிதி உதவியும் சிறு தொழில் வளர்ச்சியின் கடன் உதவியும் வழங்கப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் தொகைகள் பெற்றுத் தருவதில் விசேட கவனம் செலுத்தப்படும். நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பங்கிற்காக, உதவித் தொகை போன்ற நிதி வசதிகள் தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும். சிட்கோவும், தொழில் வணிக இயக்குநர் அலுவலகமும் தொழில் முனைவோருக்கு இன்றியமையாத மூலப் பொருள்களையும் வழங்கும். தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய சிறுதொழில் முனைவோருக்கு, 'சிட்கோ' விற்பனை வசதியைச் செய்துதரும்; தொழிலை நிர்வகிக்கும் பொறுப்புக்கான உதவியையும் நல்கும். பல்வேறு உதவிகள் அளித்து, சிறு தொழில் சீரிய முறையில் இயங்கிட தொழில் வணிக இயக்குநர் அலுவலகமும் சிட்கோவும் வழி வகுக்கும்.

காலணி தைப்பவர்கள், தையற்காரர், துணி வெளுப்போர், பொற்கொல்லர், கொல்லர் மற்றும் சிறு தொழில் செய்பவர்களுக்கு தாமே சுயமாகத் தொழில்களை தொடங்க வங்கிகள் மூலம் உதவியும், ஆலோசனையும் அளிக்கப்படும். ஓராண்டுக்குள் குறைந்த அளவு 100,000 நபர்களுக்காவது வேலை வாய்ப்பு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கவும், வேதாரண்ய பகுதியில் பவளத் தொழில் தொடங்கவும், தாளவாடி, தருமபுரி மற்றும் பின்தங்கிய மாவட்டங்களில் சிறு தொழில்கள் தொடங்கவும், சந்தனத் தொழிற்சாலையைச் சவ்வாது குன்றுப் பகுதியிலும், தோல் சாமான்கள் தயாரிக்கும் சிறு தொழில்களை வட ஆற்காடு மாவட்டத்திலும் ஆரம்பிக்க கோரிக்கைகள் வந்துள்ளன. இக்கோரிக்கைகளைக் கருத்திற் கொண்டு மாநில அரசு ஆவன செய்யும்.

பொதுத் தொழிற்பேட்டைகள், குறிப்பிட்ட தொழில்களுக்காக நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள் போன்ற தமிழ்நாட்டிலுள்ள நான்கு வகையான தொழிற்பேட்டைகள் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தொழிற்பேட்டைகளில் தொழிற் கடன்கள் தவணை முறையில் கொடுக்கப்படுகின்றன. சிலருடைய விஷயங்களில் குறைவான வாடகை வீதங்களே வசூலிக்கப்படுகின்றன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

பல்வேறு வகைப்பட்ட சிறு தொழிற்சாலைகள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோரின் பயனுக்காகப் பல தொழிற்

கூட்டுறவுச் சங்கங்களை தொழில்-வணிகத் துறை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தியுள்ளது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் தொழிலாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் வாணிபத்தில் அவர்களது திறமையை வளர்ச்சியடையச் செய்வதற்கும் பல பயிற்சித் திட்டங்கள் உள்ளன. சிறு அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் பணிச் சங்கங்கள் போன்ற கூட்டுறவுச் 'சங்கங்கள், சிறு அளவில் தேயிலை பயிரிடுவோருக்கான கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் போன்றவை நிறுவப்பட்டன. கடன், உதவித் தொகை வடிவில் நிதி உதவி அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்கு நிர்வாகப் பணியாளர், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் பணிகளும் இலவசமாக அளிக்கப்பட்டன. இச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசும் பங்கு கொண்டுள்ளது.

24 பெரும் பிரிவுகள் கொண்டுள்ள சிறப்பு தொழில்களான பொறியியல், தச்சுத் தொழில், கருமான் தொழில், தையல் தொழில், தீப்பெட்டித் தொழில் மற்றும் பல சிறப்புப் பிரிவு தொழிற் சங்கங்கள் இவற்றில் 60 சதவிகிதம் உள்ளன. இவற்றில் தொழில் வல்லுநர்கள், டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவோர் தொழிற் சங்கங்களும் சேர்ந்ததாகும். தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி இந்தச் சங்கங்களுக்குக் கடனுதவி அளிக்கும் தலைமைச்' சங்கமாகும்.

1977-ல் பல தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1,000-க்கும் அதிகமான தொழில் நுட்ப வல்லுநர் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டன. இரத்தினக்கல் வெட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள 210 விடுவிக்கப்பட்ட அடிமைத் தொழிலாளிகளைக் கொண்டு திருச்சி மாவட்டத்தில் வடசேரி, திருப்பைஞ்ஞீலி என்ற இடங்களில் இரண்டு இரத்தினக்கல் வெட்டும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 17 தீப்பெட்டிச் சங்கங்களும், தோல் தொழிலுக்காக ஒரு கூட்டுறவுச்சங்கமும் வாணியம்பாடியில் ஏற்படுத்தப்பட்டன. மேற்கூறியவற்றைத் தவிர நீலகிரி மாவட்டத்தில் 20,000 ஏக்கர் சிறிய தேயிலைத் தோட்டங்களில் 11,000 ஏக்கர் பரப்புள்ள 11 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மத்திய தேயிலை தொழில் கூட்டுறவுப் பணிச்சங்கம் எல்லா தொழிற் சாலைகளின் பணிகளை ஒன்று சேர்ப்பதுடன் அவைகளுக்கு விற்பனை மற்றும் பல உதவிகளைச் செய்கிறது. மீதமுள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்களையும் தொழில் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மின்னணுத் தொழில், தோல் தொழில், பட்டுப்புழு வளர்ச்சி, உப்பு தயாரித்தல், சுரங்கம், கனிவளத் தொழில் போன்றவை முக்கியமான சிறு தொழில்கள் ஆகும். இவைகளின் சுருக்கமான ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

களும் அளிக்கப்படும். இந்த மாநிலத்தில் உள்ள மேம்படுத்தப்பட்ட மனைகளிலும் தொழிற் பேட்டைகளிலும், தேவையான குறைந்த வாடகையோடு கூடிய தொழிற் கூடங்கள், மின்சாரம், தண்ணீர் போன்ற வசதிகள் செய்துதரப்படும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிட்கோ கூட்டுத் திட்டத்தின் கீழ் நிதி உதவியும் சிறு தொழில் வளர்ச்சியின் கடன் உதவியும் வழங்கப்படும். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து கடன் தொகைகள் பெற்றுத் தருவதில் விசேட கவனம் செலுத்தப்படும். நிதி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய பங்கிற்காக, உதவித் தொகை போன்ற நிதி வசதிகள் தொழில் முனைவோருக்கு அளிக்கப்படும். சிட்கோவும், தொழில் வணிக இயக்குநர் அலுவலகமும் தொழில் முனைவோருக்கு இன்றியமையாத மூலப் பொருள்களையும் வழங்கும். தாங்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்ய சிறுதொழில் முனைவோருக்கு, 'சிட்கோ' விற்பனை வசதியைச் செய்துதரும்; தொழிலை நிர்வகிக்கும் பொறுப்புக்கான உதவியையும் நல்கும். பல்வேறு உதவிகள் அளித்து, சிறு தொழில் சீரிய முறையில் இயங்கிட தொழில் வணிக இயக்குநர் அலுவலகமும் சிட்கோவும் வழி வகுக்கும்.

காலணி தைப்பவர்கள், தையற்காரர், துணி வெளுப்போர், பொற்கொல்லர், கொல்லர் மற்றும் சிறு தொழில் செய்பவர்களுக்கு தாமே சுயமாகத் தொழில்களை தொடங்க வங்கிகள் மூலம் உதவியும், ஆலோசனையும் அளிக்கப்படும். ஓராண்டுக்குள் குறைந்த அளவு 100,000 நபர்களுக்காவது வேலை வாய்ப்பு கிட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் தொழிற்சாலை அமைக்கவும், வேதாரண்ய பகுதியில் பவளத் தொழில் தொடங்கவும், தாளவாடி, தருமபுரி மற்றும் பின்தங்கிய மாவட்டங்களில் சிறு தொழில்கள் தொடங்கவும், சந்தனத் தொழிற்சாலையைச் சவ்வாது குன்றுப் பகுதியிலும், தோல் சாமான்கள் தயாரிக்கும் சிறு தொழில்களை வட ஆற்காடு மாவட்டத்திலும் ஆரம்பிக்க கோரிக்கைகள் வந்துள்ளன. இக்கோரிக்கைளைக் கருத்திற் கொண்டு மாநில அரசு ஆவன செய்யும்.

பொதுத் தொழிற்பேட்டைகள், குறிப்பிட்ட தொழில்களுக்காக நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள் போன்ற தமிழ்நாட்டிலுள்ள நான்கு வகையான தொழிற்பேட்டைகள் சிறு தொழில் வளர்ச்சி நிறுவனத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன. தொழிற்பேட்டைகளில் தொழிற் கடன்கள் தவணை முறையில் கொடுக்கப்படுகின்றன. சிலருடைய விஷயங்களில் குறைவான வாடகை வீதங்களே வசூலிக்கப்படுகின்றன.

தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

பல்வேறு வகைப்பட்ட சிறு தொழிற்சாலைகள், குடிசைத் தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், கைவினைஞர்கள் ஆகியோரின் பயனுக்காகப் பல தொழிற்

கூட்டுறவுச் சங்கங்களை தொழில்-வணிகத் துறை இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தியுள்ளது. தொழில் கூட்டுறவுச் சங்கங்களில் தொழிலாளர்கள், உறுப்பினர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிப்பதற்கும் வாணிபத்தில் அவர்களது திறமையை வளர்ச்சியடையச் செய்வதற்கும் பல பயிற்சித் திட்டங்கள் உள்ளன. சிறு அளவில் தீக்குச்சி உற்பத்தி செய்வோர் பணிச் சங்கங்கள் போன்ற கூட்டுறவுச் 'சங்கங்கள், சிறு அளவில் தேயிலை பயிரிடுவோருக்கான கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் போன்றவை நிறுவப்பட்டன. கடன், உதவித் தொகை வடிவில் நிதி உதவி அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட காலத்திற்கு நிர்வாகப் பணியாளர், தொழில் நுட்பப் பணியாளர் ஆகியோரின் பணிகளும் இலவசமாக அளிக்கப்பட்டன. இச் சங்கங்களின் பங்கு மூலதனத்தில் மாநில அரசும் பங்கு கொண்டுள்ளது.

24 பெரும் பிரிவுகள் கொண்டுள்ள சிறப்பு தொழில்களான பொறியியல், தச்சுத் தொழில், கருமான் தொழில், தையல் தொழில், தீப்பெட்டித் தொழில் மற்றும் பல சிறப்புப் பிரிவு தொழிற் சங்கங்கள் இவற்றில் 60 சதவிகிதம் உள்ளன. இவற்றில் தொழில் வல்லுநர்கள், டாக்ஸி, ஆட்டோ ரிக்ஷா ஓட்டுவோர் தொழிற் சங்கங்களும் சேர்ந்ததாகும். தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கி இந்தச் சங்கங்களுக்குக் கடனுதவி அளிக்கும் தலைமைச்' சங்கமாகும்.

1977-ல் பல தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 1,000-க்கும் அதிகமான தொழில் நுட்ப வல்லுநர் மற்றும் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டன. இரத்தினக்கல் வெட்டும் தொழிலில் ஈடுபட்டுள்ள 210 விடுவிக்கப்பட்ட அடிமைத் தொழிலாளிகளைக் கொண்டு திருச்சி மாவட்டத்தில் வடசேரி, திருப்பைஞ்ஞீலி என்ற இடங்களில் இரண்டு இரத்தினக்கல் வெட்டும் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. 17 தீப்பெட்டிச் சங்கங்களும், தோல் தொழிலுக்காக ஒரு கூட்டுறவுச்சங்கமும் வாணியம்பாடியில் ஏற்படுத்தப்பட்டன. மேற்கூறியவற்றைத் தவிர நீலகிரி மாவட்டத்தில் 20,000 ஏக்கர் சிறிய தேயிலைத் தோட்டங்களில் 11,000 ஏக்கர் பரப்புள்ள 11 தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. மத்திய தேயிலை தொழில் கூட்டுறவுப் பணிச்சங்கம் எல்லா தொழிற் சாலைகளின் பணிகளை ஒன்று சேர்ப்பதுடன் அவைகளுக்கு விற்பனை மற்றும் பல உதவிகளைச் செய்கிறது. மீதமுள்ள சிறு தேயிலை உற்பத்தியாளர்களையும் தொழில் கூட்டுறவு அமைப்புக்குள் கொண்டுவர முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

மின்னணுத் தொழில், தோல் தொழில், பட்டுப்புழு வளர்ச்சி, உப்பு தயாரித்தல், சுரங்கம், கனிவளத் தொழில் போன்றவை முக்கியமான சிறு தொழில்கள் ஆகும். இவைகளின் சுருக்கமான ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

<u>மின்னணுத் தொழில்:</u>

நமது நாட்டில் மின்னணுப் பொருட்களின் உற்பத்தியளவான 400 கோடியுடன் ஒப்பிடும்போது இம்மாநிலத்தின் உற்பத்தியளவு மிகக் குறைவாகும் (மூன்று கோடி ரூபாய்). சமீபகாலம் வரை மின்சார, மின்னணுவியல் சம்பந்தமான தொழிற்சாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய ஏற்பாடுகளை, தொழில்-வணிக இயக்குநர் அலுவலகத்தைச்சேர்ந்த மின்சார, மின்னணுவியல் பிரிவு கவனித்து வந்தது. இப்பிரிவு வழங்கிய ஒத்துழைப்பாலும் ஆலோசனையினாலும் தொலைக்காட்சி சாதனங்கள், திரைப்படம் காட்டும் கருவிகள், ஒலி, ஒளிச் சாதனங்கள் முதலானவை தொழிற்பேட்டைகளில் ஓரளவு உற்பத்தி செய்யப்பட்டன. மாநிலத்தில் மின்னணுவியல் வளர்ச்சிக்கு நிறைந்த வாய்ப்பு உள்ளமையால், அதன் வளர்ச்சிக்கு உற்சாகமளிக்க, மாநில அளவில் இதற்கென்று அமைக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின்படி சமீபத்தில் தமிழ்நாடு மின்னணுக் கழகம் (Electronics Corporation of Tamil Nadu) அமைக்கப்பட்டது. இந்தக் கழகத்திற்கு 1977-78 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் அரசின் பங்கு மூலதனம் ரூ. 25 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

<u>தோல் தொழில்:</u>

தோல் தொழில் தமிழ்நாட்டின் பொருளாதாரத்திற்கு மிகுந்த அளவில் உதவிசெய்யும் பாங்கையும், அத்தொழில் வளர தமிழ்நாட்டில் உள்ள வாய்ப்பையும் கருத்திற்கொண்டு தோல் தொழில் வளர்ச்சிக்கு ஊக்கம் அளித்து, உதவிசெய்து வளர்க்க அரசு முடிவு செய்துள்ளது. இத்தொழில் செறிந்துள்ள வட ஆற்காடு மாவட்டம், ராணிப்பேட்டை, ஆம்பூர், வாணியம்பாடி போன்ற இடங்களிலும், சென்னை சுற்றுப்புறம், திருச்சி-திண்டுக்கல் எல்லை, மற்றும் ஈரோடு-சேலம் எல்லை முதலான இடங்களிலும் உள்ள தோல் தொழிற்சாலைகளுக்கு இத்தகு உதவிகள் கிடைக்கும்.

தோல் பொருள் உற்பத்தி அத்தொழிலுக்கு, குறிப்பாக, சிறு அளவில் தோல் பதனிடுவோருக்குத் தேவையான அளவில் உதவும் பொருட்டு, மாநில நிதி உதவிக்கழகம் மற்றும் மாநில வர்த்தகக் கழகம் ஆகியவற்றின் மூலமாக வாணியம்பாடியில் ஒரு கூட்டுறவுச் சங்கம், அரசின் ஆதரவுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இத்தகு கூட்டுறவு நிறுவனங்களைத் தோல் பதனிடுவோர் மிகுந்துள்ள இடங்களில் நிறுவவேண்டியுள்ள தேவையும் உணரப்படுகிறது. இதன் காரணமாக 5 அல்லது 6 பணிக்கூடங்கள் நிறுவலாம் என்று அரசு கருதுகிறது. மாநில வர்த்தகக் கழகம் (State Trading Corporation) வழங்கும் ரூ. 25 (இருபத்து ஐந்து) இலட்சம் மதிப்புள்ள இயந்திரங்களை மூலதனமாகக்கொண்டு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் உதவியுடன், இப்பணிக் கூடங்களை

அமைக்கலாம் என்றும் கருதப்படுகிறது. தோல் தொழிலுக்குத் தேவையான இயந்திரங்களின் மீதும் உதிரிப்பாகங்கள் மீதும் உள்ள கணிசமான இறக்குமதி வரியைப்பற்றி இந்திய அரசுக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் சுற்றுச் சுகாதாரம் பாதிக்கப்படுமோ என்பது அடையாற்றிலுள்ள மத்திய தோல் ஆராய்ச்சி நிலையத்துடன் ஆய்வு செய்யப்பட்டு, இது குறித்தும் கழிவுப் பொருட்களை அகற்றுவது குறித்தும் நவீன முறைகள் கையாளப்பட வேண்டும் என்று விரும்பப்படுகிறது.

<u>பட்டுப்புழு வளர்ப்பு :</u>

தோல் மற்றும் மின்னணுவியல் தொழிலுடன் சேர்த்து, பட்டுப்புழு வளர்ப்புத்தொழிலுக்கும் தமிழ்நாட்டில் நல்லவாய்ப்பு இருந்தும் இதற்குப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. மத்திய அரசு மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள் உதவிகளுடன் ஏற்கனவே உள்ள பட்டுப்புழு வளர்ப்பு இடங்களை விரிவு ஆக்கவும் மேலும் பல இடங்களுக்கு இதை விரிவுபடுத்துவதற்கும் தேவையான செயற் குறிப்புகள் இந்திய அரசுக்கும் மத்திய பட்டு வாரியத்திற்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்பளிக்கப்படும் என்று நமக்கு உறுதிதரப்பட்டுள்ளது.

சிறு தொழில் முன்னேற்றத்திற்காக அரசாங்கத்தால் நிறுவப்பட்ட கழகங்களில் சிறுதொழில் நிறுவனம், மட்பாண்டங்கள் நிறுவனம், தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சிக் கழகம் ஆகியவை முக்கியமானதாகும்.

<u>தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் :</u>

1977-78 ஆம் ஆண்டிலும் அதற்குப் பிறகு சில ஆண்டுகளிலும் கீழே கொடுக்கப்பட்டுள்ள திட்டங்களை மேற்கொள்ள தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் முடிவுசெய்து இருக்கிறது.

1. பெங்களூர் ஹிந்துஸ்தான் இயந்திரத் தொழிற் கருவிகள் நிலையத்துடன் கூட்டாக இயந்திரத் தொழில் கருவிகள் தயாரித்தல்;
2. கருங்கல் வெட்டியெடுத்தல்;
3. கைக்கடிகாரப் பாகங்களைப் பொருத்துதல்;
4. வார்ப்படத் தொழிற்சாலைகளை நவீனப் படுத்துதல்;
5. இயந்திரக் கருவிகள் தொழிற்சாலைகள் விரிவு படுத்துதல்;
6. நுட்பம் வாய்ந்த இயந்திரக் கருவிகள் தொழிற்சாலையை அமைத்தல்;
7. பிளாஸ்டிக் உருக்குப் பொருட்களை தயாரித்தல்.

இயந்திரத் தொழில் கருவிகள் தயாரிக்கும் திட்டம்.

நான்கு விதமான இயந்திரக் கருவிகளைத் தயாரிக்க தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம், ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத்துடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டுள்ளது. அவற்றில் ஒன்றான ''ஹாக்ஸா 20'' (Hacksaw) செய்வதற்கான வரைபடத் திட்டங்கள் ஹிந்துஸ்தான் இயந்திரத் தொழில் நிறுவனத்திடமிருந்து வரப்பெற்று முதலில் பத்து இயந்திரங்களைச் செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத் தொழிற்சாலை ராணிப்பேட்டையிலுள்ள தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் தொழில் மையத்தில் அமைந்துள்ளது. தொழிற்சாலைக்குத் தேவையான கட்டிடங்கள் விரைவில் கட்டி முடிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கருங்கல் வெட்டியெடுக்கும் திட்டம்:

தென்னாற்காடு மாவட்டம் குன்னம் கிராமத்திலுள்ள கருங்கல் வெட்டியெடுக்குமிடத்தை வாணிப ரீதியில் வெட்டியெடுத்துக் கொள்ள தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திற்கு அரசு அனுமதியளித்துள்ளது.

கடிகாரப் பாகங்களை பொருத்தும் திட்டம்:

இத் திட்டம் பெங்களூரிலுள்ள ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனத்துடன் கூட்டாக, நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் நிறுவப்பட இருக்கிறது. அரசு இதற்குரிய ஒப்புதலை அளித்துள்ளது. இதற்கான தொழில் நுட்ப உதவிக்கான ஒப்பந்தமும் இரு நிறுவனங்களுக்கு இடையே ஏற்படுத்தப்பட்டு விட்டது. இவ்வாண்டின் இறுதியில் இத்திட்டம் உற்பத்தியைத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மட்பாண்டத் தொழிற்சாலைகள்:

சீனா களிமண் (China clay), படிக்கல் (Quartz), பெல்சுபார் (Feldspar) களிக்கல் (Gypsum) கற்குழாய்க்கு வேண்டிய கல்மண் (Stoneware clay) போன்ற தரமான மூலப்பொருட்கள் கிடைக்கும் உன்னத நிலைமையில் தமிழ்நாடு உள்ளது. மட்பாண்டத் தொழில் முன்னேற்றத்திற்கு மேற்கூறிய அடிப்படை மூலப் பொருட்கள் தேவைப்படுகின்றன.

தமிழ்நாடு மட்பாண்டங்கள் நிறுவனம் 1973 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து தொழில்-வணிகத் துறை இயக்குநரின் மேற்பார்வையில் இருந்த பல்வேறு மட்பாண்டத் தொழிற்சாலைகள் இந்நிறுவனத்திற்கு மாற்றப்பட்டன. மட்பாண்டப் பொருட்களை உற்பத்தி செய்யும் பொருட்டு மாணவர்களுக்குத் தீவிர பயிற்சி அளிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட மட்பாண்டத்தொழில் நுட்ப நிறுவனம் தமிழ்நாடு மட்பாண்ட நிறுவனத்திற்கு மாற்றப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள மூன்று கற்குழாய் தொழிற்சாலைகளில் இந்திய தரக்கட்டுப்பாட்டுக்கழக I.S.I. முத்திரையைப் பொறித்துக் கொள்ள இசைவளிக்கப்பட்டுள்ள ஒரே தொழிலகம் இது ஒன்றுதான் என்பது பெருமைப்படத்தக்கதாகும். தமிழ்நாடு மட்பாண்ட நிறுவனம் ஓமலூரில் மட்பாண்ட தொழிலகங்களை வளர்ச்சியடையச் செய்யத்திட்டமிட்டுள்ளது. தொழிலகங்களை வளர்ச்சியடையச் செய்வதோடு மட்டும் அல்லாமல் இந்நிறுவனமானது, ஒரு சிறிய மட்பாண்டத் தொழில் சம்பந்தப்பட்ட தொழிற்பேட்டையை நிறுவ உத்தேசித்துள்ளது. செங்கற்பட்டு மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய அடிப்படை மூலப் பொருட்கள் சம்பந்தமாக ஆய்வு நடத்தியதின் பேரில், இந்நிறுவனம் கூடிய சீக்கிரத்தில் மேலும் ஒரு கற்குழாய் தொழிற்சாலையை நிறுவும் திறனைப் பெற்றுள்ளது. இந்நிறுவனம் 1,100 பேர்களுக்கு நேரடியாக வேலைவாய்ப்பை அளிக்கின்றது.

தமிழ்நாடு கைத்திறன் வளர்ச்சி நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டதன் காரணமாக, தொழில் வணிகத் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த, கைவினைத் தொழில் சம்பந்தப்பட்ட விற்பனை பணி நிலையங்களும் பயிற்சி நிலையங்களும் பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந் நிறுவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டன. இந் நிறுவனமானது, புதிய தொழிற்சாலைகளை ஆரம்பிப்பதன் மூலமாகவும், மேலும் அதனுடைய நிலையங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை பம்பாய், கல்கத்தா, டெல்லி மற்றும் பெங்களூர் போன்ற இடங்களிலுள்ள அதனுடைய விற்பனை பணி நிலையங்கள் மூலமாகவும், பெரும்பாலும் எல்லா மாவட்டங்களிலும் உள்ள விற்பனை பணி நிலையங்கள் மூலமாகவும் விற்பனைக்குக் கொண்டு வருவதன் மூலமாகவும் தன்னுடைய செயல் திறனை வளர்த்துக் கொண்டு வருகின்றது.

உப்புத் தொழிற்சாலை:

உப்பு, இரசாயனத் தொழில்களுக்கு இன்றியமையாத இடுபொருட்களில் ஒன்றாகும். உப்பு மற்றும் உப்பை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை இம் மாநிலத்தில் அமைப்பது குறித்தான கொள்கைகளிலும், மத்திய அரசு விதிக்கும் உப்பு வரியிலிருந்து உதவி பெற்று, உப்புத் தொழில் முன்னேற்றத்திற்கான திட்டங்களை அமைத்து நிறைவேற்றுவதிலும், அரசுக்கு அறிவுரை வழங்குவதற்காக தமிழ்நாடு உப்பு-இரசாயனத் துணைப் பொருள் வாரியம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் முதுகுளத்தூர் வட்டத்தில், வாலிநோக்கம், மரியூர் கிராமங்களின் அருகே தென் மேற்குப் பகுதியில் சுமார் 5,566 ஏக்கர் அளவுள்ள நிலத்தினை உப்புக் கழகம், பெரிய அளவிலான உப்புத் தொழில் முன்னேற்றத்திற்காக முதலில் எடுத்துக் கொண்டுள்ளது. தற்போது இந்நிறுவனம் 500-க்கும் மேற்பட்ட நபர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றது.

தமிழ்நாட்டில் சிமிட்டி உற்பத்தியும் சர்க்கரைத் தொழிலும் முக்கியமான பெருந் தொழில்களாக கருதப்படுகின்றன. அவற்றின் சுருக்கமான ஆய்வு கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

சிமிட்டித் தொழிற்சாலைகள்:

அரசுத் துறையைச் சார்ந்த தொழிற்சாலையைச் சேர்த்து தற்சமயம் ஏழு தொழிற்சாலைகள் சிமிட்டி உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. அரசுத் துறையைச் சார்ந்த அரியலூர் சிமிட்டி தொழிற்சாலை இன்னும் கட்டி முடிக்கப்படவில்லை. இத் தொழிற்சாலை 1978 செப்டம்பரிலிருந்து உற்பத்தியைத் தொடங்கும். இவைகளின் நிறுவன உற்பத்தித் திறன் 36 இலட்சம் டன்களாகும். 1974-75-ல் 26 இலட்சம் டன்களாக இருந்த உற்பத்தி 1976-ல் 33 இலட்சம் டன்களாக உயர்ந்திருக்கின்றது.

மின்வெட்டு காரணமாக 1976-77-ல் இத் தொழிற்சாலைகள் அவற்றின் உற்பத்தித்திறனுக்குக் குறைவாகவே வேலை செய்தன. அதே நேரத்தில் போதிய அளவு ஏற்றுமதி உத்திரவுகள் கிடைத்ததால் உள்ளூர் சந்தையில் சிமிட்டி கிடைப்பது அரிதாகிவிட்டது. இதன் காரணமாக சிமிட்டி விலை வெளிச் சந்தையில் குறிப்பிட்ட அளவு உயர்ந்து விட்டது.

இப்பொழுது மின்சார வெட்டு முழுவதும் நீக்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் அநேகமாக முழு திறனுக்கு வேலை செய்வதாலும், சிமிட்டி ஏற்றுமதியை முறைப்படுத்தும் பொருத்தமான கொள்கையாலும் உள்ளூர் சந்தையில் சிமிட்டி கிடைப்பது அதிகரித்துள்ளது. வெளிச்சந்தையில் கிடைக்கும் சிமிட்டி விலைக்கும், கட்டுப்பாட்டில் கிடைக்கும் சில்லரை விலைக்கும் இடையே அதிக வித்தியாசம் இல்லாமல் செய்ய உதவுகிறது. சிமிட்டி இன்றியமையாத பொருள்கள் சட்டத்திற்குட்பட்ட ஒரு இன்றியமையாத பொருள் ஆகும். சிமிட்டி வியாபாரிகள் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதிருக்கும் பொருட்டு, விலை சரக்கு இருப்பு விவரங்களைப் பார்வைக்கு வைப்பது குறித்த ஆணையின் விதித் துறைகளை சிமிட்டியைப் பொறுத்தவரை தீவிரமாகச் செயல்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சியாளர்களுக்கு கட்டளை இடப்பட்டுள்ளது. சமீபத்தில் செலுத்திய வீட்டுவரி ரசீதைக் காண்பிப்பதன் பேரில் சிமிட்டி இருப்பு வைத்திருப்போர்களிடமிருந்து சிமிட்டி வாங்க இயலும் வகையில் சிமிட்டி உற்பத்தியாளர்கள் கூடி சிமிட்டி வினியோக ஆலோசனைக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்கள். மேற்கூறிய நடவடிக்கைகளால் சிமிட்டி விலை இயல்பான நிலைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுரங்கமும், கனிவளத் தொழில்களும் :

நவீன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி தமிழ்நாட்டில் பல இடங்களில் கனிவளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. தென்னாட்டில்

பல இடங்களில் மாக்னஸைட் இருப்பதும், பன்ருட்டிக்கருகில் பீங்கான் தொழிலுக்குத் தேவையான களி மண்ணும் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கின்றன.

புதிய கண்டுபிடிப்பு முறைகளினால் கோவை மாவட்டத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பெரும்பாலான தொழில்களுக்கு கனிப் பொருட்கள் அடிப்படை மூலப் பொருட்களாக இருப்பதால், கனிவளப் படிவங்களை கண்டுபிடிக்கும் திறமையான நவீன முறைகளைக் கையாள்வதுடன், புதிய கனிவளத் தொழில் தொடங்கும் இடங்களைக் கண்டறிவதிலும், ஏற்கனவே தொடங்கிச் செயல்பட்டு வரும் தொழிற்சாலைகளை விரிவுபடுத்துவதிலும் தமிழக அரசு தன் முழு கவனத்தைச் செலுத்தி வருகிறது. அதிக வேலை வாய்ப்பை ஏற்படுத்தி, ஏற்றுமதியை ஊக்குவிப்பதால் கருங்கற் படிவங்கள் உள்ள இடங்களில் அரசு கல் வெட்டி எடுத்துப் பயன்படுத்துவதற்காக, அப்பகுதிகளைக் காப்புப் பகுதிகளாக வைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சர்க்கரைத் தொழில் :

1975-76 ஆம் ஆண்டு போதிய அளவு கரும்பு கிடைக்காததால் உற்பத்தித் திறனை முழுமையாகப் பயன்படுத்த முடியாமல் சர்க்கரைத் தொழிலின் முன்னேற்றத்திலும் தடைபட்டது. இந்த ஆண்டில் ஆலைகள் 18.69 இலட்சம் டன்கள் கரும்பைப் பிழிந்து 1.80 இலட்சம் டன்கள் சர்க்கரையை உற்பத்தி செய்தன. 1976-77 ஆம் ஆண்டு புதிதாக மூன்று சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட்டு, தமிழ் நாட்டின் மொத்த ஆலைகள் இருபதாக ஆகின. தஞ்சாவூருக்கருகில் தொடங்கப்பட்டுள்ள சர்க்கரை ஆலை பொதுத்துறையில் தொடங்கப்பட்ட முதல் சர்க்கரைஆலை ஆகும். வேலூருக்கருகிலும் திருப்பத்தூருக்கருகிலும் (வட ஆற்காடு மாவட்டம்) தொடங்கப்பட்ட சர்க்கரை ஆலைகள், கூட்டுறவுத் துறையில் அமைந்தவை ஆகும். இதன் விளைவாக, 1976-77இல் இம் மாநிலத்தில் சர்க்கரை ஆலைகளின் கரும்புப் பிழியும் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 34,750 டன்னாக உயர்ந்துள்ளது.

1976-77இல், இத்தொழிலில் 1973-74இல் இருந்த நிலையை அடைய முடியாவிட்டாலும், ஓரளவுக்கு முன்னேற்றம் அடைந்துள்ளது. நடப்பு சர்க்கரை பருவகால இறுதிக்குள், ஆலைகள் 36 இலட்சம் டன்கள் கரும்பைப் பிழிந்து, 3.05 இலட்சம் டன்கள் சர்க்கரை உற்பத்தி செய்யக்கூடும். 1977-78 ஆம் ஆண்டு, இத் தொழில் சிறப்படைந்து 1973-74 ஆம் ஆண்டு இருந்த நிலையையும் மிஞ்சலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெருந்தொழில்கள்—நிறுவனங்கள் (Corporations):

உள்ளூர் மக்களின் திறமையும் வள வசதிகளையும் பெரும் அளவிற்குப் பயன்படுத்தக் கூடிய தொழில்களுக்கு நாம் ஊக்கமளிக்க வேண்டும். தொழில் வளர்ச்சித் திட்டங்கள் முன்னேற்

றத்தில் மாநில அரசின் பங்கு மகத்தானதாகும். தொழில் வளர்ச்சியை முன்னேற்றுவது அரசின் கடமையாகும். சில இன்றியமையாத துறைகளிலோ தனியார் முதலீடுகள் போதிய அளவு இல்லாத துறைகளிலோ அரசு நேரடியான முதலீடு செய்ய வேண்டியிருக்கும். வேறு துறைகளில் அரசானது தனியாரோடு இணைந்த கூட்டுத் துறைக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டியிருக்கும். இன்னும் சிலவற்றில் தக்க ஊக்க முறைகளையும், சலுகைகளையும் அளிக்க முன்வருவது மூலமாக அரசு தனியார் துறை முதலீட்டைப் பெருக்கவேண்டும். டிட்கோ, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் சிப்காட் போன்ற பல நிறுவனங்கள் மூலமாக இம் மாநிலத்தின் தொழில் அடிப்படையை பலப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்களை நாம் செயற்படுத்தி வருகிறோம்.

தொழில்களின் வேகமான வளர்ச்சியை எளிதாக்குவதற்கான அடிப்படையான முக்கிய வசதிகளை ஏற்படுத்துவதும் தனியார் தொழில் முனைவர்களுக்கு நிதி வசதியைப் பெருக்குவதற்கான நிறுவனங்களை ஏற்படுத்துவதும் சென்ற ஆண்டு வலியுறுத்தப்பட்டன. தொழில் திறனை வளர்க்கப் பயிற்சி அளிப்பதிலும் போதிய கவனம் செலுத்தப்பட்டன. பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் புதுத் தொழில்களை ஏற்படுத்த ஊக்கமளிக்கப்பட்டு அத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு எல்லா உதவிகளையும் அரசு செய்தது.

1975இல் 126.7 (1970இல் அடிப்படையளவு 100) என்ற நிலையிலிருந்து வருடாந்திர சராசரி தொழில் உற்பத்தி 1976இல் (தற்காலிகமாக) 137.9 ஆக அதிகரித்தது. 1975 ஆம் ஆண்டுக்கான தொழில் உற்பத்தி குறியீடு அநேகமாக 1974 ஆம் ஆண்டு மட்டத்திலேயே தேங்கிய நிலையில் நின்றதை ஒப்பிடுகையில் **1976**இல் உள்ள நிலைமை குறிப்பிடத்தக்கதேயாகும். நடைமுறையில் செயற்படுத்தப்பெறும் திட்டங்கள் பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு வேகத்தைக் கூட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. டிட்கோ, சிப்காட் மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் ஆகியவற்றின் முன்னேற்றத்தைப் பற்றிய குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது.

1. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ).

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (டிட்கோ) 1965 இல் ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலையையும், அரக்கோணத்தில் தொடர்வார்ப்பட உருக்காலையையும் (தற்போது தமிழ்நாடு எஃகு ஆலை எனப்படுவது) அமைப்பதற்காக நிறுவப்பட்டது. பின்னர் தொழில் வளர்க்கும் (Private Promoters) தனிப்பட்டோரின் ஒத்துழைப்புடன் கூட்டுத் துறையில் தொழில் நிறுவனங்களை அமைக்கும் வகையில் அதன் செயல் வரம்பு விரிவு படுத்தப்பட்டது. இதுவரை பொதுத்துறை, கூட்டுத்துறை இரண்டிலுமாக 44

திட்டங்களை மொத்தம் ரூ. 423 கோடி முதலீட்டுடன் 'டிட்கோ' உருவாக்கியுள்ளது. இவற்றில் டிட்கோவின் முதலீடு ரூ. 68 கோடியாகும். இவற்றில் சுமார் 21 ஆயிரம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிட்டும். டிட்கோ தற்போது மாநில அரசின் ஒரு பெரும் நிறுவனமாக ஆகியிருக்கிறது. நாட்டிலுள்ள தொழில் வளர்ச்சியைப் பெருக்கும் பணியில் ஈடுபட்டுள்ள மாநிலத் தொழில் வளர்ச்சி நிறுவனங்களுக்குள் முதன்மையான ஒரு இடத்தை இது அடைந்துள்ளது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ. 17 கோடியாகும். அதன் தற்போதைய செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 16.52 கோடியாகும்.

2. பொதுத்துறை நிறுவனங்கள்.

இதுவரை டிட்கோ கீழ்க்கண்ட பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி, அவை செயற்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம்:

இந்த ஆலை 1970இல் உற்பத்தியைத் தொடங்கியது. ஆண்டுக்கு 4 இலட்சம் டன்கள் உற்பத்தித் திறனளவுள்ளதும், நாளொன்றுக்கு 1,200 டன்கள் உற்பத்தி திறனளவுள்ளதும் ஆன ஈரத் தயாரிப்பு முறையைப் பின்பற்றும் சுழற் சூளைகள் இரண்டு இங்கு உள்ளன. இந்த ஆலையின் தளவாடம் ரூ. 6.7 கோடி பெறுமானதாகும். டிட்கோ, அரசு இரண்டினாலும் இதற்கு நிதிவசதி வழங்கப்பட்டுள்ளது. 1,450 பேர்களுக்கு இதனால் வேலைவாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு இதன் விற்பனையளவு ரூ. 742.02 இலட்சங்கள் ஆகும். இதில் நிகர லாபம் ரூ. 1.02 இலட்சங்கள். நீர் மற்றும் நிலக்கரி போக்குவரத்தில் எதிர்ப்பட்டிருந்த இடர்ப்பாடுகள் இப்போது பெரும்பாலும் தீர்ந்து விட்டன. 1977-78-க்கு இவ்வாலையின் முழு உற்பத்தித்திறனை 4 இலட்சம் டன்கள் என்ற இலக்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு எஃகு ஆலை, அரக்கோணம்:

சோவியத் தொழில் நுணுக்க உதவியுடன் தொடர் எஃகு வார்ப்பட முறை அடிப்படையில் ஆண்டுக்கு 1,00,000 டன்கள் எஃகுப் பாளங்களை உற்பத்தி செய்வதற்காக இது அமைக்கப்பட்டது. இதன் மூலதனச் செலவு 31-3-1977-ன்படி ரூ. 6.78 கோடியாகும். 1976-77இல் இவ்வாலையின் திறமை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டியது. ஒரு தீவிர விற்பனை முயற்சியின் மூலமாக, இந்த ஆலை 1976-77இல் ரூ. 541.43 இலட்சம் மதிப்புள்ள 33,554 டன்கள் எஃகுப் பாளங்களை விற்பனை செய்து காட்டியது. இதனால் இதன் இழப்பு ரூ. 7.28 இலட்சமாகக் குறைந்தது.

அரியலூர் சிமெண்டு தொழிற்சாலை :

மேற்கண்ட இரு நிறுவனங்களைத் தவிர திருச்சி மாவட்டத்தில் அரியலூரில் ஆண்டுக்கு 5 இலட்சம் டன்கள் உற்பத்தி திறனுள்ள போர்ட்லாண்டு சிமென்டு உற்பத்திக்காக, உலர்ந்த தயாரிப்பு முறைப்படி ரூ. 29 கோடி மூலதன முதலீட்டுடன் 1,097 பேர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் விதத்தில் மற்றொரு சிமெண்டு நிறுவனத்தையும் அமைப்பதில் இந்நிறுவனம் ஈடுபட்டுள்ளது. இது 1978 செப்டம்பரில் உற்பத்தியைத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான இருப்புப் பாதை பகுதி மற்றும் தொழிற்சாலைக் கட்டடங்களுக்கான கட்டுமான வேலைகள் முன்னேறி வருகின்றன.

இவற்றைத் தவிர, கீழ்க்கண்ட பொதுத்துறை நிறுவனங்களும் இந்நிறுவனத்தின் பரிசீலனையில் உள்ளன.

(அ) 'ஸ்டீல் புளூம்' தொழிற்சாலை.

(இ) அஸ்பெஸ்டாஸ் சிமெண்டு அட்டைகள் தொழிற்சாலை.

(உ) தமிழ் நாடு சிந்தடிக் இழைகள் நிறுவனம்.

டிட்கோவின் ஒரு துணை நிறுவனமாகத் தமிழ்நாடு சிமெண்டு கழகம் லிமிடெட் 1-4-1976 ஆம் நாளில் அமைக்கப்பட்டு அது இரு சிமெண்டு நிறுவனங்களையும் மேற்கொண்டுள்ளது. உற்பத்தியில் உள்ள இரு பொதுத்துறை நிறுவனங்களின் மொத்த விற்பனையளவு 1976-77-ல் ரூ. 13 கோடியாக உயர்ந்துள்ளது. 1975-76-ல் இதன் விற்பனையளவு ரூ. 5.45 கோடியாக இருந்தது.

3. கூட்டுத் துறை நிறுவனங்கள்.

நிதி வசதிகளும், தொழில் நுட்ப அறிவும் படைத்த தொழில் முனைவர்களது கூட்டுறவுடன் கூட்டுத் துறையில் பல நிறுவனங்களைப் படைக்கும் செயல் வேகமுடைய முக்கியப் பணியை டிட்கோ நிறைவேற்றி வருகிறது. இந்த நிறுவனங்களுக்கான மூலதனப் பங்களிப்பு முறை பின்வருமாறு :—

டிட்கோ :	பங்கு மூலதனத்தில் 26%-ம் அதற்கு மேலும்
தனிப்பட்ட தொழில் முனைவோர் :	பங்கு மூலதனத்தில் 25%-ம் அதற்குக் கீழும்
பொதுமக்கள் :	மீதித் தொகை.

ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு கொள்கைப்படி, ரூ. 100 இலட்சம் மொத்த மூலதனச் செலவில் அடங்கும் தொழில் முயற்சிகள் கூட்டுத் துறையில் டிட்கோவினால் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கழகத்தின் கூட்டுத்துறை நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் முக்கியப் பொருட்கள் பின்வரும் பல தரப்பட்ட

நுகர்பொருள் மற்று இடைநிலைப் பொருட்கள் உட்பட்டவையாகும்; அவையாவன—உரங்கள், இரசாயனப் பொருட்கள், மின்னணுச் சாதனங்கள், அசிட்டிலின் வாயு உருளைகள், அளவைக் கருவிகள், தோல் பூட்சுகள், மக்னிசியம் உலோகம், புவி அறிவியற் கருவிகள். மொத்தமுள்ள 37 கூட்டுத்துறை நிறுவனங்களில் இது வரை 24 நிறுவனங்கள் கம்பெனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் 11 நிறுவனங்கள் உற்பத்தியில் இறங்கியுள்ளன.

1. சதர்ன் பெட்ரோ கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் லிமிடெட் (ஸ்பிக்).
2. தமிழ்நாடு குரோமேட்ஸ் அண்டு கெமிக்கல்ஸ் லிமிடெட்.
3. பாண்டியன் கெமிக்கல்ஸ் லிமிடெட்.
4. தமிழ்நாடு தாதா பார்மசுடிகல்ஸ் லிமிடெட்.
5. சதர்ன் பொராக்ஸ் லிமிடெட்.
6. டைனவிஷன் லிமிடெட்.
7. ஆசியா டுபாகோ கம்பெனி லிமிடெட்.
8. தமிழ்நாடு ஆல்கலைன் பாட்டரிஸ் லிமிடெட்.
9. கடல் சார்ந்த பெரும் படகுகள் (Sea Trawlers) கட்டுதளம் (மண்டபம்) லிமிடெட்.
10. மார்தி கிரிஸ்டல்ஸ் சால்ட் கம்பெனி லிமிடெட்.
11. அரக்கோணம் வார்ப்படக் கொல்லுலைத் தொழிற்சாலை லிமிடெட்.

நிதி நெருக்கடிதான் ஸ்பிக் நிறுவனத்தின் பெரும் பிரச்சினையாகும். இவ்வாலையில் உரத்திற்கான உற்பத்திச் செலவையும் அந்த உரத்தின் விலையையும் சமநிலைப்படுத்த வேண்டியுள்ளது. ஸ்பிக்கின் உற்பத்திப் பொருளுக்காக தக்கதொரு நிலையான விலையை நிர்ணயிப்பது பற்றி ஆலோசித்துவரும் இந்திய அரசு அதற்கென ஆதாயமான நிலையான விலையைக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

'டைனவிஷனின்' சாதனை, சிறப்பாக ஊக்கமளிப்பதாக உள்ளது. அதன் உற்பத்தி தற்போது, அதன் முழு வீதத்திறனை ஆண்டுக்கு 10,000 பெட்டிகள் என்னும் அளவை அடைந்துள்ளது. இப்பெட்டிகள் தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் நல்ல விற்பனையைப் பெற்றுத் தருகின்றன. மேற்கண்ட 11 நிறுவனங்கள் தவிர, 14 திட்டப்பணிகள் நிறைவேற்றப்படும் நிலையிலும், மேலும் 12 செயற் குறிப்புகள் பரிசீலனையிலும் உள்ளன.

4. நிதி நிலையும் செயல் முடிவுகளும் :

நடப்பு ஆண்டில், திட்ட மூலதன முதலீட்டுக்காக இம் மாநில அரசு பங்கு மூலதனமாக 2 கோடி ரூபாய் உடன், மொத்தம் ரூ. 4 கோடியளவுக்கு, இந்நிறுவனம் ரூ. 1.70கோடி களுக்கு கடனீட்டுறுதி ஆவணங்களை வெளியிடும். மலும், ரூ. 50 இலட்சம் மதிப்புள்ள நிலையான வைப்புத் தொகைகளையும் ஈட்டுவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. அரியலூர் சிமென்டு நிறுவனத்திற்குப் பயன்படுத்தப்படுவதற்காக, வர்த்தக வங்கி களிடமிருந்தும், நிதிவழங்கு நிறுவனங்களிடமிருந்தும் பெறக் கூடிய கடன்கள் ரூ. 14 கோடி அளவில் இருக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) :

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் 1971 ஆம் ஆண்டில் தமிழக அரசுக்கே முழுவதும் சொந்தமான வரையறுக் கப்பட்டதொரு பொது நிறுவனமாக, ரூபாய் ஐந்து கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன், இம்மாநிலத்தின் பின் தங்கிய பகுதிகளைத் துரிதமாகத் தொழில் மயமாக்குவதற்கான முக்கிய குறிக்கோளுடன் அமைக்கப்பட்டதாகும். இந்த நிறு வனத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூபாய் முந்நூறு இலட்ச மாகும். இதுவரை இந்த நிறுவனத்திற்கு மாநில அரசு ரூ. 291 இலட்சம்வரை கடன் வழங்கியுள்ளது.

2. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் கீழ்க்கண்ட ஊக்குவிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது :—

(1) தொழில் தொடங்கும் ஆய்வுக்கு உதவித்தொகை.

(2) நடுத்தர, பெரிய தொழில்களுக்கு விற்பனை வரி யிலிருந்து நிவாரணம் அளிக்கும் திட்டங்கள்.

(3) பின்தங்கிய பகுதிகளில் நிறுவப்பட்ட தொழில் பிரிவு களுக்கு மத்திய அரசின் நேரடி மானியம் அல்லது உதவித் தொகை வழங்கும் திட்டம்.

இந்திய தொழில் வளர்ச்சி வங்கியின் மறுநிதியுதவித் திட் டத்தை சிப்காட் பயன்படுத்திக் கொண்டு மாநிலத்தில் தொழில் ரீதியாகப் பின் தங்கியுள்ள ஒன்பது மாவட்டங்களில் உள்ள தொழில்களுக்குச் சலுகை விகிதத்தில் வட்டியுடன் கூடிய நிதி உதவியும், கடன்களைத் தள்ளிவைத்தும் கடன்களைத் திரும்பச் செலுத்துவதற்கான காலத்தை நீட்டித்தும் வருகிறது.

சிப்காட் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களுக்காக 31-3-1977 வரை ரூ. 16.77 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத் திட்டங்களால் ஊக்குவிக்கப்பட்ட மொத்த முதலீடு ரூ.135 கோடி

என்ற அளவில் இருக்கிறது. இந்த நிறுவனம் தோற்றுவிக்கப் பட்டது முதல் அதன் முன்னேற்றம் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

	எண்ணிக்கை	வழங்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்).
1. குறித்த காலக் கடன் (Term Loan) ..	58	594.46
2. வட்டியில்லா விற்பனைக்கடன்	32	292.80
3. மத்தி அரசு மானியம் ..	219	733.02

தொழில் பகுதிகளை மேம்படுத்துதல்.

வட ஆற்காடு மாவட்டம், இராணிப்பேட்டையிலும், தர்ம புரி மாவட்டம் ஒசூரிலும் உள்ள இரண்டு வளர்ச்சி இடங்களை மேம்படுத்தும் திட்டத்தை 'சிப்காட்' மேற்கொண்டுள்ளது. இராணிப்பேட்டையில் எல்லா வளர்ச்சிப் பணிகளும் அநேகமாக முடிவடைந்துவிட்டன. விற்கப்படத்தக்க மொத்தம் 551 ஏக்கர் நிலத்தில், தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனத்திற்கு, சிறிய தொழில் பிரிவுகளுக்கான கூடங்களைக் கட்டுவதற்கு ஒதுக் கப்பட்ட 70 ஏக்கர் நிலம் உட்பட 41 தொழில் பிரிவுகளுக்கு (Industrial Units) இதுவரை 407 ஏக்கர் நிலம், ஒதுக் கப்பட்டுள்ளது.

ஒசூரில் உள்ள தொழில் இணையத்தில் வளர்ச்சிப் பணிகள் 1975 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது முன்னேற்றத் தில் இருக்கிறது. இந்த இணையத்தில் (Complex) தொழில் நிறுவுவதற்காக 16 நிறுவனங்களுக்கு 141 ஏக்கர் நிலம் வழங்கப் பட்டுள்ளது.

நடப்பு வருடத்திற்கான நிதி நிலை அறிக்கையில் ரூ. 50 இலட்சம் பங்கு மூலதனத்திற்கு (Equity) உதவித் தொகை யாகவும் 100 இலட்சம் கடனாக வழங்குவதற்காகவும் சிப்காட் டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (T. I. I. C.) தமிழகத்தில் உள்ள சிறியதும், நடுத்தரமானதுமான தொழில்களை பல வகைகளாகப் பெருக்கவும், விரிவுபடுத்தவும் நிதி உதவி வழங்குகிறது. இந்த நிறுவனம் ஒவ்வொரு தொழில் பிரிவுக்கும்

நிலையான உடைமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நீண்ட கால நடுத்தர கால கடன்களாக ரூ. 10,000 முதல் ரூ. 30 இலட்சம் வரை வழங்குகிறது. இந்நிறுவனம் அளிக்கும் கடனில் 90 சத வீதத் தொகையை இந்திய தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதியாக வழங்குகிறது. போக்குவரத்து வளர்ச்சித் திட்டங்கள் போன்ற சில கடன் திட்டங்கள் தொழில் வளர்ச்சி வங்கி மறுநிதி அளிக்கும் வசதிக்கு அப்பாற்பட்டு இருந்தாலும் அவைகளையும் சமுதாயத்தின் நன்மையை கருதித் தமிழ்நாடு தொழில் முதலீட்டு நிறுவனம் நிறைவேற்றி வருகிறது.

1976-77 ஆம் ஆண்டில் ரூ. 44.41 இலட்சம் அளவுக்கு தொழில் வினைஞர்களுக்கு 44 கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. கிராமப் பகுதி மருத்துவர்களுக்கு ரூ. 4.27 இலட்சத்திற்கு 7 கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. பின் தங்கிய பகுதிகளில் ரூ. 7.8 கோடிக்கு 205 கடன் உதவிகள் வழங்கப்பட்டுள்ளன. 1970 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட மொத்த நிதி உதவித் தொகையில் ஏறத்தாழ 60 சதவிகிதம் சிறு தொழில்கள் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ளது. தற்போது மின்னணுவியல் மின்சார இயந்திரங்கள், தோல் தொழில்கள் ஆகியவைகளில் சிறப்பாக ஆர்வம் காட்டி வருகிறது. 1976-77ஆம் ஆண்டில் ரூ. 1,085.99 இலட்சத்திற்கு 452 தொழில் பிரிவுகளுக்கும் 31—3—1977 வரை ரூ. 9,022.71 இலட்சத்திற்கு 1932 பிரிவுகளுக்கும் இது கடன் வழங்கியுள்ளது.

இது வரை செய்யப்பட்ட ஆய்வில் அரசாங்கம் புது தொழில்களை நிறுவுவதற்காகவும், புது தொழிற்சாலைகளை அமைப்பதற்காகவும், நடைபெறும் தொழில்களின் முன்னேற்றத்திற்காகவும், வகுத்திருக்கும் திட்டங்கள் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆயினும் சில குறிப்பிட்ட தொழிற்பகுதிகளில் முன்னேற்றம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. தமிழ் நாட்டில் இருக்கும் 50,000 சிறிய தொழில்களில் பாதிக்கு மேற்பட்டவை சில பல காரணங்களுக்காக மூடப்பட்டோ, நலிந்தோ இருக்கின்றன. இந்த சிறு தொழில்கள் நலிவுற முக்கிய காரணங்கள் நிதிப் பற்றுக் குறை, மூலப் பொருள் பற்றுக் குறை, தவிர நிர்வாகக் கோளாறு ஆகும். இந்த நலிவுற்ற சிறு தொழில்களை முன்னேற்ற அரசாங்கம் ஒரு சிறு தொழில் சீரமைப்புக் குழுவை அமைத்துள்ளது. இந்தக் குழு நலிவுற்ற சிறு தொழில் அதிபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று, அவற்றைப் பரிசீலித்து இந்த சிறு தொழில்களின் சிக்கல்களை எவ்வாறு தீர்ப்பது என்று ஆய்வு செய்து வங்கிகளுக்கும், இதர நிறுவனங்களுக்கும் தக்க பரிவுரைகள் செய்யும். இந்தக் குழுவின் பரிவுரையின் பேரில் தேவையான நிதியோ, தாதுப் பொருட்களோ கிடைப்பதற்கு ஏற்பாடு செய்வதற்குத் தேவையானவற்றை அரசு பரிசீலனை செய்யும்.

பஞ்சு விலைக்கும் நூலின் விலைக்கும் இருக்கும் முரண்பாட்டின் காரணமாக நூற்பாலைகளில் தொழில் மந்தம் ஏற்பட்டுள்ளது. இப்பொழுது தமிழ் நாட்டில் எட்டு நூற்பாலைகள் மூடப்பட்டிருக்

கின்றன. இது தவிர நான்கு பெரிய தொழிற்சாலைகளும் மூடப்
பட்ட நிலையில் இருக்கின்றன. நூற்பாலைகளைப் பொறுத்த வரை
யில் அரசாங்கம் இந்த மூடப்பட்ட நூற்பாலைகளை, நடத்த என்ன
உதவிகள் தேவையோ அவற்றினைப் பரிசீலனை செய்து வருகிறது.

மற்றபடி நலிவுற்ற தொழிற்சாலைகளை துயர் துடைப்பு நிறு
வனங்களாகக் கருதியும் வங்கிகளிலிருந்து இத் தொழிற்சாலை
களுக்கு கடன்களை பெற உதவி புரிந்தும் மறுபடியும் நல்ல முறை
யில் செயல்படுத்தத் தேவையான உதவிகள் வழ்ங்கப்படுகின்றன.
தவிர சேர்ந்து வந்துள்ள வணிக வரிகளையும், மின் கட்டணத்தை
யும் தவணை முறையில் செலுத்த அனுமதித்து இந்த நலிவுற்ற
நிறுவனங்களைத் தேற்ற அரசு தக்க நடவடிக்கை மேற்
கொண்டுள்ளது.

இணைப்பு-IV.

[609ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க].

தமிழ்நாடு கதர், கிராமத் தொழில்கள் வாரியம் கொள்கை விளக்கக் குறிப்பு.

கிராமங்களிலே வேலை வாய்ப்பு இல்லாமலும், போதிய அளவு வேலை இல்லாமலும் இருப்பவர்களுக்கு வேலை வழங்கி அவர்களின் குடும்ப வருமானத்தைப் பெருக்கி, தன்னம்பிக்கையை வளர்க்க கிராமத் தொழில்களில் ஒரு முக்கிய இடத்தை வகிக்கும் கதர் தொழில் ஆரம்பிக்கப்பட்டது. மேற்கண்ட நோக்கத்திற்காக தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம் 1—4—1960-ல் உருவாக்கப்பட்டது. (Tamil Nadu Khadi and Village Industries Beard) கதர் கிராமத் தொழில் திட்டங்களை நிறைவேற்றுவதற்கென, கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு, (Khadi and Village Industries Commission) கடன்கள் மானியங்களை அளித்து இவ் வாரியத்திற்கு உதவுகிறது. இந்த வாரியம் ஈடுபடும் வணிகமல்லாத பணிகளால் விளையும் இழப்பை ஈடு செய்ய, அடக்கச் செலவு மானியம் (net cost grant) மாநில அரசு வழங்கி உதவி செய்கிறது.

2. மேற்கண்ட திட்டங்கள் வாரியத்துறை பிரிவுகளாலும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் செயல்படுத்தப் படுகின்றன.

கதர் திட்டம்.

3. வாரியத்தின் பிரிவுகளாலும் கூட்டுறவுச் சங்கங்களினாலும் கதர் உற்பத்தி செய்யப்படுகிறது. பட்டு மூலப் பொருள் வாங்கி அதனைக் கொண்டு வாரியம் கதர் பட்டு துணி உற்பத்தி செய்கிறது. கிஸான் நூல் மற்றும் அம்பர் நூல் நூற்பாளர்களிடமிருந்து வாரியத்தால் வாங்கப்பட்டு நெய்வோர்களுக்கு கதர்த் துணி நெய்ய வழங்கப்படுகிறது. வாரத்திற் கொருமுறை துணி பெறப்பட்டு நெய்வோருக்கு கூலி வழங்கப்படுகிறது. வாரியத்தின் கீழ் செயல்படும் உற்பத்தி நிலையங்களில் 303 நிலையங்கள் கிராம நூற்பு நிலையங்களாகும். (Rural Textile Centre). இவை 6, கதிர் ராட்டை கொண்டு நூல் உற்பத்தி செய்கின்றன. தற்போது இந்நிலையங்களின் மூலம் 12,478 நூற்பாளர்களுக்கு வேலை கிடைக்கிறது. நாளொன்றுக்கு சராசரியாக ரூ. 2-50

முதல் ரூ. 3 வரை ஊதியம் இங்கு வேலை செய்யும் தொழிலாளிகட்கு கிடைக்கிறது.

4. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் துணி சென்னை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சியிலுள்ள நான்கு காதி கிராப்ட் என்ற பெரிய விற்பனை நிலையங்கள் உட்பட மாநில முழுதும் பரவியுள்ள 155 விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது. 1975-76, 1976-77-ம் ஆண்டுகளில் முறையே ரூ. 355.04 லட்சங்கள், ரூ. 405.55 லட்சங்கள் மதிப்புள்ள கதர் விற்பனை ஆகியது. 1976-77-ல் உற்பத்தி ரூ. 380.93 லட்சங்களாகும். 1977-78-ன் உற்பத்தி மதிப்பு ரூ. 460 லட்சங்கள் ஆக இருக்கும்.

5. 1977-ம் ஆண்டில் தீபாவளி, பொங்கல் நாட்களில் செய்யப்பட்ட கதர் விற்பனைக்கு சென்ற ஆண்டைப் போல தமிழ்நாடு அரசு 5 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி வழங்க இசைந்துள்ளது. இது வாரியத்தில் அளிக்கப்படும் தள்ளுபடிக்கு கூடுதலாகும். கதர் விற்பனை நிலுவையிலிருந்து 1975-76-ம் ஆண்டின் கதர் விற்பனைக்கான சிறப்பு தள்ளுபடி உட்பட ரூ. 8.67 லட்சங்கள் அரசிடமிருந்து கதர் விற்பனை சிறப்பு தள்ளுபடியாக 1976-77-ம் ஆண்டில் பெறப்பட்டது. 1976-77-ல் தமிழ்நாட்டிலுள்ள எல்லா கதர் சங்கங்கள் சிறப்பு விற்பனை காலத்தில் செய்த கதர் விற்பனைக்கும் அரசு 5 விழுக்காடு சிறப்பு தள்ளுபடி அனுமதித்தது. கதர் திட்டங்கள் நூற்போர், நெய்வோர், பஞ்சு பிரிப்போர், சாயமிடுவோர், சலவை செய்வோர், தையற்காரர் போன்ற ஏறக்குறைய ஒரு லட்சம் பேருக்கும் (முழு நேரம் மற்றும் பகுதி நேரம் உட்பட) வேலை வாய்ப்பு அளிக்கின்றது. 1976-77-ல் ரூ. 162.72 லட்சங்கள் இவர்கட்கு ஊதியமாக வழங்கப்பட்டது.

6. இம் மாநிலத்திலுள்ள விற்பனை கிடங்குகளிலும், விற்பனை பெரு நிலையங்களிலும் எளிதில் விற்பனையாகக் கூடிய துணிகளை உற்பத்தி செய்வதும், இயலக்கூடிய வரையில் பிற நிலையங்களிலிருந்தும், வெளி மாநிலத்திலிருந்தும் கொள்முதல் செய்வதைக் குறைப்பதும் வாரியத்தின் கொள்கையாகும்.

7. பஞ்சை அடித்து பிரிக்கும் முறையில் மேலும் முன்னேற்றம் செய்வதன் மூலம் தரமான நூலை உற்பத்தி செய்து நூற்போர், நெய்வோர் ஆகியோருக்கு அதிக கூலி பெறச் செய்ய திருப்பூரில் ஒரு மத்திய சிலைவரி (Slivery) நிலையம் ஏற்படுத்துவது அவசியமாகிறது. இந்த பிரிவில் இயந்திரங்கள் மூலம் பஞ்சு பிரித்து அடிக்கப்பட்டு லாபகரமான முறையில் தரமான நூல் உற்பத்தி செய்யலாம். இந்த திட்டத்தைச் செயல்படுத்த மாநில அரசு ரூ. 2.70 லட்சங்கள் மானியமாக வாரியத்திற்கு அளித்துள்ளது.

[1977 ஆகஸ்ட் 17

கிராமத் தொழில்கள்.

8. கிராமங்களிலே நிலவும் ஏழ்மையை விரட்டி, ஆள் பலத்தையும் பொருட்களையும் கையாண்டு, மக்களுக்கு, சிறப்பாக கிராமப்புற மக்களுக்குத் தேவையான பொருட்கள் வழங்குவதற்கென்றே கிராமத் தொழில்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

9. துறை மூலமாகவும், தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாகவும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்கள் வாரியம் கீழ்க்கண்ட கிராமத் தொழில்கள் திட்டத்தை நிறைவேற்றுகிறது :—

1. பனை வெல்லம்.
2. எண்ணெய் உற்பத்தி.
3. கைக்குத்தல் அரிசி.
4. தோல் பதனிடுதல்.
5. மட்பாண்டங்கள், செங்கல் மற்றும் ஓடுகள்.
6. சுண்ணும்பு, சுண்ணும்புக்காளவாய்.
7. தேனீ வளர்ப்பு.
8. தச்சு, கருமார் தொழில்.
9. பழங்கள் பதனிட்டு பாதுகாத்தல்.
10. கையால் செய்யப்படும் தாள்.
11. தீக்குச்சி.
12. வெல்லம், கந்தசாரி சர்க்கரை.
13. சமையலுக்கு பயன்படா எண்ணெய், சவுக்காரம்.
14. நார்.
15. கிராமப் பொருட்கள் விற்பனை நிலையம்.
16. பிரம்பு, மூங்கில்.

10. கதர் கிராமத் தொழில்கள் ஆணைக்குழுவிடமிருந்து கிடைக்கும் உதவியின் அளவைக் கொண்டு மாநில அளவில் கிராமத் தொழில்கள் திட்டம் வரையறுக்கப் பெறுகிறது. சிறப்பு திட்டங்களுக்காக குறுகிய கால கடன்கள் மாநில அரசினால் வழங்கப்படுகிறது.

1977 ஆகஸ்ட் 17]

11. 1976-77-ம் ஆண்டு இறுதியில் துறைகளைச் சேர்ந்த 818 பிரிவுகளும் 3,098 தொழிற் கூட்டுறவுகளும் இருந்தன. கிராமத் தொழில்கள் உற்பத்தி செய்த பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 1,470·54 இலட்சங்களாகும். இப் பொருட்களை விற்றதனால் கிடைத்த தொகை ரூ. 1,662·75 இலட்சங்கள். இத் தொழில்களில் ரூ. 611.32 இலட்சம் ஊதியமாக 2.46 இலட்சம் பேர்களுக்கு அளிக்கப்பட்டது.

வறட்சி நிவாரண திட்டம்.

12. திருநெல்வேலி மாவட்டத்தில் ஏற்பட்ட வறட்சியினால் பாதிக்கப்பட்டு வேலை இழந்த பனைமரத் தொழிலாளர்களின் நிவாரண பணிக்கென தமிழ்நாடு அரசு ரூ. 5.57 லட்சங்கள் (ரூ. 1.27 லட்சம் மானியம் ரூ. 4.30 லட்சம் கடன்) அளித்துள்ளது. இந்த மானியம் 4 லட்சம் பனை விதைகளை பனைத் தொழிலாளர் அவரவர்கள் நிலத்தில் விதைப்பதற்காக விநியோகிக்கவும் 20 நார்ப் பயிற்சி நிலையங்கள் நிறுவவும் அளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலையமும் 20 கைவினைஞர்களுக்கு மூன்று மாத பயிற்சி அளிக்கும். பயிற்சி பெறுவோர்க்கு ரூ. 60 பிரதி மாதமும் உதவித் தொகையாக வழங்கப்படும்.

கடன் தொகையான ரூ. 4.30 லட்சம் கீழ்க்கண்ட வகைக்கு அளிக்கப்பட்டுள்ளது:—

	ரூபாய்
1. மூலப் பொருட்கள் வாங்க ஒரு நிலையத்திற்கு ரூ. 9,000 வீதம் 20 நார் பயிற்சி நிலையங்களுக்கு நடப்பு மூலதன கடன்	1,80,000
2. ஐம்பது பனை ஓலை கொள்முதல் மற்றும் முடையும் நிலையங்கள் நிறுவ ஒன்றுக்கு ரூ. 5,000 வீதம் நடப்பு மூலதனக் கடன் ..	2,50,000
மொத்தம்	4,30,000

பழங்குடியினர் முன்னேற்றத் திட்டம்.

13. பழங்குடியினர் முன்னேற்றத்திற்காக அரசு ஒரு புது முன்னேற்றத் திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பழங் குடியினருக்கு 10

தேன் கூடுகள் வழங்கப்படும். இவை தவிர ஒவ்வொரு வருக்கும் 10 தேனீ காலனிகள், தேன் பிழியும் கருவி, புகைக் கருவி ஆகியவையும் அளிக்கப்படும்.

14. 1976-77-ம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட நிதியுதவி விவரம் வருமாறு :—

பழங்குடி பிரிவு பெயர்.		அனுமதிக்கப்பட்டத் தொகை.
		ரூ.
கல்ராயன் மலை ..	100 விழுக்காடு மானியம்	19,725
சிட்டேரிமலை	50 விழுக்காடு மானியம்	8,200
ஜவ்வாது மலை	50 விழுக்காடு மானியம்	50,000

இவற்றிற்காக பழங்குடி பிரிவுகளை கண்டுபிடித்தல், போக்கு வரத்து தொழில் நுட்ப பயிற்சி, பூவில்லா பருவங்களில் தேனீ மாற்றும் வேலை மற்றும் இதர உபரி செலவினங்கள் ஆகிய செலவுகள் ஏற்படும். பத்து தேன் கூடுகள் அடங்கிய ஒரு பிரிவிற்காகும் மொத்த செலவு ரூ. 700 ஆக இருக்கும். எனவே, கூடுதல் நிதி உதவி கோரி அரசு அனுகப்பட்டிருக்கிறது.

மலைப்புற முன்னேற்றத் திட்டம்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் மலைப்புற முன்னேற்ற திட்டத்திற்காக மத்திய அரசு இரண்டு திட்டங்களை வாரியம் மூலம் நடத்த அனுமதித்துள்ளது. இதன் பொருட்டு 1975-76-ம் ஆண்டில் ரூ. ஏழு லட்சம் (ரூ. 3.5 லட்சம் மானியம், ரூ. 3.5 லட்சம் கடன்) அரசிடமிருந்து பெறப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் சிறிய நில உரிமையாளர், சிறிய விவசாயிகள், ஏழை தொழிலாளர்கள் போன்றோர்களுக்கு தேன் கூடுகள், தேன் காலனிகள் மற்றும் இதர உபகரணங்கள் வழங்கப்படும். தேர்ந்தெடுக்கப் பட்ட நபர்கட்கு, அவசிய எண்ணெய் பிழிவதற்கான ஆலைகள் வழங்கப்படும். 1977-78-ம் ஆண்டிலும் வாரியத்தால் இந்த திட்டம் தொடர்ந்து நடத்தப்படும்.

இதர சிறப்புத் திட்டங்கள்.

17. கிராமப் புற மக்களின் முன்னேற்றத்தில் பங்கு கொண்டு ஏழை எளிய மக்களின் நல்வாழ்வுக்கு ஏற்றமளிக்கும் வகையில் வாரியம் கீழ்க்கண்ட சமூக நல திட்டங்களை செயலாற்றி வருகிறது :—

1. உடல் ஊனமுற்றோர்க்கு பயிற்சியளித்தல்.

2. தொழு நோய்ப் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களில் கதர் கிராமத் தொழில் நிலையங்களை துவக்குதல்.

3. ஆதரவில்லாத கைம்பெண்கள், மற்றும் அனாதைகளை நூற்போராக சேர்த்துக் கொள்ளுதல்.

4. படித்து வேலையற்று இருப்போர், பரம்பரை கைவினைஞர்கள் முதலியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் அரசின் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் திட்டத்தின்கீழ் புதிய கிராம நூற்பு நிலையங்கள் அமைத்தல் தேவையான நிதியுதவி வங்கிகளினாலும் தொழில் நுட்ப ஆலோசனை வாரியத்தினாலும் தொழில் வினைஞர்களுக்கு வழங்கப்படுகிறது.

வாரியத்தின் நிதி நிலை.

18. அரசு நிதி அறிக்கையைத் தயாரிக்கும் முறையைப் போன்றே தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியமும் (1) கதர் நிதி (2) கிராமத் தொழில்கள் நிதி ஆகிய தலைப்புகளில் நிதி அறிக்கைகளைத் தயாரித்து இரண்டு வேறுபட்ட கணக்குகளில் செயல்படுகிறது.

19. மத்திய அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டபடி அனைத்திந்திய கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இவ்வாரியத்திற்குப் பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவதற்காக அதன் உதவி முறைப்படி நிதியுதவி அளித்து வருகிறது. தமிழ்நாடு அரசு இவ்வாரியத்தின் வணிக முறையல்லாத செயல்களில் வரவுக்கும் செலவுக்கும் உள்ள வித்தியாசத் தொகையை மானியமாக அளித்து வருகிறது.

20. வாரியத்தின் நிதி நிலை மற்றும் திட்ட மதிப்பீடு விவரம் (1) கதர் நிதி (2) கிராமத் தொழில்கள் நிதி என்ற இரண்டு பிரிவுகளின்கீழ் இணைக்கப்பட்டுள்ள தாளில் கொடுக்கப்பட்டுள்ளது.

இணைப்பு.

1. கதர் நிதி.

கணக்கு தலைப்பு. (1)	கணக்குகள், 1975-76. (2)	திட்ட மதிப்பீடு, 1976-77. (3)	திருத்திய மதிப்பீடு, 1976-77. (4)	நிதிநிலை திட்ட மதிப்பீடு 1977-78. (5)
	(ரூபாய் இலட்சத்தில்.)			
ஆரம்ப இருப்பு	25.62	128.33	(—) 13.41	(—) 67.90
I. வருவாய் கணக்கு—				
(i) கதர் கிராமத் தொழில் ஆணை குழுவிடமிருந்து மானியம்.	22.73	35.27	62.91	61.00
(ii) மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மானியம்.	38.00	34.50	54.54	31.52
(a) மாநில அரசிடமிருந்து பெறப்படும் வட்டி தொகை.	..	..	..	..
(iii) துறைமூலம் கிடைக்கும் வருவாய்.	401.55	448.60	347.44	374.13
திருப்பி அனுப்பப்பட்ட தொகை (—)கழிக்கவும்.	(—)0.85	(—)0.01	(—)0.05	(—)0.01
II. வாரியத்தினுல் அளிக்கப்படும் கடன்கள்.	9.68	6.74	9.10	10.61
III. கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு மாநில அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன் தொகைகள்	90.33	62.44	82.91	79.16
IV. வைப்புத் தொகையும் கடன்களும்	16.27	14.01	16.90	14.41
V. ஒதுக்கீடுயில்லாக் கடன் ..	27.43	21.90	28.40	28.90
VI. தற்காலிக கடன் கணக்கு ..	0.20	..	..	..
மொத்தம்	630.96	751.78	588.74	531.82
செலவினம்—				
I. வருவாய் கணக்கு	581.31	593.92	594.47	583.85
II. மூலதனக் கணக்கு	4.24	0.30	6.81	1.00
III. வாரியத்தினுல் அளிக்கப்படும் கடன்கள்	15.54	10.06	10.77	6.57
IV. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு மாநில அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன் தொகைகள்	1.80	10.57	3.48	15.71

கணக்கு தலைப்பு.	கணக்குகள் 1975-76.	திட்ட மதிப்பீடு 1976-77.	திருத்திய மதிப்பீடு 1976-77.	நிதிநிலை திட்ட மதிப்பீடு 1977-78.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் லட்சத்தில்.)			
V. வைப்புத் தொகையும் கடன்களும்	15.91	15.01	17.11	13.91
VI. ஒதுக்கீடுயில்லாக் கடன் ..	25.37	19.51	24.00	23.01
VII. தற்காலிகக் கடன்	0.20	..	..	..
முடிவு இருப்பு	(—)13.41	102.41	(—)67.90	(—)112.23
மொத்தம்	630.96	751.78	588.74	531.82

இணைப்பு.

2. கிராமத் தொழில்கள் நிதி.

கணக்கு தலைப்பு.	கணக்குகள், 1975-76.	திட்ட மதிப்பீடு, 1976-77.	திருத்திய மதிப்பீடு, 1976-77.	நிதிநிலை திட்ட மதிப்பீடு, 1977-78.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் லட்சத்தில்.)			
ஆரம்ப இருப்பு	154.68	156.50	105.96	149.80
I. வருவாய்க் கணக்கு—				
(i) கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து மானியம் ..	8.57	13.62	25.85	11.10
(ii) மாநில அரசிடமிருந்து கிடைக்கும் மானியம்	30.25	26.54	28.57	27.49
(iii) மாநில அரசிடமிருந்து பெறப்படும் வட்டித் தொகை ..	0.49	0.23	0.07	0.11

கணக்கு தலைப்பு.	கணக்குகள், 1975-76.	திட்ட மதிப்பீடு, 1976-77.	திருத்திய மதிப்பீடு, 1976-77.	நிதிநிலை திட்ட மதிப்பீடு, 1977-78.
(1)	(2)	(3)	(4)	(5)
	(ரூபாய் லட்சத்தில்.)			
(iii) ஆணைமூலம் கிடைக்கும் வருவாய்	145.66	156.84	150.53	151.48
(iv) திருப்பி அளிக்கப்பட்ட தொகை கழிக்கவும்	(—)0.37	(—)0.01	(—)4.00	(—)0.01
II. வாரியத்தினால் அளிக்கப்படும் கடன்கள்	25.91	37.31	26.82	27.57
III. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு மாநில அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன் தொகைகள் ..	64.96	57.62	44.86	64.19
IV. அரசு தற்காலிக கணக்கு ..	4.14	0.51	3.01	3.01
மொத்தம் ..	434.65	449.16	481.47	434.69
செலவினம்—				
I. வருவாய்க் கணக்கு	184.81	207.91	210.57	204.76
II. வாரியத்தினால் அளிக்கப்படும் கடன்கள்	29.41	85.70	94.18	112.38
III. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு மாநில அரசு மற்றும் வங்கிகளிடமிருந்து பெறப்படும் கடன் தொகைகள்	10.48	16.65	23.91	22.91
IV. அரசின் தற்காலிக கணக்கு ..	3.99	0.51	3.01	3.01
முடிவு இருப்பு	205.96	138.39	149.80	91.63
மொத்தம்	434.65	449.16	481.47	434.69

இணைப்பு V.

[609-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கைத்தறிகள் பஞ்சாலைகள்.

ஆய்வுரை.

(1976-77)

தோற்றுவாய்—இன்றியமையாக் கூறுகள்.

1976-77ஆம் ஆண்டு பஞ்சாலைத் தொழிலுக்கு ஏற்பட்ட சோதனை கைத்தறி மற்றும் துணி நூல் தொழிற்சாலைகளை மிகவும் பாதித்தது. கைத்தறித் துணிகளில் இருப்புத் தேக்கத்தினால் கைத்தறித் தொழில் கடுமையாக பாதிக்கப் பட்டது. கடந்த ஆண்டின் கடைசி மூன்று மாதங்களின் போது, பருத்தி நூல், செயற்கைப் பட்டு நூல் இவற்றின் விலைகள் ஒரேயடியாக உயர்ந்ததால் நிலைமை மிகவும் மோசம் அடைந்தது. இந்த ஆண்டில் புதிதாக 119 நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன. தனிப்பட்ட தறிகள் உரிமையாளர்களின்கீழ் வேலை பார்த்து வந்த 37,416 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இதன் விளைவாகக் கூட்டுறவுத் துறையில் உற்பத்தி கணிசமான அளவிற்கு உயர்ந்தது. ஆனாலும், துணி விற்பனையில் கடுமையான தேக்க நிலை காணப் பட்டது. 1976-77-ல் தீபாவளி, பொங்கல் போன்ற பெரிய விழாக் காலங்களில் கூட, மாநிலத்திற்குள்ளும் துணி விற்பனை குறைவாகவே இருந்தது; அது போல, மற்ற மாநிலங்களிலிருந்து வந்து மொத்த அளவில் துணிகளை வாங்கிச் செல்வோரும் மிகக் குறைந்த அளவே கொள்முதல் செய்தனர். 1975-76 ஆம் ஆண்டில் மேற் சொன்ன இரு பண்டிகைக் காலங்களின் போதும், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனமும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களும் மொத்தம் 29.98 கோடி ரூபாய்க்குத் துணி விற்பனை செய்திருந்தன. ஆனால் அவை 1976-77-ல் அதே பண்டிகைக் காலங்களில் மொத்தம் ரூ. 16.60 கோடி மட்டுமே விற்பனை செய்திருந்தன. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நடைமுறை நிதி பெரும்பாலும் குவிந்த இருப்புகளில் முடக்கப்பட்டுவிட்டதால், அச்சங்கங்கள் தங்கள் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலையளிக்க இயலவில்லை. மத்திய அரசிடமிருந்து ரூ. 3 கோடி கடன் பெற்று அத்தொகை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு (கோ-ஆப்டெக்ஸ்) வழிவகை முன்பணமாக வழங்கப்பட்டது. கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம், இந்தக் கடன் தொகையுடன் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிடமிருந்து ஒரு கோடி ரூபாய்

சிறப்புக் கடன் பெற்று நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து அவற்றின் மொத்த துணித் தேக்கத்தின் ஒரு பகுதியை கொள்முதல் செய்து, அவற்றுக்கு முன் சேர வேண்டிய தொகையையும் அளித்தது. தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கிய தள்ளுபடி குறித்து அவற்றிற்கு சேரவேண்டிய தொகைகள் அளிப்பதற்காக, வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 200 இலட்ச ரூபாய்க்கும் கூடுதலாக 153.33 இலட்ச ரூபாயை வழங்க மாநில அரசு அனுமதித்துள்ளது. இந்தக் கூடுதல் உதவித் தொகை வழங்கப்பட்டதன் காரணமாக கூட்டுறவுச் சங்கங்கள், இந்த நெருக்கடியான சூழ்நிலையை சமாளித்தன. குவிந்துள்ள இருப்பை விற்பனை செய்ய, கைத்தறித் துணிகள் விற்பனையில் 20 சத வீதம் சிறப்புத் தள்ளுபடியை (இந்தத் தள்ளுபடித் தொகையை மைய அரசும், மாநில அரசும் பகிர்ந்து கொள்ளும்) 1977 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9 ஆம் நாள் முதல் இரண்டு திங்களுக்கு வழங்க அனுமதிக்கப்பட்டது. இந்த இரண்டு திங்களில், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள், கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவை 18 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்தன. இந்த நிவாரணப் பணிகளினால் கூட்டுறவு கைத்தறித் தொழிலில் நிலவிய கடுமையான நிலை ஓரளவு குறைந்தது. இந்திய ரிசர்வ் வங்கி நெசவாளர் சங்கங்களுக்கு ரொக்கக் கடன்களை வழங்குவது குறித்து விதிகளை எளிதாக்கியது, நடப்பு ஆண்டில் குறிப்பிடத்தக்க அம்சமாகும். ஒரு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு அனுமதிக்க தக்க கடன் வரம்பு அதன் ஆண்டு உற்பத்தி மதிப்பில் 25 சத வீதத்திலிருந்து 33 1/3 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. 1976-77ஆம் ஆண்டில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கும், தொடக்க சங்கங்களுக்கும் இந்திய ரிசர்வு வங்கி ரூ. 1,834 இலட்சம் வழங்க அனுமதித்துள்ளது. ஆனால், 1975-76ஆம் ஆண்டில் இவற்றுக்கு ரூ. 1,307 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டது.

நெசவாளர்களின் பணிநிலை, அவர்களது ஊதியம் ஆகியவற்றை ஆய்தல், பணிப் பாதுகாப்பு, ஊதியம், ஊதிய கொடை, வருங்கால வைப்பு நிதி, மற்ற வசதிகள் ஆகியன தொடர்பாக அவர்களது நலன்களை பாதுகாக்க பரிந்துரை செய்தல் ஆகிய பணிகளுக்காக, மாநில அரசு, ஒரு குழுவை அமைத்துள்ளது. இக் குழு அளித்துள்ள அறிக்கை பரிசீலனையில் உள்ளது.

பஞ்சாலைத் தொழிலைப் பொறுத்தவரை, மாநிலத்திலுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள், பருத்தி விலைக்கும், நூல் விலைக்கும் இடையே சமன்பாடு இல்லாத காரணத்தால், தொடர்ந்து பண இழப்பை அடைந்துள்ளன. இருப்பினும் 1976-77 நடப்பு நிதியாண்டில் கடைசி மூன்று திங்கள் கால அளவில்

நிலைமையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பருத்தியின் விலை மட்டும் உயர்ந்து அதற்கு நிகராகப் பருத்தி நூலின் விற்பனை விலை உயராத காரணத்தால் ஏற்பட்ட பிரச்சினை தொடர்ந்து இத் தொழிலை வாட்டி வந்தது. இதனால், மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் பாதிக்கப்பட்டது மட்டுமின்றி, பஞ்சாலைத் தொழில் முழுவதுமே பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாகத் தனிப்பட்ட சில பஞ்சாலைகள் மூடப்பட்டன. பஞ்சாலைத் தொழிலுக்கு ஏற்பட்ட நெருக்கடி பற்றிய காரணங்களைக் கண்டறியும் பொருட்டு மாநில அரசு வல்லுநர் குழு ஒன்றை அமைத்தது. இக் குழு மாநிலத்தில் ஒவ்வொரு ஆலைக்கும் தனித்தனியே சென்று பார்வையிட்டு, இத் தொழிலுக்கு ஏற்பட்ட பிரச்சினை குறித்து ஆய்வு செய்து தகுந்த பரிந்துரைகளையும் அளிக்கும். மத்திய அரசும், இந்நோக்கத்திற்காகவே ஒரு குழுவை அமைத்துள்ளது. பஞ்சாலைகள் குறித்த கூட்டு ஆணையாளர் இதன் தலைவராவார். இரண்டு குழுக்களும் மிக்க இடர்பாட்டிற்கு உள்ளாகியுள்ள தனிப்பட்ட ஆலைகளின் பிரச்சினைகளை ஆய்ந்தன. அக்குழுக்களின் பரிந்துரையின்பேரில் நிதியுதவி வங்கிகள் வழங்கும் கடனுதவியால் அப்பஞ்சாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இவ்வாறு நிதியுதவி வங்கிகள் அளித்த கடன்களுக்கு, மாநில அரசு, மேற்கூறிய ஆலைகளில் ஐந்திற்கு உத்திரவாதப் பத்திரங்களை அளித்துள்ளது.

பின்வரும் பிரிவுகளில் சில பெரிய கைத்தறி மற்றும் பஞ்சாலை தொழிற்சாலைகளின் முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை கொடுக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுத் துறையின் கீழ் வந்துள்ள கைத்தறி நெசவாளர்கள்.

இம் மாநிலத்தில் மொத்தம் 5.56 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் ஏறத்தாழ 1.80 இலட்சம் கைத்தறிகள் 872 நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளன. கூட்டுறவுத் துறையின்கீழ் கூடுதலாகக் கைத்தறிகளைக் கொண்டுவரும் திட்டத்தின்படி, இரண்டு, மூன்றாண்டு காலத்திற்குள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின்கீழ் இம்மாநிலத்திலுள்ள மொத்த கைத்தறிகளில் 60 சதவீதத்தைக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது. கூட்டுறவுத் துறையின் கீழுள்ள 1.80 இலட்சம் கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி துணியின் மொத்த மதிப்பு ஆண்டொன்றுக்குத் தோராயமாக ரூ. 40 கோடி அளவுக்கு உள்ளது. நெசவாளர்களின் முறையான வளர்ச்சிக்கு உறுதி செய்வதற்கு கூட்டுறவுத் துறையே மிகச் சிறந்த நிர்வாக அமைப்பினைக் கொண்டுள்ளதால், மேலும் மேலும், அதிக அளவில்

நெசவாளர்களைக் கூட்டுறவுத் துறையின் கீழ்க் கொண்டு
வரவும், இந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக
கைத்தறி வளர்ச்சி குறித்த பல்வேறு திட்டங்களைச் செயற்
படுத்தவும் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்
காக நிறைவேற்றப்பட்ட சில இன்றியமையாத கைத்தறி
வளர்ச்சி திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

(அ) நெசவாளர், ஏற்கனவே உள்ள அல்லது
புதிய நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர உதவும்
வகையில் அவர்களது தொடக்க பங்கு மூலதனத்திற்காக
ஆளொன்றிற்கு 100 ரூபாய் வரை அவர்களது கடன்
உதவித் தொகை வழங்கப்படுகிறது. இந்த வகையில்
அவர்களுக்கு 1976-77ஆம் ஆண்டில், ரூ. 14 இலட்சம்
வழங்கப்பட்டுள்ளது. இதில் இந்திய அரசு இணைமானிய
அடிப்படையில் ரூ. 7 இலட்சம் கொடுத்துள்ளது. இந்தத்
தொகையோடு, வணிக வங்கிகளிலிருந்து பெற்ற 36
இலட்ச ரூபாய் நிதியுதவியையும் கொண்டு 1976-77ஆம்
ஆண்டில், 37,416 நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கங்
களில் சேர்ந்துக் கொள்ளப்பட்டனர். புதிதாக 119
நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
எதிர்வரும் சில ஆண்டுகளில் மொத்தமுள்ள கைத்தறி
நெசவாளர்களின் எண்ணிக்கையில் கூட்டுறவுச் சங்கங்களில்
சேர்க்கப்பட்ட கைத்தறி நெசவாளர் எண்ணிக்கை 60
சதவீதமாக உயரும் வரை, ஒவ்வொரு ஆண்டிலும் 30,000
நெசவாளர்களைக் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கத்
திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) மூன்று ஆண்டுகளில் மொத்தம் 11,000 தறிகளை
உள்ளடக்கும் வகையில் நடப்பு ஆண்டில் கரூரில்
ஓர் ஏற்றுமதிக் கைத்தறித் துணி உற்பத்தித் திட்ட
மொன்றும் காஞ்சிபுரத்திலும், ஈரோட்டிலும் இரண்டு தீவிர
கைத்தறி வளர்ச்சித் திட்டங்களும் தொடங்கப்
பட்டுள்ளன. இத்திட்டங்கள் பற்றிய விவரங்கள் ஏழாம்
பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளன.

(இ) சொந்தமாக கைத்தறி வைத்திருக்காத நெசவா
ளர்கள் பயன்பெறுவதற்காக இரண்டு அல்லது மூன்று
ஆண்டு காலத்திற்குள் 50 நெசவாளர் தொழிற் கூட்டு
றவுச் சங்கங்களை அமைக்கக் கருதப்பட்டுள்ளது. 1976-77
ஆம் ஆண்டில், அப்படிப்பட்ட மூன்று சங்கங்கள் மொத்தம்
ரூ. 10 இலட்சம் நிதி ஒதுக்கீட்டுடன் தொடங்கப்
பட்டுள்ளன. இந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் தருமபுரி,
இராமநாதபுரம், மதுரை ஆகிய இடங்களில் சொந்தத்தில்

தறி வைத்திருக்காத 300 நெசவாளர்களுக்கு வேலை கொடுக்கும் பொருட்டுத் தொடங்கப்பட்டுள்ளன.

(ஈ) மத்திய அரசு மலிவு விலைத் துணி திட்டத்தின்கீழ் வேட்டிகளையும் சேலைகளையும் உற்பத்தி செய்ய அங்கீகரித்துள்ளது. இவ்வகைத் துணிகளை உற்பத்தி செய்வதில் சுமார் 5,000 தறிகள் ஈடுபட்டுள்ளன. 17 மில்லியன் மீட்டர் குறியீட்டில் சுமார் 6 மில்லியன் மீட்டர்கள் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மத்திய அரசு ஒரு சதுர மீட்டருக்கு ஒரு ரூபாய் வீதமாக மலிவு விலைத் துணிகளை உற்பத்தி செய்து விநியோகிப்பதற்கு ரூ. 37 இலட்சம் முன் மானியமாக இம்மாநிலத்திற்கு வழங்கியுள்ளது.

(உ) கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் பணிபுரியும் கைத்தறி நெசவாளர்களின் நலனை முன்னிட்டு ''கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சேமிப்பு-பாதுகாப்புத் திட்டம்'' என்ற ஒரு திட்டம் 15—11—1975 ஆம் நாளில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், உறுப்பினர் ஒருவர் இறக்க நேர்ந்தால் அவரது நியமனதாரர், குறைந்தளவு ரூ. 500 காப்பீட்டுத் தொகையோடு, உறுப்பினரது பங்குத் தொகையையும், அரசு வழங்கும் பங்குத் தொகையையும் பெறுவார். இத் திட்டத்தின்கீழ் உறுப்பினராயுள்ள நெசவாளர்கள் தங்கள் ஊதியத்தில் 6 சதவீதத்தைப் பங்குத் தொகையாகத் தரவேண்டும். உறுப்பினர்கள் அளிக்கும் பங்குத் தொகை மொத்தமும் அரசு நிதியோடு சேர்க்கப்படுகிறது. இத்தொகைக்கு அரசு 7 சதவீதம் வட்டி அளிக்கிறது. இதுவரை 57,000 நெசவாளர்கள் இப்புதிய திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட கைத்தறி வளர்ச்சித்திட்டங்கள் யாவும் மத்திய மாநில அரசுகள் நேரடியாக அளிக்கும் நிதியுதவியைக் கொண்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவை தவிர கீழ்க்காணும் கூடுதலான திட்டங்கள் புதுடில்லியிலுள்ள தேசீய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெற்று, நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

(அ) ஒன்பது கூட்டுறவு நூற்பு ஆலைகளை ரூ. 175.65 இலட்சம் நிதியுதவியுடன் ஒவ்வொன்றும் 25,000 நூற்புக் கதிர்களைக் கொண்டவையாக இருக்கும் வகையில் விரிவுபடுத்துதல்.

(ஆ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் 40 இலட்ச ரூபாய் செலவில், சென்னை, மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் மூன்று ஆயத்த ஆடை தயாரிக்கும் நிலையங்களை அமைத்தல் (இதுவரை தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ. 26.49 இலட்சம் வழங்கி அனுமதியளித்துள்ளது.)

(இ) தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து 60 இலட்ச ரூபாய் நிதியுதவி பெற்று 5 நவீன வண்ணந் தோய்க்கும் நிலையங்களை ஈரோட்டில் தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு நெசவு செய்யும் முறை நிறுவுதல்.

(ஈ) ரூ. 22.50 இலட்சம் செலவில் தமிழ்நாடு கூட்டுறவுத் துணி தயாரிக்கும் ஆலையின் தயாரிப்பு முறைகளை விரிவுபடுத்துதல்.

(உ) கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனை நடவடிக்கைகளை விரிவு படுத்த உதவும் வகையில் அதற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூ. 50 இலட்சம் ஒதுக்கித் தருதல். தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் இதுவரை 20 இலட்சம் ரூபாய் அனுமதித்துள்ளது.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

''கோ-ஆப்டெக்ஸ்'' என்று அழைக்கப்படும், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஒரு தலைமை அமைப்பாகும். இத்துடன், நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இணைக்கப்பட்டுள்ளன. நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவைப்படும் மூலப்பொருள்களை வாங்கி அவற்றுக்கு வழங்குவதும், விற்பனைக்காக, நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களால் தயாரிக்கப்பட்ட கைத்தறித் துணிகளை வாங்குவதும் இச் சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த மாநிலத்தில் நெசவாளர் வாழும் முக்கிய இடங்களில் இது 18 நூல் கிடங்குகளை நிறுவியுள்ளது. மாநிலத்தில் செயல்படும் 12 கூட்டுறவு நூற்பு ஆலைகளில் தயாரிக்கப்படும் நூல் இதனால் வாங்கிச் சேமிக்கப்பட்டு நெசவாளர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. கோ-ஆப்டெக்ஸ் இந்த மாநிலத்தின் 226 இடங்களில் விற்பனை நிலையங்களையும், மற்ற மாநிலங்களில் 97 விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது. இதோடு மட்டுமில்லாமல், தரகு அடிப்படையில் கைத்தறிப் பொருட்களை நம்பகமாக விற்பனை செய்யும் 200 தனிப்பட்ட வியாபாரிகளும், இவற்றை விற்க நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போதைய ஏற்பாட்டினால், ஆண்டொன்றுக்கு 19 கோடி ரூபாய் மதிப்புள்ள கைத்தறிப் பொருட்களை செய்து முடிக்கும் ஆற்றலை கோ-ஆப்டெக்ஸ் பெற்றுள்ளது.

மொத்த நெசவாளர்களில் 60 சதவீதம் பேர் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டால் கூட்டுறவு பிரிவில் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு

ரூ. 80 கோடி வரை உயரும். அப்போது, தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த உற்பத்தியில் 50 சதவீதத்தைக் கொள்முதல் செய்யும். தற்போதைய அளவை நிலை நிறுத்த ஆண்டொன்றுக்கு ரூ. 50 கோடி மதிப்புள்ள இருப்பை கோ-ஆப்டெக்ஸ் வைத்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு மிகப் பெரிய அளவில் வணிகத்தை கோ-ஆப்டெக்ஸ் செய்யும் வகையில் அது, தன் விற்பனை ஏற்பாடுகளை போதுமான அளவிற்கு வலுப்படுத்தும் வகையில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது. கீழ்க் கண்ட முக்கிய இனப் பணிகள் மேற்கண்ட நோக்கத்திற்காக, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூ. 133 இலட்சம் செலவில், மாநிலத் தலைநகரங்களிலும், தமிழ்நாடு மற்ற மாநிலங்களில் முக்கிய நகரங்களிலும் 100 காட்சி விற்பனைக் கூடங்களைத் திறத்தல். 30 புதிய காட்சி விற்பனைக் கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே உள்ள 18 காட்சி விற்பனைக் கூடங்கள் புதிதாக்கப்பட்டுள்ளன.

(ஆ) மொத்த விற்பனையை உயர்த்தும் வகையில், இந்த மாநிலத்திலும், மற்ற இடங்களிலும் உள்ள முக்கிய விற்பனை கையகங்களில் மொத்த விற்பனைக் கிடங்குகளைத் திறத்தல்.

(இ) இந்தியாவிலுள்ள ஏற்றுமதியாளர்களிடமிருந்து வரும் வர்த்தக விசாரணைகளைக் கவனிப்பதற்கும், ஏற்றுமதியை நெறிப்படுத்துவதற்கும் "அனைத்து நாட்டு கோ-ஆப்டெக்ஸ்" என்ற தனிப்பட்ட ஏற்றுமதிப் பிரிவை அமைத்தல்.

(ஈ) தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களைப் பல இடங்களுக்கு அனுப்பவும், ஏற்றுமதித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவற்றுக்கு உதவுதல், பாலிஸ்டர் கலப்புள்ள சேலைகளைத் தயாரிக்கவும், புதிய தினுசுகளை வழங்கவும் சித்திரப் பூ வேலை செய்வதற்குரிய அமைப்புடன் கூடிய தறி போன்ற வளர்ச்சியடைந்த கருவிகளை வழங்குதல்.

கைத்தறித் தொழிலுக்குத் தேவையான மூலப் பொருள்கள்.

(அ) பருத்தி நூல்.—தமிழ்நாட்டில், 12 கூட்டுறவு நூற்பு ஆலைகள் உட்பட மொத்தம் 212 பஞ்சாலைகள் உள்ளன. இந்த ஆலைகளில் திங்களொன்றுக்கு உற்பத்தி செய்யப்படும் மொத்த பருத்தி நூல் 75,000 பேல்களாகும். ஆனால், கூட்டுறவு, தனிப்பட்டோர் பஞ்சாலைகளில் கைத்தறித் தொழிலுக்குக் தேவைப்படக் கூடிய மொத்த நூல்

திங்களொன்றுக்குச் சுமார் 20,000 பேல்களாகும். இந்த மாநிலம் பருத்தி நூலை அதிகமாக உற்பத்தி செய்த போதிலும், பருத்தியைப் பெறுவதற்காகப் பெரிதும் மகாராட்டிரத்தையும், குஜராத்தையும் சார்ந்திருக்க வேண்டியுள்ளது. கடந்த சில திங்களில், பருத்தியில் சில ரகங்களின் விலை அதிகமானதன் காரணமாக, மாநிலத்திலுள்ள கூட்டுறவு நூற்பாலைகள் உட்பட எல்லாப் பஞ்சாலைகளுக்கும் நிறைய பண இழப்பும் நிதி நெருக்கடியும் ஏற்பட்டது. பருத்தி விலையைப் போதுமான அளவிற்குக் குறைக்க மாநில அரசு மைய அரசுடன் கலந்து ஆலோசித்தது.

கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினரல்லாத நெசவாளர்கள் தங்களுக்குத் தேவைப்படும் நூலை தனியார் ஆலைகளிலிருந்தும், நூல் விற்பனையாளர்களிடமிருந்தும் பெறுகின்றனர். அதிக விலையின் காரணமாக, அவர்கள் உற்பத்தி நிலையை ஒரே நிலையில் வைத்திருக்க தங்களுக்கு நியாயமான விலையில் கொடுக்க முறையிட்டுள்ளனர். தேசிய பஞ்சாலைக் கழகத்துடனும், தென்னிந்திய ஆலை உரிமையாளர் சங்க ஆலைகளுடனும் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டு, மாநிலத்தில் முக்கிய நெசவு நெய்யும் பகுதிகளில் தனியாக நூல் கிடங்குகளைத் திறக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

2. செயற்கைப் பட்டு நூல்.—தமிழ்நாட்டிலுள்ள நெசவாளர் ஒவ்வொருவருக்கும் திங்களொன்றுக்கு மொத்தத் தேவை 100 கிலோ கிராம் எடையுள்ள 5,000 பெட்டிகளாகும். நமது நாட்டிலுள்ள செயற்கைப் பட்டு நூல் நூற்பாலைகள் எட்டில், தென்னிந்திய விஸ்கோஸ் லிமிடெட் மட்டுமே தமிழ்நாட்டில் செயல்படும் நூற்பு ஆலையாகும். செயற்கைப் பட்டின் விலைகள், அதனை வழங்குதல் குறித்து எவ்வித கட்டுப்பாடும் இல்லை. உற்பத்தி ஆலைகளும், செயற்கைப் பட்டைப் பயன்படுத்துவோரும் தாமே முன் வந்து செய்து கொண்ட உடன்படிக்கையின்படி, ஆலைகளின் உற்பத்தியில் ஒரு பகுதி மத்திய, வட்டாரம் குழுக்களின் மூலம் செயற்கைப் பட்டைப் பயன்படுத்துவோர் சங்கத்திற்குக் கொடுக்கப்பட்டது. இருப்பினும், இந்த ஏற்பாடுகள் மன நிறைவளிக்கும் வகையில் செயல்படவில்லை. இம்மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர்களும் தங்களுக்குத் தேவையான பொருட்களைப் பெறவில்லை.

கூட்டுறவு சங்கங்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் மத்திய அரசு கைத்தறி மற்றும் பஞ்சாலை இயக்குநரை மத்திய குழுவில் சேர்க்க இணங்கியுள்ளது. இதனால் செயற்கை பட்டு நூல் ஒதுக்கீட்டை நேரடியாகப் பெற ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

4. கூட்டுறவு நூற்பாலைகள்.—கூட்டுறவுத் துறைகளிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு நியாயமான விலையில் நல்ல தரமான நூலை உற்பத்தி செய்தல், நூலின் அங்காடி விலையைச் சீராக வைத்திருப்பதையும், மாநிலத்திலுள்ள 12 கூட்டுறவு நூற்பாலைகள் தமது நோக்கமாகக் கொண்டு செயலாற்றி வருகின்றன. 2.12 இலட்சம் கதிர்களைக் கொண்ட மொத்த நிறுவனத் திறனளவுடைய இந்த ஆலைகள் திங்கள் ஒன்றுக்கு 10 முதல் 120 வரையிலான எண் (Counts) அளவீட்டின்படி 5,000 நூல் பொதிகளை உற்பத்தி செய்து வருகின்றன.

நிதியுதவி.—இந்த 12 கூட்டுறவு நூற்பாலைகளில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் மொத்தம் ரூ. 536.42 இலட்சமாகும். இதில் மாநில அரசு ரூ. 367.91 இலட்சம் பங்கு மூலதனமாகச் செலுத்தியுள்ளது. கூட்டுறவு நூற்பாலைகளின் செலுத்தப்பட்ட பங்கீட்டு மூலதனத்தில் விவரங்களைக் காட்டும் அறிக்கை ஒன்று இணைப்பு-1-ல் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலையில் தொடர்ந்து ஏற்படும் நிதி இடர்பாடுகளைச் சமாளிக்க இயலும் பொருட்டு, கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, அரசு மேலும், நிதியுதவி அளித்துள்ளது. அறிக்கையின் கீழ், நடப்பாண்டில், நடைமுறை மூலதனத்திற்குத் தேவையான தொடக்கப் பண முதலீடு குறித்து 9 கூட்டுறவு நூற்பாலைகளுக்கு, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ. 45.875 இலட்சம் வரை நிதியுதவி அளித்தது. மாநில அரசு, மேற்சொன்ன நோக்கம் குறித்து இந்நூற்பாலைகளுக்கு மேலும் ஒரு சமமான தொகையை வழங்கியது. நிலையான விரிவாக்கத் திட்டங்களை மேற்கொண்டுள்ள இந்த ஆலைகள் தொடர்பாக, நடப்பாண்டில் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், இந்திய அரசு ஆகியவைகளிடமிருந்து பெற்ற நிதியுதவியுடன் ரூ. 351.30 இலட்சம் வரை அரசு ஒரு சமமான மூலதனத் தொகையை வழங்கியுள்ளது. தொகையை தாமதப்படுத்தி செலுத்தும் அடிப்படையில் பஞ்சாலை இயந்திரம் வாங்குவதற்காக இந்த ஆலைகளுக்குப் போதுமான அளவு நிதியுதவி அளிக்க அரசு மேலும், உத்திரவாதம் அளித்துள்ளது. 30-6-1976 ஆம் நாள் நிலவரப்படி, அரசு வழங்கிய கடன்கள், உத்திரவாதம் அளித்த நிதியுதவி ஆகியவற்றின்கீழ் நிலுவையாக உள்ள தொகை முறையே ரூ. 143.45 இலட்சம், ரூ. 828.28 இலட்சமாகும்.

உற்பத்தி.—1975-76 ஆம் ஆண்டில் கூட்டுறவு நூற்பாலைகள் மொத்தம் 118.67 இலட்சம் கிலோகிராம் எடையுள்ள நூலை உற்பத்தி செய்து ரூ. 17.87 கோடி மதிப்புள்ள 113.31 இலட்சம் கிலோகிராம் எடையுள்ள நூலை விற்றன. நூலின் விலையை நிர்ணயம் செய்யும் துணைக் குழுவினால் நிர்ணயம் செய்யப்பட்ட விலைகளில், கோ-ஆப்டெக்ஸின்

நூல் கிடங்குகளின் மூலம் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல் உற்பத்தியில் ஒரு கணிசமான அளவு வழங்கப்பட்டது.

விரிவுத் திட்டம்.—நிலையான உற்பத்தி விரிவுத் திட்டங்களை மேற்கொண்ட கூட்டுறவு நூற்பாலைகள் தமது உற்பத்தித் திறனை ஒவ்வொன்றும் 25,000 கதிர்கள் வரை உயர்த்தியுள்ளன. மேற்படி உற்பத்தி விரிவுத் திட்டத்திற்கான மொத்த செலவு ரூ. 11.71 கோடியாகும். வேலூர், சேலம், மாயூரம், மேலூர் ஆகிய இடங்களில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகள் தமது விரிவுத் திட்டங்களை முடித்துள்ளன. எஞ்சியுள்ள ஆலைகளான அதாவது ஆரம்போலி, பேட்டை, கரூர், தாராபுரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலுள்ள ஆலைகளின் விரிவாக்கத் திட்டங்கள் 1977ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிக்கப்படும். ஆலைகள் அனைத்திலுமுள்ள விரிவுத் திட்டங்கள் முடிவுற்றபோது, மொத்த நிறுவனத் திறன் 3.26 இலட்சம் கதிர்கள் வரை அதிகரிக்கும். ஒவ்வொரு திங்களின் உற்பத்தி சுமார் 9,500 நூல் பொதிகளாக (பேல்களாக) இருக்கும்.

5. தமிழ்நாடு கூட்டுறவுத் துணி செய்முறைப்படுத்தல் ஆலை.—கூட்டுறவுத் துறையில் உற்பத்தி செய்யப்படும் கைத்தறித் துணிகளைச் செய்முறைப் படுத்துவதற்காக 1957-58 ஆம் ஆண்டில் ஈரோட்டில் அமைக்கப்பட்ட நூல் துணி செய்முறைப்படுத்தல் நிலையம் 1973 ஆம் ஆண்டு வரையில் கோ-ஆப்டெக்ஸின் ஒரு பிரிவாக இயங்கி வந்தது. இந் நிலையம் செயல்படுவதைச் சீரமைக்கும் நோக்கத்துடன், ''தமிழ்நாடு கூட்டுறவு நூல் செய்முறைப்படுத்தும் ஆலை'' என்ற பெயரில் 1973ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தனியாகச் சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. தளவாடங்களும், இயந்திரங்களும் கோ-ஆப்டெக்ஸிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த ஆலையில் துணிகளை வெளுத்தல், மழமழப்பாக்குதல், பளபளப்பாக்குதல், முதலியவற்றிற்கு நவீன இயந்திரங்கள் உள்ளன.

இதனுடன் இணைக்கப்பட்டுள்ள சாயம் போடும் தொழிற்சாலை, அப்பகுதியிலுள்ள நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நூலுக்குச் சாயம் போடும் பணியை மேற்கொள்கிறது. இந்த ஆலை 1974 ஆம் ஆண்டின் இடையிலிருந்து செய்முறைப்படும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கூடுதல் செய்முறைப்படுத்தும் வசதிகளை வழங்குவதற்கு வேண்டி, இந்த ஆலையில் ரூ. 22.50 இலட்சம் செலவில், தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் நிதியுதவியுடன் கூடிய விரிவுத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற இந்த ஆலை தீர்மானித்துள்ளது. இந்த ஆலைகளினால் ரூ. 60 இலட்சம்

செலவில் சேலம், கோயமுத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருச்சி ஆகிய முக்கிய நெசவாளர் நிலையங்களில் ஐந்து நவீன சாய இல்லங்களை நிறுவ இந்த ஆலை மேலும் தீர்மானித்துள்ளது. இத்திட்டத்திற்கு தேவைப்படும் நிதியுதவி, தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்படுகிறது.

6. தமிழ்நாடு கைத்தறி நிதி—வணிகக் கழகம்.—கைத்தறி தறிகளின் விற்பனையை மேற்கொண்டதால் ஏற்பட்ட நடவடிக்கைகளை வேறுபடுத்தும் கூட்டுறவு அமைப்புக்குப் புறத்தே உள்ள கைத்தறிக்கு நிதியுதவி அளிக்கும் நோக்கத்துடன், தமிழ்நாடு கைத்தறி நிதி வணிகக் கழகம் நிறுவப்பட்டது. மூலப் பொருள்கள் வாங்குதல், வெளுத்தல், பளபளப்பாக்குதல், நூலுக்குச் சாயமிடுதல் போன்ற தொடக்கச் செய்முறைக்காகவும், துணி உற்பத்திக்காகவும் விற்பனைக்காகவும் என்று தறி ஒன்றுக்கு அதிக பட்சம், ரூ. 1,250 வரை நெசவாளர்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன.

கைத்தறி நிதி.—வணிகக் கழகம் தொடர்ந்து ஆதாயத்தில் செயல்பட்டு, 1975 ஆம் ஆண்டுவரை ஆதாயப் பங்குத் தொகையையும் அறிவித்து வந்துள்ளது. 1976 ஆம் ஆண்டில் இது, ரூ. 68,438.00 நிகர விரயத் தொகையை ஈட்டியுள்ளது.

மேம்பாட்டுத் திட்டம்.—இக் கழகம் கோ-ஆப்டெக்ஸுடனும் கைவண்ணம் மற்றும் கைத்தறி ஏற்றுமதி கழகத்துடனும் அனைத்திந்திய கைத்தறி விற்பனை சங்கத்துடனும் இணைந்து ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ளது. மொத்த விற்பனையாளர்கள், அயல் நாட்டினர் ஆகியோரிடமிருந்து வணிகம் குறித்து தகவலறியும் பொருட்டு, புது டில்லியில் இணைப்பு அலுவலகம்—காட்சி அறை ஒன்றை இக்கழகம் திறந்துள்ளது. இத்துடன், சென்னை, பெங்களூர், திருப்பதி ஆகிய இடங்களில் மேலும் 15 காட்சி அறைகளை நிறுவியுள்ளது. 1977 ஆம் ஆண்டில் மாநிலத்திற்குள்ளேயும் வெளியேயும் 45 காட்சி அறைகள் திறப்பதற்கு இக்கழகம் தீர்மானித்துள்ளது.

ஏற்றுமதியாகும் கைத்தறித் துணித் திட்டத்தை தவிர்த்து மேலும் 2 கைத்தறி தீவிர மேம்பாட்டுத் திட்டங்களும் இக்கழகத்தின் கீழ் இயங்கி வருகின்றன. இக் கழகம் தனிமையாக சேலம், ஓமலூர், செல்லூர், குறிஞ்சிப்பாடி ஆகிய இடங்களில் உற்பத்தி நிலையங்களை நிறுவியுள்ளது. இந்தத் திட்டங்களில் பெரும்பாலும் ஏற்றுமதிப் பொருட்களை உற்பத்தி செய்யப்படுகின்றன. இக் கழகம், மேலும், ஆண்டொன்றுக்கு சுமார் இரண்டு இலட்சம் கைத்தறித் துணித்

கொண்டியங்கும நவீன ஆடைத் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவியுள்ளது.

7. கைத்தறி மேம்பாட்டுத் திட்டங்கள்.—இந்திய அரசினால் நியமிக்கப்பட்ட உயர் அதிகாரிகளின் ஆய்வுக் குழு ஒன்று பின்வரும் ஆறு கைத்தறி தீவிர மேம்பாட்டுத் திட்டங்கள், ஏற்றுமதியாகும் கைத்தறித் துணித் திட்டங்கள் ஆகியவற்றை மாநிலத்தில் நிறைவேற்றுவதற்கு ஒப்புதல் வழங்குவதுடன் பரிந்துரைகளும் செய்துள்ளது.

தொடர் எண்.	திட்டத்தின் பெயர்.	திட்டத்தில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள கைத்தறிகளின் எண்ணிக்கை.	நாளது வரை திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்ட கைத்தறிகளின் எண்ணிக்கை.	திட்டத்திற்கான மொத்தச் செலவு (ரூபாய் இலட்சத்தில்).
(1)	(2)	(3)	(4)	(5)
1	ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், கரூர்.	1,000	330	40
2	தீவிர கைத்தறி மேம்பாட்டுத் திட்டம், காஞ்சீபுரம்.	5,000	1,200	79
3	தீவிர கைத்தறி மேம்பாட்டுத் திட்டம், ஈரோடு.	5,000	710	106
4	ஏற்றுமதி உற்பத்தித் திட்டம், குறிஞ்சிப்பாடி.	1,000	75	32
5	தீவிர கைத்தறி மேம்பாட்டுத் திட்டம், மதுரை.	5,000	183	120
6	தீவிர கைத்தறி மேம்பாட்டுத் திட்டம், சேலம்.	5,000	225	86

ஏற்றுமதி உற்பத்தித் திட்டங்களின் முழு மூலதனமும் இந்திய அரசால் வழங்கப்படும், தீவிர கைத்தறி

மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆகும் செலவு, மத்திய அரசாலும் மாநில அரசாலும் முறையே 75 சதவீதமாகவும், 25 சதவீதமாகவும் பங்கீட்டுக் கொள்ளப்படும். இந்த 6 திட்டங்களின் கீழ் யாவும் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்படும்போது, தனியார் துறையிலுள்ள 22,600 கைத்தறிகளும் இத்திட்டங்களின் கீழ் கொண்டு வரப்படும். இதனால் சம்பந்தப்பட்ட நெசவாளர்கள், ஆண்டு முழுவதும் தொடர்ந்து பணி புரியும் வாய்ப்பைப் பெறுவதுடன் அதிக வருவாயையும் பெறுவர்.

8. கைத்தறிப் பொருட்களின் ஏற்றுமதி.

கைத்தறி உற்பத்திப் பொருட்களான லுங்கிகள், துண்டுகள், ஆடவர் சட்டைகள், படுக்கை விரிப்புகள், மற்றும் ஏனைய தறித் துணிகள் முதலியவை பல்வேறு அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. கூட்டுறவுத் துறையில் உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி விற்பனையை வளரச் செய்யும் நோக்குடன், கோ-ஆப்டெக்ஸ், தேவையான தொழில் நுட்பப் பணியாளர்களைக் கொண்டு தனிப்பட்டதொரு ஏற்றுமதிப் பிரிவினை நிறுவியுள்ளது. இது குறித்து, அயல் நாடுகளில் முகவர்களையும் நியமித்துள்ளது. கைத்தறித் துணிகளின் ஏற்றுமதிக்கான ஆணைகளைப் பெறும் பொருட்டு தேவையான முயற்சிகளும் செய்யப்பட்டு வருகிறது. தறிகள் முதலியவற்றை நவீனப்படுத்துவதற்காக, நிதியுதவி வழங்கியதின் மூலம், ஏற்றுமதிப் பொருட்களான துண்டுகள், ஆடவர் சட்டைகள், லுங்கிகள் ஆகியவற்றின் உற்பத்தியை மேற்கொள்ளுவதற்குப் பல்வேறு நிலையங்களில் கைத்தறிகளின் மதிப்பீட்டு எண்ணிக்கையை மாற்றுவதில் கடந்த ஓராண்டு காலமாக கோ-ஆப்டெக்ஸ் வெற்றி பெற்றுள்ளது. கோ-ஆப்டெக்ஸ் 3 ஆடை நிறுவனப் பிரிவுகளை நிறுவத் தீர்மானித்து அதன்படி அந்நிறுவனப் பிரிவுகளை தொடங்கியபோது, துணிகளையும் உடனடியாகத் தயாரிக்கப்படும் ஆடைகளையும் ஏற்றுமதி செய்ய கோ-ஆப்டெக்ஸ் மேற்கொள்ளும் என்று கருதப்படுகிறது. சுமார் 450 தனிப்பட்ட ஏற்றுமதியாளர்கள், கைத்தறி ஏற்றுமதி உயர்வுக் குழுவில் தமது பெயர்களைப் பதிவு செய்து வைத்துள்ளனர். கடந்த 3 ஆண்டுகளாக சென்னைத் துறைமுகத்தின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறிப் பொருட்களின் மொத்த மதிப்பு கீழே கொடுக்கப்பட்டுள்ளது;—

ஆண்டு.				(ரூபாய் இலட்சத்தில்.)
1974-75	..	..	..	1,875
1975-76	..	..	..	3,078
1976-77	..	..	..	3,400

9. தமிழ்நாடு சரிகை நிறுவனம்.

தமிழ்நாட்டிலுள்ள பட்டு கைத்தறி நெசவாளர்கள் தங்களுக்கு வேண்டிய சரிகையைப் பெற சூரத் நகரை நம்பி இருப்பதை குறைக்கும் பொருட்டு இம்மாநில அரசு ''தமிழ்நாடு சரிகை நிறுவனத்தை'' அமைத்துள்ளது.

இந்த நிறுவனம் 1971 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் பொது நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது. இந் நிறுவனம் 1973 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்களில் உற்பத்தியைத் தொடங்கியது. இப்பிரிவில் அரசு இதுவரையில் பங்கு மூலதனமாக ரூ. 7 இலட்சத்தை முதலீடு செய்துள்ளது. இப் பிரிவின் தற்போதைய உற்பத்தித் திறன் ஆண்டு ஒன்றுக்கு 8,500 சரிகை மார்க்குகள் ஆகும். இது தமிழ்நாட்டின் பட்டுக் கைத்தறித் தேவையில் தோராயமாக 1/8 பாகம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந் நிறுவனம் மத்திய அரசிடமிருந்து தங்க ஒதுக்கீட்டைப் பெற்று வருகிறது. உற்பத்தி செய்யப்படும் சரிகை முழுவதும் கோ-ஆப்டெக்ஸ் மூலம் முக்கியமாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்கப்படுகிறது. வெள்ளிக் கம்பிகள் ஒழுங்காக கிடைக்கும் நோக்கத்துடன், வெள்ளிக் கம்பி இழுக்கும் பிரிவு கோயமுத்தூரிலுள்ள டெக்ஸ்டூல்ஸ் நிறுவனத்தின் தொழில் நுட்ப உதவியுடன் நிறுவப்பட்டுள்ளது. இதை அமைப்பதற்காக ரூ. 9 இலட்சம் கடனை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் வழங்கியுள்ளது.

10. மூடப்பட்ட பஞ்சாலைகளை மறுபடியும் திறத்தல்.

பஞ்சாலையில் தொடர்ந்து ஏற்பட்ட மந்த நிலையின் காரணமாக, மாநிலத்திலுள்ள பெரும்பாலான பஞ்சாலைகள் நிதி இடர்பாட்டினால் இயங்கின. இதனால் சில ஆலைகள் மூடப்பட்டன. மூடப்பட்ட, நலிந்த பிரிவுகளையுடைய பஞ்சாலைகளின் பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காக வேண்டியும், அப்பஞ்சாலைகளுக்கு மீண்டும் புத்துயிர் கொடுப்பதற்குத் தேவையான வழிவகைகளைப் பற்றிக் கருத்துத் தெரிவிக்கவும் குழு ஒன்று மாநில அரசால் அமைக்கப்பட்டது. மத்திய அரசு மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட ஆலைகளின் நிலையை அறிவதற்காக வேண்டி, மேற்சொன்ன குழுவைப் போன்றதொரு குழு ஒன்றினை அமைத்துள்ளது. மாநில மட்டக் குழுவும், மத்தியக் குழுவும் 38 ஆலைகளின் பிரச்சினைகளை இதுவரை ஆய்வு செய்து, அவைகளை மீண்டும் திறப்பதற்கான பரிந்துரைகளைச் செய்துள்ளன. பரிந்துரைகளில் பெரும்பாலானவை பிரச்சினைகளை உடனடியாகக் களைவதைப் பற்றியே ஆகும். இதனால், பஞ்சாலைகளுக்கு உதவி அவற்றின் நிதிப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் நிதியுதவியளிக்கும் வங்கிகளிடம் கேட்டுக் கொள்ளப்

பொருட்டு, மாநில அரசு தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டது. அரசால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளாலும், அரசால் வழங்கப்பட்ட நிதியுதவி உத்திரவாதத்தினாலும் மூடப்பட்டிருந்த 3,718 தொழிலாளர்கள் பணிபுரியும் 7 ஆலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. 1,124 தொழிலாளர்களைக் கொண்ட புதுக்கோட்டையிலுள்ள காவிரி நூற்பு நெசவு ஆலை 4—1—1977ஆம் நாளிலிருந்து 1951ஆம் வருட தொழில் வளர்ச்சி ஒழுங்குபடுத்துதல் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டது. 1976ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, சென்னையிலுள்ள பின்னி நிறுவனம், மாநில அரசால் வழங்கப்பட்ட நிதியுதவி உத்திரவாதத்துடனும், இந்திய ஸ்டேட் வங்கி அளித்த ரூபாய் 1 கோடி நிதியுதவியுடனும், இந்தியத் தொழில் வளர்ச்சி வங்கி வழங்கிய ரூபாய் 4 கோடி நிதியுதவியாலும் 20—2—1977ஆம் நாளன்று மீண்டும் திறக்கப்பட்டது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிறுவனம்.

சென்னையிலுள்ள தமிழ்நாடு பஞ்சாலைக் கழக நிறுவனம் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் ஒரு முழு உரிமை பெற்ற தமிழ் நாடு அரசு நிறுவனமாக சட்டப்படி இணைக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம் மூடப்பட்ட, நலிந்த பஞ்சாலை நிறுவனங்களை எடுத்துக் கொள்வதும், வேலையினின்று வெளியேற்றப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பளிப்பதுவுமே ஆகும். இக்கழகத்தின் இதர நோக்கங்களாவன:—

புதிய இயந்திரங்கள் வாங்குவதற்கும், ஏற்கனவே உள்ள இயந்திரங்களைப் புதுப்பிப்பதற்கும், தேவையான போதுமான நிதியுதவியை இக் கழகம் ஆலைகளுக்கு வழங்கியது. மேலும் நடைமுறை மூலதனத்திற்கான தொடக்கப் பணத்தையும் இக் கழகம் வழங்கியது.

இக்கழகத்தின் அதிகார பூர்வமான பங்கீட்டு மூலதனம் ரூ. 500 இலட்சமாகும். தமிழ் நாட்டு அரசால் முழுவதும் பங்குத் தொகையாக வழங்கப்பட்ட பங்கீட்டு மூலதனம், ரூ. 90 இலட்சமாகும். இது தவிர, தமிழ்நாடு அரசு இக்கழகத்திற்கு ரூ. 1,58·90 இலட்சம் கடனாக வழங்கியது. நவீனப்படுத்துவதற்கும் நடைமுறை மூலதனத் தொடக்கச் செலவிற்கும் பயன்படுத்தும் பொருட்டு, அரசு எடுத்துக்கொண்ட நலிந்த ஆலைகளுக்கு தமிழ்நாடு அரசு கழகத்திற்கு வழங்கிய கடன் தொகையை மீண்டும் கடனாக இக்கழகம் வழங்கியது.

பதினான்கு பஞ்சாலைப் பிரிவுகளின் நிர்வாகத்துடன் இக்கழகம் இணைக்கப்பட்டது. 1974 ஆம் ஆண்டு 14 ஆலைகள் அனைத்தும் தேசியமயமாக்கப்பட்டுள்ளன. அந்த தேசிய மயமாக்கப்பட்ட ஆலைகளின் நிர்வாகம் கோயம்புத்தூரிலுள்ள தேசீய பஞ்சாலை கழகத்தினால் (தமிழ்நாடு அண்டு பாண்டிச்சேரி) எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன் விளைவாக, 1975, 1976ஆம் ஆண்டுகளில் இக்கழகம் சிறப்பாக இயங்க முடியாமல் போயிற்று. தேசியமயமாவதற்கு முன்பே ஏற்கனவே முன்பணமாகக் கொடுக்கப்பட்ட தொகைக்குரிய கடன் வட்டியுடன் கோயம்புத்தூரிலுள்ள பஞ்சாலைக் கழகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், புதுக்கோட்டையிலுள்ள காவிரி நூற்பு நெசவு ஆலையின் நிர்வாகத்தை 1951 ஆம் வருட தொழில் (வளர்ச்சி ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் கீழ் 4—1—1977 ஆம் நாளிலிருந்து மேற்கொண்டது. இக்கழகம், மேற்சொன்ன ஆலையை அதிகாரப் பூர்வமாகக் கட்டுப்படுத்தும் நிறுவனமாக இருந்து, அவற்றினை நடத்தும்.

இணைப்பு.

30-6-1976 ஆம் நாள் நிலவரப்படி கூட்டுறவு நூற்பாலைகளின் பங்கு மூலதன நிலையைக் காட்டும் விவர அறிக்கை.

தொடர் எண்.	கூட்டுறவு நூற்பு ஆலையின் பெயர்.	பங்கு மூலதனம் வழங்கியவை. அதிகாரபூர்வமான பங்கு மூலதனம்.	நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து.	நெசவாளர் அல்லாத நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து.	கூட்டுறவு மத்திய வங்கியிடமிருந்து.	மற்றக் கூட்டுறவு நிறுவனங்களிடமிருந்து.	தனிப்பட்டவர்களிடமிருந்தும் நிறுவனங்களிடமிருந்தும்.	அரசு சாராத நிறுவனங்களிடமிருந்து பெற்ற மொத்தத் தொகை.	அரசிடமிருந்து பெற்ற தொகை.	30—6—1976 வரை செலுத்தப்பட்ட மொத்த பங்கு மூலதனம்.	குறிப்புகள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)
							(ரூபாய் இலட்சத்தில்.)				
1	தென் இந்தியா கூட்டுறவு நூற்பாலை.	60.00	14.80	15.90	..	..	..	30.70	31.00	61.70	
2	ஸ்ரீவில்லிபுத்தூர் கூட்டுறவு நூற்பாலை.	60.00	6.85	0.25	0.75	2.50	0.73	11.08	30.70	41.78	
3	திருச்செந்தூர் கூட்டுறவு நூற்பாலை.	60.00	0.35	1.82	1.10	1.28	11.27	15.82	27.00	42.82	
4	சேலம் கூட்டுறவு நூற்பாலை ..	60.00	11.40	0.25	0.01	0.91	1.58	14.15	42.74	56.89	
5	மதுரை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை.	60.00	3.26	0.97	5.00	5.37	0.36	14.96	34.71	49.67	
6	கோயம்புத்தூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை.	60.00	3. 58	0.25	5.00	4.24	2.61	15.68	22.45	38.13	
7	திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை.	60.00	4.07	1.77	2.64	3.02	2.22	13.72	49.96	63.68	
8	கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை.	60.00	2.70	0.90	2.10	1.29	4.18	11.17	21.00	32.17	
9	காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை.	60.00	4.50	0.25	3.00	1.41	1.38	10.54	18.49	29.03	
10	தென் ஆர்க்காடு கூட்டுறவு நூற்பாலை.	60.00	2.52	0.47	2.00	6.02	0.70	11.71	13.46	25.17	
11	வட ஆர்க்காடு கூட்டுறவு நூற்பாலை	60.00	0.78	0.25	..	2.34	4.33	7.70	25.30	33.00	
12	தஞ்சாவூர் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை.	60.00	1.11	0.25	1.86	1.67	6.39	11.28	51.10	62.38	
	பெரு மொத்தம் ..	..	55.92	23.33	23.46	30.05	35.75	1,68.51	3,67.91	5,36.42	

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

வெள்ளிக்கிழமை, 1977 ஆகஸ்ட் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. முனு ஆதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனம்.

*36 வினா திரு. க. சுப்பு: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தைத் திறப்பது குறித்து அரசு மேற்கொண்ட முயற்சிகள் யாவை?

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: திருவாளர்கள் இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தின் நிர்வாகத்தை பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் கம்பெனி மேற்கொள்ள ஒப்புக்கொண்டதின் பேரில் இந்த நிறுவனத்திற்குத் தேவையான மூலதனக் கடன் வசதிகள் வழங்குவது குறித்தும், மற்ற சீரமைப்புத் திட்டங்கள் குறித்தும், சம்பந்தப்பட்ட நிதியுதவி நிறுவனங்கள், வங்கிகள், பி.எச்.இ.எல். (B.H.E.L.) நிறுவனம் ஆகியவற்றுடன் இந்த அரசு கலந்து ஆலோசனைகள் நடத்தியது. இந்த ஆலோசனை களின் பேரில் B.H.E.L. ஐச் சேர்ந்த திரு. கிருஷ்ணமூர்த்தி, இந்தியா மீட்டர்ஸின் பணி மேலாளராக பொறுப்பேற்றிருக்கிறார். இவர் 17-8-1977 அன்று நிறுவனத்தின் தொழிற்சாலையை பூர்வாங்க சுத்தம் செய்யும் பணிகளைத் துவக்கியிருக்கிறார்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் மகிழ்ச்சியான செய்தி. தொழிலாளர்களின் பணிநிலை, ஊதியங் கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் தொழிற்சாலை மூடப் படுவதற்கு முன்பு இருந்த நிலையே நீடிக்குமா? அதில் ஏதாவது மாறுதல் இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: இப்போது திரு. கிருஷ்ண மூர்த்தி நியமிக்கப்பட்டிருக்கிறார். அது குறித்து விரிவான ஆலோசனை ஒன்றை நிர்வாகத்தினரும், முதலமைச்சர் அவர் களும் மேற்கொண்டு முடிவு எடுப்பார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு: தலைவர் அவர்களே, முன்பு இருந்த நிலையே நீடிக்கும் என்பதாக அரசாங்கம் முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: முன்பு இருந்த நிலை என்பது இப்போதுள்ள சந்தர்ப்பம், சூழ்நிலை ஆகியவற்றிற்கேற்ப பரிசீலித்து முடிவு செய்ய வேண்டிய ஒன்று என்பது நல்ல அனுபவம் பொருந்திய திரு. சுப்பு அவர்களுக்குத் தெரியும் என்று நம்புகிறேன்.

பருப்பு வகைகள்.

*63 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி: மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்ட பருப்பு வகைகள் சுமார் 400 வாகன்கள் வரை எடுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை உணவுப் பொருள் வழங்குத் துறை கொள்முதல் செய்ய உத்தேசித்துள்ளதா?

(இ) அதற்கான விற்பனை வரி வசூலிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) ஆம்.

(ஆ) இல்லை. இவ்வாறு கொள்முதல் செய்வதற்கு விதிகளில் இடமில்லை.

(இ) சரக்குகளின் விற்பனைக்குப் பிறகுதான் விற்பனை வரி நிர்ணயிக்கப்பட்டு வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படும். ஆகவே இவ்வினாவுக்கு தற்போது இடமில்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, 400 வாகன்களுக்கு மேல் இந்த ரெயில் நிலையங்களில் பருப்பு மூட்டைகள் தேங்கி இருக்கின்றன. நாட்டிலே பற்றாக் குறை இருக்கிறது. அப்படி இருக்கும்போது வலுக்கட்டாயமாகவாவது இந்த பருப்பு மூட்டைகளை எடுத்து, பொதுமக்களுக்கு விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இப்போது சென்னை ரெயில் நிலையங்களில் தேங்கிக் கிடக்கும் பருப்பு மூட்டைகள் தனியார் வியாபாரிகளுக்காக வரவழைக்கப்பட்டது. அந்தப் பருப்பின் தரம் போதுமானதாக இல்லாத காரணத்தினால்

வியாபாரிகள் அதை எடுக்காமல் இருந்தார்கள். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் தலையிட்டு, இந்த மூட்டைகளை வலுக்கட்டாயமாகவாவது எடுத்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்வது என்றால், அதை இத்துறை ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. காரணம் வந்திருக்கிற பருப்பின் தரம் போதுமானதாக இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: இன்றைய தினம் தரமுடைய பருப்பாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, குப்பை கூளங்களை எல்லாம் கூடக் கொட்டி கலப்படம் செய்கிற முதலாளிகள் இருக்கிறார்கள். இன்றைய தினம் அவர்களுடைய பதுக்கல் கிடங்குகளாக ரெயில்வே நிலையங்கள் பயன்படக்கூடிய சூழ்நிலை இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இம்மாதிரி பருப்பு பதுக்கப்படுவதால்தான் விலை உயர்ந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந்து, இதுபோன்ற பிரச்சனைகளில் பதுக்கலுக்கு இடமளிக்காது, அதைத் தடுக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இது பதுக்கி வைக்கப்பட்ட சரக்குகள் அல்ல. தனி வியாபாரிகளுக்காக வந்து, எடுக்கப்படாமல் இருக்கிற சரக்கு ஆகும்.

திரு. க. சுப்பு: தரக்குறைவான சரக்குகள்தான் அரிசி, சர்க்கரை, பருப்பு போன்றவைகள் பொதுமக்களுக்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கி விநியோகிக்கப்படுகிறது என்ற குற்றச் சாட்டு இருக்கிறது. உயர்ந்த தரமுடைய சரக்குகளை வாங்கி, விநியோகம் செய்வதற்கான நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: கேள்வியில் குற்றச்சாட்டு இருக்கக் கூடாது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒரு குற்றச் சாட்டைச் சொல்லியிருக்கிறார். தரக் குறைவான சரக்குகளை வாங்கி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் விநியோகம் செய்வதாகச் சொல்லியிருக்கிறார். அப்படி சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் எப்பொழுதுமே தரம் குறைந்த சரக்குகளை வாங்குவது இல்லை. தரம் உள்ள சரக்குகளை வாங்கித் தான் விநியோகம் செய்கிறார்கள். பருப்பு போன்ற உணவுப் பொருட்களை சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் விநியோகத்திற்குக் கொண்டு வரவில்லை.

திரு. க. சுப்பு: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் போன தடவை சொல்லும்பொழுது........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் நிறைய பேர் கை தூக்கிக் கொண்டிருக்கிறார்கள். நீங்கள் என்னைக் கேட்காமலேயே எழுந்து உடனே கேட்கிறீர்கள். சரி கேளுங்கள்:

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, முன்பு அமைச்சரவர்கள் அந்தப் பருப்பு வகைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்று சொல்லும்பொழுது தரம் குறைந்திருந்ததால் தனிப்பட்ட வியாபாரிகள் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. தரம் குறைந்த பருப்புகளை வாங்காமல் இருக்க ஏதாவது செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, முதல் கேள்வியிலேயே என்னுடைய பதிலைச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பருப்பு வகைகள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு வந்தது அல்ல.

திரு. பண்ணை கே. சேதுராம் : தலைவரவர்களே, அங்கிருந்து வந்த சரக்குகள் எடை குறைவாக இருப்பதாகவும் செய்தி வந்துள்ளது. அப்படி ஏதாவது எடையில் குறைவாக இருந்ததா? மேலும் இதுபோன்று தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்ற உணவுப் பொருட்கள் தேங்கியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, எடை குறைந்த காரணத்தால் வியாபாரிகள் எடுக்க மறுத்ததாக எந்தவிதமான தகவலும் அரசுக்கு வரவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது சரக்கு எடுக்கப்படாமல் இருக்கிறதே தவிர பதுக்கல் இல்லை என்று சொன்னார்கள். பலலாயிரக்கணக்கான மூட்டைகள் அப்படித் தேங்கிக் கிடக்கும்பொழுது, அவைகள் சட்டப்படி பதுக்கல் இல்லை என்றாலும், விநியோகிக்காமல் இருப்பதால் பகிரங்கப் பதுக்கல் போன்றுதானே உள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, பருப்பு வகைகளின் விலை அடிக்கடி ஏறி இறங்கி வருவதால் "fluctuation in prices" வியாபாரிகள் இதை எடுக்கவில்லை. அதுவும் இதற்கு ஒரு காரணம். ஆகவே, அதை எடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த அரசாலே முடியாது. காரணம் இலாப நஷ்டம் வியாபாரிகளைப் பொறுத்தது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், தரம் குறைந்த பருப்பை அனுப்பியதால் வியாபாரிகள் எடுக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தரம் குறைந்த பருப்பை நமது மாநிலத்திற்கு அனுப்புவதால் இங்கே பொருள்களின் தரம் குறைக்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தரம் குறைந்த பருப்பு வகைகளை அனுப்பியவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது அரசுக்கும், வெளிமாநில வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் கொண்டுவரப்பட்ட சரக்கு அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் வெளிமாநிலங்களிலிருந்து பருப்பு வகைகளைத் தருவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பருப்பு வகைகளை அனுப்பியவர்கள்மீது அரசோ அல்லது உணவு விநியோகத் துறையோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, 400 வாகன் பருப்பு வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எந்த எந்த வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டன. வியாபாரிகள் வரவழைத்து இருந்தால் அதனுடைய பொறுப்பு வியாபாரிகளைத்தானே சாரும். இவ்வளவு தரம் குறைந்த அளவிற்கு, 400 வேகன்களில் வந்தது கெட்டுப்போக காரணமாக இருந்தவர்களை அரசு மன்னிக்கலாமா? இதை எடுக்காமல் இருக்கும் வியாபாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, கொண்டுவரப்பட்ட மூட்டைகள் எத்தனை என்று அரசுக்கு இன்னும் தகவல் வரவில்லை. ஆனால் இன்றையதினம் வியாபாரிகள் ஒரு சில மூட்டைகளை எடுத்த பிறகு கம்பு 167 மூட்டைகள், கடலைப் பருப்பு 160 மூட்டைகள், கோதுமை 80 மூட்டைகள், 27-6--77 இல் வந்த இன்னொரு வேகனில் கோதுமை 241 மூட்டைகள், கடலை 160 மூட்டைகள், கடலைப் பருப்பு 160 மூட்டைகள். என்றாலும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது என்பது முடியாத காரியம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இரயில்வே நிலையங்களில் எவ்வளவு நாட்கள் இருக்கலாம் என்று இப்பொழுதுள்ள விதியின்படி நான் சொல்கிறேன் 15 நாட்களுக்கு மேல் இருந்தது என்று சொன்னால் அதைப் பறிமுதல் செய்யும் அளவிற்கு மத்திய சர்க்காரை, உணவுத் தட்டுபாடு இருக்கின்ற நேரத்தில் விலைவாசி உயர்ந்திருக்கின்ற நேரத்தில், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை நிர்ப்பந்திக்கும் அளவிற்கு நம்முடைய சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது மத்திய சர்க்காரின் இரயில்வே இலாக்காவைப் பொறுத்தது. ஆகவே, இந்த அரசு அதிலே பதில் சொல்லத் தயாராக இல்லை. என்றாலும் சட்ட நுணுக்கங்களைப் பரிசீலித்து, இதை வியாபாரிகள் எடுக்காத சூழ்நிலையில் இதை அரசு

திரு. க. சுப்பு : பேரவைத் தலைவரவர்களே, முன்பு அமைச்சரவர்கள் அந்தப் பருப்பு வகைகள் ஏன் எடுக்கப்படவில்லை என்று சொல்லும்பொழுது தரம் குறைந்திருந்ததால் தனிப்பட்ட வியாபாரிகள் எடுக்கவில்லை என்று சொன்னார்கள். குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. தரம் குறைந்த பருப்புகளை வாங்காமல் இருக்க ஏதாவது செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, முதல் கேள்வியிலேயே என்னுடைய பதிலைச் சொல்லியிருக்கிறேன். இந்தப் பருப்பு வகைகள் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு வந்தது அல்ல.

திரு. பண்ணை கே. சேதுராம் : தலைவரவர்களே, அங்கிருந்து வந்த சரக்குகள் எடை குறைவாக இருப்பதாகவும் செய்தி வந்துள்ளது. அப்படி ஏதாவது எடையில் குறைவாக இருந்ததா? மேலும் இதுபோன்று தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்குச் சென்ற உணவுப் பொருட்கள் தேங்கியிருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, எடை குறைந்த காரணத்தால் வியாபாரிகள் எடுக்க மறுத்ததாக எந்தவிதமான தகவலும் அரசுக்கு வரவில்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லும்பொழுது சரக்கு எடுக்கப்படாமல் இருக்கிறதே தவிர பதுக்கல் இல்லை என்று சொன்னார்கள். பலலாயிரக்கணக்கான மூட்டைகள் அப்படித் தேங்கிக் கிடக்கும்பொழுது, அவைகள் சட்டப்படி பதுக்கல் இல்லை என்றாலும், விநியோகிக்காமல் இருப்பதால் பகிரங்கப் பதுக்கல் போன்றுதானே உள்ளது. இது சம்பந்தமாக நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, பருப்பு வகைகளின் விலை அடிக்கடி ஏறு இறங்கி வருவதால் "fluctuation in prices" வியாபாரிகள் இதை எடுக்கவில்லை. அதுவும் இதற்கு ஒரு காரணம். ஆகவே, அதை எடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த அரசாலே முடியாது. காரணம் இலாப நஷ்டம் வியாபாரிகளைப் பொறுத்தது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : சார், தரம் குறைந்த பருப்பை அனுப்பியதால் வியாபாரிகள் எடுக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். தரம் குறைந்த பருப்பை நமது மாநிலத்திற்கு அனுப்புவதால் இங்கே பொருள்களின் தரம் குறைக்கப்படுகிறது. ஆகவே, இப்படிப்பட்ட தரம் குறைந்த பருப்பு வகைகளை அனுப்பியவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது அரசுக்கும், வெளிமாநில வியாபாரிகளுக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தினால் கொண்டுவரப்பட்ட சரக்கு அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தனிப்பட்ட வியாபாரிகள் வெளிமாநிலங்களிலிருந்து பருப்பு வகைகளைத் தருவித்திருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பருப்பு வகைகளை அனுப்பியவர்கள்மீது அரசோ அல்லது உணவு விநியோகத் துறையோ எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, 400 வாகன் பருப்பு வந்ததாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எந்த எந்த வட மாநிலங்களிலிருந்து வரவழைக்கப்பட்டன. வியாபாரிகள் வரவழைத்து இருந்தால் அதனுடைய பொறுப்பு வியாபாரிகளைத்தானே சாரும். இவ்வளவு தரம் குறைந்த அளவிற்கு, 400 வேகன்களில் வந்தது கெட்டுப்போக காரணமாக இருந்தவர்களை அரசு மன்னிக்கலாமா? இதை எடுக்காமல் இருக்கும் வியாபாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, கொண்டுவரப்பட்ட மூட்டைகள் எத்தனை என்று அரசுக்கு இன்னும் தகவல் வரவில்லை. ஆனால் இன்றையதினம் வியாபாரிகள் ஒரு சில மூட்டைகளை எடுத்த பிறகு கம்பு 167 மூட்டைகள், கடலைப் பருப்பு 160 மூட்டைகள், கோதுமை 80 மூட்டைகள், 27-6--77 இல் வந்த இன்னொரு வேகனில் கோதுமை 241 மூட்டைகள், கடலை 160 மூட்டைகள், கடலைப் பருப்பு 160 மூட்டைகள். என்றாலும் வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது என்பது முடியாத காரியம்.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இரயில்வே நிலையங்களில் எவ்வளவு நாட்கள் இருக்கலாம் என்று இப்பொழுதுள்ள விதியின்படி நான் சொல்கிறேன் 15 நாட்களுக்கு மேல் இருந்தது என்று சொன்னால் அதைப் பறிமுதல் செய்யும் அளவிற்கு மத்திய சர்க்காரை, உணவுத் தட்டுபாடு இருக்கின்ற நேரத்தில் விலைவாசி உயர்ந்திருக்கின்ற நேரத்தில், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய சர்க்காரை நிர்ப்பந்திக்கும் அளவிற்கு நம்முடைய சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : பேரவைத் தலைவரவர்களே, இது மத்திய சர்க்காரின் இரயில்வே இலாக்காவைப் பொறுத்தது. ஆகவே, இந்த அரசு அதிலே பதில் சொல்லத் தயாராக இல்லை. என்றாலும் சட்ட நுணுக்கங்களைப் பரிசீலித்து, இதை வியாபாரிகள் எடுக்காத சூழ்நிலையில் இதை அரசு

எடுக்க முடியுமா என்பதைப் பரிசீலித்து எடுத்தால் விநியோகிக்க முடியுமா, நஷ்டமில்லாமல் இவற்றையெல்லாம் செய்ய முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

[முற்பகல் 9.10]

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, இதற்குமுன் எப்போதாவது வியாபாரிகள் பருப்பு மூட்டைகளை எடுக்காமல் இருந்து, மேற்படி மூட்டைகளை அரசு பறிமுதல் செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, அப்படி எந்தத் தகவலும் அரசுக்கு வரவில்லை.

மீனவர்களுக்கு குடியிருப்புகள்.

*64 வினா—திரு. என். கிட்டப்பா, திரு. துரை. கலியமூர்த்தி: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) 1975-76 ம் ஆண்டில் மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) அதில் இதுவரை செலவழிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்:

(அ) ரூ. 80.00 இலட்சம்.

(ஆ) 15—7—77 வரை செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 74,95,587.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பூம்புகார், வானகிரி போன்ற இடங்களில் மீனவர்களுக்கு அரசு வீடுகள் கட்டித் தந்தது. அதைத் தொடர்ந்து இன்றைய அரசு, மீனவர்களுக்கு அந்தந்தப் பகுதியில்—ஏனென்றால் இப்பொழுதுகூட செலவிடப்படுகிற தொகையில் இன்னும் மிச்சம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன பதிலிலிருந்து தெரிய வருகிறது; அதோடு இன்னும் பணத்தைச் சேர்த்து—வீடு கட்டித் தர இருக்கிறதா என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கா.உரொ. எட்மண்ட்: 1975-76 ஆம் ஆண்டில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்திடம் மீனவர்களுக்கு 1851 வீடுகள் கட்டுவதற்காக அளிக்கப்பட்ட தொகை ரூ. 80 இலட்சம். இத்தொகையில், 15-7-1977 வரை செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 74,95,587. 1975-76-ல் கட்டுவதற்காக கீழ்க்கண்ட ஏழு கடலோர மாவட்டங்களில் 1,851 வீடுகள் எடுத்துக் கொள்ளப்பட்டன.

செங்கற்பட்டு மாவட்டம்—380 வீடுகள்; தென்னாற்காடு மாவட்டம்—155 வீடுகள்; தஞ்சாவூர் மாவட்டம்—52 வீடுகள்; புதுக்கோட்டை மாவட்டம்—152 வீடுகள்; இராமநாதபுரம் மாவட்டம்—290 வீடுகள்; திருநெல்வேலி மாவட்டம்—430 விடுகள்; கன்னியாகுமரி மாவட்டம்—392 விடுகள்; ஆக 1,851 வீடுகள் கட்டுவதற்கு திட்டமிடப்பட்டது.

இந்த 1,851 வீடுகளில் 30-6-1977 வரை 1842 விடுகள் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள ஒன்பது விடுகளில், 5 வீடுகள் கூரைதளம் போடப்பட்ட நிலையிலும் மற்றும் நான்கு வீடுகள் பல்வேறு நிலைகளிலும் உள்ளன.

1976-77 ஆம் ஆண்டில் அரிசன விட்டுவசதி வளர்ச்சிக் கழகத்திடம் மீனவர்களுக்கு 1956 வீடுகள் கட்டுவதற்கு ரூ. 100 இலட்சம் அளிக்கப்பட்டுள்ளது. அதில் 30-6-1977 வரை 573 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 1,383 வீடுகள் பல்வேறு கட்டுமான நிலைகளில் உள்ளன.

1976-77-ல் அளிக்கப்பட்ட 100 இலட்சத்தில், 15-7-77 வரை செலவு செய்யப்பட்டுள்ள தொகை ரூ. 23,71,808.

1977-78 ஆம் ஆண்டுக்கு மீனவர்கள் வீடு கட்டும் திட்டத்திற்காக ரூ. 100 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கூத்தகுடி திரு. ச. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாட்டிலே, மூன்றில் ஒரு பகுதி கடற்கரையைக் கொண்டது இராமநாதபுரம் மாவட்டம், அங்குள்ள மீனவர்களுக்கு மூன்றில் ஒரு பகுதிக்குக் குறைவாகத்தான் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அங்கு மீனவர்கள் எண்ணிக்கையிலே அதிகமாக இருக்கிறார்கள். புள்ளி விவரங்களை வைத்துச் சொல்கிறேன். இராமநாதபுரம் மாவட்டத்திலே வேறு தொழிலே இல்லாத காரணத்தால், அங்குள்ள மீனவர்களுக்கு வேறு திட்டம் போட்டு அதிகமான வீடு கட்டிக் கொடுக்க அரசு திட்டம் தீட்டுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, மீன் பிடி தொழில் அதிகமாக உள்ளது நெல்லை மாவட்டமும், கன்னியாகுமரி மாவட்டமும் ஆகும், அதற்குப் பிறகுதான்

[1977 ஆகஸ்ட் 19

முகவை மாவட்டம் வருகிறது. அதன் அடிப்படையிலேதான் திருநெல்வேலி மாவட்டத்தில் 430 வீடுகளும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 392 வீடுகளும், இராமநாதபுரம் மாவட்டத்தில் 280 வீடுகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

திரு. என். கிட்டப்பா : தலைவரர்களே, தஞ்சை மாவட்டத்தில், 552 வீடுகள் மீனவர்களுக்கு என்று அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். அவை எந்தெந்தப் பகுதிகளில் என்று அறியலாமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வெறும் 52 வீடுகள்தான்.

திரு. என். கிட்டப்பா: அந்த 52 வீடுகள் எந்தெந்தப் பகுதிகளில்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்களே கேள்வி கேட்டால் மற்றவர்களுக்கு வாய்ப்பு வேண்டாமா? நீங்கள் இரண்டு சப்ளிமென்ட்டரி போட சந்தர்ப்பம் கொடுத்தேன். மற்ற உறுப்பினர்களுக்குச் சந்தர்ப்பம் கொடுக்க வேண்டாமா? பிறகு பார்க்கலாம்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவரவர்களே, இப்பொழுது கடற்கரை ஓரங்களிலேதான் வீடுக ட்டிக் கொடுக்கும் திட்டத்தை அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால், ஏரி, குளங்களிலே மீன் பிடிப்பவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு என்ன திட்டத்தை வைத்திருக்கிறது? அவர்களுக்கு அரசு வீடு கட்டிக் கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கடலோரப் பகுதிகளில் முதல் கட்டத்தில் வீடு கட்டுவதினுடைய நோக்கம், கடலோரப் பகுதிகளிலே மீனவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். கடலோரப் பகுதிகளில், ஒரு குறிப்பிட்ட இடத்திலே, மீனவர்கள் வாழ்கிற கிராமத்தில், ஆயிரக்கணக்கான மீனவர்கள் இருக்கிறார்கள். ஆகவேதான் அங்கே அதிகமாக வீடுகளைக் கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

உள்நாட்டு மீனவர்களுக்கு ஏரி, குளம், அணை போன்றவற்றிலே மீன் பிடிப்பவர்கள், அந்தந்தப் பகுதிகளிலே பரவலாக இருக்கிற காரணத்தாலே, அங்கே நிலம் கிடைப்பது மிகவும் அரிதாக இருக்கிற காரணத்தாலேதான், இப்பொழுது அதைப்பற்றிய யோசனை இல்லை. இருந்தாலும் அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க இந்த அரசு யோசித்து வருகிறது.

1977 ஆகஸ்ட் 19]

மயில்கள் பாதுகாப்பு.

*65 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அரிதாகி வரும் மயில் இனத்தைப் பாதுகாக்க அரசினரிடம் சிறப்புத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: இல்லை.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, மயில் தேசியப் பறவையாக உள்ளது. குறைந்தபட்சம் மயிலாடும்துறை என்று அழைக்கப்பட்ட இன்றைய மாயூரத்தின் பழைய பெயர் மயிலாடுதுறை—அங்கே மயிலும் இல்லை. அப்படி இருந்ததாக விவரம் அறிந்த நண்பர் இராதா போன்றவர்கள் அறிவார்கள். இப்போது ஒரு மயில் கூட இல்லை. அதனால் ஆடுவதற்கு வழியில்லை. (குறுக்கீடு) இனியாவது அவைகள் ஆடுவதற்கு அரசு ஏற்பாடு செய்ய முன் வருமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மயிலை ஆடச் செய்ய முடியாது. அதுவாகவே ஆட வேண்டும்.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: பேரவைத் தலைவர் அவர்களே, கோவை தாலுகாவிலே, சரவணம்பட்டி கௌமார மடாலயம், சர்க்கார் சாமக்குளம், அப்பகுதியிலே மயில்கள் பாதுகாக்கப்பட்டு வந்தது. தற்சமயம் நூற்றுக்கணக்கான மயில்கள் இருந்தும், அதைப் பாதுகாக்க முடியாத நிலைமை இருக்கிறது. அந்த மயில்கள் எல்லாம் கொண்டம்பாளையம், கள்ளிப்பாளையம் பஞ்சாயத்துகளுக்குப் பறந்து சென்று ஆங்காங்கே உள்ள மரங்களில் தங்கிக் கொண்டிருக்கின்றன. இன்றைக்கும் நூற்றுக்கணக்கான மயில்கள் அந்த வட்டாரத்திலே இருக்கின்றன. அப்படி இருக்கிற மயில்களுக்கு ஒரு தனி சரணாலயம் ஏற்படுத்தி அந்த மயில்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, 1972-ம் வருட வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் பட்டியல் 1-ல் சேர்க்கப்பட்டுள்ளதன் வாயிலாக மயில் தனிப் பாதுகாப்பைப் பெற்றிருக்கிறது. மயில்கள் தமிழ்நாட்டில் பரவலாகக் காணப்படுகின்றன. திருச்சி மாவட்டத்திலுள்ள விராலிமலை,

இராமநாதபுரம் மாவட்டத்தில் வீரசோழன் ஆகிய இரு இடங்களில் இவை பெருமளவில் காணப்படுகின்றன. வீரசோழனில் உள்ள மயில்கள் இஸ்லாமிய உறவின் முறை டிரஸ்டினால் பராமரிக்கப்படுகின்றன. இந்த டிரஸ்டுக்கு பராமரிப்புச் செலவுக்காக ஆண்டுதோறும் ரூ. 500 அரசின் உதவித் தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

இப்பறவைகள் பெறும் தனிப்பாதுகாப்புக் காரணமாக நீலகிரி மாவட்டத்திலுள்ள முதுமலை வனவிலங்கு சரணாலயத்தில் இவை இனவிருத்தி செய்து பெருமளவில் நிறைந்து காணப்படுகின்றன. மத முக்கியத்துவம் மற்றும் உள்ளூர்ப் பண்பாடுகளின் காரணமாக மயில் இனம், மற்ற பறவைகள் மற்றும் விலங்குகளைக் காட்டிலும் அதிக அளவில் வேட்டையாடுபவர்களுக்கு இரையாவதில்லை. எனினும், அதனுடைய மிக அழகான இறகுகள் மருத்துவம் சம்பந்தமானவற்றிற்கு தேவை அதிகமாக இருக்கின்ற காரணத்தால் தனிப்பாதுகாப்புத் தேவைபடுகிறது. எனவே எங்கெங்கே மயில்கள் அதிக அளவு காணப்படுகிறதோ அங்கங்கே பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பன்னை கே. சேதுராம்: தலைவர் அவர்களே, தேசியப் பறவையான இந்த மயில்கள், மதுரை மாவட்டம் ஆண்டிப்பட்டியிலும், பழமுதிர்சோலையிலும் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. அதை நரிக்குறவர்களும், வழிப்போக்கர்களும் பிடித்து அழித்து வருகிறார்கள். எனவே அதைப் பாதுகாக்க அரசு தனியாக நிதி ஒதுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, தனியாக நிதி ஒதுக்குவதற்கு இப்போது அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை, என்றாலும் பாதுகாப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலேயே சிறந்த பறவை மயில் என்று கூறுகிறார்கள். அது இந்தியாவிலேயே குறிப்பாக தமிழ்நாட்டிலே அதிகமாக நடமாடிக் கொண்டிருந்த நிலை மாறி இப்போது தமிழகத்திலே சிறந்த இடம் மயிலாடும்பாறை என்று எனது தொகுதியில் தான் இருக்கிறது. மயில் அதிகமாக ஆடிய காரணத்தால் அங்கு மயிலாடும்பாறை என்ற கிராமமே இருக்கிறது. அந்தக் கிராமத்தையே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விட்டுவிட்டு, திருச்சியிலேயும், இராமநாதபுரத்திலேயும் மட்டும் பாதுகாக்கப்படுகிறது என்று சொன்னார்கள். பாதுகாப்பதற்கு மகிழ்ச்சி என்றாலும், மயிலுக்கு.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது கேள்வி......

திரு கே. கந்தசாமி: கேள்விதான். ரொம்ப முக்கியம். இது தெய்வத் தன்மை பொருந்திய பறவை என்பதால் முஸ்லிம் பெருமக்களும், இந்துக்களும் கொண்டாடுகிறார்கள். குறிப்பாக முருகப் பெருமான் வாகனமாகவும் இருக்கிறது. இந்தப் பறவையின் இறக்கையைக் கருக்கி மருத்துவத்திற்கும் பயன்படுத்துவதாக நாட்டு வைத்தியர்கள் கூறுகிறார்கள். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்த மயில்களைப்பாதுகாப்பதற்கு மயிலாடும்பாறையில் அரசு ரீதியாக ஒரு கூடத்தை ஏற்படுத்தி அதற்கு நிதி ஒதுக்க ஏற்பாடு செய்வார்களா?

[முற்பகல் 9-20]

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகின்ற மயிலாடும் பாறை, மயிலுக்கு பேர்போன இடமா அல்லது பெயர் போன இடமா என்று தெரியவில்லை.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஹாஸ்யமாகச் சொன்னார்கள். பாராட்டுகிறேன். It has been noted for its famous dance. ஆகவேதான் மயிலாடும்பாறை என்று குறிப்பிடப்படுகிறது. அந்த இடத்திற்குச் சென்றால் உள்ள நோய் கூட ஆறும் என்கிறார்கள். அவ்வளவு சிறந்த இடத்தைப் பாதுகாக்க அரசாங்கம் ஏதாவது நிதி ஒதுக்கி பாதுகாக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடும்பாறை மயில் ஆடுவதற்குப் பேர்போன இடம் என்று சொன்னார்கள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள். இப்போது அங்கே மயில்கள் இருக்கின்றனவா? அவை ஆடுகின்றனவா என்று உறுப்பினர் சொல்லவில்லை.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவரவர்களே, மயிலாடும் பாறையில் மயில்கள் ஆடவில்லை என்றும், வேறு இடத்தில் ஆடுகிறது என்றும் சொல்கிறார்கள். இராமனாதபுரம் ஜில்லாவில் எங்கே பார்த்தாலும் மயில்கள் ஆடிக் கொண்டிருக்கின்றன. ஆயிரக்கணக்கான அளவுக்கு அவைகள் அபிவிருத்தியாகி இருக்கின்றன. அதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடியுமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, மனிதர்களின் இன அபிவிருத்தியைக் கட்டுப்படுத்தத்தான் திட்டம் இருக்கின்றதே தவிர, பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் இன அபிவிருத்தியைக் கட்டுப்படுத்த திட்டம் இல்லை.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: தலைவர் அவர்களே, தமிழ் கடவுள் முருகன் கோவில்களில் எல்லாம் மயிலாடும் பாறை இருப்பதை அரசு அறியுமா! எல்லா இடங்களிலும் மயிலாடும் சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறதா இராமநாதபுரம் மாவட்டத்தில் விரசோழத்துக்கு அருகாமையில் உள்ள பாறையில் மயில்களின் எண்ணிக்கை என்ன? அவை பாதுகாக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இரா. எட்மண்ட்: பேரவைத் தலைவரவர்களே, முருகன் கோவில் இருக்கின்ற இடங்களில் எல்லாம் மயிலாடும் பாறை இருப்பதாக உறுப்பினர் சொன்னார்கள். நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. திருநெல்வேலி மாவட்டத்தில் திருச்செந்தூரில் முருகன் கோவில் இருக்கிறது. ஆனால் அங்கே மயிலாடும் பாறை இல்லை.

திரு. பே. கோபாலன்: தலைவரவர்களே, நீலகிரி மாவட்டம் முதுமலைக் காடுகளில் மயில்கள் பாதுகாக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அந்த மயில்களின் தோகைகள் சுமார் அரை அடி அல்லது ஒரு அடி-தான் இருக்கிறது. அவை பெரிய அளவில் அழகாக வளர விஞ்ஞான ரீதியில் முயற்சிகள் செய்யப்படுகின்றனவா!

மாண்புமிகு திரு. க. இரா. எட்மண்ட்: பேரவைத் தலைவர் அவர்களே, பறவைகள் இயற்கையை ஒட்டி வாழ்கின்றன. இயற்கையின் அடிப்படையில்தான் அவைகளுக்கு வளர்ச்சி ஏற்படுகிறது. மயில்களின் தோகைகள் நீளமான அளவிலும், அழகான அளவிலும் வளர்க்கப்பட அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே, மக்களுடைய பாதுகாப்பைப் பற்றி நாம் அதிகம் பேசவேண்டும். ஆகவே பறவைகள், மயில்கள் ஆடுவதைப் பற்றி அதிகக் கேள்விகள் கேட்க நேரத்தை ஒதுக்கிக் கொண்டிராமல், மக்களுடைய திண்டாட்டத்தைப் பற்றி விவாதிக்க அதிக நேரம் ஒதுக்குவது பலனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் சொன்ன யோசனையை நான் மனமார வரவேற்கிறேன். அவர் சொன்ன கருத்தை நானும் உறுப்பினர்களுக்குச் சொல்கிறேன், வினா எண் 66-க்குச் செல்வோம்.

மாயூரம் நகரில் பாலங்கள்.

*66 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் கூறைநாடு திருமஞ்சன வீதியையும் பனந்தோப்பையும் இணைக்கும் இடத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே நடைப்பாதைப் பாலம் ஒன்று அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு. என். கிட்டப்பா: பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரம் நகரில் உள்ள கூறைநாடு திருமஞ்சன வீதியையும், பனந்தோப்பையும் இணைக்கும் இடத்தில் காவிரி ஆற்றின் குறுக்கே நடைப்பாதை பாலம் ஒன்று அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்டநாட்களாக எழுப்பப்பட்டு வருகிறது. அங்கே தற்காலிகமாக மூங்கில் பாலத்தை ஆண்டுக்கு 1,500 ரூபாய் செலவிட்டு நகரசபை கட்டினாலும் அது தங்குவதில்லை. எனவே இவ்வளவு பணம் விரயமாவதைக் கருதியாவது நிரந்தரமாக ஒரு பாலத்தைக் கட்டித்தர இனிமேலாவது அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அப்படி பாலம் அமைப்பதால் பயனடைவது ஒரு சிலர் தான் என்றும், அங்கே உள்ள மூங்கில் பாலம் நகரசபையால் பராமரிக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. நிரந்தரமாக பாலம் அமைப்பது இன்றியமையாததாக இருந்தால், நகரசபையின் நிதிநிலையை ஒட்டி அப்படி பாலம் அமைக்க நகரசபை அறிவுறுத்தப்படும்.

திரு. என். கிட்டப்பா: அந்தப் பனந்தோப்புக்குச் செல்ல வேண்டிய அவசியம் மாயூரம் நகரத்திற்கான பெரிய சுடுகாடு அங்கேதான் இருக்கிறது. இந்த மூங்கில் பாலம் வழி போகும் போது சமீபத்தில் அது சரியாக இல்லாததால் ஆற்றில் இறங்கி பிணத்தை அக்கரைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய சங்கடம் இருப்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு பாலத்தைக் கட்டித்தர ஆவன செய்ய முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: அவ்வாறு இன்றியமையாதது என்று கருதினால் பாலம் அமைக்கிற முயற்சியை நகராட்சி ஏற்குமாறு அரசு அறிவுரை கூறும்.

[1977 ஆகஸ்ட் 19

*67 வினா—திரு என். கிட்டப்பா: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் நகரில் காவிரி ஆற்றின் குறுக்கே உள்ள பழைய பாலத்தினை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து—இல்லை.

திரு. என். கிட்டப்பா: கும்பகோணம்—சீர்காழி நெடுஞ்சாலையில் ஏற்கனவே உள்ள இந்த பழைய காவிரி பாலம் மிகக் குறுகலாக இருக்கிறது. ஆகவே முன்னால் இருந்த அரசு மதிப்பீட்டுத் தொகை எல்லாம் தயார் செய்து அதைச் செயல்படுத்த வேண்டிய நேரத்தில் அரசு கலைக்கப்பட்டது. மதிப்பீடு எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதன் முக்கியத்துவத்தைக் கருதி, அந்தப் பாலம் நீண்ட நாட்களுக்கு முன்னதாக கட்ட வேண்டிய பாலமாதலால் அப்போதிருந்த போக்குவரத்துக்கு அன்று அது குறுகலாக அமைக்கப்பட்டிருக்கிறது—அதை இப்போது அகலப்படுத்துவதற்கு இனிமேலாவது அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நகராட்சி எல்லைக்குள் இருக்கிற இந்தப் பாலம் நெடுஞ்சாலைப் பராமரிப்பில் இருக்கிறது. இது குறுகலாக இருப்பதால், போக்குவரத்துக்கு இசைஞ்சலாக இருப்பதால் இதை அகலப்படுத்துவது அவசியம் என்று நகராட்சி ஆணையர் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இனிமேல் அது குறித்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது வரையில் எழுத்துமூலம் எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அரிசனங்களுக்கு வீட்டு வசதி.

*68 வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரிசன வீட்டு வளர்ச்சிக் கழகம் தொடங்கியது முதல் எத்தனை குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன?

(ஆ) எந்த எந்த ஆண்டின் திட்டத்தின் கீழ் முடிக்கப் பெற்றன?

1977 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: (அ) தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சிக் கழகம் தொடங்கியதிலிருந்து 30-6-1977 வரை 33,885 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

(ஆ) 1974–75, 1975–76, 1976–77 ஆண்டு திட்டங்களின் கீழ் இவ்வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன.

திரு. துரை முத்துசாமி: மாவட்டவாரியாக அல்லது தொகுதிவாரியாக அல்லது வட்டாரவாரியாக எத்தனை வீடுகள் தென் ஆர்க்காடு மாவட்டத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: 1976–77 வரையில் மாவட்டவாரியாக கட்டிமுடிக்கப்பட்ட வீடுகள், செங்கற்பட்டு மாவட்டம்—1,925; வட ஆர்க்காடு மாவட்டம்—2,758; தென் ஆர்க்காடு மாவட்டம்—3,121; சேலம் மாவட்டம்—3,125; தர்மபுரிமாவட்டம்—1,559, கோயம்புத்தூர் மாவட்டம்—2,458 நீலகிரி மாவட்டம் 520; திருச்சி மாவட்டம் 4,064; புதுக்கோட்டை மாவட்டம்—950; தஞ்சை மாவட்டம் 2,967; இராமநாதபுரம் மாவட்டம்—1437; மதுரை மாவட்டம் 2,352; திருநெல்வேலி மாவட்டம் 2,186; கன்னியாகுமரி மாவட்டம்—600. மொத்தம் 30,022 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது 1976–77 வரையில். அதற்குப் பிறகு தொடர்ந்து கட்டிக் கொண்டிருக்கிறோம்.

திரு. என். சங்கரய்யா: இந்த வீடுகள் கட்டிக்கொடுப்பதல்லாமல் மதுரை போன்ற நகரங்களில், கிழக்கு மதுரை ரெயில்வே ஸ்டேஷன் அருகில் அரிஜனங்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. அவர்களுக்கு குடியிருக்கக்கூடிய நிலம் பட்டா செய்து கொடுத்தால் போதும் என்று மனுச் செய்திருக்கிறார்கள். ஆகவே அவர்களது அந்தக் கோரிக்கையையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்வதன் மூலம் அந்த ஹரிஜன மக்களுக்கு நன்மை செய்து தர அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: அந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கலந்து பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பண்ணை கே. சேதுராம்: இந்த வீடுகள் அரிஜனங்களுக்கு மட்டும்தானா அல்லது அரிஜன சம்பந்திகளுக்கும் உண்டா? முஸ்லிம்கள், கிருஸ்தவர்கள்கூட அரிஜன வீடுகளில் சம்பந்தம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி அரிஜனங்களோடு சம்பந்தம் செய்து கொண்ட சம்பந்திகளுக்கும் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளனவா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தற்போது சம்பந்திகளும் வரலாம் போகலாம். இருக்கிற நிலத்தில் 10 சதவீதம் பின்தங்கிய மக்களுக்கும் ஒதுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9.30]

திரு. செ. சதாசிவம் : தலைவர் அவர்களே, 1976-77-ல் கட்டப்பட்ட வீடுகள் குறித்து அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1977-78-லும் தொடர்ந்து வீடுகள் கட்டப்படுமா, அப்படியானால் எத்தனை வீடுகள் கட்டப்படும் என்பதைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : 1976-77-ல் 3,863 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் தொடர்ந்து கட்டுவதற்கு முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. ஒ. சோ. வேலுச்சாமி : தலைவர் அவர்களே, இவ்விதம் கட்டிக்கொடுக்கப்படும் வீட்டின் விஸ்தீர்ணத்தை இன்னும் அதிகப்படுத்தி, அமைப்பை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டமிட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இனிமேல் கட்டப்படும் வீடுகளைப் பெரிதுபடுத்தி, புதுமாதிரியான வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம் என்பது பற்றியுள்ள ஆலோசனை அரசின் தீவிர பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு. எம். ஏ. லத்திப் : தலைவர் அவர்களே, அரிசன வீடுகள் கட்டும் வாரியத்தின் சார்பாக வீடுகளைக் கட்டும்போது எந்த அடிப்படையில் இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன? ஒவ்வொரு மாவட்டத்திலும் வீடுகள் ஒதுக்கீடு செய்யும்போது, வட்டாரியாக அல்லது தொகுதிவாரியாக கொடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பரவலாகக் கொடுக்கப்படாமல் ஒரு சில இடங்களில் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது, ஒரு சில இடங்

களில் கட்டிக் கொடுக்கவில்லை, இதற்கு என்ன காரணம் ? இதற்கு ஏதாவது அடிப்படையிருக்கிறதா? எந்த அடிப்படையில் இந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே அரசாங்கம் கையகப்படுத்தி வைத்துள்ள வீட்டு மனைகள் இருந்தால் அதற்கு முன் உரிமை கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தங்களுக்குச் சொந்தமாக வைத்திருக்கின்ற வீட்டு மனைகள் இருந்தால், அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்தால் அந்த இடங்களிலும் வீடுகளைக் கட்டிக்கொடுக்கத் தேர்ந்தெடுக்கப்படுகிறது. மேலும் எங்கு எங்கு இடம் காலியாக இருக்கிறதோ அல்லது பொதுமக்களுக்கு இடையூறு இல்லாமல் இருக்கிறதோ அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து, அரசாங்கம் இந்த வீடுகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1976-77ல் கட்டி கொடுக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையைப் பற்றிச் சொன்னார்கள். 1977-78ல் தொடந்து கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினிடத்தில் திட்டம் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். எத்தனை வீடுகள் கட்டப்படும் ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த அரசாங்கம் 1977-78க்கு இரண்டு கோடி 20 இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறது. அதோடு தேசியமயமாக்கப்பட்ட பாங்குகளிலிருந்தும் கடன்கள் பெற்று, அதை 10 ஆண்டுகளில் திருப்பித் தருகின்ற ஒரு திட்டத்தை நடை முறையில் செயல்படுத்துவது பற்றியும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. இதுபற்றி முடிவு செய்த பின்னால் எத்தனை வீடுகள் என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

திரு. எஸ். ஜே. இராமசாமி: தலைவர் அவர்களே, இப்போது கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்ற வீடுகள் சரியானதாக இல்லை. சிமிண்ட் கலவை சரியாக இல்லாததன் காரணமாக கட்டப்பட்ட வீடுகள் சரியானதாக இல்லை என்று நினைக்கிறேன். வெந்த செங்கல்கள் கிடையாது, பழுதுபட்ட செங்கல்களை உபயோகித்திருக்கிறார்கள். இதையெல்லாம் பரிசீலிக்க கண்காணிப்பாளர் ஒருவரை நியமித்து, பாடுபடும் பலனை அந்த அரிசன மக்கள் அனுபவிக்க வழி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இதுவரை கட்டப்பட்ட வீடுகள் எந்த நிலைமையில் இருந்தாலும், இனிமேல் கட்டப்படுகின்ற வீடுகள் தரமுள்ளதாகவும், சிறந்த முறையிலும் இருக்க வேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களைப் போன்றவர்கள் இதில் கண்ணும்கருத்துமாக இருந்து எங்கே தவறுகள் நடைபெறுகின்றனவோ அவைகளைக் கண்டறிந்து அரசாங்கத்திற்குத் தெரிவிப்பார்களேயானால், அதன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : பின்தங்கிய மாவட்டம் என்று அரசாங்கம் அறிவிப்பு வருவதற்கு எந்தவிதமான குறைவும் இல்லை. எண்ணிக்கையைப் பார்க்கும்போது, மற்ற மாவட்டங்களை விட பின்தங்கிய மாவட்டமாக இருக்கின்ற இராமனாதபுரம் மாவட்டத்திற்கு, 1,000, 1,200 என்றுதான் இருக்கிறது. பழையது போகட்டும், இந்தப் புதிய அரசாவது பின்தங்கிய மாவட்டங்களாக இருக்கின்ற புதுக்கோட்டை, இராமனாதபுரம், தர்மபுரி போன்ற மாவட்டங்களில் அதிகமான வீடுகளைக் கட்டுவதற்கு அக்கறை செலுத்துமா ?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இராமனாதபுரம் மாவட்டத்தில் 1976–77 வரை 1,437 வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அதற்குப் பிறகு 150 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இராமனாதபுரம் மாவட்டத்தை பின்தங்கிய மாவட்டம் என்று கருதுவதில் இந்த அரசுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. அரசாங்கம் இதைப் பற்றியெல்லாம் தீவிரமாகப் பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அரிசனங்களுக்கு கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்ற வீடுகள் எல்லாம் நகரில் இல்லை. கிராமப்புறங்களில் வெளியோரமாகக் கட்டப்பட்டு, இவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் என்று ஊருக்கு அறிவிக்கின்ற வகையில் இருக்கின்றது. இதை மாற்றி உயர்ந்த வகுப்பினர் அல்லது உயர்ந்த ஜாதியினர் வாழ்கின்ற இடத்தில் அரிசனங்களுடைய வீடுகளைக் கட்டுவதற்கு சர்க்காரின் கொள்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படுமா !

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பொதுவாக எல்லா மக்களும் வசிக்கின்ற இடங்களில் அரிசனங்களுக்கு வீடு கட்டித்தர வேண்டும் என்ற எண்ணம் அனைவருக்கும் இருக்கிறது. ஆனால் இடம் இருக்கிறதா என்று பார்த்தால் சில இடங்களில் வீடுகள் கட்டுவதற்கு இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

எங்கெங்கு இடவசதி இருக்கிறதோ அங்கு எந்தவிதமான பாரபட்சமும் இல்லாமல் அரிசனங்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லியில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாட்டிலும் இதுபற்றி தங்களுடைய கருத்தைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகம்.

* 69. வினா—திரு. எ. சுவாமிதாஸ் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில் எத்தனை பஸ்கள் ஓடுகின்றன ? அவற்றின் மூலம் தினசரி எவ்வளவு ரூபாய் வருமானமாக கிடைக்கிறது ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓடும் பேருந்துகள் இதுவரை ஓடியிருக்கும் சராசரி வருடங்கள் எவ்வளவு ?

(இ) 1976–77-ல் எத்தனை பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன ?

(ஈ) அவற்றை விற்றதில் மொத்தம் கிடைத்த வருவாய் எவ்வளவு ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் 30-6-1977 அன்று இயங்கி வந்த பேருந்துகளின் எண்ணிக்கை 277 ; இவற்றுள் 25 பேருந்துகள் உதிரிகளாக (Spares) பயன்படுபவை. அவற்றின் மூலம் 1977-ம் ஆண்டு ஜூன் மாத தினசரி வருமானம் ரூ. 1,41,687. வழக்கமாக மே மாதத்திலும் ஜூன் மாதத்திலும்தான் பேருந்துகளின் வருமானம் அதிகமாக இருக்கும்.

(ஆ) மேலே குறிப்பிட்ட பேருந்துகள் சராசரி ஓடி இருக்கும் (Average age) வருடங்கள் 7 ஆகும்.

(இ) 1976–77-ல் பயனற்றதாக ஒதுக்கப்பட்ட பேருந்துகள் 89 ஆகும்.

(ஈ) அவற்றுள் 85 பேருந்துகளை விற்றதில் மொத்தம் கிடைத்த வருவாய் ரூ. 6,06,150.

திரு. எ. சுவாமிதாஸ்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 76–77-ல் 89 பஸ்கள் பயனற்றதாக ஒதுக்கப்பட்டன என்று சொன்னார்கள். இதை ஏலத்தில் விட்டதில் கிடைத்த வருவாய் எவ்வளவு? அவைகளைப் பார்க்கும்போது எந்த அடிப்படையில் ஏலத்தைப் போட்டார்கள்? தனியார் யாருக்காவது விற்ருர்களா? அல்லது வேறுவிதமாகத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கு விற்ருர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பயனற்றதாக ஒதுக்கப்பட்ட 89 பஸ்களில் 84 பஸ்கள் ஏலத்தில் விடப்பட்டன. ஒன்று வன இலாகாவுக்குக் கொடுக்கப்பட்டது. இதன் மூலம் 6 லட்சத்து, 6 ஆயிரத்து 150 ரூபாய் கிடைத்தது. மீதியுள்ளவற்றை நல்ல முறையில் விளம்பரம் செய்து சந்திரமணி கம்பெனி மூலம் விற்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

திரு. எம். ஏ. லத்தீப்: ஏலம் விடப்பட்ட இந்த கன்டம் செய்யப்பட்ட பஸ்கள் எவ்வளவு தூரத்திற்கு ஓடியுள்ளன என்ற விவரத்தைச் சொல்ல முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 84 பேருந்துகள், 12 ஆண்டுகளுக்கு மேலாக ஓடியிருக்கின்ற காரணத்தால் உபயோகத்திற்கு ஏற்றவை அல்ல என்று ஏலத்தில் விடப்பட்டன.

திரு. ஜே. ஜேம்ஸ்: அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, சராசரி இந்த வண்டிகள் 7 வருடங்களுக்கு மேலாக ஓடியவை என்று சொல்லியிருக்கிருர்கள். அப்படியானுல் இந்த வண்டிகள் எத்தனை மைல் தூரம் ஓடிற்று என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்பு இப்போது என்னிடம் இல்லை.

திரு. எஸ். ஜே. இராமசாமி: பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் பஸ் போக்குவரத்து லாபத்தில் நடக்கிறதா அல்லது நஷ்டத்தில் நடக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நடப்பு ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கே. டி. சி. போக்குவரத்து லாபத்தில் ஓடிக் கொண்டிருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன்: பயனற்ற பஸ்கள் என்று ஒதுக்கப்படும் பஸ்களை தனியார் துறையினர் வாங்கி அதை புதுப்பித்து மேலும் பல ஆண்டுகள் ஓட்டுகிருர்கள் என்பது

அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? அவர்கள் பல ஆண்டுகள் இப்படிப்பட்ட பஸ்களை ஓட்ட முடியுமானுல், நம்முடைய பொதுத் துறையில் இந்த பஸ்கள் ஓடாமல் இருப்பதற்கு என்ன காரணம்? ஆகவே அதைப் போன்று பொதுத் துறையிலும் ஓட்டுவதற்கு முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: 12 ஆண்டுகளுக்கு மேல் ஒரு பஸ் ஓடி விட்டால் அதை மீண்டும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தக்கூடாது என்று விதி இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற யோசனையைப் பரிசீலிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[முற்பகல் 9-40]

திரு. துரை முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மக்களைப் பொறுத்தவரையில் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தால் நடத்தப்படும் பஸ்களிலே அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுவதாக பரவலாகப் பேசப்படுகிறது. இந்தப் புதிய அரசு மக்களுக்குப் புதிய பரிசாக அதிகமாக வசூலிக்கும் கட்டணத்தைக் குறைக்க ஏதேனும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி போட்டிருக்க வேண்டும். இருந்தாலும் பல்லவன் போக்குவரத்துக் கழகத்தில் தொலைதூரப் பகுதிகளுக்குச் செல்லும் பஸ் கட்டணத்தைக் குறைப்பதற்கான யோசனை அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டபொம்மன் டிரான்ஸ்போர்டில் ஒரு சில ரூட்களில் ஓவர் லோட் ஏற்றிக் கொள்ளப்படுகிறது. ஒரு சில ரூட்களில் ஓவர் லோட் இல்லாமல் ஓட்டப்படுகிறது. அதனுல், எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாக ஓட்ட ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனை ஏற்கனவே பரிசீலனையில் இருந்து வருகிறது.

சுந்திராபுரம்—நாச்சிப்பாளையம் நெடுஞ்சாலை.

* 70 வினு—திரு. அ. நடராசன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா:

[1977 ஆகஸ்ட் 19

கோவை மாவட்டம், மதுக்கரை ஒன்றியம் சுந்திராபுரம்—நாச்சிப்பாளையம் நெடுஞ்சாலையில் மதுக்கரை அருகில் குறுக்கிடுகிற ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: வினாவில் குறிப்பிட்ட இடம் குறிச்சி—நாச்சிப்பாளையம் சாலையில் 6.6 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. ஏற்கனவே ஒரு தரைப்பாலம் இந்த இடத்தில் 5.5 மீட்டர் அகலத்திற்கு உள்ளது. இந்த இடத்தில் உயர்மட்ட பாலம் கட்ட வேண்டிய ஒரு திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: தலைவர் அவர்களே, மதுக்கரையில் பாலம் கட்டும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை என்று அறிவித்திருக்கிறார்கள். அதே இடத்தில் வேறு பாலம் கட்டுவதற்கான அடிப்படையில் அரசு முன்னால் திட்டம் இருக்கிறது. அந்த அடிப்படையில் 'சேலம் டு கொச்சின். செல்லக்கூடிய 47 நெடுஞ்சாலைகள் இருக்கின்றன. சேலம் நகரின் குறுக்கே செல்லாமல் செல்லக்கூடிய ஒரு நெடுஞ்சாலை இருக்கிறது. அந்த நெடுஞ்சாலையை கோவைக்கு கிழக்கே ஒன்பதாவது மைலில் சென்னியம்பாளையத்தில் டைவர்ட் பண்ணி, மதுக்கரை செல்லக்கூடியதாக அந்த ரோடு இருக்கிறது. இந்த அடிப்படையில் இந்த ரோடு இந்த கிராமத்தின் வழியாக குறுக்கே செல்கிறது. அப்படிச் செல்லக் கூடிய இந்த இடத்தில் பாலம் அமைப்பதற்கு உத்தேசம் உண்டா என்று அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குறுக்கீட்டுப் பகுதியில் தரைப் பாலம் ஏற்கனவே இருக்கிறது. வெள்ளக் காலங்களில் பேருந்துகள் அந்த வழியாகச் செல்வதற்கு வாய்ப்பு இல்லாத நிலைமை இன்றைக்கு ஏற்பட்டு வருகிறது. எனவே, உயர் பாலம் ஒன்று கட்டுவதற்கு 5 லட்சம் செலவில் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டுத் திட்டத்தில் அதை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்த அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்புத் திட்டம்.

*71 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டம் ஒன்று தமிழக அரசினரால் செயல்படுத்தப்பட்டு வருகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

1977 ஆகஸ்ட் 19]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது:

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டத்தில் சேர நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராகவும் 100 ரூபாய் பங்குதாரராகவும் மற்றும் 55 வயது நிரம்பாதவராகவும் இருத்தல் வேண்டும். உறுப்பினர்கள் ஊதியத்தில் ரூ. 1-க்கு 6 பைசா கொடுப்புத் தொகையாகவும், அரசு ரூபாய்க்கு 3 பைசா உதவித் தொகையாகவும் இந்நிதியில் செலுத்துவர். இத்திட்டத்திலுள்ள நெசவாளர் 55 வயது நிரம்புவதற்குள் இறக்க நேரிட்டால் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து குறைந்த பட்சம் ரூ. 500 அல்லது நிதியிலுள்ள அவரது தொகைக்கு சமமான தொகை அவரது நியமனதாருக்கு வழங்கப்படும்.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் பயன்பெற்ற நெசவாளர்கள் 1976-77ல் எத்தனை பேர்கள் என்பதை அறிவிக்க இயலுமா

மாண்புமிகு திரு கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தின் கீழ் 57 ஆயிரம் உறுப்பினர்கள் இதுவரை சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 31 ஆயிரம் ரூபாய் இதுவரை இறந்த 57 பேர்களுக்குப் பணமாக வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி: இந்தச் சேமிப்புப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் நெசவாளர்கள் சேர்த்து வைக்கின்ற பணம், பல இடங்களிலே கூட்டுறவு சங்கங்கள் செயல்படாமல் கலைக்கப்படுகிற நிலைமை இருப்பதால், அவர்கள் போட்டுள்ள 100, 200 ரூபாயைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அப்படி அவர்கள் செலுத்திய பணத்தையும், அதோடு அரசாங்கம் போட்டுத் தரவேண்டிய பணத்தையும் திருப்பித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: சங்கங்கள் செயல்படாமல் இருந்தாலோ, அல்லது செலுத்திய பணத்தை திரும்பப் பெறவேண்டுமென்று உறுப்பினர்கள் விரும்பினாலோ, அவர்கள் செலுத்திய பணத்திற்கு ஈடாக அரசாங்கம் கொடுக்கும் பணத்தையும் இரண்டுக்குமாக 7 சதவீத வட்டியும் சேர்த்துக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. டி. இராமசாமி : தலைவரவர்களே, பல கூட்டுறவு சங்கங்களிலே லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான துணிகள் தேங்கிக் கிடக்கின்றன. அதன் காரணமாக நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு அந்த சொசைட்டிகள் பங்ஷன் செய்ய முடியாத நிலையில், தறிகளுக்கு நூல் வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில் தறிகளுக்கு நூல் இல்லாமலும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அப்படித் தேங்கிக் கிடக்கும் துணிகளை ப்ரோகியூர் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவரவர்களே, இது நெசவாளர்கள் சேமிப்பு நிதி பற்றிய கேள்வி. அதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களிலே உள்ள தொழிலாளர்களுக்கு இந்த உதவி கொடுக்கப் போகிறார்கள். கைத்தறித் துறை நெசவாளர்கள் அனைவருக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பலன் அளிக்கக் கூடிய முறையில் அரசு செய்ய முன் வருமா ?

இரண்டாவதாக, அவர்கள் இன்று 6 பைசா செலுத்தினால் அரசு 3 பைசா செலுத்துவது என்பதற்குப் பதிலாக அவர்கள் செலுத்தும் தொகை அளவுக்கு அரசு நிதி கட்டினால், அதோடு எல்லாத் தொழிலாளர்களுக்கும் கொடுத்தால் அதனால் கைத்தறி நெசவாளர்களுக்கு ஓரளவுக்கு சேமிக்க வாய்ப்பு ஏற்படும். அதை அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத்தலைவரவர்களே, உறுப்பினருடைய யோசனையை அரசு யோசித்து பரிசீலிக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தில் ரூ. 500 பாதுகாப்பு நிதி என்று சொன்னார்கள். ஆனால் இது சேமிப்புத் திட்டம் அல்ல, பாதுகாப்புத் திட்டம். ரூ. 500 என்று கூறுகிற நேரத்திலே ஒருவர் இறந்து விடுகிற நேரத்தில் ரூ. 500 என்பது மிகக் குறைவு. ஆகவே, தொழிலாளர்கள் கட்டும் 6 சதவிகிதத்தை 10 சதவிகிதம் என்றும், அரசு செலுத்தும் 3 சதவிகிதம் என்பதை 5 சதவிகிதம் என்றும், வைத்து, அந்தச் சேமிப்பு நிதி 500 என்பதை, ரூ. 1,000 என்று அதிகமாக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : பேரவைத் தலைவரவர்களே, நெசவாளர்களிடமிருந்து இது பற்றிய விண்ணப்பங்கள் வந்து இருக்கின்றன. அதை அரசு பரிசீலித்து வருகிறது. நல்ல முறையில் யோசித்து முடிவு எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (உடுக்குறி) * இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்புகள்.

உரிமைக் குழுவுக்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1977–78-ம் நிதி ஆண்டுக்கான உரிமைக் குழுவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பதினொன்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட பதினொரு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்.—

1. திரு. சி. கோவிந்தராசன்
2. திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா
3. திரு. க. சுப்பு
4. திரு. கோ. ரகோத்தமன்
5. திரு. கே. வடிவேலு
6. திரு. ஆர். சந்திரசேகரன்
7. திரு. யா. சை. மு. யூசுப்
8. திரு. க. ந. க. இராமசாமி
9. திரு. வ. மு. சுப்பிரமணியன்
10. திரு. எம். ஏ. ஜெயவேலு
11. திரு. சௌ. வே. வரதராஜன்.

முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட பதினொரு உறுப்பினர்களும் இக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

மேலும் மூன்று உறுப்பினர்களை இக்குழுவிற்குத் தேர்ந்தெடுப்பதற்கு முறைப்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. அறிக்கை அளித்தல்.

(அ) புதுக்கோட்டை கூட்டுறவு அச்சக வேலைநிறுத்தம் குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, நேற்று, பேரவைக்கு 41-வது விதியின் கீழ் அறிவிப்பு கொடுத்து இருந்த உறுப்பினர்கள் இல்லாததால் அந்தப் பொருள் குறித்து பேரவையின் 82-வது விதியின் கீழ் புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகத்தில் வேலைநிறுத்தம் குறித்து தொழிலாளர் நலத்துறை அமைச்சர் ஒரு அறிக்கை அளிப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : புதுக்கோட்டை கூட்டுறவு அச்சகத்தில் 94 தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர். புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவுத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் 25-6-1977 தேதிய கடிதத்தின் மூலம், (1) சம்பள விகித மாற்றம், (2) அகவிலைப்படி அரசு அலுவலர்களுக்கு உள்ளதுபோல் வழங்குதல், (3) மாதத்திற்கு ரூ. 5 சலவைப்படி வழங்குதல், (4) திரு. சி. சுப்பிரமணியசாமியை வேலைக்குத் திரும்ப எடுத்துக் கொள்ளுதல், (5) போனஸ் 20% (6) ஊதிய உயர்வு 12 தொழிலாளர்களுக்குக் கொடுத்தல் ஆகிய கோரிக்கைகளை புதுக்கோட்டை கூட்டுறவு அச்சக நிர்வாகத்திடம் எழுப்பியுள்ளார். நிர்வாகத்தினருடன் நடைபெற்ற நேரிடைப் பேச்சுவார்த்தை பயனளிக்காததால் தொழிற் சங்கம் வேலை நிறுத்த அறிக்கையை 6-7-1977 அன்று அனுப்பியது. அதில் மேற்படி கோரிக்கைகளைப் பற்றி 20-7-1977-க்குள் உடன்பாடு ஏற்படாவிடில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. தொழிலாளர் துறை அலுவலர் இருதரப்பினருடனும் 18-7-1977, 30-7-1977 தேதிகளில் பேச்சு வார்த்தை நடத்தினர். ஆனால் எந்தவிதமான உடன்பாடும் ஏற்படவில்லை. இதனால் 3-8-1977 காலை 8.30 மணி முதல் தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். இந்நிறுவனத்தில் உள்ள 94 தொழிலாளர்களில் 75 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். திருச்சி தொழிலாளர் துறை துணை ஆணையாளர் இத்தொழிற் தகராறில் ஓர் தீர்வு காண மேற்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியதன் பலனாக 13-8-1977 அன்று ஒப்பந்தமாகி வேலைநிறுத்தம் பின் வாங்கப்பட்டு விட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-50).

4 ஒத்திவைப்புத் தீர்மானம்.

கரூரில் நெசவாளர்கள் போராட்டம் நடத்துவது குறித்தும், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்டநிலை குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; அடுத்து ஒத்தி வைப்புத் தீர்மானம். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜேம்ஸ், திரு. கந்தசாமி, திரு. சுப்பு, திரு. சதாசிவம் ஆகியவர்கள் 42-வது விதியின் கீழ்—

'that the weavers picketed before the Government Offices at Erode on 16th, 17th and 18th placing before the Government certain demands, Hundreds of people including M.Ps. and Ex. M.L.As. were arrested and the tense situation prevailing in that locality. , என்

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசர முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப்பற்றிச் சுருக்கமாக திரு. ஜேம்ஸ் அவர்கள் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு ஒரு சந்தேகம். இது கரூரைப் பற்றியதா அல்லது ஈரோட்டைப் பற்றியதா ? ஈரோடு என்று எழுதி இருக்கிறீர்கள். அதைத் திருத்திக் கொள்ளலாம் அல்லவா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : சரி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆல்ரைட்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஏற்கனவே கரூரைப் பற்றிய ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை முந்தாநாள் கொடுத்தோம். தலைவரவர்கள் தீர்ப்புச் சொல்லும்பொழுது ஏற்கனவே அந்த டிமாண்ட் வருவதால் அதிலே பேசிவிடலாம் என்று சொல்லியிருந்தீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் புரிந்து கொண்டேன். அன்றைக்குக் கைத்தறி, பஞ்சாலை மானியக் கோரிக்கை வந்தபொழுது அதைப்பற்றிப் பேசுகின்ற வாய்ப்பு இருந்தது. அதோடு தீர்ந்து விடும் என்று கருதியிருந்தேன். ஆனால் மேலும் தீவிரப்படுத்தி போராட்டம் இருப்பதால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளலாம் என்ற நிலை வந்ததே தவிர, அன்றைக்குக் கொடுத்த உறுப்பினர்களின் உரிமையைப் பறித்ததாகப் பொருள் அல்ல. அன்றைக்குச் சொல்லும் வாய்ப்பு இருந்தது. மானியத்திலே பேசுகின்ற வாய்ப்பு இருந்தது. ஆனால் அது முடிந்த பிறகும் நின்றபாடில்லை. ஆகவேதான் இப்பொழுது ஏற்றுக்கொண்டிருக்கிறேன்.

கூத்தகுடி திரு. ச. சண்முகம் : தலைவரவர்களே, நேற்றைய தினம் ஒப்பந்தம் ஆகிவிட்டது என்று சொல்கிறார்கள். அப்படியிருக்கும்பொழுது ஏன் எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற கேள்வியைக் கேட்க விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைக்குப் பிறகு கொடுத்த தீர்மானம். 82-வது விதியின்கீழ் ஸ்டேட்மென்ட் விடச் சொல்லியிருந்தேன். ஆனால் உறுப்பினர்கள் கொடுத்த தீர்மானங்கள் என்ன ஆயிற்று என்று கேட்கும்பொழுது அந்தத் தீர்மானங்களையும் ஒத்துக்கொண்டு, அதற்கும் கொடுத்தாற்போல் இருக்கட்டும் என்று ஒத்துக் கொண்டேனே தவிர வேறொன்றுமில்லை. இதைச் சொன்னபிறகு அதே ஸ்டேட்மென்டைக் கொடுக்கப் போகிறார்கள். உறுப்பினர்களின் வாய்ப்பை இழக்கச் செய்யாமல் இருக்க வேண்டுமென்று நான் எடுத்துக் கொண்ட முயற்சி இது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கரூர் பகுதியில் ஏறத்தாழ 35,000-க்கும் அதிகமான நெசவாளர்கள் அண்மைக் காலங்களில் விசைத்தறிகள் அங்கே புகுத்தப்பட்டதாலே....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர்கள் கொஞ்சம் என்னோடு ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் இதுபற்றி செட்டில்மெண்ட் ஆகிவிட்டது. அமைச்சரை சொல்லச் சொல்லுங்கள் என்று சொல்லிவிட்டு உட்கார்ந்து விட்டால் நல்லது. மேற்கொண்டும் இதில் பேசாமல் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, முக்கியமான கோரிக்கைகளை வைத்து இவர்கள் போராட்டம் நடத்தினார்கள். ஏற்கனவே அவர்கள் பல பேச்சுவார்த்தைகள் வழியாக இந்தப் பிரச்னைகளுக்குத் தீர்வு காண முடியாமல் போராட்டம் நடத்தினார்கள். ஆயிரத்திற்கும் அதிகமான நெசவாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கைதானார்கள். ஆகவே, இன்றையதினம் அந்தப் பிரச்னை முடிவுற்றதாக நான் கேள்விப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு சுமுகமான முடிவுக்கு வந்ததற்குப் பிறகு இது குறித்து விதி 82இன்படி அமைச்சரவர்கள் அறிக்கை சமர்ப்பிக்க இருக்கும்பொழுது பழையதையே கிளறிக் கொண்டிருப்பதில் அவ்வளவு தேவை இருக்கிறதா என்பதைத் தேவையான பிரச்னைகளில் கருத்தூன்றிக் கவனம் செலுத்தும் திரு. ஜேம்ஸ் அவர்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அமைச்சரை விடுங்கள். அமைதியாக இருங்கள்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். தாங்கள் கொடுத்ததைப் பற்றிச் சொன்னேன். அதற்குப் பிறகு 82-வது விதியின்கீழ் அறிக்கை சமர்ப்பிக்க

இருக்கிறார்கள். தாங்கள் கொடுத்ததைப் பற்றிச் சொன்னதற்குப் பிறகு விளக்கம் தேவையில்லை என்று கருதி அமைச்சரவர்களை 82-வது விதியின் கீழ் அறிக்கை விடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். எங்களுக்கு ஒன்றும் ஜோஸ்யம் தெரியாது. என்ன முடிவு ஏற்பட்டிருக்கிறது....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவைத் தலைவரவர்கள் சொன்னதற்குப் பிறகு ஏற்றுக் கொள்ள வேண்டும். ஜோஸ்யம் என்றெல்லாம் பேச வேண்டாம். நான் சொல்லியாகிவிட்டது.

(திரு. சுப்பு நின்று கொண்டிருந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து உறுப்பினர் சொல்வதைக் கேட்க வேண்டும். இப்பொழுது நிலைமை சுமுகமாகி இருக்கிறது. இப்பொழுது அமைச்சர் அறிக்கை கொடுக்கப் போகிறார் என்று நான் சொன்னதுகூடத் தெரியாது என்றால் எப்படி ?

திரு. க. சுப்பு : ஒரு பிரச்னையைப் பற்றி...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அதைக் கிளப்ப வேண்டாமென்று நினைக்கிறேன்.

திரு. க. சுப்பு : ஒரு பிரச்னை முடிவுற்றதா, இல்லையா என்ற விவரம் உறுப்பினர்களுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது என்று சொன்னால், அந்தப் பிரச்னை முடிந்துவிட்டது என்று எங்களுக்குத் தெரியும். ஆனால், பத்திரிகையிலே வந்திருப்பதிலே, நெசவாளர்கள், மேலும் போராட்டத்தை வலுப்படுத்துகிறார்கள் என்று எங்களுக்கு விவரம் தெரிகிறது. நீங்கள் ரூல் 82 அறிக்கை என்று சொன்னால், அது இம்பிராப்பர்...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொன்னேன், அது சுமுகமாகிவிட்டது. அமைச்சர் அறிக்கை தருகிறார் என்று நான் சொன்ன பிறகு, எங்களுக்கு ஜோசியம் தெரியுமா, பத்திரிகையிலே வந்திருக்கிறது என்று சொல்வதென்றால் எப்படி ? அவைத் தலைவர் சொல்கிறார். நீங்கள் கேட்கவேண்டாமா ?

திரு. க. சுப்பு : விதி 42-ஐ நீங்கள் அலவ் பண்ணி, அவர் சொல்ல ஆரம்பித்துவிட்டார். பிறகு எப்படி ரூல் 82-ன்கீழ் கொண்டு வரமுடியும் ? (மணியடிக்கப்பட்டது) There cannot be any debate under Rule 82..........

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: I am on a point of order, Sir. இப்பொழுது ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருப்பது, நம்முடைய ஜனதா கட்சி தலைவர் மாண்புமிகு உறுப்பினர் ஜேம்ஸ் அவர்கள். அவர்தான் பிரச்னை......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் 3 பேர், 4 பேர் கொடுத்திருக்கிறார்கள்.

திரு. க. சுப்பு: ஆன் எ பாய்ன்ட் ஆப் ஆர்டர், சார், பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது நான் ரூல்ஸுக்குள்ளே நிற்கிறேன். ரூல் 42-லே அனுமதி கொடுத்து, பொருளை வாசித்து, விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னீர்கள்......................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவு செய்து உட்காருங்கள். பணிவோடு நான் சொல்கிறேன். உங்களுடைய உரிமைகளைப் பறிக்கிறேன் என்ற பொருள்படும்படி சொல்கிறீர்கள். நான், சுமுகமாகிவிட்டது, அமைச்சர் அறிக்கை தருகிறார் என்று சொன்னபிறகு, நீங்கள் இப்படிக் கிளப்பிக் கொண்டிருந்தால், இனிமேல் ரூல் 42-ஐ அவைத் தலைவர் எச்சரிக்கையோடு எடுக்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

திரு. க. சுப்பு: என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்லிவிடுகிறேன். ஒரு மெம்பர் ரூல் 42-ல் மூவ் பண்ண அலவ்பண்ணி, மாண்புமிகு ஜேம்ஸ் பேசிக்கொண்டிருக்கும் போது, அவை முன்னவர் ரூல் 82-ல் அறிக்கை என்கிறார். ரூல் 42-ல் இருப்பதை விட, ரூல் 82லே எங்களுடைய உரிமைகள் ரொம்பக் குறைவாக இருக்கிறது. There cannot be any debate under Rule 82 பேசவும், கருத்துக்களைச் சொல்லவும் ரூல் 42-லே அதிகமான உரிமைகள் இருக்கின்றன. ரூல் 42-லேயென்றால், எப்படிப் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமென்று ஆலோசனைகள் சொல்வோம். ரூல் 82 என்றால், அமைச்சரவர்கள் அறிக்கை தருவார்கள். அதற்கு மேலே விளக்கம் பெற முடியாது. ரூல் 42-ல் அமைச்சர் விளக்கம் சொன்ன பிறகு, நாங்கள் கேள்வி கேட்டு, பிறகு முடிவு சொல்வீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து அமருங்கள். அவைத் தலைவர் அனுமதி கொடுத்து விடுவதாலேயே, எடுத்ததற்கெல்லாம் உரிமை கொடுத்திருக்கிறேன் என்று அர்த்தம் அல்ல. ரூல் 42-ல் சொல்ல அனுமதித்தேன் என்றால், இரண்டு மணி நேரம் பேசுவது என்று அர்த்தம் அல்ல. இவ்வளவு

உரிமை உங்களுக்கு நான் கொடுத்த பிறகு, சுமுகமாகியிருக்கிறது, அமைச்சரவர்கள் அறிக்கை கொடுப்பார் என்று சொன்ன பிறகு நீங்கள் பேசுவீர்கள் என்று சொல்வது நல்லதல்ல. இந்தப் பிரச்சினையை நீங்கள் பெரிதாக்க விரும்பினால், நான் வேதனைப் படுகிறேன்.

திரு. க. சுப்பு: ரூல் 42-ஐ அலவ் பண்ணி.......

The Hon. Thiru G. R. EDMUND: Mr. Speaker, Sir, a point of order can be raised only with regard to the procedure of the House and not on the ruling of the Chair. The Hon. Member is raising a Point of order against the ruling of the Chair.

திரு. க. சுப்பு: நான் சொல்வது, 42-வது விதியின்கீழ் எங்களைப் பேசுவதற்கு அழைத்துவிட்டு, பிறகு ஒரு மாண்புமிகு உறுப்பினர் எழுந்து நின்று விளக்கம் சொல்ல அனுமதித்து விட்டு, இடையில் 82-வது விதியின்கீழ் அறிக்கை வைப்பது என்பது சரியல்ல, முறையல்ல.

The Hon. Thiru G. R. EDMUND: Sir, a member cannot give a ruling. He has no power to give a ruling. He cannot give a ruling.

Thiru K. SUPPU: I have a right to raise a point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பவும் நான் அனுமதி தராமல் மறுக்கலாம். பாயின்ட் ஆப் ஆர்டருக்கு அனுமதி தரவில்லையென்றால், உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்கு அர்த்தம் இல்லாமல் போய்விடும். நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பும்போதே, பின்னாலே பாயின்ட் ஆப் ஆர்டர் இல்லையென்று சொல்வதை விட, என்ன சொல்வீர்கள் என்று தெரிகிற பொழுது, முன்னாலேயே அனுமதிக்காமலிருக்கலாம். ஆகவே, என்னவென்று முன்னாலேயே தெரிந்து கொள்ள முடியுமானால் அனுமதிப்பேன், இல்லையென்றால் இல்லை. தயவு செய்து இந்த உறுப்பினர்களுடைய பெயரை........(திரு. க. சுப்பு உட்கார்ந்து கொண்டே குறுக்கிடு) தயவுசெய்து உட்கார்ந்து கொண்டே கொடுத்தீர்கள் என்று சொல்லாதீர்கள்.

திரு. க. சுப்பு: நான் பாயின்ட் ஆப் ஆர்டரைச் சொல்கிறேன். அவருடைய பெயரை நீங்கள் சொல்லி அவர் சொல்ல ஆரம்பித்த பிறகு, நீங்கள் அவரை உட்காருங்கள் (குறுக்கீடு) நான் சொல்லி விடுகிறேன். இன்று முதலிலே..........

திரு. கே. கந்தசாமி: தயவு செய்து சபாநாயகர் மரபைக் காக்க வேண்டும்; உரிமையைக் காக்க வேண்டும்........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது சரியானதல்ல, நான் இருக்கிற நிலைமையைச் சொன்ன பிறகு, தகராறு செய்வேன் என்று சொல்வது சரியல்ல.

திரு. க. சுப்பு: தகராறு ஒன்றும் இல்லை. விதியைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் பஞ்சாலைகள் துறை அமைச்சர், விதி 82-ன் கீழ் அறிக்கை கொடுப்பார்.

[முற்பகல் 10-00]

3. அறிக்கை அளித்தல்—தொடர்ச்சி.

(ஆ) கரூரில் நெசவாளர்கள் போராட்டம் நடத்துவது குறித்து கைத்தறி-பஞ்சாலைகள் துறை அமைச்சர் அளித்த அறிக்கை.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: பேரவைத் தலைவர் அவர்களே, கரூரில் தனியார் துறையில் செயல்படும் நெசவாளர்கள் கீழ்க்கண்ட கோரிக்கைகளை முன்வைத்து 16-8-1977 முதல் தாலுக்கா ஆபீஸ், போஸ்ட் ஆபீஸ் முன்பு மறியல் போராட்டம் நடத்தி வருகிறார்கள்.

(1) தனிப்பட்ட கைத்தறி உற்பத்தியாளர்கள் கைத்தறி தொழிலாளர்களுக்கு வேலை கொடுக்காமல் விசைத் தறிகளில் முறுக்கு நூலைப் பயன்படுத்தி பெட்சீட் ரகங்களைத் தயாரிப்பதைத் தடை செய்ய வேண்டும்.

(2) கைத்தறி நெசவாளர்களுக்கு முழு வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும்.

(3) வேலை வாய்ப்பு இல்லாமையால் பாதிக்கப்பட்ட நெசவாளர்களுக்கு அரசு தலா ரூ. 200 கடனாகவும் மான்யமாக ரூ. 100-ம் வழங்க வேண்டும்.

(4) கைத்தறி நெசவாளர்களுக்கு தொழில் சம்பந்தமாக சட்டப் பாதுகாப்பு அளிக்க வேண்டும்.

இது பற்றி தகவல் கிடைத்தவுடன் கரூரில் உள்ள இரண்டு முக்கிய மாஸ்டர் வீவர்கள் சங்கங்களுடன் தொடர்பு கொண்டு மாஸ்டர் வீவர்கள் அவர்களின் கீழ் வேலை செய்யும் நெசவாளர்களுக்கு முழுமையான வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும் என்றும், பெட்சீட் ரகங்களை விசைத் தறிகளில் நெய்வதை நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தலைவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களை சென்னைக்கு வந்து கைத்தறி அமைச்சர், கைத்தறி இயக்குநர் முதலியோருடன் இது பற்றி விவாதிக்கும் படியும் அழைக்கப்பட்டனர்.

18--8--1977 அன்று திருவாளர்கள் கே. கோபால், எம்.பி., கே. வடிவேலு, எம். எல். ஏ., எஸ். சதாசிவம், எம். எல். ஏ., மற்றும் கே. எஸ். இராமசாமி, பரமத்தி சண்முகம், என். பழனிசாமி, என். ஆர். நல்லசாமி, பி. சிவசாமி, கே. பி. இராமசாமி, பி. கே. சுப்பிரமண்ய பிள்ளை ஆகிய போராட்டக் குழு உறுப்பினர்களும் சென்னையில் கைத்தறி இயக்குநர், திருச்சி மாவட்ட ஆட்சி தலைவர் ஆகியோருடன் பூர்வாங்க விவாதம் நடத்தி விட்டு கைத்தறி அமைச்சர் அவர்களையும் சந்தித்து விவாதித்தனர். அதோடு அண்ணா தி.மு.க. தொழில் சங்கப் பொதுச் செயலாளர் திரு. வை. பெருமாள், பேரவை கைத்தறிப் பிரிவு செயலாளர் அனகாபுத்தூர் இராமலிங்கம் ஆகியோரும் அமைச்சரைச் சந்தித்து இது பற்றிப் பேசினார்கள். அப்போது கைத்தறி அமைச்சர் தற்போதுள்ள ரக ஒதுக்கீடு ஆணைகளிலுள்ள குறைபாடுகளை அகற்றுவதற்கு மாநில அரசு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.

குறிப்பாக கரூரில் தயாராகும் பெட்சீட், முறுக்கு நூலைக் கொண்டு தயாரிக்கும் ரகங்கள் ஆகியவைகளை விசைத் தறிகளில் உற்பத்தி செய்வதைத் தடுக்கும் வண்ணம் ஒதுக்கீடு ஆணைகளை மாற்றி அமைக்க தமிழ்நாடு அரசு வலியுறுத்தும் என்றும் சொன்னார். மேலும் கைத்தறித் துறை கைத்தறிக்கென ஒதுக்கப்பட்ட ரகங்களை விசைத் தறிகளில் தயாரிப்பதைத் தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளும் என்றும் அமைச்சர் உறுதி அளித்தார். மேலும் கரூரில் உற்பத்தியாளர்கள் நெசவாளர்களுக்குத் தொடர்ந்து முழு வேலை வாய்ப்பு அளிக்கவும், பெட்சீட் ரகங்களை விசைத் தறிகளில் உற்பத்தி செய்வதைத் தடுக்கவும், 20-8-1977 அன்று கைத்தறி இயக்குநர், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் உற்பத்தியாளர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தி வலியுறுத்துவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது. கைத்தறி நெசவாளர்களுக்கு சட்டப் பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்ற குழுவின் கோரிக்கை சம்பந்தமாக அமைச்சர் கைத்தறி வாரியம் ஒன்று நிறுவி கூட்டுறவுத் துறை மற்றும் தனியார் துறையிலுள்ள நெசவாளர்களுக்குத் தொழில் பாதுகாப்பு அளிக்க அரசு செய்துள்ள முடிவைச் சுட்டிக் காட்டி இது சம்பந்தமாக குழு தனது கருத்துக்களைத் தெரிவித்தால் அரசு பரிசீலிக்கும் என்றும் தெரிவித்தார். இந்தப் பேச்சு வார்த்தைகளின் பலனாக போராட்டக்குழு உறுப்பினர்கள் தங்கள் போராட்டத்தை நிறுத்தி வைத்துள்ளனர்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 41(3)-ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து பேரவையில் 41-வது விதியின் கீழ், இரண்டுக்கு மேற்பட்ட தீர்மானங்களை அவையில் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் விதியைத் தளர்த்தும் தீர்மானத்தை முன் மொழி வார்கள்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

> ''தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை நடைமுறை விதி 41 (3) இன் கீழ் ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட பொருள்களை கவன ஈர்ப்புக்குக் கொண்டு வரக்கூடாது என்ற விதியை இன்று தளர்த்த வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமன தாக நிறைவேற்றப் பெற்றது.

6. கவன ஈர்ப்பு.

(அ) கன்னியாகுமரி மாவட்டம் லட்சுமிபுரம் கல்லூரி ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கப்படாமையினால் வேலை நிறுத்தம் செய்துள்ளதன் நிலைமை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் டி. ஞானசிகாமணி, ஆர். கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், பொ. விஜயராகவன், ஆர். ஆதிசாமி, ஜே. ஜேம்ஸ் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்டம் லட்சுமிபுரம் கல்லூரி பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். இவர்களில் யாரேனும் ஒருவர் பேசினால் போதும்.

கூத்தகுடி திரு. ச. சண்முகம்: பாயின்ட் ஆப் ஆர்டர். நேற்றைக்கு முந்தைய நாள் ரொம்பக் கடுமையான விவாதம் நடந்தது. ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தால் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பிறகு எடுத்துக் கொள்கிறேன் என்று நீங்கள் தீர்ப்புக் கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் இன்றைக்கு எடுத்துக் கொள்ளவில்லை. எப்போது ஒத்தி வைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்வீர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைத் தலைவர் அப்படி ஒரு தீர்ப்பைச் சொல்லவே இல்லை. இன்றைய வரையிலே முதலிலே உரிமை மீறல் பிரச்சினை, அதற்குப் பிறகு ஒத்திவைப்புத் தீர்மானம், அதற்குப் பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம், அப்படித் தான் இருக்கிறது. இப்படித்தான் கடைப்பிடித்து வருகிறோம். ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்து விட்டது.

கூத்தக்குடி திரு. ச. சண்முகம்: தலைவர் அவர்களே, கவன ஈர்ப்பு என்பது வழக்கமான முறையில் சகலமானதையும் ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று அப்படி ஒரு கடுமையான வாதம் நேற்றைக்கு முன்தினம்................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி இல்லை. ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்குப் பிறகு கவன ஈர்ப்புத் தீர்மானம். அதன் பிறகுதான் அலுவல்கள் என்று வைத்திருக்கிறோம். அதன் படி இப்போது நடந்து கொண்டு வருகிறது. உங்களுடைய ஒத்திவைப்புத் தீர்மானம் வரவில்லை என்கிறீர்களா?

கூத்தக்குடி திரு. ச. சண்முகம்: ஆம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப் பற்றி என்னுடைய அறையில் வந்து கேளுங்கள். என்ன விவரம் என்பதை அங்கே சொல்கிறேன்.

திரு. தே. ஞானசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், லட்சுமிபுரம் கல்லூரியில் பணி யாற்றும் ஆசிரியர்கள், ஆசிரியரல்லாத பிற பணியாளர் களுக்குக் கடந்த 13 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாமை யால் அவர்கள் 28--7--1977 ஆம் தேதியன்று அடையாள வேலை நிறுத்தம் செய்துள்ளதன் விளைவாக அப்பகுதியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூர் இலக்குமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி 1964-ல் தொடங்கியது. 1974 ஆம் ஆண்டு கல்லூரி நிர்வாகத்ினருக்குள் பிளவு ஏற்பட்டு இரு பிரிவாக செயல்படத் தொடங்கினர். இந்நிலையில் கல்லூரியின் நிலையைச் சீராக்கும் பொருட்டு அரசு தலையிட்டு, அக்கல்லூரியை 4--2--1975 முதல் அரசு எடுத்துக் கொண்டு நாகர்கோவில் முதன்மை கல்வி அலுவலரை (Chief Educational Officer) பாதுகாப் பாளராக (Care-taker) நியமித்தது. அது முதல் கல்லூரி, செவ்வனே நடைபெற்று வருகிறது. தற்போது எல்லா ஆசிரியர் களுக்கும் அலுவலர்களுக்கும் சம்பளம் முறையாக வழங்கி வரு கிறது.

ஆனுல் கல்லூரி மேற்கொண்ட நேரத்தில், முந்தைய நிர்வாகம் ஆசிரியர்களுக்கு 13 மாதம் (1-1-1974 முதல் 31—1—1975 வரை) சம்பளம் கொடுக்காமல் இருந்தது. பழைய 13 மாத சம்பளப் பாக்கியைத் தருவது நிர்வாகத்தினரின் பொறுப்பாகும். அரசு அந்தப் பணத்தை ஆசிரியர்களுக்குத் தருவது இயலாத காரியமாகும். மேலும் அக்கல்லூரியை மீண்டும் நிர்வாகத்தினருக்கே திருப்பித் தந்து விடலாமா என்பது பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. முந்தைய தாளாளர் இது குறித்து அரசு மீது சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து நீதி விசாரணையில் உள்ளது. அதன் மீது நீதி மன்ற முடிவை அரசு எதிர்பார்க்கிறது. அதன் பிறகு ஆசிரியர்களது பழைய சம்பள பாக்கிக் கோரிக்கையைப் பற்றி முடிவு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

திரு. பொ. விஜயராகவன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் அளித்தபோது, கல்லூரியை மீண்டும் முன்னுல் இருந்த நிர்வாகத்துக்கு அளித்துவிடலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிருர்கள். அங்கேயிருக்கின்ற சிக்கல், அந்தக் கல்லூரியை முன்னுல் நடத்தி வந்த நிர்வாகம் ஒழுங்காக நடத்த முடியாத சூழ்நிலை இருப்பதால், அரசே ஏற்று நடத்துகின்ற சூழ்நிலையை உருவாக்குமா? 13 மாத காலமாகக் கொடுக்கப்படாத சம்பளத்தை நிர்வாகத்திடமிருந்து எடுத்துக் கொடுக்க அரசாங்கம் முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இவையெல்லாம் உயர் நீதி மன்ற விசாரணை முடிந்த பிறகு பரிசீலிக்கப்படும்.

(ஆ) மாநில முழுவதிலும் நிரப்பப்படாமல் உள்ள பல இளநிலை ஆசிரியர்கள் பதவிகளை வேலையில்லாமல் உள்ள இடைநிலை ஆசிரியர்களைக் கொண்டு நிரப்புதல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து திரு. ஜேம்ஸ் அவர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு பிரச்சினையைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இளநிலை ஆசிரியர்கள் கிடைக்காத காரணத்தால் நிரப்பப்படாமலுள்ள பல இளநிலை ஆசிரியர்களின் பதவிகளை இம்மாநிலம் முழுவதிலும் ஆயிரக்கணக்கில் வேலையில்லாமல் உள்ள இடைநிலை ஆசிரியர்களைக் கொண்டு நிரப்ப வேண்டிய அவசியம் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தமிழ்நாட்டிலுள்ள
ஆரம்ப நடுநிலைப் பள்ளிகளில் இளநிலை ஆசிரியர்
(Higher Grade) இடைநிலை ஆசிரியர் (Secondary Grade)
என்ற இருவகை ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிருர்கள்.
இளநிலை ஆசிரியர்கள் பணியிலிருக்கும்போதே தனிப்பட்ட
முறையில் பள்ளியிறுதி தேர்வு பெற்று இடைநிலை
ஆசிரியர் தேர்வில் பயிற்சி பெற்று தம் தகுதியை உயர்த்திக்
கொள்ள வாய்ப்பு உள்ளது. 1967ஆம் ஆண்டு முதல், அரசு
பள்ளிகளில் உள்ள இளநிலைப் பணியிடங்களை இடைநிலைப் பணி
யிடங்களாக உயர்த்தி அப்பணியிடங்களில் இடைநிலை ஆசிரிய
ராகத் தகுதி பெற்றிருந்தும் இளநிலைப் பணியிடங்களில் பணி
புரியும் ஆசிரியர்களை உட்கொள்ளுவதற்கான திட்டமொன்றைப்
படிப்படியாகச் செயல்படுத்த ஆரம்பித்து, இத்திட்டத்தின்
கீழ் 1967-68 முதல் 1970-71 வரை 19,500 இளநிலைப் பணி
யிடங்கள் இடைநிலைப் பணியிடங்களாக உயர்த்தியது. (1976-
77ஆம் ஆண்டுவரை 39,950 இளநிலை ஆசிரியப் பதவிகளை இடை
நிலை ஆசிரியப் பணியிடங்களாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளது.
1977-78-ல் 1,500 இளநிலைப் பதவிகளை இடைநிலைப் பதவிகளாக
தரமுயர்த்தப்பட விருக்கிறது. இன்னும் 33,420 இளநிலை ஆசிரிய
பணியிடங்கள் தரமுயர்த்தப்படல் வேண்டும். நிதிநிலை
நெருக்கடியின் காரணமாக இதனை உடனடியாக செய்ய இயலாது.
நாளாவட்டத்தில் இப்பணியிடங்களும் படிப்படியாக சிறுகச்
சிறுக தரமுயர்த்தப்படும்). பள்ளி நிர்வாகத்தினர் இடை
நிலையாகத் தகுதி பெற்ற ஆசிரியர்களை இளநிலைப் பணியிடங்களில்
பணியில் மேலும் மேலும் அமர்த்திக் கொண்டே இருப்பதனுல்,
மேலே கூறப்பட்ட திட்டம் மேலும் பல ஆண்டுகளுக்கு நீடிக்க
வேண்டிவரும் என்றும், ஆகவே இடைநிலை ஆசிரியர்களை இள
நிலைப் பணியிடங்களில் நிர்வாகத்தினர் பணியிலமர்த்துவது
தடை செய்யப்பட வேண்டும் என்றும் அரசு கருதியது. மேலும்
மேற்கூறிய பள்ளி நிர்வாகத்தினரின் செயலால், இளநிலைத்
தகுதி உடைய பலர் வேலை வாய்ப்பு இழக்க வேண்டியுள்ளது
எனவும் கருதப்பட்டது. இந்நிலையில் அரசு நிலை ஆணை எண் 262,
கல்வி, நாள் 23—2—1972-ல், 23—2—1972-க்குப் பின் இள
நிலைப் பணியிடங்களில் இடைநிலைப் பயிற்சி பெற்றவர்களை நிய
மனம் செய்யக் கூடாது என அரசு ஆணையிட்டது. பின்னர்,
எப்பள்ளியிலாவது இளநிலைப் பணியிடம் காலியாளுல், பள்ளி
நிர்வாகம் அவ்வட்டாரத்திலுள்ள வேலை வாய்ப்பு நிறுவனத்தி
லிருந்து (பணியிலமர்த்தத் தகுதியுள்ள) இளநிலைப் பயிற்சி
பெற்றவர்கள் பட்டியல் கேட்க வேண்டுமெனவும், அதன்படி
தகுதி பெற்றவர்கள் இல்லை என வேலை வாய்ப்பு நிறுவனம்
சான்றிதழ் கொடுத்தால் பள்ளி நிர்வாகம் சம்பந்தப்பட்ட மாவட்
டக் கல்வி அலுவலரிடம் முன் அனுமதி பெற்று இளநிலைப் பணி
யிடங்களில் இடைநிலை ஆசிரியர்களை நியமிக்கலாம் என மேலே

மாநில முழுவதிலும் நிரப்பப்படாமல் உள்ள பல இளநிலை ஆசிரியர்கள் பதவிகளை வேலையில்லாமல் உள்ள இடை நிலை ஆசிரியர்களைக் கொண்டு நிரப்புதல் குறித்து

குறிப்பிட்ட ஆணையில் சிறிது மாற்றம் செய்தது. அதன்படி, இளநிலைப் பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர்கள் நியமனம் செய்வது முழுவதுமாகத் தடை செய்யப்படாவிடினும், ஒரு பள்ளி நிர்வாகம் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தது. சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர் நடத்தும் இப்பள்ளியில் உயர் பகுதி வாய்ந்த ஆசிரியர்களை அத்தகுதி தேவையில்லாத ஒரு கீழ்நிலை ஆசிரியர் பணியிடங்களில் வேலையிலமர்த்துவதைத் தடைசெய்வது சிறுபான்மை வகுப்பினருக்கான உரிமைகளைப் பறிப்பது போலாகும் என உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்தது. இந்த ரிட் மனுவின் தீர்ப்பைக் காட்டி பல பள்ளிகள் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவை, மேலும் பல ரிட் மனுக்கள் தொடர்ந்தன. அவ்வழக்குகள் அனைத்துமே, மேலே கூறப்பட்ட தீர்ப்பினை யொட்டி உயர்நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டன. இத்தீர்ப்பினை எதிர்த்து அரசு மேல் முறையீடு செய்ய வேண்டாமென முடிவு செய்து விட்டது. மேலும் சிறுபான்மை வகுப்பினர் நடத்தும் பள்ளிகளைப் பொறுத்த மட்டிலும் நீதி மன்றத்தில் வழக்காடி வென்ற பள்ளிகளிலும் மேலே கூறப்பட்ட அரசு ஆணையை அமல் படுத்த வேண்டாமெனவும் அரசு பள்ளிக் கல்வி இயக்குநருக்கு அறிவுரை வழங்கி விட்டது. ஆகவே சிறுபான்மை வகுப்பினர் நடத்தும் பள்ளிகளைப் பொறுத்தமட்டில் இளநிலைப் பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர்களைப் பணியிலமர்த்தத் தடையேதுமில்லை. அதேபோல் வேலை தேடித்தரும் நிறுவனத்திடமிருந்து இளநிலை ஆசிரியர்கள் பட்டியல் இல்லை என சான்றிதழ் பெற்று வரும் நிர்வாகத்தினரும் இளநிலைப் பணியிடங்களில் இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்வதற்குத் தடையேதுமில்லை. அவ்வாறு இளநிலை ஆசிரியர் பணியிடங்களில் அமர்த்தப்படும் இடைநிலை ஆசிரியர்களுக்கு இளநிலை ஆசிரிய பணியிடத்துக்குரிய ஊதியமே வழங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது மீண்டும் அரசு ஆணை 262, கல்வி, நாள் 23-2-1972 சிறுபான்மை அல்லாதார் நடத்தும் பள்ளிகளுக்கும் அமுல்படுத்துவது பற்றி மறு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இதுபற்றி தக்க ஆணைகள் பிறப்பிக்கப்படும். எனவே இளநிலை ஆசிரியர் பணியிடங்களில் மேற்கூறியபடி வேலை தேடித் தரும் நிறுவனத்திலிருந்து இளநிலை ஆசிரியப் பயிற்சி பெற்ற ஒருவரும் வேலையின்றி இல்லை என்ற சான்றிதழ் பெற்று இடைநிலை ஆசிரியர்களை அமர்த்தின் இளநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கும் நிலை ஏற்படாது.

[முற்பகல் 10.10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை மாவட்டம், திண்டுக்கல்லில் உள்ள சௌந்திரராஜா மில்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் கதவடைப்பு பற்றி திரு. என். வரதராஜன் அவர்கள் ஒரு கவன ஈர்ப்பு கொடுத்துள்ளார்கள். திரு. வரதராஜன் இருக்கையில் இல்லை. ஆகவே அது தள்ளப்பட்டது.

(இ) மதுரை மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகரத்திற்குவரும் குடிநீர் குழாயை சேதப்படுத்தியதால், குடிநீர் வராது மக்கள் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மதுரை மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகரத்திற்கு வரும் குடிநீர் குழாய் சேதப்பட்டுள்ளது குறித்து திரு. ஏ. பி. பழனியப்பன் ஒரு கவன ஈர்ப்பு அறிக்கை கொடுத்திருக்கிறார்.

*திரு. அ. ப. பழனியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை முடிந்து விட்டது. நான் இதை 1-ம் தேதி இரவு உடைக்கப்பட்டு விட்டது என்று 2-ம் தேதி காலையில் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானமாக இங்கே கொடுத்தேன். ஆனால் அது காலம் தாழ்ந்து விட்டது என்பதாகப் பேரவைத் தலைவர் சொல்லி, நாளை எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். ஆனால் மறுநாளும் அந்தத் தீர்மானம் வரவில்லை.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானத்தைப் படியுங்கள். பிரச்சினை முடிந்து இருந்தால் முடிந்து விட்டது என்று சொல்லி உட்காருங்கள். தயவு செய்து தீர்மானத்தைப் படியுங்கள்.

திரு. அ. ப. பழனியப்பன்: ''மதுரை மாவட்டம், ஒட்டன்சத்திரம் நகரத்திற்கு வரும் குடிநீர் குழாயை அண்டைய கிராமமான சாமியார் புதூர் கிராமவாசிகள் நடுவே உடைத்துச் சேதப்படுத்தியதால், ஒட்டன்சத்திரத்திற்கு குடிநீர் வராததால், ஒட்டன்சத்திர மக்கள் பாதிக்கப்பட்டு பதட்ட நிலை குறித்து'' தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் பேரூராட்சி குடிநீர்த் திட்டம், விருபாட்சி ஊராட்சிக்கும், அதிலுள்ள சாமியார் புதூர் கிராமத்திற்கும் தேவையான குடிநீரை, ஒட்டன்சத்திரம் குடிநீர் திட்டத்திலுள்ள நீர் உந்து குழாயிலிருந்து, கிளைக் குழாய் மூலம் வழங்க வழி செய்கிறது. இதற்குத் தேவையான அமைப்பு குழாய் பொருத்தப்பட்டுள்ளது. விருபாட்சி ஊராட்சி, மற்றும் சாமியார் புதூர்க்காக ஒட்டன்சத்திரம் நீர் உந்து குழாயிலிருந்து கிளைக் குழாய் குறிப்பிட்ட பகிர்மானக் குழாய்கள், உயர்மட்ட நீர்த்தேக்க தொட்டி முதலியன விருபாட்சியில் அமைக்க திட்டச் செலவு ரூபாய் 1.03 இலட்சமும், பராமரிப்புச் செலவு ரூபாய் 2,800-க்கும் உத்தேச மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, விருபாட்சி ஊராட்சி, எடுத்துக் கொள்ளும் தண்ணீருக்கான தீர்வையை ஒட்டன்சத்திரம் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும். விருபாட்சி பஞ்சாயத்து, இத்திட்டத்திற்கான செலவை தங்கள் நிதியிலிருந்து செலுத்துவதாக தீர்மானித்

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தமிழ்நாடு, 1977ஆம் ஆண்டு, கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவை இப் பேரவை முன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.

(ஆ) தமிழ்நாடு, 1977 ஆம் ஆண்டு பொது வாழ்வில் ஈடுபட்டோர் (குற்ற வகையான கெட்ட நடத்தையில் ஈடுபடுதல்) ரத்துச் சட்ட முன்வடிவு.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Mr. Speaker, Sir, I move "That leave be granted to introduce the Tamil Nadu Public Men (criminal misconduct) Repeal Bill, 1977. The motion was put and carried and leave was granted.

THE HON. THIRU K. NARAYANASWAMY MUDALIAR: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

(8) ஒழுங்குப் பிரச்சினைகள்.

(அ) கட்சிவாரியாக நேரம் ஒதுக்குவது குறித்து.

திரு. துரை ராமசாமி: ஆன் ஏ பாயிண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே, இந்திய தேசீயக் காங்கிரஸ் கட்சி இங்கு அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சியாக உள்ளது. விவாதம் துவக்கப்படுகின்ற நேரத்திலும், முடிகின்ற நேரத்திலும் இந்தக் கட்சிக்கு எந்தவிதமான முன்னுரிமையும் கொடுக்கப்படவில்லை. ஒதுக்கியிருக்கிற நேரம் மிகக் குறைவு என்ற காரணத்தினால், முன்னுரிமை கொடுத்து அதிக நேரம் ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இங்கே எல்லா எதிர்க் கட்சிகளுக்குள் அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறது. அவர்கள் துவக்கி, அவர்கள் முடிப்பது என்று முடிவாகியுள்ளது. உங்களுக்குள் ஒருவரோடு ஒருவர் ஒத்துப்போனால், நான் அதற்கு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறேன். எதிர்க் கட்சியாக அங்கீகரிக்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அடுத்த அங்கீகரிக்கப்பட்ட கட்சியாக இந்திய தேசீயக் காங்கிரஸ் இருக்கிறது. அந்த முறையிலே நான் கேட்டுக் கொள்வதுதான் முறையே தவிர, நான் அவர்களைக் கட்டாயப்படுத்திச் சொல்வதற்கு எனக்கு உரிமை இல்லை. அவர்கள் விருப்பப்பட்டால் செய்யலாம்.

*திரு. துரை ராமசாமி: அது சரி. எங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நேரம் மிகக் குறைவாக இருக்கிறது. அங்கத்தினர்கள் கருத்துக்களைக் கூற இயலாத நிலைமை இருப்பதால், எங்கள் கட்சிக்கு அதிக நேரத்தை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அன்றைக்கு இதே பேரவையில் திரு. கந்தசாமி அவர்களும், திரு. மார்க்கபந்து அவர்களும் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய நேரத்திலேயே சொன்னேன். அவர் அவர்களுக்கு நேரத்தை ஒதுக்கிவிட்டு, கட்சியின் எண்ணிக்கை பலத்தை வைத்துக் கொண்டு ஒதுக்குகிறேன் என்று சொன்ன போது, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் எதிர்க் கட்சியில் ஒருவர் இருவர் இருந்தால்கூட, அவர்களுக்கும் கொடுத்து விடுவது நல்லது என்று சொன்னார்கள். வேண்டுமானால் நேரத்தைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று அன்றைக்கு சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு இந்திய தேசியக் காங்கிரசின் துணைத் தலைவர் அவர்கள் நேரத்தை ஒதுக்கி எங்களுக்குப் பகிர்ந்து அளியுங்கள் என்று சொல்கிறார். நான் எதைக் கடைப்பிடிப்பது?

திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். அன்றைய தினம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதெல்லாம், கட்சி உரிமையைக் கொண்டாடினால், அவர் அவர்களுக்கு 2 நிமிடம் வந்தால், இதைக் கொடுத்து விடுங்கள் என்றுதான் சொன்னார்கள். 2 நிமிடங்களுக்குள் பேசி முடிக்கக்கூடிய நிலை ஒரு கட்சிக்கு இருக்குமானால், 2 நிமிடங்கள் கொடுத்து விடலாம். ஆனால் அப்படிப் பேச முடியாது என்ற நிலைமையில் அதை மாற்றி, யார் யாருக்கு 10, 5 நிமிடங்கள் கொடுக்கலாமோ அப்படி கொடுத்து விடலாம்.

கூத்தகுடி திரு. சி. சண்முகம்: தலைவர் அவர்களே, அன்றைக்கு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சொன்னது, கட்சியிலே ஒருவர் இருந்தாலும் அவர் அனுமதிக்கப்பட வேண்டும் என்பது தான். அந்த நிலையில்தான் அவர் சொன்னாரே தவிர, பேராசிரியர் அவர்கள் சொன்னதுபோல் எனக்கு நினைவு இல்லை. ஆகவே, கட்சிக்குக் குறைந்தபட்ச நேரமில்லாமல் எண்ணிக்கை பலத்தை மட்டும் கணக்கில் வைத்துக் கொண்டு கொடுக்கப்பட வேண்டுமென்று சொல்லவில்லை. எனவே, பேராசிரியர் அவர்கள் சொன்னதுபோல் சொல்லவில்லை என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தந்தக் கட்சியினுடைய எண்ணிக்கை பலத்தை வைத்து நேரம் ஒதுக்கச் சொல்கிறீர்களா? அல்லது எதிர்க் கட்சியிலுள்ள அத்தனை கட்சிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்கிறீர்களா? எப்படிக் கொடுக்க உத்தேசிக்

THIRU K. KANDASAMY : Sir, to discuss about the construction of Lakshmipuram Kanmoi, digging of a channel leading to Varadarajapuram Kanmoi, etc. in Andipatti Constituency of Madura district, I move....

'That the allotment of Rs. 19,21,48,000 under Demand No. 36 — Irrigation be reduced by Rs. 100.'

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to negotiate with Kerala State to open the sluice in the Neyyar left bank channel and allow water for irrigation in Kanyakumari district at the same time when water is given to Kerala State, I move....

'That the allotment of Rs. 19,21,48,000 under Demand No. 36 — Irrigation be reduced by Rs. 100.'

[முற்பகல் 10.30]

திரு. ச. சண்முகம் : தலைவர் அவர்களே, திருப்ப... ...ரகா நாட்டார்கால் எனும் நீர்ப்பாசனக் கால்வ... ...செய்வது பற்றியும், பாலாற்றில் சூரக் குடி... ...ஏக்கர் நிலங்களைப் பாதிக்கச் செய்து, 20... ...டையும் வகையில் கட்டப்பட்டுள்ள ...த—

''...ண் 36—பாசனம் என்ற தலைப்பின் ...ரூ. 100 குறைக்க வேண்டும் ''

...த்தை முன்மொழிகிறேன்.

(ஆ) கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,00,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, அரசுக் ... ஆண்டுதோறும் பழுதுபார்க்க வேண்டியதன் ...மையினைப் பற்றி விவாதிக்க—

'' ...கோரிக்கை எண் 37—பொதுப்பணிகள்— ...தலைப்பின் கீழ் ரூ. 3,00,48,000-ல் ரூ. 100 ...டும் ''

...தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன் : தலைவர் அவர்களே, பாபநாசம் ஆண்கள், பெண்கள் பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதுபற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,00,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் வாசுதேவ நல்லூர் ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனைக் கட்டிடம் இடிந்து விழும் நிலையிலிருந்தும் வேறு கட்டிடம் ஒன்று கட்டி மருத்துவமனை அமைக்காதது பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,00,48,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

THIRU J. JAMES : Sir, to discuss the necessity to sanction amount for the construction of buildings for the High Schools such as Kulasekaram, Kuttathiran Puliyoor Salai and other primary Schools in Kanyakumari district, I move—

'That the allotment of Rs. 3,00,48,000 under Demand No. 37—Public Works—Buildings be reduced by Rs. 100.'

(இ) கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

'' நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும், என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,13,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.''

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ஆண்டு தோறும் எடுக்கும் பணிகளுக்காக அப்பணிகளை முடிக்க உதவும், இயந்திர சாதனங்கள் வாங்குவதற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் தேவையைப் பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,13,15,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU A. SWAMIDHAS : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 5,13,15,000 under Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100.'

(ஈ) கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 72,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் நகரில் சாக்கடை கழிவும், பொதுக் கக்கூசும் மோசமாகவும், சுகாதாரமே அற்ற நிலையில் உள்ளதால் இவைகளை நவீனமாகக் கட்டிக் கொடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 72,90,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பாசன ஏரிகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தின் வட பகுதி கோவை, அவிநாசி, பல்லடம் தாலுகாக்களில் வறட்சி மிக்க பிரதேசங்களுக்குப் பாசன வசதி ஏற்பட தமிழக அரசு 1967 ஆம் ஆண்டுக்குப்பின் துவக்கிய குந்தா கழிவு நீர்ப்பாசனத்துக்கான ஆய்வுகளை கைவிட்டது குறித்து விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாறு, வள்ளியாறு, குழித்துறையாறு, முதலிய ஆறுகளிலும் பன்றி வாய்க்கால், பாம்பூரி வாய்க்கால் முதலிய வாய்க்கால்களிலும் பாழாய் போகும் நீரை லிப்ட் செய்து விவசாயத்திற்குப் பயன்படுத்தத் திட்டமிடாதது குறித்து விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஊ) கோரிக்கை எண் 52—பொதுப்பணித்துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப்பணித் துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,17,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுக் கட்டிட மதிப்பீட்டுச் செலவைக் குறிப்பதற்கான வழிவகைகளைக் காண ஆய்வு மேற்கொள்ள வேண்டியதன் தேவையை வலியுறுத்தி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண்—52—பொதுப்பணித் துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,17,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU A. SWAMIDHAS : Sir, to discuss the policy I move—

"That the allotment of Rs. 9,17,77,000 under Demand No. 52—Capital Outlay on Public Works—Buildings be reduced by Rs. 100"

THIRU A. SWAMIDHAS : Sir, to discuss policy, I move—

'That the allotment of Rs. 5,13,15,000 under Demand No. 38—Public Works—Establishment and Tools and Plant be reduced by Rs. 100.'

(ஈ) கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 72,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. எம். அண்ணாமலை : தலைவர் அவர்களே, அரூர் நகரில் சாக்கடை வசதியும், பொதுக் கக்கூசும் போதுமானதாகவும், சுகாதாரமே அற்ற நிலையில் உள்ளதால் இவைகளை நவீனமாகக் கட்டிக் கொடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 72,90,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(உ) கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பாசன ஏரிகள் ஒவ்வொன்றிலும் ஆண்டுதோறும் தூர்வாரப்பட்டு ஆழப்படுத்த வேண்டும் என்பதை வற்புறுத்தி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தின் வட பகுதி கோவை, அவிநாசி, பல்லடம் தாலூகாக்களில் வறட்சி மிக்க பிரதேசங்களுக்குப் பாசன வசதி ஏற்பட தமிழக அரசு 1967 ஆம் ஆண்டுக்குப்பின் துவக்கிய குந்தா கழிவு நீர்ப்பாசனத்துக்கான ஆய்வுகளை கைவிட்டது குறித்து விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் பழையாறு, வள்ளியாறு, குழித்துறையாறு, முதலிய ஆறுகளிலும் பன்றி வாய்க்கால், பாம்பூரி வாய்க்கால் முதலிய வாய்க்கால்களிலும் பாழாய் போகும் நீரை லிப்ட் செய்து விவசாயத்திற்குப் பயன்படுத்தத் திட்டமிடாதது குறித்து விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 31,32,37,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

(ஊ) கோரிக்கை எண் 52—பொதுப்பணித்துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :—

'' நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப்பணித் துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,17,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும் ''.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பொதுக் கட்டிட மதிப்பீட்டுச் செலவைக் குறிப்பதற்கான வழிவகைகளைக் காண ஆய்வு மேற்கொள்ள வேண்டியதன் தேவையை வலியுறுத்தி விவாதிக்க—

'' நிதிக் கோரிக்கை எண்—52—பொதுப்பணித் துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 9,17,77,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும் '' என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU A. SWAMIDHAS : Sir, to discuss the policy I move—

"That the allotment of Rs. 9,17.77.000 under Demand No. 52—Capital Outlay on Public Works—Buildings be reduced by Rs. 100"

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் உட்பட நாங்கள் அத்தனைபேரும் சேர்ந்து நிதிச் செயலாளரையும் வைத்துப் பேசினோம். தலைப்புகள் நீண்ட காலமாக மாறி வந்து கொண்டே இருக்கின்றன, நான்காண்டுக்காலமாக.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இந்த மானியக்கோரிக்கையில் ரோடுகளைப்பற்றி பேசலாமா என்று கேட்கிறார்கள். ரோடுகளைப் பற்றிப் போக்குவரத்துத் துறை மானியத்தில் வருகிறது. அப்பொழுது பேசலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: நான் பேசுவதற்காகச் சொல்லவில்லை. சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்குக் கிடைக்கின்ற சந்தர்ப்பத்தில் எல்லா மானியங்களுக்கும் வாய்ப்புக் கிடைப்பதில்லை. தலைவர்கள் அன்றாடம் பேசிவிடலாம். ஆனால் எங்களுக்குக் கிடைக்கின்ற நேரத்தில் எல்லாத் துறை பற்றிய வாதங்களையும் சொல்ல வேண்டும். அதற்காக அரசு அதிகாரிகள் பொதுவாக எல்லாக் குறிப்புகளையும் எடுத்துக் கொள்ள ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் ஏற்கனவே ஐந்தாண்டுக் காலம் அனுபவம் பெற்றவர்கள். எந்த மானியம் வருகிறதோ, அந்த மானியத்தின்மீது மட்டும்தான் பேச வேண்டும்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, சென்ற முறை, கடந்த ஆண்டுகளில் பொதுப்பணித் துறையில் நெடுஞ்சாலைத் துறையும் ஒன்றாக இருந்தது. அதனால் அதில் பேசும்பொழுது அது சம்பந்தப்பட்ட பிரச்னைகள் வந்து விட்டன. ஆனால் இப்பொழுது பிரிந்திருக்கிறது. போக்குவரத்துத் துறையிலே நெடுஞ்சாலைத் துறை இருக்கிறது. அதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆறுமுகம் அவர்கள் சொல்வது, ஏற்கனவே பொதுப்பணித் துறையிலே நெடுஞ்சாலையும் சேர்ந்திருந்தது. ஆகவே, அதையும் இப்பொழுது பேசினால் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். எந்தெந்த அமைச்சர்கள் எந்த பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு இருக்கிறார்களோ அந்த அமைச்சர்கள்தான் அதற்குப் பொறுப்பு. நெடுஞ்சாலை என்பது போக்குவரத்துத் துறையில் வருகிறது. அன்றைக்கு வரும்பொழுது பேசுங்கள். அதற்கேற்ற பதில் கிடைக்கும்.

திரு. சி. ஆறுமுகம்: மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லும்பொழுது இந்த ஆண்டு நெடுஞ்சாலைத்துறை இந்த அமைச்சரிடத்தில் இல்லை என்று குறிப்பிட்டார்கள். பேசுகின்ற சட்டமன்ற உறுப்பினர்கள், கிடைக்கின்ற நேரத்தில் தங்கள் தொகுதியிலுள்ள பல கருத்துக்களைப் பேச வேண்டும். வந்திருக்கின்ற அதிகாரிகள் மானியம் எதுவாக இருந்தாலும் சொல்லும் கருத்துக்களைக் குறித்துக்கொள்ள அரசு வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10-40]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன். தலைவரவர்களே, கட்டடத் துறையைப் பொறுத்த வரையிலேயும் அதேபோல், நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்த வரையிலேயும் 5 முக்கியமான யோசனைகள் அரசின் பரிசிலனையிலே உள்ளன. அதிலே, குறிப்பாக, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள், இரண்டு முக்கிய யோசனைகளைச் சட்ட மன்றத்தின்—உறுப்பினர்களின்-கவனத்திற்கு எடுத்துச் சொல்லி, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெறுவது பொருத்தமாக இருக்கும் என்று எடுத்துச் சொன்னார்கள்.

அதற்கொப்ப, முதலாவதாக, இந்தத் துறையில் நடைபெறுகின்ற வேலைகளில் பல குறைபாடுகள் அவ்வப்பொழுது, தெரிவிக்கப்படுகின்றன. வேலைகள் நடந்ததாகச் சொல்லி, வேலைகள் நடைபெறவில்லையென்றும், அப்படியே வேலைகள் நடந்தாலும் அது ஒழுங்காக நடக்கவில்லையென்றும், அப்படியே வேலைகள் முடிந்தாலும் அந்த ஒப்பந்த விதிகள்படி அந்த வேலைகள் முடியவில்லையென்றும் அவ்வப்பொழுது புகார்கள் வந்த வண்ணம் இருக்கின்றன. பொதுவாக, அத்தகைய புகார்கள் குறித்து நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய மக்கள் குழு அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ஏற்கனவே தெரிவித்திருந்தாலும் இந்தத் துறையைப் பொறுத்தவரையிலும் தொழில் நுட்ப தணிக்கைக் குழு (Technical Audit Wing) என்ற ஒன்றை அமைச்சரகத்தோடு தொடர்பு கொண்டு நேரடியாக இயங்குகின்ற வகையில் ஏற்படுத்தலாம் என்கிற ஒரு யோசனை அரசின் பரிசிலனையில் இருக்கிறது. வேலைகள் நடைபெறுகிற காலத்திலேயும் வேலைகள் நடைபெற்று முடிந்த பிறகும் அந்த வேலைகள் குறிப்பிட்டபடி நடைபெற்றிருக்கின்றனவா என்று கண்காணிக்க இந்தப் பிரிவு பயன்படும் என்று அரசு நம்புகிறது.

அதோடு மட்டுமல்லாமல், வேலை வாங்குகிற பொறியாளர்கள் மத்தியில் வேலை சம்பந்தமான விதிகள் பற்றி அவர்களுக்கு நல்ல உணர்வு ஏற்படுகிற வகையிலேயும் இது வகை செய்யும் என்றும் காலத்திற்கு ஒவ்வாத விதிகள் இருக்குமானால் அவற்றை ஒவ்வொன்றாக ஆய்ந்து, மாற்ற இது துணை புரியும் என்றும் அரசு கருதுகிறது. இது, அரசின் நேரடிப் பார்வையில் இயங்கும் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல், வேலையில்லாத பொறி இயல் பட்டதாரிகள், படித்து, பட்டம் பெற்று, நிறைய பேர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய பல திட்டங்கள் இருக்கின்றன. ஆனால் குறிப்பாக, இந்தத் துறையைப் பொறுத்த வரையில், அரசாங்கப் பதவிகளில் அமர்த்துகிற வாய்ப்பைத் தான் நாம் உருவாக்கியிருக்கிறோம். ஆனால், ஏராளமான வேலைகளை காண்ட்ராக்டர்களிடம் ஒப்படைத்து அவர்கள் மூலம் செய்கிறோம். படித்து, தொழில் நுட்பப் பட்டம் பெற்ற இந்தப் பட்டதாரிகள் அந்த

வேலைகளை அவர்களே எடுக்க முன் வருவார்களானால் அவர்களுக்கு உதவி அளித்து, சலுகைகள் தந்து அவர்களுடைய வேலை வாய்ப்பைப் பெருக்கவும் அதே நேரத்தில் இந்தத் துறை சம்பந்தமாக வேலைகளைத் தரமாகவும் ஒழுங்காகவும் நிறைவேற்றவும் ஒரு திட்டத்தை மேற்கொள்ளலாம் என்ற வகையிலேயும் அரசு பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மூன்றாவதாக, இந்தத் துறையைப் பொறுத்த வரையில், இப்பொழுது கீழ் மட்டத்திலேயிருக்கிற பொறியாளர்கள் நீர்ப்பாசனத்தையும் பராமரிப்பு செய்கிறார்கள்; அங்கே இருக்கிற கட்டிடங்களையும் பராமரிப்புச் செய்து வருகிறார்கள். ஏற்கனவே, நிர்வாகச் சீர்திருத்தக் குழு, பாசனம் தனியாகவும், கட்டிடத் துறை தனியாகவும் பிரிக்கப்பட வேண்டுமென்று ஒரு பரிந்துரை செய்திருக்கிறது. முன்னாலே இருந்த அரசும் அதைத் தனியாக பிரிக்க வேண்டுமென்ற ஒரு முடிவு எடுத்திருக்கிறது. ஆனால், அந்த முடிவு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. அந்த முடிவையும் இன்னும் விரைவில் நிறைவேற்றலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

அதற்கு மேலாக, ஒரு துறையில் தொடர்ந்து முன்னேற்றம் ஏற்பட வேண்டுமானால், அதிலே தொடர்ந்து ஆராய்ச்சிகள் நடக்க வேண்டும். விஞ்ஞான காலத்தில், தொழில் நுட்ப காலத்தில், இத்தகைய துறையில் தொடர்ந்து ஆராய்ச்சி நடக்குமேயானால்தான் இந்தத் துறை சிறப்பாக இயங்க முடியும். அந்த வகையில் ஒரு ஆராய்ச்சிப் பிரிவு கட்டிடத் துறைக்கும் ஏற்படுத்தவும் ஏற்கனவே நீர்ப் பாசனப் பிரிவிலே இருக்கிற ஆராய்ச்சிப் பிரிவை வலுப்படுத்தவும் அரசாங்கம் யோசனை செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐந்தாவதாக, பயிற்சிப் பிரிவு. அதுபற்றி யோசனை செய்தோம். இப்பொழுது அவர்களிடத்திலே நேரடியாகப் பொறுப்பை ஒப்படைப்பதாலே, அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்ட பிறகு, ஏற்கனவே வேலை செய்கின்றவர்களிடம் இவர்கள் இயங்கவும் அவர்கள் கற்றுக் கொடுக்கவுமான நிலைமை இருக்கிறது. ஆகையினாலே வேலை செய்கிறவர்கள் கற்றுக் கொள்ளவும், அதற்குப் பிறகு வேலை தெரிந்ததும் பழகிய தோஷத்தாலே, பல கெட்ட பழக்கங்கள் வந்து சேர்வதும் இருந்து வருகிறது. ஆகையினாலே பொறியாளர்களை நியமிக்கின்ற பொழுதும், அல்லது பணியாளர்களை நியமிக்கின்ற பொழுதும் அவர்கள் பொறுப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு முன்பாக, இந்தத் துறை சம்பந்தமான நல்ல பயிற்சியினை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்பதற்காக (Training Institute) பயிற்சி நிலையம் ஒன்று அமைக்கலாம் என்றும் இந்த அரசு யோசனை செய்து கொண்டிருக்கிறது.

ஏற்கனவே, கொடுத்த விளக்கங்களோடு இந்த ஐந்து நடவடிக்கைகளையும் இந்தத் துறை மேற்கொள்ள இருக்கிற காரணத்தாலே மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களது மேலான ஆலோசனைகளை இத்துறைமீது வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, மின்சாரத் துறையைப் பற்றி, சில வெட்டுத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டு அவைக் குறிப்பிலேயும் வந்திருக்கிறது. பொதுவாக இப்போது இந்தத் துறையைப் பற்றி ஓட்டெடுப்பது நடப்பதும் இல்லை. இந்தத் துறைக்குக் கொடுக்கக் கூடிய தொகைக்கு இந்த சபையின்—அனுமதி—ஒப்புதல்—தேவையில்லை. ஆனால், விவாதத்திற்கு மட்டும் எடுத்துக் கொள்ளப்பட்டு ஓட்டெடுப்பு நடக்காமல் இருக்கிறது. ஆனால் இப்போது இந்தத் துறையைப் பற்றி வெட்டுத் தீர்மானங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த விவாதத்தின் அடிப்படையில் இது எந்த அளவுக்கு ரெகுலர் என்பதும் அதற்கு இந்த மன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறதா என்பதைக் குறித்தும் தாங்கள் விளக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மின்சாரத் துறையைப் பொறுத்த வரையில் ஒரு பிரிவு இருக்கிறது. 'எலக்டிரிகல் இன்ஸ்பெக்டரேட்' என்று ஒரு பிரிவு அரசாங்கத்திடம் இருக்கிறது. அது பற்றி விவாதிக்கலாம். எலக்ட்ரிசிடி போர்டு—தமிழ்நாடு மின்சார வாரியம்—என்று வருகிறபோது தனி விவாதம் சட்டமன்றத்தில் எப்போதும் நடைபெறுவது வாடிக்கை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் குறிப்பிட்ட வெட்டுத் தீர்மானம் என்ன என்பதை எடுத்துக் காட்டுங்கள். நானும் புரிந்து கொள்ள வேண்டும்.

திரு. எம். ஏ. லத்தீப்: பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுப்பது பற்றிய வெட்டுத் தீர்மானங்கள் இங்கே அனுமதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மான எண் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, நிறைய வெட்டுத் தீர்மானங்கள் இடையிடையே வருகின்றன. அவற்றை நீக்க வேண்டுமென்றால் அரை மணி நேரம் ஆகும். அவற்றையெல்லாம் நேற்றே பார்த்தேன். பொதுவாக விவாதத்திலே கட்டிடம், நீர்ப்பாசனத் துறை இவற்றைப் பேசுவது நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கனம் உறுப்பினர் புகார் கவனத்திற்கு வந்தது. நான் இலாகாவிலே பார்த்து நடவடிக்கை எடுக்கிறேன். நீங்கள் கவனத்திற்கு கொண்டு வந்ததற்கு நன்றி.

*திரு. இ. ரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை சம்பந்தமாக, மானியக் கோரிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த அவையிலே சொல்வதற்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைய தினம் தமிழக உணவு உற்பத்தியைப் பெருக்க பொதுப்பணித் துறை மிகவும் முக்கியமான துறையாகும். அப்படிப்பட்ட ஒரு முக்கியமான துறை இன்றைய தினம் தமிழகத்திலே இருந்து கர்நாடகத்தை எதிர்பார்க்கிற நிலைமையிலே இருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்கிறபோது இந்த நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைய தினம் கர்நாடகத்திலே இருந்து காவிரிக்கு என்றைய தினம் தண்ணீர் திறந்து விடப் படுமோ, அன்றைய தினத்திலிருந்து தான் தண்ணீர் தமிழகத்திற்கு வரும், காவிரியில் வரும் என்று சொல்லக் கூடிய அளவுக்கு இருக்கிறது. இந்த நிலைமை மாற்றி அமைக்கப்பட வேண்டுமென்பதை நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவிரி நதி நீர் சம்பந்தமாக பிரச்சினை 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின் அடிப்படையிலே அமைய வேண்டுமென்பதை தமிழகத்திலே முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பல நேரங்களிலே விளக்கியிருக்கிறார்கள். நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர் குறிப்பாக தஞ்சை மாவட்டத்திற்குப் பயன்படுகிற தண்ணீர் நமக்கு 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி கிடைக்க வேண்டும். அதிலே ஒரு சொட்டுத் தண்ணீர் குறைந்தாலும், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கான ஆதாரத்தை முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசின் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே உடனடியாக மத்திய அரசோடு கலந்து அந்த ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[முற்பகல் 10-50]

தமிழகத்தின் உணவுக் களஞ்சியம் என்று கூறப்படும் தஞ்சை மாவட்டம் 2 ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருந்ததை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். இன்றைய தினம், இந்த ஆண்டும் மேட்டூரிலிருந்து கால தாமதமாகத் தண்ணீர் விட்டிருக்கிறோம். அதனால் பல பகுதிகளில் தண்ணீர் சரியாக வரவில்லை. தண்ணீர் இன்னும் போதவில்லை என்று இந்த அவையில் பல அங்கத்தினர்களால் சொல்லப்பட்டிருப்பதை நாம் நன்றாக அறிவோம்.

மேட்டூரிலிருந்து தண்ணீர் வந்து 30 நாட்களாகியும் இன்னும் கடைமடைப் பகுதிகளுக்குப் போதுமான தண்ணீர் சரியாகப் போகவில்லை. அதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம் என்பதை இங்கே இருக்கின்ற அரசு பரிசீலித்து ஒரு முடிவு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். போதுமான தண்ணீர் திறந்து விடப்பட்டிருக்கிறது என்று பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் சொன்னாலும், விவசாயிகளுக்குச் சரியாக போய்ச் சேரவில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்களும் இந்த அரசும் நன்றாக ஆராய்ந்து முடிவு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றையதினம் மேட்டூரிலிருந்து விடக்கூடிய தண்ணீரை அப்படியே தாங்கிச் செல்லக்கூடிய அளவுக்கு நம்முடைய ஆறுகள் இல்லை என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஆற்றில் விடப்படக்கூடிய தண்ணீரை தாங்கி கடைமடைப் பகுதிகள் வரையில் செல்லக்கூடிய அளவுக்கு ஆறுகள் வலிவுள்ளதாக, அகலமுள்ளதாக இல்லை. பல ஆறுகள் இன்றைய தினம் மேடிட்டு, கரை பழுதாகி, பாசனத்திற்குத் தேவையான தண்ணீரைத் தாங்கிச் செல்லும் அளவுக்கு இல்லை. அப்படிப்பட்ட மேடிட்டிருக்கிற ஆறுகளை அகலப்படுத்தி, பலவீனமாக இருக்கின்ற கரைகளைப் பலப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று தஞ்சை மாவட்டத்தைச் சார்ந்தவன் என்ற முறையில் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் பரிசீலனை செய்து, மண்ணியாறு, அய்யாவையாறு, முட்டையாறு, நண்டலாறு ஆகியவற்றை செப்பனிடத் தனியாகத் திட்டம் தீட்டிச் செயல்பட்டு வந்ததை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம். அன்றைய தினம் அந்த அமைச்சரவையில் இருந்தவரும், இன்றைய தினம் பொதுப்பணித் துறை அமைச்சருமாக இருக்கின்ற அமைச்சர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகம் எப்படியெல்லாம் செயல்பட்டது என்று அறிந்திருக்கக் கூடும். அந்த வகையில் அன்றையதினம் பராமரிக்கப்பட்ட அந்த ஆறுகள், இன்றைய தினம் மழைக் காலங்களில் கரைகள் எல்லாம் கரைந்து, பழுதாகிப் பல பகுதிகளில் மழைக் காலத்தில் வெள்ளம் புகும் நிலைமை இருக்கிறது. அப்படிப்பட்ட ஆறுகளைப் பராமரிப்புச் செய்யும் வகையில் நிதி ஒதுக்கீடு செய்யவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் கழிமுகப் பகுதிகளில் வாய்க்கால் சீரமைப்பு வேலைகள் செய்ய 3 கோடி ரூபாய் இந்த ஆண்டு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இது போதுமான தொகையா என்று எண்ணிப் பார்த்தால், போதுமான தொகை அல்ல. காவேரி சீரமைப்புப்

வேலைகள் சிரமைப்பு பணி என்று சொல்லி அங்கே நடைபெறும் அமைச்சர் அவர்கள் எண்ணிப் வேலைகளா என்பதை மாண்புமிகு முன்னால் நடைபெற்ற பார்க்க வேண்டும். 2 ஆண்டுகளுக்கு வரும் வேலைக்கும் மாறு வேலைக்கும் இப்பொழுது நடைபெற்று முன்னால் வாய்க்கால் தல்கள் நிறைய இருக்கின்றன. அதற்கு இடத்தில் எல்லாப் எல்லாம் ஆழப்படுத்தப்பட்டு, தேவையான பொறுத்தப்பட்டன. அணைகள் கட்டப்பட்டு, ரெகுலேடர்கள் பணத்தைச் ஆனால் இன்றைய தினம் எப்படியும் ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரிகள் அவர செலவழிக்க வேண்டும் என்ற அடிப்படையில் கொண்டிருக்கிறார்கள். வர்கள் இஷ்டப்படி வேலைகளைச் செய்து போட்டுக் கொண் தேவையில்லாத இடத்தில் ரிவெட்மெண்ட் தேவையில்லாமல் வாய்க் டிருக்கிறார்கள். 100 இடங்களுக்கும் செலவழித்து, பாது காலுக்கு ரூபாய் நலாயிரம், ஐயாயிரம் என்று என்று எண்ணிப் காப்புச் சுவர் எல்லாம் கட்டுவது தேவைதானா பார்க்க வேண்டும்.

அதோடுமட்டுமல்ல, 10 ஏக்கர், 15 ஏக்கர் உள்ள இடங் களுக்கு ஒரு இடத்தில் வயலில் மடை கட்டுவது, மதகு கட்டுவது என்றால் அதற்கு 400 ரூபாய், 500 ரூபாய் செலவாகும், ஆனால் போட்டிருக்கின்ற திட்டத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால், 15 ஏக்கர் உள்ள நிலத்திற்கு ஒரு மடை வழியாக தண்ணீர் பாயவேண்டும். பக்கத்தில் இருக்கிற 15 ஏக்கருக்கும் பாயும் அளவுக்குத் தண்ணீரை சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என்று திட்டமிட்டிருக்கிறார்கள்.

ஆனால் விவசாயத்தில் அனுபவம் உள்ள விவசாயிகளுக்கு நன்றாகத் தெரியும். அதிலும் குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயி ஒருவருக்கும் 10—15 ஏக்கர் நிலம் இருக்காது. ஒருவருக்கு ஒரு இடத்தில் 1 ஏக்கர், 1½ ஏக்கர், 2 ஏக்கர் இருக்கும். ஒரு மடையில் தண்ணீர் பாய்ந்து அந்த வயலில் இருந்து அடுத்த வயலுக்கு உள்ள வாய்க்காலுக்குத் தண்ணீர் விடுவார்களா என்றால் கண்டிப்பாக விட மாட்டார்கள். இதனால் அவர்களிடையே பல இடங்களில் தகாாறு ஏற்பட்டுக் கொண்டு இருக்கிறது.

விவசாயத்தில் அனுபவம் உள்ளவர்களுக்குத் தெரியும். ஒரு வயலில் உரம் போட்டு நடவு நட்ட பிறகு அந்த வயல் வழியாக பக்கத்து வயலுக்குத் தண்ணீர் விட முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படித் தண்ணீர் தடைபடும் நிலையில் இருக்கிறபோது ரூ. 500-00, 600-00 செலவு செய்வது என்பது தண்டச் செலவாகத்தான் இருக்கிறது என்பதை தயவு செய்து எண்ணிப் பார்க்க வேண்டும்.

வாய்க்கால் கரைகள் வெட்டப் படாமல் இருக்கவேண்டு மானால், ஒரு ½ அடி குழாயை அரசு செலவில் வாங்கிப் போட்டு வாய்க்கால் கரையை செப்பனிட்டுக் கொள்ளலாம் என்று தெரி வித்துக் கொள்கிறேன். அவ்வாறு நீர் பாயாத நிலங்களைப் பொறுத்தவரையில் தேவையான இடங்களில் எல்லாம் கல் அணை கட்டியோ அல்லது ரெகுலேட்டர் கட்டிக் கொடுப்பதோ யோசிக் கப்பட வேண்டும்.

இதைவிட முக்கியமானது குடிமராமத்து வேலை. குடி மராமத்து வேலை எல்லா இடங்களிலும் செய்துத் தரப்பட வேண்டும். பல இடங்களில் வாய்க்கால்கள் வெட்டப்படு வதில்லை, குடிமராமத்து வேலை செய்யப்படவில்லை என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புகிறேன். முந்தைய திராவிட முன்னேற்றக்கழக அரசு குடிமராமத்து செய் வதற்காகத் திட்டம் தீட்டி ஒரு ஏக்கருக்கு ரூ. 3–50 பைசா செலவு செய்து வாய்க்கால் வெட்ட வேண்டுமென்று திட்டம் இட்டார்கள். அந்த வேலை பொதுப்பணித்துறை வசம் ஒப்படைக்கப்பட்டது. முன்னாலே அந்த வேலை ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கப் பட்டு இருந்தது. அதிலே ரூ. 2 அரசாங்க மானியமாகவும், ரூ. 1½ விவசாயிகளிடமிருந்தும் வசூல் செய்து கொள்வது என்று திட்டம் தீட்டிச் சிறப்பான முறையில் வேலை பல இடங்களில் நடைபெற்று இருக்கிறது. ஆனால் அதற்குப் பின்னால் பொதுப் பணித்துறையில் ஒப்படைக்கப்பட்ட பிறகு அந்த வேலை சரிவர நிறைவேற்றப்படவில்லை. இந்தக் குடிமராமத்து வேலையை மக்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டு இருக்கிற ஊராட்சி ஒன்றியங்களிடத்தில் ஒப்படைத்து அந்தந்த கிராமத் திலுள்ள விவசாயிகளையும் கொண்ட குழு அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி அந்தக் குழுவிடத்தில் அந்த வேலையை ஒப்படைத்தால் நல்ல முறையில் சிறப்பான முறையில் அந்தத் திட்டம் நடை முறைப்படுத்தப்படும் என்பதை நான் இந்த அரசுக்குத் தெரி வித்து, இந்த அரசு அதை நடைமுறைப்படுத்தத் தக்க நட வடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். கண்டிப்பாக ஒவ்வொரு கிராமத்திலும் குடிமராமத்து வேலை செய்தாக வேண்டும், வாய்க்கால் வெட்டப்பட வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் வலியுறுத்திச் சொல்லிக் கொள் கிறேன்.

சில இடங்களில் இன்றையதினம் வாய்க்கால் சிரமைப்புப் பணி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. ஆனால் அதிகாரிகள், வரக்கூடிய பெரிய அதிகாரிகளிடத்தில் பாராட்டுப் பெற வேண்டும் என்பதற்காக ரோடு ஓரத்தில் ரிவிட்மெண்ட் கட்டு கிறார்கள். மதகுகள் கட்டுகிறார்கள், ஏனென்றால் அதிகாரிகள் ரோடு வழியாக இப்படிப்பட்ட வேலையை வந்து பார்த்து விட்டுப் பிரமாதமாக இருக்கிறது என்று பாராட்டுவதற்காக இப்படிச்

[திரு. இ. ரெ. இராசமாணிக்கம்] [1977 ஆகஸ்ட் 19

செய்கிறார்கள். அந்த இடத்தில், ஒரே இடத்தில் தேவை
யில்லாத இடத்தில் ரூ. 5,000, ரூ. 10,000 செலவழித்து இப்
படிப்பட்ட ரிவிட்மெண்ட் கட்டவேண்டுமா என்பதை சிந்தித்துப்
பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாக, நமக்கு மிக முக்கியமானது வடிகால்,
வாய்க்கால் வசதிகள். காவிரி தோன்றிய காலத்தில் வாய்க்கால்
தலைப்புகள் வைக்கப்பட்டுள்ளன. தலைப்புகள் இருந்தாலும்
தண்ணீர் போகமுடியாத நிலை இருக்கிறது. தலைப்புகள் இருக்கிற
இடத்தில் வாய்க்கால்கள் சரிவர இல்லை. இப்படிப்பட்ட
நிலைமைகளை மாற்றத் தேவையான இடத்தில் வாய்க்கால் தலைப்பு
கள் அமைத்துக் கொடுக்கக் கேட்டுக் கொள்கிறேன். இந்த
இரண்டு வேலைகளையும் செய்து கொடுத்தால் தஞ்சை விவசாயிகள்
என்றைக்கும் நன்றி உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை
நான் இந்த நேரத்தில் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, ஆறுகளை எல்லாம் நான் முன்னடி
சொன்னது போல் அகலப்படுத்த வேண்டும். பல இடங்களில்
ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புகளை
காலி செய்ய வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்
கிறேன்.

[முற்பகல் 11-00]

1967-ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியில், பொதுப்
பணித்துறை அமைச்சராக கலைஞர் அவர்கள் இருந்த காலத்தில்
மாவட்டங்கள் தோறும் கருத்தரங்குகள் கூட்டி அதில் சொல்லப்
பட்ட கருத்துக்கள்படி அன்றையதினம் செயல்பட்டார்கள்,
அந்தக் கருத்தரங்குகளில் விவசாயத் துறை அதிகாரிகள், பொதுப்
பணித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், விவசாயிகள் எல்
லோரும் அழைக்கப்பட்டு, அவர்களது ஆலோசனைகள் கேட்கப்
பட்டு அந்த ஆலோசனைகளின்படி அந்த அரசு செயல்பட்டது,
அந்த நிலை மீண்டும் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு அறிவிப்புக் கொடுக்காமல், விவசாயி
களுக்குச் சொல்லாமல் திடீரென்று தண்ணீரைத் திறந்து விடு
வதும், திடீரென்று முறை வைத்துத் தண்ணீர் விடுவதும், விவ
சாயிகளுக்குத் தெரிவிக்காமல் தண்ணீர் திறந்துவிடும் நிலை ஏற்
பட்டிருப்பதனால்தான் விவசாயிகளுக்குக் கஷ்டங்கள் ஏற்படு
கின்றன. எனவே விவசாயிகளுக்கு ஏற்படும் அத்தகைய கஷ்
டங்களைக் கண்டிப்பாகப் போக்கவேண்டும் என்று அரசைப் பணி
வன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது.)

1977 ஆகஸ்டு 19] [திரு. இ. ரெ. இராசமாணிக்கம்]

பொதுப்பணித்துறை மூலம் குத்தாலம் தொகுதியில் மங்கா
நல்லூரில் அரசு மருத்துவ மனைக்கு கட்டிடம் கட்ட அனுமதி
அளிக்கப்பட்டு அதற்காக ரூ. 70,000 செலவாகும் என்று மதிப்
பீடு செய்யப்பட்டிருக்கிறது. பொது மக்களின் பங்குத்
தொகையாக ரூ. 35,000 அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டிருக்
கிறது. பல ஆண்டுகளாகியும் கூட இன்னும் அந்தக் கட்டிடம்
கட்டி முடிக்கப்படவில்லை. ஏன் இந்த நிலை என்பது தெரிய
வில்லை. பொதுப்பணித்துறை பராமரிப்பில் இருக்கக்கூடிய
கட்டிடங்களை நல்லமுறையில் பராமரிக்க அந்த இலாகா அதி
காரிகளும், அந்த இலாகாவை வகிக்கும் அமைச்சர் அவர்களும்
நல்லமுறையில் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொண்டு,
காவிரி நதிநீர் தஞ்சை மாவட்டத்திற்குத் தேவையான அளவிற்குத்
தரப்படவேண்டும், குடிமராமத்து நல்லமுறையில் செய்யப்பட
வேண்டும், ஆறுகளை எல்லாம் அகலப்படுத்தி அதிலுள்ள ஆக்கிர
மிப்புகளையெல்லாம் காலி செய்து கொடுக்க வேண்டும் என்று
கேட்டுப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்
கொள்கிறேன்.

<u>திரு. இ. கணேசன் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எனக்கு இந்தச் சட்டப் பேரவையில் உரையாற்ற
என்னை ஆளாக்கிய எனது இதய தெய்வம் புரட்சித் தலைவர்,
பொன்மனச்செம்மல் அவர்களுக்கும் பெருவாரியான வாக்குகள்
அளித்து என்னை இந்த மாமன்றத்தில் உரையாற்ற அனுப்பி
வைத்த இடைப்பாடி தொகுதி வாக்காளர் பொதுமக்களுக்கும்
எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1977–78 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புதிய
வரியின்றி தயாரிக்கப் பட்டதுடன் ஏழை, எளிய மக்கள்
நலனைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு
நிதி அமைச்சர் நாஞ்சிலார் அவர்களுக்கும் எனது நன்றியைச்
சொல்லிப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அத்துடன் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை
அமைச்சர் திரு. க. இராமச்சந்திரன் அவர்கள் 1977–78 ஆம்
ஆண்டிற்கான பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கைகளை
வைத்திருக்கிறார்கள். இந்த மானியம் விவசாயப் பெருங்குடி
மக்களை ஊக்குவிப்பதற்கும், உற்பத்தியைப் பெருக்குவதற்கும்
சாலச் சிறந்த மானியமாக இந்த ஆண்டு அமையப் பெற்றுள்ளது
என்று சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த
மானியக் கோரிக்கையானது விவசாயப் பெருங்குடி மக்களுக்கும்,
வேலையற்றவர்களுக்கும் வேலை கொடுக்கும் வகையில் புதிய திட்
டங்களைக் கொண்டு வந்திருப்பதைக் காணும்போது அது தமி
ழகத்தில் பேரறிஞர் அண்ணாவின் ஆட்சியை மீண்டும் இந்த
தமிழ் மக்களுக்கு புரட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் அமைந்
துள்ள மறுமலர்ச்சி அரசு அமைத்துக் கொடுத்துள்ளது என்பதை
எண்ணும்போது இந்தத் தமிழ் மக்களுக்கு அளவற்ற பூரிப்பும்
உற்சாகமும் உண்டாகிறது.

அத்துடன் எனது தொகுதியாகிய இடைப்பாடி நகர எல்லையில் 'பெரிய ஏரி' என்ற ஏரி சர்வே எண் 344/1-ல் அமைந்துள்ளது. இந்த ஏரி இயற்கை அழகு கொண்டது. இந்த ஏரியின் ஒரு பகுதி மலையினால் சூழப்பட்டுள்ளதால் இயற்கையழகுடன் இயற்கை அரணும் கொண்டதாகவும் அமைந்துள்ளது. இந்த ஏரி பருவமழை பெய்யும் காலங்களில் நீர் நிரம்பி மீன்வளம் கொண்ட ஏரியாகவும் அமைந்திருந்தது. இந்த ஏரியின் மொத்த விஸ்தீரணம் 295.56 ஏக்கர். இந்த ஏரியின் பாசனத்தை மட்டும் நேரடியாக எதிர்பார்த்துள்ள நிலம் 510 ஏக்கர். இவை மட்டுமன்றி ஏரி நீர் ஊற்றை எதிர்பார்த்த கிணற்றுப் பாசன நிலங்கள் 3,000 ஏக்கருக்கு மேலாகும்.

இது தவிர இந்த ஏரி ஓடையின் கிளை ஓடைகள் மூலம் தொடர்ச்சியாக பல ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இந்த ஏரி நல்லபடியாகப் பருவமழை பெய்யும் காலங்களில் நீர் நிரம்பி மீன் வளம் கொண்டதாக இருந்தது. ஆனால் சமீப காலமாக பருவமழை பொய்த்ததால் ஏரி வறண்டு விட்டது. இதனால் ஏரி நீரை நம்பியிருந்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். நீர்வளம் குன்றியதால் மீன்வளம் சிதைவுண்டு சுமார் 500-க்கும் மேற்பட்ட மீன்பிடிக்கும் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகையால் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் கருணை கூர்ந்து மேற்படி ஏரிக்கு அருகாமையிலுள்ள சுமார் 2 மைல் தொலைவில் செல்லும் மேட்டூர் கிழக்கு வாய்க்காலில் இருந்து ஒரு இணைப்பு வாய்க்கால் ஏற்படுத்தி ஏரிக்கு நீர் நிரப்பிக் கொடுத்தால் இடைப்பாடி பகுதி பொன்கொழிக்கும் பூமியாக மாறும். இதனால் விவசாய பெருங்குடி மக்கள், மீன்பிடித் தொழிலாளர்கள் வளம் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ்வார்கள். 1977–78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் சிறு பாசனத் திட்டங்களுக்காகவும் ஏரி குளங்களை தூர்வாரி சீரமைக்கவும் 4.7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி பாசன கோரிக்கையை இத்திட்டத்தின் கீழ் சேர்த்துச் செய்து கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

கோரிக்கை 2.— சேலம் இரும்பாலைக்குத் தேவையான நீரை இடைப்பாடி தொகுதியிலுள்ள பூலாம்பட்டி என்னுமிடத்தில் காவிரி ஆற்றிலிருந்து கொண்டு வர தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனது தொகுதியில் நீண்ட நெடுங்காலமாக மக்களின் சோக கீதமாகவும், என்று குறை தீருமோ என்ற ஏக்கத்தில் மக்களின் விழிகளிலே கண்ணீரை தேக்கி வைத்து ஏங்கி நிற்கும் எனது தொகுதி மக்களின் குடிநீர் பிரச்னையைத் தீர்க்கப் பூலாம்பட்டியில், காவிரியிலிருந்து சேலம் இரும்பாலைக்கு இடைப்பாடித் தொகுதியைச் சார்ந்த பல கிராமங்களின் வழியாக பெரும் குழாய்கள் பதித்துக் கொண்டு வரும்பொழுதே அத்துடன் சிறிய குழாய்கள் இரண்டு அமைத்து அதன் மூலம் அந்த வழி உள்ள பல கிராமங்களுக்கும், பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிராமத்துக்கு ஒன்றோ அல்லது 2 இணைப்புக் குழாய் கொடுப்பது மூலமோ வழங்கி, கிராமப்புற குடிநீர் பிரச்னையைத் தீர்க்கலாம் என்பதால், தயவு கூர்ந்து ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கோரிக்கை 3.—இரும்பாலைக்கு கொண்டு வந்து உபயோகித்தது போக மீதமுள்ள தண்ணீரையும், இரும்பு தாது எடுக்க வெட்டப்படும் குழிகளில் ஊறும் ஊற்று நீரையும் அவ்வப்பொழுது வெளியேற்றுவார்கள். அந்நீரை இடைப்பாடி சரபங்கா நதி வரையில் இணைப்பு செய்து விட்டால் அந்தப் பகுதியில் ஆற்றுப் பாசனத்தை நம்பியுள்ள சுமார் 20,000 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். இரும்பு ஆலை பகுதியிலிருந்து சின்னப்பம்பட்டி டேம் வரை சுமார் 7 மைல் வரை இணைப்பு வாய்க்கால் கொடுத்துவிட்டால் மேற்படி பிரச்னை தீர்ந்துவிடும். அத்துடன் ஏழு பெரிய ஏரிகள் வழியாக அந்த நீர் இடைப்பாடி சரபங்கா நதியை வந்தடையும் என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மருத்துவ சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதற்கு 1977–78ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் கிராமங்களில் மருத்துவ வசதிகள் அளிப்பதில் இந்த அரசு எடுத்துள்ள திட்டங்களை மனமார வாழ்த்தி வரவேற்கின்றேன். எனது தொகுதியிலுள்ள அரசு மருத்துவ மனையில் 20 படுக்கைகள் கொண்ட தொழுநோய் தடுப்பு சிகிச்சை நிலையம் கட்டுவதற்கு 90,000 ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளதற்கு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இடைப்பாடி நகரத்தில் சுமார் 45,000 மக்கள் வசிக்கிறார்கள். இந்நகரிலுள்ள அரசு மருத்துவ மனைக்குத் தேவையான மருந்து வசதிகள் செய்து தரப்படவில்லை. இக்குறை நீண்ட காலமாகவே இருந்து வருகிறது. இப்பகுதி மக்கள் மிகவும் ஏழைகள். மருத்துவ வசதிகள் செய்வதில் மருந்துகள் சரியாகக் கிடைக்காததால் ஏழை எளிய மக்களுக்குச் சரியான மருத்துவம் செய்ய முடியவில்லை. இந்நகரின் தரத்திற்கு ஏற்ப மருத்துவ மனையை விரிவுபடுத்தி பெண் மருத்துவர் மற்றும் மருத்துவ ஊழியர்கள் சரியான முறையில் நியமனம் செய்து தரும்படியும் கேட்டுக்கொள்கிறேன்.

இடைப்பாடி நகராட்சி மகப்பேறு மருத்துவ மனைக்கு பெண் மருத்துவர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டது 3 ஆண்டு காலமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உடனடியாக பெண் மருத்துவர் நியமனம் செய்து கொடுக்கும்படியும் புதிதாக 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ விடுதி ஒன்று கட்டிக் கொடுக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன். மேலும் எனது தொகுதியைச் சார்ந்த மாங்குட்டைப்பட்டி, புதுப்பாளையம், கோனேரிப்பட்டி, நெடுங்குளம், வெள்ளரிவெள்ளி, தண்டாகுல மாணிக்கம்

காடையாம்பட்டி, கச்சுப்பள்ளி, ஆகிய கிராமங்களுக்கும் மருத்துவ வசதி செய்து தரும்படி பணிவுடன் கேட்டுக் கொள் கிறேன்.

எனக்கு இவ்வளவு நேரம் பேச அனுமதியளித்த சட்ட மன்றத் தலைவர் அவர்களுக்கு என் நன்றியை கூறி விடைபெறு கிறேன். நன்றி. வணக்கம். வாழ்க அண்ணு புகழ்.

[முற்பகல் 11-10]

திரு. துரை ராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் மிகவும் வறட்சியுற்ற மாவட்டம். அதிலும் குறிப்பாக தாராபுரம், பல்லடம் தாலுகாக்கள் மிகவும் வறட்சியுற்ற பகுதிகள் என்பது எல் லோரும் நன்கு அறிந்ததுதான். அந்தப் பகுதிகளிலே மக்கள் குடி தண்ணீருக்காக அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே, விவசாயிகள் கிணறு வெட்டுவதற்கு அவர்களுடைய சொத்துக்களை யெல்லாம் இழந்து, அவர்கள் நிலவள வங்கியிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும் கடன் பெற்று, அதன்மூலம் கிணறுகளையெல்லாம் வெட்டியிருக்கிறார்கள்.

கோவை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஒரு ஆண்டிற்கு நிலத்தடி நீர் 2 மீட்டர் அளவுக்குக் கீழே போய்க் கொண்டிருக்கிற காரணத்தினாலே, அங்கே 100, 150 அடிக்கு கிணறுகள் வெட்டினால் தண்ணீர் கிடைப்பதில்லை. இந்தியா விலேயே கோவை மாவட்டம் ஒன்றிலேதான் இரண்டு பம்பு செட்டுகள் மாட்டி, தண்ணீரை வெளியே கொண்டு வருகிற காட்சியைக் காண முடியும். ஆகவே, அவ்வளவு பிற்போக்கான வறட்சி மாவட்டத்திலே மிகவும் விவசாயிகள் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அதைப்பற்றி 1950ஆம் ஆண்டிலிருந்து பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அந்தப் பகுதியிலே உள்ள மக்கள் கேட்டுக் கொண்டு வர, 1963-64-லே பெருந் தலைவர் காமராஜ் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த நேரத்திலே சர்வே செய்யப் பட்டது. வெள்ளக்கோயிலில் ஆரம்பித்து, கோயமுத்தூர், திருச்சி பார்டர்வரை சர்வே செய்யப்பட்டு, பிறகு எந்த காரணத் தினாலோ நிறுத்தப்பட்டு, 1975-லே இருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்திலே அந்தத் திட்டம் மறு பரிசீலனை செய்யப்பட்டு, இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலே அன்று உத்தரவிடப்பட்டுள்ளது. அன்று இருந்த தலைமைப் பொறியாளர்தான் இன்றும் இருக்கிறார். அவர்களு டைய அறிக்கையிலே. அரசாங்க உத்தரவு எண் 450, பி. டபிள்யூ., 25—3—1975ஆம் தேதி அன்று உத்தரவு

பிறப்பிக்கப்பட்டு உள்ளது. அதன்படி, 1,25,000 ஏக்கருக்கு இந்த விஸ்தரிப்புத் திட்டம் போடப்பட்டது. பொள்ளாச்சி தாலுகாவிற்கு 25,800 ஏக்கரும், உடுமலைப்பேட்டை தாலுகா விற்கு 29,700 ஏக்கரும், பல்லடம் தாலுகாவிற்கு 24,700 ஏக்கரும், தாராபுரம் தாலுகாவிற்கு 34,800 ஏக்கரும் என்று அந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, அதற்கானத் திட்டம் அன்று ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆனால், அதற்குப் பிறகு பொள்ளாச்சி, உடுமலைப்பேட்டை, தாலுகாக்களில் இருக்கின்ற பெரிய தொழில் அதிபர்கள், நிலச் சுவான்தார்கள் தங்களுடைய நஞ்சை பூமிக்குப் பாய வேண்டு மென்கிற காரணத்தினாலே, இதைத் தீவிரமாக எதிர்த்து வந்த காரணத்தினாலே, அன்று ஆட்சியில் இருந்த அட்வைசர்கள் ஒத்தி வைத்திருந்தார்கள்.

ஆனால், இன்று அனைத்திந்திய அண்ணு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, அவர்கள் ஏழை எளியவர் களுக்கு நல்வாழ்வு கொடுக்கப் போவதாக கூறியிருக்கிறார்கள். அதிலும் அவர்களுடைய அறிக்கையிலேகூட, ''இதனை எதிர்த்து அந்தப் பகுதியிலிருந்து பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படை யில், இந்த முடிவை அரசு மறு பரிசீலனை செய்து வருகிறது. மிகவும் மன நிறைவளிக்கத் தக்கதும், செயல்படுத்த இயலக் கூடியதுமான முறை பின்பற்றப்படும்'' என்று கூறியிருக்கிறார்கள். இதிலே, யாருடைய மன நிறைவு தீர்க்கப்படும் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடவில்லை. எப்படியிருந்தாலும், வறட்சிப் பகுதியிலே தண்ணீர் வரவேண்டுமென்பதிலே யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், தண்ணீர் பற்றவில்லை என்பதை எந்த முறையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. தண்ணீர் பற்றவில்லை என்று அன்றைக்கு எஞ்சினீயர்கள் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்க முடியாது என்பது என்னுடைய திட்டவட்டமான கருத்து. அது மட்டுமல்ல. பரம்பிக் குளம்-ஆளியாறு திட்டத்தின் மூலம் ஏற்கனவே பெற இருந்த 2,50,000 ஏக்கரில் சுமார் 1,80,000 ஏக்கருக்கு மட்டுமே ஒவ்வொரு ஆண்டும் பாசனம் பெறலாம் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தப் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தில் புஞ்சைக்காக இந்தத் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். புஞ்சைக்கு என்று கட்டப்பட்ட இந்தத் திட்டத்தில் 80% நஞ்சைப் பயிர் செய் கிறார்கள். ஆகையால் அதிகத் தண்ணீர் எடுக்கிற காரணத்தால் 1,80,000 ஏக்கர் என்ற கணக்கு வருகிறது. புஞ்சைக்கு மட்டும் பயன்படுத்தினால் 3,60,000 ஏக்கர் பயிர் செய்யக்கூடிய அளவுக்குத் தண்ணீர் இருக்கிறது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. துரை. ராமசாமி] [1977 ஆகஸ்ட் 19

அதுமட்டுமல்லாமல் மேல் நீராறு, கீழ் நீராறு இரண்டிலும்
சுமார் கிட்டத்தட்ட வருஷம் ஒன்றுக்கு 15 டி. எம். சி. தண்ணீர்
போகிறது. ஆனுல், சோலையாற்றில் தேக்கக்கூடிய அளவு
5 டி.எம்.சி. தான்; அதனுல் கிட்டத்தட்ட 10 டி.எம்.சி.
தண்ணீர் வீணுக அரபிக் கடலில் சென்று விழுந்து கொண்டிருக்
கிறது. கீழ் நீராறு, சோலையாற்றுக்கு இடையே தண்ணீரைத்
திருப்பி நல்லாற்றில் ஒரு அணையைக் கட்டினுல் வீணுகின்ற 10
டி.எம்.சி. தண்ணீரைத் தேக்குவதோடு கூட நல்லாற்றில் வருகிற
இரண்டு மூன்று டி.எம்.சி. தண்ணீரையும் சேர்த்து 13 டி.எம்.சி.
தண்ணீரைச் சேர்க்க முடியும். நீராறில் இருந்து நல்லாற்றிற்கு
9 கி.மீ. தூரம், அங்கிருந்து திருமூர்த்தி அணைக்கு 4 கிலோ
மீட்டர் தூரம். ஆக 13 கிலோ மீட்டர் தூரத்தில் திருமூர்த்தி
அணைக்குத் தண்ணீர் வர வாய்ப்பிருக்கிறது. இப்போது 50 மைல்
சுற்றிக் கொண்டு வருகிற காரணத்தால் டிரான்சிட் வேஸ்டேஜ்
20% ஐ 5 பர்சன்டாகக் குறைக்க முடியும். அதன் மூலம்
3 டி.எம்.சி. தண்ணீரை கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆக 16
டி.எம்.சி. தண்ணீர கொடுத்தால் 1,30,000 ஏக்கர் பூமி பயிர்
செய்ய தண்ணீர் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது என்பதையும்
குறிப்பிட விரும்புகிறேன். முன்பே குறிப்பிட்டது போல்
புஞ்சைக்கு என்று பயன்படுத்துவதை திட்டத்தின் முறைப்படி
புஞ்சைக்கு என்று மாற்றுவார்களாளுல் உற்பத்தியின் விஸ்தரிப்பை
உடனடியாகச் செய்ய முடியும். அது மிகவும் அத்தியாவசிய
மானது. (மணி அடிக்கப்பட்டது.)

நீர்ப் பிரச்சினை, குடிநீர்ப் பிரச்சினை, பத்து லட்சம் மக்க
ளுடைய வாழ்வுப் பிரச்சினை, கொஞ்சம் அதிக நேரம் ஒதுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 17 ஆண்டுக் காலமாகப் போராடிக் கொண்டிருக்கும்
விவசாயிகளுக்கு இந்தத் திட்டம் நிறைவேற்றப்படாததன் காரண
மாக மிகவும் வறுமையில் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறுர்கள்.
ஆகையால் இந்தத் திட்டத்தை ஒத்தி வைக்காமல் உடனடியாக
எடுத்து நிறைவேற்ற இந்த அரசு அக்கறை கொள்ள வேண்டும்.
தண்ணீர் இல்லையென்று கூறுவதை எந்தக் காரணத்தைக்
கொண்டும் விவசாயிகள் ஒப்புக் கொள்ளக்கூடிய நிலையில் இல்லை.
அங்கு தேவையான அளவு தண்ணீர் இருக்கிறது. கிழக்குப்
பகுதிக்குக் கொடுக்கக் கூடாது என்பதில் மிகத் தீவிரமாக மேற்குப்
பகுதியில் இருக்கும் தொழிலதிபர்களும், நிலச் சுவான்தார்
களும் கங்கணம் கட்டிக் கொண்டு பாடுபட்டுக் கொண்டிருக்
கிறுர்கள். இந்த அரசு விவசாயிகள் நல்வாழ்வில் அக்கறை
யுள்ள அரசாக இருந்தால் அவர்களுடைய எதிர்ப்பைப் பாராது
இதை விஸ்தரித்து கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில்
பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

1977 ஆகஸ்ட் 19] [திரு. துரை. ராமசாமி]

கேரளாவில் ஏற்கனவே சீஃப் எஞ்சினியராக இருந்த வைத்திய நாதன் அவர்கள் இந்து பத்திரிகையில் எழுதியிருக்கிறுர்கள். அதில், அவர்கள், கேரளாவில் இருந்து 2,500 டி.எம்.சி. தண்ணீர் சவுத் வெஸ்ட் மான்சூன் காலத்தில் கிடைக்குமென்று மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அங்கு அவர்களுக்குத் தேவையான தண்ணீர் சுமார் 800 டி.எம்.சி. தான். மீதித் தண்ணீர் பூராவும்வீணுகக் கடலுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அவர் 30-9-1976-ம் தேதி இந்து பத்திரிகையில் 1,500 டி.எம்.சி. தண்ணீர் கேரளாவில் வீணுக அரபிக் கடலில் சென்று விழுந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

அடுத்தபடியாக முந்திய சிப் எஞ்சினியர் ஏகாம்பரம் அவர்களும் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறுர்கள்.—

The quantity of 1,000 TMC assessed by him to be wasted into the sea through the rivers of Kerala is not a mean quantity. It is equivalent to about eleven Mettur reservoirs.

என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறுர்கள். மேட்டூர் அணையில் தேக்கக்கூடிய தண்ணீரைப் போல் 11 மடங்கு தண்ணீர் வீணுகப் போய்க் கொண்டிருக்கிறது. 6—10—1976-ம் தேதி இந்து பத்திரிகையில் அவர் இவ்வாறு எழுதியிருக்கிறுர். முந்திய சீப் எஞ்சினியர் திரு. வையாபுரி 7—10—1976 இந்து பத்திரிகையில் 2,325 டி.எம்.சி. தண்ணீர்................ (மணி அடிக்கப்பட்டது).

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்):</u> இன்னும் 24 பேர் பேச வேண்டும்.

[முற்பகல் 11-20]

<u>திரு. துரை. ராமசாமி</u> : It is a very important subject.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பண்ணை கே. சேதுராம்):</u> ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

<u>திரு. துரை. ராமசாமி:</u> 2,325 டி.எம்.சி. தண்ணீர் அங்கு கிடைக்கிறது என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறுர்கள். அவரும் 1,500 டி.எம்.சி. நமக்கு அதிலே எடுத்துக் கொள்ள முடியும் என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறுர்கள். அந்த அடிப்படையிலே பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டத்தை நிறைவேற்றுவதுடன் கேரளத்துத் தண்ணீரை இந்தப் பக்கம் திருப்புவதற்கும் இந்த அரசு அதிக அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அமராவதி ஆற்றிலே பம்பு செட்டுகள் வைத்துத் தண்ணீர் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுக்கு எல்லாம் உடனடியாகப் பெர்மிட்டுகள் வழங்க இந்த அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து இந்த நொய்யல் அணை கிட்டத்தட்ட 10 ஆண்டுக் காலமாக பிரச்சினைக்குரிய ஒரு திட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அதையும் இந்த நேரத்திலே பார்த்து செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அமராவதி லைனிங் ஸ்கீம் 10 ஆண்டுகளுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டும்கூட 10 கிலோ மீட்டர்தான் முடிந்திருக்கிறது. மொத்தம் 40 கிலோ மீட்டர் இருப்பதால் அதை உடனடியாகச் செய்து விவசாயிகளுக்கு நன்மைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கூறி இந்தச் சந்தர்ப்பம் கொடுத்ததற்காக நன்றியைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. துரை கோவிந்தராசன்: பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் பாசன, பொதுப் பணிக் கட்டிடங்கள் பற்றிய மானியக் கோரிக்கைகளில் என்னுடைய கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைய தினம் தமிழகம் வள்ளுவன் குறள்படி, நீரின்றி அமையாது உலகம் என்பதைப் போல் நீரை எதிர்பார்த்து வாழ வேண்டிய நிலையிலே இருந்தாலும் குறிப்பாக நம்முடைய மாநிலத்திலே நீர்வளம் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே அண்டை மாநிலங்களோடு நல்ல சுமுகமான உறவுடன், குறிப்பாக கர்நாடக மாநில அரசோடு நல்ல உறவு வைத்துக் கொண்டு, இந்த ஆண்டு சோழ மண்டலமே செழிக்கத்தக்க அளவிற்குக் காவிரியிலே தண்ணீர் கொண்டு வந்ததற்காக நான் முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும், அவர்களுக்கு உறுதுணையாக இருந்த பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்து குறிப்பாக எங்களுடைய மாவட்டத்திலே தண்ணீர் கிடைக்குமோ கிடைக்காதோ என்ற நிலை மாறி அங்கே விவசாயப் பெருங்குடி மக்கள் எல்லாம் பூரிப்படையக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்ற நல்ல சேதியை நான் இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இன்றைக்குப் பல்வேறு நிலைமைகளை இங்கே கோடிட்டுக் காட்டினாலும் குறிப்பாக இது வரையிலும் பொதுப் பணித் துறையிலே பல்வேறு நிலைமைகளில் பல குறைபாடுகள் ஏற்பட்டிருந்தாலும் என்னைப் பொறுத்த மட்டிலும் முன்னாலே ஆண்டு கொண்டிருந்தவர்களின் காலத்திலே குறைகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த ஆட்சியிலே இருந்த பெரிய பொறியாளர்கள் இன்றைய தினம் வங்கிகளில் லட்சக்கணக்கான ரூபாய்கள் சேர்த்து வைத்து இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அன்றைய தினம் ஆட்சியிலே பொதுப்பணித் துறையிலே இருந்த அதிகாரிகள் பணத்தை வங்கிகளிலே போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அதிகாரிகள் யார் யார் என்று சொல்லாமல் பொதுப்படையாகச் சொல்கிறார்கள்; அவர்கள் யார் என்று விவரமாகச் சொல்வார்களா?

திரு. துரை கோவிந்தராசன்: சரியான விளக்கங்களையும் வங்கிகளினுடைய பெயர்களையும் பணியாற்றியவர்களின் பெயர்களையும் சேகரித்துச் சரியான புள்ளி விவரங்களையும் அவை வந்ததற்குப் பிறகு பின்னால் தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இந்த நிலைமைகளைக் கோடிட்டு காட்டுகிற போது பொதுநலன் கருதி ஆட்சி நடத்துகின்ற போது அதனால் போடப்படுகிற திட்டங்கள் பொதுமக்களுக்கு நலன் கிடைக்கக் கூடிய வகையிலே இல்லாமல் இடையிலே பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டு இடைத் தரகர்கள் என்பது போல் நான் எல்லோரையும் சொல்வதை விட ஒரு சிலர் முறைகேடாக நடந்திருக்கிறார்கள் அதைத் தங்களுக்குச் சொந்தமாக்கியிருக்கிறார்கள். என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் உள்ள பல்வேறு ஏரி, குளங்கள் எல்லாம் அந்த அந்த இடங்களில் நாலில் ஒரு பகுதி தான் நீர்ப் பிடிப்புப் பகுதியாகவும் மற்ற மூன்று பகுதிகளை ஆக்கிரமிப்புச் செய்து விவசாயம் செய்வதால் தண்ணீர் தேங்கி விடாத அளவிற்குச் செய்து வருகிறார்கள்.

அப்படிப்பட்டதை எவிக்ஷன் செய்து தண்ணீர் தேங்கும் அளவில் செய்து தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

காவேரி பற்றி உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். தண்ணீர் வருகிற கரை அகலம் என்றும், கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் வந்து சேரக் கால தாமதம் ஆகிறது என்றும் கோடிட்டுக் காட்டினார்கள். நான் அதை வலியுறுத்தும் வகையில் இப்படிப்பட்ட ஆறுகளில், குறிப்பாகத் தண்ணீர் வரும் நேரத்தில் எவ்வளவுதான் மேட்டூரிலிருந்து போதிய அளவு, அதனுடைய முழு அளவில் 30,000 கியூ செக்ஸ் வரையில் தண்ணீர் திறந்து விட்டாலும் ஆற்றில் வரும்பொழுது வறண்டு இருக்கின்ற பகுதிகளில், இரு புறங்களிலும் அரை கிலோ மீட்டர் வரையிலே தண்ணீர் சோர்ந்து, நிலப் பரப்புகள் உறிஞ்சிக் கொண்டுதான் வந்து சேர வேண்டும். அப்படிப்பட்ட நிலைமை இருப்பதால் குறிப்பிட்ட காலத்தில் அந்தத் தண்ணீர் முழு அளவோடு விடப்படும் இடத்திற்கு வருவது இல்லை. எனவே, அந்தத் தண்ணீரை

[திரு. துரை கோவிந்தராஜன்] [1977 ஆகஸ்ட் 19

மிச்சப்படுத்துகின்ற அளவிலே ஒவ்வொரு இடத்திலும்ஐந்தாண்டுத் திட்டம் போட்டு, நீண்ட பெரிய திட்டத்தைத் தீட்டி, அந்தத் தண்ணீரை வெளியிலே உறிஞ்சும் அளவில் இல்லாமல் லைனிங்காகப் போட்டு, திட்டத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப் பணித் துறையில் இருக்கின்ற பல்வேறு துறைகளிலே இருக்கின்ற ஒப்பந்தக்காரர்கள் சில ஒப்பந்தங்களை மேற்கொள்ளும் நேரத்தில் ஒவ்வொரு துறையிலும் இரண்டு மூன்று கான்ட்ராக்ட்களைப் போட்டு விடுகிறார்கள். ஆனால் வேலை செய்யும் பொழுது 3 ஆண்டு, 4 ஆண்டு என்று முடிகிற தறுவாயிலே வேலைகள் அந்தந்த ஆண்டுக்குள் முடியாத அளவிற்குக் குறையாக வைத்து, முடிந்தவரையில் பார்ட் பேமெண்ட் என்று வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு வேலையும் குறிப்பிட்ட அளவிற்குள் முடிய வேண்டுமென்று நாம் இன்றைக்குத் திட்டமிட்டுச் செயல்படுகிறோம். ஆனால் அப்படி நடைபெறாத அளவில் இப்படிப் பட்ட காரியங்கள் சிலயிடங்களில் நடைபெறுவதைத் தவிர்க்க வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாலேயிருந்த அரசினுடைய காலத்தில்கூடப் பல்வேறு பெரியஆற்றங் கரைகளிலே தேக்கு போன்ற செடிகளை வைத்து இன்றைக்கு அவைகள் வலுவுள்ள பெரிய மரங்களாக வளர்ந்திருக்கின்றன. அதைப் போல சிறிய சிறிய கால்வாய்ப் பகுதிகளிலேயும் இப்படிப்பட்ட திட்டங்களை மேற்கொண்டு கரை அரிப்பு ஏற்படாத அளவிற்கு அந்தத் தேக்கு மரங்களை வளர்க்க ஆவன செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மன்றத்திற்கு இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்தப் பொதுப் பணித் துறை மானியத்தின் மீது பேசுகின்ற பொழுது எனக்குப் பழைய கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டி அதில் இரண்டு குளம் பாழ், ஒன்றில் தண்ணீர் இல்லை என்று சொல்வதைப் போல் என்னுடைய தொகுதியில், பக்கத்தில் வல்லம் முதலம்பட்டி வாரி என்ற பெரிய திட்டம் பற்றி இங்கே நெடுங் காலமாக, காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே தொடங்கி, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சிக் கால கட்டத்தில்
யிலே ப..ட்டுத் தொகை இரண்டாவது முறை திருத்தப்பட்டு, 37
தாலும் என்னபாய் மதிப்பீட்டில் தொடங்கிய திட்டம், பிறகு
டிருந்தவர்களின் கா..ாய்க்கு உயர்த்தப்பட்டு, இன்றைக்கு 1 கோடி
டாலும் அந்த ஆப்ளவிற்குத் திட்ட மதிப்பீடு மேலும் உயர்ந்து
இன்றைய தினம் வங்க இது வரையில் வந்து சேரவில்லை. இந்த
வைத்து இருக்கிறார்கள்யிலே பார்த்த பொழுது ஏதோ இந்த ஆண்
கிறேன். க் கிட்டி விடுமா என்று மகிழ்ச்சியோடு
அது இல்லை என்றாலும், அடுத்த ஆண்டாவது
ள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1977 ஆகஸ்ட் 19] [திரு. துரை கோவிந்தராசன்]

இந்த முதலம்பட்டி வாரி திட்டத்தினால் 25 கிராமங்களுக்குத் தண்ணீர் பாயும் அளவிற்கும், 10,000 ஏக்கர்கள் சாகுபடி செய்யும் அளவிற்கும் வாய்ப்பு உள்ளது என்பதால் இந்தத் திட்டத்தைத் தொடங்கி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்தப் பொறியாளர்கள், இளநிலை பொறியாளர்களைப் பொறுத்த வரையில் சில நேரங்களில் பொதுப் பணித் துறைக்கும், பல்வேறு வாரியங்களாக நிறுவப்பட்டு அதிலே பணியாற்றும் பொறியாளர்களுக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. குறிப்பாக ஹவுசிங் போர்டிலும், ஸ்லம் க்ளியரன்ஸ் போர்டிலும் பணியாற்றும் இளநிலைப் பொறியாளர்கள் கொஞ்ச காலத்திற்குள்ளேயே பதவி உயர்வு பெற்று அவர்கள் பல்வேறு இடங்களில் வந்திருக்கிறார்கள். ஆனால் பொதுப் பணித் துறையிலே மட்டும் இருப்பவர்கள் நீண்ட நெடுங் காலமாக ஏறக்குறைய பத்தாண்டுக் காலமாக இருந்த இடத்திலேயே இருக்கின்ற அளவிற்குத்தான் இருந்து கொண்டு இருக்கிறார்கள் என்பதால் ஒட்டு மொத்தமாக அப்படிப்பட்ட நிலைமைகளைப் போக்குகின்ற வகையிலே, பொதுப் பணித் துறையிலே இருக்கின்ற இளநிலைப் பொறியாளர்களையும் மனதிற் கொண்டு எல்லோரும் ஒரு முகமாகப் பதவி உயர்வு பெறும் அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

[முற்பகல் 11 30]

சின்னச் சின்ன பகுதிகளிலே, பொதுப்பணித் துறை ஏரிகள் இருக்கின்றன. அந்த ஏரிகள் ஒன்றோடொன்று இணைக்கப்படத்தக்க அளவுக்கு ஒரு ஏரியிலே தண்ணீர் நிரம்பிப் போனால், அடுத்த ஏரிக்கோ, வாய்க்காலுக்கோ செல்கிற வகையில், வாய்க்கால்களைச் சீர்படுத்தி, ஒட்டுமொத்தமாக, ஒரு கன்ட்டினுவேஷன் ஏற்படுகிற அளவுக்கு ஏரி இணைப்புத் திட்டம் ஒன்றை உருவாக்கி, கோடைக்காலங்களில் தண்ணீரைத் தேக்கி வைக்கிற அளவுக்குச் சீர்படுத்திட வேண்டும். குறிப்பாக, பி. டபிள்யூ. டி. நிலங்களிலேயிருக்கிற ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்த வேண்டும். அப்படி ஒரு நல்ல திட்டத்தை உருவாக்க வேண்டும்.

மேட்டூர் தண்ணீரை எதிர்பார்க்கிற நாம் அந்த நிலை பாதுகாக்கப்படுகிற அளவுக்கு எதையும் சுமுகமான அளவில், 1924-வது ஆண்டு ஒப்பந்தத்தை மீண்டும், இந்த அவையிலே இருக்கிற அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் இந்தத் தமிழகத்தினுடைய ஒரே பிரச்னையாக இருக்கிற இதில் கவனம் செலுத்தி, புதுப்பிக்கிற வகையில் நல்ல முடிவை ஏற்படுத்தி இப்படிப் பட்ட காரியத்தை நாம் ஆண்டுதோறும் எதிர்நோக்கியிருக்காத அளவுக்கு, நல்ல சுமுகமான உறவு முறையை ஏற்படுத்தி, அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம். அண்ணுமலை : தலைவரவர்களே, நீர்ப்பாசன மானியக் கோரிக்கையின் பேரில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் எனது கருத்துக்களைக் கூறுகின்றேன். நமது நாட்டின் பிரதான தொழிலான விவசாயத்திற்கு இன்றியமையாத, மிக முக்கியமானதான நீர்ப்பாசனத்திற்கு, நிலத்தடி நீரைப் பெரும் அளவுப் பயன்படுத்தியும், மேல் நீரை 93% பயன்படுத்தியும் ஒரு உத்தரவாதமற்ற நிலையில் நமது விவ சாயம் உள்ளது. இந்த நிலைமை பெரிதும் வருத்தப்படக் கூடிய அளவுக்கு உள்ளது. அதே நேரத்தில், இன்றைய அரசு, இந்த விவசாய நீர்ப்பாசனத் திட்டத்தின்பால், நிலத்தடி நீரைப் பாதுகாக்கவும், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு முதலிடம் கொடுத்து, நீர்ப்பாசன ஆதாரங்களைப் பெருக்குவதை ஒரு புதிய அணுகுமுறையோடு செய்வது நோக்கமாக இருக்கும் என்பதை வரவேற்கிறோம்.

மேலும், இன்றைக்குப் பிரதானமான காவிரி நீர்ப் பிரச்னை உள்பட அனைத்து அண்டை மாநிலங்களான கேரளம், ஆந்திரம் ஆகியவற்ருேடு, சர்வகட்சியினுடைய ஆதரவும் ஒத் துழைப்பும் பெற்று, பேச்சு வார்த்தைகளைத் துரிதப்படுத்தி, வெளி மாநிலத்திலிருந்துநீரைப் பெறும்படியான ஒரு நடவடிக் கையை அரசு துரிதமாக எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன். இன்றைக்கு நிலத்தடி நீரை, மேல்நிலை நீரை மட்டும் கொண்டு, விவசாயத்தில் நம்பி இருக்கமுடியாது என்பது கடந்த கால அனுபவம். அப்படி யானல், அரசு நிலத்தடி நீரைப் பாதுகாத்து, உணவு உற் பத்திக்கும், விவசாயத்திற்கும் உத்தரவாதமான முறையில், நிலத்தடி நீரைப் பாதுகாக்க வேண்டுமென்பதைத்தான் குறிக் கோளாகக் கொள்ள வேண்டுமென்பதை இந்தச் சம்பவங்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. அந்த அடிப்படையில் பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் என்பதை விட்டு, சிறிய நீர்ப்பாசன திட்டங்களுக்குத் தான் மிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். ஏனென்ருல், பெரும் நீர்ப்பாசனத் திட்டம் என்று வைத்து, அதற்குண்டான வரவு எவ்வளவு என்று கணித்துப் பார்த்தால், மேலேயுள்ள பல பகுதிகள் இன்றைக்கு வறண்டு படு மோசமான நிலைமையிலே இருக்கின்றன. எங்கு பார்த்தாலும் வரட்சி அல்லது பருவ நீரை நம்பி வாழ வேண்டிய சூழ்நிலை இன்றைக்கு இருப்பதை நாம் பார்க்கிருேம். இந்த நிலை இனி தொடரக் கூடாது என்ற நிலையில் இந்த அரசு இந்தப் பிரச்சினையைப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் வறட்சிப் பகுதிகளான தர்மபுரி, இராம நாதபுரம், புதுக்கோட்டை போன்ற மாவட்டங்களுக்கு ஒரு விசேஷ கவனம் செலுத்தப்படவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த முறையில் அரூர் வட்டத்தில் குறிப்பாக இன்றைக்கு இந்த கடுமையான வறட்சி, குடிப்பதற்கு தண்ணீர் அற்ற சூழ்நிலை, இன்றைக்குப் பயங்கரமான நிலை இருக்கிறது என்பதை நாம் நினைக்கும்போது அவசியம் அந்தப்

பகுதியில் உள்ள சிறு நீர்த்தேக்கம் மட்டுமல்ல, அங்குள்ள ஆறுகளில் இன்றைக்கு 24 அடி 30 அடி அளவுக்குப் பள்ளமாக அரிக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் கிணறு வெட்டும் திட்ட அளவு கூட 24 அடி தான் என்று சொல்லப்படுகிறது. அந்த 24 அடி 30 அடி ஆற்றிலே பள்ளம் ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னுல் அந்தப் பகுதியிலே நீர் ஊற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை நாம் யோசிக்க முடியும். அங்கே அணைகள் என்பது மட்டுமல்ல, ஆங்காங்கே தடுப்புச் சுவர்கள் என்ற முறையில் கட்டி உடனுக்குடன் அதைத் தடுக்கவில்லை என்று சொன்னுல் நிலநீரை நாம் பாதுகாக்க முடியாது. அதே நேரத்தில் நிலத்தடி நீர் இல்லை என்று சொல் வதை விட, நிலத்தடி நீரைப் பாதுகாக்கத் தவறினேம் என்றும் தான் நான் சொல்கிறேன். இந்த நிலையில் அரூர் தாலுகாவில் கோட்டப்பட்டி அணைக்கட்டு, முன்னிக்காடு அணை, அரூர் வாணியாற்று அணை, வள்ளி மதுரை அணை போன்ற நான்கு இடங்களில் இந்த ஆண்டில் நடவடிக்கை எடுத்து, தண்ணீர் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் ஏரி, குட்டைகளைப் பொறுத்தவரையில் பழைய முறையில் மண்ணை எடுத்துக் கரையில் போடுவது மட்டும் இருக்கக் கூடாது. ஏரிகளை நீர்த்தேக்கங்களாக செய்யவேண்டும். பாசனத்திற்கு விடுவதைவிட தேக்குவதால் நிலத்தடி நீரினுல் பல மடங்கு ஆதாயம் கிடைக்கிறது. இது பல்வேறு அனுபவ ரீதியாக நான் கண்டறிந்த உண்மை. இந்த முறையில் இந்த அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மராமத்து வேலைக்கு கான்ட்ராக்ட் முறை ஒழிக் கப்படவேண்டும். அந்த முறையில் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த அறிவிப்பு இந்தத் துறையில் தொழில் நுணுக்க முறையோடு இங்கே அளிக்கப்பட வேண்டு மென்பதையும் அதுதான் சரியான அணுகுமுறை என்பதையும் நான் மனமார வரவேற்று கான்டிராக்ட் முறை ரத்து செய்யப் படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி கான்ட் ராக்ட் முறை ரத்து செய்யப்பட்டு டிப்பார்ட்மெண்டு கண் காணிப்பின் பேரில் வேலை இல்லாத பட்டதாரிகளுக்கு இந்த வேலையை அளிப்பதோடு சர்க்காருடைய திட்டங்களில் உண் மையிலேயே, லஞ்சத்திற்கும் ஊழலுக்கும் இடம் கொடுக்காமல் பயனுள்ள வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதே நேரத்தில் பாசனத்திற்கும் கட்டிடத் திற்கும் தனி பிரிவுகளாக ஏற்படுத்தியிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிருர்கள். .அதுவும் ஒரு சரியான அணுகுமுறை, பயனுள்ள முறையாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

[திரு. எம். அண்ணாமலை] [1977 ஆகஸ்ட் 19

அதே நேரத்திலே இன்றைக்கு அணைக்கட்டிலே வேலை செய்கின்றவர்களில் பலபேர்கள் 7 ஆண்டுகள், 5 ஆண்டுகள் பணி புரிந்தவர்கள் இன்னும் நிரந்தரம் - ஆக்கப்படாமல் இருக்கிறார்கள். அரசாணையில் 5 ஆண்டுகளுக்குப் பணிபுரிந்தால் நிரந்தரம் ஆக்கப்படவேண்டும் என்று இருந்தாலும் என்ன காரணத்தாலோ, இவர்கள் நிரந்தரம் ஆக்கப்படவில்லை. வேலை நீக்கம் செய்யப்படுகிறார்கள். ஒரு அணையில் வேலை முடிந்து விட்டால் அடுத்த அணையில் வேலை கொடுக்கும் உத்திரவாதம் கொடுத்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். சாதாரண கீழ் மட்டத்தில் வைத்திருக்கிறவர்கள் இத்தகைய நிலையால் கடன் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த அந்த நிலைமைக்கு அவர்கள் தள்ளப்படக் கூடாது என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சிறு விவசாயிகளுக்கு இந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் மற்றும் ஒரு அணுகுமுறை இருக்கவேண்டும். பெரும் முதலாளிகள்—பெரு நில சொந்தக்காரர்கள்—பெருமளவுக்குப் பணத்தைக் கொண்டு விவசாயம் நடத்துவதன் மூலம் ஆனால், அவர்கள் 100 அடிக்குக் கூட கிணறு வெட்டுவதன் மூலம் பயனடைகிறார்கள் பக்கமுள்ள ஏழை விவசாயிகள் 25 அடி, 40 அடி கூட வெட்டமுடியாமல் தண்ணீர் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையாக, சமுதாயக் கிணறு என்ற திட்டத்தை சர்க்கார் விரிவாகப் பயன்படுத்தி தர்மபுரி சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களுக்கு மிக ஏற்றது இந்த சாதாரண விவசாயிகளைப் பாதுகாக்கிற திட்டம், இதை இரு போகத்திற்கும் தேவைப்படுகிற அளவிற்கு ஏற்படுத்திக் கொடுத்து சிறு விவசாயிகள் பாதுகாக்கப்பட இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்படி கேட்டு அளிக்கப்பட்ட சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

[முற்பகல் 11-40]

*திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாசன பொதுப் பணித் துறைக்கான இந்த மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்குத் தங்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலில் காவிரி நீர்ப் பிரச்னையைத் தீர்த்து, காவிரியிலிருந்து இந்த ஆண்டு நீர் கொண்டு வருவதற்கு ஏற்பாடு செய்தமைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகளுடைய உணர்ச்சிகளை உணர்ந்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவரின்கீழ் அமைந்துள்ள இந்த அரசு இந்த ஆண்டு பாசனத் திட்டத்தின்கீழ், பெரிய நடுத்தர பாசனத் திட்டத்திற்காக, 1975–76-ஐ விட சுமார் 13 கோடி அதிகப்படுத்தியுள்ளதையும், சிறுபாசன திட்டத்திற்காக சுமார் ரூ. 100 இட்சம் அதிகப்படுத்தியுள்ளதையும் பாராட்டி வரவேற்கிறேன். இன்னும் பல சிறப்பு அம்சங்கள் இதில் இருப்பினும் காலம் இல்லாத காரணத்தால், என்னுடைய தொகுதி பிரச்னையை மட்டும் கூறி அமர்கிறேன்.

1977 ஆகஸ்ட் 19] [திரு. கருணாமூர்த்தி]

பல்லாண்டுகாலமாக, என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சுத்தமல்லி நீர்த் தேக்கத் திட்டத்தினை இதுவரை செயல்படுத்தாமல் இருந்ததை, விரைவில் செயல்படுத்தித் தர வேண்டும். அந்த சுத்தமல்லி நீர்த்தேக்கம் உருவாக்கித் தந்தால், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த சுத்தமல்லி, கோட்டியால், இருகையூர், காரைக்குறிச்சி, சிந்தாமணி, தா. பழூர், இங்கண்ணி போன்ற கிராமங்களைச் சேர்ந்த சுமார் 2,000 ஏக்கர்களுக்கு அதிகமான நிலங்கள் பயன் அடையும் என்பதை மிகப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியில், பொன்னாறு சுமார் 25 கிராமங்களுக்கு ஓடிக்கொண்டிருக்கிறது. அங்கு முறை வைத்து தண்ணிர் விடப்படுகிறது. அந்த ஆற்றின் முகப்பில் குறுவாடி என்னும் இடத்தில் ஒரு ஷட்டரை அமைத்து, முகப்பு வாயில் மண் வந்து தூர்ந்து விடாமல் இருக்க அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பழம்பெரும் புகழ்வாய்ந்த கங்கைகொண்ட சோழபுரத்தில், பொன்னேரி கவனிப்பாரற்று கிடக்கிறது. அங்கு தூர்வாரி ஆழப்படுத்துவதன் மூலம்,அந்த பரப்பளவில் சுமார் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் பாசன வசதி அடையும் என்பதைக் கூறி, பொன்னேரியைத் தூர் வாரி ஆழப்படுத்த இந்த அரசு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, வெண்ணங்குழி ஓடை, வங்குடி என்ற ஊரில் ஓடுகின்றது. அதை இன்னும் ஒரு கிலோ மீட்டர் தூரம் நீட்டித்துத் தந்தால், சுமார் 200 அரிசன விவசாயக் குடி மக்கள் பாசன வசதி பெற்று நன்மை அடைவார்கள். என்று கூறி, அதனால் அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கட்டிடங்கள் அமைத்துத் தருவதைப் பற்றி சில கருத்துக்கள் கூறி விடைபெறுகிறேன். உடையார்பாளையம் தாலூகாவில் உள்ள விக்கிரமங்கமலம் என்னும் இடத்தில் காவல் துறையினருக்கு இதுவரை குடியிருப்பு மனைகள் அளிக்காமல், எந்தவித வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். அந்தக் காவல் துறையினருக்குக் குடியிருப்பு மனைகளைக் கொடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இரவாங்குடி என்னும் இடத்தில், உயர்நிலைப் பள்ளி ஒன்று பேஸ் மட்டத்தோடு இருக்கிறது. அந்தக் கட்டிடத்தை விரைவில் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தா. பழூர், ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவ மனைகளில் அதிகப் படுக்கை வசதிகள் ஏற்படுத்துவதற்காக, கட்டிட வசதியைச் செய்து கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, விக்கிரமங்கலத்தில் கால்நடை மருத்துவ மனை இருப்பினும் அது இப்பொழுது ஊராட்சிமன்றக் கட்டிடத்திலே நடைபெற்றுக் கொண்டிருப்பதால், மருத்துவ மனைக்காகத் தேவையான கட்டிடம் அமைத்துத் தருமாறு பணிவோடு இந்த அரசைக் கேட்டுக்கொண்டு, பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

*திரு. எ. சுவாமிதாஸ்: தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் மன்றத்திலே வைத்திருக்கிற மானியக் கோரிக்கையின் மீது ஜனதா கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இயற்கையாக மழையால் கிடைத்து பாழாய் போய்க்கொண்டிருக்கிற நீரை அணைகட்டி பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது இருக்கிற சூழ்நிலையில் வெளி மாநிலங்களை நம்பித் தான் நமது நீர்ப்பாசனத் திட்டங்களை நாம் அமைக்க வேண்டியிருக்கிறது. கேரளத்தில் ஏராளமான தண்ணீர் பாழாகிக் கொண்டிருக்கிறது. அதைப் பயன்படுத்த திட்டம் தீட்டியிருக்கிறோம். அதே போல ஆந்திராவில் கிருஷ்ணா நதியில் போய்க்கொண்டிருக்கிற நீரைக்கூட சென்னைக்குத் திருப்பி விட்டால் தான், சென்னைக்குத் தேவையான நீர் கிடைக்கும் என்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் திட்டம் தீட்டி, அதை இன்னும் செயல்படுத்தாமல் இருக்கிறோம். அதே போல் காவிரி நீர் பிரச்னை இருந்து கொண்டிருக்கிறது. கர்னாடக அரசு நமக்குத் தண்ணீர் தந்தால் தான் தஞ்சை மாவட்டத்தில் விளையும் என்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். இப்படிப் பார்க்கின்றபோது மத்திய சர்க்கார் தலையிட்டு நமக்கு நீர் தந்தால் ஒழிய நமது நீர்ப்பாசனம் சீர்படாது என்ற நிலையில் இருக்கிறோம். இதற்காகத் தான் கங்கை-காவேரி இணைப்புத் திட்டத்தை மத்திய சர்க்கார் செயல்படுத்த வேண்டும் என்று கோருகிறோம். இந்தத் திட்டத்தில் நமக்கு இருக்கின்ற அக்கறையை விட வெளிநாட்டுக்காரர்கள் மிக அக்கறை கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக அமெரிக்காவில் உள்ள பொறியியல் வல்லுநர்கள் அதிக அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் வடநாட்டில் மழைக்காலத்தில் பெரு வெள்ளத்தால் சேதம் ஏற்படுகிறது. அதையும் தடுக்க வேண்டும். தென் மாநிலங்களில் நீர் இல்லாமல், குறிப்பாக சென்னை மாநிலத்தில் நீர் இல்லாமல், அவதிப்படுகிறார்கள். இந்நிலைகளைப் போக்க இப்படி ஒரு பெரிய திட்டத்தைப் போட்டு நிறைவேற்றினால் தான் முடியும் என்று அவர்கள் திட்டம் தீட்டி வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நான் அமெரிக்கா சென்றிருந்த போது, ஒரு பொறியியல் வல்லுநரைச் சந்தித்துப் பேசிக் கொண்டிருக்கையில், ஏன் இந்த திட்டத்தை நீங்கள் நிறைவேற்றக் கூடாது என்று என்னிடம் கேட்டார்கள். எங்களுக்கு நிதி வசதி இல்லை. அதனால் தான் முடக்கி வைத்திருக்கிறோம். எங்களிடத்தில் நல்ல பொறியியல்

வல்லுநர்கள் இருக்கிறார்கள் என்றாலும், நிதி வசதி இல்லாத காரணத்தால் தான் நிறைவேற்ற முடியாமல் இருக்கிறது. நீங்கள் பண உதவி கொடுத்தால், நாங்கள் நிறைவேற்றத் தயாராக இருக்கிறோம் என்று சொல்லி நான் சமாளித்துவிட்டு வந்தேன்.

கங்கை-காவேரி இணைப்புத் திட்டம் நிறைவேற்றப்பட நிச்சயம் நம்மிடத்தில் நல்ல அறிஞர்களும், வல்லுநர்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் திட்டத்தைக் கொடுத்து, மத்திய சர்க்காரை நாம் வற்புறுத்தி, திட்டத்தை நிறைவேற்ற தமிழ்நாடு அரசாங்கம் முன்வந்து அதற்குரிய காரியங்களை ஆற்ற வேண்டும் என்று இந்த நேரத்தில் குறிப்பிட கடமைப்பட்டிருக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த நாங்கள் சண்டை
போட்டு கேரளத்திலிருந்து பிரிந்து வந்தோம். சண்டை போடும்
போது ஒரு முக்கிய காரணத்தைச் சொன்னோம். தமிழ்நாட்டுக்கு
போதிய நீர் தரக்கூடிய தமிழ் பகுதிகள் கேரளத்தில் இருக்கின்
றன. அந்தப் பகுதிகள் கிடைத்தால் போதும், தமிழ்நாட்டுக்குப்
போதிய நீர் கிடைக்கும் என்று போராடினோம். தேவிகுளம்,
பீர்மேடு ஆகியவற்றின் முழுப் பகுதியும் கிடைத்திருந்தால்
போதும், தண்ணீர் பஞ்சம் இருக்காது. அதே போல்
செங்கோட்டை; அன்று சர்தார் கே. எம். பணிக்கரின் அறிக்கை
யில் செங்கோட்டைப் பகுதி முழுவதும் தமிழ்நாட்டுக்குக் கொடுப்
பதாக திட்டமிட்டு அறிக்கை கொடுத்தார்கள். ஆனால் நமக்குக்
கிடைத்தது அதில் ஒரு பகுதி தான். கல்லடை ஆறு நீர்த்தேக்கத்
திட்டம் வைத்திருக்கிறோம். அதைத் திருப்பினால், இராமநாதபுரம்,
திருநெல்வேலி, ஆகிய மாவட்டங்களுக்கு நீர் கிடைக்கும்.
ஆகவே நாம் கேரளத்துடன் விவாதித்து கல்லடையாறு அணை
யிலிருந்து நீரைப் பெற வேண்டும்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏரிகள், குட்டைகள்
தூர்ந்திருக்கின்றன. திருநெல்வேலி மாவட்டத்தை எடுத்துக்
கொண்டால் அங்கேயிருக்கின்ற குளங்கள் குறிப்பாக நீடூர்குளம்
கடம்பாக்குளம் தூர்ந்திருக்கின்றன. சேறு மிகுதியாக படிந்
திருக்கிறது. அதைத் தூர் எடுத்து, ஆழப்படுத்த முயற்சி
செய்ய வேண்டும். அதைப் போல கன்னியாகுமரி மாவட்டத்
திலும் குளங்கள், ஏரிகள் தூர்ந்து போயிருக்கின்றன. அத்துடன்
அவற்றை அருகாமையில் உள்ள சொந்தக்காரர்கள் ஆக்கிரமித்துக்
கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் அகற்றி, பாசனக் குளங்
குட்டைகளை ஆழப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். ஆனால்
தற்போது இஃது அரசாங்கத்தால் முடியாது என்ற நிலை வந்த
போது, அங்கே கோட்டாறு கத்தோலிக் மிஷனரிகள் கோட்
டாறு சோஷியல் சர்வீஸ் (கே.எஸ்.எஸ்.) என்ற அந்த அமைப்பு
''ஃபுட்பார் ஒர்க்'' என்ற திட்டத்தினால் பல வேலைகளைச் செய்
கிறார்கள். வேலைக்கு உணவு என்ற அடிப்படையில், வெளி
நாட்டிலிருந்து தங்களுக்கு கிடைக்கிற உணவை வேலை செய்
கிறவர்களுக்குக் கொடுத்து, ஆழப்படுத்தும் வேலைகளை பல
ஏரிகளில் செய்து கொண்டிருக்கிறார்கள்.

[முற்பகல் 11-50]

அதைப் போன்றதொரு திட்டத்தை ஏன் அரசு கொண்டு வரக் கூடாது. அப்படி சீரமைப்பு வேலை செய்பவர்களுக்கு உணவு என்ற திட்டத்தைக் கொண்டு வந்து இப்படி தூர்ந்து போய் இருக்கும் குளங்களை வெட்டவும், வாய்க்கால்களை தூர் எடுக்க வும் பயன்படுத்தலாம் அதை நாம் ஏன் செய்ய கூடாது என்பதை பரிசீலித்துப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும் பொதுப் பணித் துறையினர் இப்போது வேலையில்லாமல் இருக்கிறார்கள். அங்கு இருக்கும் இன்ஜினீயர்களும் ஒரு வேலையும் செய்யவில்லை. அவர் களைக் கேட்டால் பணம் இல்லை அதனால் வேலை செய்யவில்லை என்று சொல்கிறார்கள். ஒரு வேலையும் செய்யாமல் சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். எந்த ஒரு கால் வாயும் வெட்டவில்லை. செப்பனிடவும் இல்லை. ஆகவே, அப்படிப்பட்ட இன்ஜினீயர்களை வைத்து இந்தத் திட்டத்தை செயல்படுத்தச் சொன்னால், தூர்ந்து போய் இருக்கும் குளங்களும் சீரமைப்பு செய்தது போல் இருக்கும், வேலை இல்லாதவர்களுக்கு வேலை கொடுத்தது போலவும் இருக்கும். பட்டினியால் வாடி வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு உணவு அளித்ததுபோல் இருக் கும். ஆகவே அரசு இந்தத் திட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு கால்வாயை பாதுகாக்க வேண்டும் என்பதற்காக ஒரு மாஸ்டர் பிளான் போட்டு கரைகளைச் சீரமைக்கும் பணி மேற்கொள்ள வேண்டும். இப்போது வாய்க்கால் கரைகள் பழுதுபட்டு இருக்கின்றன. இதற்கு முன்னால் இருந்த திரு—கொச்சி அரசு மிகவும் நல்ல வகையில் அதைப் பாதுகாத்து வந்தார்கள். அந்தக் கால்வாய் ஓரம் ஆடுமாடுகள் கூட போக முடியாது, ஆனால் இன்றைக்கு அந்த ஆற்றின் கரைகளில் மண் எடுத்துக் கொண்டு போகிறார்கள். யாருக்காவது வீடு கட்ட வேண்டுமானால் அந்த ஆற்று மணலைத் தான் ஏற்றிக் கொண்டு போகிறார்கள். அதனால் பராமரிப்பு பாதிக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே, அதைச் சீரமைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் இப்போது சின்னச்சின்ன அணைக்கட்டு வேலைகளில் செய்து கொண்டு இருக்கிறோம். திருநெல்வேலி மாவட்டத்தில் கொடுமுடி ஆறு திட்டம் தொடங்கி இது வரையில் கிட்டத்தட்ட 35 லட்சம் செலவாகி இருக்கிறது. அந்த வேலை நடத்துவதற் காக ஒரு அதிகாரி இருக்கிறார். ஊழியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கப்படுகிறதே ஒழிய வேலை முடங்கிக் கிடக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை விரைவாகச் செய்து முடிக்க அரசு முயற்சிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இன்றும் மிகுதியாக நீர் பாழாகிக் கொண்டு இருக்கிறது. கோதையாறு பிராஜக்ட், அணைத் திட்டம் என்று புத்தகத்தை—3 வால்யூம் கொண்டது—நம்முடைய தமிழ் நாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை—திருவிதாங்கூர் சமஸ்தா தானமாக இருந்த போது தயார் செய்யப்பட்டது—திருவனந்த புரம் அரசாங்க படிப்பகத்தில் இருக்கலாம்—கிடைத்தால் நம் முடைய அதிகாரிகள் அதை வாங்கிப் படிக்க வேண்டும். நம் முடைய இன்ஜினீயர்கள் படிக்க வேண்டும். அதிலே 7 திட்டங் களைச் சொல்லியிருக்கிறார்கள். இது வரையில் நாம் 4 திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறோம். இன்னும் மூன்று திட்டங்கள் நிறை வேற்றப்பட வேண்டும். அந்த கோதையாறு பிராஜக்ட் ரிப் போர்ட்டில் சொல்லியபடிதான். நம் பேச்சிப்பாறை அணை கட்டப் பட்டது. பெருஞ்சாணி முக்கூடல் முதலிய அணைகளை கட்டி யிருக்கிறோம். எஞ்சியுள்ள ஏனைய மூன்று திட்டங்களையும் போடுவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். மாம்பழத்துறை அணை திட்டம் தச்சரை கோதை யாறு திட்டம் ஆகிய அவையெல்லாம் குறைந்த செலவில் கட்டக்கூடிய அணைகள், அந்தத் திட்டங்களை செயல்படுத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்தில் பாழாகும் நீரை நாம் உபயோகிக்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல் வள்ளியாறு பழையாறு ஆகிய ஆறுகளில் நீர் பாழாய் போய்க் கொண்டிருக்கிறது. அந்நீரை 'லிப்ட்' செய்து விவசாயத்திற்குப் பயன்படுத்தலாம்.

சில பொதுப் பணி வேலைகள் இப்போது தடைபட்டு இருக்கின் றன. அதற்குக் காரணம் கான்டிராக்டர்கள் ஒப்பந்தம் எடுத்து வேலை செய்ய மறுக்கிறார்கள். நாம் ஒப்பந்தம் போடுகிறபோது பழைய காலத்து ''ரேட்டுகளை'' வைத்துக் கொண்டு போடு வதால் யாரும் ஒப்பந்தம் எடுப்பதில்லை. தற்போது விலைவாசி உயர்வு அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளி ரேட்டுகளை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் திற்பரப்பு இடது கரை கால்வாயை நீட்டுவதற்கு 1967க்கு முன்பே ஒரு திட்டம் தீட்டியிருந்தார்கள். அதனால் ஏற்கனவே உள்ள ஆயக்காட்டு நிலங்களுக்கும் மேலும் பல நூறு ஏக்கர் திருத்து நிலங்களுக்கும் பாசனவசதி கிடைக்க முடியும். இதனால் சிதறால், வெள்ளங்கோடு போன்ற இடங் கள் பயன்படும். 1967க்கு முன்பே திட்டம் போட்டிருந்தார் கள், அதை கைவிட்டுவிட்டார்கள். அத்திட்டத்தையும் நிறை வேற்ற வேண்டும்.

அடுத்தபடியாக, விளாத்துறை லிப்ட் இரிகேஷன் ஸ்கீமும் முடங்கிக் கிடக்கிறது. அங்கு பம்ப் செட்ஸ் எல்லாம் போடப் பட்டிருக்கிறது. கால்வாய்கள் எல்லாம் போடப்பட்டிருக்கின் றன. அது இப்போது பழுதுபட்டிருக்கிறது. அது மீண்டும் வேலை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

குறிப்பாக கட்டடங்கள் கட்டுவதில், பள்ளிக்கூட கட்டடங்
களுக்கு ப்ளான் போடும்போது நமது என்ஜினியர்கள் இடத்
திற்குத் தக்கவாறு ப்ளான் போடவேண்டும். ஐந்து லட்சம்
ரூபாய், பத்து லட்சம் ரூபாய் என்று கட்டடங்களுக்கு ப்ளான்
போட்டு வைத்திருக்கிறார்கள். எந்த இடத்திற்கு எம்மாதிரி
கட்டடம்போடுவது என்று திட்டம்போட வேண்டும். ஒரு
பள்ளிக் கட்டடத்திற்கு நான்கு லட்சம் ரூபாய்க்கு ப்ளான்
போட்டு அது கல்வித்துறைக்கு வரும்போது அவர்கள் தங்
களிடம் அந்த அளவிற்கு பணம் கிடையாது என்று சொல்கிறார்
கள். ஆகவே இடத்தைப் பொறுத்து, தேவையைப் பொறுத்து
ப்ளான் போடவேண்டும். பத்து லட்சம் ரூபாய்க்கான கட்ட
டத்தை ஒரேயடியாகப் போடவேண்டும் என்று இல்லை. ஒரு
மாடிக் கட்டடம் முதலில் போடுவது, பின்னர் பண வசதிக்கேற்ப
அடுத்த மாடி போடலாம். ஆக இடத்திற்கேற்றவாறு, நிதி
வசதிக்கேற்றவாறு திட்டங்கள் போடவேண்டும். அரசாங்கப்
பள்ளிக்கூடங்கள் எங்கள் மாவட்டத்தில் அதிகம். அரசாங்கக்
கட்டடங்கள்தான் பழுதுபட்டுக் கிடக்கின்றன. அங்கே குல
சேகரம், காட்டாத்துறை முதலிய ஊர்களில் சத்தியாகிரகம்
இருந்தார்கள், பள்ளிக்கூடக் கட்டடம் கட்டவேண்டும் என்று.
அரசாங்கத்தின் கவனத்தை ஈர்க்கவேண்டும் என்ற முறையில்
அங்கு போராட்டத்தை, சத்தியாகிரகத்தை நடத்தினார்கள்.
ஆகவே இருக்கிற பணத்தைக் கொண்டு தேவையான கட்டடங்
கள் நிர்மாணிக்கப்படவேண்டும். பெரிய பெரிய திட்டங்களைப்
போடாமல் இருக்கிற இட வசதியைப் பொறுத்து திட்டங்களைப்
போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, காண்ட்ராக்ட் கொடுக்கிறார்கள். அந்த காண்
ட்ராக்ட்டர்கள் பெறக்கூடிய சிமெண்ட் வெளி மார்க்கெட்டுக்குப்
போகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். கலவைக்காக சிமெண்ட்
கொடுக்கிறோம், ஜல்லி கொடுக்கிறோம். செங்கல் கொடுக்கிறோம்.
சிமெண்டை காண்ட்ராக்ட்டர்கள் எடுத்துச் சென்றுவிடுவதால்
வேலையின் தரம் குறைந்துவிடுகிறது. ஆகவே சிமெண்ட்
வெளியே வெளி மார்க்கெட்டுக்குப் போகாமல் பார்த்துக் கொள்ள
வேண்டும்.

அதேபோல் அரை அங்குல சல்லி வேண்டுமென்றால் ஒரு அங்
குலம் ஒன்றரை அங்குலச் சல்லி கொடுக்கிறார்கள். இவற்றை
யெல்லாம் கண்காணிப்பதற்கு நம்மிடம் அலுவலர்கள் இருந்
தாலும் அவர்கள் போதிய கவனம் செலுத்துவதில்லை என்று
குறை இருக்கிறது. மேலே பல பெரிய அதிகாரிகள் இருக்கிறார்
கள். ஆனால் வேலை செய்கிற இடத்தில் பெரிய அதிகாரிகள்
காணப்படுவதில்லை. இன்னின்ன வேலைகளைச் செய்யுங்கள் என்று
படம்போட்டுக்காண்பித்து விட்டுப் போய் விடுகிறார்கள்.
வேலை நடக்கும்போது, வேலை செய்யும் இடத்தில் கீழ்நிலையில்
உள்ள ஒரு சூப்பர்வைஸர், ஒரு சின்னப்பையன் நின்று

கொண்டிருப்பான். அவரால் என்ன செய்ய முடியும்? ஆக
இந்த வேலைகள் ஒழுங்காக நடைபெறுவதில்லைஎன்ற குறைபா
இருக்கிறது. நம்மிடம் வல்லுனர்கள் இருந்தால் கூட வே
செய்வதில் குறைபாடுகள் உள்ளன. ஆஸ்பத்திரிக் கட்ட
கள் பொறுத்தவரையில் குலசேகரம், தக்கலை, நாகர்கோவி
குழித்துறை, குளச்சல், இந்த இடங்களில் கட்டடங்க
இல்லை. எல்லாம் திருவிதாங்கூர் மஹாராஜா காலத்தி
கட்டப்பட்ட கட்டடங்கள். நாகர்கோவிலில் கொஞ்சம் வே
நடந்து கொண்டிருக்கிறதே தவிர மற்றப்படி உள்ள ஆஸ்ப
திரிகளுக்கு கட்டடங்கள் வரவேயில்லை. இவற்றையெல்லா
இந்த இலாகா கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டு
என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. நாச்சிமுத்து : மாண்புமிகு தலைவர் அவர்களே
பாசனம், மற்றும் பொதுப்பணித் துறை மானியக் கோரிக்கை
கள் மீது என்னுடைய கருத்துக்கள் ஒரு சிலவற்றை எடுத்து
கூற நான் ஆசைப்படுகிறேன். இந்த மானியக் கோரிக்கையி
நமது பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பாக
விவசாயிகளுக்காக ஒரு திட்டத்தையும், நீர்பாசனம் மற்றும்
சிறு நீர்பாசனத் திட்டங்களுக்காக அதிக நிதி ஒதுக்கீடு செ
திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். குறி
பாக நான் என்னுடைய பகுதியைப்பொறுத்து ஒரு சிலவற்றை
இந்த மன்றத்தில் எடுத்துச்சொல்ல ஆசைப்படுகிறேன்.

[நண்பகல் 12—00]

என்னுடைய பகுதியாகிய கோவை மாவட்டத்தில் பரம்பிக்
குளம்-ஆளியாறு திட்டம் புஞ்சைப் பயிர்களுக்காக போடப்
பட்ட ஒரு திட்டம். இந்தத் திட்டமானது முடிந்து செயல்
படும்போது, அப்பொழுது இருந்த அரசில் உடுமலைப்பேட்டை
யிலும் பொள்ளாச்சியிலும் இரண்டு அமைச்சர்கள் இருந்தார்
கள். அந்த அமைச்சர்கள் இருந்த காலத்தில் பொள்ளாச்சி
யிலும் உடுமலைப்பேட்டையிலும் இந்தத் திட்டம் பயன்பட்ட
தோடு பல்லடம், தாராபுரம் வட்டத்திலும் உபயோகப்படுத்தப்
பட்டது. ஆனால் புஞ்சைக்கு விடப்பட்ட நீரை, அமைச்சர்கள்
செல்வாக்கால் பொள்ளாச்சி உடுமலைப்பகுதியில் நஞ்சைக்கு
உபயோகிகப்படுத்தினர். மீண்டும் சென்ற கவர்னர் ஆட்சி
ஆட்சிகாலத்திலும் புஞ்சைக்கு விடப்பட்டிருந்த இந்தப் பாச
னத்தை உடுமலைபேட்டையிலுள்ள ஒரு பெரிய ஆலை அதிபரும்,
ஏற்கனவே இருந்த மத்திய அரசின் ஒரு அமைச்சரும் சேர்ந்து
அதிகாரிகளை பயன்படுத்திக்கொண்டு உடுமலை, பொள்ளாச்சி
இரு தாலுகாக்களில் நஞ்சைப்பயிர் செய்வதற்கு பயன்
படுத்திக்கொண்டனர். பல்லடம், தாராபுரம் தாலுகா
களுக்கு தரவேண்டிய தண்ணீரை பயன்படுத்திக்கொண்டார்கள்.

[திரு. கே. நாச்சிமுத்து] 1977 ஆகஸ்ட் 19

ஐந்து வருடமாக எங்கள் பகுதிக்குத் தண்ணீர் வருவதே கிடையாது. பல்லடம், தாராபுரம் தாலூகாவுக்கு தண்ணீரைத் தருவது கிடையாது. ஐந்து வருட காலத்தில் இரு முறை தான் நீரை விட்டார்கள். இப்போது நீர் வந்து ஒன்றரை வருடங்கள் ஆகிவிட்டன. தாராபுரம், பல்லடம் தாலூகாக்களில் புஞ்சை பயிர் செய்வதற்குக்கூட நீரே வருவதில்லை. அதே நேரத்தில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி தாலூகாவிலுள்ளவர்கள் இரண்டு போக சாகுபடி செய்து கொண்டு இருக்கிறார்கள், பல்லடம், தாராபுரம் தாலூகாவிள்ள விவசாயிகள் எல்லாம் தண்ணீர் கிடைக்காமல் ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே புஞ்சைப் பயிர்களுக்கு என்று கொடுக்கப்பட்ட தண்ணீரை நஞ்சைப்பயிர்களுக்கு சாகுபடிசெய்ய பயன்படுத்தக் கூடாது என்று கடுமையான நிபந்தனை விதிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் மூலமாக 1 லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு விஸ்தரிப்பு கொடுக்க, பொள்ளாச்சி, பல்லடம், தாராபுரம் போன்ற இடங்களுக்கு எல்லாம் விஸ்தரிப்பு கொடுக்க சர்வே செய்யப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேல் ஆகின்றன. ஆனால் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. கிட்டதட்ட ஒரு வருடத்திற்கு முன்பாக உடுமலைப்பேட்டையிலுள்ள ஒரு ஆலை அதிபரும், முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவரும் இந்தத் திட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. ஆகவே இதனைக் கவனித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்......

திரு. துரை. ராமசாமி: முன்னாள் மத்திய அமைச்சர் ஒருவர் சேர்ந்து இதை நிறுத்தி வைத்தார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள். என்ன ஆதாரத்தை வைத்துக் கொண்டு இப்படிப் பேசுகின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னாள் அமைச்சர் ஒருவரைப்பற்றி சொல்வதைப்பற்றி தவறு எதுவும் இல்லை. ஆனால் அவர்களைப்பற்றி கண்டித்தோ அல்லது அவர்கள் தவறு செய்தார்கள் என்றோ பேசக் கூடாது.

திரு. துரை. ராமசாமி: பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்தை முன்னாள் மத்திய அமைச்சர் நிறுத்தி வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதனால் தான் கேட்கிறேன்.

திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பேசும்போது அட்வைஸர் ஆட்சியில் பரம்பிக்குளம்-ஆளியாறுத் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதைத்தான் இப்போது பேசுகின்ற உறுப்பினர் அவர்களும் குறிப்பிடுகின்றார்கள்.

[1977 ஆகஸ்டு 19

திரு. துரை. ராமசாமி: நான் பேசும்போது மத்திய அமைச்சர் இதில் தலையிட்டார் என்று சொல்லவில்லை. இந்தத் திட்டத்திற்கும் மத்திய அரசுக்கும் சம்பந்தம் இல்லை. மத்திய அமைச்சர் இதில் தலையிட்டார் என்று உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை எந்த அடிப்படையில் குறிப்பிடுகின்றார்கள் என்பதைத் தான் நான் கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்தப் பரம்பிக்குளம்-ஆளியாறு விஸதரிப்புத் திட்டத்தைப்பற்றி ஆளுநர் ஆட்சிக் காலத்தில் இன்னும் விரிவாக ஆராய வேண்டுமென்று மத்திய சர்க்கார் ஒரு த்னிக் குழுவை நியமித்திருக்கிறார்கள். யார் இதில் என்ன செய்தார்கள் என்பதை நாம் விவாதிக்க வேண்டிய தேவையில்லை. இந்தக் குழு இன்னும் சந்தித்ததாகத் தெரியவில்லை.

திரு. கே. நாச்சிமுத்து: இந்தப் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் மூலமாக எந்தவிதமான பலனையும் பெறாமல் இருக்கின்ற பல்லடம், தாராபுரம் இப்பகுதிகளை, ஐந்து வருடங்களாக வறட்சியாக இருக்கின்ற இப்பகுதியை ஏற்கனவே பஞ்சப் பிரதேசமாக அறிவிப்பு செய்து இருந்தும் அரசு முதல் கவனம் செலுத்தி ஏழை எளிய விவசாயிகள் பலனடைகின்ற வகையிலும் கிராமப்புறங்களிலுள்ள மக்கள் பலனடைகின்ற வகையிலும் இந்த விஸ்தரிப்புத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டும் என்று இந்த அரசை நான் கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும், கேரளாவிலே இருந்து பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தின் கீழ் கிட்டத்தட்ட 8,000 ஏக்கராவிற்குப் பாசன வசதி கொண்டு வருவதோடு, கோவைப் பகுதியிலே இடுக்கியாறு, கல்லாறு, பம்பையாறு போன்ற ஆறுகளுக்கும் திட்டங்கள் கொண்டுவந்தால், அவைகள் மூலம் கோவை, மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களும் பயன் பெற முடியும். எனவே, அதற்கான திட்டங்களை இந்த அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், இந்த அமராவதி ஆற்றில், தாராபுரத்திலிருந்து கரூர்வரை தற்காலிகமாகப் பம்பு செட்டுகள் வைத்து, இந்த ஆற்றிலே இருக்கிற தண்ணீரைக் கிட்டத்தட்ட, ஒரு மைல், இர்ண்டு மைல், மூன்று மைல் வரை எடுத்துச் செல்லுகிறார்கள். இந்த ஆற்றிலே பயன்படக்கூடிய வாய்க்கால் உள்ளவர்கள் தண்ணீர் வசதியைப் பெறமுடியாமல், வாய்க்கால் தண்ணீர் கடைக்கோடி வரை செல்லவிடாமல், இடையிலேயே தடுத்து விடுகிறார்கள். எனவே, இந்தப் பம்பு செட்டுகளை உடனடியாக நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமாறு இந்த அரசை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும், பழனி வட்டத்தில் பாப்பம்பட்டி என்ற பகுதியில்
ஏற்கனவே ஒரு திட்டம் போடப்பட்டு, குதிரை ஆற்றில் ஒரு
நீர்த்தேக்கம் கட்டக்கூடிய வகையிலே, அதற்கு 312 லட்சம்
ரூபாய் மதிப்பீட்டில், 240 மில்லியன் கன அடி தண்ணீர் வரக்
கூடிய திட்டம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. இந்தத்
திட்டம் நிறைவேற்றப்பட்டால், கிட்டத்தட்ட 5,000 ஏக்கர்
நிலத்திற்கு தண்ணீர் வசதி பெற வாய்ப்பு ஏற்படும். ஆகவே,
இந்தத் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

*திரு. சி. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்
பணித்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற
இந்த மானியத்தில் ஒருசில கருத்துக்களை மதுராந்தகம்
தொகுதி மக்களுக்காகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டி
ருக்கிறேன்.

தொடக்கத்திலேயே, நிதிநிலை அறிக்கையிலே செண்பகத்
தோப்பு அணைக்கட்டுக் கட்டப்பட இருப்பதாகத் தெரிவித்
திருக்கிறார்கள். இந்த அணைக்கட்டுக் கட்டப்பட்டால், ஏற்
கனவே நமக்கும், மைசூருக்கும் எப்படித் தகராறு இருந்து
வருகிறதோ, அதேமாதிரியானத் தகராறு வட ஆற்காடு மாவட்
டத்திற்கும், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் ஏற்படும்,
தொடர்ந்து இருக்கும் என்பதை தயவு செய்து நம் மாண்பு
மிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் உணர வேண்டு
மென்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.
ஏற்கனவே, தண்டரை அணை கட்டியதால், செய்யாற்றில் ஒரு
பகுதி, வந்தவாசியில் ஒரு பகுதி, மதுராந்தகம் முழுவதும்
பாதிக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்த அணை கட்டப்பட்
டால், ஏறத்தாழ 400 கிராமங்கள் இந்த மதுராந்தகம் வட்டத்
திலும், அதற்குப் பக்கத்திலுள்ள உத்திரமேரூரும், வந்த
வாசியில் ஒரு பகுதியும், செய்யாற்றில் ஒரு பகுதியும் மிகவும்
பாதிக்கப்படும் என்பதைத் தயவுசெய்து மாண்புமிகு பொதுப்
பணித்துறை அமைச்சர் அவர்கள் உணரவேண்டுமென்று
கேட்டுக் கொள்கிறேன். எனவே, இதைத் தீர்க்கமாக யோசித்து
இந்த வேலைகளை இந்த அரசு தொடங்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

நான் தொடக்கத்திலேயே இதனால் மைசூர் சர்க்காருக்கும்,
தமிழ்நாட்டிற்கும் உள்ளத் தகராறுபோல், இதற்கும் அந்த
விவகாரம் வந்து விடும் என்று சொன்னேன், அதை மன
திலே கொண்டு, திரும்பவும் சொல்கிறேன், செண்பகத்
தோப்பில் ஒரு அணை கட்டினால், செங்கற்பட்டு மாவட்டத்திற்
கும், வட ஆற்காடு மாவட்டத்திற்கும் இடையே இப்படிப்
பட்ட ஒரு விவகாரம் வந்துவிடும். ஏற்கனவே தண்டரை

அணைக்கட்டினால், செய்யாற்றில் ஒரு பகுதி, வந்தவாசியில் ஒரு
பகுதி, மதுராந்தகம் பெரும் அளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.
இப்போது நமக்கும், மைசூருக்கும் தகராறு இருக்கிறது.
இந்தத் தகராறுபோல், செங்கற்பட்டு மாவட்டத்திற்கும், வட
ஆற்காடு மாவட்டத்திற்கும் வந்துவிடக்கூடாது என்பதை வற்
புறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் இப்படி வலி
யுறுத்திப் பேசுவதாலேயே பிரச்சனை வந்துவிடும் போலிருக்
கிறதே?

திரு. சி. ஆறுமுகம்: தாங்கள் செங்கல்பட்டுவாசி. தங்
களுக்கும சேர்த்துதான் பேச வேண்டியிருக்கிறது.

அடுத்து, மதுராந்தகம் ஏரியை தூர் வாருவதற்காக 3
ஆண்டுகளுக்கு முன்பே 44 லட்சம் ரூபாய் திட்டத்தைப்
போட்டு, அன்றைக்கு இருந்த திராவிட முன்னேற்றக் கழக
அரசு மத்திய சர்க்காருக்கு அனுப்பியிருந்தது. அது என்ன
ஆயிற்று என்று தெரியவில்லை.

அடுத்து, பல்லவன்குளம் அணை கட்டப்பட்டு, ஒரு பகுதி
அப்படியே நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். கழக அரசு
காலத்தில் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்தபோது,
மதுராந்தகம் தொகுதிக்காக இந்தத் திட்டத்தை ஆரம்பித்து
வைத்தார்கள். இத்திட்டத்தினால் 20 கிராமங்களில் 6,000
ஏக்கரா நிலம் பயன்பெறும். அடிக்கடி வெள்ளம் வருகின்ற
காரணத்தினால், எங்கே அடித்துக் கொண்டு போய்விடுமோ
என்ற பயம் இருக்கிறது. கட்டியுள்ள கடைக்கால் இருக்குமா,
இருக்காதா என்பதே சந்தேகமாக இருக்கிறது. எனவே,
இதையும் அரசாங்கம் உடனடியாகச் செய்ய வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-10]

அடுத்து, மதுராந்தகம் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்குக்
கட்டிட வசதி இல்லை. வீராணக்குன்னம் உயர்நிலைப் பள்ளிக்குக்
கட்டிட வசதி இல்லை. அந்தக் கட்டிடங்களைக் கட்டிக்
கொடுக்க நிதி ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
அடுத்து புக்கத்துறை உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் இல்லை.
அதற்கும் புதிய கட்டிடம் கட்டக் கோருகிறேன்.

செய்யூரில் மருத்துவமனை கட்டுகிறார்கள். திராவிட முன்
னேற்றக் கழக அரசு காலத்தில் நிதி ஒதுக்கப்பட்டு கட்டிடங்கள்
அநேகமாக முடிந்துவிட்டன. 20 படுக்கைகள் கொண்ட

மருத்துவமனை. அவர்கள் அறிக்கையில் செய்யாறு என்று குறிப்
பிட்டிருக்கிறார்கள். அது வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்.
கிறது. இது செய்யூர் என்பது, மதுராந்தகம் தொகுதியி
லுள்ள ஊர். ஏற்கனவே இங்கு எதிர்க்கட்சித் தலைவராக
இருந்த திரு. வி. கே. ராமசாமி முதலியாரின் சொந்த ஊர்.
அதை மறக்காமல் குறித்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

பாலாறு க்ளீயரன்ஸ் சர்டிபிகேட் என்று ஒன்றை எங்கள்
மாவட்டத்திலுள்ள விவசாயிகள் வாங்க வேண்டியிருக்கிறது.
பாலாறு ஓரத்தில் இருக்கும் செங்கல்பட்டுத் தாலுகாவுக்கு அது
கிடையாது. ஆனால் மதுராந்தகம் தாலுகாவுக்கு அதை
வைத்திருக்கிறார்கள். இதை மாவட்ட ஆட்சித் தலைவரிடம்
இருந்து வாங்க வேண்டும். அதை வாங்க மூன்று ஆண்டுக்
காலம் செலவழித்து 300 முதல் மூவாயிரம் ரூபாய் வரை
செலவழித்து கடன்காரனாகிவிடும் நிலைமை இருக்கிறது.
அதை நீக்க வேண்டும்.

ஏற்கனவே ஒரு திட்டத்தைச் சொன்னோம். பொதுப்பணித்
துறையிலிருந்து பாலாற்றில் குறுக்கே கான்க்ரீட் சுவர்கள்
கட்டினால் பக்கத்தில் கிணறுகளில், நீரூற்றுக்கு வசதியாக
இருக்கும். நீர்ப்பாசன மாநாடுகளில் ஏற்கனவே இதுபற்றிப்
பேசப்பட்டு அரசின் கவனத்திற்கு வந்திருக்கும். வெள்ள
காலத்தில் அப்படிச் சுவர் கட்டி தண்ணீரைத் தடுத்து நிறுத்த
ஏற்பாடு செய்ய வேண்டும். செம்பரம்பாக்கம் ஏரியைச் செப்
பனிட நிதி ஒதுக்கப்பட்டு வேலை நடந்து வந்தது நின்றுவிட்டது.
அதைச் செய்யவேண்டும். பக்கத்தில் ஆறு இருக்கிறது, அதி
லிருந்து மணலை எடுத்துச் செல்கிறார்கள். (மணி அடிக்கப்பட்டது).

மதுராந்தகம் மருத்துவ மனைக்காக வெளி நோயாளி பிரிவுக்
காக உள்ள கட்டிடம் டிஸ்ட்ரிக் போர்டு காலத்தில் கட்டப்
பட்டது. அது என்றைக்கு விழுந்து விடுமோ என்று சொல்லக்
கூடிய அளவுக்கு பழைய கட்டிடமாக இருக்கிறது. 600,
700 நோயாளிகள்—ஒரு நாளைக்கு—வெளிப் பிரிவு நோயாளிகள்
வருகிறார்கள். அதனைப் புதிய கட்டிடத்திற்கு மாற்றியமைத்
தால் நலமாக இருக்கும்.

பல காலமாகப் பேசப்பட்டு வரும் மதுராந்தகம் ஏரித்திட்டம்
எப்போது நடைபெறும் என்று தெரியவில்லை. ஏற்கனவே
இருந்த ஆட்சியின் சார்பாக மத்திய சர்க்காருக்குத் தபால்
போயிருக்கிறது. அந்தத் தபால் திரும்ப வருமா என்று தயவு
கூர்ந்து கவனிக்க வேண்டும். டில்லியிலிருக்கும் அதிகாரிகளிட
மிருந்து பழைய தபால்களைக் கிளப்பி அதற்கான நடவடிக்கை
களை எடுத்துக்கொள்ள வேண்டும். பொதுவாக, இந்தக்
காரியங்களை எல்லாம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு
இந்த அளவோடு என்னுடைய உரையை முடித்துக் கொள்கி
றேன்.

திரு. எஸ். ஆர். இராதா : நாங்கள் பேசும்போது மணி
யடித்து உட்காரச் சொல்லுகிறீர்கள். அவர் பேசிக்கொண்டே
இருக்கிறார்.

திரு. சி. ஆறுமுகம் : நாங்கள் ஆளும் கட்சிக்குப் பல காரி
யங்களில் ஆலோசனை கூறவேண்டும். தகவல்கள் கொடுக்க
வேண்டும்.

* திரு. மு. சுந்தரம் : தலைவர் அவர்களே, பாசனம், பொதுப்
பணித்துறை மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்
கள் பேச விரும்புகிறேன்.

தமிழகத்திலே இன்றைக்கு ஓடுகின்ற ஜீவநதி காவிரி.
அதிலே பல சிக்கல்கள் இருக்கும் காரணத்தால் ஒப்பந்தத்தை
அமல்படுத்த வேண்டுமென்று பேசப்படுகிறது. பல்லாண்டு
களாக பாசனத்தில் நாம் அனுபவித்து வந்ததில் கிருஷ்ணராஜ
சாகர் அணைக்கட்டின் காரணமாக நமக்குத் தண்ணீர் பற்றாக்
குறை ஏற்பட்டதன் காரணமாக 1924 ஆம் ஆண்டு காவிரி நீர்
ஒப்பந்தம் ஏற்பட்டது. தமிழகத்தில் நிலங்கள் எந்த அளவுக்குப்
பாசனத்திற்கு லாயக்காக இருக்கிறதோ அந்த அளவுக்குத்
தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பதுதான் ஒப்பந்தத்தின் அடிப்
படை நோக்கமாகும்.

ஆகவே அப்படிப்பட்ட ஒத்துழைப்புடன் தமிழக அரசும்
கர்நாடக அரசும் ஒருங்கிணைந்து விரைவுபடுத்திப் பரிசிலனை
செய்து ஒரு பரிகாரம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன்.

விவசாய உற்பத்தியைப் பெருக்கவும், நதி நீரைப் பெறவும்
ஏரி குளங்களை அமைத்து மராமத்து செய்து பர்குலேஷன்
டாங்க்ஸ் அதிகமான அளவிலே ஆங்காங்கு ஏற்படுத்தித்தர
வேண்டும்.

டி. சி. ஆர். ஸ்கீமின் கீழ் உள்ள ஏரிகளை, தூர் வாராமல்
இருக்கின்ற ஏரிகளை புல்டோசர்களை வைத்து ஆழப்படுத்த
வேண்டும், அப்படிச் செய்வதன் மூலமாக நீர் பிடிக்கின்ற
கொள்ளளவு அதிகமாகும் என்ற காரணத்தாலே பாசனத்
திற்கு அதிகமான அளவில் தண்ணீர் கொடுக்க முடியும், இந்தத்
திட்டத்தையும் அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று பொதுப்
பணித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.
இக்காலத்திலே விவசாயிகள் கிணறுகள் வெட்ட வேண்டுமென்றால்
அதற்காக அவர்களுக்கு மானியம் கொடுக்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மேற்கு தொடர்ச்சி மலையிலே உற்பத்தியாகி காட்டாறுகளாகப் பாய்கின்ற ஆறுகள் கடைசியிலே கடலிலே கலக்கின்ற நிலைமை இருக்கிறது. அந்த ஆறுகளின் குறுக்கே சிறிய அணைகளைக் கட்டுவதன் மூலமாக அந்தத் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்தத் திட்டமிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிறிய காட்டாறுகளில் சிறிய அணைகளைக் கட்டி ஏராளமான நிலங்கள் பாசனம் பெறக்கூடிய நிலைமையை ஏற்படுத்தி, ஏனென்றால் கேரளத்திற்கும் அந்தத் தண்ணீர் பயன்படாமல் கடலிலே போய் வீணாகச் சேர்கிறது, ஆகவே அந்த ஆறுகளின் குறுக்கே அணைகளைக் கட்டித் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக் கொண்டு கேரளாவிற்கு உணவு கொடுக்க ஒப்பந்தம் கூடச் செய்துகொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாத்தனூர் அணைக்கு வலது பக்கம் தோண்டப்படும் கால்வாய் ரிஷிவந்தியம் பகுதி வரை வருகிறது. அதை மேலும் விஸ்தரித்து திருக்கோவிலூர் வரையில் வருவதற்குத் திட்டமிடவேண்டும். ஏனென்றால் ஏரிகளில் தண்ணீர் வருவதற்காகத்தான் போடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதை விஸ்தரித்துத் தரவேண்டுமென்று பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதைப் போல மாடாம்பூண்டிப்பகுதியிலே ஒரு ரிசர்வாயர் அமைத்துத் தண்ணீரைத் தேக்கினால் அதன் மூலம் 5 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி செய்து கொடுக்கமுடியும். ஆகவே அந்தத் திட்டத்தையும் செய்துகொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக தண்ணீர் கொடுக்கின்ற வாய்க்கால்கள் தமிழகம் முழுவதும் இருந்தபோதிலும் நீர் சீப்பேஜ் ஆகாமல் தடுக்க கரைகளைக் கட்டிக் கொடுத்தால் அதிகமாகப் பாசனத்திற்கு வகை செய்யலாம், ஆகவே அதையும் செய்து கொடுக்கவேண்டும்.

காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் காவிரி ஸ்கீம் ஒன்று இருந்தது. அதற்கு உலக வங்கி கடன் கொடுப்பதாக இருந்தது, அதையும் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும்.

செங்கோட்டை பகுதியிலே நீர்த் தேக்கம் கட்டுவதற்கு முன்னாலேயே 1974-ல் அடிக்கல் எல்லாம் நாட்டப்பட்டது, ஆனால் வேலை நடக்கவில்லை. அதையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

நதி நீர்ப் பிரச்சனைகளை தேசிய அளவில் பேசித் தீர்த்து துரிதமாக நாடு முழுமையும் உள்ள பற்றாக்குறைப் பகுதிகள் நீர் பெறத்தக்க முறையைக் கொண்டு வரவேண்டும். உபரி மாநிலங்களிலே உள்ள தண்ணீரை பற்றாக்குறை மாநிலங்கள் பயன்படுத்தச் செய்கின்ற முறையிலே, உபரி மாநிலங்களில் கிடைக்கிற தண்ணீர் பற்றாக் குறை மாநிலங்களில் பாய்கிற

முறையில் கால்வாய்களை அமைத்து பாசன வசதிகள் பெறுகின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கேரளத்திலே பயன்படாமல் கடலிலே கலக்கிற தண்ணீரில் பாதியை தமிழகத்திற்குத் திருப்பிவிட்டால் 35 லட்சம் ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி கிடைக்கச் செய்யமுடியும். அதற்காக அவர்களுக்கு உணவு கொடுத்துவிடலாம், இதையும் இந்த அரசு பரிசிலனை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் தண்ணீர் கடலிலே வீணாவதைத் தடுக்கலாம், வெள்ளம் வருவதைத் தடுக்கலாம், தமிழகத்திலே பாசனவசதிகள் அதிகமாகும்.

கே. எல். ராவ் அவர்கள் கங்கை-காவிரி இணைப்புத் திட்டத்திலே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள், மேற்கு நோக்கி ஓடி வருகின்ற 42 ஆறுகளைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில் ஆங்காங்கே கால்வாய்களையும் கண்மாய்களையும் கட்டி அந்தத் தண்ணீரைத் திருப்பிவிட்டால் தென் மாவட்டங்களிலே நல்ல நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12.20]

நாம் தேசிய அளவில் கங்கை-காவிரி இணைப்பை உருவாக்கும் வரையில் கேரள உபரி நீரைத் திருப்பும் திட்டத்திற்காகக் காத்திருக்க வேண்டியதில்லை. இதில் தொழில் நுட்பப் பிரச்னைகள் எதுவும் இராது என்பதை ஏற்கனவே வெற்றிகரமாக பெரியாறு, பரம்பிக்குளம்-ஆளியாறு ஆகிய திட்டங்களிலிருந்து அறிவோம். ஆனால் மகத்தான அரசியல் பிரச்னைகளை தமிழ்நாடு சமாளிக்கவேண்டியிருக்கும். இந்தமாதிரி திட்டங்களைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டு நல்ல வகையில் பாசன வசதிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ரோடுகள் போடுவதில் சில குறைபாடுகள் இருக்கின்றன. ரோடுகள் போடும்பொழுது ஜல்லி மேடைகள் கட்டி எஸ்டிமேட்டிற்காகக் கிரயத்தை வாங்கிக்கொண்டு போய்விடுகிறார்கள். ஆனால் ஜல்லி நிரப்பப்படுவதில்லை. ஜல்லி மேடை கட்ட ஒப்பந்தக்காரர்களுக்குக் கொடுக்கும்பொழுது 50 பர்சென்டை மட்டும் கொடுத்துவிட்டு மீதி 50 பர்சென்டை வேலை முடிந்த பிறகு கொடுக்க வேண்டும். இதுவரையில் என்னுடைய பகுதியில் 50 ரோடுகளுக்கு ஜல்லி சேகரிக்கப்பட்டிருக்கிறது. ஜல்லி சேகரிக்கப்பட்டு அதற்கான பணத்தை வாங்கிக்கொண்டுபோய் இருக்கிறார்கள். ஆனால் இது வரையில் பாதையில் நிரப்பப்படவில்லை. நான்கில் ஒரு பங்குதான் ஜல்லி இப்பொழுது இருக்கிறது. இந்தமாதிரி குறைகளை நீக்க வேண்டும்.

திருக்கோவிலூரில் பொது மருத்துவ மனை இருக்கிறது. டிஸ்
டிரிக்ட் போர்டு காலத்தில் இருந்து கொண்டிருந்த அதைப்
பற்றி முன்னாள் சுகாதார அமைச்சர் திரு. அன்பழகன் அவர்கள்
திருக்கோவிலூருக்கு வந்தபொழுது அந்த ஆஸ்பத்திரியைப்பற்றி
சொல்லி, அந்தக் கட்டிடத்திற்கு 2½ இலட்சம் ரூபாய் செலவு
செய்து, 24 படுக்கைகள் கொண்ட கட்டிடத்தைக் கட்டிக்
கொடுத்தார்கள். அதை இன்றைக்கு 100 படுக்கைகள்கொண்ட
ஆஸ்பத்திரியாகக் கட்டிக் கொடுக்க வேண்டும். தாலுகா
தலைநகரத்தில் இருக்கின்ற அந்த ஆஸ்பத்திரியில் எக்ஸ்ரே
வசதியும், லேப் வசதியும் இல்லாமல் இருக்கிறது. இதற்குக்
கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று பொதுப்பணித்
துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொண்டு என்னுடைய வார்த்
தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவரவர்களே, இந்த
மானியங்களின் மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லி இந்த
மானியங்களை நான் ஆதரிக்கிறேன். இன்றைக்குப் பாசனம் என்
பது விவசாயிகளுக்கு ஜீவாதாரமான ஒரு பிரச்னையாகும்.
விவசாயிகளுடைய பிரச்னையாக இருக்கிற காரணத்தால் சமுதா
யத்திற்கே ஜீவாதாரப் பிரச்னையாகவும் உருவெடுத்திருக்
கிறது. குறிப்பாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில்
நம்முடைய பிரச்னை இன்றைக்கு எப்படி மாறுமோ என்ற
ஐயப்பாடுகள் உருவாகியிருக்கின்றன. காவேரியைப் பற்றிய
கவலை தமிழ்நாட்டிலே இருக்கின்ற அத்தனைபேருக்கும் இருக்
கிறது. காவேரிப் பிரச்னை என்றைக்குச் சரியான முறையில்
தீர்க்கப்படுகிறதோ அன்றைக்குத்தான் தமிழ்நாட்டிலே இருக்
கின்ற விவசாயிகள் பிரச்னை தீர்க்கப்படும் என்ற அளவிற்கும்,
இது கட்சிகளுக்கு அப்பாற்பட்டு தமிழ்நாட்டிலே வாழ்கின்ற
நாலரை கோடி மக்களுடைய பிரச்னையாக உருவாகியிருக்கிறது.
இதன் அடிப்படையிலே இன்றைக்கிருக்கின்ற அரசு மத்திய ஆட்சி
யாளர்களோடு தமிழ்நாட்டினுடைய உணர்வுகளைச் சரியான
முறையிலே விவாதித்து இந்தக் காவேரிப் பிரச்னைக்குச் சரியான
தீர்வு காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்திலே இந்திய நாடு ஒரு நாடு என்று நாம் இன்
றைக்குச் சொல்கிறோம். வடக்கேயிருக்கின்ற காஷ்மீரத்திலிருந்து
கன்னியாகுமரி வரையில் ஒரே நாடு என்று நாம் பேசுகிறோம்.
ஆனால் கங்கையாறு காவேரி ஆற்றோடு இணைக்கப்படுகின்ற பிரச்னை
யைப்பற்றி நாட்டிலே இருக்கின்ற நிபுணர்கள் அனைவரும் எடுத்
துச் சொல்கிறார்கள். ஆனால் மத்தியிலே இருப்பவர்கள் இதில்
சரியான கவனத்தைச் செலுத்தவில்லையோ என்றுதான் நாம்
நினைக்கவேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்ல, வடபுலத்திலே
இன்றைக்குப் பெருக்கெடுத்து ஓடும் நீர் கடலிலே
கலக்கிறது. அவ்வாறு வடபுலத்திலே ஓடும்
ஆறுகளின் தண்ணீர் கடலிலே கலந்தாலும் தென்புலத்

திற்குத் தரமாட்டோம் என்ற நிலைமையிருக்குமானால், வடக்கே
பெருக்கெடுத்தோடும் வெள்ளம், தெற்கே வறட்சி நீடிக்கிறது
என்ற நிலைமை நீடித்து இருக்குமானால், அது வடபுலம் தென்
புலம் என்ற உணர்வைத் தூண்டுமே தவிர இந்திய நாட்டினுடைய
ஒருமைப்பாட்டிற்கு வழி வகுக்காது என்ற நிலைமைகளை இந்த அரசு
மத்தியஅரசுக்குச் சரியான முறையில் எடுத்துச் சொல்லவேண்டும்
என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்
றுவதற்கான பூர்வாங்க வேலைகளையாவது, பூர்வாங்க ஆய்வுகளை
யாவது மத்திய அரசு தொடங்கும் வகையில் மாநில அரசுகள் நட
வடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில்
கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதுவும் குறிப்பாக
வடார்க்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களை நாம் எடுத்துக்கொண்
டால் நீர்ப்பாசனத்திற்கான வசதி அங்கே கேணிகளின் வாயிலாக
வும், ஏரிகளின் வாயிலாகவும் தான் இருக்கிறது. ஆகவே, அந்த
ஏரிகளிலும், கேணிகளிலும் நீர் இல்லாத நிலைமைகளை மாற்றி
யமைக்கும் முறையில் நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். தமிழ்
நாட்டிலே இருக்கின்ற அத்தனை ஏரிகளிலும் ஆக்கிரமிப்புக்கள்
பரவலாக நடந்து வந்திருக்கின்றன.

இதற்கு ஏரிப் படுகைகள், ஏரி நிர்வாகத்திற்கு ஆதாரமாகக்
கால்வாய்கள் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன என்பதை
பல நேரங்களிலும் இந்த மன்றத்தில் கூட சுட்டிக் காட்டியிருக்
கிறார்கள். இப்படி ஆக்கிரமிப்புகள் நடக்கும்போது, தடுக்கக்
கூடிய பொறுப்பிலே இருக்கக்கூடிய அதிகாரிகள்—அவர்களே
ஆக்கிரமிப்பு செய்திருக்கிறார்கள் என்ற விவரம் நமக்கு வரும்போது
வேதனையாக இருக்கிறது. குறிப்பாக கிராம அதிகாரிகள் முன்சீப்
கணக்காளர்கள் என்றெல்லாம் இருக்கக் கூடியவர்கள்—அவர்கள்
கூட பல இடங்களில் ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறார்கள்.
அல்லது ஆக்கிரமிப்புக்கு அனுமதி தந்திருக்கிறார்கள், என்று
நாம் பார்க்கும்போது, தீவிரமான நடவடிக்கை தேவை என்
பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஆகையினால் ஏரிகளிலே, கால்
வாய்களிலே இருக்கிற ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு முனைப்
பான செயல் திட்டம் தேவை. அதற்காக மாநில அளவில் ஒரு
கமிட்டி—குழுவை நியமித்து, ஏற்பட்டிருக்கிற ஆக்கிரமிப்புக்களை
எவ்வாறு அகற்ற வேண்டும் என்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும்.
குறிப்பாக 100 ஆண்டுகளுக்கு உள்ளாக இருக்கிற பழைய ரெக்
கார்டுகளைப் பார்த்து ஏற்பட்டிருக்கிற ஆக்கிரமிப்புக்களை அகற்றி,
விவசாயத்திற்கு அடிப்படையாக இருக்கிற ஏரிப் பாசனத்தையும்,
கால்வாய்ப் பாசனத்தையும் சீரமைக்க இந்த அரசு நடவடிக்கை
எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கனவே இந்த அவையிலே எடுத்துச் சொல்லியிருக்
கிறேன். என்னுடைய தொகுதியில் ஆலங்காயம் பெரிய ஏரித்
திட்டம் ஒரு லட்சம் ரூபாய் பெறுமான திட்டம். 1974-75-லே
சேர்க்கப்பட்ட ஒரு திட்டம். ஆனால் இதுவரையில் அந்த ஆலங்
காயம் பெரிய ஏரித் திட்டம் எடுத்துக் கொள்ளப்படவில்லை.
அதை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன். வெள்ளக்குட்டை, கானாறு திட்டம் நிறைவேறுவிட்டால்
வாணியம்பாடி தொகுதியிலே பிரதான நீர்ப்பாசனத்திற்கும், விவ
சாயத்திற்கும் இருக்கிற பிரச்னை தீர்வு காணமுடியாத பிரச்னை
என்பதை எடுத்துச் சொல்லி, ஆகவே இந்தத் திட்டத்திற்கு அரசு
ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்
கொள்கிறேன். ஆண்டிபன் நீர்தேக்கத் திட்டம், புள்ளூர் நீர்த்
தேக்கத் திட்டம் என்ற திட்டங்களை உடனடியாக எடுத்துக்
கொள்ளவேண்டும். இந்தப் புள்ளூர் நீர்த் தேக்கத் திட்டத்திற்கு
ஆந்திர ஆட்சியின் ஒப்புதல் கிடைக்கவில்லை என்று பல்லாண்டு
களாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். 1952-லே ஏற்றுக்கொள்
ளப்பட்ட ஒரு திட்டமாக இந்த மன்றத்திலே ஒப்புக்கொள்ளப்
பட்ட ஒரு திட்டமாக 1952-லே ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத்
திட்டம் இதுவரையில் நிறைவேறவில்லை. காரணம் ஆந்திர அர
சாங்கம் ஒப்புதல் அளிக்கவில்லை என்ற ஒரே காரணத்தைத்
திருப்பித் திருப்பிச் சொல்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் முனைப்பான எண்ணங்களை உடையவர், செயல்
வீரராக இருக்கக் கூடியவர்கள், இந்த விஷயத்திலே தீவிர
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. கே. முத்தையா தலைமை]

இப்போது இருக்கிற 'கான்ட்ராக்ட்' முறையை எந்த வகை
யிலே சீர்படுத்த முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் கவ
னிக்கவேண்டும். பி. டபில்யூ. டி. என்றாலே, Public Waste Depart-
ment என்று முன்னாள் முதல் அமைச்சர், மூதறிஞர் இராஜாஜி
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு மாறி இருக்கிறதா?
என்பதை நாம் கவனித்துப் பார்க்கவேண்டும். பல்வேறு உறுப்
பினர்களும் கட்சி வேறுபாடின்றி—ஆளும் கட்சி எதிர்க்கட்சி
என்று இல்லாமல் கான்ட்ராக்ட் முறையிலே நடைபெறும் சீர்
கேடுகளை எடுத்துச் சொன்னார்கள். இதற்குச் சரியான முறையிலே
தீர்வு காண்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும்.
அவ்வளவு பவர்ஃபுல்லாகவா இருக்கிறார்கள். ஆட்சியாளர்கள்
போட்ட உத்தரவுகளை எல்லாம் எடுத்துச் சாப்பிடுகிற அளவுக்கு
பூதாகரமாக அவர்கள் உருவெடுத்து இருக்கிறார்கள். அதைத்
தடுக்க அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்
டுக்கொள்கிறேன்.

நேரம் குறைவாக இருக்கிற காரணத்தால் கட்டடங்
களுக்கு வருகிறேன். நம்முடைய பொதுப்பணித்துறை
யினர் கட்டுகிற கட்டடங்கள் சரியான முறையில் இல்லை. 'ரா
மெட்டீரியல்' பொலூட்டாக இருக்கிறது. கலப்படம் செய்யப்
படுகின்ற வகையிலே பயன்படுத்தப்படுகின்றன. ஆகையால்
ஒரு சில மாதங்களில், கட்டடங்கள் உள்ளே உட்கார்ந்து மழையை

அனுபவிக்கலாம் என்ற நிலைமை இருக்கிறது. சில இடங்களில்
காற்றுப் போகின்ற அளவுக்குச் சுவர்களிலே வெடிப்புஏற்படுகின்ற
நிலைமை இருக்கிறது. குறிப்பாக பள்ளிக் கூடங்களில்—பிள்ளைகள்
படிக்கின்ற பள்ளிகளில் பார்க்கிறபோது எவ்வளவு வேதனைக்கு
உரியதாக அந்தக் கட்டடங்களில் ஒரு சில மாற்றப்படுகின்றன
என்பதை அரசு கவனித்துப் பார்த்து, அதற்கு மூலக் கோளாறு
என்ன என்பதைப் பற்றி, அந்த மூலத்தை ஒழிப்பதற்கு நடவ
டிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

[பிற்பகல் 12.30]

வாணிம்பாடியில் தீயணைப்பு நிலையம் ஏற்படுத்தப்பட்டு 3
ஆண்டுகள் ஆகின்றன. இன்றைக்கு அனாதையாக தீயணைப்பு
என்ஜின் ஒன்று வாணியம்பாடி சந்தையில் நின்றுகொண்டிருக்
கிறது. வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து கொண்டிருக்
கிறது. அதற்கு ஒரு வீடு கட்டிக் கொடுக்க வேண்டும். அதற்கான
கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்கவேண்டும்.

ஆலங்காயத்தில் ஆய்வாளர் மாளிகை ஒன்று பொதுப்பணித்
துறை மூலம் கட்டப்பட வேண்டும். அந்த இடம் ஜவ்வாது
மலைக்கு நுழை வாயிலாக இருக்கிறது. அந்த இடத்திலிருந்து
தான் எல்லா அதிகாரிகளும் ஜவ்வாது மலைக்குப் போக வேண்டி
யவர்களாக இருக்கிறார்கள். அங்கே அவர்கள் தங்குகின்ற நிலைமை
இருக்குமேயானால், நிர்வாகச் சீர்குலைவுகளைப் பற்றி சரியான
முறையில் தெரிந்து கொண்டு ஆய்வு செய்வதற்கு வசதியாக
இருக்கும். ஆகவே ஆலங்காயத்தில் ஒரு ஆய்வு மாளிகையை
ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வாணி
யம்பாடியில் இருக்கின்ற ஆய்வாளர் மாளிகை கிளைவ் காலத்தில்
கட்டப்பட்டதோ என்னவோ. அங்கே அமைச்சர்கள் வந்திருப்
பார்கள், அதைப் பார்த்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.
ஆகவே அதை மாற்றி அமைக்க அரசு திட்டம் வகுக்க வேண்டும்
என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொண்டு மானியக் கோரிக்கையை
ஆதரித்து அமர்கிறேன்.

திரு. கோ. தனுஷ்கோடி : மாண்புமிகு சட்டப் பேரவைத்
தலைவரவர்களே, பாசன—பொதுப் பணித்துறைக்கான மானியக்
கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி
என்னுடைய கருத்தைக் கூறத் துவங்குகிறேன். கோட்டங்களும்,
கோட்டைகளும் கட்டி தன்னை விளம்பரப்படுத்திக் கொண்ட
முந்தைய ஆட்சியாளர்போல் அன்றி, மக்களின் வாட்டம்
போக்கும் நல்ல பல திட்டங்கள் இருப்பது கண்டு மகிழ்ச்சி
அடைகிறேன்.

பாசனக் கால்வாய்களை நவீனப் படுத்துதல், குளங்களை தூர்
வாருதல் போன்ற திட்டங்களுக்கு முதல் இடம் உள்ளதைக் கண்டு
வரவேற்கிறேன். நிலப்படை ஒன்றை அமைத்துப் பழுது பார்ப்புப்
பணியைத் துவங்குதல் மூலம் ஏழை கிராம விவசாயக் கூலிகளுக்கு
வேலை வாய்ப்பு அளிக்க முன் வந்திருப்பது கண்டு அந்த அன்றாடம்
காய்ச்சிகளின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

அண்டை மாநிலங்களில் பயனின்றி ஓடிக் கடலில் கலக்கும்
நீரைத் தமிழகம் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தில் காவேரி
நீர் கண்ட எங்கள் புரட்சித் தலைவர் வெற்றி பெறுவார் என
தமிழகம் முழுமையாக நம்பியிருக்கிறது. முந்தைய ஆட்சியாளர்
கள் தொடங்கி நாம் முடிக்கவேண்டிய ஏழுமாதச் செலவினங்களாக
இருப்பதால் உரிய பங்கு நலிந்து போய் கிடக்கும் ஏழை
கிராம விவசாயிக்குக் கிடைக்கவில்லை என்ற பெருமூச்சுடன் 'நாளை
நமதே' என்ற நம்பிக்கையுடன் மானியக் கோரிக்கையை வர
வேற்பதோடு என்னுடைய தொகுதியில் உள்ள சில பிரச்னைகளைப்
பேரவைத் தலைவர் அவர்களே தங்களின் மூலம் அரசின் மேலான
கவனத்திற்குக் கொண்டுவர நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய இராசப்பாளையம் தொகுதி சிறிய சிறிய நீர்ப்
பாசன குளங்களைக் கொண்ட வளம் மிக்க வயல்வெளிகளைக்
கொண்டது. இருபோக சாகுபடி செய்யும் நிலம் இங்கு உண்டு.
மேற்குத் தொடர்ச்சி மலையின் சரிவில் உள்ள தேவதானம். கிரா
மத்தில் உள்ள நகரக்குளம், பெரியகுளம் கண்மாய்களில் கிராம
நலக் காடுகள் போட இருப்பதாக அறிகிறேன். சென்ற ஆண்டு
சேத்தூர், தேவதானம் பகுதிகளில் வீசிய புழுதிப் புயல் காரண
மாக மேற்படி குளங்கள் மேடாக்கப்பட்டுள்ளன. தூர்வாரி
கண்மாயின் கரையை உயர்த்தும் பணி நடைபெற வேண்டிய
நிலையில் கிராமக் காடுகள் என்ற பெயரில் மேலும் கண்மாய்கள்
மேடாக்கப்படுவதை தவிர்க்க நமது அரசு ஆவன செய்யும்படி
கேட்டுக்கொள்கிறேன். புழுதிப் புயலால் பாதிக்கப்பட்ட நிலத்
தைச் சீர்திருத்தம் செய்ய தொகையினை மானியமாக வழங்கும்படி
கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது தொகுதியில் நகரக்குளம், பெரியகுளம் தெற்கு
வெங்காநல்லூர் கண்மாய், அலப்பசேரி கண்மாய், இன்னும்
பல கண்மாய்கள் பழுதுபார்த்து பல ஆண்டுகள் ஆகிவிட்டதால்
அந்தக் கண்மாய்களை மராமத்து பார்த்து கண்மாய்களுக்கு தண்
ணீர்வரும் கால்வாய்களும் பராமரிக்கப்பட வேண்டுமாய்ப் பணி
வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கேரள நதி நீர் பயன்படுத்தும் ஆய்வு நடைபெறும்போது
என்னுடைய தொகுதியின் பச்சையாறு திட்டத்தையும் ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளும்படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.
என்னுடைய கிராமமான தேவதானத்திற்கு மேற்கே, மேற்குத்
தொடர்ச்சி மலை அருகில் உள்ளது. இங்கே சாஸ்தா கோவில்
என்ற ஒரு அற்புதமான சுற்றுலா இடம் உள்ளது. அரசு அந்த
இடத்திற்கு இதுவரை சாலை அமைப்பு செலவிற்காக சுமார் 5
லட்சம் ரூபாய் வரை செலவு செய்துள்ளது. அந்த இடத்தில்
30 அடி உயரத்தில் இருந்து அருமையான அருவி ஒன்று எந்த
நாளும் கொட்டிக் கொண்டே இருக்கும். இயற்கைச் சூழ்நிலை
அமைந்த அந்த இடத்தைச் சீர்செய்து ஒரு சிறிய தங்கும் விடுதி
அமைத்துத் தரும்படி பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

நிலத்தடி நீர் பயன்படுத்த தடை என்ற பெயரில் இராசப்
பாளையம் யூனியன் பகுதியில் கிணறுகளுக்குப் புதிய மின் இணைப்பு
கொடுக்க மறுக்கப்படுகிறது. இதனால் பல சிறிய விவசாயிகள்
அவதிப்படுகின்றனர். 5, 6 எச். பி. ஆயில் இன்ஜின்களுக்குக் கூட
தண்ணீர் வற்றாத வளமிக்க கிணறுகளாக இருக்கிறது. குறிப்பாக
இராசபாளையம் பகுதியை மறு ஆய்வு செய்து மின் இணைப்பு
வழங்கி பாசன வசதி பெற உதவ வேண்டுகிறேன்.

சேத்தூர், முகவூர், செட்டியார்பட்டி, தேவதானம் ஆகிய
நான்கு பேரூராட்சிகளிலும் குடிநீர்ப் பிரச்னைகளுக்கு இணைந்த
தோர் திட்டத்தை ஆய்வு செய்யும்படிப் பணிவுடன் கேட்டுக்
கொள்கிறேன்.

எல்லாமே நகரத்துக்குத்தானா என்ற கிராம மக்களின் பெரு
மூச்சு மாண்புமிகு முதல்வர் சத்திய தாயின் தவப்புதல்வர் புரட்
சித்தலைவர் இதயத்தை தொட்டதுபோல் இந்த மாமன்றத்தில்
உள்ள அனைவரின் உள்ளத்தைத் தொட்டு காந்தியார், பேரறிஞர்
அண்ணா கண்ட வளம் கொழிக்கும் கிராமங்கள் உருவாக அடுத்து
வரும் காலங்களில் திட்டமிட வேண்டுமென்று பணிவுடன்
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இரண்டு காவல் துறை ஆய்வாளர்
கள் அலுவலகம், மூன்று துணை ஆய்வாளர்கள் அலுவலகம்,
மேலும் வட்ட ஆட்சியாளர், கருவூலம், பதிவாளர் அலுவலகம்,
ஏனைய அரசு அலுவலகங்கள் அனைத்தும் வாடகைக் கட்டடங்களி
லேயே உள்ளன. அவற்றிற்கெல்லாம் படிப்படியாக அரசுக்
கட்டிடங்களை கட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.
(மணியடிக்கப்பட்டது).

<u>திரு. எச். ஜி. ஆறுமுகம் :</u> பேரவைத் தலைவரவர்களே,
அவைமுன்னால் அனுகுமுறையில் வெற்றி கண்டு காவிரி நீர்
கொண்டு வந்த எங்கள் புரட்சித் தலைவர் அவர்களைப் பாராட்டக்
கடமைப்பட்டு இருக்கிறேன் என்பதைத் தெரிவித்து, இந்த
மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பளித்த தலைவருக்கும்
இதற்கு முன்னால் ஆண்ட தி.மு.க. அரசு கூவத்தில் மூழ்கி
எழுந்ததைப் பற்றிப் பேச நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

கோடிக்கணக்கான ரூபாய்களைச் சூறையாடிய கூவம் சீர
மைப்புத் திட்டத்தால் ஏதாவது பலன் உண்டா என்றால்
இல்லை—கூவம் சீரமைப்பு வேலை நடந்தது. உண்மை. ஆனால்
கூவம் சீரமைந்ததா என்றால் இல்லை. கான்டிராக்ட் கொடுத்த
வர்கள் சீரமைந்தார்கள்—கான்டிராக்ட் எடுத்தவர்கள் சீரமைந்
தார்கள். ஆனால் கூவம் சீரமையவில்லை.

கூவம் மணக்கிறதாம். மணம் கூவத்தில் இல்லை. ஆனால் அதை வைத்து விளையாடியவர்கள் வீட்டில் மணம் இருக்கிறது. கூவம் கரையில் தென்னை மரங்கள் நட, பல ஆயிரம் ரூபாய்கள் ஒதுக்கினார்கள். இப்போது எத்தனை தென்னை மரங்கள் நிற்கின்றன? எத்தனை தென்னை மரங்கள் பலன் தருகின்றன? வருட வருமானம் என்ன என்பதனையும் அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டுகிறேன். கூவத்தில் குளிக்கலாம்; காவிரித் தண்ணீர் குடிக்கலாம் என்றெல்லாம் போஸ்டர் போட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், தி.மு.க. ஆட்சியில் எத்தனைப் பேர் கூவத்தில் குளித்தார்கள் என்ற எண்ணிக்கையை நான் தெரிந்து கொள்ளலாமா? சிலர் படகில் ஏறி மூழ்கினார்கள் எனக் கேள்விப்பட்டேன், உண்மையா? பலர் ஊழலில் மூழ்கினார்கள் என்றும் இப்பொழுது அவர்கள் முழிக்கிறார்கள் என்றும் அறிகிறேன். அவர்கள் மேல் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

வறட்சியைப் போக்க குளம், ஏரி, கால்வாய் போன்றவைகள் வெட்டிட—ஆழப்படுத்திட கோடிக்கணக்கான ரூபாய் ஒதுக்கப்பட்டதே. நிவாரணம், வறட்சி அடைந்த மக்களுக்குக் கிடைத்ததா, என்றால் இல்லை. ஆகவே, தொடர்பு கொண்டுள்ள காண்டிராக்டர்களைக் கைது செய்ய வேண்டும். வறட்சி நிவாரணத்தில் 12 கோடி ரூபாய் கொள்ளை அடித்திருப்பதாகப் பேசப்படுகிறது. முதலில் வறட்சி நிவாரணப் பணிக்கு காண்டிராக்டர்களுக்கு ஒதுக்கிய பணம் போதாது என்று காண்டிராக்டர்கள் முறையிட்டார்களாம். வேலையாட்களுக்கு தினக்கூலி அதிகம் கொடுக்க வேண்டும் என்பதுதான் முறையீடு. அதனால் பணம் அதிகம் ஒதுக்கப்பட்டது. கூலியாட்களின் கூலி அதிகமாகக் கொடுக்கப்படவில்லை. அதிகம் ஒதுக்கப்பட்ட பணம் முழுமையும் காண்டிராக்டர்களே எடுத்திருக்கிறார்கள். இதனை கவர்னர் ஆட்சியில் கண்டுபிடித்து இருக்கிறார்கள். 12 கோடி ரூபாய் கொள்ளை அடித்தவர்களைக் கூண்டில் அடைக்கவேண்டும் இந்த அரசு எனக் கேட்டுக் கொள்கிறேன். காண்டிராக்டர்களால் அரசுக்கு ஏற்பட்ட இந்தக் கோடிக்கணக்கான நஷ்டத்தைத் திருப்பித் தரச் செய்ய வேண்டும். இல்லையென்றால் அந்தக் காண்டிராக்டர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். கோடிக்கணக்கான மக்கள் வரிப்பணத்தை மீட்க வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பின்தங்கிய மாவட்டமான தருமபுரி மாவட்டத்தின் பிரதிநிதி என்ற முறையில் கீழ்வரும் புதிய திட்டங்களைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளேன். கோட்டப்பட்டி கிராமத்தில் ஒரு அணை கட்டுமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கோட்டப்பட்டி ஊராட்சியில் கோவலூர் ஓடையைச் சீரமைப்புச் செய்யவேண்டும். தருமபுரி

மாவட்டம் பின் தங்கிய பகுதியாக இருப்பதால் கோடயாண்டபட்டியிலுள்ள கோட்டூர் நீர்த்தேக்கத் திட்டத்தையும், பொன்னு கொண்டாபுரம் கால்வாய்த் திட்டத்தையும், நாகமங்கலப் சின்ன ஏரி பழுதுபார்க்கும் திட்டத்தையும், நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கொட்டப்பட்டி கல்லாறு அணைத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் அந்தப் பகுதியில் வாழும் விவசாயிகளுக்கு வருஷம் பூராவும் தண்ணீர் வரவும், வேலைவாய்ப்பு ஏற்படவும் வழி ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் சொல்லிக் கொள்கிறேன்.

[பிற்பகல் 12-40]

காடயாண்டபட்டியிலுள்ள கோட்டூர் நீர்த்தேக்கத் திட்டத்தை நிறைவேற்றித் தந்தால் 400 கிணறுகளுக்கு ஊற்றுக் கால் ஏற்படும். அதேபோன்று பொன்னுகொண்டாபுரம் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றினால் அதனால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். நாகமங்கலம் சின்ன ஏரியும் பழுது பார்க்கப்படவேண்டும். அருகில் ஒரு முக்கியமான பெரிய ஏரி இருக்கிறது. அந்த ஏரி வறண்டு கிடக்கிறது. மழை பெய்கிற காலங்களில் தண்ணீர் கால்வாய்களில் விடப்படுகின்றன. அந்தக் கால்வாய்கள் மூடப்பட்டிருக்கின்றன. அங்குள்ள நிலச் சொந்தக்காரர்கள் அந்தக் கால்வாய்கள் வருகிற இடத்தைத் தடுத்து அதை மூடிவிடுகிறார்கள். எனவே இந்தப் பெரிய ஏரியை சார்ந்த கால்வாய்களைச் சுத்தப்படுத்தி தண்ணீர் அவைற்றில் வரும்படிச் செய்தால் அருகில் தண்ணீர்ப் பஞ்சம் இருக்காது என்று சொல்லிக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பில் கொண்டுவரப்பட்டிருக்கும் பாசன மானியக் கோரிக்கையை இந்திய தேசிய பார்வேர்ட் ப்ளாக் கட்சி சார்பில் வரவேற்று கீழ்க்கண்ட கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்.

என்று வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார்கள. 'தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்' என்று பாரதியார் சொல்லியிருக்கிறார். இதையே புத்த பெருமான் அவர்கள் ஆதி காலத்திலேயே கி. மு. 400-க்கு முன்னாலேயே சொல்லும்போது, பசிக்கொடுமை மனிதனை எந்த நிலைக்கு ஆளாக்கிவிடும் என்பதை உணர்ந்து சொல்லியிருக்கிறார்கள்.

How can it be that Brahma would make the world and keep if miserable. If he keeps it miscrable, he is not good. If he is not God. If he is not God, he is not all power full

[திரு. கே. கந்தசாமி]

என்று சொல்கிறார்கள். Omni-potent omnicient என்று எங்களைப் போன்று தெய்வத்தை நம்பும் கூட்டத்திற்கு அன்றே சொல்லியிருக்கிறார். ஒரு பிரமன் உலகத்தை உற்பத்தி செய்தால் இவ்வளவு ஏற்றத்தாழ்வு எப்படி இருக்க முடியும்? இவ்வளவு ஏற்றத் தாழ்வுகளை ஒத்துக் கொண்டால் அவன் நல்லவன் அல்ல. அவன் நல்லவன் அல்ல என்றால் அவன் கடவுளும் அல்ல. இந்த ஏற்றத்தாழ்வை மாற்றக்கூடிய வலிமையில்லாதவன் கடவுள் அல்ல He is not at all powerful he is not omni-potent என்று தத்துவ ரீதியில் பசிக்கொடுமையை உணர்ந்து அன்றே புத்த பெருமான் சொல்லியிருக்கிறார். இதைக் குறிப்பிடக் காரணம், நாட்டில் ஏற்படாத புரட்சியை நான் உண்டுபண்ணி விடுகிறேன் என்ற நம்பிக்கையில் அல்ல. நம் நாட்டில் புரட்சிக்கு நம்பிக்கையில்லை, ரொம்பப் பின்னால் போய்விட்டோம். நமது பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் நல்ல அனுபவம் மிக்கவர்கள். அவர்கள் இத்துறையில் சிறிது துணிச்சலைக் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கே ஓடுகிறது கடல் தண்ணீர். லத்திப் அவர்கள் சொன்னார்கள், அதேபோல் இங்கே பெரிய பெரிய இன்ஜினியர்கள் எல்லாம் இருக்கிறார்கள். திரு. பஞ்சநாதன் அவர்கள் இருக்கிறார்கள். ஆங்கிலேயன் காலத்தில் மூன்று ஆண்டுப் படிப்பை ஆறு யாதத்தில் படித்து முடித்துவிட்டு, மேற்கொண்டு தான் என்ன செய்வது என்று கேட்டபோது நீ படித்தது போதும், இந்தியாவிற்குப் போய்விடு என்று சொன்னார்கள். அது அந்நிய ஆட்சி. அப்படிப்பட்ட அறிவாளிகள் எல்லாம் நம்மிடையே இருக்கிறார்கள். அப்படிப்பட்ட அறிவாளிகளை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

வேதநாயகம் அவர்கள் இருக்கிறார்கள், சிப் இன்ஜினியர். பத்மனாபன் அவர்கள் இருக்கிறார்கள். இவர்களைப் போன்ற அறிவாளிகளை எல்லாம் சேர்த்து வைத்து ஒரு கூட்டம் போட்டு நமது அமைச்சர் அவர்கள் ‘நீங்கள் விரும்பியதைச் சொல்லுங்கள்’ என்று சொல்லவேண்டும். அமைச்சர் அவர்கள் விரும்பியதைத்தான் செய்யவேண்டும் என்று நினைத்து சிலர் பயந்து கொண்டு சொல்கிறார்கள். நான் சொல்வது அவர்களிடம் ஃப்ரீ டிஸ்கஷன் செய்யவேண்டும். அவர்களது கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லவேண்டும் என்று கேட்கவேண்டும். அவர்கள் சொல்கிற கருத்துக்களை நாம் எடுத்து மத்திய அரசுக்கு வலியுறுத்திச் சொல்லி, கேரள அரசுக்கு அறிவு கூறி, வீணாகப்போகும் கடல் தண்ணீரை, நாடு பிழைக்கும் என்று சொல்லி கொண்டு வாருங்கள். குண்டு என்று நான் சொன்னேன் சிரித்தார்கள். அமெரிக்கா, ரஷ்யா குண்டு போட்டு.......

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, கேரள அரசுக்கு அறிவு கூறி என்று சொல்கிறார்கள். கேரள அரசுக்கு எடுத்துரைத்து என்று வேண்டுமானால் அதை மாற்றிக் கொள்ளலாம்.

திரு. கே. கந்தசாமி : அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல் அறிவு கூறி என்பதை மாற்றி அதற்குப் பதிலாக ஆலோசனை கூறி அன்பு வார்த்தைகள் கூறி

they can be persuaded to accept it

அந்த மாதிரி சொல்ல வேண்டுமென்றாலும் சொல்லிக் கொள்கிறேன். அதைப்பற்றி பரவாயில்லை. எப்படியாவது காரியம் நடைபெற வேண்டும். கொழுக்கட்டை வேகவேண்டும். எந்த சட்டியாக இருந்தாலும் பரவாயில்லை. அருள் கூர்ந்து இதைப் பற்றி பரிசிலித்து நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும். திறமையுள்ள இன்ஜினியர்களை எல்லாம் பயன்படுத்த வேண்டும். நமது புரட்சித்தலைவர் காலத்தில் நல்ல புரட்சிகரமான திட்டங்கள் எல்லாம் நடைபெறும் என்று நான் நம்புகிறேன். ஆகவே இதில் நாம் ஒரு புரட்சியான திட்டத்தைச் செய்யவேண்டும். ஆகவே இன்னும் தாமதியாமல் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எனது ஆண்டிப்பட்டித் தொகுதியில் லட்சுமிபுரம் கண்மாய் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். என்ன அரசியல் காரணத்திற்காகவோ அது நின்றுவிட்டிருக்கிறது. அதிகாரி கண்மாய்த் என்று ஒன்றிருக்கிறது. இதன் அருகாமையில் உள்ள 25 கிராமங்கள் பலன் அடையும். அதே போன்று தெப்பம்பட்டி வாய்க்கால், கண்டபனூர் வாய்க்கால் இவைகளையும் நிறைவேற்றி வைக்கவேண்டும். இதுதவிர சோத்துப்பாறை துக்காம்பாறைத் திட்டம் போன்ற சிறிய சிறிய திட்டங்கள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் நிறைவேற்றப்பட்டால், தேனி உசிலம்பட்டி, ஆண்டிப்பட்டி இத்தொகுதியிலுள்ள பல இடங்கள் பயன் அடையும். ஆகவே இவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒரு செல் வைத்திருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது, நல்லதுதான். இதனால் நல்ல பலன் ஏற்பட வேண்டும். முக்கியமாக எங்கள் பகுதிக்கு தேவையான பெரியாறு—வைகையாறு திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட வேண்டியிருக்கிறது. உசிலம்பட்டி பகுதிக்கு மிகவும் பயன்படக்கூடியது. ஏதோ அரசியல் காரணங்களுக்காக முன்பு விடப்பட்டது மறைந்த நமது இராமையா அவர்கள் இத்திட்டத்தைப் பற்றி பல கருத்துக்களைத் திறம்பட சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இதையும் நிறைவேற்றி வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கிரௌன்ட் வாட்டர்ரைப் பொறுத்த மட்டில் இதன் பிரதம என்சினியர் பஞ்சநாதன் அவர்கள் நிலத்தடி நீர் இனிமேல் கிடைப்பது மிகவும் கஷ்டம் என்பதை மிகத் தெளிவாக கூறிவிட்டார்கள். இதில் எந்தவிதத் தவறும் இல்லை. தவறு என்றால் நான் ரிஸைன் பண்ணிக்கொண்டு வேண்டு மானாலும் போகிறேன் என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள் இந்த நிலையிருந்தால் நாம் யாரிடம் போய் கிஸ்தி கேட்பது? எப்படி விவசாயிகள் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தப் போகிறார்கள்? கவர்ன்மென்டை எப்படி நடத்தப் போகிறோம்? இன்னும் நான்கைந்து மாதங்கள் மழையே இல்லாமல் இருந்தால் நம் நிலைமை என்ன? அசெம்பிளியெல்லாம் நடத்த முடியுமா? இதற்கு நாம் வழிகண்டாக வேண்டும்.

Extrual waters now running into the Arabian sea should directed be into our area. Then only we can have interval water and ground water அந்த நிலையை உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்தபடியாக இன்ஜினியரிங் காலேஜ் சம்பந்தமாக மாணவர்களைத் தேர்தெடுப்பதற்கு கடந்த மூன்று வருடங்களாக ஒரே கமிட்டியிருந்து வருகிறது. இதையும் மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, பாசனம் மான்யக் கோரிக்கையின் மீது எங்கள் கட்சியின் சார் பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைத் தெரிவித்தார்கள். தொழில் நுட்ப ஆய்வுக் குழு சம்பந்தமாக இயந்திரங்கள் முழுவதும் ஒரே இடத்தில் பார்த்துக் கொள்ளும்படியாக, அதாவது பத்து இடங் களில் எந்தவிதமான வேலையும் இல்லாமல் வீணாக இருப்பதை— அந்த நிலைமையை மாற்றி எங்கெங்கு அவைகளைப் பயன்படுத்த முடியுமோ அங்கு இவைகள் பயன்படுத்தப்படும் என்பதைப்பற்றி சொன்னார்கள். இப்படிப்பட்ட தொழில் நுட்பக் குழுவோடு கண்மாய், கால்வாய் போன்ற வேலை செய்கின்ற இடங்களில் எல்லாம் ஒவ்வொரு மக்கள் குழு இருந்தால் நன்றாக இருக்கும். இனிமேல் அணைக்கட்டுகள் கட்டுகின்ற திட்டங்களைப் பொறுத்த வரையில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வாய்ப்புகள் இனி குறைவாகவே இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நடுத்தரப் பாசன திட்டங்களை இனிமேல் எடுத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

மழைக்காலத்தில் சமுத்திரத்திற்கு வீணாகப் போய்க் கொண் டிருக்கும் தண்ணீரைப் பயன்படுத்துவதற்கு கண்மாய்களை ஏற் படுத்துவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன. அதாவது

மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உற்பத்தியாகின்ற பல ஆறுகள் பலவற்றைத் தடுத்து நிறுத்தி அதன் மூலம் தமிழக வறட்சி மாவட்டங்கள் கிராமப்புற மக்கள் பயன் அடையக் கூடிய திட்டத்தை நிறைவேற்றுவதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடப்பதாக தெரிகிறது. இவற்றையும் நாம் விசேடமாக கவனித்தாக வேண்டும். மேலும் பம்பையாறு, ஆனைமலையாறு இடுக்கித்திட்டம் போன்ற திட்டங்கள் எல்லாம் விரைவாக நடைபெற வேண்டும். இராமநாதபுரம் மாவட்டத்தில் முக்கிய மாக கிரியாறு, பம்பையாறு திட்டங்கள், மேலும் கிழக்கு நோக்கி ஆறுகளைக் கொண்டு வந்தால், இராமநாதபுரம் திருநெல் வேலி மாவட்டங்கள் பலனடையும் என்று தெரிகிறது. எனவே இதில் தனிக் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்

[பிற்பகல் 12-50]

அதற்கு அடுத்தபடியாக, இன்று இராமநாதபுரம் மாவட் டத்தில் அழகர் ஆறுத் திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது என்றே தெரியவில்லை. நெல்லையிலே நடைபெற்று வரக்கூடிய பல திட்டங்களைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சுவாமிதாஸ் அவர்கள் சொன்னார்கள். கொடுமுடி ஆறுத் திட்டம் என்று சுமார் 2 கோடி ரூபாய் செலவில் ஒரு திட்டம் போட்டு, அதை திடீரென நிறுத்துவது, மறுபடியும் ஆரம்பிப்பது, மீண்டும் நிறுத்துவதுமாக இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள். இப் போது அதற்கு 35 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டு, ரோடு போட்டு, அங்கு வேலை செய்கின்ற பணியாளர்களுக்கு வீடுகள் எல்லாம் கட்டப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல. இப்படி 35 லட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டதோடு, மாதா மாதம் 40,000 ரூபாய் பணியாளர்களுக்கு அங்கு சம்பளமாகக் கொடுக் கப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் நின்று விட்டது என்று அங்குள்ள மக்கள் பிரதிநிதிகள் நாள்தோறும் சென்னையை நோக்கிப் படையெடுத்துக் கொண்டு வருகிறார்கள். அங்குள்ள இயந்திரங்களும் சும்மா இருக்கின்றன. எனவே, முக்கியமான இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, திருநெல்வேலி மாவட்டத்தில் வைப்பாற்றில் ஒரு அணைக்கட்டு கட்டும் புரோபசல் வந்தது. அந்த அணைக் கட்டுவதால், மழைக் காலங்களிலே பல கண் மாய்களுக்குத் தண்ணீர் வரும். முன்னாலே குடிமராமத்து என்ற முறையிலே அமைந்திருந்தது. இப்போது அப்படி அமைக்க முடியாது. ஏற்கனவே, கிழக்குப் பகுதியிலே அணைக்கட்டு கட்டப்பட்டிருக்கிறது. இப்போது மேலப் பகுதி யிலே உள்ள முத்தலாபுரத்தில் ஒரு அணை கட்டினால், இந்தப் பகுதியிலே உள்ள கண்மாய்களுக்கு தண்ணீர் வருவதற்குப் பிரயோஜனமாக இருக்கும்.

[திரு. சோ. அழகர்சாமி] [1977 ஆகஸ்ட் 19

பிற்பகல் 12-50

அது மட்டுமல்ல. இன்று வறட்சிப் பகுதிகளான கோவில் பட்டி அல்லது சங்கரன்கோவில், விளாத்திகுளம், சாத்தூர், தாலூக்காக்களின் வறட்சிப் பகுதிகளில் புதிதாக பாசன வசதிக்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன. வாய்ப்பு என்று சொன்னால், மழைக் காலத்தில் வரக்கூடிய தண்ணீர் ஒரே நேரத்தில் அதிகப்படியான தண்ணீர் வந்து பல உயிர்களையும், காடுகளையும் அடித்துக் கொண்டு போய்விடுகிறது. அதனால் சேதங்கள் ஏற்படுகிறது. சமீபத்தில் ஏற்பட்ட பெரிய காட்டாற்று வெள்ளத்தில் 100-க்கு மேற்பட்ட மக்கள் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போகப்பட்டார்கள் என்பதையெல்லாம் பரர்த்தோம். எனவே, மழைக் காலங்களில் வரக்கூடிய தண்ணீரைத் தேக்கக் கூடிய வகையிலே அங்கெல்லாம் கண் மாய்கள் அமைக்கவேண்டும் இதிலே பொருளாதார ரீதியாக பார்க்கக் கூடாது. இவ்வளவு செலவாகிறதே, இதனால் பயன் ஏற்படுமா, இது கட்டுப்படி ஆகுமா என்ற கணக்கையெல்லாம் இந்த வறட்சிப் பகுதிகளுக்கு எல்லாம் பார்க்கக் கூடாது என்பதை மிகவும் அழுத்தம் திருத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். இதனால் கிணறு வெட்டுவதற்கு வேண்டிய அவசியம் ஏற்படாது. இந்த இடங்களில் குடி தண்ணீருக்காக பஞ்சாயத்து ஒன்றியங்களில் மூலமாகவும், குடிதண்ணீர் வசதி வாரியத்தின் மூலமாகவும் செலவழிக்கின்ற பணமும் மிச்சமாகும். குடிதண்ணீர் வசதிக்காக கடன், மான்யம் எல்லாம் கொடுக்கிறார்கள். எனவே, இப்படி கண்மாய்கள் வெட்டுவதிலே ஆகக்கூடிய செலவைப்பற்றி கணக்குப் பார்க்கக் கூடாது. இந்த திட்டம் கட்டுப்படி ஆகாது என்றெல்லாம் சொல்லக் கூடாது. வறட்சிப் பகுதிகளுக்கு இதையெல்லாம் பார்க்கக் கூடாது என்று அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அதேமாதிரியாக இன்று, வல்லம்பட்டி என்று ஒரு கண் மாய் திட்டம் போடப்பட்டிருக்கிறது. அப்படி கண்மாய் போடும்போது, அவற்றிற்கு அருகில் இருக்கக்கூடிய நிலங்களை ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டியிருக்கிறது. அப்படி நிலங்களை ஆர்ஜிதம் செய்கிறபோது, அதற்கு நியாயமான நஷ்ட ஈடு கொடுக்க வேண்டியிருக்கிறது. கொடுக்கின்ற நஷ்ட ஈடு போதாது என்று வசதிபடைத்தோர், கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். யார் அப்படி அதிகம் செலவழித்துக் கோர்ட்டுக்குப் போகிறார்களோ, அவர்களுக்கு ஏக்கருக்கு 1,000 ரூபாய் கிடைக்கிறது. அதற்கு வழியில்லாத ஏழை எளியவர்களுக்கு 500 ரூபாய்தான் கிடைக்கிறது. கோர்ட்டுக்குச் செல்கின்றவர்களுக்கு எந்த அளவுக்கு நஷ்ட ஈடு கொடுக்கப்படுகிறதோ, அதே தொகையை ஏழை எளியவர்களுக்கும் அவர்களுடைய நிலங்கள் அதேமாதிரி தரமான நிலங்களாக இருந்தால், கொடுக்கப்பட வேண்டும்.

புதிதாகக் கண்மாய்கள் கட்டும்போது, அது ஆயக்கட்டு நிலமாக இருந்தாலும், உள்வாயில் தண்ணீரில் மூழ்கும் நிலமாக இருந்தாலும் அவைகள் ஆர்ஜிதம் செய்யப்பட வேண்டும். இதில்

1977 ஆகஸ்ட் 19] [திரு. சோ. அழகர்சாமி]

நிலம் இழந்த அனைவரும் அப்படி அதிலே வரக்கூடிய நஞ்சை நிலங்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு பிரித்துக் கொடுக்கலாம். இந்த ஆயக்கட்டிலே இருக்கின்றவர்கள், உள்வாயில் நிலங்களாக இருந்தால் தண்ணீரில் முங்கிப் போய்விடுகிறது. இதனால் ஆயக்கட்டுக்காரர்களுக்கும் இவர்களுக்கும் தகராறு ஏற்படுகிறது. எனவே, மொத்தத்திலே இந்த ஆயக்கட்டிலே வருகின்ற அத்தனை நிலத்தையும் பிரித்துக் கொடுக்கின்ற ஏற்பாட்டின் மூலம், தகராறு எல்லாம் ஏற்படாமல் செய்யலாம். எனவே, இதைப் பற்றியும் அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலக்கரந்தையில் ஒரு கண்மாய் அமைக்கின்ற திட்டம் பற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் கால்வாய்கள் வராததால் ஆயக்கட்டில் சேர்க்காமல் தண்டத் தீர்வை 50,60 போடப்பட்டிருக்கிறது. அங்கே உடனடியாக வேலையை முடித்து ஆயக்கட்டு நிலங்களாக்கவேண்டும். அதனை வரையறுத்தால்தான் நியாயமான தீர்வையை நிர்ணயிக்க முடியும். இந்தப் பணிகள் காலம் கடந்து முடிகிற நிலை இருக்கிறது. மூன்று ஆண்டுகளுக்குள் முடிக்கவேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.

திருப்பத்தூர் தாலூகாவில் முந்திய அமைச்சர் மாதவன் அவர்களுடைய சவுகரியத்திற்காக 7,000 ஏக்கர் பாசனத்தைக் கெடுக்கக்கூடிய அளவில் ஆற்றில் அணைகட்டியிருக்கிறார்கள். அந்த வட்டாரத்து மக்கள் அந்த அணையை உடைக்க வேண்டுமென்ற அளவுக்கு ஆத்திரத்துடன் இருக்கிறார்கள். முந்திய அமைச்சர் மாதவன் பகுதியில் 200 ஏக்கருக்குப் பயன்பட வேண்டுமென்பதற்காக 7,000 ஏக்கர் பாதிக்கப்படக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

நிலத்தடி நீரைப் பொறுத்தவரை சில இடங்களில் 200 அடி, 300 அடி, 400 அடியில் நீர் கிடைத்தாலும் 20 ஏக்கர் நிலங்களுக்குப் பாசனத்திற்கான தண்ணீர் அவற்றிலிருந்து கிடைக்கிறது. அப்படிப்பட்ட இடங்களில் பி.டபிள்யூ.டி. இலாகாவே 10, 15 லட்சம் செலவு செய்து கண்மாய்களை அமைத்துக் கொடுப்பது மாதிரி இரண்டு மூன்று இலட்சம் செலவு செய்து "போர்' போட்டுக் கொடுத்தால் 20 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற முடியும். அந்த வகையில் திட்டங்கள் தீட்டி நிறைவேற்றலாம்.

கடலோரத்தில் 6 கிலோ மீட்டர் வரை எந்த விதமான 'போர்-ம் போடக்கூடாது என்று தடை இருக்கிறது. கடலோரத்தில் நல்ல தண்ணீர் இருக்கிறது. விவசாயம் செய்ய முடியும். அந்தத் தடையை நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குடிமராமத்து என்ற ஒரு பழக்கம் இருக்கிறது. அந்தக் காலத்தில் குடிகள் ஒற்றுமையாக இருந்து வேலை செய்வார்கள். ஸ்ரீவைகுண்டத்தில் பெரியகுளம் 9-ம் நம்பர் மடை ஆறு மைல் நீளம் இருக்கிறது. அந்தக் கால்வாயைக் குடிகள் மராமத்து செய்யவேண்டுமென்றால் அது முடியாது. அரசாங்கமே டிப்பார்ட்மென்ட் மூலம் செய்து கொடுக்க வேண்டும். (மணி அடிக்கப்பட்டது.)

வறட்சிப் பகுதிகளில் புதிய கண்மாய்களை அமைக்க விசேஷ ஏற்பாடு செய்து விசேஷ அதிகாரிகளை நியமிக்கவேண்டும்.

கட்டிடங்களுக்கு அதிகமாகச் செலவழிக்கவேண்டாம். டில்லியில் தமிழக அரசுக் கட்டிடம் கட்ட அப்படி ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். வணிக வரி ஆபீஸ் போன்ற அரசு அலுவலகங்கள் மற்ற ஆடம்பரக் கட்டிடங்களை எல்லாம் இப்போது கட்ட வேண்டாம். கட்டிடங்களுக்குச் செலவழிக்கும் தொகையைக் குறைக்கவேண்டும். கொஞ்ச காலம் கட்டிடங்கள் கட்டாமலே இருக்கலாம். பாசனவசதிகளைச் செய்வதில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அந்தத் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்கள்—டிப்ளோமா பயிற்சி பெற்றவர்கள் குறிப்பிட்ட காலம் பணி முடிந்த பிறகு ஜூனியர் எஞ்சினியர், ஏ. இ. என்ற முறையில் பதவி உயர்வு பெற ஏற்பாடு செய்யவேண்டும். டிப்ளோமா பெற்றவர்களுக்கும் எஞ்சினியரிங் பட்டம் பெற்றவர்களுக்கு இருக்கும் பெயர் வித்தியாசத்தைத் தவிர்க்க வேண்டும். 400 பேர் வேலை இழக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது. புதிதாக வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய நிலையில் வேலை இழப்புக்கு இடம் இருக்கக் கூடாது என்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* <u>திரு. இ. தமிழரசன் :</u> பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறை, பாசனம் பற்றிய மானியங்களின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் துறையில் எத்தனை திட்டங்கள் போட்டாலும் அந்தத் திட்டங்களை ஏட்டளவில் இருந்து செயலளவில் செயல்படுத்துவது பொதுப்பணித்துறை. எனவே, மிக அவசியமான, தலையான இந்தத் துறையின் மீது பேச வாய்ப்புக் கொடுத்ததற்காக நன்றி கூறி அந்தத் துறை அமைச்சர் அவர்கள் பாசக் கண்கள் கொண்டு என்னுடைய தொகுதியைப் பார்க்குமாறு, கேட்டுக்கொண்டு நான் பேச ஆரம்பிக்கிறேன்.

பல துறைகளில், பல வழிகளில் நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் நிதியைப் பார்க்கும்போது, அதில் போட்டிருக்கும் திட்டங்களை நோக்கும்போது உண்மையாக தமிழ் மக்களின் முன்

னேற்றத்திற்காகப் போடப்பட்டிருக்கும் திட்டங்கள் என்று மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

[பிற்பகல் 1-00]

கடந்த காலத்தின்போது நடந்த அக்கிரமங்கள், முறைகேடுகள், முறையில்லாத திட்டங்கள், தவறுகள், ஆலோசனை செய்து பார்க்காமல் போடப்பட்டு செயல்படுத்த முடியாமல் லட்சக்கணக்கான ரூபாய்களை விழுங்கிவிட்ட கைவிடப்பட்ட திட்டங்கள் இவைகளையெல்லாம் போல் இந்த ஆண்டு போடாமல் நன்கு தீவிரமாகச் சிந்தித்து மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே அத்தியாவசியமான திட்டங்களை நம்முடைய அரசு போடவேண்டுமென்றுகேட்டுக் கொள்கிறேன்.

இந்தப் பாசனத் திட்டங்களைப் பற்றிப் பேசும்போது என்னுடைய தொகுதியிலே பத்திரப்பள்ளியிலே ஒரு பெரிய அணையைக் கட்டுவதற்காக 1920 ஆம் ஆண்டிலேயே பேச்சு வார்த்தை நடந்து பரிசீலனையும் இருந்து கொண்டு வருகிறது. ஆனால் ஏதோ ஒரு காரணத்தினால் பெரிய அளவிலே தண்ணீர் கொள்ளக்கூடிய பெரிய அணையிலே நிறையத் தண்ணீர் தேங்கும்போது ஒரு சிறிய பகுதி ஆந்திராவின் பார்டரைத் தொடக்கூடிய காரணத்தாலே அந்தத் தண்ணீருக்கு அவர்கள் உரிமை கொண்டாடுவார்களோ என்ற காரணத்தாலே அந்த மாபெரும் திட்டத்தை 50,60 ஆண்டுக் காலமாக நிறைவேற்றப்படாமல் தள்ளிப் போடப்பட்டுக் கொண்டே வருகிறது. இந்தப் பத்திரப் பள்ளியிலே அந்த பெரிய அணையைக்கட்டுவதன் மூலமாக 100, 150 கிராமங்கள் பாசனத்தைப் பெறக்கூடிய நிலைமை இருக்கும், அது மட்டுமல்லாமல், குடிநீர் பெறுவதற்காக கிணறுகளை ஆழமாகத் தோண்ட வேண்டிய அவசியம் இல்லாமல் குடிநீருக்கும் பயன்படுகின்ற முறையிலே அது அமையும். இப்படிப் பல்நோக்கு திட்டமாக இருப்பதால் அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய தொகுதியில் உள்ள உதயேந்திரம் கிராமத்தில் 5 மைல் சுற்றளவிற்கு பெரிய ஏரி இருக்கிறது. ஆனால் அதனுடைய ஆழம் குறைவு. அந்த ஏரியிலிருந்து வருகிற தண்ணீர் கிட்டத்தட்ட 25 கிராமங்களுக்கு சப்ளை செய்யப்படுகிறது. வருடத்திற்கு ஒரு முறை பாலாற்றிலே வெள்ளம் வந்தாலும் ஆகா, ஓகோ என்று வந்து பல பொருட்களை அடித்துச் சென்று நாசம் செய்து விடுகிறது. அந்த நேரத்திலே அங்கேயுள்ளவர்கள் ஐயோ, வெள்ளம் வந்துவிட்டதே என்று வேதனைப்படுகிறார்கள், அப்போது 7 அடி ஆழத்திற்கு தண்ணீர் வருகிறது. எனவே ஏரியில் அந்தத்தண்ணீரைத் தேக்கிவைப்பதன் மூலம் ஒரு ஆண்டுக்கு அந்தக் கிராமங்களுக்கு எல்லாம் தண்ணீர் சப்ளை செய்ய முடியும், அது மட்டுமல்ல அந்தத் தண்ணீரைப் பாசன வசதிக்கும் பயன்படுத்தலாம், குடி-

நீருக்காகவும் பயன்படுத்தமுடியும், இப்படி பல்நோக்குள்ள அந்த ஏரியை ஆழப்படுத்தித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இளைய நகரம், மதனாஞ்சேரி அருகே மழை வரும்போது அந்தத் தண்ணீர் பாலாற்றில் கலக்காமல் சிறிய தடுப்பு அணைகளைக் கட்டினால் அந்தச் சுற்று வட்டாரத்திலே உள்ள பாசன வசதிக்காக அந்தத் தண்ணீரைப் பயன்படுத்த முடியும், அது மட்டுமல்ல, நிலத்தடி நீரும் அங்கே குறையாமல் இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆம்பூர் — குடியாத்தம் — சித்தூர் வழித்தடங்களிலே பாலூர் கிராமத்தின் குறுக்கிலே ஒரு சிறிய ஓடை வருகிறது. அந்த ஓடையிலே மழை காலங்களிலே சிறிய மழை வந்தாலும் கூட இடுப்பளவு தண்ணீர் வந்துவிடுகிறது. அதன் காரணமாக பஸ்கள் போகமுடியாமல் தடைபடுகின்றன. 2, 3 நாட்களுக்கு முன்பு ஏற்பட்ட மழையிலே கூட பேருந்துகள் போகமுடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் பொதுமக்கள் பயணம் செய்ய முடியாத நிலையில் அவதிப்படுகிறார்கள் என்றும் தந்திகளும் மனுக்களும் இங்கே எனக்கு வந்திருக்கின்றன. ஆகவே அங்கே ஒரு தரைப்பாலம் அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போன்று வடசேரி, மாரபட்டு குறுக்கே ஆம்பூர் சர்க்கரை ஆலைக்குச் செல்கின்ற வழியிலே ஒரு ஆறு ஓடுகிறது. அந்த ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் அமைத்துத் தரவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பேரணாம்பட்டிலே ஆஸ்பத்திரி வசதியே கிடையாது. கட்டடங்கள் இல்லாமல் யாரோ ஒருவர் கொடுத்த தர்மக் கட்டடத்திலே இயங்கிவருகிறது. அதே நேரத்திலே மருந்துகள் வசதியில்லாமல் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு நல்ல மருத்துவமனையைக் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வாணியம்பாடிக்கும் உயேந்திரத்திற்கும் இடையே ஒரு பாலத்தைக் கட்டிக் கொடுத்ததற்காக முந்தைய அரசையும் இந்த அரசையும் பாராட்டி நன்றி தெரிவித்து அந்த மேம்பாலத்தில் மின் இணைப்புக் கொடுக்கக் காலதாமதம் ஏற்படுவதால் மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள், அதை அதிகாரிகள் கவனிக்காமல் இருக்கிறார்கள் என்று புகார் வந்திருக்கிறது. ஆகவே, அதையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்குப் பேச வாய்ப்புத் தந்ததற்காக நன்றி தெரிவித்து முடிக்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், நேற்றைய தினம் இந்திய ஜனாதிபதி அவர்கள் இங்கே பெருந்தலைவர் திரு. காமராஜ் அவர்களுடைய படத்தைத் திறந்து

வைத்திருக்கிறார்கள். ஆனால் இப்போது அதிலே விளக்கு எரியவில்லை. இது யார் செய்த ஊழல் என்பதை அறிய இயலுமா ?

திரு. இரா. முத்தையா : அந்த விளக்கு இவ்வளவு நேரம் வரையிலும் எரிந்து கொண்டுதான் இருந்தது. ஆகவே இதிலே யாராவது எடுத்துக்கொண்டு போவதற்கு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு.வ. துலுக்காணம்: தலைவரவர்களே, பொதுப்பணித்துறை மூலம் டாக்டர் கலைஞர் அரசினால் பல பெரிய பெரிய பாசனத் திட்டங்கள் போடப்பட்டு அவை நிறைவேற்றப்பட்டு அதனால் பல இலட்சம் ஏக்கர்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு தமிழ்நாட்டு மக்கள் பயன் பெற்று வருகிறார்கள். ஆனால் தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம் என்று யாரும் நினைக்க மறுக்கிறார்கள். உண்மையிலேயே தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சி பகுதி, உளுந்தூர்ப்பேட்டை பகுதி, மங்களூர் பகுதி, திருநாவலூர் பகுதி ஆகிய இவைகள் யாவும் மிகவும் பின்தங்கிய பகுதியாகும். வருடத்தில் கிட்டத்தட்ட ஆறுமாத கால வறட்சியால் பாதிக்கப்பட்டு அப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, 1964-ல் திட்டம் தீட்டப்பட்டு 1970-ல் அரசின் நிதி ஒதுக்கீடு செய்து இதுவரை முடிக்கப்படாத புத்தநந்தல் அணைக்கட்டுத் திட்டத்தையும், சேஷ நதித் திட்டத்தையும் நிறைவேற்ற வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அத்திட்டத்தினால், தியாகதுருகம் யூனியன் பகுதி, உளுந்தூர்ப்பேட்டை யூனியன் பகுதி, திருநாவலூர் யூனியன் பகுதி சிறு விவசாயிகள் மிகவும் பயன்பெறுவார்கள். அப்பகுதியில் சுமார் 7,500 ஏக்கர் வரை பாசன வசதி பெறும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த யூனியன் பகுதியிலுள்ள ஏரிகள் மராமத்து வேலைகள் செய்யப்படாமல் பல வருடங்களாகக் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. பல ஏரிகளின் மதகுகள் உடைந்து போய் மிகவும் மோசமான நிலையில் உள்ளன. அவைகளைப் பழுதுபார்த்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன.

உளுந்தூர்ப்பேட்டை அரசினர் உயர்நிலைப்பள்ளிக்கு மாணவர்கள் படிக்கக் கட்டிடங்கள் பற்றாக் குறையாக உள்ளது. அங்கே மேலும் இரண்டு கட்டிடங்கள் கட்ட ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

எலவானாசூர் கோட்டையில் காவலர் இல்லங்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டு பல வருட காலமாகக் கட்டப்படாமல் இருக்கின்றது. அதைக் கட்டிக்கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக உளுந்தூர்ப்பேட்டையிலுள்ள பொதுப்பணித் துறை அலுவலகங்களுக்குக் கட்டிடம் இல்லாமல் வாடகைக் கட்டிடங்களில் நடத்தி வருகின்றார்கள். அதற்கும் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உளுந்தூர்ப்பேட்டையிலே எல்லாப் பகுதி அரசுத் துறை பஸ் போக்குவரத்துகளும் வருகின்றன. அங்கே அரசு பஸ்கள் நடு ரோட்டிலேயே நின்றுவிட்டு வந்துவிடுகின்றன. உளுந்தூர்ப் பேட்டை போக்குவரத்தில் மிக மையமான பகுதியாகையால் அவசியம் அங்கு பேருந்து நிலையமும், பயணிகள் தங்குவதற்கு விடுதியும் கட்டித்தர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்.

உளுந்தூர்ப்பேட்டை தாலுக்கா அலுவலகத்திற்குக் கட்டிட வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அங்கே ஒரு தாலுக்கா நிர்வாக அலுவலக கட்டிடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தியாகதுருகம் அரசு உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிட வசதியில்லாததால் அதற்கு ஒரு கட்டிடம் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக உளுந்தூர்ப்பேட்டையிலுள்ள கைலாசகுளத்தையும், பரிந்தல் கிராமக் குளத்தையும், உளுந்தண்டார் கோயில் குளத்தையும், எறையூர் பாளையத்திலுள்ள குளத்தையும் தூர் எடுத்துச் செப்பனிட்டுத் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொதுப்பணித் துறையில் வேலை செய்யும் கடைநிலை ஊழியர்கள் அவசரக் காலச் சட்டத்தில் பலபேர் வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களைக் கனம் பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் திரும்பவும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். குறிப்பாக அவர்கள் அரிசன வகுப்பைச் சார்ந்தவர்கள் என்று சொல்கிறார்கள்.

உளுந்தூர்ப்பேட்டையில் அரசு ஊழியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் இடம் ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றது. உடனடியாக அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உளுந்தூர்ப்பேட்டையில் பல அரசு அலுவலகங்கள் இருப்பதால் ஸ்டேட் பேங்க் திறக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய பகுதியில் இன்னும் பல ஏரிகள் நிறைய மராமத்து வேலை செய்யாமல் இருக்கின்றன. அவைகளை நிறைவேற்றிக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக இராமாயணத்திலே இராமன் தோன்றிய அயோத்தியாபுரி செழுமையாக இருந்தது என்று சொல்வார்கள். இராமாயணத்தைப் பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் தென்னாற்காடு மாவட்டத்திலிருந்து வந்திருக்கின்ற அமைச்சர் இராமச்சந்திரன் அவர்கள் அந்த புத்தநந்தல் அணைத்திட்டம் சேஷ நதித்திட்டம், இறைஞ்சிப் பக்கத்தில் கோமுகி நதித் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றி அந்தப் பகுதி செழிப்பாக அமையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய சிற்றுரையை முடித்துக் கொள்கிறேன்.

*திரு. பி. எம். கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, இந்தப் பாசன, பொதுப்பணித்துறை மானியங்களின் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னை இந்த அளவிற்கு உருவாக்கிய சத்தியத்தாயின் தலைப்புதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.10]

தருமபுரி மாவட்டம் இயற்கை அமைப்பை நோக்குமிடத்து மலைகளும், காடுகளும் மேடு பள்ளங்கள் நிறைந்த பள்ளத்தாக்குகளும் கொண்ட அமைப்பை உடையது. அதிலும் பாலக்கோடு தொகுதியைப் பொறுத்த அளவில் மேடு பள்ளங்கள், மலைகள் நிறைந்த பகுதிகள் அதிகமாக இருக்கின்றன. இந்தத் தொகுதியில், அண்ணாமலை அள்ளி, ஜெர்தலாவ், சாமனூர் செட்டிப்பட்டி, பாலக்கோடு பஞ்சாயத்து யூனியனில் உள்ள எல்லா ஏரிகளையும் அடி ஆழம் செய்து கரைகளைப் பழுது பார்த்தால் சுமார் 1,250 ஏக்கர் நிலங்களுக்கு மேல் பாசன வசதிகள் கிடைத்து உணவு உற்பத்தி பெருகும். மேலும், சின்னாறு அணை வாய்க்கால் பாசனத்தை மாரண்டஅள்ளியில் இருந்து அமானிமல்லாபுரம் கிராமம் வரை, கூடுதலாக விரிவுபடுத்தினால், சுமார் 1,850 ஏக்கர் நிலங்கள் நீர் வசதி பெற்று உணவு உற்பத்திக்கு உதவும். இந்தச் சின்னாறு அணைத்திட்ட வேலை மேலும் நீட்டித்துக் கொண்டே போகும் வரை அரசு பணம் விரயம் போவதுடன் கடந்த காலத்தில் போடப்பட்ட மதிப்பீட்டை விட தற்போது இரண்டு மடங்கு மேலும் செலவழிந்துள்ளது. இந்த அணையை இவ்வளவு செலவு செய்து கட்டியும் நீர் தேங்கும்போது, கரையின் அடியில் நீர் கசிவடைவதுடன் அணை உடையும் நிலையில் இருப்பதாக மக்கள் அஞ்சி வெளியிடங்களுக்கு குடிபோகும் நிலை இருக்கிறது. இதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை]

மேலும் கம்பைநல்லூர் பகுதியில் கடந்த 4 ஆண்டு காலமாக சரியான மழை இல்லை. மேலும், அங்குள்ள சனத்குமார் நதியின்

குறுக்கே சிறு அணை கட்டி அதன் மூலம் குடிநீர் மற்றும் பாசன வசதி ஆகியவைச் செய்ய வேண்டுமாய் அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் என்று முன்பிருந்த அரசுகள் சொல்லியதே தவிர, அங்குள்ள நிலத்தின் அடிநீரை நல்ல முறையில் பயன்படுத்தி, உணவு உற்பத்திக்கு உதவ சிறிய திட்டங்கள் போடப்படவில்லை. ஆகவே, இந்த அரசு வட்டார வளர்ச்சி அலுவலகம் (Panchayat Unions) மூலம் புதிய கிணறுகள் தோண்டுதல், அடிக்கிணறு ஆழம் செய்தல் போன்ற திட்டத்தின்கீழ் சுமார் ரூபாய் 1 கோடி வரை ஒதுக்கித் தருமாறு இந்த மாவட்ட விவசாய மக்களின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், பாலக்கோடுத் தொகுதியில் உள்ள தும்பலஅள்ளி நீர்த்தேக்கத் திட்டம் சர்வே முதலிய எல்லா வேலைகளும் முடிந்து அரசு பரிசிலனைக்கு அனுப்பியிருப்பதாக அறிகிறேன். இந்த தும்பளஅள்ளி நீர்த் தேக்கத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க ஆவன செய்யுமாறு நமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்தத் திட்டத்தை ஆரம்பித்தால் காரிமங்கலம் பகுதி விவசாய ஏழைகள் நன்மை அடைவார்கள், இதனால் சுமார் 10,000 ஏக்கர் புதிதாக பாசன வசதி அடைந்து விவசாய மக்கள் நன்மை அடைவார்கள் என்று கூறிக்கொண்டு, தர்மபுரி ஏரியை ஆழம் செய்யுமாறு கேட்டுக்கொண்டு, தர்மபுரியில் சுற்றுலாப் பயணிகளுக்கு ஒரு கட்டிடத்தைக் கட்ட அரசு ஆவன செய்திருப்பதால், நன்றியைத் தெரிவித்துக் முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, பல்வேறு அரசுத் துறைகளின் அலுவலகங்கள் வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. குடிநீர் வடிகால் வாரியத்தின் தலைமைச் செயலகம் தனியார் கட்டிடத்தில் ரூ. 60,000 மாத வாடகையில் இருக்கிறது. அதுபோன்று பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் விடுதிகள், பல வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. இப்படி இருக்கிற காரணத்தினால், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட மானியத்தில் வாடகைக்காக, அதிகமான ரூபாய் செலவழிப்பதால், ஏற்கனவே ஒதுக்கப்பட்ட தொகையை முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட அரசுத் துறை அலுவலகங்களும், ஆஸ்டல்களும் வாடகைக் கட்டிடங்களில் இல்லாத நிலையை உருவாக்க அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே, இங்கே பேசிய பல்வேறு உறுப்பினர்கள் காண்டிராக்ட் முறையை ஒழிக்கவேண்டுமென்று பேசினார்கள். அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆதரிக்கிறேன். இதற்கெல்லாம், அடிப்படையான காரணம் என்னவென்றால், ஏற்கனவே எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு ஹண்டே அவர்கள் கூறியபடி, ஏற்கனவே, இராஜகோபாலாச்சாரியார் கூறியபடி, Public Works Department is a Public Wastage

Department. என்ற அளவில் இருக்கிறது. அந்த அடிப்படையில், Public Works Department ஊழலின் மொத்த உருவமாக இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட எண்ணங்கள் உருவாக, ஏதுவாகவிருக்கிறது. காரணம், அந்த கான்ட்ராக்ட் முறைதான். இந்த கான்ட்ராக்ட் முறை ஒழிக்கப்படவேண்டுமென்பதில் இந்த அரசு தீவிர கவனம் செலுத்தவேண்டுமென்பதை நான் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இப்பணியில் வேலையில்லா பொறியாளர்—பட்டதாரிகளைப் பயன்படுத்துகின்ற முறையை நாங்கள் வரவேற்கிறோம். இதற்கு மூலதனம் என்பதும் அவசியம் தேவைப்படுகிறது. அதற்கும் அரசு கொடுத்து உதவ வேண்டுமென்பது அவசியமாகும். ஆளுங் கட்சியின் தேர்தல் அறிக்கையில் கல் உடைக்கும் தொழிலாளர்களுக்கும் கட்டிடத் தொழிலாளர்களுக்கும் சட்டப்படி பாதுகாப்பு வழங்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

கட்டடத் தொழிலாளர்கள் என். எம். ஆர். ஆக 10 ஆண்டுகளுக்கு மேல் வேலை செய்தும் நிரந்தரமாக்கப்படாத நிலைமை இருக்கிறது. அவர்களை நிரந்தரமாக்கும் பொறுப்பு அரசின் கடமையாகும். தொழில் நுட்ப ஆணைக்குழு உருவாக்குவதை நான் வரவேற்கிறேன். அதே நேரத்தில் அனைத்துக் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் கொண்ட கண்காணிப்பு குழு அவசியம் என்பதை நான் கூற விரும்புகிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால் லஞ்ச லாவண்யத்தை தவிர்க்க முடியும். மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யமுடியும். அதோடு நீர்ப்பாசனத் துறையையும், கட்டிடத் துறையையும் பிரிந்தது மிகவும் அவசியம்தான். அதனால் ஊழலையும் லஞ்சத்தையும் தவிர்க்க வாய்ப்பு ஏற்படும். பொறியியல் வல்லுநர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால் 'பிரெயின் டிரெயின்' ஏற்படுகிறது. அந்நிலையைப் போக்க அரசு முன்வரவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ளது புளியங்குடி நகராட்சி. நகராட்சியில் 50 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட பகுதி. அங்கே மருத்துவமனை இல்லை. ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக ஒரு மருத்துவமனை இருக்கிறது. அந்தக் கட்டடம் இப்போதோ, பிறகோ இடிந்து விழும் அளவில் மிக பயங்கரமாக நிலைமை இருக்கிறது. குறிப்பாக பொதுப் பணித் துறை அதிகாரிகளிடம் கூறியும் இன்னும் ஒரு மாற்றமும் செய்யவில்லை.

சிவகிரியில் ஒரு மகப்பேறு மருத்துவமனை கட்டுவது பற்றி நீண்ட காலக் கோரிக்கையாக இருக்கிறது. இதையும் அரசு கவனத்தில் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிவகிரியில் மேற்கு தொம்பையாறு திட்டம், உள்ளாறு திட்டம் ஏற்கனவே அரசு கவனத்தில் இருக்கிறது. அதற்கு முன்னுரிமை கொடுத்து இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. ரா. கிருஷ்ணன்] [1977 ஆகஸ்ட் 19

திருநெல்வேலியில் பாளையங்கோட்டையில் நீதி மன்றக் கட்டடம் கட்ட அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. அதைக் கட்டுவதற்கு ஆவன செய்யவேண்டும்.

ஓராண்டு காலத்திற்கு முன்பாக வாசுதேவநல்லூர் தொகுதியில் புழுதிப் புயல் அடித்து கிணறுகள், குளங்கள், நஞ்சை புஞ்சைகள் அனைத்தும் மூடப்பட்டுவிட்டது. அந்தப் புழுதியை எடுப்பதற்கு பொதுப்பணித் துறையின் மூலமாக புல்டோசர் கொண்டு வந்தார்கள். இருந்தாலும் அதை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. இன்னும் புழுதி படிந்த கிணறுகள், குளங்கள் ஏராளமாக உள்ளன. அதை எடுப்பதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

*திரு. கே. வடிவேலு: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நம்முடைய பொதுப்பணித் துறை அமைச்சர் கொண்டு வந்திருக்கிற பாசனத்திற்குரிய மானியம், கட்டடங்களின் மீதான மானியம் மீது ஒரு சில கருத்துக்களை சொல்ல வாய்ப்பளித்ததற்காக முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னை மாநகரத்திலே மக்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருந்த பொதுமக்களுக்குப் பயன் தரும் திட்டம் என்று சொல்லி, கூவம் திட்டம், வீராணம் திட்டம் கொண்டுவந்து எதிர்பாராத வகையில் மக்களுக்கு நன்மை வராமல் ஒரு சிலருக்கு மட்டும் பயன் தரும் திட்டமாக இருந்தது. அதைப்போல் இல்லாமல் எங்களுடைய பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் பல திட்டங்களை முன் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லி, அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டையும், மகிழ்ச்சியையும் தெரிவித்து, அதே நேரத்தில் என் பகுதியிலுள்ள ஒரு சில பிரச்னைகளையும் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நொய்யலாறு திட்டம் 20 ஆண்டுகளாக ஏட்டளவிலே பேசப்பட்டு நிறைவேறாமல் இருப்பது வேதனையாக இருக்கிறது. காரணம் அந்த நொய்யலாறு திட்டத்தால் கரூர் தாலுகாவிலே கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பயனடையும். செலவு கூட 4 1/2 கோடிதான் ஆகும் என்று சொல்லுகிறார்கள். அந்த 4 1/2 கோடி ரூபாயில், 20 ஆயிரம் ஏக்கர் பாசனம் செய்கின்ற மாபெரும் திட்டத்தை எங்கள் பகுதியிலே நிறைவேற்றாமல் இருப்பது வேதனைக்குரியதாகும்.

எங்களுடைய பகுதியிலே கைத்தறி நெசவாளர் பிரச்னை பெரிய பிரச்னையாக இருக்கிறது. என்னுடைய பகுதியிலே இருக்கிற கிராம மக்கள் அங்கே இருக்கும் வானம் பார்த்த பூமி வைத்து வாழ்க்கை நடத்த முடியாமல் கிராமத்தை விட்டு கரூருக்கு செல்கிறார்கள். அங்கே வாழ்க்கை நடத்தலாம் என்ற எண்ணத்தில் செல்கிறார்கள். அங்கேயும் கைத்தறி பிரச்னை பெரிதாக இருக்கிறது.

1977 ஆகஸ்ட் 19] [திரு. கே. வடிவேலு]

[பிற்பகல் 1.20]

ஆக அந்த நொய்யலாறு திட்டத்தைக் கொண்டு வருகிறபோது கைத்தறிப் பிரச்னை நிரந்தரமாக தீர்ந்துவிடும். கரூரில் இருக்கிற கைத்தறி தொழிலாளர்களில் குறைந்தது 10,000 அல்லது 15,000 தொழிலாளர்களுக்கு 2 ஏக்கர், 3 ஏக்கர் புஞ்செய் நிலங்கள் வானம் பார்த்த பூமியாக இருக்கிறது. இந்தத் திட்டம் நிறைவேறும் காலத்தில், நகரத்தை விட்டு விவசாயத்துக்குச் சென்று விடுவார்கள். நொய்யலாற்று திட்டம் வரும்போது, குடிநீர் பிரச்னையும் தீர்ந்துவிடும். ஆகவே, ஒரு கல்லால் இரண்டு மாங்காய் அடிப்பது என்று சொல்வார்களே அதைப் போல, ஒரே கல்லால் 3 மாங்காய் அடிக்கலாம். ஒன்று பாசனத்திற்கு வசதி ஏற்படுகிறது, இரண்டாவது கைத்தறி பிரச்னை தீரும், மூன்றாவது குடிநீர் பிரச்னையும் தீர்கிறது. இந்தத் திட்டம் 20 ஆண்டுகளாக இருந்து வருகிறது. ஆகவே மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்திற்கு இந்த ஆண்டில் ஒரு டோக்கன் நிதியாவது ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நாங்கள் மட்டுமல்ல, தொகுதி மக்கள் அவ்வளவு பேரும் விரும்புகிறார்கள். அது நிறைவேற்றப்பட்டால் நாங்களும், எங்கள் தொகுதி மக்களும் நன்றிக் கடன்பட்டிருப்போம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு திட்டமும் இருக்கிறது. அது என்னவென்றால் புகளூர் நதி நீர் ஏற்று பாசனம் என்ற புதிய திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அதில் 11 ஸ்கீம் இருந்தது. அந்த 11 ஸ்கீமில், 5 ஸ்கீம் வேலை நடைபெற்று கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. இருந்தாலும் கூட தண்ணீர் எடுக்க முடியவில்லை. காரணம், அன்றைய ஆட்சி, நேரடி தண்ணீர் இல்லாமல், ஸ்பிரிங்க்லர் (Sprinkler) திட்டத்தைக் கொண்டு வந்தது. தெளிப்பான் முறையைக் கொண்டு வந்து சிக்கலை ஏற்படுத்தி, விவசாயிகள் கடன் வாங்கி கட்ட முடியாமல், மனைவியின் கழுத்தில் இருக்கிற தாலி பாசிகளை வைத்து கடனைப் பெற்று, நிலத்தைச் சீர்படுத்தி, பாசனத்திற்கு தண்ணீரை எதிர்பார்க்கும் அளவுக்கு இருக்கிறது. இந்த நிலையில் தண்ணீர் பிரச்னையில் நேரடித் தண்ணீரா அல்லது தெளிப்பான் முறையில் போக வேண்டுமா என்ற பிரச்னை இருக்கிறது. எங்கள் பகுதியில் தெளிப்பான் முறை ஒத்துவராது. அங்கே புகளூர் சர்க்கரை ஆலை இருக்கிறது. ஆகவே, எங்கள் பகுதியில் விவசாயிகள் கரும்பு பயிரிட முன்வருவார்கள். மற்றும் சிலர் நெல் பயிரிட முன்வருவார்கள். அப்படியிருக்கும் நேரத்தில், இந்த தெளிப்பான் முறை அதற்கு ஒத்துவராது. ஆகவே அதை எடுத்துவிட்டு நேரடித் தண்ணீர் பாய்ச்ச என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்தால் 2,000 ஏக்கருக்கு மேல் நீர்பாசனத்திற்கு வழி ஏற்படும். இந்த தெளிப்பான் முறைக்காக 50 லட்ச ரூபாய்க்கு

1962-இல் பைப்புகள் வாங்கியிருக்கிறார்கள். அதில் ஏதாவது ஊழல் இருக்கிறதா என்பதை தயவு செய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். ஆகவே, இவற்றிற்கெல்லாம் தீர்வு காணவேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த பொன்னான சந்தர்ப்பத்தில் நொய்யல் ஆற்றுத் திட்டத்தையும், புகளூர் நதிநீர் ஏற்று திட்டத்தையும் அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டு என்னுடைய வார்த்தையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

*திரு. கே. கே. முத்தையா : பேரவைத் தலைவரவர்களே, 1977-78ஆம் ஆண்டுக்கான நீர்ப்பாசன மானியத்தின் மீது சுருக்கமாக எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கேரள மாநிலத்திலிருந்து தமிழகத்திற்கு பாசனத்திற்காக தண்ணீர் கொண்டு வருவது சம்பந்தமாக சில முக்கிய விவரங்களை அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். தமிழ் நாடு தலைமைப் பொறியாளர் அவர்கள் 18—3—1973 தேதிய கடிதப்படி, கேரளத்தில் உள்ள ஆவடித் திட்டத்திலிருந்து பெரியாற்றுக்கு வருகின்ற உபரி நீரை தமிழகத்திற்கு திருப்புவதன் மூலம் மேற்படி திட்டத்திற்கு மதிப்பீடு ரூ. 60 கோடி ஆகும் என்றும், மதுரை, ராமநாதபுரம், திருச்சி ஜில்லாக்களில் உள்ள 2 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு பாசனத்திற்குப் போதுமான அளவு தண்ணீர் கிடைக்கும் என்றும், அதனால் கிடைக்கக்கூடிய தானியத்தின் அளவு சுமார் 1,60,000 டன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர, மதுரை, இராமநாதபுரம், திருச்சி ஜில்லாக்களிலுள்ள பெரும்பாலான கிணறுகளுக்கும், குளங்களுக்கும் போதுமான அளவு தண்ணீர் கிடைக்க வாய்ப்பு உண்டு. இதன் மூலம் மேற்கொண்டு கிட்டத்தட்ட 2 லட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் வாய்ப்பு இருக்கிறது.

இத்திட்டம் சம்பந்தமாக இந்தியப் பிரதமர் அவர்களின் 16—4—1977 தேதியிட்ட கடிதத்தில் ஆவடி திட்டம் விஷயமாக இரு மாநிலங்களுக்குள் சில பிரச்னைகள் இருப்பதால் இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள ஒரு குழு பரிசீலனை செய்து வருவதாகவும் அக்குழுவின் கருத்து எதிர்பார்க்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு இது சம்பந்தமாக இந்திய அரசுக்கு சிபாரிசு செய்து இத்திட்டத்தை விரைவில் நிறைவேற்ற ஆவன செய்யக் கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய மருங்காபுரி தொகுதியில் 32 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைமுறையில் உள்ள கண்ணூற்று ஓடை திட்டத்திலிருந்து உபரி நீரை மணப்பாறை ஊராட்சி ஒன்றியம் கருப்பூர் கிராமம் பெரிய குளத்திற்கு திருப்புவதன் மூலம் மணப்பாறை வரையிலுள்ள குளங்களுக்கும், கிணறுகளுக்கும் தண்ணீர் வரத்து உண்டாகும் இதன் மூலம் சுமார் 1,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புண்டு. அதே போன்று பொன்னையாற்று நீர் தேக்கத் திட்டத்திலிருந்து உபரி நீரை கடவூர் ஊராட்சி ஒன்றியம் முள்ளிப்பாடி குளத்திற்கு திருப்புவதன் மூலம் மிகவும் வரண்ட பிரதேசமான கடவூர் ஒன்றியத்திலுள்ள மாவத்தூர், குறும்பப்பட்டி குளத்திற்கு வரத்து உண்டாவதுடன் கிணறுகளிலும் தண்ணீர் ஊறக்கூடிய வாய்ப்புண்டு. இதன் மூலம் மேற்கொண்டு சுமார் 2,000 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். கடவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பண்ணப்பட்டி, உடையாப்பட்டி குளமானது தூர்ந்து போன நிலையில் பல ஆண்டுகளாக உள்ளது. இக்குளத்தை பழுது பார்த்து தண்ணீர் தேக்குவதன் மூலம் கிட்டத்தட்ட நான்கு கிராமங்களுக்கு பாசன வசதி கிடைப்பதுடன் கிணறுகளுக்கு தண்ணீர் வரத்து உண்டாகும். இதனால் சுமார் 1,000 ஏக்கர் நிலங்கள் தண்ணீர் வசதி பெறும். பல முறையீடுகள் அனுப்பியும் இக்குளம் பழுது பார்க்கப்படாமல் இருக்கிறது. அடுத்து கடவூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பால விடுதி கிராமம், செந்தலைக்கரடு என்னும் இடத்தில் சுமார் 2½ லட்சம் ரூபாய் செலவில் நீரினைத்தேக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு அதுவும் தேக்க நிலையில் உள்ளது. அதே போன்று செம்பியன்நத்தம் கிராமத்திலுள்ள குருடன்பாறை என்னும் இடத்தில் ஒரு நீர் தேக்கம் கட்டுவதற்கு நீண்ட நாட்களாக முயன்றும் பயன் இல்லாது உள்ளது. மேற்கண்ட இந்நான்கு திட்டங்களாலும் மிகவும் வரண்ட பகுதியான கடவூர் ஒன்றியம் செழிப்படைய வாய்ப்புண்டாகும். எனவே இத்திட்டங்களையும் அரசு துரித நடவடிக்கை எடுத்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இதே போல் மருங்காபுரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வளநாடு கிராமத்திலுள்ள குளமானது கலங்கி உடைந்தும், வாய்க்கால் பகுதியிலுள்ள பாலங்கள் உடைந்தும் மிகவும் சீர்கேடான முறையில் இருப்பதை பழுது பார்த்து குளத்தையும் மராமத்து செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. ப. உ. சண்முகம் : சட்டப் பேரவைத் தலைவரவர்களே, பொதுப்பணித்துறை மானியக் கோரிக்கை மீது திராவிட முன்னேற்றக்கழகத்தின் சார்பில் தரப்பட்டு இருக்கிற வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்து என் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன்.

துவக்கத்தில் பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் 5 கருத்துக்களைத் தெரிவித்து, 5-ம் நான் முதலமைச்சர் அவர்களைக் கேட்டு இந்த அவையில் அறிவிக்கிறேன் என்று சொல்லி, அதைப் பற்றி கருத்து தெரிவிக்குமாறு சொன்னார்கள். நானும் காலையில் இருந்து இதுவரையில் யாராவது ஒருவராவது அந்த 5-ஐப் பற்றி பேசுவார்கள் என்று எதிர்பார்த்தேன். அந்த 5-ஐப் பற்றி ஒருவரும் பேசாமல்—ஒருவர் கூட பேசவில்லை,

நான் கேட்டுக்கொண்டு இருந்தேன்—இருந்தார்கள். ஒருவர் கூட கருத்து சொல்லவில்லை. நான் தைரியமாகச் சொல்கிறேன், கேட்டுக்கொண்டு இருந்தேன், சொல்லவில்லை. 5-ஐப் பற்றி பேசவில்லை. நேரம் இல்லாத காரணத்தால் பேசாமல் இருந்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். நேரம் இருந்தால் பேசியிருக்கக்கூடும். அந்த ஐந்தில், மக்கள் குழு அமைக்கப் போகிறோம் என்று சொல்லி, சில இடங்களில் வேலை நடக்கிறது, சில இடங்களில் வேலை நடக்கவில்லை, அவற்றைக் கண்டுபிடிக்க மக்கள்குழு அமைக்க இருக்கிறோம் என்று சொன்னார்கள். நல்ல திட்டம், செய்யுங்கள். தாராளமாக மக்கள் குழு அமைத்து எங்கெங்கே வேலை நடைபெறவில்லையோ அங்கேயெல்லாம் கண்டுபிடித்து, யார் யார் குற்றம் செய்தவர்கள் என்று கண்டுபிடிக்க நடவடிக்கை எடுங்கள். எங்கெல்லாம் பணி நடக்காமல், தண்டிக்கப்படவேண்டியவர்கள் இருக்கிறார்களோ, அவர்களையெல்லாம் தண்டிக்கவேண்டுமென்று மனதார ஒப்புக்கொள்கிறேன். தாராளமாகச் செய்யுங்கள், அந்த மக்கள் குழு அமையுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அந்தக் குழுவிற்கு அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு போய் மிரட்டுகிற கருவியாக வைத்துவிட்டு, அரசாங்க அதிகாரிகள் அங்கே பணியாட்களாக அவர்களுக்கு ஏவலாட்களாக ஆக்கிவிடக்கூடாது என்ற ஒரு அச்சத்தையும் தெரிவித்து, வேறு ஒன்றும் ஆட்சேபணை இல்லை, தாராளமாகச் செய்யுங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்ஜினியரிங் கல்லூரியில் படித்துவிட்டு, பட்டதாரிகள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் கான்டிராக்ட் கொடுத்து சலுகை காட்டி தொழில் நடத்தவேண்டும் என்ற திட்டத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். ஏற்கனவே ஒரு திட்டம் இருந்து கொண்டு இருக்கிறது. பட்டதாரிகள் கான்டிராக்ட் எடுப்பார்களானால் அவர்களுக்கு அந்த எர்னஸ்ட் டிபாசிட் (Earnest Deposit) மனி கட்டத் தேவையில்லை என்று திட்டம் இருக்கிறது. மேற்கொண்டு எதுவேண்டுமானாலும் சலுகை கொடுத்து அவர்களுக்கு உதவி செய்யுங்கள் தாரளமாக நாங்கள் வரவேற்கிறோம், இது நல்ல யோசனைதான், செய்யுங்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 1.30]

அடுத்து டெக்னிக்கல் ஆடிட் பற்றிச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்தபோது அதைப் பற்றித் தீவிரமாகப் பரிசீலித்தோம் என்பதை அமைச்சர் அவர்கள் பெருந்தன்மையாக ஒத்துக் கொண்டதற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பரிசீலித்து அதைப் போடவேண்டும் என்று யோசித்துக் கொண்டிருந்தோம். ஆனால் ஆட்சி கலைக்கப்பட்டது. அதை நான் மனமார வரவேற்கிறேன். அது நல்லதொரு திட்டம்.

பாசனம் கட்டடப் பிரிவு இரண்டையும் பிரித்தால் அதையும் யோசித்தோம். அதை இப்போது அமலுக்குக் கொண்டுவருவது பற்றி என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த இரண்டையும் பிரிப்பது நல்லதுதான், வரவேற்கத்தக்கதுதான். ஆனால் இந்த இரண்டையும் பிரித்துவிடுவதால் மட்டும் லஞ்சம், ஊழல் ஒழிந்து விடும் என்று கருதுவது தவறு. இரண்டையும் இணைத்துக் கொண்டு பயந்துகொண்டிருப்பது தவறு. லஞ்சத்தை ஒழிக்கத் தான் வேண்டும். எங்கிருந்தாலும் லஞ்சத்தை ஒழிக்கத்தான் வேண்டும். பாசனம்—கட்டிடம் பிரிவுகளை பிரிப்பது நல்லது தான். அதை வரவேற்கிறேன்.

பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தவேண்டும் என்று தெரிவித்தார்கள். புதிதாக கல்லூரிகளில் பயின்று வெளி வருகிறவர்களுக்கு, அவர்களிடம் வேலைகளை ஒப்படைக்கும் போது அவர்கள் அதை நிறைவேற்ற முடியாமல் போய் கீழேயுள்ள ஊழியர்கள் சொல்லிக் கொடுப்பதை வைத்து நிறைவேற்ற வேண்டியவர்களாக ஆகிறார்கள். அப்போது கெட்ட பழக்கம் ஏற்பட்டு விடுகிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை அனுமதியுடன், பேரவையின் நேரம் $1\frac{1}{2}$ மணிக்குமேல் நீட்டிக்கப்படுகிறது.

திரு. ப. உ. சண்முகம்: அவர்களுக்கு பயிற்சி நிலையம் ஏற்படுத்தப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எனக்கு ஒரு சிறிய சந்தேகம் எழுகிறது. இந்தப் பயிற்சி நிலையத்தை எப்போது எந்த நேரத்தில் வரப்போகிறவர்களுக்கு வைக்கப் போகிறீர்கள்? சர்வீஸ் கமிஷனுக்கு சென்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தவர்களுக்கு பயிற்சி நிலையம் வைக்கப் போகிறீர்களா? அல்லது, சர்வீஸ் கமிஷனுக்குப் போவதற்கு முன்பு பட்டதாரிகளாக வருகிறவர்களில் பயிற்சி பெற்றவர்கள்தான் சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டும் என்ற முறையில் வரப்போகிறதா என்று தெரியவில்லை. இரண்டையும் பரிசீலித்து அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்கள் என்று நினைக்கிறேன்.

காவிரி பிரச்னை பற்றி நான் ஏற்கனவே இரண்டு முறை இந்த அவையில் விரிவாகப் பேசியிருக்கிறேன். ஆனால் அதைப்பற்றி ஒரு கருத்து மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன். காவிரிப் பிரச்னையில் முன்னாள் முதல் அமைச்சரும் இன்றையதினம் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஏதோ ஹேமாவதிக்கு ஒத்துக்கொண்டு கையெழுத்துப் போட்டுவிட்டார்கள் என்று அமைச்சர் மாண்புமிகு திரு. சௌந்தரபாண்டியன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நான் அவர் ஒத்துக்கொண்டு கையெழுத்து போட்டதாக எங்கும் பேசவில்லை.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, தினமணி ஏடு 19-7-1977இல் அமைச்சர் திரு சௌந்தரபாண்டியன் அவர்கள் பேசியதாக ''வெளியிடப்பட்டிருக்கிறது. 1968 இல் பொதுப் பணித் துறை மந்திரி என்ற முறையில் முதல் முறையாக டில்லிக்கு விஜயம் செய்தபோதுதான் கருணாநிதி ஹேமாவதி அணை கட்ட கர்நாடகாவுக்கு அனுமதி வழங்கும் உடன்பாட்டில் கையெழுத்திட்டார் என்றும் சௌந்தரபாண்டியன் கூறினார். அப்போது தமிழ்நாடு முதன் மந்திரியாக இருந்த அண்ணாதுரை இந்த உடன்பாடுபற்றி அறிந்து அதிர்ச்சி அடைந்தார் என்றும் அண்ணாதுரைக்குத் தெரியாமல் அவர் சம்மதமின்றி இந்த உடன்பாடு செய்து கொள்ளப்பட்டதாகவும் சௌந்தரபாண்டியன் கூறினார்''. இது 19-7-1977 தினமணியில் வெளியாகியிருக்கிறது. அதற்குப் பிறகு, மறுப்பு தெரிவித்தும் மீண்டும் இரண்டு நாட்களுக்கு முன்னால் அமைச்சர் சௌந்தரபாண்டியன் அவர்கள் நான் சொன்னதை மீண்டும் வலியுறுத்துகிறேன் என்று அவர் கூறியதாக மித்திரன் பத்திரிகையில் வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : நான், ஒத்துக்கொண்டு கையெழுத்து இட்டதாக எங்கும் பேசவில்லையென்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். ஒருமுறை நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களின் பேச்சை அப்படியே இந்த மன்றத்தில் படித்திருக்கிறேன் என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திரு. மு. கருணாநிதி: நான் சொல்வது இந்த அரசு என்றால் ஏதோ திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற நேரத்தில் உள்ள தமிழக அரசு, அல்லது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆளுகிற நேரத்தில் உள்ள தமிழக அரசு, அல்லது காங்கிரஸ் கட்சி அல்லது கம்யூனிஸ்ட் கட்சி ஆளுகிற நேரத்தில் உள்ள தமிழக அரசு என்றல்ல. அரசு நிலையானது; ஆளுகிற கட்சி மாறி மாறி வரும். எனவேதான் ஒரு கட்சியைக் குறை சொல்வதற்காக அந்த அமைச்சர் ஒரு பெரிய திட்டத்தில், மற்றொரு மாநிலத்தோடு தொடர்புடைய ஒரு திட்டத்தில் தவறு செய்துவிட்டார் என்று கூறுவதால் நாம் இப்போது அடைய இருக்கிற பயனை அடைய முடியாமல் போய்விடக்கூடும். முதல் அமைச்சராக இருந்த கருணாநிதி அவர்கள், பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்தபோது ஹேமாவதி திட்டத்தில் எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டு கையெழுத்து போட்டு விட்டார்கள், அதைக் கேட்டு அண்ணா அவர்கள் சட்டசபையில் அதிர்ச்சி அடைந்தார் என்ற இப்படிபட்டதொரு செய்தியைச் சொல்லி அது தினமணியில் வந்திருக்கிறது. வேறு சில பத்திரிகைகளில் வந்திருந்தால் கூட, அது மறுக்கப்படாமல் இருந்தால் நான் கவலைப்படமாட்டேன். தினமணியில்—நடுநிலை என்று சொல்லப்படுகிற ஒரு பெரிய பத்திரிகையில் இந்தச் செய்தி வந்து, பொறுப்புள்ள அமைச்சர் அதை மறுத்து எந்தக்

கருத்தும் தெரிவிக்காத காரணத்தால் தான், நான் மிகவும் வருத்தப்படுகிறேன். ஏனென்றால் அமைச்சருடைய பேச்சை கர்நாடக மாநிலம் பயன்படுத்திவிடக்கூடாது என்ற பயத்தால் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் எங்குமே எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கையெழுத்துப் போட்டதாகப் பேசவில்லை. இதைப்பற்றி நான் இங்கே கூட பேசியிருக்கிறேன். நடவடிக்கைக் குறிப்பை எடுத்துப் பார்த்தால் நான் பேசியதை தெரிந்து சொள்ளலாம்.

திரு. ப. உ. சண்முகம்: அமைச்சர் அவர்கள் அப்படி தான் கூறவில்லை என்று சொல்கிறார்கள். பத்திரிகைகள் தான் அப்படி தவறாகப் போட்டுவிட்டது என்றால் அப்படித் தவறாகப் போடாதீர்கள் என்று பத்திரிகையைத்தான் கேட்டுக்கொள்ள வேண்டும். காவிரி நீரைப்பற்றி பேசிக்கொண்டிருந்தேன். காவிரி நீர் போதிய அளவுக்கு வந்துக்கொண்டிருக்கிறது என்று எங்களுக்கு ஏதோ பதில் கூறுவது போல் சொல்லக்கூடாது. காவிரி என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சொந்தமானது அல்ல, காவிரி நீர்ப் பிரச்சனை என்பது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கோ, அல்லது சண்முகத்திற்கோ சொந்தமானது அல்ல என்பதை நான் நன்றாக தெளிவுபடுத்த விரும்புகிறேன். காவிரியிலிருந்து நமக்குரிய தண்ணீரைப் பெற வேண்டும் என்று சொல்லும்போது, அதை நான் சலுகை மூலம் பெறவேண்டும் என்று அல்ல, நம் உரிமையின் மூலம் பெற வேண்டும். எங்களை திருப்திப்படுத்துவதற்கு சொல்வது போல், காவிரியில் வருகின்ற தண்ணீர் போதும் என்று ஆளும் கட்சி உறுப்பினர்கள் பேசலாம். உண்மை அதுவல்ல என்பதை நாம் எல்லோரும் அறிவோம். ஓரளவு தண்ணீர் கிடைக்கிறது என்பதை நான் வாதத்திற்காக ஒத்துக்கொள்கிறேன். நான் சொல்வது வரட்டு வாதம் அல்ல, தமிழகத்திற்கு கிடைக்க வேண்டிய காவிரி நீர் கிடைக்க வேண்டும். இதில் கர்நாடக அரசு நம்மை ஏமாற்றி விட்டது. ஜனாதிபதி ஆட்சியிலும் இது நடைபெற்றது, இப்போதும் அது தொடர்ந்து நடைபெறுகிறது.

ஜனாதிபதி ஆட்சியில் யாரும் இதைக் கேட்க முடியாத நிலை இருந்தது, இப்போது அப்படியல்ல, இப்போது கேட்பதற்கு ஆள் இருக்கிறது. நான் கர்நாடக அரசோடு சண்டை போட வேண்டும் என்று சொல்லவில்லை. அது நமது நோக்கமும் அல்ல, நமது உறவு முறை நீடிக்க வேண்டும் என்று தான் எல்லோரும் விரும்புகிறோம். உறவு நீடிக்கவேண்டும் என்று சொல்லும் போது, நமது உரிமையை பலியாக்கக் கூடாது என்பதைத்தான் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். காவிரி நீர் விஷயத்தில் நாம் தவறு செய்வோமானால் நிச்சயமாக நமது எதிர்காலம், நமது எதிர்கால சந்ததிகள் நம்மை சபிக்கும் என்பதை நான் உறுதியாக தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,

அடுத்து, பரம்பிக்குளம்-ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டம் குறித்து இங்கு பேசப்பட்டது. இத்திட்டம் குறித்து 1974ஆம் ஆண்டில் இரண்டு முறை கேரள அரசோடு பேசினோம். திருவனந்தபுரத்தில் இதற்கான ஒப்பந்தம் கூட கையெழுத்தானது. ஒப்பந்தத்தின்படி புதிய வாய்க்கால்களை அமைத்து அதன் மூலம் லட்சத்து 15 ஆயிரம் ஏக்கர்கள் பயன்படக்கூடிய அளவில் தான் அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. பின்னால் அது கிடப்பில் போடப்பட்டது, ஏதோ அரசியல் காரணங்களுக்காக போடப்பட்டது என்று சொல்லப்பட்டாலும், வேறு எங்கேயோ தண்ணீர் கொண்டு போக முயற்சி செய்தார்கள் என்றும் சொல்லப்பட்டது, அதைப்பற்றிகூட கவலையில்லை, எங்கே தண்ணீர் கொண்டு போவதாக இருந்தாலும் பரவாயில்லை. தண்ணீரைப் பயன்படுத்தினால் போதும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

பாண்டியாறு—புன்னம்புழா ஆற்றுத் திட்டம், காங்கிரஸ் ஆட்சி காலத்திலேயே—திரு. ஆர். வெங்கட்ராமன் அவர்கள் காலத்தில், இதற்காக பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, மின்சாரத்திற்கு மட்டும் உபயோகித்துக் கொள்வதற்காக ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம். இந்தத் தண்ணீரை பாசனத்திற்கு பயன்படுத்துவதில்லை என்று அப்போது ஒப்புக்கொண்டு தயாரிக்கப்பட்டத் திட்டம் பாண்டியாறு—புன்னம்புழாத் திட்டம். இப்போது பாசனத்திற்கு அந்தத் தண்ணீரை பயன்படுத்த வேண்டுமென்றால் அதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். ஏற்கனவே இருந்த அரசாங்கம் பாசனத்திற்கு இந்தத் தண்ணீர் தேவையில்லை என்று சொல்லிவிட்டது. இப்போதும் கூட நாம் கேட்டது பாசனத்திற்கு என்று தனியாக தரவில்லை என்றாலும் அரை டி.எம்.சி. அளவுக்காவது தண்ணீர் கொடுங்கள், அதன் மூலம் கோவையிலுள்ள அவனாசித் தாலுகாவிலுள்ள மக்களுக்கு குடிக்க தண்ணீர் கிடைக்கும் என்று வலியுறுத்தி வந்தோம். அப்போது பேச்சுவார்த்தை நிலையில் இருந்தது. இப்போதும் கூட நான் கேட்டுக்கொள்வது, இதில் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி, பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்திலிருந்து கிடைக்கின்ற தண்ணீரைக் கொண்டு வந்து கோவை மாவட்டத்தில் அவனாசி, பல்லடம் போன்ற தாலுகாக்களுக்கு பயன்பட முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மேற்கு நோக்கிப் பாய்கின்ற நதிகளை கிழக்குப்புறமாக திருப்பி விடுவதன் மூலமாக தமிழ்நாட்டுக்கு ஓரளவுக்கு தேவைப்படும் தண்ணீர் கிடைக்கும் என்ற கருத்தின் அடிப்படையில், எங்கள் கட்சித்தலைவர் அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில் முதலமைச்சர்கள் மாநாட்டில் இதை யோசனையாகத் தெரிவித்து மேற்குமலைத் தொடர்ச்சிக் குழு ஒன்று அமைக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதால் மத்திய அரசும் ஒரு குழுவை

அமைத்தது. இந்தக் குழு மேற்குமலைத் தொடர்ச்சி அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதில் தனது கவனத்தை செலுத்தியதே தவிர மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளை கிழக்கே திருப்பி விடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளத் தவறிவிட்டார்கள். நிச்சயமாக இந்த முயற்சியை மேற்கொண்டிருந்தால் பல இடங்களிலும் அவர்கள் மின்சாரத்திற்கு பயன்படுத்துகின்ற தண்ணீரை அவர்கள் பயன்படுத்திய பின்னால் டன்னல் வழியாக கொண்டுவருவதாக இருந்தால் நிச்சயமாக இராமனாதபுரம் மாவட்டத்தில் பல இடங்களுக்கும் தண்ணீர் கொடுத்திருக்க முடியும்.

அதே போல் தான் பாண்டியாறு—புன்னம்புழா திட்டத்திற்காக பேச்சுவார்த்தை நடத்திய போது, நாம் குறிப்பிட்டோம், அரபிக் கடலில் தண்ணீர் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது, அரபிக் கடலில் இந்தத் தண்ணீர் போகவில்லையென்றால் அரபிக் கடல் வற்றிவிடாது என்று நாம் கூறிய போது அவர்கள் என்ன சொன்னார்கள்? அரபிக் கடலில் இப்போது போய்ச் சேருகின்ற இந்த தண்ணீர் வேகத்தினால் தான் அரபிக்கடல் அருகாமையில் கடல் அரிப்பு ஏற்படாமல் இருக்கிறது, இல்லையென்றால் கடல் அரிப்பு ஏற்படும் என்று சொன்னார்கள். தமிழகத்திற்கு பாசனத்திற்கு தண்ணீர் வேண்டும் என்று கேட்டபோது, கடல் அரிப்பு ஏற்பட்டுவிடும் என்று கூறி கேரள அரசு தண்ணீர் கொடுப்பதற்கு மறுத்துவிட்டார்கள். மேற்கு நோக்கிப்போகின்ற ஆறுகளை கிழக்கே திருப்பிவிடுவதால், அரபிக்கடல் எதுவும் வற்றிவிடாது, எந்தவிதமான பாதகமும் கேராளவுக்கு வந்து விடப்போவதில்லை. ஆகவே இந்த ஆறுகளை கிழக்கு முகமாகத் திருப்பிவிடுவதற்கு சுமுகமான முறையில் காரியங்களை செய்யுங்கள், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஏற்கனவே இருந்த அரசாங்கத்திற்கு கேரள அரசாங்கத்தோடு சுமுகமான நிலை இல்லாமல் இருந்தது என்ற கருத்தை இங்கே பலரும் கூறிக் கொண்டிருந்தார்கள். கேரள அரசோடு பேசி திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அக்கறையற்றவர்களாக இருந்துவிட்டார்கள் என்று எண்ணிவிட தேவையில்லை. ஏற்கனவே இருந்த அரசாங்கம் பல திட்டங்களையும் கேரள அரசோடு பேசி முடிவு செய்து செயல்பட்டிருக்கிறது என்பதை என்னால் இங்கு எடுத்துச்சொல்ல முடியும். சிறுவாணித் திட்டத்திற்கு பேசி முடிவு செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். பரம்பிக்குளம் ஆளியாறு விஸ்தரிப்புத் திட்டத்திற்கு பேசி முடிவு செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். ஆனைமலைத் திட்டத்திற்கு கேரளாவோடு பேசி முடிவு செய்தது திராவிட முன்னேற்றக் கழக அரசு தான். ஆகவே, கேரள அரசுக்கும் முன்னால் இருந்த அரசுக்கும் சுமுகமான நிலை இருக்கவில்லை என்று சொல்வது சரியல்ல என்பதைக் கூறுவதற்காகத்தான் இவற்றையெல்லாம் நான் குறிப்பிட்டேன்.

[பிற்பகல் 1-40]

அடுத்து, ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்பதில் எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது, ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்தவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது, அந்த இடத்தில் ஆளும்கட்சி எதுவாக இருக்கிறதோ, அந்தக் கட்சியின் கொடிகளை நாட்டிவிடுவார்கள், அல்லது அந்த இடத்தில் ஆளும் கட்சிக்கு சார்பாக ஆளும்கட்சியின் தலைவர்களின் பெயரில் மன்றம் வைத்துக்கொள்வார்கள். இப்படி வைத்துக் கொண்டால் அதிகாரிகள் இவர்களைத் தொடுவதற்கு பயப்படு வார்கள். இப்படிப்பட்டவர்கள் மிகுந்த திறமைசாலிகள், புத்திசாலிகள். ஆக்கிரமிப்பாளர்களை அகற்றியாக வேண்டும் என்று முன்பு இருந்த அரசு அமைச்சரவையிலேயே முடிவு எடுத்தது. எனவே, ஆக்கிரமிப்பாளர்களை அகற்றுவதில், அப் புறப்படுத்துவதில், தயவு தாட்சணியம் காட்டாமல் நட வடிக்கை எடுக்க வேண்டும், அதற்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஒத்துழைப்பையும் கொடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வைகை பெரியாறு கால்வாய்த் திட்டத்தை நவீனப் படுத்த வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. அதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டன. அதை தொடர்ந்து மேற் கொண்டு செயல்படுத்தி, இதிலிருந்து மிச்சப்படுகிற தண்ணீரை பாசனத்திற்கு பயன்படுத்தலாம் என்கின்ற திட்டத்தை நான் வரவேற்கின்றேன், வாழ்த்துகின்றேன்.

அடுத்து, திராவிட முன்னேற்றக் கழகம் எதுவுமே செய்ய வில்லை, எந்தத திட்டத்தையும் நிறைவேற்றவில்லை என்று இங்கு சொல்லப்பட்டது............

கூத்தகுடி திரு. க. சண்முகம் : எதை ஆக்கிரமித்திருக் கிறார்கள்? ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்று சொன்னார்களே, அது யாரைப்பற்றி, எங்கு ஆக்கிரமித்திருக் கிறார்கள்?

திரு. ப. உ. சண்முகம் : நாம் பாசனத்தைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம். பாசனத்திற்குத் தேவைப்படும் ஆற்றுப் படுகையில் யார் ஆக்கிரமித்திருக்கிறார்களோ அவர்களை அப்புறப்படுத்த வேண்டும் என்றுதான் சொன்னேனே தவிர வேறு எதுவும் பற்றி தெரிவிக்கவில்லை. நான் தெரிவிக்க வந்தது, திராவிட முன்னேற்றக் கழகம் எதுவுமே செய்யவில்லை என்ற தவறான எண்ணத்தில், தெரியாமல் பேசிவிட்டார்கள் என்று தான் நினைக்கிறேன், அப்படிப் பேசப்படுகின்ற கருத்துக்கள் பதிவாகிவிடுமானால் பிற்காலத்தில் அது ஒரு தவறான எண் ணத்தைப் பரப்பிவிடும் என்பதோடு மட்டுமல்ல, உண்மையை யும் மறைத்துவிடும் என்பதற்காகத்தான் இதைச் சொல்லு கிறேன். சில விவரங்களை அமைச்சர் அவர்கள் தந்திருக்கின்ற புள்ளிவிவர ஏடுகளிலிருந்தே எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

பரம்பிக்குளம் விஸ்தரிப்புத் திட்டம், சிற்றாறு பட்டணங்கால், வைகை—பெரியாறு திட்டம், பாலாறு—பொருந்தலாறு திட்டம், தஞ்சை கால்வாய் சீர்திருத்தத் திட்டம், சின்னாறு, கருப்பாநதி திட்டம், பெரியாறு மேம் பாட்டுத்திட்டம், வரட்டுப்பள்ளத் திட்டம், வரதாநதி திட்டம் குண்டாறுத் திட்டம், திருக்கோயிலாறுத் திட்டம், இது மட்டு மல்ல, இன்னும் பல திட்டங்கள், இவ்வளவும் திராவிட முன் னேற்றக் கழக ஆட்சி காலத்தில் துவக்கப்பட்டவை தான், இப்போதும் சிலவற்றில் வேலைகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன.

கழக அரசின் மீது குற்றம் சொல்ல வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த காலத்தில், ஒன்றுமே செய்ய வில்லை என்று தயவு செய்து கருத வேண்டாம். இந்த வேலைகளை எல்லாம் செய்திருக்கிறோம். ஆனால் நான் ஒன்றை மட்டும் இந்த நேரத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

பேசும்போது உறுப்பினர் ஒருவர் இவர்கள் கோட்டங்கள் கட்டினார்களே தவிர, வேறு ஒன்றும் செய்யவில்லை என்று சொன் னார். அப்படிக் கோட்டங்கள் கட்டுவதில் தவறு ஒன்றும் இல்லை. நாங்கள் கட்டிய இந்த வள்ளுவர் கோட்டம், இன்று மட்டும் அல்ல, என்றும் இருக்கப் போகிறது. இதைப்பற்றி புகழக்கூடிய காலம் வரத்தான் போகிறது. அந்த அளவுக்கு இந்த வள்ளுவர் கோட்டம் பிறர் வியக்கும் வண்ணம் கட்டியதற்காக நாங்கள் உண்மையிலேயே பெருமைப்படுகிறோம். இதைப்பற்றி எத்தனை குறைகள் சொன்னாலும், நாங்கள் அதைப்பற்றி கவலைப்படுவதாக இல்லை. இந்தக் காரியம் கலைஞர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் கட்டி முடித்ததற்காக நாங்கள் உள்ளபடியே பெருமைப்படுகிறோம். அவர் சார்பாகவும் இதைத் தெரிவித்துக் கொண்டு, பெருமைப்படுகிறோம்.

இதிலே எனக்கிருக்கின்ற வருத்தம் எல்லாம், ஒன்றே ஒன்று. அதை இந்த நேரத்தில் தெரிவிக்காமல் இருக்க முடியாது. இந்த வள்ளுவர் கோட்டம் கட்டப்படும்போது, அதற்கான கால்கோள் விழா நடைபெற்றது. இந்த விழா நடைபெற்றபோது, அப்போது முதல் அமைச்சராக இருந்த கலைஞர் அவர்களும், அன்றைக்குக் கல்வி அமைச்சராக இருந்த நாவலர் அவர்களும் கலந்து கொண் டார்கள். இந்தக் கால்கோள் விழாவிற்கு கல் நாட்டப்பட்டது. கருணாநிதி பெயர் உள்ள அந்தக் கல் அங்கே வைக்கக் கூடாது என்று அதைத் தூக்கி எறிந்து விட்டார்கள். அப்படி அதைத் தூக்கி எறிந்தது யார் ? அப்படித் தூக்கி எறிந்த துஷ்டர்கள் யார் ? அப்படித் தூக்கி எறிந்த துன்மார்க்கர்கள் யார்? அவர்கள் யாராக இருந்தாலும் இந்தச்சமுதாயம் அவர்களைச் சும்மா விடாது. கட்டாயம் கண்டிக்கும். தண்டிக்கும். சும்மா விடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் உங்களைச் சொல்ல வில்லை. நீங்கள் ஏன் வருத்தப்படுகிறீர்கள் ?

*திரு. பண்ணை கே. சேதுராம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது நான் குறுக்கிடுவதற்காக மெத்த வருத்த படுகிறேன். இங்கே வள்ளுவர் கோட்டம் திறப்பு விழாவிற்கு மதிப்பிற்குரிய கலைஞர் அவர்களை அழைக்கவில்லை என்ற வேதனை யை இங்கே சொன்னார்கள். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு அவசரகால குடியரசுத் தலைவர் ஆட்சியின் போது நடந்ததை உறுப்பினர் கூறினார். அதிலே என்ன ஒழுங்குப் பிரச்னை ? முன்னாள் முதல மைச்சரை அன்று அழைத்தார்களா இல்லையா என்ற பிரச்சினை பற்றி நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் ? அது நடந்தது குடியரசு தலைவர் ஆட்சியில்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : நாட்டிய அடிக்கல்லை அப்புறப்படுத்திவிட்டார்கள் என்று சொன்னார்கள்.

திரு. பண்ணை கே. சேதுராம் : மதுரை மேயராக இருந்த முத்தண்ணன் அவர்களை கார்ப்பரேஷன் மாளிகை திறப்பு விழா வுக்கு அழைக்கவில்லை. அன்று உடனே கார்ப்பரேஷனைக் கலைத்து விட்டு அவரை அந்த விழாவுக்கு அழைக்கவில்லை என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இவர் பேசியதிலிருந்து நீங்கள் வேறு ஒரு பிரச்சினைக்குப் போகிறீர்கள். தயவு செய்து உட்காருங்கள்.

திரு. ப. உ. சண்முகம் : நான் கலைஞர் அவர்களை வள்ளுவர் கோட்டத்திற்கு அழைக்கவில்லை என்று சொல்லவில்லை. வேண்டு மென்றே நான் அவ்வாறு கூறியதாகக் கற்பனை செய்து கொண்டு இன்னொரு சம்பவத்திற்கு உறுப்பினர் அவர்கள் போகிறார்கள். அவரை அழைக்கவில்லை என்று சொன்னார்கள். விவரம் முழுவதும் தெரிந்து சொல்லியிருக்கலாம். அவரை அழைத்தோம். ஆனால் அவர்தான் மறுத்தார். நான் அந்தப் பிரச்சினைக்குப் போக விரும்பவில்லை. நான் தெரிந்துகொள்ள விரும்புவது . . . . .

திரு. இரா. முத்தையா : அங்கேயும் கல்லை எடுத்திருக்கிறார் கள்.

திரு. ப. உ. சண்முகம் : வள்ளுவர் கோட்டத்தில் மட்டுமே அப்படி நடக்கவில்லை. பல இடங்களில் நடந்திருக்கிறது. ஒன்று உதாரணத்திற்குச் சொன்னேன். அங்கே கல்லை எடுத்துவிட்டார் கள் என்பதற்காகத்தான் சொன்னேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து யாரும் இடத்தில் அமர்ந்து கொண்டே பேசிக் கொண்டிருக்க வேண்டாம்

திரு. ஜே. ஜேம்ஸ் : இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். காமராஜர் அவர்கள் நினைவாலயத்தில் ராட்டையையும் கூட எடுத்துவிட்டார்கள். ஆகவே, இதைப்பற்றி விரிவாகச் சொல்ல வேண்டாம்.

திரு. சோ. பாலகிருஷ்ணன் : எமர்ஜென்சி காலத்தில் பதவி பறிபோனவர்கள் ரொம்ப ஆத்திரப்பட்டு அதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். அவர்கள் பதவி பறிபோன நேரத்தில் மக்கள் எவ்வளவு சந்தோஷப்பட்டார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுகிறேன்.

திரு. ப. உ. சண்முகம் ; பதவி பறிபோனதால் ஆத்திரப்படு கிறோம் என்று சொன்னார்கள். அவர்கள் எண்ணிப் பார்க்கட்டும். பத்திரிகையை அன்றாடம் பார்ப்பார்கள் என்று நினைக்கிறேன். யார் யார் எப்படிப் பதறுகிறார்கள் ? ராஜபோகத்தில் இருந்த வர்கள், இந்தியத் துணைக் கண்டத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்தவர்—பெயரைச் சொல்ல விரும்பவில்லை—எங்கே இன்றைய தினம் ? சிறைச்சாலையில் கூட இல்லை, போலீஸ் காவலில் வைக்கப்பட்டிருக்கிறார். இதைவிட வெட்கக்கேடு வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு சி. ஆறுமுகம் அவர்கள் உட்கார்ந்துகொண்டே பேசிக்கொண்டிருக்கிறார். அவர் பேசி முடிக்கட்டும்.

திரு. ப. உ. சண்முகம் : எனவே நான் தெரிவித்துக் கொள் கிறேன். எமர்ஜென்சி காலத்தில் பதவி பறிபோனவர்கள் என்று சொன்னார்கள். எமர்ஜென்சி காலத்தில் பதவி போயிருந்தால் பரவாயில்லை. எமர்ஜென்சி காலத்தில் நாங்கள் பதவியில் இருந் தோம். வரலாறு தெரியாமல் பேசுகிறாரே என்று தான் வேதனை யடைகிறேன். எமர்ஜென்சியை ஆதரித்திருந்தால் இந்த ஆட்சி யின் ஆயுளையும் நீட்டித்துக் கொடுத்திருப்பார்கள். நாங்கள் அதை எதிர்த்தோம். அதையெல்லாம் மறந்துவிட்டு இப்போது பேசு கிறார்கள்.

[பிற்பகல் 1-50]

எனவே கட்டடங்களிலே வைத்திருந்த கற்களை அப் புறப்படுத்துவது சரிதானா, முறைதானா என்பதை யோசிக்க வேண் டும். இன்றைக்கு ஒரு ஆட்சி இருக்கலாம், நாளைக்கு ஒரு ஆட்சி வரலாம், ஆட்சி மாறலாம், இன்றைய முதலமைச்சர் அவர்களும் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் ஒரு நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு கால்கோள் இடுவதை நாளையதினம் ஆட்சி மாறி இன்னொரு ஆட்சி வருமானால் அந்தக் கல்லை எடுத்துவிடக் கூடாது. இன்றைக்கு இருக்கிற ஒரு ஆட்சி ஒரு படத்தைத் திறந்து வைத் தால் நாளைக்கு வருகிற ஆட்சி அதை எடுத்துவிடக் கூடாது.

அப்படி அப்புறப்படுத்துவது கூடாத காரியம், தகாத காரியம். இவ்வளவும் எமர்ஜென்சி காலத்திலே இருந்தது.

நம்முடைய கட்டிடப் பிரிவில் பல நிபுணர்கள் நம்மிடம் இருக்கிறார்கள். அவர்களை வைத்துக்கொண்டு நல்ல கட்டிடங்களை கட்டலாம். நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஒரு எலக்டிரிகல் என்ஜினியர். அவர் இந்தப் பிரிவிலும் தொடர்பு கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான் நான் இதைச் சொன்னேன். மின்சாரத் துறையும் அவரிடத்திலே தான் இருக்கிறது. இந்தக் கட்டிடப் பிரிவில் நாம் ஒரு விதியை வைத்து இருக்கிறோம். பொதுக் கட்டிடங்கள் கட்டுகிறபோது அதற்கு ஸ்டெபிலிட்டி சர்டிபிகேட் வாங்கவேண்டுமென்று, அந்த சர்டிபிகேட்டை தயக்கம் இல்லாமல் கொடுக்கச் செய்ய வேண்டும். நியாயமான வழியில் கொடுக்கச் செய்ய வேண்டும். இந்தத் துறையிலே பணியாற்றுகிற அதிகாரிகள் நல்ல திறமையோடு பணியாற்றுகிறவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, அவர்களை வைத்துக் கொண்டு நல்ல காரியங்களைச் சீக்கிரம் முடிக்கலாம்.

அடுத்து, அரசாங்கம் ஒரு திட்டத்தைப் போட்ட உடனே பணத்தை முழுவதுமாக ஒதுக்கிவிடுவதில்லை. ஒரு திட்டத்தை அறிவித்த உடனே பணத்தைக் கொடுத்துவிடுவதில்லை. இந்த செண்பகத்தோப்புத் திட்டத்திற்கு மொத்தச் செலவு ரூ. 355 லட்சம் என்று தெரிவித்திருக்கிறார்கள். ஏறக்குறைய 3½ கோடி ரூபாய் செலவாகிறது. அதிலே இந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய் தான் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால் இந்த செண்பகத் தோப்பு அணைக்கட்டுத் திட்டத்தின் வேலை தி.மு.க. ஆட்சியில் இருந்தபோதே ஆரம்பமாயிற்று. நான் தி.மு.க. ஆட்சியைப் பற்றி பறைசாற்றிக் கொள்வதாக நினைத்துக்கொள்ள வேண்டாம். அந்த செண்பகத்தோப்பு திட்டத்தை நாங்கள் போய்ப் பார்வையிட்டது 2 ஆண்டுகளுக்கு முன்பாகவே, பொறியாளரும் நானும் போய்ப் பார்த்தோம். ஆகவே தி.மு.க. ஆட்சியிலே போடப் பட்டிருந்த திட்டம் தான் அது. நான் இப்போது நீங்கள் நடத்தக் கூடாது என்று சொல்லவில்லை. நடத்துங்கள்.

ஆனால், ஒரு திட்டத்தைப் போடுகிறபோது பணம் செலவு எவ்வளவு ஆகும், எவ்வளவு வருமானம் திட்டம் நிறைவேறினால் வரும் என்று பார்த்து அதற்குப் பிறகு தான் திட்டம் முடிவு செய்யப்படும். அந்தத் திட்டத்திற்கு செலவு எவ்வளவு ஆகும், அந்தத் திட்டம் நிறைவேறினால் அதனால் லாபம் எவ்வளவு இருக்கும் என்று இரண்டையும் பார்த்துத்தான் அந்த வேலையை எடுத்துக் கொள்வோம். இது அமைச்சர் அவர்களுக்கும் தெரியும்.

ஆனால் ஒரு பகுதி பிற்படுத்தப்பட்ட பகுதியாக இருந்தாலும், வறட்சியான பகுதியாக இருந்தாலும் இந்தக் கணக்கை எல்லாம் பார்க்கக்கூடாது என்று நாங்கள் இருந்தபோது வைத்திருந்தோம்.

இப்போது நம்முடைய அமைச்சர் அவர்கள் கூட அதைத் தெளிவு படுத்தினார்கள். நான் அதை வரவேற்கிறேன். ஆகவே ஒரு பகுதி, வறட்சியான பகுதியாக இருந்தால், பிற்பட்ட பகுதியாக இருந்தால் அங்கே திட்டத்தைக் கொண்டுவருகிறபோது கட்டுபடியாகக் கூடியதாக இருக்குமா என்று கணக்கைப் பார்க்காது அங்கேயெல்லாம் தண்ணீரைக் கொடுக்கக் கூடிய நல்ல திட்டங்களை நிறைவேற்றித் தாருங்கள் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன், வணக்கம்.

<u>மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :</u> பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை சம்பந்தப்பட்ட இந்த மானியக் கோரிக்கைகளில் பல்வேறு உறுப்பினர்கள் கலந்துகொண்டு பல நல்ல கருத்துக்களையெல்லாம் வழங்கியிருக்கிறார்கள். எல்லா ஆலோசனைகளுக்கும் பதில் சொல்வதற்கு இது நேரம் தகுதியல்ல என்ற காரணத்தாலும் அவைகளை எல்லாம் துறையினர் நன்றாக பரிசீலிப்பார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிந்திருக்கிற காரணத்தாலும் ஒரு சில குறிப்பிட்ட முக்கியமான பிரச்சினைகளோடு மட்டும் என்னுடைய உரையை வரையறுத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்.

முதலாவது, கட்டடப் பிரிவைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே பள்ளிக்கூடக் கட்டிடம் வேண்டும் என்றும் மருத்துவமனைக் கட்டிடம் வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னார்கள். அந்த அந்தத் துறைகளுக்கான அனுமதி வழங்குவது மருத்துவத் துறை, கல்வித் துறை போன்றவை தான். அந்த வேலையைச் செய்வது தான் பொதுப்பணித் துறை. ஆகவே அனுமதி வழங்கப்பட்டு எந்தக் கட்டிடமாவது கட்டப்படவில்லையென்றாலோ அல்லது கட்டுவதிலே காலதாமதம் ஏற்படுகிறது என்றாலோ தான் இந்தப் பொதுப் பணித் துறையினர் பொறுப்பாவார்கள் என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அது சம்பந்தமாக எடுத்துச் சொல்லிய கருத்துக்கள் அந்தந்தத் துறையினருக்கு அனுப்பப்படும் என்பதை நான் தெளிவாகக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

காலையிலே நான் அறிவித்த சில ஆலோசனைகளைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. உ. ச. அவர்கள் பேசுகின்றபொழுது அதைப் பெரும்பாலும் வரவேற்றிருக்கிறார்கள். ஒரு சில திட்டங்களைப்பற்றி ஒரு சில ஐயங்களை எழுப்பினார்கள். மக்கள் குழு அமைப்பதன் மூலம் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இருக்கின்ற தொடர்பு எந்த வகையிலே பாதிக்கப்படும் என்பதைப்பற்றிச் சொன்னார்கள். மக்கள் குழு அமைப்பது பொதுவாக அரசு நிறைவேற்றும் திட்டங்கள் அனைத்துக்கும் அமைக்கலாம் என்ற யோசனையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்திருக்கிறார்கள். அது பொதுப்பணித்துறையால் ஏற்று

நடத்தப்படும் திட்டங்களானாலும், அல்லது குடிநீர் வாரியத்தின் மூலம் நடத்தப்படும் திட்டங்களானாலும், அல்லது கல்வித் துறை திட்டங்களானாலும் அரசாங்கத்தால் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களையும் அது எப்படி நடைபெறுகிறது என்பதைக் கண்காணிக்கின்ற அளவிற்கு அந்த மக்கள் குழுவை எப்படிச் சிரமைக்கலாம் என்பதைப்பற்றி அரசு தனியாக பரிசிலித்துக் கொண்டிருக்கிறது. நான் குறிப்பிட்டது பொதுப் பணித்துறையைப் பொறுத்தவரையில் தணிக்கைக் குழு என்று, தொழில் நுட்ப வல்லுநர்களைக் கொண்ட அந்தக் குழு, இந்த வேலைகள் நடைபெறும்பொழுது சோதனையிட உதவிகரமாக இருக்கும் என்பதுதான்.

அதுமட்டுமல்ல, மார்க்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் பேசும்பொழுது இதே திட்டத்தை வரவேற்றுவிட்டு, காண்டிராக்ட் முறையை ஒழிக்க வேண்டும், காண்ட்ராக்ட் முறையை ஒழிந்தால்தான் இலஞ்சம், ஊழலை ஒழிக்க முடியும் என்று சொன்னார்கள். அதற்குப் பதில் என். எம். ஆர். முறையை வைத்துக் கொள்ளலாம் என்று ஆலோசனை கூறினார்கள். காண்ட்ராக்ட் முறையை ஒழித்துவிட்டால் இலஞ்சம், ஊழலை ஒழிந்துவிட முடியுமா என்பது சந்தேகம்தான். என்.எம். ஆரை. வைந்தால் மஸ்டர் ரோல் முறை ஆரம்பித்து விட்டால் இலஞ்சம், ஊழலை எப்படித் தடுக்க முடியும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஆகவே, அது மிகப்பெரிய பிரச்னை. இலஞ்சம் ஊழலை ஒழிப்பது என்பது சாதாரண பிரச்னை அல்ல, அது மிகப் பெரிய பிரச்னை.

ஆனால் ஓரளவுக்கு வேலையில்லாத பட்டதாரிகளுக்கு வேலை தேடித்தர வேண்டுமென்ற முறையிலே சிந்தனை அந்த முறையில் செலுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப.உ.ச. அவர்கள் பேசும்பொழுது, பொறியியல் பட்டதாரிகள் வேலைக்கு அமர்ந்துப்பட்ட பிறகா அல்லது எந்த நிலையிலே இந்தப் பயிற்சியைத் தருவீர்கள் என்று கேட்டார்கள். நான் முதலில் பேசும்பொழுதே குறிப்பிட்டேன். எப்படிப்பட்ட பயிற்சி தரப்பட வேண்டுமென்பதைப் பற்றியும், யார் யாருக்கு எந்தந்த நிலையிலே தர வேண்டுமென்பதைப் பற்றியும் இனிமேல் அரசு ஆய்ந்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறது. அவைகளைச் சேகரிக்கின்ற நேரத்தில் அவர்கள் சொல்கின்ற ஆலோசனைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரையில் இங்கே பேசும்பொழுது சிலபேர் திருவள்ளுவரை அழைத்தார்கள். ''நீர் இன்று அமையாது உலகு'' என்றும், ''இரந்தும் உயிர் வாழ்தல்

வேண்டின் பரந்து கெடுக உலகியற்றி யான்'' என்றும் திருவள்ளுவர் சொன்னார் என்றெல்லாம் சொன்னார்கள். திருவள்ளுவர் இன்னொன்றையும் சொன்னார், நாடு என்பது பிறரை நாடி வளம் பெறக்கூடிய நிலைமை இருக்கக் கூடாது என்று சொன்னார். நம்முடைய புலவர் அவர்களைக் கேட்டால் சொல்வார்.

''நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு''

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். பிறரை நாடுவோமேயானால் அது நாடாகவே ஆகாது. பிறரை நாடாமலேயே நம்முடைய நாடு விளங்கியிருக்க வேண்டுமென்று சொன்னார். திருவள்ளுவரின் இலக்கணப்படி பார்த்தால் நம்முடைய நாடு நாடாகவே இருக்காது என்ற அளவிற்கு நீர் நிலைமைகள் இருக்கின்றன. இந்தியாவிலே உள்ள நீர்வளத்தை.....

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, நாடு என்று வள்ளுவர் குறிப்பிட்டது பிற நாடுகளைத்தான். ஆனால் இங்கு சொல்வது நம்முடைய நாட்டைத்தான், கேரள நாட்டைத்தான். ஆகவே, இது பிற நாடு ஆகாது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்வது நாடு என்று சொல்லப்படுவதற்கு இலக்கணமே தன்னுடைய வளத்தைக்கொண்டே, பிறரை நாடாமல் அமைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறார். பிற நாட்டை நாடுகின்ற முறையில் இருந்தால் அது நாடே அல்ல என்று அவரே கஷ்டப்பட்டு, காவிரித் தண்ணீருக்கு நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோமோ, கிருஷ்ணா தண்ணீருக்கு நாம் எவ்வளவு கஷ்டப்படுகிறோமோ, மேற்கு நோக்கி பாயும் ஆறுகளைக் கொண்டு வருவதற்கு எவ்வளவு கஷ்டப்படுகிறோமோ, நாம் இப்பொழுது எப்படி அனுபவிக்கிறோமோ அதைப்போல அந்தக் காலத்தில் அவர்கள் உணர்ந்து சொல்லியிருக்கிறார்களோ என்று எனக்கு நினைக்கத் தோன்றுகிறது.

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்தவரையில் நீர் வளத்தில் மிகவும் குறைந்திருக்கிறோம். இந்தியாவிலே 59,000 டி.எம்.சி. நீர் வளம்தான் இந்தியா முழுவதும் இருக்கிறது. ஆனால் தமிழ்நாட்டுக்கு 1,200 டி.எம்.சி. தான் இருக்கிறது. இந்தியாவினுடைய மொத்த ஜனத்தொகையில் நாம் 8 1/2 சதவிகிதம். ஆனால் அவர்களுக்கு இருக்கின்ற நீர்வளத்தை எடுத்துக் கொண்டால் நாம் 2 சதவிகிதம்தான். அதுதான் நமக்கிருக்கின்ற குறை.

கங்கை காவேரி இணைப்பு பற்றியெல்லாம் சொன்னார்கள். கங்கையில் பாதித் தண்ணீருக்கு மேலே எந்தக் காலத்திலும் யாராலும் பயன்படுத்த முடியாது. ஏனென்றால் வெள்ளமாகப் போய்விடும். மீதித் தண்ணீரைக் கொண்டு வருவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. அந்தத் தண்ணீரை விந்திய மலையில் ஏற்றுவதற்கு இன்றைக்குள்ள சூழ்நிலையில் இந்தியாவிலுள்ள எல்லா பவர் ஹவுஸ்களையும் சேர்த்து பம்பு செய்தால் கூட அந்த தண்ணீரை மேலே ஏற்ற முடியாது என்று சொல்கிறார்கள்.

[பிற்பகல் 2.00]

அதே போலத்தான் பிரம்மபுத்ராவும். பிரம்மபுத்ராவைப் பொறுத்தவரையிலே, அதே போலத்தான் 10% தண்ணீரைத் தான் பயன் படுத்த முடியும். 90% கடலிலே கட்டாயம் போய்த்தான் சேரும். ஏனென்றால், வடக்கே இருக்கிற தண்ணீரெல்லாம் வெள்ளமாகப் போகிறது, தெற்கே கொண்டு வரமாட்டேன் என்கிறார்கள். வடக்குத் தெற்கு பிரச்னை தான் இதற்குக் காரணமா என்று மாண்புமிகு லத்தீப் அவர்கள் கேட்டார்கள். ஆறுகள் நிலைமை என்னவென்றால், பிரம்மபுத்ராவிலும் 10% தண்ணீர் கூடப் பயன்படுத்த முடியாது என்று சொல்கிறார்கள். பிரம்மபுத்ராவின் நீர் அளவு காவிரியைப் போல் 26 மடங்கு. கங்கையின் நீர் அளவு, காவிரியைப் போல் 27 மடங்கு.

ஆக, அப்படி இருந்தும் கூட, தண்ணீரைக் கொண்டு வர சிரமம் இருக்கிறது என்பதாலேதான் இதைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், கோதாவரி, கிருஷ்ணா போன்ற ஆறுகளையாவது இணைக்க ஒரு திட்டம் வகுத்து நிறைவேற்றக் கூடிய சூழ்நிலை வருமானால், நிச்சயமாக அது பயன்படக் கூடிய சூழ்நிலையாக இருக்கும். ஏனென்றால், கோதாவரியிலே 4630 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. இதுவரையில் பயன் படுத்தியது 13% தான். இன்னும் 4023 டி.எம்.சி. அப்படியே இருக்கிறது. காவிரியிலே மீதப்படுவது 637 டி.எம்.சி. கோதாவரி தண்ணீர் அப்படியே இருக்கிறது. கிருஷ்ணாவிலே, 939 டி.எம்.சி. தண்ணீர் அப்படியே இருக்கிறது. ஆகவே, தேசிய அளவில், இந்திய ஒருமைப்பாட்டில் நம்பிக்கை கொண்டிருக்கிற அனைத்து அரசியல் கட்சிகளைச் சேர்த்து, அதோடு மத்திய அரசாங்கமும் சேர்த்து, திட்டத்தைத் தொடங்குவார்களானால், அதிலே முதல் அடிப்படையாக தென்னகத்திலே இருக்கிற ஆறுகளை இணைக்க திட்டத்தை மேற்கொள்வார்களானால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதனை வரவேற்க முதலாவதாக இருப்போம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் நாட்டில், நீர்வளம் மிகமிகக் குறைவாக இருக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டில் 205 இலட்சம் ஏக்கர் விவசாயத்திற்கு ஏற்றது. ஆனால், இங்கே நீர் வசதி செய்து தந்தது 60 இலட்சம் ஏக்கர்களுக்குத்தான். நிலத்தடி நீரைப் பயன்படுத்தி

னாலும் சரி, இன்னும் சிறு ஏரிகளைப் பயன்படுத்தினாலும் சரி, தண்ணீரைச் சிக்கனப்படுத்தினாலும் சரி, இன்னும் வேண்டுமானால் 36 இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி செய்து தர முடியுமே தவிர, இன்னும் பாசன வசதி தேவைப்படுகிற 145 இலட்சம் ஏக்கர்களுக்குப் பாசன வசதி தேவைப்படுகிறது. இது தான் தமிழ்நாட்டில் இன்றைக்கிருக்கிற நீர்ப்பாசன பிரச்னை. ஆகவே, விவசாயத்திற்குத் தகுந்த நிலங்களுக்கு நீர் வளத்தைத் தேடித் தருவதிலே நாம் கண்ணும் கருத்துமாக இருக்கிறோம்.

மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளை இங்கே திருப்பலாம் என்ற திட்டத்தையும் அதற்காகத் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த மாண்புமிகு திரு. ப.உ.ச. அவர்கள் குறிப்பிட்டார்கள். நான் உண்மையிலேயே அதிர்ஷ்டசாலி என்றுதான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். ஏனென்றால், 1967-லிருந்து பொதுப்பணித் துறையை நிர்வகித்த முன்னாள் அமைச்சர்களெல்லாம் இந்த மன்றத்திலே இருக்கிறார்கள். நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும், ப.உ.ச. அவர்களும், சாதிக் பாட்சா அவர்களும் இங்கே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆகவே, தொடர்பாக, இந்தப் பிரச்னைகளில் என்னென்ன நடந்தது என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பைப் பெற்றிருக்கிற காரணத்தினால்தான் நான் அப்படி சொன்னேன். மேற்குநோக்கி ஓடும் ஆறுகளைப் பற்றியும் கேரள மாநிலத்து முதலமைச்சரை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவர், டெல்லியிலே சந்தித்துப் பேசியபொழுது, பொதுவாகப்பேசினோம். பொதுவாக கர்நாடகம், கேரளம் தமிழகம் ஆகிய மூன்று மாநிலங்களும் சேர்ந்து மேற்குத் தொடர்ச்சி மலையிலே இருக்கிற இயற்கை வளங்களை இந்த மூன்று பகுதிகளுக்கும் எவ்வளவு குறைவான செலவில் அதிகமாகப் பயன்படுத்தமுடியுமோ அந்த அடிப்படையில் அணுகவேண்டுமென்று நாங்கள் எடுத்துச் சொன்னோம். அவர்களும் அதை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சியில் அரசு ஈடுபடும்.

நமக்கு கிடைத்த தகவலின்படி காவிரியில் 848 டி.எம்.சி. தண்ணீர் இருக்கிறது. ஆனால், அதிலே எவ்வளவு நமக்குக் கிடைக்கும் என்பது வேறு பிரச்னை.

பாண்டியாறு புன்னம்புழா பற்றியெல்லாம் இங்கே பேசும் பொழுது மாண்புமிகு முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் ப.உ.ச. அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால், பாண்டியாறு புன்னம்புழா திட்டத்தில் 1965ஆம் ஆண்டு ஒப்பந்தம் போட்டு, தண்ணீர் கேட்கமாட்டோம் என்று கையெழுத்தாகியிருக்கிறது. அது மீண்டும் கடந்த ஆட்சிக்காலத்தில், 1974 ஆம் ஆண்டு, ஆட்சியிலிருந்த அரசும் பாண்டியாறு-புன்னம்புழா தண்ணீரை

நாம் கேட்கமாட்டோம் என்று கையெழுத்துப் போட்டிருக்கிறார்கள். பழைய ஒப்பந்தத்தை நீட்டிக்கும்போது இவ்வாறு கையெழுத்து போடப்பட்டிருக்கிறது. இப்படி பல சிக்கல்கள் இருக்கின்றன. இந்த சிக்கல்களை ஒவ்வொன்றாகத் தீர்க்க வேண்டுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆனால் இது சம்பந்தமாக முயற்சிகளை மேற்கொண்டால், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி போன்ற பகுதிகளில் நீர் வசதிகள் நிச்சயமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அதே போல, சென்னையிலே குடிநீர் தேவைக்கும் கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தருவதாக . . . .

திரு. ப. உ. சண்முகம்: பாண்டியாறு-புன்னம்புழா தண்ணீரை விவசாயத்திற்குக் கேட்கமாட்டோம் என்று 1974லே ஒப்பந்தம் ஆனதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1965இல் மாண்புமிகு திரு. வெங்கட்டராமன் அவர்கள் காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தத்தின்படி, மின்சாரத்திற்கு மட்டும் பயன்படுத்தினாலும், விவசாயத்திற்கு இதை பயன்படுத்துவதில்லை என்று முடிவாகி இருக்கிறது. 1974ஆம் ஆண்டில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின்போது எங்களுக்கு விவசாயத்திற்குத் தண்ணீர் கொடுங்கள். பல்லடம் பகுதிக்குக் கொடுங்கள் என்று வலியுறுத்தி வேண்டினோமே தவிர, கேட்கமாட்டோம் என்று கையெழுத்திட்டதாக ஞாபகம் இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப்பற்றி தெரிவித்தால் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 'லோயர் நீரார் டேம்' சம்பந்தமாக கேரள அரசைச் சேர்ந்துள்ள பாண்டியாறு-புன்னம்புழா தண்ணீரைக் கேட்கமாட்டோம் என்று 1965-லே போட்ட அக்ரிமென்டை நீங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று 1974-லே சொல்லி, நீங்கள் ஏற்றுக்கொண்டு இதிலே கையெழுத்துப் போடப்பட்டிருக்கிறது.

It is agreed that the Pandiyar—Punnampuzha Scheme be implemented in accordance with the understanding reached on 14th October 1965 beteen the Government of Kerala and Tamil Nadu.

Secy. M. M. Rajendran.

ஆகவே, இப்படி எல்லாம் சில பிரச்னைகள் இருக்கின்றன. ஆகையினாலே அவற்றைப் பற்றி எல்லாம் நாம் அவர்களோடு பேசி நல்ல முடிவிற்கு வர வேண்டும். நாம் கேட்கும் நிலையிலும் அவர்கள் கொடுக்கும் நிலையிலும் இருப்பது சிக்கலான பிரச்னை.

கிருஷ்ணா நீரைப் பற்றி சொன்னேன். 15 டி.எம்.சி. தருவதாக மராட்டிய, கர்நாடக, ஆந்திர அரசுகள் ஒப்புக் கொண்டுள்ளன. அது சம்பந்தமாக முதலமைச்சர்கள் மாநாடு விரைவில் நடக்க இருக்கிறது, கொடுக்க ஒப்புக் கொண்டார்கள்.

அதை எப்படிக் கொண்டு வருவது என்பதைப் பேசித் தீர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். திறந்தவெளி கால்வாய் மூலம் கொண்டுவர 145 கோடி ரூபாய் செலவாகும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது.

கூத்தக்குடி திரு. ச. சண்முகம்: இந்த ஒப்பந்தத்தைத்தான் ஏற்கனவே மாண்புமிகு சௌந்தரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டார்களா? விளக்கம் தேவை. இது வேறா, அது வேறா? விஷயம் தெரிந்து கொள்ள கேட்டேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இது 1974ஆம் வருடத்தியது. பாண்டியார்-புன்னம்புழா நீரார் சம்பந்தமான கேரள ஒப்பந்தம். அவர் சொன்னது காவேரி ஒப்பந்தம். காவேரிக்கு இன்னும் நான் வரவில்லை.

திரு. மு. கருணாநிதி: பாண்டியார்-புன்னம்புழாவில் ஏற்கனவே இருந்த அரசு தவறு செய்துவிட்டது போல் உறுப்பினர் அவர்கள் கருதிக்கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கிறார் என்று கருதுகிறேன். நான் குறுக்கிடுவதற்காக அவைத் தலைவர் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். 1965ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இந்த பாண்டியார்-புன்னம்புழா திட்டம் ஒப்பந்தமான பொழுது அப்போது இருந்த அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்கள், மின்சாரத்திற்கு மாத்திரம் எங்களுக்கு தண்ணீர் கொடுக்க வேண்டும் என்கிற அளவிலே அப்போதே கையெழுத்து போட்டுவிட்டார். அதற்குப் பிறகு கழக அரசு வந்த பிறகு, அந்தப் பகுதியிலே உள்ள கோவை விவசாயிகள் விவசாயத்திற்குப் பயன்படும் வகையில், ஒப்பந்தத்தை மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டார்கள். அதற்காக கழக அரசு கேரள அரசோடு எவ்வளவோ வாதாடிப்பார்த்தும் அதனுடைய பலன் ஆண்டுக்காண்டு அதிக மதிப்பீடு கூடியதே தவிர, மின்சாரத்திட்டமும் நிறைவேறவில்லை. நீரார் ஒப்பந்தமாவது முடியட்டும் என்கின்ற அளவில் வேறு வழியே இல்லாமல், அதை ஒத்துக்கொண்டு, பாண்டியார்-புன்னம்புழா மின்சாரத் திட்டத்தை விரைவு படுத்துவதற்காக கழக அரசு ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்திற்கு வந்தது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இத்தகைய விளக்கம் கிடைக்கும் என்பதனால் தான் நான் முன்பே குறிப்பிட்டேன். கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. தண்ணீர் கொண்டுவர பேச்சுவார்த்தைகள் முதலமைச்சர் மட்டத்திலே விரைவிலே நடக்க இருக்கிறது. அந்தப் பேச்சு வார்த்தைகள் சுமுகமாக நடந்து சென்னை நகர குடிதண்ணீர் பிரச்னை தீரும் என்று நான் நிச்சயமாக நம்புகிறேன்.

அடுத்து முக்கியமாக இங்கே பேசப்பட்ட பிரச்சினை காவேரி பிரச்னை. உண்மையிலே மாண்புமிகு ப.உ.ச. அவர்கள் பேசும் போது இதை அவர்கள் காலத்திலேயே முடித்திருக்கக் கூடாதா என்று தான் நான் நினைத்தேன். ஏனென்றால் அந்தப் பிரச்னை 1968 ஆம் ஆண்டிலே இருந்து, தொடர்ந்து பல்வேறு நிலை எடுத்து பல்வேறு உருவெடுத்து, பல்வேறு அவதாரம் எடுத்து வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இங்கே பேசும்போது எந்தவிதமான கையெழுத்தும் நான் இடவில்லை என்று குறிப்பிட்டார். அது ஒன்றுதான் இன்றைக்குக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஏனென்றால், பல நேரங்களில் பல நிலைமைகள் அப்படி உருவாகி இருக்கின்றன. நவம்பர் 1974-லே, அதற்குப் பிறகு பிப்ரவரி 1975-லே நடைபெற்ற முக்கியமான கூட்டங்களில் பல்வேறு முடிவுகள்—அவைகளை எல்லாம் எடுத்து வெளியே சொல்வது சரியாக இருக்காது. பல்வேறு நிலைகளில் தமிழ்நாட்டு நிலைமை இன்னும் மற்றவர்களால் சரியாக உணர்ந்து கொள்ள முடியவில்லை என்றுதான் தெரிகிறது. ஆகவே இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலும் அவற்றைப் பற்றி நன்றாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தின்படி, கர்நாடக அரசு நடந்து கொள்ள வேண்டும் என்று நாம் விரும்புவது இயல்பு. ஆனால் கர்நாடக அரசிலேயும் கட்சி பேதமில்லாமல் முதலமைச்சராக வீரேந்திரபட்டீல் இருந்த காலத்திலிருந்து இன்று வரை அவர்களும் அந்த ஒப்பந்தத்தை நாங்கள் ஏற்கமாட்டோம் என்று முறையாகக் கருத்துக் கூறி வருகிறார்கள்.

[பிற்பகல் 2-10]

இங்கும் கட்சி மாறினாலும் கூட, அரசு கட்சி சார்பு இல்லாத முறையில் இந்த ஒப்பந்தம் நடக்க வேண்டும் என்று சொல்கிறோம். ஆனால் இதற்கிடையில், பேச்சு வார்த்தைகளின் போது, சில பல காரியங்களில் நாம் தண்ணீரைச் சிக்கனப்படுத்த வேண்டும் என்றும், அந்த சிக்கனப்படுத்திய தண்ணீரை கர்னாடகத்திற்குத் தர வேண்டும் என்றும் ஒரு கட்டாயம் வந்திருக்கிறது.

பொதுவாக 1924ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி நாம் தண்ணீரை நமது பகுதியில் சிக்கனப்படுத்துகிறோம் என்றால், அது நமது பகுதியில் பயன்படுவது முறை என்றிருக்கிறது. ஆனால் அதுவும் அங்கே காணப்படவில்லை. தற்போதைய பாசனத்திற்கும், வருங்கால பாசனத்துக்கும் வேறுபாடு உண்டு. தற்போதைய பாசனத்திற்கு ஒப்பந்தத்தில் முன்னுரிமை உண்டு. ஆனால் அந்த முன்னுரிமையும் அதில் காணப்படவில்லை. அதோடு மட்டுமல்ல. இன்னும் காவேரியில் ஓடுகின்ற தண்ணீரில் எந்த அளவு, என்ன முறை என்று சரியாகப் புரியவில்லை. இதற்குள் பல்வேறு நிலைமைகள் வந்திருக்கின்றன.

டிராப்ட் அக்ரிமென்ட் என்று எதிர்கட்சித் தலைவர் அவர்கள், அன்று முதலமைச்சர் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட போது கொடுத்திருக்கிறார்கள். நான் கூட கேள்விப்பட்டேன் இரவு 2 மணிக்கு எழுப்பி கையெழுத்துக் கேட்டார்கள் என்று. அந்த நேரத்தில் அதை எப்படியோ தட்டிக் கழித்து வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இதில் தெளிவான, திட்டவட்டமான முடிவை மேற்கொள்ளாத சூழ்நிலை இருக்கிறது.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுகிறபோது, ''உறவு நீடிக்கட்டும், ஆனால் உரிமை பறிபோய் விடக்கூடாது'' என்றார்கள். உரிமை பறிபோய் விட்டதைப் பார்க்கிறோமே தவிர, 1968-லிருந்து நாம் ஸ்திரமான நிலை எடுத்திருந்தால் ஏதாவது பரிகாரம் கிடைத்திருக்கும் என்று கருதுகிறேன்.

ஏனென்றால் கிருஷ்ணா நதி நீர் ஒப்பந்தத்தில் அப்படி நிலைமை வந்தது. ஆந்திரமும், கர்னாடகமும், மகாராஷ்டிரமும் ஒத்துவரவில்லை. அதனால் டிரிப்யூனல் போட்டார்கள். 4 ஆண்டுகளில் தீர்வு கிடைத்து இப்போது அந்தப் பிரச்சினை தீர்ந்துவிட்டது.

ஆனால் கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக இங்கிருந்து சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்குப் போடுவதும், பிரதமர் கூப்பிட்டு நீங்கள் வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொல்வதும், அதை அப்புறம் நாம் வாபஸ் வாங்கிவிட்டு பேச்சு வார்த்தைக்குப் போவதும், பேச்சு வார்த்தை முறிந்து விடுவதும், அதற்குப் பிறகு, நாங்கள் டிரிப்யூனலுக்குப் போகப் போகிறோம் என்று சட்டமன்றத்தில் அனைவரும் சேர்ந்து தீர்மானம் போட்டு நிறைவேற்றி அனுப்புவதும், பிரதமர் அவர்கள் இப்போது கர்னாடகத்தில் 'பாப்புலர் கவர்ன்மென்ட்' இல்லை, இப்போது வற்புறுத்தாதீர்கள், பிறகு பேச்சு வார்த்தை நடத்தலாம் என்று சொல்வதும், அதற்குப் பிறகு 'ஃபாக்ட் பைன்டிங்' கமிட்டி போடுவதும், ஃபாக்ட் பைன்டிங் கமிட்டி சொல்வது சரியில்லை என்று சொல்வதுதும், மறுபடியும் பேச்சு வார்த்தை என்று ஆரம்பிப்பதும், கடைசியாக எப்படியும் டிரிப்யூனலுக்கே போய்விட வேண்டும் என்று முடிவு எடுத்து, அதுவும் மாண்புமிகு திரு. ஜெகஜீவன்ராம் அமைச்சராக இருந்த போது மறுபடியும் பேச்சு என்று ஆரம்பிப்பதும், இப்படி 10 ஆண்டுகள் ஆயிற்று. அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்டு இந்த நிலைமை இருந்து வருகிறது. இதில் சுமுகமான முடிவை நாம் எடுத்தாக வேண்டும்.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றி பேசும் போது ஒரு கருத்தைத் தெளிவாகச் சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில்,

நாம் மாநிலங்களுக்கு இடையே ஆன பிரச்சினைகளை அணுகும் போது, ஏதாவது ஒரு மாநில மக்களுக்கும், இன்னொரு மாநில மக்களுக்கும் பிரச்சினை என்று அணுகவில்லை. இன்னும் சொல்லப் போனால், ஒரு மாநிலத்து மக்கள் இன்னொரு மாநிலத்திலும் இருக்கிறார்கள். வேறு மாநிலத்தைச் சேர்ந்தவர்களும் அந்த மாநிலத்தில் இருக்கிறார்கள். ஆகையால் இதை மாநிலங்களுக்கு இடையே உள்ள ஒரு பிரச்சினையாகக் கருதாமல், மக்கள் பிரச்சினையாகக் கருதி எந்த அளவுக்கு அதை சிக்கலப்படுத்தி சிறப்பாகப் பயன்படுத்த முடியுமோ அந்த உணர்வோடு, இன்னும் சொல்லப் போனால், ஒருமைப்பாட்டு உணர்வுவெறும் எழுத்தில் இல்லாமல், உணர்வில் கலந்திருக்க வேண்டும் என்ற அடிப்படையில் பிரச்-சினையை அணுக வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடம் சொன்னார்கள்.

அந்த முறையில் பிரச்சினையை அணுக வேண்டும். மீண்டும் அண்டை மாநிலங்களுடன் பேச்சு வார்த்தை மூலம் தீர்க்கமுடியும் என்றால் முடிப்போம். அப்படி தீர்க்க முடியவில்லை என்றால் மத்திய அரசாங்கத்தின் உதவியை நாடி, அவர்கள் மூலமாக முடியுமானால், அதற்குப் பாடுபடுவோம். அதுவும் முடியவில்லை என்றால், நடுவர் தீர்ப்புக்குப் போவது தவிர வேறு வழியில்லை என்றால், அதை துரிதமாகச் செய்ய வேண்டும் என்று இருக்கிறோம். 1974ஆம் ஆண்டோடு அந்த ஒப்பந்தம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்கள் சொன்னார்கள் 4 ஆண்டுகளாக தண்ணீர் விடவில்லை என்று. அதுவல்ல உண்மை. அவர்கள் இங்கே பொதுப்பணித்துறை அமைச்சராக இருந்தபோது தண்ணீர் விடவில்லை. 1974ஆம் ஆண்டே கபினியில் தண்ணீர் தேக்கி வைத்துக்கொண்டார்கள். அதற்குப் பிறகு 13 டி.எம்.சி. என்று நினைக்கிறேன், 1974–75-லே தண்ணீர் தேக்கி வைத்துக் கொண்டார்கள். அப்போதும் சிரமம் இருந்துகொண்டு இருந்தது. பிறகு ஆளுநர் ஆட்சியில் அவர்களும் போய் சில கஷ்டங்களை அனுபவித்து வந்து இருக்கிறார்கள். இப்போது தற்காலிகமாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து இருக்கிறோம். நீண்டகால அடிப்படையில் பார்க்கிறபோது நாம் நல்ல முடிவை, விரைவான முடிவை எடுக்க வேண்டிய நிலையில் தமிழகம் இருந்துவருகிறது. அது சம்பந்தமாக அரசின் சார்பில் அனைத்துக் கட்சியின் சார்பில் ஒரு குழு அமைத்து அந்தக் குழுவின் தலைமையில் இரண்டு மாநிலங்களுக்கும் இடையே பேச்சு வார்த்தை நடத்தி, கலந்து பேசி, ஒரு ஒப்பந்தத்தை மேற்கொள்ள முயற்சி செய்வது என்று அரசு தீர்மானித்து இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, நம்முடைய நாட்டிலே இருக்கின்ற ஏரிகள், குளங்கள் இவைகளைப் பொறுத்தவரையில் அவற்றை செப்பனிடுவதற்கு மிகவும் தீவிரமாக நாம் செயல்பட்டாக வேண்டும். ஒரு துளி மழை வந்தால் கூட நாம் அதைப் பயன் படுத்தவேண்டிய

கட்டாயத்தில் இருக்கிறோம். இதில்வரும் லாபநஷ்டக் கணக்கைப் பார்த்தால் முடியாது. ஒரு துளி மழை பெய்தாலும் அதை நாம் குளம் கட்டி பாதுகாக்கும் நிலை இருக்கிறது. அந்தக் குளங்களைச் செப்பனிடுவதற்கு, நிலங்களை ஆக்கிரமித்து இருப்பவர்களை அகற்றுவதற்கு, இந்தக் காரியங்களை திறம்பட அமுலுக்கு கொண்டு வருவதற்கும், இந்த நிலப்படையைப் பயன்படுத்த வேண்டும் என்ற யோசனை இருக்கிறது. வரவு செலவு திட்டத்தில் நிலப்படை பற்றி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, நம்முடைய வேலைகளைச் செவ்வனே செய்வதற்கு ஏற்ற குறிப்பு இருக்கிறது. அவைகளை வைத்துக்கொண்டு, அந்த நிலப்படை அமைப்பை நல்ல முறையில் பயன்படுத்தி, நம்முடைய ஏரி குளங்களைக் காப்பாற்றவும், ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கும், கால்வாய்களை சீரமைக்கவும் திட்டங்கள் இருக்கின்றன.

நம்முடைய மாநில அரசாங்கம் அண்டை மாநிலங்களோடு உள்ள உறவு பாதிக்காத வண்ணம் திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசோடு கூடிப்பேசி, இரண்டு மாநிலங்களிடையே உறவை பலப்படுத்தவும், இந்த அரசு பாடுபடும் என்று கூறிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கை மீது அதிகமான வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. அந்த வெட்டுத் தீர்மானங்களைப் பார்த்தால் எனக்கு பயமாக இருக்கிறது. நிச்சயமாக நீங்கள் அந்த வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்த மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். ஆகவே, கொடுத்து இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெற்றுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை ஏகமனதாக நிறைவேற்றித் தரும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> விவாதம் முடிவுற்றது.. இப்போது வாக்கெடுப்பு.

திரு. ப. சுந்தரம், திரு. செ. சதாசிவம். திரு, வி. கே. கோதண்டராமன், திரு. கே. கந்தசாமி, திரு. ஜெ. ஜேம்ஸ், திரு. கூத்தகுடி ச. சண்முகம், ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றன.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> பேரவை முன்னுள்ள,,. கேள்வி : ''நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 19,21,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

திரு. என். கிட்டப்பா, திரு. ரெ. வீ. சவுந்திரராஜன், திரு. ரா. கிருஷ்ணன், திரு.ஜே. ஜேம்ஸ் ஆகியோர் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்ப பெற்றுக்கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டிடங்கள் என்ற தலைப்பின் கீழ்'' ரூ. 3,00,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திரு. என். கிட்டப்பா, திரு. எ. சுவாமிதாஸ் ஆகியோரின் வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப் பணிகள்—பணியாளரும், கருவிகளும் இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,13,15,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[பிற்பகல் 2-20]

திரு. எம். அண்ணாமலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்குதல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 72,90,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திருவாளர்கள் என். கிட்டப்பா. கு. ரமணி, எ. சுவாமிதாஸ், ஆகியோரது வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''நிதிக்கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 31,32,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

திருவாளர்கள் என். கிட்டப்பா, எ. சுவாமிதாஸ் ஆகியோரது வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி: ''நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப்பணித் துறை கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 9,17,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்''.

நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.22 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

10. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

Nil

B. Reports, Notifications and other papers.

@ 83. Performance Budget of Social Welfare, 1977-78 (English).

‡ 84. Policy Note on Demand No. 43—Miscellaneous—Indian Overseas and Refugees and Evacuees (English and Tamil).

* Cut Motions circulated separately.

@ Despatched to Members on 16-8-1977.

‡ Despatched to Members on 17-8-1977,

இணைப்பு I

[826 ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் : 36—பாசனம்.

ஆய்வுரை.

2. தற்போதுள்ள பாசன அமைப்புகளிலிருந்து உரிய அளவுக்குப் பயனடையும் வகையில் அவற்றை விரிவாக்குவதற்கு சீரமைப்பதற்கும், இயல்பாகப் பராமரிப்பதற்கும் ஆகும் செலவும், வெள்ளம், புயல், காரணமாக ஏற்படும் செப்பனீட்டுச் செலவும் கோரிக்கை 36—பாசனம் என்பதன் கீழ் வழங்கப்படும் மானியத்திலிருந்து ஈடு செய்யப்படும். தற்போது நடைபெற்று வருபவையும் நடப்பு வரவு-செலவுத்திட்ட ஆண்டில் மேற்கொள்ளப்படவிருப்பவையுமான புதிய பாசனத் திட்டங்களின் செலவில் பெரும் பகுதி கோரிக்கை 51—பாசனம் மீதான மூலதனச் செலவு என்பதன் கீழ், பெறும் மானியத்திலிருந்து ஈடுசெய்யப்படும்.

கட்டிடங்கள், பல்வகைப் பணிகள் போன்ற மூலப்பணிகளுக்கும், கட்டிடங்களின் கட்டுமானம் மற்றும் மேம்பாடு, தற்போதுள்ள கட்டிடங்களின் இயல்பான பராமரிப்பு ஆகியவை போன்ற செப்பனிட்டுப் பணிகளுக்கும் செய்யப்படும் நிதி ஒதுக்கீடு கோரிக்கை 37-ன் கீழ் வருகிறது. பொதுப்பணித் துறைப் பணியாளர் அமைப்பின் மொத்தச் செலவு, கோரிக்கை 38-ன் கீழ் வருகிறது. தொழிற்சாலைகளுக்கு நிலநீர் வழங்குதல், கிராமப் பகுதிகளுக்குக் குழாய் மூலம் குடிநீர் வழங்குதல் இவற்றின் மீதான செலவு, கோரிக்கை 48-ன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

புதிய கட்டிடப் பணிகளுக்கு, தனித்தனியே ஆகும் செலவு ரூபாய் ஒரு லட்சத்துக்கு மேற்படுமாயின் அல்லது, தனித்தனியே இந்த அளவுக்குக் குறைவாகச் செலவு ஏற்படுவதாயினும், திட்டத்தின் ஒரு பகுதியாக அமைந்து ரூ. 5 லட்சத்துக்கு மேல் செலவாகுமாயின் அப்பணிகள் மீதான செலவு கோரிக்கை 52 என்பதன்கீழ் பெறும் மானியத்திலிருந்து செலவு செய்யப்படும்.

3. ஆகவே, 1977-78 ஆம் ஆண்டில் பாசனம், கட்டிடங்க்ள், மீது செலவு செய்யக் கருதி அனுமதித்துள்ள மொத்தத் தொகை ரூ. 67,87,15,000, பொதுச் சுகாதாரம், துப்புரவு, குடிநீர் வழங்கல் மீது செலவு செய்யக் கருதியுள்ள தொகை ரூ. 72,90,000.

4. தமிழ்நாட்டுப் பாசன வளர்ச்சிக்கு இடையூறுகள் பல உள்ளன. இம்மாநிலம் அதன் மேற்பரப்பு நீரோட்டத்தினை

93 சதவீதத்திற்கும் அதிகமாகப் பயன்படுத்தி உள்ளது. அண்டை மாநிலங்களிலுள்ள நீரைத் திருப்பி விட்டாலொழிய இனிமேல் முக்கியப் பாசனத் திட்டங்களுக்கான வாய்ப்பு கிஞ்சித்தும் இல்லையென்று கூறலாம். தற்பொழுது நீரைப் பயன்படுத்தும் அளவைக் கொண்டு நோக்கின், இப்போதுள்ள பாசனப் பகுதிகளுக்கு ஆண்டு தோறும் போதுமான நீர் வழங்க முடியுமா என்பதே சந்தேகத்திற்கு இடமாயுள்ளது. ஆண்டு தோறும், பல பாசன அமைப்புகளில், நீர் பற்றுக்குறை பல்வேறு அளவுகளில் இருந்து வருகிறது. இத்துடன், அடுத்தடுத்து வரும் வறட்சியின், கடுமைகளைக் குறைக்கவும், அவற்றிலிருந்து நிவாரணம் அளிக்கவும், நிதிவாயில்களைத் திருப்பிவிட வேண்டிய அவசியமும் ஏற்பட்டுள்ளது.

5. பல ஆண்டுகளாக, இதுகாறும் பயன்படுத்தப்படாத உள்ளூரிலுள்ள சிறு ஆற்றுப் படுகைகள், சிறு நீர்த்தேக்கங்கள், ஆகியவற்றின் உபரி நீரைத் தேக்குவதற்கான நடுத்தரப் பாசனத் திட்டங்கள்தான் நமது முக்கிய ஆதாரத் திட்டங்களாக உள்ளன. இத்திட்டங்களிலிருந்து கூட, நாம் உரிய அளவிற்கு மேல் பயனடைந்துள்ளோம். ஏற்கனவே, முடிக்கப்பட்ட சில திட்டங்களில் நீரியல் மற்றும் சார்பு நிலை சம்பந்தமாக நாம் எவ்வளவு எதிர்பார்த்தோமோ, அந்த அளவுக்குப் பலன் கிட்டவில்லை. கடந்த காலத்தில் கொள்கை அளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட திட்டங்கள் பல, விரிவாகப் புலனாய்வு செய்யப்பட்டதன் பேரில் தொழில் நுணுக்கம் மற்றும் பொருளாதார அடிப்படையில் பயனுள்ளவையா என்பது குறித்து நமக்குத் திருப்தியளிக்கத் தவறிவிட்டன. மேலும் அத்திட்டங்கள் நிறைவேற்றப் படுவதால் ஏற்கனவே உள்ள ஆயக் கட்டுகளுக்குக் கிடைக்கும் பாசன வசதியும் குறையுமோவென அச்சுறுத்துவதாகவும் உள்ளன.

6. மேற்பரப்பு நீர்வாயில்கள் குறைந்ததன் காரணமாக ஓரளவுக்கு நில நீரை நாம் படிப்படியாக நாட நேரிட்டுள்ளது; அதிலும் இம்மாநிலத்தின் பல பகுதிகளில் நிறைவு செய்யும் தகுதிக்கு அதிகமாகவே நிலநீரை எடுத்துள்ளோம். நிலநீர் ஆய்வைத் திட்டமிட்டு முறையாக நடத்தி வரைபடம் தயாரிக்கும் பணியில் மாநிலங்களிலேயே தமிழ்நாடு முன்னதாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் நிலநீர் ஆய்வுப் பணிகள், தற்போது மும்முரக் கட்டத்தில் இறங்கியுள்ளன. இதனால் திட்டவட்டமான பலன்கள் இன்னும் சில ஆண்டுகளில் கிடைக்கக்கூடும். ஆனால், மேற்கொண்டும் நில நீர் சொற்பமான அளவுக்கு மட்டுமே அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுக்க அனுமதிக்கப்படுகின்ற அதே நேரத்தில் ஊற்று நீர் பெருகவும் ஏற்கனவே குறைந்த நீர்ளவைச் சேகரிக்கவும் உடனடியாகக் கவனம் எடுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகிறது.

7. பாசனத் திட்டங்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதிலும், அணுகு முறையிலும், அடிப்படை மாற்றம் தேவை என்பதை இந்நிலைமை திண்ணமாக எடுத்துக் கூறுகிறது. ஏற்கனவே நிறைவேற்றப்பட்டு வருகிற திட்டப்பணிகள் விரைவாக முடிக்கப்பட வேண்டும். திட்ட மூலதனச் செலவுகளைக் கூடுதலாக்க வேண்டியதும் அவசியமாகிறது. உற்பத்தி அளவையொட்டித் திட்ட முதலீடுகள் இருக்க வேண்டும். சிறு பாசனத் திட்டங்களை நிறை வேற்றுதல், நீர் வாயில்களை அவ்வப்போது முறையாகப் பராமரித்தல், ஆற்றுப்பாசன, ஏரிப்பாசன அமைப்புகளைக் காலத்திற்கேற்றவாறு புதுமைப் படுத்துதல் மற்றும் இம்மாநிலத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மேற்கு நோக்கிப் பாயும் ஆற்று நீரைத் திருப்பிவிடுதல் ஆகியவை புதிய பாசன வளர்ச்சிக்கான அரசுக் கொள்கையின் முக்கிய அம்சங்களாக விளங்கும்.

8. இதற்கிணங்க பாசனத் திட்டத்தை முழுவதுமாகச் சீரமைத்து, பயனுள்ளவகையிலும், செவ்விய முறையிலும் செயல் படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் முதல் நடவடிக்கையாக, பெரிய, நடுத்தரப் பாசனத்திற்கான ஒதுக்கீடு, 1975-76-ல் சுமார் ரூ. 11.9 கோடியாக இருந்ததை இந்த ஆண்டில் ரூ. 24.73 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது. பாசனம் குறித்த மொத்த மூலதனச் செலவு 1975-76-ல் ரூ. 41.01 கோடியாகவும், 1976-77-ல் ரூ. 48.28 கோடியாகவும் இருந்ததற்கு மாறாக இந்த ஆண்டில் ரூ. 50.53 கோடியாக இருக்கும்.

பெருந் திட்டங்கள்.

9. கீழ் நீராறு அணையும் சுரங்கப் பாதை அமைக்கும் பணியும் முடியும் நிலையில் உள்ளன. அதனால் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டமும் முடியும் நிலையில் உள்ளது. நடப்பாண்டில், இத்திட்டத்திற்கு ரூ. 440 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தினின்று கிடைக்கும் நீரின் அளவு எதிர்பார்த்ததைவிட மிகக் குறைவாகவுள்ளது. நிர்ணயிக்கப்பட்ட ஆயக்கட்டுப் பகுதியான 250,000 ஏக்கரில் சுமார் 180,000 ஏக்கர் நிலம் மட்டுமே ஒவ்வோர் ஆண்டும் பாசனம் பெறலாம். இரண்டாண்டுக்கு ஒரு முறை பாசனம் அளிக்கும் முறையின் கீழ் ஒவ்வோர் ஆண்டும் சுமார் 180,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திற்குப் பாசனமளிக்கும், நோக்கத்துடன், 1976 ஜனவரியில் இந்த ஆயக்கட்டு மேலும் 115,000 ஏக்கர் பரப்பளவு அதிகப் படுத்தப்பட்டுள்ளது. இதனை எதிர்த்து, அந்தப் பகுதியிலிருந்து பெறப்பட்ட முறையீடுகளின் அடிப்படையில், இந்த முடிவை அரசு மறு பரிசீலனை செய்து வருகிறது. மிகவும் மனநிறைவளிக்கத்தக்கதும், செயல் படுத்த இயலக் கூடியதுமான முறை பின்பற்றப்படும்.

பெரிய ஆற்றுத் திட்டங்களைக் காலத்திற்கேற்ப நவீனப்படுத்துதல்

10. இம் மாநிலம், தனது பெரிய பாசனத் திட்டங்களைக், காலத்திற்கேற்ப நவீனப் படுத்தும் பணியை ஏற்கனவே எடுத்துள்ளது. இந்தப் பாசனத் திட்டங்கள் நீரை மேலும் சிறந்த வகையில் சிக்கனமாகப் பயன்படுத்தவும் ஓரளவு கூடுதல் நிலங்களுக்குப் பாசன வசதியை நீடிப்பதற்கும் உதவுகின்றன. அத்துடன் நிதிவாயில்கள் இல்லாமையால் புறக்கணிக்கப்பட்ட அல்லது ஒத்திவைக்கப்பட்ட வழக்கமான பராமரிப்புப் பணிகளையும் மேலும், கால்வாய்களைப் பராமரிப்பதற்காக உழவர்களுக்குள்ள வழக்கமான கடமைகளை அவர்கள் செய்யாததால் ஏற்பட்ட நிலுவை வேலைகளையும் இத் திட்டங்கள் கவனித்து கொள்கின்றன.

11. பெரியாறு, வைகை வடிநிலப் பகுதிக்கான காலத்திற்கேற்ப நவீனப்படுத்தும் தெளிவமைந்த திட்டம் ஒன்று ரூ. 41.04 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. உலக வங்கி உதவி அளிக்கும் இத்திட்டம், வைகை அணைக்கும், பேரணைக்குமிடையே இணைப்புக் கால்வாய் ஒன்று வெட்டுதல், முக்கிய கால்வாய்களுக்கும், கிளை ஆறுகளுக்கும் கரை அமைத்தல், பொறிமதகுகளுக்கு மேம்பாடுகள் ஆகியவற்றைச் செய்வதன் மூலம், இத்திட்டத்தின் திறனை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தற்போதுள்ள பகுதியில் 18,000 ஏக்கர் பரப்பளவு நிலத்திலுள்ள இரண்டாம் போகப் பயிருக்குப் பாசனமளிப்பதுடன், சுமார் 40,000 ஏக்கர் புதிய பகுதிக்குப் பாசன வசதி அளிக்கும். இத் திட்டத்திற்காக, இவ்வாண்டு ரூ. 3 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

12. வைகைக் கால்வாய்களைக் காலத்திற்கேற்றவாறு நவீனப்படுத்துதல் நிறைவேற்றப்பட்டுவரும் ஒரு பெரிய திட்டமாகும். இதற்கு ரூ. 823 இலட்சம் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. பாசனமளிக்காது விடுபட்ட சுமார் 10,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதி அளிப்பதுடன், சுமார் 95,880 ஏக்கர் ஏரிப் பாசனம் பெறும் பகுதிகளுக்கு இடையறுப் பாசன வசதி அளிப்பதற்கான இத் திட்டங்களை நடப்பாண்டிலேயே முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

13. தஞ்சாவூர் பழைய கழிமுகப் பகுதியிலுள்ள காவிரிப் பாசன ஏற்பாட்டிற்கு விரைவு படுத்தப்பட்ட பழுது பார்க்கும் பணித் திட்டம் ஒன்று 1971ஆம் ஆண்டில் எடுத்துக்கொள்ளப் பட்டது. 1976ஆம் ஆண்டிலிருந்து, இத்திட்டம் முழுமையான திட்டப் பணியாக, அதிகப்படியான நிதி ஒதுக்கத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ரூ. 3 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை முழு அளவில் காலத்திற்கேற்ப நவீனப்படுத்துவதற்கான தெளிவமைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது.

14. பழைய காவிரிக் கால்வாய்கள், பவானி மற்றும் அமராவதித் திட்டங்களுக்கு மேம்பாடுகள் செய்வதும் அரசின் கவனத்தை ஈர்த்துள்ளது.

15. முறையாக ஆய்வு செய்யப்பட்டு அனுமதி அளிக்கப்பட்ட திட்டங்களை நியாயமான கால அளவிற்குள் முடிப்பதை உறுதி செய்வதற்குப் போதிய முதலீட்டிற்கு நிதி ஒதுக்கம் செய்வதுதான் எந்த மேம்பாட்டுத் திட்டத்திற்கும் நோக்கமாகும். ஆண்டுச் செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யாத பல திட்டங்களுக்கு அனுமதி அளித்தலும், விரிவான ஆய்வுகளைக்கூட செய்யாது பல திட்டங்களுக்குக் கொள்கையளவில் அனுமதி அளித்தலும், முன்பு ஏற்பட்டதைப் போல, நல்ல பலனைத் தரா. பாலாறு பொரந்தலாறு, கொடகனறு. மருதா நதி போன்ற நான்காவது திட்டத்திலேயே அனுமதிக்கப்பட்ட திட்டங்கள், முன்பு போதுமான அளவு நிதி ஒதுககம் செய்யப்படாத காரணத்தால் இன்னும் முடிக்கப்படாமல் உள்ளன. திட்டத்திற்கு அனுமதி அளிக்கப்பட்ட பிறகு சுமார் மூன்று ஆண்டுகளுக்குள் நடுத்தரப் பாசனத் திட்டம் ஒன்றை முடிக்க வேண்டுமென்பது நமது முயற்சியாக இருக்க வேண்டும். தேவையான நிதி ஒதுக்கம் செய்யப்படும். பணி மேற்கொள்ளவேண்டிய திட்டம் முறையாக அமைக்கப்படும். பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் வெள்ளக் கட்டுப்பாடு ஆகியவற்றிற்கு, 1975-76-ல் ரூ. 11.9 கோடி மட்டுமே நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருந்தது. இது தற்போது ரூ. 24.73 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள்.

16. அதிக நிதி ஒதுக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு வரும் 11 நடுத்தரப் பாசனத் திட்டங்களில் கீழ்க்கண்ட ஏழு திட்டங்களை இவ்வாண்டில் செய்து முடிப்பதற்கு நாம் திட்டமிட்டுள்ளோம். இவ்வாண்டு 35,000 ஏக்கர் நிலம் புதிதாக பாசனம் பெறும்.

(i) மருதா நதி

(ii) கொடகனறு

(iii) வறட்டுப் பள்ளம்

(iv) குண்டேரிப் பள்ளம்

(v) வட்டமலைக்கரை ஓடை நீர்த் தேக்கம்

(vi) வரதமாநதி

(vii) P.T. ராஜன் கால்வாய்.

17. மேல் அணைக்கட்டில் காவிரியாற்றுப் பகுதியின் குறுக்கே வெள்ளக்கட்டுப்பாடு பணியாக தடுப்பு அணை கட்டும் பணி கிட்டத்தட்ட முடிவடைந்துள்ளது. இத் திட்டத்தின் செலவு ரூ. 425 இலட்சமாகும்.

18. வட ஆற்காடு மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத் தோப்பில் கமண்டலாற்றின் குறுக்கே நீர்த் தேக்கம் கட்டுவதற்கான திட்டம் ஒன்று நடப்பாண்டில் மேற்கொள்ளப்படவிருக்கிறது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுச் செலவு ரூ. 355 இலட்சமாகும். இத்திட்டத்தின் மூலம் 1,692 ஏக்கர் நிலம் புதிதாகப் பாசனம் பெறும். மேலும், ஏற்கெனவே பாசனம் பெறும் 10,386 ஏக்கர் நிலம் இத் திட்டத்தின் மூலம் இடையறுப்பாசனம் பெறும்.

19. விரிவான ஆய்வு நடந்துவருவதையும் விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருவதையும் எதிர்நோக்கி, 1975-76 ஆம் ஆண்டில் பல நடுத்தரப் பாசனத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. இத் திட்டங்கள் தற்போது ஆய்வில் உள்ளன. பொருளாதார, தொழில் நுட்ப சாத்திய நிபந்தனைக்குட்பட்டு இவற்றிற்கு அனுமதி வழங்கப்படும்.

சிறப்புச் சிறுபாசனத் திட்டம்:

20. இம்மாநிலத்தின் வறட்சிப் பாங்கான மாவட்டங்களில் ஏரிப் பாசனம் முக்கிய இடம் பெறுகிறது. சில நூறு ஏக்கர் பரப்பளவு வரை சிறு நிலப்பகுதிகளுக்குப் பாசன வசதி அளிப்பதற்கென்று காட்டாற்று வெள்ளத்திற்கும் திடீர் வெள்ளத்திற்கும் தடைபோட்டு நீரைத் தேக்க சிறு பாசனப் பணிகள் மேற்கொள்ளுதல், நிலநீர் மட்டத்தை வலுப்படுத்தவும் தற்போது பாசனம் பெற்று வரும் நிலங்களுக்குத் தொடர்ந்து பாசன வசதி அளிப்பதுடன் சிறிய பாசன விஸ்தரிப்பு அமைப்புகளை ஏற்படுத்தவும், புதிய ஏரிகளையும் கசிவு நீர்க் குட்டைகளையும் அமைத்தல் ஆகியவை இம்மாநிலத்தில் நீர்வளப்பற்றுக்குறைப் பிரச்சினையில் ஏற்பட்டுள்ள இடையூறுகளைக் களைய நாம் மேற்கொண்டுள்ள திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும். இத்திட்டத்தில் சாத்தியக் கூறுகள் வரையறுத்த அளவுக்கே உள்ளன. மென்மேலும் கூடுதலான பாசன வசதிகள் பெற, நீரை உரிய அளவுக்கே பயன்படுத்துவதில் மாநில அரசு தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும்.

21. சிறப்பு சிறுபாசனத் திட்டத்தை மதிப்பாய்வு செய்ததில், தொழில்நுட்ப, பொருளாதார குறைபாடுகள் இருப்பதாக தெரிய வந்துள்ளது. இந்தக் குறைபாடுகள் இத்தகைய

திட்டங்களினுல் ஏற்படும் உற்பத்தித் திறனளவைணி க சமான அளவிற்குப் பாதித்துள்ளது. இந்தத் திட்டங்களுக்கு நாம் செய்யும் முதலீடுகள் ஆதாய மிக்கவையாக இருக்க வேண்டும். திட்டங்கள் நீரியல் வகையில் நம்பத்தக்கவையாகவும் இருக்க வேண்டும். திட்டப்பணிகள் உரிய காலத்தில் முடிக்கப்படுமாறு பணிகளை நெறிப்படுத்த வேண்டியதாகவும் உள்ளது. திட்டத்திற்காகும் செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டியுள்ளன. பாசனத் திட்டங்களினுல் ஏற்படும் நீர்வளம் அதன் வளர்ச்சியும் பயன்படுத்தும் முறையும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

22. இத்தகைய பிரச்சினைகளை ஆழ்ந்து ஆராய்ந்து செயல் திட்டத்தை வகுப்பதற்காக அமைக்கப்பட்ட பணிக் குழுவின் பரிவுரைகளைக் கருத்தில் கொண்டு, இந்த சிறு பாசனத்திட்டத்திற்கு இயல்பான சிறப்பும் பயன்முறையும் அளிக்க அரசு கருதியுள்ளது. உபரி நீர் அளவை தீர்மானிப்பதற்காக நீர்ப்படுகை வாரியாக முறையான ஆய்வுகள் நிறைவேற்றப்படும். பயன்படுத்தப்பட வேண்டிய கூடுதல் நீரளவுக்கான ஆண்டு திட்ட இலக்குகள், முடிக்கப்பட வேண்டிய திட்டப் பணிகள், பாசனம் பெறும் புதிய பகுதி ஆகியவை யாவும் திட்டமிட்டு வகுக்கப்படும். பொருளாதார சாத்தியக் கூறுகளை நிர்ணயிக்கும் அளவு கோல்களை மாற்றியமைக்கும் திட்டமும் பரிசீலனையில் உள்ளது. பின்தங்கிய பகுதிகளுக்கும், வறட்சியினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கும் இவ்விதிகளைத் தளர்த்துவதற்கான ஏற்பாடும் செய்யப்படும். இத் திட்டப்பணிகள் பெரும்பாலும் சுமார் இரண்டாண்டு கால அளவுக்குள் முடிப்பதற்கும் முயற்சி எடுத்துக் கொள்ளப்படும். 1975-76, 1976-77 ஆண்டு ஒவ்வொன்றுக்கும் ரூ. 350 இலட்சம் ஒதுக்கியதற்கு மாருக, இவ்வாண்டில் சிறப்பு சிறு பாசனத் திட்டப் பணிகளுக்கு ரூ. 450 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக இழு பறியாக இருந்து வரும் எஞ்சிய திட்டங்கள் இவ்வாண்டில் முடிக்கப்படக்கூடும்.

சிறுபாசன அமைப்புக்களை காலத்திற்கேற்றவாறு மாற்றியமைத்தல் மற்றும் புதுப்பித்தல்.

23. ஏரிப்பாசன அமைப்புக்களின் கீழ்வரும் ஆயக்கட்டுகளைக் காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கும் பணி இப்போது எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது. இது வெகுகாலத்திற்கு முன்னமேயே எடுத்துக் கொள்ளப்பட்டிருக்க வேண்டும். தென்னுர்க்காடு மாவட்டத்தில் வீராணம் ஏரியைச் சேர்ந்த ஆயக்கட்டின் ஒரு பகுதியை காலத்திற்கேற்றவாறு மாற்றியமைக்கும் முன்னேடித் திட்டம் இவ்வாண்டில் ரூ. 10 இலட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஏரிப் படுகையை தூர்வாரி பண்படுத்துவதன் மூலம் ஏரியின் கொள்ளளவை சீரமைத்தல், கிளைவாய்க்கால்களில் நீரை முறைப்படுத்தியனுப்பும் பொறி மதகுகள் அமைத்தல், நீர்க்கசிவு பகுதிகளில் கரையமைத்தல், பாசன வடிகால் வாய்க்கால்களுக்கு சீரமைப்புப் பணிகள் இவற்றுக்கான பெரும் திட்டம் ஒன்றை வகுக்கவும் கருதியுள்ளது. பழைய ஏரிப் பாசன ஏற்பாடுகளின்கீழ் நீர்வசதியைப் பெருக்கவும் புதிய பகுதிகளைப் பாசனத்தின் கீழ் கொண்டுவரவும் இது உதவியாக இருக்கும்.

பாசன வாயில்களைப் பராமரித்தல்.

24. புதிய பாசனத் திட்டங்களைத் தொடங்கி, புதிய பாசன வளத்தை உருவாக்குவதன் மூலம் கிட்டிய நன்மையானது நிலையான உறுதியான பாசன வாயில்களை புறக்கணித்ததன் காரணமாக, வீணுகும் கட்டத்தில் இருந்தது. குறிப்பாக, முறைப்படுத்தப்படாத ஏற்பாட்டின்கீழ் வரும் பாசன வாயில் குறித்து எவ்வித சிரத்தையும் காட்டப்படவில்லை. சிறுபாசன வாயில்களைப் பழுதுப்பார்ப்பதற்கென மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமாக, விரைவுபடுத்தப்பட்ட சிறுபாசனத் திட்டம் 1974-ல் தொடங்கப்பட்டது. விரைவு படுத்தப்பட்ட சிறு பாசனத்திற்கென செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் மொத்தத்தில் போதுமானவையாக இல்லை. பாசன வாயில்கள் தனிப்பட்ட முறையில் பழுது பார்க்கப்படுவதற்கென எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. சிறு பழுது பார்ப்புப் பணிகளுக்கு ஒப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

25. சிறு பாசனத் திட்டத்தை ஒருங்கிணைந்த முறையில் ஆய்வு செய்வதற்கு அரசினுல் அமைக்கப்பட்ட பணிக்குழுவின் பரிவுரைகளின் அடிப்படையில் மாநிலம் முழுவதும் வடிநிலம் வாரியாக, பாசன ஏற்பாடுகள் பராமரிப்புக்காக, விரிவான வழி முறைகள், நடைமுறைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றை வகுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போதுள்ள பாசன வாயில்கள் குறித்த விவர அட்டவணை ஒன்று தயாரிக்கப்பட்டு, வரிசைக்கிரமமாக ஆண்டுதோறும் என்னென்ன பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்வது என்பது குறித்த பட்டியல் ஒன்றும் தயாரிக்கப்படும். வழக்கமான பராமரிப்புப் பழுது பார்ப்புப் பணிகளுக்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடுகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளன. பாசன ஏற்பாடுகளைப் பாதுகாப்பது மட்டுமன்றி அவற்றைப் பேணி வரச் செய்வதும் முக்கியமான அம்சங்கள் என்ற வகையில் முன்னெச்சரிக்கை பராமரிப்புப் பணி என்னும் கோட்பாட்டை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. அத்தகைய பழுதுபார்ப்புப் பணிகள் உடல் உழைப்பை முக்கியமாகக் கொண்டவை. இந்த பழுது பார்ப்புப் பணியில் பெருமளவு மண் வேலையாகும்; இதன் மூலம், கோடைக் காலத்தில் உள்ளூர் மக்களுக்கு ஆதாயமான, ஆக்கபூர்வமான வேலை வாய்ப்பளிக்கும் பெருந்திட்டமொன்

றைச் செயல்படுத்தும் வாய்ப்புக் கிட்டுகிறது. ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியன்று பழுதுபார்ப்புப் பணிகளை தொடங்கலாம். இதனால் உள்ளூர் வாசிகள் தங்களுக்கு வேலையற்ற நாட்களில் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். நிலப்படை ஒன்றை அமைப்பதன் மூலம் கோடைக்கால வேலை வாய்ப்புகள் விரிவுப்படுத்தப்படும் என்று அரசு அறிவித்துள்ளது. பாசன வாயில்கள் பராமரிப்புப் பணி இத்திட்டத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

இயந்திரங்களின் உயர்ந்தபட்ச உபயோகம்.

26. பொதுப் பணித் துறையில் 193 வகையான கனரக இயந்திரங்களும் மண்வாரிச் சாதனங்களும் உள்ளன. ஏரிகளைத் தூர்வாரி சீரமைக்கும் உபயோகத்திற்காக, இவற்றில் சில இயந்திரங்கள், சென்னையிலுள்ள தூர்வாருதல்—சீரமைத்தல் கோட்டத்தில் உள்ளன. சாதனங்களில் பெரும்பாலானவை இம்மாநிலம் முழுவதுமுள்ள வெவ்வேறு திட்டப்பகுதிகளில் சிதறிக் கிடக்கின்றன. திட்டத்துடன் இணைந்த இயந்திரப் பிரிவு ஒவ்வொன்றும், இயக்குதல், பழுதுபார்த்தல், பண்டக சாலைகள், பணியாளரமைப்பு ஆகிய வகைகளில் தன்னிச்சையான ஓர் அமைப்பாகும்.

27. தற்போது சாதனங்கள் முழு அளவில் உபயோகிக்கப் படாமல் கிடக்கின்றன. அவற்றின் உபயோகம், இயக்கம், பராமரிப்பு ஆகியவை குறித்த ஏற்பாடுகள் திருப்திகரமாக இல்லை. சரக்குப் பட்டியலும் உபரிகளும் இரட்டிக்கப்படுகின்றன. பராமரிப்பு அலட்சியப்படுத்தப்படுகிறது. ஒரு திட்டப் பணி முடிந்ததும் இயந்திரத்தை அகற்றுவது அல்லது மீண்டும் உபயோகிப்பது குறித்து உடனடியாகக் கவனிக்கப் படுவதில்லை.

28. கனரக இயந்திரங்கள், மண்வாரி இயந்திரங்கள் அனைத்தையும் பொதுப்பணித் துறையுடன் இணைந்த மத்திய இயந்திரங்கள் அமைப்பு ஒன்றின் பொறுப்பின் கீழ் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. இனிமேல் இந்நிறுவனம் ஒரே இடத்தில் இயந்திரங்களையும் மண்வாரி இயந்திரங்களையும் வாங்கி, பொறுப்பில் வைத்து, பராமரித்து, இயக்கச் செய்யும். இதற்கென்று இயந்திர வல்லுநர் தர அமைப்பொன்று அமைக்கப்படும். மைய அமைப்பாக்கப்பட்ட, தகுதி வாய்ந்ததொருஅமைப்பின் உதவியினால், தற்போது ஒவ்வோராண்டும் 17,000 யூனிட்டுகள் என்ற அளவில் நடைபெற்று வரும் மண் வேலைகளின் அளவு சுமார் 90,000 யூனிட்டுகளாக உயரும். ஏரிக்கரைகளைப் பராமரித்தல்—சீரமைத்தல் குறித்த முறையான பெருந்திட்டமொன்றுக்குத் தேவையான இயந்திர வசதிகளைப் பெற இந்த ஏற்பாடு உதவும்; வருமாண்டுகளில், இதற்கென்று வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட வேண்டியுள்ளது. இச் செயற் குறிப்புகள், மூலதன உடைமைகள் முழு

அளவில் பயன்படுத்தப்படுவதற்கும், குறைந்த அளவு சாதனத் தேவைகளுக்கு வகை செய்வதற்கும் உதவியாக இருக்கும் வகையில், நம்பிக்கைக்குரிய, திறமையானதொரு இயந்திரப் பொறியியல் அமைப்பொன்று உருவாக வழி செய்யும். இதன் மூலம், இது நாள் வரை தொன்றுதொட்டு பழைய நடைமுறையில் செயல் பட்டு வந்த பொதுப் பணித்துறை ஒரு புதிய உருப்பெற இயலும்.

திட்டங்களைக் கவனித்தல்.

29. செயற்படுத்தப்பட்டுவரும் பெரிய, நடுத்தர நீர்ப் பாசனத் திட்டங்களின் முன்னேற்றத்தைக் கவனித்து அவற்றை உரிய காலத்தில் முடிப்பதற்கு உதவி செய்ய பொதுப்பணித் துறையில் தனிக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கு நோக்கிச் செல்லும் ஆறுகளைத் திருப்பிவிடுதல்.

30. நம் மாநிலத்திற்கு வெளியே, உபரியாக நீருள்ள ஆற்று படுகைகளிலிருந்து நீரை நமது மாநிலத்திற்குத் திருப்பி விடுவதனால் மட்டுமே இனி இம்மாநிலத்தில் பெரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்ற முடியும். இதற்கு எடுத்துக்காட்டாக 19 ஆம் நூற்றாண்டில் முடிக்கப்பட்ட பெரியாறு திட்டம் அண்மை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டம் ஆகியவற்றைக் கூறலாம். இந்த அரசு, பரஸ்பர ஒத்துழைப்பு, நல்ல எண்ணம் ஆகியவற்றின் அடிப்படையில் அண்டை மாநிலங்களுடன் இருசாராரும் பயனுறும் வகையில் உறவு வைத்துக் கொள்ளப்பாடுபடும்.

31. கேரளத்தில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளில் போதுமான அளவு உபரி நீர் இருந்தும், அந்நீர் பெரிதும் பயன்படுத்தப் பெறுமலேயே அரபிக் கடலில் சென்று கலக்கின்றது. இந்த உபரி நீரின் ஒரு பகுதி பயனுள்ள முறையில் கிழக்கு முகமாகத் திருப்பப்பட்டால், தமிழ்நாட்டில் திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களின் வறண்ட பகுதிகள் நீர்ப்பாசன வசதி பெறக்கூடும். அதே சமயம் பாசன, மின்சார உற்பத்தித் திட்டங்களினால் கேரள மாநிலமும் பயனடையலாம். கேரள மாநிலத்திலுள்ள கீழ்க்காணும் ஆறுகளிலிருந்து சுமார் 8,200 கோடி கன அடி நீரை தமிழ்நாட்டிற்குள் திருப்பி விட முடியுமென்று இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

(i) பாண்டியாறு—புன்னப்புழா—மோயாறு.
(ii) சோழத்திப்புழா.
(iii) பங்கி ஹல்லா.
(iv) ஆனமலையாறு.
(v) இடுக்கி—கல்லாறு.
(vi) பாம்பாறு.
(vii) அச்சன் கோயிலாறு.
(viii) கல்லடா—அத்திங்கள்—கர்ணமாறு.

32. 1976, டிசம்பர் திங்களில் மத்திய அரசு, கேரளம், கருநாடகம் ஆகிய மாநிலங்களில் மேற்காகப் பாயும் ஆறுகளின் உபரி நீரைக் கிழக்கு முகமாகத் திருப்புவதற்கான வாய்ப்பு பற்றி விரிவாக ஆராய தொழில் நுட்பக் குழுவொன்றை நியமித்தது. இக் குழுவில், தமிழ்நாடு, கேரளம், கருநாடகம் ஆகிய மூன்று மாநிலங்களின் தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். மத்திய நீர் ஆணைக் குழுவின் உறுப்பினர் இதன் அமைப்பாளராவார். மத்திய நீர் ஆணைக்குழுவின் இயக்குநர் இதன் செயலாளர் ஆவார். இக்குழுவின் ஆய்வு வரம்பு பற்றி பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி மத்திய அரசுக்கு வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

சன்னை மாநகருக்கு கிருஷ்ணா ஆற்று நீர் வழங்குதல்.

33. மகாராட்டிரம், ஆந்திரப் பிரதேசம், கருநாடகம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றும் கிருஷ்ணா ஆற்று நீரில் தங்களுக்குக் கிடைக்கும் பங்கிலிருந்து 500 கோடி கன அடி நீரை 14—4—1976 அன்று செய்து கொண்ட முறையான ஒப்பந்தத்தின்கீழ் சென்னை மாநகர குடிநீர் தேவைக்குத் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளன. இத்திட்டம் பற்றிய விரிவான விவரங்களைத் தயாரிக்க அதிகாரிகள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. சுமார் 145 கோடி ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் ஸ்ரீசைலத்திலிருந்து பூண்டி நீர்த்தேக்கத்திற்குத் திறந்த கால்வாய் மூலம் தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்தின் தொடக்க அறிக்கையை தமிழக அரசு ஏற்கனவே அனுப்பியுள்ளது. மகாராட்டிரம், கருநாடக மாநில அரசுகள், நீர்வரும் வழி முழுவதும் மூடப்பட்ட கால்வாய் மூலம் நீர் வழங்குவதற்கான மாற்றுச் செயற் குறிப்புகளைக் கொடுத்துள்ளன. திறந்த கால்வாயில் நீர் விடப்படும் நேர்வில், இக்கால்வாயின் நீர் ஆந்திரப் பிரதேசத்தில் பாசனத்திற்குப் பயன்படுத்தப்படக் கூடாது என்ற உறுதியை இந்த இரு மாநிலங்களும் கோருகின்றன.

34. சென்னை மாநகரின் அதிகமான நீர்த் தேவையைக் கருத்தில் கொண்டு, இப்பிரச்சினைக்குக் கூடிய விரைவில் தீர்வுகாண மத்திய அரசுடன் தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது. ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளவும் இத்திட்டத்திற்கு விரைவில் ஒப்புதல் பெறவும் இவ்வரசு முயற்சி செய்யும்.

காவிரி நீர்ப் பிரச்சினை.

35. 1976 ஆம் ஆண்டு ஆகஸ்டு, திங்களில் மாநிலங்களுக்கிடையே நடைப்பெற்ற பேச்சுவார்த்தையின் போது காவிரி நீர்ப் பிரச்சினையில் ஏற்படும் ஓர் ஒப்பந்தமானது,

ஆற்றுப்படுகையில், தற்போதுள்ள பாசனப் பகுதிகளுக்கு, இயல்பான ஓர் ஆண்டில் தேவைப்படும் நீரை வழங்க உத்தரவாதம் அளிப்பதாக இருக்கவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டது. தற்போதுள்ள பாசனப் பகுதிகளைப் பாதுகாக்கும் திட்டமொன்றை உருவாக்க, மத்திய நீர் ஆணைக் குழு உறுப்பினரின் தலைமையின்கீழ், மூன்று மாநிலங்களின் தொழில்நுட்ப அதிகாரிகள் அடங்கிய குழுவொன்றை, மத்திய அரசு அமைத்துள்ளது.

அமைக்கக் கருதியுள்ள காவிரிப் பள்ளதாக்கு அதிகார மன்றத்திற்கான வரைவு அமைப்பினை வகுக்கும் பொருட்டு மூன்று மாநில அரசுகளைச் சேர்ந்த பொதுப் பணித்துறைச் செயலாளர்கள், மத்திய நீர் ஆணைக் குழுவின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய மற்றொரு குழு அமைக்கப்பட்டுள்ளது. காவிரி நீர்ப் பங்கீடு செய்வது குறித்தத் திட்டம் எதிலும், ஏற்கெனவே உள்ள பாசனப் பகுதிகளுக்கு முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதனைத் தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளது.

36. இப்பிரச்சினை குறித்து நீண்ட கால ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ளப்படும் வரை, வேளாண்மைக்கான உடனடித் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் போதுமான அளவு நீர் அணையிலிருந்து திறந்து விடப்படுவதை உறுதி செய்யப்படவேண்டும். 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நீர் வழங்குவதை கருநாடக அரசு 1974 ஆகஸ்டு முதல் முறைப்படுத்தவில்லை. 1976—77 ஆம் ஆண்டில், காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதியில் பாதகமான பருவநிலை காரணமாகவும் கருநாடக அரசு நீரைத்தேக்கி வைத்ததாலும் மேட்டூர் அணைக்கு நீர் வருவதில் கடும் பற்றாக்குறை நிலவியது. கல்லணைக் கால்வாய், மேட்டூர் கால்வாய்கள், புதிய கட்டளை உயர் மட்டக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய் ஆகியவற்றைப் பாசனத்திற்காகத் திறந்துவிட இயலவில்லை. நடப்பாண்டு இயல்பாக அமையும் என்பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. மேட்டூர் நீர்தேக்கம் ஜூலை திங்கள் 15 ஆம் நாளன்று திறந்துவிடப்பட்டது. தமிழ்நாடு, கருநாடகம் ஆகிய மாநிலங்களுக்கிடையே பரஸ்பரம் ஒருவருக்கொருவர் நன்கு புரிந்துகொண்டு உதவி செய்யும் நல்லெண்ணம் காரணமாக நாம் போதுமான அளவு நீர் பெற முடிந்தது. இந்நல்லெண்ணத்தை மேலும் மேலும் வளர்ப்பதே இவ்வரசின் முயற்சியாக இருக்கும்.

வெள்ளம்

37. 1976-ம் ஆண்டு நவம்பர்-டிசம்பர் திங்களில், சென்னை மாநகர் வரலாறு காணாத வகையில் வெள்ளத்திற்குள்ளானது. இப் பெருவெள்ளம் காரணமாக சொத்துக்களுக்கு அதிக சேதம் ஏற்பட்டதுடன் மக்கள் சொல்லொண்ணாத் துன்பத்திற்கு ஆளாயினர். இப்பெருவெள்ளத்திற்கான காரணங்களை ஆய்வு

செய்யவும் இத்தகைய கொடிய நிலைமை மீண்டும் ஏற்படாமல் தடுப்பதற்கான வழிவகைகள்குறித்து பரிவுரைகள் செய்யவும் குழுக்கள் அமைக்கப்பட்டன. இக்குழுக்களின் அறிக்கைகள் அரசுக்கு இப்போது வந்துள்ளன. அரசு, இக்குழுக்களின் பரிவுரைகளைச் செயற்படுத்துவது பற்றி உரியவாறு பரிசீலனை செய்யவும்.

கட்டிடங்கள்.

38. தமிழ்நாடு மாநிலத்தில் அரசுக் கட்டிடப் பணிகள் அனைத்தையும் நிறைவேற்றும் முக்கியப் பொறுப்பு பொதுப் பணித்துறைக் கட்டிடப் பிரிவிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இவை தவிர, வரையறுக்கப்பட்டுள்ள சென்டேஜ் கட்டணத்தைச் செலுத்துவதின்பேரில், நகராட்சிகள் மாவட்ட விற்பனைச் சங்கங்கள் மற்றும் அரசு சார்ந்த ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான சில ஒப்படைப் பணிகளும் இப்பிரிவினால் நிறைவேற்றபடுகின்றன. இந்திய அரசு சார்பில், தொழிலாளர் காப்புறுதித் திட்டங்கள், தொலைக் காட்சிக் கூடங்கள் இவைபோன்ற யாவும், பொதுப்பணித் துறையால் நிறைவேற்றப் பட்டன. ஆய்வு மாளிகைகள், சுற்றுப் பயண இல்லங்கள் முதலியன யாவும் பொதுப் பணித் துறையின் பொறுப்பில் உள்ளன. மொத்தம் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் தருமபுரியில் புதிய சுற்றுப்பயண இல்லம் கட்டுதல், பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறியாளர் அலுவலக வளாகத்தினுள் கூடுதல் அலுவலகக் கட்டிடங்கள் கட்டுதல், செங்கற்பட்டு மாவட்டம் மேற்பார்வை பொறியாளருக்கான அலுவலகக் கட்டிடம் ஒன்று கட்டுதல் ஆகிய பணிகளை இந்த ஆண்டில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

பணிபுரியும் பொறியாளர்கள் பட்ட மேற்படிப்புப் பயிலுவதற்கான வசதிகள் :

39. தமிழ்நாட்டுப் பொறியாளர்கள் ஆற்றலில் இந் நாட்டிலுள்ள எவருக்கும் சளைத்தவர்களல்ல. 1976-ம் ஆண்டின், பெரு வெள்ளம் போன்ற உயிர், உடைமைகளைக் காக்கவேண்டி அவசரம் மற்றும் இக்கட்டான நிலைமைகளில் அவர்களின் திறமையின் உயர் தரத்தினை காணமுடிகிறது. பணியில் உள்ள போதே அவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கான வாய்ப்புக்கள், அவர்களுடைய திறமையினை மிகுதிப் படுத்துவதற்காக அமையும். நடப்பாண்டில், பொதுப் பணித் துறையைச் சேர்ந்த ஐந்து உதவி நிர்வாகப் பொறியாளர்கள், மூன்று உதவிப் பொறியாளர்கள், மேலும் நெடுஞ்சாலை-கிராமப் பணிகள் துறையைச் சேர்ந்த இரண்டு உதவிக் கோட்டப்பொறியாளர்கள், இரண்டு உதவிப் பொறியாளர்கள் ஆகியோரை அரசுச் செலவில் பட்ட மேற்படிப்புப் பயிலும் பொருட்டு, அனுப்பி வைக்க அரசு திட்டமிட்டுள்ளது. பொறியியல் துறைக்கு திறமையான தொழில் நுட்பப் பணியாளர்கள் அச்சாணிப் போன்றவர் ஆவர்.

[916ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள் கட்டிடங்கள்.

ஆய்வுரை.

முகவுரை :

மாநில அரசுத் துறைகளின் தேவைக்கேற்பத் திட்டம் தீட்டி வடிவமைத்துக் கட்டிடம் கட்டுவது பொதுப் பணித் துறையிலுள்ள கட்டிடப் பிரிவின் பொறுப்பாகும். இவற்றைத் தவிர மத்திய அரசுத் துறைக்காகவும், அரசு பங்கு பெற்ற நிறுவனங்களுக்காகவும் முகவராகச் செயல்பட்டு, அக்கட்டிடப் பணிகளை இப்பிரிவு நிறை வேற்றித் தருகிறது. மாநில அரசுக் கட்டிடங்களைப் பேணி வரும் பொறுப்பும் கட்டிடப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

2. 37-வது கோரிக்கை ஒரு இலட்சம் ரூபாய் வரை மதிப்புள்ள கட்டிட வேலைகள் அனைத்தையும் கொண்டதாகும். மத்திய உதவி பெறும் திட்டங்களுக்கும் கிடைக்கின்ற மத்திய நிதி உதவியைக் கணக்கில்கொண்டு இவற்றிற்கு ஆகும் செலவுத் தொகை 'மூலதனக்' கணக்கில் இருந்து 'வருவாய்க்' கணக்கிற்கு எடுத்தெழுதப்படுகின்றன. பொதுப் பணித் துறையின் பொறுப்பிலுள்ள கட்டிடங்களைப் பேணி வருவதற்கு ஆகும் செலவும், அவற்றிற்குரிய சொத்து வரியும், இக் கோரிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளன. இத் தலைப்பின் கீழ் 1976-77 ஆம் ஆண்டிற்கு புதிய கட்டிட வேலைகளுக்காக ரூ. 56.84 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. ரூபாய் 1.00 இலட்சத்திற்கு மேல் செலவாகும் பெரும் கட்டிடங்களைப் பொறுத்தவரை 1976-77 ஆம் ஆண்டிற்கு மூலதனத் திட்டச் செலவின் கீழ் ரூ. 8,59.76 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

3. '' 259. மராமத்துக்கள் '' என்ற தலைப்பில் 1976-77 ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 1,32.60 இலட்சம். இது கட்டிடங்களைப் பேணுதல், செலவு, சிறப்புச் செப்பனிடுதல், சொத்து வரி செலுத்துதல் ஆகியவற்றிற்குரியதாகும்.

'' 283. குடியிருப்பு '' என்ற தலைப்பில் 1976-77ஆம் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 53.50 இலட்சம் அரசு குடியிருப்புகளைப் பராமரிப்பதற்குரியதாகும்.

4. பல்வேறு துறைகளைச் சேர்ந்த கட்டிட வேலைகளின் விவரங்கள் வருமாறு :

மருத்துவம்.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.

		(ரூ. இலட்சத்தில்.)
1	கலைஞர் கருணாநிதி நகரில் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டுதல் ..	24·20
2	மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் கண் சேமிப்பு வங்கிக்காக பல மாடிகள் கொண்ட கட்டிடம் கட்டுதல்	6·05
3	இராஜபாளையத்தில் 100 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை கட்டுதல். ..	13.00
4	விருத்தாசலத்தில் 24 படுக்கை வசதிகள் கொண்ட பகுதி கட்டுதல்	2.00
5	தஞ்சாவூரில் உணவு பரிசோதனை ஆய்வுக் கூடம் கட்டுதல்	2.50
6	சென்னை அரும்பாக்கம் அறிஞர் அண்ணா சித்த வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் மேல் 2ஆம் தளம், 3ஆம் தளம் கட்டுதல் ..	3.90
7	சங்கரன்கோவில் 40 படுக்கை வசதி கொண்ட கட்டிடப் பகுதி கட்டுதல் ..	2.75
8	சென்னை தேனாம்பேட்டையில் மருந்து பரிசோதனைக் கட்டிடம் கட்டுதல் ..	5.00
9	சென்னை கஸ்தூரிபாய் அரசு மருத்துவ மனையில் இரண்டாம் தளத்தில் அறுவை சிகிச்சைக்கான கட்டிடம் கட்டுதல் ..	2.65
10	மதுரை பாலரெங்காபுரத்தில் புதிய மருத்துவமனை கட்டுதல்	14.20
11	பரமக்குடியில் 24 படுக்கை கொண்ட அரசு மருத்துவமனை கட்டுதல்	5.00
12	திருவில்லிபுத்தூரில் 24 படுக்கை வசதிகள் கொண்ட பகுதி கட்டுதல்	1·75

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.

		(ரூபாய் இலட்சத்தில்)
1	அரசு பொது மருத்துவமனையில் பல மாடிக் கட்டிடம் கட்டுதல்	61.00
2	சென்னை தண்டையார்பேட்டையில் அரசு மருத்துவமனை கட்டுதல்	19.50
3	சென்னை அறிஞர் அண்ணா நகரில் அரசு மருத்துவமனை கட்டுதல்	18.70
4	சென்னை கலைஞர் கருணாநிதி நகரில் செயற்கை உறுப்புக்கள் தயாரிப்பு நிலையம் கட்டுதல்	23.00
5	சென்னை கலைஞர் கருணாநிதி நகர் மருத்துவ மனையில் நீராவி சலவைச் சாலை கட்டுதல்	3.56
6	சென்னை தண்டையார்பேட்டை அரசு மருத்துவமனையில் சாய்வுப் பாதை அமைத்தல்	1.04
7	சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் புற்றுநோய் கட்டிடம் கட்டுதல்	11.02
8	சென்னை குழந்தை மருத்துவமனையில் நீராவி சலவைச் சாலைக்காக கூடுதல் கட்டிடம் கட்டுதல்	6.25
9	சென்னை தாய்-சேய் நல மருத்துவமனையில் 150 படுக்கை கொண்ட இரண்டு மாடிக் கட்டிடம் கட்டுதல்	11.55
10	சென்னை அரசு பொது மருத்துவமனையில் சிற்றுண்டிச் சாலைக்காக கூடுதல் கட்டிடம் கட்டுதல்	4.00
11	சென்னை அரும்பாக்கம் அறிஞர் அண்ணா அரசினர் இந்திய முறையில் மருந்தாக்கியல் தகுதி பட்டயப் படிப்பைத் தொடங்குவதற்காகத் தனிக் கட்டிடம் கட்டுதல்	3.68

[1977 ஆகஸ்ட் 19

	(ரூபாய் இலட்சத்தில்.)
12 காஞ்சிபுரம் அருகில் கரியப்பட்டி கிராமத்தில் 100 படுக்கை கொண்ட புற்று நோய் மருத்துவமனை கட்டுதல்	33·92
13 காஞ்சிபுரம் அருகில் கரியப்பட்டி கிராமத்தில் உள்ள புற்று நோய் மருத்துவ மனையில் கூடுதலாக 150 படுக்கை வசதி கொண்ட பகுதி கட்டுதல்	17 00
14 சென்னை தேனாம்பேட்டையில் மருந்து பரிசோதனை கட்டிடத்தின் மீது 2 மாடிகள் கட்டுதல்	7.00
15 செங்கை மாவட்டம் செய்யாறில் அரசு மருந்தகத்தில் 20 படுக்கை வசதி கொண்ட பகுதி கட்டுதல்	2.15
16 சென்னை பூந்தமல்லியில் உள்ள பொதுச் சுகாதார நிறுவனத்திலுள்ள கிராமப்புற சுகாதார மையத்தில் சுகாதார பிரிவிற்கும் மகப்பேறு இல்லத்திற்கும் கட்டிடங்கள் கட்டுதல்	7.83
17 சென்னை மருத்துவக் கல்லூரியில் மின் அணு மைக்ராஸ்கோப் ஆய்வுக்கூடம் கட்டுதல்	1·64
18 மதுரை எர்ஸ்கின் மருத்துவ மனையில் குழந்தை நலக் கட்டிடம் கட்டுதல் ..	18.70
19 திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி அரசு மருத்துவ மனையில் புது பிரசவ விடுதியில் கூடுதல் பகுதி கட்டுதல்	4.80
20 பாளையங்கோட்டை சித்த மருத்துவமனை மருந்தகத்திற்காக கூடுதல் கட்டிடம் கட்டுதல்	3.80
21 பாளையங்கோட்டையில் புறநிலை நோயாளிகள் சிகிச்சைப் பிரிவுக்குக் கட்டிடம் கட்டுதல்	1.80
22 திருக்கோயிலூர் தொழுநோய்ப் பிரிவுக்குக் கூடுதல் கட்டிடம் கட்டுதல்	2.85

1977 ஆகஸ்ட் 19]

	(ரூ. இலட்சத்தில்.)
23 நாகர்கோவில் தலைமை மருந்துவ மனையில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்	20.00
24 நாகப்பட்டினம் மாவட்ட தலைமை மருத்துவ மனையில் கூடுதல் கட்டிடம் கட்டுதல்.	10.00
25 புதுக்கோட்டை அரசு தலைமை மருத்துவ மனையில் 198 படுக்கைகள் கொண்ட கூடுதல் பகுதி கட்டுதல்	10.50
26 மதுரை மாவட்டம் கம்பம் அரசு மருத்துவ மனையில் கூடுதல் கட்டிடம் கட்டுதல் ..	3.10
27 அறந்தாங்கி வட்டம், சுப்பிரமணியபுரத்தில் 24 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனை கட்டுதல்	4.50
28 மறவமங்கலத்தில் புதிய அரசு மருத்துவ மனை கட்டுதல்	1.50
29 சங்கரி அரசு மருத்துவ மனையில் 24 படுக்கை வசதி கொண்ட பகுதி கட்டுதல் ..	1.60
30 இராமேஸ்வரத்தில் 16 படுக்கை வசதி கொண்ட பகுதி கட்டுதல்	2.15
31 சேலத்தில் உணவு பரிசோதனைக் கூடம் கட்டுதல்	2.65
32 தஞ்சாவூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் அரசு மருந்தகத்தில் 8 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்	1.29
33 சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில் அறுவை சிகிச்சைப் பகுதி கட்டிடம் கட்டுதல்	15.00
34 செங்கை மருத்துவக் கல்லூரியில் 'பி-பார்மஸி' பகுதி கட்டிடம் கட்டுதல்	7.50
35 செங்கை மருத்துவ கல்லூரியில் தாய்-குழந்தை நலத்திற்காக கூடுதல் கட்டிடம் கட்டுதல்	3.60

[1977 ஆகஸ்ட் 19

	(ரூ. இலட்சத்தில்.)
36 தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் குழந்தை நல பகுதி கட்டுதல் ..	5.50
37 சிதம்பரம் 70 படுக்கை வசதி கொண்ட புதிய மருத்துவமனை	20.00
38 தர்மபுரியில் புதிய தலைமை மருத்துவ மனை கட்டுதல்	20.00
39 பாளையங்கோட்டையில் உணவு ஆய்வு கூடம் கட்டுதல்	2.40

கீழ்க்கண்ட கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்க இருக்கின்றன :—

1 சென்னை அரசு பொது மருந்துவ மனையில் கூடுதல் தண்ணீர் தேக்க கீழ்நிலைத் தொட்டி கட்டுதல்	1.25
2 செங்கல்பட்டு மருத்துவ கல்லூரியில் இரண்டு ஆழ்கிணறுகள் அமைத்தல் ..	1.00
3 தஞ்சை ராஜா மிராசுதார் மருத்துவ மனையில் சீரமைப்பு வேலைகள் செய்தல்.	4.10
4 மெலட்டூரில் (ஒருத்தநாடு வட்டம்) தொழு நோய் சிகிச்சை நிலையம் கட்டுதல் ..	1.18
5 தர்மபுரி தலைமை அரசு மருத்துவ மனை யில் உருக்குநோய் கட்டுப்பாட்டு நிலைய கட்டிடங்கள் அமைத்தல்	1.15
6 இராமநாதபுரம் மாவட்டம் திருவா டானையில் புதிய மருத்துவமனை கட்டுதல்	6.73
7 நீலகிரி மாவட்டம் கூடலூர் மருத்துவ மனையில் 40 படுக்கைகள் கொண்ட பகுதி கட்டுதல்	4.30

1977 ஆகஸ்ட் 19]

	(ரூ, இலட்சத்தில்.)
8 20 படுக்கைகள் வசதி கொண்ட தொழு நோய் தடுப்பு சிகிச்சை நிலையம் கட்டு தல் (ஒவ்வொன்றுக்கும் ரூ. 90,000 விதம்) 15 இடங்கள்	13.50

(1) அரசு தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி.

(2) அரசு தலைமை மருத்துவமனை, புதுக்கோட்டை.

(3) அரசு தலைமை மருத்துவமனை, வேலூர்.

(4) அரசு தலைமை மருத்துவமனை, நாகர்கோவில்.

(5) அரசு பொது மருத்துவமனை, சென்னை.

(6) அரசு மருத்துவமனை, அரக்கோணம்.

(7) அரசு மருத்துவமனை, ராஜபாளையம்.

(8) அரசு மருத்துவமனை, குளித்தலை.

(9) அரசு மருத்துவமனை, பெரம்பலூர் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்).

(10) அரசு மருத்துவமனை, விருத்தாசலம்.

(11) அரசு மருத்துவமனை, சிதம்பரம்.

(12) அரசு மருத்துவமனை, ஆத்தூர்.

(13) அரசு மருத்துவமனை, இடைப்பாடி.

(14) அரசு மருத்துவமனை, பவானி.

(15) அரசு மருத்துவமனை, தாம்பரம்.

சுகாதாரப் பணிகள்.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன.

ஆரம்ப சுகாதார நிலைய மருந்தகங்கள்.

சொக்கம்பட்டி .. .. ரூ. 1.80 இலட்சம்.

[1977 ஆகஸ்ட் 19

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

(ரூ. இலட்சத்தில்.)

(1) ஆரம்ப சுகாதார நிலைய மருந்தகம்:

1. மனவனூர்	1.80
2. கணபதி பாளையம்	1.60
3. வேளச்சேரி ஆரம்ப சுகாதார நிலைய ஊழியர் குடியிருப்பு. ..	1.21

(2) குடும்ப நலத் திட்டத்தின்கீழ் கீழ்க்கண்ட மாவட்ட மருத்துவ மனைகளில் கருத்தடைக்குப்பின் சிகிச்சை செய்ய 10 படுக்கைகள் கொண்ட பிரிவும் அறுவைச் சிகிச்சை நிலையமும் கட்டும் பணி:—

1. வேலூர்	1.70
2. திருச்சிராப்பள்ளி	1.70
3. கடலூர்	1.70
4. இராமநாதபுரம்	1.70
5. திண்டுக்கல்	1.70
6. ஈரோடு	1.70
7. ஊட்டி	2.20
8. தூத்துக்குடி	1.87
9. தர்மபுரி	1.70
10. நாகப்பட்டினம்	1.50
11. காஞ்சிபுரம்	1.70

(3) வேலூரில் துணைச் செவிலியர் பயிற்சி மனை கட்டும் பணி	5.50

1977 ஆகஸ்ட் 19]

(ரூபாய் இலட்சத்தில்.)

(4) தேனும்பேட்டை, மருத்துவத் துறை இயக்குநர் அலுவலகக் கட்டிட வளாகத்திற்குள் தமிழ்நாடு தொழிலாளர் நலத் துறைக்காக 7 மாடிக் கட்டிடம் கட்டும் பணி	35.06

கல்வி.

கல்லூரிக் கல்வி:

நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன:—

(ரூபாய் இலட்சத்தில்.)

1. தர்மபுரியில் அரசினர் கலைக் கல்லூரிகளுக்காக மாணவர் விடுதி ..	6.00
2. அரசினர் தோட்டத்தில் சென்னை சட்டக் கல்லூரி மாணவியர்க்கு விடுதி	6.93
3. சென்னை அண்ணாசாலையிலுள்ள அரசினர் கலைக் கல்லூரியில் பரிசோதனைக்கூடம்	2.20
4. கரூர் அரசினர் கலைக்கல்லூரியில் துணைப் பௌதிக, வேதியியல் பரிசோதனைக் கூடங்கள்	4.18
5. பூலம்குறிச்சி வி.எஸ்.எஸ். செட்டியார் அரசினர் கலைக் கல்லூரி கட்டிடம்	14.68
6. மதுரை ஸ்ரீமீனாட்சி பெண்கள் அரசினர் கலைக் கல்லூரி மாணவியர் விடுதியில் மேல் இரண்டாம் தளக் கட்டிடம்	4.50
7. தஞ்சாவூர் ராஜா சரபோஜி அரசினர் கலைக் கல்லூரியில் மேல் பட்டப் படிப்பு பகுதிக் கட்டிடம்	3.70

[1977 ஆகஸ்ட் 19

(ரூபாய் இலட்சத்தில்.)

8. திருவண்ணாமலை அரசினர் கலைக் கல்லூரியில் கூடுதல் கட்டிடம், சுகாதார வசதியும் அமைத்துக் கொடுத்தல் 2.86

9. திருப்பூர் சிக்கண்ண அரசினர் கலைக் கல்லூரியில் விடுதிக் கட்டிடம் .. 6.00

10. சென்னை சட்டக் கல்லூரியில் சொற்பொழிவு அரங்கக் கட்டிடம் .. 2.03

11. கரூர் அரசினர் கலைக் கல்லூரியில் மேற்குப் பக்க பின் புற பகுதியின் மேல் முதல் மாடிக் கட்டிடம் .. 3.56

கீழ்க்காணும் கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன:—

1. திருநெல்வேலி இராணி அண்ணா அரசினர் கலைக் கல்லூரியில் அலுவலர் குடியிருப்புக் கட்டிடம் .. 1.10

2. கும்பகோணம் பெண்கள் அரசினர் கலைக் கல்லூரியில் அரங்கக் கட்டிடம் 1.00

3. புதுக்கோட்டை கலைஞர் கருணாநிதி பெண்கள் அரசினர் கலைக் கல்லூரியில் அலுவலர் குடியிருப்பு கட்டிடம் 1.10

4. கரூர், அரசினர் கலைக் கல்லூரியில் இயற்கையியல் பரிசோதனைக் கூட கட்டிடம் 5.00

5. திருவெரம்பூர் டாக்டர் நாவலர் நெடுஞ்செழியன் அரசினர் கலைக் கல்லூரியில் கட்டிடம் 40.00

6. திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலைக் கல்லூரி கட்டிடம் 18.20

1977 ஆகஸ்ட் 19]

(ரூபாய் இலட்சத்தில்.)

7. மதுரை சட்டக் கல்லூரி கட்டிடம் 12.20

8. கும்பகோணம் பெண்கள் அரசினர் கல்லூரி மற்றும் விடுதியைச் சுற்றி மதிற்சுவர் கட்டுதல் 2.08

கீழ்க்காணும் கட்டுமான வேலை விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

1. சென்னை மாநிலக் கல்லூரியில் புதிதாக கட்டப்பட்டுள்ள பகுதியின் மேல் இரண்டாம் தளம் அமைத்தல் 4.00

பள்ளிக் கல்வி :

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளது :—

1. திருவாடானையில் அரசினர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல் 1.33

2. தாமரைக் குளத்தில் (கன்னியாகுமரி மாவட்டம்) அரசினர் நடுநிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல் 2.00

3. பெருவிளையில் (கன்னியாகுமரி மாவட்டம்) அரசினர் ஆதாரப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் .. 1.97

4. திட்டுவிளையில் (கன்னியாகுமரி மாவட்டம்) அரசினர் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் .. 1.70

5. திட்டுவிளையில் (கன்னியாகுமரி மாவட்டம்) அரசினர் ஆதாரப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல் .. 1.50

1977 ஆகஸ்ட் 19

(ரூபாய் இலட்சத்தில்.)

6. மேல் செங்கோட்டையில் அரசினர் நடுநிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் 2.70

7. ஆய்க்குடியில் அரசினர் ஆதாரப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல் .. 1.65

8. புதுக்கோட்டையில் மாதிரி பள்ளிக் கூடம் கட்டுதல் 10.80

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன:—

1. மதுராந்தகம், சவுபாகுமல் சவுகார் அரசினர் மகளிர் உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம் கட்டுதல் .. 10.85

2. அமராவதி நகரிலுள்ள சயனிக் பள்ளி மாணவர்களுக்கு தங்கும் விடுதி அமைத்துக் கொடுத்தல் .. 11.45

3. சேலம் மாவட்டம் பெரியபாளையத்தில் அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டுதல் 3.55

1976-77 ஆம் ஆண்டு தொடங்கவிருக்கின்ற வேலைகள்.

1. அதியம்பட்டியில் (சேலம் மாவட்டம்) அரசு மகளிர் பள்ளிக் கூடம் கட்டுதலும் அதற்கு "எம். என். செங்கோட முதலியார் அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளிக் கூடம்" எனப் பெயர் வைத்தலும் .. 1·189

1977 ஆகஸ்ட் 19]

காவல் துறை.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன :—

(ரூபாய் இலட்சத்தில்.)

1. வட ஆற்காடு வாணியம்பாடியில் 10 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் 1.50

2. இராமநாதபுரம் மாவட்ட நெற்குப்பையில் ஏழு காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் .. 1.11

3. தென் ஆற்காடு மாவட்ட திருப்பாப்புலியூரில் இரண்டு துணை ஆய்வாளர், ஆறு தலைமைக் காவலர், முப்பத்தைந்து காவலர் களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் .. 8.53

4. மணவாளக் குறிச்சியில் ஒரு துணை ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர், காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்.. 2.40

5. இராமநாதபுரம் அருப்புக்கோட்டையில் ஒரு தலைமைக் காவலர் மற்றும் 15 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் .. 2.99

6. மொராணத்தில் ஒரு துணை ஆய்வாளர். ஒரு தலைமைக் காவலர் மற்றும் 7 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள்கட்டுதல் .. 1.92

7. செங்கல்பட்டு மாவட்டம் வேளச்சேரியில் ஒரு துணை ஆய்வாளர், 2 தலைமைக் காவலர் மற்றும் 9 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் 1.34

8. மூலக்காரப்பட்டியில் ஒரு துணை ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் 3.00

	(ரூபாய் இலட்சத்தில்.)
9. கலைஞர் கருணாநிதி நகரில் காவல் துறையினருக்கான குடியிருப்புகளும், இதர கட்டிடங்களும் கட்டுதல்	49.00
10. சென்னை நகரில் படைக்கலந்தாங்கிய ரிசர்வ் காவற்படையினருக்கும் காவல் துறையினருக்கும் எழும்பூர் காவல் துறை அலுவலக இடத்தில் இரண்டு கொட்டகைகள் கட்டுதல்	2.80
11. அசோக் நகரில் காவல்துறையினர் கட்டிடங்களை பயிற்சிப் பள்ளியாக மாற்றுதல், பொது, மின்சாரப் பணிகள். நிலவிலை மற்றும் இதர அலுவலக சாமான்களுக்கு ..	19.97

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன :—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 மண்ணடியில் பழைய கட்டிடங்களை இடித்து காவல் துறையினருக்கு புதிய கட்டிடங்கள் கட்டுதல்	57.00
2 மதுரை மாவட்டம் மேலகூடலூரில் ஒரு துணை ஆய்வாளர், மூன்று தலைமைக் காவலர் மற்றும் 16 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் ..	3.42
3 தென் ஆற்காடு மாவட்டம் சின்ன சேலத்தில் ஒரு தலைமைக் காவலர் மற்றும் 10 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்	2.03
4 சேலம் மாவட்டம் வளவந்தி நாட்டில் ஒரு தலைமைக் காவலர் மற்றும் 12 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்	4.30

	(ரூபாய் இலட்சத்தில்.)
5 திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் ஒரு துணை ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் 10 காவலர்களுக்கான குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல்	2.00
6 காவல்துறை கட்டிட அலுவலகத்தில் உள்ள கொட்டகைகளை சீர் செய்தல் ..	5.97
7 சென்னை மற்றும் மாவட்டங்களில் உள்ள காவல் துறை நுண் அலை கம்பங்களுக்குக்கான கடைக்கால் கான்கிரீட் போடுதல்	28.11

கீழ்க்காணும் பணிகள் விரைவில் தொடங்கப் படவிருக்கின்றன :—மாவட்டங்களில் உள்ள காவல் துறையினர் இல்லங்களில் நீரடிக் கழிப்பகங்கள் கட்டுதல், தெருக்களில் மின் விளக்கு பொருத்துதல் ஆகிய வேலைகள் 5 இடங்களில் ரூ. 1,93,300 செலவில் விரைவில் நிறைவேற்றப்படும். அதுபோலவே தஞ்சாவூர் மற்றும் வேலூர் காவல்துறை வானொலி கட்டுப்பாடு அறைகள் கட்டும் வேலை ரூ. 1,73,000 செலவில் விரைவில் நிறைவேற்றப்படும்.

பொது அலுவலக கட்டிடங்கள்.

1. சேப்பாக்கத்தில் எழிலக அலுவலகத்திற்கான விஸ்தரிப்பு கட்டிடம் கட்டும் வேலை ரூ. 18.00 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது.

இதர நிர்வாகப் பணிகள்.

புதுதில்லியில் தமிழ்நாடு இல்லத்திற்கு பல மாடிக் கட்டிடம் கட்டும் வேலை ரூ. 61.16 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பணித் துறை.

காஞ்சிபுரத்தில் ரூ. 1.19 இலட்சம் செலவில் புதிய சுற்றுலாப் பயண இல்லம் கட்டும் வேலை நடந்து வருகிறது.

கருவூலத் துறை.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 கோயம்புத்தூரில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.36
2 திட்டக்குடியில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.16
3 அருப்புக்கோட்டையில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.30
4 சிவகாசியில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.40

பதிவுத் துறை.

5 விருதுநகரில் மாவட்டப் பதிவு அலுவலகம் கட்டுதல்	2.84

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன:—

1 திருநெல்வேலியில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.08
2 தருமபுரியில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.10
3 சேலத்தில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.30

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடப்பு ஆண்டில் தொடங்கப்பட வேண்டியவை:—

1 காங்கேயம் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.40
2 கோவில்பட்டியில் துணைக் கருவூலக் கட்டிடம் கட்டுதல்	1.20

எழுது பொருள் அச்சகத் துறை.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 தங்கசாலை அரசு அச்சகத்தில் தன்னியக்க இயந்திரப் பிரிவுக்கு கட்டிடம் கட்டுதல்	1.58
2 மதுரையில் மண்டல அச்சகக் கட்டிடம் கட்டுதல்	29.90

1976-77 ஆண்டு முன்னேற்றத்தில் உள்ள பணிகள்—

விருத்தாசலத்தில் மண்டல அச்சகத்திற்கு தற்காலிகக் கட்டிடம் கட்டுதல் ..	1.97

நில வருவாய்.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன:—

1 சிதம்பரம் கோட்டாட்சியாளர் அலுவலகத்திற்கு கூடுதல் இடவசதி கட்டிடம் கட்டுதல்	1.81
2 திருவாடானை தாலூகா அலுவலகம் கட்டுதல்	2.00
3 செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்திற்குள் கூடுதல் கட்டிடம் கட்டுதல்	1.33
4 தாலூகா அலுவலகம், திண்டிவனம், தென்னாற்காடு மாவட்டம்	1.52
5 விளாத்திகுளத்தில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல்	1.71
6 கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியருக்கு நான்கு மாடி அலுவலகக் கட்டிடம் கட்டுதல் (முதல் நிலை)	16.50

வாணியம்பாடியில் புதிய தாலூகா அலுவலகம் கட்டும் வேலை ரூ. 3.52 இலட்சம் செலவில் நடந்து வருகிறது.

அறந்தாங்கி கோட்ட ஆட்சியாளருக்கு அலுவலகம் கட்டும் வேலை ரூ. 1.25 இலட்சம் செலவில் விரைவில் எடுத்துக் கொள்ளப்படும்.

பொது நிர்வாகம்.

கோட்டைப் பகுதியில் தலைமைச் செயலகத்திற்கான கூடுதல் கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 1,20.00 இலட்சத்தில் நடந்து வருகிறது.

வேளாண்மை.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன.—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 பரமக்குடியில் மண் பரிசோதனை நிலையம் கட்டுதல்	1.44
2 சேலத்தில் மண் பரிசோதனை நிலையம் கட்டுதல்	1.44
3 தென்னாற்காடு மாவட்டம் இருவேல்பட்டு அரசு விதைப் பண்ணையில் கிடங்கு கட்டுதல்	1.33
4 செங்கற்பட்டு மாவட்டம், காஞ்சீபுரம் அரசு விதைப் பண்ணையில் கிடங்கு கட்டுதல்	1.33
5 சேலம் மாவட்டம் மேட்டூர் அரசு விதைப் பண்ணையில் கிடங்கு கட்டுதல்	1.33
6 வேலூரில் டிராக்டர் வாடகை திட்டத்தின் கீழ் ஒரு மூடிய கொட்டகை கட்டுதல்	2.00
7 தஞ்சாவூர் மாவட்டம் நீலகிரி தோட்டத்தில் வேளாண்மை பொறியியல் பிரிவிற்காக ஒரு மூடிய கொட்டகை கட்டுதல் ..	1.12

	(ரூபாய் (இலட்சத்தில்.)
8 புதுக்கோட்டையில் உதவி வேளாண்மை பொறியாளருக்கான (விரைவுத் திட்டம்) ஒரு மூடிய கொட்டகை கட்டுதல் ..	1.00

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடைபெற்று வருகின்றன :—

1 கிள்ளிக் குளத்தில் விதை பக்குவப்படுத்தும் நிலையம் கட்டுதல்	3.92
2 மதுரை மாவட்டம், சோழவந்தானில் ஒரு விதை பக்குவப்படுத்தும் நிலையம் கட்டுதல்	3.10
3 தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சியில் விதைப் பக்குவப்படுத்தும் நிலையம் கட்டுதல்	2.75
4 வட ஆற்காடு மாவட்டம் போளூரில் விதை பக்குவப்படுத்தும் நிலையம் கட்டுதல் ..	2.7
5 புதுக்கோட்டை மாவட்டம், குடுமியாமலை கலைஞர் கருணாநிதி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் கட்டிடங்கள் கட்டுதல். இத் திட்டத்தில் உள்ள பல வேலைகள் முடிக்கப்பட்டுவிட்டன. மீதமுள்ள வேலைகள் முடியும் தருவாயில் உள்ளன	31.50
6 காஞ்சீபுரத்தில் பூச்சி கொல்லிகள் ஆய்வகம் கட்டுதல்	1.92
7 கோயம்புத்தூர் மாவட்டம் பவானியில் விதை பக்குவப்படுத்தும் நிலையம் கட்டுதல்	5.60
8 திருச்சியில் மூடிய கொட்டகை கட்டுதல் ..	3.00
9 திருச்சி மாவட்டம், இருங்கூரில் விதை சேகரிப்பு கிடங்கு கட்டுதல்	3.00
10 வடாற்காடு மாவட்டம் நல்லாக்கில் விதை சேகரிப்பு கிடங்கு கட்டுதல்	3.00

[1977 ஆகஸ்ட் 19

	(ரூபாய் இலட்சத்தில்.)
11 கோயம்புத்தூரில் விதை சேகரிப்பு கிடங்கு கட்டுதல்	3.00
12 தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூரில் விதை சேகரிப்பு கிடங்கு கட்டுதல்	3.00
13 சோழவந்தானில் விதை சேகரிப்பு கிடங்கு கட்டுதல்	3.00
14 ஒன்பது இடங்களில் விதை சேகரிப்பு கிடங்குகள் 10 கட்டுதல்..	8.00
15 ஏழு இடங்களில் கதிரடிக்கும் தளம் கட்டுதல் மொத்த செலவு	1.05
16 நான்கு இடங்களில் முள் கம்பி வேலியிடுதல்..	1.55
17 மேலகரத்தில் குடியிருப்பு இல்லம் கட்டுதல்	1.00
18 டேவிஸ்பேட்டையில் குடியிருப்பில்லம் கட்டுதல்	1.00
19 இருவேல்பட்டியில் குடியிருப்பில்லம் கட்டுதல்	1.00
20 கிள்ளிக்குளத்தில் விதை சேகரிக்கும் கிடங்கு கட்டுதல்	2.00
21 முப்பத்தி மூன்று அரசு விதைப் பண்ணைகளில் அலுவலகக் கட்டிடம் கட்டுதல்	5.76

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் 1977-78-ல் எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது :—

1 தஞ்சாவூர் மாவட்டம், காட்டுத் தோட்டம் அரசு விதைப் பண்ணை விரிவாக்க நிலையத்தில் கட்டிடங்கள் கட்டுதல் ..	10.00
2 ஒரு மாவட்ட வேளாண்மை அலுவலர் மற்றும் 6 துணை வேளாண்மை அலுவலர்களுக்கு வம்பன் பண்ணையில் குடியிருப்பில்லம் கட்டுதல், புதுக்கோட்டை மாவட்டம்	2.80

1977 ஆகஸ்ட் 19]

	(ரூபாய் இலட்சத்தில்.)
3 நல்லாக்கில் அலுவலர் குடியிருப்பில்லம் கட்டுதல்	3.00
4 திருச்சிராப்பள்ளி மாவட்டம் இனுங்கூரில் விதை சேமிப்பு கிடங்கு கட்டுதல் ..	2.00
5 நல்லாக்கில் விதை சேகரிப்பு நிலையம் கட்டுதல்	4.00
6 எட்டு அரசு விதைப் பண்ணையில் முள் கம்பி வேலியிடுதல்	1.75
7 இந்திய-ஜெர்மனி நீலகிரி அபிவிருத்தி திட்ட அலுவலகத்திற்கு உதகமண்டலத்தில் நிர்வாக கட்டிடங்கள் கட்டுதல் ..	12.00
8 மலைப் பகுதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கடலூரில் விதை மற்றும் கருவிகள் சேமிப்பு நிலையம் கட்டுதல்	1.20
9 இந்திய-ஜெர்மனி நீலகிரி அபிவிருத்தி திட்டத்தில் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் கிடங்குகள் கட்டுதல்	4.00
10 தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனத்தில் வேளாண்மை பொறியியல் பிரிவிற்கு ஒரு மூடிய கொட்டகை கட்டுதல் ..	1.00
11 திருவெல்லூரில் வேளாண்மை பொறியியல் பிரிவிற்காக ஒரு மூடிய கொட்டகை கட்டுதல்	1.00

நீதித் துறை கட்டிடங்கள்.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன:—

1 கிருஷ்ணகிரியில் ஒருங்கிணைந்த நீதி மன்ற கட்டிடம் கட்டுதல்	16.00

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன:—

(ரூபாய் இலட்சத்தில்.

1	உளுந்தூர்ப்பேட்டையில் துணைக் கோட்ட மாஜிஸ்ட்ரேட்டுக்காக ஒருங்கிணைந்த நீதி மன்றக் கட்டிடம் கட்டுதல் ..	3.12
2	சிதம்பரத்தில் உள்ள மாவட்ட முன்சீப் நீதி மன்றக் கட்டிடத்தில் முதல் மாடி கட்டுதல்	2.10
3	ஓசூரில் மாவட்ட முன்சீப் - துணைக் கோட்ட மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றக் கட்டிடம் கட்டுதல்	3.13
4	சென்னை உயர்நீதி மன்ற வளாகத்தில் உரிமை இயல் நீதி மன்றத்திற்காக கூடுதல் கட்டிடம் கட்டுதல்	22.00
5	திருமங்கலத்தில் மாவட்ட முன்சீப் நீதி மன்றத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்	3.95
6	உசிலம்பட்டியில் துணைக் கோட்ட மாஜிஸ்ட்ரேட் நீதி மன்றக் கட்டிடம் கட்டுதல் ..	4.20
7	தேவகோட்டையில் உள்ள நீதி மன்றக் கட்டிடத்திற்கு விஸ்தரிப்புக் கட்டிடம் கட்டுதல்	3.84
8	சென்னை உயர் நீதி மன்றத்தில் ஊர்திக் கூடங்களும் கழிப்பறைகளும் கட்டுதல் ..	1.63

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் விரைவில் துவங்க இருக்கின்றன:—

1	சென்னை உயர் நீதி மன்ற வளாகத்தில் உள்ள உணவு விடுதியின் மேல் முதல் மாடிக் கட்டிடம் கட்டுதல்	1.04
2	கடலூரில் உள்ள நீதி மன்றக் கட்டிடத்தைச் சீர்படுத்தும் வேலைகள்	1.15

சிறைத் துறை.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடப்பாண்டில் முடிவுற்றன:—

(ரூபாய் இலட்சத்தில்.)

1	ஜெயில் மேலாளர் குடியிருப்பு இல்லம் மத்திய சிறைச்சாலை, வேலூர்	11.47
2	வேலூரில் உள்ள மத்திய சிறைக் காவலர்களுக்கு குடியிருப்பு இல்லம் கட்டுதல் (நடந்து வருகிறது.)	2.92

கடல் அரிப்பு தடுப்புத் பணிகள்.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன:—

1	கன்னியாகுமரியில் விவேகானந்தர் பாறையினருகே அலை தடுப்புச் சுவர் சேதங்களை சீர்படுத்தும் பணி	2.31
2	செங்கை மாவட்டத்தில் உள்ள கோவளம் கிராமத்தில் கடல் அரிப்பு தடுப்புப் பணிகள்	2.33

கீழ்க்கண்ட வேலைகள் 1976-77 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் கிடைத்து தற்போது துவக்கப் பட்டுள்ளன:—

1	ஏனையம் கிராமத்தில் பாறைகளால் தடுப்புச் சுவர் கட்டும் பணி	46.40
2	முட்டம் துறை அருகே பாறைகளால் தடுப்புச் சுவர் கட்டும் பணி	15.40

வணிக வரி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப் பட்டுள்ளன:—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	பொள்ளாச்சி வணிகவரி அலுவலகம் கட்டுதல்	7.55
2	திருநெல்வேலியில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	11.75
3	தூத்துக்குடியில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	5.28
4	தஞ்சையில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	7.83
5	கும்பகோணத்தில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	73.15
6	திண்டுக்கல்லில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	5.50
7	தருமபுரியில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	3.467
8	வேலூரில் வணிகவரி அலுவலகம் கட்டுதல் ..	4.62
9	கடலூரில் வணிகவரி அலுவலகம் கட்டுதல்	6·38
10	கோவையில் வணிக வரி மற்றும் இந்து சமய அறநிலையத் துறை கட்டிடம் கட்டுதல்	46.00
11	காஞ்சீபுரத்தில் வணிக வரி மற்றும் இந்து அற நிலையத் துறை அலுவலக கட்டிடம் கட்டுதல்	9.50
12	விருதுநகரில் வணிக வரி அலுவலகம் கட்டும் வேலை நடந்து வருகிறது ..	7.94

வைப்புத் தொகை பணி.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன:—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	திருநெல்வேலியில் திறமை பெற்ற ஏழை மாணவர்கட்கு விடுதி கட்டும் பணி ..	3.03
2	நாகர்கோவிலில் நாகர்கோவில் நகராட்சிக்காக 5 மாடிக் கட்டிடம் கட்டும் பணி	11,60

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன:—

1	மதுரை மாவட்டம், தேனியில் ஒழுங்கு முறை அங்காடி கட்டிடங்கள் கட்டுமானப் பணி	3.50
2	மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் ஒழுங்கு முறை அங்காடி கட்டிடங்கள் கட்டுமானப் பணி	3.35
3	திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் ஒரு விளையாட்டு அரங்கு கட்டும் கட்டுமானப் பணி	5.00
4	காஞ்சீபுரத்தில் பணி செய்யும் பெண்களுக்கு விடுதி கட்டும் கட்டுமானப் பணி	1.50
5	தென்காசியில் ஒழுங்கு முறை அங்காடிக் கட்டிடங்கள் வளாகத்தில் கட்டுமானப் பணி	3.50
6	சிதம்பரத்தில், சிதம்பரம் நகராட்சி பேருந்து நிலையம் விரிவு படுத்தும் கட்டுமானப் பணி	9.50
7	கிருஷ்ணகிரியில் ஒழுங்கு முறை அங்காடி கட்டிடங்கள் கட்டுமானப் பணி ..	1.65
8	திருச்செங்கோட்டில், திருச்செங்கோடு நகராட்சிக்காக கடைகள், உணவு விடுதிக் கட்டிடங்கள் கட்டும் பணி ..	3.00

[1977 ஆகஸ்ட் 19

	(ரூபாய் இலட்சத்தில்.)
9 வாலாஜாப்பேட்டையில், வாலாஜாப் பேட்டை நகராட்சி பேருந்து நிலையத்தின் வடக்குப் புறத்தில் கடைகள் கட்டும் பணியும், பேருந்து நிலையம் திருத்தி அமைக்கும் பணியும் ..	1.446

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் 1976-77-ல் நடைபெற்றுக் கொண்டிருந்து இன்னும் முற்றுபெறாத நிலையில் இருக்கின்றன:—

	(ரூபாய் இலட்சத்தில்).
1 இ.எஸ்.ஐ. திட்டம்—பணியாற்றும் இ.எஸ்.ஐ. வகை தல்லாகுளத்தில் (மதுரை) மூன்று மருத்துவர்கள் மருந்தகமும், குடியிருப்பும் கட்டுதல்	7.876
2 இ.எஸ்.ஐ. திட்டம்—உசிலம்பட்டியில் (மணப்பாறை) இரண்டு மருத்துவர்கள் பணியாற்றும் இ.எஸ்.ஐ. வகை மருந்தகமும் குடியிருப்புக்களும் கட்டுதல் ..	7.066
3 இ.எஸ்.ஐ. திட்டம்—பெரம்பூரில் இரு பகுதி ஐந்து மருத்துவர்கள் பணியாற்றும் இ.எஸ்.ஐ. வகை மருந்தகம் கட்டுதல்	16.044
4 இ. எஸ். ஐ. திட்டம்—பெரம்பூரில் இரு பகுதி ஐந்து மருத்துவர்கள் பணியாற்றும் இ.எஸ்.ஐ. வகை மருந்தகத்துக்கான குடியிருப்புக் கட்டுதல்	7.41
5 இ.எஸ்.ஐ. திட்டம்—திண்டுக்கல்லில் 3 மருத்துவர்கள் பணியாற்றும் இ.எஸ்.ஐ. வகை மருந்தகமும் குடியிருப்பும் கட்டுதல்	7.716
6 இ.எஸ்.ஐ. திட்டம்—சென்னை, கலைஞர் கருணாநிதி நகரில் 206 படுக்கைகள் கொண்ட இ.எஸ்.ஐ. வகை மருத்துவமனையும், குடியிருப்பும் கட்டுதல் ..	1,50.15

1977 ஆகஸ்ட் 19]

தொழிலாளர் நல வாரியம்.

தாம்பரத்தில் 26 படுக்கைகள் கொண்ட காச நோய் மருத்துவ மனை கட்டும் வேலை 3.64 இலட்சம் வைப்புத் தொகை வேலையாக நடைபெற்று வருகிறது.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் வைப்புத் தொகை வேலைகளாக தொடங்க இருக்கின்றன:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 கோயம்புத்தூரில் ஒழுங்குமுறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி	27.35
2 திருப்பூரில் ஒழுங்குமுறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி ..	19.10
3 தர்மபுரி நகராட்சிக்காக மத்திய பேருந்து நிலையம் கட்டும் பணி	6.36
4 ஈரோடு நகராட்சிக்காக மத்திய பேருந்து நிலையம் கட்டும் பணி	25.00
5 மதுரை மாவட்டம், வெத்தலக்குண்டில் ஒழுங்கு முறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி	4.60
6 மதுரை மாவட்டம், நத்தத்தில் ஒழுங்கு முறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி	4.60
7 மதுரை மாவட்டம், திண்டுக்கல்லில் ஒழுங்கு முறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி	4.80
8 கோயம்புத்தூர் மாவட்டம், புஞ்சை புளியம்பட்டியில் ஒழுங்கு முறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி..	5.00
9 கோயம்புத்தூர் மாவட்டம், ஆனமலையில் ஒழுங்கு முறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி	5.00

[1977 ஆகஸ்ட் 19

	(ரூபாய் இலட்சத்தில்.)
10 கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டையில் ஒழுங்கு முறை அங்காடி வளாகத்தில் கட்டிடங்கள் கட்டும் பணி	10.00
11 ஆற்காடு நகராட்சிக்காக பேருந்து நிலையம் கட்டும் பணி	2.50
12 அம்பாசமுத்திரத்தில் ஒழுங்கு முறை அங்காடி கட்டிடங்கள் கட்டும் பணி ..	3.50

1977-78ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் வைப்புத் தொகை பணிகளாக விரைவில் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளன:—

1 இ.எஸ்.ஐ. திட்டம் வேலூரில் அரசு பெண்ட்லாண்ட் மருத்துவ மனையில், இரு மருத்துவர்கள் பணியாற்றும் வகை மருந்தகமும், 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையும் கட்டுதல்	12.85
2 இ. எஸ். ஐ. திட்டம் இராணிப்பேட்டையில் 5 மருத்துவர்கள் பணியாற்றும் இ. எஸ். ஐ. வகை மருந்தகமும் குடியிருப்பும் கட்டுதல் (வட ஆற்காடு) ..	10.78
3 இ.எஸ்.ஐ. திட்டம்—சென்னை கலைஞர் கருணாநிதி நகரிலுள்ள இ.எஸ்.ஐ. மருத்துவ மனையில் படுக்கை வசதிகளை 500-க்கு உயர்த்த கூடுதல் மாடிக் கட்டிடங்கள் கட்டுதல்	52.70

[1977 ஆகஸ்ட் 19]

சமூகப் பாதுகாப்பும், நலனும்.

தர்மநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டும் வேலை ரூ. 3.48 இலட்சம் செலவில் நடப்பு ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 செங்கற்பட்டு முதுநிலை சிறுர் சீர்திருத்தப் பள்ளியில் நவீன நெசவுக் கூடம் அமைத்தல்	2.20
2 தென்னாற்காடு மாவட்டம், அஜீஸ் நகர் குடியமைப்பு உயர்நிலைப் பள்ளிக்கு அறிவியல் ஆய்வுக் கூடம் கட்டுதல் ..	0.60
3 மதுரை மாவட்டம் தும்மகுண்டு அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டுதல்	2.30

சமூக நலப் பணிகள்.

செங்கற்பட்டிற்கு அருகிலுள்ள ஆக்கூர் கிராமத்தில் அரசினர் மாணவர் பிற்காப்பு இல்லத்திற்கு கட்டிடம் கட்டும் வேலை ரூ. 1.00 இலட்சம் செலவில் நடந்து வருகிறது.

செங்கற்பட்டிற்கு அருகிலுள்ள ஆத்தூரில், அரசினர் மாணவர் பிற்காப்பு இல்லத்திற்கு பட்டறை அமைத்துக் கொடுக்கும் வேலை ரூ. 1.00 இலட்சம் செலவில் விரைவில் துவங்கப்பட இருக்கிறது.

துயர் துடைப்பு, மறுவாழ்வுத் திட்டம்.

முத்துக்காட்டில் உடல் ஊனமுற்றோருக்கு தொழிற்சாலைக் கட்டிடம் ரூ. 15.00 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன:—

1 ஆனையூர் கிராமத்தில் பர்மா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்து வந்த அகதிகளுக்கு 50 குடியிருப்பு கட்டிடம் கட்டுதல்	3.00
2 கொல்லப்பட்டில், இலங்கை அகதிகளுக்கு தற்காலிக முகாம் கட்டிடம் கட்டுதல் ..	26.46

[1977 ஆகஸ்ட் 19

மீன் துறை.

நடப்பு ஆண்டில் கடலூர் துறைமுகத்தில் ஆதார பணி மனை கட்டும் வேலை ரூ. 1.50 இலட்சம் செலவில் முடிவுற்றது.

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன:—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	செங்கை மாவட்டம், செம்பரம்பாக்கத்தில் தூண்டுதல் முறையில் மீன் குஞ்சுகள் அபிவிருத்தி செய்யும் நிலையம் கட்டுதல் ..	1.80
2	இராமேஸ்வரத்தில் ஆதாரப் பணிமனை கட்டுதல்	1.25
3	மஞ்சளார் நீர்த்தேக்கத்தில் தற்போது உள்ள மீன் வளர்ப்புப் பண்ணையில் மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் இருபது கட்டுதல்	3.10
4	திண்டிவனம் அருகே கழுவேலியில் மீன் குளங்களும், காவல் மற்றும் பண்டகசாலைகளுக்கான கட்டிடமும் கட்டுதல்	1.475
5	பவானிசாகரில் மீன் துறைக்கு மீன் உற்பத்திக்கான கட்டிடம் கட்டுதல் ..	1.12
6	பழவேற்காடு ஏரி அபிவிருத்திப் பணி, மீன் அபிவிருத்திக்கான கட்டுமான பணிகள்	6.916
7	அம்மாபட்டினம் கிராமத்தில் மீனவர் குடியிருப்பு இல்லங்கள் கட்டுதல் ..	4.95
8	நீலகிரியில் உள்ள வில்சன் மீன் பண்ணை அபிவிருத்திக்கான பணி	3.00
9	மேட்டூர் அணை மீன் பண்ணையில் பத்து புதிய மீன் குஞ்சு வளர்ப்புப் பண்ணைகள் கட்டுதல்	1.50

1977 ஆகஸ்ட் 19]

		(ரூபாய் இலட்சத்தில்.)
10	கடலூர் துறைமுகத்தில் ஆதாரப் பணி மனை கட்டுதல்	1.10
11	தூத்துக்குடி மீன் பிடிக்கும் துறைமுகத்தில் ஆதாரப் பணிமனை கட்டுதல்	2.00

கால்நடை பராமரிப்பு.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன:—

1	இராணிப்பேட்டை, கால்நடை தடுப்பு மருந்து ஆராய்ச்சி நிலையத்திற்கு அதி மின் அழுத்த பிரிவுத் தொடர்பு ..	1.30
2	காட்டுப்பாக்கம் கால் நடைப் பண்ணையில் மாணவர் விடுதி கட்டுதல் ..	2.50
3	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் விலங்குகள் மருத்துவ பரிசோதனைச் சாலைக்கான கட்டிடம் கட்டுதல் ..	4.62
4	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில், பட்ட மேற்படிப்பு மாணவர் இல்லத்தில் முதல், இரண்டாம் தளங்கள் கட்டுதல்	5.25
5	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் கால்நடைகளுக்கான கட்டிடம் கட்டுதல்	1.10

கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் நடந்து வருகின்றன :—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	மாயூரம் கால்நடை மருத்துவ மனையில் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்	0.94
2	சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பெரிய கால்நடைகளுக்கான மருந்தக சோதனைக்கூடம் கட்டுதல்	17.60

	(ரூபாய் இலட்சத்தில்.)
3 சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் பால்பத நுட்பவியல் மற்றும் காட்சியரங்க கட்டிடம் கட்டுதல் ..	29.00
4 சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரியில் சிறு விலங்குகள் தங்கி சிகிச்சைப் பெறும் மருத்துவ மனை கட்டுதல்	1.50
5 "டாபின் ஹால்" கட்டிடத்தை இடித்து விட்டு ஒரு பல அடுக்குகட்டிடத் தொகுதி சென்னை கால்நடை மருத்துவ மனையில் கட்டுதல்	5.00
6 காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்துக்கு மின்வசதி மற்றும் குடிநீர் வசதி செய்தல்	3.31
7 உதகை சேண்டிநல்லா ஆடுகள் இன விருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் உணவு கலக்கும் அறையும், பரிசோதனைச் சாலையின் மேல் முதல் தளமும் கட்டுதல் ..	1.90
8 உதகை சேண்டிநல்லா ஆடுகள் இன விருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் ஆடுகளுக்கான 10 கொட்டகைகளும் காவலர் குடியிருப்புகளும் கட்டுதல்	6.50
9 காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல்	10.17
10 காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் கூடுதலாக கோழிப்பண்ணைகள் கட்டுதல்	1.97
11 உதகை சேண்டிநல்லா ஆடுகள் இன விருத்தி ஆராய்ச்சி நிலையத்தில் அலுவலர் குடியிருப்புகள் கட்டுதல் ..	5.50

	(ரூபாய் இலட்சத்தில்.)
12 காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்தில் 10 ஜெர்சி காளைகளுக்கான தொழுவம் கட்டுதல்	1.40
13 தஞ்சை ஈச்சங்கோட்டையில் உயர்ரக கால்நடை இனவிருத்தி பண்ணை அமைப்பதற்காக குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களை கட்டுதல்.	20.77
14 ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் பூனப்பள்ளி ஏரியிலிருந்து ஜூஹூர் அப்பா ரெட்டி ஏரிக்குக் கான்கிரீட் குழாய்கள் பதித்தல்	1.35
15 கோவை அரசூரில் வெளிநாட்டு உதவியுடன் கோழி உற்பத்திக்கான கட்டிடங்கள் கட்டுதல்	6.41

தீ விபத்தைத் தடுத்தலும், கட்டுப்படுத்துதலும்.

நடப்பு ஆண்டில் கீழ்க்கண்ட கட்டுமான வேலைகள் முடிக்கப்பட்டுள்ளன:—

	(ரூபாய் இலட்சத்தில்.)
1 செங்கற்பட்டு, செம்பியத்தில் தீயணைப்பு நிலையங்களுக்கு நிரந்தர கட்டிடங்கள் கட்டுதல்	1.58
2 சென்னை எழும்பூர் தீயணைப்புத் துறை தலைமையகத்தில் கூடுதல் இட வசதிக்காக முதல் தளம் கட்டுதல்	1.02

தருமபுரி தீயணைப்பு நிலையத்தில் நிரந்தர அலுவலகக் கட்டிடங்கள் கட்டும் வேலை ரூ. 1.30 இலட்சத்தில் நடந்து வருகிறது.

[1977 ஆகஸ்ட் 19

1977--78 ஆம் ஆண்டில் புதிதாக துவக்கப்பட இருக்கும் வேலைகள் :—

		(ரூபாய் இலட்சத்தில்.)
1	கள்ளக்குறிச்சி தீயணைப்பு நிலையங்களுக்கு தற்காலிகக் கட்டிடங்கள் கட்டுதல் ..	1.41
2	எண்ணூரில் தீயணைப்பு நிலையம் கட்டுதல்	1.25
3	கோடம்பாக்கம் தீயணைப்பு நிலையத்திற்கு கட்டிடம் கட்டுதல்	2.20

V2\1, 81 N77
N77s-75)
122094

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் :

ப. எண் :

வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)	வழங்கிய நாள். (1)	திரும்பிய நாள். (2)
21/7/94	2-8-94		
7/3/95	13/7		
15/3/95			
4/2/98			

S.F. 259A-6—1,00,000—30-1-84.